மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி பதவியான இணை இயக்குநர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அல்லாத எவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால் இவ்வலுவலகத்தில் துணை இயக்குநர் (கல்வித் தொடர்பு) அவர்கள் இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்வித் தொடர்பான காரியங்களை மட்டுமே கவனிப்பவராவார். முழுத்துறைக்கும் இணை இயக்குநராக பணியாற்றிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இடம் காலியாகவே உள்ளது. அதனில் யாரும் நியமிக்கப்படவில்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : எவ்வளவு நாட்களாக அது காலியாக இருக்கிறது ? அந்தக் காலி ஸ்தானத்தில் இதுவரை யாரும் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கா. திரவியம் அவர்கள் கிராம வளர்ச்சி இயக்குநராக பதவியில் இருந்தபோது கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் இணை இயக்குநராக திருமதி சத்தியபாமா அவர்கள் பதவி வகித்து வந்தார்கள். பிறகு அவர்கள் உணவுப் பொருள் வழங்கும் துறைக்கு மாற்றப்பட்டு விட்டார். இந்தப் பதவியில் எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த வேலையைக் கவனித்து வருவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி—டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மெண்ட்—இருப்பதால் இந்த இடம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : கல்வித்துறையில் பல சீனியர் அதிகாரிகள் இருக்க இவர் மட்டும் இந்த இலாகாவிற்கு அழைக்கப்பட்டு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன ? இவருக்கு ஐ.ஏ.எஸ். சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கல்விப் பிரிவிற்கு துணைத் இயக்குநராக இருக்கும் வெங்கடசுப்பிரமணியம் என்பவர் கோவை கோட்ட கல்வி அதிகாரியாக இருந்தவர். இந்தப் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டதினால் அவர்களுக்கு எந்தவிதமான சம்பள மாற்றமும் ஏற்படுத்தித் தரவில்லை. ஏற்கெனவே அவர் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற காரணத்தினால் அந்தப் பதவி இணை இயக்குநர் பதவியாக மாற்றப்பட்டு, இணை இயக்குநரின் சம்பளத்தை அவர் ஏற்கெனவே பெற்றுவருவதால் அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால் சில அதிகாரங்களை வழங்க முடியும், வேலைப் பளுவையும் குறைக்க முடியும் என்று கொடுக்கப்

திரு. தோ. மு. நல்லசாமி : கூட்டுறவு நூற்பாலைகள் நம் மாநிலம் பூராவிலும் அநேகமாக எல்லாமே நஷ்டத்திலேதான் வேலை செய்து கொண்டிருக்கின்றன என்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளை ப்ரொமோட் பண்ணியவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் அதிலே ஷேர் வசூல் செய்யும்போது நிச்சயம் லாபம் வரும் என்ற முறையில் செய்யப் பட்டது. தற்போது தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் ஷேர் போட்டவர்களுக்கு ஷேர் தொகை திருப்பிக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலில் முதல் போட்டவர்கள் அந்தத் தொழிலில் உள்ள லாப நஷ்டத்தை ஏற்கத்தான் வேண்டும். திருச்செந்தூர் கூட்டுறவு ஆலையில் லாபம் சிறிது இருப்பதாகப் புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. தற்போது மத்திய அமைச்சரவை அறிவித்திருக்கக்கூடிய சலுகையின் காரணமாக மீண்டும் இந்த நூற்பாலைகள் லாபத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : தமிழ்நாட்டிலுள்ள எந்தக் கூட்டுறவு ஆலையிலாவது லாபம் கிடைத்ததுண்டா ? பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கனம் அங்கத்தினர் பங்கு வாங்கியிருக்கிறாரா என்பது தெரியவில்லை. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையில் லாபம் இருப்பதாகப் புள்ளிவிவரம் இருக்கிறது. பங்கு பிரித்துக் கொடுத்தது பற்றிய தகவல் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நூலுக்கு வேண்டிய பஞ்சு வாங்கும் குழுவில் பஞ்சு பற்றிய தர நிர்ணயம் தெரியாதவர்கள் இருப்பதுதான். திருச்செந்தூர் ஆலையில் லாபம் வருவதற்குக் காரணம் பஞ்சு வாங்கும் குழுவில் அந்த வியாபாரத்தில் தேர்ந்த ஒருவர் இருப்பதுதான். இனியாவது எல்லா நூற்பாலைகளிலும் பஞ்சின் நுட்பம் தெரிந்தவர்களைக் குழுவில் போட அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபோன்ற ஒரு கருத்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு 12 கூட்டுறவு நூற்பாலைகளிலும் பஞ்சு வாங்குவது எப்படி என்பதற்கான குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. முழு விவரம் இல்லை.

வேளாண்மைக் கருவிகள் உற்பத்தி

* 123—வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

விவசாய உற்பத்திக்கு உறுதுணையான உழு கருவிகள், டிராக்டர்கள் போன்றவற்றைத் தமிழக அரசாங்கமே தயாரிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழக அரசுக்கு சொந்தமான சிறு தொழில் கார்ப்பரேஷனின்கீழ் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் வேளாண்மைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை, தற்பொழுது பல வகையான உழு கருவிகளை உற்பத்தி செய்கின்றது. டிராக்டர்கள் உற்பத்திச் செய்வதற்கான திட்டம்ஒன்றும் இப்பொழுது அரசிடம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது உழு கருவிகள், டிராக்டர்கள் ஆகியவற்றை விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுக்கின்றன. ஆனால் அவைகளிலே பெரும்பாலானவை உழைப்பிலும், விலை பெறுமானத்திலும் தரமானவையாக இல்லையென்பது அனுபவத்தில் காணப்படுகின்ற உண்மையாகும். நம்

முடைய அரசு மத்திய அரசிடம் சொல்லி அரசு உதவியுடனும் சிறந்த வெளிநாட்டு கம்பெனி உதவியுடனும் இனியாவது டிராக்டர்களை உற்பத்தி செய்ய முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாதாரண உழு கருவிகள் செய்யும் ஃபார்ம் இம்ப்ளிமெண்ட்ஸ் யூனிட் திருச்சிராப்பள்ளியில் இருக்கிறது. தனியார் துறையிலே ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்காக தனியார் கம்பெனிகள் வெளிநாட்டுத் தொடர்போடு கூடே செயல்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் சார்பில் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் திட்டம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் டிராக்டர்களுக்கு அதிக டிமாண்ட் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட தேவை அதிகமாக இருக்கிறபடியால் ஒரு புதிய தொழிற்சாலையை வெளிநாட்டு உதவியோடு கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது. அந்தச் சங்கடத்தைப் போக்கி அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிராக்டர்கள் பற்றாக் குறையாக இருக்கிறது என்பது சரியல்ல. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு டிராக்டர்தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுதான் பற்றாக் குறையாக இருக்கிறது. மற்றப்படி வேறுபல டிராக்டர்கள் கிடைக்க வழிவகை இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய தனியார் கம்பெனி ஒன்று யூகோஸ்லேவியா நாட்டுடன் தொடர்பு கொண்டு எக்ஸ்பான்ஷன் புரோகிராம் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்டிலிருந்து வந்த தொழிலமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பேசினார்கள். அந்தத் திட்டம் நிறைவேறுமானால் ஏராளமான டிராக்டர்கள் கிடைக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : தமிழகத்திற்குத் தேவைப்படுகின்ற டிராக்டர்கள் எந்தெந்தக் கம்பெனியிலிருந்து, எந்தெந்த நாட்டிலிருந்து வாங்கப் படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்களைக் கேட்டால் ஒரு பட்டியலையே தருவார்கள். என்னிடத்தில் விவரம் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தற்போது பஞ்சாயத்து யூனியன்களிடம் ஸ்ப்ரேயர்ஸ், பவர் ஸ்ப்ரேயர்ஸ் போன்றவை கொடுக்கப்பட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவற்றைப் பழுது பார்க்க நிபுணர்கள் இல்லை. ஆகவே, திருச்சி ஃபார்மிங் யூனிட்டில் பழுது பார்க்கும் நிலையம் அமைக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் அங்கத்தினர் கேட்ட குறிப்பு பற்றி ஒரு விவரம் சொல்ல விரும்புகிறேன். அந்தந்தப் பகுதியில் தேவையான எண்ணிக்கை இருந்தால் குறிப்பிட்ட நிறுவனத்தார் செர்விஸ் ஸ்டேஷன்களை ஆரம்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : ஏற்கனவே வாங்கப்பட்ட டிராக்டர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. அதிலே குறைந்த குதிரை ஓட்டம் உள்ள டிராக்டர்களுக்கு டயர் கிடைக்காத காரணத்தால் ஏறக்குறைய 200-க்கு மேற்பட்ட டிராக்டர்கள் வெறுமனே இருக்கின்றன. ஸ்பேர் பார்ட்ஸ், டயர்களை அதிகப்படியாகத் தயாரிக்கும் அளவுக்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிராக்டர்களுக்காக அந்தந்தப் பகுதியில் சர்விஸ் யூனிட் வைத்து உதவி செய்கிறார்கள். நானே சில இடங்களில் பார்த்தேன். மேலும் எங்கெங்கு தேவை என்று அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

[1st March 1969

சமூக நல ஊழியர்கள் கிராம அபிவிருத்தித் திட்டங்களிலே பணியாற்றுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, கிராமத்திலேயுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் தனித்தனியாக, அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, எல்லாத் துறைகளுக்கும், வேளாண்மைத்துறைக்கு என்று ஒரு அதிகாரி, கல்வித்துறைக்கு என்று ஒரு அதிகாரி, சுகாதாரத் துறைக்கு என்று ஒரு அதிகாரி, கூட்டுறவுத் துறைக்கு ஒரு அதிகாரி என்று தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேர்களுமே சமூக நலக் காரியம்தான் செய்கிறார்கள் என்பது பொருள். எங்களுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, தேசீய பரம்பரையில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்பதால்தான் இப்படிப்பட்ட பதவிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கக் குறிப்பிலும் இருக்கிறது. சமூக நல ஊழியர்கள் வாராவாரம் கொடியேற்றுகின்ற பணியினைத்தான் செய்து வருகிறார்கள் என்ற புகார்கள் இருக்கின்றன.

திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் : தலைவரவர்களே, கனம் மந்திரியவர்கள் கூறியபடி இந்தச் சமூக நல ஊழியர்கள் ஏற்கெனவே மக்களிடத்திலே ஊழியம் செய்திருக்கிற அனுபவம் பெற்றிருப்பதால் இப்பொழுது இருக்கக்கூடிய சமுதாய முன்னேற்றத்திற்காக நல்ல முறையிலே பணி செய்வதற்காக அவர்கள் கூறியபடி வாய்ப்புக் கொடுத்து, அவர்களுடைய ஊழியத்தை இன்னும் சிறந்த முறையில், மக்களுக்கு ஊழியம் செய்யக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் ஏற்படுத்த முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, அவர்களுக்கு வேலைகள் அதிகமாக இல்லை என்ற குறை தமிழ்நாட்டிலே பரவலாக இருக்கிறது. குறிப்பிட்ட இயக்கத்தில், விடுதலைப்போராட்டம், மற்ற இயக்கங்களில் ஈடுபட்டவர்கள் அவர்கள் என்பதைக் கருதிக் கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இந்த அரசாங்கம் அவர்களைத் திடீரென்று எடுக்காமல் தொடர்ந்து வைத்திருக்கிறது. அப்படி இருப்பவர்களைப் பற்றிப் பல்வேறு கேள்விகளைக் கேட்டு அவர்களை ஒரு பிரச்சினைக்கு உரிய பொருளாக ஆக்க வேண்டாமென்று உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர்களுக்கு நல்ல வேலைகள் கொடுப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

நூற்பாலைகளில் தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டம்

* 129 திரு. என். எஸ். வி. சித்தன்
திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் } மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் எத்தனை ஆலைகளில் இன்னும் தொழிலாளர் இன்ஷூரன்ஸ் (E. S. I.) திட்டம் செயல்படுத்தப்படவில்லை?

(இ) அவைகளுள், மதுரை மாவட்டத்தில் உள்ள ஆலைகள் எவை, எவை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ), (இ) & (உ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு க. கோமதிசங்கரதீட்சிதர்.—சபாநாயகரவர்களே, இங்கு அளிக்கப்பட்ட அறிக்கையைப் பார்த்தேன். படிப்படியாக இன்னும் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி அதை விரைவில் நடத்த ஆவன செய்ய அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

---

* 55–56-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 மார்ச் 1]

திரு கே. எஸ். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த இ. எஸ். ஐ. திட்டத்தினுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுப்பது பற்றியது. ஆனால் 250 தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் அவர்கள் 500 பேராக ஆகும் வரையில் இ. எஸ். ஐ. திட்டத்தை அமல் நடத்துவது இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் எப்பொழுது 500 பேர்களாவது, எப்பொழுது இந்தத் திட்டத்தின் பயனைப் பெறுவது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.—இப்பொழுது 750-இலிருந்து இருக்கக்கூடிய தொழிலாளர் பகுதிகளிலே நிறைவேற்ற அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. விரைவில் அது 600-ஆக ஏற்றுக்கொள்ளப்படும். இப்படி படிப்படியாக அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, மொத்தம் 82 நூற்பு ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் இந்தக் காப்பு நிதித் திட்டத்தினால் பயன் அடையவில்லை என்று தெரிகிறது. மொத்தம் எவ்வளவு பேர் இம்மாதிரி இன்னும் பயன் பெறாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எவ்வளவு பேர் பலன் பெறவில்லை என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் இந்த அறிக்கையிலே உள்ளபடி 82 நூற்பு ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த காப்புறுதித் திட்டம் நீடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணம் சட்டப்படி அந்த ஆலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் எண்ணிக்கை இல்லை என்ற அடிப்படையிலா அல்லது பொருளாதார மந்தத்தின் நெருக்கடி என்கிற அடிப்படையிலா என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எண்ணிக்கை அடிப்படையிலே.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இ. எஸ். ஐ. திட்டம் அமல்படுத்தப்படுகின்ற மில்களிலே அவர்கள் அதற்கான பணத்தைக் கட்டுவது இல்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிக் கட்டாத முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு பி. வேலுசாமி : சார், இ. எஸ். ஐ. திட்டத்தை அமைப்பதற்கான காண்ட்ரிபியூஷனையும், மேனேஜ்மெண்ட் காண்ட்ரிபியூஷனையும் மில்காரர்கள் கட்டாமல் இருப்பதால் பல தொழிலாளர்கள் அந்தச் சலுகையைப் பெறாமல் இருக்கிறார்கள், அவர்களுக்குத் தண்டனை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குறிப்பிட்ட மில்லைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

கடலலையிலிருந்து மின் சக்தி உற்பத்தி

* 130 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல் அலை மூலமாக மின்சாரம் எடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கடல் அலையிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்வது குறித்து 1964-ல் அரசாங்கம் பரிசீலனை செய்தது.

ஆனால், இது சிக்கனத் திட்டமாகாது என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்ததால், மேலும் முயற்சிகள் எதும் மேற்கொள்ளப் படவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், குறைந்த கட்டணமுடைய நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு நமது மாநிலத்திலே இல்லை. அதன் காரணமாக அண்டை மாநிலங்களிலேயிருந்து வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, சுற்றிலும் இருக்கக்கூடிய கடல் தண்ணீரில் அந்த நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவிற்கு முயற்சி எடுத்தால் குறைந்த கட்டணமுடைய மின்சாரம் நமக்குக் கிடைக்கும் அல்லவா? அதில் ஓரளவுக்கு அதிகப்படியான செலவிருந்தாலும், வெளிநாட்டிலே இருக்கக்கூடிய நிபுணர்களுடைய உதவியைக் கொண்டாவது இதில் தீவிரமாக முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பிரான்ஸ் நாட்டிலே அமல்படுத்தப் படுகிறது. முன்பு மின்சார அமைச்சராக இருந்த திரு வெங்கட்டராமன் அவர்கள் அங்கு சென்று அதற்கு வேண்டிய ஆதாரங்களை அறிந்து பரிசீலனை செய்யச் சொல்லிப் பார்த்து, அதன் விளைவாக மிகுந்த நட்டம் வரும், அதனாலே அதை தமிழ்நாட்டிலே மேற்கொள்ள முடியாது என்று அத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, கடல் அலை மூலமாக மின்சாரம் எடுப்பது தாமதமானாலும் கூட அரசாங்கம் நடத்து கின்றவர்கள் தேர்தலுக்கு முன்பாக கடல் பாசியிலே அல்வா செய்து கொடுக்கப் போவதாக பேசி இருக்கிறார்கள். அதை விரைவில் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

(விடை இல்லை.)

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலே இப்படி கடல் அலை மூலம் மின்சாரம் எடுப்பது கடினம் என்றும் அப்படி மின்சாரம் தயாரிப்பதற்கு 150 அடிக்கு மேலே போகின்ற அலைகள் இருந்தால் தான் முடியும் என்றும் கூறி இருக் கிறார்கள். அப்படி உயர்ந்த அலைகள் நம்முடைய கடலில் இல்லாத காரணத்தினால் இது சாத்தியம் இல்லையென்று அரசாங்கம் கருது கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மின்சாரம் தயாரிக்க வேண்டு மென்றால் 25 அடி உயரமான (tide variations) அலைகள் தேவை. ஆனால் நமது கடலலைகள் tide variations 4 அடியிலிருந்து 5 அடி உயரமே எழும்புகின்றனவாதலால் இங்கு கடல் அலையை கொண்டு மின்சாரம் தயாரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

THIRU K. VINAYAKAM: Sir, even though the tidal wave does not rise to the extent desirable, was this experiment tried in the Madras State and if so, what is the cost of a unit of electricity so produced and how does it compare with the present energy produced either through the hydel system or the thermal system?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

Disciplinary Proceedings

*111 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to drop the convention to consult the Madras Public Service Commission in cases of disciplinary proceedings in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: (அ) தமிழ் நாட்டு லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுதான் அறிவுரை கூறும் ஒழுங்கு முறை வழக்குகளில் தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகத்துடன் அரசாங்கம் ஆலோசிக்கத் தேவையில்லை எனவும், இதன் பொருட்டு தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழக ஒழுங்கு முறை விதிகள் தக்க வாறு திருத்தப்படலாமெனவும் கருததுத் தெரிவித்துள்ளது.

(இ) இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether the Government consider the opinion given by tht Madras Public Service Commission as binding on the Government or as a recommendatory one in arriving at a final conclusion in a given case?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைக் கட்டுப்படுத்துவது என்று கூற முடியாது. ஆகவே தான், அந்த யோசனையை அரசு ஆலோ சித்து வருகிறது என்று குறிப்பிட்டேன்.

Portrait of Sri Sankarachariar.

* 112 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether at the end of 1966, the portrait of His Holiness Sri Sankarachariar of Kanchi Kamakoti Peetam was exhibited in a disgraceful manner at the premises of a communal party office at Kumbakonam; and

(*b*) if so, whether the Government will take suitable steps to prevent such occurrences in future?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, இது கும்பகோணத்திலே நடந்த ஒரு விஷயம். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. சென்ற பொதுத் தேர்தலிலே பல கட்சிக்காரர்கள், முக்கியமான தலைவர்கள் எல்லாம் இம்மாதிரி சங்கராச்சாரியார் போன்ற ஒரு உருவத்தை வைத்து வகுப்புவாதக்காரர்கள் அதை அவமானப்படுத்திய வகையில் நடந்து கொண்டபோது, அதை பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொண்டார்கள். இம்மாதிரி இனி மனதைப் புண்படுத்தும்படியான மத சம்பந்தமான விஷயங்கள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த கேள்வி எழுப்பிய திரு. காசிராமன் அவர்களை ஆதரித்து அங்கு அப்பொழுது திராவிடக் கழகம் வேலை செய்த நேரத்தில் இப்படி அவர்களுடைய கட்சி அலுவல கத்திற்கு முன்பாக சங்கராச்சாரியார் அவர்களுடைய படம் அவமானமாக வைக்கப்பட்டதாக போலீசுக்குத் தகவல் வந்தது. போலீஸார் சென்று பார்த்த நேரத்தில் அந்தப் படம் அங்கு இல்லை யென்று தகவல் அளித்தார்கள்.

DR. H. V. HANDE: Sir, are the Government aware that the Christians view Jesus with great veneration and the Muslims regard Prophet with great respect and large sections of the Hindu community consider Sankaracharya and Ahobila Mutt Jeer with great respect and veneration? Nowadays it has become

பட்டது. அவரை ஐ.ஏ.எஸ். பதவிக்கு சிபார்ச் செய்திருப்பதாக தகவல் எதுவும் என்னிடம் இல்லை. அவர் ஒரு சீனியர் அதிகாரி என்ற முறையில்தான் தொடர்பாக அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தில் துணை நெறியாளராக ஒரு கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதைப் போல் இப்படி துணை அதிகாரிகளாக நியமிக்கப்படக்கூடிய இடங்களில் அந்தந்தத் துறையிலுள்ளவர்களை நியமிப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி அவசியமான நிலை ஏற்பட்டால் அப்போது அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. மு. ச. சிவசாமி : இந்த நியமனம் காரணமாக அதிருப்தி அடைந்த இந்த இலாகா சீனியர் அதிகாரிகள் இந்த நியமனத்தை ஆட்சேபித்து அரசுக்கு அனுப்பிய முறையீடுகளின் பேரில் அரசு அதற்கு பதில் கொடுக்காததற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இந்த அதிகாரி நியமிக்கப்பட்டதால் எந்த சீனியர் அதிகாரியும் பாதிக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட முறையீடுகள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆகவே நடவடிக்கைகள் எதுவும் எடுக்கத் தேவை இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் வெங்கடசுப்பிரமணியம் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருக்கு ஸீனியராக நிறையப் பேர்கள் இருக்க இவர் மட்டும் நியமிக்கப்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : துணை இயக்குநராக நியமிக்கப்பட்ட காலத்தில் அவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவராக இருந்தார். அவர் ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் வாங்குகிற சீனியர் அதிகாரி என்பதை நான் ஏற்கெனவே விளக்கினேன்.

சமூக நல ஊழியர்கள்

*128. **திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் சமூக நல ஊழியர்களின் பணியினைச் சீரமைக்கும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், சமூக நல ஊழியர்களுக்கு மாதாமாதம் சரியான நேரத்தில் உரிய சம்பளத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற ஒரு குறையை அவர்கள் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா ? அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள எல்லா அலுவலர்களுக்கும் மாதம் முதல் தேதியிலேயே சம்பளம் கொடுக்கவேண்டுமென்பதுதான் விதி. சமூக நல ஊழியர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு அல்ல. யாருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தால் அது என்ன காரணத்தினால் என்று விசாரிக்கலாம் ஒட்டுமொத்தத்தில் அத்தகைய குறிப்பு அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.

திரு அ. ப. சண்முகசுந்தரம் : தலைவரவர்களே, இந்தச் சமூக நல ஊழியர்களுக்குப் பொதுவாக எந்தவிதமான குறிப்பான வேலைகள் எதுவும் இல்லை. அவர்களுக்கு மாதா மாதம் 200 ரூபாய் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சம்பளம் 'விழலுக்கு இறைத்த நீராக' இருக்கிறது. எனவே, இதுபற்றிப் புனராலோசனை செய்து அவர்களுக்கு நிரந்தர ஓய்வு அதாவது 'கம்பல்சரி ரிடையர்மெண்ட்' கொடுத்து அந்தப் பதவியை எடுத்துவிட்டால் உசிதமாக இருக்கும். எனவே, இதை அரசாங்கம் ஆலோசித்து ஆவன செய்யுமா என்று, அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தலைவரவர்களே, தேசிய இயக்கங்களில் பங்கு பெற்றவர்கள் என்பதற்காகக் கடந்தகாலத்தில் இருந்த அரசாங்கம் அந்தப் பதவிகளை ஏற்படுத்தி பலபேரை நியமித்திருக்கிறது. இப்பொழுது அவர்களை வீட்டிற்கு அனுப்புவது என்றால் நாங்கள் தேசிய பாரம்பரியத்திற்கு எதிர்ப்பாக இருக்கிறோம் என்ற குற்றச்சாட்டுகளைச் சொல்வார்கள் என்பதால் அப்படியிருப்பவர்களை உடனடியாக அனுப்ப முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. பணி அதிகம் இல்லை என்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. என்றாலும் அவர்களை நல்ல வேலைகளுக்குப் பயன்படுத்தும் முறையில் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். விழலுக்கு இறைத்த நீராகாமல் பார்த்துக்கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு முனு ஆதி : தலைவரவர்களே, இந்த சோஷியல் வெல்ஃபேர் ஒர்க்கர்ஸ்' பர்மனெண்டாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மீதியிருக்கும் யூனியன் சிப்பந்திகள் பலபேர் 'ரெகுலரைஸ்' செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்த 'சோஷியல் வெல்ஃபேர் ஒர்க்கர்ஸ்'-க்கு உடனடியாக பர்மனென்ட் ஆக்கப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதே, அந்தப் பாதுகாப்பு மற்ற யூனியன் ஊழியர்களுக்கு இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இவர்கள் கடந்தகால அரசாங்கத்தின் தத்துப்பிள்ளைகளாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தத் தனிச் சலுகை இருந்திருக்கும். இருந்தாலும் மற்ற ஊழியர்களுக்கும் குறையில்லாமல் நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், தேசிய இயக்கத்திலே ஈடுபட்டவர்கள் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அவர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியான காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்வதாக அரசுக்குத் தகவல் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தேசீய இயக்கத்திற்குக் காங்கிரஸ்காரர்கள்தான் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, பெரும்பாலோர் அந்தத் துறையிலேயிருந்து வந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். பல இடங்களில் கட்சி அரசியல் நோக்கம் இருக்கிறது என்ற குறைகள் வருகின்றன. அவ்வப்பொழுது விசாரித்துத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவரவர்களே, சமுதாய நலத்திட்டம் கிராம வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் என்பது அரசாங்கத்தின் நோக்கம். அந்த வளர்ச்சித் திட்டத்திலே கிராம வளர்ச்சிக்காக, விவசாய அபிவிருத்திக்காக, சமுதாய அபிவிருத்திக்காக, கல்வி அபிவிருத்திக்காக என்று ஆக எல்லா பிரிவினரையும் அந்த இலாக்காவிலே இணைத்திருக்கிறார்கள். அதுபோல சமூக நல ஊழியர்களையும் அந்த இலாக்காவிலே வைத்து அவர்களுக்குப் பல வேலைத்திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமூக நல ஊழியர்களுக்கு சிறு சேமிப்புத் திட்டம், கிராம கடன் பெருக்குத் திட்டம் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் போன்ற திட்டங்கள் அவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு வேலை கொடுக்கப்பட்டது. தேசீய பரம்பரை என்பதற்காக அவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை. ஆகவே அந்தச்

a fashion for some people to ridicule the Hindu religious heads. So, will this Government give clear-cut instructions to all the police officers to take immediate action whenever religious sentiments of Hindus or Christians or Muslims or any other religionists are hurt?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்த மதத்தையும் அல்லது மதத் தலைவரையும், மதப் பிரசாரகரையும் புண்படுத்துகின்ற அளவிலே யாரும் நடந்துவிடக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. பெ. சீனிவாசன் : சார், மதவாதிகளுக்கு மதத்தைப் பற்றிய பிரசாரம் செய்ய எவ்வளவு உரிமையுண்டோ அந்த அளவுக்கு நாஸ்திகர்களுக்கு மதத்தை எதிர்த்துப் பேச உரிமையுண்டு என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. அந்த எல்லா உரிமைகளும் அளவோடு இருக்க வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், மதம் மக்களுக்கு அபின் என்று சொல்கிறார்களே. அப்படி சொல்கின்ற பகுத்தறிவு ஆட்சியாளர்கள் ஆளுகின்ற இந்த தேசத்திலே மீண்டும் மதத்தை வலியுறுத்தி பிரசாரம் செய்கின்ற நேரத்தில், மதம் மக்களுக்கு அபின் என்ற முறையில் அந்த மதப்பிரசாரங்களைத் தடை செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்த மதத்தையும் அல்லது மதப் பிரசாரத்தையும் தடை செய்கின்ற நோக்கம் இல்லை.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்னை சம்பந்தப்படுத்தி சொன்னதால் ஒரு விளக்கம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: கடைசியில் சொல்லுங்கள்.

Fire accident at New Kalpakkam

113 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether about seventy five huts and fishing implements were destroyed by fire in New Kalpakkam village in Chingleput district;

(*b*) the reason for the fire; and

(*c*) the extent of loss sustained by the fishermen?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.: (அ) செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த புதிய கல்பாக்கம் கிராமத்தில் 5—5—1968 தேதியன்று 69 குடிசைகள் மட்டுமே எரிந்து போனதாக அறிவிக்கப்பட்டது.

(இ) திரு. மேகநாத செட்டியார் என்பவரின் வீட்டில் அடுப்பை எவரும் கவனிக்காததால் தீப்பொறி பறந்து கூரையில் பற்றியதனால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதென்று தெரிய வருகிறது.

(உ) இந்தத் தீ விபத்தினால் மீனவர்களுக்கு ஏற்பட்ட விரயம் ஏறக்குறைய ரூ. 1,71,000 (ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம்) என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்.—சார், அப்படித் தற்செயலாக ஏற்பட்ட இந்த தீ விபத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் கொடுத்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களுக்கு எரிந்து போன குடிசைகளை கட்டிக்கொள்வதற்கும் துணிமணிகள் வாங்குவதற்குமாக ரூ. 5,490 நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 114, 115, 116 ஆகியவை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

குடுமியாமலை விவசாயப் பண்ணை.

* 117 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குடுமியாமலையில் அமைக்கப்பெற்ற விவசாயப் பண்ணைக்கு ஆன மொத்தச் செலவென்ன?

(இ) இப்பண்ணையின் சிறப்புக்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இந்த வேளாண்மைப் பண்ணைக்கு 30—6—1968 வரையில் ரூ. 2,90,832 செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,57,132 முதலீடு மூலதனமாகும்.

(இ) இந்தப் பண்ணையில் அடுத்தடுத்துள்ள 3,300 ஏக்கர் நிலம் உள்ளது. இது செம்மண் நிலம். இந்த நிலத்தைப் பயிரிடுவதற்கேற்றவாறு எளிதில் பண்படுத்த முடியும். இங்கு தண்ணீரும் குறைந்த ஆழத்திலேயே கிடைத்துவிடுகிறது. இப் பண்ணை, பொருளாதார அளவில், பின்தங்கிய பகுதியாகிய புதுக்கோட்டை கோட்டத்தில் அமைந்துள்ளது. டிராக்டர், விசையேற்றம் போன்ற யந்திர சாதனங்களைக் கொண்டு பயிரிடும் பண்ணையாக இது மேம்படுத்தப்பட்டு வருகிறது. உழவர்களுக்கு இது பரிசோதனை கட்புல விளக்கப் பண்ணையாகச் செயல்படவேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. அரசாங்கப் பண்ணை ஒன்றில் முதன் முறையாக இப்பண்ணையில் தான் நீர் தூவும் பாசன முறை (Sprinkler Irrigation system) செயலாக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பண்ணையிலே அதிகமாக ஈடுபட்டிருந்தார்கள். எனவே, இந்தப் பண்ணைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்ணை என்று பெயரிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்தப் பண்ணையை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் தீவிர முயற்சி எடுத்து அந்தப் பண்ணை நல்ல முறையிலே இயங்குவதற்கு பாடுபட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அந்த பண்ணைக்கு அறிஞர் அண்ணா வேளாண்மைப் பண்ணை என்று பெயரிடப்பட வேண்டுமென்று திருச்சி வேளாண்மைக் கழகச் செயலாளரிடமிருந்து கோரிக்கை வந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அதை திருச்சி கலெக்டருக்கு சிபாரிசு செய்துள்ளார்கள். கலெக்டர் அதை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்துள்ளார்கள். அரசாங்கம் பரிசீலித்து உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு அந்தப் பண்ணைக்கு அந்த பெயரிட முன்வரும்.

திரு. சி. கோவிந்தராாசன் : சென்னை கடற்கரை ஓரத்தில் கிடைப்பதைப் போல் நல்லவகையான மீன்கள், இறால்கள், தென் ஆர்க்காடு கடற்கரை ஓரத்தில் கடலூர், ஆலப்பாக்கம் பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் கிடைக் கின்றன. ஆகவே, கடலூருக்குப் பக்கத்தில் ஆலப்பாக்கம் என்ற இடத்தில் உறைபதனப் பிரிவு ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தனிப்பட்ட பெருதனக்காரர்கள் யாராவது மூலதனம் போட்டு இந்தத் தொழிலை நடத்துவதற்கு முன் வருவார்களேயானால், அரசாங்கம் நிச்சயம் அவர்களுக்கு உதவும். 17 இடங் களில் இப்பொழுதே தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. கடலூர் பரங்கிப்பேட்டை போன்ற இடங்களில் கனம் அங்கத்தினர் முயற்சி செய்து, பொருளாதார வசதியுள்ளவர்கள் இந்த லாபகரமான தொழிலை நடத்து வதற்கு முன்வரும்படிச் செய்ய வேண்டும். தமிழகத்திலிருந்து மீன், இறாலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நல்ல ஆதாயம் வரக்கூடிய தொழில். கனம் அங்கத் தினர் பிரசாரம் செய்து, இதற்கு ஆதரவு தேடித் தருவார்கள் என்று நம்புகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்குச் சென்று, அங்கிருந்து ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிக்கொண்டிருந்த இறால்களும், மீன்களும், இப்பொழுது தமிழ் நாட்டிலேயே பதனப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்ற காரண மாக, தமிழ் நாட்டிலுள்ள மீனவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றது. நம்முடைய அன்னிய நாட்டு செலாவணி தட்டுப்பாடும் நீங்குகிறது. அதனாலே இந்த எண்ணூர் மீன் பதனிடும் தொழிற்சாலைக்கு அரசு மேலும் உதவி செய்யுமா ?

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது இடம் மாறியிருப்பதாக சில நண்பர்கள் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். நான் இருக்க வேண்டிய இடத்தில் நான் இப்பொழுது இருக்கிறேன். எனனுடைய கேள்வி என்னவென்றால் எண்ணூர் மீன் பதனத் தொழிற்சாலையில் இன்னும் அதிகப்படியான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு அரசு தன்னுடைய ஒத்து ழைப்பை அதிகப்படுத்திக் கொடுக்குமா ?

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

திரு. க. இராமமூர்த்தி : கேள்வியை அனுமதிக்க முடியாத நிலை.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : கேள்வியை அனுமதிப்பதா இல்லையா என்பது சபைத் தலைவர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும், கனம் அங்கத்தினர் அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : அங்கத்தினர் அவர்கள் அவருடைய இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாறியிருக்கிறார். வேறு இடத்திலிருந்து கேள்வி போட்டால் அந்த கேள்வி அனுமதிக்கப்படமாட்டாது என்பதாக ஏற்கெனவே இருந்த தலைவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். இப் பொழுது அங்கத்தினர் அவர்கள், தான் இருக்கவேண்டிய இடத்தில் தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்பொழுது அங்கத்தினர் உட்காந்திருக்கிற இடம் கட்சித் தலைவர்கள் உட்காருகிற இடம். ஒரு கட்சித் தலைவராக

மாறி அங்கே •உட்காருவதனால், அதைப்பற்றி சபைக்குத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும். அப்படிச் செய்திருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது. வேறு இடத்தில் இருந்தார் என்பது பற்றி பிரச்னை இல்லை. கட்சித் தலைவர்கள் உட்காருகிற இடத்தில் வேறு ஒருவர் வந்திருக் கிறார் என்றால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய பாயிண்டு ஆப் ஆர்டர் நியாயமான பாயிண்டு ஆப் ஆர்டர்தான். ஹாஜி ம. மு. பீர் முகம்மது அவர்கள் முஸ்லிம் லீக் கட்சித் தலைவராக தேர்ந்தடுக்கப்பட்டிருப்பதாக அவருடைய தலைவர் நமக்கு அறிவித்த காரணத்தினால், அவர்களுடைய இடம் மாற்றிக் கொடுக்கப்பட் டிருக்கிறது. இந்த இடம் மாறுதல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மாதிரி அறிக்கை அனுப்புவதிலே கொஞ்சம் கால தாமதம் ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதில் எந்த விதமான முறை கேடும் இல்லை என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : கனம் உறுப்பினர் திரு பீர் முகம்மது இடம் மாறி உட்கார்ந்து இருப்பதால், நம்முடைய உறுப்பினர் திரு ராமமூர்த்தி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். சபாநாயகர் அவர் கள் திரு. பீர் முகம்மது அவர்களுடைய கேள்வியை அனுமதித்த பிறகு, இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது நியாயமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எண்ணூரில் நல்லவிதமான வேலைகள் செய்யப் பட்டிருக்கிறன. இன்னும் சில வேலைகள் பாக்கி இருக்கின்றன. அவற்றையும் துரிதமாகச் செய்து கொடுக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டி ருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தன்னிலை விளக்கம்.

திரு. நா. காசிராமனைப்பற்றி முதலமைச்சர் கூறியது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் 1966-ல் சங்கராசாரியருடைய படத்தைப் பற்றிய நிகழ்ச்சியைக் குறித்து நான் கேட்ட கேள்விக்கு முதல் அமைச்சர் தகவல் இல்லை என்று முதலில் சொன்னாலும், பிற்பாடு, என்னை ஆதரித்து வேலை செய்த கட்சி செய்தது பற்றிக் குறிப்பிட்டதால் தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இம்மாதிரியான நிகழ்ச்சி என்னுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வீட்டி லேயே, கட்சியின் செயலகத்தில் அப்படிப்பட்ட ஒரு பொம்மையை வைத்து அவமானகரமாக செய்தார்கள். நானும் என்னுடைய தகப்பனாரும் சேர்ந்து போலீஸ் இடம் சொல்லி அதை அகற்றுவதற்கான முயற்சிகளைச் செய்தோம். இதை போட்டோ பிடித்து, காங்கிரஸுக்கு எதிராக பலர் சென்னையிலும், மற்ற ஊர்களிலும் பிரசாரத்திற்குப் பயன் படுத்தினார் கள். இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனியும் தமிழ்நாட்டில் ஏற்படாத வகையில், ஆத்திகத்திற்கும், நாத்திகத்திற்கும் இடம் கொடுக்கும் போது மற்றவர்கள் மனம் நோகாத வகையில் இருக்கும் வண்ணம் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவ்வளவு உறுதியாகச் சொல்லியவர்கள் அப்பொழுது, 1966-ல் பொதுத் தேர்தலுக்கு முன்பு, போலீசாரை தாங்கள் பார்த்தபோது, அவர்கள் வந்து பார்த்தபோது அப்படிப்பட்ட உருவம் அங்கே இல்லை என்று அன்றைக்கு அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். அப்பொழுது இருந்த போலீஸ்காரர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள்.

[1969 மார்ச் 1

THIRU K. VIJAYA RAGHUNATHA THONDAIMAN: Sir, there was a proposal to start this Farm with the aid of the Russian Government. I would like to know the reason why that proposal has been dropped?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அந்த மாதிரியான முயற்சி எதுவும் கிடையாது. மத்திய அரசாங்கம் 5,000 ஏக்கர் உள்ள ஒரு பெரிய பண்ணையை தமிழக அரசு நிறுவி, அதை 20, 30 ஆண்டுகாலத்திற்கு குத்தகைக்கு மத்திய அரசு விடவேண்டுமென்று கேட்டார்கள். அப்படி கேட்டுக் கொண்டதால் தமிழக அரசு ஆயிரம் ஏக்கரை நல்ல சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். நல்ல தரமான சிறு தானிய வகைகளையும், காய்கறி வகைகளையும், பழ வகைகளையும் அந்த பண்ணையிலே பயிரிடக் கூடிய சூழ்நிலை இருப்பதாலே நமது அரசே அதை எடுத்து நடத்துவது என்று முடிவெடுத்தது, அதை நிறைவேற்றும் வகையில் விதை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ரஷிய அரசாங்கத்திடமிருந்து அங்கத்தினர் சொன்னமாதிரி உதவி பெற்று ஆரம்பிப்பது குறித்துத் தகவல் எதுவுமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, குடுமியாமலையில் அமைக்கப்பட்ட விவசாயப் பண்ணையைப் போல தமிழகத்தில் வேறு இடங்களில் விவசாயப் பண்ணைகள் அமைக்க அரசு கருதியுள்ளதா, திட்டமிட்டுள்ளதா? ஆமெனில் எங்கெங்கே?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

Freezing Unit at Ennore

*118 *Q.*—THIRU A. M. RAJA:
THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR:
THIRU N. S. V. CHITHAN:

Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the freezing unit at Ennore has been completed;

(*b*) if so, the actual cost of execution; and

(*c*) the capacity of the plant?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.(அ) & (இ); சில சிறு இனங்களைத் தவிர, எண்ணூர் மீன் உறை பிரிவு வேலை முடிவடைந்துள்ளது. எல்லாப் பணிகளும் முடிந்து ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுத்தப் பின்னர்தான் உண்மையில் ஏற்பட்ட செலவு தெரிய வரும்.

(உ) பனிக்கட்டி உற்பத்தி—

பனிக்கட்டித் துண்டுகள்—நாள் ஒன்றுக்கு 3 மெட்ரிக்டன்;
குளிர்ப்பதன மீன் சேமிப்பகம்—$7\frac{1}{2}$ மெட்ரிக் டன்,
உறைநிலைச் சேமிப்பகம்—50 டன்;

உறைநிலைத் திறன்—நாள் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ டன் முதல் 3 டன் வரை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, நிறையச் செலவு செய்து கட்டப்பட்ட இந்த உறை பதனப் பிரிவின் மூலம் மீன், இறால் இவைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? எந்த நாட்டிற்கு? இதன்மூலம் ஈட்டப்படும் வெளிநாட்டு செலாவணி எவ்வளவு என்பதை அறியலாமா ?

1969 மார்ச் 1]

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: இந்த எண்ணூர் பிளாண்டு கட்டுவதற்காக ரூ. 2,56,950 மெஷினரிக்காகவும், ரூ. 2,12,440 கட்டடச் செலவுக்காகவும் செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் ஓரளவுதான் இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது ரூ. 1,92,716 பாரி கம்பெனிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போல கட்டடச் செலவிற்காக ரூ. 2,09,294 தான் செலவிடப்பட்டிருக்கிறது. இது முழுமையாகப் பூர்த்தியான பிறகு தான், முழுச் செலவின் விவரமும் தரப்படும். இந்தக் குளிர் சாதனத்தை குத்தகைக்கு விட்டோம். குத்தகைக்கு எடுத்தவர்கள் இந்தியக் கப்பல் வாணிப ஏஜென்ஸி. அவர்கள் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ரூ. 35 லட்சம் பொருமான இறால் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த உறை பதனப் பிரிவு அமைப்பு வேலைக்கு எந்த தனிப்பட்ட கம்பெனிகள் மனுச் செய்து கொண்டன. எந்தக் கம்பெனிக்கு கொடுக்கப்பட்டது இந்த வேலை ? எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: இந்த வேலை மேற்கொள்ளுவதை ஏலத்தில் விடவேண்டும் என்று டைரக்டர் அவர்கள் சர்க்காருக்கு ஒரு தாக்கீது அனுப்பினார்கள். அது குறைந்தபட்சம் ஓபன் டெண்டருக்கு விடப்பட்டது. ரூ. 1,16,100 என்று குத்தகை ஆரம்பித்து, அதில் முதல் கேள்வியாக அதிகபட்சமாக கேட்கப்பட்டது ரூ. 1,20,000 ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை. இந்தியக் கப்பல் வாணிப ஏஜெண்டுக்கு குத்தகைக்கு விடப்பட்டது 5 ஆண்டுகளுக்கு.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த உறை பதனத் தொழிற்சாலை பொதுத் துறையிலே கட்டப்பட்டு, தனியார் துறைக்கு விடப்பட வேண்டிய அவசியம் என்ன ? அண்டை மாநிலமாகிய கேரளத்தில் அப்படி விட்டுவிட்டு இப்பொழுது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: இதுவரையிலும் உறைய வைக்கும் நிலையங்கள் 24 ஏற்படுத்தப்பட்டன. பல நிலையங்கள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்ததன் காரணமாக, தனியாருக்கு இதை குத்தகைக்கு விடுவதன்மூலம் அரசு செலவு செய்யும் தொகையும் எடுக்கப்படும். ஏற்றுமதித் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் இதைக் குத்தகைக்கு எடுத்து நடத்துவதன் மூலம் நன்றாக நடக்கிறது. குத்தகைக்கு எடுத்த தினத்திலிருந்தே வேலை ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரையில் ஜப்பான், அமெரிக்கா நாடுகளுக்கு இரண்டு முறை ஏற்றுமதியாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: உறைப் பதனப் பிரிவில் தேவையான அளவுக்கு மீன் இறால் இவைகள் வைக்கப்படவில்லை என்பது உண்மையா ? அரசாங்கம் மீனவர்களுக்கு அதிக ஊக்கம் அளித்து, போதுமான அளவிற்கு இந்தப் பிரிவை பயன்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: எண்ணூரில் துவக்கப்பட்ட இந்த ஐஸ் பிளாண்டு நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்ற நிலைமை ரூ. 35 லட்சம் பொறுமான இறால் ஏற்றுமதி ஆனதிலிருந்து தெரியவருகிறது. கடலோரப் பகுதியில், கடலூர், பரங்கிப் பேட்டை, ராயபுரம் போன்ற இடங்களில் நிறைய இறால் கிடைக்கிறது. அவைகள் இதுவரையில் கேரளத்திற்குக் கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்பொழுது எண்ணூரிலுள்ள உறை பதனப்பிரிவிலேயே பதன்படுத்தக்கூடிய அளவுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. இதனால் மீனவர்கள் நிறைய பேர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆரம்பத்தில் கேரளத்திலிருந்து அதிலே பழக்கப்பட்டவர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். இப்பொழுது எண்ணூர் பகுதியிலிருக்கிற மீனவர்களே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிறைய லாபம் வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் காசிராமன் அவர்கள் போட்ட 112-வது கேள்விக்கு ஒரு சப்ளிமெண்ட்டரி கேள்வி கேட்கலாம் என்று அப்போதே விரும்பினேன். இந்த நாடு ஒரு செகுலர் ஸ்டேட். மதசம்பந்தமாகவும் பிரசாரம் செய்ய உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது துணை வினா கேட்கக் கூடாது. கேள்வி நேரம் முடிந்துவிட்டது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : அவர் எதற்காக எழுந்தார் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினா அனுமதிக்கப்படவில்லை. இந்த விஷயத்தின் மீது பேச அரை மணி நேர வாதம் வேண்டுமென்று கேட்பதற்காக உறுப்பினர் எழுந்தார் என்று நினைத்தேன் அவருடைய கேள்விக்கு நானே பதில் அளித்துவிட்டேன்.

திரு சி. கிருஷ்ணமூர்த்தி : பாயின்ட் ஆப்ஃ ஆர்டர்,.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு இடம் ஒன்றும் இல்லை. திரு க. கோமதிசங்கர தீட்சிதர் அவாகள் கேள்வி கேட்டது பேரவை நிகழ்ச்சியில் இடம் பெறாது.

5. கவன ஈர்ப்பு.

சென்னை மாநகரில் கொசு, ஈ தொல்லையை ஒழித்தல்.

DR. H. V. HANDE : Sir, under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Health and Harijan Welfare to a matter of urgent public importance, namely, the mosquito menace in the City of Madras and the need to take immediate steps to eradicate mosquitoes and flies.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் கொசுக்கள் பெருகும் முக்கியமான இடங்கள் பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் ஆறு, அடையாறு ஆறு, ஓட்டேரி ஓடை, சன் தியேட்டர் பக்கத்திலிருந்து தொடங்கி சைதாப்பேட்டை டாட்ஹண்டர் நகர் வரை செல்லும் கால்வாய் இடங்கள் ஆகிய இடங்கள் எனக் கூறலாம். சென்னை மாநகரின் ஊடே ஓடும் கூவம் ஆற்றில் ஆகாசத் தாமரை வளர்ந்துள்ளதன் காரணமாகவும், கொசுத் தொல்லை கனிசமாக அதிகரித்தது. பருவமழை பொய்த்ததன் காரணமாக நீர்நிலைகளில் அழுக்கு நீர் தேங்கிவிட்டது. இதனாலும் கொசுத் தொல்லை அதிகரித்தது. இத்தகைய இடங்களில் கொசு வளர்வதைக் கட்டுப்படுத்த முறையான ஏற்பாடுகள் இடைவிடாமல் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் கொசு பெருகுவதற்கு வாய்ப்பான இடங்களாக உள்ள மழை நீர் வடிகால்களில் எல்லாம், கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பிரிவினர் சென்னை மாநகரத்தைச் சேர்ந்த வட்டங்கள் ஒவ்வொன்றிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். கழிவுநீர் அகற்று வசதிகள் இல்லாமலும் சாக்கடைத் தொட்டி நீர் தேங்குமிடங்களாகவும் உள்ள மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம் போன்ற மாநகர் விரிவுப் பகுதிகளிலும் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. இம் மாநகரின் ஊடே செல்லும் முக்கிய ஆறுகளின் பகுதிகளில் சிறப்புப் பணியாளர்களை நியமிக்கவும் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆறுகளிலுள்ள நீர்ப்பாசிகள், மற்றும் மிதவைப் பொருள்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதும், ஆறுகளில் கொசு பெருகுவதைத் தடுக்கவும் அவற்றில் வீசிடும் துர்நாற்றத்தைப் போக்கவும் அவற்றில் மருந்து தெளித்துத் தூய்மைப் படுத்துவதும் இவர்தம் பணியாகும்.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டிலும் வழக்கமாக ஆடி மாதத்தில் (ஜூலை, ஆகஸ்டில்) ஈக்கள் தொல்லை அதிகரித்து வருகிறது. இம் மாநகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈ ஒழிப்பு மும்முர நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இவ்வாண்டில் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு ஈ தொல்லை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இம் மாநகரத்தில் கொசுத் தொல்லையை ஒழிப்பது குறித்து, அப்போதிருந்த மாண்புமிகு சுகாதார அமைச்சர் அறையில் 28—11—1968-ம் தேதியன்று, சென்னை மாநகராட்சிப் பொறுப்பதிகாரி, சுகாதார அதிகாரி, சுகாதாரப் பணிகள்-குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், சுகாதாரப் பணிகள்-குடும்பநலத் திட்ட கூட்டு இயக்குநர் ஆகியோருடன் கலந்தாராயப்பட்டது. புழுக்கொல்லி எண்ணெய் போன்ற மருந்துகள் வழங்கப்படாததால் கொசு ஒழிப்பு வேலை மெதுவாகவே நடந்தது என்றும், மாநகராட்சிக்கு இம் மருந்துகள் இப்போது கிடைத்துள்ளபடியால், கொசுத் தொல்லை பெருமளவிற்கு ஒழிக்கப்படக் கூடுமென்றும் சென்னை மாநகராட்சியின் சுகாதார அதிகாரி விளக்கினர். சென்னை மாநகராட்சி இது குறித்து கூடுமான நடவடிக்கைகளெல்லாம் எடுத்து வருகிறது.

DR. H. V. HANDE : From the statement made by the Hon. Minister it is not clear what are the concrete steps taken by the Government. The Public Health Department of the Madras Corporation is actually in charge of the cleanliness of the City. We find that the city is not at all clean. It is deteriorating. Is it because each medicl officer in the Corporation is in charge of as many as 20 divisions? Will this Government seriously consider at least allotting 8 to 10 divisions only for each of these officers and see that each medical officer is made responsible for the cleanliness of the divisions under his charge? Otherwise Cholera, Jaundice, etc., will increase. Will the Government take serious notice of what I said and eradicate these diseases by taking the measures which I have suggested?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளும், சிப்பந்திகளும் போதுமானவர்சளாக இல்லாத காரணத்தினால் தான் இந்த கொசுத் தொல்லைய ஒழிப்பதில் தாமதம் ஏற்பட்டது என்று குறை கூற முடியாது. குறிப்பாக, நான் முன்பு சொன்ன புழுக் கொல்லி எண்ணெய் கொடுக்கப்படாத காரணத்தினால்தான் கொசுத் தொல்லையை ஒழிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இப்பொழுது அந்த எண்ணெய் கிடைத்துவிட்டது. போதுமான சிப்பந்திகளும் அதிகாரிகளும் இருக்கிற காரணத்தினால் விரைவில் எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து, கொசுத் தொல்லையை ஒழிக்க உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமுமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகா, சாத்தான் குளம் தொகுதியிலுள்ள உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இரண்டு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்......" (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுத்ததைத் தான் உறுப்பினர் அவர்கள் படிக்கவேண்டும்.

3. தகவல் கோரல்.

விளுக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : என்னுடைய கேள்விகள் கொடுத்து வெகு நாட்களாகியும், இன்னும் அவற்றிற்கு பதில் வரவில்லை. கேள்விகள் லிஸ்டில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள் சொல்லுகிறேன். கேள்விகள் நிறைய கொடுக்கப்பட்டிருக்கின்றன. தங்கள் கேள்விகள் இன்னும் அவைக்கு வரவில்லை என்று உறுப்பினர்களிடமிருந்து நிறைய செய்திகள் வந்து இருக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டது போல், 41-வது விதியின் கீழ் விவரங்கள் கொடுக்க எந்த, எந்த அமைச்சர் இடத்தில் எத்தனை எத்தனை அறிக்கைகள் பாக்கியிருக்கின்றன என்கிற விவரம் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறேன். அமைச்சர்களெல்லாம் பேரவைத் தலைவருடன் ஒத்துழைத்தால்தான் நல்லமுறையில் பணிகள் நடைபெற முடியும். கேள்விகள் எந்த எந்த அமைச்சரிடம் பாக்கியிருக்கின்றன என்கிற தகவலையும் கேட்டிருக்கிறேன். தகவல் வந்தவுடன், அமைச்சர்களுக்குத் தெரிவிக்கிறேன். அவர்கள் முறையே தங்கள் தங்கள் செயலாளர்களுக்குத் தெரிவித்து, அவர்களைத் துரிதப்படுத்தி, அமைச்சர்கள் செயல் பட்டால், உறுப்பினர்களுடைய குறைபாடுகள் நீங்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

4. நடைமுறைக்கேள்வி.

விஞப்பட்டியலில் உள்ள விளுக்களுக்கு விடையளிக்க அமைச்சர் அவையில் இல்லாதிருத்தல்.

திரு. டி. மார்டின் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஸ்பீக்கர் சார். இன்றைக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளில் மூன்று கேள்விகள் நிதி அமைச்சர் பேரில் உள்ளவை சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. நிதி அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திற்கு சபைக்கு வரமாட்டார்கள், அவர்கள் வி. ஐ. பி. யைப் பார்க்கச் சென்றிருக்கிறார்கள் என்று லாபியில் பேசப்பட்டது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே பேசுவதை இங்கே சொல்லக் கூடாது.

திரு. டி. மார்டின் : தாங்கள் ஒவ்வொரு அமைச்சருக்கும் குறிப்பிட்ட கேள்விகளை சபையில் வைக்கிறீர்கள். அந்த விதமான கேள்விகளை வைக்கும் போது, இன்று நிதி அமைச்சர் அந்தக் கேள்விகளுக்கு பதில் கொடுக்காததால் அது பற்றிய தகவல்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த மன்றமும் அந்த மூன்று கேள்விகளுக்கும் விடைகளைத் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. நாளைக்கு நிகழ்ச்சி நிரல் பட்டியல் கொடுக்கும்போது, இந்த மூன்று கேள்விகளையும் சேர்த்து இணைத்துக் கொடுக்காவிட்டால், அதன் பதில்களை அறியும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, இனிமேல் அப்படிப்பட்ட கேள்விகளையும் இணைத்துக் கொடுக்க வேண்டும். அதோடு, தாங்கள் இந்த மாமன்றம் கூடும் போது, அமைச்சர்கள் வி. ஐ. பி. போன்றவர்களைப் பார்ப்பதைச் சபை முடிந்த பிறகு பார்க்கும் முறையை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் விடையளிக்க வேண்டிய கேள்விகள் குறிப்பேட்டிலே பொறிக்கப்படுகின்றன. என்றாலும், திடீரென்று தவிர்க்க முடியாத காரணங்களால் அமைச்சர் அவைக்கு வர முடியாத நிலை ஏற்படும்போது, முன்கூட்டியே,

தலைவர் அவர்களுக்கு, அந்தக் கேள்விகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. மறுநாள் அந்தக் கேள்விகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன். அதோடு கூட, மறுநாள் வரும் கேள்விகளோடு இந்தக் கேள்விகளையும் இணைத்து பதில் சொல்ல அமைச்சர் கடமைப்பட்டிருக்கிறார். அந்த அளவில் இணைப்பதற்கும், இந்த அவையினுடைய முன்னவர் என்ற முறையில் அதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக, ஒரு அமைச்சர் வராமல் இருப்பது ஒரு தவறு என்று கூறுவது நல்லதல்ல. திடீரென்று எதிர்பாராத காரணத்தால் வர முடியாமல் இருக்கக்கூடிய காரணங்கள் ஏற்படக் கூடும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு மார்டின் அவர்கள் சட்டமன்ற விதிமுறைகளை நன்றாகப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

'The Speaker may, at the request of the concerned Minister, postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date.'

அப்படி விதிமுறைகளில் இருக்கிறது. இந்த மாதிரியான நிலைமைகள் வரும் என்று அதற்குத் தக்கவாறு முன்பே விதிகளை உருவாக்கி இருக்கிறார்கள். இதெல்லாம் விதிமுறைகளில் இணைக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான முறைகேடும் நடக்க வில்லை, குறையாகச் சொல்வதற்கு. மேலும் இதை பாயின்ட் ஆப் ஆர்டராக எழுப்ப வேண்டிய அவசியமும் இல்லை.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

விளுக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, அசெம்பிளி நடவடிக்கைகளிலேயே கேள்வி நேரந்தான் முக்கியமான, சுவாரஸ்யமான நேரம். மந்திரிகளைக் கேட்டு, அஷ்யூரன்ஸ்கள் வாங்கும் வாய்ப்பு இருக்கும். ஆகவே, வருஷக் கணக்கில் கேள்விகள் தூங்கிக்கொண்டு இருக்கின்றன. என் கேள்விகளே தேங்கிக் கிடக்கின்றன. 67 மார்ச் மாதம் கொடுத்த கேள்விகள். நானே கேள்வி போடுவதில் சோம்பேறி (சிரிப்பு) அதுவும் இன்னும் வரவில்லை. ஆகவே, அசெம்பிளியில், இந்தியாவிற்கே முன் மாதிரியாக உள்ள நம்முடைய சபையில் கேள்வி நேரமே பூராவாக இருக்கும் முறையில் சில நாட்கள் நடவடிக்கைகளை நடத்தலாமா என்று யோசிக்க வேண்டும் (சிரிப்பு) என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கேள்வி நேரத்தையே பூராவாக வைத்துக் கொண்டால் அது அவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு அசெம்பிளிக் கூட்டத்தை வேண்டுமானால் அதிகப்படுத்தலாம். நமக்கும் அதிக விவரங்களைக் கேட்க வாய்ப்பு இருக்கும், மக்களுக்கும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும். ஒரு வருஷத்தில் குறைந்தது மூன்று மாதமாவது—அது குறைந்த பட்சம், அதிக பட்சம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்—கூடுவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, நான் ஒரு "ஷார்ட் நோட்டீஸ் கொஸ்சின்" கொடுத்து, தலைவர் அனுமதி கொடுத்தும், இன்னும் பதில் கிடைக்கவில்லை. ஏழு நாட்களில் பதில் கொடுக்க வேண்டும் என்று விதி இருந்தும் கூட, அது தேங்கிக் கிடக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கேள்விகள் பற்றி இந்த இடத்தில் கேட்டால், எந்த விதமான தகவலும் கொடுக்கும் நிலையில் இல்லை. என்னுடைய அறையில் கேட்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU T. MARTIN : I am only reading from the copy which I have given to the office.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் கொடுத்ததைப் படிக்கக் கூடாது. நாங்கள் திருத்திக் கொடுத்ததைத் தான் படிக்க வேண்டும். திருத்தப்பட்ட நகல் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி, ராதாபுரம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், கடயம் ஆகிய பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாத நிலைபற்றி".

திரு. நா. சௌந்திரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி, ராதாபுரம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், கடயம் ஆகிய பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாத நிலைபற்றி"

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி, ராதாபுரம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், கடயம் ஆகிய பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாத நிலைபற்றி".

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி, ராதாபுரம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், கடயம் ஆகிய பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாத நிலைபற்றி".

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிலவரி ஒப்படை, உள்ளூர் கல்வி மானியம் , கல்வித் துணை மானியம், சிறப்பு அகவிலைப்படி மானியம் ஆகிய அரசாங்க மானியங்களிலிருந்து தொடக்கக் கல்விக்காகும் செலவை ஊராட்சி ஒன்றியங்கள் சரிக்கட்டி வருகின்றன. நிலவரி ஒப்படையும் கல்வித் துணை மானியமும் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் எப்ரல் முதல் நாளன்று பள்ளிக் கல்வித் துறை இயக்குநரால் வழங்கப்படுகின்றன. உள்ளூர் கல்வி மானியம் இரண்டு அரை ஆண்டுத் தவணைகளில் அதாவது ஜூலையிலும், அக்டோபரிலும் வழங்கப்படுகிறது. முந்திய அரையாண்டுக் காலத்தில் அகவிலைப் படிக்காகச் செலவிடப்பட்ட தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் ஆகஸ்ட், பிப்ரவரி மாதங்களில் சிறப்பு அகவிலைப்படி மானியத்தை வழங்கவும் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ஒப்பளிப்பு வழங்குகிறார். 1968-69 ஆண்டிற்காக சிறப்பு அகவிலைப்படி மானியத்தின் இரண்டாவது தவணைத் தொகை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு 1969 பிப்ரவரி 15ந் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு அளிக்கப்படத் தக்கதாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை மிக இடர்ப்பாடானதாக உள்ளமையாலும், 1969 நவம்பர் திங்களுக்கான சம்பளங்களை ஆசிரியர்களுக்கு வழங்க நிதி வசதி இல்லாமையாலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு மானியத்தில் இரண்டாவது தவணைத்

தொகையை முன்கூட்டி அளிக்கும்படி பள்ளிக் கல்வித் துறை இயக்குநருக்கு அனுமதி வழங்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தை வேண்டினார். அவ்வண்ணமே அரசாங்கம் கல்வித்துறை இயக்குநரை 31—3—1969 அரை ஆண்டிற்குடைய சிறப்பு அகவிலைப்படி மானியத்தில். பாதித் தொகையை உடனே வழங்கும்படி உத்தரவிட்டனர். 31—3—1969 தேதியுடன் முடிவுறும் அரையாண்டிற்காக முன்னதாகவே சிறப்பு அகவிலைப்படி மானியத்தை வழங்க வேண்டி பல ஊராட்சி ஒன்றிய குழுக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்தன. பள்ளி கல்வித்துறை இயக்குநரால் சிறப்பு அகவிலைப்படி மானியம் அளிப்பதற்கான புள்ளி விவரங்கள் தயாரிக்க பல ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தேவையான செலவு விவர அறிக்கையை குறித்த காலத்தில் அளிக்கவில்லை என்றாலும் வழிவகை நிதி நிலை மிகவும் இடர்பாடாக உள்ளதென்று தெரிவித்த ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு 15—2—1969-ம் தேதிக்கு முன்னரே சிறப்பு அகவிலைப்படி மானியத்தை முன்கூட்டி வழங்க பள்ளி கல்வித் துறை இயக்குநருக்கு அரசாங்கம் பொது அனுமதி வழங்கியது. அதற்கு ஏற்ப பள்ளி கல்வித் துறை இயக்குநர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் வழங்க ரூபாய் 45·53 லட்சம் வழங்கியுள்ளார்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தாலுக்கா உடன்குடி, ராதாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. உடன்குடியில் ஆசிரியர்களுக்கு 3 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. எனவே பஞ்சாயத்து யூனியனுடைய நிதிநிலையைச் சரிபார்க்க ஸ்பெஷல் ஆபீசர் யாரையாவது அனுப்பி அல்லது மாவட்ட ஆட்சியாளரையாவது அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் அனுப்பிப் பார்த்து இதுபோன்ற நிலை இனி ஏற்படாத வாறும், கடந்த 3 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படாத ஆசிரியர்களுக்கு உடனடியாக ஒரு வாரத்திற்குள்ளாவது சம்பளம் பட்டுவாடாச் செய்யப்படுவதற்குமான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொடக்கப் பள்ளியின் பொறுப்புக்கள் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்கின்றன. தொடக்கப் பள்ளி கல்விச் செலவுக்காக சர்க்கார் தனியாக ஊராட்சி மன்றங்களுக்கு மானியம் கொடுக்கிறது. கல்வித் துறையில் இருந்தும் கொடுக்கப்படுகிறது. அதுவும் இந்தத் தொகையை முன்கூட்டியே ஊராட்சி மன்றங்களுக்கு சர்க்கார் அளித்திருக்கிறது. கொடுக்க வேண்டிய தேதிக்கு முன்னாலேயே கொடுத்திருக்கிறோம். ஆயினும் கனம் உறுப்பினர் ஒப்புக்கொண்டபடி சில ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத இடர்ப்பாடுகள் வந்திருக்கின்றன. ஆகவே அரசு கொடுக்கிற மானியத்தை எப்படிச் சீராகக் கொடுப்பது, ஆசிரியர்களுக்குச் சம்பளம் தடங்கலின்றிக் கிடைக்கச் செய்வது என்பது பற்றிக் கல்வித் துறையை யோசனை கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் போனதற்குக் காரணம் ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டபோது எவ்வளவு தொகை கல்விக்காக மானியம் கொடுத்தார்களோ அதே தொகை தான் இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அதன் பிறகு 10 ஆண்டுகளில் புதிய பள்ளிகள் அதிகப்படியான ஆசிரியர் நியமனங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆசிரியர்களுடைய சம்பளங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிற கல்வி மானியத்தை உயர்த்திக் கொடுக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? இவற்றைப் பரிசீலனை செய்யவாவது ஒரு உயர்தரக் குழுவை அமைக்க அரசுக்கு விருப்பம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லப்படுகிற பல காரணங்களில் இதுவும் ஒன்று. நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இது பற்றிப் பரிசீலனை செய்து வருகிறார்கள். இதுபற்றிச் சரியான முறையில் முயற்சி எடுப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 3 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படாததற்குக் காரணம் யூனியன் ஆரம்பித்த காலத்தில் கல்வி மானியமாக எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டதோ அதே தொகைதான் இன்றளவும் கொடுக்கப்படுகிறது, புதிதாகப் பள்ளிகள் துவக்கப்பட் டிருக்கின்றன, ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய சம்பள விகிதமும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கல்வி மானியத்தையும் அரசு அதிகமாக்கிக் கொடுக்க முயற்சி செய்யுமா? அல்லது, யூனியன் பொறுப்பில் உள்ள பள்ளிகளையாவது அரசே மேற்கொள்ள முயற்சி எடுக்குமா என்று கேட்கிறேன். எப்படியும் இன்றுள்ள அவலநிலை நீக்கப்பட்டாக வேண்டும். ஆகவே அரசாங்கம் ஒன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கக்கூடிய பள்ளிகள், ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகமான மானியத் தொகை கொடுக்க வேண்டும். அல்லது நிர்வாகத்தை பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் இருந்து அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இந்தக் கேள்வியைக் கேட்ட உறுப்பினருக்கு என்ன பதிலைத் தெரிவித்தேனோ அதைத் தான் தெரிவிக்க வேண்டி யிருக்கிறது. ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கொடுக்க முடியாத நிலைக்குச் சொல்லப்படுகிற பல காரணங்களில் இதுவும் ஒன்று. சில ஊராட்சி ஒன்றியங்களில்தான் இந்த இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆனால் கனம் உறுப்பினர் எல்லா ஊராட்சி ஒன்றியங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறார். இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்து பள்ளிகளை எல்லாம் எடுத்துக் கொண்டுவிடுவது என்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : எனது தொகுதியில் அம்பாசமுத்திரம், கடையம் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் இரண்டு மூன்று மாதங்களாகவே சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஆசிரியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை எடுத்த யூனியனில் வேறு பல காரியங்களைச் செய்வதற்குச் செலவிட்டு விட்டார்கள் என்றுதான். இப்படிப் பிரச்சாரமும் செய்கிறார்கள். 1961 இல் யூனியனுக்கு ஒதுக்கப்பட்ட கல்வி மானியம் கடந்த 9 ஆண்டுகளில் கொஞ்சங்கூட உயர்த்தப்படவில்லை. ஆகவே இதுபற்றி அரசு பரிசீலனை செய்து — சம்பளம் கூடக் கிடைக்கவில்லை என ஆசிரியர்கள் பிரச்சாரம் செய்வதை நிறுத்த அவர்களுக்கு ஒழுங்கான முறையில் சம்பளம் கிடைக்க மானியத்தை உயர்த்தியும், மற்ற நடவடிக்கைகளை எடுத்தும் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கல்வி மானியம் குறைவு என்பது அல்ல. சில ஊராட்சி ஒன்றியங்களில் தான் இந்த இடர்ப்பாடுகள். இதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். கல்வி மானியம் என்று கொடுக்கப்படுவது வேறு வகையில் செலவு செய்யப்படுகிறது என்று சொல்லப்படுவது பற்றி எல்லாம் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பொதுவாகக் கல்விக்காக ஒதுக்கப்படுகிற நிதி வேறு இனத்தில் செலவு செய்யப்படுவதைவிட, வேறு இனத்திற்காக ஒதுக்கப்படுகிற நிதிதான் கல்வித் துறைக்குச் செலவிடப்படுகிறது என்கிற நிலை பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று கொடுக்கிறபோது அமைச்சர் அவர்கள் விடை அளித்த பிறகு அவர் விடையின் மீது விளக்கம் பெற கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு உறுப்பினர்கள் புதிய செய்திகளைப் புகுத்துவது சரியாகாது. இந்த முறையை உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்

அவையுரிமைக் குழுவின் தலைவர் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் தன் அலுவல் காரணமாக சட்டப் பேரவையின் 183 (1) விதியின்கீழ் அவையுரிமைக் குழுவின் உறுப்பினராகிறார். அக் குழுவின் தலைமைப் பதவி வெற்றிடமாக உள்ளதால், பேரவையின் 183 (4) விதிக்கிணங்க பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ அவர்களை அச் குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

7. 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம். பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1969-70 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப் பேரவையின்கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். இத்துடன் 1968-69-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும்*, 1967-68-ம் ஆண்டிற்கான கணக்குகளும் a மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

2. கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல் வரவு-செலவுத் திட்டத்தை இவ்வாண்டும் இப் பேரவை முன் வைக்க, அரசியல் வாழ்வில் எனது அரிய வழிகாட்டியாக விளங்கிய அறிவுச் செம்மல் அண்ணா அவர்கள் ஊன் உடலோடு இல்லையே என்பதை எண்ணும்போது என் உள்ளம் தாங்கொணாத் தனித்துயரில் ஆழ்ந்து வருந்துகிறது. அவர் நல்லுடலோடு நிதி பொறுப்பினைத் திறம்படத் தாங்கிய காலையிலேயே, இவ் வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பான பகுதிகளுக்கு நல்லுருவம் ஒன்றை நல்கியிருந்தார். நிதி நிலை அறிக்கை போன்ற கவர்ச்சி அற்ற ஓர் ஆவணமும் அவர் கைவண்ணத்தால் எழில் வண்ணம் பெற்றது. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு, ஆர்வமும் ஆக்க உணர்வும் இழைந்தோடும் ஊக்கத்தோடு குடிமக்கள் பேராதரவு நல்கும் வண்ணம் அவருடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கை வன்மையும் கூர்மையும் வாய்ந்ததாய் வீறு கொண்டு விளங்கியது. இம்மாநிலத்தின் நிதிப் பொறுப்பினை அவர் ஏற்ற காலையில், கடந்த காலம் காணா வகையில் நாட்டின பொருளாதார நிலை, இடர்ப்பாடுகளினால் சூழப்பட்டு இருள் மண்டிக் கிடந்தது. இந்தியக் கூட்டாட்சியின் அமைப்பு முறை, அவருடைய செயல்களுக்கு ஒரு வரம்பு கட்டும் வகையிலே நிலவி நின்ற போதிலும் அவ்வரையறையின் விளிம்பிற குட்பட்டு இம் மாமன்றத்தின் முன்பு வைக்கப்பட்ட அவரது இரு வரவு-செலவுத் திட்டங்களும், நமது பொருளாதாரக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் புதியதோர் வடிவத்தையும் புதுத் திருப்பத்தையும் கொடுத்தது. கடுமை நிறைந்த அவ்விரு ஆண்டுகளில் அவர் சாதித்த பணிகளை எண்ணிப் பார்க்கும்போது, சூழ்நிலைகள் மேலும் ஆதரவாக இருந்து, தண்டமிழ் நாட்டுப் பெருமக்களுக்கு அவர் சிறிது காலம் தொடர்ந்து தொண்டாற்றுவதற்குரிய ஒரு வாய்ப்பும் அளிக்கப்பட்டிருந்தால், இம் மாநிலம் எத்தனை பெருஞ்சாதனைகளைக் கண்டிருக்கும் என்பதற்கு அவை பிடிவெள்ளியாய் மிளிர்கின்றன. அவருடைய மறைவிறகுப் பிறகு எங்களிடம் உள்ள வளம்-வலிமை-ஆற்றல் அனைத்தையும் ஒருங்கு திரட்டி அம் மாவீரனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரால் சாற்றப்பட்ட கொள்கைகளை இயன்ற அளவு நிறைவேற்ற முயல்வோம் எனபதை இம் மன்றத்தினருக்கும் அதன் வாயிலாகத் தமிழக வரைப்பின் கண் வாழும் பெருமக்களுக்கும் உறுதியளிக்கின்றேன்.

---

* 58-82-ம் பக்கங்களில் இணைப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.

a 83-134-ம் பக்கங்களில் நிதியமைச்சருடைய உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைப்புகளும் அச்சிடப்பட்டுள்ளன.

அண்ணாவின் தலைமையில் முன்னேற்றம்

3. தமிழகத்தின் நீண்ட பெரும் வரலாற்றிலே அவர் பொறுப்பேற்று நிர்வகித்த காலம் மிகக் குறுகியதாக இருப்பினும், நம் அனைவரின் நினைவை விட்டு நீங்காத பசுமை நிறைந்த ஒரு படலக் காட்சியாக அது என்றும் நிலைத்து நிற்கும். ஆட்சியின்பிற துறைகளில் அவர் காட்டிய வளர்ச்சிகள் ஒருபுறமிருக்க, நிதி, திட்டம் ஆகிய இரு துறைகளை மட்டும் எடுத்துக் கொண்டால், அவரது சாதனை நம்மை இறும்பூதடையச் செய்கிறது. இம்மாநில நிதி நிலைமையின் உறுதித் தன்மைக்கு ஒரு சிறிதும் ஊறு விளைவிக்காமல், வளர்ச்சிப் பணிகளில் விரைவுப் போக்கினைப் பேணி வருவதற்கு அண்ணா எடுத்துக் கொண்ட முயற்சிகள், பொருளாதார வல்லுநர்களின் சிறப்பான பாராட்டுதல்களைப் பெறுதற்கு உரியது. இந்திய நாடு முழுவதிலும் கடந்த ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளின் விரைவோட்டம் சிறிதும் தளராமல் காத்துவந்த இரண்டு அல்லது மூன்று மாநிலங்களில் நம் தமிழ்நாடும் ஒன்றாகும். இவ்வகைச் சிறப்பான பாங்குபெற்ற ஏனைய மாநிலங்கள் தமிழ்நாட்டை விட நிதி வகையில் வளமுடையவை என்பதை நாம் அறியும் போது, அவர் ஆற்றிய சாதனையின் அருமைகள் நனிமிகச் சிறந்தவை என்பதை எளிதில் உணரலாம். கடந்த இரு ஆண்டுகளில் ஏற்கனவே பெருமளவில் வளர்ச்சி அடைந்திருந்த திட்டங்களின்மீதே அவர் நாட்டம் முழுவதையும் செலுத்த வேண்டியிருந்ததென்பதையும், அதனால் ஆண்டுத் திட்டத்தின் வரம்பிற்குள் புது முயற்சிகளில் பெருமளவில் ஈடுபட இயலாது என்பதையும் நாம் அனைவரும் நன்கறிவோம். எனினும், தனக்கே உரிய திறனோடு, திட்ட முறை வைப்புகளை நுண்மாண் நுழைபுலனோடு மாற்றியமைத்து, சில வளர்ச்சித் துறைகளில் அவர் புதிய குறிக்கோள் அளவுகளைக் கண்டார். அவர் புத்துருவம் கொடுக்க முனைந்த மாநில அரசின் ஒரு சில துறைகளை இனி எடுத்துக் காட்டுவது சாலவும் அமைவுடைத்தாகும் என எண்ணுகிறேன். நமது மாநிலத் திட்டங்களில் கிராமப் புற மின் வசதியின் சிறப்பியல்புகளை நீண்ட காலமாக அனைவரும் ஏற்றுக்கொண்ட போதிலும், நமது வேளாண்மைப் பொருளாதாரம், இணங்கிய முறையில் வளர்ச்சி அடைவதற்கு இறைவைப் பாசனமே உறுதியான அடிப்படை என்கிற ஆன்ற கருத்தில் மின்சாரத் திட்டங்களின் விரைவை மேலும் பெருக்க அவர் முயன்றார். கடந்த இரு ஆண்டுகளில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்கள் 1,00,000-க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. மலி பயிர் விளைச்சல் (Multiple cropping), மிகு பயன் தரும் விதை ரகங்களைப் பயிரிடுதல் போன்ற திட்டங்களுக்கும் அவர் புதிய முறையில் ஊக்கமளித்தார். கடந்த இரு ஆண்டுகளில் பருவ மழை பொய்க்காமல் வானம் வளம் சுரந்திருப்பின், இத் துறைகளில் அவர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவுகள் மேலும் சிறப்புற அமைந்திருக்கும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு, நிறுவனக் கடனுதவி எவ்வளவு நலம் பயக்கக் கூடியது என்பதையும் அண்ணா நன்கு உணர்ந்திருந்தார். அரசுக் கடனுதவிக்கு மாறாக, நிறுவனக் கடனுதவி பெறவேண்டிய இன்றியமையா நிலையை உழவர் பெருமக்களும் வேளாண்மைத் துறை வல்லுநரும் உணர வேண்டுமென்று அவர் வலியுறுத்திக் கூறினார். தொடக்கத்தில் இப்புதிய கொள்கையின் வெற்றியைக் குறித்து உண்மையான ஐயுறவுகொண்டவர்களும், அவர்தொடங்கிவைத்த இக்கொள்கையின் திறன் பற்றி இதற்குள் முழுநம்பிக்கை பெற்றிருப்பார்கள். நமது மாநிலத்திலுள்ள நில அடைமான வங்கிகள் இத்துறையில் நடப்பாண்டில் ஆற்றியுள்ள பெருஞ் சாதனை, நான்காம் திட்டத்தில் தீட்டியுள்ளவாறு 70 முதல் 90 கோடி ரூபாய் அளவிலான வேலைத் திட்டத்தை நிறைவேற்ற அவற்றால் இயலுமென்கிற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் நில அடைமான வங்கிகள் வழங்கிவந்த கடன்கள் ஆண்டொன்றுக்குச் சராசரி 3 கோடி ரூபாய் அளவில் மட்டுமேநின்றுள்ளது என்பதை நினைவு கூறும்போது, நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட நிறுவனக் கடன் திட்டம், சிறப்பு வாய்ந்த ஒரு திட்டமாக முற்றிலும் பாராட்டப்படும் என்று எண்ணுகிறேன்.

4. மறைந்த முதலமைச்சர் திட்ட நிறைவேற்றத்தைத் திறம்பட உறுதிப்படுத்தியதுடன், திட்டத்திற்குப் புறம்பேயுள்ள இன்றியமையாத பொறுப்புக்களுக்கு வகை செய்ய வேண்டிய தேவையையும் கருத்தில் கொண்டிருந்தார். குறிப்பாக, நமக்குக் கிட்டும் நிதி வசதிகளுக்கேற்ப அரசுப் பணியாளர்களின் ஊழிய நிலையினை மேம்பாடு செய்ய உறுதியளிக்க வேண்டிய தேவையை அவர் உணர்ந்திருந்தார். மத்திய அரசுப் பணியாளர்களுக்கு பொருந்தும் அகவிலைப்படி வீதங்களைத் தொடர்ந்து சமநிலையில் பேணி வரப்படுவதற்காக, அகவிலைப் படியை அடுத்தடுத்து உயர்த்தி வந்தது போக, சென்னை, மதுரை மாநகரங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் உள்ள பணியாளர்கள் ஏறக்குறைய ஐந்தாண்டுகளாக வற்புறுத்தி வந்த நகர ஈட்டுப்படியை அவர்களுக்கு வழங்கவும் அவர் ஒப்பளிப்பு வழங்கினார். பணியாளர்கள் தங்களுடைய விடுப்பு உரிமைகளை ரொக்கத் தொகையாக மாற்றிக்கொள்வதற்கு, இப்போது அளித்துள்ள வாய்ப்பு நலனும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். விலைச் சம்பளத்திற்கும் தற்காலிகப் பணியாற்றுச் சம்பளத்திற்கும் இடையே இதுகாறும் நிலவிநின்ற வேறுபாட்டை அகற்றி, இறுதி 36 தினங்களில் ஊழியர்கள் பெறுகின்ற சராசரி ஊதியங்களின் அடிப்படையில், ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு வகை செய்ததன் மூலம் அரசுப் பணியாளர்களின் ஓய்வூதிய நன்மைகள் கணிசமாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் குடும்ப ஓய்வூதியத் திட்டமும் ஏறக்குறைய அரசுப் பணியாளர்களுக்கென இப்போது நடைமுறையில் உள்ளவாறு அதிக நன்மைகள் அளிக்கும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. அண்ணா அவர்கள் பணித்த வண்ணம் அரசுப் பணியாளர்களுக்கு, திருமணச் செலவுகளுக்காக கடன் வழங்குத் திட்டம் ஒன்றிற்கு 1969-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து செயல்படும் வகையில் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இதற்கென்று 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உதவியுடன் ஈடுசெய் விலைகளில் (subsidised rates) உணவு தானியங்களை வழங்கும் திட்டம், அண்ணா அவர்களின் பெயர் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் மற்றொரு முக்கிய திட்டமாகும். முதலமைச்சராக அவர் இறுதியாக ஆற்றிய முக்கிய பணிகளுள் ஒன்று, ஐந்தாம் நிதி ஆணைக் குழுவைச் சந்தித்து அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதிய வீதங்களை ஓரளவு உயர்த்தும் வகையில் மாநில அரசிற்குப் போதிய அளவு நிதி வாயில்களை மாற்றும்படி வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதாகும்.

5. நிதி, திட்டத் துறைகளில் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே உள்ள தற்போதைய உறவு, நியாயமான ஓர் அடிப்படையின் மீது அமைய வேண்டுமென்பதை அண்ணா ஆர்வமுடன் வாதாடி வந்தது, அவர் முதலமைச்சராயிருந்த காலத்தில் ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும். மத்திய, மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி உறவுகளை மீண்டும் ஆய்வு செய்யவேண்டிய தேவையைக் குறித்துத் தெள்ளியோரின் நாட்டத்தை ஈர்க்கும் வகையில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டார் என்று கூறினால் அது மிகையாகாது. மாநில வரவு-செலவுத் திட்டங்களில் பெருகி வரும் கடன் செலவுப் பொறுப்புக்கள் பற்றிய சிக்கலைக் குறித்து இம் மன்றத்தின் நாட்டத்தையும், அதன் வாயிலாகப் பொது மக்களின் கருத்தையும் அவர் தமது முதல் வரவு-செலவுத் திட்ட உரையிலேயே ஈர்த்திருந்தார். மொத்தத்தில் 7,000 கோடி ரூபாய்க்கு மேல் கடன் சுமையைத் தாங்க வேண்டியுள்ள மாநில அரசுகள், மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்படும் நிதி வாயில்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் மத்திய அரசிற்கு வட்டியாகவும் முதலாகவும் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள இன்றைய நிலை எத்தரத்தாலும் நிரல்பட அமைந்ததாக இல்லை. இந்நிலையை உடனடியாகப் போக்க வேண்டியது இன்றியமையாததாகும். மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைத்து (rescheduling) மாநில அரசுகளின் கடன் சுமையை ஓரளவுக்குக் குறைப்பது குறித்து வல்லுநர் குழுவின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்கிற அவரது வேண்டு

கோள் ஏனைய பல மாநில அரசுகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது. இச்சிக்கல் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டுமென இந்திய அரசு உணர்ந்து இப்போது கடன் தணிப்புக்கான சில கருத்துரைகளை அது ஆய்வு செய்து வருகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

6. உண்மையான கூட்டுறவுப்பான்மை கொண்ட ஒரு கூட்டாட்சியை வளர்க்கவேண்டுமெனில், மத்தியமாநில அரசுகளுக்கிடையேயுள்ள நிதி வாயில்களை மேலும் தகைவானதோர் அடிப்படையில் மறு ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமென்பதை வற்புறுத்திய அதே நேரத்தில், நிதிப் பொறுப்புகளைக் கண்ணுங் கருத்துமாக நிர்வகிக்க வேண்டிய தேவையையும் அண்ணா முற்றிலும் உணர்ந்திருந்தார். மன்னிய நிதிநிலையின் அடிப்படையிலேயே நாட்டின் முன்னேற்றங்காண அவர் விழைந்தார். மாநில அரசின் நிதிப் பொறுப்புகளை நிர்வகிப்பதில், கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் கையாண்ட முறை எங்கணும் பாராட்டுவதற்குரியதாகும். இப்போது இம்மன்றத்தின் முன்புள்ள 1967–68–ம் ஆண்டிற்குரிய கணக்குகள் ஏறக்குறைய 7 லட்சம் ரூபாய் அளவிற்குச் சிறிய வருவாய் உபரியைக் காட்டுகின்றன. இதற்கு முந்திய இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கணிசமான வருவாய்ப் பற்றுக்குறையைக் கருதிப் பார்க்கும்போது, நமது திட்டங்களுக்காக அவர் கேட்டிருந்த கூடுதலான மத்திய உதவி கிட்டாத நிலையிலும், இம்மாநிலத்தின் நிதி நிலையை அவர் எவ்வாறு விழிப்புடன் காத்து வந்தார் என்பதற்குச் சீரியதோர் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது.

7. **1968-69 திருத்த மதிப்பீடுகள் :** நடப்பு ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலும் 74 லட்சம் ரூபாய் அளவில் சொற்ப வருவாய் உபரி ஏற்படுமென்று எதிர் பார்க்கப்பட்டதை இம்மன்றத்தின் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது மன்றத்தின் முன்புள்ள திருத்த மதிப்பீடுகள் வருவாய்க் கணக்கில் 277·28 கோடி ரூபாய் வரவினம் என்றும், 263·61 கோடி ரூபாய் செலவினமென்றும், இதன் விளைவாக 13·61 கோடி ரூபாய் உபரி ஏற்படுமென்றும், எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், திருத்த மதிப்பீடுகளில் காணும் சில வரவினங்கள் தொடராப் பாங்கு (Non-recurring) பெற்றவையாதலால், அவற்றை வருவாய் இனத்தில் அடங்கும் இயல்பான தொகைகளாகக் கருத முடியாததென்ற காரணத்தால் இந்த உபரி உண்மையானதல்ல. 1966–67–ம் ஆண்டிலிருந்து தொடங்கும் கால அளவிற்கு வெளிச் சந்தைக் கடன்களின் கரைப்பு நிதிக்காக, இந்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியங்கள் வழங்கவேண்டுமென்று நாமும் பிற மாநிலங்களும் செய்து கொண்ட முறையீடுகளை அவ்வரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வகையில் நமது மாநில அரசிற்கு ஆண்டொன்றுக்கு 6·05 கோடி ரூபாய் மானியம் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், இத்தொகை மாநில அரசுகளுக்கு ரொக்க வடிவில் இல்லாது, திட்ட வேலைகளுக்காக ஒப்பளிப்பு வழங்கியுள்ள பல்வகை வளர்ச்சிக் கடன்களை மானியமாக மாற்றிக்கொள்வதன் வாயிலாகவே கிட்டும். இதையொட்டி இத் திருத்த மதிப்பீடுகளிலே, இந்திய அரசிடமிருந்து 18·15 கோடி ரூபாய்க்குக் கூடுதல் மானியம் கிடைக்குமென்ற அடிப்படையில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, திட்டத்திற்காக, நடப்பு ஆண்டில் இந்திய அரசிடமிருந்து பெறும் கடன் உதவியில் 6·05 கோடி ரூபாய் குறைத்துக்கொள்வதன் மூலமும், 1966–67, 1967–68–ம் ஆண்டுகளில் பெறப்பட்ட பல்வகை வளர்ச்சிக் கடன்களான 12·10 கோடி ரூபாயை புத்தகச் சரிக்கட்டுதல்கள் வாயிலாகத் திருப்பிச் செலுத்தப்படும் வகையிலும் ஈடு செய்யப்படும். இதற்கு முந்திய ஆண்டுகளில் மாநில மின்சார வாரியம் வணிகக் கணக்கில் ஈட்டிய, ஆனால் ரொக்க இருப்பு இல்லாக் காரணத்தால் அத்தொகையை மாநில அரசிற்கு மாற்றாது போனதால் சேர்ந்து வந்த 9 கோடியே 72 லட்சம் ரூபாய் வட்டி நிலுவைகளும் இத்திருத்த மதிப்பீடுகளில் வரவினங்களாக வகை செய்யப்பட்டுள்ளன. தொடராப் பாங்கின்பாற்பட்ட இவ்விரு வரவினங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், நடப்பு ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் கணிசமான அளவிற்கு வரவின வகையில் துண்டு விழுவது புலனாகும். ஆனால், இத்துண்டு பெருங்கலக்கம் அளிக்கும் நிலையில் இல்லை. தொழில் துறையில் காணும் மந்த நிலை காரணமாக விற்பனை வரி போன்ற தலைப்புகளின்கீழ் வரவினம் தற்காலிகமாகக் குறைந்திருப்பதையும், நடப்பு ஆண்டில் இரு தவணைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அகவிலைப்படி வீத உயர்வு காரணமாக ஏற்பட்டுள்ள பொறுப்புக்களையுமே இது எதிரொலிக்கின்றது. வருவாய்க் கணக்கில் காணும் இச்சரிவு, மூலதனக் கடன் கணக்குகளின்கீழ்க் கண்டுள்ள மேம்பாடு காரணமாக முழு அளவிற்குமேல் ஈடு செய்யப்பட்டுள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் திட்ட முதலீடு முதற்கண் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 79·68 கோடி ரூபாயிலிருந்து திருத்த மதிப்பீடுகளின் வாயிலாக இப்போது காணப்படும் 89·07 கோடி ரூபாய் அளவிற்குக் கணிசமாக உயர்ந்துள்ள போதிலும், ரிசர்வ் வங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்காமலேயே நடப்பு ஆண்டுக் கணக்குகளை இறுதி செய்ய மாநில அரசிற்கு ஒல்லும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1969-70 வரவு–செலவுத் திட்ட வாய்ப்புகள்.

8. அடுத்த ஆண்டின் வரவு–செலவுத் திட்ட வாய்ப்புக்களைக் குறித்து நாம் ஆராய்வதற்குமுன், திட்டப்பணிகள், திட்டமல்லாப் பணிகள் குறித்து உறுதியான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முரணாக மாநில அரசை எதிர்நோக்கியுள்ள சில உறுதியற்ற தன்மைகளையும் இடர்ப்பாடுகளையும் குறித்து முன்னுரையாக நான் சில சொல் கூற வேண்டியுள்ளது. வரவு–செலவுத் திட்டத்தில், திட்டத்தின் பாற்படாத பிரிவில் நிலவும் உறுதியற்ற நிலை இப்போது இயங்கிவரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இறுதித் தீர்ப்பு 1969 ஜூலைத் திங்கள் முடிவில்தான் கிடைக்கும் என்கிற காரணத்தால் எழுவதாகும். திட்டச் செலவு—திட்டமல்லாச் செலவு என்கிற தற்போதைய வகைப்பாட்டினைப் பற்றி ஒரு சிறு விளக்கம் தேவையென நினைக்கிறேன். பொது நிர்வாகம் காவல்துறை நீதி நிர்வாகம் கடன் செலவுகள் போன்ற வளர்ச்சித் தலைப்புக்களின்கீழ் வாராத மொத்தச் செலவினங்கள், திட்டத்தின்பாற்படாத செலவினமாகக் கருதப்படுகின்றன. இவை தவிர, புதுத் திட்டத்தின் தொடக்க காலத்தில் வளர்ச்சித் தலைப்புக்களின்கீழ் ஏற்கெனவே உள்ள நிறுவனங்கள், பணிகள் இவற்றைப் பேணி வருவதற்காக வகை செய்யப்பட்டுள்ள செலவினங்களும் திட்டத்தின் பாற்படாத செலவினமாக வகைப்படுத்தப்படுகின்றன. வேளாண்மை, மருத்துவம், பொது சுகாதாரம், கல்வி, பின்தங்கிய வகுப்பினர் நலன் போன்ற பல்வேறு வளர்ச்சித் தலைப்புக்களின்கீழ் தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் பணிகளை விரிவுபடுத்துவதற்காக ஆகும் செலவினமும், வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் மூலதன, கடன் கணக்குகளில் எழும் முழுச் செலவினமும் திட்டத்தின் பாற்படும் செலவினங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. மேற்சொன்னவாறு இலக்கணம் சொல்லப்பட்ட திட்டச் செலவுகள் அரசியலமைப்பின் 282–ம் பிரிவின்கீழ் வழங்கப்படும் மத்திய அரசுக் கடன்கள் மானியங்கள் வாயிலாகவும், மாநில அரசு திரட்டும் புதுக்கடன்கள், பிற கடன்கள், பல்வகை மூலதன வரவுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை தவிர நிகரமாய் நிற்கிற தொகைகள் வாயிலாகவும், கூடுதலாகத் திரட்டப்படும் நிதி வசதிகள் வாயிலாகவும் ஈடு செய்யப்படும். திட்டத்தின்பாற்படாத செலவினத்தைப் பொறுத்த வரையில், நிதி ஆணைக்குழு மாநிலங்களில் தற்போதுள்ள வரி வீத அளவுகளில் அவற்றின் வரவினங்களை முழுமையாகக் கணக்கிட்ட பின்னர் துண்டு விழும் எந்தத் தொகையையும் மத்திய வரிகள், அரசியலமைப்பின் 275-வது பிரிவின்கீழ் மானியங்கள் இவற்றை மாநிலங்களுக்கு மாற்றுவது வாயிலாகச் சரிக்கட்டுகிறது. நிதி ஆணைக் குழு பின்பற்றி வரும் இம்முறை இப்போது ஒரு மரபாகவே மாறிவிட்டது. இம்மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ள 1969–70-ம் ஆண்டுக்குரிய வருவாய் மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் 268·66 கோடி ரூபாய் வரவினம் என்றும், 285·37 கோடி ரூபாய் செலவினமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நான்காம் திட்

டக்கால அளவில், திட்ட ஆணைக் குழு வகுத்துள்ள கூடுதல் வரி விதிப்புக் குறிக்கோள் அளவினையொட்டி, திரட்டவேண்டியுள்ள 5·60 கோடி ரூபாயையும் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இதனால் வருவாய் கணக்கில் 16·71 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இத்துண்டு மிகப் பெரிதாகக் காணப்படலாம். ஆனால் ஐந்தாம் நிதி ஆணைக் குழு கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய திட்டத்தின்பாற்படாத செலவினப் பொறுப்புக்களாலேயே இத்துண்டு விழுகின்றது. ஐந்தாம் நிதி ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையில் மாநில அரசிற்குக் கூடுதல் நிதி வாயில்கள் எதும் ஒதுக்கப்படவில்லை யென்பதை இம்மன்றத்தினர் அறிவர். அதே நேரத்தில், ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் பொறுப்பேற்கப் பட்ட (committed expenditure) செலவினங்கள் முழுவதும் நம் மீதே சுமத்தப்பட்டுள்ளன. இவை தவிர, கடந்த சனவரித் திங்களில் 3·6 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்ட அகவிலைப்படி ஒன்றையும் கூடுதலாக நாம் வழங்கியுள்ளோம். ஐந்தாம் நிதி ஆணைக் குழு தனது இறுதி அறிக்கையில் இதையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். வருவாய்க் கணக்கில் விழும் மொத்தத் துண்டில் திட்டத்தின் பாற்படாத கணக்கிலே 20·7 கோடி ரூபாய் துண்டு விழுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்போது செயல்பட்டு வரும் ஐந்தாம் நிதி ஆணைக் குழு, முந்தைய நிதி ஆணைக் குழுக்களின் நடைமுறையைப் பின்பற்றி மத்திய வரிகள், அரசியலமைப்பின் 275-ம் பிரிவின்கீழ் வழங்கப்படும் மானியங்கள் இவற்றை மாநிலங்களுக்கு மாற்றுவதன் வாயிலாக, திட்டத்தின்பாற்படாத கணக்கில் விழும் இத்துண்டு முழுவதையும் அடைப்பதற்கெனக் கூடுதல் நிதி வாயில்களை வகை செய்து தருமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். திட்டத்தின்பாற்படாத கணக்கில், மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்களில் விழும் துண்டினை அடைப்பதற்காகக் கூடுதல் உதவியளிக்க வகை செய்வதுதான் மத்திய நிதித் தொகுப்பிற்கு உரிய முதற் பொறுப்பாகும்.

9. வருவாய், மூலதனம், கடன், பொதுக் கணக்கு ஆகிய அனைத்தையும் இணைத்துப் பார்ப்பின், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் மொத்தம் 19·52 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுவதைக் காட்டுகின்றன. ஆனால் இத்துண்டு திட்டத்தின்பாற்படாத வருவாய்க் கணக்கில் கணிசமாக விழும் துண்டினையே எதிரொளிக்கின்றது. இது நாம் ஏற்கெனவே எடுத்துக் கூறியவாறு, நிதி ஆணைக் குழுவின் இறுதித் தீர்ப்பினால் முற்றிலும் அடைக்கப்படவேண்டும். இக் காரணம் பற்றியே இத்துண்டினை அடைக்காமல் நாம் விட்டு வைத்துள்ளோம். திட்ட ஆணைக் குழு வகுத்துள்ள குறிக்கோள் அளவுகளை ஒட்டி, ஏற்கெனவே, குறிப்பிட்டுள்ளவாறு திட்டத்திற்கான நிதி வாயில்களைத் திரட்ட ஓரளவு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாம். இது குறித்து அரசு நாளடைவில் இம் மன்றத்தின் முன் செயற் குறிப்புகளை வைக்கும். இந்த நிதி வாயில்களின் ஒரு பகுதியைக் கிராமப்புறக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாகத் திரட்ட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்கு இப்புதிய கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வகை செய்கின்றன. இக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களைத் திட்ட ஆணைக் குழு பெரிதும் சிறப்புடையன என்று கருதுகின்றது. என்றாலும், இவற்றின் விவரங்கள் இன்னும் வகுக்கப்பட வேண்டியுள்ளன. கிராமப்புறக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாக எந்த அளவிற்கு நாம் நிதி திரட்ட முடிகின்றதோ அந்த அளவிற்கு வரி விதிக்கும் தேவை குறையும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வாயிலாக 2·4 கோடி ரூபாய் நிகரமாகக் கிட்டுமென்று நாம் வகை செய்திருப்பதைக் கண்ணுறுமாறு இம்மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன். நமக்கு அளிக்கப்பட்ட சட்ட அறிவுரைகளுக்கு இணங்க, இத் தொகை, இப்போது பொதுக் கணக்கின்கீழ்க் காட்டப்பட்டுள்ளது. ஆயினும், தணிக்கைத் துறை, இவ் வரவினங்கள் தொகு நிதியின் (consolidated fund) பகுதியாக அமைய வேண்டுமென்றும், இவற்றை வரியின்பாற்படாத வரவினமாகக் கருத வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. இது குறித்து இன்னும் கடிதப் போக்கு

வரத்து நடந்து வருகிறது. இதன் இறுதி நிலை நாளடைவில் இம் மன்றத்தினருக்கு அறிவிக்கப்படும். ஒருகால், தணிக்கைத் துறையின் கருத்து இறுதியில் மேலோங்கி நிற்குமானால், அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் கிட்டும் வரவினங்கள் வருவாய் கணக்கிற்கு மாற்றப்படும் என்பதையும், இதனால் வருவாய் கணக்கில் விழும் துண்டு குறையுமென்பதையும் இம் மன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

நிதி ஆணைக் குழுவிற்கு மாநில அரசின் கருத்துரைகள்.

10. இந்த நிலையில், நிதி ஆணைக் குழுவின் முன் நாம் வைத்த விவரக் குறிப்பில் அடங்கியுள்ள கருத்துரைகளைப் பற்றிச் சுருக்கமாக ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகிறேன். கடந்த சில ஆண்டுகளில் மத்திய அரசு வருமான வரியில் தனக்குரிய பங்கினைத் தன் தேவைகளுக்காகவென்றே மேல் வரிகள் (surcharges) விதிப்பதன் வாயிலாக உயர்த்திக் கொண்டிருப்பதால், வருமான வரியில் மாநிலங்களுக்குரிய பங்கு 75 சத விகிதத்திலிருந்து 87½ சத விகிதத்துக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். மாநிலங்களிடையே வருமான வரியைப் பகிர்ந்தளிப்பதற்கான கோட்பாடுகளைப் பொறுத்தவரையில், திரட்டப்படும் தொகையின் அடிப்படையில் 20 சத விகிதமும், கிராமப்புற மக்கள் தொகையின் அடிப்படையில் 60 சத விகிதமும், நகர்ப்புற மக்கள் தொகையின் அடிப்படையில் 20 சத விகிதமுமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். வருமான வரி பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே திரட்டப்படுவதாலும், நகர்ப் புறங்களில் குடிநீர் வசதிகள் செய்து தருவதற்குப் பெரும் தொகைகள் முதலீடு செய்யப்பட வேண்டியிருப்பதாலும், அப்பகுதி மக்கள் தொகைக்கு ஓரளவு முக்கியத்துவம் (weightage) காட்ட வேண்டுமென்று நாம் வேண்டியுள்ளோம். மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்குமிடையேயுள்ள நிதி வாயில்களை மாற்றுதல் செய்யும் திட்டத்தில், அரசியலமைப்பின் சிற்பிகள் கருதியவாறு வருமான வரி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிதி வாயிலாக இப்போது இல்லை. எனவே, இன்றைய நிலையில் நிறுவன வரியை (corporaticn tax) பங்குத் தொகுப்பிற்குள் (shareable) சேர்க்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். இக் கருத்தினை அரசியலமைப்பைத் திருத்தும் வாயிலாகவே செயலுக்குக் கொண்டுவர இயலும். அவ்வாறு திருத்துவதற்குச் சிறிது காலம் தேவைப்படுமென்பதால், இதற்கிடையில் தற்போது பகிர்ந்தளிக்கக்கூடிய வரியினங்களில் மாநிலங்களின் பங்கினை உயர்த்துவதன் வாயிலாக, அவற்றிற்குப் பெருமளவில் நிதி மாற்றம் செய்யவேண்டுமென்று நம்முடைய செயற்குறிப்பில் தெரிவித்துள்ளோம். இதற்கிணங்க, மத்திய அரசின் ஆயத்தீர்வைகளின் மாநிலங்களின் பங்கினை 20 சத விகிதத்திலிருந்து 40 சத விகிதமாக உயர்த்த வேண்டுமென்றும், நகர்ப்புற மக்கள் தொகை அளவிற்காக 25 சத விகித முக்கியத்துவம் கொடுத்து மக்கள் தொகை அடிப்படையிலும் வழங்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்கும் திட்டத்திற்கு மாறாக, கூடுதல் ஆயத் தீர்வைகள் விதிக்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருத்துரைக்கும் அத்தகைய ஏற்பாட்டினால் தற்போது மாநிலங்களுக்கு உரிய நீட்சித் திறன் பெற்ற ஒரே ஒரு வருவாய் வாயிலும் அவைகளுக்குக் கிட்டாது போய்விடுமென நாங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளோம். அரசியலமைப்பின் 269-வது பிரிவின்கீழ் மத்திய அரசு, மாநில அரசுகளின் நன்மைக்காக வரி விதிப்புகள் செய்வதில் காணப்படும் அசட்டைப் போக்கினையும், நிதி ஆணைக் குழுவின் நாட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக, ரயில் சரக்குக் கட்டணங்களை உயர்த்தும் வடிவிலேயே ரயில் மூலமாக அதிகரித்த வரவினங்களைப் பெற முற்படுவதற்கு மாறாக, மத்திய அரசு, மாநிலங்களுக்கு முற்றிலும் ஒதுக்கப்படவேண்டிய ரயில் சரக்குக் கட்டணத்தின் மீதான வரியொன்றை விதிக்கலாம் என்றும் நாம் வற்புறுத்தியுள்ளோம். நிதி ஆணைக் குழு இக் கருத்துரைகள் அனைத்தையுமே ஏற்றுக்கொண்டாலும், நடப்பு வரி விதிப்பு வீதங்களில்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 1

கிட்டும் வரவினங்களுக்கும், திட்டமல்லா வருவாய்ச் செலவினங்களுக்கும் மிடையே இன்னும் பெரிய இடைவெளி தொடர்ந்து இருக்கும். இந்த இடைவெளி அரசியலமைப்பின் 275-வது பிரிவின்கீழ் அளிக்கப்படும் உதவி மானியங்கள் வாயிலாக முற்றிலும் அடைக்கப்பட வேண்டியிருக்கும். ஆணைக் குழுவினர் நம் வேண்டுகோளைப் பரிவுடன் ஆய்ந்து ஆவன செய்வார்களென்றும், அவர்களது பரிந்துரைகள் நமது பெரிய கூட்டாட்சியின் உறுப்பாகவுள்ள மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே தற்போது நிலவி வரும் உறவு நிலைகளைப் பெருமளவுக்குச் சீராக்க உதவி செய்யுமென்றும் நாம் நம்புகிறோம். நிதி ஆணைக் குழுவினர் சனவரித் திங்களில் சென்னைக்கு வந்திருந்த தருணத்தில், நமது மாண்புறு தலைவர் அண்ணா அவர்கள் ஆற்றிய தொடக்க உரையின் இறுதியில் தெரிவித்த சில சொற்களை ஈண்டு எடுத்துக் கூறுவதை விடச் சிறப்புற நான் செய்யக்கூடியது வேறொன்றுமில்லை. மாநிலங்களின் முன்மதிப்பீடுகளை (forecasts) மிக நுணுகி ஆய்ந்து அவைகளின் தேவைகளைப் பெருமளவிற்குக் குறைக்கும் நிதி ஆணைக் குழுக்களின் இயல்பான போக்கினைப் பற்றிக் குறிப்பிடுகையில், " இவ்வாறெல்லாம் ஊன்றிக் கணக்கிட்ட பின்னர், நிதி ஆணைக் குழு தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான வினா ஒன்று உண்டு. அது, ஒரு மாநிலம் அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் தன் வாழ்வைக் கடத்துவதற்காக அதற்கு எவ்வளவு குறைந்த அளவு உதவித் தொகை அளிக்கலாம் என்ற கேள்வியன்று. ஆனால் அதற்கு மாறாக, தன்னுடைய மக்களின் தேவைகளை உள்ளவாறு உணர்ந்து அவற்றை ஏறத்தாழ, தக்கவாறு தீர்த்து வைத்து அதன்மூலம் அரசு, மக்கள் ஆகிய இரு தரப்பினரும் தத்தம் பங்கினைப் பெற்றோம் என்ற மகிழ்ச்சி சிந்தையில் நிற்கும் வண்ணம், விழிப்போடு தன் நிதிக் கொள்கைகளை நிர்வகித்து வந்துள்ள ஒரு அரசிற்கு எந்த வகையில் சிறப்பாக உதவலாம் என்ற வினா நிதிக் குழுவின் அகத்தே அரும்ப வேண்டும் " எண்ணி அவர் எடுத்தியம்பினார்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்.

11. திட்டத்தைப் பொறுத்தவரை, 624 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்வதற்குரிய ஐந்தாண்டுத் திட்டமொன்றை நாங்கள் திட்ட ஆணைக் குழுவிற்கு அனுப்பியுள்ளோம் என்பதை இம் மன்றம் அறியும். மத்திய உதவியைப் பொறுத்தே மாநிலத் திட்டத்தின் அளவும் வடிவும் அமையும் என்பதைக் கூறத் தேவையில்லை. புதிய நான்காம் திட்டத்திற்கான மொத்த மத்திய உதவி, மூல நான்காம் திட்டத்தில் திட்டப்பட்டுள்ளவாறே 3,500 கோடி ரூபாய் அளவில் நிலையாக இருந்த போதிலும், தமிழ் நாட்டின் பங்கு அளவுக்கு மீறி வெட்டப்பட்டுள்ளது. நமது மூலத் திட்டத்திற்காகத் தெரிவிக்கப்பட்ட 250 கோடி ரூபாய்க்கு மாறாக, திட்ட ஆணைக் குழு இந்த நிலையில் 201 கோடி ரூபாய் அளவிற்கே மத்திய உதவி அளிக்கப் பொறுப்பேற்றுள்ளது. இந்த மத்திய உதவித் தொகையையும் மாநில அரசு கூடுதலாகத் திரட்டக் கருதியுள்ள தொகையோடு அதன் சொந்த நிதி வசதிகளையும் சேர்த்தால் 501 கோடி ரூபாய் அளவிலான திட்டமொன்றை உருவாக்கவே போதுமானதாக இருக்கும். மத்திய உதவியில் விழுந்துள்ள வெட்டு மிகக் கடுமையானதென்றும், 501 கோடி ரூபாய் அளவில் மட்டுமே அமைந்த ஒரு திட்டத்தைக் கொண்டு மாநிலப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதத்தைக் குறைந்த அளவிற்குக் கூட உறுதிப்படுத்த இயலாதென்றும் திட்ட ஆணைக் குழுவின் முன் நாம் வற்புறுத்தியுள்ளோம். நபர்வாரி வருவாய், தேசியச் சராசரிக்கும் குறைவாய் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள ஆறு மாநிலங்களுக்கு மாத்திரம் மொத்த மத்திய உதவியில் 10 சத விகிதத்தைத் தனியாக ஒதுக்கவேண்டுமென்று தேசிய வளர்ச்சி மன்றம் எடுத்துள்ள முடிவின் விளைவாகவே, மத்திய உதவியில் இந்தக் குறைப்பு ஓரளவுக்கு நிகழ்ந்துள்ளது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். எனினும், பின்தங்கிய மாநிலங்களுக்குச் சிறப்பு உதவியளிக்க வேண்டிய தேவையை ஏற்றுக்கொள்வதாய் இருந்தாலும், இதன் விளைவாக ஏனைய மாநிலங்களுக்கான மத்திய உதவியின் அளவில் ஏற்படும் நிதிக் குறைவினை அந்தந்த மாநிலங்களின் நபர் வாரி வருவாய், தேசியச் சராசரிக்கு மேல் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதன் அடிப்படையில், அவற்றின் வளங்கொழு நிலைமையையொட்டி அந்தந்த மாநிலங்களுக்கிடையே நியாயமாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நாங்கள் திட்ட ஆணைக் குழுவின் முன் எடுத்துரைத்தோம். தமிழ் நாட்டின் வருவாய், தேசியச் சராசரிக்குச் சற்றே உயர்ந்துள்ளதென்பதும், தற்போதைய கோட்பாட்டின்படி பின்தங்கிய மாநிலங்களுக்காக நமக்குரிய வீதாசாரப் பங்கை விட அதிக அளவு பங்கினைத் துறக்குமாறு நேரிட்டுள்ளது என்பதும் நமது வாதமாகும். மேலும், தேசிய வளர்ச்சி மன்றம் உருவாக்கியுள்ள இக்கோட்பாட்டின் வண்ணம் திட்ட ஆணைக் குழுவிற்கு மத்திய உதவியை ஒதுக்குவதில் ஓரளவிற்குத் தன் விருப்புரிமை உள்ளதென்றும், மூல நான்காம் திட்டத்திற்கு ஒரு மாநிலத்திற்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த மத்திய உதவியின் அளவிலிருந்து இப்போது அதிக இழப்பு ஏற்படாதபடி உறுதியளிக்கும் வகையில் அவ்விருப்புரிமை பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் நாம் கருதுகிறோம். மத்திய உதவியில் 10 சத விகிதம் மாநிலத் திட்டங்களுக்காக, அம்மாநிலங்களுக்குள்ள சிறப்பான சிக்கல்களையொட்டி, அவற்றிற்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைக் கொண்டு மாநிலத் திட்டங்களுக்குரிய மத்திய உதவி பொதுவாக மேலும் நியாயமான அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுவதற்குத் திட்ட ஆணைக் குழுவிற்கு இயலும் என்பதே நம கருத்து. எவ்வாறாயினும், தேசிய வளர்ச்சி மன்றம் கருத்துத் தெரிவித்துள்ள இவ்விதிமுறை, நடைமுறையில் சில மாநிலங்களுக்கு மிகுந்த இடர்ப்பாட்டினை விளைவித்து, வளம் மிகுந்த சில மாநிலங்களுக்கு அவை முற்றிலும் எதிர்பாராத நன்மையை மேலும் பயப்பதாய் இருப்பதால், இச் சிக்கல் முழுவதையும் தேசிய வளர்ச்சி மன்றம் மறு ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். மத்திய உதவியை ஒதுக்குவது பற்றிய கோட்பாடுகளை தேசிய வளர்ச்சி மன்றம் மீண்டும் ஆய்வு செய்யுமென்றும், அவ்வாறு மறு ஆய்வு செய்வதன் விளைவாக, நமக்குக் கிடைக்கும் மத்திய உதவியின் பங்கு ஓரளவிற்குப் பெருகுமென்றும், நாங்கள் எதிர்பார்க்கிறோம். நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பையடுத்து, நான்காம் திட்டக்கால அளவில் மத்திய அரசு விதிக்கக் கூடிய கூடுதல் வரியினங்களின் வாயிலாகக் கிட்டும் தொகைகளிலிருந்தும் நமக்கு ஓரளவிற்குக் கூடுதல் நிதி வாயில்கள் கிட்டுவது திண்ணம். மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் குறித்து ஓரளவிற்குத் துயர் தணிப்புப் பெறுவதற்காக நாம் கூறும் காரணங்கள் வலிமையானவை, திட்டத்திற்கான மத்திய உதவியின் அளவை 201 கோடி ரூபாயென முடிவு செய்த பின்னர், அதன் கடன் பகுதி ஏறக்குறைய 150 கோடி ரூபாய் அளவிலே நிற்கும். இதற்கு மாறாக, மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் கணக்கில் நமக்குள்ள பொறுப்பு ஏறத்தாழ 14 கோடி ரூபாய் அளவில் நிற்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, திட்டத்திற்காக இம்மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து உருவான வகையில் கடன உதவி எதுவும் கிட்டாது. நிரல்பட இல்லாத இந்த நிலையை நுணுகிப் பார்த்து, மத்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களின் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பது குறித்த முடிவினை விரைவில் எடுக்க வேண்டுமென நாம் திட்ட ஆணைக் குழுவிடம் வேண்டியுள்ளோம். இச் சிக்கல் முழுவதும் இப்போது மத்திய அரசின் ஆய்விலுள்ளது. மத்திய அரசு அவ்வாறு கடன் பொறுப்புக்கள் குறித்த தவணை முறை வைப்புகளை மாற்றி யமைப்பதன் வாயிலாகச் சில கூடுதல் நிதி வாயில்கள் கிட்டுமென எதிர்பார்ப்பது உள்ள நிலைக்குப் புறம்பானதல்ல. திட்டத்திற்குக் குறைந்தது 575 கோடிரூபாய் அளவிலாவது முதலீடு செய்வது தவிர்க்க முடியாததென்றும், மேற்சொன்ன விதமாக நமக்குச் சற்றுக் கூடுதல் உதவி அளிக்கப்படுமானால், இந்த அளவிலான ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற இயலுமென்றும், திட்ட ஆணைக் குழுவிடம் தெளிவாக விளக்கியுள்ளோம்.

1969 மார்ச் 1] [திரு. கே. ஏ. மதியழகன்]

1969-70-ம் ஆண்டுத் திட்டம்.

12. 1969-70-ம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்தின் அளவு நான்காம் திட்டத்தின் அளவைக் காட்டிலும் நமக்கு உடனடியாக அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நான்காம் திட்டம் பற்றிய முடிவுகளை மேற்கொள்வதற்கு இன்னும் சற்றுக் கால நீட்டம் ஆகக் கூடும். 36 கோடி ரூபாய் மத்திய உதவியுடனும், ஏற்கனவே நமக்குள்ள நிதி வசதியின் அடிப்படையிலும், 7 கோடி ரூபாய் அளவுள்ள கூடுதல் நிதி திரட்டல் தொகையுடனும் சேர்த்து திட்ட ஆணைக் குழு 1969-70-ம் ஆண்டுக்குரிய திட்ட முதலீட்டை ஏறத்தாழ 72 கோடி ரூபாய் அளவில் அமைத்துக் கொள்ளுமாறு நம்மைக் கேட்டுள்ளது. எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம் போன்ற முற்றுப் பெறாத திட்டங்களுக்காகத் தேவைப்படும் அதிகச் செலவினங்களையும், வேளாண்மை உற்பத்தி போன்ற மிக முதன்மை வாய்ந்த துறைகளில் தேவைப்படும் முதலீடுகளையும் கருத்தில்கொண்டு, மாநில அரசு 87 கோடி ரூபாய் அளவில குறைந்த அளவுத் திட்டமொன்று தேவையென்று உணர்ந்துள்ளது. நான்காம் திட்டத்திற்காக நாம் வேண்டுகின்ற கூடுதல் மத்திய உதவிக்கு இணங்க, அடுத்த ஆண்டுத் திட்டத்திற்கான 36 கோடி ரூபாய் மத்திய உதவி சற்று உயர்த்தப்படுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம். இது தவிர, 1969-70-ம் ஆண்டுக்குரிய திட்டத்திற்கான உதவி பெருக வேண்டுமென்று வலியுறுத்துவதற்கு வேறு பிற வலிய காரணங்களும் உள்ளன. மூன்றும் திட்டத்திற்கும் புதிய நான்காம் திட்டத்திற்கும் இடைப்பட்ட ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஒப்புதல் அளித்த வீதாசாரப்படி மத்திய உதவி கிட்டவில்லை. திட்ட ஆணைக் குழுவே மத்திய உதவியில் மூன்று கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுந்திருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது. மூல நான்காம் திட்டம் எண்ணியவாறு நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால், இத் துண்டு நமக்கு சரிக்கட்டப்பட்டிருக்கும். இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது அடுத்த ஆண்டிற்குரிய மத்திய உதவி 36 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய் அளவிற்காவது உயர்த்தப்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம். எங்களின் இந்த மிக நியாயமான எளிய வேண்டுகோள் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில், 1969-70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கடன் வகையிலும், மானிய வகையிலும் 40 கோடி ரூபாய் அளவில் மத்திய உதவி கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

13. வருகிற ஆண்டில் இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய பற்பல கடன்களில் 1970 மார்ச் 31-ம் நாளன்று திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய 13·5 கோடி ரூபாய் மொத்தக் கடன் தொகை ஒன்றுள்ளது. இது ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்திற்கு இந்திய அரசு 1952-53 ம் ஆண்டில் ராயலசீமையிலும், பிற இடங்களிலும் மேற்கொண்ட பஞ்சத் துயர் தணிப்பு நடவடிக்கைகளில் விளைந்த இடர்ப்பாடான நிலையைப் போக்குவதற்காக அளித்த கடன் தொகையாகும். கடன் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பது குறித்த பொதுக் கேள்வியின் மீது இந்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகள் எவ்வாறிருப்பினும், 13.5 கோடி ரூபாய் அளவிலான இந்த மொத்தத் தொகையை ஐந்தாண்டுக் கால அளவில் திருப்பி செலுத்துவதற்கு இசைவதே இந்திய அரசு நமக்குச் செய்ய வேண்டிய குறைந்த அளவு உதவியாகுமென்பதை நாம் திட்ட ஆணைக் குழுவின் முன் எடுத்துரைத்தோம். இக் கருத்துரையின் காரணமாக, 1969-70-ம் ஆண்டில், 10.8 கோடி ரூபாய் அளவிற்கு நமக்குச் சுமை குறையும். நான்காம் திட்டக் கால அளவை மொத்தமாகக் கருதும்போது மத்திய அரசின் நிதி வாயில்கள் எவ்வகையிலும் இதனால் பாதிக்கப்பட மாட்டா. இயல்பாகவே நியாயமாக உள்ள நம்முடைய இவ் வேண்டுகோள் இந்திய அரசின் ஒப்புதலைப் பெறுமென்று நம்ப நமக்கு இடமிருக்கிறது. 1969-70-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறிப்பாக இக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தவணை முறை வைப்புகளை மாற்றியமைப்பது பற்றிய நமது வேண்டுகோள் ஏற்கப்படுமென்கிற நம்பிக்கையில் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்து

வதற்கு வகை செய்துள்ளோம். இந்திய அரசு இவ்விருவேண்டுகோள்களையும் ஏற்குமென்கிற அடிப்படையில், 1969-70-ம் ஆண்டிற்கான 87.20 கோடி ரூபாய் அளவில் திட்டமொன்றைத் தீட்டி அதனை இவ் வரவு-செலவுத் திட்டத்துடன் மன்றத்தின் முன் வைத்துள்ளோம்.

வேளாண்மை உற்பத்தி.

14. புதிய நான்காம் திட்டத்திற்கு அரங்கம் அமைப்பது போல் திகழும் அடுத்த ஆண்டிற்கான திட்டத்தைத் தயாரிக்கையில், வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்கும் அதனோடு தொடர்பான ஏனைய திட்டங்களுக்கும் சிறப்பான இடம் தொடர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இம்மாநிலத்தின் பற்பல பகுதிகளில் குறிப்பாக, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பண்டு காணாத வகையில் நிலவிய வறட்சி காரணமாக, இத் திட்டங்களின் விரைவு குறைந்துள்ளதை இம் மன்றத்தினர் அறிவர். வடக் கிழக்குப் பருவத்தின்போது மழையளவு ஏறக்குறைய 40 சத விகிதம் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வானம் பார்த்த ஏரிகள், கிணறுகள் இவற்றின் பாசனத்தை நம்பியுள்ள இப் பகுதிகளில் மழை வளம் கரந்த காரணத்தால், நிலையான பாசன வசதிகளைக் கொண்ட தஞ்சை போன்ற பிற பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் மிகு பயன் தரும் விதை ரகத் திட்டம், மலி பயிர் விளைச்சல் திட்டம் ஆகியவற்றில் கிடைத்துவரும் வெற்றியின் முழுப் பயனை நம்மால் துய்க்க முடியவில்லை. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், இவ்வாண்டில் மொத்தத்தில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் குறைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் விளையுள் பொய்த்துப் போனதால், பிற பகுதிகளில் நெல் கொள்முதல் செய்வதற்கான நமது முயற்சிகளை முனைப்பாக்க வேண்டியுள்ளது. சட்டப்படியான உணவுப் பங்கீட்டுப் பகுதிகளான சென்னை மாநகரம், கோவை நகரம் இவற்றின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள ஏறக்குறைய 45 லட்சம் மக்கள் "படியரிசித் திட்டத்தினால்" பயனடைகின்றனர். இவர்கள் தவிர, பிற மாவட்டங்களிலுள்ள 130 லட்சம் மக்கள் குடும்ப அட்டைத் Family Cards) திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். இவ்விடங்களில் அரிசி வெளிச் சந்தை விலையைக் காட்டிலும் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலை, அதன் தொடர்பான ஏனைய செலவுகள் உள்ளிட்ட அடக்க விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அடைப்பதற்காக வழங்கப்படும் உதவித் தொகையின் செலவு குறித்து 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 8.79 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. அரிசியினும் சற்றே விலை கூடியுள்ள செங்கோதுமை மிக்க அளவில் மக்களுக்குக் கிடைக்குமாறு நாம் வகை செய்துள்ளோம். கோதுமை, சோளம், கேழ்வரகு. ஆகியவற்றை மேலும் பயன்படுத்துவதன் மூலம் நடப்பு ஆண்டில் மழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடான நிலையைத் தீர்க்க முடியுமென்று நாங்கள் நம்புகின்றோம்.

15. பருவ காலத்தில் வானம் போதிய அளவில் வழங்கியிருந்தால் திட்டத்தின் பகுதியாக, வெற்றிகரமாய் நிறைவேற்றப்பட்டு வந்த பற்பல வேலைத் திட்டங்களின் அடிப்படையில் உணவு தானிய உற்பத்தி அளவை நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 63 லட்சம் டன் அளவிற்கு உயர்த்தியிருக்க முடியும். நடப்பு ஆண்டில் ஏற்பட்ட வறட்சி நிலை, பருவ நிலைக் கோளாறினால் வேளாண்மைப் பணிகள் வாட்டமுறாது தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு ஏதுவான திட்டங்களை ஆர்வத்தோடு செயல்படுத்த வேண்டிய தேவையை நமக்கு மேலும் உணர்த்தியுள்ளது. எனவே, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 2,500 தனியார் குழாய்க் கிணறுகள், 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 14,000 கிணறுகள் இவற்றைத் தோண்டுவதற்கு வகை செய்யப்படுகிறது. இத்திட்டங்களுக்கான கடனுதவி நில அடைமான வங்கிகளின் வாயிலாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில் பற்பல வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களுக்கென மத்திய நில அடைமான வங்கி 12 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்குமென்று எனர்

களைத் தயாரிப்பதற்கேற்ற கருவிகளை வடிவமைத்து உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு ஏறத்தாழ 12 லட்சம் ரூபாய்ச் செலவில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

பாசனம்.

18. நடுத்தரப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் விரைவினை வருகிற ஆண்டில் உயர்த்துவதற்கென 4·5 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. 250 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டமும், 80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் சித்தாறு-பட்டணங்கால் திட்டமும் மேலும் முன்னேற்றமடைவது ஒருபுறமிருக்க, அடுத்த நிதி யாண்டில் மணிமுத்தா நதித் திட்டமும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிடும். திருநெல்வேலி மாவட்டத்தில் இராம நதி, கடனா திட்டங்களுக்கு மொத்தம் 60 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் தண்டரை திட்டம் நான்காம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நந்தன் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம், ராமநாதபுரம் மாவட்டத்தில் பிள்ளை வாய்க்கால் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் வைப்பாற்றுக்குக் குறுக்கே அணை கட்டும் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் தொட்டஹல்லா திட்டம் ஆகிய இப் புதிய திட்டங்கள் குறித்து முன்னோடி வேலைகளை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், திட்ட ஆணைக் குழுவின் முறையான தொழில்நுட்ப ஒப்பளிப்பை பெற்றபின்னர் நிறைவேற்றப்படும். இப் புதிய திட்டங்கள் பற்றாக்குறைப் பகுதிகளில் துயர் தணிப்பு அளிக்கவே பயன்படும். இவற்றால் பாசனம் பெறும் பகுதி மொத்தத்தில் எவ்வகையிலும் பெருமளவுக்கு அதிகரித்துவிடாது. ஆகவேதான், நமது பழைய பாசன ஏற்பாடுகளிலுள்ள நீர்வளத்தைச் செவ்விய முறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்களில் நாம் சிறப்பாக நாட்டம் செலுத்த வேண்டியுள்ளது, எனவே, காவிரி, பெரியாறு, வைகை திட்டங்களைப் புதுப்பிப்பதற்கான பல பணிகள் நமது திட்டத்தில் இடம் பெறுகின்றன. நில அடிமட்ட நீர் வளங்களை ஆய்வதற்கான திட்டமும், ஐக்கிய நாடுகள் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 23 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

மீனளம்.

19. அடுத்த ஆண்டுத் திட்டத்தைத் தயாரிக்கையில், நீண்ட கடற்கரை வசதி பெற்றுள்ள நமது மாநிலம் போன்ற ஒரு மாநிலத்தில் மீனள வளர்ச்சியை விரைவு படுத்த வேண்டிய சிறப்பையும் நாம் கருத்தில் கொண்டுள்ளோம். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 175 விசைப் படகுகளைக் கட்டி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள், வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, 275 விசைப் படகுகளைக் கட்டிச் செயல் படுத்துவதற்குரிய திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. இக் கழகம் சென்னையிலுள்ள கூட்டமைப்பின் வாயிலாக 50 விசைப் படகுகளைக் கட்டிமுடிப்பதற்கான ஒரு திட்டத்திற்கு ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும் நான்கு இழு படகுகளை (Trawlers) கட்டி வழங்குவதற்காக, அரசு ஆணைகள் அனுப்பியுள்ளதை இம் மன்றத்தினர் அறிவர். இப் படகுகள் 1969-ம் ஆண்டில் பெறப்படுமென்று எதிர் பார்க்கிறோம். விசைப் படகுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கேற்ப அப் படகுகள் கரை சேரவும் தங்கவும் வேண்டிய வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகும். இத்தகைய வசதிகள் ஏற்கெனவே கடலூரிலும் நாகப்பட்டினத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மண்டபத்திலும், இராமேசுவரத்திலும் ஓடத்துறைகள் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அப்பணி விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. சென்னையிலும், தூத்துக்குடியிலும் 6·2 கோடி ரூபாய் செலவில் இரண்டு பெரிய துறைமுகங்களைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதை அறிய இம் மன்றம் மகிழ்ச்சியுறுமென்று நினைக்கின்றேன். இவை குறித்த கட்டிட வேலைகள் மிக அண்மையிலேயே மேற்கொள்ளப்படுமென

எதிர்பார்க்கின்றோம். நமது மாநிலத்தில் உள்ள மீனளத் திறனைப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தனியார் துறைத் தொழில் முனைவர்கள் இப்போது மிகுந்த ஆர்வங்காட்டி வருகிறார்களென்பதை அறிய நமக்கு ஊக்கமேற்படுகிறது. எண்ணூரிலுள்ள அரசு உறைப்பனித் தொழிற்சாலையின் குத்தகைக்காரர், அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்கும் இறால் மீன்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளார். இது நமது மாநில மீன் ஏற்றுமதி வாணிபத்தின் தொடக்கத்தைக் குறிப்பிடுகிறது.

விலங்கின வளர்ச்சி.

20. விலங்கின வளர்ச்சித் துறைப் பணிகளும் வருகிற ஆண்டில் பெருமளவில் விரிவாக்கப்படும். பற்பல கிராமங்களில் 35 கால்நடை மருந்தகங்களை நிறுவுவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. பால் மிகுதியாகக் கிட்டும் சென்னை, கோவை, மதுரை ஆகிய பகுதிகளில் கால்நடைகளை முனைப்பாக வளர்க்கும் திட்டம் ஒன்றிற்கு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 9 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்து விரிவாக்கப்படும். கோழியின வளர்ச்சி நிலையங்களை விரிவு படுத்துவதற்காகவும் 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இத் துறையின் பற்பல ஆராய்ச்சித் திட்டங்கள் மூன்றும் திட்டக் காலத்திலும், ஆண்டுத் திட்டக் காலங்களிலும் ஓரளவுக்குப் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. நான்காம் திட்டத்தில் 75 லட்ச ரூபாய் வகை செய்வதன் வாயிலாக இக் குறை நிறைவாக்கப்படும்.

தொழில் வளர்ச்சி.

21. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் முக்கியமானதாயிருப்பினும், நமது வளர்ச்சி நெறி முழுவதும் அது ஒன்றாகவே அமைய இயலாது. மக்கள் தொகை அடர்ந்து பெருகி, கற்றோரிடையே வேலை வாய்ப்பற்ற நிலை மலிந்துள்ள நமது மாநிலம் போன்ற ஒரு மாநிலத்தில் பெருந் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய இவ்விரண்டையும் ஒருங்கே வளர்ப்பது இன்றியமையாததாகும். ஆனால், நான்காம் திட்டத்தை இறுதி செய்வதில் கால நீட்டம் ஏற்படுவதாலும், கடந்த மூன்றாண்டுகளில் சொற்பக் குறிக்கோள்களையும், முதலீடுகளையும் கொண்ட ஆண்டுத் திட்டங்களின் அடிப்படையில் நமது தேசீயப் பொருளாதாரம் நிர்வகிக்கப்பட்டு வந்ததாலும், மொத்தமாக நாட்டில் தொழில் வளர்ச்சி மந்த நிலை அடைந்ததை அனைவரும் அறிவர். இவை தவிர, மத்திய அரசும், மாநில அரசுமே முதலீடுசெய்கிற திட்டங்களின் விரைவு குறைக்கப்பட்டதால், பற்பல தொழில்களில் உற்பத்தித் திறன்கள் அவற்றின் முழு அளவிற்குப் பயன்படுத்தப்படாத நிலை உருவாகியதை நாம் அறிவோம். இச் சூழல்களில் தேசீயத் திட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளில் தொழில்களை விரிவுபடுத்துவதை விட நிலைப்படுத்துவதிலேயே அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, இம்மாநிலத்தில் முதன்மைத் தொழிலாக இன்னும் தொடர்ந்து வருகிற பஞ்சாலைத் தொழில், மிக நெருக்கடியான நிலையிலுள்ளது. எனவே, மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறப்பதிலும், பொதுவாக இத் தொழில் தனது உற்பத்திப் பொருள்களுக்கு நிலையான விற்பனை வாய்ப்புகளை மீண்டும் பெறுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்பதிலும் அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வந்துள்ளது. தனியார் துறையிலிருந்து எடுத்துக்கொண்ட பஞ்சாலைகளைப் புதுப்பிப்பதிலும், நிர்வகிப்பதிலும் நாட்டம் செலுத்துவதற்கென்று மாநிலப் பஞ்சாலைக் கழகம் ஒன்றை நிறுவுவது குறித்து அரசு முடிவு செய்துள்ளதை இம் மன்றத்தினர் அறிவர். 1969–70-ம் ஆண்டுக்குரிய வரவு, செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலப் பஞ்சாலைக் கழகத்திற்கு உதவி அளிப்பதற்காக 15 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இக் கழகம் தேசீயப் பஞ்சாலைக் கழகத்திடமிருந்தும் கடன் நிறுவனங்களிடமிருந்தும் கணிசமான அளவிற்கு உதவி பெற இயலும். ஆனால் பருத்தி நூலுக்குரிய ஆயத் தீர்வைகள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டால்தான் இத் தொழில் குறிப்பிடத்தக்க அளவிற்குத் துயர் தணிப்பினைப் பெற முடியும்.

பார்க்கப்படுகின்றது. இவ்வங்கி மேலும் தனது பணிகளை விரிவுபடுத்தி, அடுத்த ஆண்டில் பணச் சந்தையில் உள்ள நிலைமைகளைப் பொறுத்து, அது 14 கோடி ரூபாய்க்குக் குறையாமலும், இயன்றால் 18 கோடி ரூபாய் வரையிலும் பணம் திரட்ட முடியுமென்று மதிப்பிடப்படுகிறது. மத்திய நில அடைமான வங்கி வெளியிடவிருக்கும் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் அரசும் கணிசமான அளவிற்குப் பங்கு பெறும். இது குறித்து 1969-70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4.6 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் செயல்படத் தொடங்கிய வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகம் (Agro-Industries Corporation) 1969 சனவரி முடிய, டிராக்டர்கள் வாங்குவதற்காக மொத்தம் 70 லட்சம் ரூபாய் வரையிலும், எண்ணெய்ப் பொறிகள், மின்சார விசையேற்றங்கள இவற்றை வாங்குவதற்காக 80 லட்சம் ரூபாய் வரையிலும் கடன்கள் வழங்கியுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் மேலும் பங்கு பெறுவதற்காக அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 50 லட்சம் ரூபாய் வகை செய்துள்ளோம். இந்திய அரசும் இதற்கு நிகரான ஒரு தொகையை வழங்கும். இந்த நிதி வாயில்களைக் கொண்டும் வணிக வங்கிகளிடமிருந்து மறுகடன் வசதிகளைப் பெற்றும் இந் நிறுவனம் 1969-70-ம் ஆண்டில் பற்பல வளர்ச்சித் திட்டங்களுக்காக உழவர்களுக்கு ஆக்கந்தரும் வகையில் தொடர்ந்து பணியாற்றும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் டிராக்டர்களை இனி வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகவே வழங்க வேண்டுமென்று இந்திய அரசு, கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இக்கொள்கைக்கிணங்க, வெளி நாடுகளில் உற்பத்தியான 650 டிராக்டர்கள் வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகத் தமிழ் நாட்டில் வழங்கப்படுவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைய அறிய இம்மன்றத்தினர் களிப்படைவார்கள் என்று நம்புகின்றேன். டிராக்டர் டயர்கள், டியூப்கள் தற்போது பற்றுக்குறையாக உள்ளதைக்கருதி, இவற்றை மொத்தமாக வாங்கி, உழவர்களுக்கு நியாய விலைகளில் வழங்குவதற்கும், இக்கழகம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இத் திட்டங்கள் தவிர, பெரும்பாலும் சிறு பாசனத் திட்டங்களுக்கும், நிலப் பண்படுத்தும் திட்டங்களுக்கு சார்பான மொத்தத்தில் 77 லட்ச ரூபாய் முதலீடு செய்ய வேண்டியுள்ள சிறப்புத் திட்டங்களுக்கும் வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் கடன் உதவி அளித்து வருகின்றது. இத்திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும் மதுரை மாவட்டத்தில் மதுரையிலும், மேலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புள்ளம்பாடி பசிய கட்டளைக் கால்வாய்ப் பகுதிகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கை, திருப்பத்தூர் வட்டங்களிலும், கோவையில் அமராவதி திட்டப் பகுதியிலும் கிணறுகள் தோண்டுதல் போன்ற 1,018 லட்ச ரூபாய் மொத்த முதலீடு செய்ய வேண்டியுள்ள பிற திட்டங்களையும் அரசு தீட்டி அவற்றை வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திற்கு அனுப்பியுள்ளது. பால் பண்ணைகள், காப்பித் தோட்டங்கள், மீனளங்கள் வளர்ச்சி பற்றிய சில திட்டங்களும் தீட்டப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்குரிய அடித்தளத்தை வலிவுடையதாக்கும் பொருட்டு வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திடமிருந்து நிதி வாயில்களைப் பெறுவதில் அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமென்று இம்மன்றத்தினருக்கு உறுதியளிக்க விழைகின்றேன்.

16. சமூகக் கட்டுப்பாட்டுக் கொள்கையின்கீழ், வணிக வங்கிகளுக்குள்ள புதிய பொறுப்புகளுக்கிணங்க, இவ் வங்கிகள் உழவர்களுக்கு நடுத்தர கால கடன் தேவைகளை வழங்குவதில் இப்போது உண்மையான அக்கறை காட்டி வருவது ஆக்கத்திற்கான அறிகுறியாகும். அரசைக் கலந்து முடிவு செய்யப்பட்ட அடக்கப் பகுதிகளில் (compact areas) அரசு வழங்கும் ஒப்புறுதிகளின் அடிப்படையில் உழவர்களுக்குக் கடன்கள் வழங்கப் பெரும்பாலும் பெரிய வங்கிகள் அனைத்தும் இப்போது முன் வந்துள்ளன. இத் திட்டங்களின்கீழ் நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்

பட்டுவரும் பற்பல வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கென ஏறக்குறைய 3 கோடி ரூபாய் வரை கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுகாறும் அடியெடுத்து வைக்காத ஒரு துறையில் அவ்வங்கிகள் முதன்முதலாகச் செயலாற்றத் தொடங்கியுள்ள நிலையில், அவற்றிற்கு உறுதியளிக்கும் ஏற்பாடாகவே ஒப்புறுதி வழங்கும் திட்டம் செயல்படுகிறது. ஆனால், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால் கிடைக்கும் நேரறிவைக் கொண்டும், கிராமப்புறங்களில் பரவலாக கிளைகள் திறக்கப்படுவதனாலும் வணிக வங்கிகள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே வேளாண்மை வளர்ச்சிக்குத் தொடர்ந்து கடன் வழங்கி வருமென நாம் நம்புகின்றோம். அரசும், தன்னைப் பொறுத்தவரையில், மூல ஆவணங்களைச் சரிபார்த்தல், சொத்துக்களைக் கொதுவை வைத்தல், முத்திரைத் தீர்வைகள், ஆவணப் பதிவுக்கட்டணங்கள் போன்ற இனங்களில் சட்டப்படியும் நிர்வாக முறைப்படியும் நடவடிக்கை எடுப்பதன் வாயிலாக வணிக வங்கிகளுக்கு எவ்வாறு சிறந்த வகையில் உதவி அளிக்க முடியுமென்பதை ஆய்வு செய்து வருகின்றது. நமது வேளாண்மைப் பொருளாதாரத்தை அறிவியல், தொழில் நுட்பவியல் இவற்றில் காணும் புதிய உத்திகளுக்கிணங்கச் சீரமைக்கும் பணியில் வணிக வங்கிகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென அரசு கருதுகின்றது. மற்றும் வணிக வங்கிகளுக்கும் வேளாண்மை துறைக்குமிடையே புதிய இணைப்புகளை உண்டாக்குவதற்கும் அரசு தன்னால் இயன்ற முயற்சியை மேற்கொள்ளும்.

17. வருகின்ற ஆண்டில் மிகு பயன்தரும் விதை ரகங்கள், பலபயிர் விளைச்சல் குறித்த திட்டங்கள் மேலும் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். மிகு பயன்தரும் வித்துக்களை மேலும் மூன்று லட்சம் ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கவும், இரு போகப் பயிர் விளைச்சலை மேலும் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் விரிவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இவற்றோடு கூடவே, பயிர்களைப் பீடிக்கும் பூச்சி-கொள்ளை நோய்களிலிருந்து பயிர்களைக் காப்பதற்கான தற்போதைய ஏற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்படும். நோய்க் கொல்லி, பூச்சிக் கொல்லி மருந்துகளை வழங்குவதற்கான திட்டத்தின்கீழ் 48 லட்சம் ஏக்கர் உணவுப் பயிர்களும், 24 லட்சம் ஏக்கர் பிற பயிர்களும் பயன்பெறும். நடப்பாண்டில் விமானமூலம் மருந்து தெளிக்கும் முயற்சிகளால் கிட்டியுள்ள ஊக்கமளிக்கும் விளைவுகளைக் கருதி, 1969-70-ம் ஆண்டில் 3·5 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு இத் திட்டத்தை விரிவுபடுத்தக் கருதப்படுகிறது. பயிர்கள் பாதுகாப்பின் தேவையை நம் உழவர்கள் இன்று பரவலாக உணர்ந்துள்ளனர். திட்டம் குறித்து நாம் நடத்திய விவாதங்களின் போது, இந்திய அரசு அலுவலர்களும், திட்டக் குழுவினரும், பூச்சிக் கொல்லிக்கான உதவித் தொகைகளை நிறுத்தி, அதன் வாயிலாகக் சேமிக்கப்படும் நிதிகளைப் பிற வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிக் கருத்துத் தெரிவித்தார்கள் இந்த உதவித் தொகை நாளடைவில் நிறுத்தப்பட வேண்டுமென்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும், அரசு இவ்வுதவித் தொகையைப் படிப்படியாகவே நிறுத்த முடியுமெனக் கருதுகின்றது. எனவே, நோய்க் கொல்லி மருந்துகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை வருகின்ற ஆண்டில் 35 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதமாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. காஞ்சிபுரத்தில் நோய்க்கொல்லி மருந்துகளைச் சோதனை செய்வதற்காக ஆய்வுக்கூடமொன்றை நிறுவ அரசு கருதியுள்ளது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் உழவர்களுக்கு 5,000 தெளிப்பான்களை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது; மற்றும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கென 500 விசைத் தெளிப்பான்களையும் அரசு வாங்கும். தரமான வித்துக்கள் வழங்குவதன் முக்கியத்துவத்தையும், அவற்றை வழங்குவதில் தனிப்பட்ட வணிகர்கள் காட்டும் அக்கறையையும் கருதி, அரசு வித்துச் சான்றளிக்கும் திட்ட (Seed Certification Scheme) மொன்றைத் தொடங்கக் கருதுகின்றது. இறுதியாக ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய் செலவாகிற இத் திட்டத்திற்கு 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3 லட்சம் ரூபாய்க்குச் சற்று அதிகமாகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கோவையில் தரமான வித்துக்

1969-70-ம் ஆண்டின் இறுதிக்குள் சென்னை மின்சார இணைப்பின் நிறுவிய மொத்தத் திறன் 1,475 மெகவாட்டாக இருக்கும். மூன்றும் திட்ட இறுதியில், இது நெய்வேலி நீங்கலாக, 1,070 மெகவாட்டாகவே இருந்தது. மின்சாரத் தேவைப்பற்றிய முன் மதிப்பீடுகளை ஒட்டி, சில புதிய திட்டங்களின் மீது நடவடிக்கை தொடங்குவது அவசியமாகும். நடப்பாண்டில் பாண்டியாறு-புன்னப்புழா திட்டம் குறித்த முன்னோடிப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் இத்திட்ட நிறைவேற்றம் மேலும் விரைவு படுத்தப்பட்டு, இத் திட்டம் முழுவதும் நான்காம் திட்டக் கால அளவிலேயே முடிக்கபடும். பைகாரா திட்டத்தில் மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக நடுவட்டம் கிளைத் திட்டம் குறித்த வேலையும் மேற்கொள்ளப்படும். மின்சார வாரியம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான திட்டங்களைத் தணியா ஊக்கத்துடன் நிறைவேற்றி வரும். 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்கிற குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டு அதற்கேற்ப 12·50 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியுள்ள இவ்வேலைத் திட்டத்திற்கு அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 8·75 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 3·75 கோடி ரூபாய் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும். அடுத்த ஆண்டுத் திட்டத்தில், மின்சார வளர்ச்சிக்காக வகை செய்துள்ள மொத்த நிதி ஒதுக்கம் 36·88 கோடி ரூபாய் ஆகும். நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகைகள் உட்பட, மின்சாரவாரியம் 40·63 கோடி ரூபாய் அளவிலான மூலதனத் திட்டமொன்றை நிறைவேற்றும்.

28. சாலைப் போச்கு வரத்து—திட்டத்தில் சாலைகள் குறித்த பற்பல பணிகளுக்காக 181 லட்சம்ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதால், சாலைப் போக்குவரத்து மேம்பாட்டில் நமது தற்போதைய வளர்ச்சி வீதத்தை நாம் சற்று உயர்த்த முடியும். இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள 300 மைல் பேருந்து வழித்தடங்களை அரசு மேற்கொண்டு பேணி வரக் கருதுகிறது. இதனால் இடர்பாடான அவைகளின் நிதி நிலைக்குத் தயர் தணிப்பு ஏற்படுவதுடன், தங்கள் குறைந்த நிதி வாயில்களைக் கொண்டே அதிக முக்கியத்துவம் இல்லாத ஏனைய சாலைகளைப் பேணி வர அவற்றிற்கு இயலும். பேருந்து வழிதடங்களை நாட்டுடைமையாக்குவது பற்றிய அரசின் கொள்கையும் குறித்தாங்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாநிலப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதன முதலீடுகளுக்காக 155·58 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இதைக் கொண்டு ஏனையவற்றோடு கூட, 64 பேருந்து வழித் தடங்களைத் திட்டமிட்டப்படி நாட்டுடைமையாக்க இயலும். சென்னை மாநகரில் சாலைகள் மேம்பாட்டிற்காகவும், மேம்பாலங்கள் கட்டுவதற்காகவும் வருகிற ஆண்டில் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்படும் கடன்கள், மானியங்கள் வகையில் 31·5 லட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்கப்படும்.

29. கல்வி உற்பத்தியைப் பெருக்கும் திறனுள்ள திட்டங்கள் முக்கியமானவையென அரசு உண ந்துள்ளபோதிலும், சமூகப் ணிகளே சாதாரண மனிதனுக்குப் பொருள் பொதிந்த பணிகளாகத் தோற்றுமாதலால், அப்பணிகளைப் புறக்கணிக்க இயலாது. குறி க, கல்விக்கான வ ய்ப்புகளை விரிவுபடுத்துவது, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதிலும். நமது மக்கள் தொகையினரில் சமூக, பொருளாதார நிலைகளில் பின்தங்கிய பிரிவினர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளை அளிப்பதிலும் சிறப்பு வாய்ந்ததாகும். நமது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நமது முதல் வரவு-செலவுத் திட்டத்திலேயே சில வருவாய் வரம்புகளுக்குள், புகுமுக வகுப்பளவில் மாணவர் அனைவருக்கும் இ கல்வி அளிப்பதற்கான வகை செய்திருந்தார் என்பதை இம் மாமன்றம் நினைவு கூறும். அரிசனங்கள், பழங்குடி மக்கள். குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாயும், பிற வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு

1,500 ரூபாயும் வருவாய் வரம்புகளாக நடைமுறையில் உள்ளன. இதையடுத்து, அரசிதழ் பதிவிலா அலுவலர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களோடு ஒப்பிடும் தரத்திலுள்ள உள்ளாட்சி அலுவலர்கள், ஆசிரியர்கள் முதலியோரின் பிள்ளைகளுக்கும் புகுமுக வகுப்பில் சம்பளம் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது (ஆரவாரம்). அண்ணாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் இன்றைய அரசு சாதி, சமயம், இனம், வருவாய் முதலிய வேறுபாடுகள் ஏதுமின்றி எல்லா மாணவர்களும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி பெறும் வகையில் படிப்புச் சம்பளம் கட்டுவதினின்றும் விலக்களிக்க முடிவு செய்துள்ளது என்பதையறிய இம் மாமன்றம் இறும்பூதடையுமென்று நம்புகின்றேன் (ஆரவாரம்).

30. இங்ஙனம், கல்விக்கு அளித்து வந்துள்ள முக்கியத்துவ நிலை அடுத்த ஆண்டுத் திட்டத்திலும் தொடர்ந்து நீடிக்கும். பொறுப்பேற்கப்பட்ட செலவினம் உட்பட, பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி இவற்றிற்காக வகை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் 65·39 கோடி ரூபாய் அளவில் நிற்கும். இது மாநில, வரவினங்களில் 24 சத விகிதமாகும். இத்துறைக்காக ஆண்டுத் திட்டத்தில் 6—11, 11—14, 14—17 வயதுத் தொகுதிகளில் பள்ளிகளில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு இணங்க, மொத்தம் 7,900 ஆசிரியர்களை வேலையில் அமர்த்துவதற்காக வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 75 லட்சம் ரூபாயும் ஆய்வுக்கூடக் கருவிகளுக்காக 39 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து, கல்வியின் தரத்தை மேனிலை செய்ய வேண்டிய தேவையும் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது புலனாகும். கடந்த சில ஆண்டுகளில் இடைநிலைக் கல்வித் துறை பெருமளவில் விரிவடைந்திருப்பதால், கல்லூரிகளில் சேருவதற்கான நெருக்கடி பெருகியுள்ளது. புதிய கல்லூரிகளைத் திறப்பதன் வாயிலாகவும், ஏற்கெனவே உள்ள கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் திறனளவை விரிவுபடுத்துவதன் வாயிலாகவும் அரசு ஓரளவுக்கு இத் தேவையை நிறைவேற்ற முயன்றுள்ளது. 1969–70 வரவு-செலவுத் திட்டத்தில், 4 புதிய அரசுக் கல்லூரிகளைத் திறப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. திருப்பூர், விருத்தாசலம், தஞ்சாவூர், மாயூரம், நாமக்கல், ராசிபுரம், விழுப்புரம், வாலாஜாபேட்டை ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புக்களைத் திறப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சேலத்திலும், கோவையிலும்முள்ள அரசுக் கலைக் கல்லூரிகளிலும், திருச்சிராப்பள்ளியிலுள்ள ஈ. வே. ரா. கல்லூரியிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களைத் திறக்கும் கருத்துள்ளது. கல்லூரிகளுக்குரிய கட்டிடங்களைக் கட்டுவதற்காக 46.25 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான கட்டிடங்களுக்காக 1969–70 ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதால், இப் பணியில் பெருமளவிற்கு முன்னேற்றம் காண இயலும்.

31. நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவு மந்த நிலை அடைந்திருப்பதைக் கருத்தில் கொண்டு, திட்ட ஆணைக் குழு தகுதிபட்டய (Diploma) நிலையிலும், பட்டப் படிப்பு நிலையிலும் பதிய தொழில் நுட்பக் கல்வி நிலையங்களைத் திறக்க வேண்டாமென்று மாநிலங்களுக்கு அறிவுரை அளித்துள்ளது. எனவே, தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை நிலைப்படுத்தி மேம்பாடு செய்வதிலும், தொழில் துறையின் உண்மையான தேவைகளையொட்டித் தற்போதைய படிப்புப் பிரிவுகளைப் பல்வகைப்படுத்துவதிலும் மாநில அரசின் நான்காம் திட்டத்தில் நாட்டம் செலுத்தப்படும். அவ்வாறிருப்பினும், கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரியில் மாணவர்கள் சேருவதில் நிலவிய நெரிசலைக் கருதி, மத்தியத் தொழிற் பள்ளியின் எல்லைகளுக்குள் பொறியியற் கல்லூரிக்காகப் "புற நிலையமொன்றைத்" Off Centre campus) தொடங்கும் கருத்துள்ளது.

22. நான்காம் திட்டத்தில் இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைவு, பெரிய திட்டங்களில் மத்திய அரசு செய்யும் முதலீடுகளையும், தனியார் துறையில் செய்யப்படும் முதலீடுகளையும் பெருமளவிற்குப் பொறுத்திருக்குமேயன்றி மாநிலத் திட்டத்தில் நாம் செய்யும் நிதி ஒதுக்கத்தை மட்டும் பொறுத்து அமையாது. நான்காம் திட்டத்தில் தொழில் துறையில் மத்திய அரசின் திட்டங்கள் இன்னும் முடிவு செய்யப்படாத நிலையிலேயே உள்ளன. மத்திய அரசு இத் திட்டங்களில் ஏற்கெனவே ஏற்றுள்ள பொறுப்புகள், இப்போது முடிவுறும் நிலையிலுள்ள சென்னைப் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை (Madras Refineries) சென்னை உரத் தொழிற்சாலை போன்ற சில பெரிய திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இவற்றில் எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியவுடன் அப்பகுதியில் பாறை எண்ணெய்-ரசாயனத் தொழில்கள் நிறுவுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் மேம்பாடு அடையும். நமது மாநிலத்திலுள்ள தனியார் துறைத் தொழில் முனைவர்கள், அரசு ஏற்கெனவே தொடங்கி வைத்துள்ள வல்லுநர்க் குழு ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வார்களென நாம் நம்புகிறோம். குறிப்பாக, உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு சிறப்பான மருந்துகள், மருந்து தயாரிப்பதற்குரிய பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்காக இம்பீரியல் கெமிக்கல்ஸ் இந்தியா (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனம் கருதியுள்ளது என்பதை அறிய இம் மன்றம் களிப்படையுமென்று நம்புகிறேன். இதற்கென இந்திய அரசு உரிமம் வழங்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதைப்போலவே, பிலிப்ஸ் இந்தியா என்கிற நிறுவனம் சிறிதே மின்கடத்திக கருவிகள் (Semi conductor devices) ஒருங்கிணைந்த மின் ஓட்டக்கருவிகள் (Integrated circuits) போன்ற மின் அணுத் துணைக் கருவிகளை (Electronic components) உற்பத்தி செய்வதற்காக மொத்தம் 1·5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொறிகளைக் கொண்ட தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு இந்திய அரசுக்கு உரிமம் வழங்கும்படி விண்ணப்பம் செய்துள்ளது.

23. அரசுத் துறையில் பெரிய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொடர்ந்து மாநில அரசின் முக்கிய கருவியாகப் பணியாற்றி வரும். இக் கழகம் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றையும், அரக்கோணத்தில் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவுவதற்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு இயலும் வகையில், 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2·80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சிமெண்ட் தொழிற்சாலை அடுத்த நிதி ஆண்டின் நடுவில் கட்டி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் துறையில் குறிப்பான திட்டங்களுக்குப் பங்கு மூலதனத்திற்குத் தொகை செலுத்துதல், வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்கு ஒப்புறுதி வழங்குதல் போன்ற வடிவங்களில் உதவியளிக்கும் வகையில்
பி.ப. இக் கழகத்தின் பணிவாய்ப்பு அண்மையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.
12-30 தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை ஒன்றைத் தனியார், பொதுத் துறை இரண்டும் இணைந்த கூட்டுத் துறைத் திட்டமாகச் செயல்படுத்தவும் இக் கழகம் முற்பட்டுள்ளது. இதற்கென்று நான்காம் திட்டத்தில் 150 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சேலம் உருக்காலை.

24. கஞ்சமலை இரும்புக் கனிகளையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் அடிப்படையாகக் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றை நிறுவ இயலுமென்று பற்பல தொழில் நுட்ப-பொருளாதார ஆய்வுகளின் மூலமும், புலனாய்வுகளின் வாயிலாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், இந்திய அரசு இத் திட்டத்தைத் தொடங்கி வைக்க முன்வராதது

வருத்தத்திற்குரிய வொன்றாகும். சேலம் இரும்புக் கனிகளை வெட்டி எடுக்கும் பணியை இனியும் ஒத்திப் போடக்கூடாதென்று மாநில அரசு கருதுகின்றது. எனவே, கஞ்சமலையிலுள்ள கனிவளங்களை வெட்டி எடுக்கவும் அயச் செறிவுருள் தொழிற்சாலை (Concentration and pelletisation) ஒன்றை நிறுவவும் ஒல்லும் வகையில் மாநிலத் திட்டத்தில் அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்படும் வசதிகள் நாளடைவில் நிருவப்படவிருக்கும் உருக்காலையுடன இணைக்கப்படும். 1969-70-ம் ஆண்டில் இத் திட்டப் பணியைத் தொடங்கி வைப்பதற்காக 51 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய இப்பேரவை களிபேருவகை எய்துமென நம்புகின்றேன். நமது மக்களின் நெஞ்சகத்தே நெடுநாளாய் அரும்பி நின்ற இவ்வேணவா பூத்து மலர்வதற்கேற்ற வைகறைபோல் அமைந்துள்ள இந்நிதி ஒதுக்கம் தமிழ் நாட்டின் பொருளாதார வரலாற்றில் ஓர் ஒளி மிகுந்த திருப்பமாகும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

25. பட்டுத் தொழில் வளர்ச்சி, கைவினைத் தொழில்கள் வளர்ச்சி குறித்த திட்டங்கள் பெரிதும் விரிவடைந்திருப்பது ஒரு புறமிருக்க, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் தொழிற் பேட்டைக்கள், மேம்பாடு செய்யப்பட்டுள்ள மனைகளை ஒதுக்குதல், சிறிய தொழிற் பிரிவுகள் இவை குறித்த பல திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. நிதி நிலைக் குறிப்பில் பகுதி III-ல் இத் திட்டங்களின் பட்டியலைக் காணுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

26. சிறு தொழில்கள் துறையில் பல தொழிற் பிரிவுகள் வளர்க்கப்பட்டிருப்பதையடுத்து, அத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்வதற்கான வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகும். இந்த நோக்கில் சென்னையில் சிறு தொழில் வணிகப் பொருட்காட்சி சாலை ஒன்றையும், புது டில்லியில் மாநில விற்பனைப் பெரு நிலையம் (State Emporium) ஒன்றையும் நிறுவுவதற்காக வகை செய்துள்ள நிதி ஒதுக்கத்தை இப்பேரவை வரவேற்குமென நினைக்கின்றேன். இறுதியாக 18 லட்ச ரூபாய் முதலீடு செய்ய வேண்டியுள்ள இவ்விரு திட்டங்களுக்கும் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சார திட்டங்கள்.

27. மின் உற்பத்தி, மின்சாரம் அனுப்பல் குறித்த திட்டங்கள் நிறைவேற்றப்படும் விரைவு செவ்வனம் காக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திருத்த மதிப்பீடுகளில் மின்சாரத் திட்டங்களுக்கான முதலீடு, முதற்கண் வகை செய்திருந்த 32·17 கோடி ரூபாய்க்கு மாறாக, 40·31 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. நமது மின்சார இணைப்பு, தொழில் துறை, வேளாண்மைத் துறைகளிலுள்ள பயன் துய்ப்போர் தேவைகளனைத்தையும் ஈடு செய்யும் அளவிற்குப் போதிய வண்மையை இப்போது பெற்றுள்ளது. 1969-70-ல் அவ்விணைப்பில் 305 மெகவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் சேர்க்கப்படும். இன்றைய நிலையில், மின்சார வாரியம் பின்வரும் கூடுதல் பிரிவுகளை 1969-70-ல் உற்பத்தியைத் தொடங்குவதற்காக இயக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது :

(1) எண்ணூரில் ஒவ்வொன்றும் 60 மெகவாட் திறனுள்ள முதல், இரண்டாம் பிரிவுகள் ;

(2) ஆழியாறு மின் நிலையத்தில் 60 மெகவாட் பிரிவு ;

(3) சோலையாறு மின் நிலையம் 2-ல் 25 மெகவாட் பிரிவு ;

(4) கோதையாறு மின் நிலையம் 1-ல் [illegible] மெகவாட் பிரிவு ;

(5) கோதையாறு மின் நிலையம் 2-ல் 4[illegible] மெகவாட் பிரிவு ;

இவை தவிர, அடுத்த நிதியாண்டின் இறுதிக்குள், நெய்வேலியில் 200 மெகவாட் அனல் மின்சாரம் உற்பத்தி செய்யும் கூடுதல் பிரிவொன்று செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே

8. பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்

A. Statutory Rules and Orders.

' Nil '

B. Reports, Notifications and Other Papers.

* 4. The Tamil Nadu Appropriation Bill, 1969 (L.A. Bill No. 6 of 1969).

*55. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1969 (L.A. Bill No. 7 of 1969).

Despatched to Members on 25th February 1969.

இணைப்பு I.

[17-ம் பக்கத்திலுள்ள 129 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டிலுள்ள 82 நூற்பு ஆலைகளில் தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டம் இதுவரை நீட்டிக்கப்படவில்லை.

(இ) இந்த 82 நூற்பு ஆலைகளில் பின்வரும் 4 ஆலைகள் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளன—

(1) திரு. விஜயகுமார் ஆலை நிறுவனம், பழனி.

(2) திரு ராஜரத்ன ஆலை நிறுவனம், நெய்க்காரப்பட்டி.

(3) திரு. போஜராஜ் துணி ஆலை நிறுவனம், தேனி.

(4) மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை நிறுவனம், மேலூர், மதுரை மாவட்டம்.

(உ) இந்தத் திட்டம் மேற்படி ஆலைகளில் நீட்டிக்கப்படாதன் காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(1) பழனி திரு. விஜயகுமார் ஆலை நிறுவனமும், நெய்க்காரப்பட்டி திரு. ராஜரத்ன ஆலை நிறுவனமும் அமைந்துள்ள பழனிப் பகுதிக்கு இத் திட்டத்தை நீட்டிக்க அரசாங்கம் ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மருந்தகத்தை அமைப்பதற்கான தனியார் கட்டிடங்கள் கிடைக்காத காரணத்தினால் நெய்க்காரப்பட்டிக்கு இத்திட்டத்தை நீட்டிக்க இயலவில்லை. ஆதலின் மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளிலுள்ள பணியாளர்களுக்குச் சுற்றியங்கும் வண்டிமூலம் மருத்துவவசதி அளிக்கும் திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இருநது வருகிறது.

(2) இததிட்டத்தை அரசாங்கம் படிப்படியாக நிறைவேற்றி வருகிறது. தமிழ் நாட்டில் 1000 பணியாளர்கள் உள்ள பகுதிகள் அனைத்திற்கும் இத்திட்டத்தை நீட்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேனியில் உள்ள திரு. போஜராஜ் துணி ஆலை நிறுவனம், மேலூரில் உள்ள மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை ஆகிய இரண்டு ஆலைகளிலும் பணி செய்வோரின் மொத்த எண்ணிக்கை 600 மட்டுமே ஆகும். எனவே, 1,000 பணியாளர்களுக்கு மேற்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டத்தை நீட்டித்த பிறகு இந்தத் தொழிற்சாலைகளுக்கு இத் திட்டத்தை நீட்டிக்கும் பணி மேற்கொள்ளப்படலாம்.

(*a*) There are 82 textile mills in this State in which the E.S.I. Scheme has not been extended so far ;

(*b*) Of these 82 textile miles, four mills are situated in Madurai district. They are --

(i) Messrs. Vijayakumar Mills Limited, Palani ;

(ii) Messrs. Rajaratna Mills Limited, Neikkarapatti Palani,

(iii) Messrs. Bojaraj Textile Mills Limited, Theni ; and

(iv) Madurai District Co operative Spinning Mills, Limited, Melur, Madurai district.

(c) The reasons for not extending the scheme to these mills are as follows :—

(i) The Government have already sanctioned the extension of the scheme to Palani area in which Messrs Vijayakumar Mill , Limited, Palani and Messrs. Rajaratna Mills Limited, Neikkarapatti, Palani are situated. But due to the non-availability of private buildings in Neikkarapatti, for housing the dispensary, the scheme could not be extended so far. Hence, the question of providing medical facilities to the workers of the above factories through mobile van service is under consideration of the Government.

(ii) The Government are implementing the scheme on a phased programme. Steps are being taken to extend the scheme to all areas in this State having a concentration of 1,000 employees. The total number of employees in the two factories, viz., Messrs. Bojaraj Textile Mills Limited, Theni and Madurai District Co operative Spinning Mills, Melur, is only about 600. Hence, the question of extending the scheme to these factories can be taken up, after the scheme is extended to the areas, having more than 1,000 employees.

இணைப்புகள்

[திரு. கே. எ. மதியழகன்] [1969 மார்ச் 1

பின் தங்கிய வகுப்பினர் நலன்

32. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காகப் போதிய அளவு வகை செய்யப்பட்டுள்ளது. 1968-69ம் ஆண்டில் உதவிச் சம்பளங்கள் போன்ற பற்பல திட்டங்களின்மீது ஏற்பட்ட செலவின் அளவு வரையில் இப்போது பொறுப்பேற்கப்பட்ட செலவினமாக உள்ளது இது. திட்டத்தின்பாற்படாத செலவினமாகக் கருதப்பட்டு, இச் செலவின் அளவிற்குமேல் காணப்படும் உயர்வு மட்டும் 1969–70-ம் ஆண்டிலிருந்து தொடங்குகின்ற புதிய திட்டத்தின் பகுதியாக அமையும். இதன் காரணமாகவே, நடப்பு ஆண்டிற்கான 166·32 லட்ச ரூபாய் முதலீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1969–70-ல் வகை செய்யப்பட்டுள்ள திட்ட முதலீடான 100·77 லட்ச ரூபாய், அளவில் குறைந்திருப்பது போலத் தோன்றலாம். ஆகவே பொறுப்பேற்கப்பட்ட செலவினத்தையும், திட்டச் செலவினத்தையும் ஒன்று சேர்த்தால்தான் இத் துறையில் நிறைவேற்றக் கருதியுள்ள வளர்ச்சித் திட்டங்களின் அளவைச் சரிவர முடிவு செய்ய இயலும். அவ்வாறு முடிவு செய்யும்போது, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கான மொத்தச் செலவினம் 1968–69-ம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளில் கண்டுள்ள 642.29 லட்சம் ரூபாயிலிருந்து, 1969–70-ல் 696.92 லட்சம் ரூபாய்க்கு உயர்ந்திருப்பது புலனாகும்.

பொதுச் சுகாதாரம்

33. மருத்துவ உதவி, பொதுச் சுகாதாரம் போன்ற துறைகளில் மக்களின் தேவைகள் அரசின் வசமுள்ள நிதி வாயில்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அதிகமானவை என்பது வெள்ளிடைமலை. அவ்வாறிருப்பினும், நிதி நிலைக் குறிப்பின் பகுதி III-ல் கண்டுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் அடங்கிய நீண்ட பட்டியல் இத்துறையில் கட்டிடங்கள், பணியாளர்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த தேவைகளை இயன்ற அளவுக்கு நிறைவேற்ற அரசு முற்பட்டுள்ளதென்பதை எடுத்துக்காட்டும். உடுமலைப் பேட்டை, தாராபுரம், மேட்டுப் பாளையம், புதுக்கோட்டை, விருத்தாசலம், திண்டுக்கல் முதலிய இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும், மருத்துவ மனைகளுக்குப் பிற மேம்பாடுகளைச் செய்வதற்கும் வகை காணப்பட்டுள்ளதைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் ஐந்தில் சித்த மருத்துவப் பிரிவுகள் திறக்கப்படுவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

34. பொருளாதாரத் திட்டங்களின் பயன்களை மக்கள் தொகைப் பெருக்கம் அரித்துவிடாதபடி உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும். எனவே, நமது திட்டங்களில் குடும்ப நலப் பணிகளுக்கு மிக முதன்மையான இடம் அளிக்கப்பட்டுள்ளது. குடும்ப நலனுக்குத் தொடர்பான திட்டங்களுக்காக ஆண்டுத் திட்டத்தில் 206·09 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக மாநிலத் திட்டத்திற்குரிய உதவி வரம்பிற்குப் புறம்பாக, 198·59 லட்ச ரூபாய் மத்திய உதவியாகப் பெறப்படும்.

நீர் வழங்கல் வடிகால் திட்டங்கள்

35. நடப்பாண்டில் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்காக ஆகும் செலவின அளவு அதே நிலையில் தொடர்ந்து பேணி வரப்படும். ஆயினும், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் உட்பட, கிராம நீர் வழங்கும் திட்டங்களுக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் 1968–69-ல் 106·72 லட்ச ரூபாயிலிருந்து 1969–70 ல் 112·57 லட்ச ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை

1969 மார்ச் 1] [திரு. கே. எ. மதியழகன்]

மாநகராட்சி மன்றத்திற்குத் தொடர்பான நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு 2 கோடி ரூபாய் அளவில் செலவாகுமெனக் கருதப்படுகிறது. இதில் 1 கோடி ரூபாயை மாநகராட்சி மன்றம், தான் திரட்டவிருக்கும் வெளிச் சந்தைக் கடனிலிருந்து ஏற்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய தொகையை மாநில அரசு அதன் திட்டப் பகுதியாக ஏற்றுக்கொள்ளும். இது தவிர, வீராணம் நீர் வழங்கும் திட்டத்திற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் நிறைவேற்றப்படும் விரைவினையொட்டி இந்த நிதி ஒதுக்கத்தைப் பின்னர் உயர்த்த வேண்டியிருக்கலாம். இப்போதைய வளர்ச்சிப் போக்கினையும் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்தினையும் கருதி, திருவொற்றியூர், காஞ்சிபுரம், திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை ஆகிய இடங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்களும், சிதம்பரம், மன்னார்குடி ஆகிய இடங்களில் நிறைவேற்றப்பட்டு வரும் வடிகால் திட்டங்களும் 1969–70-ல் முற்றுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

36. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து வடிவம் பெறுகின்ற அடுத்த ஆண்டுத் திட்டம் 87·20 கோடி ரூபாய் அளவில் நிற்கும். நடப்பு ஆண்டிற்கான திட்ட முதலீட்டிலிருந்து 15 கோடி ரூபாய் பொறுப்பேற்கப்பட்ட செலவினமாகக் கருதப்பட்டு, திட்டக் கணக்கிலிருந்து திட்டத்தின் பாற்படாத கணக்கிற்கு மாற்றப்படும். இதைக் கருத்தில் கொண்டால், நமது மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல துறைகளின் பணிகள் நிறைவேற்றப்படும் விரைவு, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் மேலும் உயர வழி கோலப்பட்டிருப்பதைத் தெள்ளிதின் அறியலாம். திட்டத்தின் முதலாண்டில் நமது வளர்ச்சிப் பணிகளைப்பற்றிச் சரிவர மதிப்பீடு செய்வதற்காக, நில அடைமான வங்கிகள் வாயிலாகவும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் வாயிலாகவும் கிடைக்கும்படி செய்துள்ள தொகைகளையும் இம் மன்றம் கணக்கில் கொள்ளவேண்டும். நமது மக்களின் தேவைகள் பலப் பல. இந்தத் தேவைகளை முந்திய ஆண்டுகளைவிட மேலும் முழு அளவில் நிறைவுசெய்யும் வகையில் நான்காம் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நமது நிர்வாக அமைப்பு முற்றிலும் ஆயத்தமாய் உள்ளது. மக்களின் நலன்களைப் பெருக்கும் மாபெரும் பொறுப்பில் தோள் கொடுத்து நம்முடன் இணைந்து துணை நிற்க வேண்டிய மத்திய அரசு, நமது முயற்சிகளுக்கு ஆதரவு நல்கி போதிய நிதி உதவி அளிக்க வேண்டியது அதன் கடமையாகும். இந்த வேண்டுகோளை இம் மன்றத்தின் எல்லாப் பிரிவினரும் ஆதரித்து, அரசுக்கும், அதன் பல்வேறு துறைகளுக்கும் மாநிலப் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதில் தங்குதடையற்ற ஒத்துழைப்பை நல்குவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

37. இவை கூறி, 1969–70-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவை ஏற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் பேரவைத் தலைவருடைய அறையில் நடைபெறும். கட்சித் தலைவர்களும் அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் அக்கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவடைந்து மீண்டும் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தொடங்கும். முற் பகல் 11-52

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

[1969 மார்ச் 1 — 1969 மார்ச் 1]

இணைப்பு II.

[33-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

[1957–58 முதல் உள்ள கணக்குகள் 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்த மாநிலங்களின் சீரமைப்பு அடிப்படையில் அமைந்தது.]

தமிழ்நாடு வரவு-செலவுக் கணக்கில் வருவாயும், செலவினமும்—

(ரூபாய் லட்சத்தில்).

அ. வருவாய்.

பெருந் தலைப்புகள்.	1938–9	1960–1.	1961–2.	1962–3.	1963–4.	1964–5.	1965–6.	1966–7.	1967–8.	1968–9. திட்ட மதிப்பீடு.	1968–9. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1969–70.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
மத்திய ஆயத் தீர்வைகள்	..	6,09·04	*	*	*	*	*	*	*	*	*	*
நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்—												
வருமான வரியில் பங்கு	22·50	7,34·11	7,87·20	7,74·49	9,72·44	10,04·79	10,01·27	11,44·64	14,60·13	12,41·33	16,27·72	15,23·63
வேளாண்மை வருமான வரி	..	1,34·48	1,41·51	1,16·21	1,35·15	1,42·86	1,22·73	1,45·82	1,61·71	1,57·00	1,71·10	1,71·58
சொத்துரிமை வரி	..	29·32	10·49	37·33	38·47	59·76	58·91	35·86	1,19·57	77·77	55·38	61·17
இரயில்வேக் கட்டண வரி	..	89·77	†	†	†	†	†	†	†	†	†	†
நிலவரி—												
பாசனத்திற்குரிய பகுதி உட்பட மொத்த வருவாய்.	7,00·78	7,10·21	6,83·32	7,13·38	8,92·37	8,45·10	9,12·84	6,65·94	8,16·84	6,31·69	7,05·64	6,72·94
ஆயத் தீர்வை	3,72·23	24·68	33·09	38·30	40·71	40·46	49·02	51·29	76·06	79·23	83·34	85·84
வண்டி வரி	81·22	6,05·10	7,02·72	10,19·06	12,33·59	12,99·99	13,31·11	14,96·08	16,83·26	17,60·60	18,12·73	18,98·26
விற்பனை வரி	..	19,11·53	21,25·61	24,80·09	27,01·73	35,30 15	40,95·38	48,76·51	56,47·74	65,54·11	61,03·85	64,88·81

* "மத்திய ஆயத் தீர்வையில் மாநிலப் பங்கு" என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

† "LVI. மத்திய அரசின் உதவி மானியங்கள்" என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

அ. வருவாய்—தொடர்ச்சி.

பெருந் தலைப்புகள்.	1938-9	1960-1.	1961-2.	1962-3.	1963-4.	1964-5.	1965-6.	1966-7.	1967-8.	1968-9. திட்ட மதிப்பீடு.	1968-9. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1969-70.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
ஏனைய வரிகளும் தீர்வைகளும்	3·19	2,45·64	2,78 93	4,58·40	6,73·16	8,23·88	10,50·79	12,46·43	15,22·00	16,79·76	16,11·08	17,10·74
முத்திரைத் தாள்கள்	1,73·37	4,52·97	5,21·74	5,48·21	6,68·21	7,75·21	8,15·13	8,99·05	11,04·89	10,34·82	10,22·98	11,65·49
பத்திரப் பதிவு	32·70	1,06·90	1,13·14	1,24·16	1,51·43	1,61·90	1,80·52	2,03·00	2,29·81	2,34·93	2,45·91	2,56·91
வட்டி	19·73	7,08·82	8,29·59	11,64·84	11,21·65	12,37·46	13,76·54	15,27·45	20,63·67	25,93·85	30,65·98	23,20·00
நீதி நிர்வாகம்	15·39	60·36	72·07	85·32	87·03	94·90	1,21·80	1,23·90	1,37·91	1,25·13	1,35·87	1,42·87
சிறைச் சாலைகள்	5·98	35·59	30·92	42·87	41·19	45·65	42·35	58·94	41·31	47·67	47·30	47·36
காவல்துறை	5·66	29·51	39·37	37·06	31·39	43·27	51·00	41·38	56·44	42·37	51·73	53·99
பல்வகைத் துறைகள்	7·62	†	59·50	36·07	38·51	39·47	45·32	53·54	60·57	2,01·20	2,07·69	2,08·16
துறைமுகங்களும் கப்பல் வழிகாட்டலும்	44·67	..	..	..	..	..	..	..	..	..	..	..
கல்வி ‖	8·35	2,68·82	48·50	48·27	1,54·72	1,09·93	91·20	91·20	1,80·14	1,13·41	1,12·67	1,14·37
மருத்துவம் ‖	10·25	85·60	79·77	78·58	94·60	1,02·50	1,12·52	1,18·20	1,86·09	1,57·20	2,11·06	2,05·21
பொதுச் சுகாதாரம்	2·59	1,85·78	16·66	12·26	13·97	28·34	16·66	13·36	15·08	10·38	10·79	9·91
வேளாண்மை‖	3·12	2,48·54	1,91·75	2,26·68	2,80·74	3,30·32	3,84·40	4,51·78	6,12·85	5,88·74	4,49·25	5,97·64
கால்நடை வளர்ப்பு‖	1·02	15·18	11·49	21·51	16·95	19·06	30·65	32·34	41·50	34·86	36·63	37·63
கூட்டுறவு‖	4·18	2,03·55	37·62	36·29	35·04	36·90	59·33	64·84	59·79	46·34	46·96	47·66
தொழில்கள்‖	18·85	2,84·83	1,84·51	2,95·84	3,46·90	4,88·86	3,39·93	1,49·04	2,67·15	3,35·16	2,95·90	3,15·42
சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள்.‖	*	*	29·28	2·12	2·57	3·81	6·78	9·93	17·39	7·21	9·30	7·21
பல்வகை—சமூக மேம்பாட்டு நிறுவனங்கள்‖	..	1,98·60	(a)	27·46	23·62	30·24	33·41	36·92	82·99	2,41·41	2,75·23	3,06·84
பாசனம்—												
நேரடி வருவாய்‡	6·31	10·61	11·52	11·70	9·02	10·60	14·80	13·26	20·43	13·52	32·04	31·44
(கழிக்கவும்)—நடைமுறை செலவுகள்	—38·39	—91·56	—1,23·70	§	‡	‡	‡	‡	‡	‡	‡	‡
நிகர வருவாய்	—32·08	—80·95	—1,12·18	11·70	9·02	10·60	14·80	13·26	20·43	13·52	32·04	31·44
நேரடி வருவாய் ‡	1·99	2·24	2·52	2·93	2·10	2·88	5·13	6·18	23·60	6·79	8·17	7·87
பொதுப் பணிகள்	25·12	1,42·25	1,13·86	1,20·68	1,14·56	1,24·34	1,52·35	1,51·55	1,31·20	1,41·96	1,40·70	1,40·76
மின்சாரத் திட்ட (மொத்த) வருவாய்	42·51	..	..	..	..	..	..	..	..	..	..	..
(கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள்	—24·81	..	..	..	..	..	..	..	..	..	..	..
நிகர வருவாய்	17·70	..	..	..	..	..	..	..	..	..	..	..
சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களின் மொத்த வருவாய்கள். (b).	..	3,15·14	3,69·27	4,34·80	5,18·73	6,23·65	7,95·94	9,30·11	11,59·50	14,02·63	14,88·52	16,93·77
(கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள்	..	—2,95·03	—3,46·89	‡	‡	‡	‡	‡	‡	‡	‡	‡
நிகர வருவாய்	..	20·11	22·38	4,34·80	5,18·73	6,23·65	7·95·94	9,30·11	11,59·50	14,02·63	14,88·52	16,93·77

* "LI.A சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசீய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிலிருந்து இடைக்கும் வருவாய்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

† "பல்வகை சமூக வளர்ச்சி நிறுவனங்கள்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. (1960–61 கணக்குகளில் ரூ 38·65 லட்சம்).

‡ நிலவரி அடங்கலில்லை.

§ 1962 எப்ரல் 1ம் தேதி முதல் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

‖ இத் துறைகள் சம்பந்தப்பட்ட மேம்பாட்டு திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து இடைக்கும் உதவித் தொகை "LVI மத்திய அரசினரிடமிருந்து இடைக்கும் உதவி மானியம்" என்பதன் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

(a) "XXI. பல்வகைத் துறைகள்" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

(b) 1949–50-க்கு முன்பு, வரவுகள் "பல்வகை" என்னும் வருவாய்த் தலைப்பின் கீழ்ச் சேர்க்கப்பட்டன. நடைமுதல் செலவுகள் "பல்வகை" என்னும் செலவுத் தலைப்பின் கீழ்க் காட்டப் பட்டன.

[1969 மார்ச் 1

1969 மார்ச் 1]

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

ஆ. வருவாய்க் கணக்கில் செலவினம்—தொடர்ச்சி.

பெருந் தலைப்புகள்.	1958–9.	1960–1.	1961–2.	1962–3.	1963–4.	1964–5.	1965–6.	1966–7.	1967–8.	1968–69 திட்ட மதிப்பீடு.	1968–69 திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1969–70.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
பல்வகைத் துறைகள்	21·11	5,01·06	4,59·19	58·11	66·44	74·17	82·90	98·22	1,08·28	10,39·25	11,65·96	12,36·97
விஞ்ஞானத் துறைகள்	·95	4·50	4·83	5·32	6·64	7·83	7·27	8·19	8·56	8·27	8·98	10·36
கல்வி	2,61·98	18,38·74	23,46·48	25,76·01	27,41·46	31,73·86	37,85·13	43,85·62	53,55·50	56,27·90	58,95·24	65,38·77
மருத்துவம்	98·14	5,48·71	6,49·67	7,47·45	8,20·24	8,57·72	10,32·80	11,73·17	12,70·31	13,31·80	14,76·29	15,53·73
பொதுச் சுகாதாரம்	26·57	2,82·43	2,17·86	2,10·84	2,41·41	2,89·43	3,62·07	5,02·16	5,19·25	4,93·17	5,66·96	6,81·00
வேளாண்மை	20·62	3,44·67	4,16·74	5,41·45	6,81·90	8,42·18	10,67·97	11,80·54	13,39·92	14,24·75	12,99·96	16,07·16
கால்நடை வளர்ப்பு	12·85	1,23·01	1,48·73	1,69·32	1,89·01	2,21·95	3,30·85	3,37·08	3,55·41	3,63·37	3,61·54	4,10·89
கூட்டுறவு	13·82	2,08·76	2,27·20	2,41·27	2,29·59	2,63·39	2,84·33	2,54·39	2,65·57	3,01·85	4,03·24	3,69·05
தொழில்கள்	27·54	3,57·20	3,73·61	5,51·37	4,94·87	6,30·39	6,56·65	2,51·07	3,56·39	4,56·81	4,21·52	4,64·33
சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள்.	**	**	5,43·80	6,40·10	6,68·65	6,80·65	7,52·72	6,40·66	6,38·89	5,61·74	5,70·99	5,91·36
தொழிலாளரும் வேலை வாய்ப்பும்	†	†	35·07	36·42	1,28·94	1,50·18	1,88·56	2,04·05	1,91·67	2,30·58	1,81·86	79·98
பல்வகை—சமூக, மேம்பாட்டு நிறுவனங்கள் ..	..	..	‡	4,41·91	4,80·21	5,30·44	5,85·64	6,89·27	7,81·93	10,05·55	10,79·37	11,80·68
பாசனம்—மூலதனக் கணக்கு வைத்துள்ள வேலைகள் மீதான வட்டி.	87·59	2,36·45	2,59·97	3,95·72	4,39·38	4,67·51	5,12·46	5,66·84	6,29·78	6,29·17	7,10·57	6,92·09
பாசனம்—சாதாரண வருவாயிலிருந்து செலவு செய்யப்பட்ட ஏனைய வருவாய்ச் செலவு.	39·09	1,25·08	1,73·02	173·44	1,76·07	1,64·86	1,95·40	2,22·19	3,11·18	2,26·26	3,90·94	3,22·39
பாசனம் முதலிய வேலைகளை நிறைவேற்றுதல்.	1·25	..	..	..	..	..	..	..	..	..	..	..
பாசன, நீர்வழி, கரையுயர்த்து, வடிகால் வேலைகளுக்கான மூலதனச் செலவு.	..	..	..	..	..	..	..	..	..	·60	..	..
பொதுப் பணிகள்	1,19·70	6,93·25	8,88·86	9,23·03	10,00·34	9,60·05	11,86·63	11,35·27	11,93·38	10,47·69	12,11·38	12,97·10
பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு ..	..	..	..	..	..	..	..	4·37	7·42	13·01	33·51	51·73
சாலை, நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் ..	..	§	§	4,29·56	5,35·81	6,50·50	8,31·03	9,86·76	12,14·16	13,95·51	15,13·08	17,19·44
மின்சாரத் திட்டங்களின் மூலதனச் செலவின் பேரில் வட்டி.	18·92	..	..	..	..	..	..	..	..	..	..	..
பஞ்சத் தணிப்பு	16·04	73·73	35·19	19·53	58·38	72·09	91·37	50·00	50·00	2,22·81	66·03	87·44
ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுகால சலுகைகளும்.	97·12	1,56·08	1,91·60	2,57·89	3,56·16	3,39·48	3,40·51	3,49·69	3,00·65	3,70·72	3,88·10	4,42·26
பிரதேச, அரசியல் காரண ஓய்வூதியங்கள் ..	..	·02	·37	·33	·60	·33	·29	0·32	0·43	0·33	0·75	0·45
முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு உபகாரத் தொகைகளும் படிகளும்.	..	·73	8·03	2·48	3·73	2·37	2·34	2·15	2·59	2·37	2·26	2·26
எழுதுபொருள்—அச்சுத் துறை	27·07	1,42·62	1,38·03	1,35·42	1,65·91	1,64·21	2,02·73	1,96·99	2,15·81	2,30·15	2,44·52	2,60·08
காட்டு வளம்	40·17	77·49	84·27	91·47	1,06·15	1,26·82	1,37·47	1,47·24	1,69·59	1,83·43	2,08·86	2,09·78
பல்வகை	4·45	1,31·69	2,18·94	2,83·69	2,82·51	3,19·35	3,43·45	3,87·03	4,83·98	4,98·35	5,42·67	5,57·62
ஓய்வூதியத் தொகையை மொத்தத்தொகையாக மாற்றுதல்.	..	5·63	3·06	6·48	6·08	4·47	8·11	8·66	7·76	6·74	9·84	9·84
பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	..	..	2,14·62	2,90·75	3,94·48	4,49·24	5,33·80	5,92·94	6,46·06	6,49·27	7,23·21	7,88·54
சிறப்புச் செலவினங்கள்	..	2·95	2·18	2·34	9·03	30·98	1,07·35	1,47·22	7,09·80	*	*	*
தேசிய நெருக்கடி சம்பந்தப்பட்ட செலவு ..	..	..	..	..	..	..	3·41	2·38	0·51	0·21	0·65	..
சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டு வேலைகள்.	..	3,97·57	‖	†	‖	‖	‖	†	†	†	†	†
பெரு மொத்தம் ..	16,09·72	91,09·43	1,01,79·11	1,21,80·83	1,34,99·74	1,51,29·80	1,80,66·34	2,01,42·70	2,33,32·53	2,47,53·90	2,63,61·05	2,8537·19
வருவாய் மிகுதி (+) அல்லது பற்றுக்குறை (—).	+ 3·73	+ 93·84	—9,61·27	—3,84·08	—22·97	+2,58·47	—7,86·49	—6,87·52	+6·77	+ 73·52	+ 13,66·50	—16,70·78

* கோரிக்கை 9-ன் கீழ் "26. பல்வகை முதலியன" என்னும்தலைப்பில் காட்டப்பட்டுள்ளது.

† "47. பல்வகைத் துறைகள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

‡ "26. பல்வகைத் துறைகள்" என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

§ சென்னை மாநகர பெருந்துப் போக்குவரத்தின் நடைமுதல் செலவுகள் 1949–50 முதல் 1961–62 வரையில் வருவாயிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

‖ "37. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், தல மேம்பாட்டு வேலைகள்" என்பதன்கீழ் காட்டப்பட்டுள்ளது.

** "63-B. சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டுப் பணிகள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வருவாய்க் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

(ரூபாய் லட்சத்தில்)

பெருந் தலைப்புகள்	1938-9.	1960-1.	1961-2.	1962-3.	1963-4.	1964-5.	1965-6.	1966-7.	1967-8.	1968-9. திட்ட மதிப்பீடு.	1968-9. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1969-70.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
அ. வருவாய் தொடர்ச்சி.												
ஓய்வு ஊதியம், ஏனைய ஓய்வுகால சலுகைகள் ஆகியவை குறித்த உதவித் தொகைகளும் வசூல் தொகைகளும்.	2·88	15·30	16·39	30·40	24·62	25·76	33·20	28·75	34·10	47·42	47·16	47·89
எழுதுபொருள்-அச்சுத் துறை	3·96	22·01	39·60	42·06	43·45	54·70	53·79	60·78	58·59	59·49	59·49	60·34
காட்டுவளம்*	45·63	1,99·35	2,52·28	2,22·86	2,59·03	3,07·62	2,80·78	3,18·91	3,38·65	2,90·14	3,22·24	3,25·24
பல்வகை	14·58	§ 5,93·03	99·80	1,35·04	86·35	1,29·07	1,07·91	1,75·17	1,00·14	1,29·39	1,18·33	1,06·07
மத்திய ஆயத் தீர்வையில் மாநிலத்தின் பங்கு ..	†	†	6,55·49	8,78·76	9,40·43	8,80·44	10,06·18	17,55·40	17,79·21	20,48·26	21,94·00	23,12·43
மத்திய அரசினரின் உதவி மானியங்கள் ..	..	8·36	10,66·80	14,85·85	16,70·30	18,97·35	23,69·83	23,10·00	28,76·04	26,70·92	48,99·84	31,12·16
மத்திய, மாநில, யூனியன் நேரடி ஆட்சிப் பகுதி அரசாங்கங்களிடையே பல்வகைச் சரிக்கட்டுதல்கள்.	·27	1·40	1·05	1·03	1·04	·85	·90	0·87	1·29	1·46	2·39	2·39
வாணிக, ஏனைய நிறுவனங்களிடமிருந்து பங்கு வீதங்கள் முதலியன.	..	..	(d)	4·77	10·07	10·96	17·31	19·97	11·36	19·26	18·58	16·41
சிறப்பு வருவாய்கள்	..	1·59	1·07	1·07	0·89	25·21	1,11·80	1,28·20	1,57·30	†	†	†
சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல மேம்பாட்டு வேலைகள் ஆகியவற்றிலிருந்து வருவாய்கள்		269·65	‡	‡	‡	‡	‡					
சிவில் பாதுகாப்பு	.. ..	..	..	..	..	..	·34	..	..	..	..	..
கூடுதல் நிதி திரட்டுதல்	.. ..	..	..	..	..	..	..	..	..	..	..	5,60·00
பெரு மொத்தம் ..	16,13·45	92,03·27	92,17·84	17,96·75	34,76·73	1,53,88·27	1,72,79·85	1,94,55·18	2,33,39·30	2,48,27·42	2,77,27·55	2,68,66·41
ஆ. வருவாய்க் கணக்கில் செலவினம்.												
நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமான வரிகள்.	..	11·21	11·60	12·07	12·77	13·44	14·69	14·43	11·10	11·36	14·52	17·09
நில வரி	25·36	1,75·05	1,06·70	64·31	64·95	70·97	97·90	1,19·85	1,31·10	1,48·91	1,51·23	1,60·29
ஆயத் தீர்வைகள்	32·18	5·41	**	**	**	0·04	0·06	0·06	0·06	0·06	1·62	1·64
மோட்டார் வண்டிச் சட்டங்கள் குறித்த செலவு—												
உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை.	72·77	54·26	††	††	††	††	††	†	†	†	†	†
ஏனைய துறைச் செலவு	2·29	12·90	15·15	14·15	17·51	17·96	29·02	33·24	31·57	31·64	33·93	36·71
விற்பனை வரி	..	56·36	65·39	71·08	76·66	93·50	1,12·09	1,33·06	1,33·06	1,33·79	1,53·12	1,61·91
ஏனைய வரிகளும் தீர்வைகளும்—												
உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை.	...	1,66·72	††	††	††	††	††	†	†	†	†	†
ஏனைய துறைச் செலவு	·64	2·03	2·23	4·03	5·64	8·53	11·07	15·60	21·34	24·99	17·98	15·94
முத்திரைத்தாள்	4·72	27·12	27·99	24·33	31·22	31·62	25·20	19·31	26·44	20·10	29·68	31·01
பத்திரப் பதிவு	29·13	43·73	45·88	48·34	50·06	55·50	64·80	70·36	70·58	81·74	94·10	98·14
கடன்கள், ஏனைய பொறுப்புகளின்மீது வட்டி ..	58·54	6,96·03	7,81·81	9,03·76	11,28·86	12,91·27	15,94·13	19,86·53	22,83·55	25,11·69	26,40·34	29,55·72
(கழிக்கவும்)—வாணிகத் துறையினருக்கு மாற்றப்பட்ட வட்டி.	— 1,07·54	— 2,68·32	— 2,95·26	aa	aa	aa	aa	aa	aa	aa	aa	aa
சாதாரண வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட நிகரத் தொகை.	— 49·00	4,27·71	4,86·55	9,03·76	11,28·86	12,91·27	15,94·13	19,86·53	22,83·55	25,11·69	26,40·34	29,55·72
கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புத் தொகை ஒதுக்கம்.	5·13	3,84·25	99·72	1,06·57	1,23·90	1,25·96	1,43·47	6,88·86	7,72·40	8,24·23	8,59·28	8,67·20
மாநிலச் சட்ட மன்றமும், தேர்தல்களும் ..	‖	‖ }	7,20·59 }	26·10	26·10	27·45	39·66	73·95	61·18	25·26	28·55	27·03
பொது நிர்வாகம்	2,76·70	5,94·15		6,75·72	6,95·46	8,20·72	9,59·71	10,11·88	10,38·72	10,44·71	11,55·75	11,51·86
நீதி நிர்வாகம்	90·63	1,47·92	1,57·93	1,62·85	1,67·37	1,73·27	1,98·83	2,18·83	2,40·90	2,49·16	2,67·77	2,78·56
சிறைச்சாலைகள்	23·22	1,41·03	1,37·70	1,52·71	1,45·37	1,72·03	1,93·39	1,95·17	1,74·81	1,71·43	1,77·15	1,82·66
காவல் துறை	1,60·96	6,07·21	6,60·36	6,83·11	6,75·81	7,53·09	9,46·10	10,49·46	11,37·94	11,53·17	12,97·75	13,86·13

* இத் துறைகளுக்குச் சம்பந்தப்படுகிற மேம்பாட்டு திட்டங்களுக்காக மத்திய அரசினரிடமிருந்து கிடைக்கிற உதவித் தொகை " மத்திய அரசினர் உதவி மானியம் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

† " மத்திய ஆயத் தீர்வைகள் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

‡ " XXXI—சமுதாய வளர்ச்சித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், தல மேம்பாட்டு வேலைகள் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

§ கம்பெனி வரி மாற்றம் காரணமாக வருமான வரியில் பங்கு குறைவதனைச் சரிக்கட்ட மத்திய அரசினரிடமிருந்து பெற்ற மானியத்தின்பொருட்டு ரூ. 3,03·83 லட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

‖ " பொது நிர்வாகம் " என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

** " விற்பனை வரி " என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

†† " ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் " என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

aa 1962 ஏப்ரல் 1-ம் தேதி முதல் " XVI வட்டி " என்பதன்கீழ் வரவுகளாகக் காட்டப்படுகிறது.

(d) " XXIX தொழில்கள் " என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

† " XXI—பல்வகைத்துறைகள் " என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 1

1969 மார்ச் 1]

இணைப்பு II.

(1953-54 முடிய உள்ள கணக்கில் ஆந்திரப் பகுதிகளின் கணக்கும் சேர்ந்திருக்கிறது. 1956-57 முதல் உள்ள கணக்கு 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் செயலுக்கு வந்த மாநிலங்களின் சீரமைப்பைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது.)

மூலதனச் செலவின் விவரம்.

திட்டத்தின் விவரம்.	உத்தேசச் செலவு.	1946-7— 1961-2.	1962-3.	1963-4.	1964-5.	1965-6.	1966-7.	1961-2.	மொத்தம் 1964-7. 1966-7	1968-9. திட்ட மதிப்பீடு.	1968-9. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1969-70.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
		(ரூபாய் லட்சத்தில்).										
அ. பாசன, நீர்வழி முதலிய திட்டங்கள்.												
கீழ் பவானித் திட்டம்	9,96·00	10,35·45	—·61	2·69	—2·39	..	1·79	—8·07	10,28·86	·63	1·91	—2·11
மேட்டூர் கால்வாய்த் திட்டம்	2,67·00	1,82·26	3,99	·22	·03	·03	—·01	0·04	1,86·59	1·77	0·32	1·68
மணிமுத்தாறு திட்டம்	3,98·00	5,22·07	—2·27	—·79	—·87	1·66	—·14	—0·05	5,19·89	..	0·01	—0·13
ஆரணியாறு திட்டம்	1,04·00	99·61	·01	—·01	·01	..	..	..	99·62	..	..	..
மங்களம் திட்டம்	88·65	59·65	..	..	..	..	..	..	59·65	—·02	..	..
அமராவதி திட்டம்	2,97·00	3,25·89	—1·50	·79	—·55	..	·11	—0·07	3,24·67	·02	0·02	0·02
வைகை நீர்த்தேக்கத் திட்டம்	3,00·00	1,83·67	5·73	8·86	5·21	·42	·94	—0·27	2,04·56	·09	0·08	—0·10
சாத்தனூர் திட்டம்	2,89·00	2,46·31	10·81	14·03	6·05	·17	·20	2·38	2,88·95	..	0·02	..
கிருஷ்ணகிரி திட்டம்	1,84·00	1,59·18	—·19	—1·47	—·43	3·68	·20	—0·11	1,60·86	—·31	0·08	2·97
கட்டளை உயர்மட்ட கால்வாய்த் திட்டம்	1,56·65	2,25·10	1·74	1·48	·34	—2·83	·86	0·13	2,26·82	·10	—0·54	—0·15
புல்லம்பாடி கால்வாய்த் திட்டம்	1,42·43	1,97·92	4·12	2,33	1·17	3·60	1·56	2·07	2,12·77	0·40	1·06	1·05
வீடூர்த் திட்டம்	61·37	56·37	·91	—1·32	0·70	·47	·69	1·03	58·85	·43	0·39	·90
மீனக் கரை நீர்த் தேக்கத் திட்டம்	49·56	0·47	..	..	..	..	..	..	0·47	..	..	..
நெய்யாறு 2-ம் நிலை	..	80·43	23·29	6·81	—1·35	0·08	0·27	0·25	1,09·62	..	2·15	0·36
பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம்	48,00.00	8,39·56	4,42·79	5,77·31	6,32·41	5,55·61	3,12·84	2,54·89	36·15·41	2,06·34	2,36·00	2,50·00
சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்ட 2-ம் நிலை	..	5·11	..	..	..	3·37	0·29	0·89	9·66	1·63	2·17	0·27
பாலாறு அணைக்கட்டுத் திட்ட மேம்பாடுகள்	..	5·34	14·52	14·33	11·54	5,90	7·37	2·22	61·22	0·28	0·98	0·16
ராம நதித் திட்டம்	..	..	..	..	..	..	·10	9·47	9·57	10·00	5·07	30·00
சித்தாறு-பட்டணம்கால்	..	..	..	.75	73·95	1,20·17	1,05·18	90·36	399·41	95·00	85·00	80·00
வைகைக் கால்வாய்களுக்கு மேம்பாடுகள்	..	..	·01	..	..	..	..	..	0·01	1·00	5·64	10·00
தஞ்சாவூர் கால்வாய்களுக்கு மேம்பாடுகள்	..	..	..	—	..	..	..	1·57	1·57	·72	10·00	20·00
கோமுகி நதித் திட்டம்	..	..	..	26·02	44·79	41·25	—·46	1·30	1,12·80	·50	—1·90	..
மஞ்சளாறு	..	..	..	4·20	40·20	34·82	26·14	4·17	1,10·23	—1·49	—0·58	0·11
மணிமுக்தா நதி	..	..	..	—	..	..	20·61	37·28	57·79	34·00	34·34	18·00
கடனா நீர்த் தேக்கம்	..	..	..	—	..	..	·10	14·38	14·48	10·00	14·36	30·00
ஏரி மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகள்.	..	11,44·27	3,18·92	2,73·58	2,22·74	2,60·47	3,25·86	3,03·97	27,49·81	2,54·18	2,41·85*	2,24·91
ஏனைய பாசனத் திட்டங்கள் (உரிய பயனளிப்பவையும், உரிய பயனளிக்காதவையும்).	*	4,64·11	3·24	24·98	52·03	38·22	37·47	10·14	6,29·89	26·35	48·77	45·38
ஆந்திரா, மைசூர் மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட பாசனத் திட்டங்கள்.	..	18,73·97	..	..	..	..	..	..	18,73·97	..	..	..
பணியாளர்களுக்கும், இயந்திரச் சாதனங்களுக்கும் பிடித்த வீதாசாரச் செலவு.	..	45·65	4·06	6·68	4·03	3·73	5·42	6·29	75·86	2·73	6·10	2·01
மொத்தம் ..	86,75·66	77,52·62	7,38·34	9,62·18	10,89·61	10,79·66	8,47·39	734·16	1,32,03·96	6,44·35	6,93·33	7,15·33

*முடிந்துவிட்ட, நடந்தேறி வருகின்ற பல வேலைகள் அடங்குகின்றன. எனவே தோராயச் செலவு கொடுக்கப்படவில்லை.

[1969 மார்ச் 1 / 1969 மார்ச் 1]

மூலதனச் செலவின் விவரம்—தொடர்ச்சி

(ரூபாய் லட்சத்தில்)

ஆ. மின்சாரத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

திட்டத்தின் விவரம். (1)	உத்தேசச் செலவு. (2)	1946-7—1961-2. (3)	1962-3. (4)	1963-4. (5)
மோயாறு நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..
பைகாரா நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..
மேட்டூர் நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..
பாபநாசம் நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..
பெரியாறு நீர் மின்சாரத் திட்டம்	10,48·00	..	..	..
குந்தா நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..
சென்னை அனல் மின்சாரத் திட்டம்	..	..	..	..
ஏனைய சிறிய திட்டங்கள்	..	..	..	..
ஆந்திரா, மைசூர் மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட திட்டங்கள்.	..	..	..	..
உள்ளாட்சி நிறுவனங்கள், தனியார்க் கம்பெனிகள் இவற்றின் மின்சார நிறுவனங்களை பெறுவதற்கு இழப்பீடாகக் கொடுக்க மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை.	..	..	..	..
மொத்தம்	10,48·00	..	..	..

திட்டத்தின் விவரம். (1)	1964-5. (6)	1965-6. (7)	1966-7. (8)	1967-8. (9)	மொத்தம் 1946-7—1967-8. (10)	1968-9. திட்ட மதிப்பீடு. (11)	1968-9. திருத்த மதிப்பீடு. (12)	திட்ட மதிப்பீடு. 1969-70. (13)
மோயாறு நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
பைகாரா நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
மேட்டூர் நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
பாபநாசம் நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
பெரியாறு நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
குந்தா நீர் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
சென்னை அனல் மின்சாரத் திட்டம்	..	..	..	..	..	..	..	..
ஏனைய சிறிய திட்டங்கள்	..	..	..	..	..	..	..	..
ஆந்திரா, மைசூர் மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட திட்டங்கள்.	..	..	..	..	..	..	..	..
மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எம். ராஜா அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. விற்பனை வரி கைத்தறித் தொழிலுக்கு இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் உத்தேசம் அல்ல. எல்லாவற்றிற்குமே வரி இல்லாமல் இருக்கக்கூடிய அரசாங்கம் வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கொள்கை. ஆனால் அந்தக் காரியத்திற்கு மத்தியில் சில தவிர்க்க முடியாத விதி, கடமைகளை அரசு மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த அம்சத்தின் அடிப்படையில்தான் அது பரிசீலிக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : May I know what the total collection made is by way of sales tax on handloom goods sales in our State. If there is waiver of the tax, would it affect our Exchequer very badly?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want notice, Sir.

Crop failure in Tiruchirappalli district

*133 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any report from the Collector of Tiruchirappalli district relating to crop failure in that district this year (1968); and

(*b*) if so, whether a copy of the report will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. ராஜ குமார் விஜய ரகுநாத தொண்டைமான் : ஒரு மாதத்திற்கு முன்பு, புதுக்கோட்டை டிவிஷனிலுள்ள விவசாயிகள் பல மனுக்களைக் கலெக்டரிடம் கொடுத்தார்கள். சாவியாய்ப் போன இடங்களுக்கு வரி வஜா செய்ய வேண்டும், கடன் தவணையைத் தள்ளிப் போடவேண்டும், கொள் முதலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார்கள். அதைப் பற்றிக் கலெக்டர், அரசாங்கத்திற்குத் தகவல் ஏதேனும் தெரிவித்தாரா, அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றிய விவரம் தற்போது என் வசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே. திருச்சியைப் போலவே இந்த ஆண்டு தென்னார்க்காடு மாவட்டத்திலும் சில பகுதிகள் வறண்டு போயிருக்கின்றன. குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனம், செஞ்சி போன்ற பகுதிகள் பொதுவாகவே வறண்டு போய்விட்டன என்றாலும், தனித் தனி கிராமங்களாக எடுத்து, தவறான புள்ளி விவரங்களின் அடிப்படையில் சில கிராமங்களில் விளைச்சல் இருந்தது, சில இடங்

கள் வறண்டு போகவில்லை என்ற அளவில் கீழ் மட்டத்தில் இருக்கும் ரெவின்யூ அதிகாரிகள் அறிக்கை தயாரித்து, அந்தக் கிராமங்களுக்கு வரி வஜா கிடைக்காத நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா ? தெரிந்திருந்தால் அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கூற்று அரசுக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய கூற்றில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது, அதிகாரிகளுடைய கூற்றில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதைக் குறித்து, இரண்டிலுமுள்ள உண்மையின் அடிப்படையை நாம் பரிசீலனை செய்யலாம். அப்படி ஏதாவது தவறுகள் இருக்குமானால், அவற்றை அரசாங்கத்தின் கவனத்துக்குத் தாராளமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவரலாம்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில், ஷி.ஒ. 29 என்ற நெல் வகையைக் காலம் தாழ்த்திப் பயிரிடலாம் என்று விவசாயிகளுக்கு அரசு ஆலோசனை அளித்ததன் விளைவாகப் பயிரிடப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலமும், சாவியாகப் போய் அதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளது. எனவே, அந்த நெல் வகையைப் பயிரிட்டு நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடோ அல்லது கொள்முதலிலிருந்து விலக்கோ அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைகளிலெல்லாம் மாவட்டக் கலெக்டர் அவர்கள் கீழ் இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரி கொடுக்கின்ற அறிக்கைகளின் அடிப்படையில், வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரையோடு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அரசின் வேண்டுகோளுக்கு ஏற்பவும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடும், ஒரு போக நஞ்சை நிலங்களை, இரு போக நஞ்சை நிலங்களாக மாற்றிய விவசாயிகளைப் பொறுத்த வரையில், அப்படி இரு போகமாக மாற்றப்பட்ட நஞ்சை நிலத்திற்கு அடிப்படை நில வரியை நீக்கி, அவர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ? குறைந்தபட்சம் தஞ்சை மாவட்டத்திலாவது இதைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படை நில வரி (பேஸிக் லாண்டு டாக்ஸ்) பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலே புஞ்சை நில வரியை மட்டும்தான் நாம் நீக்கியிருக்கிறோம். நஞ்சைக்கு நில வரியை நீக்குவது என்பது கொள்கை பற்றிய பிரச்னையாகும். அதிலே இருக்கும் சட்ட சங்கடங்களை இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இரு போகமாகப் பயிர் செய்யப்படுகிற நிலங்களுக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, இரண்டாவது போகத்திற்குக் கொடுக்கும் பாசனத்திற்கான நீர்த் தீர்வை (வாட்டர் செஸ்) ரத்து செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. க. மு. ராசகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி நிலைமை ஏற்பட்டு பெரும் பஞ்சமாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் அரசுக்குத் தர வேண்டிய கடன்களை ஓராண்டுக்கு ஒத்தி வைத்தும், நில வரியை ரத்து செய்தும், உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அத்தனையையும்—சாத்தியமானவைகளை—மாவட்டக் கலெக்டருடன் கலந்துகொண்டு, வருவாய்த்துறை வாரியத்தின் பரிந்துரையோடு ரெவின்யூ துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கும்பகோணம் நகராட்சிக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாயில் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய் திருப்பித் தரப்பட்டு விட்டது. மீதி 30,000 ரூபாயைப் பொறுத்தவரை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. கும்பகோணம் நகராட்சித் தலைவரும், இந்த மன்ற உறுப்பினருமான அவர்கள் கேட்டுக் கொண்ட அந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : ஏற்படுத்தப்பட்ட அந்த வட்டச் சாலைகளைத் தொடர்ந்து பராமரிக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிக் குறிப்பாகத் தகவல் இல்லை. ஊராட்சி மன்ற ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

* 143 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any representation has been received in 1968 from the Municipal Council, Kumbakonam for conducting a raffle to meet Mahamabam expenditure; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : அனைத்திந்தியாவிலும் இருந்து மக்கள் லட்சக் கணக்கில் குழுமிய காரணத்தால் கும்பகோணம் நகராட்சிக்குப் பெரும் செலவு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் செலவை ஈடுகட்ட மானியமாவது கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே சொன்னேன். தேவையான, நேரத்தில் தேவையான மானியத்தை நிதி நிலைக்குத் தக்கபடி அரசாங்கம் கொடுத்திருப்பதை கும்பகோணம் நகராட்சித் தலைவர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அந்தச் செலவை ஈடுகட்டுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறதா ? அரசாங்கம் என்ன தாக்கீது அனுப்பியது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி கும்பகோணம் நகராட்சியைப் பற்றியது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவிற்காக செலவான தொகை 5 லட்சம் ரூபாயை சர்க்கார் கொடுத்ததா அல்லது அந்த மாவட்ட பஞ்சாயத்து யூனியன்கள் வசூல் செய்ததா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஐந்து லட்சம் ரூபாய் மாவட்டக் கழகத்தில் இருந்து கணிக்கப்பட்ட இருப்பு நிதியிலிருந்து செலவு செய்வதற்கான அனுமதியை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அரசாங்கம் ஏற்கனவே அனுப்பியது.

திரு. நா. காசிராமன் : கும்பகோணம் நகராட்சியால் பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்று கேட்கப்பட்டது மகாமகம் விழாவிற்காக செலவான தொகையை ஈடுகட்டும் வகையில் வருவாயைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்காகத்தான் கேட்கப்பட்டது. ஆனால் அந்தச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.

கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம்

* 144 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குளித்தலை வட்டம் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த 6—5—1967 முதல் 15—2—1968-ஆம் தேதி வரை எத்தனை தீர்மானங்கள் போடப்பட்டன ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டவை எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 155 தீர்மானங்கள் போடப்பட்டன.

(இ) 107 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : எஞ்சியுள்ள தீர்மானங்களின்மீதும் விரைந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு துரிதமாகச் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். மீதியுள்ள 48 தீர்மானங்கள் பல்வேறு வடிவத்தில் நிறைவேற்றப்படும் தருவாயில் உள்ளன.

திரு. பெ. மலைச்சாமி : சில ஊராட்சி ஒன்றியங்களில் தீர்மானம் நிறைவேற்றிப் பல மாதங்கள் ஆகியும் பணிகள் செவ்வனே நடைபெறவில்லை. தீர்மானங்களை நிறைவேற்றிய நாளிலிருந்து குறிப்பிட்ட நாள் வைத்து அந்த நாளைக்குள் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தீர்மானங்கள் பலவேறு ரூபத்தில் நிறைவேற்றப்படுகின்றன. பலவேறு வகையான நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாக ஒரு தேதிக்குள் முடிக்கவேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு ஒத்து வராது.

திரு. ஆ. கருப்பையா : ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் போடுவது போல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் தீர்மானங்கள் போட்டு அனுப்புகின்றன. அவ்வாறு தீர்மானங்கள் போட்டு அனுப்பி பல ஆண்டு காலமானாலும் நவடிக்கை எடுக்கப்படாமலே இருக்கின்றது. இனிமேலாவது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையை அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு ஆலோசனைக் குழுதான். அது பல தீர்மானங்களைப் போட்டு அனுப்புகிறது. ஆனால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாத நிலையிலே கோடிக்கணக்கான ரூபாய் செலவாகக் கூடிய தீர்மானங்களாகப் போகும் நிலையில் அரசு அதை நிறைவேற்ற முடியவில்லை. அதன் காரணமாகத்தான் இரண்டு மூன்று ஆண்டு காலமானாலும் முடிவு எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அரசியல் காரணத்திற்காக அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத நிலை இருக்கிறது. அம்மாதிரிச் சிக்கல்கள் எழும்போது அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அப்படிப்பட்ட சிலபல புகார்களும் வருகின்றன. அரசாங்கம் அவ்வப்போது பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் சொன்னவிவரப்படி சென்ற ஆண்டு பெப்ரவரி வரையில் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மூன்றில் ஒரு பங்கு தீர்மானங்களுக்கு

[1969 மார்ச் 3

இன்னும் வழிவகை காணப்படவில்லை என்ற விவரத்தையொட்டி முன்பு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் அதிக அதிகாரங்களைக் கொடுத்து, இதற்கு வேண்டிய கண்காணிப்புக் கூட்டங்களை மூன்று மாதங் களுக்கு ஒரு முறையாவது நடத்தி அந்தத் தீர்மானங்களுக்கு வேண்டிய வழிவகைகள் காண்பதற்காக, அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தீர்மானங்கள் பல்வேறு ரூபங் களில் நிறைவேற்றப்படுகின்றன. சில தீர்மானங்களின்மீது நடை முறையில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். முடிவு பெற்றுவி விட்டனவா என்று கேட்டிருந்தார்கள், ஆகவே முடிக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிச் சொல்லியாகிவிட்டது. மற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கும். எந்தத் தீர்மானமாவது இப்போது செயல்படுத்தப் படாமலிருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அவர் நேர் முக உதவியாளருக்கும் ஊராட்சி ஒன்றிய இயக்குநர் அவர் களுக்கும் அவ்வப்போது தணிக்கை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வயலூர் பஞ்சாயத்துக்குச் சாலை வசதி

* 145 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குளித்தலை வட்டம், வயலூர் பஞ்சாயத்தில் அடங்கிய கணக்கம் பட்டி, அரப்புளிப்பட்டி போன்ற கிராமங்களுக்குச் சாலை வசதியே இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கொண்டுவரப்பட்டது ?

(உ) இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ), (இ) & (உ) குளித்தலை வட்டம், வயலூர் ஊராட்சியில் உள்ள கணக்கம்பட்டி, அரப்புளிப்பட்டி கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லை என்பது அரசினர் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

கணக்கம்பட்டிக்கும் அரப்புளிப்பட்டிக்கும் நடப்பு ஆண்டில் ஒரு புது சாலை அமைக்க கிருஷ்ணராஜபுரம் ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : கணக்கம்பட்டி, அரப்புளிப்பட்டி பகுதிகளுக்குச் சாலை வசதியே இல்லை என்பதை நானும் நேரே அறிந்திருக் கிறேன். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களுக்கும் மனு மூலம் என்னுடைய என்டார்ஸ்மெண்ட் போட்டுக் கொடுக்கபட்டிருக் கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தீர்மானமும் தந்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்குச் சுற்றுப் பயணம் வந்திருந்தபோது அந்தப் பகுதி மக்களும் மனுவும் கொடுத்திருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள். அங்கு நடந்ததைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : அது இதுவரை அரசுக்கு ஏன் வரவில்லை ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வில்லை. அதனால் வரவில்லை. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாகத்தான் அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டு இந்த ஆண்டு அந்தச் சாலையை அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் திருப்தி யடையலாம்.

1969 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா கணக்கம்பட்டி அரப்புளிப் பட்டிக் கிராமங்களுக்குள்ள சாலை வசதிபற்றியது. ஆகவே அதுபற்றி திரு. ராமச்சந்திர துரை அவர்கள் வினாக்கேட்கலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சாலை கிணறுகள் போன்ற வசதிகள் செய்துகொடுக்க 1966-67-ல் கொடுக்கப் பட்ட தொகை எவ்வளவு ? தற்சமயம் கொடுக்கப்பட்டிருப்பது எவ்வளவு ? அதிகமாக இருக்கிறதா அல்லது குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நிதி நிலை அறிக்கைமீது, இம்மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்கும்போது இதுபற்றிய விவரங் கள் கிடைக்கலாம்.

தக்கோலம் நகரப் பஞ்சாயத்து

* 146 வினா : **திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அரக்கோணம் தாலூக்கா தக்கோலம் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் எக்சிகியூடிவ் ஆபீசரை அடித்ததுபற்றி 19—10—1967-ல் அத் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினர் மாவட்டக் கலெக்டரிடம் கொடுத்த புகார் மனு விசாரணை செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அத்தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினரிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 19—10—1967 தேதி யுள்ள மனு யாதும் கிடைக்கப்பெறவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Flush-out latrines in jails

* 147 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal for the construction of flush-out latrines for the convenience of prisoners in jails in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளிலும், துணைச் சிறைச் சாலைகளிலும் ஐந்தாண்டுகளுக்கான படிப்படியான திட்டத்தில் நீரடிக் கழிப்பிடங்கள் அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டுக்கும் ரூ. 3 லட்சம் ஒதுக்கீட்டிற்காகச் சிறைத் துறைத் தலைவர் அனுப்பிய செயற்குறிப்பைத் தமிழ் நாட்டு அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : சிறைக் கைதிகளாக இருந்தாலும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற முற்போக்குக் கருத்து இந்த அரசாங்கத்திற்கு உண்டு என நான் கருது கிறேன். ஆகவே, மேலும் என்னென்ன வசதிகள் செய்யத் திட்டமிடப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சிறை கைதிகளுக்கு எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க அரசு முயற்சிக்கிறது என்பதை ஒப்புக் கொண்டதற்கு என் நன்றி. என்ன வசதிகள் தேவையோ அவற்றைச் செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. இது ப்ளஷ் அவுட் லெட்ரீன் பற்றியது. இதற்கு மூன்று லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவு செய்ய உத்தேசித்து அதற்காகக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that even in the Central Jail at Madras, there is no flush-out system for 'C' Class prisoners?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சிறைச்சாலைகளிலும் இத்திட்டத்தை அமலாக்க ஒரு ஏற்பாடு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது இந்த ஆண்டுகூட ரூ. 2,69,000-க்கு ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. பி. வேலுசாமி: ஐயா, காலம் சென்ற முதல் அமைச்சர் அவர்கள் காலமானதையொட்டி அந்தத் தேதியில் சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு தூக்குத் தண்டனையிலிருந்து விதி விலக்கு அளிக்க உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. என். வரதராஜன் : எல்லாத் தரப்பில் இருப்பவர்களும் கிட்டத் தட்ட தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளை அறிந்தவர்கள்தான். சிறையிலுள்ள "ஸி" வகுப்புக் கைதிகள் படும் துயரங்கள் நமக்குத் தெரியும். பக்கத்து மாநிலங்களில் உழைப்பைக் கொடுக்கும்படியான கைதிகளுக்கு நான்கணா, ஆறணா என்று கூலி நிர்ணயம்செய்து அந்தக் கூலிக்கு உகந்தளவிற்கு வேண்டிய பொருள்களை உள்ளேயே வாங்கிக் கொள்ள வசதிசெய்து சில சீர்திருத்தங்கள் கேரளா போன்ற மற்ற மாநிலங்களில் நடைபெற்றிருக்கின்றன. அதேபோன்ற குறைந்தபட்சச் சீர்திருத்தங்களையா வது இங்கு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது லட்டீன் பற்றிய கேள்வி. இருந்தாலும் சொல்கிறேன். அதுபோன்று அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : சப்–ஜெயிலில் உள்ள அறைகள் சில நேரங்களில் கக்கூஸாக மாற்றப்படுகிற நிலையில் அங்கு சட்டிகள் மற்றவை எல்லாம் வைத்திருக்கிறார்கள். வெளியே செல்ல வேண்டிய அவசியம் கைதிகளுக்கு ஏற்படும்போது அங்கு பாதுகாப்பிற்காக இருக்கிற காவல் துறையினர் இவர்களை கக்கூஸுக்கு அழைத்துச் செல்கிற ஏற்பாட்டைச் செய்து அறையை அறையாக வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஒரு ஆலோசனைதான்.

ஈரோடு பகுதியில் தொழிலாளர் மருத்துவமனை.

*148 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு பகுதியில் E. S. I. திட்டத்தின்கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் திருப்பூர், உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி, ஈரோடு, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்

இந்த இடங்களில் எல்லாம் மருத்துவ மனைகள் கட்ட வேண்டும் என்று நான பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு இல்லை என்ற முறையில் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட பொதுவாக இப்படி ஈ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் உள்ள இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட அரசாங்கம் அதிக முயற்சி எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நம் முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கோவையில் ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி திறப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது கால தாமதமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவில் ஈ.எஸ்.ஐ. ஆஸ் பத்திரிகள், டிஸ்பென்சரிகள் திறக்கப்படுவதற்கான துரித நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனைதான் கட்ட அரசாங்கத்தினிடம் திட்டம் இல்லை என்று சொன்னேன். ஏற்கெனவே உள்ள மருத்துவ மனையில் ஈ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோட்டில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் கட்ட ஒப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் வேலைகள் துவங்கபடடும். கோவை பற்றிக் குறிப்பிட்டார்கள். அது விரைவில் தீர்க்கப்படும்.

திரு. ஏ. முனியாண்டி : மதுரையில் தண்டிக்கப்படுகிற கைதிகளை மதுரையில் மத்தியச் சிறைச்சாலை இருந்தும்கூட திருச்சிக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். அவர்களை மதுரை மத்தியச் சிறைச்சாலையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அடுத்த கேள்விக்குப் போய் விட்டோம்.

திரு. நா. காசிராமன் : ஈரோடு பகுதியில் ஈ. எஸ். ஐ. திட் டத்தின் கீழ் மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஈ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் ஈரோடு பகுதியில் எவ்வளவு தொழிலாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள் ? அவர் களுக்கு இந்த மருத்துவ மனை கட்டும் திட்டத்தை விரைவில் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதற்குத் திட்டம் இல்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். 16 படுக்கை கள் கொண்ட ஒரு வார்ட் கட்ட திட்டமிருக்கிறது. ஒப்பம் அளிக்கப் பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

தழை வெட்டிக்கொள்ள அனுமதி

* 34 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் பகுதியிலுள்ள காடுகளில் தழை வெட்டிக் கொள்ள விவசாயிகளுக்குத் கொடுத்துவந்த அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அங்கு தழைகள் வெட்டுவதற்கு இன்றும் தடை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஏறக்குறைய இரண் டாண்டு காலத்தில் காட்டில் விவசாயிகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்

பட்டு வந்த பெர்மிட் முறைபோல் இப்போது கொடுக்கப்படுவதில்லை என்றும் அதுகுறித்து ஏதோ உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து உடனடியாக விசாரித்து இதற்காக ஆகவேண்டியதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைச்சுமை ஒன்றுக்கு பத்து காசு என்றும், வண்டிக்கு இரண்டு ரூபாய் என்றும் கட்டணம் விதித்து இப்போது பணம் வசூலித்துத் தழை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. அந்த முறை தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இத்திட்டம் 1969 அக்டோபர் வரையில் செயலில் இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் தழை வெட்டுவதற்கு அனுமதிப்பதன் காரணமாக வளர்கின்ற வனத்துறை மரங்கள் அழிக்கப்படுகின்றன என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ? வனத்துறை மரங்கள் அழிவதற்கு தழை வெட்டுவதற்கு அனுமதிப்பதுதான் காரணமாக இருப்பதால் அரசாங்கம் தடை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோலச் சில இடங்களில் அத்தகைய தவறு நடப்பது உண்மைதான். அதைக் கண்காணித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தத் தழையை எடுத்துச் செல்லும் நேரத்தில் சோதனை செய்துகூட அனுமதிக்கவேண்டிய நிலை இருக்கிறது. காட்டிலாகா அதிகாரிகள் கடுமையாக இருக்கிறார்கள் என்று விவசாயிகளிடமிருந்து தகவல் இருக்கிறது. உண்மையிருந்தால் விசாரிக்க வேண்டியிருக்கிறது. மரங்கள் வெட்டப்படாது பாதுகாக்கச் வேண்டிய பொறுப்பு காட்டிலாகாவிற்கு இருக்கிறது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, இருக்கின்ற மரங்களிலே உள்ள தழைகளை அகற்றும்போது இடையிலே 3 மாதம், 6 மாதம் ஆன பசுந்தாள் உரத்தை உருவாக்கக்கூடிய விதைகள் இருக்கின்றன. அதைக் காட்டிலாகா மூலம் பயிரிட்டு விவசாயிகளுக்குக் கொடுக்க காட்டிலாகா முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இடைவெளியிலேயுள்ள புல் தரையிலே உற்பத்தியாகக் கூடியவற்றை விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய நிலை உருவாகிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, தழைகள் வெட்டுவதற்கே சில இடங்களிலே அனுமதி இல்லாதபோது, திருச்சி மாவட்டத்தில் சில காடுகளில் விலை உயர்ந்த மரங்களைத் தவறான முறையில் அதிகாரிகள் விற்பனை செய்தார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது தழையைப்பற்றிய கேள்வி. மரங்களை வெட்டினார்கள் என்றால், யார், எந்த இடத்தில் வெட்டினார்கள் என்று தெரிவித்தால் அதைப்பற்றி விசாரிக்க உதவியாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, தழையை மரத்திலிருந்து வெட்டுவதைவிட, இலையுதிர்காலத்தில் தழைகள் கீழே விழுந்து பூமியிலே கிடக்கும்பொழுது அவற்றை எடுத்துச் செல்ல அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே கேட்டிருப்பது பசுந்தாள் உரத்தைப்பற்றி. உதிர்ந்த இலையைப்பற்றி அல்ல. உதிர்ந்த இலைகளை எடுத்துச் செல்வதற்கு தலைச் சுமைக்கு 10 காசு என்றும், வண்டிக்கு 2 ரூபாய் என்றும் வசூலிக்கப்படுகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, பசுந்தாள உரம் என்றால், விழுந்ததும்கூட பசுந்தாள் உரம்தான் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. மு. ராசகோபால் : தலைவரவர்களே, காடுகள் என்ற பெயரில் சில இடங்களில் வெறும் முள்ளாகவே இருக்கின்றன. தழையும் கிடையாது. ஆடு, மாடுகள்கூட மேய்வதற்கு லாயக்கில்லாமல் இருக்கும் அவற்றை விளைநிலங்களாகக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது தழையைப்பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது விளைநிலங்களாக மாற்றுவது குறித்து. அதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்து காட்டிலாகாவினரின் ஆலோசனையைக் கேட்டு கரம்பாக இருக்கக்கூடிய நிலங்கள் பற்றி மாவட்டக் கலெக்டரும், காட்டிலாகா அதிகாரியும் செயற்குறிப்பு அனுப்புகிறார்கள். அதைப்பற்றியும், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சிங்கப்பெருமாள் கோவில் அருகிலுள்ள பால் குளிரவைக்கும் நிலையம்.

*135 வினா:—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பால் பண்ணைத் திட்டத்தின்கீழ் G. S. T. நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள் கோவிலுக்கருப் பக்கத்தில் உள்ள Milk Chilling Centre எப்போது கட்டப்பட்டது ?

(இ) அது செயல்படாமலிருப்பதின் காரணம் என்ன ?

(உ) அது மீண்டும் செயல்பட எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) சிங்கப்பெருமாள் கோவிலில் "பால் குளிரவைக்கும் நிலையம்" (Milk Chilling Centre) 1963-ம் ஆண்டில், அயன்புரம், சென்னைக் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தால் நிறுவப்பட்டது.

(இ) சென்னை, கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம், பெருமுயற்சிகள் எடுத்தும்கூட அந்தப் பகுதியில் கணிசமான அளவுக்குப் பால் கொள்முதல் செய்து அந்த நிலையத்தைச் சிக்கனமாக நடத்த இயலவில்லை.

(உ) பாலைக் குளிர வைக்கும் யந்திரங்கள் பிரிக்கப்பட்டு, சென்னை பால் பண்ணை பால் வழங்கு திட்டத்தைச் சேர்ந்த பாலு செட்டி சத்திரம், வாலாஜாபாத், சத்துவாச்சேரி ஆகிய இடங்களிலுள்ள பால் குளிரவைக்கும் நிலையங்களில் முன்னரேயுள்ள யந்திரங்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டடம் பால் வழங்குத் திட்டத்திற்கோ அல்லது கால்நடை வளர்ப்புத் துறைக்கோ பயன்படாததால், சங்கம் அதை விற்றுவிட முயற்சி செய்து வருகிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, இந்த "மில்க் சில்லிங் சென்டர்"க்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது ? செலவழிக்கப்பட்டு இந்தத் திட்டத்தைத் தயார் செய்தபிறகு ஒருநாள்கூட அது வேலை செய்யவில்லை என்று தெரிகிறது. எனவே, அதைத் தயார் செய்த சம்பந்தப்பட்டவர்கள்மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ? மேற்கொண்டு இப்படிப்பட்ட செயல்கள் நடைபெறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரசாங்கம் கொடுத்த தொகை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய். யூனியன் செலவு செய்த தொகை 37,870 ரூபாய், 67 பைசா. கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது போல இது ஒரு நாள்கூட இயங்கவில்லை என்பது சரியல்ல. 62-லே அமைக்கப்பட்டு 63-ஆம் வருஷம் எப்ரலிலே செயல்படத் துவங்கியது

1966-ம் வருஷம் வரையிலே, ஜூன் மாதம் வரையிலே செயல்பட்டிருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்துதான் இத்திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த "சில்லிங் சென்டர்" முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கவேண்டுமென்று கருதி சிங்கப்பெருமாள் கோவிலிலே ஆரம்பிக்கப்பட்டதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று கேளுங்கள். குற்றம் சாட்டும் வகையிலே கேட்காமல், நீங்கள் பெற நினைக்கும் விடை வரும் விதத்தில் வேறு விதமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தக் காரணங்களுக்காக அந்த இடத்திலே மாற்றப்பட்டதா ? அப்படியானால், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது 1962-லே ஆரம்பிக்கப்பட்டு 1963-லே வேலை துவங்க ஆரம்பித்தது. ஏற்கெனவேயிருந்த முதலமைச்சரவர்களின் தொகுதியா அல்லது வேறு அங்கத்தினருடைய தொகுதியா என்றும், அன்று எந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டது என்பதுபற்றியும் தகவல் இல்லை.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the dairy at Singaperumalkoil does not get enough quantity of milk in that area, because the Ayyanavaram Milk Society has been allowed to operate in that area in competition with Government dairy there with the result there is cut-throat competition between the two and the Milk Society is able to get better product and larger quantity when compared to Government Project?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது சிங்கப்பெருமாள் கோவிலுக்குப் பக்கத்திலுள்ளதைப்பற்றிய கேள்வி. அய்யனாவரத்திலுள்ளதற்கும் இதற்கும் போட்டியிருந்ததாகத் தெரியவில்லை.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, மாதவரத்திலே உள்ள பண்ணையில் அந்தப் பக்கத்திலே இருப்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்வது கிடையாது. அய்யனாவரம் திட்டத்திற்கு 1½ இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பால்பண்ணை இயங்காமல் போனதும் அந்த 1½ இலட்சம் ரூபாயைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1968-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் அரசாங்கத்திற்கு 64,320 ரூபாய் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள். மேலும் அதனுடைய இயந்திர சாதனங்களைப் பிரித்து எடுத்ததில் 31,710 ரூபாய் 12 காசு கிடைத்திருக்கிறது.

நத்தத்தில் மாட்டுப் பண்ணை.

*136—வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், நத்தத்திற்கு அண்மையில் மாட்டுப் பண்ணை அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் முடிந்தும் இன்று வரை பண்ணை அமைக்கும் பணியினைத் தொடங்காததின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மன்றப் பேரவையில் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(a) 208-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்த விவாதப் பட்டியலில் நிலத்தை கையகப்படுத்துவது குறித்து ஆட்சேபணையிருந்ததாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் சொந்த நிலம் என்பதால் அந்த நிலத்தைக் கையகப்படுத்தவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த நிலம் யாருடையது என்பதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. கலெக்டர் அவர்களும், கால்நடை அதிகாரி அவர்களும் பார்வையிட்டனர். பொருத்தமானது என்று கருதிய 1,405 ஏக்கரில் 325 ஏக்கர் புறம்போக்கு 1,080 ஏக்கர் பட்டா நிலம். பட்டா நிலத்திற்கு ஆட்சேபணை செய்ததால் எருமைப் பண்ணை வைப்பது கைவிடப்பட்டது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும்கூட, முழு அளவிற்குப் பயன்படுத்திக்கொள்வதுகுறித்து அரசாங்கம் முனைப்பாக ஆலோசித்து வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அபிஷேகப்பட்டியில் கால்நடைப் பண்ணையில் பல திட்டங்கள் போட்டும் திட்டத்தட்ட 4 வருஷங்கள் ஆகின்றன, இன்னும் அது ஆலோசனையில்தான் இருக்கின்றது என்றால், ஒரு திட்டத்தை ஆரம்பித்து நன்றாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் அதிலுள்ள பல வேலைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. என்றால், அதற்கு எந்த இடத்தில் குறையிருக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டு அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு 4 வருஷங்கள் ஆகின்றன. இன்னும் அதிலுள்ள பல வேலைகளை நடத்த முனைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி ஏதாவது செயல்பட்டுக்கொண்டிருக்கிறதா, பிளான் அனுப்பி இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறதா, அதற்கு ஒரு காலவரையறை வைத்து முடிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கால்நடை அபிவிருத்திக் குழுவில் அங்கத்தினர் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். அண்மையிலே ஹோசூரிலே நடந்த கூட்டத்திலே, முன்னேற்றத்திற்கான ஆலோசனையைக் கனம் அங்கத்தினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். "ஜாயிண்ட் டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சர்"-ஐ அனுப்பிப் பரிசீலனை செய்து கால்நடைக்கு வேண்டிய தீவனம் உற்பத்தி செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டு, திருநெல்வேலிக்கு அனுப்பக்கூடிய அளவுக்குக் கணிசமான உற்பத்திசெய்ய மாட்டுத் தீவனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் 4 வருஷங்களாகச் செயல்படாமல் இருக்கின்றது என்று. நான் பொறுப்பேற்ற பிறகு அபிஷேகப்பட்டியில் சீராக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள்.

அரிசி ஆலைகளுக்கு அனுமதிச் சீட்டுகள்

*137 வினா—**வி. கே, கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னால் வரை Rice Mill களுக்கு பர்மிட் வழங்கும் அதிகாரம் யாரிடமிருந்தது ?

(இ) அதன் பிறகு திடீரென்று இவ்வதிகாரம் மாற்றப்பட்டதா ?

(உ) 1966-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் எத்தனை பர்மிட்கள், யார் யாருக்கு வழங்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முதல் (உ) வரை அவை முன்பு ஓர் விவரமான அறிக்கை (a) வைக்கப்பட்டுள்ளது.

(a) 209–236-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே 1965-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதி வரை, அரிசி ஆலைக்கான அனுமதிச் சீட்டு வழங்கும் அதிகாரங்கள் சென்னையிலுள்ள உணவு வழங்குத் துறை ஆணையராலும் மாநில அரசாலும் செலுத்தப்பட்டு வந்தன என்றும் முதல் தேதிக்குப் பிறகு திடீரென்று அதை மாற்றி மாநில அரசே அந்த அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதே அதற்கான காரணம் என்ன ? இப்பொழுது எந்த முறையிலே செலுத்தப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எதற்காக, எந்த காரணத்திற்காக அரசே அந்த அதிகாரத்தை ஏற்றுக் கொண்டது என்பதை அப்பொழுதிருந்த அமைச்சர் இராமையா அவர்களைக் கேட்க வேண்டும். கமிஷனரிடமிருந்து அரசாங்கமே ஏன் ஏற்றுக் கொண்டது என்பதற்கான விவரம் இல்லை. அரசாங்கம் எடுத்துக் கொண்டது என்ற தகவல்தான் இருக்கிறது.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, தரமான அரிசியைத் தருகின்ற வகையில் அரசாங்கம் அரிசி ஆலைகளை எல்லாம் நாட்டுடமையாக்க முன்வருமா ? அல்லது குறைந்த பட்சம் அரசாங்கத்திற்குத் தேவையான அரிசியை அளிக்கின்ற வகையில் ஒவ்வொரு வட்டத்திலும் அரசாங்கமே தன் பொறுப்பில் ஆலைகளை துவக்குமா ? அல்லது குறைந்த பட்சத் திட்டமாக அரசாங்கத்திற்குத் தேவையான அரிசியைப் பெறுகின்ற வகையில் தனியார் ஆலைகளைக் குத்தகைக்காவது சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நவீன அரிசி அறைக்கும் ஆலைகள் இப்பொழுதே பல இடங்களிலே துவக்கப்பட்டு வருகின்றன. தனியாருடைய சிறு சிறு மில்கள் பெரிய அளவிலே அறைவை செய்வதற்கு முயற்சி செய்கின்றன. சர்க்கார் துறையிலே இந்த மாதிரியான நவீன முறையிலே ராட்சச அறைவை இயந்திரங்களைக் கொண்டு அறைவை ஆலைகள் துவக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், கமிஷனரிடமிருந்து அரசாங்கத்திற்கு மாற்றியதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அம்மாதிரி மாற்றியதற்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். இருந்துகொண்டிருக்கிற ஒரு முறையை மாற்றும்போது அதற்கான காரணங்களைச் சேர்த்துச் சொல்லி அதன பிறகு மாற்றுவது என்ற நல்ல பழக்கத்தை இந்த அரசாங்கமாவது கைக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1965-ல் நடந்த விஷயத்திற்கு நாங்கள் பொறுப்பு அல்ல. இதுபற்றி அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரிசி ஆலைகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை எடுத்துவிட்டு, யார் வேண்டுமானாலும் அரிசி ஆலைகள் வைக்கலாம் என்ற முடிவை அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : யார் வேண்டுமானாலும் அரிசி ஆலைகள் வைக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டால் போதுமான அளவு நெல் கிடைக்காது. அதனால், கட்டிய மில்களில் பணமெல்லாம் வியமாகி, வாங்கிய பணத்திற்கு வட்டிகூடக் கட்ட முடியாத நிலைமை ஏற்படும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த ரைஸ் மில் பெர்மிட்டுகள், குறிப்பாக அதிகமாக நெல் உற்பத்தியாகும் தஞ்சை மாவட்டத்தில் 1966-ல் ஒருவருக்கும் 1967-ல் 3 பேர்களுக்கும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் தஞ்சை மாவட்டத்திற்கு அதிகமாக இந்த லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றிச் சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சையிலே திருவாரூரில் ஆலைகள் பெரிய அளவில் இருக்கின்றன. மேலும் இதுபோன்ற ஆலைகளை துவக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இது நீங்கலாகத் தனிப்பட்டவர்களும் ஆலைகள் வைத்திருக்கிறார்கள். தஞ்சையிலே போதுமான அறைவை மில் இல்லையென்ற குறைபாடு அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that grant of rice milling permit is regulated by the Rice Milling Regulation Act of the Central Government and that that Government empowers the State Government to issue permits on their behalf? So the State Government is not wrong either in empowering the Commissioner of Civil Supplies or in the Minister exercising the power direct. Will the Minister agree with my view that there is nothing wrong or out of the way in the former Government's action?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு நேரம் நண்பர்கள் கேட்ட கேள்விகளுக்கான பதிலை அளித்தார்கள். மத்திய அரசாங்கம் ஒரு சட்டவிதியின்கீழ் இந்த மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் அளித்திருக்கிறது. அந்த அதிகாரத்தை மாநில அரசாங்கமே நேர்முகமாகவோ அல்லது அதிகாரிகளின் மூலமாகவோ அளித்து வந்தது. கமிஷனர் ஆப் சிவில் சப்ளைஸ் அவர்களுக்கு இந்த அதிகாரம் அளிக்கப்பட்டு வந்தது. அதை இன்னும் முழுமையாகவோ, அல்லது செவ்வையாகவோ செய்வதற்காக அந்த அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. இந்த அரசாங்கமே நேரடியாகப் பரிசீலனை செய்கிறது என்பதுதான் இன்றிருக்கிற நிலை. இரண்டிலுமே தவறில்லை. தாசில்தார் செய்யவேண்டிய வேலைகளை அமைச்சர்களே பார்த்துச் செய்யவேண்டும் என்பது அல்ல. அல்லது வேறு இடங்களிலே இருக்கிற அதிகாரங்கள் அமைச்சர்களிடமே இருக்கவேண்டும் என்பதும் சரியானது அல்ல. அதிலே மாற்றம் தேவையில்லையென்பதுதான் இன்றைய தினம் நடைமுறையிலே இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: என்னுடைய பதிலிலிருந்து கனம் அங்கத்தினரவர்கள் எப்படி இப்படிப்பட்ட முடிவுக்கு வந்தார்கள் என்பது தெரியவில்லை. சென்ற ஆட்சிக் குறை கூறுகின்ற முறையிலே நான் பதில் சொல்லவில்லை. அவர்கள் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே. அனுமதி வழங்கப்பட்ட அரிசி ஆலைகள் பல ஓட முடியாத நிலையில் இருக்கின்றன. அதற்குக் காரணம் சிலர் இதனால் பாதிக்கப்பட்டதாக உயர்நீதி மன்றத்திலே "ரூட் ரிட்" போட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக, பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட கட்டடங்களில் ஆலை வேலை நடைபெறவில்லை. அதன் காரணமாக பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பாதிக்கப்பட்டதாக உயர்நீதி மன்றம் சொல்லக்கூடிய முறையை மாற்றியமைக்கத் தனிச்சட்டம் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உயர்நீதி மன்றத்திற்குப் போகும் யாரையும் தடை செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், ரைஸ் மில்லுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரத்தை மறுபடியும் சிவில் சப்ளைஸ் கமிஷனருக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதாவது இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஏற்கனவே இருந்த அமைச்சர் ஒரு தவறு செய்து விட்டிருக்கிறார் என்பதைச் சொல்வதற்கு அஞ்சி ஒருவேளை......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். என்ன வேண்டுமோ அந்த செய்தியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒரு முறையை மாற்றி..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தவறு செய்தார் என்று சொல்லவில்லையே, இல்லாததைச் சொன்னார் என்று நீங்கள் எப்படி சொல்லலாம் ?

திரு. வி. கே. கோதண்டராமன் : செயற்குறிப்பிலே காரணம் காட்டி இருக்கவேண்டும். அது தெரிந்த விஷயம். ஆகையினால் அமைச்சர் சரியான பதில் சொல்லவில்லை. அதற்காகத்தான் கேட்கிறேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தவறு செய்தார் என்று அவர் சொல்லவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர் சொன்னார் என்று சொல்லவில்லை....................................

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் மூடி மறைக்கவேண்டிய அவசியம் இல்லை. இருக்கிற தகவலைத்தான் கூறினேனே தவிர, இல்லாததை, எப்படிக் கூற முடியும்?

திரு. வி. கே. கோதண்டராமன் : செயற்குறிப்பிலே சொல்லி ஆக வேண்டும். அதைச் சொல்வதற்குப் பதிலாக அவரை கேட்கவேண்டுமென்று சொல்வது முறையா ? ஆகவே ஏற்கனவே இருந்த சிவில் சப்ளைஸ் கமிஷனரிடமிருந்த அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டது ஒரு பக்கம் இருந்தாலும் மாவட்டவாரியாக ஜில்லா கலெக்டர்களுக்கும் அந்த அதிகாரத்தைக் கொடுக்க முன் வந்து, இங்கே இருக்கிற உங்களுடைய கஷ்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு, வேலையைச் சுலபமாக்கிக் கொள்ளுவதற்கு முன் வருவீர்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பொன்னப்ப நாடார் அவர்களுடைய கேள்விக்கு என்ன பதில் அளித்தேனோ அதே பதிலைத்தான் அங்கத்தினருக்கும் அளிக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில், அமைச்சர் அவர்கள் அளித்த விவரப்படி ஏறக்குறைய 28 அரிசி ஆலைகளுக்கு 1966 டிசம்பர் 1967 ஜனவரி மாதங்களில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஸ்ரீபெரும்பூதூருக்கு 6-ம், காஞ்சிபுரத்திற்கு 15-ம் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே,

** ** **

இந்தப் பகுதிகளுக்கு மட்டும் ஏன் அதிகமாகக் கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த மைஸ் மில்லுக்குத் தேவை இருந்திருக்கலாம். நெல் உற்பத்தியின் அளவைப் பார்த்து கொடுக்கப்பட்டிருக்குமேதவிர அங்கத்தினர் கூறுவதைப்போல் இருந்திருக்குமானால் மற்றவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பார்கள். அப்படி இருந்திருந்தால் கோர்ட்டுக்குப் போயிருப்பார்கள்.

**பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்கள், கேள்வியில் * * என்ற அந்தப் பகுதியை எடுத்துவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question may be expunged, as it is not in good taste. It may be off the record.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மேட்டூர் டவுன்சிப் குடிசைவாழ் மக்கள் மீது நடவடிக்கை

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மேட்டூர் டவுன்சிப்புக்குட்பட்ட பகுதியில் குடிசை போட்டு குடியிருக்கும், சுமார் 300-க்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் மீது, மேட்டூர் டவுன்சிப் கமிட்டி கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, தண்டனை வாங்கித் தருவதற்கான நடவடிக்கை எடுத்தது என்ற அவசர, அவசியமான விஷயத்தை விவாதிக்க பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்கள்.

இது அரசின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாக இருப்பதாலும், மேலும் மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு இருப்பதாலும், அப்பொழுது இதைப்பற்றிக் கூறுவதற்கு இடம் இருப்பதன் காரணமாகவும் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம் களத்தூர் கிராம விவசாயத் தொழிலாளர் அல்லலும் பாதுகாப்பு நடவடிக்கையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு ஆ. கு. சுப்பையா அவர்கள், "தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா களத்தூர் கிராமத்தில், 30 குடும்பங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களை அடித்தும், அவர்களுடைய பண்ட பாத்திரங்களைப் பறிமுதல் செய்தும், ஊரைவிட்டு விரட்டியும் அவர்கள் சாகுபடி செய்திருந்த நிலங்களில் விளைந்திருந்த நெல்லை அறுவடை செய்து கொண்டதாலும், பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்தவும், அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும்" என்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுபற்றி மட்டும் அவர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : கடந்த சில வாரங்களுக்கு முன்னால், நன்னிலம் தாலுக்கா, களத்தூர் கிராமத்தில் அரிசன விவசாயிகள் விவசாயம் செய்திருக்கக்கூடிய தானியத்தை, நெல் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்த விவசாயிகளை ஊரைவிட்டு விரட்டி, 100 ஏக்கராவில் விளைந்திருக்கக்கூடிய 3,000 கலம் நெல்லை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் அந்த ஊருக்குக் குடியேறுவதற்கு அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளித்து, மீண்டும் அவர்களை அங்கே குடியேற்றுவதற்கு வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் களத் தூரைப் பொறுத்த வரையில் ஏற்கனவே முககூட்டு மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட கூலி நிர்ணய விகிதத்தை அங்குள்ள மிராசுதார்கள் அங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்குத் தர மறுத்ததன் காரணமாக, ஏற்கனவே, ஒரு தகராறு ஏற்பட்டு அந்தத் தகராறின் முடிவில் நடேச வாண்டையார் என்டவர் கொல்லப்பட்டு, வழக்கு மன்றத்தில் இந்த வழக்கு இருந்து வருகிறது. அதையொட்டி அங்கே அன்றாட கூலி வேலை செய்கின்ற தொழிலாளர் நண்பர்கள் 30 பேர், அவர்களுக்கு இவ்வளவு தான் தரமுடியும் என்று நிர்ணயம் செய்த கூலியை வாங்க மறுத்ததன் காரணமாக, அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்றும், ஆனால் திரு. சுப்பையா அவர்கள் எழுப்பியது போல அவர்கள் ஊரைவிட்டு விரட்டி அடிக்கப்படவில்லை என்றும் அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. மேலும் அதைப்பற்றிய தகவல்களை முற்றிலும் தெரிந்து கொள்ளவும், அங்கே அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது அரசின் அன்றாட அலுவல்களின் கீழ் வருவதன் காரணமாக, இந்த அவையை ஒற்றிவைத்து, இதைப்பற்றி விவாதிப்பதற்கு அவசியம் இல்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தை ஒட்டி, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன். பொதுவாக, நிதிநிலை அறிக்கை பற்றி விவாதம் நடக்கின்ற நேரத்தில் ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளிப்பதில்லை என்ற ஒரு பழக்கத்தை இந்த மன்றம் மேற்கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

3. அறிவிப்பு.

பேரவை நிகழ்ச்சி விபரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

1—3—1969-ம் நாள், அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரத்தை நான் இப்பொழுது அறிவிக்கிறேன்.

3—3—1969	திங்கள்	6 நாட்கள் —	1969–70–ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.
4—3—1969	செவ்வாய்		
5—3—1969	புதன்		
6—3—1969	வியாழன்		
7—3—1969	வெள்ளி		
8—3—1969	சனி		
9—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
10—3—1969	திங்கள்		1969–70-ம் ஆண்டுக்கான கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (14 நாட்கள்)
11—3—1969	செவ்வாய்		
12—3—1969	புதன்		
13—3—1969	வியாழன்		
14—3—1969	வெள்ளி		
15—3—1969	சனி		
16—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
17—3—1969	திங்கள்		
18—3—1969	செவ்வாய்		
19—3—1969	புதன்	.. தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.	
20—3—1969	வியாழன்		
21—3—1969	வெள்ளி		
22—3—1969	சனி		
23—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
24—3—1969	திங்கள்		

25—3—1969	செவ்வாய்	.. (1) 1968-69-ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கையை அளித்தல். (ஆளுநரின் இசைவுக்கு உட்பட்டு) (2) 1969-70-ம் ஆண்டுக்கான கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்	வாக்கெடுப்பும். (14 நாட்கள்).
26—3—1969	புதன்	(1) ” (2) நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல்.	
27—3—1969	வியாழன்	.. (1) 1968-69-ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கையின்மீது பொது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல்.	
28—3—1969	வெள்ளி	.. நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.	
29—3—1969	சனி	.. மொகரம்—விடுமுறை	
30—3—1969	ஞாயிறு	.. விடுமுறை.	
31—3—1969	திங்கள்	.. அரசினர் மசோதாக்கள், எவையேனும் இருப்பின்.	

வழக்கம்போல, பேரவை காலை 9 மணி முதல் கூடும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை இன்மையும், நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, திரு. டி. மார்ட்டின், திரு. நா. சவுந்திரபாண்டியன், திரு. கே. வினயகம் ஆகியோர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கிய மான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மற்றும் திருநெல்வேலி மாவட்டங் களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களைப் பஞ்ச பிரதேசங்க ளாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்தி வைத்தல், போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல் வேலி மாவட்டங்களில், குறிப்பாக சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கிராமங்களில், பருவமழை தவறியதால், மேற்படி மாவட்டங்களைப் பஞ்ச பிரதேசங்களாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் உப மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டு காலமாக பருவமழை தவறியதால், மேற்படி உப மாவட்டத்தை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules,

செங்கல்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களைப் பஞ்சப் பிரதேசங்களாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் நிலவிய வறட்சி நிலைமைகள் குறித்தும், மேற்கொண்ட உடனடித் துயர் தணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் அமைந்த விவர அறிக்கை ஒன்றினை இதுபோன்ற அறிவிப்புகளையொட்டி 28– –1969ல் சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளேன். பருவநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமையால், மேலும் துயர்தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதி வேண்டியுள்ளனர். இம்மாநிலத்தில் பொதுவாக மழை பொய்த்துவிட்டதென் தை அரசாங்கம் உணருகிறது ; இதன் விளைவாக மேற்சொன்ன செங்கற்பட்டு, வட ஆற்காடு இந்த இரண்டு மாவட்டங்களில் மட்டுமின்றி மற்ற மாவட்டங்களிலும் பருவ நிலைமைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, இம்மாநிலத்தில் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலுமுள்ள உழவர்களுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் துயர் தணிப்பு உயதவியளிக்கும் பொருட்டுச் சில உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி 17–2–69ல் மாண்புமிகு முதலமைச்சர் கூட்டிய கூட்டத்தில் ஆராயப்பட்டது ; இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர், மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் ஆகியோரும், அந்தந்தத் துறைச் செயலாளர்களும் கலந்துகொண்டனர். சிறுபாசனப் பணிகள், பொதுப் பணித்துறையின் ஏரிகளைச் சீர் அமைத்தல், நீர் வழங்கு வாய்க்கால்களை சீரமைத்தல் பாசனத்திற்கும் குடி நீர் காரியத்திற்கும் கிணறுகளை ஆழப்படுத்துதல், சாலை பணிகளை மேற்கொள்ளுதல் முதலிய பணிகளை மேற்கொள்வதற்கு அதிகப் பணம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கேற்ப், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு, ஏற்கனவே ஒதுக்கப்பட்டதோடு, ரூ. 7.25 லட்சம் தொகையையும், வடஆற்காடு மாவட்டத்திற்கு ரூ. 15·5 லட்சம் தொகையையும் வழங் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. மேலே சொன்ன இப்பணிகளை மேற்கொள்ளவே இவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மொத்தம் ரூ. 5·68 லட்சம் துயர தணிப்பு உதவித் தொகையும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு ரூ. 55·5 லட்சம் உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது

கோயம்புத்தூர் மாவட்டம் : பருவநிலை மிகவும் பாதிக்கப்பட்டமையாலும் இம்மாவட்டத்தில் கடந்த இரண்டாண்டுகளில் மழை பொய்த்துவிட்டதாலும் மிகுந்த வறட்சி ஏற்பட்டுள்ளதென்றும் தீவனம் குறைந்துவிட்டமையால் கால் நடைகளுக்குத் தீவனம் அளிக்க உழவர்கள் இடர்ப்படுகின்றனர் என்றும் 1968 செப்டம்பரில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். நில வருவாய் நிலச் சீர்திருத்தங்கள் ஆணையாளர், உண்மைநிலையைத் தானே மதிப்பிட்டு அறியும் பொருட்டு மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார். அவர் கண்டறிந்தவற்றின் அடிப்படையில் இம்மாவட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவனக்கடன்களாக வழங்கப்பட ரூ. 10 லட்சம் தொகையை அரசாங்கம் அளிக்க ஒப்பளிப்பு வழங்கியது. குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 8 லட்சம் கோயம்புத்தூருக்கு வழங்க இப்போது அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் : இம்மாவட்டத்தில் வறட்சி நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கேற்ப, ரூ. 8·5 லட்சம் செலவில் குறிப்பிட்ட துயர் தணிப்பு செயற் குறிப்புகள் அனுப்பியுள்ளார். இதில் ராதாபுரம் துணைவட்டம், நாங்குனேரி, சங்கரன் கோவில், கோயில்பட்டி வட்டங்களுக்குத் துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றிக் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார். தக்காவிக்கடன்களாக வழங்கப்படுவதற்கும், சிறுபாசனப் பணிகள், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஏரிகளைச் சீரமைத்தல், பாசனக் கிணறுகளையும் குடிநீர்க் கிணறுகளையும் ஆழப்படுத்துதல், சாலைப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் மேற்சொன்ன தொகையை வழங்க அரசாங்கம் இப்போது ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சேலம் மாவட்டம் : ஓமலூர், நாமக்கல் வட்டங்களிலுள்ள சில பகுதிகள் பருவ மழை தவறிய காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளனவென்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதென்றும் அங்கு கிணறுகள் ஆழப்படுத்தப் படவேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். அத்தகைய கிணறுகளை ஆழப்படுத்த உடனடியாக ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் நிதி அளிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. நஞ்செயிலிருந்து புஞ்சைத் தீர்வையைக் கழித்துத் தள்ளுபடி அளிப்பதற்கு இம்மாவட்டம் உரிமை பெற்றதென்றும் இதற்குச் செலவாகும் தொகை தோராயமாக ரூ. 11,000 என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆயினும் கடன்களையும் நிலவரியையும் வசூலிப்பதை ஒத்திப் போடுவதற்கோ அல்லது சிறப்புத் துயர் தணிப்புப்பணிகளைத் தொடங்குவதற்கோ அவசியமில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் திருசெந்தூர் வட்டம் மழை இல்லாததால் வறட்சி நிலையை அடைந்திருக்கிறது. அந்த மாவட்டத் தலைவர் அந்த நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாரா ? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் மேல், அந்த அடிப்படையில்தான் நடவடிக்கை எடுத்து, ராதாபுரம், கோயில்பட்டி போன்ற பகுதிகளுக்கு காரியங்களைச் செய்ய ரூ. 8,50,000 அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் என்னுடைய விவர அறிக்கையில் சொன்னேன்.

* **திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொடுத்த பதிலில் ரூ. 8,50, 00 பஞ்ச நிவாரண வேலைகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். மக்கள் அங்கே நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், குறிப்பாக

ராதாபுரம் பகுதியில் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டும் என்றும் மாவட்டத் தலைவருக்கும் அரசாங்கத்திற்கும் விண்ணப்பங்கள் கொடுத்திருந்தார்கள். அதன் பேரில் உடனடியாக முடிவு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொருத்த வரையில், அங்கே ஐந்து தாலுக்காக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், இந்தத் தொகை மிகக் குறைவாக இருப்பதால் கூடுதலாக நிவாரணம் அளிக்க சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல, கடன்களை ஒத்தி வைப்பதோ, வரி வசூலை தள்ளி வைப்பதோ அந்த, அந்த நிலைகளுக்குத் தக்கவாறு மாவட்டத் தலைவர் பரிந்துரையின் அடிப்படையில் செய்யப்படுகிறது. ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி துரதிருஷ்டவசமாக இயற்கையின் உற்பாதங்களுக்கு ஆளாகி பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலைமைகளுக்குத் தக்கவாறு செய்யப்படுவதில், ரூ. எட்டு லட்சம் குறைவானது என்பதல்ல பிரச்சினை. அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்பீட்டின் அடிப்படையிலும், வருவாய்த் துறை வாரிய மெம்பர் அவர்களுடைய பரிசீலனையின் அடிப்படையிலும் செய்யப்படுகிறது. கூடுமான வரையில் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அப்படிச் செய்ய இந்த அரசு சிரத்தை கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலேயே வடகோடி வட எல்லையில் இருக்கும் பகுதி இயற்கை கோளாறு காரணமாக வறண்டு போய் இருக்கிறது. அந்தப் பிரதேசம்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியும், அங்கே மழை பெய்ய வில்லை. அதன் விளைவாக மாடு, ஆடு குட்டிகளும், தண்ணீர் குடிக்கக்கூட இல்லாமல், கஷ்டப்படுகின்றன. மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அப்படியிருக்கும்போது, நேரிடையாக வந்து பரிசீலித்த போர்டு மெம்பர் திரு. என் எஸ். மணி, ஐ.ஸி.எஸ். அவர்கள் அதைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்றும், வரி வசூல் செய்யக் கூடாது, நிவாரண வேலைகள் துவங்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்திருக்கிறாரே, அது அரசாங்கத்திற்கு வந்ததா ? அதன் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? இந்த ரூ. 35,000 பிச்சைபோலக் கொடுத்தால், மாவட்டம் முழுவதற்கும் போதுமா ? ஆகவே, தயவுசெய்து, இதை மறுபரிசீலனை செய்து, அந்த எல்லைப் பிரதேசத்திற்கு நிவாரணம்அளிக்க தக்க நடவடிக்கை அரசாங்கம் எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி ரொம்பப் பொருத்தமான கேள்வி. நாட்டில் இருக்கின்ற கேள்விகளில் பெரியது அது என்பதுதான் என்னுடைய அழுத்தமான அபிப்பிராயம் ஆகும். அவர்கள் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும், பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். அதன் மூலம் பணம் அதிகமாகக் கேட்கவேண்டும் என்பதுதான் நோக்கம். அதற்காக சொல்லுகிறார்கள். பொதுவாகவே, ஒரு நியாயத்தை ஒத்துக் கொள்ள வேண்டும். அரசாங்க அறிக்கையிலிருந்து தமிழ் நாட்டில் இன்றைக்கு பல பகுதிகள் பஞ்சப் பிரதேசமாக ஆகிவிட்டன. என்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லை என்றார்கள். உண்மைதான். கோயம்புத்தூர், காங்கேயம் பகுதியில் அப்படித்தான் நிலைமை மோசமாக இருக்கிறது. இம்மாதிரி நிலைமை சாதாரணமாக இராஜஸ்தான் பகுதியில்தான் ஏற்பட்டது. இந்த ஆண்டில் கால் நடைகளுக்கு தண்ணீர் இல்லாமல் போனபொழுது, தண்ணீரை ரயில்வே வேகன்களில் அனுப்பி அவற்றைக் காப்பாற்ற வேண்டிய அபாயகரமான நிலை அங்கே ஏற்பட்டது. இன்றைக்கு நமக்கு இருக்கும் பஞ்ச நிலை அனுகூலமானது என்பதல்ல. வருத்தப்படக்கூடிய நிலை. அந்த நிலைக்குத்தக்கவாறு சமாளிக்கவேண்

டும். போர்க்காலம் மாதிரி செயல்படவேண்டும். பஞ்சப் பிரதேசம் என்று அதிகார பூர்வமாக அறிவிப்பதில் சிரமம் ஒன்றும் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரே வரியில் சொல்லிவிடலாம் அது இடைஞ்சல் நிலையை, பஞ்ச சூழ்நிலையைத் தீர்க்காது. இருக்கும் நிலையை ஒத்துக் கொண்டு, அதற்குத் தக்கவாறு எல்லோரும் செயல்பட வேண்டும். இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிடலாம். இது ஒரு "act of God" அரசாங்கத்தின் ஆக்டு இல்லை. அப்படிப் பட்ட நிலை வந்ததால், அதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் நாம் ஒரு பெரிய நெருக்கடியை அடைந்திருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் முழு அளவிற்கு ஒப்புக் கொள்கிறேன். இந்த நிலையைச் சமாளிக்க, மாண்புமிகு முதல் அமைச்சருடைய கரங்களை வலுப்படுத்த நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். நாம் நன்றாக இருந்த காலத்தில் கேரளத்திற்கு, 1½ லட்சம் டன், 1¼ லட்சம் டன், 40,000 டன் என்று நம்முடைய தேவைக்குமேல் கொடுத்து நம்முடைய பரிவைக் காண்பித்திருக்கிறோம். மத்திய சர்க்காரிலும், இந்த அரசாங்கத்திடம் பரிவோடு கூடிய உணவு அமைச்சர், திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் இருப்பதால், அவர்கள் நல்ல வகையில் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைக்கு எதிர்பாராத வகையில் ஏற்பட்டிருக்கும் தமிழ் நாட்டின் துரதிருஷ்டத்தை அரசியல் விளையாட்டுக்கு இடமில்லாமல், இங்கே மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியே இருக்கும் தலைவர் சொல்கிறார்கள். இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, வர்த்தக சூதாடிகளிடமிருந்து, இந்த உயிர்ப் பிரச்சினையை பணயம் வைக்காமல் காப்பாற்றி, இந்த மாமன்றத்தில் எல்லாத் தரப்பினரும் ஒத்துக்கொள்ளும் பஞ்சப்பிரதேசமாக ஏற்பட்டுவிட்ட நிலையை சமாளிக்க எடுக்கப்படும் முயற்சிகள் பயன் அளிக்கும் வகையில் ஆக்க பூர்வமாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

(ஆ) கும்பகோணம் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தும் உயிர்ச்சேதமும்.

THIRU N. S. V. CHITHAN : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely, the serious explosions in Kumbakonam Fire Works Factory from October resulting in loss of life.

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலிருந்து சுமார் 4 மைல் தொலைவிலுள்ள சோழமாளிகை கிராமத்தில் அமைந்துள்ள மெஸர்ஸ் சுரதம் பட்டாசுத் தொழிற்சாலையில் 2[illegible]-9-196[illegible]-ம் தேதியன்று பிற்பகல் சுமார் 5-30 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது இவ்விபத்து அத் தொழிற்சாலையின் மருந்து கலவை அறைக்குள் சீனவெடிகளைத் தயாரிப்பதற்காக கந்தகம், பொட்டாசியம், நைட்ரேட் அலுமினியம் தூள் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தயாரிக்கையில் ஏற்பட்டது. இந்தத் தொழிற்சாலை பிரிவில் வெடி விபத்து எதுவும் இல்லை. இந்த விபத்தின் விளைவாக அந்த இடத்திலேயே இருவர் உயிர் இழந்தனர். 20 பேர் காயமுற்று மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 20 பேர்களில் 17 பேர் மறுநாள் இறந்தனர். இந்தத் தீ விபத்திற்குக் காரணம் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இங்கு பெரும் சேதம் ஏற்படுத்தக்கூடிய வெடி விபத்தோ நாசம் ஏற்படுத்தக் கூடிய தீ விபத்தோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி நிகழ்ந்திருந்தால் கட்டடம் முழுவதுமே நாசமடைந்திருக்கக் கூடும். அந்த இடத்திலேயே உயிர் இழந்த இரண்டு

பேர் கலவை செய்யும் தொழிலாளர்கள் என்று தோன்றுகிறது. காயமடைந்த 20 பேர் கூக்குரல் கேட்டதும் கலவை செய்யப்படும் அறைக்கு விரைந்தோடித் தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தோன்றுகிறது.

வெடி மருந்துகள் முதுநிலை ஆய்வாளரும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்த இடத்திற்குச் சென்று புலனாய்வு செய்து விசாரணை நடத்தினர். இவ்விபத்தின் விளைவாக இத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இது இன்னும் மீண்டும் திறக்கப்படவில்லை.

தீ விபத்துக்களையும் பிற விபத்துக்களையும் தடுப்பதற்காக இத்தகைய தொழிற்சாலைகளில் பல்வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொழிற்சாலை ஆய்வாளரகம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் தீவிபத்து கற்பித்துள்ள படிப்பினையை யொட்டி, தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் உட்பட கூடுதலான விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் விதிக்கப்படும். அவற்றைக் கண்டிப்பாக செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 19 பேர் உயிர் இழந்ததாகத் தெரிகிறது. இதேபோல் சிவகாசியிலும் அடிக்கடி நடக்கிறது. வெடி மருந்துச் சட்டம் சரியாக அமல் படுத்தாததால் இந்தமாதிரியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகள் ஏற்படாமல் செய்வதற்காக அரசாங்கம் விசேஷமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? குறுகிய இடத்தில் மிக அதிகமான பேர்களை வேலை செய்யச் செய்த இந்த நிர்வாகத்தினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை நடத்தி அறிக்கை அளிப்பதாக இருக்கிறார். அறிக்கை அரசுக்குக் கிடைத்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம் நடைபெறும்.

5. நடைமுறைக் கேள்வி

சட்டப்பேரவை முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் நியமனம்.

திரு. க. ராமமூர்த்தி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சட்டமன்ற கட்சித் தலைவராக ஹாஜி ம.மு. பீர்முகம்மது என்பவரை நியமித்திருப்பதாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திரு முகம்மது இஸ்மாயில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக சட்டசபையில் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பாகும். ஹாஜி முகம்மது பீர்முகம்மது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றக் கட்சி கூடி முடிவு செய்ததா? இதுபற்றி பேரவைக்கு ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. இதற்குமுன் தலைவராக இருந்த திரு. அபிபுல்லா பேக் என்பவர், "தம்மை தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தனக்கே தெரியாது" என்று பத்திரிகையில் அறிக்கைவிட்டிருக்கிறார். தமிழகச் சட்டமன்றத்திற்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் யார் என்று அறிவிக்கப்பட வேண்டிய பொறுப்பு, சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பா? அல்லது இங்கே அங்கம் வகிக்காத, அலுவல்களிலே பங்குபெறாத வெளியிலே உள்ள அரசியல் கட்சித் தலைவரின் பொறுப்பா என்பதை பேரவைத் தவலைர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே உள்ள இரண்டு உறுப்பினர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருந்தன. ஆகவே, இவர்களுடைய கட்சித் தலைவர், "இவர்தான் சட்டமன்றக் கட்சித் தலைவர்" என்று தெரிவித்தார். அதன்பிறகுதான் அவருக்கு இடமாற்றம் அளித்திருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இதை அந்தக் கட்சியினுடைய சட்டமன்றக் கிளை முடிவு செய்ததா? அல்லது வெளியிலே இருப்பவர் நியமித்தாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே முஸ்லீம் லீக் கட்சியின் சட்டசபை உறுப்பினர்கள்கூடி, அவர்கள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து பரிவுரை செய்ததன் பேரில்தான் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அதைச் சட்டப் பேரவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறினார். யாரைத் தலைவராக ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது என்பதற்கு நமது சட்டப்பேரவை விதிமுறைகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புவது, சட்டமன்ற நிகழ்ச்சி முறையில் ஏதேனும் மாறுதல் இருந்தால்தான் எழுப்ப வேண்டும். இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். முஸ்லீம் லீக் கட்சி கூடி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று கூறினார். அப்படி இருக்க வேண்டுமென்றால், ஒருவர் ஒருவருடைய பெயரை பிரேரேபிக்க வேண்டும், இன்னொருவர் ஆமோதிக்க வேண்டும். ஒரே கிளாஸில் இரண்டு பேர்கள் இருந்து ஒருவர் "ஃபஸ்ட்" என்றால் இன்னொருவர் இரண்டாவது என்றுதான் அர்த்தம். அப்படி முஸ்லீம் லீக் கட்சியில் எத்தனைபேர் இருக்கிறார்கள்? இரண்டு பேர்கள்தானே. அதில் தலைவருடைய பெயரை ப்ரபோஸ் செய்தது யார்? "செகண்ட்" பண்ணியது யார்? (சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவதற்கு அதிக நேரம் வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் கேட்கிறார்கள். அப்படிப் பேசுவதற்கு அதிகமான நேரத்தை ஒதுக்க முடியவில்லை. ஆகவே, சட்டமன்றத்தினுடைய அருமையான நேரத்தை இப்படி தேவையல்லாத—அவ்வளவாக முக்கியத்துவம் தர வேண்டாத—விஷயங்களுக்கு செலவழிக்க வேண்டாமென்று கூறிக்கொண்டு, மீண்டும் இதைப்பற்றிய விவாதத்தைத் தொடர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. நா. காசிராமன் அவர்கள் பேசுவார்கள்.

(6) 1969-70-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. நா. காசிராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்பாக நிதியமைச்சர் 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையொட்டி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பி வர முற்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது புதிய வரிகள் எதுவும் போடப்படாத நிதிநிலை அறிக்கை போன்ற தோற்றத்தை அளிக்கிறது. ஆனால் பின்னால் வரிகள் போடப்படயான சூழ்நிலை இருக்கிறது என்றே தெரிகிறது. இதே போல்தான் 1967–68, 1968–69-ம் ஆண்டுகளிலும் வரிகள் இல்லையென்று முதலில் சொன்னார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு இனத்தின்மீதும் வரிகளைப் போட்டு வந்தார்கள். ஒருசில நாட்களுக்கு முன்கூட விற்பனை வரியில் ஒருசில மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். முதலில் வரிகள் இல்லையென்று சொல்லிவிட்டு, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகமான வரிகளை மக்களிடமிருந்து வாங்குகிறார்கள். இதனால் 5 கோடி, 6 கோடி ரூபாய்க்கு அதிகப்படியாக கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. "மொபிலைசேஷன் ஆஃப் அடிஷனல் ரிசோர்சஸ்" பிரகாரம் அதிகமான அளவில் நிதி கிடைக்கிறது. 1968–69-ல 13·6 கோடி ரூபாய் கையிருப்புடன் இருந்து, 1969–70-ல் 16·7 கோடி ரூபாய் பற்றுச்குறையாக முடியும் நிலைமையில் இருக்கிறது. என்று சொல்லப்படுகிறது. ஆகவே,

[திரு நா. காசிராமன்] [1969 மார்ச் 3

அதிகமான அளவில் வரவுக்கு மிஞ்சிய செலவுகளினுலே இந்தப் பற்ருக்குறை ஏற்படுகிறது. 30 கோடி ரூபாய் வித்தியாசம் எற்படுகிறது. இது எப்படி ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். 1967–68-ல் போடப்பட்ட வரிகள் எந்த அளவுக்கு மக்களைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 9 மாத காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது 5¼ கோடி ரூபாய். ஆனுல கையிலே கிடைத்திருப்பது 38 கோடி ரூபாய்க்கு
மு.ப. 10-30 மேலே கிடைத்திருக்கிறது. 28—2—1966-இல் சட்டசபையில் தாங்களே பேசும்போது 1954-55-ல் 43 கோடியாக இருந்த வருமானம் 1966-67இல் 188 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆக, பன்னிரண்டு வருடங்களில் 145 கோடி ரூபாய் அளவுக்கு வரியைஉயர்த்தியிருப்பதாகக் குறிப்பிட்டீர்கள். 12 வருஷங்களில் 145 கோடி உயர்ந்திருக்கிறது என்ருல் கிட்டத்தட்ட வருஷத்திற்கு 12 கோடி ரூபாய் வரியின் மூலம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனுல் சென்ற 1966–67 ஆண்டு இருந்த வருமானத்தைவிட இவர்கள் 1967–68இல் விதித்த வரி விகிதங்களின் மூலம் கிட்டத்தட்ட 9 மாத காலங்களுக்குள்ளேயே இவர்களுக்குக் கிடைத்திருக்கிற அதிகமான வருமானம் 38 கோடியாகும். ஒரு வருஷம் கூட இல்லை 9 மாத காலத்திற்குள் இவர்களால் 38 கோடி ரூபாய் வரி விதிப்பின் மூலம் பெற முடிந்திருக்கிறது என்ருல்—இம்மாதிரியான பெரிய வரி விதிப்புச் செய்திருப்பது இந்த அரசாங்கத்தின் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். மருத்துவத்துறை, பொதுசுகாதாரத்துறை ஆகியவற்றில் எல்லாம் அதிகமான வசதிகளைச் செய்து தர முடியாவிட்டாலும் காங்கிரஸ்காரர்கள் செய்யாத— செய்ய முடியாத சாதனையாக 9 மாத காலத்திற்குள்ளேயே இவர்கள் வரி விதிப்பின் மூலம் 38 கோடி ரூபாயை அதிகமாகப் பெற்றிருக்கிருர்கள். இது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் பெரிய சாதனை, தமிழ் மக்களுக்கு இது மிகப் பெரிய சோதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

தேர்தல் சமயத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 40 சதவிகித வரியைக் குறைப்போம் என்று சொன்ஞர்கள். ஆனுல் ஆட்சிக்கு வந்த பிறகு நடைமுறையில் 9 மாத காலத்திற்குள்ளாகவே 38 கோடி ரூபாய் அதிகமாக வரிவிதிப்பின் மூலம் பெற்றிருக்கிருர்கள். குறிப்பாக 1966–67-இல் இருந்ததைவிட இவர்கள் போட்ட வரியின் அளவு 35·5 சதவிகிதம் அதிகமாகவே உயர்ந்து—வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. விவசாய வருமான வரி, எக்சைஸ் வரி, மோட்டார் வாகன வரி, விற்பனை வரி ஆக இப்படி பல இனங்களில் வரியைக் கூட்டியிருப்பதன் மூலமாக கடந்த 1966–67 ஆண்டு கிட்டத்தட்ட 8918 லட்சம் வருமானம் கிடைததது என்ருல் 1969–70-ல் 11777 லட்சம் கிடைக்கும் என்ற குறிப்பை இவர்களே கொடுத்திருக்கிருர்கள். இப்படி பதவிக்கு வந்த முதல் வருஷத்திலேயே ஒரே ஒரு சான்ஸில் பல்லாயிரக்கணக்கான—லட்சக்கணக்கான ரூபாய் அதிகமாக் கிடைக்கும்படியாக இவர்கள் வரி விதித்துவிட்டார்கள்..

நிதி அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் உரையில் கிட்டத்தட்ட 4 அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று—மறைந்த முதல் அமைச்சரைப் பற்றிய தான கருத்து. அது சொல்லப்படவேண்டியதுதான். அவசியமானதுதான் குறை சொல்ல முடியாது.

அடுத்தப்படியாக மத்திய அரசாங்கம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், நிதிக்குழு எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், தேசீய அபிவிருத்திக்குழு எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், மாநில அரசாங்களுக்கு மத்திய அரசு எவ்வாறு பற்பல இனங்களிலும் நிதி உதவியை அதிகப்படுத்திக் கொடுத்தாக வேண்டும் என்கின்ற அளவில் மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சொல்கிற யோசனைகள், அறிவுரைகள், முழுக்க முழுக்க பெரும்பகுதியாக இருக்கிறதே தவிர வேறு “ நாங்கள் என்ன செய்தோம், நாங்கள் எந்த அளவுக்கு வரி விதிப்பைக் குறைத்திருக்கிருேம். நாங்கள் வந்தால் 40 சதவிகித வரியைக் குறைப்போம் என்ருேமே, வந்த பிறகு எத்தனை சதவிகிதம் வரி குறைந்திருக்கிறது, நாங்கள் வந்தால் 60 சதவிகிதம் வசதிகளைப் பெருக்குவோம் என்ருேமே, வந்த பிறகு எத்தனை சதவிகிதம் வசதிகள் பெருக்கப்பட்டிருக்கிறது ” என்கிற குறிப்புகள் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை.

1969 மார்ச் 3] [திரு. நா. காசிராமன்]

சென்ற ஆண்டே மருத்துவ, சுகாதார மானியத்தின் கோரிக்கைகள் மீது பேசும்போது நான் சொன்னேன், சென்னை தவிர மற்ற ஆஸ்பத்திரிகளில் நகராட்சி ஆஸ்பத்திரிகளில் எல்லாம்—மருத்துவ மானியம், சுகாதார மானியம் ஆகியவை கணிசமான அளவில் பெரும்பகுதி குறைக்கப்பட்டிருக்கிறது. இதனுல் பெரும் விளைவுகள் சீக்கிரத்திலேயே ஏற்படும் என்று குறிப்பிட்டேன். நடந்திருப்பது என்ன ? ஒரு வருஷ காலத்திற்குள்ளாக —பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் தெரியும். செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் மருந்துகள் கிடையாது. மன்னர்குடி ஆஸ்பத்திரியில் மருந்துகள் கிடையாது, வேலூர் ஆஸ்பத்திரியில் மருந்துகள் கிடையாது, இதுபற்றி வேலூர் நகரசபையிலேயே ஒரு காரசாரமான விவாதம் நடந்து நகராட்சி ஆளுநர் இதுபற்றி விசாரித்து மத்திய மருந்துக் கிடங்கிலேயே போதுமான மருந்துகள் ஸ்டாக் இல்லை என்பதாக அறிவித்திருக்கிருர். இதைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். கும்பகோணம் மருத்துவ மனையில் அடிக்கடி மருந்துகள் இல்லாது போகிறது. நோயாளிகளையே மருந்துகள் வாங்கிக் கொடுக்கச் சொல்லி, சிகிச்சை அளித்து அனுப்பும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு மருத்துவத் துறையிலும், பொதுச் சுகாதாரத் துறையிலும் மானியங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. 9 மாத காலத்திற்குள் 38 கோடி ரூபாய் வரிவிதிப்பின் மூலம் அதிகமான வருமானம் வந்திருந்தும் இந்த நிலைக்கு வந்திருப்பது இந்த அரசாங்கத்தின் அழகான சாதனைதானு என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியாது.

இவர்கள் மத்திய அரசுக்கு யோசனை சொல்கிருர்கள். எப்படி எப்படி மாநில அரசுக்கு அதிகமாகப் பணம் தரவேண்டும், அவர்களது வருமான வரியில் இருந்து, எக்சைஸ் ட்யூட்டியிலிருந்து எப்படி அதிகப்படியான வருமானத்தைக் கொடுத்தாக வேண்டும் என்று சொல்கிருர்கள். அவர்கள் அப்படிக் கொடுக்காமலேயே இருக்கிருர்களா என்ருல் அதுவும் இல்லை. காங்கிரஸ் அரசாங்கம் இங்கே இருந்தபோது இரண்டு வருஷத்திற்கு முன்னுல் 1966–67–ல் நமது மாநிலத்திற்கு 5,245 லட்சம் கொடுத்தார்கள் என்ருல், இவர்களது ஆட்சி வந்து போன 1967–68–ம் வருடம் 6,970 லட்சம் கொடுத்திருக்கிருர்கள். இவர்கள் கொடுத்த புள்ளி விவரப்படியே இவ்வாண்டு 7,009 லட்சம் கொடுக்கிருர்கள். கிட்டத்தட்ட 1,763 லட்சம் அதிகப்படியாகவே அவர்களிடம் இருந்து நமது மாநில அரசுக்கு வந்திருக்கிறது என்று இவர்களது புள்ளி விவரமே காட்டுகிறது. இது இரண்டு வருஷத்திற்கு முன்னுல் இருந்த நிலையோடு ஒப்பிடுகிறபோது, 35.5 சதவீதம் மிக அதிகமாக மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுப்பது உயர்ந்திருக்கிறது. இன்னும் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்பது தவறு அல்ல. அவர்கள் கொடுக்காததனுல் தான் இந்தச் சங்கடமான நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி மக்களை நம்பவைக்கப் பார்ப்பதுதான் சரியல்ல.

இவ்வாண்டு வரியே போடவில்லை என்று சொல்லுவது என் என்பதைக் கவனிக்கவேண்டும். வருகிற எப்ரல் திங்களில் நகரசபைத் தேர்தல் நடக்க இருக்கிறது. 70–க்கும் அதிகமான நகரசபைகளில் இன்றைய அரசின் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களே நேரில் மக்களைச் சந்திக்க வேண்டிய சங்கடமான நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்த நிதி நிலை அறிக்கையில் வரி போட்டுவிட்டால், தேர்தல் முடிவு தங்களுக்கு எவ்வளவு பாதகமாகப் போய்விடக்கூடும் என்று அஞ்சியே இப்போது வரிபோடாது விட்டிருக்கிருர்கள். புதுத் திட்டம் பிற்பாடு தெரிவிக்கப்படும் என்று சொல்லியும் இருக்கிருர்கள். ஆக தேர்தல் முடிந்த பிறகு இவர்கள் என்ன என்ன புது வரித் திட்டத்தைக் கொண்டுவரப் போகிருர்களோ அதுவும் தெரியவில்லை.

1966 பிப்ரவரி பட்ஜெட்டிலே வரி போடாததற்கு இதே கருத்தைத்தான் அன்றைக்கு எதிர்க் கட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் பலரும் சொன்ஞர்கள்.

மருத்துவத் துறையும், பொது சுகாதாரத் துறையும் இன்று வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 4-3-1966 அன்று இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது நன்றாக எடுத்துச் சொன்னார்கள், உணவு இல்லாமல் கூடக் காலம் தள்ளலாம், குடி தண்ணீர் கூட இல்லாது இந்தத் தர்மவான்கள் ஆட்சியில் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது என்றார்கள். இன்றைக்கு நிலைமை என்ன ? செங்கல்பட்டில் தண்ணீர் பற்றாக்குறை. நீலகிரியில் தண்ணீர் பற்றாக்குறை, கோயம்புத்தூரில் தண்ணீர் பற்றாக்குறை. ஏன் சட்டமன்றம் நடைபெறுகிற சென்னையிலேயே பல இடங்களில் தண்ணீர் கிடையாது. இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் இயற்கை நமக்குக் கருணை செய்யாவிட்டால், அதிகப்படியான ஜனங்கள் சென்னை நகரை விட்டே வெளியேற வேண்டியிருக்கும் என்பதாக மாநகராட்சி கமிஷனர் பத்திரிகைக்கு விட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கிறோம். இது எதைக் காட்டுகிறது ? இப்போது எந்த தர்மவான் ஆட்சி நடக்கிறது ? இயற்கை மோசம் செய்துவிட்டது என்று சொன்னால், யார் ஆட்சி செய்தாலும் இதே நிலைதான் என்பதை நாம் உணர்ந்துகொண்டாக வேண்டும். இயற்கையில் ஏற்படுகிற பாதகத்தைச் சமாளிக்கத்தான் நாம் யார் மீதும் பழிபோடாது—பல நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டாக வேண்டும். நீரினால்தான் பலவிதமான வியாதிகள் வருகின்றன் காலரா, ஜாண்டிஸ், டைபாயிட் போன்ற பல வியாதிகள் சென்னையில் இப்போது பரவுவதைப் பார்க்கிறோம். வெளியூர்கள் பலவற்றிலும் இருக்கின்றன. நல்ல சீரான முறையில் குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்றால், வாட்டர் சப்ளை-டிரைனேஜ் போர்டு என்பதாக—குடிதண்ணீர்—கழிவு நீர் வாரியம் ஒன்றை அமைத்தாக வேண்டும் என்று சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் பட்ஜெட் விவாதத்தின்போது குறிப்பிட்டேன். அப்படிச் செய்தால்தான் குடிதண்ணீர் திட்டத்தை விரிவாக சீக்கிரமாகச் செயல்படுத்த முடியும்.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூரில் ஒரு கோடி ரூபாய்க்கு குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது, அது நகர சபையினால்தான் செயல்படவில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நகரசபைகளுக்கான குடிநீர்த் திட்டங்களை நகரசபைகளே நிறைவேற்றிச் செயல்படுத்துவதில்லை. நகரசபைகள் அந்தத் திட்டங்களை அமைப்பது இல்லை. சர்க்காரினால்தான் அந்தத் திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட வேண்டும். அந்தத் திட்டங்களுக்கு சர்க்காரின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டால் அதன் பிறகு முனிசிபல் அண்ட் பப்ளிக் ஹெல்த் இன்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் என்ற அரசாங்கத்தின் பிரிவு அந்தத் திட்டங்களை ஏற்று நடத்தி செயல்படுகிறது. அந்தப் பிரிவானது அரசாங்கத்தின் அதிகாரத்திலேதான் இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் உள்ள நிதி வசதிக்கேற்ப அவர்களுக்கு அரசாங்கம் போடுகின்ற உத்திரவுகளுக்கிணங்க அவர்கள் வேலை செய்கிறார்களே தவிர, அந்தத் திட்டங்களுக்கு வேறு யாரும் பொறுப்பு எடுத்துக்கொண்டு அமைப்பதில்லை. அப்படியிருக்கும் பொழுது அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு டிபார்ட்மெண்டினால் ஏற்படுகிற காலதாமதத்திற்கு நகரசபைகளைப் பொறுப்பாக்கவும், அதன் காரணமாக், நகர மக்களைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கவும் கூடாது. இந்தச் சமயத்திலே இதற்காக நகரசபைகளுக்குக் கொடுக்கப்படும் கடன்கள், அதற்கான வட்டி இவையெல்லாம் எவ்வாறு வசூலிக்கப்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு நகரசபைக்குக் குடி நீர் திட்டத்திற்காக 10 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது என்றால் அரசாங்கம் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டில் அதை டெபாசிட் செய்துவிடுகிறார்கள். அந்தப் பணம் பிறகு அரசாங்கத்திற்குத் திரும்பி வந்துவிடுகிறது. அவ்வப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்கத்தின் நிதி வசதிக்கு ஏற்ப நேரத்திலே பப்ளிக் ஹெல்த் அண்ட் எஞ்சினியரிங் டிபார்ட்மெண்ட் மூலமாகக் கொடுக்கிறார்கள். எந்தத் தேதியில் அந்த நகரசபை கடனைப் பெற்றுக் கொண்டதோ, அந்தத் தேதியிலிருந்துதான் வட்டி கொடுக்க வேண்டும்.

எந்தத் தேதியிலே உத்தரவு போடப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து வட்டி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்தத் தேதியிலிருந்து பணம் பலன் தருகிறதோ அந்தத் தேதியிலிருந்துதான் தவணை முறையாக அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்படியில்லாமல், உத்தரவு போடப்பட்ட தேதியிலிருந்தே தவணைப் பணத்தையும் வட்டியுடன் சேர்த்து செலுத்தச் சொல்லுகிறார்கள். 5 வருஷம், 10 வருஷ காலத்திற்குக் கூட வட்டியும், கடன் தவணையும் சேர்த்துச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுவதால் நகரசபைகள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி அதன் காரணமாக வரிச் சுமை மக்கள் மீது ஏற்றப்படுகிறது. ஆகவே கடன் வாங்கி, அந்தக் கடனின் பலனை அனுபவிக்காமல் கடனையும் திருப்பிக் கொடுத்து, வட்டியையும் திருப்பிக் கொடுத்து மக்கள் அதனாலும் பலனும் பெறாமல் இருக்கக் கூடிய இந்தத் திட்டம் நல்லதுதானா ? இதிலே மாறுதல் செய்யக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் இவை எந்தத் தேதியிலிருந்து கடனின் பலனைப் பெறுகிறார்களோ, அந்தத் தேதியிலிருந்துதான் கடனையும், வட்டியையும் திரும்பிப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எந்தத் தேதியிலிருந்து உண்மையாக திட்டம் பலன் கொடுக்கிறதோ, அந்தத் தேதியைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் எந்தத் தேதியில் உத்தரவு போட்டார்களோ, அந்தத் தேதியை கணக்கில் வைத்துக் கொள்வது அநியாயம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வி இனத்தின் கீழே காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி அளித்து இருக்கிறார்கள். இது மகிழ்ச்சிக்குரிய காரியம். ஆனால் இது முன்பே செய்திருக்க வேண்டிய காரியம். இந்தக் கல்வி செதியினால் ஆயிரக்கணக்கான ஏழைகள் நல்ல பலனை அடைவார்கள். இதனால் மகிழ்ச்சியடைவார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் இதை ஒரு வரப்பிரசாதமாகக் கருதுவார்கள். ஆனால், முன்பே கொண்டு வந்திருந்தால் அவர்களுக்கு எல்லாம் நல்ல பலன் கிடைத்திருக்கும். புகுமுக வகுப்பில் அளிக்கப்பட்டிருப்பதைப் போன்று பி.டி.சி. கோர்சுக்கும் இலவசக் கல்வியைக் கொடுத்தால் பொருளாதார வசதியற்றவர்கள் படித்து, சிறிய சிறிய தொழில்கள் ஏற்படுத்துவதன் மூலம் நாட்டிலே தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தங்களின் வருவாயை ஈட்டிக்கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். இந்தத் துறையில் இலவசக் கல்வி பட்டப் படிப்புக்குக் கொண்டுவருவது என்பது இப்பொழுது அசாத்தியமாக இருந்தாலும், பாலிடெக்னிக்குகளுக்கும், இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டியூட்களுக்கும் புகுமுக வகுப்பிலே கொடுத்திருப்பதைப் போன்று இலவசக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு உதவியவர்களாக ஆவீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய கல்லூரிகள் திறக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரிகளுக்கு எல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்காகவும், திட்டத்தில் இடம் ஒதுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்தக் கல்லூரிகள் சரிவர இயங்க முடியும். கும்பகோணத்திலே இருக்கின்ற பெண்கள் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், ஹாஸ்டல் வசதியில்லாததன் காரணமாக அவர்கள் வேறு இடங்களிலே வாடகைக் கட்டடத்திலே தங்கிப் படிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். பல ஊர்களிலிருந்து பெண்கள் அங்கு வந்து தங்கிப் படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்பொழுது உள்ள கட்டடம் வெகு தூரத்திலே இருக்கிறது. காலையிலும், மாலையிலும் அவர்கள் சென்று வரக்கூடிய கஷ்டம் இருக்கிறது. ஆண்களாக இருந்தால் எந்த இடத்திலும் தங்கிப் படித்துக் கொள்ளலாம். ஆனால், பெண்கள் கல்லூரியாக இருக்கின்ற காரணத்தினாலே தனியாக அதற்கு ஒரு ஹாஸ்டல் வேண்டும். அது பற்றி இதிலே நான் எல்லாப் புத்தகங்களையும் படித்துப் பார்த்ததில், ஒன்றிலேயும் அது பற்றிச் சொல்லப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

வார்கள், அழகான துப்பட்டிக்காரன், வைத்திருக்கிறான் துப்பாக்கி, என்று சொல்லுவார்கள். ஆள் அழகாகவும், நன்றாகவும் பண்போடும் பேசும் அதே சமயத்தில் மனதிற்குள் பலவிதமான இன்னல்களை வைத்திருப்பது போல் இந்த பட்ஜட் அமைந்திருக்கிறது. இந்த பட்ஜெட்டை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்பொழுது வரி இல்லாத பட்ஜட் போல் தோன்றினாலும் கூட, எவ்வளவு பளு வரப்போகிறது, எப்பேர்பட்ட வரி வரப்போகிறது என்பதை சூசகமாக அறிவிக்கும் வகையில் இந்த பட்ஜட் அமைந்திருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. இராம. அரங்கண்ணல் : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய எழுத்தால், பேச்சால், அறிவாற்றலால், அன்பால் நம்மையெல்லாம் கட்டியாண்ட அறிஞர் அண்ணா அவர்கள் மண்ணுக்குச் சொந்தமாகி இன்றோடு ஒரு மாத காலம் முடிகின்றது. அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை நடக்கும் என்ற உறுதியினை அளிக்கின்ற வகையில் இன்றையதினம் நிதியமைச்சர் அவர்களாலே அளிக்கப்பட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கின்றது. அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலில் வளர்க்க விரும்பிய உன்னதமான பண்பினைத் தமிழ் நாட்டு அரசியலில் உருவாக்குவதற்கான முயற்சிகளை எல்லாம் எடுக்க வேண்டுமென்று இரண்டு தினங்களுக்கு முன்பு இன்றைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிகளை எல்லாம் பார்த்துக் கேட்டுக்கொண்டார்கள். எதிர்க் கட்சியைச் சார்ந்த அன்பர்கள். அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்திலும் அதற்குப் பிறகும் காட்டிய கண்ணியத்தையும், அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்துக்கு மானியம் வழங்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்த பண்பான யோசனையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பண்பும், அன்பும் வளர வேண்டுமென்பதற்காகத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே காங்கிரசுக்கு எதிராக ஒரு அரசியல் கட்சியை உண்டாக்கி, அந்த அரசியல் கட்சியை வளர்த்து வந்தார்கள். அவர்கள் விரும்பியது அந்த அன்பும் பண்பும் அரசியலில் உருவாக வேண்டுமென்பதுதான். அரசியலில் சிலர் நண்பர்களை விரோதிகளாக ஆக்கிக் கொள்வார்கள். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ விரோதிகளை எல்லாம் கூட நண்பர்களாக ஆக்கிக் கொண்டு, அவர்கள் எல்லோருமே பாராட்டுகின்ற நல்ல பேற்றினை பெற்றார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் அவர்கள் அரசியலில் காட்டிய அன்பு நெறியும், அரசியலில் எல்லோருடைய எண்ணங்களையும் கேட்டு நடந்து செல்ல வேண்டுமென்று எடுத்து கொண்ட பண்பான போக்குந்தான்.

அண்ணா அவர்கள் பொதுவாகக் குறிப்பிடுவார்கள்—அரசியல் என்பது காட்டாறு போல் இருக்கக்கூடாது, கனிமரச் சோலையைப் போல் இருக்க வேண்டும். பொதுவாழ்க்கை என்பது புகையும் எரிமலை அல்ல. அது பூந்தோட்டமாக இருக்கவேண்டும். என்று அடிக்கடி குறிப்பிடுவார்கள். அதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் காரணம் தமிழ்நாட்டில் உருவாகி வருகிற நல்ல ஜனநாயகப் பண்பினை இங்கிருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் சட்ட மன்றத்திற்குள் மட்டுமன்றி வெளியிலும் அந்த உணர்வினை உருவாக்குவதற்குப் பாடுபடவேண்டும். அப்படி பாடுபட்டு, நல்ல ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்ற அதே நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஏராளமான சிறுகதைகள், நல்ல கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் எல்லாவற்றையும் நமக்கு வழங்கிச் சென்றிருக்கிறார்கள். அவையெல்லாம் என்றையதினமும் நிலைத்து நிற்கக் கூடிய அளவுக்கு இலக்கியமாக விளங்கக் கூடிய நூல்கள். அந்த நூல்களுக்காக நம்முடைய அரசு அவர்களுடைய குடும்பத்திற்கு

ஒரு தொகையை ராயல்டியாக வழங்கிவிட்டு, நம்முடைய அரசே அந்த நூல்களை எல்லாம் என்றையதினமும் நிலைக்குமளவில் வெளியிட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில், நம்மையெல்லாம் ஆண்ட காலத்தில் எந்த அளவுக்கு அனுசரணையுடனும், எந்த அளவுக்கு எல்லாவற்றையும் மனதில் போட்டுக் கொண்டு வெளியிலே காட்டிக் கொள்ளாமல் நம்மை ஆண்டார்கள் என்று தெரியும். அவர்கள் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் முக்கியப் பொருளாதாரத் திட்டமாகக் கருதிக் கொண்டிருந்ததெல்லாம் தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் நல்ல வளர்ச்சியைப் பெற வேண்டுமென்பதுதான். அதிலே அவர்கள் பெருத்த அக்கறையைக் காட்டினார்கள். இந்த விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய நண்பர் காசிராமன் அவாகள், எந்தக் குற்றத்தைச் சொல்வது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது என்று புரியாமல், இந்த பட்ஜெட்டைப் பற்றிக் குற்றம் சொல்ல வழியில்லையே என்ற முறையில் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். குற்றம் குறைகளை சொல்ல வேண்டியதுதான். ஆனால் வரியே இல்லாத பட்ஜட் என்று வெளியிலே இருக்கின்றவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற நேரத்தில் வரிகள் புதைந்து இருப்பது போல் அவர்கள் பேசினார்கள். கடந்த 12 ஆண்டு காலத்தில் 370 கோடி ரூபாய்க்கு மாநிலத்தினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஒன்றை மறந்து விடக்கூடாது. வெள்ளைக்காரன் நம்மை ஆண்ட காலத்தில், சென்னை மாநிலத்தின்—ஆந்திரமும் சேர்ந்தது—பட்ஜட் 1929—30-ம் ஆண்டில் 20 கோடி ரூபாயாகத்தான் இருந்தது. திரு சுப்பிரமணியம் அவர்கள் பட்ஜட் போட்ட காலத்தில், "மாநிலத்தின் பட்ஜட் 100 கோடி ரூபாய்க்கு வராதா, அந்த பட்ஜட்டை நான் தர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்று சொன்னார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் 20 கோடி ரூபாய்க்கு பட்ஜட் போடுகிற நிலைமையில் இருந்த தமிழ்நாட்டு அரசு இன்றையதினம் வளர்ந்திருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகுதான் வளர்ந்தது என்று கருதக்கூடாது. மத்திய அரசின் பட்ஜட்டை எடுத்துப் பார்த்தாலும் கிட்டத் தட்ட 200 கோடி ரூபாயிலிருந்து 400 கோடி ரூபாய் வரை 15 ஆண்டுகளுக்கு முன்பு பட்ஜட் போட்டு வந்தவர்கள் இன்றையதினம் 3,500 கோடி ரூபாய்க்கு பட்ஜட் போடும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள். வரி போடாமல், அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய பாதையில் நடைபோட இந்த அரசு முயற்சிப்பதைப் பார்த்த நண்பர் திரு. காசிராமன் அவர்கள் எந்தக் குற்றத்தைச் சொல்லுவது என்று புரியாமல் இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள்.

(திரு. சா. மெய்யப்பன் தலைமை)

இரண்டாண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன மூ. ப. 11-00
சாதித்து விட்டது என்று கேட்கிறார்கள். அந்த நியாயமான வாதத்திற்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவிலே குறுவைச் சாகுபடி 1966–67-ல் 3·2 லட்சம் எக்கர்தான் செய்யப்பட்டது. ஆனால் 1967–68ல் குறுவைச் சாகுபடி மட்டும் 7·9 லட்சம் எக்கர் அதிகமாக நாம் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். குறுவைச் சாகுபடி மட்டுமல்ல. சம்பா சாகுபடியைப் பொறுத்தஅளவில் 1966–67-ல் 1·52 லட்சம் எக்கரில் தான் அந்தச் சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் 1967–68ல் 4 லட்சம் எக்கருக்கு அதிகமாக நாம் சம்பா சாகுபடியை அதிகப்படுத்தியிருக்கிறோம். இது ஒரு சாதனை இல்லையா என்று நான் கேட்க ஆசை படுகிறேன். அது மட்டுமல்ல. மின்சாரத்தைப் பொறுத்த வரையில் 1966-67-ல் 240 கோடி யூனிட்கள்தான் நாம் அளித்து வந்தோம் விவசாயத் துறைக்கு. ஆனால் 1967-68-ல் 400 கோடி யூனிட்கள் வழங்கியிருக்கிறோம். இது ஒரு சாதனை இல்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, பம்ப் செட்களைப் பொறுத்தளவிலே இந்தியாவிலேயே எந்த மாநிலமும் சாதிக்கமுடியாத அளவிற்கு கடந்த இரண்டாண்டு காலத்தில் லட்சத்திற்கு மேற்பட்ட பம்ப் செட்டுகள் நாம் வழங்கியிருக்கிறோம். வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவிலே, இது ஒரு சாதனை இல்லையா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். திரு. காசிராமன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், தமிழகம் நல்ல முறையில் பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு வாய்ப்பில்லாத ஒரு மாநிலமாக இருக்கிறது என்று. நம்மிடத்தில் காவிரி ஆறு இருக்கிறது என்று சொன்னாலும் இந்தியாவிலுள்ள வேறு பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதை அவ்வளவு பெரிய ஆறு என்று சொல்லிவிட முடியாது. இன்றைய தினம் நம் தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் நாலைந்து மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்கள் அனைத்தும் வானம் பொழியாதா அல்லது கீழேயிருந்து தண்ணீர் வராதா என்று எதிர்பார்க்கக் கூடிய மாவட்டங்களாகத்தான் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், ஆற்றுப் பாசனம் கிடைக்காதவொரு சூழ்நிலையில் தண்ணீரைத் தேடி நாம் வேளாண்மையைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்ற காரணத்தினால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் மின் சக்தியை அதிகமாகப் பெருக்கவும், பம்ப் செட்களை ஏராளமாக வழங்கவும் வேண்டும் என்கிற ஆர்வத்தோடு பணியாற்றி வந்தார்கள். அதன் காரணமாக நில அடைமான வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன் தருவதை பெருக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டார்கள், அதேபோல் செய்தார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஏற்படவேண்டுமென்பதில் அவர்கள் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டார்கள். அதையும் இந்த அரசு செய்திருக்கிறது. அதுமட்டுமன்றி, தனியார் வங்கிகளுக்கும் விவசாயிகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருந்து கொண்டிருந்தது. அந்தக் குறையைப் போக்க சிண்டிகேட் பாங்க் போன்ற தனியார் பாங்குகள் விவசாயிகளுக்குக் கடன் தரவும் விவசாயியோடு தொடர்பு கொள்வதற்கானதொரு சூழ்நிலையையும் அவர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. படி அரிசித் திட்டமும் அண்ணா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அது உன்னதமானதொரு பொருளாதாரக் கொள்கை என்பதனை நன்கு படித்த பொருளாதார நிபுணர்கள் நன்கு அறிவார்கள்.

அதுமட்டுமன்றி, இன்றைய தினம் நம் அரசு அடுத்த ஆண்டு மூன்று லட்சம் ஏக்கரில் மிகப் பயன் தரக்கூடிய விதைகளை விளைவிக்கவும் ஒரு லட்சம் ஏக்கருக்கு அதிகமாக இருபோகம் செய்வதற்கான முயற்சியையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் தண்ணீர் வசதி அதிகமற்ற நம் மாநிலம் எப்படியாவது வேளாண்மைத் துறையைப் பெருகுவதற்கு பாடுபட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத்தான். நம் விவசாயிகள் இன்றைய தினம் உரங்களைப் பயன் படுத்திவதில் அதிக அக்கறை காட்டிவருகிறார்கள். பத்தாண்டுகளுக்கு முன்பு கிராமத்தில் உள்ளவர்கள் சாணத்தையும், குப்பையையும் தான் உரமாகக் கருதிக் கொண்டிருந்தார்கள். இன்றைய தினம் நம் விசாயிகள் யூரியா, நைட்ரஜன் போன்ற உர வகைகளைத்தான் அதிகமாக வரவேற்கிறார்கள். கடந்த ஆண்டில் இந்தியாவிலேயே நம் மாநிலந்தான் அதிகப்படியான உர வகைகளைப் பயன்படுத்திய மாநிலம் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள், மின்சார பம்ப் செட்கள் அதிகமாக வழங்குவது, உர வகைகளை தாராளமாகக் கொடுப்பது என்ற முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இந்த முயற்சிகளுக்கு மத்திய அரசிலிருந்து நமக்கு ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும் தொல்லையாவது கிடைக்காமல் இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. காசிராமன் அவர்கள் இங்கு மிகவும் குறைப்பட்டுக் கொண்டு பேசினார்கள். மத்திய அரசில் இரண்டு தினங்களுக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் பட்ஜெட்டைப் பார்க்கும் நேரத்தில், எவைகளுக்கு அவர்கள் வரியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தால் உர வகைகளுக்கு 10 சதவீதம் வரியை அதிகப்படுத்தி அதன் மூலம் 22 கோடி ரூபாய் கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதேபோல் பம்ப் செட்டுகள், நாம் ஒரு லட்சம் பம்ப் செட்கள் வழங்கியிருக்கிறோம். இன்னும் எதிர்காலத்தில் அதிகப்படியாக வழங்குவதற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த பம்ப் செட்கள் மூலம் நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அவற்றிற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவையில் பம்ப் செட்களுக்கு 20 சதவீதம் வரியை ஆக்கியிருக்கிறது. அதன் மூலம் இரண்டு கோடி ரூபாய்தான் வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

நான் இவற்றையெல்லாம் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு பொருளாதாரத்தின் அடிப்படை எது என்பதைப் புரிந்துகொண்டு, எந்த அடிப்படையில் நம் வாழ்வை உருவாக்கவேண்டுமென்பதைப் புரிந்து கொண்டும் தன் பட்ஜெட்களைப் போட்டு காரியங்களை ஆற்ற வேண்டுமென்றிருக்கிற நேரத்தில் நமக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்று சொன்னாலும் எந்தவிதமான உதவியையும் தருவதற்கான சூழ்நிலையில் மத்திய அரசு இல்லை என்று சொன்னாலும் மத்திய அரசு இத்தகைய திட்டங்களை நமக்கு குந்தகமாகப் போடுவதற்கு முயற்சிக்கிறது. என்று சொன்னால் எதிரில் அமர்ந்திருக்கிற நண்பர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன்—எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கேயில்லை—எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தத் தடவை பேசினாலும் விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள், விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்கவில்லை, அவர்களுக்குப் போதுமான விலை கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்றெல்லாம் அழுத்தந்திருத்தமாக பேசுவார்கள். ஆனால் அவர்கள் நாணயமானவர்கள், சொன்னதைச் செய்வதில் வல்லவராகவும் இருப்பார் என்று நான் கருதுகிறேன்.

இன்றையதினம் விவசாயிகளுக்கு பெரிய இடையூறு மத்திய அரசால் இழைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடையூறைப் பற்றி தட்டிக் கேட்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவர்கள் கட்சியைச் சார்ந்த கட்சி உறுப்பினர்களும் என்ன செய்திருக்கிறார்கள்? ஏதாவது ஒரு தீர்மானத்தை இங்கு கொண்டு வர இருக்கிறார்களா ? அல்லது டெல்லிக்குப் போய் அறப் போராட்டம் நடத்துவது என்று சொன்னால் நானும் கூட அவர்களோடு கலந்து கொள்வதற்குத் தயாராகயிருக்கிறேன். அதையாவது செய்யத் தயாராகயிருக்கிறார்களா ? திராவிட முன்னேற்றக் கழக அரசின் தத்துவத்தை யாராலும் குறை கூற முடியாது. திரு காசிராமன் அவர்கள் பேசும் நேரத்தில் நான் அதைப் பார்த்தேன். மத்திய அரசு மாநில அரசு இவற்றிற்கு இடையேயுள்ள நிலை பற்றிச் சொன்னார்கள். மாநில அரசு கையாலாகாமல் இருந்து கொண்டு மத்திய அரசின் மீது பழி போடுவதாகச் சொன்னார்கள். மத்திய அரசு என்றால் என்ன என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மறைந்து விட்ட அண்ணா அவர்கள் ஒரு யோசனையைக் கிளப்பினார்கள். மத்திய அரசு என்றால் இன்றிருக்கிற அரசுக்குப் பதிலாக எப்படி யுனைட்டெட் நேஷன்ஸ் ஆர்கனிசேஷன் ஐக்கிய நாட்டு சபை என்று எப்படி ஒரு ஆர்க்கனைசேஷன் இருக்கிறதோ, எப்படி உலகத்திலுள்ள நாடுகளில் பிரதிநிதிகள் எல்லாம் அங்கு போய் உலக விவகாரங்களை எல்லாம் விவாதித்துக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் டெல்லியில் "இந்தியன் ஸ்டேட்ஸ் ஆர்கனைசேஷன்" ஐ.எஸ்.ஓ. என்பது மாதிரி ஒரு சபையை உருவாக்கி அந்த சபையில் நம் பிரச்சினைகளை எல்லாம் விவாதித்துக் கொள்ளலாம்—மைசூர் எல்லைத் தகராறு விவாதிக்கலாம், கேரளா-தமிழ்நாடு தண்ணீர் தகராறு விவாதிக்.

[திரு நா. காசிராமன்] [1969 மார்ச் 3

சென்ற ஆண்டிலேயும், அதற்கு முந்தின ஆண்டிலேயும் கூட பட்ஜெட் விவாதத்தின்போது நான் சொன்னேன் சேலம் இரும்பு உருக்காலையைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப்பதைவிட நாம் என்ன செய்ய வேண்டுமென்று குறிப்பாகச் சொன்னேன். முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் நல்ல யோசனை என்று சொன்னார்கள். அந்த யோசனையை இப்பொழுது ஏற்றுக்கொண்டதற்காக என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன். அதன்படி சர்க்கார் ஒரு சிறு தொகையை அதற்காக ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய காரியம்.

கடந்த ஓர் ஆண்டிலே தொழில் துறையிலே அமைதி எப்படி இருந்தது என்பதைப் பார்த்தால் அமைதி குன்றியிருந்தது என்பதைத்தான் பார்க்க முடிகிறது. உதாரணமாகச் சொன்னால், சென்னையிலே நடந்து வரும் இந்து பத்திரிகை பல நாட்கள், பல வாரங்கள் மூடப்பட்டு இருந்தது. சுதேசமித்திரன் பத்திரிகை பொறுத்தவரையிலும் கூட அப்படித்தான் பல நாட்கள் மூடப்பட்டிருந்தது. சிம்சன் கம்பெனியைப் பார்த்தாலும் அது மூடப்பட்டதால் 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஈசன் எஞ்சினியரிங் கம்பெனியைப் பொறுத்த வரையிலும் பல தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டார்கள். தமிழ்நாட்டிலே எவ்வளவோ இடங்களிலே பலவிதமான காரணங்களினால், அரசியல் கட்சி காரணங்களினாலும் பல வேறு காரணங்களினாலும் அமைதியின்மை ஏற்பட்டு தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பங்களும் வேலையின்றி அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழில் துறையில் அமைதி குறைவதை சர்க்கார் விடக்கூடாது. புதிதாகத் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள், இப்பொழுது தொழில் நடத்திக்கொண்டிருக்கக்கூடியவர்கள் தொழிலதிபர்கள் தொழில்களைப் பெருக்குவதற்கும் அதன் மூலம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும் உற்சாகம் எடுத்துக்கொள்ளாத நிலை ஏற்பட்டுவிட்டால் அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே பெருகிவிடும். இது நமக்கும் நல்லதல்ல, நாட்டிற்கும் நல்லதல்ல. அரசாங்கத்திற்கும் நல்லதல்ல. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. இப்பொழுதே 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

திரு. நா. காசிராமன் : இரண்டு விஷயங்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சட்டம் ஒழுங்கு பற்றி அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன். தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், மாயவரம், கீழ்த்தஞ்சை போன்ற பகுதிகளிலே தீவைப்பு நடந்திருக்கிறது. மர்மத் தீயாக நடந்திருக்கிறது. அதையெல்லாம் உடனடியாகக் கவனிக்காவிட்டால், கூலிப் பிரச்னைகள் எழுந்துள்ள கீழ்த் தஞ்சையிலே விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுவார்கள். சொத்து சுதந்திரம் பாதிக்கப்படும் என்று சென்ற ஆண்டு சொன்னேன். அதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்றும் சொன்னேன். அதற்கு அப்போதிருந்த முதலமைச்சர் அவர்கள் அதற்காக அங்கே தனி போலீஸ் படை ஒன்று ஏற்படுத்தி ஆவன செய்வோம் என்று சொன்னார்கள். என்ன நடந்தது ? அதற்கு மாறாக அங்கே இருக்கிற போலீஸ் படையை, ஸ்பெஷல் போலீஸ் படையை, இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னாலேதான் சொன்னார்கள், கலைத்து அதில் உள்ள பெரும் பகுதிப் போலீசாரை சாதாரண போலீஸ் படையில் உள்ள காலி ஸ்தானங்களில் சேர்த்திருக்கிறார்கள். போலீசை அதிகமாக்காவிட்டாலும் இருக்கிற போலீசை கலைக்காமல் வைத்திருக்க வேண்டும். அப்படி இருந்தால் உடனடியாக அவர்கள் சென்று நடவடிக்கைகள் எடுக்க முடியும். கீழ்த் தஞ்சை, நன்னிலத்திலே விளாகம், கொறடாச்சேரி..........

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கலைக்கப்பட்டதற்குக் காரணம் மத்திய அரசு போலீஸ் படைக்கு ஆள் தேவை என்று சொன்னதால், அதைக் கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, கலைக்கப்பட்டவர்களுக்கு, அவர்

1969 மார்ச் 3] [திரு. மு. கருணாநிதி]

கள் அந்தப் படையிலே சேர விரும்பாத காரணத்தால், அந்தந்த மாவட்டதில் இருக்கிற காவல் துறைகளிலே வேலை கொடுக்கப்பட்டு அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. நா. காசிராமன் : மத்திய அரசு யோசனை சொல்லிற்று. அதனால் செய்தோம் என்று சொல்கிறார்கள்..........

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசு ஆள் குறைப்புச் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்கு ஆள் வேண்டுமென்று சொன்னார்கள், அதனால் அது கலைக்கப்பட்டு, பின்பு அதிலேயிருந்தவர்கள் அதிலே சேருவதற்கு மறுத்துவிட்ட காரணத்தாலே அவர்களையெல்லாம் காவல் துறையினர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. நா. காசிராமன் : மத்திய அரசு இந்தப் போலீஸ் படையில் உள்ளவர்கள் தங்களுக்கு வேண்டுமென்ற கேட்ட காரணத்தால் கலைக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டில் போலீஸ் படையில் சேர்ந்து வேலை செய்ய சாமர்த்தியமும், இஷ்டமும் உள்ளவர்களுக்கா பஞ்சம் ? இந்தப் படையைக் கலைத்துத்தான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இல்லாமல், இந்தப் படையைக் கலைக்காமல் வைத்துக்கொண்டு இருந்தால், போலீஸ்காரர்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதும் அதனால் ஒன்றும் ஆபத்து வந்துவிடவில்லை. அது கலைக்கப்பட்டாலும் அதிலிருந்த 641 பேரும் காவலர்களாகத்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. நா. காசிராமன் : அவர்களுக்குரிய வேலை வாய்ப்பைப் பற்றிச் சொல்லவில்லை. நாட்டைப் பாதுகாக்க போலீஸாரின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மன்னார்குடியில் போலீஸ்காரர்களின் எண்ணிக்கைக்கும், ஜனத் தொகையின் எண்ணிக்கைக்கும் இடையே கணிசமான வித்தியாசம் இருக்கிறது என்பதை உணர்ந்து பொதுமக்கள் உதவி செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பொது மக்கள் உதவி செய்ய என்றும் தயாராக இருக்கிறார்கள். சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்க போலீஸ்காரர்கள் இருந்தால்தான் முடியும். நடேச வாண்டையார் கொலை செய்யப்பட்டது, நன்னிலத்தில் பெண்பிள்ளை விவசாயம் செய்து அதன் பலனை அனுபவிக்க முடியாதபடி ஒரு சிலர் தடுப்பது, தடுப்பவர்கள் மீது மற்றவர்கள் நடவடிக்கை எடுப்பது போன்ற சம்பவங்களைப் பார்க்கும்போது சட்டம், ஒழுங்கு இருக்கிறதா, சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்ற எண்ணங்கள் ஏற்படுகின்றன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குற்றம் செய்பவர்கள் முன்கூட்டியே சொல்லிவிட்டுப் புறப்படுவது இல்லை. அப்படிச் சொன்னால் போலீஸ் உடனே குறுக்கிட்டுத் தடுத்துவிட முடியும். குற்றம் செய்தவர்கள் இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நல்ல செக்ஷன்கள்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. நா. காசிராமன் : வாஸ்தவந்தான். குற்றம் செய்பவர்கள் சொல்லிவிட்டுச் செய்வதில்லை. கொலை செய்பவன் சொல்லிவிட்டுச் செய்வதில்லை. இருப்பினும் நம்முடைய போலீஸார் எந்தெந்த இடத்தில் என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்று அறிந்து அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். அதுவும் தமிழ்நாட்டு போலீஸார் அவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். விருத்தாசலத்திலே, பொன்னேரியிலே மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட, ஊரிலுள்ளவர்கள் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இம்மாதிரி சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒரு சம்பவம் சொல்லாமல் திடீரென்று நடக்கிறது என்றால், அதைத் தொடர்ந்து சங்கிலித் தொடர் போல் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். எங்கள் பக்கத்தில் ஒரு பழமொழி சொல்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1969 மார்ச் 3

கலாம் என்றும், பொதுப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் எடுத்து விவாதித்து அவற்றின் மீது முடிவு எடுக்கக் கூடிய ஒரு ஐ.எஸ்.ஓ. ஆர்கனைசேஷன் டெல்லியில் இருந்தால் போதும் என்று அவர்கள் சொன்னார்கள். அரசியல் சிந்தனையாளர்கள் யோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மையை நான் உணர்வேன். அதன் புனிதத் தன்மையை நான் உணர்வேன். அதைக் காப்பாற்றவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அரசியல் சிந்தனையை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அதனால் நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம், அரசியல் சிந்தனையாளர்கள் யோசிக்க வேண்டும்.

இன்றைய தினம் டெல்லியில் உள்ள பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட 600 பேர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொகை வருடந்தோறும் வளர்ந்து கொண்டுதான் போகப் போகிறது. 600, 700 ஆகலாம், 700, 800 ஆகலாம். இப்படி தொகை அதிகம் ஆக ஆக நம் பாராளுமன்றத்தின் மூலம் இந்திய நாட்டிற்கு என்ன பயன் கிடைக்க இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள் ? என்ன பயன்தான் கிடைக்க முடியும் ? பாராளுமன்றத்தையே கலைத்துவிடலாம், பாராளுமன்றமே தேவையில்லை இந்தியாவிற்கு என்று கருதுகிறேன், இந்தியாவிலுள்ள மாநிலங்களின் சட்டசபைக்களுக்கு பூர்ண அதிகாரங்களும், பூர்ண உரிமையும் அளித்துவிட்டு டில்லியில் தமிழகத்தின் பிரதிநிதியாக கவர்னரே கூட இருக்கலாம். அப்படி கவர்னரோ அல்லது தமிழ்நாடு சட்டமன்றம் தேர்ந்தெடுத்திருக்கிற ஒரு பத்து பேர்களோ டெல்லிக்கு அனுப்பப்பட்டு நூறு அல்லது இருநூறு பேர்கள் கொண்டதொரு ஆலோசனை சபை டெல்லியில் ஏற்பட்டு—டெல்லியில் கூட ஒரு சர்க்கார் இருக்கலாம். ஆனால் அந்தச் சர்க்காருக்கு இன்றையதினம் இருக்கும் அளவிற்கு அதிகாரம் இருக்கத் தேவையில்லை. இன்றையதினம் பார்க்கிறோம், இங்கே ஒரு கல்வி இலாக்கா இருக்கிறது. அங்கே ஒரு கல்வி இலாக்கா இருக்கிறது. இங்கே ஒரு சுகாதாரத்துறை அமைச்சர், அங்கே ஒரு சுகாதார அமைச்சர், இங்கே பட்ஜெட் போடுவதற்காக ஒரு நிதி மந்திரி, அங்கே ஒரு நிதி மந்திரி, இங்கே ஒரு போலீஸ் மந்திரி, அங்கே ஒரு போலீஸ் மந்திரி, இப்படி எதற்கெடுத்தாலும் இங்கே ஒருவர், அங்கே ஒருவர். எழு நாட்களுக்கு முன்னால் ஆச்சாரிய கிருபாளானி அவர்கள் பேசிய பேச்சு வேடிக்கையாக இருக்கிறது, அவர்கள், யார் யார் மந்திரி, யார் யார் பாராளுமன்ற உறுப்பினர் என்றே தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு 59 பேர், 60 பேர் மந்திரிகளாக உட்கார்ந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சென்னை நகரத்தை எடுத்துப் பார்த்தால், மாநில அரசினுடைய அலுவலகங்கள் எத்தனை, மத்திய அரசினுடைய அலுவலகங்கள் எத்தனை என்று பார்த்தால், தமிழக அரசினுடைய ஆபீஸ்களைவிட மத்திய அரசின் ஆபீஸ்கள்தான் அதிகமாக இருக்கின்றன. ஒரு தடவை பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள் டெல்லி மாநகரம் "பைல்களின் காடாக" ஆகிக்கொண்டிருக்கிறது என்று. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் அதிகச் செலவு என்று மொரார்ஜி தேசாய் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிர்வாக எந்திரத்திற்காக இந்த 140 கோடி ரூபாய் அதிகச் செலவு ஆகியிருக்கிறது. அங்கே 250 கோடி ரூபாய்க்கு பற்றுக்குறை பட்ஜெட் தாக்கல் செய்து இருக்கிறார்கள். இப்படி இரண்டு ஆட்சிகள் நடக்கின்றன. நமது மாநிலத்திற்கென்று சில அதிகாரங்கள் இந்திய அரசியலமைப்பிலே வழங்கப்படுகிறது. அதை ஒழுங்காகக் காப்பாற்ற முடிகிறதா என்று பார்த்தால் இல்லை, சுகாதார அமைச்சர் ஒரு முடிவு எடுத்தாக வேண்டுமென்றால், "ஆல் இந்தியா மெடிகல் சர்வீஸை" ஆலோசனை கலக்க வேண்டும். எதற்காக இந்தச் சூழ்நிலை ஏற்பட வேண்டும் ? 3,700 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு பட்ஜெட் போடுகிறது என்றால், அதற்கான வரி எங்கிருந்து வசூலிக்கப்படுகிறது ? மத்திய அரசுக்கு என்று ஒரு மக்கள் கூட்டம் தனியாக இருந்து அவர்கள் வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்களா ? இல்லை. மாநில அரசுக்கு 270 கோடி ரூபாய்க்கு யார் வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்களோ

1969 மார்ச் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

அவர்கள்தான் மத்திய அரசுக்கு 3,700 கோடி ரூபாய்க்கு வரி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் இந்திய நாட்டின் பாதுகாப்பைக் கவனிக்கும் துறையாக, இந்திய நாட்டின் பண்பாட்டைக் காப்பதற்கான துறையாக, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை உருவாக்கும் அமைப்பாக ஆகிக்கொண்டு, மற்ற அதிகாரங்களை மாநிலத்திற்குப் பகிர்ந்தளிக்கும் சூழ்நிலை வரவேண்டுமென்ற சிந்தனையை அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்ல, திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள், தொழில் துறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எதைச் சாதித்துவிட்டது என்று. தொழில்துறையில் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் மற்ற மாநிலங்கள் எதைச் சாதித்து விட்டன என்று கேட்டால் அதைத் தவறாகக் கருதக்கூடும். ஒரேயொரு புள்ளி விவரத்தை மட்டும் அளிக்க விரும்புகிறேன். ஒரு மாநிலத்தினுடைய மொத்த வருவாய் இன்னின்ன இனங்களில், எவ்வளவு எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் அந்த வகையில் நம்முடைய தமிழகத்தினுடைய இரண்டாண்டு வருவாய் 1966–67-இல் 279 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு கணக்கிட்டுப் பார்த்தால் தொழில் மூலமாக நம்முடைய தமிழக அரசுக்கு மொத்த வருவாய், தமிழகத்தின் மொத்த வருவாய் 1967–68-இல் 285 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? தொழில் துறையில் அமைதி இல்லை என்பதையா காட்டுகிறது, தொழில் வளர்ச்சி பெருகவில்லை என்பதையா காட்டுகிறது ? இது தொழில் துறையினுடைய முன்னேற்றம், வருவாய் என்பதைக் காட்டுகிறது என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, தொழில் துறையில் நாம் நல்ல அக்கறை காட்டுகிறோம் என்பது மட்டும் அல்ல உற்பத்தியான பொருள்களை விற்க வேண்டுமென்பதில் பெருத்த அக்கறை காட்டுகிறோம். நம் மாநிலத்திலே உற்பத்தியாகக்கூடிய பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டு வருகின்றன. அதன் அளவு 60 கோடி, 65 கோடி என்றுதான் இருந்தது, அதை 100 கோடியாக ஆக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய இலட்சியம் என்று மூன்றாண்டுகளுக்கு முன்பு தொழில் அமைச்சராக இருந்தவர்கள் சொன்னார்கள். அதைப் பெறுவதற்கு தமிழக அரசு எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சிறு தொழில்களில் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்வதற்கு நிரந்தரப் பொருட்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். அதேபோல வெளிநாட்டினரும் வாங்கும் வகையில் டெல்லியில் "ஸ்டேட் எம்போரியம்" ஒன்றை நிறுவவும் வகை செய்திருக்கிறோம். இன்னும் பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளை, நேரமில்லாததால் விளக்க விரும்பவில்லை. நான் குறிப்பிட ஆசைப்படுவது, இங்கு இருக்கும் பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பதிலே நாம் அக்கறை காட்டுகிறோம்.

இந்த பட்ஜெட்டில் குறிப்பிடக்கூடிய அம்சமாக இருப்பது பி.யு.சி. மாணவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதுதான். இதைப் பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் உண்டு. எல்லோருக்கும் இலவசக் கல்வியை அளிப்பதா ? அல்லது அதிகமான வசதியுள்ளவர்களிடமிருந்து பணத்தை வாங்கி, வசதியில்லாதவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுப்பதா என்று இரண்டுவிதமான கருத்துக்கள் இருந்தாலும், ஒரு சோஷலிச சமுதாயத்தில் கல்வி போன்ற அறிவு வளர்ச்சித் துறைகள் இலவசமாக இருக்க வேண்டுமென்ற தத்துவத்தைக் காட்டும் முறையில், இந்த ஆண்டு அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, முன்னோடியாகச் செயல்படத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் பஞ்சாலைத் தொழில், மற்ற விவகாரங்கள் பற்றிப் பேச நேரம் இல்லாததால் அவற்றை நான் விட்டு விடுகிறேன். கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். " யூனிவர்ஸிட்டி கிராண்ட்ஸ் " கமிஷன் முன் சொல்லியிருந்தது, அதாவது ஒரு கோடி மக்கள் வாழும் பகுதிக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று சொல்லியிருந்தது. இந்த

வகையில் பார்த்தால், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 4 பல்கலைக் கழகங்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தினை நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த பொழுது வலியுறுத்திப் பேசிக்கொண்டு வந்திருக்கிறோம். அதை நான் இப்பொழுது நம்முடைய கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். சென்னையிலே ஒரு பல்கலைக் கழகம், சிதம்பரத்திலே ஒரு பல்கலைக் கழகம், இப்பொழுது மதுரையிலே ஒரு பல்கலைக் கழகம் இருக்கின்றன. அடுத்து நான்காவது பல்கலைக் கழகம் ஒன்றை கோயம்புத்தூரிலே ஏற்படுத்த வேண்டும் அவ்வாறு ஏற்படுத்தி அதை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வடார்க்காடு ஆகிய மாவட்டங்களுக்கு உரியதாக ஆக்கவேண்டும், அந்த பல்கலைக் கழகத்திற்கு "அண்ணா பல்கலைக்கழகம்" என்ற பெயரை இட வேண்டும், அதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு. ரா. ரெத்தின தேவர்: தலைவரவர்களே, மறைந்த நமது முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது ஸ்திரமான முறையிலே, நல்லமுறையிலே காணப்படுகிறது. ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்சினைகளிலே சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு என்ற முறையில் இருக்கிறார்கள். செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றிவருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, செகண்டரி கிரேடு பாஸ் பண்ணியவர்களுக்கு, அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே நியமித்து, அதற்கான உத்தியோகத்தைக் கொடுத்து ஏற்பாடு செய்ய இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, செங்கற்பட்டு, வடார்க்காடு போன்ற மாவட்டங்கள் பஞ்சப் பிரதேசம் என்று சொல்லப்பட்டது. அதேபோல இராமநாதபுரம் மாவட்டமும் மிகவும் மோசமான நிலையிலே, பஞ்சமான நிலையிலே எந்தவிதமான விளைச்சலும் இல்லாது சாவியாகிவிட்டது. அது கனம் அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். பொதுவாக, அந்தப் பகுதியிலே உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள். திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்குப் பிழைப்பை நாடிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதியிலே, பழம் பாக்கிகளை பழைய லோன் பாக்கிகளை, வசூலிப்பதில் அதிகாரிகள் கெடுபிடி செய்து கொண்டு வருகிறார்கள். எனவே, பழைய வரி பாக்கிகளை அரசு நிறுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு பஞ்ச நிவாரண வேலைகளை உடனடியாகத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நமது முதலமைச்சரவர்கள் 40 இலட்சம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கியிருப்பதாகக் கூறினார்கள். அந்த மாவட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றாலும் குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் மிகவும் பிற்பட்ட பகுதி அதிலும் குறிப்பாக முதுகளத்தூர், கடலாடி போன்ற யூனியன் மிகவும் பிற்பட்ட பகுதி என்பது முதல் அமைச்சரவர்களுக்கு நன்றாக தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, விகிதாச்சார நிலையில், ஒவ்வொரு யூனியனுக்கும் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்ய முற்பட்டிருக்கிறதோ, அதே விகிதாச்சார முறையில் முதுகளத்தூர், கடலாடி போன்ற யூனியன்களுக்கும் ஓரளவு ஒதுக்கி நிவாரணத்தை நல்லமுறையிலே அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தாற்போல், இராமநாதபுரம் மாவட்டத்திலே தண்ட வட்டி என்று ஒரு வட்டி வசூல் செய்கிறார்கள். ஒரு குடியானவன் 5 வருஷத்திலே 10 வருஷத்திலே திருப்பிக் கொடுத்து விடுவதாக ரூ. 1,000, ரூ. 2,000 லோன் வாங்குகிறான். மற்ற மாவட்டங்களைப் போன்றதல்ல, இராமநாதபுரம் மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி, வறட்சி என்று சொல்லக் கூடிய நிலைதான் இருக்கிறது. மழை பெய்யாததன் காரணமாக, அல்லது வெள்ளத்தின் காரணமாக அந்தப் பகுதி வறட்சியால் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, கிழக்கு இராமநாதபுரம் பகுதி அந்த முறையில் பாதிக்கப்படுகிறது. வறட்சிக்குக் காரணம், மழை பெய்யாதது, அல்லது வெள்ளம். இராமநாதபுரம் வட்டம் இப்படி இருப்பதற்குக் காரணம் 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியிலே அந்தப் பகுதி, குறிப்பாக முதுகளத்தூர் பகுதி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே கண்மாய்களுக்கோ, வாய்க்கால்களுக்கோ, தொழில் நுணுக்க ரீதியாக, டெக்னிக்கலாக எந்தத் திட்டமும் தீட்டப்படவில்லை. வெள்ளத்தினால் பஞ்சம் ஏற்படுகிறது, அல்லது வறட்சியினால் பஞ்சம் ஏற்படுகிறது. அந்த பஞ்சத்தின் காரணமாக விவசாயிகள் குறிப்பிட்ட நேரத்திலே வாங்கிய பணத்தை திருப்பிக் கட்ட முடியாததன் காரணமாக, தண்டத் தீர்வை என்று சொல்லக் கூடிய அந்த தீர்வையை ரத்து செய்து உண்மையிலே அந்த அசலுக்கு உரிய வட்டி எவ்வளவோ, அரசாங்கத்தினுடைய வட்டி எவ்வளவோ அதை வசூல் செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் நாராயணக் கருதிமால், பெறலையாறு போன்ற சில திட்டங்களுக்கு சூப்பரிண்டெண்டிங் என்ஜினீயர் அவர்களால் எஸ்டிமேட்ஸ் தயார் செய்யப்பட்டு, நமது தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு, சென்னைக்கு எஸ்டிமேட்ஸ் வந்திருக்கின்றன. பொதுவாக, அந்த திட்டங்களைக் கவனித்து, அப்படிப்பட்ட சிறிய திட்ட வேலைகளை உடனடியாகத் துவக்கி, அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்ட வேலைகளை உடனடியாகத் துவக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டி-நோட்டிஃபைட் டிரைப்ஸ், மாஜி-குற்ற பரம்பரையைச் சார்ந்தவர்களுக்கு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மாநில அரசு எம்.பி.பி.எஸ்., என்ஜினீரிங் போன்ற உத்தியோகக் கல்லூரிகளில் சில பெர்சென்டேஜ்கள் ஒதுக்குவதற்கு இந்தப் புதிய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே சில பிரச்னைகள் இருக்கின்றன. கமுதி ஊராட்சி ஒன்றியத்தின் 1961-வது ஆண்டிலிருந்து 1966-வது ஆண்டு முடிய, கணக்குகளை, தணிக்கையாளர் தணிக்கை செய்ததன் மூலம் ஆடிட் அப்ஜெக்ஷன், ஆட்சேபனை செய்த தொகை ரூ. 10,38,560·18 காசுகள். இந்தப் பிரச்னை எப்படி இருக்கிறது, பணம் எப்படிப் போயிருக்கிறது என்று இந்த அரசுக்கு ஏற்கெனவே மனு ஒன்று கொடுத்தேன் மறைந்த முதல் அமைச்சர் அவர்களிடமும் கொடுத்துள்ளேன். அதன்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள் ஆனால் துரதிருஷ்டவசமாக அவர்கள் மறைந்துவிட்டார்: அவரோடு இருக்க நமக்குக் கொடுத்து வைக்கவில்லை. இனிமேலாவது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அந்த கமுதி பஞ்சாயத்து யூனியனிலே அந்த ரூ. 10,38,560·18 காசுகள் எப்படிப் போயிருக்கிறது. எங்கே போயிருக்கிறது என்பதை ஆராய வேண்டும். கெஸட் பதிவு பெற்ற ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு அதை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் பல முறை இந்த அரசுக்கு தெரிவித்தும் அது எதுவும் செய்யாத காரணத்தினால் தற்பொழுதும் அந்த யூனியனிலே சில காரியங்கள் நடந்து வருகின்றன. ராமசாமிவெட்டி என்ற கிராமத்திலே பஞ்சாயத்து யூனியன் சேர்மன் ஒருவர் ஹைஸ்கூல் வாங்கித் தருவதாகச் சொல்லி ரூ. 5,000

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1969 மார்ச் 3

அதற்கு மேல் நீண்ட பல ஆண்டுகளாக இந்த ஆண்டு வருமா, அடுத்த ஆண்டு வருமா, இரண்டாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா, மூன்றாவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா, நான்காவது திட்டத்திலாவது எடுத்துக்கொள்ளப்படுமா என்ற ஐயப்பாடு இருக்கக்கூடிய நேரத்தில், மறைந்த மாவீரர் அறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை மத்திய சர்க்காரிடமும், திட்டக்குழுவினிடமும் வற்புறுத்தியதின் காரணமாக விரைவிலே மத்திய சர்க்கார் சேலம் உருக்காலையை ஏற்படுத்துவதற்கு சம்மதம் தெரிவிக்காமலிருந்தும், டெல்லி அரசு இதை ஒத்திப்போட்டுக் கொண்டு காலதாமதப்படுத்தினாலும், அதற்கான முதல் நடவடிக்கையை மேற்கொண்டு, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே ரூ. 10 கோடி ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், இந்த ஆண்டில் வேலை துவக்குவதற்கு ரூ. 51 லட்சம் ஒதுக்கியிருப்பதற்காகத் தமிழக அரசுக்கு மக்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாகவும், சிறப்பாகவும் சேலம் மாவட்டத்தில், மக்கள் இதற்கான பூர்வாங்க வேலை துவக்குவது குறித்து, தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் இந்த இரண்டு ஆண்டு காலத்தில். இந்த ஆண்டும் அதே மாதிரி முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். 2,500 தனியார் குழாய்க் கிணறுகள், 3,000 வடிமுனை குழாய்க் கிணறுகள், 14,000 கிணறுகள் வெட்டுவதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான கடன்கள் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்குவதற்கு சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அதைவிட அதிகமாக ரூ. 14 கோடி முடிந்தால் ரூ. 18 கோடி வரையிலும்கூட விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், வெளி நாடுகளிலிருந்து 650 டிராக்டர்கள் வாங்கி விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறுபாசனத்திற்காக நிலம் பண்படுத்த ரூ. 7·70 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மிகு பயன் தரும் வித்துக்கள் மேலும் 3 லட்சம் ஏக்கரிலும், இருபோக பயிர் விளைச்சலை மேலும் ஒரு லட்சம் ஏக்கரிலும் பயிர் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாசனத் திட்டங்களுக்கு ரூ. 4·5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயத்திற்கு மிகவும் அடிப்படையான தேவை மின்சாரம் மிக அதிகமாகத் தேவை என்ற காரணத்தினால் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் 1,070 மெகவாட் மின்சார உற்பத்தியிலிருந்து, இந்த ஆண்டு 1,475 மெகாவாட்டிற்கு அதிகமாக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய உபகண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 50,000 கிணறுகளுக்கு மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. மேலும் நான் சிறப்பாகவும், குறிப்பாகவும் சொல்ல முடியும். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கான மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 8 காசுகள் வீதம் தமிழக அரசு வசூலிக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இவ்வளவும் கொடுத்து விவசாயத்தை அதிகபடுத்த வேண்டும், உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்யவேண்டும் என்ற எண்ணத்திலே தமிழக அரசு மிகவும் சிரமப்பட்டு இந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிற நேரத்தில், இந்த ஏற்பாடுகளுக் கெல்லாம் முட்டுக்கட்டை போடுவதுபோல, உணவு உற்பத்தியை தடுத்து நிறுத்துவதுபோல, மத்திய சர்க்கார், டெல்லி சர்க்கார் நிதி மந்திரி திரு மோரார்ஜி தேசாய் அவர்கள் 28-ம் தேதியன்று அறிவித்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே, விவசாய முன்னேற்றத்திற்காக தமிழக அரசு இவ்வளவு நல்ல சாதனங்களை அளித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், உரம் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்காக அதிகப் பணம் ஒதுக்கியிருக்கிற இந்த நேரத்தில்,

1969 மார்ச் 3] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

இந்த வசதிகளை யெல்லாம் செய்துகொடுத்து விவசாய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மத்திய சர்க்கார் அந்த உற்பத்தி பாதிக்கக்கூடிய அளவுக்கு உரத்திற்கு வரி போட்டிருக்கிறது. உரத்திற்கு 10 சதவிகிதமும், பம்பு செட்டுகளுக்கு 20 சதவிகிதமும் வரி போட்டிருக்கிற காரணத்தினால் விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்று இந்திய உபகண்டத்திலிருக்கிற விவசாயிகள் ஐயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அதற்கும் மேலாக ஒரு வரியை திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் விவசாயிகள் தலையிலே சுமத்துவதற்கு முன்வந்திருக்கிறார்கள். 'அந்த வரிதான் விவசாய செல்வத்தை செல்வவரியின் கீழ் கொண்டுவந்து விதிக்கப்படும் வரி. அப்படிப்பட்ட விவசாய வருமான வரி போடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 1½ ஆண்டுக்கு முன் நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் அதாவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் நமது முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் "விவசாயத்திற்கு எந்தத் துறையில் வரியை போட்டாலும் அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன், ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று கூறியிருக்கிறார். "இப்பொழுது தான் விவசாயிகளை மெல்ல மெல்ல முன்னேற்றத்திற்குக் கொண்டுவருகிற இந்த நேரத்தில் அவர்களுக்கு வரி போடுவதை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். தமிழக முதலமைச்சரால் அப்படிக் கூறப்பட்ட அதே வரியை இரண்டு நாட்களுக்கு முன்னால் மத்திய சர்க்கார் நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் விதித்திருப்பது, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய உபகண்டத்திலேயே உணவு உற்பத்திக்கு, வேளாண்மைத் துறைக்கு விதித்திருக்கக் கூடிய ஒரு பெரிய முட்டுக்கட்டை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல. விவசாய முன்னேற்றத்தைத் தடுப்பதுடன், மாநில அரசின் வருவாய் வருகிற துறைகளில் ஒற்றன்பின் ஒன்றாக மத்திய அரசு தனதாக்கிக் கொண்டு வருகிறது. இது மாநில அரசின் வசதிகளில் கைவைப்பதாகும்.

மாநில அரசு பார்த்துச் செய்ய வேண்டிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தில் மத்திய அரசு தனது கையை வைத்துக் கொண்டிருக்கிறது. இது மிக வெறுக்கத்தக்கது, எதிர்க்கத்தக்கது. இந்த வரி போடப்படும் என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில் டெல்லியிலுள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி எம்.பி.க்கள், தலைவர்கள் இந்த வரியை எதிர்த்து, தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தானே, காங்கிரஸ் அல்லாத கட்சியினர்தானே இதை எதிர்க்கிறார்கள் என்று கூறவும் முடியாத நிலையில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அம்மையார் தாரகேஸ்வரி சின்ஹா அவர்கள் இந்த வரியை எதிர்த்திருக்கிறார்கள். காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சிச் செயலாளர்களில் ஒருவரான திரு. பி. வெங்கடசுப்பையா இந்த விவசாய வருமான வரியை எதிர்த்திருக்கிறார்கள். காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சி செயலாளர் திரு. ஆர். பி. சின்ஹா அவர்கள் உரத்திற்குப் போட்டிருக்கிற வரியையும், பம்பு செட்டுகளுக்கு போட்டிருக்கிற வரியையும் எதிர்த்திருப்பதோடு, பாராளுமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இந்த வரிகளை எதிர்த்து வாதாடப் போகிறோம் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். இதைப் பார்க்கிற நேரத்தில் எந்த அளவுக்கு ஏழைகளினுடைய, பாட்டாளிகளினுடைய, ஏழை விவசாயிகளுடைய முன்னேற்றத்தை மத்திய சர்க்கார் வரி தடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழக அரசு வரவு செலவு அறிக்கையிலே விவசாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கிறது. படி அரிசித் திட்டத்தின் அடிப்படை நோக்கமே மற்ற விலைவாசிகளைக் குறைப்பது தான் என்று மறைந்த மாவீரர் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் செயலாற்றக் கூடிய நேரத்தில், மத்திய சர்க்கார் போடக்கூடிய பட்ஜெட்டில், ஏழைகளைப் பாதிக்கக் கூடிய, குறிப்பாக பாட்டாளிகளை பாதிக்கக் கூடிய, நடுத்தர வாழ்க்கை

[திரு. ரா. ரெத்தினதேவர்] [1969 மார்ச் 3

வாங்கியிருக்கிறார்கள். பாமர மக்களிடமிருந்து வாங்கியிருக்கிறார். பள்ளிக் கூடம் வாங்கிக் கொடுக்கவில்லை. பணம் கொடுப்பதற்கும் எந்தவிதமான ஐவேஜியும் இல்லாமல் இருக்கிறார்.

நீங்கள் அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் மேலும் சலுகை கொடுத்தால் தவறுகள் மேலும் மேலும் நடக்க ஏதுவாக இருக்கும். அதேபோல் மேற்கு ராமநதி பால் பண்ணைக்காக ரூ. 15,700 பொதுமக்கள் அளித்தார்கள். அதைப்பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றி ஏற்கெனவே உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் தெரியப்படுத்தி இருக்கிறேன். எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல காரியங்களிலே எந்த அளவுக்கு நீங்கள் நல்லமுறையிலே செயலாற்றுகிறீர்களோ அந்த அளவுக்குநாங்கள் ஆதரவு தருவோம். தவிர சப்பட்டை என்ற முறையிலே இருக்கக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்பதை தெரிவித்து நான் விடை பெறுகிறேன். வணக்கம்.

***திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வரவு-செலவு அறிக்கையை ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்கள் மிக நல்ல வரவு செலவு அறிக்கை என்றும், வரி இல்லாத அறிக்கை என்றும் நாட்டு மக்கள் பாராட்டக்கூடிய வரவு-செலவு அறிக்கை என்றும், நாட்டிலே இருக்கக்கூடிய வணிகப் பெருமக்கள் தங்களுக்கு எந்தவிதமான வரியும் இல்லாத வரவு-செலவு அறிக்கை என்றும் பாராட்டிப் பேசுவதும் எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் காரர்கள் இந்த வரவு-செலவு அறிக்கையிலே ஒன்றும் இல்லையென்று கூறுவதும் வழக்கமாக இருந்தாலும் இந்த இக்கட்டான நேரத்தில் பல பிரச்னைகள் உருவாகியிருக்கின்ற இந்த நேரத்தில் புது வரி போடாமல் மிகத் திறம்பட சென்ற இரண்டு ஆண்டுகாலமாக வரவு-செலவு அறிக்கையை தாக்கல் செய்ததை யொட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லை என்றாலும் அவரை பின்தொடர்ந்து வருகிற இந்த அமைச்சரவை மிக நல்ல முறையிலே தாக்கல் செய்திருப்பதை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், வரவேற்கின்றார்கள். இந்த வரவு-செலவு அறிக்கை மகிழ்ச்சி ஊட்டக்கூடிய அறிக்கையாக இருக்கிறது. ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு ஆச்சரியத்தை ஊட்டக்கூடிய அறிக்கையாகவும், அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கக்கூடிய அறிக்கையாகவும் காணப்படுகிறது. புது வரிகளைப் போடுவார்கள், அடுத்த ஏப்ரல் திங்களிலே நகரசபைத்தேர்தல் வரும்போது அதைச் சொல்லி, பார், பார், தமிழக அரசு போட்டிருக்கிற வரிகளைப் பார் என்று சொல்லி ஓட்டு வேட்டை ஆடலாம் என்று கருதக்கூடிய காங்கிரஸ் காரர்களுக்கு இந்த அறிக்கை மாபெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. ஆகவே, அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மிகத் தெளிவாக கல்வித் துறையிலே நிதி அமைச்சரவர்கள் தாராள மனதைக் காட்டி சென்ற ஆண்டு ரூ. 58 கோடி ஒதுக்கி இருந்தாலும், இந்த ஆண்டு ரூ. 65 கோடியே 39 இலட்சம் கல்விக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 7½ கோடிக்கு அதிகமாக ஒதுக்கி இருப்பது நிதி அமைச்சரவர்களுடைய தாராள மனப்பான்மையைக் காட்டுகிறது. ஏற்கெனவே எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் பி.யூ.சி. வகுப்பிலே இலவசமாக எல்லாத் தர மக்களுக்கும் கல்வி அளிக்கப் போகின்றார்கள். அதைச் சொல்லுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்தை தயாரித்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்தத் திட்டம் எங்கள் கட்சியால் தயாரிக்கப்பட்ட திட்டம தானே நீண்ட நாட்களுக்கு முன்னால் நாங்கள் தயாரித்த திட்டம்தானே பி.யூ.சி. வகுப்பிலே இலவசக் கல்வி என்று கூறுகின்றார்கள். அதிலேகூட பார்க்க வேண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெருந்தன்மையை. பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் அதிலே மணம் உண்டு என்று சொல்ல வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் புகுமுக வகுப்புக் கல்வியை இலவசமாக ஆக்கவேண்டுமென்று

1969 மார்ச் 3] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

சொல்லியிருந்தாலும் அதை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு யார் அந்தக் கருத்தைச் சொன்னது, காங்கிரஸ்காரர்கள், ஆகவே அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற நிலைமையில் இல்லாமல மாற்றுக் கட்சிக்காரர்கள் அந்தக் கருத்தைச் சொல்லியிருந்தாலும் அதையும் ஏற்றுக் கொண்டு புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி அளிப்பதற்கு முன்வந்தார்கள். அதைப் பாராட்டுகிறோம்.

இந்த வரவு-செலவு அறிக்கையிலே 4 புதிய கல்லூரிகளைத் துவக்குவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. 8 கல்லூரிகளிலே பட்டப்படிப்பு, பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகளைத் துவங்குவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. சேலம், கோவை அரசுக் கல்லூரிகளில் மேல் படிப்புக்கும் திருச்சி ஈ.வே.ரா. கல்லூரியில் எம்.ஏ. போன்ற பட்டப்படிப்புகளுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. மேல் படிப்புகள் திருச்சி, கோவை, சேலம், ஆகியவைகளில் துவக்குவதற்கு பொருட்டு கட்டிடம் கட்ட 6·25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதுரை பல்கலைக் கழகத்திற்கு கட்டிடம் கட்ட 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கக்கூடிய நிலையிலே 7,900 ஆசிரியர்களுக்குப் புதிதாக வேலை கொடுக்கக் கூடிய நிலையைக் கல்வித் திட்டத்திலே உருவாக்கி இருப்பது மிக பாராட்டத் தக்க ஒன்றாகும். அதற்கு மேலும் 300 மைல் நீளசாலைகளை ரூ. 1·61 லட்சம் அளவிலே பராமரிப்புக்கு எடுத்துக் கொண்டது பாராட்டத்தக்கதாகும். மூற் பகல் 11–30
மேலும் இந்தத் திட்டத்தில் 64 டஸ் ரூட்டுகளை தேசீயமாக்குவதற்கு எடுத்துக் கொள்ளும் திட்டமும் இடம் பெற்றிருக்கிறது. சென்னை மாநகராட்சிக்கு ரூ. 1 கோடி கடன் வழங்கியிருக்கிறார்கள். தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக, வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 50 லட்சம் தனியாகவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் திட்டத்தின் கீழ் திருவொற்றியூர், காஞ்சி, திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம் திருவண்ணாமலை, புதுக்கோட்டை, ஆகிய இடங்களுக்கு நீர் வழங்கும் திட்டம் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மீன்வளம் பெருகவும், புதிய நவீன யந்திரப் படகுகள் வழங்கவும் இந்தத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. பொதுச் சுகாதாரத் துறையில் உடுமலைப்பேட்டை, தாராபுரம், மேட்டுப்பாளையம், புதுக்கோட்டை, விருத்தாசலம், திண்டுக்கல் முதலிய இடங்களில் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும், மருத்துவ மனைகளுக்குப் பிற மேம்பாடுகளைச் செய்வதற்கும் இந்தத் திட்டத்தில் வகை காணப்பட்டுள்ளது. மேலும் 5 மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் சித்த மருத்துவ பிரிவுகளைத் துவக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அதற்கு மேலும், தி.மு.க. அரசு பொறுப்பேற்றுக்கொண்ட இந்த இரண்டு ஆண்டு காலத்தில் இதுவரை இரண்டுக்கு மேற்பட்ட முறைகளில் சர்க்கார் அரசு பணியாளர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் சர்க்கார் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஒன்றுமில்லையே என்று சொல்லக்கூடும். இரண்டு ஆண்டு காலத்தில், இரண்டுக்கும் மேற்பட்ட முறைகளில் சர்க்கார் பணியாளர்களுக்கு பஞ்சப்படி ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அரசு பணியாளர்கள், உள்ளாட்சித் துறை பணியாளர்கள் தங்கள் விடுமுறை நாட்களைத் திருப்பி ஒப்படைப்பதன் மூலம் அதற்கான ஊதியம் பெறும் திட்டத்திற்கும் இந்த ஆண்டு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் சர்க்கார் பணியாளர்கள் விடுமுறை நாட்களை ஒப்படைப்பதன் மூலம் நல்ல வருவாய் பெறுவார்கள். அதன் மூலம் அவர்களுக்குப் பணம் கிடைப்பதற்கு வசதி கிடைத்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்ற ஆண்டில் சொன்னதுபோலவே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசுப் பணியாளர்களுக்கு திருமண செலவுகளுக்காக கடன் வழங்கும் திட்டம் 1—4—1969 முதல் அமுல் நடத்தவும், ரூ. 10 லட்சம் இந்தத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருமணக் கடன் அளிக்கும் திட்டம் மிகவும் வரவேற்கத்தகுந்த திட்டம் என்று பணியாளர்களின் சங்கத் தலைவர்கூட தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்.

வசதி படைத்தவர்களை பாதிக்கக்கூடிய, தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய வரிகளை மத்திய சர்க்கார் போடுகிற காரணத்தினால், மேலும் விலைவாசி உயர்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

நம்முடைய சர்க்காருடைய வரவு-செலவுக் கணக்கு 265 கோடி ரூபாய், மத்திய சர்க்காருடைய துண்டுவிழும் அளவு 260 கோடி ரூபாய். ஆகவே, மத்திய சர்க்காரிலே துண்டு விழும் அளவு, மாநில சர்க்காருடைய வரவு செலவுக்குச் சமமாக இருக்கிறது. அவர்கள் போட்டிருக்கும் வரிகள் காரணமாக இன்றைக்கு விலை வாசிகள் உயரும். மத்திய சர்க்காருடைய வரிகள் ஏழைகளையும், எளியவர்களையும் பாதிக்கும் வரிகளாகப் போடப்பட்டிருக்கின்றன என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரிகள் மூலம் 150·27 கோடி ரூபாய் எதிர் பார்க்கப்படுகிறது என்றாலும், 260 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக்குறையை எப்படி நிரப்பப் போகிறார்கள் என்று கேட்டபோது, நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், எங்களிடம் நாஸிக் அச்சகம் இருக்கிறது, காகிதத்தைக் கொடுத்தால் அங்கே நோட்டுகளாக அடித்துப், பற்றாகுறையை நிரப்புவதற்கு வழிவகை செய்யப்படும் என்கிறார். பொருளாதார நிபுணர்கள், படித்தவர்கள் சொல்லுகிறார்கள், பண வீக்கத்திற்குக் காரணமே காகித நோட்டுகள் அடிப்பதுதான் என்று. விலைவாசிகள் விலை ஏறுகின்றன. பணப்புழக்கத்தின் காரணமாக. இதை கடந்த காலத்திலேயே பொருளாதார நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 1968-69 ஆண்டில் மத்திய சர்க்கார் நிதிநிலை அறிக்கையில் 200 கோடி ரூபாய்க்கு நோட்டுகளை அச்சடித்தார்கள். இப்பொழுது, 1969-70-ல் 250 கோடி ரூபாய்க்குக் காகித நோட்டுக்களை அச்சடித்தால், தமிழகத்தில் செய்யும் எந்தக் காரியமும் பயனளிக்காது. தமிழக சர்க்கார் இறக்கியிருக்கும் விலை வாசிகள் மேலே ஏறத் தொடங்கும். இதை இந்திய உபகண்டத்தில் ஒவ்வொரு குடிமகனும் நினைத்துப் பயந்து வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறான். இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

கடந்த பத்து நாட்களாக, அல்லது ஒரு வாரத்திற்குள்ளாக ஒவ்வொரு மாநிலமும் தங்கள் தங்கள் வரவு-செலவுத் திட்டங்களை தாக்கல் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் பற்றாக்குறை பட்ஜெட். இப்படி பற்றாக்குறை பட்ஜட் வருவதற்குக் காரணம் நல்ல வருவாய்த் துறைகளையெல்லாம், மத்திய சர்க்கார் வைத்துக்கொண்டு, கொழுத்த வரிவகைகளையெல்லாம் தங்கள் கையில் வைத்துக்கொண்டு, சப்பையான இனங்களை மட்டும் மாநில சர்க்காரிடம் கொடுத்திருக்கும் காரணத்தால்தான். ஒவ்வொரு மாநில சர்க்காரும் தங்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல், புதிய வரிகளைப் போட்டால் மக்கள் தாங்கமாட்டார்கள் என்று கவலைப்படுகிறார்கள். ஆகையினால்தான் நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன், மத்திய சர்க்கார் எல்லா அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக்கொள்ளாமல், மத்திய சர்க்கார், டெல்லி சர்க்கார் மூன்று அதிகாரங்கள் மட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டு, வெளிநாட்டு விவகாரம் நாட்டுப் பாதுபாப்பு, போக்குவரத்து ஆகிய மூன்றை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளையெல்லாம் மாநில சுய ஆட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, இந்த ஆண்டு பருவ மழை 40 சதவிகிதம் தவறியதால், தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக பாதகம் ஏற்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் குறிப்பிட்டது போல, உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம், என்றார்கள், அந்த வகையில், டெல்லியிடம் ஒரு லட்சம் டன் அரிசி கேட்டிருக்கிறார்கள். டெல்லி சர்க்காரே, தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, உதவிக்கு வாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நல்ல எண்ணத்தோடு இந்தக் கோரிக்கையை பரிசீலிப்பார்கள் என்று நினைக்கிறேன். அன்றைக்கு மத்திய சர்க்கார் உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தமிழக முதல் அமைச்சரிடம் அண்டை மாநிலமாகிய கேரளத்திற்கு ஆயிரக்கணக்கான டன் அரிசி கொடுங்கள் என்று கேட்டபோது,

பேரறிஞர் அண்ணா அவர்கள் மனமுவந்து திருப்தியோடு அரிசி கொடுத்தார்கள் என்பதை உணர்ந்து இன்றைக்கு நமக்குத் தேவையான நேரத்தில், நாம் எதிர்ப்பாராத நிலையில் இருப்பதால், நமக்கு ஒரு லட்சம் டன் அரிசி கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

சிவசேனை அட்டூழியங்களை மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்து அடக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பி. வேலுசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க முன்வருகிறேன். இந்த அறிக்கையாவது, புதிய வரிகள் இல்லாமல் இருக்கிறது. என்றாலும், பி.யு.சி. வரை இலவசமாகக் கல்வி என்றும், ரிசர்வ் வங்கியில் ஓவர் டிராப்ட் எடுக்காமல் இருப்பதும், வாஸ்தவமாகவே வரவேற்கத்தக்கது என்றாலும், மிக்க சந்தோஷப்படக் கூடியதாக இல்லை. புதிய வரிகள் இல்லை என்று சொல்லும் போது, புதிய வரிகள் வருகின்ற ஆண்டு முடிகின்ற காலம் வரையில் வரிகளே கிடையாது என்று அறிவிக்கப்படவில்லை. சென்ற காலத்தில் போல, வரிகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தால், சாலச் சிறந்ததாக இருந்திருக்கும். ஜனங்களிடத்தில் பொதுவாக இடையில் வரி வருமோ என்கின்ற ஒரு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, பி.யு.சி. வரையில் இலவசமாகப் படிப்பு என்று சொல்லும்போது, சக்தி படைத்தவர்கள், சக்தி இல்லாதவர்கள் அனைவருக்குமே இந்தச் சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது. சௌகரியமாக உள்ளவர்கள், அவர்கள் கூட இந்த வகையில் கல்வியிலே சலுகை காட்டப்பட வேண்டுமா, இது அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது அவசியம் இல்லை என்றே தோன்றுகிறது. அவர்களுக்குக் கொடுக்க சக்தி இருக்கும் போது, அவர்களிடத்தில் வசூலிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. சக்தியிருப்பவர்களிடத்தில் வாங்கி, சாதாரண ஏழை மக்களுக்கு அதிகச் சலுகை கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். இப்பொழுது இருக்கும் முறைக்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட அளவு வருவாய் வருபவர்கள் கொடுக்க வேண்டும் என்கிற விதியைப் போட்டு, மற்றவர்களுக்கு இலவசக் கல்வி என்று சொன்னால் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அதோடுகூட, புதிய வரிகள் இல்லாமல், ரூ. 16 கோடி துண்டு விழுந்திருக்கிறது. அந்தத் துண்டு விழுந்திருக்கும் இடத்தை நான்காவது திட்டத்தில், ஐந்தாவது நிதிக் கமிஷன் தொகைகளை ஒதுக்கும் நிலையில் நமக்கு ஈடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி எதிர்பார்க்கப்பட்டிருக்கிற தொகை வரவில்லை என்றால், இந்த ஆண்டே அந்தப் பதினாறு கோடியை அடைய ஏதாகிலும் புதிய வரிகளை விதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்க்கூடும். ஜனங்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படக்கூடும். ஆகையினால், சர்க்கார் இந்த 16 கோடி ரூபாய்க்கு வாஸ்தவமாக கொடுக்கக் கூடிய சக்தி உள்ளவர்களிடம் வாங்கி, அவர்களுக்கு வரிபோட்டு வசூல் செய்வதில் குற்றம் ஒன்றுமில்லை. என்னுடைய கட்சியின் கருத்தும், என்னுடைய கருத்தும், கொடுப்பதற்குத் தகுதி, சக்தி உள்ளவர்களிடம் வரிபோடுவதில் தவறு ஏதுவுமே கிடையாது என்பதுதான். ஆகையால், வசதி படைத்தவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு வகைகளில் இருப்பதால், அவர்களிடம் இந்த 16 கோடி ரூபாயை ஏதாகிலும் வரி போட்டு அதன் மூலம் துண்டு விழுந்திருக்கும் தொகையை ஈடு செய்து கொள்ளலாம். அதன் மூலம் சாதாரண ஏழை மக்களுக்கு உதவி செய்து, நல்ல சூழ்நிலையை உருவாக்கலாம்.

இந்த ஆண்டு பருவ மழை தவறிவிட்டது. அப்படிப் பருவ மழை தவறியதன் காரணத்தால், இந்த ஆண்டு உதவி செய்வதற்கு என்று ரூ. 1,57,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உறுப்பினர்கள் பேசியதிலிருந்து நாம் தெரிந்துகொண்டது என்னவென்றால், கிட்டத்தட்ட ஆறு ஏழு ஜில்லாக்களில், பருவமழை தவறியிருக்கிறது. அந்த நிலைமையைச் சமாளிக்க ஒரு கோடி ஐம்பத்தேழு லட்சம் ரூபாய் போதுமானதுதானா என்று பார்க்க வேண்டும். அபபடிப் பார்த்தால், இந்த 1,57,00,000 ரூபாய் போதுமானதாக இல்லை. அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து, வறுமை,

வறட்சிப் பகுதிகளுக்கு, அதிகமான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து அங்குள்ள மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பு உண்டாக, கீழ் மட்டத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில், அதிகத் தொகையை ஒதுக்கியிருந்தால் அது சாலச் சிறந்ததாக இருந்திருக்கும்.

பஞ்சாலைகளுக்கு என்று ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆனைப் பசிக்கு சோளப்பொறி போல இருக்கிறது. 20,000 தொழிலாளர்கள் இரண்டாண்டு காலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த 15 லட்ச ரூபாய் ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்னொன்றும் சொல்ல வேண்டும். சமீபத்திலே முதல் அமைச்சரும், தொழில் அமைச்சரும் கோவைக்குச் சென்று மூடியிருக்கும் மில்களைத் துவக்கும் காரியத்தைச் செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நன்றாக நடக்கும் மில்களையும் நடைபெறாத மில்களையும் இணைத்து செய்ல்பட முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். எனக்கு 30 ஆண்டுகளாகப் பஞ்சாலைகளில் சம்பந்தம் உண்டு. அதை வைத்துக் கொண்டு சொல்லுகிறேன். இது நடக்குமா என்பதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். லாபம் கிடைக்கும் ஒருவர், நஷ்டம் அடையும் ஒருவரோடு இணைந்திருக்க முன்வருவாரா என்று பார்த்தால், யாரும் அப்படி முன் வரமாட்டார்கள். அமைச்சரவர்கள் செய்யும் முயற்சி நல்லது தான் என்றாலும் கூட, இது நடைபெறுமா இன்றைக்கு உள்ள சமூக அமைப்பில் என்பதைப் பார்க்கும் போது, ஐயப்பாடு அதிகமாக இருக்கிறது. ஆகவே, பஞ்சாலைத் தொழில் நிலைமைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய முயற்சிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் வகைப்படுத்தி அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டால் சிறப்பாக இருந்திருக்கும்.

அடுத்தபடியாக, கிராமங்களில் சாதாரணமாக பசுவின் கன்றுகுட்டி எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தால் அதை "ஐயர் வீட்டுக் கன்றுக் குட்டி" என்று சொல்வார்கள். அதுபோல்தான் தமிழ்நாட்டினுடைய நிலைமையும் இருக்கிறது. மத்திய சர்க்காரில் நிதியமைச்சராக திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் போட வேண்டிய எல்லாப் பொருள்களுக்கும் வரியைப் போட்டுவிட்டார். மாநில சர்க்கார் எதாகிலும் வரியைப் போடுவதற்கான வாய்ப்பு இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. இந்த நிலையில்தான் தமிழ்நாடு மக்கள் "ஐயர்வீட்டுக் கன்றுகுட்டி போல" காட்சியளிக்கிறார்கள். விவசாயிகள் நொடித்துப் போயிருக்கிறார்கள். இந்த நிலையில் பம்ப் செட்டுகளுக்கும், உரத்திற்கும் வரியைப் போட்டிருப்பது விவசாயிகளுடைய நல்வாழ்க்கையை உத்தேசித்துதானா என்ற ஐயம் எழுகிறது. சாதாரணமாக விவசாயிகள் இன்றைக்கு வாழ்க்கையை நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்குப் புதிய புதிய சலுகைகள் காட்ட வேண்டிய நேரத்தில் பம்பு செட்டுகளுக்கும் உரத்திற்கும் வரியைப் போட்டிருப்பது அவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. ஒரு பக்கம் மத்திய சர்க்கார், மறுபக்கத்தில் மாநில சர்க்கார். சாதாரண விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் நெருக்கப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக நான் முப்பது வருஷ காலமாக பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவன். ஆரம்ப காலத்தில் காங்கிரஸ் கட்சியின் மேடைகளில் ஒரு பிரசங்கம் செய்வதுண்டு. "சென்னை நகரத்தில் எச்சிற் தொட்டிகளில் எல்லாம் பிச்சைக்காரர்கள் எச்சிற் இலைகளோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று மேடைகளில் பேசப்படுவது உண்டு. நமக்குச் சுதந்திரம் கிடைத்து, இருபது ஆண்டுக் காலமாக காங்கிரஸ் அரசாண்டது. பிச்சைக்காரர்கள் எச்சிற் இலைகளோடு போராடுவது இன்னும் நிற்கவில்லை. முன்பெல்லாம் எச்சிற்தொட்டிகள் பக்கம் சாதாரணமாகக் குருடர்கள், அங்கஹீனர்கள்தாம் போய் எச்சிற் இலைகளிலுள்ள பண்டங்களைத் தின்று ஜீவித்து வந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஐந்து வயது, ஏழு வயது, பதினைந்து வயது, நல்ல உடல் வலிமையுள்ள வாலிபர்கள், உடலில் வேலை செய்ய சக்தியுடையவர்கள் எல்லாம் போய் எச்சிற் இலைகளோடு போராடி கிடைத்ததைத் தின்னும் நிலைமை இருந்து கொண்டுதான்

இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது). அவர்களுக்கெல்லாம் போதிய வாய்ப்புகள் அளித்து முன்னேற்றமடையச் செய்யும் நிலை இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்ற பதிலே கிடைக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் 1½ கோடி விவசாயிகள் வாழ்வதற்கு எதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை, எந்தச் சர்க்கார் வந்தாலும் ஆட்சியாளர்களின் பார்வை அவர்களின் பக்கம் விழுவது இல்லை.

தஞ்சாவூரில் விவசாயக் கூலி விவகாரம், போராட்டம் நடைபெற்றிருக்கிறது. ஒரு கமிஷன் போட்டு கூலிப் பிரச்சினை என்று சொல்கிறார்கள். அந்த மாதிரியான போராட்டம் எல்லா மாவட்டங்களிலும் வரவேண்டுமென்று இந்தச் சர்க்கார் விரும்புகிறதா ? விவசாயிகளுடைய குரலை எடுத்துச்சொல்லும் வாய்ப்பு இல்லை. திராவிட முன்னேற்றக் கழக சர்க்காராகிலும் விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

சாதாரணமாக அரசாங்க சிப்பந்திகள், குமாஸ்தாக்கள் இவர்களுக்கு இருக்கின்ற நிலைமைகூட விவசாயிகளுக்கு இல்லாமலிருந்து வருவது பரிதாபகரமாக இருக்கிறது. கடைசி மட்டத்தில் இருக்கும் விவசாயி அரை வயிறு அளவாவது உட்கொள்ளும் நிலைக்கு அவர்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. மொரார்ஜி தேசாய் பட்ஜெட்டினால் விலைவாசிகள் ஏறி வருகின்றன. வெறும் நோட்டுகளை அச்சடித்தால் மட்டும் போதாது. விலைவாசிகள் ஏறும்போது விவசாயிகளின் நிலையை அதிகமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

• **திரு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிடப் பெருங்குடியின் தலைமகன் அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்கு அஞ்சலியைச் செலுத்தி, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் 150 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களை — விவசாயப் பெருங்குடி மக்களை வாட்டி வதைக்கின்ற வகையில் மத்திய அரசாங்கம் எல்லாப் பொருள்களுக்கும், உரத்திலிருந்து பம்ப் செட்டிலிருந்து ஏழை எளிய மக்கள் உபயோகப்படுத்துகின்ற மண் எண்ணெய் வரையிலும் வரிகளைப் போட்டு, பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

பற்றுக்குறை பட்ஜெட்டை மத்திய அரசாங்கம் அளித்திருக்கின்ற நேரத்தில் தமிழக அரசாங்கம், "தமிழகத்தில் புதிய வரியில்லை" என்று பல தரப்பட்ட மக்களும் திருப்திப்படுகின்ற வகையில் நல்ல காரியங்களைச் செய்ய முனைகிறோம்" என்று சட்ட மன்றத்தில் நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

குறிப்பாக, அரசு ஊழியர்களுக்குத் திருமணச் செலவுக்கான கடன் அளித்தல், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமைக்கு நிவாரண வேலைகளுக்கு மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் 35 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருத்தல் போன்றவைகளாகும். இதற்காக இந்த அரசாங்கத்திற்கு நான் வட ஆர்க்காடு மாவட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் பெரிய மனதோடு 35 லட்சம் ரூபாயை நிவாரண வேலைகளுக்கு ஒதுக்கியிருந்தாலும், அங்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளுக்கு — பஞ்சம், குடிதண்ணீர் பஞ்சம் ஆடு, மாடுகளுக்குத் தீவனம் கிடைக்காத நிலைமை இவைகளுக்கெல்லாம் இந்தப் பணம் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் இன்னும் பெரிய மனது வைத்து, வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரத்திலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவதற்காக 8·79 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழி

செய்யப்பட்டிருக்கிறது. மேலும், 2,500 தனியார் குழாய்க் கிணறுகள், 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 14,000 கிணறுகள் இவற்றைத் தோண்டுவதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. சென்னையிலும், தூத்துக்குடியிலும் 6·2 கோடி ரூபாய்ச் செலவில் இரண்டு பெரிய துறைமுகங்களைக் கட்டுவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் இப்படிப் பல துறைகளிலும் கவனஞ் செலுத்தி வந்திருக்கிறது.

அடுத்தபடியாக, காங்கிரஸ்காரர்கள் பேசும்போது, தாங்கள் தான் இந்த நாட்டு மக்களுக்குக் கல்வி கொடுத்தோம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். கல்விக்காக காங்கிரஸ் ஆட்சி செய்த போது ஒதுக்கப்பட்ட தொகை 50 கோடி ரூபாய் தான். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிற திராவிட முன்னேற்றக் கழக அரசினால் இந்த ஆண்டுகல்விக்காக 65 கோடியே 39 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் நான்கு புதிய கல்லூரிகளைத் திறப்பதற்கும், எட்டு இடங்களிலுள்ள கல்லூரிகளிலும் மேல்படிப்பு படிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல் புகுமுக வகுப்பில் (பி.யு.சி.) இலவசக் கல்வியை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இவற்றை யெல்லாம் கூறிக் கொண்டிருக்கிற நேரத்திலே உள்ளத்திலே ஏற்பட்டிருக்கும் மன வேதனையை இந்த மன்றத்திலே சொல்வது நலமாக இருக்குமென்று நம்புகிறேன்.

இந்திய அரசாங்கம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்ப்பதற்கு ஒரு பெரிய சதி செய்கிறது. எப்படி என்று நீங்கள் கேட்கக் கூடும்? தமிழக அரசைப் பொருளாதாரச் சூழ்நிலையில் அதாவது கழக அரசுக்குப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் கெட்ட பெயரை உருவாக்குவது என்பது தான் மத்திய அரசின் நோக்கம். 1966-ம் ஆண்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கித் தருகிறோம் என்று வாக்களித்தது. அதை நம்பித் தான் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்ட வேலைகளுக்கு, 624 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுப்பியது. மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதன் காரணத்தினால்தான் நாம் 624 கோடி ரூபாய்த் திட்டம் தயாரித்தோம். ஆனால் இன்று 501 கோடிக்குத் தான் ஒப்புதல் அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதே போல 1966-ல் 4-வது ஐந்தாண்டு திட்டத்திற்கு 250 கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள் இன்றைக்கு 201 கோடி ரூபாய் தான் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 201 கோடி ரூபாயிலும் 150 கோடி ரூபாய் கடனாகத்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அந்த 150 கோடி ரூபாய் கடனையாவது இப்போது பணமாகக் கொடுப்பார்களா என்பதற்கு ஒன்றும் சொல்லவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்கள் நாம் மத்திய அரசாங்கத்திற்கு 148 கோடி ரூபாய் கடனை உடனடியாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆக நான்காவது திட்டத்திற்காக அவர்கள் கடனாகக் கொடுக்கிறேன் என்று சொன்ன 150 கோடி ரூபாய்க்கு, நாம் திருப்பித் தந்தாகவேண்டிய கடன் 148 கோடி ரூபாய் சரியாகிவிட்டது என்ற நிலையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உண்மையில் நமக்குக் கிடைககபபோவது "0" (ஸீரோ) தான் என்று எனக்குத் தெரிகிறது. இந்த நிலையில் தமிழகத்தைப பொறுத்த வரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசாங்க உதவி இருக்குமானால் நாம் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்த முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்ல. நமது நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமாக இன்னொன்றையும் சொல்லி யிருக்கிறார்கள். நமக்கு ஏற்பட இருக்கிற துண்டு 16·71 கோடி என்று தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே இதே அளவுக்குத் துண்டு இருந்தால் சந்தோஷப்படலாம். எந்த மத்திய அரசாங்கம் தங்களுடைய கொள்கையை அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்களோ, சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாத நிலையில்

இருக்கிறார்களோ அந்த மத்திய அரசாங்கத்தை நம்பி, அவர்களிடம் சில சலுகைகளை எதிர்பார்த்து ஏமாந்து நிற்கிறோம். அதன் காரணமாகத் தான் நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே இப்போது துண்டு விழுகிறது. மத்திய அரசாங்கம் எந்த அளவு உதவி செய்யும் என்பதை இன்னும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. நம்முடைய மாநிலத்தில் வசூலிக்கப்படக்கூடிய வரி இனங்களில் 5·6 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டும். எப்போது வரும்? சொல்லவில்லை. அதே போலத் தான் சென்டிரல் அசிஸ்டெண்ட் என்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 40 கோடி தருகிறோம் என்று மத்திய அரசாங்கம் சொன்னது. இப்போது 36 கோடி தான் ஆண்டு ஒன்றுக்குத் தருவோம் என்று சொல்கிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் மிக்க வேதனையோடு வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட வேண்டுமே என்று 40 கோடி கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கிறோம் என்று அவர்கள் இன்னும் சொல்லவில்லை. கொடுப்பார்கள் என்று நம்பி நாம் நமது வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித் திருக்கிறோம்.

அதேபோலத் தான் பரிசுச் சீட்டின் மூலம் வருகிற தொகையை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்பது இன்னும் தீர்க்கப்படவில்லை.

1952-53 இல் ஆந்திர மாநிலம் நம்மிடமிருந்து பிரிவதற்கு முன்னால் ராயல்சீமா போன்ற பகுதிகளில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக—ஆந்திரப் பகுதி பஞ்ச நிவாரணத்திற்காக மத்திய அரசாங்கம் 13½ கோடி கடன் கொடுத்தது. அதை 1970 இல் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நம்மைக் கேட்கிறார்கள். தமிழகத்தில் அந்தத் தொகை பயன்படுத்தப்படவில்லை. ஆயினும் ஒரேயடியாக நாம் அந்தத் தொகையைக் கொடுத்தாக வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சொல்கிறது. ஆனால் நமது நிதி அமைச்சர் அவர்கள் — கொடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நான்காண்டுக்குள் கொடுக்கிறோம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கையில் 10·8 கோடி ரூபாயை நான்காண்டுகளில் திருப்பிக் கொடுக்கும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இப்படி எனக்குத் தெரிந்த வரையில் சில பல இனங்களைக் கூர்ந்து பார்க்கிறபோது நிச்சயமாக மத்திய அரசாங்கம் நமக்கு ஓர் பொருளாதார நெருக்கடி, பயங்கரமான நிலை உண்டாக வேண்டுமென்றே சதி செய்கிறார்கள் என்று தோன்றுகிறது. இந்த மத்திய சர்க்காருடைய போக்கு நீடித்தால் நிச்சயமாக நமக்கு 39·5 கோடிக்கு பற்றுக்குறை ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு நமது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? இது மத்திய அரசாங்கம் நமக்கு இழைக்கிற தீங்கு அல்லவா? மோசடி அல்லவா என்பதை நமது அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் இடையில் உள்ள இந்த 3 ஆண்டுகளுக்கு — ஆண்டுத் திட்டங்களுக்கு நீங்களே செலவு செய்யுங்கள். அந்தச் செலவை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று மத்திய அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. அப்படிக் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை. திட்டக் கமிஷனும், நிதிக் கமிஷனும் சொல்லி யிருக்கிறார்கள். இந்த 3 ஆண்டுக் காலத்தில் தமிழக அரசாங்கம் 3 கோடி ரூபாய் அதிகமாகவே செலவு செய்திருக்கிறார்கள். அதை மத்திய அரசாங்கம் கொடுத்துத்தான் தீர வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் ஏற்கவில்லை. மத்திய அரசாங்க வரலாற்றிலேயே தமிழகத்திற்குக் கொடுக்கப்படுகிற வாக்குறுதிகள் இப்படித் தான் நிறைவேற்றப்படாமலேயே போகின்றன. மத்திய அரசு நான்காவது திட்டத்திற்கு 250 கோடி கொடுக்கிறோம் என்றது 201 கோடியாகக் குறைந்து விட்டது. ஆண்டு ஒன்றுக்கு 40 கோடி தருகிறோம் என்றது 36 கோடியாகி விட்டது. நீங்கள் ஆண்டுத் திட்டங்களை நிறைவேற்றுங்கள், நாங்கள் பணம் தருகிறோம் என்று சொன்னதில் 3 கோடி கொடுக்கவில்லை. ஆக இப்படிச் செய்து நம்மை ஒரு பொருளாதார சிக்கலில் அகப்பட்டுக் கொள்

[திரு. நா. வீராசாமி] [1969 மார்ச் 3

ளைச் செய்யவே அவர்கள் சதி செய்கிறார்கள், பொருளாதார நெருக்கடியை உண்டாக்குகிறார்கள் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது இலங்கை, பர்மா ஆகிய இடங்களில் இருந்தெல்லாம் வர இருக்கிற தமிழர்களுக்கு வாழ்வளிக்கத் திட்டத்தில் ஒன்றும் தெளிவாக்கப்படவில்லை. பாகிஸ்தானில் இருந்து அகதியாக வெளியேறிய வடநாட்டவர்களுக்கு நாம் இங்கே இடம் கொடுத்தோம். சென்னை கார்ப்பரேஷன் கூட உதவி செய்து இருக்கிறது. ஆனால் இப்போது 10 லட்சம் தமிழர்கள் வர இருக்கிறார்கள். அதற்கு என்ன திட்டம் இருக்கிறது? நிச்சயமாக காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள இடங்களில் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் பேர்கள் தங்குவதற்கு தக்க ஏற்பாடுகளை மத்திய அரசாங்கம் செய்தாக வேண்டும். மறுத்தால், ஒருமைப்பாடு, ஒற்றுமை என்றெல்லாம் அடிக்கடி நீங்கள் சொல்கிறீர்களே அந்த ஒருமைப்பாடெங்கே, என்று கேட்டு "ஜனகண மன" பாட்டைப் பாடிக்காட்டி — இது உணர்ச்சி பூர்வமானதாக இருந்தால் நிச்சயம் நாடற்று வருகிற 10 லட்சம் தமிழர்களுக்கு நாடெங்கும் தங்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்:** கனம் தலைவர் அவர்களே, இன்று சமர்ப்பிக்கப்பட் டிருக்கிற வரவு செலவுத் திட்டத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்திலே எந்த விதமான புரட்சிகரமான மாறுதல்களும் இல்லாததைப் பார்க்கிறபோது நாம் வருந்த வேண்டியதாகத்தான் இருக்கிறது. நிதி நிலை அறிக்கை உரையில் எந்தப் பக்கத்தை எடுத்தாலும் மத்திய சர்க்காரைக் குறை கூறுவதாகத் தான் இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு இந்த ஒரு மாநிலம் மட்டும் அல்ல, இந்த நாடு பூராவுமே கவனத்தில் இருக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் இந்த தேசத்தின் பாதுகாப்பும் மத்திய சர்க்காரின் பொறுப்பில் தான் இருக்கிறது. நமது எல்லைகளில் சீன பாகிஸ்தான் அபாயம் இன்னமும் இருக்கிறது. அப்படி இருக்கும்போது நம்முடைய பொறுப்பை நாம் நிறைவேற்றாது எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் குறை கூறிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. அது நியாயமாகாது.

அடுத்தாற்போல இந்த தமிழகத்தில் வேலை வாய்ப்புப் பிரச்சினையை அதிகரிக்க முயற்சிப்பதாகச்சொல்கிறார்கள். ஆனால் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதைத்தான் பார்க்கிறோம். கிட்டத்தட்ட 26 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் இன்று தெருவில் நின்று — தங்கள் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற முடியாது தவிப்பதைப் பார்க்கிறோம். இதை அரசாங்கம் உடனடியாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. முன்னாள். அமைச்சர் ஆர். வெங்கட்டராமன் அவர்கள் மந்திரியாக இருக்கும் பொழுது தமிழகத்திலே எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகள் எழுப்பப்பட்டன. அன்று இங்கிலாந்திலே 18-ஆம் நூற்றாண்டிலே தொழில் புரட்சி, இண்டஸ்ட்ரியல் ரெவல்யூஷன் ஏற்பட்டதை போன்று— அப்பொழுது இங்கிலாந்திலே தொழிற்சாலைகள் நிறைய ஏற்பட்டன — தமிழ் நாட்டிலேயும் அவர்கள் காலத்திலே நிறையத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. 18-ஆம் நூற்றாண்டிலே தொழிற் புரட்சி நடந்ததைப் போல் இங்கேயும் அப்பொழுது நடந்தது. ஆனால் இப்பொழுது 26 மில்களுக்கு மேற்பட்ட அளவில் மூடப்பட்டு இருப்பதைப் பார்க்கும் பொழுது தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் எப்படி வேலை வாய்ப்புக் கொடுக்கப்போகிறது என்பது நமக்கே வியப்பாக இருக்கிறது. அரசாங்கத் தரப்பிலே பேசும்பொழுது தொழில் பெருகி, தொழிலாளர் நலன் பெருக வேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் தொழிற்சாலைகள் மூடப்பட்டுத்

1969 மார்ச் 3] [திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்]

தான இருக்கின்றன. இதை அரசாங்கம் மனதில் கொண்டு நல்ல முறையில் அவற்றைத் திறப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். புதுக்கோட்டையிலே காவேரி மில் 8—2—1968-ம் தேதியிலிருந்து மூடப்பட்டது. இது வரைக்கும் திறந்தபாடில்லை. அங்கிருக்கிற தொழிலாளர்கள் அவர்களுடைய பிராவிடன்ட் பண்டிலிருந்து பணம் பெற்று தங்களுடைய குடும்பத்தை நடத்தி வருகிறார்கள். இப்படி பிராவிடென்ட் பண்டிலிருந்து வாங்கி எவ்வளவு காலத்திற்குத்தான் குடும்பத்தை நடத்த முடியும் என்று தெரியவில்லை. அங்கே தொழிலாளர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களிலே அவர்களுடைய பிரச்சினைக்கு நாம் ஒரு நல்ல முடிவைக் காணவில்லையென்றால் அவர்கள் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அந்தத் தொழிற்சாலையை மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள எல்லா தொழிற்சாலைகளையும் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயப் பிரச்சினைக்கு நாம் வருவோம். அரசாங்கத் தரப்பிலே சொல்லியிருக்கிறார்கள், மழைக் குறைவால் இந்த வருஷம் பஞ்சம் ஏற்படலாம் என்ற அச்சம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களிலே மழை இல்லாததால் தமிழ்நாட்டிலே பயிர் சாவியாகிப் போய்விட்டது. இதற்கு நிவாரணம் எப்படிக் கொடுக்கப் போகிறார்கள் என்று அரசாங்கம் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. இதற்காக தனியாக ஒரு அதிகாரியை ஆர்.டி.ஓ. லெவலில் போட்டு ஒவ்வொரு இடத்திற்கும் போய் அவர் பார்த்து இந்தப் பிரச்சினையில் நன்றாகப் பரிசிலனை செய்து எந்த எந்த இடங்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும், எப்படிக் கொடுக்க வேண்டுமென்று எல்லாம் பார்க்க வேண்டும். புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள் மழையை நம்பி விவசாயம் செய்யக்கூடிய பகுதிகள். அந்த இடங்களிலே சாவியாகப் போய்விட்டது. இதைப்பற்றி நாங்கள் கலெக்டரிடமும் அரசாங்கத்திடமும் விவசாயிகள் சார்பில் மனுக் கொடுத்தோம். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதோ, இல்லையோ தெரியவில்லை. ஆனால் அதிகாரிகள் வரி வசூல், கடன் வசூல், லெவி கொள்முதல் இவற்றையெல்லாம் விவசாயிகளிடம் போய் கேட்கிறார்கள். அவர்கள் இந்த நிலையிலே கொடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசாங்கத்திற்குப் பல மனுக்கள் நான் அனுப்பியிருக்கிறேன். அரசாங்கம் அவர்களுக்கு வரி வஜா செய்ய வேண்டும், லோனைத் தள்ளுபடி செய்ய வேண்டும், லெவி கொள்முதலை நிறுத்தி வைக்க வேண்டும். அந்தப் பகுதிகள் எல்லாம் மழையை எதிர்பார்த்து இருக்கிற நிலைமைதான். கேணி வெட்ட அரசாங்கம் கடன் கொடுத்திருக்கிறது. பல இடங்களிலே கேணிகள் வெட்டி யிருக்கிறார்கள். ஆனால் வெட்டிய கிணறுகளுக்கு மின்சாரம் இன்னும் கிடைக்கவில்லை. நாங்கள் அதற்காக எஞ்சினியரைப் போய்ப் பார்த்தோம். ஒவ்வொரு இடத்திற்கும் எவ்வளவு பணம் என்று அலாட் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் அந்த மாதிரி வறண்ட இடங்களுக்கு இந்த விஷயத்திலே முதல் சலுகை கொடுக்க வேண்டும் என்பதுதான். ஆற்றுப் பாசனம் அங்கு இல்லை, ஆற்றுப் பாசனம் வேண்டுமென்று கேட்டோம், இன்னும் கிடைக்கவில்லை. வறண்ட பிரதேசங்களுக்கு முதல் சலுகை இதிலே கொடுக்க வேண்டும்.

முன்னாள் மறைந்த முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்த போது பல பேர்கள் புதுக்கோட்டையை ஜில்லாவாக ஆக்கவேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாகப் பரிசீலனை செய்வதாக பெருந்தன்மையோடு அவர்களும் சொன்னார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை அரசாங்கம் நிச்சயம் காப்பாற்றும் என்று திண்ணமாக நம்புகிறேன். எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு ஜில்லாவாக அதை ஏற்படுத்தி அவர்கள் சொன்ன வார்த்தைக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே மாணவர்களுக்கு என்.சி.சி. டிரெயினிங்கை நிறுத்திவிட்டோம். இது மிகவும் வருந்தத்தக்கது. மொழிப்பிரச்சினையை பொறுத்தவரையில் அது வரவே வராது என்பதை நான் உறுதியாகக்

கூறுகிறேன். இந்த நேரத்திலே இளைஞர்களுக்கு ஒரு கட்டுப்பாடான பயிற்சி கொடுக்கவில்லையென்றால் பிற்காலத்தில் பொறுப்பு ஏற்கப்போகிறவர்கள் அவர்கள்தான், நாட்டை நடத்தப் போகிறவர்கள் அவர்கள்தான், அவர்களுக்கு அந்தப் பயிற்சி நிச்சயம் தேவை. ஆகவே அதை எடுத்து விட்டதால் ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத நிலைமைதான் ஏற்படும். ஒன்றே ஒன்றுதான் இப்பொழுது கட்டுப்பாடோடு நடந்து வருகிறது. அதுதான் ராணுவம். அந்த ராணுவப் பயிற்சியை இளைஞர்களுக்கு நிறுத்திவிட்டால் பிற்காலத்தில் யார் பொறுப்பு ஏற்கப்போகிறார்கள் என்ற ஐயப்பாடு தோன்றும். இது மிகவும் முக்கியமான பிரச்னை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் வெளிநாட்டிலே இருந்து நமக்கு உள்ள அபாயத்தைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எல்லைகளில் உள்ள அபாயத்தை நாம் உணரவேண்டும் என்பதற்காகத்தான். தமிழ்நாட்டிலே இளைஞர் சமுதாயம் இருக்கிறது என்றால் வீரம் பொருந்திய தமிழர்கள் என்று சொல்லும்பொழுது வெளிநாட்டினர் படை வந்துவிட்டால் இங்கே ஆயுதம் ஏந்தத் தெரியாத இளைஞர்களும் பெரியோர்களும் இருக்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கத் தோன்றும். அவர்கள் வந்து பார்த்தால் பொம்மைகளாக இருக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும். ஏ மியூசியம் வித் லைவ்லெஸ் ஸ்டேச்சுஸ் என்பதைப்போல்தான் இங்கே பார்க்கக்கூடிய நிலைமை இருக்கும். எனவே அவர்களுக்கு ராணுவப் பயிற்சியைக் கொடுத்து, புதிய சமுதாயத்தை நாம் உருவாக்குவதன் மூலம் அவர்கள் கையில் பொறுப்பைக் கொடுத்து பிற்காலத்தைப் பொற்காலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. நு. ப. அழகமுத்து :** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இங்கிலாந்திலே 18-வது நூற்றாண்டிலே ஏற்பட்ட தொழில் புரட்சியைப் போல், திரு. வெங்கட்டராமன் அவர்கள் தமிழக அமைச்சராக இருந்த நேரத்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது என்று நண்பர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இங்கிலாந்திலே 18-வது நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சி இயந்திரத்தைப் புகுத்தியதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. அந்தத் தத்துவத்தின்படிதான் திரு. வெங்கட்டராமன் அவர்கள் இருந்த காலத்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டு தற்போதுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியிருக்கிறதா ?

திரு. ராஜகுமார் விஜயரகுநாத தொண்டமான் : புரட்சிகரமான ஒரு மாற்றம் என்று தான் சொன்னேன்.

***திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பரிசீலிக்கும்போது நம்முடைய மாநிலத்தில் இருக்கும்படியான நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் மனதில் கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்று பஞ்சாலையிலே பெரிய நெருக்கடி இருக்கிறது. கைத்தறியிலே இன்று ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட உழைப்பாளர்கள் பட்டினி கிடக்கும்படியான நிலை இருக்கிறது. இன்ஜினியரிங் தொழில் இதுபோல் நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் ஓட முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. கிராமப்புறத்திலே இன்றைய தினம் நூற்றுக்கு 45 சதவிகிதம் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் எந்த விதமான வசதியும் அற்று, வறட்சிகள் காரணமாக வருமானமற்று திண்டாடும்படியான சூழ்நிலை இருக்கிறது. மொத்தத்தில் வாங்கும் சக்தியை இழந்த வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கும்படியான மக்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மத்தியில் மத்திய சர்க்கார் இப்பொழுது கொண்டு வந்திருக்கும்படியான வரவு செலவுத் திட்டம் மாநில வரவு-செலவுத் திட்டத்தையே சூறையாடிவிடுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய, எங்கள் கட்சியினுடைய வேண்டுகோள்.

வரவு-செலவுத் திட்டத்தை வைத்தவுடனே காங்கிரஸ் கட்சி தரப்பில் 'நீங்கள் வந்து தொழில் வளர்ச்சியே ஏற்படவில்லை' என்று சொல்லுவதும் நம்முடைய தரப்பில் "பார், பார் இன்னின்ன தொழில்கள் வந்திருக்கின்றன" என்று சொல்லுவதுமான நிலைமை என்றும் நிலைத்து இருக்கிறது. மாநில சர்க்கார் ஒரு தொழிலை வளர்ப்பது என்பதோ, விட்டு விடுவது என்பதோ அதனுடைய சூழ்நிலையை மட்டும் பொருத்தது அல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது, "ஐந்தாண்டுத் திட்டங்களை நாங்கள் எதிர்க்கவில்லை, அதனுடைய பலன் சாதாரண மக்களுக்குக் கிடைக்கவில்லை, ஆகவே, அதிலே, மாறுதல் செய்யவேண்டும்" என்று வற்புறுத்தி பேசினார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய கோரிக்கையிலே கூட 16¾ கோடி ரூபாயை மத்திய சர்க்காரிடத்தில், திட்டமிடப்படாத செலவுக்காக எதிர்பார்க்கிறோம். திட்டமிட்ட செலவுக்கு ரூ. 50 கோடி ரூபாயை வற்புறுத்தியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஒரு பெரும் தொகையை மத்திய சர்க்காரிடத்திலிருந்து எதிர்பார்க்கக்கூடிய இந்த நிலையில் அவர்கள், "நாங்களே பெரிய கடன் தொல்லையில் இருக்கிறோம், எங்களால் உதவி கொடுக்க இயலாது" என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வருகிற 3 ஆண்டுகளுக்கு ஆட்சியை நடத்தினால், ஒரு பக்கம் காங்கிரஸ்காரர்கள் வெளியில், "இந்த சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியாது" என்ற பிரசாரம் செய்வார்கள். மறு பக்கம் மக்களின் கஷ்டங்களும் மலைபோல் பெருகி நிற்கும் அடிப்படையில் மத்திய சர்க்காரிடமிருந்து உரிமைகளைப் பெறுவதில் தெளிவான கண்ணோட்டத்தோடு இருக்கவேண்டும். நம்முடைய நாட்டில் இருக்கும் யதார்த்தமான நிலைமை என்ன ? மக்களுக்குப் பலன் கிடைக்கவில்லை என்றால் எந்தத் துறையில் பலன் கிடைக்கவில்லை என்று பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டு அரசாங்கத்திற்கும் இன்னொரு நாட்டு அரசாங்கத்திற்கும் இடையே ஏற்படுகின்ற ஒப்பந்தத்தின் மூலம் மூலதனம் வருகிறது என்றால் என்னுடைய கட்சி ஏற்றுக்கொள்ளும். ஆனால் 1948-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை எப்படிப்பட்ட மூலதனம் வந்திருக்கிறது என்று பரிசீலிக்க வேண்டும். நம் நாட்டில் 1948-ம் ஆண்டில் 250 கோடி ரூபாய் அந்நிய மூலதனம் இருந்தது. 1968-ல் 1,000 கோடி ரூபாய்க்கு அந்நிய முதலாளிகளின் மூலதனம் இந்த நாட்டில் இருக்கிறது என்று சர்க்கார் புள்ளி விவரம் கூறுகிறது. 1957-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரை உள்ள பத்தாண்டு இடைக் காலத்தில் அந்நிய முதலாளிகள் 600 கோடி ரூபாயை அள்ளிச் சென்றுள்ளார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

கிராமப் புறங்களில் மக்கள் தொகையில் 6 சதவிகிதம் உள்ள மிராசுதார்கள் கையில் நாட்டின் நிலப்பரப்பில் 40 சதவிகிதம் இருக்கிறது. நிலமற்ற ஏழை விவசாயிகள் 42 சதவிகிதமாக இருக்கக்கூடியவர்கள் கிராமங்களிலே இருக்கிறார்கள். இதுதான் நாட்டின் வாங்கும் சக்தியைக் குறைக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்கிறது, தொழில்களிலே நெருக்கடியைச் சிருஷ்டிக்கிறது. இந்த நிலைமையில் மாறுதல் வேண்டும் என்று மாநில அரசு குரல் எழுப்பவேண்டும். திட்டச் செலவைச் சரிக்கட்டுவதாக இருந்தாலும், திட்டமில்லாத செலவைச் சரிக்கட்டுவதாக இருந்தாலும் மத்திய சர்க்காரிலே கொள்கையில் மாறுதல் வேண்டுமென வற்புறுத்தவேண்டும். முன்னாலே பேசிய காங்கிரஸ் நண்பர் அவர்கள் பாதுகாப்பைப் பற்றியெல்லாம் பேசினார்கள். நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள், "பாதுகாப்புச் செலவுக்காக அதிகப்படியாகச் செலவழிக்கப்படுகிறது, அதிலே 100 கோடி ரூபாயை வெட்டினால் மாநிலங்களுக்கு உதவியாக இருக்கும்" என்று தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலே பேசினார்கள். தற்போது பிரதம மந்திரி அவர்கள் பாராளுமன்றத்திலே பேசும்போது சைனாவுடன் ஒப்பந்தத்

[திரு. என். வரதராஜன்] [1969 மார்ச் 3

திறகு வர முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பாதுகாப்புச் செலவு கட்டுப்படுத்தப்பட வேண்டும் அதிலே பங்கு நமக்குக் கிடைக்க வேண்டுமென்பதை வற்புறுத்த வேண்டும். அதே சமயத்தில் அந்நிய மூலதனத்திற்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கவேண்டும். இந்த நாட்டு செல்வத்தை அவர்கள் அள்ளிச் சென்று கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டு மக்கள் உழைக்க உழைக்க அந்நிய நாட்டு முதலாளிகள் அதன் பலனை எடுத்துச் சென்று கொண்டிருந்தால் இந்த நாட்டிலே ஒரு தம்பிடிகூட மிஞ்சாது. என்னதான் திட்டத்தைப் போட்டு நிறைவேற்றினாலும் நிலைமைகள் சீரடைய முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தல் காலத்தில், இத்தகைய கொள்கைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பாங்குகளைத் தேசவுடைமையாக்க வேண்டும், இந்த நாட்டில் பெரும் தொழில்கள் பொதுத்துறையில் இருக்க வேண்டும், கம்பெனிகள் வருமானத்திற்கு வரம்பு கட்டவேண்டும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று நமது மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும். இதற்காதரவாக நமது மக்களையும் திரட்ட வேண்டும். இந்த நாட்டிலே 1967-ம் ஆண்டில் பெருத்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத மாற்றுக் கட்சி அரசுகள் ஏற்பட்டிருக்கின்றன. கேரளாவிலே, மேற்கு வங்கத்திலே நம்முடைய தமிழகத்திலே மற்றும் பல இடங்களில் வேறு அரசுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லோருடனும் சேர்ந்து நின்று நிதிக் கமிஷனிடமும், தேசிய அபிவிருத்தி கவுன்சிலிலும் வாதாடவேண்டும். மத்தியஅரசின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினால்தான் திட்டத்தில் மாறுதல். வரவு செலவுத் திட்டத்தில் மாறுதல் ஏற்பட முடியும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்றத்தில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு அடிப்படையான அதிகாரம், சட்டம் மத்திய அரசிடந்தான் இருக்கிறது என்றார்கள். அதை எதிர்த்து உரிமைகளைப் பெறவேண்டும். இந்தப் பிரச்சினையில் பல்வேறு கட்சிகளும், முதலமைச்சர் அவர்களுடைய கைகளைப் பலப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். எனக்கு அது ஆச்சரியமாக இருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்திலே பிரஜா சோஷலிஸ்டு கட்சியோ, சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியோ, இந்திய கம்யூனிஸ்டு கட்சியோ, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ, தமிழரசுக் கழகமோ, முஸ்லிம் லீகோ, எந்தக் கட்சி உங்களை எதிர்த்தது? இன்று தமிழ்நாட்டு மக்களின் மத்தியில் முதலமைச்சர் அவர்கள் "உறவுக்காக கை நீட்டுவோம்" உரிமைக்காக குரல் எழுப்புவோம்" என்று பேசியிருக்கிறார்கள். இன்று தமிழ்நாட்டு மக்களின் நிலை என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். மக்கள் கிராமங்களில் குடிதண்ணீர் கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி நிலையில் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளை எல்லாம் போக்க ராஜ்யத்தில் பண வசதி இல்லை. மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையெல்லாம் எடுத்துக் கூறி மத்திய அரசிடம் உரிமைக்கு கை நீட்ட வேண்டும். அதுதான் உறவையும் பலப்படுத்த முடியும். அப்போதுதான் திட்டத்தின் நிலைமைகளிலே மாறுதல் ஏற்பட முடியும், வரவு செலவுத் திட்டத்திலே புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியும்.

நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே சில காரியங்களைச் செய்திருக்கிறோம். பி.யூ.சி.யில் இலவச படிப்பு, மின்சாரத்துறையில் முன்னேற்றம் புதிய வரிகளைப் போடாமல் தள்ளி வைத்திருத்தல் ஆகியவை வரவேற்கத்தக்க மாறுதல்கள்தான். ஆனால் செங்கோட்டையில் மொரார்ஜி தேசாய் வரியைப் போட்டுக் கொண்டே இருக்கக்கூடிய நிலையில் நம்முடைய பட்ஜட்டை வரி இல்லாமல் தயாரித்தும் அதன் பயனை மக்கள் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாம் கொடுக்கும் சலுகைகள் கடலில் கரைத்த பெருங்காயம் போன்றே இருக்கும். விவசாயிகளும், பாட்டாளி மக்களும் ஏமாந்து

1969 மார்ச் 3] [திரு. என். வரதராஜன்]

நிற்கிறார்கள். சூரியனைக் கொண்டு வா, சந்திரனைக் கொண்டு வா என்று போகாத ஊருக்கு அவர்கள் வழி கேட்கவில்லை. கேரள சர்க்கார், மேற்கு வங்க சர்க்கார், நம்முடைய சர்க்கார்—இது போன்ற ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து குரல் எழுப்ப வேண்டும். அதற்கு நம்முடைய அரசு முழு முயற்சியுடன் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறி மற்ற சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வறட்சி நிலைமையைப் பற்றிக் கூறும்போது ஒரு பயங்கரமான சூழ்நிலையில் இருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இதிலே நமக்கு ஒரு தெளிவு வேண்டும். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலைமையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எந்த மாவட்டமும் விதிவிலக்கல்ல. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மாவட்ட கலெக்டர்களின் ரிப்போர்ட்டை நம்பிக் கொண்டிருப்பதில் பயன இல்லை. மக்களுக்கு உண்ண உணவு இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை, மாட்டிற்குத் தீவனமில்லை. உடன் தொல்லை பொறுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பது போதாது. ஐந்தாறு கோடி ரூபாய் இதற்காக செலவழிக்க வேண்டிய ஒரு அவசியம் வரும். மாவட்ட அதிகாரிகள் ரிப்போர்ட்டை மட்டும் வைத்துக் கொண்டு பேசக் கூடாது. என் பகுதியான வேடசெந்தூர் வட்டம் நெருப்பைப் பெய்து பற்றி எரியும்படியான நிலையில் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் பெரும் பகுதி பழனி, திண்டுக்கல், உசிலம்பட்டி, திருமங்கலம், பெரியகுளம் வட்டத்தின் ஒரு பகுதி ஆகியவை இந்த நிலையில் இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் இப்படி இருக்கிறது என்றால் மற்ற மாவட்டங்களும் இதே நெருக்கடியில் மாட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் இவர்களை ஒரு இடத்தில் கூட்டி வைத்து அதிகாரிகளையும் அழைத்து வைத்து முக்கிய மந்திரிகளும் அங்கு வந்து அந்த மாவட்டத்திலுள்ள உண்மை நிலை என்னவென்று பார்த்து அதற்குரிய திட்டங்களை அவசரமாக நிறைவேற்ற வேண்டும். பலயிடங்களில் கஞ்சித் தொட்டிகள் கூட திறக்க வேண்டியதொரு சூழ்நிலை இருக்கிறது. பஞ்சத் தணிப்பிற்காக மத்திய அரசிடம் போராடி நிதி பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு விவசாயிகளும் கை கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பகல் 12.30

அடுத்து, மாநில வரவு–செலவுத் திட்டத்தில் போக்குவரத்துத் துறையில் ஒரு மாறுதல் ஏற்படுத்த, அதை நாட்டுடைமையாக்குவதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். இன்று சில பேருந்து வழித்தடங்களை நாம் எடுத்திருக்கிறோம். இன்றும் தமிழ்நாட்டில் மோட்டார் தொழிலில் பெரும் ஆதிக்கம் வகிக்கும் டி.வி.எஸ். மன்னர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தத் தொழிலை அரசு எடுத்துக்கொண்டால் அரசுக்கும் நிறைய வருமானம் கிடைக்கும். அதோடு தொழில் வளர்ச்சியும் ஏற்படும். ஆகவே போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். பத்து, இருபது பஸ்கள் வைத்திருப்பவர்கள் வைத்துக் கொண்டிருக்கட்டும். ஆயிரம், ஆயிரத்தைந்நூறு பஸ்கள் வைத்துக் கொண்டிருக்கும் பெரிய அதிபர்கள் தமிழ்நாட்டின் செல்வாதாரத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கக் கூடிய அட்டைகள். ஏற்கெனவே பத்து ஆண்டுகளுக்கு முன்பே பல ராஜ்யங்கள் இது போன்று பஸ் தொழிலை நாட்டுடைமையாக்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன. ஆகவே நமது அரசாங்கம் அதற்காக ஒரு பெரிய தொகையை ஒதுக்கி இந்த தொழிலை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும். நமது மாநிலத்திலுள்ள பஞ்சாலைகளுக்காக 15 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாலைத் தொழிலில் பெரிதொரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்த நெருக்கடிக்கும் நமது பொருளாதார நெருக்கடிக்கும் அடிப்படை உறவு இருக்கிறது. ஆகவே இந்த 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவது போதாது, இதுவும் முதலாளிகளுக்கு சலுகைகள் அளிப்பதற்கல்ல அவர்கள் லாபம்

சம்பாதிப்பதற்கல்ல. தொழிலாளர்கள் நெருக்கடியிலிருந்து மீளவே நாம் இதை அளிக்கிறோம். எல்லா சலுகைகளையும் முதலாளிகள் வாங்கிக் கொண்டு தொழிற்சாலை நடவில்லை என்ற நிலை இருந்தால் பஞ்சாலைகளை நாமே ஏற்று அதன் நிர்வாகத்தை நடத்தவேண்டியிருக்கும். ஆகவே அதற்காக அதிகப் பணம் ஒதுக்கவேண்டும். மத்திய அரசிடமிருந்து இதற்குரிய பணத்தை வாங்கவேண்டியிருக்கும். தற்கொலை செய்து கொள்கிற அளவிற்கு ஒரு பயங்கரமான நிலையில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). ஆசிரியர்கள் நிலைபற்றியும் பரிசீலிக்கவேண்டும். இன்றைய தினம் தனியார் துறையிலுள்ள ஆசிரியர்களுக்கு நாம் ஓரளவிற்கு உதவி செய்ய முயற்சி செய்யவேண்டும். செகண்டரி கிரேட் படித்த ஆசிரியர்கள் ஹையர் கிரேட் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஆயிரக்கணக்கில். அவர்கள் படித்தது செகண்டரி கிரேட். ஆகவே அதற்குரிய சம்பளத்தையாவது அவர்களுக்கு வழங்க முன்வரவேண்டும். தனியார் துறை ஆசிரியர்களுக்கு வைத்தியச் சலுகைகள், அவர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் வீட்டு வாடகை அலவன்ஸ் போன்றவை கொடுக்க முயற்சி செய்யவேண்டும். ஒரு மாவட்டம் அல்லது இரண்டு மாவட்டங்கள் என்றெடுத்து அந்த மாவட்டத்திலுள்ள உதவி பெறும் தனியார் ஆரம்பப் பள்ளிகளை, சர்க்கார் எடுத்து நடத்தும் ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். கல்வியில் கொள்ளையடிக்கும் சில பெரியோர்கள் இருக்கிறார்கள், அவர்களைக் கட்டுப்படுத்தும் வழி அப்போது நாட்டில் ஏற்படும். கடைசியாக ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். மத்திய அரசைப் பார்த்து எப்படி நாம் அண்ணந்து நிற்கிறோமோ அதேபோல் ஸ்தலஸ்தாபனங்கள், நகர சபைகள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் நம்மை நோக்கிக் கொண்டு நிற்கின்றனவென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. திண்டுக்கல் நகரத்தில் பல்வேறு அனுபவங்கள் எனக்கு இருக்கிறது. சைக்கிள் வரியை ரத்து செய்து விடுகிறோம் என்று திண்டுக்கல் நகரசபை தீர்மானம் செய்து அனுப்பினால் அதை ஏற்க சர்க்கார் மறுக்கிறது. ஏன் மறுக்கிறது? முடியவில்லை. ஆகவே ஸ்தலஸ்தாபனங்களுக்கு கொடுக்கவேண்டிய நிதி உதவியை நாம் கூடுதலாகக் கொடுத்து உதவி செய்யவேண்டும். அப்போதுதான் அங்கு நடைபெறவேண்டிய சமுதாய முன்னேற்ற வேலைகள் சரிவர நடைபெறமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு, நேற்றைய முன் தினம் இந்த மன்றத்தில் மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது எனது கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டம் நாட்டு மக்கள் அனைவராலும் பாராட்டப்படத்தக்க அளவிற்கு, வரவேற்கத் தக்க அளவிற்கு சிறப்பான பல அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. இந்த வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்புகளை நோக்கும் போது இன்று நாட்டிலுள்ள வறட்சி நிலைமையும், மத்திய அரசின் ஒத்துழையாமைத் தன்மையும் இவைகளையெல்லாம் உள்ளடக்கிவைத்து நோக்கினால் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள் நமக்குப் புரியும். பெரும்பாலான உறுப்பினர்கள் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைபற்றி குறிப்பிட்டார்கள். பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட விளைவுகளை, அதனால் ஏற்பட இருக்கிற சங்கடங்களையெல்லாம் சமாளிக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பில்தான் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு மலர்ந்த பிறகு பொதுவாகவே வேளாண்மைத் துறையிலே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நாட்டில் நெல் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பதை கடந்த கால வரலாறு காட்டும். இப்போது பருவ கால மழை பொய்க்காமல் இருந்திருந்தால் அதன் சிறப்பு இன்னும் மேலாக வெளிப்பட்டிருக்கும்.

பருவ கால மழை பொய்த்ததால் அதன் சிறப்பு தெரியாமல் போனது
மட்டுமல்ல, பல சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிய நிலையும் இன்றைய
தினம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில்
வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் நல்லமுறையில் பல்
வேறு வழிவகைகள் காணப்படுகின்றன. இப்போது ஏற்பட்டிருக்கிற வரட்சி
நிலையைப் போக்குவதற்காக குழாய்க் கிணறுகளும், வடிமுனை குழாய்
கிணறுகளும், கிணறுகளும் வெட்டுவதற்காக 2,500 தனியார் குழாய்க்
கிணறுகள், 3,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 14,000 கிணறுகள்
இவற்றிற்காக நிலஅடைமான வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்பட
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் வேளாண்மைத் துறையில்
மிகுந்த பயன் தரத் தக்க வித்துக்களை உபயோகிப்பதன் மூலம் ஒரு
போக விளைச்சல் உள்ள நிலங்களை இருபோக விளைச்சல் நிலங்களாக மாற்று
கிற முறையும் இத்திட்டத்தில் தரப்பட்டிருக்கிறது. மிகுந்த பயன் தரத்
தக்க வித்துக்களை மேலும் மூன்று லட்சம் ஏக்கர் பரப்பளவில் விளைவிக்க
வும், இரு போக பயிர் விளைச்சலை மேலும் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில்
விரிவுபடுத்தவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் பயிர்களைப்
பாதுகாக்க நோய்க்கொல்லி, பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதற்
கான திட்டத்தின்கீழ் 48 லட்சம் ஏக்கர் உணவுப் பயிர்களும், 24 லட்சம்
ஏக்கர் பிற பயிர்களும் பயனடையும் வகையில் மருந்து அளிக்கக் கூடிய
திட்டமும் இதில் தரப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு உழவர்களுக்கு 5,000
தெளிப்பான்கள் வழங்கவும், உழவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்
காக 500 விசைத் தெளிப்பான்களை அரசு வாங்கும் என்று தெரிவிக்கப்
பட்டிருக்கிறது. வித்துச் சான்றளிக்கும் (ஸீட் சர்டிபிகேஷன் ஸ்கீம்) திட்ட
மொன்றை துவங்க ரூ. 30 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு
இந்த ஆண்டிற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்
நில அடிமட்ட நீர் வளங்களை ஆய்வதற்கான திட்டம் ஒன்று, ஐக்கிய
நாடுகளின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் தொழில் நுட்ப உதவியுடன்
நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்காக 23 லட்சம் ரூபாய் வகை
செய்யப்பட்டுள்ளது. அதேபோல் கோவையில் தரமான வித்துக்களை தயா
ரிப்பதற்கேற்ற கருவிகளை அமைத்து உற்பத்தி செய்வதற்கான திட்டத்திற்கு
12 லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வேளாண்மைத்துறையில்
உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில்
அமைந்துள்ள சிறப்பான அம்சங்கள் இவை. இத்தகைய பல்வேறு சிறப்
பான அம்சங்கள் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

அடுத்து முக்கியமான அம்சங்களிலே ஒன்று தொழில்துறையிலே எந்த
அளவுக்கு நம்முடைய நிலைமைகள் இருக்கின்றன என்பதாகும். தொழில்
துறையைப் பொறுத்தவரையிலே சென்னையிலும், தூத்துக்குடியிலும்
துறைமுகங்களைக் கட்டுவதற்கு 6·2 கோடி செலவிற்கு இந்திய அரசு
ஒப்பளிப்பு அளித்திருப்பதும், மாநிலப் பஞ்சாலைக் கழகத்திற்கு உதவ
அளிப்பதற்காக 15 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதும், ஆலங்
குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றையும், அரக்கோணத்தில் தொடர்
வாரிடத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவும் திட்டங்களை விரைந்து
செயல்படுத்த 2·80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதும்
ஆகிய இவைகளைப் பார்த்தால் தொழில்துறையில் இந்த அரசு எந்த
அளவுக்கு அக்கறை காட்டுகிறது என்பது தெள்ளத் தெளிவாகப் புலனா
கும். தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை ஒன்றைத் தனியார், பொதுத்
துறை இரண்டும் இணைந்துக் கூட்டுத்துறைத் திட்டமாகச் செயல்படுத்த
நான்காம் திட்டத்தில் 150 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இப்படிப் பல்வேறு முறையிலும் அக்கறை எடுத்துக்கொண்டு வருவது
மட்டுமல்லாமல், அவற்றிற்கெல்லாம் முடி வைத்ததுபோன்று, நாம்
கண்டுகொண்டிருந்த கனவு, தமிழக மக்களின் நெடுங்கால லட்சியம்,
மறைந்த முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் லட்சிய
கீதமாக முழங்கிக்கொண்டிருந்த சேலம் இரும்பாலைக் கனவு நனவாகக்
கூடிய கரு உருப்பெற்றிருக்கிறது. சேலம் இரும்பாலை சரித்திரப் பிரசித்தி
பெற்ற ஒன்று. அதற்குப்பின்னாலே ஒரு சரித்திரமே இருக்கிறது. நீண்ட
நெடுங்காலமாகக் கோரப்பட்டு வந்த ஒன்று. வடமாநிலங்களிலே உள்ளது

போல இங்கு இரும்பு உருக்காலைகள் வேண்டுமென்ற கோரிக்கை மத்திய சர்க்காரிடத்தில் எழுப்பியபோது, அவ்வப்பொழுதைக்கு, அந்தந்த நேரங்களுக்குத் தகுந்தாற்போல், சில காரணங்களைச் சொல்லிக்கொண்டும், சில சமாதானங்களைச் சொல்லிக்கொண்டும் அத்திட்டத்தை மறுதளித்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். தென்னாட்டிலே இப்படி ஒரு உருக்காலை உருவாக வேண்டுமென்று தமிழகத்திலேயிருந்து கோரிக்கை உருவான பொழுது மத்திய சர்க்கார் ராஜதந்திர முறையிலே பதில் அளித்தது. ஆந்திர மாநிலத்திலே விசாகப்பட்டிணத்திலே வேண்டுமென்று கேட்கிறார்கள், கர்நாடக மாநிலத்திலே ஆஸ்பெட்டிலே வேண்டுமென்று கேட்கிறார்கள், தென்னாட்டிலே இப்பொழுது சேலத்தில் இப்படி ஒரு உருக்காலையை உருவாக்க வேண்டுமென்றால் தென்னாட்டிலேயே மூன்று உருக்காலைகளை வைக்க வேண்டும் என்று மித்திர பேதத்தை உருவாக்குகின்ற முறையிலே, ராஜதந்திர ரீதியிலே பதில் அளித்தார்கள். அதற்குப் பின்னாலேயே அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொன்னார்கள். பொககாரோ இரும்பு உருக்காலைத்திட்டம் ஒரு ராட்சஸத் திட்டம், அவ்வளவு பெரிய திட்டத்தை மேற்கொள்வதால் பல சிக்கல்கள், சங்கடங்கள் இருக்கின்றன. எனவே, அதை நான்கு கூறுகளாகப் பிரித்து, பொக்காரோவிலே ஒரு உருக்காலையும், சேலத்திலே ஒரு உருக்காலையும், விசாகப்பட்டணத்திலே ஒரு உருக்காலையும், ஆஸ்பட்டிலே ஒரு உருக்காலையும் ஆக நான்கு ஆலைகளை அமைக்கலாம் என்ற பதிலைச் சொன்னார்கள். அதை எடுத்துக் கொண்டு தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்களும் டெல்லிக்குச் சென்று தெரிவித்தார். அதற்குப் பின்னாலேயும் இன்றுகூட மத்திய சர்க்கார் அதை ஒத்துக்கொள்ளாதது வருந்துதற்குரியது. பெருவாரியான அதிகாரங்களை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, " தான் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் " என்கிற முறையிலே மத்திய சர்க்கார் நடந்து வருகிறது என்பதற்கு இதைவிட வேறு அடையாளம் தேவையில்லை. அப்படிப்பட்ட நிலையிலே மாநில அரசு தன்னுடைய சொந்த முயற்சியிலேயே இரும்பு உருக்காலைத் தொழிற்சாலையைத் துவங்க பூர்வாங்கத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

அதேபோல், சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு நிதியாக 31½ லட்சம் ரூபாய் வழங்கவும், நீர்வழங்கல் திட்டத்தின்கீழ் மாநகராட்சிக்கு ஆகும் 2 கோடி ரூபாய் செலவிலே ஒரு கோடி ரூபாயை மாநில அரசு அதன் திட்டப் பகுதியாக ஏற்றிருப்பதும் வரவேற்கத் தக்க அம்சமாகும். வீராணம் நீர் வழங்கும் திட்டத்திற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் சரித்திரப் பிரசித்திப் பெற்ற திட்டமாகும். சென்னையிலே குடிதண்ணீர்த் தேவை ஏற்படும் என்று அறிந்த சென்னை மாநகராட்சி மன்றம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக வந்தபிறகு, காவிரியாற்று நீரை சென்னைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்தது. வீராணம் ஏரி வழியாக நீரைக் கொண்டுவருவது என்ற முறையில் இதற்கு வீராணம் நீர் வழங்கும் திட்டம் என்ற பெயர் வைக்கப்படுகிறது. இதற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. வேலை நிறைவேற்றப்படும் விரைவினையொட்டி இந்தத்தொகை மேலும் உயர்த்த வேண்டியிருக்கலாம் என்று குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். சென்னையில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதைப்பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதை உடனடியாகத் தீர்க்க இந்த காவிரி நீர்த் திட்டம் மிகவும் உதவுவதாகும். இதைக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எடுத்துச் சொன்ன நேரத்தில் அது அலட்சியப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்த பிறகுதான் அதற்கான ஆக்கமும், ஊக்கமும் தந்து அந்தத் திட்டம் துவங்குகிற கட்டத்தை அடைந்திருக்கிறது.

மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் உள்ள உறவுகள் குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பாக நடந்துக் கொண்டார்கள் என்று பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்களே குறிப்பிட்டார்கள். அதேபோன்ற உறவு தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அவர்கள் விட்டார்கள். ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட சமூக உறவுகள்

இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டபடி., மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் உள்ள அதிகார இடைவெளிகளைக் குறிப்பிடவில்லை. சமூக உறவு இருக்கவேண்டுமென்றால் மத்திய அரசு சில பல அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதாலும், சிலபல நிதிவசதிகளை மாற்றிக்கொடுப்பதாலும் தான் அப்படிப்பட்ட ஒரு பரஸ்பர நிலையை உருவாக்க முடியும் என்று இந்த மன்றத்தின்மூலம் இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளின் பிரச்னைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரத்தக்க அளவுக்கு நாம் விரைவில் முயற்சிகளை மேற்கொள்ளும் இதே நேரத்தில் மத்திய சர்க்காரின் வரவு-செலவுத் திட்டத்தில் உரத்திற்கு வரியும், அதேபோல மற்றக் காரியங்களுக்கு, பம்பு செட்டு போன்றவைகளுக்கு வரியும் போடுவது உண்மையாகவே இந்த விவசாய வேலைகளுக்கு முட்டுக்கட்டை போட்டதாகத்தான் அமையும். திராவிட முன்னேற்றக் கழகம் சிறப்பாக ஆட்சி புரிகிறது என்ற நல்ல பெயருக்கு களங்கம் கற்பிக்கும் முறையில், நான் இது அமைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். (மணியடிக்கப்பட்டது).

திரு. சா. மெய்யப்பன் : சபாநாயகரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நான் இங்கு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நமது நிதிநிலை அறிக்கை அமைச்சரவர்களால், மத்திய அரசிலிருந்து நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த காலத்திலேயே இங்கும் தாக்கல் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. அதுபோல நமது நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு கட்சித்தலைவரும் அவரவர்கள் கருத்தை அவரவர்கள் கோணத்திலே நின்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை பழங்கதை என்றும், இது சொற்கள் அடங்கியது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல மற்ற சில கட்சிகாரர்களும் அவரவர்கள் கோணங்களில் நின்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் பட்ஜெட் தாக்கல் செய்யக்கூடிய நேரத்திலே தாக்கல் செய்ததும், அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செலுத்திச் சொல்லிய சில வாசகங்கள் இருப்பதும், வேளாண்மை உற்பத்திக்கும், தொழில்துறைக்கும், கல்வித்துறைக்கும், பஞ்சாலைத்திறப்புக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கக் கூடிய நிலையில் இருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மத்திய சர்க்கார் பட்ஜெட் தாக்கல் செய்ததிலிருந்து இப்பொழுது மண்ணெண்ணெய், பம்பு செட்டுகள், வெல்லம், உரம் முதலியவைகளுக்கு வரியும் மற்றுமுள்ள செல்வ வரிக்கும் போட்டிருக்கும் காரணத்தினாலே நம்முடைய பட்ஜெட்டில் நாம் எதைக் கருதி நினைத்து வந்தோமோ அதற்குமாறாக நம்முடைய விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த 16 கோடி ரூபாய் துண்டு விழுவதைப் பற்றி எந்த விதமான முடிவும் எடுக்காமல், அதற்கு வழிவகை என்ன செய்வது என்று சொல்லாமல் நம்முடைய நிதிஅமைச்சரவர்கள் இப்பொழுது காலையிலேகூட கண்ணியத்துடனும், அடக்கத்துடனும் சொன்னார்கள், ''ஆக்ட் ஆப் காட்'' என்று, அப்படி கடவுள்தான் மாற்றுவார் என்ற நிலையிலே, நாம் மத்திய சக்காரிலிருந்து அதிக வருவாய் வரும், அதைக் கொண்டு சரிக்கட்டி விடலாம் என்று சொன்னால், அங்கிருந்து போதுமான அளவு வராமல் இருந்து சரிக்கட்ட முடியாமல்போனால், அல்லது நமக்கு வேண்டிய அளவிற்குக் குறைத்துத் தந்தால் அதற்குப்பிறகு நாம் வரியைப் போடும் முயற்சியில் ஈடுபட்டால், இப்பொழுது மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கும் மக்கள் வெறுப்பில் ஆழ்ந்திருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, அப்படி நமக்கு மத்திய அரசிலிருந்து உதவி கிடைக்காவிட்டால் அதற்கு என்ன வழிவகை செய்ய வேண்டுமென்று பட்ஜெட்டில் ஆராய வேண்டிய மிக முக்கியமான கடமையாகிறது.

[திரு சா. மெய்யப்பன்] [1969 மார்ச் 3

இப்பொழுது நாம் விவசாயத்துறையில் முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்று இருக்கின்ற நேரத்திலே விவசாயத்துறைக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்கள்மீது வரியை ஏற்றியிருப்பது கூடாது. பருவமழை பொய்த்துவிட்டதால், குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே, பொதுவாக எங்கு பார்த்தாலும் பஞ்சமாக இருக்கிறது. நெருப்புப் பொறி பறக்கும் நிலையில் இருக்கிறது. எல்லா இடங்களிலும் பஞ்சமாய் போய் விட்டது. தண்ணீர் இல்லாமல் சாவியாகப் போய்விட்டது. விதை நெல் கூட இல்லாத நிலைமை இருக்கிறது. இன்றும் அங்கிருக்கும் மாவட்டக் கலெக்டர்கள் 50 சதவிகிதம் விகிதம் நெல் வாங்குபவர்களும, விற்பவர்களும் மில்காரர்களும் கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டுமென்று இப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். சென்ற பத்து நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. இப்படி வாங்குகின்றபொழுது 50 சதவிகிதமும், விற்கின்றபொழுது 50 சதவிகிதமும் எடுத்துக் கொண்டால், மக்களுக்கு மிஞ்சுவது 12½ சதவிகிதத்திற்கு மேல் இருக்காது. 87½ சதவிகிதத்தை கொள்முதலுக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விடும். ஆகவே, அங்கு கொள்முதல் நிறுத்தப்பட வேண்டும். வரிவஜா செய்ய வேண்டும். அந்தப் பகுதியிலே கடன் வசூலை ஒத்திப் போடவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள உறவுகள் எப்படி இருக்க வேண்டும்? எந்தெந்த வகையிலே செயல்படுத்த முற்பட வேண்டும்? நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தைப் படித்த வரையில், நமது "ஃபைனான்ஸ் கமிஷன்" என்பதற்குப் "ப்ரொவிஷன்" இருக்கிறது. "பிளானிங் கமிஷன்" என்பது, ஆட்சியிலே உள்ளவர்கள் அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு இருக்கும் வகையில், பைனான்ஸ் மினிஸ்டருடைய கண்காணிப்பிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிளானிங் கமிஷனுக்கு நாம் சொல்ல வேண்டியது அவசியமா? பிளானிங் கமிஷன் அவர்கள் எடுக்கின்ற முடிவுகளை, சொல்லுகின்ற சிபாரிசுகளை யூனியன் தலைவரிடம் நேரிலே சொல்லலாம். யூனியன் தலைவர் அந்த சிபாரிசுகளை எல்லாம் நிதி அமைச்சர் மூலமாக நாடாளுமன்றத்திற்குச் சொல்லலாம். அதன் மூலமாக பட்ஜெட் எப்படி இருக்கவேண்டுமென்று பிளானிங் கமிஷனுக்குச் சொல்வதற்கு நிதி அமைச்சருக்கு வழி இருக்காது. நாம் பிளானிங் கமிஷனுக்குச் சொல்லி, அவர்கள் தலைவருக்குச் சொல்லி தலைவரவர்கள் நாடாளுமன்றத்துக்குச் சொல்லும்பொழுது நமக்கு குதிரையை முன் வைப்பதா? அல்லது வண்டியை முன் வைப்பதா என்ற சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும்.

நமது அரசியல் சட்டத்தின் 263-வது ஆர்ட்டிக்கில்படி மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கும் தகராறுகள் ஏற்பட்டால், அல்லது ராஜ்ய சர்க்கார்களுக்குள்ளே தகராறுகள் ஏற்பட்டால், அதாவது முக்கியமான குறிப்பிட்ட, பொதுநல நோக்குடைய விஷயங்களைப் பற்றி தகராறு ஏற்பட்டால் ஒரு கவுன்சில் ஏற்படுத்தி, அதன்மூலம் தலைவருக்கு ரெக்கமென்டேஷன்ஸ் செய்யலாம். அதைப்பற்றி, இப்பொழுது யூனியன் சட்ட அமைச்சராக இருக்கிற பி. கோவிந்தமேனன் அவர்களிடத்திலே கருத்து கேட்டபோது, "இண்டர்-ஸ்டேட் ரிலேஷன்ஸ்" என்று சொல்லும்போது இந்த மாதிரியான கவுன்சில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும், மாநில அரசுகளுக்குள்ளும் இடையே எழுகின்ற தகராறுகளை தீர்த்து வைப்பதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையிலேயோ, மாநிலங்களுக்குள்ளோ தகராறுகள் ஏற்பட்டால், அவைகள் போது நோக்குடையனவாக இருந்தால் அதற்குத் தலைவரவர்கள் நிச்சயமாக ஒரு கௌன்சிலை ஏற்படுத்தலாம் என்றுதான் 263-வது பிரிவு கூறுகிறது. அதன்படி நமுடைய மாநில அரசு யூனியன் தலைவர் அவர்களை இது போன்ற ஒரு கௌன்சிலை ஏற்படுத்த வற்புறுத்த வேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் எந்த எந்த அதிகாரங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும், கொடுக்க வேண்டும் என்று தெளிவாக ஆராய்ந்து பார்க்கின்ற வகையிலே அந்த கௌன்சில் வேண்டுமென்று போராட வேண்டும். மத்திய அரசிடம் நாம் வேறுயாரையும் போல கத்தி

1969 மார்ச் 3] [திரு. சா. மெய்யப்பன்]

கொண்டு போராட வேண்டியதில்லை. அல்லது சண்டித்தனம் செய்யத் தேவையில்லை. நியாயமான, சட்டப்படி வரவேண்டியதற்காகப் போராட வேண்டியிருக்கிறது. அதை மாநில அரசு ஏற்றுக்கொண்டு 263-வது ஆர்டிகளை அமல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

அடுத்து, கல்வியைப் பொறுத்த வரையிலே நாம் சீர்திருத்தம் செய்து வருகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதிலும் காங்கிரஸ்காரர்கள் அதை தங்களுடைய உடமை என்று சொல்கிறார்கள். அது பழங்கதை என்று நல்ல வேலையாகச் சொன்னார்கள், முடிந்த கதை என்று சொல்லாமல் இப்பொழுது பழங்கதை என்று இல்லாமல் இவர்கள் அமுல் நடத்தி இருக்கிறார்கள் என்று சொல்லும்போது நிச்சயமாக சர்க்காரைப் பாராட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் 4 கல்லூரிகள் போதாது. ஏற்கனவே, ஒரு இலட்சம் பேர்களுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே தேர்ச்சி பெற்று எம்.எல்.ஏ.க்களிடமும் மற்றவர்களிடமும் சிபாரிசுகள் பெற்றும் இடம் கிடைக்கவில்லை—கல்லூரிகளில். இப்பொழுது எல்லோருக்கும் ப்ரீ எடுகேஷன்" என்று சொல்லிவிட்டால் 4 கல்லூரிகள் போதாது. 40 கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டும். அப்படி இருந்தால்தான் கல்வி கிடைக்கும் என்று எட்டிலே இல்லாமல், எழுத்திலே இல்லாமல் நாட்டிலே நலம் பயக்கக் கூடிய முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த 4 என்பதற்குப் பதிலாக 40 ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசிடம் மாநில அரசு எப்படிக் கேட்கின்றதோ அதுபோலவே மாநில அரசிடம் அதன்கீழே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்களும் மற்றவர்களும் கேட்கின்ற கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு மிகவும் தாமதம் ஆகின்றது. அந்த தாமதம் இல்லாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு குறைபாடு தவறுதலாக ஏற்பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன். ஒவ்வொரு வருஷமும் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கின்ற வகையில் துணை புரிகின்ற அலுவலாளர்களுக்கும் செயலாளர் அவர்களுக்கும் நன்றி சொல்லுகின்ற ஒரு பாராகிராப் இருக்கும். அது இந்த பட்ஜெட் உரையிலே இல்லாமல் இருப்பது அவர்களின் ஊக்கத்தைக் குறைப்பதாக இருக்குமோ என்று கருதுகின்றேன். ஆகவே, இனிமேல் இந்தத் தவறு—யார் தவறாக நடந்து கொண்டிருந்தாலும்—நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதுவரை சந்தர்ப்பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* THIRU M. WILLIAM : Mr. Speaker, Sir, I wish to say a few words on the budget for 1969–70 that has been presented to the House. At the outset I wish to state that there is nothing novel or new in the budget. It is said that it is a tax-free budget. That that also is not correct can be easily found by a reference to the budget speech made by the Finance Minister. The overall deficit of Rs. 19·52 crores is not covered. The Finance Minister says that it will be covered by the devolution of Central taxes in favour of the State. That position we accept. But what about the gap in the Plan Outlay? The Finance Minister says that for executing the Plan schemes, funds have to be raised by floating rural debentures. Further whether he will be able to raise the necessary funds is doubtful. He himself has expressed a doubt about raising the necessary resources. "To the extent we are able to raise some resources through rural debentures, the need for taxation will be less". So the Finance Minister himself feels that there is need

[Thiru M. William] [1969 மார்ச் 3

for fresh taxation to raise the necessary funds for executing the Plan schemes. It is tactfully stated in the budget speech itself that there may be fresh taxes. So the statement that there is no fresh tax has no significance.

There are some welcome features in the budget. One such feature is the introduction of free education in the Pre-University class. It is not a novel thing. It is a policy laid down by the Congress Government. This Ministry ought to have implemented this scheme as early as 1967 when it came to power. They have taken two years to consider that and now only as a belated scheme they have taken up the scheme which has been laid down by the Congress Ministry. As a matter of fact our revered leader Kamaraj wanted even the Degree classes' pupils to be exempted from the payment of fees. On certain occasions he has actually expressed that idea. That these are schemes which have been conceived by the Congress Government cannot be gainsaid.

With regard to education, it is stated in the budget speech that four new Government colleges will be started and that Degree Courses will be opened in eight colleges. Some of the Members have urged that more colleges should be started. We can go on starting colleges. But how are we going to solve the problem of educated unemployment? Even now thousands of graduates and School Final Certificate holders are without employment. That is the position and the problems of educated unemployment is going to be a menace to society. I do not stand in the way of opening any number of colleges. But before we open more colleges, we must think over the matter as to how we are going to solve educated unemployment. As in Western countries this problem must not become a menace to our society. The educational system to be useful must be geared to the national needs of the society.

Much emphasis must be laid on technical education and bifurcated courses of study and not on starting Arts Colleges throughout the length and breadth of the State. So, the Ministry should seriously consider all these aspects of the matter when they deal with the educational problem.

In the present Budget speech, the tone of blaming the Central Government is absent. In the previous two Budget speeches, the Central Government had been condemned in downright terms. In the present Budget speech, instead of condemning the Central Government, there is only an appeal to the Central Government to give more resources to the State. In this connection, I wish to point out that there are bodies like the Finance Commission, and the National Development Council where our State is represented. It is there that the various matters should be considered and a decision taken. Our representatives there must work for giving additional finances to this State to execute several development programmes. There is no use of condemning or putting the blame on the Central Government. The Central Government has to distribute finances equitably not only for this State but also for other

1969 மார்ச் 3] [Thiru M. William]

States. When that distribution is made we must see that we get our legitimate share. If there is any lapse on their part and if we do not get our share, then we can blame the Central Government. Otherwise, there is no meaning in condemning the Central Government.

Then, we find in our State labour unrest not only in the industrial sector but also in the agricultural sector. How are the Government going to solve it? Several mills have been closed and there is unemployment among the labour class and how are you going to establish smoother relationship between labour and capital and what steps have been taken in that direction? If the present labour laws are not suitable, amend the labour laws according to the present condition and according to the rise in prices, give more wages to labourers and also give more representation to labour in the management of various concerns and thus try to put the relationship between labour and the capital on a smoother footing.

With regard to land policy, the Bill relating to the Record of Tenancy Rights has been passed. But when are you going to bring forward the comprehensive land legislation which will give protection to the small landowners and the cultivating tenants and also fix the minimum holding that a family can have? These things must be immediately done as otherwise there will be unrest in the State both in the industrial sector and in the agrarian sector.

Another important thing is that the administration must be clean. In the recent Governor's Address, he has clearly stated that this State is known for its high standards of administrative efficiency and decency and cleanliness in public life. Are we following these things? There must not be any interference in the administration by the party machinery. If we interfere in the administration, democracy will not flourish in this country. (Mr. Speaker sounded the gong). Of course, there were several instances where the Police were not able to do anything. The police has lost their morale and they do not properly and promptly act under certain set of circumstances because of the official interference. If there is lapse on the part of the Police, and the morale is lost by interference by the party machinery, they are bound to become a source of menace to the public.

There are certain other local problems which I wanted to deal with but for want of time I shall take another occasion to deal with them. With these words, I conclude my speech.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியன்று இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணம் பிரதி

[திரு. கு. கிருஷ்ணமூர்த்தி] [1969 மார்ச் 3

பலிக்கிறது. குறிப்பாக, ஜாதி சமய வேறுபாடின்றி, ஏழை பணக்காரர், என்ற வித்தியாசம் இல்லாது எல்லா மாணவர்களுக்கும் புகுமுகவகுப்பு வரை இலவசமாக படிக்க இந்த பட்ஜெட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தவிர, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 650 டிராக்டர்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கி விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் இந்த பட்ஜெட்டில் இடம் பெற்றிருக்கிறது. மற்றும், அரசுப் பணியாளர்களுக்கு திருமணச் செலவுக்காக கடன் வழங்கும் திட்டத்திற்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற காலத்தில் 7,900 ஆசிரியர்களை நியமிப்பதற்கு இந்த பட்ஜெட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மாமன்றத்தில் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக குடியரசுக் கட்சி என்று சொல்லிக்கொண்டிருக்கும் உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை. எல்லா தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களும் தலையாட்டி பொம்மைகளாக இங்கே வீற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தயவு செய்து அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த அரசாங்கத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? நமது தி.மு.க. அமைச்சரவையில் இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். அது தவிர, தி.மு.க. தான் அதிகமாக தாழ்த்தப்பட்டவர்களை தேர்தலுக்கு நிறுத்தி, சுமார் 32 எம்.எல்.ஏ.க்களை இங்கே அனுப்பியிருக்கிறது. சென்ற ஆண்டில் அரிசன மக்களுக்காக ரூ. 696·92 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ரூ. 51 லட்சம் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தும்கூட நண்பர் அவர்கள் மகிழ்ச்சியுறாமல், வேதனைப்பட்டு இங்கே பேசியிருக்கிறார்கள். அவரைப் பொறுத்தமட்டில் வேண்டுமானால் அவர் தலையாட்டி பொம்மையாக இருக்கலாம். எல்லா உறுப்பினர்களையும் பார்த்து அவர் இம்மாதிரி சொல்லவேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளைக்காரர் காலத்தில் பழனி தொகுதியில் பாலாறு-பொருந்தலையாறுத் திட்டம் என்ற திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 20 ஆண்டு காலமாக நாங்கள் சொல்லிக்கொண்டு வந்தோம். ஆனால், காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில், அந்தத் தொகுதி எதிர்க்கட்சி தொகுதி, ஆகவே காங்கிரஸ் அரசாங்கம் அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டு, செய்யாமல் விட்டுவிட்டது. இப்பொழுது அந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற 1966-ம்ஆண்டு மாநில அரசு ஆய்வுக் குழு ஒன்றை நியமித்தது. அந்தக் குழு மாநிலத்திலுள்ள எல்லா வட்டங்களுக்கும் சென்று பார்வையிட்டு, பெய்த மழையளவுபற்றி விரிவாக ஆராய்ந்து எப்பொழுதுமே வறட்சியான பகுதிகள் என்றும், அதன் விளைவாக பொருளாதாரத் துறையில் பின்னடைந்த பகுதிகள் என்றும், அந்த ஆய்வுக்குழு வரையறுத்து 31 வட்டங்களை தேர்ந்தெடுத்தது. அதில் மதுரை மாவட்டத்தில் பழனி, திருமங்கலம், திண்டுக்கல் ஆகிய மூன்று வட்டங்களும் சேர்ந்திருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால் எங்கள் பகுதி பின்னடைந்த பகுதி. தற்பொழுது பொதுப்பணித் துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். நிதி அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குத் தெரியும் என்னுடைய தொகுதி எப்படிப்பட்ட வறட்சித் தொகுதி, பின்னடைந்த தொகுதி என்பது. தயவுசெய்து இருவரும் ஒற்றுமையாக இருந்து இந்தத் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்து, நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

1969 மார்ச் 3] [திரு. கு. கிருஷ்ணமூர்த்தி]

மற்றும் அங்கே வரதமா நதித் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர அந்தப் பகுதியில் கோட்டைத்துறை என்னும் கிராமத்தில் பங்கனோடை என்ற ஓடையில் ஒரு கண்மாய் அமைக்கத் திட்டமிட்டு, பூர்வாங்க வேலைகளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்தனர். அது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கண்மாயை அமைக்க உதவி செய்ய வேண்டும்.

பழனிக்கும், பாலசமுத்திரம் என்ற கிராமத்திற்கும் இடையே, வரட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கும் திட்டம் ரூ. 1,10,000 செலவில் திட்டம் போட்டு, அந்த வேலை வெகுநாட்களாக செய்யப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, பழனிக்கும் கொடைக்கானலுக்கும் ரோடு போடும் திட்டம் ஒன்று இருக்கிறது. அது மத்திய சர்க்கார் உதவி பெற்று செய்ய வேண்டிய திட்டம். அதையும் தயவுசெய்து இந்த அமைச்சரவை வாங்கித் தரவேண்டும் என்று விரும்பிவேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதல் விஷயமாக, பேசப்பட்டது. வறட்சியான பகுதியில் அதிகாரிகள், தவறு செய்வதாகச் சொல்லப் பட்டது. எந்த அளவுக்கு வசூல் செய்ய வேண்டுமோ அந்த அளவில்தான் அதிகாரிகள் செய்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் வேண்டுமென்றே, சில பகுதிகளில் கொள்முதலுக்குக் கொடுக்கக் கூடாது என்றும், அதிக விலை கொடுக்க வேண்டும் என்றும், கொள்முதல் அதிகாரிகள் கெடுபிடி செய்கிறார்கள் என்றும், விவசாயிகளைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில பகுதிகளில் நன்றாக விளைந்த இடங்களில் கொள்முதலுக்கு கொடுக்க மாட்டோம் என்று சொல்லுங்கள் என்று துஷ்பிரச்சாரம் செய்கிறார்கள். எந்த அளவில் வசூல் செய்ய வேண்டுமோ அந்த அளவில்தான், நியாயமான முறையில் வசூல் செய்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. அ. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே, இத்துடன் மூன்றாவது திட்ட மதிப்பீட்டின் பேரில் நான் பேச முன்வந்திருக்கிறேன் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமங்களில் ஒரு பழக்கம் உண்டு, அங்கே சொல்கிறார்கள், நம்முடைய சட்ட மன்றம் ஆரம்பிக்கக் கூடிய காலங்களை, பட்டி மன்றம் ஆரம்பித்துவிட்டார்களா என்று கேட்கும் நிலையில் இருக்கிறார்கள். அதுதான் முதல் அமைச்சர் அவர்கள் கூட, ஒரு விவாதத்தின் போது, அங்கத்தினர் பேசும்போது, அதையெல்லாம், லாவணியில் ஓய்வு பெற்ற நேரங்களில் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அது போன்று, மூன்றாவது திட்ட மதிப்பீட்டில் சட்ட மன்றத்தில் திட்டமிடக் கூடிய அத்தனை காரியங்களையும், பட்டிமன்றம் என்று அழைக்கக் கூடிய நிலையில் இருக்கின்றது என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராகவும், இந்நாள் முதல் அமைச்சராகவும் இருக்கும், அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதில் பெருமைப்படுகிறேன். இருப்பினும் கூட, சாதாரணமாக காவேரி பாசனத்திற்குரிய ஆடுதுறைப் பகுதிகளில், மண்ணியாறு பாசனம், பழவாறு பாசனம் உள்ள பகுதிகளில் இருக்கும் நிலையை அவர்கள் நன்றாக அறிந்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அத்தனை அங்கத்தினர்களும், பேசும்போது, மத்திய சர்க்காரிலே வரியை விதித்து விட்டார்கள், அந்த வரி விதிப்பை எதிர்த்து, காங்கிரஸ் காரர்களும் நம்முடன் சேர்ந்தால், மத்திய சர்க்கார் மீது நாம் ஒரு படை எடுத்துச் செல்லத் தயார் என்று சொன்னார்கள். அதைப் போன்றுதான் ஊராட்சி மன்றங்களில், மக்கள் அங்கே இருக்கும்

[திரு. அ. மாரிமுத்து] [1969 மார்ச் 3

பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றவர்களைக் கேட்கும்போது, மாநில சர்க்காரை நாடக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் உறவு இந்திய தேசத்தினுடைய ஒருமைப்பாட்டிற்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது. குறைச் சொல்லிக்கொண்டு போவதானால், நம் நாட்டு மக்களுடைய நன்மைகளை நல்ல முறையில் செயல்படுத்த முடியுமா என்பதை அமைச்சர்கள் அத்தனை பேரும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக எங்கள் கட்சியை சேர்ந்த தலைவர் அவர்கள், வெண்மணியில் ஏற்பட்ட விபரீதங்களைப் பற்றி வேதனைப்பட்டு, கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்த அக்கிரமங்களை எங்கள் கட்சி அங்கத்தினர்கள் எடுத்துச் கூறும்போது, முதல் அமைச்சர் முதுகளத்தூரில் நடக்கவில்லையா என்று கேட்டார்கள். இன்றைய தினம் இருக்கும் நிலையை அவையிலே எடுத்துக்கூற முன் வந்தால், பல ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்த குறைகளை எடுத்துக்கூறுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் ? இன்றைய நிலையில் அந்த மக்களுடைய அவல நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எங்காவது நடக்கும் ஒரு சம்பவத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வந்தால், பல ஆண்டுகளுக்கு முன்னால், எங்கோ ஒரு பகுதியில் நடந்த சம்பவத்தை எடுத்துக் கூறுகிறார்கள். அத்தகைய நிலையில்தான் சட்ட மன்றத்திற்கு பட்டிமன்றம் என்று பெயரிட்டு அழைக்கக் கூடிய நிலை வந்திருக்கிறது, என்றால், நாம் மிக்க வருத்தப் படக் கூடிய நிலையில் இருக்கிறோம். அதை நம்முடைய அமைச்சர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பல ஆண்டுகளுக்கு முன்னால், ஆண்டுகொண்டு இருந்த காங்கிரஸ் சர்க்கார் உழவர்களுக்கு, கூட்டுறவு முறையில் கடன்கள் கொடுத்து உதவியளிக்க வேண்டும் என்று காரியங்களைச் செய்தார்கள். இன்றைக்கு விவசாயிகள் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இன்றைய நிலையில் தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் உள்ளபடியே, கூட்டுறவுத் துறையிலுள்ள அதிகாரிகளைக் கண்டு ஓடி ஒளியும் நிலையில்தான் இருக்கிறார்கள், என்பதை மிக மிக வருத்தத்தோடு கூறும் நிலையில்தான் இருக்கிறேன். விவசாயத்திற்கு அதிக சலுகைகள் கொடுக்கிறோம். அதிகமாக மானியம் கொடுக்க சர்க்கார் முன்வந்திருக்கிறது. இன்றைய விவசாயிகளுடைய நிலை அறியாதவர்கள் யாரும் அங்கத்தினர்களில் இருக்க மாட்டார்கள். என் ஆடுதுறைப் பகுதியில் அத்தனை கிராமங்களும் இயற்கை தவறியதன் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. காவேரி, மண்ணியாறு, பழவாறு, இவற்றின் பாசனம் இல்லாததால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தங்கள் நிலத்திலிருந்து பலன்களை அடைய முடியாத நிலைமையில் இருக்கும் போது, கடனைத் திருப்பித் தர முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஒரு கருத்தை, விவசாயிகள் மூலம், சொல்லுவதற்கு முன் வந்துள்ளேன். விவசாயத்திற்குத் தேவையான பல நல்ல காரியங்களை நாம் செய்ய முடியாவிட்டாலும், விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற கடனையாவது தவணைக் காலமாக வசூலிப்பதற்கான வழிமுறைகள் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளை ஏழை விவசாயிகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு போக நிலத்தையெல்லாம் இருபோக நிலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் எடுத்துக் கொள்கிறார்கள். தற்போது சி.ஒ. 29 என்ற ரக நெல்லை அதிகாரிகள் விவசாயிகளுக்குக் கொடுத்து பயிரிடும்படிக் கேட்டுக்கொண்டார்கள். இது நல்ல விதை என்றும், அதிக மகசூல் தரும் என்றும் முதலில் சொல்லப் பட்டது. ஆனால் இதை நம்பி இந்த ரக நெல்லைப் பயிரிட்ட விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு உள்ளானார்கள். பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இந்த ரக நெல்லினால் பயன் அடையாமல் போய்விட்டன. (மணியடிக்கப்பட்டது). ஏ.டி.டி. 27 விதைபோல் இதுவும் நல்ல பலன் தரும் என்று விவசாயிகள் இதை விதைத்தார்கள். இப்போது பலன் கிடைக்காமல் மிகவும் வேதனைப்படுகிறார்கள். இது நம் மாநிலத்திற்கு ஒரு பெரிய நஷ்டமாகும் என்று சொல்லிக்கொள்கிறேன். இனிமேலாகிலும், விவசாயிகளுக்கு விதைகளைச் சப்ளை செய்யும்போது, நன்றாகப் பரிசீலனை செய்து சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1969 மார்ச் 3] [திரு. அ. மாரிமுத்து]

அடுத்தபடியாக, வெண்மணி சம்பவம் பற்றி அதிகமான பேர் பேசி விட்டார்கள். அடுத்து பல பகுதிகளிலும் வெண்மணி சம்பவம் மாதிரி பிரச்சினைகள் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. மூத்தாப்பு மாநாடு கூட்டியும், ஏழை விவசாயிக்கு நெல் கூலியை நிர்ணயிக்கும் வேலை பூரணமாக நடைபெறவில்லை. அரசு கூடிய விரைவில் நெல்கூலி நிர்ணயம் செய்ய வேண்டும்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால், கால்நடைகள் விவசாயத்துக்கு எவ்வளவு தேவை என்பது எல்லோருக்கும் தெரியும். என்னுடைய தொகுதியில் எனது பஞ்சாயத்து யூனியன் பந்தநல்லூர் பகுதியில் கால்நடைப் பண்ணை வைப்பதற்கு முன்பிருந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து, அது செயல்படத் தக்க நிலையில் இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, நான் என்னதான் இந்த மன்றத்தில் பலதடவை எடுத்துக் கூறியபோதிலும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்து வருகிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, கிராமப்புற ரோடுகளையெல்லாம் செப்பனிட வேண்டும் என்று பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானித்து, ஜில்லாக் குழுவிற்கும் அனுப்புகிறோம். ஆனால் கிராமப்புற ரோடுகள் எல்லாம் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஆகவே, கிராம மக்களின் வசதிகளைக் கருத்தில்கொண்டு கிராமப்புற ரோடுகளையெல்லாம் விரைவில் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பெ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில், மறைந்த மேதை அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி, என் பேச்சை ஆரம்பிக்கிறேன். நமது நிதியமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் கொடுத்த நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, எனது மாவட்டமாகிய சேலம் மாவட்டத்தில் உருக்காலைத் தொழிற்சாலை அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை ஒன்றைப் பிறப்பித்ததற்காக எனது மாவட்டத்தின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் ராசிபுரம் தொகுதியில் இருப்பவர்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பிப் பிழைப்பவர்கள். இந்த வருடம் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் அந்தப் பகுதியில் வறட்சி நிலை ஏற்பட்டு, விவசாயத்திற்கோ, குடிப்பதற்கோ கூட தண்ணீர் கிடைக்காத நிலைஇருந்து வருகிறது. அந்தப் பகுதியில் பெரிய ஆறுகள் எதுவும் இல்லை. ஆகவே, அரசு அருள்கூர்ந்து பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்க துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணறு வெட்டுவதற்காக விவசாயிக்கு ரூபாய் 5 ஆயிரம் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பணத்தைக் கொண்டு என் தொகுதியில் 50 அடி, 60 அடி ஆழந்தான் வெட்ட முடிகிறது. குறைந்தது 100 அடி, 150 அடி என்று வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்காக ரூபாய் 2 ஆயிரம் மானியமாகவும், ரூபாய் 5 ஆயிரம் கடனாகவும் கொடுத்தால்தான் என் தொகுதியில் விவசாயம் செய்யமுடியும். தீவிர சாகுபடித் திட்டத்தின்,

[திரு. பெ. பெரியசாமி] [1969 மார்ச் 3

கீழ் இந்தக் கடனை விவசாயிகளுக்குச் செய்துகொடுத்தால்தான் இந்த மாவட்டத்து மக்களுக்கு பலன் கிடைக்க வழி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பலர் கைத்தறித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். தற்போது அந்தத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டு, ஜவுளித் தேக்கமடைந்திருக்கிறது. மேலும், விசைத்தறியின் போட்டியும், மில் துணியின் போட்டியும் இருக்கிற காரணத்தால் கைத்தறி நெசவுத் தொழில் மிகப் பயங்கரமான சூழ்நிலையில் இருந்து வருகிறது. ஆகவே, கைத்தறித் தொழிலுக்கு கரைபோட்ட வேஷ்டியையும், கலர்ப் புடவையையும் ஒதுக்கித் தந்தால்தான் அந்தத் தொழிலுக்கு நிரந்தர பரிகாரம் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. விநயகம் : இந்தப் பல்கலைக் கழகத்திறுடைய குழு எந்தக் காரியத்திற்காக நிறுவப்பட்டது? இதை விரைவில் அமல் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடுகள் இருக்கின்றனவா அரசாங்கத்தினிடம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எஜுகேஷன் கமிஷன் அவர்களை நியமித்துப் பல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். கனம் உறுப்பினர் எந்தச் சிபார்சைப் பற்றிக் கேட்கிறார்கள் ? ரீஜினல் லாங்குவேஜ், மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் என்று இருப்பதிலே எதைப்பற்றிக் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. பயிற்சி மொழியைப் பொறுத்தவரையில், அந்த அந்த மாநிலங்களில் உள்ள மொழிகள் பயிற்சி மொழிகளாக வெகு விரைவிலே ஃபேஸ்ட் புரோகிராமாகக் கொண்டுவரப்படும். அதற்கான முயற்சிகளை 10 ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சிபாரிசை அமல் நடத்துவதற்கு மத்திய ஆட்சியில் ஏற்படுத்துகிற அமைப்பைப் பொறுத்துத்தான் பரிசீலனை செய்யப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : தமிழகத்தில், கல்வித் துறை வல்லுநர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு தற்போது என்ன நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்திற்கு ஒரு கோடி வீதத்திலே பிராந்திய மொழிகள் வளர்ச்சியடைவதற்கு மத்தியஅரசு கொடுக்கும் என்று கூறப்படுகிறதே, அப்படி ஒரு கோடி என்று கொடுக்கப்படும்பொழுது, இந்தி மொழி பேசப்படுகின்ற மாநிலங்களுக்குப் பல கோடி ரூபாய் கிடைத்து நம்முடைய மாநிலத்திற்கு ஒரு கோடி ரூபாய்தான் கிடைக்கும். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாகப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அதற்காக ஏராளமான பணம் தேவை என்பதைச் சொல்லிக் கொண்டே வருகிறோம்.

THIRU K. VINAYAKAM: As regards the introduction of media of instruction at the College level, are the Government of the opinion that only in the Arts Sections, the regional language could be profitably used for the benefit of the students whereas it would not be in the interests of our State to introduce the medium of regional language in branches like Science, Technology and such other higher advanced studies and if so, what is the recommendation of the State Government to the Committee of Vice-Chancellors proposed by the Central Government.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சி மொழி பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அவரவர்களுடைய தாய் மொழியிலேயே பயின்றால்தான் சிந்திக்கும் ஆற்றல் வளரும் என்பதைக் கல்வித் துறை வல்லுநர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைச் செயல்படுத்துவதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் பழைய பாரம்பரியத்திலே வந்தவர்கள், அவர்கள் ஆங்கிலத்திலே புலமை பெற்றிருக்கிறார்கள். நாங்கள் அதற்கு அடுத்த பாரம்பரியத்திலே வருகிறவர்கள். கொஞ்சம் தமிழிலும், கொஞ்சம் ஆங்கிலத்திலும் பயின்றிருக்கிறோம். எதிர்காலத்தில் வருகின்ற சமுதாயம் முழுக்க, முழுக்கத் தமிழிலேயே வளர்ந்த சமுதாயமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. விஞ்ஞானம் பற்றிச் சொன்னார்கள். நேற்று முன்தினம் நான் கோவைக்குச் சென்றிருந்தபோது அங்கேயுள்ள மாணவர்கள் விஞ்ஞானத்தைத் தமிழிலே நல்ல முறையில் எடுத்துத் தெரிவித்தார்கள். அதை அங்கேயிருந்த முதல்வர், லெக்சரர்கள் எல்லாம் சிறந்த முறையிலே இருக்கிறது என்று பாராட்டினார்கள். விஞ்ஞானத்தைத் தமிழிலே பயில்வதற்கான முயற்சிகள், மொழி பெயர்ப்பு என்ற முறையிலே இல்லாமல், மொழி ஆக்கம் முறையிலே, விரைவிலே எடுக்கப்பட்டு விஞ்ஞானக் கருத்துக்களையும் தமிழிலே பெறக்கூடிய நிலைமை உருவாகும். நம்முடைய அரசாங்கத்திலே ஆர்ட்ஸ் சப்ஜெக்டுகளைப் பொறுத்தவரையில் தமிழிலே இருக்கின்றன. விஞ்ஞானத்திலும் புதிய புதிய நூல்கள். தமிழில் மிக விரைவிலே கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி மொழிப் பாடம் கல்லூரிகளில் தமிழில் நடத்துவதற்குப் புதிய தமிழ் சொற்கள் இல்லை என்ற குறைபாடு ஆசிரியர்களுக்கு மத்தியில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் புத்தம்புதிய தமிழ்ச்சொற்களை ஆக்கித் தருவதற்கு நம்முடைய அரசு ஒரு குழுவை நியமிப்பதன்மூலம் கல்லூரிகளில் எல்லா நிலைகளிலும் தமிழையே கொண்டுவருவதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழிலே சொற்களுக்குப் பஞ்சம் என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இயற்சொற்கள் நிறைந்துள்ள மொழி தமிழ் மொழியாகும். இப்பொழுது இருக்கின்ற பிரச்சினையெல்லாம் மொழி பெயர்ப்பாகப் புதிய சொற்கள் அமைந்து விட்டால் அதன்மூலம் குழப்பம் ஏற்படும். எனவே அப்படியில்லாமல் மொழி ஆக்கமாக உருவாக்கி, தமிழிலே இல்லாத சொற்களுக்கு ஆங்கிலத்திலே உள்ள பழக்கத்தில் உள்ள சொற்களைக் கூடுமானால் ஏற்றுக்கொள்ள முடியும். கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று சட்டத் துறையிலே அதற்காக ஒரு குழு அமைத்து அவர்கள் அந்தத் துறையைப் பொறுத்த வரையில் ஒரு கிளாஸரி வெளியிட்டிருக்கிறார்கள். அது போன்று விஞ்ஞானத்திற்கும் இருக்க வேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன். அதுபற்றிச் சில நாட்களுக்கு முன்னால் விவாதித்தேன். விரைவிலே மாநிலம் முழுவதும் ஒரேமாதிரியான சொற்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas English language is an international language, whereas English language has been considered as a window to modern knowledge in the world, and whereas our scientists or graduates or experts having been trained in the regional language may be very good at the subjects in which they have received training, but in international conferences held outside India, our students will be at a great disadvantage because of their lack of English language, does the Minister envisage a situation of that type and if so, does the Minister think that training in English language along with the regional language in the subjects should be given on parallel lines so that they may be in a position to compete with their counterparts in the world market?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆங்கிலத்திலே அருமையான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சொல்ல வேண்டிய இடம் பாராளுமன்றம், இங்கே அல்ல. தமிழக அரசைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களை முழுக்க முழுக்க நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அவர்களுடைய கட்சியைச்சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் உலகத்தோடு ஒட்டி வாழவும், இந்தியத் துணைக் கண்டத்தின் பிற பகுதிகளோடு தொடர்புகொண்டு வாழவும் தமிழோடு ஆங்கிலம் போதும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் வடக்கே உள்ளவர்கள்தான் ஆங்கிலத்தையே இந்த நாட்டை விட்டு விரட்டிவிட வேண்டுமென்ற முறையிலே மும்மொழித் திட்டம் என்ற போர்வையிலே ஒரு பக்கம் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதே சமயத்திலே மிகக் குறுகிய காலத்திலே ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே அதைச் செய்யவேண்டுமென்று அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், டெல்லியிலுள்ள அமைச்சர்கள் நான் மாநாட்டிலே கலந்துகொள்ளச் சென்று இருந்தபோது தெரிவித்தார்கள். அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது சொன்ன கருத்துக்களைச் சொன்னால், அது இந்த நாட்டுக்கு நல்லது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, வட்டார மொழிகள் மதிக்கப்பட வேண்டும், நீதிமன்றத்திலே தமிழ் வரவேண்டும், நாம் சட்டங்களை இயற்றும்பொழுது தமிழிலேயே அவை இருக்கவேண்டும், நீதிமன்றங்களிலும்தீர்ப்புக்கள் தமிழிலேயே வழங்கப்பட வேண்டும் என்று சொல்லுகிற நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழிலே பேசவேண்டுமென்ற நடைமுறையைக் கையாள்வதை வற்புறுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே நம்முடைய சட்டமன்றத்திலே தமிழ் மணம் கமழ்கிறது. மாண்புமிகு திரு. விநயகம் அவர்களைத் தவிர. இந்தச் சட்டமன்றத்திலே சட்டங்களும் தமிழிலே கொண்டுவரப்பட வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஆதரிக்கிறது. அப்படி உருவாக்கும்பொழுது, தமிழ்ச் சொற்களை ஆதாரப் பூர்வமாக அதாரட்டிடேட்டிவ் லெஜிஸ்லேஷன் ஆக இருக்க வேண்டுமென்ற முறையிலே கிளாஸரிகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. இன்னும் சில மாதங்களுக்குள் தமிழிலேயே சட்டங்களையும் மசோதாக்களையும் கொண்டுவரக் கூடிய வாய்ப்பு உருவாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. எம். பன்னீர்செல்வம் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளியில் இருக்கிற ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி இன்னும் கொடுக்கப்படகூடிய வில்லை, ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வேறு. இப்பொழுது பயிற்சி மொழிபற்றிய கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது,

[1969 மார்ச் 4

திரு. என். வரதராஜன் : அணு விஞ்ஞானத்தையும் தமிழிலே படைக்கக் கூடிய தமிழர்கள் உருவாகிக்கொண்டிருக்கிற நேரத்திலே சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுப்பதைப்போன்று சிறந்த புத்தகங்களுக்கும் ஊக்கம் அளிக்கக் கூடிய முறையில் பரிசு கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஒரு அரிய யோசனை. அதுபற்றி ஒரு வாரத்திற்கு முன்னால் பரிசீலனை செய்யப்பட்டது. இப்பொழுது நூல்களைத் தோற்றுவிப்பதற்கு எக்ஸ்பர்ட் கமிட்டி ஒவ்வொரு சப்ஜெக்டுக்கும் போடப்பட்டு அந்தக் குழு எழுதச் சொல்லி பரிசு அளிக்கிறார்கள். அதை மாற்றியமைத்து, புதிய புதிய விஞ்ஞான நூல்களைத் தோற்றுவித்து நல்ல நூல்கள் என்று எவற்றை முடிவு செய்கிறார்களோ, அவற்றிற்கு ஒரு பரிசுத் தொகை கொடுப்பது என்பது யோசனையில் இருக்கிறது. பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் மூலக் கேள்வியிலிருந்து தடம்புரண்டு ஓடுகின்றன. கல்வி ஆணைக் குழுவின் பரிந்துரை பற்றியது மூலக் கேள்வி.

திரு. ப. மகாதேவன் : தமிழ் ஆக்கம் செய்யும்பொழுது நல்ல கருத்துக்களுக்கு மட்டும் இடம் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள கருத்துக்கள் தமிழிலே வரும்பொழுது உதாரணமாக ஹாமில்டன் பாலம் என்று இருந்தது ஹாம்படன் ஆகி, பிறகு அம்டன் ஆகி, பிறகு பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று ஆகியது. அதைப்போன்று டிராங்க் கால் என்பதற்குத் தமிழ், முண்டக் கூவி என்று சொல்லுகிறார்கள். தலையில்லா முண்டம் என்று சொல்லுவதைப்போல் டிராங்க் என்பதற்கு முண்டம் என்று சொல்லி, கால் என்பதற்குக் கூவி என்று சேர்த்து வார்த்தைகள் வருகின்றதை நல்லது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே வருகிறது அதுமாதிரி ? இதுவரை கேட்டதே கிடையாதே.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழிலே வரவேண்டுமென்ற ஆர்வம் இருக்கும்பொழுது சில வேளைகளில் நம்மை நாமே இழிவுபடுத்தக் கூடிய நிலை உருவாகிவிடுகிறது. டிரான்ஸிஷன் பீரியட் வருகின்ற நேரத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கலாம். காலம் செல்லச் செல்லத்தான் நல்ல சொற்கள் உருவாகும். இதற்குமுன்பு பயன்படுத்தாத சொற்கள் இப்பொழுது மாணவர்களிடம் நாம் காணமுடிகிறது. காலம் செல்லச் செல்ல நல்ல தமிழ்ச் சொற்கள் வந்துவிடும்.

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் கிளாரிபிகேஷன் சார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றையெல்லாம் வினா நேரம் முடிந்தபின் வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. விநாயகம் : இப்பொழுதே சொல்லிவிட்டால் ரெலவன்ட் ஆக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சொல்லுங்கள்.

கல்வி இலாகாப் பணியாளர்கள்.

*157 வினா.—**திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கல்வி இலாகாவில் பணிபுரிபவர்களை அந்தந்த மாவட்டங்களுக்குள்ளேயே மாறுதல்செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

1969 மார்ச் 4]

திரு. பி. வேலுசாமி : இந்தக் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களையும், அதிகாரிகளையும் ஏப்ரல், மே, மாதங்களில் மாற்றம் செய்தால்தான் அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க முடியும். ஆகவே, அப்படிச் செய்வதுதான் சரி என்று அரசாங்கம் கருதுகிறதா ? இடையிலே மாற்றம் செய்வதாக இருந்தால் அந்தந்த ஜில்லாவுக்குள்ளேயே மாற்றச் செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டும் நல்லதுதான். இப்பொழுதுகூட ஆண்டுக்கு ஒரு முறைதான் மாறுதல் செய்யப்படுகிறது இடையிலே தேவைப்படுமானால் சில காரணங்களினால் செய்கிறார்கள். அதில் தவறு இருந்தால் பரிசீலனை செய்கிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, ஆசிரியர்களை மாற்றுவதும் மே மாதத்திற்குள் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, ஆசிரியர்களை நியமிக்கின்ற நேரத்திலும் ஜூன் மாதத்திற்குள்ளே நியமித்துவிட வேண்டும். அப்படியில்லாமல் சில பள்ளிகளிலே காலாண்டுத் தேர்வு வந்த பிறகு நியமிக்கின்ற நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு சில இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால் பரிகாரம் காண முயற்சி எடுத்து இருக்கிறோம். ஆனால், பெரும்பாலும் இடையிலே ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருப்பதுதான் நல்லது.

அலங்காநல்லூர்—பாலமேடு பகுதியில் சுண்ணாம்புப் படிவம்

*158 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் சுத்தமான சுண்ணாம்புக் கல் கிடைப்பதாகத் தகவல் ஏதேனும் அரசாங்கத்துக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அப்பகுதியில் எவ்வளவு கிடைக்குமெனக் கணக்கெடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை ஐயா, அந்தப் பகுதியில் 1959-60-ல் இந்தியப் புவியியல் துறையினர் ஆராய்ச்சி நடத்தியதில், சுத்தமான சுண்ணாம்புக் கல் கிடைப்பதாகத் தெரியவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Railway lines proposed to be closed.

* 159 *Q*.—THIRU N. KASIRAMAN :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether information has been received from the Central Ministry of Railways about the removal of railway lines between Needamangalam and Mannargudi adn Thiruthuraipoondi and Vedaranyam;

(*b*) whether any intimation has been received from the same Ministry about the removal of any other short distance railway lines in Thanjavur district;

(*c*) whether the same Ministry has addressed this Government about the proposal to remove the railway line between Mettupalayam and Ooty; and

(*d*) if so, the steps that are being taken to prevail upon the Ministry of railways to permit the retention of the above railway lines ?

மாண்புமிகு திரு. எஸ், ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை: கீழ்க்கண்ட கிளை இருப்புப் பாதைகளின்மூலம் ஆதாயம் கிடைக்காததால் அவற்றை மூடிவிட இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது:—

(1) மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்.

(2) மாயூரம்—தரங்கம்பாடி.

(3) பேரளம்—காரைக்கால்.

(4) நீடாமங்கலம்—மன்னார்குடி.

(எ) மேட்டுப்பாளையம்-உதகமண்டலம் இருப்புப் பாதையின் முக்கியத்துவமும், தேவையும், இந்திய அரசுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தக் கிளை இருப்புப் பாதையை மூடிவிடுவதற்கான செயற்குறிப்பை கைவிடுமாறும் இந்திய அரசு வேண்டப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

பேரளம்-காரைக்கால் இருப்புப் பாதையின் பெரும் பகுதி புதுச்சேரி மாநில எல்லைகளுக்குள் உள்ளது.

எஞ்சிய இரண்டு இருப்புப் பாதைகளைப் பொறுத்த வரை, இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீடாமங்கலம்-மன்னார்குடி இருப்புப் பாதையை வருவாய் இல்லாத காரணத்தினால் மத்திய அரசு எடுத்துவிடப்போவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் அதை வருவாய் உள்ள போக்குவரத்தாக மாற்றி, கும்பகோணத்திற்கும் நீடாமங்கலத்திற்கும், மன்னார்குடிக்கும் பட்டுக்கோட்டைக்குமாக இணைத்தால் அந்தப் பகுதிகள் வளம்பெறவும், விவசாயத்திற்குப் பெயர்போன தஞ்சை மாவட்டத்தில் போக்குவரத்திலும் லாபம் ஏற்படும் என்ற முறையிலும் வேறு புதிய லைன்களைப் போட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற காரணங்களை மத்திய அரசிடம் சொல்லித்தான் மேற்படி இருப்புப்பாதைகளைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கேட்டு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறநேரத்திலே மாயவரம்-தரங்கம்பாடி இருப்புப் பாதையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் நிலையில் ஆலோசனையில் இருக்கிறது என்பதாகச் சொன்னார்கள். மாயவரம்-தரங்கம்பாடி இருப்புப்பாதை மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கடற்கரைப் பகுதியை இணைக்கக் கூடிய முக்கியமான பாதையாக அது இருப்பதாலும், கடலோரப் பகுதியிலே உள்ள மீனவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோர் போக்குவரத்துக்கு வசதியாக அது இருப்பதாலும் அதை எடுத்துவிடாமல் இருப்பதற்கு நம்முடைய அரசாங்கம் பரிந்துரை செய்யுமா ? அப்படி மீறி எடுத்துவிட்டால் நாங்கள் நடத்திக் கொடுக்கிறோம் என்று நம்முடைய அரசு சொல்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் சொன்ன காரணங்களுக்காகவும், தஞ்சாவூர்ப் பகுதியிலே நடுவே அமைந்துள்ள உபரிப் பகுதிகளிலிருந்து நெல்லை வேறு பகுதிகளுக்குக் கொண்டு வருவதற்காகவும் மேற்படி இருப்புப் பாதையைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, உலக நாடுகளிலிருந்து இந்திய நாட்டுக்கு வருகின்ற மக்கள் பார்க்கவேண்டிய முக்கிய இடங்களில் உதகையும், இரயில் பாதையும் ஒன்றாகும். ஆகவே, உதகை இரயில் பாதையை அகற்றக்கூடாது என்பதாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அந்தப் பாதையைக் கட்டிக்காக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல, மேற்படி இருப்புப் பாதை மிக நல்ல இடத்தில் அமைந்திருக்கிறது. ஏற்கனவே நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி, மேற்படி பாதையை அப்புறப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, கீழ்க்கண்ட காரணங்களுக்காக அந்த மேட்டுப்பாளையம்-உதகமண்டலம் இருப்புப் பாதை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

'கடினமான மலைப்பகுதியினூடே நன்கு அமைக்கப்பட்ட இருப்புப்பாதை எழில்மிகு இயற்கைக்காட்சிகளினிடையே சென்று, 'மலையரசி' என அழைக்கப்படும் உதகையை நாட்டின் ஏனைய பகுதியுடன் இணைக்கின்றது. இந்த இருப்புப் பாதை சிருலாப் யணிகள் பலராலும் பெரிதும் விரும்பப்படுகின்ற இயற்கை எழில் கொஞ்சும் நீலகிரி மலையினூடே ரயிலில் பயணம் செய்வது மகிழ்வூட்டக்கூடிய அனுபவமாகும். இந்த இருப்புப் பாதையை அகற்றிவிட்டால், சுற்றுலாப்பிரியர்கள், இயற்கையின் எழிலைக் கண்டு ரசிக்கக்கூடிய வாய்ப்பினை இழந்து விடுவர். மேலும், இதனால் இம்மலைப் பகுதிக்கு வரக்கூடிய சுற்றுலாப்பிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிடுமாதலால், நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார நிலை பாதிக்கப்படும்.'

இன்னும் பல காரணங்கள் சொல்லி, மேற்படி இருப்புப்பாதை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இலாபகரமாக இருக்கிறதா இல்லையா என்பதை அடிப்படையாக வைத்துப் பார்க்காமல் ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு இப்பாதையை நீடிக்க வேண்டும் என்று மத்திய அரசை நம்முடைய அரசு மீண்டும் வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொடர்ந்து வலியுறுத்தி வரும்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த இருப்புப் பாதைகளில் மாயவரம்-தரங்கம்பாடி இருப்புப் பாதை லாபகரமாக இல்லாமலிருப்பதற்குக் காரணம் சரியான நேரங்களில் ரயில் விடப்படாமையாகும். ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் சென்று, மூன்று தடவைகள் திரும்பி வருகின்றன. ஃப்ரீக்வன்ஸி ஆஃப் ஸர்வீஸை, ஃப்ரீக்வன்ஸி ஆஃப் ட்ரிப்ஸை அதிகப்படுத்தினால் நிச்சயமாக அது லாபகரமாக மாறிவிடும் என்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, ஃப்ரீக்வன்ஸி ஆஃப் சர்வீஸை அதிகப்படுத்த நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு நல்ல யோசனை. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து அவருடைய "இன்டரஸ்ட்"டுக்குப் பாதகமாக இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு.)

டெல்லியில் நடந்த நீர்ப்பாசன மாநாடு

*160 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1967ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதி டெல்லியில் நடந்த நீர்ப்பாசன மகாநாட்டில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையில், வேளாண்மையில் உள்ள நிலப்பரப்பில் ஏறத்தாழ 23 சதவீதம் பரப்பு மட்டுமே தற்போது பாசனம் பெறுகிறது என்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இதை மேலும், குறைந்தபட்சம் 50 சதவீதம் அளவுக்காவது கொண்டு போகவேண்டும் என்கிற நிலைமையைச் சுட்டிக்காட்டி, மிகவும் குறைந்த அளவில் பாசனம் செய்யப்பட்டு வரும் மாநிலங்களில் புதிய திட்டங்களை மேற்கொள்ளுவதற்குப் போதிய அளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலம் போதிய அளவுக்கு நீர்ப்பாசன வசதி இல்லாத மாநிலம். இதைச் சுட்டிக்காட்டி நீர்ப்பாசன வசதியை விரிவுபடுத்துவதற்கு எந்த அளவிற்கு மத்திய அரசினிடமிருந்து நிதி உதவிகோரப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய விவரம் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேற்படி மாநாட்டின் முடிவுகளின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுத்துவரப் படுகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் அதிக மழை பெய்து, தண்ணீர் பூராவும் அந்த மாநிலத்திற்குப் பயன்படுத்தப் படாமல், உபரியாக உள்ள தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருகிறது. உதாரணமாக, கேரளாவில் பெய்யும் மழைத் தண்ணீர் அத்தனையும் பயன்படுத்தப்பட முடியாமல், ஓரளவு கடலில் போய் விழுகிறது. அகில இந்திய ரீதியில், இப்படி மிகுந்த தண்ணீர் வசதியுள்ள மாநிலங்களின் தண்ணீரை, பற்றாக்குறையாக உள்ள தமிழ்நாட்டுக்குத் திருப்பி, பாசன வசதி செய்வதற்கான ஏற்பாடுகளைப்பற்றி நீர்ப்பாசன மாநாட்டில் ஏதாவது பேசப்பட்டதா ? அப்படிப் பேசப்பட்டிருந்தால், அமைச்சரவர்களுடைய கருத்து என்ன என்பதைக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, வேளாண்மைப் பரப்பிலே 23 சதவீதம்தான் பாசன வசதி பெறுகிறது என்று சொல்லப்படுகிறதே, நம்முடைய மாநிலத்திலே அது எத்தனை சதவீதமாக இருக்கிறது ? இன்றைக்குப் பாசன வசதிக்கு உபயோகப்படக்கூடிய ஆறுகள் பூராவிலும் அணைகள் கட்டப்பட்டுவிட்டமையால், மேலும் பாசன வசதிக்காக சிறு சிறு அணைகளைக் கட்டக்கூடிய திட்டமொன்றை மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

திரு. க. மு. ராசகோபால் : தலைவர் அவர்களே, பல மாநிலங்களில் வறட்சி காரணமாகத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகிறதாகையால், ஒருமைப்பாடு, ஏக இந்தியா என்னும் நிலைமையில், கங்கையிலிருந்து காவேரி வரைக்கும் இணைத்து, அனைத்து, மாநிலங்களுக்கும் சரிசமமாகப் பாயக்கூடிய நிலையை உருவாக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்படி ஒரு காலம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மை நிலப்பரப்பில் தற்போது எத்தனை சதவீதம் பாசனவசதி பெறுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

* 312-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் சொல்லியபடி, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதல்ல.

திரு. வி. கே. கோதண்டராமன் : முடிவு எடுத்த அடிப்படையில் அமைச்சரவை செய்வார்கள் என்பதில் எங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது. என்றாலும், நம்முடைய மாநிலத்தில் போதுமான அளவுக்கு நீர்ப்பாசன வசதி இல்லை என்பது மட்டுமல்லாமல் ஏற்கனவே வெள்ளையன் காலத்திலேயே சர்வே செய்யப்பட்டிருந்த சிறிய சிறிய நீர்த் தேக்கங்களைக் கட்டக்கூடிய அளவுக்குப் பல இடங்களில் வசதி வாய்ப்பு இருக்கின்றனவே, அவைகளை உடனடியாகக் கட்டி முடிப்பதன் மூலமாகத்தான் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க முடியும் என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து அந்த வகையில் முயற்சியை உடனடியாக மேற்கொள்ள திட்டம் ஏதாவது உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நீர்ப்பாசன வசதிகளுக்காக பத்து கோடி ரூபாய் கடன் கேட்டிருந்தார்களே, அது இந்த நீர்ப்பாசன மாநாட்டில் வற்புறுத்தப்பட்டதா ? அப்படியானால், அதன் மீது இந்திய அரசு தெரிவித்த கருத்துக்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் இல்லை.

Supply of water from Lower Bhavani Project.

* 161 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works pleased to state whether the Government have any scheme to supply water from Lower Bhavani Project to the lands which are not included in the Ayacut, north of the Kavandapadi, Gobichettipalayam road and in between the two sub-canals that cross the road above Kavandapadi and before Palapalayam in Bhavani taluk, Coimbatore district ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிட்ட நிலங்களுக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் விடுவது குறித்து தற்போது செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, பவானி நதியிலிருந்து நேரடியாகத் தண்ணீர் விடுவதாக செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், இந்த நிலங்களுக்குப் பக்கத்திலே கழிவு நீர்ப் பள்ளமொன்று சென்றுகொண்டிருக்கிறது. அந்தக் கழிவு நீர்ப்பள்ளத்தைத் தடுத்தால் ஏறக்குறைய 150 எக்கர் நிலங்களுக்கு அந்தக் கழிவு நீர் பயன்படுத்தப்படும். அதற்கு ஆகக்கூடிய செலவு முப்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாகத்தான் இருக்கும். இதைத் தலைமைப் பொறியாளரும் வந்து பார்த்தார்கள். ஆகவே, உடனடியாக இதை நிறைவேற்றித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களைக் கவனத்திலே கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தில்லை ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்

*162 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் வட்டம், தில்லை ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்மீது அந்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் புகார் மனு கொடுத்து 2 ஆண்டுகளாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குற்றச்சாட்டுகள் மீது அவ்வப்போது விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. மெய்ப்பிக்கப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக அந்த ஊராட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி மன்ற எழுத்தர்களின் சம்பளம்

*163 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்ற (Panchayat Board) எழுத்தர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசாங்கம், நகராட்சி, மாவட்ட வாரியம் ஆகியவற்றைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கு சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்த சம்பள வீதங்களின் அடிப்படையிலேயே ஊராட்சியைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கும் சம்பள வீதம் முடிவு செய்யப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, சில மைனர் பஞ்சாயத்துக்களில் பணி புரியும் எழுத்தர்களுக்கு பத்து ரூபாய் என்கிற அளவுக்குக்கூட மிகக் குறைந்த சம்பளம் அந்த ஊராட்சி மன்றத்தால் நிர்ணயிக்கப்படுவதால், அது அவர்களுடைய வாழ்க்கைக்கு எந்த வகையிலும் உதவி செய்யத்தக்க நிலையில் இல்லாதிருப்பதால், குறைந்தபட்சம் மைனர் பஞ்சாயத்து எழுத்தர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயித்து அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அவர்களெல்லாம் அரசாங்க ஊழியர்கள் பட்டியலில் இடம் பெறுவதில்லை. அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். க்ரூப் க்ளார்க் என்ற வகையில் நான்கைந்து ஊராட்சி மன்றங்களுக்கு ஒருவராக நியமித்துக் கொள்ளப்பட்டு, அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவேதான், அவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அரசாங்கத்தோடு தொடர்புடையவர்கள் அல்ல.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த நகரப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக மாற்றி, அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றியமைக்க இந்த அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அத்தகைய செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி.: தலைவர் அவர்களே, பேரூராட்சி ஒன்றியங்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்படுமா ? அதே நேரத்தில் ஜீப் டிரைவர்களுக்குச் கொடுக்கப்படக்கூடிய பயணப் படி விகிதம் அவர்களுக்குக் கட்டுப்படியாகாமல் இருப்பதாகச் சொல்லுவதால், அதை உயர்த்துவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அவையெல்லாம் தனியாகக் கேட்கப்பட வேண்டியவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊராட்சி மன்றத்திலிருந்து பேரூராட்சிமன்றம், நகராட்சிமன்றம் என்று இப்படியெல்லாம் வந்து. மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் துணைக் கேள்விகள் வந்து கொண்டிருக்கின்றன. மூலக் கேள்விக்குத் தொடர்புள்ள கேள்விகளே கேட்கப்பட வேண்டும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: கிராம ஊராட்சி மன்றங்களிலே பணிபுரியும் எழுத்தர்களுக்கு அந்தக் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால், அவைகளை மாற்றி அமைத்து, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கு இந்த அரசு முன்வருமா ? மு.ப. 9–39

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே அது பற்றிய விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ அதே விகிதத்தில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகப் போராடிய நாம், அதில் கவனம் செலுத்தி வருகிற நாம், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ அதே போல் பஞ்சாயத்து ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்தாற்போல் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஊழியர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இந்த அரசு மனப்பூர்வமாக ஆர்வம் கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஊராட்சி நிதிநிலையை மனத்தில் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்ற நிலையில், தற்போது வருகிற வருமானத்தில் சிலபல ஊராட்சிகளில் 85 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகை ஊதியமாகவே கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வரி செலுத்துவோர் குறைகளையும் கவனித்துத் தீர வேண்டிய நெருக்கடி நிலை இருக்கிறது.

திரு. நா. காசிராமன்: ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள், அப்பர் டிவிஷன் க்ளார்க்ஸ், ஆகியோருடைய சம்பள விகிதங்கள் இன்க்ரிமெண்ட் ஆகியவை அரசாங்கத்தில் பணி புரிகின்றவர்களுக்கு இருப்பதைப் போல் அல்லாமல் வித்தியாசமாக இருக்கிறது. இதையெல்லாம் சரி செய்து அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் சம்பள விகிதத்தைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே சொன்னபடி சம்பளக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இன்னின்ன விகிதங்களில் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க நிதிநிலை சீரான நிலையைப் பெற்றால்தான் முடியும். அந்தக் குறைகளை எல்லாம் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மேட்டுப்பாளையம் பகுதியில் தொழிலாளர் மருத்துவ மனை.

*வினா 164. **திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

[1969 மார்ச் 4

(இ) அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. க. துரைசாமி : அமைச்சர் அவர்கள், மேட்டுப்பாளையத்தில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரி கட்டுவதற்கில்லை என்று சொன்னார்கள். பொது மருத்துவமனையிலாகிலும் இ.எஸ்.ஐ. வார்டில் பத்து படுக்கைகளை அதிகமாக்க அரசாங்கம் விரைவில் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டைக் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்து அதற்கு ஒப்பம் அளித்தது. ஆனால் மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ளவில்லை. அதற்காகக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் 16 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்குத் திட்டமிருப்பதாகச் சொன்னார்கள். விரைவில் அதைக் கட்டி முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதாகச் சொல்லவில்லை. ஒரு வார்டு கட்டுவது பற்றி திட்டம் இருக்கிறது என்று தான் சொன்னேன். இ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனிடமிருந்து ஒப்புதல் இடைத்த பிறகு நிறைவேற்றப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குத் தேவையான இரும்புக் கம்பங்கள்.

* 165 வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான இரும்புக் கம்பங்கள் எந்தெந்த நிறுவனங்களிடத்தில் எந்த அடிப்படையில் வாங்கப்படுகிறது ?

(இ) 1965-66, 1966-67, 1967-68 ஆகிய ஆண்டுகளில் முறையே எந்தெந்த நிறுவனங்களில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள இரும்புக் கம்பங்கள் வாங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ & இ)—தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது கிராம மின் வசதிப் பணிகளுக்காக உருக்குக் குழாய்க் கம்பங்கள், இரயில் கம்பங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்வதில்லை. 33 கிலோ வாட், 66 கிலோ வாட் உயர் அழுத்த மின் விசைக் கம்பிகளுக்கு உறுதியான உருக்கு உத்திரங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்புமாறு கேட்டு அறிவிப்பு வெளியிட்ட பிறகு அவற்றைத் தருவிக்க 1966-67-ல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அச்சாதனங்களைத் தருவிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை* ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1966-67-க்கு மட்டும் வாங்கப்பட்டிருப்பதாகவும், அதற்குப் பிறகு சாமான்கள் தேவையில்லாததால் வாங்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு என்ன பயன்படுத்தப்படுகிறது என்பதை மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில் பார்க்கும்போது 1966-67-ல் மூன்று குறிப்பிட்ட கம்பெனிகளில் குறிப்பிட்ட விலைக்கே வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதெல்லாம் டெண்டர் மூலம் வாங்கப்பட்டதா அல்லது வேறு கொட்டேஷன் மூலம் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

* 81,ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது,

1969 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இந்தச் சாமான்கள் வாங்கப்படுவது டெண்டர்கள் மூலந்தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கையில் தனியார் துறை விலை பற்றி மாத்திரந்தான் இருக்கிறது. பொதுத் துறையில் கூட ஸ்டீல் போஸ்ட்கள் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. பொதுத் துறையில் இவற்றை வாங்குகிறார்களா இல்லையா என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. காசிராமன் : 1966-67-ம் ஆண்டுக்குப் பிறகு இம்மாதிரிக் கம்பங்கள் வாங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு வாங்காததற்குக் காரணம் ரீயின்ஃபோர்ஸ்ட் கான்கிரீட் போஸ்டுகளைப் பயன்படுத்துவதுதான் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : அதற்கான விவரம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : மின்சார போர்டுக்குத் தேவையான சாமான்களைச் சர்க்கார் கோவாப்பரேடிவ் சொசைடியின், கோவாபரேடிவ் இன்டஸ்ரியல் சொசைடிஸ் போன்ற ஸ்தாபனங்களின் மூலம் வாங்குவதால் அந்த ஸ்தாபனங்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்ற காரணத்தால் இனிமேலாவது அத்தகைய ஸ்தாபனங்களிடமிருந்து சர்க்கார் காரியங்களுக்கான சாமான்களை வாங்குவதற்கு அரசு ஊக்கம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : இது ஒரு நல்ல யோசனையாகக் கருதப்படும்.

அமைச்சர்களுக்கு வாங்கப்பட்ட புதுக் கார்கள்.

* 14 —வினு : **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அமைச்சர்களின் உபயோகத்திற்காகப் புதிய கார்கள் எத்தனை வாங்கப்பட்டன ?

(இ) அவற்றின் வகைகளின் விபரமும், விலையின் விபரமும் யாவை ?

(உ) பழைய கார்கள் என்ன செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி :

(அ) அமைச்சர்கள் பயன்படுத்துவதற்காக ஒன்பது புதிய அம்பாசடர் மோட்டார் வண்டிகள் அரசாங்கத்தினால் வாங்கப்பட்டன.

(இ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்.	வண்டியின் வகை, எண், பெயர்.	மொத்த விலை
எண். (1)	(2)	(3) ரூ. காசு.
1	MSR—7007 (அம்பாசடர்)	19,327 39
2	MSR—9999 (அம்பாசடர்)	19,327 39
3	MSR—9009 (அம்பாசடர்)	19,327 39
4	MSR—9090 (அம்பாசடர்)	19,327 39
5	MSR— 696 (அம்பாசடர்)	19,327 39
6	MSR—9955 (அம்பாசடர்)	19,327 39
7	MSR—7777 (அம்பாசடர்)	19,327 39
8	MSR—9393 (அம்பாசடர்)	19,617 90
9	MSQ—2728 (அம்பாசடர்)	

(உ) பழைய மோட்டார் வண்டிகள், தலைமைச் செயலகத்தில் உள்ள பிற மோட்டார் வண்டிகளுடன் சேர்க்கப்பட்டு விட்டன,

[1969 மார்ச் 4

திரு. ரா. ராமச்சந்திர துரை : இந்தக் கார்கள் எல்லாம் எந்தக் கம்பெனியில் இருந்து வாங்கப்பட்டன ? இவை வாங்கப்பட்ட கம்பெனிகள் டிஸ்குவாலிபை செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : போன சர்க்கார் இருந்தபோது எந்தக்கம்பெனியில் இருந்து வாங்கப்பட்டனவோ அதே ரீவ்ராஜ் கம்பெனியில் இருந்துதான் வாங்கப்பட்டன. அவை அமைச்சர்களுடைய உபயோகத்திற்குச் சரியாக இல்லாமல் அடிக்கடி பழுது ஏற்பட்ட காரணத்தால், அது நிரூபிக்கப்பட்ட காரணத்தால் வேறு கம்பெனியில் இருந்து வாங்க முடிவு செய்யப்பட்டது.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர்கள் தற்போது சிறிய கார்களில் பிரயாணம் செய்கிறார்கள். குறிப்பிட்ட இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேரவேண்டுமென்ற நிலையில் சிறிய கார்களில் பயணம் செய்யும்போது விபத்துகள் ஏற்படக்கூடிய நிலை உண்டாகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக் கூட முன்பு ஒரு முறை அத்தகைய விபத்து ஏற்பட்டது. ஆகவே, கொஞ்சம் பெரிய கார்களை உபயோகிப்பது பற்றி அமைச்சர்கள் யோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூடுமானவரை அமைச்சர்கள் இப்போது ரயில் பிரயாணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களில் இருக்கும் கார்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது மீடியம் அளவு கார்களை வாங்கலாமா என்ற யோசனை இருக்கிறது.

திரு. எம். பூபதி : இந்தக் கார்கள் டெண்டர் மூலம் வாங்கப்பட்டதா அல்லது கொடேஷன் மூலம் வாங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அவைகளுக்கு நிலையான விலை உள்ளது.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தொழிலாளி மரணம்.

* 50—வினா : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் 1968-ம் ஆண்டு மே மாத இறுதியில் போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட "பென்னர் காக்கில்" கம்பெனியில் வேலை பார்த்த வேலு என்பவர் இறந்தாரா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இது சம்பந்தமாகப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டாரா ?

(எ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) மதுரை, ஃபென்னர் காக்கில் லிமிடெட்டின் தொழிலாளியான வேலு என்பவர் சிறுநீர் கோளாறு குறித்து சிகிச்சை பெறுவதற்காக 27—5—1968 அன்று மதுரை, அரசாங்க எர்ஸ்கின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 29—5—68 தேதியன்று அவர் மருத்துவ மனையில் இறந்து விட்டார்.

(இ) கிட்னி கோளாறு காரணமாக இந்த மரணம் ஏற்பட்டது.

(உ) and (எ) மதுரை, ஃபென்னர் காக்கில் லிமிடெட் பொது நிர்வாகி தொடர்ந்துள்ள திருட்டுக் குற்ற வழக்கில் வேலு சந்தேகத்துக்குரியவர் ஆவார். இவ்வழக்கு, பி-6 (துப்புத்துலக்கும்) காவல் நிலையத்தில் 16—5—68 தேதி யன்று 568-68 எண் குற்ற வழக்காகப் பதிவு செய்யப்பட்டது. 16—5—1968 தேதியன்று பிற்பகல் வேலுவை காவல்துறை துணை மேற்பார்வையாளர் விசாரணை செய்து அன்றே அவரை அனுப்பி விட்டார். குற்றவாளியான வேலு மருத்துவ மனையில் சேர்க்கப்படுவதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்னதாக அடிக்கப்பட்டதாக பி-6 (துப்புத் துலக்குதல்) காவல் நிலைய குற்றவிசாரணைப் பணியாளர் மீது புகார் கூறப்பட்டதால், மதுரை (நகர) காவல் துறைக் கண்காணிப்பாளர், காவல் துறை துணை மேற்பார்வையாளரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்தார்.

1969 மார்ச் 4]

திரு. என். எஸ். வி. சித்தன் : வேலு என்பவர் விசாரணை செய்யப்பட்ட பிறகுதான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறந்திருக்கிறார் என்று தெரிகிறது. இதைப் பற்றி ஆர்.டி.ஓ. அவர்கள் விசாரணை செய்து இந்த அரசுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த அறிக்கையை அவை முன் வைப்பார்களா ? வேலுவின் இளம் மனைவிக்கும் பச்சிளங் குழந்தைகளுக்கும் நஷ்ட ஈடு தரப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அந்த அறிக்கை இன்னும் அரசுக்கு வந்து சேரவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சாதாரணமாக, பல இடங்களில் இன்றைய தினம் காவல் துறையில் இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இது பல ஆண்டுகளாகப் போலீஸ் துறையில் சம்பிரதாயமாக நடக்கக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த அரசாங்கம் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி இந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க போலீஸ் அதிகாரிகளுக்குத் திட்டவட்டமான உத்தரவுகள் போடப்படுமா ? அம்மாதிரி ஏதாவது நடந்துவிட்டாலும் அந்தக் குடும்பத்தினருக்கு உதவி செய்ய உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் விசாரணைக்குப் பிறகு காவல் துறை அதிகாரிகளால்தான் அந்தக் கொடுமை நடைபெற்றது என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு அந்தக் குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

திரு. சி. கோவிந்தராசன் : கடந்த 10—11—68-ம் தேதியில் நெய்வேலியில் உள்ள ஒரு தொழிலாளி மது அருந்திவிட்டார் என்ற காரணத்திற்காக போலீஸார் பரிசோதனை செய்யும்போது போலீஸாரால் அந்தத் தொழிலாளி தாக்கப்பட்டு அவர் ஸ்தலத்திலேயே இறந்த செய்தியை சட்டமன்ற உறுப்பினர்களாகிய திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. கோவிந்தராசன் அவர்களும் அன்றிருந்த மாநில முதல் அமைச்சர் அவர்களுக்குத் தந்தி மூலம் கொடுத்தார்கள். அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களை அறியலாமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தொடக்கக் கேள்வியோடு இந்தத் துணைக் கேள்வி தொடர்பு கொள்ளவில்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்களை அறிந்து விடையளிக்க இயலும்.

திரு. எம். சுரேந்திரன் : மதுரையில் நடந்த இந்த நிகழ்ச்சியிலிருந்து காவல் நிலையங்கள் இன்னும் தண்டனை நிலையங்களைப் போல் காட்சி அளிப்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. ஆகவே காவல் நிலையங்கள் சேவை நிலையங்களாக இருக்கும்படியான முறையில் அவற்றை அமைப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இந்த யோசனையை அரசும் ஏற்றுக் கொள்ளும், அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி நீண்ட நாட்களாகவே எந்தக் காவல் துறை நிலையங்களை எடுத்துக் கொண்டாலும் அன்று கிட்னி கோளாறு அல்லது காக்காய் வலிப்பு வந்து இறந்துவிட்டான் அல்லது தூக்குக் போட்டுகொண்டு இறந்துவிட்டான் என்ற அளவிற்குத் தொடர்ந்து இப்படி நடைபெறுகிறது. ஆகவே இதைப் போக்குவதற்காக வேண்டி வெள்ளையன் காலத்தில் இயற்றப்பட்டிருக்கும் அந்தச் சட்டத்தை திட்டவட்டமாக மாற்றி திருத்தியமைப்பதற்கான உத்தேசமுண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுரேந்திரன் போட்ட கேள்வியையே நீங்கள் மறுபடியும் போடுகிறீர்கள்

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் காரணங்கள் எதுவும் கூறி தட்டிக் கழிக்க இந்த அரசு விரும்பாத காரணத்தினால் தான் அந்த காவல் துறை துணை மேற்பார்வையாளர் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டு விசாரணை நடந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்த மரணத்திற்கான காரணம் என்னவென்று மருத்துவ நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா ? அது வயலன்ஸினால் ஏற்பட்டதா அல்லது வேறு காரணங்களா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அடிபட்டதால் அப்படிப்பட்ட ...ளாறு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று மருத்துவ அறிக்கை கூறுகிறது. அடிபட்ட வேலு என்பவர் 16-ம் நாளன்று காவல் நிலையத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டது 27-ம் தேதியன்று. இந்த இடைவெளி இருப்பதால் அடிக்கப்பட்டது போலீஸாராலா அல்லது வேறு நிகழ்ச்சியாலா என்று அறிய அந்த விசாரணை நடைபெற்றது.

Congress Conference at Dindigul.

*151 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether some students of Dindigul attempted to set fire to the premises and pandal when Thiru C. Subramaniam, President of T.N.C.C. was addrtssing a Congress Conference on 10th February 1968; and

(*b*) if so, the damage sustained due to the incident ?

மாண்புமிகு திரு: மு. கருணாநிதி (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : இந்த நிகழ்ச்சி நடந்து அதற்கு வேண்டிய விளம்பரங்கள் எல்லாம் பத்திரிகைகளில் வந்தன. அந்தமாதிரி மாணவர்கள் அந்தப் பந்தலுக்கு நெருப்பு வைக்க முயற்சித்ததால் மேலும் தொடர்ந்து இன்னும் தொல்லைகள் ஏற்படும் என்று கருதி எங்கள் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கூட பேசாமல் விட்டுவிட்டு அதைக் கலைத்து விட்டு வந்ததை நாங்கள் எல்லாம் படித்தோம். அது உண்மையா ? இல்லை, இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே, அப்படி நடக்கவேயில்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் அவையில் பதில் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கேட்பதை எல்லாம் நம்ப நம்பி இங்கு கேள்வி கேட்கக்கூடாது என்று தீர்ப்பு இருக்கிறது

திரு. கே. விநயகம் : ஐயா சொல்லிவிட்டால் போதும்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : திண்டுக்கல்லில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டின்போது அம்மாநாட்டுப் பந்தலின் பக்கத்திலுள்ள ஒரு குடிசையில் தீ பற்றிக்கொண்டதாகவும் அதை உடனடியாக அணைத்ததாகவும் செய்தி வந்தது. ஆனால், அந்தப் பந்தலுக்குத் தீ இட மாணவர்கள் முயன்றார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததும் உண்மை. ஆனால், மாநாட்டை நடத்திய காங்கிரஸ்காரர்களோ அல்லது அந்தக் குடிசை சொந்தக்காரரோ காவல் நிலையத்தில் அதுபற்றி எந்தப்

புகாரும் கொடுக்கவில்லை. இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணை மூலம் தீ மூட்டப்பட்டதாகக் கூறப்படும் அந்த நிகழ்ச்சிக்கு மாணவர்கள் எந்த விதமான பொறுப்பாளர்களும் அல்ல என்பதற்கான சான்றுகள்தான் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொள்வதாக இருந்த கூட்டத்தில் குழப்பம் விளைவிப்பதற்காக வெளியூர்களிலிருந்து மாணவர்களும் ஆட்களும் இறக்குமதி செய்யப்பட்டனரா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இறக்குமதி ஏற்றுமதியெல்லாம் தெரியாத விஷயங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : திண்டுக்கல்லில் நடந்த மாநாட்டில் அதற்கு முதல நாளில் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களைப் பற்றி மிகவும் கேவலமான முறையில், மாணவர்கள் படிக்காமலேயே பரீட்சையில் பாஸ் செய்ய நினைக்கிறார்கள் என்று சொன்ன கருத்துக்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிற வகையில் திண்டுக்கல்லில் கிளர்ச்சி செய்தார்கள். தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி செய்தார்கள். ஆகவே மறுநாள் நடக்க இருக்கும் மாநாட்டில் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்களோ என்ற பயத்தினால் காங்கிரஸ்காரர்களே தீ வைத்துக் கொண்டார்கள் என்பது பற்றி ஏதாவது தகவல் வந்ததா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படி அவர்கள் தீ வைத்துக் கொண்டார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அது மாத்திரமல்ல. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் மாணவர்களைப் பற்றி அன்றையதினம் கூறிய கருத்தை பிறகு அவர்களே திரும்பப் பெற்றுக்கொண்டு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அவற்றையெல்லாம் கிளப்பி மறுபடியும் ஒரு புதிய நிலையை மாணவர்கள் மத்தியில் கிளப்பத் தேவையில்லை. இப்போதுள்ள மாணவ சமுதாயத்தில் புதிய கிளர்ச்சிகள் தோன்றுவதற்கு அது ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் இதை அந்த அளவோடு நிறுத்தி விடுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

Compulsory collection for Small Savings.

*114 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government are aware of the circulation of printed statement by Tiruchirappalli Chamber of Commerce against compulsion used for collection for small savings; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) " வர்த்தக உலகம் " என்னும் திங்கள் 1968 மார்ச் இதழில் அரசாங்கக் கடன்கள், சிறுசேமிப்புப் பத்திரங்கள் முதலியவற்றுக்கு வசூல் செய்யும்போது துறை அதிகாரிகள் அச்சுறுத்துவதாகவும், மிரட்டுவதாகவும், குற்றம் சாட்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட வணிக மன்றத் தலைவரும் செயலாளர்களும் அறிக்கை வெளியிட்டுள்ளனர். முந்திய அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோதும் பல ஆண்டுகளாக இப்பழக்கம் இருந்து வந்துள்ளதென்றும் இது நிறுத்தப்படவேண்டுமென்றும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து எழுத்து மூலமான புகார் எதுவும் வணிக மன்றத்துக்கு வரவில்லையென்றும் வாய்மொழி மூலமே தெரிவிக்கப்பட்டுள்ளதென்றும் அந்த அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து அரசாங்கத்துக்குப் புகார் எதுவும் வரவில்லை.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, திருச்சிராப்பள்ளி வியாபாரக் கழகத்தார் சிறுசேமிப்பு விஷயமாக கொடுத்த மனுவைப் போல் வேறு வியாபாரக் கழகங்களிடமிருந்தும் இதை ஆட்சேபித்து அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : திருச்சி வியாபாரிகள் இதில் மனு கொடுக்கவில்லை. அவர்களுடைய வர்த்தக உலகம் என்ற பத்திரிகையில் சில அதிகாரிகள் அரசாங்கக் கடன்கள் வசூலில், சிறு சேமிப்பு வசூல் விஷயத்தில் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே கூட எந்த அதிகாரி அம்மாதிரி நிர்ப்பந்தபடுத்தினார், அல்லது யார் புகார் செய்தார்கள் என்றெல்லாம் சொல்லவில்லை. வாய் மூலம் யாரோ வர்த்தகர்கள் சொன்னார்கள் என்றுதான் இப்படிப் பொதுவான ஒரு அறிக்கையைத்தான் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி நிர்ப்பந்தம் நடைபெறுவதாக அரசுக்கு எந்தவிதப் புகாரும் வரவில்லை.

திரு. எம். எஸ். மணி : திருச்சி வர்த்தகக் கழகத்தில் பலதரப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அங்கு இப்படிப்பட்ட ஒரு கருத்து பேசப்பட்டதே தவிர அரசினருக்குப் புகார் எதும் வரவில்லை என்பது உண்மையா ?

(பதில் இல்லை)

திரு. தே. கேசவலு : சிறுசேமிப்புத் திட்டத்தை அமுல் செய்ய திரட்டப்படும் நிதிக்கான செலவை இந்தியப் பேரரசு ஏற்றுக்கொள்கிறதா? அல்லது தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறதா ? தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது என்றால் அதற்காகக் குறிப்பிட்டதொரு தொகையை இந்தியப் பேரரசு கொடுக்கவேண்டுமென்று அவர்களோடு போராடி அதைப் பெற இந்த அரசு முன்வருமா ? அப்படி போராடியும் கிடைக்காவிட்டால் தமிழக அரசு இந்தச் சிறு சேமிப்புத் திட்டத்திற்காக தமிழக மக்களிடமிருந்து நிதி வசூல் செய்வதைக் கை விடுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : சிறு சேமிப்புத் தொகையில் மூன்றில் இரண்டு மடங்கு நம்முடைய அரசுக்கு அவர்கள் கடனாகக் கொடுத்துவிடுகிறார்கள். மொத்தம் பத்து கோடி என்றால் அதில் மூன்றில் இரண்டு மடங்கு நம் அபிவிருத்தி வேலைகளுக்காக முதலீடு செய்யக் கொடுக்கிறார்கள். அதை மட்டும் கடனாகக் கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல. இன்னும் பெரிய உதவிகளைப் பெறவேண்டியிருக்கிறது. ஆகவே அதை மானியமாகவே கொடுக்கவேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசிடம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சிறு சேமிப்பு என்பது மக்களிடத்தில் கடனாகத்தான் வாங்கப்படுகிறது. மக்களிடத்திலிருந்து கடனாக வாங்கி அதை மானியமாகப் பெறுவது என்பது வேறு விஷயம். இதில் சர்க்காரிடம் ஒரு குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது. கடனாக பொதுமக்களிடமிருந்து வாங்கி அதை மானியமாகக் கொடுப்பது என்பதுதான் இந்தச் சர்க்காரின் கொள்கையா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில்தான் குழப்பம் இருக்கிறது. மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சிறு சேமிப்புச் திட்டம் என்பது முக்கியமான சில அடிப்படை அம்சங்களைக் கொண்டது. நாம் சிக்கனமாக இருக்க வேண்டும். அப்படிச் சிக்கனமாக இருந்து சேமித்து வைத்ததை முதலீடு செய்கிறோம். சிறு சேமிப்புத் திட்டத்திற்காக பணம் கொடுப்பவர்கள் அதைத்திருப்பிப் பெறும் உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், அரசாங்கம் எதற்காக இந்தக் காரியங்களைச் செய்கிறது என்றால் பணம் கிடைக்காமல் இருந்தால் ஒன்று வரி போட வேண்டும், அல்லது வேறு வகையில் காரியங்கள் செய்ய வேண்டும். ஆகவேதான் இந்தத் திட்டம். மத்திய அரசாங்கம் நமக்கு இதிலிருந்து கடனாக வழங்குகிறது. மானியமாகக் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. அமெரிக்காவிலிருந்து இப்பொழுது கடன் கொடுக்கவில்லையா? அந்த மாதிரி கொடுக்க வேண்டாம் என்பது அல்ல. இன்னும் பல அம்சங்களில் மத்திய அரசிலிருந்து நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்பதற்காக இந்தப்பணத்தைக் கணிப்பித்து, கொடுக்காமல் இருக்காமல் இதை மானியமாகக்கொடுங்கள் என்று கேட்கிறோம். இந்த சிறு சேமிப்புத் திட்டத்தினால் விலைவாசி குறைகிறது. அது ஒரு அடிப்படை அம்சம். இப்போது பத்து கோடி ரூபாய் கிடைக்கிறது என்றால் அந்த 10 கோடி ரூபாய் புழக்கத்தில் இல்லாமலிருந்தால் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவது குறைகிறது. அந்த பத்து கோடி ரூபாய் கிடைப்பதால் வேறு புது வரிகள் விதிக்காத நிலை ஏற்படுகிறது. வரிகள் விதிக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள் இத்திட்டம் காரணமாக விலைவாசி உயர்வைத்தடுப்பதற்குப் பயன்படுகிறது. வியாபாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் ஒரு சேமிப்பாக இருக்கிறது. இந்த இயக்கத்திற்கு இன்னும் நல்ல வகை செய்தால் இருக்கக்கூடிய வரிசளைக் கூட குறைக்க ஆலோசனை செய்யலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, அவர்கள் பதில் சொல்லும்பொழுது நான் குழப்பிக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள்தான் குழப்பிக்கொள்கிறார்கள். சிறு சேமிப்பு என்று மக்களிடத்திலேயிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். வட்டியுடன் தான் திருப்பிக்கொடுக்க வேண்டும். மான்யமாக வாங்குவதும், கடனாக வாங்குவதும் வேறு, ஆகவே, எனக்குக் குழப்பம் இல்லை. எனவே, அவர்களுடைய குழப்பத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : ரொம்ப நன்றி, யாருக்குக் குழப்பம், யசருக்குக் குழப்பம் இல்லை என்பதை ஊரும், உலகமும் புரிந்து கொள்ளும். கடனாகத்தான் வாங்குகிறோம். கடனாக வாங்குவதை 10 வருஷங்கள் கழித்துத் திருப்பிக் கொடுக்க வேண்டும். பல கட்டங்களில் மத்திய சர்க்காரிடம் பாத்தியதை இருக்கிறது. கடன் கணக்கிலே எழுதுவது, மானியம் என்பதெல்லாம் இந்த மாநிலத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற பொருளில் முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, குழப்பம் இருந்தால் அதை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்வதில் கௌரவப் பிரச்சினை எதுவும் இல்லை. எல்லோருக்கும் குழப்பம் வரக்கூடும். குழப்பம் இருந்தால் திருத்திக் கொள்வதில் கௌரவப் பிரச்சினை எதுவும் இல்லை. சாதாரணக் கடனாக வருகிறது, கடனாக வேண்டாம், கொடுங்கள் 7 கோடி ரூபாயை அபிவிருத்திக்கு என்ற கோரிக்கையை எவ்வளவு தூரம் ஒத்துக்கொள்ளப் போகிறார்கள் என்பதில்தான் அடிப்படையான பிரச்சினையே தவிர, ஏதோ அரசாங்கத்திற்கு என்று கருதத் தேவையில்லை. அப்படிக் கருதியிருந்தால் திட்டவட்டமாக கொள்கைகளை எதிர்கட்சித் தலைவரவர்களுக்கு உரைத்தக்கூடிய வாய்ப்பு அரசாங்கத்திற்குக் கிடைத்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோபி வட்டத்திலுள்ள தரிசு நிலங்கள் பட்டா.

*115 வினா.—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

கோபி தாலுகாவில் சர்க்கார் தரிசு நிலங்களை சர்க்கார் அதிகாரிகள் சுமார் இருபது பேர்கள் பட்டா செய்து கொண்டதுபற்றி சர்க்காருக்கு வந்துள்ள புகார்மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : No complaint against any assignment of waste lands in Gobi Taluk made in favour of Government Servants, has been received.

திரு. எம். பூபதி: தலைவரவர்களே, இது சம்பந்தமான புகார் களை நானே அன்றிருந்த அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அதிகாரிகள் ஆக்கிரமித்ததை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்கும் படியும் யோசனை கூற இயலுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அவர்களுடைய இந்த டைய கேள்வி தவறான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அவர்கள் கேட்டிருக்கும் கேள்வியில் கோபி தாலுக்காவில் சர்க்கார் தரிசு நிலங் களைச் சர்க்கார் அதிகாரிகள் சுமார் 20 பேர்கள் பட்டா செய்து கொண்டது பற்றி சர்க்காருக்கு வந்துள்ள புகார் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். எந்த ஊரில், எந்த 20 அதிகாரி கள் என்ற விவரங்களை அவர்கள் கேள்வியில் சொல்லியிருக்கலாம். அது கேள்வியிலே இல்லை. அவர்கள் புகார் செய்திருப்பதாகச் சொல்கிறார்கள் புகார் செய்திருக்கக்கூடும். எந்த ஊரில் எந்த அதிகாரிகள் என்று சொல் வார்களேயானால் பதில் சொல்லச் சௌகரியமாக இருக்கும். இப்பொழுது. கூடக் கேட்கலாம். ஆனால் இங்கேயிருக்கும் அதிகாரிகளின் விவரங்களின் படி. கோபிசெட்டிபாளையம தாலுக்காவில் 1967-ஆம் வருஷமோ, 68-ம் ஆண்டிலோ விவசாயக் காரியங்களுக்காக எந்த நிலமும் பட்டா செய்து கொடுக்கவில்லை என்று கோபிச்செட்டிபாளையம் தாசில்தார் அவர்களும், சத்தியமங்கலம் டெபுடி தாசில்தார் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள், ஆனால், சத்தியமங்கலம் டெபுடி தாசில்தார் அவர்களை அக்கறைகுடு வேறி என்ற கிராமத்தில் 4 பேர்களுக்கு நிலம் அஸைன்மெண்ட் செய் யப்பட்டது தவிர இந்த 2 வருஷத்தில் 1967, 1968-ம் ஆண்டுகளில் தரிசு நிலங்கள் பட்டா செய்யப்படவில்லை என்று அவர்கள் அறிக்கையில் கூறு கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, இந்தத் தரிசு நிலங்களைப் பட்டா செய்வதிலே வீடு இல்லாதவர்கள் அல்லது நிலம் இல்லாதவர்கள் போன்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். எனென் றால் நிலம் இல்லாதவர்களுக்கும், வீடு இல்லாதவர்களுக்கும் கொடுக்க வேண்டியதுதான் நியாயம், பலயிடங்களில் பூமியிருப்பவர்களுக்கும் கொடு க்கப்படுகிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அவர்கள் ஊர் விவகாரத்தை வைத்துக்கொண்டு, அதன் பின்னணியில் கேள்வி கேட்கிறார்கள். அவர் கள் ஊரிலே ஒரு விவகாரம். ஒருவர் டீக்கடைக்காரர். அது ரோடு மேலே இருக்கிறது. எதிர்க் கட்சித்தலைவர்களுடைய தாவா நெடுநாளாக விவகாரம் நடந்துக்கொண்டிருந்தது. அதை அரசியலுக்காக மாற்றி னார்களோ இல்லையோ அது சம்பந்தமாக என்னிடத்திலே புகார் செய்யப் பட்டு ஸ்டே கொடுக்கப்பட்டது. எதிலேயும் இரண்டு கட்சிக்காரர்கள் சேர்ந்து கொள்கிறார்கள். ஒரு செண்ட் விவகாரம். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மனுச் செய்துகொண்டதன் பேரில் அதை நிறுத்தி வைத்துவிட்டு, வருவாய்த்துறை அதிகாரி ஒருவரை அங்கே போய்ப் பார்த்துவிட்டு அது அவசியமா என்று முடிவு செய்யும்படி கேட்டுக்கொண்டேன், அந்த வரு வாய்த்துறை அதிகாரியின் பரிந்துரையின் அடிப்படையில் அது பட்டா செய்யப் பட்டிருக்கிறது. இதுதான் இருக்கும் நிலைமை. அவருக்கும் நிலம் இருக்கி றது, டீக்கடைக்காரருக்கு 10 எக்கர் 20 எக்கர் இருக்கிறது என்பது வாதம். அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நானே கவனிக்கலாம், பரிசீலனை செய்யலாம் என்னும் நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர்களுடைய ஆசீர்வாதத்தினாலேயோ என்னவோ, பாதிக்கப்பட்டவர் கள் பஞ்சாயத்து போர்டு என்று கருதுகிறேன், ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். சிரமம் இருக்கிறது என்று ஹைகோர்ட்டில் போடப்பட்ட அந்த உத்தரவு, அசைன்மெண்ட் செய்தது நிறுத்தி வைக் கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் தெரியும், அரசாங் கத்திற்கும் தகவல் வந்திருக்கிறது. ஹைகோர்ட் என்ன தீர்ப்பு சொல் கிறதோ? ஏற்கெனவே கூட அரசாங்கமாகத் தலையிடவில்லை, வருவாய்த் துறை அதிகாரியினுடைய பரிந்துரையின்மேல் அவர்கள் சொல்லும்வழியில்

தான் கையெழுத்துப் போட்டிருக்கிறோம். தவறாகவும் இருக்கலாம், இடைஞ்சலாகவும் இருக்கலாம், விதி முறைகளின்படிதான் செய்தது. மீண்டும் அதைப் பரிசீலனை செய்யலாம் என்று அரசாங்கமே கருதிக் கொண்டிருக்கும் நேரத்தில் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். தனியாக ஸ்டேட்மெண்ட் கொடுக்கச் சொல்லி சொல்லலாம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : This is a serious question and the Hon. Leader of the Opposition has spoken as if he has no confidence in the Government. That is why I have to explain the position . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவர்கள் கேட்ட கேள் விக்கு விளக்கம் கொடுக்க வேண்டும், அதை நான் மறுக்கவில்லை. இது கேள்வி நேரமாக இருப்பதால், அவர்களைத் தனியாக ஸ்டேட்மெண்ட் கொடுக்கச் சொல்லி அதற்கு நீங்கள் கூறலாம்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது நிர்வாகப் பிரச்சினை. அதற்கு அமைச்சர்கள் பதில் கொடுப்பது நல்லது என்று பணிவாகச் சபா நாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட ஒரு முக்கியத் துவம் இல்லையென்றால் நானும் சொல்லமாட்டேன். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களும் இந்தக் கேள்விக்குள்ளே நுழைந்து இதைக் கேட்கமாட்டார்கள். ஆகவே, தெளிவு படுத்த வேண்டியது அவசியமா கிறது. மு.ப. பகல் 10-00

இதுபற்றி ஹைகோர்ட்டிலே தாவா ஆகியிருக்கிறது. அவர்கள் என் னிடத்திலே கொடுத்தார்கள். இப்படி அசைன்மெண்ட் போட்டு விட்டிருக்கி றார்களே, அவர்களுக்கு நிலம் இருக்கிறது என்றதால் நான் அதைப் பரி சீலித்து ஆராய்ந்தேன். அதற்குள்ளாக அவசரமாக ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி வைத்திருக்கிறார்கள் இதன்பொருட்டு அவர்களுக்கும் சிரமம் குறைவு; சர்க்காருக்கும் சிரமம் குறைவு. ஹைகோர்ட்டினுடைய தீர்ப்புக்குப் பிறகு மீண்டும் அதைப் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே இது தனிப்பட்ட பிரச்சனை அல்ல- பஞ்சாயத்து போர்ட் பொதுக்காரியத்திற்காகத் தான் கேட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? போர்டு மெம்பர் கொடுக்க வேண்டாமென்று உத்திரவு போட்டிருப்பது சர்க்கா ருக்குத் தெரியுமா? அவர் உத்திரவு போட்டிருந்தும் அந்த ஆக்கிர மிப்பை தனிப்பட்ட செல்வாக்கின் மீதுதான் பரிசீலித்தார்கள், சர்க்கார் நடவடிக்கை எடுத்தது என்பது சர்காருக்குத் தெரியுமா ? அவருக்கு 42 எக்கர் பூமி இருக்கிறது, வீடு இருக்கிறது என்று சொல்லப்பட்டதும் சர்க்காருக்குத் தெரியுமா? இன்னொருவர் கொடுத்த..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கிற நேரத்திலே அமைச் சரவர்கள் எல்லா கேள்விகளையும் நினைவிலேக் வைத்து, எல்லா கேள்வி களுக்கு விடை. கொடுக்கக்கூடிய அளவிலே கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : ஒரு செண்டுக்காக இருக்கிற பிரச்னை, அரசியல் பிரச்னையாகின்றது. இன்னும் சில விவரங்களைச் சொல் லத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்த அடைமானப் பிரச்னையைப் பொறுத்தவரையிலே இதிலே நோக்கம் கற்பிப்பது நல்லதல்ல. அவர் மீது நான் நோக்கம் கற்பிக்கவில்லை. அப்பொழுதே போர்ட் மெம்பர் போய் பார்த்தார். இடம் மலையிலே இருக்கிற இடம். அவர் இன்னொரு கட்சியிலே இருக்கிறார், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விரோதமான கட்சியிலே இருக்கிறார்கள் என்பதற்காக போராடப்பட்டு வருகிற காரி யமே தவிர முதலிலே போட்டார்கள். இரண்டாவது போட்டார்கள் என்பது

அல்ல. அதன்மீது இப்பொழுது எந்த விவாதத்தையும் வளர்க்க வேண்டியதில்லை. ஹைகோர்ட் தீர்ப்பை அனுசரித்து நாம் ஒத்துக்கொள்ளலாம். அதுதான் அவர்களுக்கும் ரொம்பவும் உத்தரவாதமாய் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, அரசியல் காரணம் என்று சொல்லிவிட்டார். அதே அரசியல் காரணத்திற்காக அவர்கள் போட்டார்களா என்று நான் ஏன் கேட்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விவாதம் எப்படி இருந்தாலும் கேள்வி நேரத்தில் கடைபிடிக்க வேண்டிய விதிகளைப் பின் பற்ற வேண்டுமென்பதுதான் எனக்கு முக்கியம். வேண்டுமென்றால், அரை மணி நேரம் விவாதத்திற்காகக் கேட்டு வாங்கிப் பேசிக்கொள்ளலாம். கேள்வி நேரத்தில் இவ்விதம் குறுக்கிட்டு, கேள்வி நேரத்தைக் கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Refund of urban land tax.

* 116 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government proposes to refund the amount collected under Madras Urban Land Tax Act, since the important clause of the Act has been struck down by the High Court of Madras;

(*b*) if so, how much amount will be refunded ?

THE HON. THIRU K. A MATHIALAGAN : (*a*) No.

(*b*) Does not arise.

THIRU K. VINAYAKAM : The classification of lands in Madras City in the same category (as in the Madras Urban Land Tax Act) has been struck down by the Madras High Court, with the result the entire Act becomes null and void of our Constitution. That being so, the money collected under that Act is not the property of Government and the Government are not entitled to keep them in its coffers because they are not entitled to the same. So the collection of money becomes illegal. Will the Government think twice on this matter and refund the money that has been collected ?

THE HON. THIRU K. A MATHIALAGAN : The situation does not arise. It is not correct to say that Urban Land Tax Act has been struck down. Only a section has been struck down. I shall present the full report and present stage at which the matter stands.

About 400 writ petitions were filed before the Madras High Court challenging the validity of the Madras Urban Land Tax Act. A Full Bench of the High Court heard the above writ petitions and the judgment of the Full Bench was delivered on 10th April 1968. The Full Bench upheld the constitutional validity of the Madras Urban Land Tax Act. It is not correct to say that the Act has been struck down. In fact the Full Bench upheld the constitutional validity of the present Urban Land Tax Act. But the majority of Judges held that Section 6 of the Act, the section dealing with fixation of market value of the urban land is violative of Articles 14 and 19 (1) (f) of the Constitution. The Government have decided

to file an appeal to the Supreme Court against the judgment of the High Court and on 18th April 1968 petitions have been filed to move the High Court to grant leave for appeal to the Supreme Court and for stay of operation of the judgment of the High Court pending filing of appeal to and its disposal by, the Supreme Court. The Government have obtained leave to appeal to the Supreme Court and the appeal had been filed. The stay of operation of judgment of the Madras High Court was also prayed for pending disposal of the appeal but the request was rejected. However the Supreme Court has posted the appeal for final hearing in the first week of March 1969. The decision on the appeal will be known then. Consequent on the judgment of the High Court, instructions were issued to the Board of Revenue and urban land-tax authorities that collection of urban land-tax should not be made, demand notices should not be issued and that passing of assessment orders should be stopped forthwith. Under the circumstances it has been considered that the question of refunding the tax already collected may be taken up after the Supreme Court's decision on the State's appeal is known.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருவாய்த் துறை மானியத்தின் மீது உறுப்பினர்களுக்கும் கருத்து கூற வாய்ப்பிருக்கிறது, அமைச்சர் அவர்களுக்கும் கருத்து கூற வாய்ப்பிருக்கிறது. அந்தக் காரணத்தினால் துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

ஆட்டு இறைச்சியின் விலை.

152 வினா. **திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

ஆட்டுக்கறியின் விலையேற்றத்தைத் தடுக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இம் மாநிலத்திலுள்ள செம்மறி ஆட்டுப் பண்ணைகள் நான்கிலும் செம்மறியாடுகளின் எண்ணிக்கையைப் பெருக்கவும், அவற்றின் இறைச்சியின் தரத்தையும் ஆட்டு உரோமங்களின் தரத்தையும் உயர்த்தவும் அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. பண்ணைகளில் எச்சாகவுள்ள ஆட்டுக்கிடாக்களை கிராமங்களுக்கு வழங்குவது மூலமாக, கிராமப் பகுதிகளில் ஆடுகளின் எண்ணிக்கை பெருக்கப்படுகிறது. செம்மறியாடுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதன் மூலம், இறைச்சியின் விலை நாளடைவில் நிலைப்படுத்தப் படும் என்பதில் ஐயமில்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் ஸார், கிலோ ஒன்று மூன்று ரூபாயாக விற்றுக் கொண்டிருந்தது இப்பொழுது ரூ. 6½-க்கு விற்கப்படுகிறது என்று கூறுகிறார்கள். எனவே, இந்த விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசாங்க நியாய விலை இறைச்சிக் கடைகள் ஆரம்பிக்கப்படுமா? அதற்கான செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : மத்திய அரசாங்கம் செம்மறி ஆடுகளையும் வெள்ளை ஆடுகளையும்ஏற்றுமதிசெய்வதற்கு அனுமதி கொடுத்த ஒரே காரணத்தினால்தான் இறைச்சியினுடைய விலை ஏறியிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருடைய ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசாங்கம் கசாப்புக் கடைகள் வைக்க விரும்ப வில்லை. யாராவது தனிப்பட்டவர்கள் கசாப்புக் கடைகள் வைக்க முன் வந்தால், கனம்

அங்கத்தினரே, அரசாங்கம் ஆடுகளை எந்த முறையிலே வளர்க்கிறது, ஆடுகள் இன விருத்திக்காக அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பவற்றை விளம்பரப்படுத்துவது போன்ற நல்ல காரியங்களிலே ஈடுபடலாம்.

மேட்டூர் அணையில் மீன் பிடிப்பு.

* 153 வினு : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அணையில் 1968, எப்ரல் முதற்கொண்டு மீன் பிடிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் அளவு 30 அடிக்குக் குறைவாக இருக்கையில் அங்கு மீன் பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. . தண்ணீர் மட்டம் 15 அடிக்குக் கீழே சென்ருல், யமனேரிக்கெண்டை, கெண்டை, பூனைமீன்கள் (Cat Fish) ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக, யமனேரிக் கொண்டை வலைகள் அனைத்தும் நிறுத்தப்படுகின்றன.

சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

* 154 வினு : **திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

1967-68-ல் எத்தனை நகரங்களில் அரசு சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருமங்கலம் நகர பஞ்சாயத்தின் . ஒரு பகுதி வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடைந்தது. மற்ற இடங்களில் வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டிருக்கிற பேரூராட்சிகளில் இந்த சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிதம்பரம், மன்னார்குடி, கும்பகோணம், தூத்துக்குடி, பெரியகுளம், சாத்தூர், லால்குடி, ஆகிய நகராட்சிமன்றங்களில் இது போன்ற பெரிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்டியிருக்கிருர்கள். அதில் கோயம்புத்தூர் முனிசிபாலிடியில் இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. சிதம்பரம் முனிசிபாலிடியில் 1968-69-க்குள் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. உதகமண்டலத்திலும் இது போன்ற ஜலதாரைத் திட்டம் (டிரைனேஜ் சிஸ்டம்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய திட்டங்களாக இவைகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி, ஆலந்தூர் ஆகிய இடங்களில் ஜலதாரைத் திட்டங்களைப் பழுது பார்க்கவேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகள் இங்கே இருக்கின்றன. இருந்தாலும், இப்பொழுது அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான அளவுக்கு போதுமான நிதி இல்லாத காரணத்தினுல், இவைகளெல்லாம் தாமதப்பட்டு வருகின்றன.

Payment of college fees by Harijan students

* 155 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Department of Harijan Welfare has issued cards guaranteeing the payment of the college fees to the students belonging to the Scheduled Caste/Tribes intending to join the college course;

(b) whether suitable instructions have been given to colleges to honour these cards; and

(c) whether any incidents have been brought to the notice of the Government where a few colleges including the Government Arts College, Mount Road, Madras-2 have refused to accept guarantee of these cards and insisted payment of fees at the time of admission itself ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். அரிசனங்கள், பழங்குடி மக்கள் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிப்புக் கட்டணம் முதலியவையின்றிக் கல்லூரிகளில் சேர இயலும்படியாக அவர்களுக்குத் தகுதி அட்டைகள் வழங்கப்படுகின்றன. இந்திய அரசு தரும் படிப்பு உதவித் தொகையைப் பொறுத்தவரை மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படுகின்றது.

(இ) ஆம்.

(உ) முக்கியமாக மதுரையில் உள்ள மாணவர்களிடமிருந்தும், சமூக நிறுவனங்களிடமிருந்தும் கல்லூரிகளின் முதல்வர்கள் இந்தத் தகுதி அட்டைகளை ஏற்க மறுத்ததாக முறையீடுகள் வந்தன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கல்லூரி முதல்வர்கள் இந்தத் தகுதி அட்டைகளை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பதன் காரணமாக பல்வேறு இடங்களில் இத்தகைய புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அரசு இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்து, கல்லூரி முதல்வர்களுக்கு ஒரு திட்டமான உத்தரவு போட்டு, இந்த அட்டைகளை யார் கொண்டுவந்தாலும் அப்படிச் செய்யக்கூடாது என்று வலியுறுத்திஞல் அரிசனங்களுக்கு நன்மை செய்யக்கூடிய நிலைமை இருக்காதா ? அத்தகைய அட்டைகளை எப்படி நிராகரிக்கிருர்கள் என்ருல், அலட்சியமாக சில தவருன வார்த்தைகளை பயன்படுத்துகிருர்கள், தாறுமாருக பேசி அரிசன மக்களை அலட்சியப்படுத்திப் பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. அரிசன மக்களை அப்படி அலட்சியப்படுத்திப் பேசக்கூடிய அளவுக்கு முதல்வர்களுடைய போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை அரசாங்கம் கண்காணிக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த அட்டை கொடுக்கின்ற முறை புகுத்தப்பட்ட ஆரம்பத்தில்தான் இப்பேறப்பட்ட வேறுபாடுகள் கல்லூரி முதல்வர்களால் காண்பிக்கப்பட்டதாக தகவல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்குப் பிறகு நலத்துறை அதிகாரி நடவடிக்கை எடுத்து, எல்லா முதல்வர்களுக்கும் இந்த அட்டைகளை அலட்சியப்படுத்தக்கூடாது என்று அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு இப்பொழுது அதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கவில்லை என்பதாகத்தான் குறிப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி

எல்லா உறுப்பினர்களும் அறியும்படி வினுக்களுக்கு விடையளித்தல்.

திரு. எம். சுரேந்திரன் : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், ஸார். சபாநாயகர் அவர்களே, கேள்வி 115-ல் உபகேள்வி ஒன்றை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, மாண்புமிகு வருவாய்த்துறை

[திரு எம். சுரேந்திரன்] [1969 மார்ச் 4

அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லும்பொழுது, அவ்விருவர் மட்டும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பதில் சொன்னதாகத் தோன்றுகிறது. அம்மாதிரி, சபையில் இருவருக்கு மட்டும் தெரிகிற முறையில் கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் முறைதானா ? இது முன் உதாரணமாக ஆகிவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இரண்டு பேர்களுக்கு மட்டும் தெரியும் மாதிரி பேசிக்கொள்ளவில்லை. இரண்டு பேர்களும் மைக் மூலம்தான் பேசினார்கள். அவர்கள் இரண்டு பேர்கள் மட்டும் புரிந்து கொள்ளும்படி பேசவில்லை. எல்லோரும் புரிந்துகொள்கிற முறையில் தான் பேசியிருக்கிறார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) பொதுவுடைமை தீவிரவாதிகளின் (நக்சல்பாரிகள்) திடீர்தாக்குதலைச் சமாளிக்க காவல் நிலையங்களை வலுப்படுத்தல்

THIRU N. S. V. CHITHAN : Sir, under Rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance namely, the steps taken by the Government to strengthen the police stations to meet the surprise attacks by the Naxalites in the State.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1968, நவம்பர் 22, 24-ம் தேதிகளில் கேரள மாநிலத்திலுள்ள தெற்கு வயநாட்டில் தலைச்சேரி காவல்நிலையத்திலும் புல்பள்ளி கம்பியில்லாத் தந்தி நிலையத்திலும் அம்மாநிலத்தைச் சேர்ந்த பொதுவுடைமைத் தீவிரவாதிகள் (நக்சல்பாரிகள்) தாக்குதல் நடத்தியதன் விளைவாக, நமது மாநிலத்திலுள்ள பொதுவுடைமைத் தீவிரவாதிகளின் செயல்களைக் கூர்ந்து கண்காணிக்குமாறு இம் மாநிலத்திலுள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் காவல் துறைத் தலைமை அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார். கேரள மாநிலத்தின் எல்லைப் புறமுள்ள எல்லாப் பகுதிகளிலும் படைக்கலன் தாங்கிய காவல் படையினர் அமர்த்தப்படுதல், எல்லைப்பகுதியை கூர்ந்து கண்காணித்தல் போன்ற சிறப்பான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் வன்செயல்கள் எதிலும் ஈடுபட வாய்ப்பு அளிக்காத வண்ணம் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் அடிக்கடி மூடப்படுதலும் நிலைமைகளைச் சமாளிக்க முதல்வர்களுக்கு சுதந்திரம் அளித்தலும்

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the frequent closure of the colleges and high schools in the State of Tamil Nadu for the past few months and the need to give freedom for the Principals to handle the situation according to the merits of each case.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்களிடையே எழும் ஒழுங்குப் பிரச்னைகளைத் தீர்க்க கல்லூரி முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. அதில் அரசு தலையிடாது.

சில வேளை மொழிக்கொள்கை போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் தரும் கொள்கைப் பிரச்சினைகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது அது கல்விக் கூடங்களுக்கு வெளியே வந்துவிடுகிறது. அப்போது நிதானத்துடனும், சிந்தனையுடனும் ஒழுங்குப் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

எத்தகைய வன்முறைச் செயல்களும் நேரிடாது தடுக்க முயற்சிகள் எடுக்க நேரிடுகின்றது. கல்லூரிகள், பள்ளிகள் மூடுவது மாணவர்களின் படிப்பையும் எதிர் காலத்தையும் மிகவும் பாதிக்கும். தவிர்க்க முடியாத

1969 மார்ச் 4] [திரு. செ. மாதவன்]

சில சந்தர்ப்பங்களில் வேறு வகை வன்முறைச் செயல்கள் மிகுதியாக விளையாது தடுக்க, மாணவர்களது உணர்ச்சியை சமூக விரோத சக்திகள் பயன்படுத்த இடம் தராத சூழ்நிலையை உருவாக்க, சில நேரங்களில் விடுமுறை தரும்படி நேரிடுகின்றது. இவ்வகையான சந்தர்ப்பங்கள் நேரிடுவதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

தமிழக மாணவர்கள் தமிழ்ப் பண்பாட்டில் சிறந்தவர்கள், சீரிய சிந்தனைத் திறன் படைத்தவர்கள். ஆகவே, சந்தர்ப்பவாதிகள், சமூக விரோத சக்திகள் ஆகியோரது முயற்சிகளுக்கு இடம் தராது தங்களுடைய கல்வி எதிர்கால நலன், தமிழ் நாட்டின் எதிர்கால நலன் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அரசியல், சமுதாய, மொழிப் பிரச்சினைகளை அரசிடமே, நாட்டின் தலைவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டு கல்வியில் தங்கள் கவனத்தை செலுத்த முயல்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களது நல்வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும். அரசியல் கட்சிகள், கட்சி நலனை மறந்து மாணவர்களது எதிர்கால நல்வாழ்வையும், நாட்டின நலனையும் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும். மாணவர்களுடைய உணர்த்து உணர்ச்சிகளைப் புரிந்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

DR. H. V. HANDE: While welcoming the reassuring statement which the Chief Minister made, I want elucidation on one point. A few months ago the Director of Public Instruction sent instructions to the Principals of many colleges asking them to close the colleges for a few days without consulting the Principals concerned. Though the Principals were not interested in closing the colleges, such an order was passed. Hereafter at least will the Minister instruct the officers not to blindly issue a blanket order but find out from each college whether the situation warrants closure from the point of view of law and order, so that the onus will be on the Principals of the colleges.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது எந்த ஆணை என்று தெரியவில்லை. பொதுவாக ஆலோசனைகள் கூறப்படுகின்றன, கல்லூரி முதல்வர்களுக்கு. அவர்கள் சூழ்நிலைக்கு தக்கவாறு செயல்படுகிறார்கள். வன்முறைகள் தவிர்க்கப் படவேண்டும் என்பதுதான் கருத்து. நாங்கள் ஆலோசனைகள் தான் கூறுகிறோம்.

(4) 1969-70-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை பற்றி என் கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் மறைந்த முதலமைச்சரால் இவ்வரசின் மீது சாற்றப்பட்ட கொள்கைகளை இயன்ற அளவு நிறைவேற்ற முயல்வோம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்களின் கொள்கை வழி நடப்போம் என்றும் கூறியிருக்கிறார்கள். மக்களும் இந்த மாமன்றமும் அறிந்தவரையில், காலஞ்சென்ற முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சர் என்ற முறையில் மிகவும் உறுதியாக ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். அது

தனது அமைச்சரவையை விரிவுபடுத்தாமலும், அதிலும் முக்கியமாக பணக்காரர்களை, ஆலை அரசர்களை, தொழில் அதிபர்களை தன் அமைச்சரவையில் சேர்க்காமலும், சேர்க்குமாறு பலமுனைகளிலிருந்தும் வந்த நிர்ப்பந்தங்களையெல்லாம் உறுதியோடு சமாளித்து, உயிர் உடலில் இருக்கும் வரைக்கும் அந்தக் கொள்கைக்காகப் போராடினார்கள். ஆகவே, காலஞ்சென்ற முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களின் கொள்கைகளில் எந்தக் கொள்கைகளை நிறைவேற்ற அல்லது அதிதீவிரமாக்க பிரபல தொழில் அதிபர், பணக்காரர், ஸ்ரீவைகுண்டம் சட்ட மன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. ஆதித்தன் அவர்களுக்கு கூட்டுறவு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது என்பதை நாடும், இந்த மன்றமும், அறிய ஆவலோடு இருக்கிறது. அல்லது மாலையில் மனோகரிகளின் கூந்தலில் கொஞ்சிக் குலவிய மலர் இரவிலே கசங்கிவிட்டால் காலையில் வீசியெறியப்படுகிறது குப்பையில். மாலையில் மதுரமாக இருந்த பால் இரவிலே திரிந்துவிட்டால் காலையில் சாக்கடையைச் சேருகின்றது. அதுபோல, காலஞ்சென்ற முதலமைச்சரின் கொள்கைகள் தூக்கி எறியப்பட்டனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போது, என்னைக் குறிப்பிட்டு ஆலை முதலாளி என்றார்கள் எந்த ஆலைக்கு முதலாளி என்பதைத் தெரிவிப்பாரா?

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை முதலாளி என்று சொல்லவில்லை. பிரபல பணக்காரர் என்றுதான் சொன்னேன். பிரபல பணக்காரர் ஆகிய இவர்களை அமைச்சரவையில் சேர்த்திருக்கிறார்களே, அது எந்தக் கொள்கையில் என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : மீண்டும், மீண்டும் இந்த உறுப்பினர் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதற்கு நான் பதில் சொல்லக் கடமைபட்டிருக்கிறேன். தன்னிலை விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலை அதிபர் என்று சொல்லவில்லை என்கிறார், பேரவைக் குறிப்பில் அப்படி இருந்தால், அதை அவர் நிச்சயமாக வாபஸ் பெற வேண்டும். இல்லை என்றால், எந்த ஆலைக்கு அதிபர் என்று தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆலை அதிபர் என்று சொல்லவில்லை என்கிறார். பணக்காரர் என்றுதான் சொன்னேன் என்கிறார்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரவையைக் கேட்பது என்னவென்றால், காலஞ்சென்ற முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரையின் கொள்கைகளை நிறைவேற்றுவோம் என்று சொல்லும்போது, இவ்வளவு பணக்காரருக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்திருக்கிறார்களே என்று மக்கள் மன்றத்தில் கேட்கிறார்கள். இவர்கள் எந்த அளவுக்கு அவர்களுடைய கொள்கைகளை நிறைவேற்றப் போகிறார்கள் என்றும் சந்தேகம் கொள்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பாதிச்சம்பளம், அதாவது ரூ. 500 தான் சம்பளமாக வாங்குகிறார்கள். ஆனால், அமைச்சர்களின் வகையில் 1966–67-ல் காங்கிரஸ் ஆட்சியில் செலவானது ரூ. 6,44,000. 1967–68-ல் இன்றைக்குதிராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த வகையில் செலவானது ரூ. 10,08,000. அதே வகையில் 1968–69-ல் செலவு ரூ. 11,99,000. தி.மு.க. ஆட்சியில் பிரயாணப் படியும் மற்ற படியும் என்ற வகையில் 1967–68-ல் செலவானது ரூ. 2,29,726. 1968–69-ல் தி.மு.க. ஆட்சியில் அந்த படிச் செலவு ரூ. 3,23,000. மேலும், மருத்துவச் துறையில், நோயாளிகளுக்கு உணவு என்ற வகையில் 1967–68-ல் செலவு ரூ. 88,12,783. ஆனால் 1969–70-ல் தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கீடு செலவு ரூ. 78 லட்சம் தான். நோயாளிகளைப் பட்டினி போட்டுவிடுவார்களோ என்னவோ? தொத்து நோய்களுக்கு என்று 1967-68-ல் ரூ. 78 லட்சமும், 1969–70-ல் ஏராளமாகத் தொத்து

நோய்கள் பரவியிருக்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கும் இந்தச் சமயத்தில் ஒதுக்கியிருப்பது ரூ. 9 லட்சம் தான். நோயாளிகளுக்கு மருந்து, மருத்துவ மனை, லினன் போன்ற தேவைகளுக்கு 1967–68-ல் ஒதுக்கப்பட்டது ரூ. 1,26,30,000. ஆனால் அதே வகைக்கு 1969–70-ல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 1,14,00,000. அந்த வகையில் குறைவு ரூ. 12 லட்சம். பிரைமரி ஹெல்த் செண்டருக்கு 1967–68-க்கும், 1969–70-க்கும் வித்தியாசம் இருந்து, மருந்துக்கு மட்டுமே ரூ. 82,000 குறைவாக இருக்கிறது.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துக் கொண்டால், காங்கிரஸ் ஆட்சியில் 1966–67-ல் ஒதுக்கப்பட்டது ரூ. 79,48,000. இன்றைக்கு 1969–70-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கியிருப்பது ரூ. 73 லட்சம் தான். இந்த வகையில் ரூ. 6 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத்தில், பாதுகாத்தலும், பழுது பார்த்தலும் என்ற வகையில் காங்கிரஸ் ஆட்சியில் 1966–67-ல் ஒதுக்கியது ரூ. 25,42,000, ஆனாலும் இப்பொழுது 1969–70-ல் ஒதுக்கியது ரூ. 19,50,000. இந்த வகையில் குறைவு. சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு மருத்துவம், சுகாதாரம் என்ற வகைக்கு 1967–68-ல் ஒதுக்கியது ரூ. 4·76 லட்சம். ஆனால் 1969–70-ல் ரூ. 4,40,000 தான். அதிலும் ரூ. 36,000 குறைவு.

ஊர்வலங்களை ஒழுங்குபடுத்தவும், கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும் குதிரைப் படை மிகவும் முக்கியமான தேவை. அதற்கு 1967–68-ல் ஒதுக்கியது ரூ. 1,23,037. ஆனால் 1969–70-ல் ஒதுக்கியிருப்பது ரூ. 1,10,000. அந்த வகையில் ரூ. 13,037 குறைவு. குதிரைகளைப் பட்டினி போட்டுவிடுவார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு வேளை அரசு தமிழர் படையை நம்பி இருப்பதால் குதிரைப் படையைப் பட்டினி போட்டார்களோ என்னவோ தெரியவில்லை.

பி.யு.சி. வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் ஃபீஸ் சலுகை கொடுக்கப்பட்டிருக்கின்றதை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். கடந்த ஆண்டு பி.யு.சி. வகுப்பில் கல்விச் சலுகை பெற்ற மாணவர்களின் கதி என்ன? தொடர்ந்து பட்டப் படிப்பு அவர்கள் படிக்க வசதி செய்யப்படவில்லை. பி.யு.சி. படிப்புக்கே அவர்களுக்கு அரசு உதவி தேவை என்றால், மேல்படிப்புக்கு வேண்டாமா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு பெரிய பஞ்சத்திற்கான அபாய அறிவிப்பாக இருப்பதைக் கண்டு மக்கள் கலக்கமுற்று இருக்கின்றனர். வெளிச் சந்தையில் அரிசி விலை இன்று திடீர் என்று ஏறியிருக்கிறது. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட என்னுடைய தொகுதியாகிய சாத்தாங்குளம் தொகுதியில் நிதி அமைச்சர் வந்து பார்த்துவிட்டுப் போனார் என்று கேள்விப்பட்டேன். அவர் அங்கேயும் துயர் தணிப்புக்கான சிறிய மராமத்து வேலைகளையாவது செய்ய உத்தரவு இடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலும், பம்பு செட்டுக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில், தண்டவன் காடு, மாகுடு தண்டுப்பத்து, காலன் குடியிருப்பு, செட்டியாபத்து, கீழ நடுவக்குறிச்சி, மேல் நடுவக்குறிச்சி, தட்டார் மடம், கருங்கடல் அரசூர், சவேரியார்புரம், கொம்பங்குளம் போன்ற பகுதிகளில் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கடந்த இரண்டு ஆண்டு காலமாக கொடுக்கப்படாமலிருக்கிறது. 10 சதவிகிதம் லாபம் என்ற முறையைக் கடைப்பிடித்து திட்டங்கள் தள்ளிப் போடப்படுகின்றன. பஞ்சப் பகுதியில் இந்த 10 சதவிகித லாபத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கக் கூடிய வகையில் செயல்படவேண்டும்.

மணிமுத்தாறு தண்ணீரில் வீணாகின்ற தண்ணீரைக் கொண்டு உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே அதற்காக தண்டத் தீர்வை விதித்து உணவு உற்பத்தியை பாதிக்கும் அளவில் செய்யப்படுகிறது.

மு.ப. 10-30 மேலும் மணிமுத்தாறு தண்ணீரால் எந்தவிதமான பயனையும் அடையாத நிலங்களுக்கு "அபிவிருத்தி வரி" என்கிற பெயரால் தண்டத் தீர்வை வசூலிக்கிறார்கள். பள்ளம்பாறை கிராமம், பண்ணைப்பத்து குளம் ஆயக்கட்டு பகுதியிலுள்ள நிலங்கள் இந்தத் தண்ணீரை உபயோகப் படுத்துவதில்லை. இருந்தாலும் அபிவிருத்தி வரியை வசூலிக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அபிவிருத்தி வரியை எத்தனை ஆண்டுகளாக வசூலித்து வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

திரு. டி. மார்டின் : நடப்பு ஆண்டில் 15-2-1969-லிருந்து வசூலித்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஏழை விவசாயிகளின் பேரில் இவ்வளவு அக்கறை காட்டக்கூடிய விவசாய அமைச்சர் அவர்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்து, வரி விதிக்கக்கூடாது என்று உத்தரவு போடுவார் என்று நான் எதிர்பார்க்கலாமா ?

அடுத்தபடியாக, "சம்பளக் கமிஷன்" அமைப்பதுபற்றி கார்ப்பொரேஷன் தேர்தலுக்கு முன்பே பேசப்பட்டது. அது இப்போது என்னவாயிற்று என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது வருமோ, வராதோ என்ற நிலையில் இருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் சம்பளக் கமிஷன் வரும் வரும் என்று ஆசையோடு காத்திருந்து, பெருத்த ஏமாற்றத்திற் குள்ளாகியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, குதிரைப் பந்தயம் என்ன ஆயிற்று என்று கேட்கின்ற நேரத்திலே, "குதிரைகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன, குதிரை பந்தயமும் நடந்துகொண்டிருக்கின்றது" என்ற பதில்தான் கிடைக்கும் நிலை இருந்து வருகிறது. குதிரைப் பந்தயம், லாட்டரிச் சீட்டு போன்றவைகள் எல்லாம் மக்களின் மத்தியில் உழைப்பு மனப்பான்மையைக் கெடுத்து வருகிறது என்று பல பெரியோர்கள் சொல்லிவருகிறார்கள். முதலில் லாட்டரிச் சீட்டிற்கு அமோக வரவேற்பு இருந்தது. தற்போது மக்களுக்கு லாட்டரிச்சீட்டில் வெறுப்பு ஏற்பட்டு வருகிறது. ஏதாவது பாத்திரச் சீட்டில் சேர்ந்தாலாவது, சீட்டு முடிந்ததும் பாத்திரம் எடுத்துக்கொள்ளலாம். இந்த லாட்டரிச் சீட்டில் எதுவுமே கிடைக்கவில்லை என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து வெளி வந்த அநேக சீரீஸ்கள் விற்காமல் இருக்கின்றன. ஆகவே அரசு இதைப் பரிசீலனை செய்து, லாட்டரிச்சீட்டு விற்பனையை நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மக்கள் அதை விரும்பாமல், மக்களுடைய ஆதரவு அதற்கு இல்லாமல் போய்விட்டபிறகு, அதை நிறுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லையென்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா ?

திரு. டி. மார்டின் : மக்களுடைய கருத்தை அரசினர் போற்ற மாட்டார்கள். மக்களேஅந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துமுன்னமே அரசே நடவடிக்கை எடுத்தால் நல்லதல்லவா ? பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்கு, அரசிதழ் பதிவு பெறுதவர்களுக்கு மெடிகல் அலவன்ஸ் என்று ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று அரசுப் பணியாளர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து மெடிகல் அலவன்ஸ் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உயர்நீதி மன்றத்தில் பணிபுரிபவர்கள் தங்களுக்கு "செக்ரடேரியட் ஸ்கேல் ஆஃப் பே" தரப்பட வேண்டுமென்று நீண்ட நாளாக கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசினர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இது நீண்ட நாட்களாக இருந்துவரும் கோரிக்கை யாகும்.

மேலும், என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் ஸ்ரீ வைகுண்டம் தொகுதியில் சாயர்புரத்தில் எங்கள் ஒப்பற்ற தலைவரான திரு. காமராஜ

அவர்களின் பெயரால் ஒரு மன்றமே இருக்கிறது. அந்த மன்றத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். வன்முறைக்கு வித்தாக இருக்கக் கூடிய எந்தச் செயலையும் இந்த அரசு மனப்பூர்வமாக வெறுக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுமல் தடுத்து, குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு திருச்செந்தூரிலும் இது போன்ற ஒரு சம்பவம் நடந்தது. அரசினர் இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மற்றவர்களைத் தாக்குவதும், மன்றங்களைத் தாக்குவதும் நடைபெற்றுல் இந்த நாட்டில் ஜனநாயகம் நடைபெற முடியாது. "ஜனநாயகத்தைப் பாது காப்போம்" என்று சொல்லி ஆட்சிக்கு வந்திருக்கக்கூடியவர்கள் ஜன நாயகத்திற்கு ஊறு விளைவிக்கும் எந்தக் காரியங்களும் நடைபெறுமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, உடனே எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நல்லனவற்றையெல்லாம் நாம் பாராட்ட, நல்ல காரியங்களைச் செய்யும்போது நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தந்துள்ள வரவுசெலவுத் திட்டத்தையும், அவர் ஆற்றிய உரையையும் துருவித் துருவிப் பார்த்தேன், திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன். திராவிடப் பெருங்குடி மக்களுக்கு இந்திய அரசு இழைத்துவரும் துரோகப் படலத்தின் தொடர் கதையைத் தான் நான் கண்டேன். உடனே அமெரிக்க ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கென்னடி பதவி ஏற்று, முதன்முதலில் ஆற்றிய உரைதான் என் நினைவிற்கு வந்தது.

" The prospect would not be easy. All this will not be finished in the first hundred days. Nor will it be finished in the first thousand days, nor in the life of this administration, nor even perhaps in our lifetime on this planet. But let us begin."

"ஒளிமயமான எதிர்காலம் எளிதல்ல. இவைகளெல்லாம் 100 நாட்களில் முடியாமல் போகலாம், 1,000 நாட்களில் முடியாமல் போகலாம். நமது நிர்வாக காலத்திலேயே முடியாமல் போகலாம். நமது வாழ்நாளிலேயே முடியாமல் போகலாம். ஆனாலும், இன்றே ஆரம்பியுங்கள். நல்லனவற்றை உடனே ஆரம்பிக்க வேண்டும். எப்பொழுது முடியும் என்று இருப்பதைவிட இப்பொழுதே துவங்கு" என்பதுதான் கருத்தாகும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் நிதி ஒதுக்கீடு கேட்டு, நமது அமைச்சர் அவர்கள் காரணங்களைக் காட்டினார்கள், விளக்கங்களைக் கொடுத்தார்கள். அதற்கும் மேலாக மிகப் பணிவுடன், "எங்களின் இந்த மிக நியாயமான, எளிய வேண்டுகோள் ஏற்கப்படுமென்ற நம்பிக்கையில் வரவு செலவுத் திட்டம் மதிப்பிடப்பட்டுள்ளது" என்று கூறியிருக்கிறார்கள். நாம் நம்புகிறோம் ; ஆனால் நம்பிக்கைக்குரியவர்களையா ? முதல் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டது, நாமும் திட்டமிட்டோம், கேட்டோம், நம்பினோம். திட்டமிடப்பட்டது 80 கோடி ரூபாய், ஆனால் நமக்குக் கிடைத்தது 30 கோடி ரூபாய்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டது. நாமும் திட்டம் போட்டோம். கேட்டோம், நம்பினோம். திட்டமிடப்பட்டது 188 கோடி ரூபாய், நமக்குக் கிடைத்தது 102 கோடி ரூபாய்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டது. நாமும் திட்டமிட்டோம். கேட்டோம், நம்பினோம். திட்டமிடப்பட்டது 340 கோடி [ரூபாய், நமக்குக் கிடைத்தது 186 கோடி ரூபாய்தான்.

தப் பிரச்சினையை மட்டும் எடுத்துக்கொண்டாலும் நான் நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய உண்மையான உணர்வை அறிந்துகொள்ளாமல் நாம் எவ்வளவு தூரம் அவர்களை நம்பினாலும் அவர்கள் நம்மை நம்பத் தயாராய் இல்லை. இதைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பேசுகிறபோது குறிப்பிட்டதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "ஒற்றுமை ஒருமைப்பாடு என்றெல்லாம் கூறிக்கொண்டே நாட்டின் ஒரு பகுதியினரை மற்றொரு பகுதியினர் அடிமைகளாக, குத்தகைக்காரர்களாக ஆக்கிடும் கொடுமைக்கு சிறிதும் இடங்கொடோம். துப்புரவு கெட்ட கேளிக்கை குதியாட்டங்களுக்கு துணை நின்றிடோம். அடிமைப்படுத்திடும் சூதாட்டத்தில் பங்குகொண்டிடவே மாட்டோம் என்பதனைத் திட்டவட்டமாகக் கூறிவிடுகிறேன்" என்பதாக எவ்வளவு தூரம் மனம் புண்பட்டு அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். இப்பொழுது புரிகிறதா, ஏன் திராவிட நாடு கேட்கிறார்கள் என்பது? திராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்வே பிரிவினையில்தான் அடங்கியுள்ளது என்றும் உணர்வு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. புண்ணுக்குப் புனுகு தடவிப் பயன் இல்லை.

1957-58-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைக்குப் பதிலளித்துப் பேசுகையில் அன்றைய நிதி அமைச்சர் இன்றைய காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியம் பேசுகையில் திராவிடநாடு பிரிவினையைப் பத்தாண்டுகளுக்கு ஒத்திப்போடுங்கள் என்றார்.

1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் தேதி பேசுகையில் "முன்னேற்றத் திட்டங்களில் மத்திய அரசாங்கத்தார் நமக்குப் பாகுபாடு செய்துவிட்டார்கள். அவர்கள் நம்மை வேறுவிதமாகக் கருதுகிறார்கள். நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்க வேண்டிய முன்னேற்றம் இதுவரைதான் ஏற்படவில்லை என்று உணர்வோமானால், அப்போது நாம் எல்லோரும் சேர்ந்து நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கத்தைக் கிளப்பலாம்" என்று சொன்னார். அவர் குறிப்பிட்ட பத்து ஆண்டுகளும் முடிந்துவிட்டன. நாடு முன்னேறவில்லை என்று காமராசர் அவர்களது கட்சியின் பெருந்தலைவர் இன்றையதினம் ஊர் ஊராகச் சொல்லிக்கொண்டு வருகிறார். இன்றும் சொல்லப்போனால் உண்ண உணவு இல்லை, இருக்க இடமில்லை, உடுக்கத் துணி இல்லை, எந்தப் பிரச்சினைகளுமே தீரவில்லை என்பதாகச் சொல்லி வருகிற காமராசருடன் சேர்ந்து கொண்டு திரு. சுப்பிரமணியம் நாட்டுப் பிரிவினை கேட்கத் தயார்தானா? நாங்கள் பிரிவினைக் குரலை எழுப்ப வேண்டுமென்று காத்திருக்கத் தேவையில்லை, அவர்களே கிளப்புவதாகச் சொன்னார்களே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் எப்போது கிளப்பப் போகிறார்கள்? கிளப்பத் தயார்தானா என்று கேட்டு ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

1924-இல் கோகநாடாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் வங்காளிகள் புறக்கணிக்கப்பட்டனர் என்றவுடன் தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் கூறினார்.

"Is Bengal untouchable ? Will you deny the right of a citizen on a vital question ? If you do that, Bengal can take care of itself."

இதே உணர்வுடன்தான் நான் சொல்லுகிறேன். திரும்பத் திரும்ப இந்தக் கொடுமையை மத்திய அரசு நமக்கு இழைத்து வருவார்களானால், நம்மை இரண்டாந்தர குடிமகனுக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் இயங்கும் மத்திய அரசு முயற்சித்தால் அதே உணர்வுடன் நான் சொல்கிறேன்:

"Are Dravidians untouchables ? If you treat them like that, they will take care of themselves."

என்ற நிலை வெகு விரைவில் ஏற்பட்டுவிடும். நாம் மத்திய அரசினிடம் மன்றாடத் தேவையில்லை. போரிடத் தேவையில்லை. நியாயமாக கொடுக்க

வேண்டிய பணத்தொகை மட்டும் அல்ல. அதிகமான அதிகாரங்களைப் பெற்றால்தான் இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வறுமையைப் போக்க, வளத்தை உண்டாக்க நம்மால் உறுதியாகச் செயல்பட முடியும். இதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டு நல்ல பலனைப் பெற வேண்டுமென்று கோரி என்னுடைய வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்—சற்றேக்குறைய 20 கோடி பற்றாக்குறை வரும் என்று எதிர்பார்க்கலாம். நிறைவு செய்ய முடியாத நிதிக்கமிஷன் சிபாரிசுகளின்படி மத்திய அரசிடமிருந்து உதவிகளை நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்பார்க்கும் அளவு நிதி கிடைக்குமா, கிடைக்காதா என்பது முன்கூட்டியே சொல்லக் கூடிய விஷயம் அல்ல. ஓரளவு கிடைக்கலாம். மேலும் பற்றாக்குறை ஏற்படலாம். அதைச் சரிக்கட்டுவதற்கு சென்ற ஆண்டுகளைப் போன்றே இந்த ஆண்டும் விற்பனை வரியையோ, விவசாய வருமான வரியையோ உயரி காணும்படி மாற்றி அமைக்க முயற்சிக்கக் கூடாது. வரி போடத்தான் வேண்டுமென்றால் அடித்தளத்தில் இருப்பவர்களை விட்டுவிட வேண்டும். தாங்கக்கூடியவர்களுக்கு வேண்டுமானால் போடலாம். விற்பனை வரி, தொழில்வரி, விவசாய வருமான வரி என்று இப்படிப்பட்ட வரிகளை மேலும் உயர்த்துவது நம் மக்களைக் கசக்கிப் பிழிவதாக இருக்கும். இரண்டு தினங்களுக்கு முன் சுதேசமித்திரன் பத்திரிகையில் மத்திய பட்ஜெட்டைப் பற்றிய கார்ட்டூன் இருந்தது. "பிழிசல், சாறை" என்பது ஆயர்வேத மருத்துவ சிகிச்சையோடு நிற்கட்டும். விவசாய வரி, பம்பு செட்டு வரி, உரத்தின் மீது வரி என்பது எல்லாம் அடித்தளத்தில் இருக்கிற விவசாய மக்களைப் பெரிதும் பாதிக்கும். மத்திய சர்க்காரோடு போராடி அந்த வரிகளை நீக்குவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்காக தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறார்கள். சாதாரண விவசாயிகளுக்கு, அடித்தளத்தில் உள்ள சிறு நிலக்கிழார்களுக்கு—பத்து ஆண்டுகளுக்குப் புது வரிகள் இல்லாத நிலைமை வேண்டும். விவசாயத்திலே நாம் ஒரு புரட்சியை எதிர்பார்க்கிறோம். அந்தப் புரட்சியை "கிரீன் ரெவல்யூஷன்", "பச்சை புரட்சி" என்று சித்தரிக்கிறோம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று பயிர்கள் விளைந்து உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு ஒரு புரட்சி வேண்டுமென்று சொல்கிறோம். அதற்காக வீரிய விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் எத்தனையோ நாம் டன் கணக்கிலே இறக்குமதி செய்கிறோம்: அதற்காக சலுகைகள் கொடுக்கிறோம். இப்படியெல்லாம் விவசாய தொழில் வளர்ந்து வருவதைப் பார்க்கிறபோது அது புரட்சிகரமாக முன்னேறுகிறது. ஆனால், இரத்த புரட்சி; "சிவப்புப் புரட்சி" அல்ல; பச்சைப் புரட்சி" என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த நாடு இன்று அதற்குத் தயாராக இல்லை. காரணம் மழையில்லை, பஞ்சம், பச்சைப்பசேலென்று இருந்த நிலங்கள் எல்லாம் புழுதியடைந்து வறண்டு தென்படுகின்றன. பஞ்சம் நம்முடைய நாட்டை எட்டிப்பார்க்கிறது" என்ற அபாயச் சங்கை நம்முடைய நிதியமைச்சர் ஊதியிருக்கிறார். "மகான் வந்தார், மழை வந்தது" என்ற 1952-ம் வருஷ நிலை இவ்வாண்டும் திரும்ப வரட்டும். பிரார்த்தனை செய்வோம். மழையில்லாவிட்டாலும் அந்த நிலைமையை நாம் சமாளிக்க வேண்டும். உதாரணமாக கீழ்பவானியை எடுத்துக் கொள்ளுங்கள் ஆயக்கட்டு நிலங்களுக்கு இந்த நாலைந்து ஆண்டுகளாகவே இரண்டாம் முறை தண்ணீர் விடப்படுவதில்லை. ஒரு முறை தண்ணீர் கொடுத்துவிட்டால் அடுத்த முறை இல்லாத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை எப்படியாவது மாற்றியமைத்து அந்த நிலங்களுக்கு, வீரிய விதைகள் கொடுத்து, குழாய்க்கிணறுகள் வெட்டுவதற்கு அதிகமாக மானியம் கொடுத்து, பூமி ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் தரிசு கிடப்பது என்ற நிலைமை இல்லாமல் செய்யவேண்டும். ஏதாவது ஒரு மாவட்டத்தில் மட்டும் விவசாயத்தில் கவனம் செலுத்தாமல் மாநிலம் பூராவும் பரவலாகக் கண்ணோட்டம் செல்ல வேண்டும்.

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 மார்ச் 4

இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டோம். கொடுப்பதாகச் சொல்லி, நமக்குக் கொடுக்காதது 3 கோடி ரூபாய்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரானது. நாமும் திட்டம் போட்டோம். கேட்டோம். நம்பினோம். திட்டமிடப்பட்டது 624 கோடி ரூபாய், நமக்குக் கிடைத்தது 201 கோடி ரூபாய்.

இந்திய அரசிடம் நிதிப் பற்ருக்குறை காரணமா? பணம் இல்லையா? அல்லது மனம் இல்லையா? பணம் உண்டு; மனம்தான் இல்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலை நமக்கு அளித்துள்ளார்கள். 31-பக்கம் அளித்துள்ள புள்ளிவிவரங்களைப் பாருங்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 332 கோடி ரூபாய். இதில் தமிழக அரசுக்குக் கிடைத்தது 36 கோடி ரூபாய். இது மொத்தத்தில் 10·8 சதவீதம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 1,058 கோடி ரூபாய். இதில் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது 95 கோடி ரூபாய். இது மொத்தத்தில் 9 சதவீதம்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 2,515·3 கோடி ரூபாய். இதில் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது 186·8 கோடி ரூபாய். இது மொத்தத்தில் 7·4 சதவீதம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1966-ல் ஆரம்பிக்கப் போகிருேம் என்று சொல்லி, அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 3,571 கோடி ரூபாய். இதில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 250 கோடி ரூபாய். இது மொத்தத்தில் 7 சதவீதம்.

ஆனல் இன்றைக்கு நான்காவது திட்டம் போடப்படும் என்று கூறி, அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை 3,500 கோடி ரூபாய். இதில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 201 கோடி ரூபாய். ஆக, இது மொத்தத்தில் 5·8 சதவீதம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ்நாட்டுக்கு 10·8 சதவீத தொகை கிடைத்திருக்கிறது. நான்காவது திட்டத்திலே இவர்களுடைய வருவாய் பெருகியிருக்கின்ற நேரத்திலே, 1,100 கோடி ரூபாய் வரியாக வசூலித்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது 5·8 சதவீத அளவுக்குத்தான் கொடுத்திருக்கிருர்கள். இது "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" கதையாகி விட்டது என்று பாமர மக்கள் சொல்வார்களே, அந்த நிலையில் இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டது. நிறைவேற்றினோம்.
முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பிறகும் அன்றைய தினம்
4½ லட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு செய்து தரமுடியவில்லை. இரண்டா
வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்தவுடன் வேலை கிடைக்காதவர்களின்
எண்ணிக்கை 7¾ லட்சம் பேர். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடி
வடைந்ததும் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பெருகியது. இதன்
காரணமாக வேலை கிடைக்காதவர்களின் எண்ணிக்கை 11 லட்சமாக உயர்ந்
தது. காங்கிரஸ் கட்சி வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி விரிவாகப்
பேசுகிறதே, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்ட பிறகும் வேலை
கிடைக்காதவர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது. திரு.
காமராஜர் அவர்களே இதைப்பற்றிக் கூறியிருக்கிருர். மூன்று ஐந்தாண்
டுத் திட்டங்களுக்குப் பின்னரும் 11 லட்சம் பேர் வேலையில்லாமல் இருக்
கிருர்கள். அதிக அளவில் உதவி செய்ய வேண்டுமென்று நாம் மத்திய
அரசைக் கேட்கிருேம். நாம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்ப்பது அதிக
மான அளவில். இன்னும் ஐந்தாண்டுகளிலே கிட்டத்தட்ட 25 லட்சம்
படித்த மக்களுக்கு வேலை தரவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். ஆனல்
திட்டம் போட்டுக்கொண்டேயிருக்கிருேம். வேலையில்லாத் திண்டாட்டம்தான்
ஒழிக்கப்படவில்லை. திரு. காமராஜ் அவர்கள் நாகர்கோயிலில் நடந்த கூட்
டத்தில் பேசியதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1969 மார்ச் 4] [திரு. எஸ். இராமச்சந்திரன்]

"வேலையில்லாதத் திண்டாட்டம் பெருகிவிட்டது. படித்தவர்கள் வேலையில்லாமல் அலைகிருர்கள். படித்த இளைஞர்கள் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிருர்கள். இந்த நிலை நீடிக்குமானல் புரட்சிதான் ஏற்படும்" என்று நாகர்கோயில் மக்களுக்கு நன்றிதெரிவிக்கும் கூட்டத்தில் திரு. காமராஜ் அவர்களே பேசியிருக்கிருர்கள். இந்தப் பிரச்சினைக்கு யார காரணம்? வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு யார் காரணம்? வறுமையை, வாட்டத்தைப் போக்காததற்கு யார் காரணம்? புரட்சிக்கு வித்தூன்றுவதற்கு யார் காரணம்? இதை மக்களிடம் தெளிவாகத் தெரிவிக்க உங்களால் முடியவில்லை. காரணம் காமராசருக்குத் தெரியாது என்பது அல்ல. வடவரின் ஏகாதிபத்ய வெறிபிடித்த போக்குதான் காரணம். கண்டிக்கத் தைரியம் இல்லை, அவர்களுடைய கங்காணிகள்தான் இங்குள்ள காங்கிரஸ் கட்சி, என்பதால் நீலிக் கண்ணீர் வடித்தால் மக்கள் விட்டுவிடுவார்களா? இதுபற்றி எல்லாம் மக்களுக்கு புள்ளிவிவரங்களை எடுத்துச்சொல்ல தமிழக அரசு கடமைப்பட்டிருக்கிறது. மிக அதிகமான அளவில் வரிப்போட்டு வசூலிக்கும் பணத்தைக்கொண்டு வடவர் அரசு செய்யும் கேளிக்கைச் செலவுகள் ஒன்ரு, இரண்டா? இங்கே ஒரு கல்வித்துறை-பள்ளிக்கூடங்கள் உண்டு. ஆகவே கல்வித்துறை. அங்கேயும் ஒரு கல்வித்துறை-அங்கே கல்வித்துறை உண்டு. பள்ளிக்கூடங்கள் தேவை. இங்கே வேளாண்மைத்துறை-இங்கே நிலமுண்டு. ஆகவே வேளாண்மைத் துறை. அங்கேயும் வேளாண்மைத்துறை அங்கே துறை உண்டு, துறைத்தனம் செய்ய. இங்கேயும் கால்நடைப் பண்ணைகள்-அவர்களுக்கும் தனி கால்நடைப் பண்ணைகள். இங்கேயும் கூட்டுறவு அமைச்சர் அங்கேயும் கூட்டுறவு அமைச்சர் நாம் சுற்றுலா மாளிகை அமைப்போம்-பொதுப்பணித்துறையின்கீழ் நம்முடைய சுற்றுலா மாளிகைக்குப் பக்கத்திலேயே அவர்களும் சுற்றுலாமாளிகை அமைப்பார்கள்-பொதுப்பணித்துறையின்கீழ். ஏன் இந்த இரட்டை ஆட்சி என்று "why this duplication?" என்று நாமல்ல ஆந்திர முதல் அமைச்சர் பிரும்மானந்த ரெட்டி அவர்கள்-காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரேதான் கண்டித்திருக்கிருர்கள். இப்படி மத்திய வடவர் அரசு தங்களுடைய மிக அதிகமான வருவாயை ஒழுங்காகச் செலவிடுவதுமில்லை. நாம் கேட்டால் தருவதும் இல்லை. இப்படிப்பட்ட இழிந்த ஊதாரித்தனம் வளர்ந்துகொண்டே போனல் Dog in the manger policy நம்முடைய நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கணக்கிட்டுப்பார்க்க வேண்டும்.

அதுமட்டும் அல்ல. நல்லதுதான் செய்யாமல் விடுகிருர்கள் என்ருல்; கெட்டதாவது செய்யாமல் விடுகிருர்களா என்ருல் அதுவும் இல்லை. அவர்கள் செய்து வருகிற கேடுகளுக்கு ஏராளமான சான்றுகளைக் கொடுக்கலாம். கடந்த இருபது ஆண்டுகளில் என்ன என்ன கேடுகளைச் செய்திருக்கிருர்கள் என்று நான் இப்போது சொல்லவில்லை. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த 2 வருட ஆண்டுகளில் மட்டும்-நாம் வெல்லத்திற்குத் தடை விதித்தோம். தடை உத்திரவை ரத்து செய்தது இந்திய அரசு வடவருக்காக. பருப்பு வகைகள் வேண்டுமென்று கேட்டோம். தடையை விதித்தது இந்திய அரசு, வடவருக்காக. கோதுமைக்குச் சலுகை, அரிசிக்கு இல்லை. திங்கட்கிழமை பட்டினியை ரத்து செய்தோம் நாம். அதைச் செய்ய உடக்கேது உரிமை என்றனர் அவர்கள். பத்து கோடி தாருங்கள் என்ருர் அண்ணு, உணவு உற்பத்தியைப் பெருக்க! ஒரு காசு கூட இல்லை என்றனர் நாம் எல்லாம் வெறுக்க. இந்தி மொழியைப் புகுத்திஞர்கள் வடவர் ஆதிக்கம் நிலைக்க. ஆங்கிலத்தை அகற்றுகிருர்கள் நம்மை எல்லாம் ஒழிக்க என்.சி.சி. யில் இந்தி ஆணைச் சொற்களைக் கொணர்டு வந்தார்கள் வடவர் ஆதிக்கம் நிலைக்க. அதை எதிர்த்த தமிழக அரசை, முயற்சிக்கிருர்கள் கலைக்க. அகில இந்திய சர்வீஸ் வேண்டாம் என்கிருேம். அடிமைப்படுத்த அது ஒன்றே வழி என அதிகப்படுத்துகிருர்கள். சட்டம் அமைதி காத்தல் நமது தனி உரிமை என்கிருேம் நாம் சட்டம் கொண்டு மத்திய போலீஸ் அமைக்கிருர்கள் அவர்கள். நமக்கென உண்டு ஒரு ரகசிய போலீஸ், அது போதாதா என்கிருேம் நாம். இல்லை, இல்லை-உங்களை நம்பமாட்டோம் என்பதுபோல அவர்களும் இரகசியப் போலீஸ் வைத்திருக்கிருர்கள். இந

[திரு கே. எம். ராமசாமி கவுண்டர்] [1969 மார்ச் 4

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக கைத்தொழில் புரட்சி வரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவர்னர் உரையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில்சொன்ன நேரத்திலே வெளி மாநிலங்களிலிருந்தும், நம்முடைய மாநிலத்திலிருந்தும் வருகிற தொழிலதிபர்கள் இங்கே தொழில் வளம் பெருகச் செய்வதற்கு, தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, இரு கை விரித்து வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். வெறும் வரவேற்பால் மட்டும் அந்த நிலைமை ஏற்படாது. அதற்காகச் சில சலுகைகள், சில ஏற்பாடுகள், சில திட்டங்களை வகுத்தே ஆகவேண்டும். அது மிக மிக முக்கியம். அதாவது மத்திய சர்க்கார் மானியம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், தமிழ்நாட்டில் தொழில் பெருகுவதற்கு வசதிகள் இருக்கின்றன, வாய்ப்புகள் இருக்கின்றன என்றால் தொழிலதிபர்கள் கைத்தொழில் நடத்துவதிலே ஆர்வம் கொண்டவர்கள், புதுப்புதுத் தொழில் ஆரம்பிப்பதற்கு இங்கே முன் வருவார்கள். ஒரு நாட்டிலே தொழில்கள் வளரவேண்டுமானால் சில முக்கியமான அடிப்படைகளை ஆரம்பக் காலத்திலேயே நாம் கடைப்பிடிக்க வேண்டும். 20 லட்சம் மக்கள் சென்னையிலே மாத்திரம் அடைவது அல்லாமல், நாட்டிலே பல இடங்களிலே பரவலாகத் தொழில்கள் ஆரம்பிக்கின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்படித் தொழில் நடத்த முன்வருகின்ற தொழிலதிபர்களுக்கு—தனியார் துறையினருக்கு—இலவசமாக இடம் கொடுக்கவேண்டும், தொழில் நடத்துவதற்காகத் தேவைப்படக்கூடிய நிலம் 50 ஏக்கர், 100 ஏக்கர் என்றாலும், இலவசமாக அதை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். முதல் பத்து ஆண்டுகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். விற்பனைவரி கூடாது. ஆரம்பக் கட்டத்திலே இருக்கிற தொழில் நிலையங்களிலிருந்து உற்பத்திப் பொருள்களை வெளி மார்க்கட்டுகளுக்குக் கொண்டுபோக வசதிசெய்து தரவேண்டும். மின்சாரச் சலுகைகள் தரவேண்டும். போக்குவரத்து வசதிக்காக ரஸ்தாக்கள், ரோடுகள் போடுவதற்குத் திட்டங்கள் போடவேண்டும்.

பஞ்ச காலத்திலே பஞ்ச நிவாரணத்திற்காக அந்த வேலைகளில் ஒரு வேலையாக ரோடுகள் போடுவது இருக்கலாம். ஆனால் அநேக மாவட்டங்களில் இப்பொழுது ஒரு கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்கு, அல்லது தாலூகாத் தலைநகருக்குப் போய்வர நல்ல ரோடு வசதி இல்லை. போக்குவரத்துத் தொல்லைகள், இடைஞ்சல்கள் இருக்கின்றன. வாகன வசதிகள் உள்ள இந்தக் காலத்திலே ரஸ்தாக்கள் போடுவதிலே நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இன்னும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தொழிலதிபர்களுக்குப் போதிய பணம் அவர்கள் கையிலிருந்து போட்டுச் செய்யக்கூடிய நிலைமை இல்லையென்றால் "கிரடிட் கியாரண்டி", அதாவது அவர்களுக்கு வழங்கும் கடனுக்கு உத்திரவாதம் கொடுக்கச் சர்க்கார் முன்வர வேண்டும். இத்தனையும் இருந்து, தொழில்களைப் பரவலாக ஏற்படுத்துகிற போக்கும் இருந்தால் தான் நாட்டுப்புறப் பஞ்சத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். எதைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் விவசாயப் புரட்சிக்கும், கைத்தொழில் புரட்சிக்கும் புரட்சிகரமான இணைப்புத் திட்டங்கள் வகுக்க வேண்டும். மத்திய சர்க்காரை எதிர் பார்த்து ஏமாற்றமடைந்து பழிசுமத்திக் கொண்டிராமல் "தன் கையே தனக்கு உதவி" என்ற முறையிலே மாநில சர்க்கார் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. சின்னசாமி :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முதன் முதலில் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதிப் பெருமக்களின் சார்பாகவும் அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டு, அதற்குப் பிறகு புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அதற்கும் என்னுடைய நன்றிகலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, 1969-70 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைத் கூற விழைகிறேன்.

1969 மார்ச் 4] [திரு. மு. சின்னசாமி]

கடந்த இரண்டு நாட்களாக இங்கே நம்முடைய மாமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொது விவாதத்திலே நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் தரப்பிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த ஆண்டுதான் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற நிலையிலே இருக்கிறது என்ற குறிப்பினை சுட்டிக்காட்டிப் பேசியதைப் பார்த்து நான் மிகவும் வியப்படைந்தேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்றுக்கொண்ட பிறகு இந்த அரசு ஆற்றிய பணிகள் அனைத்தையும் காங்கிரஸ் கட்சி வரவேற்று நன்றி சொல்ல அரசியல் ரீதியில் விருப்பம் இல்லாவிட்டாலும், காங்கிரஸ் கட்சி, தமிழகத்திலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி தன்னைச் சேர்ந்த மாண்புகெழுமிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய நாட்டின் ஒற்றுமையிலே எதிர்கால வளர்ச்சியினையொட்டி மிக உருக்கமாக அங்கம் வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த அந்தக் கட்சி உறுப்பினர்கள் தமிழகத்தைச் சார்ந்த கடமைகளைச் செய்வதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு அதற்குரிய கருத்துக்களை எடுத்து வைப்பார்கள் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தேன். மத்திய அரசின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கின்ற மாநில அரசுக்குப் பொருளாதார வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதை இந்த நாடும் இம்மாமன்றமும் நன்கு அறியும்.

காங்கிரஸ் கட்சி இன்று மத்திய அரசிலே, பரிபூரணமாக ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறது. இன்று பரிபூரணமாக ஆட்சி புரிந்துகொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசியலிலே ஏற்படுகின்ற ஒவ்வொரு வினைவும் அடுத்த நாள் மாநிலங்களிலே பிரச்சினைகளை உருவாக்குவதை நாம் பார்க்கிறோம். கடந்த 28-ம் தேதி மாலை 5 மணிக்கு மத்திய 11–00 a.m.
நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த அடுத்த நிமிஷமே சென்னையிலே மண்ணெண்ணெய் விலை ஏறியிருக்கிறது, சென்னையிலே பெட்ரோல் விலை ஏறியிருக்கிறது, சென்னையிலே விவசாயத்திற்குத் தேவையான கருவிகளின் விலைகள் ஏறியிருக்கின்றன. தமிழகத்திலே விவசாயிகளுக்குத் தேவையான உரத்தின் விலை ஏறியிருக்கிறது. இவ்வளவு பெரிய அநியாயத்தை, அக்கிரமத்தைச் செய்த காங்கிரஸ் கட்சி, இன்று எவ்வளவுதான் துணிவோடு இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பங்கு கொண்டாலும், அந்தத் தவறுகளைச் சுட்டிக் காட்ட தெம்பில்லை என்றாலும், தனிப்பட்ட முறையிலேயாவது அந்தக் கட்சி நண்பர்கள் டில்லியில் இருக்கிற தங்களுடைய விசுவாசம் மிக்க எஜமானர்களுக்கு எடுத்துக் கூறி இந்தப் பேராபாயத்தைத் தடுக்க தமிழகத்திற்கு உதவி புரிய வேண்டுமென்று ஒருகாலத்தில் அவர்களுடைய பழைய கூட்டாளி என்ற காரணத்தால் உரிமையோடு கேட்க விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் பேசும்போது, தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டி மத்திய அரசிடம் இருந்து நிதி பெறும் கோரிக்கைக்கு வலுவான உதவி செய்வார்கள் என்று எதிர்பார்த்த நேரத்தில், புதிய அமைச்சரவையில் ஏன் ஒரு பணக்காரரைச் சேர்த்துக் கொண்டீர்கள், ஏன் ஒரு முதலாளியைச் சேர்த்துக்கொண்டீர்கள் என்ற அநாகரிகமான சர்ச்சைக்கு வந்தார்கள். அந்த உயர்ந்த நண்பரைப் பார்த்துக் கேட்கிறேன், இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு தனி மனிதன் பணக்காரனாவதும், கோடீஸ்வரனாவதும், திடீர் திடீரென்று ஆலை முதலாளியாவதும் எந்தச் சக்தியால் என்று பார்த்தால் அந்தச் சக்தி, அதற்காக சட்டமியற்றும் அதிகாரம், எந்தத் தரப்பில் இருந்து பேசுகிறோ அவர்களுடைய பரிபூரண அதிகாரத்திற்குள்ளேதான் இருக்கிறது என்பதை மறந்துவிட்டு இங்கே பேசுகிறார்கள். அந்த நபருக்கு இரண்டு சான்றுகளை நான் எச்சரிக்கையாகக் கூற விரும்புகிறேன். 1946-ம் ஆண்டு—மன்னிக்கவேண்டும்—1947-ம் ஆண்டுக்குப் பிறகே பார்க்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் பொறுக்கியெடுக்கப்பட்ட 75 குடும்பங்களின் சொத்து மதிப்பு அன்று 600 கோடி ரூபாயாக இருந்தது, உங்களுடைய ஜனநாயக சோஷலிச ஆட்சியில், ஆண்டவனால்

உற்பத்தி செய்யப்பட்ட மகான்களாக இருக்கிறீர்களே உங்களுடைய 20 ஆண்டுக் கால ஆட்சியில் அந்த 75 குடும்பங்களின் சொத்து மதிப்பு இன்று 10,600 கோடியாக உயர்ந்திருக்கிறது. நான் சொல்லுவதற்கெல்லாம் நாடாளுமன்றத்திலே கொடுக்கப்பட்ட எடுகளிலே சான்றுகள் இருக்கின்றன. இந்த 20 ஆண்டுக் காலத்திலே அவர்களை பத்தாயிரம் கோடிக்கும் மேற்பட்ட கோடீஸ்வரர்களாக ஆக்கியிருப்பதோடு இன்னும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது. முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள், குறிப்பாக பொருளாதார ரீதியில் சோஷலிச விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டவர்கள். துண்டு விழும் பட்ஜெட் தயாரிப்பது என்பது தலையாய கடமை என்பதை உணரவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இந்த மாநிலத்தின் நிதி ஆதாரங்களை விடாப்பிடியாக மத்திய அரசு அழித்துக்கொண்டே வருகின்ற காரணத்தால் ஒவ்வொரு துறையிலும் தொய்வைப் பார்க்கிறோம். 1946-ம் ஆண்டில் இந்திய அரசின் முக மதிப்பு (ஃபேஸ் வால்யூ) என்று சொல்வார்களே அந்த வகையில் 1,100 கோடி ரூபாய் அளவுக்குத்தான் புழக்கத்தில் இருந்தது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பெரிய மனிதர்களுடைய ஆட்சியில், ஜனநாயக சோஷலிசத் தத்துவவாதிகளுடைய ஆட்சியில் மூவாயிரம் கோடிக்கும் அதிகமாக நோட்டுகள் அச்சடிக்கப்படுகின்றன. அதற்குச் சர்க்காருடைய முத்திரை என்ற அந்தஸ்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. 1946-ம் ஆண்டில் ஒரு ரூபாய்க்கு 13 அணா பெறுமானமுள்ள தங்கம் ரிசர்வ் வங்கியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. 1969-ம் ஆண்டில் ஒரு ரூபாய்க்கு 9 காசு வீதம் அல்லது பத்து காசு பெறுமானமுள்ள தங்கந்தான் இருக்கிறது. இந்தியா இன்சால்வெண்ட் ஆகக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுப்பற்ற முறையில் ஆட்சி செய்த காரணத்தால் இன்சால்வென்ட் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பற்ற கட்சியை மத்திய ஆட்சியிலிருந்து வெளியேற்றினால்தான் இந்தியா காப்பாற்றப்படும். இந்தியத் துணைக் கண்ட ஆட்சியின் கீழ் இருக்கும் மாநிலங்கள் சுய பலத்துடன் முன்னேற முடியும். இவ்வாறு, பொருளாதார வல்லுநர்கள், சர்வதேசப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதை இந்த மாமன்றத்தின்மூலம் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் ராமச்சந்திரன் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் திராவிட முன்னேற்றக் கழகத்தை செஞ்சீனப் படையெடுப்புக்குப் பிறகு, சர்வதேச அரங்கத்தில் ஏற்பட்ட அரசியல் மாறுதலுக்கு ஒப்ப, நாட்டுப் பிரிவினை என்ற அரசியல் வேட்கையை எடுத்துவிட்டு, இந்தியக் கூட்டாட்சிக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் உறுதுணையாக இருக்கிற தகுதி பெற்ற அரசியல் அமைப்பாக அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய சொந்த ஆற்றலினால், சொந்த வலிமையினால் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் ஒற்றுமையை பற்றிப் பேசுகிற நண்பர்களை, அரசியல் கட்சிகளை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். 36 ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்ற ஜின்னா அவர்கள், காங்கிரஸ் மகாசபையைப் பார்த்து, "வெள்ளையன் வெளியேறிவிட்டால் மைனாரிடி இனத்தைச் சேர்ந்த எங்களுக்கு அரசியல் ரீதியில் நியாயமான பாதுகாப்பு கிடைக்குமா? ஒவ்வொரு மாநிலத்திற்கும் சுயாட்சி கொடுத்து மைனாரிடி வகுப்பினருக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படுமா?" என்பது பற்றி காங்கிரஸ் கட்சியோடு அவர்கள் நடத்திய ஒப்பந்தப் பேச்சுக்கு, மத வெறிபிடித்த பெரும்பான்மையினவர்கள் ஒப்புதல் கொடுக்காத காரணத்தால்தான் அந்த ஒப்பந்தம் முறியடிக்கப்பட்டது, நாடு துண்டாடப்பட்டது என்பதைப்பற்றிப் புத்தகத்தில் அழகாக எழுதி வைத்திருப்பதைப் புதிய காங்கிரஸ்காரர்கள் படித்துப் பார்க்கவேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் ஆபத்து அதிகமாகியிருக்கிறது. அது பாகிஸ்தானத்திலிருந்தோ, செஞ்சீனத்திலிருந்தோ அல்ல, ஒரு காலத்திலே ஆங்கிலேயன் சொன்னான், வீரம் மிக்க வங்காளிகளை இரு கூறுகப் பிரித்து அடக்கி

விட்டால், இந்தியா சுதந்திரப் போராட்டத்திலே வெற்றி பெருது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக் கண்டத்தில் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணியது. அதனை உருக்குலைக்கும் வகையில்தான் கிலாபத் இயக்கம் ஏற்பட்டது என்பதைக் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

இன்று நாட்டில் இருக்கும் உண்மை நிலை என்ன என்பதைக் கண்டு இந்த நிதிநிலை அறிக்கையை அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் நயவுடன் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த தேச ஒற்றுமைக்காக, தமிழகத்தில் இருக்கிற ஒவ்வொரு செண்டிலும் உணவு உற்பத்தியைக் கஷ்டப்பட்டுப் பெருக்கிக்கொண்டு வருகிருர்கள். விலைவாசிகளை இறக்குவதற்காகத் துணிவோடு தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவரும் நேரத்தில் மத்திய அரசு வரிகளைப் போட்டுக்கொண்டிருக்கிறது. நாசிக் அச்சகம் தன்னுடைய அதிகாரத்தில் இருக்கிற காரணத்தால் இரவோடு இரவாக—கோயம்புத்தூர் கிருஷ்ணன் அச்சடித்தது மாதிரி—நோட்டுகளை அச்சடித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் தினசரி விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கும் நிலையில் இன்று நாலைந்து கோடி ரூபாயைக் கூடுதல் சம்பளத்திற்காகக் கொடுக்கின்ற நிலையில் பொருளாதார நெருக்கடியையும், அரசியல் நிர்ப்பந்தத்தையும் டில்லி ஏகாதிபத்தியம் தமிழகத்தின்மீது சுமத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தியப் பேரரசு உடனடியாக தன்னுடைய அதிகாரங்கள் அத்தனையையும்—தேசப் பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கை, ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய மூன்றைமட்டும் தன்னுடைய கையில் வைத்துகொண்டு—மாநிலங்களுக்குக் கொடுப்பதன் மூலந்தான் ஒவ்வொரு மாநிலமும் சுய பலத்தோடு நிச்சயமாக முன்னேற முடியும். அப்போதுதான் இருதயப் பூர்வமான தேச பக்தியோடு, நாட்டுப் பற்றோடு கூடிய சக்தி வாய்ந்த இந்தியக் கூட்டாட்சியை மத்திய அரசு பார்க்க முடியும். அந்தச் சூழ்நிலைக்குக் காங்கிரஸ் கட்சி உறுதுணையாக இருக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. பாரதிமோகன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தின்மீது பேசும்போது மார்க்ஸிஸ்ட்-கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் காலம் சென்ற முதல் அமைச்சர் மாண்புமிகு திரு. அண்ணா அவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்திக்கொண்டு நான் என் உரையைத் துவக்குகிறேன். இன்றைய தினம் நமது பட்ஜெட், பற்றுக்குறை பட்ஜெட்டாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசும் ஒரு பட்ஜெட்டை இப்பொழுது சமர்ப்பித்திருக்கிறது. மத்திய அரசாங்கம் நாட்டிலே எழுப்பப்பட்டிருக்கிற கடன்களை எல்லாம் வரிகளையெல்லாம், வெளிநாடுகளிலிருந்து வாங்கியிருக்கும் கடன்களையெல்லாம் இந்தியாவில் உள்ள பெரிய பணக்காரர்களுக்கும், பெரிய நிலச்சுவாந்தார்களுக்கும்தான் அதிகமாகக் கடன் கொடுத்து உதவிக்கொண்டுவருகிறது என்பது நம் கவனத்திற்குரிய ஒன்றாகும். மத்திய அரசு போட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினாலும் இந்தியாவிலுள்ள பெரிய பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாகக் கூடிய முறையில்தான் அத் திட்டங்களைக் காங்கிரஸ் அரசாங்கம் தயாரித்து, அமல் செய்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைய தினம் பெரிய பணக்காரர்களை மேலும் பெரிய பணக்காரர்களாக ஆக்கும் முறையில்தான் மத்திய அரசாங்கம் தனது தொழில் கொள்கையையும், விவசாயக் கொள்கையையும் அமலாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சிக்கலான சூழ்நிலையில்தான் நம் தமிழ்நாடு அரசாங்கம், காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து தமிழ்நாட்டினை முன்னேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால் இந்த முயற்சியில் நாம் திட்டவட்டமாக ஒரு கண்டிப்பான முடிவை மேற்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு, அதன் குறிக்கோளுக்கு விரோதமான நிலையில் நாம் இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அந்த நிலையிலிருந்துதான் நாம் பிரச்னைகளை அணுகவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட்-கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில், விவசாயம்

இவைதான் இந்த நாட்டின் அடிப்படைகளாகும். விவசாயத்துறையில் நம் ஒரு சரியான சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்றால் அது குறித்த சரியானதொரு முடிவை நாம் எடுக்கவேண்டும். சென்ற சட்டமன்றக் கூட்டங்களில் தமிழக அரசு ஒரு வாக்குறுதியைக் கொடுத்தது. விரிவானதொரு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்போகிறோம், அதற்கான ஆலோசனைகளைச் செய்து வருகிறோம் என்று கூறப்பட்டது. இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் அத்தகைய விரிவானதொரு சட்டத்தைக் கொண்டு வரமுடியவில்லை. திட்டக் கமிஷனின் நிலச் சீர்திருத்தக் குழு ஒரு சிபாரிசை வழங்கியிருந்தது. அதில் 75 வாரம் என்றும், நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்றெல்லாம் அந்தச் சிபார்சில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நிலச் சீர்திருத்தக் குழு கூறியுள்ள முழுமையான சட்டங்களை இந்த மன்றத்தில் சென்ற காலக் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவரவில்லை. ஆனால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய உச்சவரம்புச் சட்டத்தின்மூலம் பெரிய நிலச்சுவாந்தார்களை அச்சட்டத்திலிருந்து தப்புவிக்க வழி செய்துவிட்டது. அப்படி ஏற்பட்டது நற்செயலாக ஏற்பட்டது என்பதல்ல. காங்கிரஸ் அரசாங்கம் தன் ஐந்தாண்டுத் திட்டங்களால் இராமப்புறங்களில் உள்ள நிலச்சுவாந்தார்களை எல்லாம் பெரிய நிலச் சுவாந்தார்களாக மாற்றிவிடக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு நவீன உரங்களையும், நவீன இயந்திரக் கருவிகளையும் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கி அவர்களை மேலும் பெரிய பணக்காரர்களாகச் செய்துவிட்டது. பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கும், நிலச்சுவாந்தார்களை மேலும் பணக்காரர்களாக ஆக்கும் மத்திய அரசாங்கத்தின் திட்டப்படிதான் நம் தமிழ்நாடு அரசாங்கமும் போகப்போகிறதா? இதில் மத்திய அரசாங்கம் செல்லக்கூடிய வழிக்கு முற்றிலும் மாறான வழியில் திட்டங்களை நாம் கொண்டுவரவேண்டும். இந்த அரசாங்கம் உடனடியாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பிரகடனம் செய்யவேண்டும். 1957-க்குப் பிறகு நிலச் சொந்தக்காரர்கள் எல்லாப் பாகப்பிரிவினைகளையும் செய்து கொண்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் உள்ள பெரிய நில பிரபுக்கள் குவிந்து கிடக்கிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு என்று முப்பது ஏக்கர் தான் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று கணக்குக் காட்டுவார்களே தவிர எந்த நிலச் சொந்தக்காரரும் தன்னிடம் நூறு ஏக்கர் இருப்பதாக வெளியே காட்டமாட்டார்கள். எந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும் அவை நிச்சயமாக அமலாகாது, அவைக் கிராமப்புறங்களுக்குச்செல்ல முடியாது என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே நாம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கொண்டுவரவேண்டுமானால் ஒரு குடும்பத்திற்குப் பதினைந்து ஏக்கர் என்றும் 1957-க்குப் பிறகு நடைபெற்றுள்ள எல்லா நியாயமற்ற பாகப் பிரிவினைகளையும் ரத்துசெய்து உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் இந்த நாட்டில் உபரி நிலத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

(திரு. சு. துரைசாமி அவர்கள் தலைமை.)

அப்போதுதான் அந்த நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நாம் வழங்க முடியும். தரிசுப் புறம்போக்கு நிலங்கள் பற்றி நாம் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டு வருகிறோம். இந்த தரிசுப் புறம்போக்கு நிலங்கள், இந்த உபரி நிலங்கள் இவற்றையெல்லாம் எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சர்க்கார் கடன்கள் எல்லாம் யாருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றால், நிலத்தில் உழைப்பவர்களுக்கு, நிலம் இல்லாது குறிப்பிட்ட நிலங்களைப் பெறுபவர்களுக்கு அவர்கள் தங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி பெறுவதற்காக அவர்களுக்கு கடன்கள் வழங்கப்படவேண்டும். அதற்கு மாறாகப் பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கு பம்ப் செட்ஸ் வாங்கவும், ட்ராக்டர்கள் வாங்கவும் கடன்கள் கொடுப்பது, கருத்திருமன் அவர்கள் கூறக்கூடிய அந்த விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்குவது . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : கருத்திருமன் கூறக்கூடிய விவசாயி என்பது யார் ?

திரு. கோ. பாரதிமோகன் : தெளிவாகக் கூறுகிறேன். விவசாயிகள் என்றால் கிராமத்தில் உழைக்கக்கூடிய ஐந்து, பத்து ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள், நிலம் இல்லாது வெறும் குத்தகைதாரர்களாக இருப்பவர்கள், நிலத்தில் பாடுபடுபவர்கள், விவசாயக் கூலிகள் இவர்களைத்தான் கூறுகிறேன். பூண்டி வாண்டையார், உக்கடைத் தேவர், வலிவலம் தேசிகர், சாம்பசிவ ஐயர் குடும்பத்தார், பழையக்கோட்டைப் பட்டையக்காரர் இவர்களைப் போன்றவர்கள் விவசாயிகள் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பூமியொன்றும் இல்லாது வாய் சவடால் அடிப்பவர்களும் விவசாயிகள் அல்ல.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போதுள்ள நிலையில் பத்து ஏக்கர் சொந்தக்காரர்களுக்கும் ட்ராக்டர் வழங்கப்படுகிறது. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் மனுச் செய்யலாம். நில அடைமான வங்கிகள் மூலம் மனுச் செய்தால் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. பத்து ஏக்கர் சொந்தக்காரர்களுக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. கோ. பாரதிமோகன் : ஐந்நூறு ஏக்கர் உள்ளவர்களுக்கு அவை கிடைப்பதில்லை. மனுச் செய்திருந்தாலும் உடனடியாகக் கொடுப்பதில்லை.

இந்த நாட்டில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் தான் உற்பத்தியை நாம் பெருக்க முடியும். அடுத்து, கொள்முதல் சம்பந்தமாக தமிழக அரசு தீவிரமானதொரு நிலையை மேற்கொள்ள வேண்டும். இன்றைய தினம் நம் குறிக்கோள் என்னவென்றால், பத்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடம் அவர்கள் குடும்பத்திற்குத் தேவையான, விவசாயத்திற்குப் போதுமான நெல்லைத்தவிர, உபரியாக உள்ளதையெல்லாம் கொள்முதல் செய்யவேண்டும். புன்செய் தானியங்கள் என்றால் அவர்கள் தேவைக்குப்போக, அவர்கள் குடும்பச் செலவிற்கு மேலே உள்ள அவ்வளவையும் கொள்முதல் செய்யவேண்டும். அப்படியானால் கிட்டத்தட்டப் பதினைந்து லட்சம் டன்னுக்குமேல் நாம் கொள்முதல் செய்ய முடியும். அப்படிச் செய்யலாம். அப்படிச் செய்வதால் பஞ்சத்தில், பட்டினியில், வாடக்கூடிய மக்களுக்கும், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதி மக்களுக்கும், மற்ற மாவட்டங்களுக்கும் கொடுத்து உதவ முடியும். தஞ்சை மாவட்டத்தில் கொள்முதலில் தீவிரக்கவனம் செலுத்தவேண்டும். அதிகாரிகளைமட்டும் நம்பிப் பயன் இல்லை. கொள்முதலுக்காகக் தஞ்சை மாவட்டத்தில் சர்வ கட்சியினரையும்கொண்ட குழுக்கள் அமைத்துக் கொள்முதலுக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடன் நிவாரணச் சட்டம். (மணியடிக்கப்பட்டது.) நீண்ட நெடுங்காலமாகக் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள், வாரக் குத்தகை சாகுபடிதாரர்கள், சிறு நிலச் சொந்தக்காரர்கள் இவர்களெல்லாம் ஏராளமாகக் கடன்பட்டிருக்கிறார்கள். இதனால் விவசாயத் தொழிலாளர்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அந்தக் கடன்களை எல்லாம் ரத்துசெய்து விடக்கூடிய அளவிற்குக் கடன் நிவாரண அவசரச் சட்டத்தை சர்க்கார் ஆலோசித்துக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தினால் கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படும். தஞ்சை மாவட்டத்தைப்பற்றி ஒன்றைமட்டும் கூறிக்கொண்டு முடித்துவிடுகிறேன். தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் விவசாயத் தொழிலாளர்கள் கூலிப் போராட்டம் நடைபெற்றது. அங்கு கலெக்டர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் ஏற்பட்டும், அந்த ஒப்பந்தங்களையே மதிக்கமாட்டேன் என்கிறார்கள். அவற்றை அமலாக்க மறுக்கிறார்கள் நிலச் சொந்தக்காரர்கள். அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் அமலாகக் கூடாது என்று திட்டவட்டமாக தஞ்சை மாவட்டத்திலுள்ள நில உரிமையாளர்கள் சங்கம் மட்டுமல்ல, தஞ்சை ஜில்லாவிலுள்ள பொறுப்பான காங்கிரஸ்காரர்கள் எல்லாம் திட்டம் போட்டு அந்த ஒப்பந்தங்களை அமலாக்காதே என்று சொல்லித் திட்டமிட்டுப் பிரசாரம் செய்து வருகிறார்கள்

என்பதை நான் இம்மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தஞ்சையில் ஒரு முக்கூட்டு மாநாடு காலஞ்சென்ற முதல் அமைச்சர் அவர்களின் யோசனையின்பேரில் கூட்டப்பட்டது. அதைக் கூட்டக் கூடாது என்று நிலச் சொந்தக்காரர்கள் முயற்சி செய்தார்கள். அதைக் கூட்ட வேண்டும் என்று நாங்கள் அனைவரும் முயற்சி செய்தோம். முக்கூட்டு மாநாடு தஞ்சையில் நடைபெற்றது. அந்த மாநாட்டைக் கலைப்பதற்கு அந்த மாநாட்டில் முடிவு ஒன்றும் ஏற்படக்கூடாது என்று காங்கிரஸ் காரர்கள் முயற்சி செய்தார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ்காரர்கள் முயற்சி செய்தார்கள் என்பதை ஆதாரத்தோடு சொல்லவேண்டும்.

திரு. கோ. பாரதிமோகன் : ஆதாரத்துடன் சொல்லத் தயார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இப்படியும் சொல்லலாம், உலை வைக்கிறவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றுகூடச் சொல்லலாம்.

திரு. கோ. பாரதிமோகன் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், காங்கிரஸ் கட்சியின் நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சாம்பசிவம் அவர்களும், தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் திரு. எத்திராஜ் அவர்களும் நிலப்பிரபுக்களின் நோடி யாட்களாகயிருந்து அந்த இயக்கத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். திரைமறைவில் இருக்கிறார்கள்.

ஒப்பந்தத்தை அமலாக்கும் முறையில்தான் நாங்கள் தீவிரமாக இருக்கிறோம், உறுதியாக இருக்கிறோம். ஒப்பந்தம் அமலாக்கப்பட வேண்டும். இதை அமலாக்கக்கூடாது என்று சொல்லி—சில்லறை மிராசுதாரர்களின் பிரச்சினை என்று—காங்கிரஸ் நண்பர்கள் இந்தப் பிரச்சினையைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். சில்லறை மிராசுதாரர்கள் பிரச்சினை அல்ல.

***திரு. நா. சௌந்த்ரபாண்டியன் :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச்சட்ட மன்றத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த 1969–70-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே புது வரிகள்போடப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு புது வரிகள் விதிக்கப்பட மாட்டாது என்று உறுதியிட்டுக் கூறவில்லை என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். மேலும், இந்த நிதிநிலை அறிக்கையினைப் பார்க்கும்பொழுது அடுத்து வரும் சட்ட மன்றக் கூட்டத்தில் புது வரிகள் போடலாம் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்பதைத்தான் சொல்லுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 16 கோடியே 70 லட்சம் ரூபாய் துண்டு விழுவதிலிருந்து வரி விதிக்காமல் இருக்க முடியாது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்பது தெரிகிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் பெரும் பகுதி மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குப் போடும் ஒரு விண்ணப்பமாக அமைந்திருக்கிறது: மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம், இரயில் சரக்குக் கட்டணத்தின் மீதான வரியொன்றை விதிக்க ஆலோசனையும் கூறியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் வரி குறைக்கப்பட வில்லை, வசதியையாவது ஓரளவு பெருக்கியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

கிராமப்புறங்களில் வைத்திய வசதி பெரிதும் குறைந்திருக்கிறது. பொது வாகக் கிராமப்புறங்களில் வைத்திய வசதி சரியாக இல்லை என்பதை நாம் அறிவோம். அது சம்பந்தமாக இந்த அரசு முயற்சி எடுக்கவில்லை. கிராமப்புறங்களிலுள்ள வைத்திய நிலையங்களில் ஒழுங்காக மருந்து கொடுக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்று நடத்தத் திட்டம் இருக்கிறதா என்றால் அதற்கு எந்தவிதத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர்ப் பிரச்சினை. இது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பெரிதும் பாதிக்கும் நிலைமை இருக்கிறது. அடுத்த இரண்டு மாத கால அளவில் பருவநிலை சாதகமாக ஏற்படவில்லை என்றால் பொதுவாக இந்த மாநிலத்திலுள்ள மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் அவதிப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அப்படியிருக்கும் நேரத்தில் இது சம்பந்தமாக கிராமப்புறங்களில் குடி தண்ணீர் வசதி செய்வதற்கு அதிக அளவிலே நிதி ஒதுக்கப்படவில்லை. குடிதண்ணீர்ப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக்குடிதண்ணீர் கிடைப்பதற்கு நிதிநிலை அறிக்கையில் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நாங்குனேரியிலே குடிதண்ணீர்த் திட்டம் ஒன்று துவங்கப்பட்டு மூன்றாண்டுகள் ஆகின்றன. ஆனால், அங்கு வேலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. அதைத் துரிதப்படுத்தி மேலும் விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியின் கொள்கை அடிப்படையில் புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக்கல்வி அளிக்கும் கொள்கையை இந்த அரசு ஏற்றிருப்பதைப் பாராட்டுகிறேன். படிப்படியாகப் பட்டப்படிப்புக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும் இலவசக் கல்வியளிப்பதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கல்விக்கு ஆரம்பமானது புகுமுகப் பள்ளிகள், அதாவது குழந்தைப் பள்ளிகள். இது விஷயத்தில் இந்த அரசு நாட்டம் கொண்டிருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. படிப்படியாக குழந்தைகள் புகுமுக பள்ளிகளை அதிகப்படுத்தி, நாட்டிலே அடிப்படையாக இருக்கும் இந்தக் குழந்தைகளின் மனதை நல்லமுறையில் ஆக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். புதிதாக அமைக்கவிருக்கும் நான்கு கல்லூரிகளில் ஒன்றை இராதாபுரம் பகுதியில் அமைக்க அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அவர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை. திருநெல்வேலியைப் பொறுத்த வரையில் ஒரு பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது முந்தைய அரசின் திட்டமாக இருந்தது, தனியார் ஒருவருக்குப் பொறியியல் கல்லூரி அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. அவர் அதை அமைக்கவில்லை. இந்த அரசு அங்கு ஒரு பொறியியல் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டதன் காரணமாகவும், அமைதியின்மை காரணமாகவும் புதிய தொழில்கள் ஆரம்பிக்க தனியார்கள் முன்வரவில்லை என்பதை அரசு உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். தனியார் முன்வரவில்லை என்றால், அரசாவது முன்வந்து புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். புதிய தொழில்கள் ஆரம்பித்தால் தான் நாட்டிலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், கிராமப்புறங்களில் கிராமச் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் சிறுதொழில்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், வள்ளியூரில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்தது. அதைத் தீவிரப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக இலங்கையிலிருந்து பெருவாரியான அகதிகள் வரவிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு வள்ளியூர் சிமெண்ட் தொழிற்சாலையைத் துவங்குவது பெரிதும் பயனளிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

தூத்துக்குடி துறைமுகத் திட்ட வேலை நல்லமுறையில் நடந்துகொண்டிருக்கிறது. அதுமட்டும் நடந்தால் போதாது. அதைச் சுற்றிலும் பல தொழில்கள் ஆரம்பிக்க இந்த அரசு முயற்சியெடுக்க வேண்டும் அல்லது தனியார் முயற்சி எடுக்கும்படி சொல்ல வேண்டும். உரத் தொழிற்சாலை அமையவிருப்பது வரவேற்கத் தக்கது.

ஏழை விவசாயிகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது நன்மை இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஏழை விவசாயிகள் உபயோகிக்கும் பூச்சிக் கொல்லி மருந்துக்கான மானியம் குறைக்கப்பட்டிருக்கிறது. இதை அமைச்சரவர்கள் உணர வேண்டும். ஏன் இப்படிக் குறைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மத்திய சர்க்கார் விவசாயிகளுக்கு அனுகூலம் செய்திருக்கிறார்களா ? அந்த பட்ஜெட்டைப் பார்த்து விட்டுப் பேசினால் நன்றாகயிருக்கும். மத்திய சர்க்கார் உண்மையிலேயே இந்த ஆண்டு விவசாயிகளுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் கூற வேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசு பூச்சி கொல்லி மருந்துக்குக் கொடுத்து வந்த சகாயத் தொகையை அறவே நீக்க வேண்டுமென்று சொல்லியிருந்தும் இந்தச் சர்க்கார் தொடர்ந்து கொடுத்து வருகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டியதுதான். பாராளுமன்றத்தில் நான் இருந்தால் அந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி அழகாக எடுத்துச் சொல்லியிருப்பேன். தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை இப்பொழுது விவாதத்தில் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும், வேளாண்மை வருமான வரியைக் கடந்த ஆண்டு போட்டு விட்டார்கள். வேளாண்மை வரி மூலமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதை இந்த அரசு உணர வேண்டும். ஆதலால், விவசாய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, பயிர் பாதுகாப்புத் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று பார்த்தால் ஒன்றுமில்லை. அதைப்பற்றி இதில் ஏதாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. விவசாயம் அபிவிருத்தி அடைய இந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் அங்கு அதிகப்படியான விவசாய பூமி இருப்பதால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க இந்த அரசு முன் வந்து, அதற்கு அமைச்சரவர்கள் நல்ல முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

கிராமப்புறச்சாலை அபிவிருத்திக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் சாலை மானியம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல சாலை வசதி இருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் சாலை மானியத்தை அதிகப்படுத்த வேண்டும்.

பரிசுத் திட்டமானது ஏழைகளின் நல்வாழ்வைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், அது மக்கள் மனத்தை சூதாட்டத்தில் திருப்பக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் குதிரைப் பந்தயத்தை ஒழிப்போம் என்று சவால் விட்டவர்கள் இப்பொழுது ஏன் அதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை ?

பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது, சென்னை செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களுக்குத் தான் அதிகப்படியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்கள் புறக்கணிக்கப்

பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பல திட்டங்கள் இருக்கின்றன. ஆலந்துறை ஆறு திட்டம் என்று சிறு திட்டம் இரண்டு ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதற்கு விரைவில் முடிவெடுக்க வேண்டும். இராதாபுரம் கால்வாய் வேலை முடிந்து அதற்குத் தண்ணீர் விட நடவடிக்கை எடுக்க வேண்டும். வள்ளியூர், பெரியகுளம், புலிமான்குளம் இவைகளைச்செப்பனிட அரசு நல்லபடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு, வடமலையான் கால்வாய் வேலையையும் விரைவில் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் "பொய்க் குதிரை" மாதிரிதான் அமைந்திருக்கிறது.

***திரு. கி. ஐயராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த புதிய தமிழக அமைச்சரவையின் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள், அண்ணா வழி நடப்போம் என்று சொன்னவர்கள் அண்ணா வழி நடந்திருக்கிறார்களா என்று கேட்டார்கள். ஆனால், அவர்களுடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நாகர்கோவிலிலே அண்ணா அவர்கள் என்ன செய்து விட்டார், அவர் பின்னாலே ஏன் நடக்கவேண்டும், அவர் பின்னாலே ஏன் செல்ல வேண்டும் என்ற முறையிலே பேசி வருகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் குரலே மகேசன் குரல் என்பதை மதித்து அதை நடைமுறையிலே காட்ட வேண்டும், நடைமுறையிலே எல்லோரும் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இது க்ஷேமநல சர்க்கார், "வெல்பேர் ஸ்டேட்" என்ற முறையிலே இரண்டு நிதிநிலை அறிக்கைகளைத் தெளிவாகக் கொடுத்தார்கள். அந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலும் விவசாயத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்காக அதிகச் செலவு செய்திருக்கிறார்கள். அதன் பலனாகத்தான் எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, அகில இந்தியாவிலுள்ள அத்தனை பேரும் பாராட்டுகின்ற வகையில், அங்கே இருக்கிற மத்திய சர்க்கார் பாராட்டுகின்ற வகையிலே இங்கே உணவு உற்பத்தி பெருகி விலைவாசிகள் குறைந்தன. மு.ப. 11-30

விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டது மட்டும் அல்ல, குறைக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே தான் புதிய தமிழக அமைச்சரவையும் அதிகக் கிணறுகளையும், குழாய்க் கிணறுகளையும், சிறு பாசன வசதிகளையும் பெருக்கி விவசாய உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்பதற்காக மேன்மேலும் தொகைகளை ஒதுக்கியுள்ளது. தொகை அதிகமாக ஒதுக்கியுள்ள நேரத்தில், மத்திய சர்க்கார் காங்கிரஸ்காரர்களின் எஜமானர்கள் வேண்டுமென்றே அவர்கள் வருமானத்தைப்பெருக்குவதற்காக, விவசாய உற்பத்திக்குத் தேவையான பம்ப் செட்டுகளை மாநில சர்க்கார் அதிகமாக்கி வருகின்றதைப் பார்த்து, சென்ட்ரல் எக்ஸைஸ், வரி 20 சதவிகிதத்திற்கு மேலே விதித்திருக்கிறார்கள். அதன் காரணமாக நிச்சயமாக, விவசாய, தானிய உற்பத்தி குறையும், செலவு அதிகமாகும். அதை கணக்கில் எடுக்காமல், அங்கே வழிப்பிள்ளையாருக்கு கடைத் தேங்காயை உடைப்பது போல, இங்கே இருக்கிற உற்பத்தியான நெல்லை பயன்படுத்துகிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, இந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று பம்பாய், அகமதாபாத் கூறப்படுவதுபோல், தமிழகத்தினுடைய மான்செஸ்டரான கோயம்புத்தூரில் உள்ள பஞ்சாலைகளை மூடக்கூடிய வகையில் சென்ட்ரல் எக்ஸைஸ் வரி விதித்துள்ளது, மத்திய சர்க்கார். தமிழகத்தினுடைய லங்காஷையரான கோயம்புத்தூரிலே என்ஜினீயரிங், இண்டஸ்ட்ரீஸ் அதிக அளவிலே பெருகியுள்ளன. அங்குதான் பம்ப் செட்டுகள் எல்லாம் நல்ல முறையிலே சிறு சிறு தொழிலதிபர்களால் தயாரிக்கப்படுகின்ற நேரத்திலே இந்த சென்ட்ரல் எக்ஸைஸ் வரி தமிழகத்தினுடைய லங்காஷையரை நசுக்கக் கூடிய முறையிலே வந்து இருக்கிறது. இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சியினர் அருள் கூர்ந்து அப்படிப்பட்ட லங்காஷையரை மேலும் நசுக்கவிடாமல் காப்பாற்ற நம்மோடு ஒத்துழைக்க முன்வரவேண்டும். இது

[திரு. கி. ஜயராமன்] [1969 மார்ச் 4

இப்படி இருக்க நாம் எத்தனையோ முறைகளிலே விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி பற்றுக்குறை பட்ஜெட் கொண்டுவந்திருக்கிறோம். நீங்களும் பற்றுக்குறை பட்ஜெட் தானே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று காங்கிரஸ் கட்சியினர் சொல்லலாம். நான் சென்ற முறை சொன்னதுபோல், இங்கே எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் கூறியதைப்போல், அவர்களுக்கு, மத்திய சர்க்காருக்கு, பற்றுக்குறை பட்ஜெட் தயாரித்தாலும், அங்கே நாசிக் பிரஸ் இருக்கிறது. இங்கு இப்படி இருந்தாலும் காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி அமைந்துள்ள ஆந்திர மாநிலத்திலும் இதே மாதிரியான பற்றுக்குறை பட்ஜெட் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்ரோபிரியேஷன் பில்லை அனுமதிப்பதற்கு முன்னாலேயே "வோட் ஆன் அக்கவுண்டில்" ஏறத்தாழ 9 கோடிக்குப் பற்றுக்குறை கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே அப்படிப்பட்ட நிலைமை இருக்க, இங்கே பற்றுக்குறை பட்ஜெட்டைப்பற்றி இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் எளனமாகக் கூறுவது அர்த்தமற்றது என்பதுதான் என்னுடைய வாதம்.

இந்த நிலைமையிலே நம் தமிழக சர்க்கார் மேன்மேலும் தமிழகத்தை முன்னேற்ற வேண்டுமென்று திட்டங்கள் கொடுக்க கொடுக்க அங்கே டெல்லி சர்க்கார் அந்த முன்னேற்றம் அளிக்கக்கூடிய திட்டங்களை தடை செய்ய வேண்டும் என்ற முறையிலே திட்டங்கள் கொண்டுவருகிறார்கள். இங்கே படி அரிசி திட்டம் கொண்டுவந்த நேரத்தில் டெல்லி சர்க்காரை கேட்டீர்களா என்று கேட்டார்கள். ஆனால் விவசாயத்துறை மாநில அரசுக்கே உட்பட்ட இலாகாவாகும். இங்கே இருக்கிற மாநில அரசு விவசாய உற்பத்தியை அதிகமாக்கவேண்டுமென்பதற்காக முயற்சிகள் எடுக்கின்ற நேரத்தில், பம்ப் செட்கள், இரசாயன உர உற்பத்தி ஆகியவைகளுக்கு புதிதான, அதிகமான எக்ஸைஸ் வரி விதித்திருக்கிறார்கள்: மத்திய சர்க்கார். மாநில அரசைக் கலந்து அந்த வரியைக் கொண்டுவரவில்லை. அதற்கு இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதுதான் எனது கேள்வி.

இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சியினர் மீண்டும் சொல்கிறார்கள், தொழில் துறையிலே மந்த நிலை ஏற்பட்டு விட்டது என்று. திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு மிகவும் மந்தம் ஏற்பட்டுவிட்டது தொழில் துறையில் என்று சொல்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகால்மாக, உலகத்தில், குறிப்பாக இந்திய துணைக் கண்டத்தில் தொழில் மந்தம் ஏற்பட்டு, இந்த 6 மாதங்களிலேதான் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று மத்திய சர்க்காரது, காங்கிரஸ் காரர்களின் எஜமானர்கள் தயாரித்த அறிக்கை தெரிவிக்கிறது என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்த இக்கட்டான நிலைமையிலும் நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல் நம்முடைய புதிய சர்க்கார் தனிப்பட்டவர்களுடைய தொழிலிலே மிகவும் அக்கறை கொண்டு அந்தமுறையில் தொழில்கள் துவங்க அவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்திய அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளது. அதிலே இம்பீரியல் கெமிக்கல்ஸ் இந்தியா (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனம் சிறப்பான மருந்துகள், மருந்து தயாரிப்பதற்குரிய பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய முன்வந்துள்ளது. அதே போல் பிலிப்ஸ் இந்தியா என்கிற நிறுவனம் புதிய தொழிற்சாலை ஏற்படுத்த முன் வந்திருப்பதை நாம் பாராட்ட வேண்டும். அதிலும் குறிப்பாக இந்திய துணைக் கண்டத்திற்கு முக்கியமாக தேவைப்படுகிற மின் அணுத் துணைக் கருவிகளை "எலெக்ட்ரானிக் காம்பனென்ட்ஸ்" தயாரிக்க அந்த தொழிற்சாலை நம்முடைய தமிழகத்தில் அமைவது பாராட்டத்தகுந்தது. அதோடு மட்டுமல்ல, அந்தத்து சிறு கைத்தொழில் கைத்தொழிலிலும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. மேலும் முன்னேறுவதற்காகத் தான் இந்த வரவு செலவுத் திட்டத்திலே கமர்ஷியல் செண்டர், சிறுதொழில் வணிகப் பொருட்காட்சி சாலை ஒன்றை சென்னையிலும், ஸ்டேட் எம்போரியம், மாநில விற்பனைப் பெருநிலையம் ஒன்றை டெல்லியிலும் நிறுவ வகை செய்துள்ளார்கள்,

1969 மார்ச் 4] [திரு. கி. ஜெயராமன்]

வணிகப் பொருள்களை வியாபாரம் செய்ய போட்டி இருக்கிற இந்தக் காலத்திலே அந்தப் பொருள்கள் வேகமாக விற்பனை ஆகவேண்டுமென்பதற்காக இந்த இரண்டு நிலையங்களை ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியினர் ஏதோ சுகாதார வசதியைக் குறைத்துவிட்டதாகவும், அதற்கு நிதி ஒதுக்கியதில் குறைவு இருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் அதே சுகாதாரத் துறையிலே அதிகமாகியிருக்கிற செலவுகளை அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவதில் பின் தங்கி விட்டார்கள். குறிப்பாகப் பல தாலுகாக்களில், பல மாவட்டங்களில் மருத்துவ மனைகளை அதிகப்படுத்தியுள்ளது அரசு. அதன் காரணமாக செலவுகள் அதிகமாகியுள்ளது. அந்த முறையில் வசதி செய்கின்ற அளவுக்கு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். குறிப்பாக, மாவட்ட மருத்துவ மனைகளை அதிகப்படுத்துகின்ற நேரத்திலே 1967–68-லே 4·11 இலட்சம் செலவு செய்திருக்கிறார்கள். 1968–69—ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 6·36 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1969–70-ல் 6·63 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அடுத்து, தொத்து நோய், நரம்புத் தளர்ச்சி நோய் ஒழிப்புக்கு 1968–69-ல் திருத்த மதிப்பீட்டில் ரூ. 3 இலட்சத்து ஐம்பதாயிரம் இருந்தது. 1969–70-ல் 3 இலட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதோ ஒரு கணக்குப்படி ரூ. 36,000 குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இந்த தொத்து நோய், நரம்புத் தளர்ச்சி ஒழிப்பிற்காக அந்த கணக்கிலே அதிகமாக ரூ. 40,000-ஐ நம்முடைய புதிய தமிழக அரசு ஒதுக்கி இருக்கிறது. அதே மாதிரியாக மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 40,000 அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள்.

அடுத்து, முக்கியமான கைத்தறிப் பிரச்னை. இந்த கைத்தறிப்பிரச்னையைப் பொறுத்தவரையிலே நம்முடைய தமிழக அரசு தெளிவான கொள்கை கொண்டிருக்கிறது. கைத்தறி தொழிலிலே ஈடுபட்டுள்ள பெருமக்கள் விவசாயத் தொழிலுக்கு, ஆலைத் தொழிலாளிகளுக்கு அடுத்தபடியாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நசிந்து விடக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே சமுதாயத்தின் மிகுந்த அடித்தளத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதற்காக அதிகத் தொகை ஒதுக்கினாலும் வரப்போகின்ற மின்விசைத் தறிகளை, பவர் லூம்களை, அவர்களுடைய வாழ்க்கைக்குத் தீர்வு காண்கின்ற வகையில், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அமைக்க வேண்டும். அப்படி அமைக்கப்படும் என்பதை நம்முடைய புதிய தொழில் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் கோவையிலே தெளிவாக கூறியிருக்கிறார்கள்... (மணி அடிக்கப்பட்டது). இந்த பவர் லூம்களிலே நாம் ஏற்கெனவே போராடிக்கொண்டிருக்கிற மாதிரி, கரை போட்ட சேலைகளையும், கரைபோட்ட வேஷ்டிகளையும் நெய்ய விடக்கூடாது. ஆனால் அதை செயல்முறைப்படுத்துவது நம்மிடம் இல்லை. மத்திய அரசிடம் தான் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நாம் பெற வேண்டும், அல்லது மத்திய அரசினை வற்புறுத்தவேண்டும். அப்படி கரைபோட்ட சேலையும், கரை போட்ட வேஷ்டியும் நெய்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அவர்களுக்குக் கடும் தண்டனை அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவைகளை பவர் லூம்களில் உற்பத்தி செய்யாமல் இருப்பார்கள். வேறு துணி வகைகளை மில்களில் உற்பத்தி செய்துகொள்ளலாம். இந்த கைத்தறி பிரச்னையைத் தீர்ப்பதிலே ஏதோ நாம் முயற்சி செய்து விட்டோம் என்று இருந்தால் நிச்சயமாக தீராது என்று சொல்லி காமராஜர் அவர்கள் சொல்லியதைக் கடைசியாக கூற விரும்புகிறேன். இந்தப் புதிய அரசாங்கத்தினுடைய வண்டி நேரான பாதையிலே ஓடாது என்றார்கள். நான் கூற விரும்புவது, தெளிவான பாதையிலே அரசாங்க வண்டி ஓடுகின்றது, வேகமாக ஓடுகின்றது, பல காலம் ஓடப்போகிறது என்பதுதான். ஆனால் காமராஜர் ஓட்டிய வண்டி தான் பலவேறு திசைகளிலே ஓடி மறைந்துவிட்டது. மேலும், அவர்கள் புதிதாக வந்திருக்கிற பீகார் மாநிலத்திலும் அரசாங்க வண்டி எப்பொழுது குடை சாயுமே என்ற நிலையில உள்ளது என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1969 மார்ச் 4

* **திரு. மு. முத்தையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என்று இனிய தமிழிலே வள்ளுவர் குறள் கொடுத்தார் அன்று. தோன்றியபின் புகழைத் தேடிச் சென்றடைந்தவர்களுமுண்டு, தோன்றியபின் நாடி வந்த புகழுக்கு புகலிடம் தந்தவர்களுமுண்டு. தோன்றுங்கால் புகழோடு தோன்றுபவர்கள் மிகமிகச் சிலர். நம் நாட்டிலே, தமிழ் நாட்டிலே நல்லவரும், பாராட்டக் கூடியவரும் யார் என்றால், ஒருவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள், மற்றொருவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அமரர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியை செலுத்திக்கொண்டு எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

அதாவது, 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது, மத்திய சர்க்கார் கொண்டு வந்துள்ள அறிக்கையைப் பார்த்தால், விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றுதான் தோன்றுகிறது. விவசாயம் தான் நம் தமிழ்நாட்டிற்கு முதுகெலும்பு என்று சொல்வார்கள். விவசாயத்தைப் பொறுத்த அளவிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்ற உரம், பம்பு செட்டுகள், மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியமான பொருள்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது முறையல்ல. விவசாயிகளுக்கு வருமான வரி விதிக்க இருப்பது முன்னுக்குப் பின் முரணான பட்ஜெட்டாக இருக்கிறது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அல்லாது இன்று விவசாயம் செய்வதிலே மிகவும் முக்கியத்துவம் உள்ளது நமது தமிழ் நாடு. அப்படிப்பட்ட தமிழ் நாட்டிலே விவசாயிகளுக்கு ஏற்றம் கொடுக்கவில்லை என்பது வருந்தத் தக்கது. மாகாண சர்க்கார் கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையில் அரசாங்க அலுவலர்களுக்கு திருமணம் செய்ய கடன் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று மற்ற விவசாயம் செய்பவர்களுக்கும், விவசாயக் கூலிகளுக்கும், நெசவுத் தொழிலாளர்களுக்கும், குடிசைத் தொழிலாளர்களுக்கும் சலுகை கொடுக்கப்படவில்லை. அது மிகவும் வருத்தப்படக் கூடிய விஷயமாகும். பொதுவாக இன்று விவசாயி மதிக்கப்படுவதில்லை. பல வகைகளிலும் விவசாயி நசுக்கப்படுகிறான். இதற்கு உதாரணம் ஒன்று சொல்கிறேன். ஒரு விவசாயக் குடும்பத்தில் இரண்டு ஆண்கள் இருந்தால், இரண்டு பேர்களும் படித்திருக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம், மூத்தவர் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார், மிகவும் அழகானவர். இரண்டாவதாக உள்ளவர் அரசாங்க அலுவலகத்தில் உத்தியோகம் பார்க்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இரண்டு பேர்களும் ஒரே அந்தஸ்தில் உள்ளவர்கள் என்றாலும் கூட மூத்தவருக்கு பெண் கேட்பதற்குப் போனால், அந்த இடத்தில் என்ன நிலைமை இருக்கிறது? விவசாயம் செய்பவர் மூத்தவர், அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பவர் இளையவர். அப்பொழுது பெண் வீட்டார் என்ன சொல்கிறார்கள் என்றால், "இளையவருக்கு வேண்டுமானால் நாங்கள் பெண்ணைத் தருகிறோம்" என்று சொல்லக் கூடிய அவல நிலை விவசாயிக்கு இருந்து வருகிறது. அம்மாதிரி நிலை நாட்டிலே உருவாகிக்கொண்டு வருகிறது. எனென்று கேட்டால், உத்தியோகம் பார்த்தால் ஏதோ ரூ. 150 வருமானம் வந்தாலும் அதை வைத்து அவன் குடும்பத்தை நடத்துவான் என்ற ஒரு அறிகுறி நமது மக்களிடையே ஊன்றிப்போய் விட்டது. விவசாயம் செய்பவன் எல்லா வகைகளிலும் கஷ்டப்படுகிறான். கடனாளியாக ஆகிறான். இந்த இழிவு நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையைப் பார்க்கும் பொழுது நாம் வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுவும் போக, எனது தொகுதி ஒட்டப்பிடாரம். கோவில்பட்டி தாலுகா. கோவில்பட்டித் தாலுக்காவிற்கு யார் வந்தாலும், அமைச்சர்கள் வந்தா

லும், மற்றவர்கள் அந்த வட்டாரத்திற்கு வந்தாலும், அவ்வப்பொழுது அவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். தியாகச் செம்மல் தோன்றிய இடம், ஏகாதிபத்திய வெள்ளையன் ஆண்ட காலத்தில் "வெள்ளையனே வெளியேறு" என்று வீர முழக்கம் இட்டான் வீரபாண்டிய கட்டபொம்மன். அடுத்தாற்போல் விடுதலைக்காக கூக்குரலை எழுப்பினான் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை, சிறை சென்று செக்கிழுத்தான், கல் உடைத்தான். விடுதலைக்காக போராடி, ஆஷ்துரை கலெக்டரை மணியாச்சி ஜங்ஷனில் வைத்து சுட்டார் வாஞ்சிநாதய்யர் ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு வந்தால் எல்லோரும் இப்படிப் பெருமையாகப் பேசுகிறார்கள். "தனி ஒருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று எட்டையபுரம் தேசிய கவிமணி பாரதி பாடினான் என்றெல்லாம் பெருமையோடு எல்லோரும் பேசுவார்கள், எனது தொகுதியில். நமது மதிப்பிற்குரிய மேடைப் பேச்சாளர்கள். அப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த என்னுடைய தொகுதி இன்று என்ன நிலைமையில் இருக்கிறது என்றால், பஞ்ச நிலைமை அங்கே தாண்டவமாடுகிறது, உண்ண உணவு இல்லை, உடுக்க ஆடை இல்லை, குடிக்க தண்ணீர் இல்லை. இந்த அவல நிலை அங்கே நிலவுகிறது. மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் கோவில்பட்டி தாலுகாவை பஞ்சப் பகுதி என்றும், பின்தங்கிய பகுதி என்றும் பட்டியலில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, இது நாள் வரை அங்கு பஞ்சத்தைப் போக்குவதற்குத் தக்கநடவடிக்கை எடுத்தது கிடையாது என்று நான் உறுதியாகச் சொல்லிக் கொள்வேன். அங்கிருந்து, நான் ஏதாவது மனுக்கள் அனுப்பினால், அமைச்சர்களுக்கானாலும் சரி, மாவட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கானாலும் சரி, அந்த மனுக்கள் என்ன நிலைமையில் இருக்கின்றன என்றால் அமைச்சர்களிடமிருந்து எனக்குப் பதில் வரும்பொழுது 'பரிசீலனையில் இருக்கிறது' என்றுதான் பதில் வரும். மாவட்டத்திலுள்ள அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால், 'இப்பொழுது அரசாங்கத்தில் நிதிவசதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள்' என்று அவர்கள் பதில் அளிப்பார்கள். நாங்கள் என்ன செய்வது? இப்படி ஒரு அவல நிலை நிலவுகிறது. அதற்கு முன் 196 -வது வருட தேர்தலில் இப்படி பல பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருந்ததினால் தான், 20 ஆண்டு காலமாக சர்வாதிகாரமாக ஆண்டு வந்த காங்கிரஸ் வீழ்த்தப்பட்டது என்பதை நான் முற்றிலும் உண்மையோடு சொல்லிக்கொள்கிறேன். நமது தமிழக அரசு நான் சொல்வது தவறு என்று நினைத்தாலும் கூட, நான் இதை நல்லெண்ணத்தோடு சொல்கிறேன், அவர்களுக்கு உணர்த்துகிறேன் என்றும் அவர்கள் உண்மையோடு என் மீது பற்று கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு கூவம் சீரமைப்புத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது. அம்மாதிரி சீரமைப்புத் திட்டங்களைக் கொண்டு வருவது பற்றி நான் சீரோடும், சிறப்போடும் வரவேற்கிறேன். ஆனால், கோவில்பட்டி வட்டாரத்தில் குடிதண்ணீர் இல்லை என்று பல ஆண்டுகளாக அதற்கு வேண்டிய முயற்சி எடுத்தாலும் கூட; இன்னும் தண்ணீர் பற்றாக்குறை தீர்ந்தபாடில்லை. எங்கள் வட்டாரத்தைப் பார்த்தால் எங்கும் குடிதண்ணீர் பஞ்சம், சாலை வசதி கிடையாது. என் ஊரில் மட்டுமல்ல, நான் பொதுவாகவே எங்கள் மாவட்ட உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். பலஊர்களில் இம்மாதிரி ரோடு வசதி இல்லை. நண்பர் திரு. வெள்ளைத் துரை ஊருக்குக் கூட ரோடு வசதி இல்லை. இந்த அவல நிலை மாற்றப்பட்டு எல்லா இடங்களிலும் ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பருவ மழை தவறியிருப்பதால், உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் அங்குள்ள எல்லா கிராமங்களிலும் ரேஷன் கடை திறக்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் உணவுப் பற்றாக்குறை தீர்க்கப்படாததால்தான், பல பிரச்னைகளுக்கு அவர்கள் செவி சாய்க்காதது தன் காரணமாகத்தான் 1967 தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் முறியடிக்கப்

பட்டார்கள். (மணி அடிக்கப்பட்டது) தயவு செய்து எனக்கு மேலும் ஐந்து நிமிடங்கள் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியைப் பொறுத்த மட்டில் என்ன சொல்கிறேன் என்றால், அது மிகவும் பின் தங்கிய தொகுதி. நாங்கள் அவ்வப்பொழுது கொடுக்கிற மனுக்களை பரிசீலனை செய்து, தாமதமில்லாமல் உணவுப் பங்கீடு கடைகளைத் திறக்க வேண்டும், ரோடு வசதி, குடி தண்ணீர் வசதி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, வரிவஜா, அரசாங்கக் கடன், ஒத்திபோடுதல் அந்தப் பிரச்னைகள் மேலும் தாமத மில்லாமல் தீர்க்கப்பட வேண்டும். மேலும், 'ஒருத்தி உடுக்க உடை இல்லை என்று உடை மாற்றுவதற்காக ஓசி கேட்டு போனாளாம்; அந்த சந்தர்ப்பத்தில் அவளும் ஈச்சம் பாயைக் கட்டிக் கொண்டு அவள் எதிரிலே வந்தாளாம்' என்று பழமொழி சொல்வது உண்டு. அந்த மாதிரி நிலை தான் அங்கே நிலவுகிறது. இந்தப் பிரச்னைகளெல்லாம் உடனடியாக' தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். இன்னொரு சந்தர்ப்பத்தில் இப்பொழுது சொல்லவிட்டுப் போனதை மீண்டும் தொடருவேன் என்று சொல்லி அமர்கிறேன்.

* **திரு. செஞ்சி வெ. முனுசாமி:** சட்டமன்றத் மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற பல இளைஞர்களுக்கு அரசியல் ஆசானாக இருந்த, அறிவின் சுடரை இழந்து இருக்கின்ற இந்த நேரத்தில், என் இதயத்தில் வேதனையை தேக்கி வீர வணக்கத்தை மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்குச் செலுத்தி, என் உரையைத் தொடங்குகிறேன்.

1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையில் முன்னே வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டுக்கான நிதி நிலையை விளக்கிக் காட்டும் பொறுப்போடு, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் நிதியை ஒட்டி எந்த எந்த நிலைகள் இருக்கின்றன என்பதை நிழல் படம் போன்று எடுத்துக் காட்டும் அளவில் இது அமைந்திருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் இந்த மன்றம் மறந்துவிடாது என்று நினைக்கிறேன். முதல் அமைச்சராக அமரர் அண்ணா அவர்கள் டெல்லிக்கு பயணம் சென்று அங்கு முதலமைச்சர் மாநாடுகளில், தேசீய அபிவிருத்திக் கவுன்சிலாக இருந்தாலும், வேறு மற்ற மற்ற திட்டக் குழு போன்றவைகளாக இருந்தாலும், மத்திய சர்க்காரிலே அதிகாரம் குவிந்து கிடக்கும் நிலையைச் சுட்டிக்காட்டி, அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டே தீர வேண்டும் என்றும் இந்தப் போக்கு நீடித்தால், மாநில சர்க்கார்கள் ஒழுங்காக, மக்கள் மத்தியில் நல்லதொரு பெயரை எடுக்க முடியாது என்பதனை பல முறையிலும் விவாதித்து வந்திருக்கிறார்கள். யாரும் அன்று அதை ஒத்துக் கொள்ள முன்வரவில்லை, அண்டை மாநிலங்கள். ஆனால், இன்றைக்கு பேரறிஞரின் கருத்து ஏற்கப்படும் நிலை இருக்கிறது. அண்மையில், மைசூர் மாநிலம் எந்த அளவிற்கு நம்மோடு ஒத்துப் பாடியது என்பதை நாம் நன்றாக அறிவோம். நேற்றைய தினம், அண்டை மாநிலத்தில் ஆந்திர மாநிலத்தில், பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார் ஆந்திர மாநில முதல் அமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள். அந்த நேரத்தில், நிதிநிலை வாயில்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் நிதி அளிக்கும் முறையில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி யிருக்கிறார். அங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் நிதிநிலை அறிக்கையை, அதுவும் துண்டு விழும் பட்ஜெட்டை, ஆறு மாதத்திற்கு நீட்டப் பட்டதை, 8 கோடி 60 லட்சம் துண்டு விழும் பட்ஜெட்டை அளிக்கும் அவரே மத்திய சர்க்காரின் பேரில் கணைகளைத் தொடுத்து அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். அப்படி யிருக்கும் நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இங்கே அமர்ந்திருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் நிச்சயமாக எங்களைக் குறைகூற மாட்டார்கள் என்று கருதுகிறேன். எதற்கெடுத்தாலும், மத்திய சர்க்காரை தாக்குகிறார்கள், பழைய பாட்டையே பாடுகிறார்கள் என்று சொல்லும் போக்கை மாற்றிக் கொள்வார்கள் என்று நினைக்கின்றேன். இன்றையதினம் ஏற்பட்டிருக்கும் சிக்கல் ஒரு தனிப்பட்ட கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையல்ல. 1950-ல் அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்கள், ஊழல்கள் இவற்றை மாற்றியே ஆக வேண்டும். அந்தப் பொறுப்பு இந்திய துணைக் கண்டத்தின் பேரரசுக்கு இருக்கிறது. அந்த முறையில் தமிழர்கள் முன்னோடியாக இருந்து, இந்த மாமன்றத்தின் வாயிலாக இந்திய பேரரசுக்கு, அரசியல் சட்டத்தை மாற்றி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் வகையில், அமைக்க வேண்டும் என்று தெரிவிக்க வேண்டும். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசு ஏதோ ஒரு ஹோல்சேல் வியாபாரி போலவும், மாநில சர்க்கார்கள் ஒரு சப்-ஏஜெண்ட் போலவும், ஏஜண்டுகளாகவும் இருந்து நடப்பது போல அரசியல் சட்டத்தின் ஆர்டிகிள்கள் இருக்கின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இங்கே நம்முடைய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்த நேரத்தில் கடன்பட்ட நெஞ்சத்தோடும், கவலை கொண்ட நெஞ்சத்தோடும் தான் வைத்திருக்கிறார்கள். கடன் பளுவு ஏறுகிறது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. 1952-53-ல் ராயலசீமாவில் பஞ்சத் துயர் நிவாரணத்திற்குக் கொடுத்த தொகைக்கு 1970 மார்ச் 31-ம் தேதியோடு ஒப்பந்தப்படி தவணையை கட்டியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்றால் பட்ட கடனுக்கு இன்று செலுத்தியாக வேண்டும் என்கிற நிலை. இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் மாநிலங்கள் பிரிக்கப் படக்கூடாது. இணைந்திருக்க வேண்டும், நேச உணர்வு வேண்டும் என்றெல்லாம் பேசப்படுகிறது. நேச உணர்வு வேண்டும் என்றால், ஒன்றை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். நேசத்தோடு பழகுவது என்றால், கடன் வாங்கும் நேரத்தில், கைமாற்றுக் கடன் என்று வாங்கும்போது அதற்கு வட்டி கேட்கும் நிலை இருக்கக் கூடாது. நம் பகுதியிலே கூட நண்பர்கள் பணம் வாங்கும் போது கூட, அதை கைமாற்றுக் கடனாக வாங்கும்போது, அதற்கு வட்டியா கேட்கிறோம்? இன்றைய தினம், இந்திய அரசு நம்மிடம் வட்டி பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த மன்றத்தின் வாயிலாக ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன். இப்பொழுது மாநில அரசாங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களெல்லாம் வட்டியில்லாக் கடன்களாக இருக்க வேண்டும். 'Loans without Interest' என்று சொல்லும் கடன்களாக அமைய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். எதற்கெடுத்தாலும், மக்கள் பிரதிநிதியாக இருந்தாலும், மாநிலமாக இருந்தாலும், கடனாக இருந்தாலும், மக்கள் தொகை அடிப்படையில் தான் மத்திய சர்க்கார், இந்தியப் பேரரசு பணங்களை ஒதுக்கித் தருகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்தி, பல விருதுகளையும், சபாஷ் பட்டத்தையும் பெற்று இருக்கிறோம். ஆனால், அதிலெல்லாம் தமிழ் நாடு முன்னோடியாக இருந்ததால், 42 ஆக இருந்தது, இன்றைக்கு 39 என்ற அளவில் நம் பிரதிநிதிகள் குறைந்து இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் "ஏ" நகரங்கள், "பி" நகரங்களாக மாறிவிடும்; "பி" நகரங்கள் "சி" நகரங்களாக ஆகிவிடும் என்கிற ஐயப்பாடு தான் இருக்கிறது. உண்மையிலேயே மக்கள் தொகை அடிப்படையில் அந்த தத்துவத்தில், அதை பேஸிக்காக, அடிப்படையாக வைப்பதானால், 1962-ல் மாநிலங்களில் பரவலாக எந்த மக்கள் தொகை இருந்ததோ, அந்த அடிப்படையில் மானியங்களை மதிப்பிடும் அளவுக்கு செயல் படவேண்டும். இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையல்ல. காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொண்டாகவேண்டும். அப்பொழுதுதான் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை அமுலாக்க முடியும். இப்படிப்பட்ட நேரத்தில், நிதி கேட்கும்போது, விளக்கிச் சொல்லவேண்டுமென்றே இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஏதோ மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் போட்டி உண்டாக்க வேண்டுமென்று தமிழக அரசு இல்லை. இப்படி காங்கிரஸ் கட்சி மேடையில் பயன்படுத்தக்கூடாது என்பதை நண்பர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டு, என்னுடைய அடுத்த பொருளுக்குச் செல்ல விழைகின்றேன்.

தொழில் மந்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே பொறுப்போடு படித்துப் பார்த்தால், தெரியும், தொழில் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலை நிறுவும் வகையில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலை பற்றிச் சொல்லும்போது, முன்னால், சேலத்திலே இரும்பாலையா ? யார் சொன்னது, எப்பொழுது சொன்னது, காஞ்சிபுரத்தில் பாருங்கள் என்றார்கள். அந்த நிலையை மாற்றி, நிச்சயமாக வரும் என்று தொடக்க வேலைகள் துவக்கப்படும் என்று பணம் ஒதுக்கீடு செய்திருப்பதைப் பாராட்ட வேண்டும். உரத் தொழிற்சாலை விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கும் நிலையில், உரத்திற்கு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எந்த அளவிற்கு இயற்கை சதி செய்திருக்கிறது என்பதை திட்டவட்டமாக, வெளிப்படையாக, மறைக்காமல் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்கள். அதில் வடாற்காடு, செங்கல்பட்டு என்கிற மாவட்டங்களோடு அறிக்கையில் நிறுத்திக்கொண்டு விட்டார்கள். தமிழகம் பூராவுமே பரவலாக பல பகுதிகளிலும் பஞ்ச நிலை இருப்பதால், பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனம் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. அவ்வளவு மோசமாக நிலைமைகள் இருக்கின்றன. தஞ்சை இன்றைக்கு தமிழகத்தையே வாழவைக்கும் மாவட்டம். தஞ்சை கொழித்தால் இந்த மாநிலம் பூராவுமே சுபிட்சம் அடையும். செங்கல்பட்டு, வடாற்காடு, தென் ஆற்காடு போன்ற தன்னிறைவு ஏற்படுத்திக் கொள்ளும் மாவட்டங்களும் இன்றையதினம் எதிர்பாராத வகையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களை ஒட்டியிருக்கின்ற திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் உண்மையிலேயே பஞ்சம் ஏற்படும் அளவில் காட்சி இருக்கிறது. அங்கே ஏரிகள் எல்லாம் பாலைவனமாக காட்சியளிக்கின்றன. வயல்காடுகள் எல்லாம் எப்போதுமே விளையாத நிலங்களாகக் காட்சியளிக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களுக்கும் தமிழக அரசு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" என்ற நிறுவனம் விவசாயத்திற்குத் தேவையான டிராக்டர்கள், மின்சார விசையேற்றங்கள், எண்ணெய்ப் பொறிகள் முதலியன வாங்குவதற்காக விவசாயிகளுக்குக் கடன் தந்து கொண்டிருக்கிறது. ஆனால் டிராக்டர்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை. பெர்கூஸன் டிராக்டர் வேண்டுமென்றால் நான்கு ஆண்டுகள் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இண்டர்நேஷனல் டிராக்டர் வேண்டுமென்றால் ஓராண்டு ஆகும் என்று சொல்லப்படுகிறது. விவசாயத்திற்கு உதவி செய்து விவசாயத்தை ஊக்குவிக்கின்ற நேரத்தில், இப்படி விவசாயக் கருவிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது ஆகவே, அரசாங்கம் அயல் நாடுகளிலிருந்தாவது டிராக்டர்களை வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். விவசாயக் கருவிகள் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

உர விற்பனை நிலையங்களில் போதிய உரத்தைக் கையிருப்பில் வைத்துக்கொள்ள கிடங்குகள் போதிய அளவில் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்முதலைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு செஞ்சி, திண்டிவனம் பகுதிகளில் நிலைமை எப்படி இருந்தது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். போன வருடம் மூட்டை 35 ரூபாய்க்கு கூவிக்

கூவி விற்றார்கள். ஆனால் இந்த வருடம் நிலைமை அவ்வாறு இல்லை. இவ்வருடம் விளைச்சல் இல்லை. கொள்முதல் விஷயத்தில் அந்தப் பகுதிகளில் கெடுபிடி இருந்து வருகிறது. இந்த நேரத்தில் மாமன்றத்தின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

கொள்முதலுக்குக் குறிக்கப்பட்ட விலையைப் பொறுத்த வரையில், உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. கொள்முதலுக்கு விதித்திருக்கின்ற விலை போதாது என்றும் தீர்ப்பு அளித்திருக்கிறது. மற்றப் பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதைப் போல நெல்லுக்கும் ஆண்டு ஒன்றுக்கு, அவசியத்திற்கேற்ப விலையை நிர்ணயிக்கவேண்டும். இதை உணர்ந்து, மாநில அரசு மத்திய அரசுடன் கலந்து விலையை நிர்ணயிக்க வேண்டும். மாநில அரசு இதைக் கண்டிப்பாகச் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்பொழுதுதான் இந்த நிதிநிலை அறிக்கையை ஏழை எளியவர்கள் பாராட்டுவார்கள். பட்ஜெட் என்று சொல்லும்போது, எந்தெந்தப் பொருள்களின்மேல் வரிகளைப் போடலாம் என்று மத்திய அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு இப்போது 150 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள் உபயோகிக்கும் மண்ணெண்ணெய்க்கும், குருடாயில், டீசல் போன்றவற்றிற்கும் மத்திய அரசு வரி போட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையின் 7,900 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் முறையில் வகை செய்யப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். வேலை வாய்ப்பைப் பெற இருக்கின்ற 7,900 குடும்பங்கள் நிச்சயமாக இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டும்.

மேலும், கல்யாணம் செய்ய முடியவில்லையே என்று கலங்கிக் கொண்டிருந்த அரசுப் பணியாளர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கையில் கடன் வழங்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இதை எல்லோரும் கட்சி மாச்சரியத்தை விட்டு, நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும், நிச்சயமாக அரசுப் பணியாளர்கள் பாராட்டுவார்கள். ஏழை எளியவர்கள் பாராட்டுவார்கள். ஆசிரியர்களைக் கொண்ட 7,900 குடும்பத்தினர் பாராட்டுவார்கள். இந்தப் பாராட்டு தமிழக அமைச்சர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும் என்றென்றும் உண்டு என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. க. முருகேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, வரியில்லாத ஒரு வரவு-செலவுத் திட்டமாக இருந்த போதிலும், மக்களுக்கு சுபீட்சத்தைக் கொடுக்கக் கூடிய வகையில் எந்த விதமான திட்டமும் இதில் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

உணவு உற்பத்திக்குப் பெரிதும் பாடுபடும் இந்த அரசு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மக்கள் விரும்பும் சின்னாறு அணைத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த நிதி ஆண்டில், நிதிஒதுக்கீடு செய்யப்படாததைப்பார்த்து நான் மிகவும் வருந்துகிறேன். சின்னாறு அணைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலும் எழுத்து மூலமும் கோரி வந்திருக்கிறேன். சின்னாறு அணைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனுடைய பூர்வாங்க பரிசீலனை முடிந்து சுமார் 108 லட்சம் ரூபாய் அளவில் எஸ்டிமேட் போட்டு, முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அணையினால் சுமார் 3,000 ஏக்கர் புதிய பாசன வசதி அடையும் என்று கூறிக்கொள்ளுகிறேன். மேலும் இந்தத் திட்டம்

[திரு. க. முருகேசன்] [1969 மார்ச் 4

முடிவு செய்யப்பட்டால், தர்மபுரி தாலூக்கா பெரிதும் பயனடையும். பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அடைவதுடன், பல பெரிய ஏரிகளும் அதாவது, பாலக்கோடு ஜேரதலா ஏரி வாய்க்காலிலிருந்து பாப்பாரப்பட்டி, தர்மபுரி, கடகத்தூர், சோகத்தூர் போன்ற பெரிய ஏரிகளும் பாசன வசதி அடையும்.

தற்சமயம் பாலக்கோட்டில் ஏற்படப்போகும் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வேண்டியுள்ள தண்ணீரும் தங்குதடையில்லாமல் கிடைக்க வாய்ப்பு உண்டாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை, தற்பொழுது நிதியமைச்சராக உள்ள மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்தபொழுது அவர்களிடமும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தர்மபுரிக்கும் பாலக்கோட்டுக்கும் வருகை தந்த நேரத்தில் பெரிதும் வற்புறுத்துச் சொல்லிக்கொடுத்திருக்கிறோம். அமைச்சர் அவர்களும் இதுபற்றி கவனிப்பதாகவும், நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார். பாலக்கோடு தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்வது என்னவெனில், இந்த அணைத் திட்டத்திற்கு, இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்து மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்.

அடுத்தபடியாக, நெசவாளர் குறைகளை நிரந்தரமாகப் போக்க இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான திட்டங்களும் குறிப்பிடப்படவில்லை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருப்பது நெசவுத் தொழில். நெசவாளர்கள் இன்றைய தினம் தொழில் வாய்ப்பின்றி, பட்டினி கிடக்கும் பரிதாப நிலைமை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அரசு தலையிட்டு நெசவாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நெசவாளர் சமூகத்தை, குறிப்பாக செங்குந்தர் வகுப்பை "மிகவும் பின்தங்கிய வகுப்பில்" (Most Backward Community List)-ல் சேர்த்து, அவர்கள் அதிக அளவு படிக்க வாய்ப்பும் வசதியும் பெற்று, வாழ்க்கையில் முன்னேற சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நெசவாளர்களுக்கென "க்ஷேமநல வாரியம்" ஒன்றை அமைத்தால் நெசவாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இதுதவிர, கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும், மற்ற கூட்டுறவுத் துறைகளிலும் நெசவாளர் சங்கங்கள் போட்டிருக்கும் பங்குத் தொகைக்குப் பல ஆண்டுகளாக வட்டி கொடுக்கப்படாமல் இருந்து வரும் நிலைமை இருக்கிறது. இதுமட்டுமல்ல, நெசவாளர் சங்கங்கள் மில்களிலும் இதர கட்டிடம் போன்றவைகளில் போடப்பட்டுள்ள மூலதனத்தை கவர்ன்மெண்ட் ஏற்றுக்கொள்ளாததால், பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இன்று மூடப்பட்டுள்ளன. இதைப்பற்றியும் அரசு தக்க கவனம் செலுத்த வேண்டும். நெசவாளர் தொழிலாளர்களை வாழவைக்க தக்க வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து தேர்தல்கள் அடுத்த ஆண்டு வரப் போகிறது. இன்னும் பஞ்சாயத்து தேர்தல் முறையைப்பற்றியும், சில சீர்திருத்தங்கள் பற்றியும் அரசு முடிவு எடுக்கவில்லை. பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் தர வேண்டும். நிர்வாக அதிகாரிகளை தலைவர் அவர்களின் காரியதரிசிகளாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடியாக, பஞ்சாயத்து ஊழியர்களின் பஞ்சப்படியை அரசு ஆண்டுக்கு ஆண்டு உயர்த்திக்கொண்டே போகிறது. இது பஞ்சாயத்திற்கு ஏற்படும் ஒரு சுமையே ஆகும். பஞ்சாயத்திலிருந்து இந்த சம்பள உயர்வை சரிக்கட்ட முடியவில்லை. ஆகையால் அரசு கட்டாயம் பஞ்சாயத்துகளுக்கு ஈட்டு மானியம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

1969 மார்ச் 4] [திரு. க. முருகேசன்]

என்னுடைய தொகுதியில் பாலக்கோடு பஞ்சாயத்து யூனியன் மிகப் பெரிய பஞ்சாயத்து யூனியனாக, 55 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருக்கிறது. இதை பாலக்கோடு பஞ்சாயத்து யூனியன், காரியமங்கலம் பஞ்சாயத்து யூனியன் என்றபடி இரண்டு பஞ்சாயத்து யூனியன்களாக பிரிக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் செம்மையாக நடைபெற்று கிராமப் பஞ்சாயத்துக்கள் அரசு கொடுக்கும் அரிய பல திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தி, பயன் அடையும் என்று சொல்லிக்கொள்கிறேன்

அடுத்தபடியாக, தர்மபுரி மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. தர்மபுரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பஞ்ச நிவாரணத் தொகை மிகவும் குறைவு. விவசாயிகளுக்கு வரிவஜா கொடுக்க வேண்டும். கடன் வசூல் முதலியவை தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் 1965-ம் வருடம் அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் தனியாகப் பிரிக்கப்பட்டு, நான்கு வருடங்கள் ஆகின்றன. அந்த மாவட்டத்தில் 100 உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டும் சீஃப் எஜுகேஷன் ஆபீசர் தனியாக இல்லை. மாவட்ட நூல் ஆணைக்குழு பிரிக்கப்படாமல் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திற்கென "அக்ரிகல்சரல் என்ஜினியரிங்" தனி விவசாயப் பொறியியல் அலுவலகம் இல்லை. இவைகளையெல்லாம் சேலம் மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரித்துத் தரும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்க ஒகேனக்கல் மின்சாரத் திட்டத்தை முடிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மேலும், இயற்கை வளம் பொருந்திய ஒகேனக்கல்லில் நிறைய யாத்ரிகர்கள் அன்றாடம் வந்து செல்கிறார்கள். ஆகவே, உல்லாசப் பயணிகள் அதிக அளவில் வருவதற்கும், அங்கு தங்குவதற்கும் ஏற்றபடி சிறந்த சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்ட வேண்டுமென்று அரசை மிகப் பணிவுடன் வேண்டிகொள்கிறேன். அரசு தக்க முறையில் நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

°**திரு. ஏ. அ. சுப்பராஜு :** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் 16 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இது டெபிசிட் பட்ஜெட். நன்றாக உள்ளே பார்ப்போமானால் மத்திய சர்க்காரிடம் பணம் கேட்டிருக்கிறோம். பணம் வந்தால் சரியாகிவிடும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மத்திய சர்க்காரிடம் இருந்து எப்படி பணத்தை வாங்கப்போகிறார்கள், வாங்குவதற்கான திட்டம் என்ன ஆகிய எதுவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இப்போதுள்ள நிலை என்னவென்றால் ஆளும் கட்சியினர் காங்கிரஸ் கட்சியினரைப் பார்த்து காங்கிரஸ் கட்சியினர் தானே மத்தியில் ஆளுகிறார்கள், அவர்களை நமக்குப் பணம் கொடுக்கச் சொல்லுங்கள், அவர்கள் பண உதவி செய்ய மறுப்பதால்தான் நமக்கு எல்லாச் சங்கடங்களும் நேரிடுகின்றன என்று காங்கிரஸ்காரர்களைப் பார்த்துக் குறை சொல்வதும், இவர்கள் நீங்கள் மத்திய சர்க்காரை எதற்காகக் குற்றம் சாட்டுகிறீர்கள், உங்களால் முடியவில்லை என்று திருப்பிச் சொல்லுவதும்—இப்படி இந்தக் கட்சி அந்தக் கட்சியை, அந்தக் கட்சி இந்தக் கட்சியை மாற்றி மாற்றி குற்றம் சாட்டுவதைத் தான் பார்க்கிறேன். நாங்கள் சுயேச்சை—எங்களுக்கு என்ன தோன்றுகிறது ? பக்கத்தில் மைசூர் மாநிலம் இருக்கிறது. ஆந்திர மாநிலம் இருக்கிறது. அங்கெல்லாம் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்கிறது. காங்கிரஸ் கட்சி பதவியில் உள்ள மாநிலங்களிலும் மத்திய சர்க்கார் போதுமான நிதி உதவி செய்யவில்லை என்றுதான் சொல்லுகிறார்கள். ஆக நமது மாநிலத்தில் காங்கிரஸ் அல்லாத கட்சி ஆட்சி நடக்கிறது என்கிற காரணத்தினால் மத்திய அரசாங்கம் உதவி செய்ய மறுக்கிறது என்ற நிலை இல்லை. அவர்கள் அவர்களிடம் உள்ள நிதியை எல்லா மாநிலங்களுக்கும் குறிப்பிட்ட விகிதத்தில் பிரித்தளிக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கு நமக்கு இருக்கிற வாய்ப்பினை வைத்துக்கொண்டு இங்கே ஆளுகிறவர்கள் எந்தத் திட்டத்தினைத் தயாரித்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். நம்மிடம் இருக்கிற வாய்ப்பினைக் கொண்டுதான் நாம் நம்முடைய திட்டத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். நான் ஒரு நகரசபைத் தலைவர். நகரசபைத் தலைவர் என்ற முறையில் அந்த நகரசபையின் வரவு செலவுக் கணக்கை டெபிட்டாகத் தயாரித்து அந்தப் பணத்தை மாநில சர்க்கார் தான் கொடுக்க வேண்டும், பல்வேறு துறைகளில் அதிகமான வரியைப் போட்டுப் பணம் சேகரிக்கிற திராவிட முன்னேற்றக் கட்சி அரசாங்கம் நகராட்சிகளுக்குப் போதுமான தொகைக் கொடுக்காதது பெரும் குற்றம், இதற்கு திராவிட முன்னேற்றக் கட்சிதான் பொறுப்பாளி" என்று குற்றம் சொல்லிக் கொண்டே போகலாம். இப்படி ஒவ்வொரு நகராட்சிகளும் மாநில அரசைக் குற்றம் சாட்டிக்கொண்டே போனால் என்ன செய்வது? நகாராட்சிகள் தங்களுடைய வருமானத்திற்கு ஏற்ற திட்டத்தைத் தயாரித்துக் கொண்டு செயல்பட்டாக வேண்டும். அதேமாதிரி மாநில அரசாங்கம் அரசியல் அமைப்புபடி அவர்களுக்குள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு திட்டம் தயாரித்துச் செயல்பட்டாக வேண்டும். அரசியல் அமைப்புக்குள் கட்டுப்பட்டே மத்திய சர்க்காரும் இயங்கி வருகிறது என்பதை நாம் உணர்வோம். நம்முடைய பொறுப்பை பிறர் மேல் பழியைப் போட்டுவிட்டு நாம் தட்டிக் கழிக்கப் பார்ப்பது சரியல்ல.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய பட்ஜெட் துண்டுவிழுகிற பட்ஜெட் என்று சொல்லுகிறார்களே, மற்ற மாநிலங்களுடைய பட்ஜெட்டுகளும் துண்டுவிழுகிற பட்ஜெட்கள் தான் என்பதை உணர்வார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: எல்லாவற்றையும்விட இது பெரிய துண்டாக இருக்கிறது. அதைத் தான் சொல்கிறேன். எதற்காகத் துண்டுவிழுகிற பட்ஜெட்டாகத் தயாரிக்க வேண்டும்? இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் நமக்கு இருக்கிற வாய்ப்புக்களை வைத்துக்கொண்டு நல்ல விதமாகச் செயல்படவேண்டும் என்பதுதான் என் யோசனை.

அடுத்து, புது வரி எதுவும் போடாத பட்ஜெட்டாக இது வந்திருப்பது சந்தோஷம். இந்த நாட்டில் தொழிற்சாலைகள் மட்டும் பெருகிப் பயன் இல்லை. விவசாயத்தையே நம்பி 70 சதவிகிதம் மக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் நல்லவிதத்தில் வாழ்க்கை நடத்த முடியவில்லை என்றால் எத்தனை தொழிற்சாலை கட்டினாலும் கூட, தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் வாங்கப்படமாட்டாது தேங்கிவிடும். கன்ஸியூமர்ஸ் இல்லை என்றால் தேக்க நிலைதான் ஏற்படும். அதனால் உற்பத்தி தேக்கம், போட்ட முதலீட்டுக்கு ஏற்ற வருமானம் இன்மை, நஷ்டம், வாங்கிய கடனுக்கு வட்டி கூட கட்டாத நிலைமை, இதனால் தொழிலாளர்களுக்கு போனஸ் எங்கே, சம்பளம் எங்கே, இருக்கின்ற தொழிலாளர்களையே வேலையைவிட்டு எடுக்க வேண்டிய நிலை வரும், இவ்வளவும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற 70 சதவிகிதம் மக்கள் பெரிதும் பாதிக்கும்படியாக விடுவதனால் என்பதை நாம் உணரவேண்டும். அந்த நிலைதான் வந்துகொண்டிருக்கிறது. மழையில்லை. தண்ணீர் இல்லை. வரவர மக்கள் நகரத்திற்கு நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி அதிக அளவில் மக்கள் நகரத்தை நோக்கி வருவதனால் அதிவேகமாக நகரத்தில் இருக்கக் கூட இடம் இல்லாது. சுகாதார வசதி இல்லாது, மிகுந்த பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும். நகரத்திற்காக அரசாங்கமும் அதிகமான அளவு செலவு செய்ய வேண்டி நேரிடும். ஆக உடனடியாக அங்காங்கே உள்ள கிராம மக்கள் அவரவர்களது இடங்களிலேயே வளமான வாழ்வை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்தாக வேண்டும்.

இப்போது அக்ரோ இண்டஸ்டீஸ் மூலமாகக் கடன் கொடுக்கிறார்கள். கடனையும் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. ஜப்தி செய்யப்பட்டு, இருப்பதையும் விட்டுவிட்டு ஓட வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். என்னுடைய யோசனை என்னவென்றால் அக்ரோ இண்டஸ்ட்டிஸ் மூலமாக கிணறு வெட்டக் கடன் என்று கொடுப்பானேன்—கிணறு வெட்ட வேண்டுமா, வெட்டிக்கொடுத்து விடுங்கள், டிராக்டரை வாடகைக்கு கொடுத்து—வாருங்கள், சமுதாயக் கிணறு வெட்டிக்கொடுங்கள், பம்பு செட்டு போட்டு தண்ணீர் இறைத்து அதற்கு வாடகை வாங்கிவிடுங்கள். இப்படி எல்லாம் செய்துவிட்டால் கடன் கொடுக்கத் தேவையில்லை, ரெட்டேப்பிசத்திற்கு இடமில்லை. லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மிக அதிக அளவில் பயன் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக சிறு தொழில்கள் கிராமத்தில் பரவலாக ஏற்பட வசதி செய்தாக வேண்டும். அங்கங்கே ஏற்பட்டால்தான் விவசாய காலம் தவிர மற்ற நேரங்களில் விவசாயிகளுக்கு கிராமங்களிலேயே வேலை கிடைக்க வழியேற்படும். அவர்களும் வேறிடத்திற்குச் செல்லாமல், நகரங்களில் நெருக்கடியை ஏற்படுத்தாமல், ஆங்காங்கிருந்தபடியே வாழ்க்கை நடத்த முடியும். நமக்கும் செலவு குறையும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக கைத்தறிகளைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான பேர்கள் ஈடுபடுகிற தொழில் கைத்தறிதான். அதைப்பற்றியும் சிறிது பட்ஜெட்டில் கவனம் செலுத்தியிருந்தால் சந்தோஷமாக இருக்கும். இல்லாததுதான் வருந்த வேண்டியதாக இருக்கிறது. என்னைக் கேட்டால் கைத்தறிக்கு என்று ஒரு மந்திரியையே போடலாம். பீகாரில் எல்லாம் எத்தனை மந்திரிகள்—நான்கு எம். எல்.ஏ.க்கு ஒரு மந்திரி என்று போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இங்கே போட வேண்டியதில்லை என்றாலும் கைத்தறிக்கு ஒரு மந்திரி என்று தனியாகப் போடுவது மிகவும் அவசியம். நான்கு ஐந்து இலாக்காக்களை ஒருவரிடமே கொடுத்து அவர் ஒரேயடியாக தன்முன்னால் குவிந்திருக்கிற பைல்களைப் பார்ப்பதற்கு தூங்காமல் என்ன செய்ய முடியும்? எத்தனை பைல்களைத் தான் பார்ப்பது, அவர்களுக்கும் அலுப்பு ஏற்படாதா?

கைத்தறி நெசவாளர்களுக்கு சர்க்கார் என்ன நிவாரணம் அளிக்கப் போகிறது என்று தெரியவில்லை. ரொம்ப கஷ்டமான நிலை. கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்க வேண்டும். அதற்குப் பதில் ராஜாபாளையம் பக்கத்தில் ஆலக்குளத்தில் தொழிற்சாலை கட்டப் போகிறார்கள் என்றால் பலபேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. நாம் கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தால்தான் அவர்களது சங்கடம் ஓரளவாவது குறையும்.

இந்த மாதிரியாக வருங்காலத்திலே எந்த எந்த விதத்தில் இனிமேல் வருகிறவர்கள் கஷ்டத்தில் ஆழ்த்தப்படுவார்கள் என்பதை எதிர்பார்த்து அதைத் தடுத்து வருகின்ற சந்ததியார்கள் நல்ல நிலைமையில் இருக்கக் கூடிய முறையில் நாம இப்பொழுதே ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்பொழுதிருந்தே பட்ஜெட்டை தயார் செய்வதை நல்ல முறையிலே பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய முறையிலே செய்யாவிட்டால் மிக மோசமான நிலைமைதான் வருங்காலத்திலே ஏற்படும்.

அடுத்தபடியாக சிட்டி காம்பென்சேட்டரி அலவன்சைப்பொறுத்த வரையில் கெஜெடட் ஆபீஸர்களுக்குக் கொடுக்கவில்லை. அவர்களும் வீட்டில் தான் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல ஸ்டேடஸியில் இருந்தாக வேண்டும். பெரிய பெரிய அதிகாரிகளாக இருந்தால் கார் வைத்திருக்க வேண்டும். வீடு வேண்டும். அதற்காக அவர்கள் குடிசையில் இருக்க முடியாது. லஞ்சம் தாண்டவமாடுகிறது. மற்றப் பொருளாதார நிலைமைகளையெல்லாம் பார்க்கிற நேரத்தில் இந்த சிடி காம்பென்சேட்டரி அலவன்சையும் கெஜெட்டட் ஆபீஸர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த நிதி நிலை அறிக்கை திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, கைத்தறியைப்பற்றி எதுவும் சொல்லாமல் இருப்பது வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு 1969–70–ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நல்லிதயத்தைத் தொடுகின்ற இசையை எழுப்பிக் கொண்டிருந்த வீணையினுடைய நரம்புகள் அறுந்துவிட்டதைப் போல் அருமையான இலக்கியப் புத்தகத்தைப்படித்துக்கொண்டிருந்த நேரத்திலே அந்தப் புத்தகம் தீப்பிடித்ததைப் போல், அலங்காரப் படகொன்று புயல் காற்றால் சிதைந்துவிட்டதைப் போல் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர்களுடைய மறைவிற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றிகலந்த அனுதாபத்தை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயத்திற்கு முதலிடம் தந்த அறிஞர் அண்ணா அவர்கள் 1967–ம் ஆண்டில் பொறுப்பேற்றவுடன் எங்களுடைய யூனியனுக்குப் பணம் போதவில்லை என்று வேண்டுகோள் விடுத்த நேரத்திலே அவர்கள் பெரிய மனதோடு ஆறு லட்சம் ரூபாயை என்னுடைய தொகுதிக்கு வழங்கினார்கள்.

இருபது ஆண்டுகாலமாக தீயணைப்பு நிலையம் ஒன்று வேண்டுமென்று பொது மக்கள் அடிக்கடி கேட்டிருந்தும் காங்கிரஸ் அரசாங்கம் தொடர்ந்து அதற்கு மறுத்து வந்ததும், அதற்குப் பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் பெரம்பலூரில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்து இன்றைக்கு அது கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையிலே என்னுடைய தொகுதி மக்களும், நானும் அறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1969–70–ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கை போன்ற ஒரு கவர்ச்சியற்ற ஆவணமும் அவர் கை வண்ணத்தால் எழில் வண்ணம் பெற்றன என்று சொல்லியிருக்கிறார்கள், உண்மைதான். நம்முடைய அண்ணா அவர்கள் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் தன்னுடைய கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார்கள். தனித் தன்மையைக் காட்டியிருக்கிறார்கள். சிறந்த இலக்கிய கர்த்தாவாகிய கோல்ட்ஸ்மித் பற்றி ரேனால்டு என்ற அறிஞர்

'He touched nothing that he did not adorn'

என்று குறிப்பிட்டார்கள். அதைப் போலவே நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் தொடாத துறையில்லை, தொட்டு துலங்காத தலைப்பு இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்குப் மிகப் பெருமையோடு தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள். புதிதாகப் பதவியேற்றிருக்கிற கலைஞர் கருணாநிதி அவர்கள் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று அண்ணா அவர்களுடைய திட்டங்கள் மட்டுமல்ல, அவர்களுடைய எண்ணங்கள்படியும் செயல்படுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தைக்கு அடையாளமாக இந்த நிதி நிலை அறிக்கை நமக்கு முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் விரும்பிய படியரிசித் திட்ட நீட்டிப்பு, கல்விக்கு 65·39 கோடி ரூபாய் ஒதுக்கி பி.யூ.சி. வரை இலவசக் கல்வியளிக்க முன்வந்துள்ளது, விவசாயம், மின்சாரத்திற்குப் போதிய கவனம் செலுத்தி வருவது, ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், அண்ணாவின் ஏக்கம் நிறைந்த அவர்களின் தனிக் கவனத்தை கவர்ந்த சேலம் இரும்பாலை அமைப்பது, வரியற்ற அறிக்கையைத் தந்தது போன்ற திட்டங்களைத் தொடர்ந்துள்ளது. இவையெல்லாம் இந்த அரசு அண்ணா அவர்களின் வழியிலே நடைபோடுகிறது என்பதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. பாராட்ட வேண்டிய பலகாரியங்கள் இந்த நிதி நிலைஅறிக்கையில் இருக்கின்றன. 150 கோடிக்கு மேல் மத்திய அரசிலே மொரார்ஜி தேசாய்

வரி போட்டிருக்கிறார்கள். இங்கே பேசிய காங்கிரஸ் பிரமுகர்கள் மத்திய அரசு வரி போட்டது என்று சொன்னால், மத்திய அரசு பற்றி இங்கே பேசக் கூடாது, இந்த அரசு பட்ஜெட்டைப் பற்றித்தான் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். அவ்வளவு எளிதாக அவர்கள் அந்த வாதத்திலேயிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. மொரார்ஜி தேசாய் வரி போட்டதைப் பற்றி சுதந்திராக் கட்சி கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள். மதுலிமாயி கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், தங்களுடைய தூதுவராக டெல்லிப் பட்டணத்திற்கு அனுப்பியிருக்கிற காமராஜ் அவர்களை அங்கே பேசச் சொல்ல வேண்டும். தேர்தலுக்கு முன்னதாக காமராஜர் மந்திரி பதவிபற்றி ஒன்றும் பேசவில்லை. இப்பொழுது மந்திரி பதவி வந்தால் என்ன வராவிட்டால் என்ன என்று சொல்லுகிறார். விரும்பியோ விரும்பாமலோ மந்திரி பதவி கிடைக்கவில்லை. இந்த ஒரு காரியத்திற்காக வாவதுதுணை புரிவார் என்ற முறையில் வரிக் கொடுமையிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றுவதற்கு டெல்லியிலே பேசச் சொல்லுங்கள். 150 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பதைப் பற்றி சென்னையிலே உள்ள ஒரு தினசரிப் பத்திரிகை, ஏழை மொரார்ஜி தேசாயின் கையிலே சிக்கிக் கொண்டிருக்கிறான், அந்த ஏழையைத் துணியைப் பிழிவது போல் பிழிகிறார்கள் அதிலிருந்து ரத்தம் சொட்டுச் சொட்டாகச் சொட்டுகிறது. அந்தக் காட்சியைப் பற்றி காமராஜர் அவர்களைப் பேசச் சொல்லி விண்ணப்பம் செய்யுங்கள் அது அவர் தேசப் பிதா, ஏழை மக்களின் காவலன் என்று நீங்கள் சொல்லுகிற அளவுக்குக் காரணமாக இருக்க முடியும், என்று குறிப்பிட்டு இருக்கிறது.

மொரார்ஜி தேசாய்தான் பஞ்சமா பாதகம் செய்யக்கூடிய பட்ஜெட்டை வைத்து உள்ளார்கள் என்பதை நான் துணிவோடு சொல்லிக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் மற்றப் பெரியவர்கள் ஆக இருந்தாலும் எதைக் கொண்டுவந்தாலும் நாங்கள்தான் சொன்னோம் என்று பேசிக்கொண்டு இருக்கிறார்கள், நான் அப்போதே சொன்னேன் என்ற வாதம் வேடிக்கையான வாதம். அது யாருக்கும் கை கொடுக்காது. நாங்கள் தான் சொன்னோம் என்று சொல்லுகிறார்கள். அரண்மூர் அரண்மனைக்குத் தமிழகம் என்று பெயர் வைத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருக்கிறது. பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொண்டுவருவோம் என்று சொன்னார்கள். நம்முடைய கலைஞர் புதிய ஆட்சியிலே பி.யு.சி. வரை இலவசக் கல்வி என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியைப் பின்பற்றுகிறோம் என்பதற்கு இவையெல்லாம் எடுத்துக்காட்டுகள். எதையும் சொன்னதைச் செய்வார்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர் என்பது மக்களுக்குத் தெரியும். சொன்னோம் என்பதைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், செய்கிற காரியத்திற்கு வரவேற்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. மார்டின், திரு விநாயகம் அவர்கள் தெரிவித்தார்கள் சூதாட்டம் என்று லாட்டரியை. நான் கவனத்திற்குக் கொண்டுவா விரும்புகிறேன். தர்மர் காலம் முதல் சௌத் வீ பெப்பிள்ஸ் காலம் வரை தவறான வழியிலே குறுக்கு வழியிலே ஆயிரக்கணக்கானவர்கள் சென்றிருக்கிறார்கள். எனவே அரசாங்கத்தின் மூலமாக எந்தவிதமான நஷ்டமும் இல்லாமல் வருவாயை மேலும் பெருக்க நாட்டினுடைய பொது வருவாயைப் பெருக்க, நன்மையை அதிகரிக்க, நாட்டுச் செல்வத்தை வளர்க்க நாட்டிற்கு நல்ல முறையில் பயன்படக்கூடிய முறையில் இருக்க வேண்டுமென்றுதான் அறிஞர் அண்ணா அவர்கள் அதை ஆரம்பித்தார்கள். நல்ல முறையிலே அது பரிணமிக்கிறது. அதற்கு மக்களிடம் வரவேற்பில்லை என்று சொன்னால், அது மக்களுடைய குறையாக இருக்காலாமே தவிர, ஆட்சியினுடையகுறையாக இருக்க முடியாது, மக்களும் பணம் புரளுகின்ற நேரத்தில் அதை வாங்குவார்கள். பணம் இல்லாத நேரத்தில் வாங்குவதில்லை. மக்கள் இதை எதிர்க்காத நேரத்தில் காங்கிரஸ் கட்சி இதை எதிர்ப்பது வருந்தத்தக்கது.

[திரு. ஜே. எஸ். இராசு] [1969 மார்ச் 4

மத்திய அரசுக்கு மாநில அரசுகள் தரவேண்டிய கடன் தவணை
முறைகளில் மாற்றம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்ணா அவர்களும்
இதைப் பற்றிப் பல நேரங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இந்தக்
கடன் தவணை முறைகளை ஓரளவு மாற்றினால் தத்தளித்துக்கொண்டிருக்
கும் தமிழகம் ஓரளவுக்கு முன்னேற்றத்தைக் காண முடியும். அந்த
வகையில் தமிழக அரசாங்கத்தின் கோரிக்கையை டில்லி அரசாங்கம்
ஏற்றுக்கொள்ளுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் துணைபுரிய
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வருமானம் பெருகுவதற்கு அரசாங்கத்திற்கு வழி இருக்க வேண்டும்.
பொறுப்பாக இருக்கிற எதிர்க் கட்சிப் பெரியவர்கள் அரசாங்கத்தின் வரு
மானத்தைப் பெருக்க நல்ல யோசனைகளைச் சொல்லலாம். நம்முடைய
எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் திரு விநயகம் அவர்களும் மற்றவர்
களும் அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதற்கு எந்தவிதமான
ஆலோசனைகளையும் சொல்லாமல் லாட்டரிச் சீட்டுத் திட்டத்தைப் பற்றியே
அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் தமிழகத்தைப்
பொறுத்த வரையில், நிலையான, செம்மையான, பாரபட்சமற்ற அருமை
யான அரசு நடந்துகொண்டிருக்கிறது. இந்த அரசுக்கு நாம் கை கொடுக்க
வேண்டுமென்றால், கட்சி மாறுபாடுகளைக் கவனிக்காமல், தமிழகத்தின்
நிதி நிலைமைகளை அனுசரித்துப் போடப்படும் திட்டங்களுக்கும், இந்த அரசு
செய்ய விரும்பும் எல்லாத் திட்டங்களுக்கும் எதிர்க் கட்சி வரிசையினர்
நல்ல முறையில் ஆதரவைத் தெரிவிக்க வேண்டும்.

இன்று காலை இந்து பத்திரிகையில் ஒரு தலையங்கத்தைப் பார்த்தேன்.
அதிலே ஆந்திர முதலமைச்சர் படுகின்ற அவஸ்தையைப் பற்றிச் சொல்லி
யிருக்கிறார்கள். இன்று தமிழகத்தைப் போன்றே பல்வேறு மாநில
அரசுகளும் மத்திய அரசிடம் இருந்து பணம் பெறுவதற்குப் போராடத்
துவங்கிவிட்டார்கள். அகில இந்தியாவில் இருக்கின்ற பொருளாதார மந்
தத்தையும், நம்முடைய நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற பொருளாதாரத் தடங்
கலையும், மனதில் வைத்துத்தான் மாகாண அரசாங்கத்தினுடைய நிதி
நிலை அறிக்கையை மதிப்பிட வேண்டும். அந்த வகையில் பார்க்கும்போது
நம்முடைய நிதியமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற வரவு-செலவுத் திட்டம்
வரவேற்கத் தக்கது. துண்டு விழுந்திருப்பதைப் பற்றிச் சொன்னார்கள்.
நல்ல வேளையாக சிறு துண்டுதான் விழுந்திருக்கிறது. பெரிய வேட்டியாகத்
துண்டுவிழவில்லை. நம்மைவிடப் பெரிய மாநிலமான ஆந்திரத்தில் கூட
10 கோடி ரூபாய் அளவுக்குத் துண்டு விழுந்திருக்கிறது. இந்த வகையில்
எல்லாம் பார்க்கும்போது நம்முடைய தமிழக அரசின் வரவு-செலவுத்
திட்டம் வரவேற்கத் தக்க ஒன்று என்று கூறி என்னுடைய பாராட்டுகளைத்
தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு கே. சகாதேவக் கண்டர் : தலைவர் அவர்களே, 1969-70-ம்
ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்
களைச் சொல்ல முன்வந்துள்ளேன். நிதி நிலை அறிக்கையில் புதிய வரி
கள் எதையும் காணவில்லை, பி.யு.சி-க்கு இலவசக் கல்வித் திட்டத்தைக்
காணப் பெற்றுள்ளோம். இது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இருப்பினும்
இந்த பட்ஜெட் 16 கோடி ரூபாய் துண்டு விழும் பட்ஜெட்டாக இருக்கிறது.
இதைப் பூர்த்தி செய்ய மீண்டும் வரிகளை விதிக்கலாம் என்ற சந்தேகம்
இருக்கிறது. அல்லது குறிப்பிடப்பட்டுள்ள சில திட்டங்களை நிறைவேற்றாமல்
விட்டுவிடலாம் என்ற சந்தேகமும் இருக்கிறது.

தற்போது வட ஆற்காடு மாவட்டம் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது,
மக்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிற நிலைமையும், குடி தண்ணீர்
கூட இல்லாத நிலைமையும் இருக்கிறது. அந்த மாவட்டத்தைப் பஞ்சப்
பிரதேசம் என்று பிரகடனப்படுத்தி ஒதுக்கியுள்ள தொகைகளில் மாவட்டக்
கலெக்டர் ஒவ்வொரு யூனியன் வாரியாகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்,

1969 மார்ச் 4] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

அந்த வகையில் செங்கம் தாலுகாவில் உள்ள மூன்று யூனியன்களுக்கு
எவ்வித பணமும் ஒதுக்கப்படவில்லை. செங்கம் தாலுகாவில் சாத்தனூர்
அணைப் பகுதியில் 4,000 ஏக்கர் நிலங்கள்தான் இருக்கின்றன. மற்ற
இடங்கள் எல்லாம் வறண்ட நிலையில், குடி தண்ணீருக்குக் கூடக் கஷ்டப்
படுகின்ற நிலையில், ஆடு, மாடுகளுக்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலையில்
இருக்கின்றன. அந்தத் தாலுக்கா புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்
சாட்டைக் கூற விரும்புகிறேன்.

தானிப்பாடி என்ற கிராமம் 5,000 ஜனத் தொகை உள்ள கிராமம்.
அங்கு தண்ணீர் இல்லாமல் ஒரு மைல் தூரம் சுற்றளவுக்குத் சென்று
கிணற்றிலே போரிங் போட்டுத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய நிலை இருக்
கிறது. தானிப்பாடி வட்டத்தில் 1966-ம் ஆண்டில் புயல் மழையினால்
சேதப்பட்ட அணைப் பகுதிகளைப் புதுப்பிக்க வேண்டுமென்பதற்காக எஸ்டி
மேட்டுகள் தயாரிக்கப்பட்டு 1967-ம் ஆண்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.
அந்தத் திட்டம் 1967-ம் ஆண்டிலும் எடுத்துக்கொள்ளப்படவில்லை,
1968-லும் எடுத்துக்கொள்ளப்படவில்லை, 1969-ம் ஆண்டிலும் அதைப்
பற்றிச் சொல்லுகிறேன், அதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். கீரனூர் ஏரித் திட்டமும் அனுப்பப்பட்டிருக்கிறது. பெரு
மணம் என்ற கிராமத்தில் சின்னையன்குளம் என்ற ஏரித் திட்டமும் எஸ்டி
மேட் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நல்ல சிறு
பாசனத் திட்டங்களுக்கு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பப்பட்டும் நாளது
தேதி வரையில் அனுமதி கொடுக்கப்படவில்லை. கடந்த இரண்டாண்டு கால
மாக என்னுடைய தொகுதி புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்ற குற்றச்
சாட்டைக் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
வேலைகள் எல்லாம் கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
நிறுத்தப்பட்டுவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் 1966-ம் ஆண்டில் புயலால் பாதிக்கப்பட்ட
கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காக 10,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் தயார்
செய்து, டெண்டர்கள் கோரப்பட்டு, டேவணித் தொகை வாங்கப்பட்டும் கூட,
வேலை தொடங்கப்படவில்லை. புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்காக
ஒதுக்கிவிட்ட பணம் தீர்ந்துவிட்டது என்று கூறி, அந்தக் கட்டடத்தைப்
பஞ்சாயத்து யூனியன் மூலம் பழுது பார்க்கலாம்,புதுப்பிக்க வேண்டிய
தில்லை என்று உத்திரவு அனுப்பிவிட்டார்கள். இப்படிப்பட்ட அவல
நிலையை என்னவென்று சொல்லுவது ? காங்கிரஸ்காரன் என்ற கார
ணத்தை வைத்துக்கொண்டுதான் அந்தப் பகுதி புறக்கணிக்கப்படுகிறது.
சர்க்கார் பாரபட்சத்தைக் காட்டுகிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

1966-ம் ஆண்டில் திருவண்ணாமலை-தண்டாரம்பேட்டை ரோட்டில்
6-வது மைலில் கரிப்பூர் ரோடு வேலை செய்யப்பட்டது. மூன்று மைல்
தூரம் போட வேண்டிய ரோடு இரண்டு மைலோடு நின்றுவிட்டது. அதைப்
பற்றி 1967-ம் ஆண்டிலும், 1968-ம் ஆண்டிலும் பேசியிருக்கிறேன்.
இந்த 1969-ம் ஆண்டிலும் பேசுகிறேன். அந்த ரோடு மேலும் ஒரு மைல்
தூரம் போடப்படாமல் அப்படியே நிறுத்தப்பட்டது குறித்து பொதுப்
பணித்துறை அமைச்சருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும், மகஜர் கொடுத்
தேன். அந்த ரோட்டை மேலும் போடவேண்டுமென்று சொன்னால்,
அதற்கு வேண்டிய விவரங்களை, திட்டங்களைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர்
நேரில் வந்து சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலை
துறையில் டி.இ.-யிடம் இருந்து ஒரு உத்திரவு வந்தது. அதற்கு வேண்
டிய விவரங்களை எல்லாம் எழுதி அனுப்பினேன். பிறகு, அதற்கு வேண்
டிய நிலத்தைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அந்த நிலத்தைச் சட்ட
மன்ற உறுப்பினர் வாங்கிக்கொடுத்தால் அந்த ரோடைப் போடலாம் என்று
கூறினார்கள். இது போகாத ஊருக்கு வழி சொல்லும் கதையாக இருக்
கிறதே தவிர, உண்மையிலேயே வேலையை எடுத்துச் செய்ய வேண்டு
மென்ற நோக்கத்தில் சொல்லவில்லை. அங்கே நிலம் கிடைக்காமல் இருக்
கும்போது எப்படி வேலையைத் தொடங்கினார்கள். அதற்கு வேண்டிய முழு
நிலத்தையும் வாங்கிக்கொண்டுதானே வேலையைத் தொடங்கியிருக்க வேண்

டும். பாக்கி இருக் ம் ஒரு மைல் தூர ரோட்டைப் போடுவதற்கு நிலத்தை வாங்கிக்கொடு என்று சட்டமன்ற உறுப்பினரிடக் கேட்பது வேடிக்கையான விஷயமாகும்.

திருவண்ணமலையில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்டடம் கட்டுவதற்காக 3,000 ரூபாய் பில் போடப்பட்டது.

1966-ல் பில் வாங்கி பேஸ்மெண்ட் போட்டும் **1969**-ம் ஆண்டு வரை அந்த வேலை பூர்த்தியாகவில்லை. இதுகுறித்து ஆணையர் அவர்களுக்கும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நான் ரிப்போர்ட் செய்திருக்கிறேன். மூன்று வருடங்களாக செய்துவிடப் பட்ட வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. நாரையூருக்கு என்று ஒரு ரோடு போடப்பட்டது. அந்த வேலையும் இன்னும் பூர்த்தி அடையவில்லை. என் தொகுதியைப் பொறுத்த வரையில் எந்த வேலையும் ஆரம்பிக்கப் பட்டு முடிக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, அவை பூர்த்தியாக வில்லை. அதோடு புதிதாக ஒரு வேலையும் செய்யப்படவில்லை என்று குற்றச்சாட்டை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன். காங்கிரஸ்காரர்கள் தொகுதி, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தொகுதி, வேறு கட்சிக்காரர்களின் தொகுதி என்ற மனப்பான்மை சர்க்காருக்கு இல்லாமல் எந்த எந்த வேலைகள் எங்கெங்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமோ, அவைகளை ஆரம்பித்து பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாரஸ்ட் பற்றி சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். பாரஸ்ட் இலாகாவைச் சேர்ந்த இடங்களில், குறிப்பாக வட ஆர்க்காடு, திருப்பத்தூர் சரகத்தைச் சேர்ந்த வசைமலை, நத்தம்பள்ளி போன்ற யிடங்களில் மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டு லாரி லாரியாகக் கொண்டு செல்லப்படுகிறது. அதைப்பற்றி எனக்கு புகார் வந்தது. ஆகவே அதைப்பற்றி நான் ஃபாரஸ்ட் அதிகாரியிடம் ரிப்போர்ட் செய்தேன். அவர் என் கிராமத்திற்கு வந்து இங்குள்ளவர்கள் அதிகாரிகள் இல்லையா, அவர்களை விட்டு என்னிடம் ஏன் ரிப்போர்ட் செய்தாய் என்று கேட்டார். நான் சொன்னேன். இங்குள்ளவர்கள் அதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். ஆகவேதான் தங்களுக்கு எழுதினேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள், சரி பரவாயில்லை, மரங்களை எங்கே வெட்டுகிறார்கள் என்று காண்பிக்க முடியுமா என்று கேட்டார்கள். அதற்கு நான், நல்ல வேடிக்கையாக இருக்கிறதே, எனக்கு வந்த புகாரின்மேல் நான் உங்களுக்கு ரிப்போர்ட் செய்தேன். எந்த இடம் என்பது பற்றியெல்லாம் அந்த ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது. அங்கு சென்றால் உங்களுக்குத் தெரியும், போய் பாருங்கள். அப்படி உங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால், அப்படி ஒன்றும் தெரியவில்லை என்று விட்டுச் செல்லுங்கள். என்னையே அந்த இடத்தைக் காட்டச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். மிரட்டுகிற தன்மையில் அவர் என்னைக் கேட்டார். பிறகு ரிக்கார்ட் பூர்வமாக எழுதியனுப்பினார்கள். குறிப்பிட்ட இடங்களை நீங்கள் காட்டவில்லை, ஒரு வாரத்திற்குள் அதைக் காட்ட வேண்டும், வெட்டப்பட்ட ஊர்களையும், சம்பந்தப்பட்ட நபர்களையும் தெரியப்படுத்த வேண்டும். இல்லையென்றால் உன்னுடைய ரிப்போர்ட் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக பதில் அனுப்பியுள்ளார்கள். அந்தக் குறிப்பைக் கூட நாளைக் காலையில் நான் இங்கே சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். எந்த விதமான திட்டங்களை நடத்தினாலும் சர்க்கார் அதிகாரிகள் முன்னுக்குப் பின் முரணாக பதில்கள் அனுப்புவது வேதனைக்குரியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, கொள்முதல். சர்க்கார் கொள்முதல் விலை உயர்த்தப்பட வேண்டும். கொள்முதல் செய்யும்போது பலவித கெடுபிடிகள் நடக்கின்றன. அரசாங்கத்திற்குத் தெரியுமோ தெரியாதோ அதிகாரிகள் எப்படியாவது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை நிறைவேற்ற வேண்டும் என்று சாதாரண விவசாயிகள் இரண்டு மூட்டை நெல்லை வைத்திருந்தாலும் அவர்களை வற்புறுத்தி, மிரட்டி அதைப் பிடுங்கிக் கொண்டு செல்வதை

நானே என் கிராமத்தில் பார்த்தேன். ஒவ்வொரு கிராமத்திலும் கொள்முதல் செய்யும்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் தனக்குச் சொந்தமான நெல்லை மெஷினுக்குக் கொண்டு போய் அறைக்க வேண்டும் என்றால் கிராம அதிகாரியிடம் சென்று, மூட்டைகளை எண்ணிக் கொடுத்து, கையெழுத்து போட்டு, அதற்கு பெர்மிட் கொடுத்த பின்புதான் நெல்லை அறைக்க வேண்டுமென்று திட்டம் வகுத்தார்கள். மெஷினில் அறைத்துவிட்டு திரும்பக் கொண்டு வந்து அரிசியை அதிகாரிகளிடம் காண்பித்து, இதைக் கொண்டு வந்து விட்டேன், பாருங்கள் என்று காண்பித்த பின்னர்தான் அதை எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் இப்படிப் பல தொல்லைகள் கொடுத்து வந்தார்கள். தான் சாப்பிடுவதற்காக அறைக்கக் கொண்டு போகும் நெல்லை கிராம அதிகாரியிடம் காண்பிப்பதற்காக கிராம அதிகாரிகளின் வீட்டில் காவல் காத்துக் கிடக்கும் நிலை ஏற்பட்டால், இதை விட வேறு என்ன துரோகம் இருக்கிறது என்று நான் கேட்கிறேன். இவைகள் எல்லாம் நிறுத்தப்பட வேண்டும். உணவிற்காக கொண்டு செல்வதை யாரும் தடுத்து நிறுத்தக் கூடாது. பெர்மிட் என்று வழங்கவேண்டிய அவசியமில்லை என்று செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) இந்த ஆண்டு பஞ்சத்தால் திண்டாடுகிற வட ஆர்க்காடு முழுவதிலும் எந்தத் தானியம் எங்கு செல்ல வேண்டுமென்றாலும், அதற்கு வேண்டிய அனுமதிகளைத் தாராளமாக வழங்க வேண்டும். கட்டுப்பாடுகளை எடுத்துவிட வேண்டும். ஒன்றுமட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்கள் உரையில் வன்முறைச் சம்பவங்கள் இனி நடக்காமல் சர்க்கார் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு ஆண்டுகளில் வன்முறைச் சம்பவங்கள் தமிழ்நாட்டில் அதிகரித்துக்கொண்டே போகிறது. குறிப்பாக என் தொகுதியில் பழையனூரில் 66ம் ஆண்டு காந்திஜி நூற்றாண்டு மண்டபம் என்று ஒன்றைக் கட்டினார்கள். அந்த வேலை பூர்த்தியாகும்போது தி.மு.க. வினரால் அது தூள் தூளாக்கப்பட்டது, என்பதைத் தான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் நடக்கும்போது தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இ. ராமசாமி** : தலைவர் அவர்களே, எனது இருதயக் கோவிலில் தெய்வமாக நான் வணங்கி வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று இந்த மாமன்றத்தில் இல்லாவிட்டாலும் தற்போது அவரை அடக்கம் செய்த திக்கை நோக்கி என் வணக்கத்தை ; தரிவித்துக் கொண்டு இந் நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இம் மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை நான் உளமார, மனமார வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். இன்றையதினம் நாம் மட்டுமல்ல, நாட்டிலுள்ள அத்தனை மக்களும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அனைவரும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள், குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் என்ன இருக்கிறது, இது துண்டு விழுந்த பட்ஜெட்தானே என்று அவர்கள் பேசுகிறார்கள். காங்கிரஸ் ஆட்சி புரியும் பல்வேறு மாநிலங்களில் கூட துண்டு விழும் பட்ஜெட்டைக் கொண்டு வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அதே நேரத்தில் இங்கு துண்டுவிழும் பட்ஜெட் கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட, புது வரிகள் எதுமே இல்லாத செய்தியைக் கேட்டு நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.. அதேசமயத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், ஏழை எளியவர்களின் முதுகெலும்பை முறிக்கக்கூடிய வரிகள் அங்கு காணப்படுகிறது. அந்த அளவிற்கு மத்திய அரசால் பாராளுமன்றத்தில் ஒரு நிதிநிலை அறிக்கை இன்று வைக்கப்பட்டிருக்கிறது. எனவே காங்கிரஸ் ஆளுகிற மத்திய அரசிலும், பல்வேறு மாநிலங்களிலும்

துண்டு விழும் பட்ஜெட்களும், வரிப் பளுவும்தான் காணப்படுகின்றன. இந்நிலையில் ஏழை எளியவர்கள் பாராட்டுகிற இந்த பட்ஜெட்டைப் பார்த்து இதில் என்ன இருக்கிறது, துண்டு விழுந்த பட்ஜெட்தானே என்று காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இந்த மன்றத்தில் வைத்துள்ள நிதிநிலை அறிக்கைகளேயோ அல்லது இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் என்றுதான் பாராட்டினார்கள்? எந்த நல்ல காரியமாக யிருந்தாலும் சரி குற்றங்குறைகள் கூறுவதுதான் காங்கிரஸ்காரர்களின் பழக்கமாகப் போய்விட்டது. இருந்தபோதிலும் நாட்டு மக்கள் பாராட்டுகிற விதத்தில் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கைக்காக நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையையொட்டி என் தொகுதியில் உள்ள ஒரு சில விஷயங்களைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள் 1947ல் இருந்து 1967 வரையில் தமிழ்நாட்டின், தமிழ்நாட்டு அரசின் பொறுப்பை ஏற்றிருந்தார்கள்.

என் தொகுதியாகிய வால்பாறைத் தொகுதியில் முடீஸ் என்ற இடத்தில் ஒரு உயர்தரப் பள்ளி 16 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. 16 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்றாலும் அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமான நிலமோ அல்லது கட்டடமோ கிடையாது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஒரு கோவிலில் தான் அந்த உயர்தரப் பள்ளி நடந்து கொண்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், நான் என்னுடைய தொகுதியிலிருந்த குறையை மாண்புமிகு அமைச்சரவர்களைச் சந்தித்துக் கூறியபோது வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்குறுதி தந்தார்கள். அதன்மேல், நடவடிக்கை எடுக்கப்பட்டு, தோட்ட நிர்வாகியிடம் 5 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்கப்பட்டு அந்த இடம் இன்றையத்தினம் கிடைக்கக்கூடிய நிலையில் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக கல்வித்துறை அமைச்சரவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இருபதாண்டு காலமாக அந்தப் பள்ளியை நடத்த போதிய நிலமும், கட்டடமும் இல்லாத ஒரு குறையைப் போக்க காங்கிரஸ் கட்சியால் முடியவில்லை, இரண்டாண்டு காலத்திற்குள் அந்தக் குறை நீங்கி 5 ஏக்கர் நிலம் அந்தப் பள்ளிக்குக் கிடைக்கவும், கட்டடம் கட்டக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியும் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள். எனவே, அந்த அளவுக்குக் குறுகிய காலத்திற்குள் இத்தகைய காரியத்தைச் சாதித்து இருக்கிறார்கள். மேலும், அந்த வேலை முற்றுப்பெற்று உடனடியாகப் பள்ளிக் கட்டடம் உருவாவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் பணிவன்போடு வேண்டி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வால்பாறை பகுதியானது தோட்டப் பகுதி. தேயிலை, காப்பி உற்பத்தி செய்யக்கூடிய பகுதி. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், பல்வேறு கிராமங்களிலிருந்தும் மக்கள் அங்கே குடியேறி யிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்றால், அவர்கள் போக வேண்டிய ஊருக்கு பஸ் வசதி கிடையாது. ஒரு தனியார் பஸ் மட்டும் ஓடிக்கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் தங்களுடைய சொந்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்றாலோ அல்லது சொந்த ஊரிலிருந்து அவர்கள் வாழும் மலைக்கு வருவது என்றாலோ மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசாங்கப் போக்குவரத்துத் துறை பொறுப்பை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள், விரைவாக அந்த வால்பாறை பகுதிக்கு, பல்வேறு மாவட்டங்களின் அடிப்படையில் என்று இல்லாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட இடங்களிலிருந்து பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் நடந்து கொண்டு இருக்கிறது, அது முடியும் தருவாயிலிருக்கிறது. நீராறு என்ற இடத்தில் உள்ள திட்டம் நிறைவேறினால்தான் இந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் முற்றிலும் நமக்கு நன்மை தரும் என்று என்னைப் பொறுத்த வரையில் கூறிக்கொள்கிறேன். நீராறைப் பங்கிட்டுக் கொள்வதில் தமிழக அரசுக்கும், கேரள அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை இருப்பதாகத் தெரிய வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் கேரள முதல்வரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பது மகிழ்ச்சி தரத் தக்கதாக இருக்கிறது என்று சொன்ன அந்த செய்தியைப் பார்த்தோம். இன்று அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்கள், மிகக அறிவு உடையவர்கள், எல்லாவற்றையும் திறமையாக முடிக்கத் தக்கவர்கள். அவர்கள் கேரள முதல்வரோடு கலந்து பேசி நீராறிலிருந்து பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு பேச்சுவார்த்தை நடத்தி அந்த தண்ணீர் நம் தமிழகத்திற்குக் கிடைத்தால் அதனால் மின்சார உற்பத்தி பெருகும், அதேநேரத்தில் இன்று விவசாயத்திற்கு எடுத்திருக்கும் நிலப்பரப்பைவிட அதிகமான நிலப்பரப்பை தண்ணீரை நாம் எடுத்துக் கொள்ள முடியும். அந்த நீராறுத்திட்டம் நிறைவேறாவிட்டால் 4 மின்சார நிலையங்களுக்கான போதிய மின்சாரம் கிடைக்காது. இப்போது இருக்கிற அந்த நிலங்களுக்கு நீர் எடுத்துக் கொள்வதை விட பன்மடங்கு தண்ணீர் வசதி அந்த திட்டம் நிறைவேறிவிட்டால் கிடைக்கும். எனவே இது ஒரு நல்ல திட்டம் ஆகையால், நீராறுத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு கேரள முதலமைச்சர் அவர்களோடு பேசி, இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் கோயம்புத்தூர் மாவட்டத்தின் சார்பாக, அங்குள்ள மக்களின், விவசாயிகளின் சார்பாக, நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுவேன். அந்த மாவட்ட மக்களும் இந்தத் திட்டம் நிறைவேறினால் தமிழக அரசைப் பாராட்டிப் போற்றுவதோடு நன்றியுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அந்த அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொன்றையும் நான் இந்தச் சபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் வால்பாறை பகுதி தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த அளவுக்கு தோட்ட நிர்வாகிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சக தொழிலாளி மரணம் அடைந்தால் கூட, அந்தச் சாவில் பங்கெடுத்துக் கொள்வதற்குக் தடை விதிக்கும் அளவிற்கு தோட்ட நிர்வாகிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சாதகமான முறையில் "ஸ்டாண்டிங் ஆர்டர்" என்று வைத்துக்கொண்டு தோட்டத் தொழிலாளர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த "ஸ்டாண்டிங் ஆர்டரை"த் திருத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்வாறு செய்து அந்தத் தோட்டத் தொழிலாளர்களின் குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு என் நன்றியைத் கூறிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

*** திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தச் சபையின் முன்னால் வைத்திருக்கின்ற இந்த 1969-70ஆம் வருஷ வரவு-செலவுத் திட்டம் மிகவும் நாசூக்கான முறையிலே அமைக்கப் பட்டிருக்கின்றது என்று முதலிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் திட்டத்தில் புது வரிகள் இல்லை என்பது பாராட்டிற்குரிய விஷயம். அதே நேரத்திலே மேலும் பாராட்டக்கூடிய முறையிலே பி.யு.சி. வகுப்புகளிலே இலவசமாகக் கல்வி கற்கலாம் என்றும், பணி மனைகளிலே வேலை செய்பவர்கள் குடும்பங்களில் கல்யாணம் வரும்பொழுது கடன் அளிப்பதற்குத் திட்டம் வகுத்து இருப்பதும் இன்னும் மேலும்

[திரு எம். சுரேந்திரன்] [1969 மார்ச் 4

பாராட்டுதற்கு உரியனவாகின்றன. ஆனால், இங்கே இருக்கின்ற இந்த நல்ல வரவு-செலவு திட்டத்தின் பலனை சரியான முறையிலே ஜனங்கள் உணர்ந்து அனுபவிக்க வேண்டுமென்றால், அது நம்முடைய இராஜ்யத்திலே செய்யும் காரியங்களினாலே மட்டும் முடியாது, மத்திய சர்க்காரிலே இருக்கின்றவர்களும் முறையாக எண்ணிப்பார்த்து காரியங்களைச் செய்தால்தான் முடியும் என்பதை மத்திய சர்க்காரிலே விதிக்கப்பட்டிருக்கின்ற வரி அறிவிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

இந்த இராஜ்யத்திலே இருக்கின்ற விவசாயம், விவசாயத்திற்கான நிலங்கள் சம்பந்தமான உரிமைகள், அதிகாரங்கள் இந்த இராஜ்யத்திற்குத் தான் இருக்கின்றன என்று அரசியல் சட்டத்தின் மூலம் நான் கருதுகின்றேன். அப்படியிருக்கின்ற நிலைமையில் அந்த விவசாய நிலங்கள் மீது சொத்துரிமை வரி விதிப்பதாக மத்திய சர்க்கார் வெளியிட்டிருக்கின்றது. இது ராஜ்ய அரசாங்கத்தினுடைய உரிமையிலே தலையிடுவதாகுமா, இல்லையா என்று அரசியல்வாதிகளும், சட்ட நிபுணர்களும் ஆலோசனை செய்து கொண்டிருக்கின்ற நிலையிலே ஒரு வரியை வெளியிட்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே உரத்திற்கு வரி போட்டிருக்கிறார்கள். இந்தத் தேசம் விவசாயிகளின் தேசம். விவசாயிகளின் மீது எந்தப் பளு ஏற்றப்பட்டாலும் அது நாட்டிலே யிருக்கின்ற எல்லாவிதமான இடங்களிலும் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும் என்று இந்த அரசும் சரி, மத்திய அரசும் சரி உணர்ந்திருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட உணர்வுபூர்வமான முறையிலே அந்த வரிகள் விதிக்கப்படவில்லை. அதனுடைய விளைவாக இந்த இராஜ்யத்திலே இருக்கின்ற அரசு என்ன நல்ல காரியங்களைச் செய்தாலும், அந்த நல்ல காரியங்கள் ஒளி பெறாமல், நல்ல காரியங்கள் மக்களுடைய உணர்வுகளிலே எடுத்துக் காட்டாக அமையாமல் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே, இந்த நிலையில் இங்கே பேசிய பல்பேர்கள் இந்த இராஜ்யத்தைத் தனியாக பிரிக்க வேண்டுமென்ற உணர்வு தோன்றும்படி பேசியதைப் போன்ற தொனி தொனித்தது. ஆனால் அம்மாதிரியான உணர்வைக் கொள்வது இந்த தேசத்தின் நலனுக்கு உகந்தது அல்ல. அத்தகைய உணர்வு எழுகின்ற நேரத்திலே நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். என்னுடைய கட்சியான பிரஜா சோஷலிஸ்ட் கட்சி வெகு நாட்களுக்கு முன்னாலே, அதிகாரத்தைப்பரவலாகச் செய்ய வேண்டுமென்ற கொள்கையை முன் வைத்தது. இந்தத் தேசத்திலே இருக்கின்ற ராஜ்ய அரசும், மத்திய அரசும் ஒருமுகமாகக் காரியத்தைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எந்த அரசு எதைச் செய்தாலும் அது சாதாரண மக்களின் நிலையில்தான் சென்று சேர்கிறது. இம்மாதிரியான நிலையில் அது வேறு, இது வேறு என்று பார்க்கும் ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய நிலை ஏற்படுவதற்குக் காரணம், பல ராஜ்யங்களில் ஆட்சி செய்து கொண்டிருந்தவர்கள் வெளியே தள்ளப்பட்டு, கீழே கவிழ்க்கப்பட்டு, மண்ணைக் கவ்விய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதிகளில் தனிக் கட்சி ஆட்சி ஏற்படவில்லை. அங்கே பார்த்தால் ஏதாவது ஒருவிதமான கூட்டு ஏற்பட்டுத்தான் இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காரணமான அந்தந்த ராஜ்யங்களிலே உள்ள உறவுகள் புனர் பரிசீலனை செய்யப்பட்டாக வேண்டும். அந்தந்த ராஜ்யங்களுக்கு உள்ள அதிகாரங்களை மாற்றி அமைத்தாக வேண்டும் என்று வற்புறுத்தும் நிலை உண்டாகிக்கொண்டு இருக்கிறது.

இதுவன்றியிலும் காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸை எதிர்ப்பதற்குக் கொள்கை இல்லாதவர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி வந்தார்கள். ஆனால் இன்றைக்கு
பி.ப. 1–00 அந்த துர்பாக்கியமான நிலைமை காங்கிரஸ்காரர்களுக்கு வந்திருக்கிறது. தெரியாமல் வந்திருக்கிறது என்பது அல்ல, ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்காக இந்த நிலைமை வந்திருக்கிறது என்றால், நாம் அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதிகாரத்தை, பதவியை தங்கள் கையிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக சேரக்கூடாத கட்சிகளோடு சேர்ந்து இன்றைக்கு பீகாரிலே ஒரு சர்க்காரை அமைத்திருக்

1969 மார்ச் 4] [திரு. எம். சுரேந்திரன்]

கிறார்கள் என்பது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம். இருபது ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர்கள், தங்களுடைய சக்தியை நல்ல முறையிலே பயன்படுத்தாமல், திட்டமிட்ட காரியங்களைச் செய்யாமல் இன்றைக்கு கேவலமான, தவறான காரியங்களுக்கு உதாரணமாக இவர்கள் போய்க் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே இந்த ராஜ்யத்தினுடைய விவசாயிகள், இந்த ராஜ்யத்திலே கொள் முதல் செய்கின்ற நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது மத்திய சர்க்காருடைய வரிகளின் மூலம் அதிகமான விலை அவர்களுக்கு அளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படி அதிக விலை அளிப்பது என்று வந்துவிட்டால் இந்த ராஜ்யத்தினுடைய அரசு, இந்த ராஜ்யத்திலே இருக்கிற மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பது என்ற திட்டம் இருக்கிறதே அதை உறுதியாக வேறு பகுதிகளுக்கும் விரிவு படுத்துவோம் என்று இரண்டொரு நாளைக்கு முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கான செலவு இப்பொழுதே நமக்கு 8 கோடிக்கு மேலாகிறது. இனிமேல், அந்தச் செலவு மிகவும் அதிகமாகும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே கொள்முதல் நன்றாக இருக்கிறது, அதிகமாக இருக்கிறது. விவசாயத்திலே இரு போக சாகுபடி பெருகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்பட்டாலும்கூட, அன்றைக்கு எவ்வளவு பேருக்குப் குடும்பக் கார்டு வழங்கப்பட்டதோ, எவ்வளவு பேருக்கு படி அரிசி வழங்கப்பட்டதோ அவர்களுக்கு மட்டும் தான் இன்றைக்கும் வழங்கப்படுகிறது. அது மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை. கொடுக்கப்படுகிற அளவும் உயர்த்தப்படவில்லை. எங்கே அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது? அப்படி அபிவிருத்தி ஏற்பட்டிருந்தால் அந்த அபிவிருத்திப் பொருள் எங்கே இருக்கிறது? அது எப்படி இருக்கின்றது? இந்தக் கேள்விகள் எழுகின்றன. அப்படி நாம் பார்க்கும்போது அங்கங்கே கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு போகக் கூடாது என்று சவுக்கு வைத்து பொருள்கள் போவதைத் தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அங்கு இருக்கிற நிலை, நான் கேள்விப்பட்ட வரைக்கும் மிகவும் வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அங்கங்கே கடத்தல்காரர்கள் லாரி ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அளித்து அங்கங்கே கடத்திக் கொண்டு போகிறார்கள் என்ற செய்திகள் வந்துள்ளன. அப்படிக் கடத்தல்காரர்கள் அளிக்கின்ற அந்தப் பணத்தை காவல் துறையினரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் தாசில்தாரும் அவருக்குக் கீழே இருக்கிறவர்கள் எல்லாம் பங்குபோட்டுக் கொள்கிறார்கள் என்று அங்கங்கே இருந்து தகவல்கள் வருகின்றன.

ஆகவே, நாம் என்ன முறைகளைக் கையாளுகிறோம் என்பது அல்ல; அந்த முறைகளை எவ்வளவு நல்ல முறையிலே, சரியான முறையிலே கையாளுகிறோம், எவ்வளவு நல்ல முறையிலே நடத்துகிறோம் என்பதிலே தான் வெற்றி இருக்கிறது. ஒரு சட்டம் போட்டுவிட்டால் அந்தச் சட்டமே எல்லாக் காரியங்களையும் செய்து விடாது. அந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதிலே நம்முடைய அதிகாரிகள், நம்முடைய ஊழியர்கள், மற்றவர்கள் உண்மையானவர்களாக இருக்கிறார்களா, அவர்கள் உண்மையானவர்களாக இருக்கவேண்டுமென்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பது கவனிக்கப்படவேண்டியது அவசியம்.

அதோடுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் ஒரு நல்ல நிலையை எதிர்பார்த்தோம். அவர்கள் ஆட்சியில் இலஞ்சம் இல்லாத, ஊழல் இல்லாத, மிக வேகமாகச் செயல்படுகிற ஒரு நல்ல நிலையை எதிர்பார்த்தோம். அதிலே ஏமாற்றம் அடைந்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற மதிப்பிற்

[திரு. எம். சுரேந்திரன்] [1969 மார்ச் 4

குரிய உறுப்பினர்கள்கூட அதை ஒப்புக்கொள்கிறார்கள். பல பேர்கள் என்னோடு பேசும்போது புகார் செய்திருக்கிறார்கள். இதிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், அதிகம் செலவை செய்து பம்புசெட்டுகள் வைத்து, அவைகளுக்கு மின்சாரம் அளிக்க வேண்டுமென்று கருதுகிறோம். ஆனால் மின்சாரம் அளிக்கின்ற காரியத்திலே பல இடங்களிலே இருந்து புகார்கள் வருகின்றன. மின்சார இணைப்புக் கொடுப்பதிலே அங்கங்கே இலஞ்சம் அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வருகின்றன. என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்திலே மின்சார இணைப்புக் கேட்ட நேரத்தில், மின்சாரஇணைப்பு கொடுப்பதற்கு வெகு தூரத்திலே இருக்கிற கம்பங்களை எடுத்து வரவேண்டும், அதற்கு ரூ. 100 வேண்டுமென்று அங்கே இருக்கிற சிப்பந்திகள் கூறினார்கள். அங்குள்ளவர்கள் ரூ. 100 அளித்தார்கள். அதற்குப் பின்னால் கம்பம் வந்து விட்டது, கம்பிகள் வெகு தூரத்திலே இருக்கின்றன. அதற்கு ரூ. 200 வேண்டுமென்று கேட்டார்கள். அந்தப் புகார்களை உடனே நான் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கறேன். ஆகவே, இம் மாதிரியான புகார்களைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்ப்டிப்பட்ட காரணங்களால் மின்சார இணைப்புப் பெறுவது மிகவும் காலதாமதமாகிறது. அதோடு மட்டுமல்ல, அப்படி மின்சார இணைப்பு விரைவிலே பெறுவோம் என்ற நம்பிக்கையில் மக்கள் பம்ப் செட்டுகள் அமைத்துவிடுவதால், அவர்களுடைய பணம் வட்டி இல்லாமல் தேங்கிக் கிடக்கிற நிலை சில இடங்களிலே இருக்கின்றன. ஆகவே, மின்சார இணைப்பு கொடுப்பதிலே இப்பொழுது இருக்கிற முறைகளோடு கூட, இலஞ்சம், ஊழல் இல்லாத முறைகளையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும். நாம் எவ்வளவு காரியங்கள் செய்கிறோம் என்பது அல்ல, அதற்கு எவ்வளவு செலவு செய்கிறோம், அது எவ்வளவு நேர்மையானதாக, நன்மையானதாக இருக்கிறது, எவ்வளவு ஒழுங்கானதாக இருக்கிறது என்பதைத் தான் கவனிக்க வேண்டும்.

அதே போன்று இந்த ராஜ்யத்திலே இருக்கிற உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்பதற்காக நாம் கடைப்பிடிக்கின்ற முறைகளோடு தரிசு நிலங்களையும், விவசாயம் செய்யக்கூடிய நிலங்களாக மாற்றம் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கவேண்டுமென்று இந்த மன்றத்திலே பலமுறை நான் வற்புறுத்தி இருக்கிறேன். தரிசு நிலங்களையும் சேர்த்து நாம் சாகுபடிக்கு எடுத்துக் கொண்டால் உணவுப் பொருள்களை அதிகப்படுத்துவதற்கான வழிவகை ஏற்படும்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற குடி நீர்ப் பஞ்சம் மிகவும் கடுமையானதாக இருக்கிறது. எந்த இடத்திலே பார்த்தாலும் குடி நீர் இல்லை இல்லை என்று சொல்லப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, குடி நீருக்கு நாம் அதிகப் பணத்தை செலவிட வேண்டிய அவசியம் இந்த நேரத்திலே ஏற்பட்டிருக்கிறது. குடிநீர் கிணற்றிலே இல்லாமல் போவது ஒரு வகை. ஆனால் மேட்டூரிலே விசேஷமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இரசாயன தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற் சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் கிணற்று நீரோடு கலந்து விடுவதால் கிணற்று நீர் கெட்டுவிட்டது. அதைப்பற்றி இரண்டு வருடங்களாக முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி அமைப்பதற்கு எவ்வித ஏற்பாடும் இன்னும் செய்யப்படாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம்.

அதோடு, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரி ஒன்று கூட இல்லையென்று சொன்னார்கள். ஆனாலும் வருங்காலத்திலே வரி போட மாட்டோம் என்ற உறுதி கொடுக்கப்பட வில்லை என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இங்கே துண்டு விழுகிற தொகையை மத்திய அரசாங்கத்தினுடைய நிதி நிலை அறிக்கைக்குப் பின்னால் ஈடுகட்ட முடியும்

1969 மார்ச் 4] [திரு. எம். சுரேந்திரன்]

என்று நிதி அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று இதிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே ஓரிடத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. "...... .... நிதி வாயில்களைத் திரட்ட ஓரளவு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இது குறித்து அரசு நாளடைவில் இம் மன்றத்தின் முன் செயற் குறிப்புகளை வைக்கும். இந்த நிதி வாயில்களின் ஒரு பகுதியைக் கிராமப்புறக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாகத் திரட்ட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்கு "இப்புதிய" கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வகை செய்கின்றன"........... என்று ஆகவே, கிராமங்களிலிருந்து கடன் பெறுவதற்கும் அப்படிக் கடன் பெறுமல் போய்விட்டால் மேலும் வரி போடுவதற்கும் இதிலே வழி செய்யப்பட்டிருக்கிறது, அதுதான் அப்படி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்ற நிதி அமைச்சர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த வருஷத்திலே வரி விதிக்கமாட்டோம் என்ற உறுதி கூற வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, மத்திய அரசினுடைய நிதி நிலை அறிக்கை வந்ததற்குப் பின்னால் அதை யொட்டி ஈடுசெய்கின்ற அளவுக்கு இதிலே துண்டு விழுகின்ற பணம் வந்தாலும், கூட சமீபத்திலே மூடி இருக்கிற பஞ்சாலைகளிலே விற்பனை வரி நீக்குவது மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது போன்ற வாக்குறுதிகளை எல்லாம் இந்த அரசு அளித்திருக்கிறது. அம்மாதிரித் துண்டு விழுகிற பணத்தோடு கூட, இந்த ராஜ்யத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றுவதற்கும் பணம் கண்டு பிடித்தாக வேண்டும். விசேஷ நிலைமைகளை சமாளிப்பதற்கும் பணம் கண்டுபிடித்தாக வேண்டும். இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையின்படி இந்த வருஷத்திலே இருக்கிற நிலைமைகளைச் சமாளிப்பது என்று சொன்னால் இப்பொழுது போட்டிருக்கிற பல அபிவிருத்தி வேலைகளைக் குறைக்க வேண்டியிருக்கும். இன்றைக்குப் பொது சுகாதாரம், மருத்துவம் இவைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன என்று தெரிவித்துக்கொண்டு இந்த அறிக்கையின் மீது என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ. சீனிவாசன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கும் புதிய அமைச்சரவையின் சார்பில் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று, ஒரு சில வார்த்தைகள் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை நன்றாகப் படித்துப் பார்க்கிற நேரத்தில் இதை நமக்கு அளித்த நிதி அமைச்சர் அவர்கள் உருவத்திலே மட்டுமல்லாமல் உள்ளத்திலும் அறிஞர் அண்ணாவை ஒத்திருக்கிறார்கள் என்பதை நாம் நிச்சயம் மனமார ஒப்புக கொள்ள வேண்டும். இது ஏழைகளின் தலையில் சுமையை ஏற்படுத்தாமல் புதிய வரி இல்லாமல் வழக்கம்போல் திராவிட முன்னேற்ற கழகத்தினிடம் மக்கள் எதிர்பார்க்கின்ற ஒரு நல்ல வரவு செலவுத் திட்டமாக அமைந்திருக்கிறது.

இங்கே பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர்களுடைய கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக, அல்லது அரசியலில் அவர்களுக்கு இருக்கிற அவசியத்தின் காரணமாக, இல்லாத குறைபாடுகளைத் தேடிக் கண்டு பிடித்து, மெத்த சிரமப்பட்டு, இந்த வரவு-செலவுத் திட்டத்தைக் குறை சொல்லிப் பேசினார்கள். அவர்களுடைய குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரம் தராதது மட்டுமல்லாமல், அவர்களுடைய குற்றச்சாட்டுக்களை வலுவற்றதாக்குகின்ற வகையில், அவர்களாலே முழுதும் நடத்தப்படுகின்ற மத்திய சர்க்கார் பல வரிவிதிதங்களை அறிவித்து பற்றுக்குறை பட்ஜெட்டை டெல்லியில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நாட்டில் கடந்த 20 ஆண்டுக் காலமாக எந்த ஒரு பிரச்சினை தீராத பிரச்சினையாக இருக்கிறதோ, அந்த உணவுப் பிரச்சினை, இந்த வருஷமும் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம்

தீரும் என்ற நம்பிக்கை கொஞ்சம் கூட இல்லை. அதே நேரத்தில் மாநில அரசு தனக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு உட்பட்டு, அந்த எல்லைக்குள் நின்று, தன்னால் முடிந்த வரையில், இந்த நாட்டில் நிலவும் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெரும் பாடுபட்டிருப்பதை நடு நிலைமையில் உள்ளவர்கள் நிச்சயம் பாராட்டுவார்கள்.

இந்திய நாடு ஒரு விவசாய நாடு. இந்த நாட்டினுடைய தேசியத் தொழில் விவசாயம். உலகத்தில் பல்வேறு நாடுகள் பல்வேறு தொழில்களை தேசியத் தொழிகளாகக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் கடிகாரம் உற்பத்தி செய்கின்ற தொழிலை தேசியத் தொழிலகாக் கொண்டிருக்கிற சுட்சர்லாந்து நாடு வெளி நாடுகளிலிருந்து கடிகாரம் இறக்குமதி செய்ததாக நாம் கேள்விப் பட்டதில்லை. பால் பண்ணை வைத்து, பால் எடுத்து, பால் எடு உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதைத் தேசியத் தொழிலாகக் கொண்டிருக்கிற டென்மார்க் நாடு வெளிநாடுகளிலிருந்து பால் உணவு வகைகளை இறக்குமதி செய்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனால், நம்முடைய நாடு, விவசாய நாடு, பரந்து விரிந்த இந்த நாடு, பல்வேறு ஜீவநதிகள் ஓடிக் கொண்டிருக்கிற இந்த நாடு, 100க்கு 75 பேர்களுக்கு மேல் விவசாயம் செய்பவர்களைக் கொண்ட நம்முடைய நாடு விவசாயத்தை தேசியத் தொழிலாகக் கொண்டிருக்கிறது. ஆனாலும், நம்முடைய இந்திய நாட்டினுடைய அரசாங்கம் மிக அதிகமாக இறக்குமதி செய்கின்ற முக்கியமான பொருள் உணவுக் பொருள். நாம் எந்தப் பொருளை உற்பத்தி செய்ய இத்தனை ஆண்டு பாடுபட்டுத் திட்டம் தீட்டினுமோ, நாம் உற்பத்தி செய்து நம்முடைய தேவையை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அந்தப் பொருளை, வெளிநாடுகளிலிருந்து தவருமல், நியாயமாகவும், ஒழுங்காகவும், கப்பல் கப்பலாக இன்றைக்கு நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெருமை யோடு அடிக்கடி குறிப்பிடுவதைப் போல், அவர் ஒரு விவசாயி. ஒரு விவசாயி எந்தப் பொருளை வேண்டுமானாலும், கடன் வாங்கலாம். பணத்தைக் கடன் வாங்கலாம், வீடு கட்டுவதற்கு மரத்தைக் கடன் வாங்கலாம், எரு கடன் வாங்கலாம், ஆனால் ஒரு விவசாயி என்றைக்குத் தானியத்தைக் கடன் வாங்க ஆரம்பிக்கின்றானோ தானியத்தை வெளி மார்க்கெட்டில் ஒரு விவசாயி வாங்க ஆரம்பிக்கின்றானோ, அன்றைக்கு அந்த விவசாயி வீட்டில் தரித்திரம் குடியேறும் என்று கிராமத்திலுள்ளவர்கள் சொல்வார்கள். நமது நாடு விவசாய நாடு. விவசாயிகளை அதிகமாகக் கொண்ட நம் இந்திய நாட்டில் நாம் பழக்கமாக உற்பத்தி செய்யக்கூடிய பொருளை இன்னும் வெளியிலிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

இந்த மாநிலத்தில் உணவுப் பற்றுக்குறை நிலைமை நிலவுகிறது. அதாவது, இந்த ஆண்டு எதிர்பாராமல் ஏற்பட்டிருக்கும் இயற்கையின் வறட்சி காரணமாக, நமக்கு ஒரு சவாலாக விளங்கிக் கொண்டிருக்கிற பஞ்ச நிலைமையை அகற்றுவதற்கு, மாநில அரசுடன் மத்திய அரசு பொறுப்பேற்று நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டின் விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர். சி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு அருமையான திட்டத்தைத் தந்தார். இந்தியாவிலே இருக்கிற அத்தனை ஆறுகளையும், அதிலும் குறிப்பாக ஆண்டுக்கு ஆண்டு வெள்ளப் பெருக்கெடுத்து, ஏராளமான பொருள் நஷ்டத்தை விளைவிக்கும் பிரம்மபுத்திரா, கங்கை போன்ற பெரிய நதிகளுடன் தென்னாட்டில் இருக்கிற நதிகளை இணைத்து, அகில இந்தியாவிலும் ஓடுகின்ற நதிகள் அத்தனைக்கும் ஒரு தொடர்பு, " லிங்க் " உண்டாக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னால் அவர் அறிவித்த அந்த யோசனையை நிரந்தரமாகத் தீவிரமாக சிந்திக்கவில்லை. காங்கிரஸ் கையில் இருக்கிற மத்திய சர்க்கார் இந்த நாட்டைப் பிடித்த சாபக்கேடாகப் பல ஆண்டுகளாக இந்த விஷயத்தை சிந்திக்காமல், இந்த நாட்டினுடைய தேசியத் தொழிலை எந்தெந்த வகையில் அபிவிருத்தி செய்யலாம் என்று அவர்கள்

சிந்தனையில் இறங்காமல் புதிய சுமைகளை விவசாயிகளின் தலையிலே ஏற்ற முற்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாயத்தில் எந்த அளவுக்கு அக்கரை இல்லாத தன்மை இருக்கிறது என்பது, இந்த ஆண்டு மத்திய சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் உரங்களுக்கு வரிபோட்டிருப்பதாலும், மின்சார பம்பு செட்டுகளுக்கு வரி போட்டிருப்பதாலும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த மாகாண சர்க்கார், தி.மு.க. அரசு, விவசாயிகள் பற்றியும், உணவு உற்பத்தி பற்றியும் எடுத்துக் கொண்டிருக்கிற அக்கரையை தமிழ் நாட்டு மக்கள், குறிப்பாக விவசாயிகள் நிச்சயமாகப் பாராட்டுவார்கள்.

என்னுடைய மாவட்டம் வழக்கமாக வரட்சிக்குப் பெயர்போன, இயற்கையின் சாபக் கேடாக உள்ள மாவட்டமாக இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கடுமையான வரட்சி நிலைமை நிலவுகிறது. வட ஆர்க்காடு மாவட்டம் வரண்டு கிடக்கிறது. தமிழகத்தின் தானியக் களஞ்சியம் என்று சொல்லக்கூடிய தஞ்சை இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறது என்றால், பல ஆண்டுகளாக பற்றுக்குறை மாவட்டமாக, வெளி மாவட்டங்களை எதிர்பார்த்து தனது உணவு தானியத் தேவையை நிறைவேற்றிக்கொள்ளும் இராமனுதபுரம் மாவட்டத்தில் பஞ்ச நிலைமையைப் போக்குவதற்கு நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. அங்கே இந்த ஆண்டு மிகக் கடுமையான வரட்சி ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகள் அத்தனையும் மாவட்டத்தைவிட்டு வெளியேற வேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. கூடிய விரைவிலே அங்கே குடியிருக்கிற மக்கள்கூட வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நம்முடைய அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக இராமனுதபுரம் மாவட்டத்தின் வரட்சியை நீக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த ஆண்டு சாத்தூர் வட்டத்தில் ஏறத்தாழ ரூ. 13 லட்சம் செலவில் சங்கா நத்தம் என்ற இடத்தில் அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டத்தை அனுமதித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அனுமதித்ததற்காக அரசாங்கத்திற்கு, குறிப்பாக மாண்புமிகு திரு மாதவன் அவர்களுக்கு, இராமனுதபுரம் மாவட்டம் சாத்தூர் வட்டத்து மக்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடக்க வேலை ஆரம்பிப்பதற்கான ஒரு பட்டியலில் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மேற்கு முனையில் இருக்கிற பிளவுக்கால் திட்டம் என்ற திட்டத்தைச் சேர்த்துக் கொண்டு, அதை நம்முடைய அரசாங்கம் பெரு முயற்சி எடுத்து நிறைவேற்றி வருவதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீர் வருவதற்கு நம்முடைய மாநில அரசு ஏற்பாடு செய்தால், மேற்கே இருந்து கிழக்கே சமுத்திரக் கரை வரையில் இராமனுதபுரம் மாவட்டத்தின் நீர்ப்பாசனத் தேவையை நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை பொறிஇயல் வல்லுநர்கள் பல ஆண்டுகளாகத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி ஏறத்தாழ 10, 15 ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தபல பெரியவர்கள் அரசியலிருந்து ஒதுங்கியிருந்து எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும் கூட எங்களுடைய மாவட்டத்தைப் பற்றி முன்னால் இருந்த அரசுக்கு அக்கரை இல்லாத காரணத்தினாலோ என்னவோ, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நான் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ராமனுதபுரம் மாவட்டத்தில் வளப்பத்தை உருவாக்காதவரை, தமிழ் நாட்டிலிருக்கிற அத்தனை மாவட்டங்களிலும் அதிக உற்பத்தி ஏற்பட்டாலும், உபரி உற்பத்தி ஏற்பட்டாலும், அந்த அளவு அதிக உற்பத்தி உணவு முழுவதையும் ராமனுதபுரம் மாவட்டத்தின் வரட்சி விழுங்கிவிடும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்குப் புதிய முறைகளை வகுத்து, விவசாயத்தை விருத்தி செய்து விட்டால், தமிழ் நாட்டினுடைய பஞ்சம் அடியோடு அகன்றுவிடும்.

இன்றைக்கு இந்த மாவட்டத்தில் பல்வேறு தொழில்கள் உருவாகக் கூடிய சூழ்நிலைகள் தோன்றியிருக்கின்றன. ஆலங்குளத்தில் சாத்தூர் வட்டத்தில் தமிழ் நாடு அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் சிமெண்ட் தொழிற்சாலையில் மிகவும் பிரும்மாண்டமான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்த ஏழை விவசாயிகள் இன்றுவரையில் வேலை வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அங்கு இருக்கிற அதிகாரிகளில் சில பேர் பக்கத்தில் உள்ள ராஜாபாளையத்தில் இருக்கும் பணக்காரர்கள் சூழ்ச்சிக்கு ஆள்பட்டு, வேலைக்கு ஆள் எடுக்கிறபொழுது, அங்கு இருக்கிற விவசாயிகளுக்கு, நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு முதல் இடம் தராமல் அவர்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். நான் இந்த நிலைமையை தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முதல் சலுகை கொடுத்து அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு, குறிப்பாக நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு, வேலை வாய்ப்பைத் தேடித் தரவேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இராமனுதபுரம் கடற்கரையிலிருந்து கேரள எல்லைவரை இருக்கிறது. வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்தில் பக்கத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் துண்டு விழுந்த ஒரு பகுதி, பக்கத்திலுள்ள புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஒட்டியுள்ள ஒரு பகுதி, இப்படித் துண்டு துண்டாக பல நிலங்கள் ஒன்று சேர்ந்தது ராமனுதபுரம் மாவட்டம், அது மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. அருள் கூர்ந்து தமிழக அரசாங்கம் அதை இரண்டாகப் பிரித்தால், நிர்வாகம் கொஞ்சம் வேகமாக இருக்கும். நிர்வாகம் இன்னும் கொஞ்சம் சீராக இருக்கும், பிரச்சினைகள் இரண்டாக ஒடியும் மிக விரைவில் அவைகளைத் தீர்ப்பதற்கு வழியாக இருக்கும். அதை அருள்கூர்ந்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் நண்பர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த அரசாங்கம் விவசாயிகளைப் பற்றிக் கவலைப் படவில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றும் குறை கூறினார்கள். இது மக்கள் அரசாங்கம், இந்த வரவு-செலவுத் திட்டம் மட்டுமல்லாமல், அவர்கள் உச்சரிக்கும் வார்த்தை ஒவ்வொன்றும், எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளும், ஏழை எளிய மக்களின் நலனை உத்தேசித்துத் தான் இருக்கிறது என்பதை உறுதியோடு தெரிவிப்பேன். உறுப்பினர் திரு. மார்ட்டின் அவர்கள் பேசும்போது, அண்ணாவின் பாதையில் இந்த வரவு-செலவுத் திட்டம், அமைச்சரவை, அமையவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு ஆதித்தனார் அவர்களை அமைச்சரவையில் சேர்த்திருப்பதை, விவாதத்திற்கு தேவையற்ற ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திரு ஆதித்தனார், அரசியலில் இருக்கிறவர். அவரை அமைச்சரவையில் சேர்த்ததில் என்ன குறை ? வேறு துறையில் இருப்பவரை விலைக்கு வாங்கி வந்து சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால், காங்கிரஸ் பதவியில் இருக்கும் மத்திய சர்க்கார் மந்திரி சபையில் எத்தனை சர்க்கஸ் வேலை நடந்திருக்கிறது ? அரசியல் கட்சி எதையுமே சேராத, அரசியலையே அடியோடு அறியாதவர்கள் அரசியல் சமுதாயத்திற்கே தேவையில்லை என்று கருதுபவர்கள், இப்படிப்பட்டவர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதை விட இன்னும் பரிதாபமானது, வெள்ளைக்காரனை எதிர்த்து, காங்கிரஸ் கட்சி, தேசீயக் கனலை உருவாக்கி, காந்தியார் அன்னியப் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும், அவற்றை நெருப்புக்கு இரையாக்கிய நேரத்திலும், அந்த வகையில் நாட்டின் வெறுப்புணர்ச்சியைக் காட்டிய நேரத்தில், வெள்ளைக்காரன் பொருள்களுக்கு மொத்த விற்பனைக்காரராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டது எந்த அரசியல் நாகரீகத்தைச் சேர்ந்தது என்று தெரியவில்லை. இப்படிப் பட்டியலை அடுக்கிக் கொண்டே போனால், புதிய அமைச்சருடைய பேஸிக் குவாலிபிகேஷன், அடிப்படைத் தகுதியைப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட தகுதியே வேண்டாம், அதோடு அவர

களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் சம்பந்தமே இருக்கக் கூடாது என்று உருவாக்கியது போல தெரிகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது, திரு. ஆதித்தனாரை அமைச்சரவையில் சேர்த்ததில் தவறு என்ன ? ஆதித்தனார், எங்கள் கட்சியில் இருப்பவர், அதைப்பற்றி குறைகூற வேண்டிய அவசியம் இல்லை. ஏதோ தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்பு காரணமாகச் சொல்லுகிறார் போலும். அவருடைய பத்திரிகை பலத்தை, காங்கிரஸ் பிரசாரத்திற்கு, அது ஏற்கெனவே மிகப் பலவீனம் அடைந்திருக்கிறது. ஊனமாய் போய்விட்டிருக்கிறது உபயோகப்படுத்த முடியாத நிலையைக் கொண்டு, அந்தக் கோபத்தை இங்கே அவரை, ஒரு அமைச்சராக இருப்பவரைக் குறை கூறுவது, அதைக் கொண்டு இந்த அரசு அண்ணாவின் பாதையில் செல்லவில்லை என்று சொல்வது இதெல்லாம் இவர்களுக்கும் சம்பந்தம் இல்லாத விவகாரங்கள் . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவைத் தலைவர் அவர்களே, யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளட்டும். அது முதல் அமைச்சர் இஷ்டம். ஆனால், அவர்களே, பிரசாரத்திற்காகத் தான் அவர்களைச் சேர்த்துக் கொண்டோம் என்று சொல்வதில் மிக்க சந்தோஷம்.

திரு. பெ. சீனிவாசன் : நான் சொன்னது, அவர்களுடைய பத்திரிகையை உங்கள் கட்சிப் பிரசாரத்திற்கு பயன் படுத்தவில்லை, அதைக் எதிர்க்க முடியவில்லை என்கிற ஆத்திரத்தில், ஏதாவது காரணத்தைக் கொண்டு அவரைத் தாக்க வேண்டும் என்று, அந்த முயற்சியில் அவர் பணக்காரர் என்பதற்காக அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டோர். அவர்கள் எங்கள் கட்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள் என்கிறீர்கள். அவர்கள் எங்கள் கட்சி உறுப்பினர். அவர்கள் எங்கள் கட்சிக்காரர். அவர்கள் எங்கள் கட்சி மந்திரிசபையில் சேர்த்திருக்கிறது. அது எப்படி அவரை எங்கள் கட்சி மந்திரிசபையில் சேர்த்திருக்கிறது. அது எப்படி அண்ணாவின் பாதைக்கு முரணான பாதையாகும் ? இந்தப் புதிய அமைச்சரவையின் வரவுசெலவுத் திட்டம் நாட்டுக்கு நல்லதொரு நம்பிக்கையைத் தந்திருக்கிறது. இந்த அமைச்சரவையை, எதிர்க்கட்சி மோதிப் பார்த்தாலும் அதை அசைக்க முடியாது . . . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : எல்லாக் கட்சியிலும் தாவித் தாவி வந்திருப்பவர் என்கிற தனிப்பெரும் சிறப்பும் அவருக்கிருக்கிறது என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. நி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, மறைந்த மாவீரர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே வைக்கப்பட்டிருக்கும், நிதி நிலை அறிக்கைபற்றி எனக்குத் தோன்றிய சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே ஒரு வார காலமாக, கவர்னர் உரை மீது பல விஷயங்களைப் பற்றிப் பேசப்பட்டது. பெரும்பாலும் பேசிய விஷயங்களெல்லாம், நாகர்கோவில் சம்பந்தப்பட்டதாகத் தான் இருந்தது. பெருந்தலைவர் திரு. காமராஜர் ஜெயித்து விட்டார்கள். எப்பேர்ப்பட்ட ஜெயிப்பு, எப்பேர்ப்பட்ட சாமர்த்தியம், எப்பேர்ப்பட்ட வீரர் என்றெல்லாம் காங்கிரஸ் தோழர்கள் அழகாகச் சொன்னார்கள். ஏதோ பம்பாயிலே ஜெயித்துவிட்டது போலவும் பேசுகிறார்கள். டெல்லியிலோ, வேறு எங்கோ ஜெயித்துவிட்டது போலப் பேசுகிறார்கள். உலகத்திலேயே இல்லாத மாதிரி ஜெயித்துவிட்டதாகப் பேசுகிறார்கள். காமராஜர் அந்த அளவுக்கு ஜெயிக்கக்கூடியவர்கள். ஜெயிக்க வேண்டியவர்கள் என்பதைப் பார்த்தால், அதைப்பற்றி அதிகமாக விமர்சிக்க வேண்டியதுகூட அவசியம் இல்லை என்றுதான் சொல்லுவேன். அவரைக் கேவலப் படுத்த வேண்டுமென்று தான் காங்கிரஸ் தோழர்கள் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறுகிறார்கள் ; தமிழ்நாடு காங்கிரஸ்

[திரு. தி. பொன்னுமலை] [1969 மார்ச் 4

தலைவர் திரு. சுப்பிரமணியம் கூறுகிறார்கள். அவர்களை யெல்லாம் தலைவர் என்று சொல்லவில்லை. இங்கே இவர் மட்டும் பெருந்தலைவர் என்கிறார்கள். பெருந்தலைவர் பேசுகிறார் என்று போடுகிறார்கள். எதற்காக இப்படிப் போடுகிறார்கள் என்றே புரியவில்லை. ஒன்றுமே தெரியவில்லை. நிஜலிங்கப்பா வருகிறார்கள். வி. எஸ். கூடவே வருகிறார்கள். அதோடு பெருந் தலைவா பேசுகிறார்கள் என்று பெரிய பெரிய எழுத்தில் போடுகிறார்கள். இது என்ன வேடிக்கை என்று எங்களுக்கே புரியவில்லை. இதைத் தான பேசுகிறார்களே தவிர, நாட்டின் முன்னேற்றத்திற்காக, சட்ட மன்றத்திற்கு வேண்டிய, நம்முடைய எதிர்காலத்திற்கு வேண்டியவற்றிற்காக திட்ட வட்டமாக எதாவது வகுத்துக் கொடுக்கும் நிலையில காங்கிரஸ் நண்பர்கள் இருக்கிறார்களா என்றால், இல்லை என்பதை மிக மிக வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

விவசாயம் சம்பந்தமாக, ஏற்கெனவே 20 ஆண்டு காலமாக அரசு செலுத்தியவர்கள் தமிழகத்தில் ஏறக்குறைய 2·5 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் வழங்கியிருக்கிறார்கள். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நம்முடைய சர்க்கார் ஒரு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் வழங்கி, இப்பொழுது இந்த பட்ஜெட்டில் மேலும் 50,000 பம்பு செட்டுகளுக்கு வழங்க வழிவகை வகுத்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய சாதனை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்குள்ள ஆசையெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டு, இந்த நாட்டுக்கு நல்லதொரு திட்டத்தை வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவையையும், இந்த மன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அது அவர்களுடைய கடமை என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே கூட, கடும் பஞ்சம் தமிழகத்தில் உருவாகி இருக்கிறது என்றும், அதைச் சமாளிக்க நம்மிடத்தில் பம்புசெட்டுகள் இருக்கின்றன என்றும், அதன் மூலம் எப்படியும் சமாளித்து விடுவோம் என்றும், உணவுத் தானியங்கள் ஓரளவுக்கு கையிருப்பு இருக்கிறது என்றும், ஓரளவு இறைப்பின் மூலம், உற்பத்தியைப் பெருக்கி இந்த ஆண்டு சமாளித்து விடலாம் என்றும் குறிப்பிட்டார்கள். நான் சொல்வேன், இப்பொழுது இருக்கும் நிலையில், 3·5 லட்சம் பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிற நிலை தமிழகத்தில் இருக்கிறது. இன்னும் இந்த அரசு 3·5 லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக கொடுத்தால், இந்தத் தமிழகத்திற்கு பஞ்சமே வராது. இப்பொழுது இருக்கும் 3·5 லட்சம் பம்பு செட்டுகளோடு இன்னொரு 3·5 லட்சம் பம்பு செட்டுகளுக்கும் இணைப்புக் கொடுக்க வேண்டும். அப்பொழுது, தமிழகத்தில், இப்பொழுது இருக்கும் பஞ்ச நிலைமாறி மற்ற நாடுகளுக்கும் நாம் உணவு வழங்கும் நிலை ஏற்படும் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்கிறோம். அதற்கு வேண்டிய நிலங்கள் இருக்கின்றன, கிணறுகள் இருக்கின்றன, விண்ணப்பங்கள் இருக்கின்றன. மின் வாரியத்தில் இப்பொழுதே 7 லட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுத்து, மின் இணைப்புக் கொடுத்தால், உற்பத்தி பெருகும் என்பதைப் புள்ளி விவரம் எடுத்துப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் இன்றைக்கு இருக்கும் நிலையில், இந்த ஆண்டு ஒரு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, அடுத்த ஆண்டு ஒரு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு என்று கொடுப்பதானால், ஆண்டுக்கு கிட்டத்தட்ட ரூ. 25 கோடி செலவாகும். இரண்டு ஆண்டுக்கும் ரூ. 50 கோடி செலவாகலாம். அந்த வகையில் இந்தத் திட்டத்தை போட்டு எப்பாடு பட்டாகிலும், நீங்கள் நிறைவேற்றிவிட்டால், இந்த அரசுக்கு, இன்றைக்கு இருக்கும் பெருமை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்கிற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1969 மார்ச் 4] [திரு. தி. பொன்னுமலை]

ஆகவே, இங்கே இருக்கின்ற அமைச்சர் அவர்களும், மற்றத்தோழர்களும் ஒத்துழைத்து மின் வாரியமும், நல்ல திட்டங்களை வகுத்து, பி.ப.
மத்திய அரசிலிருந்தோ அல்லது பிற வழிகளிலோ 50 கோடி ரூபாய். 1-30
கடன் திரட்ட வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இதைக் குறித்து மின்சார வாரியத் தலைவரிடம் பேசினேன். "பணம் இல்லை இல்லையென்று சொல்கிறீர்களே, 50 கோடி ரூபாய் சேகரித்துக் கொடுத்தால் உங்களால் வேலை செய்துவிட முடியுமா என்று கேட்டேன் அதற்கு மின்சார வாரியத் தலைவர் அவர்கள், "எங்களிடம் ஆட்கள் இருக்கிறார்கள். சாமான்கள் இருக்கின்றன. இந்த ஆண்டிலேயோ 50 கோடி ரூபாயும் கொடுத்தால் கூட சுமார் இரண்டு லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து விடுகிறோம்" என்று சொன்னார்கள். அந்த வகையில் நமது அரசுக்கு எல்லாவித வாய்ப்பும் வசதியும் இருந்தும் பணத்திற்காக மத்திய சர்க்காரிடத்தில் எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தியாவதைக்கூட தடை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இதை யெல்லாம் தீர யோசித்து, தமிழகத்திற்கு நிரந்தரமான நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திற்கு நல்ல பெயரை தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி) : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

பி.ப.
எதுமில்லை. 1-32

இணைப்பு I

[7-ம் பக்கத்திலுள்ள 160-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

புது டில்லியில் 1967-ம் ஆண்டு மே திங்கள் 12, 13-ம் நாட்களில் நடைபெற்ற மாநிலப் பாசன-மின்சார அமைச்சர்களின் மூன்றாவது மாநாட்டில் செய்யப்பட்ட பரிவுரைகளைக் கீழ்க்காணும் விவர அறிக்கையில் காணலாம்.

நிகழ்ச்சி நிரல் இனங்கள்.

1. நான்காவது திட்டத்தில் பாசன மேம்பாடு பரிவுரைகள்.—வேளாண்மையில் உள்ள நிலப்பரப்பில் ஏறத்தாழ 23 சதவீதம் பரப்பு மட்டுமே தற்போது பாசனம் பெறுகிறது என்றும் இவ்வாறு குறைந்த பரப்புள்ள நிலத்திற்குப் பாசனம் அளிக்கும் நிலையிலிருந்து கொண்டு இந்தியாவை போன்ற ஒரு வெப்ப மண்டல நாடு அன்றாடம் பெருகி வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்கப் போதுமான அளவிற்கு வேண்டியதை விளைவிக்க முடியாது என்றும் பாசன மின்சார அமைச்சர்கள் மூன்றாவது மாநாடு அறிந்துள்ளது. வேளாண்மைக்குத் தண்ணீர் இன்றியமையாததாகும். எனவே, குறைந்தது 50 சத வீதம் பரப்பிற்காவது தண்ணீர் வழங்கப்பட வேண்டும். முக்கிய உணவுப் பயிராகிய நெல்லுக்குப் பாசனம் தேவையாகும். பாசன வசதி இல்லையென்றால் விளைச்சல் கிட்டும் என்பதும் உறுதி இல்லை. அப்படியே விளைந்தாலும் அது குறைவாகவே இருக்கும். எனவே பாசன வசதிகளைப் பெருக்குவது முதல் தேவையும் மிக இன்றியமையாத தேவையுமாகும். சிறந்த விதைகளைப் பயன்படுத்துதல் இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல் முதலியன போன்ற புது முறை பண்ணைத் தொழில் நுட்பங்கள் வெற்றியடைவது மிகுந்த அளவிலும் தவறாமலும் பாசன வசதி கிடைப்பதைப் பொறுத்தே உள்ளது. எனவே, நிதிநிலை நெருக்கடி மிக்கதாயிருப்பினும் முந்துரிமை அடிப்படையில் பாசன மின்சக்தித் திட்டங்களுக்கு மிகவும் முதன்மையளித்து நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு பரிந்துரைக்கிறது. அதிலும் குறிப்பாக கட்டுமான வேலை இறுதிக் கட்டத்தில் நடந்து வருவனவும் 2 அல்லது 3 ஆண்டுகளில் பலனளிக்கக்கூடியனவுமாகிய திட்டங்கள் உடனடியாக உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுவதுடன் இறக்குமதியைக் குறைக்கவும் உதவியாக இருக்குமாகையால் அவற்றுக்கு ஏனைய திட்டங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் முதன்மையளிக்க வேண்டும்.

மிகவும் குறைந்த அளவில் பாசனம், செய்யப்பட்டு வரும் மாநிலங்களில் புதிய திட்டங்களை மேற்கொள்ளுவதற்கும் போதிய அளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

பாசனத் திட்டக் கட்டுமான வேலைகளுக்கு மிகுந்த அளவில் செலவு ஏற்படுவதையும் நடுத்தரப் பாசனப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதன் அவசியத்தையும் பாசன அமைச்சர்களின் மூன்றாவது மாநாடு கருத்திற் கொண்டு முறையான திட்ட ஆலோசனைக்கு மத்திய அரசு குறிப்பிட்டுள்ள ரூ. 2 கோடி என்னும் வரம்பை ரூ. 3 கோடியாக உயர்த்தப் படவேண்டும் என்று முடிவு செய்கிறது.

2. பாசன வாய்ப்பு வளத்தை விரைவில் பயன்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள்.—இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள பாசன வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள இயலாமல் 38 லட்சம் ஏக்கர் நிலங்கள் பின் தங்கியுள்ளன என்பதை பாசன-மின்சக்தி அமைச்சர்களின் மூன்றாவது மாநாடு அறிந்துள்ளது. எனவே நிலங்கள் பாசன வாய்ப்புக்களைப் பயன்படுத்தி கொள்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து மாநிலங்கள் திட்டவாரியாக ஆராய்ந்து பார்த்து இந்தப் பாசன வாய்ப்புகளை மேம்பாடு செய்வதில் உள்ள இடர்ப்பாடுகள்

குறித்தும் சிறந்த பயனை அடைவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இது குறித்து மத்திய அரசிடமிருந்து தேவைப்படும் உதவி குறித்தும் ஒரு மாதத்திற்குள் பாசன மின்சாரத்துறை அமைச்சகத்திற்குக் கடிதம் எழுத வேண்டுமென்று முடிவு செய்கிறது.

3. இந்திய பாசன ஆணைக் குழு ஒன்றை அமைத்தல்.—இந்தியாவில் பாசன மேம்பாட்டின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்யவும், இந்நாட்டில் பாசன மேம்பாட்டிற்காக வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவும் இந்தியப் பாசன ஆணைக் குழு ஒன்றை அமைப்பது ஏற்புடைத்தென்று கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழு ஆற்ற வேண்டிய பணிகள் எவை என்பது மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்து முடிவுசெய்யப்பட வேண்டும்.

4. பாசனத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் நிதி ஆதாயங்கள்.—இப்பாசனத் திட்டங்களின் வட்டி, பேணுதற் செலவு ஆகிய வகையில் ஏற்படும் செலவைச் சரிக்கட்டும் வகையில் நிதி வளத்தைப் பெருக்க வேண்டியது அவசரத் தேவையாகும். எனவே நிஜலிங்கப்பா குழு செய்துள்ள பரிவுரைகளையொட்டி தக்கவாறு தண்ணீர்த் தீர்வைகள் விதிக்கப்பட வேண்டும் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பாசனம் செய்யப்படும் நிலங்களிலிருந்து உழவர்களுக்குக் கிடைக்கும் கூடுதல் வருவாயின் ஒரு பகுதியை இத்தகைய தீர்வையின் மூலமாகவே வசூலிக்க முடியும். நிஜலிங்கப்பா குழுவின் பரிவுரைகள் மாநில அரசுக்கு ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

5. செயற்குறிப்பிலுள்ள மத்திய கருவிகள் தொகுப்பு—நிர்வாக ஏற்பாடுகள்—கருவிகளைப் பயன்படுத்தும் முறை.—ஏற்படுத்தக் கருதியுள்ள அமைப்பு வாடகைக் கட்டணங்களை வசூலிப்பது ஆகியவை குறித்து மாநில அரசுகளுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இது குறித்து அவைகளின் கருத்துக்கள் வரப்பெற்றவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

6. நான்காவது ஐந்தாண்டு மின்சார வேலைத் திட்டம்.—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் 2 கோடி கிலோவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யும் வகையில் மின் உற்பத்தி நிலையங்களின் அமைப்புத் திறனை உயர்த்துவதென்னும் குறிக்கோள் அளவு போதுமானதாக இருக்காதென்றும் இக்குறிக்கோள் அளவை, மின் பயன் ஆய்வு (load survey) அறிக்கைகளையொட்டித் தகுந்தவாறு உயர்த்தாவிட்டால் சில மாநிலங்களில் மின்சாரப் பற்றாக்குறை நிலை தொடர்ந்து இருந்து வரும் என்றும் பொதுவாகக் கருத்து நிலவியது.

1966-ம் ஆண்டின் மின் பயன் ஆய்வின்படி சில மாநிலங்களில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கு மென்று அறியப்பட்டது. எனவே இந்தப் பற்றாக்குறையை அம்மாநிலங்கள் எவ்வாறு சரிக்கட்டிக் கொள்ள எண்ணியுள்ளன என்பது குறித்த செயற்குறிப்புகளை அனுப்பி வைக்குமாறு அந்த மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

1967-68-ல் செயல்படத் தொடங்க வேண்டியுள்ள திட்டங்களுக்குக் குறிப்பிட்டுள்ள குறிக்கோள் அளவுகளை உறுதியாக அடையும் பொருட்டு அவற்றை நிறைவேற்றி முடிப்பதில் உள்ள பல்வேறு இடர்ப்பாடுகள் தடங்கல்கள் ஆகியவை குறித்து மாநில அரசுகள் ஆராய்ந்து பார்த்து இயன்ற இடங்களில் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உணரப்பட்டது. இத்தகைய ஆய்வுகள் முறையாகவே தொடர்ந்து நடத்தப் படவேண்டும்.

(1) மின்சாரம் அனுப்பல்-வழங்கல் திட்டங்களுக்கும் (2) கிராமப் புறங்களுக்கு மின்வசதி செய்யும் திட்டங்களுக்கும் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இருக்காதென்று கருதப்பட்டது. மின்சாரம் அனுப்பல்-

வழங்கல் ஏற்பாடுகள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் சில மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலை இருக்கிறது.

மாநிலங்களுக்கிடையே மின்சக்தியைப் பகிர்ந்து கொள்ள வசதியளிக்கும் பொருட்டு பல மாநில மின் இணைப்புகளை அமைக்கும் வேலையை இயன்ற விரைவில் நிறைவேற்றி முடிக்கவேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

7. **மின்சாரம் அனுப்பும் திட்டத்திற்கான கடனுக்கான உலக வங்கிக்கு வாக்குறுதி கொடுத்தப்படி குறித்த காலஅளவில் நிதி ஆதாயம் அடைவதற்காக மாநில மின்சார வாரியங்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்.**—மின்சாரம் அனுப்பும் திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றுள்ள மாநில மின்சார வாரியங்களும் ஏனைய நிறுவனங்களும் குறிப்பிட்ட தேதிகளுக்குள் நிதி ஆதாயத்தை எட்டுவது குறித்து கடன் உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு அவைகள் தம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

8. **பெரிய அனல் மின்சார நிலையங்களை இயக்கவும், பேணிவரவும் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்**—நிகழ்ச்சி நிரல் குறிப்பில் விளக்கியுள்ள நிலை கவனத்தில் கொள்ளப்பட்டது.

9. **மத்திய மின்சார ஆலோசனை மன்றம் ஒன்றை அமைத்தல்.**—மத்திய மின்சார ஆலோசனை மன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்னும் செயற்குறிப்புக்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. மின் உற்பத்தி, பகிர்மானம் வழங்கல், கிராமப்புற மின்வசதித் திட்டங்கள் ஆகியவை குறித்தும் இம் மன்றத்திற்கு அனுப்பப்படும் கொள்கை பற்றிய ஏனையவை குறித்தும் இம் மன்றம் பரிந்துரைக்கும்.

The following statement shows the recommendations made at the Third Conference of State Ministers of Irrigation and Power held in New Delhi, on the 12th and 13th May 1967.

AGENDA ITEMS

RECOMMENDATIONS.

1. *Irrigation development in the Fourth Plan.*—The Third Conference of Irrigation and Power Ministers notes that only about 23 per cent of the sown area is irrigated at present and, with this low intensity, a tropical country like India cannot raise sufficient food grains to feed a vast and growing population. Water is the basic input for agriculture and so it must be supplied to at least 50 per cent of the area. Rice, the principal food crop needs irrigation. Without that, the yield is uncertain and far less. Hence, the first and foremost need i sto maximise irrigation facilities. The success of new techniques of farming like the use of better seeds, fertilizers, etc., depends on the availability of assured water in large dozes. Therefore, despite the tight resources position, the Conference recommends that funds for irrigation and power projects should be provided on a high priority basis. In particular, the projects in an advanced stage of construction, and which can yield results within the next 2—3 years, should be given over-riding priority, as they will help increase food production immediately and assist in reducing imports.

Adequate funds should also be provided for taking up new schemes in States having a low percentage of irrigation.

The Third Conference of Irrigation and Power Ministers, taking note of the high cost of construction, and the need for expiditing Medium Irrigation works, resolves that the limit of Rs. 2 crores prescribed by Central Government for proforma examination be raised to Rs. 3 crores.

2. *Measures for speedy utilisation of irrigation potential.*—The Third Conference of Irrigation and Power Ministers notes the lag of 3·8 million acres in utilisation of irrigation potential created so far and resolves that the States should carry out a project-wise study of the lag in utilisation and communicate to the Ministry of Irrigation and Power, within a month, the difficulties experienced in developing this potential, steps proposed to be taken to achieve better results, and the assistance required from the Central Government in this regard.

3. *Setting up of an Indian Irrigation Commission.*—It was agreed, in principle, that it would be advisable to set up an Indian Irrigation Commission to assess the progress of development of irrigation in India and to go into the question of future development of irrigation in the Country. The terms of reference of the Commission are to be settled in consultation with the State Governments.

4. *Financial returns from irrigation projects.*—It was generally agreed that in view of the urgent need to raise resources to meet interest and maintenance charges, water-rates should be suitably fixed in the light of the recommendations made by the Nijalingappa Committee so that a portion of the additional income derived by the cultivators from irrigated lands could be recovered. The recommendations of the Nijalingappa Committee have already been commended to the State Government.

5. *Proposed Central Equipment Pool-Administrative arrangements—Manner of utilisation of the equipment.*—It was decided that further action will be taken on receipt of the comments of the State Governments who have already been addressed on the subject in regard to the proposed set-up, realisation of hire charges, etc.

6. *Fourth Plan Power Programme.*—It was the general opinion that the target of raising the installed capacity to 20 million KW at the end of the Fourth Plan may not be adequate and power shortages may continue to exist in some States unless the target is suitably raised in the light of the load survey reports.

It was noted that in some States, there would be deficiency of Power as per the load survey of 1966 and the concerned States were requested to send up proposals as to how they propose to make up the deficiency.

It was recognised that to ensure attainment of physical targets set State Governments should make a study of the various difficulties and bottle-necks in the completion of those projects due for commissioning in 1967-68 and take advance action wherever possible. Similar studies should be made a regular feature.

It was felt that the allocation of funds for (i) transmission and distribution schemes and (ii) rural electrification programmes, may not be adequate. In some States utilisation of the available generating capacity was not possible due to the inadequacy of the transmission and distribution system.

It was agreed that inter-State transmission lines should be completed as early as possible to facilitate exchange of power.

7. *Action to be taken by State Electricity Boards to achieve financial returns by particular dates as promised to the World Bank under the Transmission Loan.*—It was agreed that all-out efforts should be made by the State Electricity Board and other participants to the World Bank Transmission Loan to honour the commitments in the loan agreement in regard to achievement of financial returns by the stipulated dates.

8. *Training of personnel for operation and maintenance of large thermal stations.*—The position, as explained in the agenda note, was taken note of.

9. *Formation of a Central Electricity Consultative Council.*—The proposal for setting up of a Central Electricity Consultative Council was approved. The Council will make recommendations on matters relating to generation, supply and distribution of electricity, rural electrification programmes, and other policy matters referred to it for consideration.

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 165 on page 12.]

Serial number and year during which order was placed. (1)	Name of company (2)	Material and quantity ordered. (3)	Value of the order. (4) RS.
1 1965-66	Nil.	Nil.	Nil.
2 1966-67	The Tata Iron and Steel Co., Ltd., Calcutta.	6″×5″ R.S.Js.—650 tonnes 8″×6″ Do. 1,000 „	12,67,200
	Mahendra and Co., Madras-1.	6″×5″ R.S.Js.—650 tonnes 8″×6″ Do. 1,000 „	12,67,200
	Seth Nanakchand Shadiram, Madras-1.	6″×5″ R.S.Js.—650 tonnes 8″×6″ Do. 1,000 „	12,67,200
3 1967-68	Nil.	Nil.	Nil.

தொடர் எண்ணும் சாதனங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட ஆண்டும். (1)	வணிக நிறுவனத்தின் பெயர். (2)	தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட பொருள் அளவு. (3)	தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டவற்றின் மதிப்பு. (4) ரூ.
1 1965-66	இல்லை.	இல்லை.	இல்லை.
2 1966-67	டாடா இரும்பு எஃகு கம்பெனி, லிமிடெட், கல்கத்தா.	6″×5″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—650 டன். 8″×6″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—1,000 டன்.	12,67,200
	மகேந்திரா கம்பெனி, சென்னை-1.	6″×5″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—650 டன். 8″×6″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—1,000 டன்.	12,67,200
	சேட் நானக்சந்த் ஷாதிராம், சென்னை1.	6″×5″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—650 டன். 8″×6″ உறுதியான உருக்கு உத்திரங்கள்—1,000 டன்.	12,67,20
3 1967-68	இல்லை.	இல்லை.	இல்லை.

[1969 மார்ச் 5

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமூர்த்தி மலைப்பகுதிக்கு நிறைய பேர் வருகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை வாச ஸ்தலமாகச் செய்வதற்கும், ஒரு டூரிஸ்ட் பங்களா கட்டுவதற்கும் வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விரைவிலே ஆரம்பிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : As the climate of that place is supposed to be very salubrious and it is supposed to be the 'Poor man's Ooty', what are the other attractions, apart from the temple in the Tirumurthy Hills which warrant it to be converted as a tourist centre?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருமூர்த்தி மலையிலே இருக்கிற ஆலயத்தைவிட அங்கே இருக்கிற நீர்வீழ்ச்சிதான் இந்தத் திட்டத்திற்கு ஏதுவாக இருக்கிறது. இந்த நீர்வீழ்ச்சியும் கோவிலும் இருப்பதால்தான், இதை ஒரு உல்லாச பயணிகள் இடமாக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறோம். அது பொதுப்பணித்துறை மூலமாகச் செய்யப்படுகிறது.

பெருந்துறையில் உள்ள உறுக்கி நோய் நலம் பேண் மருத்துவமனை

* 175 வினா : **திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பார்:

பெருந்துறை T. B. சானிடோரியத்துக்கு ஆண்டுதோறும் அரசு வழங்கும் மான்யம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரூபாய் ஒரு லட்சம் இரண்டு தவணைகளில் கொடுக்கப்படுகிறது

திரு. சு. துரைசாமி : பெருந்துறையிலே இருக்கிற டி. பி. சானிடோரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்தார்கள். ஒரு லட்சம் ரூபாய் பெறக்கூடிய அந்த சானிடோரியத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு இல்லை. அதை நடத்துபவர்கள் தாங்கள் சொந்தமாக நடத்துவதைப் போல் நடத்துகிறார்கள். பொதுவாக நடத்துவதைப்போல் நடத்தப்படுவதில்லை. ஆகையால் சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைக்குழு ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றிய விளக்கங்கள் குறிப்பிலே இல்லை. இதுபோன்ற, டி. பி. சானிடோரியத்திற்குத் தனியாகக் குழு போட்டிருப்பதாகத் தகவல் இல்லை. பொதுவாக அரசாங்க மருத்துவ மனைகளுக்குத்தான் ஆலோசனைக் குழு அமைக்கிறோம். ஆனால், இதுபோன்ற சானிடோரியத்திற்கு குழு அமைத்திருப்பதாகத் தெரியவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : பெருந்துறை டி. பி. சானிடோரியத்திற்கு சிகிச்சைக்காக வருகின்றவர்கள் இடவசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். கோவையைப் பொறுத்தவரை அது ஒரு தொழில் பகுதியாக இருப்பதால் 100-க்கு 65 சத விகிதத்தினரை இந்த நோய் பற்றிக்கொள்வதினால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய முறையில் இடவசதி ஏற்படுத்தி அந்த சானிடோரியத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ? அல்லது கோவையிலே ஒரு டி. பி. மருத்துவ மனையை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

1969 மார்ச் 5]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அங்கே இப்போது 384 படுக்கை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. ஏழைகளுக்குத்தான் அதிகப்படியான முக்கியத்துவம் தரப்படுகிறது. வசதியுள்ளவர்கள் பணம் கொடுத்து சிகிச்சை செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு தகவல் எதுவும் இல்லை.

திருமதி. வி. ப. பழனியம்மாள் : அரசாங்க மனையில் இருப்பதுபோல் இந்த டி. பி. சானிடோரியத்தில் ஒரு அட்வைசரி கமிட்டி இருக்கிறதா ? அப்படியென்றால் யார் யார் உறுப்பினராக இருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த டி. பி. சானிடோரியத்திற்கு அட்வைசரி கமிட்டி எதுவும் இல்லை.

திரு. என். வரதராஜன் : டி. பி. அதிகமாகப் பரவுவதால் டி. பி. சானிடோரியத்திலுள்ள படுக்கை வசதிகளை அதிகப்படுத்த சர்க்கார் முன்வருமா ? அரசாங்க மருத்துவ மனைகளில் ஆலோசனைக்குக் குழு அமைத்திருப்பது போல், டி. பி. சானிடோரியங்களிலும் ஆலோசனைக்குழு அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : குறிப்பிட்ட ராமலிங்கம் டி. பி. சானிடோரியம் தனியார் துறையால் நடத்தப்படுகிற மருத்துவமனையாகும். இதுபோன்று தனியார் துறையில் நடத்தப்படுகிற மருத்துவ மனைகளுக்கு ஆலோசனைக் குழு அவசியம் இல்லை. பொதுவாக படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவது என்பது நல்ல யோசனைதான். ஆனால் நிதி நெருக்கடியையொட்டி இப்போது அதுபற்றி யோசிப்பதற்கில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சரா், க்ஷயரோகம் மிகக் கொடிய நோய் என்பதும், அது மேலும் மேலும் அதிகப்படியாகப் பரவி வருகிறது என்பதும் இதிலிருந்து தெரிகிறது. ஆகவே, டி. பி. சானடோரியங்களுக்கு வரக்கூடிய நோயாளிகளுக்கு, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டாய அறுவை சிகிச்சை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில், பெருந்துறை டி. பி. சானடோரியம் தனியார்த் துறையில் இருப்பதாகச் சொன்னார்கள். தனியார்த் துறையில் இருந்தாலுங்கூட, அதற்கு அரசாங்கம் ஆண்டு தோறும் இரண்டு முறையாக ஒரு லட்ச ரூபாய் தருவதாகவும் சொன்னார்கள். அரசாங்கம் தரும் பணத்தை அவர்கள் பயன்படுத்தும் காரணத்தால், அங்கிருக்கும் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கும், யோசனைகள் சொல்வதற்கும் ஒரு குழு அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மருத்துவ மனை இன்றைக்கு டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்விஸஸ் அண்டு ஃபாமிலி ப்ளானிங் அவர்களுடைய மேற்பார்வையில்தான் இயங்கிக்கொண்டு வருகிறது. அவர்கள்தான் நாம் தரும் மானியத்தையும், மெட்ராஸ் மெடிகல் கோடு, வால்யூம் 1 என்னும் விதித் தொகுப்பின் அடிப்படையில் கொடுத்து கொண்டு வருகிறார்கள். எனவே, அவர்களே அதை மேற்பார்வையிட்டு, அதனுடைய கணக்குகளைப் பார்த்துவரும் காரணத்தால், தனியாகக்குழுவொன்று போடவேண்டிய அவசியம் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, க்ஷயரோக வியாதி, வசதி இருப்பவர்களுக்கு அவ்வளவாக வருவதில்லை ; வசதியற்றவர்களுக்குதான் அதிகமாகப் பரவுகிறது. அதிலும், வடார்க்காடு மாவட்டத்திலுள்ள ஏழை மக்களுக்கு—குறிப்பாக பீடித் தொழில் செய்பவர்களுக்குத்தான் இந்த வியாதி பரவலாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அங்கிருக்கும் டி. பி. சானிடோரியத்தில் அதிக வசதி இல்லாததால்

பல நோயாளிகளை ஒரு வாரம், இரண்டு வாரம் வைத்திருந்துவிட்டு, பிறகு வெளியே அனுப்பிவிடக்கூடிய நிலை இருப்பதை அரசாங்கம் போக்க முயற்சிக்குமா ? அதற்கென்று கமிட்டியொன்று இருப்பதாக நான் அறிகிறேன். அத்தகைய கமிட்டி இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், எந்த நோயாளிகளைச் சேர்க்கலாம் என்பதற்கு ஏதாவது முறை வகுக்கப்படுகிறதா என்ற நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்துறை மருத்துவ மனையைப்பற்றியது. ஆனால், கனம் உறுப்பினர் போடுகின்ற கேள்வியோ வடார்க்காடு மாவட்டத்திலிருக்கும் மருத்துவ மனையைப்பற்றி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

சுவாமிமலையில் வெண்கலச் சிலைகள் தயாரிப்பு.

* 176 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுவாமிமலையில் உள்ள வெண்கலச்சிலை தயாரிப்பு நிலையத்தில் 1967-ம் ஆண்டில் எத்தனை, எத்தகைய சிலைகள் செய்யப்பட்டன ?

(இ) இவற்றால் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) விதவிதமான எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(இ) அந்த எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகளில் ரூ. 21,206·90 விலையுள்ள ஐம்பது சிலைகள் விற்பனை செய்யப்பட்டன. இதனால் ரூ. 1,276·94 லாபம் கிடைத்தது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, கடவுள் உருவம் பதித்த சில சிலைகளுக்கு வெளி நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கும் காரணத்தால் தமிழகத்திலுள்ள அத்தகைய சிலைகளைச் சில பேர் திருடி வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள் என்பது உண்மையா ? அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருடுகின்றதையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் இத்தகைய சிலைகளையும் திருடுவதை மேற்கொண்டிருக்கலாம். அதையெல்லாம் தடுக்க அப்போதைக்கப்போது நம்முடைய காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

New College for Rajapalayam

* 177. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) the number of colleges in the various districts under the jurisdiction of Madurai University;

(b) whether any representation has been received recently from Rajapalayam for the starting of a college; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு செ. மாதவன் :

(அ)	மதுரை	14
	திருநெல்வேலி	17
	இராமநாதபுரம்	9
	கன்யாகுமரி	8
		48

(இ) இல்லை.

(உ) கேள்விக்கிடமில்லை.

திரு கரு. சீமைச்சாமி : ராஜபாளையம் ஒரு பெரிய நகரம். அங்கே கல்லூரி இல்லாமலிருப்பதால், அங்குள்ள மக்கள் அங்கு ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று முன்வருவார்களானால், அதற்காக அரசாங்கம் நிதி உதவி கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கனம் உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்ததற்குப் பின்னால் அதுபற்றிக் கேட்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர், சார். நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலூகாவில் கள்ளிகுளம் என்ற ஊரில் கௌசானல் கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரி நடந்துவந்தது. ஆனால், நடப்பு ஆண்டில் நிதிப் பற்றாக்குறை காரணமாக அது நடைபெறவில்லை. ஆகவே, புதிய கல்லூரிகளை ஆரம்பிக்கும் இந்த நேரத்தில், இப்படி நடந்து கொண்டிருந்த ஒரு கல்லூரிக்கு அரசாங்கம் சற்று அதிகமாக உதவி அளித்து, அதைத் திரும்பவும் நடைபெறச் செய்வதற்கான செயற்குறிப்பை இந்த அரசு கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கல்லூரியைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால், பழைய கல்லூரியைத் திரும்பத் தொடங்கச் செய்யவேண்டும் என்ற நல்ல கருத்தைச் சொன்னார்கள். அவ்வாறு சொன்னது பாராட்டுக்குரிய செய்தியாகும். நேற்று வேறொரு அவையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினரொருவர், புதிய கல்லூரிகளை உடனே திறக்க வேண்டும் என்று சொன்னாரே தவிர, மற்றதைப்பற்றிச் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசாங்கம் நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை பல்கலைக் கழகத்தின் வரம்பிற்கு உட்பட்ட மற்ற இடங்களிலிருந்து கல்லூரி திறக்கவேண்டும் என்று மனுக்கள் வந்தனவா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இருக்கும் கல்லூரியைப்பற்றித் தகவல் இருக்கிறது. மனுக்கள் வந்தவற்றைப்பற்றித் தகவல் இல்லை.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே மதுரைப் பல்கலைக் கழக வரையறைக்கு உட்பட்ட பகுதிகளில், அரசுத் தரப்பிலிருந்து இந்த ஆண்டு புதிய கல்லூரி ஏதாவது ஆரம்பிக்க திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : அது பற்றித் தகவல் இல்லை.

திரு பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருவாரூர் நகரில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ? குறிப்பாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலாவது அந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டு தோறும் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. இந்த ஆண்டு நான்கு கல்லூரிகள் திறக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்த எந்த ஊருக்கு என்பது பின்னர்தான் முடிவு செய்யப்படும்

New High Schools in Chingleput district

* 178 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the

number of new high schools opened during the academic year 1968–69 in the Chingleput district; and the places where they were opened?

மாண்புமிகு திரு செ. மாதவன் : மூன்று செம்பாக்கம், காவேரி ராஜபுரம், ஊத்துக்காடு.

THIRU K. VINAYAKAM : May I know the basis on which new high schools are opened? What are the necessary qualifications prescribed by the department to open new high schools?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் திறப்பதற்கு என்ன என்ன வேண்டும் என்பதற்கு ஒரு பெரிய அறிக்கை இருக்கிறது. அந்த அறிக்கை முழுவதையும் படிக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அங்கேயிருக்கும் தேவைக்கு ஏற்றவாறு மக்கள் முன்வரும்போது அவர்கள் பணம் கொடுப்பதற்கும், இடம் கொடுப்பதற்கும், கட்டடம்கொடுப்பதற்கும் அவர்கள் முன்வந்தால் அந்த இடங்களில் நாம் உடனடியாக வைக்க முற்படுகின்றோம். முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது அந்த ஊருக்கு கல்வி வசதிக்காக உயர்நிலைப் பள்ளி தேவையா, அதற்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை கிடைக்குமா என்பதைப் பற்றி தான் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊருக்கும் புதிய உயர்நிலைப் பள்ளி திறக்கும்போது, கட்டட வசதியை பார்க்க வேண்டும், விஞ்ஞானக் கூடங்கள் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல், புதிதாக உயர்நிலைப் பள்ளிகளைத் திறந்து கொண்டே போனால், இப்படிப்பட்ட அசௌகரியங்கள் இருக்கின்றன. ஆகவே வசதிகள் இன்றி புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்கக் கூடாது என்ற நிலையை அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : உயர்நிலைப் பள்ளி எந்த அளவு தேவையோ, அதைப் போல், திறக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளியை நல்ல முறையில் அமைப்பதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை நான் ஆதரிக்கிறேன். நம்மிடம் இருக்கும் பொருளாதார வசதி, எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடனடியாக எல்லாவற்றையும் கொடுக்கக் கூடிய அளவுக்கு இல்லாத காரணத்தால், மக்கள் எங்கெங்கே திறக்க ஆர்வத்தோடு முன்வருகிறார்களோ, அதை அரசாங்கம் பயன்படுத்தி, தேவையான நிதி வசதியைக் கொடுத்து, இத்தகைய வசதிகளையும் செய்து வருகிறது.

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஓரிடத்தில் புதிய கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமானால், என்ன என்ன வாய்ப்புகள் அங்கே இருக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கல்லூரியைப் பற்றிய கேள்வியை அடுத்து இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் பற்றிய கேள்வியில் இருக்கிறோம். கனம் உறுப்பினர் கல்லூரியைப் பற்றிக் கேட்டிருக்கிறார். கல்லூரியை பொறுத்த அளவுக்கு, ஆண்டுதோறும் நம்மிடத்தில் எந்த அளவுக்கு வசதி இருக்கிறதோ, அதைப் பொறுத்து, அரசாங்கத்திலிருந்து திறக்கிறோம். இந்த ஆண்டு நான்கு கல்லூரிகள் திறக்க முடிவு செய்திருக்கிறோம். தனியார் திறக்கக்கூடிய கல்லூரியைப் பொறுத்த வரையில், அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு நேரடியாக முறையீடு செய்துகொள்ள வேண்டும். அங்கே கூட, சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தனிப்பட்டவர்கள் தரக்கூடிய பணம், அவர்கள் ஏற்படுத்திக்கொடுக்கக் கூடிய கட்டட வசதி ஆகிய இவைகளையெல்லாம் பொறுத்து முடிவு செய்யப்படுகிறது.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகள் கட்டுவதற்குப் பணம் கட்டியும் கூட, இன்னும் அனுமதி தராமல் இருப்பதாக அரசாங்கத்திற்கு ஏதாவது கோரிக்கை வந்திருக்கின்றதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : சென்ற ஆண்டைப் பொறுத்தவரையில், 95 உயர்நிலைப் பள்ளிகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 58 இடங்களில் திறக்கப்பட்டன. அவற்றிலே 12 பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகள். 37 இடங்களிலே நாம் ஒத்திவைத்திருக்கிறோம். எங்கெங்கே பணம் கட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற தகவல் இங்கே இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தற்காலத்தில் அதிகமாகப் பெண்கள் படிக்க முன்வருகிற காரணத்தினால், புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் என்று ஆரம்பிக்கின்றபோது பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் என்றே ஆரம்பிக்க சர்க்கார் ஊக்கம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : பெண்களின் கல்வி விஷயத்தில் அக்கறை காட்டுவது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். நாம் உயர்நிலைப் பள்ளிகள் என்று ஆரம்பிக்கிறபோது இந்தப் பள்ளிகளிலேயே பெண்களும் படிக்க வசதி இருக்கிறது. பெண் குழந்தைகள் அதிகமான அளவுக்கு இருந்தால், தனியாகவே அவர்களுக்குப் பள்ளி வேண்டுமென்றால், அது பற்றி யோசிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Is it a fact that the Education Department or the former Minister for Education has decided not to give recognition to private managements to open any more high schools in the State? I saw a notification to that effect issued by the former Ministry. Is it a fact?

மாண்புமிகு திரு செ. மாதவன் : அப்படிப்பட்ட தகவல் வந்ததாகத் தெரியவில்லை. கடலூரில் பேசிய பேச்சை வேறு விதமாகப் போட்டு விட்டார்கள் என்று மறுநாளே அறிக்கை விட்டார்கள். தனியார் பள்ளிகள் ஆரம்பிக்கலாம். ஆனால் லாப நோக்கத்தோடு செயல்படுகிறபோது அது தடுக்கப்படும்.

Madras-New Delhi Air Mail Service.

* 179 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has been consulted by the Indian Air Lines Corporation on the question of operating night air mail services from this State to New Delhi?

மாண்புமிகு திரு எஸ், ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த இரவு நேர விமான அஞ்சல் போக்கு வரத்தில் குறிப்பிட்ட அளவு பயணிகளையும் ஏற்றிச் செல்ல முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : உள்நாட்டு விமான போக்கு வரத்து பற்றியது இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதற்கும் நம் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் மாநில அரசைக் கலந்துகொண்டு ஆலோசிப்பது இல்லை.

திரு. என். வரதராஜன் : நம் மாநிலத்தில் இருந்து போகக் கூடிய அஞ்சல், டெல்லி, கல்கத்தா போவதற்கே இரண்டு நாட்களாகின்றன என்பதாகப் புகார் வருகிறதே, இதை மத்திய அரசுக்குத் தெரிவித்து, தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு கோரிக்கை வந்தால், மத்திய அரசுக்கு சிபார்சு செய்யப்படும்.

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, மார்ச் 5, 1969.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 166 முதல் 173 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திருமூர்த்தி மலைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

*174 வினா : **திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கோவை ஜில்லா உடுமலைப்பேட்டை தாலூகாவில் உள்ள திருமூர்த்தி மலைப்பகுதியை ஒரு உல்லாச ஸ்தலமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உடுமலைப்பேட்டை நகரப் பெருமக்கள், பஞ்சலிங்கத்திற்கு அருகே திருமூர்த்தி நீர்வீழ்ச்சித் துறை ஒன்று அமைத்து அதன் சுற்றுப்புறத்தையும் ஓய்வுலாக்களுக்குச் சீரமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : திருமூர்த்தி மலைப்பகுதி மிகவும் ஆரோக்கியமான இடமாகும். இங்கு ஜனங்கள் வந்து செல்வதற்கு சிறந்த இடமாகவும் அமைந்திருக்கிறது. இம்மாதிரி இடத்தை இனிமேலாவது உல்லாச ஸ்தலமாக ஆக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியாவணிமுத்து: அதற்காக முதலில் ரூ. 18,000 சீரமைப்பு செய்வதற்காக செலவாகும் என்றும், அதில் பாதித் தொகையை அதாவது ரூ. 9,000 அங்கே இருக்கிற நகர பெருமக்கள் ஏற்றுக்கொள்வதாகவும் முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் மீண்டும் பரிசீலனை செய்யும்போது அதற்கு 34,400 ரூபாய் செலவாகும் என்றும் அதிலே 10,000 ரூபாய் பொதுமக்கள் தருவதாகவும் ஒப்புக் கொண்டார்கள். அது பரம்பிகுளம் ஆளியாறு திட்டத்தை நடத்துகின்ற துறையினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பணிக்காக அந்தத் துறைக்கு 21,400 ரூபாய் வரை மான்யம் கொடுப்பதாக இருக்கிறது.

திருமதி. வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, திருமூர்த்தி மலையிலுள்ள கோவிலுக்கு நிறைய பக்தர்கள் சென்றுவருகிறார்கள். அவர்கள் அங்கு தங்குவதற்கு வசதிகள் இல்லாத காரணத்தால் உடனே திரும்பவேண்டி இருக்கிறது. ஆகையால், அந்த இடத்தில் ஒரு டூரிஸ்ட் பங்களா அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அங்கு தங்குவதற்கு வசதி செய்யும் திட்டம் செயற்குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

கானல்காடு-பெரியூர் சாலை அமைப்பு.

*180—வினா : **திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

மதுரை ஜில்லா, கோடைக்கானல் தாலூகா, கானல் காட்டில் இருந்து பெரியூருக்கு புதிய சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் சர்க்காரிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை. ஆனால், பெரும் பாறையையும், கிழக்கு செட்டிப்பட்டியையும் இணைக்கிற செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இச்செயற்குறிப்பு நிறைவேற்றப்பட்டால், பெரும்பாறை, கிழக்கு செட்டிப்பட்டி வழியாக கானல் காட்டிற்கும் பெரியூருக்கும் இடையில் சாலை இணைப்பு ஏற்படும்.

திரு. ராஜ குமார் விஜய ரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, பழனியில் இருந்து கொடைக்கானலுக்கு ஒரு பாதை போடுவதாக ஒரு ப்ரபோசல் இருந்தது. அதைப் போட்டால்—பழனிக்குப் போக 86 மைல் இப்போதுள்ளபடி போவதற்குப் பதிலாக, 20, 22 மைலுக்குள் போகலாம் என்ற நிலை இருக்கிறது. அந்த ப்ரபோசல் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கேள்வியில் கானல்காடு என்று இருக்கிறதே, இந்தக் கானல் காட்டில் என்ன விசேஷம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்டசா : இது கானல் உலகத்தில் உறுப்பினர் சஞ்சரிக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

சுக்காம்பட்டிக்குச் சாலை வசதிகள்.

*181 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், சுக்காம்பட்டியிலுள்ள பொது மக்கள் சாலை வசதி வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாம் சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து அந்தக் கிராம மக்கள் சாலை வேண்டுமென்று மனுப்போட்டு வருகிறார்கள். ஆனால், கழக அரசு ஏற்பட்ட பிறகு தான் அந்த ஊருக்கு சாலையே போட்டு முடித்தாகிவிட்டது என்பதாவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கனம் அங்கத்தினர் கேள்வி போடுகிறபோது சாலை போடப்படாமல் இருந்திருக்கலாம். சாலை போடப் பட்டுவிட்டதாகத்தான் இப்போது தகவல் இருக்கிறது.

வட்டார வளர்ச்சி இணை அதிகாரிகள்.

*182—வினா **திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இம்மாநிலத்தில் Additionai B.D.O.-க்கள் உள்ள ஊராட்சி ஒன்றிப்புகள் எத்தனை ?

(இ) எந்த அடிப்படையில் Additional B.D.O.-க்கள் நியமிக்கப்படுகின்றனர் ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) தற்போதுள்ள கூடுதல் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் 22 பேர் (Additional Block Development Officers) பொதுவாக மாவட்ட வாரியாக ஒதுக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியத்திற்காக ஒதுக்கப்படுவதில்லை.

(இ) ஊராட்சி ஒன்றிப்பிலுள்ள வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (Block Development Officers) விடுப்பு அல்லது பயிற்சியின் காரணமாகச் செல்லும்போதும் தனித் திட்டங்கள் (special programme) கொண்ட ஊராட்சி ஒன்றிப்புகளிலும் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் பி.டி.ஓ. ஆக இருப்பவர் இன்னொரு ஒன்றியத்தில் அடிஷனல் பி.டி.ஓ. ஆக மாற்றப்படுகிறார்கள். அங்கும் நிர்வாகத்தை நடத்தவேண்டிய அளவு பொறுப்பான அதிகாரம் இல்லாமல் இருப்பதால், அந்தப் பதவியை மாற்றி அமைத்து விட்டு வேறு வகையில் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்குப் பயிற்சி திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தப்படுகிறது. இது ஒட்டிய வகையில் ஐந்து சத விகிதம் கூடுதல் வட்டார வளர்ச்சிஅதிகாரிகள் நியமிக்க இந்திய அரசாங்கத்தின் வேளாண்மை சமுதாய அமைச்சரகம் ஒத்துக்கொண்டுள்ளது. மானிய அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கோட்ட அதிகாரிகளாக வரக்கூடியவர்களுக்கு ஊராட்சி நிர்வாகம் பற்றிய அனுபவம் இருக்க வேண்டும் என்பதற்காக பயிற்சி தரவும் சில பி.டி.ஓ.க்களின் மீது நடுவர் குழு விசாரணை செய்கின்ற நேரத்தில் அந்த இடங்களில் இவர்களை பி.டி.ஓ.வாகப் போடாமல் அடிஷனல் பி.டி.ஓ.-ஆகப் போடுவதற்கும் ஆக 22 பேர்கள் இதுபோல இந்த மாநிலத்தில் இருக்கிறார்கள். வேறு வகையில் இவர்களைப பயன்படுத்திக்கொள்ள அவசியம் இல்லை.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை யூனியனில் 58 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பாலக்கோடு யூனியனில் 55 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதுபோல அதிக பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியன் வேலை செம்மையாக நடைபெற—இதுபோன்று அடிஷனல் பி.டி.ஓ. என்று போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பொதுவாக ஊராட்சி மன்றங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கையைக் கொண்டு நியமிக்கப்படுவதில்லை. தர்மபுரி மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களைப்போல வேறு பல ஒன்றியங்களிலும் அதிகமான ஊராட்சிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட பெரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடிஷனல் பி.டி.ஓ. போட வேண்டும் என்கிற யோசனையை மாவட்ட ஆட்சித் தலைவர், எடுத்துக்கொண்டால் அதைப்பற்றி அரசாங்கம் ஒன்றும் தடை செய்யாது.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களை ரெவின்யூ இலாக்காவில் இருந்துதான் போடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலேயே பல துறைகளில் விஸ்தரிப்பு அதிகாரிகளாகப் பணியாற்றக்கூடியவர்களைப் போடலாம். ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு எந்தவிதமான ப்ரமோஷனும் இல்லை. இதை உத்தேசித்து இவர்களைக் கமிஷனர்களாகப் போட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்களுக்குத்தான் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது ரெவின்யூ இலாக்காவில் இருந்து வருகிறவர்கள் 20 சத வீதம்தான். இவர்கள் கோட்ட ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொள்வதற்கு அனுபவம் தேவைப்படுகிற காரணத்தினால் தாசில்தார் நிலைமையில் உள்ளவர்கள் ப்ரமோஷன் செய்யப்படுகிறார்கள். பத்து

இருபது வருடங்களாக சில பேர்கள் ப்ரமோஷன் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால்—முறைப்படி அவர்களுக்கும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராண்டே அதிகமாகக் கொடுப்பதில்லை. இருக்கிற ஆபீசர்களுக்கும் வேலை இல்லாமல் இருக்கிறது. அப்படி இருக்க அடிஷனல் பி.டி.ஓ. என்று போட வேண்டிய அவசியம் என்ன ? இந்த முறையையே எடுத்துவிடுவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் தர்மபுரி மாவட்ட உறுப்பினர் போட்ட கேள்வியைக் கவனிக்க வேண்டும். இவர்களுக்கு வேலை இல்லை என்கிறார். அவர்களுக்கு அதிக வேலை இருப்பதனால் அடிஷனல் பி.டி.ஓ. என்று போட வேண்டும் என்கிறார். அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களின் நிலையைப் பொறுத்துத்தான் இது தீர்மானிக்கப்படுகிறது.

மண்டபம் வட்டார ஆசிரியர்களின் சம்பளம்

மு.ப. 9-30 * 183 வினா :—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பிளாக்கில் பணிபுரியும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியாசிரியர்களுக்கு 1968 ஜனவரி மாதத்திலிருந்து சம்பளம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனின், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) ஆம். ஆனால் நிலுவைச் சம்பளம் மார்ச்சு மாதம் கொடுக்கப்பட்டது.

(ஆ) மண்டபம் கூட்டாட்சி மன்றத்தில் நிதிநிலை சரியில்லை. பஞ்சப்படி மானியம் பிப்ரவரியில் கிடைத்தது. ஆகையால் மார்ச்சு 1ம் தேதி பள்ளியாசிரியர்களுக்கு சம்பளம் அளிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் போலவே ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்ற பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் சம்பளம் சரியாகக் கிடைப்பதில்லை, என்ற புகார்கள் அடிக்கடி வருகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் வராமல் இருக்கக் கூடிய முறையில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகக் கிடைக்கக்கூடிய வகையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 ஊராட்சி ஒன்றியங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும், உள்ளூர் வரித் திட்டத்தின்கீழ் சரியாக வசூல் செய்யாததால் பணத் தட்டுப்பாடு இருப்பதாகவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஆண்டு ஆண்டுக்கு லட்சக் கணக்கான ரூபாய்கள் மானியங்கள் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. நிரந்தரமாக இதற்குப் பரிகாரம் காணுவதற்கு ஆராயப்பட்டு வருகிறது. ஏற்கனவே இதுபற்றிய கேள்விகள் கேட்கப்பட்டு விடைகளும் தரப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டத்தில் சில பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்த வரையில் லோக்கல் செஸ் எவ்வளவு போட முடியுமோ, அவ்வளவு போட்டும் நிதிப் பற்றுக்குறை இருப்பதால் ஆசிரியர்களுக்குச் சரியாகச் சம்பளம் வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கல்வி இலாகாவிலிருந்து தரக்கூடிய வகையில் செயற்குறிப்பு எதுவும் நடப்பு ஆண்டிலாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கல்வி இலாகாவிலிருந்துதான் மானியம் நேரடியாக வழங்கப்படுகிறது. ஏற்கனவே அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் ஜில்லாவில் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகக் கிடைக்கவில்லை என்பது வாஸ்தவம்தான். பருவ மழை தவறியதாலே நிலவரி வசூல் முடியவில்லை. அதன் காரணமாக செஸ் போன்ற வரிகளையும் வசூல் செய்ய முடியவில்லை. எனவே அங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு இதற்காக அரசாங்கம் மானியமாக இல்லாவிட்டாலும் கடன் ஆகக் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துராமி : நிதி நிலைமையில் தட்டுப்பாடு ஏற்படும்பொழுது ஒரு தாய் தன்னுடைய குழந்தையைக் காப்பதற்கு எடுத்துக் கொள்கின்ற முயற்சியைப்போன்று அரசாங்கம் அவ்வப்பொழுது உதவி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

உசிலம்பட்டியில் தொழிலாளர் மருத்துவ மனை

* 184 வினா :—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் E. S. I. மருத்துவ மனை கட்டுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அந்த மருத்துவ மனை எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) and (உ) : வினாவிற்கு இடமில்லை.

Galvanized pipes purchased by Tamil Nadu Electricity Board

185 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the total quantity and cost of the galvanized pipes purchased for the Tamil Nadu Electricity Board during 1966–67 and 1967–68;

(*b*) the total quantity utilised so far;

(*c*) the stock on hand now;

(*d*) whether the Government have incurred any loss on this; and

(*e*) if so, whether any Committee will be appointed to investigate into the losses?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ) துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக் குழாய்கள் 1966–67, 1967–68 ஆண்டுகளில் மொத்தம் 9,43,880 மீட்டர் குழாய்கள் 33·66 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டன.

(இ) 1966–67, 1967–68 ஆண்டுகளில் மின்சார வாரியம் மொத்தத்தில் 18,05,185 மீட்டர் குழாய்களைப் பயன்படுத்திக் கொண்டது. இதில் மற்ற பிரிவுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட குழாய்களும் முடிவு பெற்ற வேலைகளிலிருந்தும் திட்டங்களிலிருந்தும் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்ட குழாய்களும் சேர்ந்துள்ளன.

(உ) 3,45,612 மீட்டர் குழாய்கள் 1968-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் கையிருப்பில் இருந்தன.

[1969 மார்ச் 5

(எ) 1968-69-ம் ஆண்டில் மேலும் 18 லட்சம் மீட்டர் குழாய்கள் தேவைப்படுவதால், மிச்சமிருப்பதால் விரயம் ஏற்படுவதற்கிடமில்லை.

(ஏ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Electricity Board have purchased galvanised pipes only when the necessity for them was felt by them and while using them they did not incur any loss and it was all done in good faith?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தேவையை எதிர்பார்த்துத்தான் வாங்கப்படுகிறது. மீதம் இருப்பதை, நாம் மேலும் மேலும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு வருகிற காரணத்தினாலே, அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே விரயம் ஆகப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலஞ்ச ஊழல்

* 166 **வினா. —திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

லஞ்ச ஊழலில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்களின் மீது, நடவடிக்கை எடுப்பதுடன் 50 வயதுக்கு முந்தியே கட்டாய ஓய்வுமுறை அமுல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நடைமுறையிலே இதுபோன்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக 50 வயதிற்குள்ளாக கட்டாய ஓய்வு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற முறையை அரசாங்கம் எதனால் கையாளுகிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : முதலிலே தொடக்கக் கேள்வி பொதுவாக இருந்த காரணத்தினாலே இப்படிப்பட்ட பதில் சொல்லப் பட்டது. எப்படிப்பட்ட தண்டனை வழங்குவது என்பதுபற்றி இருக்கிற சாட்சியங்களைப் பொறுத்தும், விசாரணை செய்கின்ற அதிகாரியின் முடிவைப் பொறுத்தும் இந்தக் கட்டாய ஓய்வு முறை மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : லஞ்ச ஊழல்கள் சம்பந்தமான வழக்குகள் கண்டு பிடிப்பதற்கும், நெல் கொள்முதல் சம்பந்தமாக கடத்தல் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கும் தனியாக ஒரு விஜிலன்ஸ் ஸ்குவாட் இருக்கிறது. அதை எடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மை தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிப்பட்ட ஒரு அமைப்பு உணவுத் துறையின் கீழே செயல்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், லஞ்ச ஊழல்கள், கடத்தல் பொருள்கள் சம்பந்தமாக, கடத்தல் பொருள்கள் எல்லாம் ஒரு போலீஸ் சூப்பிரண்டெண்ட் வீட்டிலே தர்மபுரியிலே கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதுபோன்ற காரியங்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கேள்வி, சர்க்கார் ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதுபற்றி. ஆகவே இந்தக் கேள்வி தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : லஞ்ச ஊழல்கள் வேறு, கடத்தல் வேறு, லஞ்ச ஊழல்கள் சம்பந்தமாக இப்பொழுது உள்ள தண்டனை என்ன ? இன்னும் அதைக் கடுமையாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

1969 மார்ச் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லஞ்ச ஊழல்கள் சர்க்கார் ஊழியர்கள் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டால் பதவியிலிருந்தே விலக்கப்படுகிறார்கள். அதைவிடக் கடுமையான தண்டனை அவர்களுக்கு எதுவும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : வழக்குகளைத் தொடர்ந்து நிரூபிக்க முடியாத நிலைமையிலேகூட கட்டாய ஓய்வு முறை கையாளப்படுகிறது என்பது கனம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே நிரூபிக்கப்படாத நிலைமை இருக்குமானால், அவர்கள் கட்டாய ஓய்வில் செல்லக் கூடிய வகையில் கட்டுப்படுத்தக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி எதைப்பற்றியாவது குறிப்பிட்டு எழுதினால் கவனிக்கலாம்.

Republic Day Celebrations

* 167 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the National Cadet Corps participated in the parade held in connection with the Republic Day Celebrations held on 26th January 1968 in the City;

(*b*) whether the colourful pageantry usually presented as part of the parade was also missing this year; and

(*c*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) அப்போது பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தமையால், தேசீய மாணவர் படையினர் பயிற்சி பெறுவதற்குப் போதிய காலம் இராது எனக் கருதப்பட்டது. எனவே, தேசீய மாணவர் படையினர் குடியரசு நாள் விழாவில் பங்குபெறத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

1968 ஜனவரி 3-ம் தேதியன்று, உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக சென்னை மாநகர் மகத்தான அலங்கார பேரணிக் காட்சியைக் கண்ணுற்றது. ஆகையால், குடியரசு நாளன்று மற்றொரு அலங்கார அணி விழா தேவை இல்லை எனக் கருதப்பட்டது.

திரு. கே. விநாயகம் : குடியரசு விழா கொண்டாடியபோது நமது நகரத்திலே கல்லூரிகள் மூடப்பட்டதன் காரணமாகத்தான் என்.சி.சி. பேரேட் இல்லையா ? ஆட்சியினுடைய கொள்கைப்படி என்.சி.சி.யில் இந்தியைக் கையாளக்கூடாது என்று சொல்லி என்.சி.சி. இந்த ஆண்டு இயங்காமல் செய்துவிட்டதாலே தான் என்.சி.சி. பேரேட் வரவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் குறிப்பிட்ட கேள்வி கேட்கப்பட்டது 1968-ஆம் ஆண்டு. கல்லூரிகள் மூடப்பட்ட நேரத்திலே குடியரசு விழாவில் தேசிய மாணவர் படை கலந்துகொள்ளவில்லை என்றுதான் பதில் தெரிவித்தேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தேசீய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஏதாவது தமிழக அரசு வைத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி மாற்றுத் திட்டமொன்று அமைப்பதற்கு ஜூன், ஜூலையில் துவக்கலாம் என்ற அளவில் அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : நாம் விடுதலை பெற்றதுமுதல் குடியரசு விழாவைக் கொண்டாடி ஒவ்வொரு ஆண்டும் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருக்கிற நம்முடைய சர்க்கார். இந்த ஆட்சிக்கு இப்பொழுது வந்திருக்கிறவர்கள் குடியரசிலே நம்பிக்கையற்றவர்கள் என்ற காரணத்தினாலே பேஜண்ட்ரி போன்றவை விழாவில் இல்லையென்று பரவலாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரவலாகச் சொல்லப்படுவது பற்றிக் கவலையில்லை. திரு விநாயகம் அவர்கள் சொல்வதற்கு விளக்கம் அளிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணம் இல்லையாதலால் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரூபாய் செலவில் அலங்கார வண்டிகள் விழாவின்போது விடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தேசீய மாணவர் படையில் இந்தி கட்டளைச் சொற்களைத் தமிழக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று டெல்லி சர்க்கார் வற்புறுத்தி இருக்கிறதா அல்லது கட்டளையிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் அதைக் கோரியிருக்கிறார்கள். கட்டளை எதுவும் இடவில்லை. ஆனால் நாம் அந்தக் கோரிக்கையை எடுத்துக் கொள்வதாக இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், தமிழகத்திலே என்.சி.சி. படை இல்லை, என்.சி.சி. படையில் ஹிந்திச் சொற்கள் இருக்கிற காரணத்தினாலே அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை, சொல்கின்றது ஏதோ ஒரு சௌண்ட்தான், அது ஹிந்தியிலே இருந்தால் என்ன, ஆங்கிலத்தில் இருந்தால் என்ன என்று பேசியிருக்கிறார்கள். எனவே அவர்கள் சொல்கிறபடியே அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு தமிழிலேயே அவற்றை ஏற்றுக் கொண்டுவிட ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழிலே அவை இருக்க வேண்டுமென்பது ஒரு குறிக்கோளாக இருந்தாலும், தற்பொழுது அவை ஆங்கிலத்திலே இருக்க வேண்டுமென்பதைத்தான் அரசு விரும்புகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : என்.சி.சி. மாணவர்களுக்கு மிக முக்கியமானது. அரசாங்க வேலைகளுக்கும் மற்ற வேலைகளுக்கும் செல்லுகிறவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி பெற்றிருந்தால் சலுகைகள் அளிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் கருதி முன்பு இருந்த முதலமைச்சர் அவர்கள் மாற்றுப்படை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அவ்வாறு மாற்றுப்படை அமைப்பதில் காலம் தாழ்த்தாமல் உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாற்றுத் திட்டத்தை ஜூன் ஜூலையில் வைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. அதை ஆராய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தேசீய மாணவர் படை இருந்த காலத்திலே மத்திய சர்க்கார் அதற்காக வேண்டி குறிப்பிட்ட மானியத் தொகை கொடுத்தார்கள் அல்லவா ? இப்போது மாற்றுப்படை அமைக்கும்போது மத்திய சர்க்கார் அந்த மானியத்தைத் தொடர்ந்து அளிப்பார்களா ? அப்படி மானியம் அளிக்கப்படவில்லை என்று சொன்னாலும் மாற்றுப்படை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மானியம் அளித்தாலும் அளிக்கப்படாவிட்டாலும் மாற்றுத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. கே. விநாயகம் : நம்முடைய சர்க்கார் மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை நாங்கள் எதிர்க்கப் போவதில்லை. ஆயினும் சர்க்காருக்கே தெரியும். என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களைத்தான் இந்திய மிலிடரி அகாடமியில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் என்.சி.சி.யில் பயிற்சி பெற்றவர்கள் நல்ல பரிசுகள் எல்லாம் பெற்று பெரிய உத்தியோகங்களை மிலிடரியில் வகித்து வருகிறார்கள். தற்போது மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருவதன் காரணமாக அதற்கு அகில இந்திய ரீதியில் ரெகக்னிஷன் கிடைக்காத நிலையில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு வரவேண்டிய வாய்ப்புகளைச் சர்க்கார் கெடுத்து விடுகிறது அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற முறையில் தமிழக அரசு எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என். சி. சி. படையில் இந்தி ஆணைச் சொற்களை நீக்க அவர்கள் இணங்காத நிலையில் உடனடியாக ஏன் மாற்றுத் திட்டத்தை அமல் நடத்தவில்லை ? ஒவ்வொரு விஷயத்திலும் செய்யப்படும், செய்யப்படும் என்று கூறி காலந் தாழ்த்திக் கொண்டே செல்லுவதுபோல் இதிலும் கடந்த ஓராண்டுக் காலமாக ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததால், அந்தத் துறையிலே உள்ளவர்களுக்கு வேலையில்லாமையும், மாணவர்களுக்கு உற்சாகம் குன்றுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் "யோசிக்கிறேன்" என்று சொல்லிக் காலம் தாழ்த்திக் கொண்டு செல்லுவது போல் இதிலும் சொல்லிக் கொண்டிராமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகுதிரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விருப்பை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொண்டு விரைவில் மாற்றுத் திட்டத்தைத் தொடங்கும்.

Token strike by Central Government employees

* 168 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Central Government requested the State Government to release its personnel to man the essential services during the token strike by the Central Government employees on 19th September 1968?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது வழக்குப்போடப்பட்டுள்ளதா? அந்த வழக்குகளை வாபஸ் வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இது, "மாநில அரசு ஊழியர்களை உதவி செய்யவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டதா ?" என்ற கேள்வியாகும். "வழக்கு வாபஸ்" பற்றிய பிரச்சினை இதிலே எழவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : மத்திய அரசு ஊழியர்களுடைய அடையாள வேலைநிறுத்தத்தை ஒடுக்க மத்திய அரசு அவசரச் சட்டம் பிறப்பித்ததைப் பற்றி இந்த மாநில அரசாங்கத்துடன் முன்னதாகக் கலந்து கொள்ளப்பட்டதா ? இல்லையென்றால், அதற்காக மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாநில அரசை அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அப்போதே மாநில அரசு அதற்காகத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அப்படியானால் அப்போது மாநில அரசு ஊழியர்கள் அனுப்பப்படவில்லையா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்போது நடைபெற்ற கிளர்ச்சியின் போது மாநில அரசின் சார்பாகப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. பாதுகாப்புக்கான எல்லா வகையான ஏற்பாடுகளும் மாநில அரசின் சார்பாக செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : 1968 செப்டம்பர் திங்கள் 19-ம் தேதி வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அது பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மதுராந்தகம் வட்டத்தில் நிலமில்லா விவசாயிகள்

*169 வினு : **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுராந்தகம் வட்டத்தில் 1965, 1966, 1967-ம் ஆண்டுகளில் முறையே நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப் பட்டுள்ளது ?

(இ) பட்டா வழங்கியதில் தவறுகள் ஏற்பட்டிருப்பது குறித்து அரசினருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :

(அ) 1965—37 பட்டாக்கள்.
1966—31 பட்டாக்கள்.
1967—636 பட்டாக்கள்.

(இ) எந்தவிதமான புகாரும் அரசுக்கு வரவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ல் 31 பட்டாக்களும் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். 1965-66-ல் வழங்கப்பட்ட பட்டாக்களில் நிலம் உள்ளவர்களுக்கும் வழங்கப் பட்டிருப்பதாகவும், அதன்பேரில் இன்னும் சில நிலங்களை அதிகாரிகளே பட்டா செய்து கொண்டு கடனும் வாங்கப்பட்டிருப்பதாகவும், நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருப்பதாவும் புகார்கள் வந்திருக்கின்றனவா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தெளிவாகக் கேட்டிருக்கவேண்டும். 1965-66 ஆண்டு விவகாரம் முந்திய அரசாங்கத்தைப் பொறுத்தது. அப்போது ஏதேனும் தவறுகள் நடந்திருக்குமானால் அதற்குப் பரிகாரம் தேட வாய்ப்பு இருக்கிறது. புதிய அரசு வந்த பிறகு 1967-ம் வருஷத்தில் 636 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ம் ஆண்டில் 31 பட்டாக்களுமே வழங்கிய நிலை அது அப்போது சீராக நடைபெறவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. புகாரைப் பொறுத்தவரையில் என்ன புகார் வந்தாலும் நியாயமான புகாராக இருக்குமானால், நிச்சயமாக அரசாங்கம் அதற்கான பரிகாரத்தைத் தேடித் தரும்.

திரு. கா. வேழவேந்தன் : முன்பு இருந்த நிலை மாறி புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மூன்று அம்சத் திட்டம் என்று செங்கற்

பட்டு மாவட்டத்தில் கொண்டு வரப்பட்டு மதுராந்தகம் போன்ற பல்வேறு வட்டங்களில் அதிகமான அளவுக்குப் பட்டா வழங்கும் செயல்கள் நடை பெற்றுள்ளன. அறிஞர் அண்ணு அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மூன்று அம்சத் திட்டம் மற்ற மாவட்டங்களிலும் அமுல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிக்க உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் பட்டா வழங்குவதற்காக மூன்று அம்சத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் ஒரு பைலட் திட்டமாகக் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் இல்லாமலே கூட கடந்த ஆண்டு 22,000 ஏக்கர்களுக்குப் பட்டா வழங்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 50,000 ஏக்கர் நிலங்கள் ஏழை விவசாயி களுக்கும், வீட்டு மனைக்கும் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் துரிதமாக, விரைவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. முனு. ஆதி: சென்னை நகரத்திலிருந்து 20 மைல் சுற்றளவுக்குள் பட்டா வழங்கக்கூடாது என்ற சட்டம் இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் குடிசைகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்பது கொள்கையாக இருக்கிறது. இந்த இடர்பாடுகளைத் தவிர்த்து ஏழை குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் சென்னை நகரைச் சுற்றி 20 மைல் சுற்றளவில் தாம்பரம், பல்லாவரம், வில்லிவாக்கம், திருவொற்றியூர், ஆவடி போன்ற பகுதிகளில் பட்டா கொடுக்க முடியாது. ஆனால் அரசாங்கம் அந்தப் பகுதிகளில் கணக்கெடுத்ததில் 50,000 குடிசைவாழ் மக்கள் அங்கே குடியிருந்துகொண்டு பட்டா கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. பழைய காலத்தில் எழுதிய போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரைப் பார்த்தால் 750 சதுர அடிக்கு மேல் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவரும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கக் கூடிய இடம் 4 செண்ட், 6 செண்ட், 7 செண்ட் என்று இருக்கிறது. சமுதாய காரணங்களுக்காக அவர்கள் எல்லோரையும் அப்புறப்படுத்தவும் முடியவில்லை. அவர்கள் எல்லாம் பட்டா கேட்டால் அதைக் கொடுப்பது சட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது என்று அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், போர்டு மெம்பர்கள் கூறுகிறார்கள். போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரை எந்த அளவுக்குத் திருத்த வேண்டுமோ அந்த அளவுக்குத் திருத்தி ஆட்சேபணை இல்லாத பகுதிகளில், அன்-அப்ஜக்ஷனபிள் என்க்ரோச்மெண்ட் முழுவதையும், ஏறக்குறைய 40,000 பேருக்கு அந்தப் பகுதிகளில் பட்டா வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எவ்வளவு விரைவாக அதை நடத்த வேண்டுமோ அதற்கான காரியங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Patta holders in Tamil Nadu

* 170 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the number of patta holders in Tamil Nadu who own below one acre ; and

(*b*) the number of patta holders in Tamil Nadu who own below five acres?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) 31,68,850 பட்டாக்கள்.

(இ) 34,80,417 பட்டாக்கள்.

DR. H. V. HANDE : Has the Ministry got any programme to waive procurement from patta holders owning below five acres?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We have no such proposal. Already the Government have waived procurement in respect of people holding one acre and below. If we go on adding there will be no procurement at all. So Government have no such proposal.

திரு. க. இராமமூர்த்தி : நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் நிலம் சம்பந்தமான மசோதாக்களைக் கொண்டுவரும்போது—31 லட்சம், 34 லட்சம் பட்டாதார்கள் இருக்கிருர்கள் என்று சொல்கிருர்கள் இந்த பட்டாதார் களின் பாதுகாப்பை மனதில் கொண்டு மசோதாக்கள் கொண்டுவநது சட்டங்கள் செய்யப்படுகின்றனவா? அல்லது பொதுவாக நிலம் வைத்திருப் பவர்களை மிராசுதார்கள் என்ற அடிப்படையில் கருதிக் கொண்டு வரப்படு கின்றனவா ? சிறிய பட்டாதார்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்பதை மனதில் வைத்துச் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் அவர்கள் பொதுவான பிரச்சினையைப்பற்றிக் கேட்டிருக்கிருர்கள். அரசாங்கம் எல்லோரிடத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது. உழைப்பவர்கள் இந்த நாட்டுக் குடிமக்கள், சுரண்டப்படுகிறவர்கள் இவர்களின் பாதுகாப்பிற்காக சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. சுரண்டுகிறவர்கள் அல்லது ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் இவர்களுக்காகவேண்டி சட்டங்களை ஒரு க்ஷேமநல சர்க்கார் கொண்டுவர முடியாது. அப்படிச் சொல்வதால் அரை எக்கர் வைத்திருப்பவர்கள் மிராசுதார்கள் என்பதல்ல. இப்படிச் சொல் வதினுல் எல்லோருக்கும் நியாயமான பாதுகாப்பு அளிக்கப்படாது என்பதும் அல்ல.

***திரு. ஏ. அ. சுப்பராஜா :** பட்டா பிரிப்பதற்காக கொடுத்தும்கூட இந்த டிபார்ட்மென்ட், உண்மையில் பட்டா வழங்கக் கூடிய நிலைமை இருந்தாலும்கூட அவற்றைக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : எந்த ஊரில் எந்தத் தாலுகாவில், எந்த இடத்தில் என்பதை கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்குரிய சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இந்த பட்டாக்கணக்கு சாதாரண எக்கரை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறதா ? அல்லது ஸ்டாண் டர்ட் எக்கரை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தத் தகவல் பின்னுல் கூறப்படும்.

திரு. இல. பலராமன் : 34 லட்சம் பட்டாதார்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். விஞ்ஞான ரீதியில் துண்டு துண்டாக இருக்கும் நிலங்களை நல்ல முறையில் பயிர் செய்ய முடியாது என்ற அடிப்படையில் முந்திய சர்க்கார் கூட்டுறவு முறையில் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு அதில் பயிர் செய்யலாம் என்ற அடிப்படையில் ஒரு திட்டத்தை வகுத்திருந்தார்கள். அதன் பிரகாரம் மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அந்த முயற்சிபற்றி பரிசிலனை செய்யப்பட்டது. ஒரு உதாரணத்திற்கு மட்டும் சொல்கிறேன் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கு 30 அல்லது 35 லட்சம் ஜனத்தொகை இருக்கலாம் என்று நினைக்கிறேன். அங்கு மட்டும் எவ்வளவு பட்டாதார்கள் இருக்கிருர்கள் என்று பார்த்தால் ஒரு ஏக்கருக்கும் அதற்குக் குறைவாகவும் உள்ள பட்டாதார்கள் 4,52,354. ஒரு ஏக்கரிலிருந்து மூன்று ஏக்கர் வரை நிலம் உள்ளவர்கள் 3,48,233 பேர்கள் மூன்று எக்கருக்குமேல் ஐந்து எக்கர் வரை உள்ளவர்

கள் 72,546, ஐந்து எக்கருக்கு மேல் $12\frac{1}{2}$ எக்கர் வரை உள்ள வர்கள் 56,343 $12\frac{1}{2}$ எக்கருக்குமேல் வைத்திருப்பவர்கள் 11,997 பேர்கள். முப்பது முப்பத்தைந்து லட்சம் ஜனத்தொகை உள்ள தஞ்சை மாவட்டத்தில், பெரிய நிலக் கிளர்ச்சிகள் நடக்கிற தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட $9\frac{1}{2}$ லட்சம் பேர்கள் ஏதோ ஒரு நிலத்திற்கு சொந்தக்காரராக இருக்கிருர்கள். கூட்டுறவு முறை என்பது கொஞ்சம் நடைமுறைப்படுத்தப்பட்டு சரியாக அமையவில்லை, நமக்கு என்று பிரத்தியேக நிலைமை இருக்கிறது. ஆகவே பிரத்தியேக முறையில்தான் நாம் நிலக் கொள்கைகளை, நிலச்சீர்திருத்தகொள்கை களை உருவாக்க வேண்டும்.

Hosur taluk as Hill Station

* 171 *Q*.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether there is any proposal to declare Hosur taluk as a hill station and give hill allowance to Government servants; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை ஐயா

(ஆ) எழவில்லை.

அரிசி விநியோகம் செய்ய சில்லரை வியாபாரிகள்

172 வினு—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரேஷன் கார்டு முறையில் அரிசி விநியோகம் செய்ய சிறிய கடைக்காரர்களுக்கு அனுமதி வழங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லை எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) and (இ) சட்டபூர்வமான பங்கீட்டு முறையும் குடும்பக் கார்டு முறையும் செயலிலுள்ள பகுதிகளில், அரிசி உட்பட கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களை வழங்கும் பொருட்டு, கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர, சிறிய கடைக்காரர்களும் சில்லறை வியாபாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். ஆயினும், அவர்களது நிதி வசதி நிலைமையையும், நற்பெயரையும் கருத்தில் கொண்டு, அவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

திரு. வை. சுவாமிநாதன் : பொன்மலைபோன்ற பகுதிகளில் பெரிய கடைகளுக்குத்தான் அரிசி, சர்க்கரை போன்றவை கொடுக்கப்படுகின்றன. அங்கு கிட்டத்தட்ட ஐயாயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிருர்கள். ஆகவே, சிறிய கடைகளுக்கு அனுமதி கொடுத்தால், அரிசி விநியோகம் செய்வதற்கு சுலபமாகயிருக்கும். ஆகவே இதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : லைசென்ஸ் வழங்கும்போது குறிப்பாக கூட்டுறவு சங்கங்களுக்கும், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பர்மா சிலோன் அகதிகளுக்கும் முக்கியமாக வழங்கப் படுகிறது. மற்ற சில்லறைவியாபாரிகள் அவர்களுடைய நிதிநிலைமை, நாணயம் முதலியவற்றைக் கருத்தில்கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த ரேஷன் கடையைப்பற்றி அங்கு ஏதாவது தவறு ஏற்பட்டு இருந்தால், அதைத் தெரிவித்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : குடும்பக் கார்ட் நம்மால் கொடுக்க முடியாத சில முக்கியமான நகரங்களில், போக்குவரத்தில் அரிசி கொண்டுபோக முடியாது என்ற ஊர்களில் அரிசி நெருக்கடி அதிகமாக

யிருப்பதால், சாதாரண சிறிய கடைகளுக்கு இந்த அரிசி வியாபாரம் செய்ய அனுமதி கொடுப்பது அங்குள்ள மக்களுக்கு உதவியாக இருக்காதா ? இல்லாவிடில் அப்பகுதி மக்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. இதை சர்க்கார் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் கேள்வி கேட்கிறார்கள். எந்தப் பகுதி அரிசி கிடைக்காத பகுதி, எந்தப் பகுதியில் அரிசி வர தடையாக இருக்கிறது என்பதை விளக்கமாகச் சொன்னால் நலமாயிருக்கும். அரிசி கிடைக்காத பகுதிகளில் குடும்பக் கார்டு முறை புகுத்தப்பட்டிருக்கிறது. அரிசி அறவே கிடைக்காத பகுதிகள் என்று எந்தப் பகுதியைக் குறிப்பிடுகிறார்கள் என்றால் அதுபற்றி கவனிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : மதுரை மாவட்டத்தில் வேடசெந்தூர் என்பது புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடிய ஒரு தாலுக்கா தலைநகரம். அந்தத் தலைநகரத்தில் பல சர்க்கார்க் காரியாலயங்கள் இருக்கின்றன. ஒரு நகரமாக அது பெருகிக் கொண்டிருக்கிறது. அங்கு குடும்பக் கார்ட் முறையும் இல்லை, ரேஷனும் இல்லை. அங்கு அரிசி வருவதற்குத் தடை இருக்கிறது. அங்கு உணவு உற்பத்தியும் அதிகமாக இல்லை. ஆகவே அங்குள்ள மக்கள் விலைவாசியேற்றத்தால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்குள்ள சிறிய வியாபாரிகளுக்கு அரிசி விற்பனை செய்ய அனுமதி வழங்குவது நல்லதொரு முறையாகயிருக்காதா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இந்தக் குடும்பக் கார்டு முறைப்பற்றி இங்கு பல முறை விளக்கப்பட்டிருக்கிறது. சென்னைமாநகரம், கோவை நகரம், சென்னையில் உள்ள புற நகரங்களுக்குத்தான் சட்ட பூர்வமான ரேஷன் கொடுக்க சர்க்கார் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள ஒன்றேகால் கோடி பேர்களுக்கும் வெவ்வேறு அளவில் அவர்கள் வெளிச் சந்தையில் வாங்கிக்கொள்வது, 500 கிராம் 800 கிராம் என்று நிலைமைக்குத் தகுந்தபடி, கையிருப்பிற்குத் தகுந்தபடி கொடுப்பதற்காக, கள்ளச்சந்தைக்காரர்கள், ப்ளாக்மார்க்கெட்காரர்கள் படிக்கு நான்கு ரூபாய் என்று விற்று விடும் நிலை வரக்கூடாது என்பதற்காக ஒரு விலைவாசிக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் வெவ்வேறு ரூபங்களில் இருக்கின்றன. தானியக் களஞ்சியத்தில் உள்ள நிலைமைப்படி ஒவ்வொரு யிடங்களிலும் மாற்றியும் குறைத்தும் கொடுக்கப்பட்டு வருகிறது. சில யிடங்களில் நியாயவிலைக் கடைகளை அந்தந்த நேரத்தில் கலெக்டர்கள் திறப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கொள்முதல் இருக்கிற நிலைமை, விலைவாசியேற்றம் என்ற மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன. சில சமயங்களில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது முழு உணவு தானிய விநியோகத்திற்கு அரசு பொறுப்பேற்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியில் இருப்பது, ரேஷன் கார்டு முறையில் அரிசி விநியோகம் செய்ய சிறிய கடைக்காரர்களுக்கு அனுமதி வழங்குவது பற்றி. அதைப்பற்றி மட்டும்தான் கேள்விகள் கேட்க வேண்டும். பொதுவாக அரிசி ரேஷனைப் பற்றியும், மாகாணம் பூராவும் இருக்கும் பிரச்சினைப் பற்றியும் கேள்விகள் கேட்க இடம் கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட கருத்துக்களை, வருகின்ற மானியங்களின் மீது பேசிக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, with regard to the issue of licences to the small shopkeepers and the distribution of ration cards and the allotment of rice for those cards, will this Government review the whole matter because the Government are getting a bad name due to the fact that a large number of people have to stand in a large queue—it is a horrible sight and it is also reported in newspapers. So, will the Government see that the hardships of the people are removed to a considerable extent by increasing the number of distributors?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : எந்தக் கடையிலே கூடுதலாக கார்டுகள் இருக்கின்றனவோ, அதை குறைவாக எந்தக் கடையிலே இருக்கின்றனவோ அதோடு இணைப்பதன் மூலமாக இந்தப் பிரச்சினையை முறையாகத் தீர்க்க முடியுமா என்று பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்த அரிசி வழங்கும் நேரத்தில் சில கடைகளை "சஸ்பெண்ட்" செய்திருக்கிறார்கள், அவர்கள் குற்றம் புரிந்த காரணத்தினால். அப்படிப்பட்ட நேரத்தில், அந்த மக்கள் கார்டுகளை எடுத்துக்கொண்டு பல மைல் தூரம் சென்று அரிசி வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் நடந்திருக்கிறது. அரசாங்கத்திற்கும் எழுதியிருக்கிறேன். இது போன்ற நேரங்கள் ஏற்படும்பொழுது ஆங்காங்குள்ள கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளில் கார்டுகளைக் கொடுத்து ஆங்காங்கு விநியோகம் செய்யக் கூடிய அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அவைகளுக்கு முக்கியத்துவம் தந்து கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத பகுதிகளில் சில்லறைக்கடைக்காரர்களுக்கு வழங்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது போல, எங்கேயாவது தவறுகள் நடந்து கடைக்காரர்களுக்கு லைசென்ஸை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் நிலையில் அல்லது அறவே ரத்து செய்யப்படும் நிலையில் அந்தப் பகுதியிலேயுள்ள, நல்ல வியாபாரி என்ற பெயர் பெற்றவருக்கு, அவரது பொருளாதார நிலையைக் கவனத்தில் கொண்டு புதிய லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த அரிசி விநியோகம் செய்ய சில்லறை வியாபாரிகள் நியமிக்கப்படும்பொழுது முதல் சலுகை அந்த வட்டாரத்திலேயுள்ள கூட்டுறவுச் சங்கத்துக்குத்தான் என்ற கருத்தில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் கோவில்பட்டி நகரத்தில் கூட்டுறவு சொஸைட்டி இருந்தும் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து அரசாங்கத்திற்கும் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிக்கக்கூடிய அளவுக்கு இருக்குமேயானால், அவைகளுக்குத்தான் அந்த விநியோக முறையை அளிக்க வேண்டுமே தவிர, சில்லறை வியாபாரிகளுக்குத் தரக்கூடாது என்ற கொள்கையைக் கண்டிப்பாக அரசு அனுசரிக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : பொதுவாக கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஆனால், குறிப்பாக கோவில்பட்டி பகுதியில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அதைப்பற்றிக் கவனித்து, எந்தக் காரணத்தினால் அப்படி தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினு எண் 173.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : அந்தக் கேள்வியை நாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெள்ளிக்குறியிடாத வினுக்கள்

Cases referred by Vigilance Commission

1. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of cases referred by the Vigilance Commission to the Industries Department during 1965-67 ; and

(*b*) the action taken thereon ?

A.— (*a*) One.

(*b*) It would be against the public interest to answer the question.

Southern Zonal Council Meetings.

2 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

The details of the number of meetings held by the Southern Zonal Council during 1967-68 and the work done during the period?

A.—During 1967-68, only one meeting of the Southern Zonal Council was held at Ootacamund on 15th May 1967. A copy of the proceedings of the above meeting is available in the Library of the Madras Legislative Assembly.

1967–68-ல், 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதியன்று உதக மண்டலத்தில் தென்மண்டல மன்றம் ஒரு முறைதான் கூடியது. இக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உள்ளது.

Pressurising by Government officials

3 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House a copy of the Press Note issued early in December 1967 about pressurising by Government officials ?

A.—A copy of the Press Release No. 433*, dated 2nd December 1967, issued in the matter is placed on the table of the House.

இது குறித்து 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதியன்று வெளியிடப்பட்ட *433-ம் எண் பத்திரிகைக் குறிப்பின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Deputy Prime Minister's visit to Madras

4 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the visit of the Deputy Prime Minister of India to Madras City was cancelled at his initiative in January 1968 ; and

(*b*) if so, the reasons thereof ?

A.—(*a*) and (*b*) The Chief Minister had a telephonic talk with the Deputy Prime Minister, when he informed the Deputy Prime Minister about the cancellation of the function. A news item about the cancellation was published in the newspapers.

(அ), (இ) தமிழ் நாட்டு முதல் அமைச்சர், துணைப் பிரதம மந்திரி யுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதைப் பற்றி துணைப் பிரதம மந்திரிக்குத் தெரிவித்தார். நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதைப் பற்றிய செய்திக்குறிப்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.

Cases of insecticide poisoning in Madurai.

5 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of persons have been admitted during December 1967 into the Erskine Hospital, Madurai, with insecticide poisoning ; and

(*b*) if so, the details thereof ?

*Vide Appendix I on pages 99-100

A.—

(*a*) Yes.

(*b*) Male	.. ..	54
Female	.. ..	26
Total	..	80
Number of deaths	..	18

(அ) ஆம்.

(இ) ஆண்கள்	..	54
பெண்கள்	..	26
மொத்தம்	..	80

இறந்தவர் எண்ணிக்கை .. 18.

Representation from South Indian Film Producers

6 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) Whether the Representatives of South Indian Film Producers met him in March 1968 ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) and (*b*) In March 1968 the Hindi Picture Producers in the South met the Chief Minister as well as the Minister for Works and discussed the subject of resuming screening of Hindi Films in Madras which had then been stopped due to agitation against screening. But no written representation was made.

தென்னிந்திய ஹிந்தித் திரைப்படத் தயாரிப்பாளர்கள் முதலமைச்சரையும், பொதுப்பணித்துறை அமைச்சரையும் 1968 மார்ச் திங்களில் கண்டு பேசினர். ஹிந்திப்படம் திரையிடப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடந்ததால், சென்னையில் ஹிந்திப்படம் திரையிடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கைவிட்டு மீண்டும் திரையிடத் தொடங்குவது குறித்து அவர்கள் அப்போது அமைச்சர்களுடன் கலந்து பேசினர். முறையீடு எதுவும் எழுதிக் கொடுக்கப்படவில்லை.

Power supply from Madras Grid.

7 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether power supply restrictions were imposed in the Madras Grid from 1st March 1968 ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) and (*b*) The Government have imposed on various dates from 1949 the following restrictions on power supply :—

(i) Keeping off the supply of power to L.T. power loads *including all agricultural* loads during the evening peak load period between 18 and 22 hours in the Hydro-Electric areas and between 17-30 and 21-30 hours in the Madras Thermal area ;

(ii) Staggering of weekly holidays of textile mills and other H. T. industrial establishments not engaged on continuous processes; and

[1969 மார்ச் 5

(iii) Staggering of recess hours for an hour and a half between 6 p.m. and 9 p.m. (to be specified by the licensee depending upon the local conditions) of textile Mills and other H.T. industrial establishments not engaged on continuous processes.

These orders were issued prior to the formation of the Madras State Electricity Board under the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949 and the powers to enforce these orders were vested in the officers of the erstwhile Government Electricity Department. With a view to enable the officers of the Madras State Electricity Board to enforce the restrictions, the above orders were re-issued with effect from 1st March 1968 providing disconnection of service as penalty for contravention of the orders. No new restrictions have been imposed in the new orders.

(அ) and (இ) : 1949-ம் ஆண்டு முதல் பல தேதிகளில், தமிழக அரசு, மின்சாரம் வழங்குதலில் கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளை விதித்தது.

(i) புனல் மின்சாரப் பகுதிகளில், மின் சக்தி அதிகமாகச் செலவாகும் நேரமாகிய மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் சென்னை அனல் மின்சாரப் பகுதியில் மாலை 5½ மணி முதல் இரவு 9½ மணி வரையிலும் வேளாண்மை உட்பட, குறைந்த மின் அழுத்த மின்சாரம் பெறுபவர்களுக்கு மின்சாரம் வழங்குதலை நிறுத்தி வைத்தல்.

(ii) தொடர்ந்து பணி புரியாத, அதிக மின் விசைப்பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களிலும், துணி ஆலைகளிலும் வார விடுமுறைகளை வெவ்வேறு நாட்களில் வைத்துக்கொள்வது :

(iii) தொடர்ந்து பணி புரியாத, அதிக மின் அழுத்தத் தொழில் நிறுவனங்களிலும், துணி ஆலைகளிலும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலான காலத்தில் 1½ மணி நேரம் ஓய்வு நேரத்தை வெவ்வேறு காலத்தில் வைத்துக் கொள்ளுதல்.

ஆங்காங்குள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, மாலை 6 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இடையில் இந்த ஓய்வு நேரம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை உரிமைதாரரே குறிப்பிட வேண்டும்.

தமிழ் நாட்டு மின்சார வாரியம் ஏற்படுவதற்கு முன்பு தமிழ் நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு வேண்டிப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ் இவ்வாணைகள் பிறப்பிக்கப்பட்டன. முன்பிருந்த அரசாங்க மின்சாரத் துறை அதிகாரிகளிடம் இந்த ஆணைகளை செயற்படுத்தும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டுப்பாடுகளைத் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகள் செயல்படுத்துவதற்கு வசதியாக மேற்கண்ட ஆணைகள் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியன்று மீண்டும் பிறப்பிக்கப்பட்டன. ஆணைகளை மீறுபவர்களைத் தண்டிக்கும் வகையில் மின்விசை இணைப்புத் துண்டிக்கப்படுவதற்கும் அவற்றில் வகை செய்யப்பட்டிருந்தது. புதுக் கட்டுப்பாடுகள் எதும் இந்தப் புதிய ஆணைகளில் விதிக்கப்படவில்லை.

Ghat road for Palani Hills.

8 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a ghat road is being laid at Palani Hills ; and

(*b*) if so, the details thereof ?

A.—(*a*) NoSir.

(*b*) Does not arise.

(அ) இல்லை, ஐயா.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1969 மார்ச் 5]

Election-eve spending of discretionary funds.

9 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a copy of the request by the Election Commission to the Madras Ministers on the question of election-eve spending of discretionary funds ?

A.—The Election Commission of India has not made any request directly to the Madras Ministers on the question of election-eve spending of discretionary funds ; but it has communicated to the Chief Secretaries of all the State Governments, copies of a judgment of the Supreme Court regarding grant from the discretionary funds on the eve of elections. A copy of the Commission's letter* together with its enclosure is placed on the the Table of the House.

தேர்தலுக்கு அடுத்து முன்பு விருப்ப நிதியிலிருந்து செலவு செய்வது பற்றி இந்தியத் தேர்தல் ஆணைக் குழு தமிழக அமைச்சர்களுக்கு நேரடியாக எவ்வித வேண்டுகோளும் அனுப்பவில்லை. ஆனால் தேர்தலுக்கு அடுத்து முன்பு விருப்ப நிதியிலிருந்து தொகை அளிப்பது பற்றி தலைமை நீதி மன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றின் நகல்களை எல்லா மாநில அரசாங்கங்களின் தலைமைச் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அனுப்பியது. ஆணைக்குழுவின் கடிதத்திற்கு* நகலொன்று அதன் உள்ளடக்கத்துடன் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

New temple at Srirangam.

10 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

Whether any temple is being constructed at the premises of the Srirangam Municipal Council now ?

A.—No Sir.

இல்லை, ஐயா.

Sale of Handloom Cloth.

11 *Q.*—THIRU G. GOMATHAYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to the answer given to Unstarred Question No. 14 on the floor of the House on 29th August 1968—

The steps the Government proposes to take to boost the sales of handloom cloth this year (1968).

A.—In order to clear the accumulated stocks with the weavers' co-operative societies in this State, the Government propose to grant special rebate of 10 paise in the rupee on the sales of handloom cloth for a period of 90 days during 1968-69 in addition to the 15 days for which rebate is already allowed each year under the scheme of rebate subsidy approved by the All India Handloom Board.

இம்மாநிலத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்வதற்கு வசதியாக, அனைத்து இந்தியக் கைத்தறி வாரியம் ஏற்றுக் கொண்டபடி தள்ளுபடி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 15 நாட்களுக்குத் தள்ளுபடி

* Vide Appendix II on Pages 100-105

அனுமதிப்பதற்குக் கூடுதலாக 1968–69-ம் ஆண்டில் 90 நாட்களுக்கு கைத்தறித் துணி விற்பனைக்கு ரூபாயில் பத்து காசு சிறப்புத் தள்ளுபடி வழங்கத் தமிழ் நாடு அரசு கருதியிருக்கிறது.

Cultivable poramboke lands in Ambasamudram Constituency.

12 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

the extent of poramboke lands belonging to Government liable for cultivation in Ambasamudram Constituency, taluk-wise.

A.—Total extent of poramboke lands available for cultivation in Ambasamudram Assembly Constituency which lies entirely within Ambasamudram taluk is 282·16 acres.

Scholarships for flying training.

13 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) Whether a number of free flying scholarships are offered by the Government ;

(b) If so, the details of such awards made during the year 1967–68 ?

A.—(a) Yes. The Government are granting 30 scholarships for flying training in the Madras Flying Club and 20 scholarships for training in the Coimbatore Flying Club each year.

(b) No scholarship was awarded during 1967–68 for flying training in the Madras Flying Club. Twenty (20) candidates were awarded scholarships for flying training in the Coimbatore Flying Club during 1967–68 as detailed below :—

1 Thiru P. R. Rajasekaran.
2 Thiru F. Corera.
3 Thiru George Jacob.
4 Thiru C. L. Solomon.
5 Thiru B. L. Sankaran.
6 Thiru V. Mahendran.
7 Thiru Abraham Joseph.
8 Thiru R. Venkatesan.
9 Thiru T. R. Rajendran.
10 Thiru Ramesh Waswani.
11 Thiru Raymond Wallace Joseph.
12 Thiru M. Shyam Sundar.
13 Thiru R. Krishnakumar
14 Thiru K. Muruganandam.
15 Thiru Biharilal Balramdas Lund.
16 Thiru K. V. Ramesh Chanda
17 Thiru G. Sridharan.
18 Thiru M. A. C. Nithyanandan.
19 Thiru N. Rathinavelu.
20 Thiru A. C. Palaniswamy

2. Each scholarship is of the value of Rs. 700 at the rate of Rs. 10 per flying hour, subject to the maximum of 70 hours. The rates of scholarship fees have been revised to Rs. 25 per flying hour for those who are 22 years of age and to Rs. 40 for those who are above 22 years of age subject to a maximum of 60 hours of flying for each candidate, with effect from 1st April 1968.

(அ) ஆம், ஒவ்வோர் ஆண்டும் சென்னை விமான பயிற்சிக் கழகத்திலுள்ளவர்களில் 30 பேருக்கும், கோயம்புத்தூர் விமானப் பயிற்சிக் கழகத்திலுள்ளவர்களில் 20 பேருக்கும் அரசாங்கத்தினால் பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

(இ) 1967–68-ம் ஆண்டில் சென்னை விமானப் பயிற்சிக் கழகத்திலுள்ளவர்களுக்கு விமானப் பயிற்சி உதவிப்பணம் எதுவும் அளிக்கப்படவில்லை. 1967–68-ம் ஆண்டில் கோயம்புத்தூர் விமானப் பயிற்சிக் கழகத்திலுள்ளவர்களில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள 20 பேருக்கு விமானப் பயிற்சி உதவிப்பணம் அளிக்கப்பட்டது.

1 திரு. பி. ஆர். ராஜசேகரன்.
2 திரு. எப். கோரேரா.
3 திரு. ஜார்ஜ் ஜேகப்.
4 திரு. சி. எல் சாலமன்.
5 திரு. பி. எல். சங்கரன்.
6. திரு. வி. மகேந்திரன்.
7 திரு. அப்பிரகாம் ஜோசப்.
8 திரு. ஆர் வெங்கடேசன்.
9 திரு. டி. ஆர். ராஜேந்திரன்.
10 திரு. ரமேஷ் வஸ்வானி.
11 திரு. ரெய்மாண்ட் வாலஸ் ஜோசப்.
12 திரு. எம். சியாம் சுந்தர்.
13 திரு. ஆர். கிருஷ்ண குமார்.
14 திரு. கே. முருகானந்தம்.
15 திரு. பிஹாரிலால் பல்ராம்தாஸ் லண்ட்.
16 திரு. கே. வி. ரமேஷ் சந்தர்.
17 திரு. ஜி. ஸ்ரீதரன்.
18 திரு. எம். ஏ. சி. நித்யாநந்தன்.
19 திரு. ரத்தினவேலு.
20 திரு. ஏ. சி.பழனிசாமி.

2. ஒவ்வொருவருக்கும் 700 ரூபாய் மதிப்புள்ள உதவிப்பணம் அளிக்கப்
படுகிறது. விமானத்தில் பறந்து பயிற்சி பெறுவதற்கு மணிக்கு ரூபாய் 10
வீதம் அதிக அளவாக 70 மணி நேரத்திற்கு உதவிப்பணம் அளிக்கப்
படுகிறது. இவ்வாறு அளிக்கப்படுகிற பயிற்சி உதவிப்பண வீதங்கள்
விமானத்தில் பறந்து பயிற்சி பெறுபவர்களில் 22 வயதுடையவர்களுக்கு
மணிக்கு 25 ரூபாய், 22 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மணிக்கு
40 ரூபாய் என்ற கணக்கில் ஒவ்வொருவருக்கும் பேரளவில் 60 மணி
நேரப் பயிற்சிக்கு உட்பட்டு 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1ம்
தேதி முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

[1969 மார்ச் 5

Identification Cards for Electricity Board Employees.

14 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether identification cards have been provided to the employees of State Electricity Board doing field work in (i) Madras City and (ii) Districts?

A.—Identification cards have been provided to the employees of the State Electricity Board in Madras City doing field work and who are in contact with ths public. No such cards are provided to the employees of the Board in the districts.

சென்னை மாநகரத்தில் நேரிடப்பணி செய்து கொண்டு, பொது மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள மின்சார வாரியப் பணியாளர்களுக்கு அடையாளச் சீட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தமாதிரி அடையாளச் சீட்டுகள் மாவட்டங்களில் வேலை செய்து வரும் வாரியப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

Contracts entered into Government departments.

15 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Minister for Food and Agriculture be pleased to state—

The details of the contracts entered into between Messrs. Larson and Toubro Limited, and the Director of Agriculture during 1967–68?

A.—The details are furnished below:—

Serial number and Supply order number and date.	Materials ordered.	Quantity.	Total cost excluding sales tax and other charges.		Remarks
(1)	(2)	(3)	(4)		(5)
			RS.	P.	
1. Fl. 242517/67, dated 20th June 1967.	Spares for Gardner Denvor Mud Pump (for Failing Drill).	13 items of spares.	45,213	32	Supplied.
2. Fl. 169876/67 dated 1st September, 1967.	P. 3. I, Perkins Engine 20 h.p. (at Rs. 87,93·32 each).	2 Nos.	17,586	64	Do.
3. Fl. 159876/67, dated 5th March 1968.	P. 3. I, Perkins Engines 23·5 h.p. (at Rs. 8793·32 each).	10 Nos.	87,933	20	Do.
4. Fl. 114584/67, dated 12th March 1968.	Perkins P-61-6 Engine 60 H.P. (at Rs. 10·320/01 each).	1 No.	10,320	01	Do.
	Cooling system.	1 No.	1,400	00	Do.
5. Fl. 281365/67, dated 16th March 1963.	Long year Model 38 Diamond Core Drill with complete sets.	1 No.	1,58,822	00	Do.

1969 மார்ச் 5]

விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும், வழங்கல் ஆணை எண், நாள்.	தேவைக்கு எழுதப்பட்ட பொருள்கள்.	அளவு.	விற்பனை வரி ஏனைய கட்டணங்கள் நீங்கலாக மொத்த விலை.		குறிப்பு.
(1)	(2)	(3)	(4)		(5)
			ரூ.	காசு.	
1 Fl. 242517/67, நாள் 20—5—1968.	கார்ட்னர் டென்வர் மண் குழாய்க்கான உதிரி பாகங்கள் (பெய்லிங் கம்பெனியின் துளையிடும் கருவிக்காக).	13 உதிரி பாகங்கள்	45,213	32	வழங்கப்பட்டு விட்டது.
2. Fl. 159876/67, நாள் 1—9—1968.	P-3-I பெர்கின்ஸ் என்ஜின் 20 குதிரைத் திறன் (ஒவ்வொன்றும் ரூ. 8,793.32 விலையில்).	2 எண்ணிக்கை	17,586	64	,,
3. Fl. 159876/67. நாள் 5—3—1968	P-3-f பெர்கின்ஸ் என்ஜின் 23·5 குதிரைத்திறன் (ஒவ்வொன்றும் ரூ. 8,793·32 விலையில்.)	10 எண்ணிக்கை	87,933	20	,,
4. Fl. 114584/67, நாள் 12—3—1968.	பெர்கின்ஸ் P-61-6 என்ஜின் 60 குதிரைத் திறன் (ஒவ்வொன்றும் ரூ. 10,320·01 விலையில்).	1 எண்ணிக்கை	10,320	01	,,
5. Fl. 281369/67, நாள் 16—3—1968.	லாங் இயர்வகை 38 அடிப்பகுதியில் வைரம் பதிக்கப்பட்ட துளையிடும் கருவித் தொகுதி.)	1 எண்ணிக்கைகள்.	1,58,822	00	,,

16 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

The details of the contracts given to Thiru Siemens Engineering Company by the Directorate of Industries and Commerce during 1967–68.

A.—The Directorate of Industries and Commerce has not entered into any contracts with Thiru Siemens Engineering Company during the year 1967–68.

1967–68-ஆம் ஆண்டில் திரு. சிமென்ஸ் (Siemens) என்ஜினீரிங் நிறுவனத்தோடு, தொழில் வாணிகத் துறையினர் எவ்வித ஒப்பந்தங்களும் செய்யவில்லை.

17 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state

Whether the Director of Agriculture has entered into agreements with Messrs. Kirloskar Limited for the supply of Pumpsets during 1967–68.

A.—No, Sir.

18 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

Whether the Animal Husbandry Department has entered into any contracts with the surgical instruments plant at Madras for supply of instruments, during 1967–68.

A.—No, Sir.

இல்லை, ஐயா.

Contracts entered into by State Electricity Board.

19 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon'ble the Minister for Electricity be pleased to state—

The details of the contracts given to Messrs. Greaves Cotton Co., by the Madras State Electricity Board, during 1967–68 ?

A.—Details of the contracts given by the Madras State Electricity Board to Greaves Cotton Co., during 1967–68 are given below :—

Serial number and date of purchase order.	*Material offered.*	*Amount.*	
		RS.	P.
1 22nd August 1967	Spares for streamline Transformer Oil filters.	19,838	00
2 14th November 1967.	Streamline filters	1,48,668	00
3 27th December 1967.	Spares for streamline filters ..	23,487	25
4 22nd September 1967.	Do ..	8,948	12

1967–68-ம் ஆண்டில் கிரீவ்ஸ் காட்டன் கம்பெனியுடன் தமிழ்நாடு அரசாங்க மின்சார வாரியம் செய்துகொண்ட ஒப்பந்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த தேதியும். (1)	வழங்க முன் வந்த பொருள். (2)	தொகை (3)	
		ரூ.	காசு.
1 32—8—1967 ..	மின்அழுத்த மாற்றிகளில் மின் சக்தியை மாற்றியமைப்பதற்கான எண்ணெய் வடிகட்டிகளுக்கு உதிரி பாகங்கள்.	19,838	00
2 14—11—1967 ..	மின்சக்தியை மாற்றியமைப்பதற்கான வடிகட்டிகள்.	1,48,668	00
3 27—12—1967 ..	மின்சக்தியை மாற்றியமைப்பதற்கான வடிகட்டிகளுக்கு உதிரி பாகங்கள்.	23,487	25
4 22—9—1967 ..	மின்சக்தியை மாற்றியமைப்பதற்கான வடிகட்டிகளுக்கு உதிரி பாகங்கள்.	8,948	12

20 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

the details of the contracts given to Messrs. Omega Insulated Cables by the Madras State Electricity Board, during 1967–68.

A.—The statement below gives details of the contracts awarded to Omega Insulated Cables Company (India), Limited, by the Madras State Electricity Board, during 1967–68.

Serial number and date of purchase order.	*Description of materials.*	*Quantity.*	*Value.*	
			RS.	P.
1 16/19th August 1967.	Polythene insulated weather proof cables.	100 coils.	5,270	00
2 26th September 1967.	Do.	100 coils.	5,270	00
3 8th May 1967	7/·093" ACSR ..	1000 KMS.	7,30,000	00
4 14th March 1968.	Greased 7/·144" ACSR.	100 KMS.	1,33,639	00

ஒமேகா காப்பிடப்பட்ட மின்வடக்கம்பி தயாரிப்புக் கம்பெனி லிமிடெட், 1967–68-ம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் குறித்த விவரங்கள் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும், கொள்முதல் ஆணைத் தேதி. (1)	பொருள்களின் விபரம். (2)	அளவு. (3)	மதிப்பு. (4)
			ரூபாய்.
1 16/19 ஆகஸ்டு 1967.	பாலிதீன் காப்பிடப்பட்ட மழையால் பாதிக்கப் படாத மின் வடக் கம்பிகள்.	100 சுருள்கள்	5,270
2 26 செப்டம்பர் 1967.	,,	100 சுருள்கள்	5,270
3 8 மே 1967 ..	7/.093" ACSR ..	1000 கிலோ மீட்டர்.	7,30,000
4 14 மார்ச் 1968 ..	உயவெண்ணெய் இடப்பட்ட மின் வடக் கம்பிகள். 7/.144" ACSR.	100 கிலோ மீட்டர்.	1,33,639

21 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity, be pleased to state:—

(a) Whether the Madras State Electricity Board has entered into any contracts with the Heavy Boilers Plant at Thiruverambur for the supply of goods during 1967–68 ; and

(b) if so, the details thereof ?

A.—

(a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(ஆ) இதற்கு இடமில்லை.

[1969 மார்ச் 5

22 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state :—

The details of firms which supplied bulbs to the State Electricity Board, during 1967–68 district-wise.

A.—Bulbs are not purchased for each district separately but are ordered by the Chief Engineer of the Board and then allocated to the various Operating Systems. Details of the orders placed by the Madras State Electricity Board for bulbs during 1967–68 are given below :—

Serial number, name and address of the firm.	*Date of purchase order.*	*Quantity ordered.*
1 Bajaj Electricals Ltd., 3/33, Mount Road, Madras.	3rd August 1967, 5th September 1967, 10th October 1967, 25th January 1968 and 8th September 1967.	2,69,000 Nos. (Screw cap filament lamps).
2 Associated Electricals Industries (India) Pvt. Ltd., 35/5, Mount Road, Madras.	4th August 1967.	50,000 (Screwcap filament lamps).
3 Bird and Company (Pvt.), Ltd,, 175/1, Mount Road, Madras-2.	4th August 1967.	50,000 (Screwcap filament lamps).
4 The Oriental Mercantile Company Ltd., 165, Broadway, Madras.	27th January 1968.	60,000 (Screwcap filament lamps).
5 The Mysore Lamp Works, Ltd., Old Tumbkur Road, Bangalore.	24th January 1968.	3,50,000 (Bayonet cap filament lamps).
6 Pradip Lamp Works, 43, General Patters Road, Madras.	23rd September 1967.	21,000 (Bayonet cap).

மின்குமிழ்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியே வாங்கப் படுவதில்லை. ஆனால் மின்குமிழ்கள், வாரியத் தலைமைப் பொறியாளரின் வேண்டுதல் ஆணையின் பேரில் பெறப்பட்டு, பற்பல மின் இயக்கப் பிரிவு களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. 1967–68-ம் ஆண்டில் தமிழ் நாட்டு மின்சார வாரியத்தின் மின்குமிழ் வேண்டுதல் ஆணையின் விவரங் கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	நிறுவனத்தின் பெயரும் முகவரியும்.	கொள்முதல் ஆணை நாள்.	வேண்டிய அளவு.
1	பஜாஜ் எலெக்டிரிகல்ஸ் நிறுவனம், 3/33, மவுண்ட்சாலை, சென்னை.	3—8—67, 5—9—67, 10—10—67, 25—1—68, 8—9—67	2,69,000 (திருகுமூடி மின் இழைக் குமிழ்கள்).
2	அசோஸியேடெட் எலெக்டிரிகல்ஸ் இண்டஸ்டிரீஸ், தனியார் (இந்திய) நிறுவனம், 35/5, மவுண்ட் சாலை, சென்னை.	4—8—67	50,000 (திருகுமூடி மின் இழைக் குமிழ்கள்).
3	பேர்டு (Bird) தனியார் நிறுவனம், 175/1, மவுண்ட் சாலை, சென்னை-2.	4—8—67	50,000 (திருகுமூடி மின் இழைக் குமிழ்கள்).
4	ஓரியண்டல் மர்க்கண்டைல் நிறுவனம், 165, பிராட்வே, சென்னை.	27—1—68	50,000 (திருகுமூடி மின் இழைக் குமிழ்கள்).
5	மைசூர் மின்விளக்குப் பணி நிலையம், பழைய தும்கூர் சாலை, பங்களூர்.	24—1—68	350,000 (சொருகுமூடி மின் இழைக் குமிழ்கள்).
6	பிரதீப் விளக்குப் பணி, 43, ஜெனரல் பாட்டர்ஸ் சாலை, சென்னை.	23—9—67	21,000 (சொருகு மூடியுள்ளவை).

Protected water-supply for Villupuram.

23 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal for providing protected water-supply scheme for Villupuram ;

(*b*) If so, the details thereof ;

(*c*) the expenditure likely to be incurred on the scheme ;

(*d*) whether it is not completely by the State or by any aid from the centre ;

(*e*) the date by which the scheme is expected to be completed; and

(*f*) the amount spent so far ?

A.—

(*a*) A water-supply scheme for Villupuram was sanctioned in November 1965.

(*b*) The scheme envisages supply of water at the rate of 15 gallons per head perday to Villupuram Municipality and at the rate of 5 gallons per head per day to Valudureddy and Tirupathichavadi Panchayats. The source of the scheme is the River Ponniar.

(*c*) The Government have approved revised estimates of the scheme for Rs. 34·07 lakhs.

(*d*) The municipality and the panchayats will finance the execution of the scheme by taking loans from Government.

(*e*) Pilot water-supply was effected on 3rd July 1968. The main scheme is expected to be completed by 1969.

(*f*) Rs. 33·768 lakhs up to November 1968.

(அ) விழுப்புரத்திற்குக் குடி நீர் வழங்கும் திட்டத்திற்கு 1965-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அனுமதியளிக்கப்பட்டது.

(இ) விழுப்புரம் நகராட்சியிலுள்ள மக்களுக்கு, ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 15 காலன் தண்ணீர் வீதமும், வழுதுரெட்டி, திருப்பதிச் சாவடி ஊராட்சி மக்களுக்கு ஒவ்வொரு நாள் ஒன்றுக்கு 5 காலன் வீதமும் தண்ணீர் வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு வேண்டிய தண்ணீர் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பெறப்படு கிறது.

(உ) இத் திட்டத்திற்கு திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான ரூ. 34·07 லட்சத்துக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

(எ) நகராட்சியும் ஊராட்சிகளும், அரசாங்கத்திடமிருந்து கடன்பெற்று இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதியை உதவும்.

(ஐ) முன்னோடி முறையில் 1968, ஜனவரி 3-ந் தேதியன்று தண்ணீர் வழங்கப்பட்டது. முக்கியத் திட்டம் 1969 ஆண்டிற்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ) இதுவரை ரூ. 33·768 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

Commercial taxes

24 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

The amount of sales-tax collected during 1966–67 and 1967–68 up to date in our State out of sale of manufactured articles from private industries ?

A.—

1966–67, Rs. 7,94,91,428·23.

1967–68 (up to 22nd March 1968), Rs. 7,19,61,890·36.

1966–67, ரூ. 7,94,91,428·23.

1967–68 (1968 மார்ச் 22 வரை), ரூ. 7,19,61,890·36.

25 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the gross revenue realized under the Commercial Taxes Act during the period from March to December 1967;

(*b*) the gross revenue realized for the corresponding period during the year 1966 ;

(*c*) whether the revenue has increased or decreased ; and

(*d*) if so, the details thereof ?

A.—

(*a*) Rs. 52,73·68 lakhs.

(*b*) Rs. 45,95·68 lakhs.

(*c*) Increased.

(*d*) Rs. 6,78 lakhs.

(அ) ரூ. 52,73·68 இலட்சம்.

இ) ரூ. 45,95·68 இலட்சம்.

(உ) அதிகரித்துள்ளது.

(எ) ரூ. 6,78 இலட்சம்.

Strike by conservancy workers in Chingleput

26 *Q.*—THIRU K. VINAYAKAM :Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the conservancy workers in Chingleput Municipality struck work during August 1967 ;

(*b*) if so, the reasons therefor and the number of days they struck work ; and

(*c*) the steps taken to redress them ?

A.—

(*a*) No.

(*b*) and (*c*) Do not arise.

Sri Balasubramaniaswamy temple, Teynampet

27 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the names of the trustees of the Sri Balasubramaniaswamy temple in Teynampet, Madras ; and

(*b*) when were they appointed ?

A.—

(1) Thiru V. N. Arumugham.

(2) Thiru S. Naganathan.

(3) Thiru R. Rajagopal.

(4) Thiru M. Selvaraj.

(5) Thiru P. Dhanaraj.

(*b*) In July 1966.

(அ) (1) திரு. வி. என். ஆறுமுகம்.

(2) திரு. எஸ். நாகநாதன்.

(3) திரு. ஆர். ராஜகோபால்.

(4) திரு. எம். செல்வராஜ்.

(5) திரு. பி. தனராஜ்.

(ஆ) ஜூலை 1966.

கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள்

28 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு உணவு வேளாண் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர் கால்நடைக் கல்லூரிகளில் பயில்கிறார்கள்?

விடை.—

1967–68-ம் ஆண்டில் சென்னையிலுள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

பி. வி. எஸ். சி. பட்டப் படிப்பு	64
எம். வி. எஸ். சி. பட்டப் படிப்பு	3
மொத்தம் ..	67

Number of students belonging to the Coimbatore district studying in the Madras Veterinary College, Madras, during 1967–68 is as follows:—

B. V. Sc. degree course	64
M. V. Sc. degree course	3
Total ..	67

மகளிர் மன்றங்கள்

29 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மகளிர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதா?

விடை.—

இல்லை.

No.

சங்கரன் குடியிருப்பில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி

30 வினா—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுள்ள புதுக்குளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த சங்கரன் குடியிருப்பு கிராமத்தில் 1962-ல் அனுமதி செய்யப்பட்ட மேனீர் தேக்கத் தொட்டி (Overhead tank) கட்டி முடிக்கப்பட்டுவிட்டதா?

(இ) இல்லை எனில் அதற்கான காரணம் என்ன?

(உ) எப்போது கட்டி முடிக்கப்படும் ?

விடை.—

(அ) கட்டி முடிக்கப்பட்டு விட்டது. குழாய்கள் பொருத்தப்பட வேண்டும்.

(இ) எட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்காகக் குழாய்கள் வாங்கப்பட்டன. ஏற்கனவே தொடங்கிய சில வேலைகளில் அவைகளுக்கு ஒதுக்கிய அளவைவிட அதிகமாகப் பயன்படுத்தியதால் இந்த வேலைக்குரிய குழாய்கள் அனைத்தும் கொடுக்க இயலவில்லை.

(உ) வேறு வேலைகளுக்கு அதிகமாகப் பயன்படுத்திய குழாய்களின் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டுவருகின்றது. இக்கணக்கை முடித்து கூடுதலாக கொடுக்கப்பட்ட குழாய்களுக்குச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திலிருந்து பணத்தைப் பெற்று இவ்வேலைக்குத் தேவைப்படும் குழாய்கள் வாங்கிக்கொடுக் கப்பட்டு வேலை முடிக்கப்படும்.

(*a*) Yes ; only pipes have to be fitted.

(*b*) The pipes purchased for the eight overhead tanks have been utilised for other overhead tanks which were completed earlier. Hence the pipes required for this work could not be supplied.

(*c*) The circumstances under which the pipes were utilised in excess for other works are under investigation. After recovering the amounts due from the Panchayat or Panchayats which have utilised the pipes in excess, pipes required for this work will be purchased and the work completed.

தாம்பரம் சயரோக மருத்துவமனையருகே வழிப்பறி

31 வினா—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 10—2—1968 செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தாம்பரத்தில் சயரோக மருத்துவமனையில் பணி புரிந்துவிட்டுவீடு திரும்பிய நர்சுகள் இருவர் கத்தியால் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களிடமிருந்து பணமும், பொருட்களும் பறிக்கப்பட்டு விட்டன என்பதும் உண்மையா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

(அ) ஆம்.

(இ) 9—2—1968-ம் தேதி இரவு 10 மணிக்கு ஹவுஸ்கீப்பர் திருமதி டிமாண்டியும், நர்ஸ் பரஞ்ஜோதியும் ஆஸ்பத்திரி விடுதிக்கு வந்து கொண்டு இருந்தபொழுது அவர்கள் தாக்கப்பட்டு அவர்களிடமிருந்த ரூ. 25-ம், வேறு சில பொருட்கள் அடங்கிய பிளாஸ்டிக் கூடையும் பிடுங்கப்பட்டதாக தெரிகிறது. திருமதி டிமாண்டி கொடுத்த புகார் மனுவின் பேரில் தாம்பரம் போலீஸ் ஒரு கேஸ் பதிவு செய்து பூந்தமல்லி எஸ்.டி.எம். கோர்ட்டில் குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார்,

Sattankulam Panchayat Union Council

32 *Q.*—THIRU T. MARTIN:—Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether there is any proposal to classify the Sattankulam Panchayat Union Council in Tirunelveli district as 'E' Class Panchayat Union Council and

(*b*) if so, the particulars therefor ?

A.—

(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

Udangudi Panchayat Union Council

33 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration is pleased to state—

(*a*) Whether there is any proposal to classify the Udangudi Panchayat Union Council in Tirunelveli district as 'E' Class Panchayat Union Council; and

(*b*) if so, the particulars therefor ?

A.—

(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்.

34 வினா—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் அமுலுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை.—

(அ) இல்லை.

இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

இருபோக விளை நிலங்களாக மாற்றப்பட்ட நிலங்கள்

35 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் 1967–68-ல் எத்தனை எக்கர் ஒரு போக நிலம் இருபோகமாக்கப்பட்டது ?

விடை.—

இம்மாநிலத்தில், வழக்கமாக ஒரு போகம் விளைவிக்கப்படும் 220,332 எக்கர் நிலங்கள் 1967–68-ம் ஆண்டில் இரு போகம் விளைவிக்கப்படும் நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

In this State 220,332 acres of traditionally single-crop lands have been converted into double-crop lands during 1967–68.

திருச்சி—கரூர் சாலை

36 விஞ.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சியிலிருந்து கரூர்வரை உள்ள மங்கம்மா சாலையை செப்பனிட்டு போக்குவரத்திற்கு வசதி செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும் ?

விடை.— .

(அ) and (இ) மங்கம்மா சாலையின் மொத்த நீளம் 30·61 கிலோ மீட்டர். மங்கம்மா சாலையில் 16·68 கிலோ மீட்டரிலிருந்து 30·61 கிலோ மீட்டர் வரை உள்ள சாலைப் பகுதியைச் செப்பனிட அரசாங்கம் ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கிவிட்டது. இப்பணி தொடங்கப்பட்டு முடிவுறும் நிலையிலுள்ளது. மங்கம்மா சாலையில் 0 கிலோ மீட்டரிலிருந்து 16·68 கிலோ மீட்டர் தொலைவு வரையுள்ள எஞ்சிய சாலைப் பகுதியை மேற்கொண்டும் செப்பனிடுவது குறித்த செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

The entire length of Mangammasalai road is 30·61 K.M. The Government have accorded sanction for carrying out improvements to Mangammasalai road in K.M. 16.68 to 30·61 K.M. This work has been taken up and is nearing completion. Proposal to carrying out further improvements to the remaining portion of Mangammasalai road from K.M. 0 to 16.68 is not under the consideration of Government.

வயலூர் புங்காற்றின் குறுக்கே அணை

37 விஞ—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சப்பட்டி பகுதியிலிருந்து வரும் புங்காற்றில் வயலூருக்கு அருகில் குறுக்கே ஒரு தடுப்புச் சுவர் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது எதனுல் அழிக்கப்பட்டது ?

விடை:—

(அ) ஆம். குளித்தலை வட்டம். பஞ்சப்பட்டி கிராமத்தின் சிற்றூராகிய தாத்தம்பட்டியில் வயலூரிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் பஞ்சப்பட்டி நீர்த்தேக்கத்திற்குக் கீழ்ப்பகுதியில் புங்காற்றின் குறுக்கே சீரழிந்த நிலையில் ஓர் அணைக்கட்டு உள்ளது.

(இ) 1930-ல் பஞ்சப்பட்டி நீர்த்தேக்கம் உடைப்பெடுத்ததன் விளைவாக வெள்ளம் வந்தபோது மேற்சொன்ன அணைக்கட்டு அடித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(*a*) Yes. There is a dilapidated anicut across Pungar lower down the Panchapatti Reservoir at a distance of about 3 miles from Vayalur in Thadampatti, a hamlet of Panchappatti village in Kulitalai taluk.

(*b*) The above anicut is reported to have been washed away during floods consequent on the breaching of Panchappatti Reservoir in 1930.

தமிழ்நாடு, ஆந்திரா, கேரள, மாநிலங்களுக்கிடையே அரிசி பகிர்வு

38 விஞ.—**திரு. எஸ். ஜே. இராமசாமி :**
திரு எஸ். இராமச்சந்திரன் : } மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் தமிழக உணவு அமைச்சர் உணவுப்—பொருள்களை ஆந்திராவிலிருந்து வாங்குவது கேரளாவுக்கு விற்பது சம்பந்தமாக அந்தந்த மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியது உண்மையா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு டன்கள் வாங்கவும் விற்கவும் எந்த அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

விடை.—

(அ) 1967, மார்ச்சில் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

(இ) நெல்லூர் மாவட்டத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு கிட்டத்தட்ட 50,000 டன் அரிசி வழங்கும்படி. உத்தரவிட ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் கொள்கையளவில் ஒப்புக்கொண்டார். மாற்று அடிப்படையில் இவ்வாறு வழங்கப்படும். அதாவது, ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்பட்ட அளவுக்கு ஈடான அரிசியை இந்த அரசாங்கம் கேரள மாநிலத்திற்கு அனுப்பவேண்டும். ஆந்திர, பிரதேசத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு 1967-ம் ஆண்டில் 15,000 டன் அளவுள்ள அரிசிதான் கிடைத்தது. அதே அள்வுள்ள அரிசி கேரள மாநிலத்திற்கு அனுப்பப்பட்டது.

(*a*) The discussions were held in March, 1967.

(*b*) The Chief Minister of Andhra Pradesh agreed in principle to order the supply of about 50,000 tonnes of raw rice to this State from Nellore district. This will be on a replacement basis i.e., a quantity equivalent to what was received from Andhra State would be supplied to Kerala State by this Government. This Government actually received a quantity of 15,000 tonnes of rice from Andhra Pradesh in the year 1967 and an equal quantity was sent to Kerala.

Rails put up by Madras Tramway Company

39 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether the City roads have completely been cleared of all the rails, etc., put up by the erstwhile Madras Tramway Company; and

(*b*) if not, the areas wherein they are yet to be cleared ?

A.—

(*a*) The rails and posts put up by the erstwhile Madras Tramway Company have been completely removed from the roads in the city limits.

(*b*) Does not arise.

(அ) முன்பிருந்த சென்னை டிராம்வே கம்பெனி போட்ட தண்டவாளங்களும் கம்பங்களும் சென்னை மாநகர எல்லைகளுக்குள் அமைந்த சாலைகளிலிருந்து முற்றிலும் அகற்றப்பட்டுள்ளன.

(இ) இவ்விஞ எழவில்லை.

Ceramic Factory at Vridhachalam.

40 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the tunnel kiln of the Ceramic Factory at Vridhachalam has been commissioned recently ?

A.—

The erection of an up-to-date oil fired tunnel kiln purchased from a West German firm through their Indian agents at Bombay for the Ceramic Factory at Vridhachalam was completed on 20th March 1968 under the supervision of the German Expert. The trial run was started on 21st March 1968 and the kiln was formally inaugurated on 10th June 1968.

விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழிற்சாலைக்காக புதிய முறையில் சுரங்கக் காளவாய் ஒன்றை அமைக்கும் பணி ஜெர்மானிய வல்லுநர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 20—3—1968 அன்று நிறைவெய்தியது. இக்காளவாய்க்குத் தேவைப்படும் எரிபொருள் எண்ணெய், இது மேற்கு ஜெர்மனி நிறுவனத்திடமிருந்து பம்பாயிலுள்ள அதன் இந்திய முகவர் மூலம் விலைக்கு வாங்கப்பட்டது. இந்தக் காளவாய் 21—3—1968-ல் வெள்ளோட்டம் விட்டு சோதித்துப் பார்க்கப்பட்டது. 10—6—1968-ல் இக்காளவாய் முறைப்படித் தொடங்கி வைக்கப்பட்டது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினர்களால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்

(அ) கூட்டுறவுத்துறை அமைச்சர் விடையளிக்க வினாக்கள் வைக்கப்படாமை.

திரு. ரா. ராமச்சந்திர துரை:—பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்த அமைச்சரவையில் நான்கு புதிய மந்திரிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அமைச்சர்களில் மூன்று அமைச்சர்களுக்குக் கேள்விகள் கொடுக்கப்பட்டு அவர்கள் அதற்குப் பதில் கூறி வருகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தன் அவர்களுக்கு எந்தக் கேள்வியும் வைக்கப்படவில்லை. என்ன காரணத்திற்காக அவர்களுக்குக் கேள்விகள் கொடுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கங்கள் கேட்கிறீர்கள். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஒரு நாளைக்கு எத்தனை கேள்விகளை இந்தப் பேரவைக்குக் கொண்டு வர வேண்டும். எந்தெந்த அமைச்சர்களுக்கான கேள்விகளைக் கொண்டுவர வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்வார். ஆகவே. இது பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினால் இதில் எந்தவிதமான முறைகேடும் ஏற்படவில்லை. ஒரு அமைச்சருக்குக் கேள்விகள் இல்லையென்றால் அவருக்கு உரிய கேள்விகள் வராமல் இருந்திருக்கலாம், அல்லது கேள்விக்குரிய விடைகள் இலாக்காவிலிருந்து வராமலிருந்திருக்கலாம். அதனால் கேள்விகள் வராமலிருக்கலாம். அப்படி உறுப்பினர் ஏதாவது கேள்விகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருக்குக் கேட்டிருந்து அது இந்த அவைக்கு வரவில்லை என்றால் அதைப்பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும். எனவே, இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தாங்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராகக் கூறுவதாகக் கிடையாது. அவர்களுடைய பெருமையை இங்கே தெரியப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்குமே என்ற காரணத்தினால்தான் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அவர்களுடைய பதில்களை எதிர்பார்ப்பதிலிருந்து அவருடைய பெருமை உயர்ந்திருக்கிறது என்பது எங்கள் கருத்து.

(ஆ) வினாக்களை வெள்ளிக் குறியிடாதவையாக ஆக்கல்.

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், மேஜைமீது 'அன்ஸ்டார்ட்' கேள்விகளுக்கான 'கேட்லாக்' வைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் கேள்விகள் போடும்பொழுதெல்லாம் விளக்கம் தேவைப்படுகின்ற காரணத்தினால் கேள்வியை மட்டும் போட்டு, 'சப்ளிமெண்ட்ரி'யை' எழுதாமல் இங்கு வந்து கேட்டுக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். "On the floor of the House" கேட்க உரிமை உண்டு. எங்களைக் கேட்காமலேயே ஒரு சில கேள்விகளை 'அன்ஸ்டார்ட்' ஆகச் செய்துவிட்டார்கள். அப்படி உங்களுக்கு செய்ய உரிமை இருக்கிறது, அதை யாராவது மறுப்பார்களா? அந்தத் துணிவு எங்களுக்கு இல்லை. நான் சொல்வது, எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது. நாங்கள் விளக்கம் கேட்கவேண்டுமென்றால் 'சப்ளிமெண்டரி' கேள்விகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. நாங்கள் கேள்விகள் போடுவதன் நோக்கமே 'the very purpose of our tabling the questions is defeated' ஆதலால் அப்படி 'அன்ஸ்டார்ட்' ஆகச் செய்யும்பொழுது இப்படிச் செய்யப்போகிறோம் என்று எங்களைக் கேட்டுச் செய்தால் நன்றாக இருக்கும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு கேள்வியைச் சொல்லுகிறேன். என்னுடைய பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் திருப்பி 'ஸ்டார்ட்'—ஆக மாற்ற அனுமதிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லையே. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு எதையெதையோ கூறி விடுகிறார்கள். அதுதான் வேண்டாமென்று சொல்கிறேன். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு தாங்கள் என்னென்ன கூறவேண்டுமோ அவ்வளவையும் கூறிவிடுவது என்பது முறையாகாது. நீங்கள் அனுப்பக்கூடிய கேள்விகளை நட்சத்திரக்குறியிடாத கேள்வியாக மாற்றியமைக்கும் உரிமையும் பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. அந்த உரிமை இருக்கிறது என்ற காரணத்தினால் அதைத் தப்பான முறையில் பயன்படுத்தமாட்டார்கள். விதிமுறைகளில் என்னென்ன கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அதைபொட்டித்தான் நீங்கள் கேட்கும் கேள்விகளை நட்சத்திரக் குறியிடாத கேள்விகளாக ஆக்கியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒன்றிரண்டுக் கேள்விகளை மாற்றவேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து கேட்கலாம். அதை மறுபரிசீலனை செய்யும்படி பேரவைத் தலைவருக்கு எழுதிக் கொடுக்கலாம், அதை இந்த அவையிலே கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(இ) வினாக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அறையிலே வந்து கேளுங்கள். அறையிலே வந்து கேளுங்கள் என்று சொல்கிறீர்கள். அறையிலும் வந்து பலமுறை கேட்டிருக்கிறேன். இந்த இரண்டு வருஷ காலத்திலே ஏறக்குறைய ஆயிரம் கேள்விகள் கேட்டிருக்கிறேன். ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட கேள்விகள் எல்லாம் உண்டு. கூட்டுறவு இலாக்கா ரொம்ப ஊழல் மிகுந்த இலாக்கா, அது சம்பந்தமாக கேள்விகள் இருக்கின்றன. எனவே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பே இந்தப் பேரவையில் சொல்லியிருக்கிறேன். இலாக்காவைக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வளவு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள், அனுமதிக்கப்பட்ட கேள்விகள் எவ்வளவு தள்ளிவிடப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை எவ்வளவு, எந்தெந்த அமைச்சர்களிடத்திலே உள்ள கேள்விகள் என்று தெரிந்துகொண்டு அவர்களைத் துரிதமாக விடையளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதற்கு மாறாக பலமுறை கேட்டு வரவில்லை என்று சொல்வது சரியல்ல. அந்த நிலை உண்டாகவில்லை. அப்படி ஏதேனும் கேட்க வேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும்.

திரு. கோதண்டராமன் அவர்களின் பெயரிலே 132 கேள்விகள் வந்திருக்கின்றன என்று இலாக்காவிலே கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இதில் 63 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றக் கேள்விகளின் நிலைஎன்ன என்று கேட்டிருக்கிறோம். பட்டியல் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இது சம்பந்தமாக ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது முறையாக இருக்காது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மதுரையில் காங்கிரஸ் ஊழியர்கள்மீது போலீஸ் நடவடிக்கை.

(ஆ) மதுரையில் கைது செய்யப்பட்ட இருவரை விடுவிக்க முயற்சியும் போலீஸ் நடவடிக்கையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சித்தன், திரு. கருப்பையா, திரு. மார்டின் திரு. வை. சுவாமிநாதன் ஆகியவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள் திரு. சீமைச்சாமி அவர்கள் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். எல்லாம் ஒரே பொருளாக இருப்பதால், ஒரு கட்சிக்கு ஒருவர் வீதம் இது எந்த அளவுக்குப் பேரவையின் நிகழ்ச்சியை ஒற்றிவைத்து விவாதிப்பதற்கு உரியது என்பதைச் சுருக்கமாக கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சித்தன் அவர்கள்

To adjourn the proceedings of this House to discuss a matter of great public importance, namely, the Police action against the innocent Congress workers at Madurai on 4-3-1969 resulting in serious injuries to many of them.

என்ற பொருள்படக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இது எப்படி விவாதத்திற்குஉரியது என்பதற்கான காரணங்களை மட்டும் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே 'குறிஞ்சி' ஆசிரியர் தோழர் திரு. நெடுமாறன் உள்பட 11 காங்கிரஸ் தோழர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிக முக்கியமானவர்கள் மீது வழக்கு போடப்பட்டுள்ள அதே நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்திலேயுள்ள மிகச் சாதாரணமானவர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) (மணி அடிக்கப்பட்டது. ஐ ஆம் கம்மிங் டு தி பாய்ண்ட். மதுரையில் நேற்று கோர்ட்டு முன்பாக ஒரு போலீஸ் லாரி காங்கிரஸ்காரர் ஒருவர்மீது ஏறி அவர் காயம் அடைந்து அதனைவிளைவாக அங்கு ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. அப்பொழுது காங்கிரஸ் தோழர்கள்மீது போலீஸ் தடியடி பிரயோகம் செய்தது, தடியடி பிரயோகம் செய்வதற்கு முன்னாலே எந்த வித முன்னெச்சரிக்கையும் செய்யப்படவில்லை. தாக்கப்பட்டதிலிருந்து காங்கிரஸ் தோழர்கள் திரு. திருப்பெருந்துரை, திரு. அரசுக்கண்ணன் உட்பட 15-க்கு அதிகமானவர்கள் உடல்நிலை மிக மோசமாகி மதுரை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸில் மிக முக்கியமானவர்கள்மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிகச் சாதாரணமானவர்கள்மீதும் வழக்கு போட்டார்கள் என்பதும் . . . .

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர். இது எப்படி விவாதத்திற்குரிய காரியம் என்பதைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவர் கூறுகின்ற முறையிலே எந்த அளவிற்காவது இந்த விதிமுறைகளைமீறிச் செல்வாரானால் அதை உடன் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்கு இங்கே பேரவைத் தலைவர் இருக்கிறார். அவர் விதிமுறைகளை மீறிச் செல்கின்றார் என்று உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து நின்று கொண்டு பேசுவார்களேயானால், அதுவும் ஒழுங்கு முறைகளை மீறினதாகும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது இருக்கின்ற

விதிமுறைகளிலிருந்து மாறாமல் செல்லுகின்றாரா என்பதை நான் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். எந்தவிதமான ஒழுங்கு மீறின முறையும் நடந்துகொள்வதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகின்ற நேரத்தில், அது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்ற வகையில்தான் அவர்கள் பேச்சு அமையவேண்டுமே தவிர, அங்கே நடந்ததைப்பற்றி விளக்கிக் கூறுவது முறையல்ல என்பது சபாநாயகர் அவர்கள் நன்றாக உணருவார்கள். அப்படி இருக்க திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் என்று செயலைப் பற்றிக் கூறுவது முறையல்ல. இதன்பேரிலே தங்கள் தீர்ப்பைக் கோருகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்ற முறையில் அதனுடைய 'அட்மிசிபிலிட்டி'யைப் பற்றித்தான அவர்கள் பேசவேண்டும். அந்தக் கருத்துக்களை பற்றிப் பேசுவதற்கு மட்டும்தான் அனுமதி அளிக்க வேண்டும். அதுபற்றி தங்கள் தீர்ப்பைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விதமான விளக்கத்திற்கு அவர் செல்லவில்லை. குறிப்பிட்டு இன்னார், இன்னார் செய்திருக்கிறார் என்று சொன்னால் அதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

திரு ந. வீராசாமி : அனதெர் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பக்கூடாது என்று நீங்கள் இதற்கு முன்னால் அறிவித்திருக்கிறீர்கள். அப்படி இருக்கும்பொழுது இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் நியாயமா, இது எப்படிப் பொருந்தும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை அனுமதித்தேனா, அனுமதிக்கவில்லையா என்ற தீர்ப்பு கொடுக்கவில்லை. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தருகின்றேனா, அனுமதி தரவில்லையா என்று தீர்ப்பு அளிக்கவில்லை. தீர்ப்புக்குப் பிறகு கனம் அங்கத்தினர் கூறுகின்ற பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம்.

திரு. பெ. சீனிவாசன் : உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பிக்கும் பொழுதே தங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் பெரியவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சாதாரணமானவர்கள் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார். அவை இந்த சபையின் ஒழுங்குமுறைக்கு உட்பட்டதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் தங்கள் கட்சிக்காரர்களைப் பெரியவர்கள் என்று நினைக்கிறார்கள். மற்றவர்களைச் சாதாரணமானவர்கள் என்று நினைக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சட்டம், ஒழுங்கு, அமைதி அங்கு சரியாகப் பாதுகாக்கப்படவில்லை என்பதும்தான் இதற்கான காரணங்கள். எனவே நிச்சயமாக இது அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டதல்ல. ஆகவே அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'மதுரையில் 4—3—69-ல் ஒரு வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களை, போலீசார் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்டில் ஆஜர்படுத்திவிட்டு, மத்திய சிறைக்குக் கொண்டு செலலும்போது சுமார் 300 பேர்கள் கட்டபொம்மன் சிலை அருகே போலீஸ் லாரியை வழி மறித்து கைது செய்யப்பட்டவர்களை வெளியே கொண்டுவர முயற்சி செய்து, லாரி மீதும் போலீசார் மீதும் கல் வீசியதால் சில போலீஸ்காரர்கள் காயமடைந்ததும், போலீஸ் பிரம்படியால் சிலருக்குக் காயமும் ஏற்பட்டதின் விளைவாக நகரில் பொது

மக்களிடையே அச்சமும் பீதியும் ஏற்பட்டிருக்கிற பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, "பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் திரு. சீமைச்சாமி அவர்கள் கொடுத்திருக்கிறார். இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டது என்பதற்கான காரணத்தை மட்டிலும் சுருக்கமாக கூற வேண்டுமென்று சீமைச்சாமி அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இது மிகவும் பயங்கரமான நிகழ்ச்சி. இந்த சபையின்பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவு இந் நிகழ்ச்சி இருக்கிறது என்பதை இப்பொழுது விளக்க விரும்புகிறேன். நாகர்கோவில் தேர்தலை....(மணி அடிக்கப்பட்டது) பேசுவதற்கு முன்னாலேயே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை நிகழ்ச்சி எப்படி இந்த அரசினுடைய அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டது என்பதற்கான காரணத்தை மட்டும் கூறுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : நாகர்கோவில் தேர்தலை ஒட்டி அதன் எதிரொலியாக மதுரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் மோதல் ஏற்பட்டு, காங்கிரஸ் சார்பிலே 13 பேர்கள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழக சார்பிலே 11 பேர்கள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதிலே திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் திரு. இராமச்சந்திரன் ஒருவர். காங்கிரஸ்காரர்களில் அவர்களால் பெரியவர்கள் என்று சொல்லப்படுகிற நெடுமாறனும் வேலாயுதமும் உள்ளனர். எல்லோர்மீதும் வழக்கு தொடரப்பட்டதிலே இந்த இரண்டு பேர்களும் கோர்ட்டிலே ஆஜராகாத காரணத்தினாலே மாவட்ட மாஜிஸ்டிரேட் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார். 3-ம் தேதி இரவு கைது செய்யப்பட்டார்கள். உடனே நகரிலே காங்கிரஸ்காரர்கள் பரபரப்பை உண்டாக்கினார்கள். 4-ம் தேதி காலையிலே போர்டுகளை எழுதி வைத்தார்கள். பிட் நோட்டீஸ் வெளியிட்டார்கள். கைது செய்யப்பட்ட, அவர்களால் பெரியவர்கள் என்று சொல்லப்படுகிற நெடுமாறனையும் மற்றொருவரையும் விடுதலை செய்ய வேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் விடுவிப்போம் என்று பிட் நோட்டீஸ் வெளியிட்டார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய பத்திரிகையான 'நவசக்தியில்' இது வந்திருக்கிறது: "குறிஞ்சி" நெடுமாறன் கைது என்ற தலைப்பில் '**அடுத்த** நடவடிக்கை'......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள், படிக்க வேண்டாம்.

திரு. கரு. சீமைச்சாமி : ஆகவே, இதைத் திட்டமிட்டு, அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக செய்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்க்கும்போது, மதுரை அரசியல் விழிப்புடைய நகரமாகும்.. .

THIRU K. VINAYAKAM : He is getting into the merits of the case. That is out of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இப்பொழுது நடந்திருக்கிற நிகழ்ச்சியைத்தான் கூறுகிறார். நிகழ்ச்சியினுடைய விளைவுகளிலெல்லாம் அவர் தலையிடவில்லை. எப்படி வந்தது என்பதற்கான காரணங்களைச் சொல்லுகிறார்கள். நிகழ்ச்சியைப் பற்றிய விளைவுகளில் அவர்கள் தலையிடவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை நகரம் பெரிய அரசியல் விழிப்புள்ள நகரம். சாதாரண காரியங்கள் நடந்தாலும் அது பெரிதாக்கப்பட்டு மாநிலம் பூராவும் பரவக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 1967-க்கு முன்

னால் மாணவர் போராட்டம் மதுரையிலே ஆரம்பித்து, பெரிதாக்கப்பட்டு, பல உயிர்களைப் பலி கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. கோர்ட்டிலே ஆஜர்படுத்தப்பட்ட இரண்டு பேர்களையும் திரும்ப மத்திய சிறைக்குக்கொண்டு செல்லும்போது 6-ந்தேதி வேனிலே கொண்டு சென்றார்கள். அங்கு கட்டபொம்மன் சிலையருகே 300 பேர்கள் ஒன்று கூடி எப்படியாவது இரண்டு பேர்களையும் விடுதலை செய்விக்க வேண்டுமென்ற காரணத்திற்காக போலீஸார்களையும் லாரியையும் தாக்கினார்கள். போலீஸார் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட தடியடிப் பிரயோகம் செய்தார்கள். அப்பொழுது 9 போலீஸ்காரர்களுக்கும், ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் காயம் ஏற்பட்டது. கூடி இருந்தவர்களில் 32 பேர்களுக்கும் காயம் ஏற்பட்டது. அதன் காரணமாக மதுரை நகரிலே ஒரு பெரிய பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது. அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று சொன்னால், அதற்கு சட்டபூர்வமாகச் செல்ல வேண்டுமே தவிர, பதட்ட நிலையை, தணிப்பதற்குப் பதிலாக, சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி இந்த மாதிரி செயல்களில் செல்லக் கூடாது. ஆகவே, இப்பொழுது அங்குள்ள பதட்ட நிலையைத் தவிர்ப்பதற்கு சட்டத்தையும், நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், அந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று வேண்டுகிறேன்..

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக இந்தப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலே சில விஷயங்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கே பதட்ட நிலை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. ஆனால், இதில் வருந்தத் தக்க செய்தி என்னவென்றால் ஏற்கனவே பதட்ட நிலை இருக்கிறது என்று தெரிந்திருந்தும் ஏன் போலீஸ் முன்னேற்பாடாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான். பதட்ட நிலை உண்டுபண்ணுவதற்கான, அது ஏற்படும்படியான ஒரு நிலைக்கு, அதாவது ஏற்கெனவே.......

திரு. என். வரதராஜன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் சபையிலே வந்திருக்கிறது. யார் யார் கொண்டுவந்திருக்கிறார்களோ அவர்கள் அதைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். இதற்கு அரசுத் தரப்பிலிருந்து பதில் அளிக்க வேண்டும். அதற்குப் பின்னால் நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும். இதுதான் நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கும் சட்ட விதிகளிலே இருக்கும்படியான விதி. இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தவர் பேசியதற்குப் பின்னாலே நீங்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். அது நம்முடைய சட்ட விதிகளிலே இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் தரப்பிலே மூன்று உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் அதைப் பற்றிக் கூறி இருக்கிறார். அந்தக் கட்சியினுடைய தலைவர் என்ற முறையிலே அவர் தம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கூறியுள்ளேனே தவிர, சுதந்திராக் கட்சி சார்பிலே என்று சொல்ல முடியாது. திரு. சீமைச்சாமி அவர்கள் தனியாகக் கொடுத்திருப்பதால் அவர் சார்ந்திருக்கிற கட்சி என்ற முறையிலே அல்லாமல் தனியாகக் கூறி இருக்கிறார்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : அப்படி ஏதாவது சட்ட விதிகளில் ஒரு கட்சியைச் சார்ந்த நாலு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், அந்தக் கட்சியின் தலைவர் பேசுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : சபாநாயகர் அவர்களே தாங்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பாயிண்டு ஆப் ஆர்டர் ரொம்ப நியாயமானது என்று தெரிகிறது. தலைவர் அவர்களுடைய விசேஷ

அதிகாரத்தைப் பிரயோகித்து, எதிர்க் கட்சித் தலைவர் என்பதற்காக பிரத்யேகமாக அவர்களுக்குச் சலுகை கொடுக்க எப்பொழுதும் உரிமை உண்டு. அதற்காக எல்லா அட்ஜர்ன்மெண்டு மோஷன்களையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே கொண்டுவந்து விடலாம் என்பதில்லை. ஒரு மெம்பர் பேசிவிட்ட பிறகு, அவர் கட்சி சம்பந்தப்பட்ட ஒரு நிலை ஏற்படுகிற நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஞானத்தை, சபாநாயகருக்கு உதவிகரமாக இருக்கும்பொருட்டு, பெறுவதற்கு சபாநாயகருக்கு எப்பொழுதும் அதிகாரம் உண்டு. ஆனால், உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பாயின்டு ஆப் ஆர்டரிலும் சில அம்சங்கள் இருக்கின்றன என்பதையும் சபாநாயகர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்பொழுது வேண்டுமானாலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசலாம் என்றால், நமது மாண்புமிகு இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் கூட, அதில் தலையிடுவது என்ற நிலைதான் வந்துவிடும். ஆகவே, சபாநாயகருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு whether the motion is in order என்பதை நீங்கள் முடிவு செய்வதற்கு அனுகூலமாக இருப்பதற்கு அவர்களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இப்பொழுது பேசுவதற்கு சட்டமன்ற விதிமுறைகளையொட்டி உரிமை இல்லை. ஆனால், பேரவைத் தலைவருக்கு எந்த நேரத்திலும், யாரை வேண்டுமானாலும் பேச அனுமதிப்பதற்கு உரிமை இருக்கிறது. (திரு. க. இராமமூர்த்தி மேசையைத் தட்டினார்). திரு. சி. ராமமூர்த்திக்கும் மட்டுமல்ல, எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. அந்த முறையில், எனக்கு உதவியாக இருக்கட்டும் என்பதற்காக நான்எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அழைத்தேன். அது அவர்களுடைய உரிமை என்று அவர்கள் நினைத்துக்கொள்ள மாட்டார்கள் என்றுதான் எண்ணுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்திருந்தார்.

திரு. பெ. சீனிவாசன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்பொழுது தங்களுடைய பிரத்தியேக உரிமையை பிரயோகித்து தாங்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதித்திருக்கிறீர்கள். இது ஒரு முன்மாதிரி ஆகிவிடாதா ? நாளைக்கு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த அல்லது சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த 2, 3 உறுப்பினர்கள் கொண்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், அப்பொழுது இந்தக் கட்சித் தலைவர்களுக்கு இந்த உரிமை அளிக்கப்படுமா, மறுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். உறுப்பினர்களுக்கு அம்மாதிரி உரிமை இல்லை. பேரவைத் தலைவருக்கு உதவியாக இருக்கட்டும் என்பதற்காகத்தான் நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பேச அழைத்தேன். எந்த உறுப்பினருக்கும் அந்த உரிமை இல்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Now the point of order has been raised that the Leader of the Opposition has no right to speak when an adjournment motion is being moved in the Assembly. Now the Hon. Leader of the Opposition is explaining how the adjournment motion is in order, when no ruling has been passed on the points raised by the mover of the adjournment motion. So the Hon. Leader of the Opposition has no right to speak when no decision has been given whether the adjournment motion can be allowed or not—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது தீர்ப்பு அளிக்கவில்லை. தீர்ப்பு அளித்த பிறகு பேசலாம் என்ற கருத்தில் தாங்கள் பேசுகிறீர்கள் எனக்குத் தீர்ப்பு அளிப்பதற்கு உதவியாக இருக்கட்டும் என்பதற்காகத்தான் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். நான் தீர்ப்பு அளித்த பிறகு அவர் பேச வேண்டும் என்பதற்கு நமது சட்டமன்ற விதி முறைகளில் இடமில்லை. இதில் எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், ஸார். எந்த நேரத்திலும் நீங்கள் யாரையும் பேசுவதற்கு அழைக்க உரிமை உண்டு என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சட்ட விதிகளுக்கு உட்பட்டு, சில விதி முறைகளை வைத்திருக்கிறோம். ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் வரும்பொழுது, இன்னின்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று திட்டவட்டமாக நமது விதி முறைகளில் வரையறுக்கப்பட்டிருக்கும்பொழுது, இம்மாதிரி எதிர் கட்சித் தலைவர் அவர்களைப் பேச அழைப்பது எதிர்காலத்தில் ஒரு சிக்கலையும் கெட்ட முன் உதாரணத்தையும் சிருஷ்டிக்கலாம் அல்லவா ? ஆகவே, தயவுசெய்து, தலைவர் அவர்கள் இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நம்முடைய சட்டமன்ற விதி முறைகளில் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர் மட்டும்தான் விளக்கம் அளிக்க வேண்டும் என்பதாக விதி முறை இல்லை. நமது விதிகளில்

The Speaker shall then read the statement referred to under Rule 43 to the House and decide whether the matter proposed to be discussed is or is not in order.

என்றுதான் இருக்கிறது.

இவரைத்தான் பேச வைக்கலாம், இவரைப் பேச வைக்கக் கூடாது என்று நமது விதி முறைகளில் வரையறுக்கப்படவில்லை. பேரவைத் தலைவருடைய விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது; அதே நேரத்தில் பேரவைத் தலைவர் அந்த விருப்பத்தைத் தவறான முறையில் பயன்படுத்த மாட்டார் என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன்.

திருமதி. கே. பி. ஜானகியம்மாள் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார். பட்ஜெட் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுது, பட்ஜெட் விவாதிக்கப்படும்பொழுது இம்மாதிரி ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் மீது எதுவும் விவாதம் நடத்தக் கூடாது என்று விதியில் இருக்கிறது. இதுவரையிலும் இம்மாதிரியான சம்பவங்கள் எதுவும் நடந்தது கிடையாது. சபாநாயகர் அவர்களுடைய அதிகாரத்தைப் பற்றி யாரும் கேள்வி கேட்பதற்கு உரிமையில்லை என்பதும் தெரியும். இருந்தபோதிலும், இது ஒரு தவறான முன்மாதிரியாக இருக்காதா என்பதைத்தான் ஆலோசனை செய்ய வேண்டும். இம்மாதிரி ஏற்பட்டால், எல்லாக் கட்சிகளும் இம்மாதிரி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து விவாதிக்க ஆரம்பித்தால், சட்டசபையில் நடவடிக்கை, பட்ஜெட் விவாதம், சரியாக நடக்காது என்பதனால் மீண்டும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள் அதே பிரச்சினையைப் பற்றித்தான் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு இன்னும் பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை. அனுமதி கொடுத்தால்தான், நிதி நிலை பற்றிய விவாதம் நடக்கிற நேரத்தில், ஒற்றிவைப்புத் தீர்மானம் வருவது முறைதானா என்ற ஒழுங்கு பிரச்சினை எழும்.

இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தரலாமா, தரக்கூடாதா என்பது பற்றித்தான் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, எந்த விதமான ஒழுங்கு பிரச்சினையும் எழவில்லை என்பதைத தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான பிரச்சினை எதிர்க் கட்சித் தலைவருக்கு இருக்கும்படியான உரிமையையே பாதிக்கும்படியான பிரச்சினை. ஆகவே, நான் தெளிவாக விளக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது என்னவோ தங்கள் தயவினால் என்னை பேச அனுமதித்திருக்கிறீர்கள் எனக்கு உரிமை கிடையாது என்ற ரீதியில் பேசினார்கள். தயவுசெய்து நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் யாருடைய தயவிலும் இருக்க வேண்டிய அவசியமில்லை. நானும் 17, 18 வருஷங்களாக பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்திருக்கிறேன். எதாவது முக்கியமான பிரச்சினை வரும்பொழுது எல்லாம், உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சித் தலைவர், தான் இஷ்டப்பட்டு எதாவது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்றிருந்தால், அப்படி எடுத்துச் சொல்வதற்கு அவருக்கு எப்பொழுதும் உரிமை இருக்கிறது. பாராளுமன்றத்தில் கூட எதிர்க் கட்சித் தலைவர் அடிக்கடி இப்படிக் கருததுத் தெரிவிக்கிற நிலைமை இருந்திருக்கிறது. நான் எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் அனுவசியமாக எந்த விஷயத்திலும் தலையிட்டு பேசியது கிடையாது. என் கட்சி உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிற நேரத்தில், நான் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க முன்வந்தேன். இங்கே எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிமை எதுவும் கிடையாது என்றெல்லாம் சொல்லப்பட்டது. காங்கிரஸ் கட்சிதான் இங்கே எதிர்க் கட்சியாக இருக்கிறது. பாக்கியெல்லாம் கூட்டுக் கட்சிதான். அவர்கள் சமயத்திற்குத் தகுந்தாற்போல் எதிர்க் கட்சி என்று சொல்லிக்கொள்வதும், சொல்லிக்கொள்ளாததுமான நிலைமை இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் என்பது காங்கிரஸ் கட்சித் தலைவர்தான். மற்றவர்களெல்லாம் அந்தந்தக் கட்சியினுடைய குரூப்புக்குத்தான் தலைவர்கள். லீடர் ஆப் தி அப்போஸிஷன் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய உரிமை எங்கள் கட்சித் தலைவருக்குத்தான் இருக்கிறது. இது தெளிவுபடுத்தப்பட வேண்டும். எப்பொழுது வேண்டுமானாலும், நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு உரிமை இருக்க வேண்டும். அந்த உரிமையை நீங்கள் ஊர்ஜிதப்படுத்தப் போகிறீர்களா, இல்லையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினை. கட்சித் தலைவர் என்ற முறையில் கூட அல்ல. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருடைய உரிமை என்ன என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

சில உறுப்பினர்கள் : பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார். .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் எதாவது சொல்ல வேண்டுமானால், முதலில் எழுந்து நிற்க வேண்டும். என் எழுந்து நிற்கிறீர்கள் என்று பேரவைத் தலைவர் கேட்டால் பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லலாம். அப்படியில்லாமல் உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து, பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொன்னால், எங்கிருந்துயார் என்ன சொல்கிறார் என்பது தெரியாது. இந்த நடைமுறையைக்கொஞ்சம் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர்கள் எந்த ஒரு பிரச்சினையைப் பற்றியும் இடையிலே எழுந்து கருத்துச் சொல்வதற்கு இந்த அவையிலே ஏற்கெனவே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பிரதான எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் கருத்துச் சொல்வதற்கு உரிமை இருப்பதற்கு எந்த விதமான மறுப்புமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் அந்த உரிமையை நான் தவறுதலாகப் பிரயோகித்தேன் என்பதே இல்லை என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த பிரச்னையைப் பற்றி விளக்குவதற்காகவே நான் முன்வந்தேன். அங்கு தடிதயடிப் பிரயோகம் நடந்ததா ? அல்லது மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்படியான நிலையில் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன ? அங்கே சட்டம் அமைதி காக்கப்படவில்லை. ஏற்கனவே போலீஸ் தக்க நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஏற்கனவே பதட்ட நிலைமை அங்கே இருப்பதாகச் சர்க்காருக்குத் தெரிந்தும், போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்தும் அவ்வப்பொழுது அந்தக் காரியங்களில் முறையாக என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அப்படி எடுக்கத் தவறியதன் காரணத்தினால்தான் இப்பேற்பட்ட சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதற்காகதான் நான் அதை விளக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன். சர்க்காருக்கு உதவியாக இருக்கும் பொருட்டுத்தான் நான் விளக்கம் கூற விரும்புகிறேன். ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எங்களுக்குத் தெரியவந்த தகவல்படி போலீஸ் லாரியை ஒரு குழந்தை மேல் ஏற்றிவிட்டுச் சென்றதினால்தான் அங்கே பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சட்ட அமைதி பாதுகாப்பதற்கு முன் எச்சரிக்கையாக வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பல இடங்களில் இதுமாதிரி தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. முன் எச்சரிக்கையாகப் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம். பாதுகாப்பு நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படவில்லை. இதுமாதிரி சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி முன் ஜாக்கிரதையாக பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லையோ என்னவோ என்றுகூட சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான், சட்டம் அமைதியைக் காப்பதற்கு, பாதுகாப்பளிப்பதற்குத் தவறி விட்டதன் காரணத்திற்காக இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர், சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, சில. நிமிஷங்களுக்கு முன்னால் தாங்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள் ; எதிர்க் கட்சித் தலைவர் எந்த நேரத்திலும் ஸ்பீக்கர் விரும்பினால், தன் கருத்தைத் தெரிவிக்கும் அளவில், பேசுவதற்கு அனுமதி கொடுப்பதற்கு விதி முறையில் இடம் இருக்கிறது என்று தாங்கள் சில நிமிஷங்களுக்கு முன்னால் சொன்னீர்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. கருத்திருமன் அவர்கள் தன் கருத்தை எந்த நேரத்திலும் அவைக்கு, அவைநடவடிக்கைக்கு குந்தகம் இல்லாமல் எடுத்துரைப்பதற்கு உரிமை இருக்கிறது என்று அந்த முறையில் சொல்லுகிறார்கள். எனவே இதைப் பற்றித் தங்களுடைய முன் தீர்ப்பு வேறு விதமாக இருப்பதால், இப்பொழுது தீர்ப்பு வழங்குவீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : நான் உரிமை இருக்கிறதா, இல்லையா என்கிற சட்டப் பிரச்சினைக்குள் நுழைய விரும்பவில்லை. அப்படிப்பட்ட மரபு இருந்திருக்கிறது. உரிமையை அளிக்கலாம் என்பதைத்தான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை என்று கொடுக்க முடியாது. எதிர்க் கட்சித் தலைவர் என்பதால் சலுகைதான் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மற்றவர்களுக்கு இல்லாத சலுகை அவர்களுக்கு உண்டு.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, சலுகை என்றால் தயவு செய்து அதை விட்டுவிடுங்கள். அது உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. எனக்கு அந்த உரிமை உண்டு. சலுகையை நம்பி இருக்கவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர், உரிமை இருக்கிறது என்று பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறார்கள். அது உரிமையா ? அல்லது சலுகையா ? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிமையும் இருக்கிறது. சலுகை என்பதும் கேவலமானது அல்ல. சலுகை என்பதில் தான், சபாநாயகர் இன்னும் இவருடைய அறிவாற்றலை சபையின் நடவடிக்கைகளில் முழுமையாகப் பயன்படுத்திச் சொல்கிறார்கள் மாண்புமிகு சபாநாயகர் கொடுத்திருக்கும் தீர்ப்பு எல்லோரும் ஏற்கக் கூடியது தான். இந்தமாதிரி அட்ஜர்ன்மெண்ட் மோஷனில் தலையிட உரிமை இருக்கிறது. மற்ற நேரங்களில் அப்படியில்லை. இல்லையென்றால், நிதி நிலை அறிக்கை மீது நான்கு தடவை பேச வேண்டும் என்கிற உரிமை உண்டா என்றால் கிடையாது. அப்படிச் சொல்வதானால், உலகத்தில் எந்தச் சட்டமன்றமும் ஒத்துக்கொள்ளாது. அவருக்குப் பெரிய உரிமைகள் உண்டு. அவர்கள் இந்தச் சட்டமன்றத்தின் பாதுகாவலர்கள். ஜனநாயகத்தில் உரிமைகளை எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அட்ஜர்ன்மெண்ட் மோஷனில் கூட, அது அனுமதிக்கப்படுவது முறையா, இல்லையா என்று சபாநாயகர் தீர்மானிப்பதற்கு, எதிர்க் கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தையும் வழங்கினால் அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற வகையில், அவர்களுடைய கருத்தைக் கேட்க உரிமை இருக்கிறது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதும் உரியதே ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல. எல்லோருக்கும் உரிமைகள் இருக்கின்றன. யார் தயவிலும் யாரும் வரவில்லை. அவர்கள் அந்த இடத்திற்கும் வந்ததும் எங்கள் தயவு இல்லை. நாங்கள் இந்த இடத்திற்கு வந்ததும் அவர்கள் தயவில் இல்லை யாரையும் நம் இஷ்டம்போல் இங்கே அழைத்து வரவும் முடியாது யாரையும் இங்கிருந்து போகச் சொல்லவும் முடியாது. மக்கள் கட்டளையில் நாம் இங்கே இருக்கிறோம். உரிமைகளை ஜனநாயகத்தில் பாதுகாக்க எவ்வளவோ சிரமப்படிருக்கிறோம். சர்வாதிகாரப் போக்கிலிருந்த பழைய சட்டசபையைப் பார்த்து, நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்திருக்கிறோம், அப்பொழுதும் பார்த்திருக்கிறோம், பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பார்த்திருக்கிறோம். எதிர்க் கட்சியில் இருந்து பழகியிருக்கிறோம், பழக்கப்பட்டிருக்கும் நாங்கள் உரிமைகளைக் காப்பாற்றத் தவறமாட்டோம். ஆகவே, அது விஷயத்தில் மனதில் எந்த விதமான சங்கடமும் வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, மீண்டும், மீண்டும் நிதி அமைச்சர் அவர்கள் சலுகைகள் என்றே சொல்கிறார்கள். நாலு தடவை எதிர்க் கட்சித் தலைவர் பேச வேண்டுமென்றால், முடியாது என்கிறார். நான் அவ்வளவு புத்தியற்றவன் அல்ல. நிதி நிலை அறிக்கையில் நான்கு தரம் பேச வேண்டும் என்று கேட்க, சலுகை வேண்டாம் ஐயா கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம். நாங்கள் கேட்பதெல்லாம் உரிமை. உரிமை என்பதற்காக நான் அதிமான முறைகள் எழுந்து தவறாகப் பயன்படுத்திக்கொண்டேன் என்று சொல்ல முடியாது. மரபு என்று முதல் அமைச்சர் சொல்லுகிறார்கள். மரபாக இருக்கட்டும். ஆனால், சலுகை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளுகிறேன் மரபு என்பதை. நாலு தரம் என்பது, ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். உதாரணம் கொடுப்பதில் தவறு இல்லை. சாதாரணமாக, எப்படிவேண்டுமானாலும் பேசலாம் என்றால், அதன் பொருள், எதிர்க் கட்சித் தலைவருக்கா தெரியாது என்பேன். சாதாரணக் குடிமகனுக்குக் கூடத் தெரியாது என்றால் நான் நம்ப மாட்டேன். தமிழ் நாட்டு சட்ட சபையில் அறிவாற்றல் படைத்தவர், தமிழ் நாட்டு சட்ட சபை, பாராளுமன்றம், இன்னும் உலகத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள். அப்படி எத்தனையோ அனுபவங்கள் உள்ளவர், பல துறையிலும் வழிகாட்டும் தன்மையுள்ளவர் எதிர்க்கட்சித் தலைவர் என்று அப்படித்தான் சொல்லுகிறேன். வேறு வகையில் கருதிக் கொள்ளத் தேவையில்லை. அப்படி நினைத்திருந்தால் அதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறியது, எதிர்க் கட்சித் தலைவர் என்று ஏதோ உரிமை கிடையாது, மரபு உண்டு என்றுதான் சொன்னார்கள். நமக்கு விதிகள் இருக்கின்றன. 250 விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளிலே, எதிலாவது, "லீடர் ஆஃப் தி அபோசிஷன்" என்று இருப்பதாகவே காணோம். அவருக்கு என்று எந்த உரிமையும் கிடையாது. "லீடர் ஆஃப் தி அபோசிஷன்" என்ற சொல்லே விதிகளில் கிடையாது என்பதை மனதில் கொண்டால்......

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படியில்லை யென்றால் நான் வெளியே போய்விடலாம். இல்லையென்றால், அவர்கள் அந்த வார்த்தைகளை வாபஸ் வாங்குகிறார்களா? இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், சொல்லுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : "லீடர் ஆஃப் தி அபொசிஷன்" என்று இல்லை விதிகளில் என்று அவர்கள் சொல்வதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? அலத அவர் வாபஸ் வாங்கவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்கிற பெயரில் அந்த அடிப்படையில் எழுந்துள்ள சூழ்நிலையையும், அதைத் தொடர்ந்துவளர்க்கப்படுகிற சூழ்நிலையையும் வேதனையோடு கவனிக்கிறேன். இந்த மாமன்றத்திலே நாம் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி மொழியோடு, பொறுப்புக்களை ஏற்றிருக்கிறோம். அந்த வகையில் எதிர்க் கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தினை எடுத்துச் சொல்வதற்கு, நீண்ட காலமாக இந்த மன்றத்திலே ஒரு மரபு இருந்து. வந்திருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார். கூட்டுறவுத் துறை அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் என்பதாக, விதிமுறைகளில் இல்லை என்று கூறினார்கள், ஆனால், எதிர்க் கட்சித் தலைவரே இல்லை என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூடான சூழ்நிலை உருவாகிற நேரத்தில், மேலும் சூடாக்கும் எந்தப் பிரச்சினைகளையும் யாரும் எழுப்பாமல் இருப்பது நல்லது. இந்தப் பேரவையின் முன்னவன் என்ற முறையில், முன்னவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்ற முறையில், மீண்டும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக நிலைமையை மேலும் கொதிப்படையச் செய்யத் தேவையில்லை என்றும், எடுத்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினையில் விவாதம் நடத்தலாம் என்றும், மாண்புமிகு சபாநாயகருக்கு உதவிகரமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது தம் கருத்தினைச் சொல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சருக்கு மிக்க நன்றி. ஆனால், அவருடைய சகா, "எதிர்க் கட்சித் தலைவர் என்ற வார்த்தையே இல்லை" என்கிறார். அந்த வார்த்தையைச் சேர்க்கும் வரையில், இங்கே எப்படி உட்காருவது ? ஒன்று அவர் மன்னிப்பு கேட்கவேண்டும், அல்லது அதை வாபஸ் பெறவேண்டும். இதை சகித்துக் கொண்டு இருக்கமுடியாது. (குறுக்கீடு) நான் எவ்வளவோ பொறுமையாக இருப்பவன். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. யாரும் கொதிப்படைய வேண்டாம்......

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க் கட்சித் தலைவர் என்ற வார்த்தை தான் இல்லை என்றார், எதிர்க் கட்சித் தலைவரே இல்லை என்று சொல்லவில்லையே. தாங்கள் மலைபோல உட்கார்ந்து இருக்கும் போது, எதிர்க் கட்சித் தலைவரே இல்லை என்று எப்படிச் சொல்வது ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது அவர்கள் கண்ணுக்குத் தெரியாது. நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : ஒரு விளக்கம். நான் சொன்னதெல்லாம் "நமக்கு விதிகள் இருக்கின்றன. நமது சட்டப் பேரவைக்கு 250 விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் எங்கேயும் "லீடர் ஆஃப் தி அப்போசிஷன்" என்ற சொல்லையே காணோம். அப்படி இருந்தால் எடுத்துக் காட்டுங்கள்" என்று தான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு ஆதரவாகத் தான் இதைச் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிமை உண்டு என்று விதிகள் இல்லை, அது மரபாகத் தான் கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சபாநாயகராக இருந்தபொழுது, எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிச் சொல்லும்போது, Chief Minister of the shadow cabinet என்று அங்கே இருக்கும்பொழுது சொன்னார்கள். இப்பொழுது "எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிமை உண்டென்பதற்கான விதிகள் இல்லை, அது பழக்கத்தில் இருந்து வருகிறது, மரபாக இருந்து வருகிறது" என்று சொல்கிறார். ஆக, இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலைக்கே ஆபத்து வரும் போல் இருக்கிறது. அப்படியென்றால் நான் இங்கே உட்கார்ந்திருக்கத் தேவையில்லையே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் ஆத்திரத்தில் இருக்கிறோம். ஆத்திரத்தைக் கொஞ்சம் விட்டுவிட்டு, நிதானமாக யோசித்துப் பார்த்தால், யாரும் எந்தவிதமான தவறும் செய்துவிடவில்லை என்று தெரிந்துகொள்ளலாம். விதிமுறைகள் இருக்கின்றன. பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. விதிமுறைகள் கொடுத்திருக்கிற உரிமை நான் பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமை. எதிர்க்கட்சித் தலைவருக்கு அப்படிப்பட்ட உரிமை விதிமுறைகளில் கொடுக்கப்படவில்லை என்பது தான். அப்படி விதிமுறைகளை நாம் மாற்ற வேண்டுமென்று விரும்பினால் மாற்றிக்கொள்ளலாம். இது ஒன்றும் செய்ய முடியாத காரியம் அல்ல. அதற்காக எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதையை இந்த மன்றம் மறுக்கவில்லை. "சலுகை", "உரிமை" என்ற சொற்களிலே எதுவும் இல்லை. நாமே ஆக்கிக் கொண்டிருக்கிற விதிமுறைகளில் அப்படிப்பட்ட உரிமை இல்லையென்று தான் இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இந்த மன்றம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் எழுந்திருக்கக்கூடாது, பேசக்கூடாது என்று இந்த மன்றம் நினைக்கவில்லை. அப்படி நினைத்திருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்க மாட்டோம். எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்து வருகிறோம். எதிர்க்கட்சித் தலைவருக்கு எந்த விதமான இழுக்கும் வந்துவிட்டதாக அவர் எண்ண வேண்டாம். அவர் குறைபட்ட மனத்தோடு இருக்கவேண்டாம். நிறைந்த மனத்தோடு இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது விளக்கம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மீண்டும் மீண்டும் அந்தப் பிரச்சினை பற்றியே பேச வேண்டியிருக்கிறது. சபாநாயகர் பேரவைக்கு வரும்போது எழுந்திருக்கவேண்டுமென்று எந்த விதியில் இருக்கிறது ? காட்டுங்கள் பார்க்கலாம். சபாநாயகர் என்றால் கட்சிப் பிரசாரம் செய்யவேண்டுமென்று விதி இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு பிரச்சினையை விட்டுவிட்டு, வேறொரு பிரச்சினைக்குப் போகிறீர்கள் ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதலமைச்சர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சக அமைச்சர் அவர்கள், "எதிர்க்கட்சித் தலைவரின் உரிமை பற்றி விதிமுறைகள் இல்லை" என்று கூறுகிறார்.

THIRU K. VINAYAKAM : Whenever our rules are silent so far as the proceedings of this House are concerned, it is the convention that we should refer to May's Parliamentary Practice. In that book there is the mention of the words 'Leader of the Opposition' and of the rights conferred upon him. The Leader of the Opposition can butt in at any time in a discussion. Whenever a Bill or Resolution is under discussion, he can butt in. You please refer to May's Parliamentary Practice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு சிறந்த வக்கீல். வக்கீல் வழக்காடுகின்ற நேரத்தில் தனக்கான ஆதாரங்களைத் தேடிக் கொள்வது தான் சரியான முறையாகும். "மேஸ் பார்லிமெண்டரி பிராக்டீஸ்"ல் எந்த இடத்தில் இருக்கிறது என்று காட்டுங்கள். நமக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய "மேஸ் பார்லிமெண்டரி பிராக்டீஸ்"ல் இது பற்றி இருக்குமானால், இந்த மன்றம் அந்த உரிமைகளை மறுக்காது. ஆகவே இந்த விவாதத்தை மேலும் தொடரவேண்டாமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் எந்த விதத்தில் அரசின் அன்றாட நிகழ்ச்சிக்கு அப்பாற்பட்டது என்பதை மட்டும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, நான் தீர்ப்பு அளிப்பதற்கு முன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானம் எந்த விதத்தில் அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் என்பது குறித்து விளக்கம் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களை, தாங்கள் தீர்ப்பு அளிப்பதற்கு முன்பாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மாநகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், காங்கிரஸ் கட்சியினர் இரு தரப்பாரிடையே ஏற்பட்ட மோதல்களின் காரணமாக அவர்கள் மீது 107-வது பிரிவின்படி உத்தரவாத நடவடிக்கை என்ற அளவிலே வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார்கள். நண்பர் திரு. சித்தன் அவர்கள் கூற்றுப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சாதாரணமானவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரிய மனிதர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரண்டொருவர் மாத்திரம் நீதிமன்றத்தினுடைய சம்மனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியது மாத்திரமல்ல, அதற்காக பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி, "நாங்கள் கோர்ட்டினுடைய சம்மனை வாங்கிக்கொள்ளப்போவது இல்லை, மதிக்கப் போவது இல்லை, கோர்ட்டுக்கு லட்சக்கணக்கான மக்கள் திரண்டுபோய், நீதிபதியைப் பார்த்து, "என்ன சொல்கிறாய்" என்று கேட்கவேண்டும்" என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். 23-ம் தேதியன்று நடந்த பொதுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பேசியிருக்கிறார்கள். இதுபற்றிய விளக்கங்களை சட்டமன்றத்திலே ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியும், ஏடுகளிலே வந்தவைகளைப் படித்துக்காட்டியும் இருக்கிறேன். கோர்ட்டையும், சேர்த்து அவமானப்படுத்தியிருக்கிறார். சம்மனையும் பெற மறுத்திருக்கிறார். சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நிலையில் எந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமோ அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நண்பர் திரு. சித்தன் அவர்களின் கூற்றுப்படி பெரிய மனிதர்களான காங்கிரஸ் நண்பர்களை 3-ம் தேதி இரவு கைது செய்து, 4-ம் தேதி காலை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். கோர்ட் விசாரணை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதி வரையில் தள்ளிவைக்கப்பட்டு, கைதானவர்களை ரிமாண்டில் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டது. கைதானவர்களை ரிமாண்டில் வைப்பதற்காக கோர்ட்டிலிருந்து சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லும் நேரத்தில் 500 பேர் போலீஸ்

[திரு. மு. கருணாநிதி] [1969 மார்ச் 5

வானை வழிமறித்து கற்களை வீசி, அதன் காரணமாக ஒரு சப் இன்ஸ்பெக்டரும் 9 காவல் துறை நண்பர்களும் பெரும் காயத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. 7 போலீஸ் வண்டிகளுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தடியடிப் பிரயோகம் என்று சொல்ல முடியாது, வெறும் பிரம்படி (கேன் சார்ஜ்) செய்யப்பட்டதில் 32 பேர் காயமுற்றனர். ஒருவர் வீட்டிற்கு, அனுப்பப்பட்டார். பாக்கி 31 பேர்களில் 4 பேர்களைத் தவிர மற்ற 27 பேர்கள் "ஆப்சர்வேஷனில்தான்" மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை கவலை தருவதாக இல்லையென்று அறிக்கை கூறுகிறது. அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் தான் எடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "இதற்கு முன் கூட்டியே போலீஸ் தயாராக இருந்திருக்கவேண்டாமா ? என்று கேட்டார்கள். போலீஸ் முன்கூட்டியே தயாராக இருந்த காரணத்தினால்தான் இந்த நிலைமை சமாளிக்கப்பட்டு இருக்கிறது. இல்லாவிட்டால் கைது செய்திருப்பவர்களை விடுதலை செய்து விட்டிருப்பார்கள். போலீஸ் தக்க நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுகிற நேரத்தில் போலீஸ் வண்டிகளை வழிமறித்து கைதிகளை விடுவிக்கவேண்டுமென்று இதுவரையில் தமிழ் நாட்டில் எந்த விதமான முயற்சியும் நடைபெற்றதில்லை. சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டுமென்று கேட்கும் எதிர்க்கட்சியிலுள்ள காங்கிரஸ்காரர்கள் தான் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியுமா என்பதை எதிர்க்கட்சிக்காரர்களும், மற்றவர்களும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அத்துமீறிய கூட்டத்தைக் கலைக்க போலீஸ் பிரம்படி நடத்தியது. தற்போது மதுரைமாநகரத்தில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் காவல் போடப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒற்றிவைப்புத்தீர்மானத்திற்கு உகந்ததல்ல என்பதை பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தையொட்டியும், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி பிரயோகம் போன்றவைகள் எல்லாம் அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையாலும், இதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து இதை விவாதிக்கத் தேவையில்லையாதலால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) சில மாவட்டங்களில் பருவ மழை தவறியதும் நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, சட்டப் பேரவை **41**-வது விதியின் கீழ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திருவாளர்கள் கே. என். குமாரசாமி, என். மருதாசலம், எம். சுரேந்திரன், எம். முத்தையா, கே. எஸ். கோதண்டராமய்யா, டாக்டர் எச். வி. ஹாண்டே, பி. வெங்கடசாமி, தி. தீர்த்தகிரி கவுண்டர், ரா.ரெத்தினத் தேவர், மு. அலங்காரம், சௌடி. எஸ். சுந்தரபாரதி, எ. அ. சுப்பராஜா, சா. மெய்யப்பன், கரு. ராம. கரிய மாணிக்கம் அம்பலம், கரு. சீமைச்சாமி, பெ. சீனிவாசன், எம். ராஜாங்கம், பெ. மலைச்சாமி, என் எஸ். வி. சித்தன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தீர்மானத்தைப் படிக்க வேண்டியதில்லை எல்லோருக்குமாகச் சேர்த்து நானே படித்து விடுகிறேன்.

"கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, தருமபுரி, இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் பருவ மழை தவறியதால் மேற்படி மாவட்டங்களை பஞ்சப் பகுதிகளாக அறிவித்து, நிலவரியைத்

1969 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்தி வைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ளவேண்டும்." என்ற தீர்மானத்தை உறுப்பினர்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir,, I wish to make the following statements :—

Coimbatore, Salem and Tirunelveli Districts :—A statement on drought conditions and consequential relief measures in these districts was made by me on the floor of this House on 3—3--1969 with reference to similar notices.

Dharmapuri district—There was general failure of rains in this district with the result that adverse seasonal conditions prevailed in the taluk of Hosur and Western part of Krishnagiri taluk. As a measure of immediate relief, the Collector had proposed several relief works with a view to providing employment to the affected ryots and agricultural labourers who would otherwise migrate to other places in search of work. The Government have since decided to provide Rs. 10 lakhs for undertaking road works in the worst affected 5 blocks of Hosur taluk. The question of providing another Rs. 1.5 lakhs for carrying out repairs to 25 breached tanks, is also under the consideration of the Government. The Government are also instructing the Collector to adopt a 'go-slow' policy in the collection of loan dues.

Ramanathapuram district—On the basis of the Collector's proposals for relief measures, the Government have already issued instructions to the Collector permitting him to grant special remission and postpone loan collections in areas worst affected by drought conditions. The Government have since sanctioned a special allotment of Rs. 40 lakhs for undertaking certain immediate remuneration measures in the affected parts of the district.

Madurai district—A statement on drought conditions in this district will be made on the floor of this House separately.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்தொன்பது உறுப்பினர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கக் கேள்வி போடுவது என்றால் பேரவையின் காலம் அதிகமாகும். ஏற்கெனவே இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்க அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். மேலும் பல விளக்கங்களைக் கேட்கவும், அமைச்சர் விளக்கவும் மற்ற வாய்ப்புக்கள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : கட்சி அடிப்படையில் சில உறுப்பினர்களை விளக்கம் கேட்கச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கும்கூட அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இது பற்றி முன்பே பல அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறேன். இப்போதும் விவரமாக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். சேலத்தைப்பற்றியும், தர்மபுரி மாவட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன். மதுரை சம்பந்தமாக சில விவரங்களைச் சேகரித்தவுடன் விவரமாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவேதான் இந்த 19 உறுப்பினர்களும் ஒவ்வொரு விளக்கக் கேள்வி கேட்க அனுமதிப்பது என்ற நிலையை மேற்கொண்டால் காலம் போய்விடும். நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தில் விரிவாகச் சொல்ல உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. எம். சுரேந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும். நிதி நிலை அறிக்கை மீது பேசுகின்ற நேரத்தில் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அடுத்ததாக திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் தம்முடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிப்பார்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் எழுந்திருந்தார்.

திரு. எம். சுரேந்திரன் : நான் சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு ஏரியாவைப் பற்றிக் கேட்டிருந்தேன், இங்கே பொதுவாக சேலம் என்றிருக்கிறது, ஆகவே ஒரே ஒரு விளக்கம் கேட்க அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டது போல 19 உறுப்பினர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதில் இருந்து இதனுடைய முக்கியத்துவத்தை அரசாங்கம் நன்கு உணர்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு விளக்கக் கேள்வி என்றால் சபையின் காலம் குறைந்துவிடும். நிதி நிலை அறிக்கையில் மேலும் விளக்க சந்தர்ப்பம் இருக்கிறது. ரெவின்யூ மானியக் கோரிக்கையின் போதும், மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் போதும் நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீதும் இதுபற்றி பல சந்தர்ப்பங்களில் மேலும் மேலும் விளக்கம் அளிக்கச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இப்போது ஏற்பட்டுள்ள பயங்கரமான நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் ஆவன செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் எழுந்திருந்தார்.

திரு. இல. பலராமன் : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தாங்கள் திரு. கோமதிசங்கர தீட்சிதரை கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க அனுமதித்தீர்கள். அவரும் எழுந்தார். அவரைப் பேசவிடாமல் தடுப்பது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சுரேந்திரன் அவர்கள் வேண்டுமானால் தம்முடைய ஊரைப்பற்றி மட்டும் குறிப்பிட்டு வேறு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுக்கலாம். பேரவை விதிகளில்

The Speaker may at his discretion permit one or two questions.

என்று தான் இருக்கிறது. இருந்தும் அந்த உரிமையைக் கூட எடுத்துக் கொள்ளாமல், 19 உறுப்பினர்களும் விளக்கம் கோர சந்தர்ப்பம் அளிக்க நேரம் இல்லை. இதுபற்றி பின்னால் பல சந்தர்ப்பங்களிலும் எடுத்து விளக்க வாய்ப்பு இருக்கிறது என்கிற காரணத்தை எடுத்துச் சொல்லியும் இப்படி உறுப்பினர்கள் நடந்துகொள்ள முயற்சித்தால் எப்படிப் பேரவை நிகழ்ச்சியை நடத்த முடியும் ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : திரு. சுரேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள கொளத்தூர் வட்டம் பற்றிக் கேட்டார்களாம். இங்கே சேலம் என்று பொதுவாகப் போடப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் அதை "கொளத்தூர் வட்டம்" என்பதாகத் திருத்திப் பதிவு செய்துவிடலாம்.

(ஆ) இருமொழிக்கொள்கை புகுத்தப்பட்டதால் சமஸ்கிருத ஆசிரியர்களின் நிலை

THIRU GOMATHISANKARA DIKSHIDAR : Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent

public importance, namely, the plight of Sanskrit teachers in the State consequent on the adoption of the two language formula. முற்பகல் 11-00

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை நான் அளிக்கிறேன் :

பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை நீக்கப்பட்டதன் விளைவாகவும் இருமொழிக் கொள்கை புகுத்தப்பட்டதாலும், வடமொழிப் பண்டிதர்கள் உள்பட இந்தி மற்றும் பிறமொழிப் பண்டிதர்களை வேலையில் வைத்துக் கொள்வது குறித்து, 1968 ஏப்ரலில் அரசு ஆணை பிறப்பித்தது. இந்திப் பண்டிதர்களுக்கு அளிக்கப்பட்ட நலன்களும் பாதுகாப்பும், வடமொழிப் பண்டிதர்களுக்கும் அதைப் போன்றே வழங்கப்பட்டுள்ளன. தகுதியுடைய வடமொழிப் பண்டிதர்கள் யாவரும் அவரவரின் தகுதிக்கேற்ப தகுந்த பதவிகளில் நியமிக்கப்படவும், கூடுமான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தகுதியுள்ள வடமொழிப் பண்டிதர்கள் எந்தப் பதவியில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தபோதிலும் தற்போது அவர்களுக்குள்ள சம்பள வீதம் அப்படியே கொடுக்கப்பட வேண்டுமென்றும், எழுத்தர்களாகப் பணியாற்றுமாறு கேட்கப்படும் வடமொழி ஆசிரியர்களுக்குரிய ஓய்வு ஊதிய நன்மைகள் தனி முறையில் அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பாக ஆணையிடப்பட்டுள்ளது. அரசு பிறப்பித்த ஆணையின்படி, வடமொழிப் பண்டிதர்கள் உட்பட எல்லா மொழிப் பண்டிதர்களும், கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த பண்டிதர்கள் நீங்கலாக, அவரவர் தகுதிக் கேற்பத் தகுந்த பதவிகளில் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனர்.

(அ) தற்காலிக விதிவிலக்குப் பெற்றுப் பணிபுரியும் கல்வித் தகுதி பெற்றிராத பண்டிதர்கள் ;

(ஆ) பகுதிநேர ஆசிரியர்கள்.

இருமொழிக் கொள்கை செயல்படுத்தப்பட்ட நாளன்று இம் மாநிலத்தில் வடமொழிப் பண்டிதர்கள் சுமார் 153 பேர் இருந்தனர். இதில் தேர்வுப் பாடத்தின் கீழ் (**Electives**). வடமொழியைக் கற்பிக்கத் தொடர்ந்து பணியிலுள்ள பண்டிதர்கள் 38 பேராவர். மாற்று வேலை கொடுத்துப் பணியில் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்ட பண்டிதர்கள் சுமார் 100 பேர். இடத்திற்கேற்ப ஒரு மாதம் அல்லது இரு மாதம் அறிவிப்புக் கொடுத்துப் பணியிலிருந்து விலக்கி ஆணை பிறப்பிக்கப்பட்ட பகுதி நேர கல்வித் தகுதிபெற்றிராத தற்காலிக வடமொழிப் பண்டிதர்கள் சுமார் 15 பேர் இருந்தனர். தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட, முழுத் தகுதி பெறாத வடமொழிப் பண்டிதர்களைப் பொறுத்த வரை, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இல்லாதிருந்த போதிலும்கூட, அவர்களை எழுத்தர்களாகவும், நூலகக் காப்பாளர்களாகவும் வேலையில் வைத்துக் கொள்வதற்கான வழிவகைகளைக் காணுமாறு பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறாத பட்டதாரிகளாக அல்லது பயிற்சி பெறாத இடைநிலை ஆசிரியர்களாகப் பணியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்டிதர் பணியிருப்புப் பயிற்சி (**In Service Training**) அரசாங்கச் செலவில் கொடுக்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்ச்சி பெற்று ஆனால் இடைநிலைத் தர பயிற்சி பெறாத (நிலை I, நிலை II) தகுதி பெற்ற பண்டிதர்கள் பயிற்சி பெறாத ஆசிரியர்களாக இடைநிலைத் தர பதவிகளில் வைத்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் அரசாங்கச் செலவில் 3 மாதம் பணியிருப்புப் பயிற்சி பெற்ற பிறகு டி.எஸ்.எல்.சி. தேர்வு (இடை நிலைத் தேர்வு) எழுத அனுமதிக்கப்படுகின்றனர். 3 மாத பணியிருப்புப் பயிற்சிக்காகப் பண்டிதர்கள், ஆசிரியர் பணியாற்றாத கால அளவில் அவர்கள் பணியிலிருந்ததாகவே கருதப்படும். மேலும் அவர்களுடைய பயிற்சிக் கால அளவில் பயிற்சி உதவிப் பணமாக மாதம் ரூ. 30 கொடுக்கப் பெறுகின்றனர். பயிற்சி நிலையங்களுக்குச் சென்றுவருவதற்கு மேற்கொள்ளும் பயணங்களுக்காக தமிழ்நாடு பயணப்படி விதிகளின் கீழ் அனுமதிக்கப்படும் வீதங்களில் பயணப் படியும் அன்றாடப் படியும், அவர்களுக்கு

அனுமதிக்கப்படும். ஆனால், பயிற்சிக் கால அளவில் நாட்படி எதுவும் கொடுக்கப்படமாட்டாது. அன்றியும், எந்தப் பள்ளியிலிருந்து அவர்கள் பயிற்சிக்கு அனுப்பப் பட்டனரோ, அந்தந்தப் பள்ளிகளில் பயிற்சிக் கால அளவில் வழக்கமான சம்பளம், படிகளைப் பெறவும் இப் பண்டிதர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

எஸ்.எஸ்.எல்.சி. யாயிராத தகுதி பெற்ற பண்டிதர்களைப் பொறுத்த வரையில் பொது கல்வித் தகுதியைத் தளர்த்தி அவர்கள் எழுத்தார்களாகவோ, அல்லது பள்ளிகளில் நூலகக் காப்பாளர்களாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிற்சி பெறாத தொடக்க நிலை ஆசிரியர்களாகவோ வைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆசிரியர்களாகவோ அல்லது வேறு தன்மைகளிலோ பணியில் வைத்து கொள்ளப்படுகிற எல்லா வகைப் பண்டிதர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய சம்பளமும், சம்பள விகிதமும் பாதுகாக்கப்பட்டுள்ளன. (ஆசிரியர்களா யில்லாத) வேறு தன்மைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்டிதர்கள் ஆசிரியர்களுக்கு உரிய ஓய்வு ஊதிய நலன்களைத் தனி முறையில் தொடர்ந்து பெறத் தகுதியுடையவர்களாவர். ஆகவே கல்வித் தகுதிபெற்ற வடமொழிப் பண்டிதர்கள் அனைவரும் அவரவர் தகுதிக்கேற்ப தகுந்த பகுதிகளில் வைத்துக் கொள்ளப்படுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் காணலாம்.

கல்வித் தகுதி பெற்றிராத, பகுதி நேரப் பண்டிதர்களை மட்டுமே பணியில் வைத்துக் கொள்ள முடியவில்லை. இருமொழிக் கொள்கை செயலுக்குக் கொண்டுவரப்படாதிருந்தபோதிலும், முழுவதும் தற்காலிக அடிப்படையிலேயே நியமிக்கப்பட்ட கல்வித் தகுதி பெறாத அத்தகைய பண்டிதர்களின் பணி, காலியிடம் இல்லையென்றபோது நீக்கப்பட்டிருக்கும்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, உயர்ந்த தகுதி வாய்ந்த எம்.ஏ.-க்கு சமமான குவாலிபிகேஷன் பெற்றுள்ள 100-க்கும் குறைவாக உள்ள சமஸ்கிருதப் பண்டிதர்களுக்கு ஆரம்பப் பள்ளிகளில் அலுவல்கள் கொடுப்பதைவிட அவர்களுக்கு ஹை ஸ்கூல்களிலே கிராப்ட் பீரியடையாவது அல்லது மாரல் பீரியடையாவது ஒதுக்கி அவரவர்கள் குவாலிபிகேஷனுக்குத் தகுந்த முறையிலே அவர்களை தமிழ் நாடு அரசாங்கம் நன்றாக மதித்து ஆரம்பப் பள்ளிகளிலே அனுமதிப்பதை விட உயர்நிலைப் பள்ளிகளிலே பணிசெய்ய நடவடிக்கை எடுக்க முன் வருமா? ஏனென்றால் தமிழ் மொழியும் வடமொழியும் இரண்டும் நம்முடைய இரண்டு கண்கள். ஆகவே வடமொழிக்கும் போதிய வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: வடமொழியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குள்ள பற்றுதலை என்னால் உணர முடிகிறது. 153 பேர்களிலே 138 பேர்களுக்கு ஏற்கெனவே பாதிக்கப்படாமல் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 15 பேர்களுக்கு வாய்ப்பு எங்கெங்கே இருக்கிறதோ, அங்கே அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று தான் அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது.

2. நடைமுறை கேள்விகள்—தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர் பெயரைச் சரியாக குறிப்பிடாமை.

***திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், என்னுடைய பெயரில் 41-வது பிரிவின் கீழ் கவன ஈர்ப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதில் என்னுடைய பெயரைப் போடவில்லை, தீர்த்தகிரி என்று தான் போட்டிருக்கிறது. சென்ற தடவையும் நான் பேசியபொழுது தீர்த்தகிரி கவுண்டர் ஆகிய நான் பேசிய பொழுது அது தீர்த்தகிரிபேசியதாக ஆகிவிட்டது. தீர்த்தகிரி அவர்கள், நான் இருவரும ஒரே ஊா ஆனால் தொகுதி வேறு. எனவே நான் பேசியதற்கு முரணாக வந்துவிடுகிறது. சென்ற தடவை நான் பேசியதை தீர்த்தகிரி பேசியதாக பத்திரிகையிலே வந்து இருக்கிறது. எனவே இனிமேலாவது தீர்த்தகிரி என்று போடாமல் நான் பேசினால் தீர்த்தகிரி கவுண்டர் என்று போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் அவ்வாறு ஏற்படாமல் கவனித்துக்கொள்கிறேன்.

5. அறிவிப்புகள்.

(அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான கடைசித்தேதிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அறிவிப்புகள்.

மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கு ஏற்கனவே குறிப்பிட்ட கடைசி தேதிகளை மாற்றி, கீழ்க்கண்டபடி கொடுக்கலாம் என்று அறிவிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண்கள் 22, 23, 29, 20, 40, 13, 25, 1, 4, 31, 32, 36, 37, 45, 47, 12 — 5—3—1969-ம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்; ஏனைய மானியக் கோரிக்கைகள்: 7—3—1969-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள்.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் அவர்களுக்கு நன்றியுரை அளிக்கும் தீர்மானம் இப்பேரவையில் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி நிறைவேற்றப்பட்டதைக் குறித்து அவர்களிடமிருந்து கீழ்க் காணும் செய்தி எனக்கு வரப்பெற்றதைத் தெரிவிக்கிறேன்:—

"நான் சட்டப் பேரவையின் கூட்டத்தை ஆரம்பித்து நிகழ்த்திய உரைக்கென சட்டப்பேரவை அனுப்பியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதில் மனநிறைவு எய்துகிறேன்."

(இ) பேரவை அலுவல் நிகழ்ச்சி விபரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட விவரப்படி, பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) அண்ணாமலை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காக (Annamalai Uniuersity Senate) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது, மூன்று என்பதால், திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. ஆ. கோவிந்தராசன், திரு. கோ. பூவராகன் ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

6. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் மசோதா, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல். (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மசோதாவை இம்மன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(7) 1969-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969–70-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம் தொடரும்.

***திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நான் பல முறை திரும்பத் திரும்பப் படித்த பிறகு எனக்கு ஒரு ஆங்கிலப் பேரறிஞர் பற்றி சொல்லப்பட்ட குறிப்புத்தான் நினைவுக்கு வந்தது. ஜான்சன் பற்றிச் சொல்லும்பொழுது அவர் மற்றத் துறைகளிலே சிறந்தவராக இருந்தாலும்கூட பொதுமேடையிலே பேசவேண்டுமென்ற சொன்ன நேரத்திலே அவருக்குப் பேச வராத நிலையில் 'I conceive' என்று சொல்லி நிறுத்தி, மறுபடியும் 'I conceive' என்று சொல்லி நிறுத்தி பிறகு மூன்றாவது முறையும் 'I conceive' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிட்டபொழுது தலைமை வகித்த அம்மையார் ஒருவர் அதனைக் குறிப்பிட்டு 'Johnson conceived thrice but brought forth nothing !" என்று சொன்னார்கள். இந்தத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காருடைய மூன்றாவது நிதிநிலை அறிக்கை அந்த அளவிலேதான் அமைந்திருக்கிறது. இந்த அறிக்கையைப் பொறுத்த அளவிலே வாதங்களோ விவரங்களோ இருந்தாலும்கூட விளைவுகள் என்ன ? இந்த நாட்டுக்குத் தேவையான விளைவுகள் இருக்கிறதா, நல்ல விளைவுகள் ஏற்கப்பட்டிருக்கின்றனவா ? குறைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றனவா ? என்று பார்த்தால், இல்லையென்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி மிகப் பெருமையாகச் சொல்லப்படுவது, வரியில்லாத நிதிநிலை அறிக்கை என்பதாகும். இது வரி போடப்படாத நிதிநிலை அறிக்கையாகச் சொல்லப்படுகிறதே தவிர 19·52 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. 5·60 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் பின்னால் விதிப்பதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலேயே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது பற்றாக்குறை பட்ஜட் என்பது மட்டுமல்ல, புதிய வரி விதிப்புகளை இந்த நேரத்தில் இல்லாவிட்டாலும் பின்னால் விதிக்க இருக்கிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

ரூரல் டிபென்சர்ஸ் (Rural Debentures) என்ற நிலைப்பின்கீழ் பணம் வரும் என்றும், அதன் மூலம் வசூலிக்கின்ற நிதியைக் கொண்டு இதைச் சரிக்கட்டலாம் என்றும் அதற்கான வாதங்களை நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன் வைத்திருக்கிறார்கள். இன்றைய தினம் நாட்டிலே பரவலாகப் பருவமழை தவறி, பஞ்ச நிலைமை பரவலாகப் பெருகிக் கொண்டிருக்கிறது என்பதையும் நிதியமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ரூரல் டிபென்சர்ஸ் என்பதன்கீழ் கிராமப்புறங்களில் யாரிடம் இருந்து நிதி திரட்டப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ரூரல் டிபென்சர்ஸ் என்பதன்கீழ் எந்த அளவுக்கு எதிர்பார்க்கிறார்களோ, அந்த அளவுக்கு வசூல் செய்ய முடியாது என்ற நிலையில் அதைச் சரிக்கட்டுவதற்கு புதிய வரிகளோடு இன்னும் இரண்டொரு மாதங்களில் வர இருக்கிறார்கள் என்பதையும் உணர முடிகிறது. அதோடு நிதியமைச்சர் அவர்கள் இன்னொன்றையும் மறை

முகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். லாட்டரிச் சீட்டு விற்பனை என்பது ஏழை மக்கள்மீது திணிக்கப்பட்ட மறைமுகமான வரி என்பது அதை வருவாய்க் கணக்கில் எடுத்துக்கொண்டிருப்பதில் இருந்து தெரியவருகிறது. வெளியிலே அது வரி அல்ல என்று பேசினாலும் பட்ஜட் அளவில் அது வரிகளின் மூலமான வருவாயிலே சேர்த்துக்கொண்டிருப்பதால், அது ஒரு மறைமுகமாக வரி என்றுதான் கூறவேண்டும். அந்த வகையிலே புதிய வரிகளை எல்லாம் போடுகின்ற சர்க்காராக இருக்கும்போது, தற்போது வரி போடாமல் மக்களுடைய எண்ணத்தை, பேச்சை வேறு திசையில் திருப்பிவிட்டு மற்ற நேரங்களில் புதிய வரிகளைக்கொண்டு வருகின்ற சர்க்காராகத்தான் இது அமைந்திருக்கிறது.

இந்த பட்ஜட் முழுவதையும் இரண்டு பிரிவாக எடுத்துக்கொண்டு பார்க்கலாம். முதல் பகுதி, மத்திய சர்க்காரிடம் இருந்து மானியங்களாகவோ, கடனாகவோ பெறுவதற்கான வாதங்கள். அடுத்த பகுதி, இந்த மாநிலத்தினுடைய பொருளாதார நிலைமைகள், அதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றியாகும். ஆக, இது ஒரு விளக்க அறிக்கையாக மட்டுமே இருக்கிறது. இந்தச் சர்க்கார் பதவி ஏற்றதன் காரணமாக என்ன புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, என்ன முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதன் மூலமாக இந்த நாட்டினுடைய பொருளாதாரம் எந்த அளவுக்குச் சீரடையும் என்ற அளவிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் இல்லை மத்திய சர்க்காரிடம் நிதி தேவை என்று மேலும் மேலும் கேட்கும்போது, இந்த மாநிலத்திலே பல்வேறு துறைகளிலே, மத்திய சர்க்கார் முதலீடு செய்து அதற்காக செலவழித்துக்கொண்டிருக்கும் பணமானது, இவர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளின் காரணமாகக் குறைவுபட சந்தர்ப்பம் இருக்கிறது. இதனை மனதில் கொள்ளாமல் மத்திய சர்க்காரிடம் இருந்து பணத்தைக் கடனாகவும், மானியமாகவும் வாங்குகின்ற அளவிலேதான் அணுகுகிறார்களே தவிர, மத்திய சர்க்காரிடத்திலிருந்து இந்த மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை, புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடுகள் பெற்று நிறைவேற்றுவதில் போதுமான அளவில் கவனம் செலுத்தாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. வரி போடாத பட்ஜட் என்று இவர்கள் வாயால் சொல்லுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றும் அல்ல, சிறப்பான ஒன்றும் அல்ல. வரி போடாத பட்ஜட் என்று சொல்லும்போது நம்மால் முடியாத ஒன்றை ஒப்புக்கொள்ளுகிறோம் என்றுதான் பொருள்.

இந்த நிதிநிலை அறிக்கையைச் சபை முன் வைத்தவர்கள் கடந்த காலத்தில் என்ன சொன்னார்கள் ? "சமதர்மத்தின் காவலர்கள் நாங்கள் தான்" என்று சொன்னார்கள். "காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது" என்று சொன்னார்கள்: "நாங்கள் பதவிக்கு வந்தால் பணக்காரர்களுக்கு வரி போடுவோம், ஏழைகளுக்கு வரியைக் குறைப்போம்" என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை துருவித் துருவிப் பார்க்கிறேன்—பணக்காரர்களுக்கு எங்கேவரி போட்டிருக்கிறார்கள் என்றே கண்டு பிடிக்க முடியவில்லை. ஏழைகளுக்கு வரியைக் குறைத்திருக்கிறார்களா என்று பார்க்கிறேன். அதையும் காணோம். ஏழைகளுடைய பிரதிநிதிகள் என்று சொல்லுகிற நீங்கள் எங்கே அவர்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள் ? பணக்காரர்கள் பக்கம் திரும்ப பயப்படுகிறீர்களா? நீங்கள் இதற்கு இங்கே இல்லாவிட்டாலும் மக்கள் மத்தியில் பதில் சொல்லித்தான் தீர வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையினுடைய முக்கிய குறிக்கோள் மறைமுகமான குறிக்கோள், இந்த நாட்டு மக்களை, இந்த மாநில மக்களை மத்திய சர்க்காரோடு மோத விடுவது என்பதைத்தான் கடந்த இரண்டு நாட்களாகச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் மூலமாகக் காண்கிறோம். நிதியமைச்சர் அவர்கள் அதை எதிர்பார்த்தார்கள். அது நேற்றே ஏற்பட்டு விட்ட நிலைமையைக் கண்டோம். இந்த பட்ஜட்டின் காரணமாக இந்த நாட்டு மக்கள் மத்திய சர்க்காரோடு போராடுவது

இந்த நாட்டைப் பிரித்து திராவிட நாடு என்று தனியாக வைத்துக் கொள்வது என்ற அளவிலே விவாதத்தை இந்த பட்ஜட் உண்டாக்கி இருப்பது இந்த பட்ஜட்டின் மறைமுகமான நோக்கமாகும். அப்படி ஒரு பூர்வாங்க கொள்கையைச் சாகாமல் பார்த்துக் கொள்ளுவது என்ற அடிப்படையில் இது அமைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இது நாட்டுக்கும் நல்லதல்ல, இந்த அமைச்சரவைக்கும் நல்லதல்ல என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பயங்கரமான ஆபத்து உணவுப் பிரச்சினையாகும். இந்த உணவுப் பிரச்சினையைப் பொருத்து நான்கு மாதங்களுக்கு முன்பாகவே தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இந்தியாவினுடைய விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட அவர்கள், ஒரு எச்சரிக்கையை இந்த அரசுக்கு விடுத்தார். "பருவமழை தவறியிருக்கிறது. தமிழகம் எங்கும் சுற்றி வந்தேன், எல்லா இடங்களும் வறண்டு கிடக்கிறது, ஆகவே வீண் ஜம்பம் பேசிக் கொண்டிருக்காதீர்கள். பிரத்தியட்சமான நிலைமையை உணர்ந்து உடனடியாக நடவடிக்கைகள் எடுங்கள்" என்று சொன்னார்கள். அன்றையதினம், எதிர்க்கட்சியினர் காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு பேசுகிறார்கள், எங்களைப் போல் விவசாயத்தை யாரும் வளர்க்க முடியாது என்று பேசியவர்கள், இன்றையதினம் சி. சுப்பிரமணியம் அவர்களுடைய யோசனையைச் சொல்லவேண்டும், உதவ வேண்டும் என்று கூறுகிறார்கள். எங்களுடைய தலைவர்கள் எந்த நேரத்திலும் உதவத் தயாராக இருக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்த அரசு உணவுப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள், வருகிற பஞ்சத்தை எப்படித் தடுக்கப் போகிறார்கள், என்பதற்கான "ஃபேஸ்டு புரோகிராம்" (Phased Programme) ஒன்றும் கொடுக்கவில்லை. ஏதோ சில வடிமுனைக் குழாய்க் கிணறுகளை வெட்டியிருக்கின்ற விவரங்களைத் தந்திருக்கிறார்களே தவிர, எந்தெந்த பகுதியில் எத்தனை கிணறுகளை அமைக்க இருக்கிறார்கள், எந்தப் பகுதிகளில் அந்தக் கிணறுகளை வெட்டுவதன் மூலம் நல்ல நிலைமைகள் ஏற்படும், எந்த இடங்களில் அவற்றை வெட்டினால் கூட நல்ல நிலைமை எட்பட முடியாது என்ற முறையில் ஒரு திட்டம் கொடுக்கப்படவில்லை. இந்தச் சர்க்கார் திட்டமிடாமலே வேலை செய்கிறார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச் சாட்டாகும். இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே "உங்களிடம் திட்டம் கிடையாது" என்று சொன்னோம். ஆட்சிக்கு வந்த பிறகும் திட்டமிட்டுச் செயலாற்றுங்கள் என்று சொல்லி வருகிறோம். உணவுப் பிரச்சினையை அணுகும் முறையில் இவர்கள் திட்டமிட்டுச் செயல்படவில்லை என்று கூற விரும்புகிறேன்.

விவசாயத் துறையிலுள்ள பல்வேறு திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், சித்தாறு-திட்டம், பட்டணங்கால் திட்டம், ராமநதித் திட்டம், கடனா நதித் திட்டம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் எங்களால் அனுமதிக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட வேலைகளை இவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். புதிதாக உள்ள உங்கள் திட்டங்கள் என்னவென்று கேட்டால், தண்டரைத்திட்டம், நந்தன் வாய்க்கால் திட்டம், வைப்பாறு திட்டம், தொட்டஹல்லாத் திட்டம் ஆகியவை என்று சொல்கிறார்கள். இதைச் சொல்லிவிட்டு இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றால் பாசனம் பெறும் பகுதி அதிகரித்து விடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து எதைக் காண்கிறோம்? நாங்கள் துவக்கிய திட்டங்கள்தான் உங்களுக்கு கை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. உங்களது புதுத் திட்டங்கள் உங்களுக்கு கை கொடுக்கும் நிலையில் இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. புதுத் திட்டங்கள் செலவழிக்கும் திட்டங்களாகத்தான் இருக்கின்றன.

இந்த அறிக்கையில் புதுத் தொழிற்சாலைகள் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள்? எண்ணூரர் தர்மல் ஸ்டேஷன் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலைபற்றி சொல்லியிருக்கிறார்கள். இவற்றிற்காக இவர்கள் பேசிய அளவிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை பற்றியும், அரக்கோணத்தில் அமைய இருக்கிற தொடர் வார்ப்படத் தொழிற்சாலைப் பற்றியும் இதில் சொல்லியிருக்கிறார்கள். இவை எப்போது அமைய இருக்கின்றன, அவற்றின் நிலை என்ன, அவற்றிற்காக எந்தளவிற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற உண்மை நிலையை காணோம். மத்திய சர்க்கார் இங்கே தொடங்கியிருக்கிற மதராஸ் ரிஃபைனரீஸ் (Madras Refineries) மதராஸ் ஃபெர்டிலைசேர்ஸ் (Madras Fertilizers) இந்தத் தொழிற் சாலைகள் தான் இந்த அரசின் கணக்குக்கு கை கொடுக்கின்றனவே தவிர, இவர்களால் இந்த நாட்டு மக்களுக்கு கை கொடுக்க முடியவில்லை.

அடுத்து, இந்த அறிக்கைக்கு நேரடியாக சம்பந்தமில்லாவிட்டாலும் ஒன்றை என்றால் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இன்றையதினம் நாட்டில் சட்டம், அமைதி ஒழுங்கு இவை பாழ்பட்டுக் கொண்டிருக்கிற நிலையைக் காண்கிறோம். இதில் தலைவர் அவர்கள் பயப்படுவதுபோல் அதிகமாக நான்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் பயப்படவில்லை.

திரு. க. இராமமூர்த்தி :..........பேசப்போவதில்லை. சிலவற்றைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கீழ்வெண்மணி பற்றி எவ்வளவு பேசவேண்டுமோ அவ்வளவு பேசியாகிவிட்டது. அதை விட பயங்கரமானதொரு தீ விபத்து, திட்டமிட்ட தீ விபத்து மக்களின் மனதிலிருந்து மறைந்துபோய் விட்டது. காட்டு சித்தாமூர் என்ற கிராமத்தில் ஒரு கிராமமே அழிந்து விட்டது. கீழ்வெண்மணியில் 42 பேர்கள் இறந்தார்கள். இங்கு இந்த கிராமத்தில் 140 வீடுகள் எறிந்து விட்டன. அவர்களிடையேயுள்ள சண்டை காரணமாக இந்த சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் அப்படி ஒரு சண்டை இருக்கிறது என்பது அரசுக்கு இரண்டு வருடங்களாகத் தெரியும். அரசு என்றால் அங்குள்ள போலீசாருக்கு அதுதெரியும். அப்படித் தெரிந்திருந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தக் கிராமமே அழிந்து ஒழிந்து விட்டிருக்கிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். காலம்சென்ற முதல் அமைச்சர் அவர்களின் மீது நமக்கு எவ்வளவு அன்பு, எவ்வளவு மரியாதை இருக்கிறது என்பதைத் பற்றி நாம் இங்கு பேசி வருகிறோம். இந்த அவை அதை எடுத்துக்காட்டியிருக்கிறது. அவர்களின் சவ அடக்க நாள் அன்றும் அதற்கு முன் தினமும் முதல் அமைச்சர் அவர்கள் உடல் இருந்த இடத்தில் மக்கள் நடத்து கொண்ட விதத்தை சமாளித்த விதத்தைப் பார்த்தால் எந்தளவிற்கு மக்களை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள் என்பதை வேதனையோடு எண்ணவேண்டியிருக்கிறது. அன்றைய தினம் தடியடி நடந்திருக்கிறது. கண்ணீர்ப் புகை விடப்பட்டிருக்கிறது, துப்பாக்கிச் சூடும் நடந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு கலவரம் நடக்கும் போது ஒரு பிணம் விழுந்துவிட்டால் அதோடு அது அடங்கிவிடும் ஆனால் இங்கு நாம் என்ன பார்க்கிறோம்? கலவரமே ஒரு பிணத்தை வைத்து அதன் மீது நடக்கிறது. அது சம்பந்தமாக எந்தத் தலைவராலும் எதையும் செய்யமுடியவில்லை. அப்படிப் பட்டதொரு நிலைமையில் நாம் மக்களை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அந்தளவிற்கு சட்டத்தை மதிக்க விரும்பவில்லை, தலைவர்களை மதிக்க விரும்பவில்லை. அந்தப் பொறுப்பை அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது.

இன்னொன்றும் சொல்வேன். அன்றைய தினம் பெருவாரியான லாரிகளும், பஸ்களும் சென்னைக்கு வந்திருக்கின்றன. அந்தப் பஸ்கள் ரூட் பஸ்கள் (Route Buses). அந்தப் பஸ்கள் எங்கு ஓடிக் கொண்டிருக்கவேண்டுமோ, அங்கு ஓடாமல் ஓட வேண்டிய இடத்திலிருந்து சட்டத்தை மீறி திருப்பி இங்கே அனுப்பப்பட்டிருக்கின்றன. லாரிகளில் நிறைய ஆண்களை ஏற்றி வந்தார்கள். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? இது மறைந்த முதல் அமைச்சர் அவர்களுக்குப் பாதகமாகப் பேசுவதல்ல. ஆனால் சட்டம் எங்கே போயிற்று என்று கேட்கிறேன் அதைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை உணரவேண்டும்.

அடுத்தபடியாக, இது ஏழைகளின் அரசு, நாங்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்போம் என்று சொல்கிறார்கள். மண்ணெண்ணெய் என்னவாயிற்று, அதை விநியோகம் செய்வது யார், அதை விநியோ செய்கிறவர்கள் தவறு செய்தால் உடனடியாக அதில் தலையிட்டு சரியான படி விநியோகம் செய்ய இந்த அரசினால் ஏன் முடியவில்லை ? கிடைத்த கோட்டா என்ன, அது எங்கே பதுக்கப்பட்டது, சம்பந்தப்பட்டவர்களை அணுக அரசு ஏன் அஞ்சுகிறது என்று கேட்கிறேன். நிலைமையை இங்கே சொல்லாவிட்டாலும் மக்கள் இவர்களை வெளியே கேட்கத்தான் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கிரஸின் எங்கும் பதுக்கப்படவில்லை. எங்கெங்கு போனால் கிரஸின் கிடைக்கும் என்ற விவரம் பத்திரிகைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் எங்கேயோ பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் விவரங்கள் தெரிந்தால் அதை இந்தச் சட்டமன்றத்தில் பகிரங்கமாகச் சொல்லலாம். அப்படிச் சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பயந்து கொண்டு யார் மீதும் நடவடிக்கைகள் எடுக்க அரசு தயங்காது

திரு. க. இராமமூர்த்தி : மிகுந்த மகிழ்ச்சி. எந்தக் கடைகளில் கிடைக்கின்றன என்ற விவரம் பத்திரிகைகளில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கடைகளில் கிடைக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உறுப்பினர் அவர்கள் எந்தக் கடைக்குப் போய் நின்றார்கள் ? அப்படி எங்கு கிடைக்கவில்லை என்பதை தெரிவிக்கவேண்டும். டீ.யூ.வி.எஸ்.-ல் கொடுக்கப்பட்டு வருகிறது. பர்மா ஷெல் போன்ற கம்பெனிகளில் தரப்படுகிறது. இன்னின்ன கடைகளில் கிடைக்கும் என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. க்யூ இருக்கிறது என்று சொன்னால் கை வண்டிக்காரர்கள் கப்பல் வருவதில் உள்ள தாமதத்தைக் கொண்டு பதுக்குகிறார்கள் என்ற காரணத்தினால் குறிப்பிட்ட இடங்களில் விற்கவேண்டுமென்று தெளிவாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இந்த இந்தக் கடைகளில் கிடைக்கவில்லை என்ற விவரத்தை இந்த அவை முன் நாளை தருவதற்குத் தயாராகயிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசரமி : இப்போதே சொல்லி இருந்தால் நன்றாகயிருந்திருக்கும். தகவல் இல்லாமல் ஏன் பேசவேண்டும் ?

திரு. க. இராமமூர்த்தி : தகவல் இல்லாமல் ஏன் பேசவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் அப்படி அவசரப்படத் தேவையில்லை. தகவல்களோடுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பதுக்கி வைத்திருக்கிறார்கள், நடவடிக்கைகள் எடுக்க ஏன் தயங்கவேண்டுமென்று கேட்கும்போது திருப்பிக் கேட்காவிட்டால் இன்னும் பல புகார்களை வேண்டுமென்றே சிருஷ்டித்துக் சொல்ல வாய்ப்பாகயிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகளைச் சொல்கிற நேரத்தில் தெளிவான குற்றச்சாட்டுகளை ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேச வேண்டும். பொதுவாக அப்படி நடக்கிறது, இப்படி நடக்கிறது என்று பேசுவது முறையாகாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். பேசுகிறபோது ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேசாமல் திருப்பிக் கேட்கும் போது நாளைக்கு ஆதாரங்களைத் தருகிறேன் என்று சொல்வது நல்ல வாதமாகாது.

திரு. க. இராமமூர்த்தி : கிரஸின் கிடைக்கவில்லை. ஆதாரங்களைத் தாருங்கள், ஆளைப் பிடித்து உட்கார வைக்கவேண்டும் என்றால் அது வேறு. ஆதாரங்களைத் தர நான் தயாராயிருக்கிறேன். இன்று ஆளை கொண்டு வரமுடியாது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உறுப்பினர் அவர்கள் பேசும் போது, பதுக்கி வைத்திருக்கிறார்கள், நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது, என்று கேட்டார்கள். எந்தக் கடையில் பதுக்கி வைத்திருக்கிறார்கள், யார் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சட்டசபையில் சொன்னால் நன்றாகயிருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : கிரஸின் கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இந்த அவையில் கூறினார்கள். எந்தெந்த கடைகளில் கிடைக்கும் என்பதுபற்றி ஒரு அறிக்கை விடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் கிரஸின் கிடைக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த சபையில் கிரஸின் விஷயமாக எந்தக் கேள்வியும் வரவில்லை. கேள்விக்கு பதில் சொன்னதாக கற்பனையில் சொல்கிறார்கள். மேலவையில் வைத்துச் சொன்னதை சொல்கிறார்களோ என்னவோ. இந்த மன்றத்தில் இருந்து கொண்டு சொல்லாத பதிலைச் சொன்னதாகச் சொல்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இதுபற்றிய பேச்சு நடைபெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். உறுப்பினர் அவர்கள் இரண்டு விஷயங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். முதலில் கிரஸின் பற்றாக்குறை என்பது. அது பொதுவிஷயம். அதில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் யாருக்கும் கிடையாது. அதைச் சீராக விநியோகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கிறது. பதுக்கல் இருக்கிறது என்பது முதல் குற்றச்சாட்டு. சில ஊர்களில் ஊழல்கள் நேர்ந்திருக்கின்றன என்கிறார்கள். இரண்டாவது குற்றச்சாட்டு, பதுக்கியிருப்பவர்களைப் பிடிக்க இந்த அரசு லாயக்கில்லை என்பது. அல்லது அதற்கு உடந்தையாக இருக்கிறது என்பது இரண்டாவது குற்றச்சாட்டு. இது வெகு சாதாரணமான குற்றச்சாட்டல்ல. ஒன்று, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உண்மையான ஆதாரங்கள் இருந்தால், அதை உடனடியாக மு.ப. 11-30 மன்றத்திலே நிரூபிக்க வேண்டியது உறுப்பினர் அவர்களின் கடமை. குற்றச்சாட்டுகளைக் கூற அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், வாதாட வேண்டுமென்பதற்காக கெரஸின் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஆதாரமில்லாத காரியத்தில் ஈடுபடுவது சரியல்ல. எனவே, அதை வாபஸ் வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கச் செய்ய வேண்டியது சபாநாயகரவர்களின் கடமை என்று, ஆதாரமில்லாமல் உறுப்பினர்கள் பேசக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, இப்பொழுது அமைச்சரவர்கள் தலையிட்டதால் நானும் தலையிட வேண்டியதாக இருககிறது, என்னுடைய கட்சியின் சார்பிலே. அவர்கள் கெரஸின் பற்றிச் சொன்னார்கள். நானும் குடும்பம் வைத்திருக்கிறேன். சாதாரணமாக கடையில் மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் ஒரு ரூபாய்க்கு கூட கிடைப்பதில்லை. வெளியிலே அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. பற்றாக்குறை இருக்கிறது, விநியோகம் சீர்கெட்டு இருக்கிறது, பதுக்கல் இருக்கிறது, ஒரு லிட்டர் ஒரு ரூபாய்க்குக் கூட கிடைப்பதில்லை என்ற பிரச்சினையை மூடி மறைக்க முடியாது. எங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறோம். பொதுமக்களிடத்திலே உள்ள புகார்களைச் சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது. அத்தகைய புகாருக்கு இடமில்லை என்று சொல்வதற்குச் சர்க்காருக்குச் கடமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கெரஸின் கிடைக்கவில்லை என்ற குற்றச் சாட்டு வேறு, ஆனால் கெரஸின் பதுக்கி வைத்திருக்கிறார்கள், அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவது என்பது வேறு. இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் தெரியும். கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை அமைச்சரவர்களே ஒத்துக்கொண்டார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அதோடு நிற்கவில்லை. பதுக்கி வைத்திருக்கிறார்கள், அவர்கள் மீது

நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இருக்கிறது. அதை மறுப்பதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது. எனவே, குற்றச்சாட்டுகளை சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் பெரிய குற்றச்சாட்டுகளை சொல்லும் நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களோடு சொல்லவேண்டும். அந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களிடத்தில் போலீஸைக் கொடுங்கள் காட்டுகிறேன், யாரிடத்தில் இருக்கிறது என்று நான் காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் நண்பர் இராமமூர்த்தி அவர்கள் குற்றம் சாட்டக்கூடிய நேரத்தில் இல்லாமல் இருந்ததால் அவர்கள் என்ன பேசினார்கள் என்ற விவரத்தைக்கூட தெரிந்து கொள்ளாமல் அவர்களுக்குப் பொறுப்பேற்கக்கூடிய முறையில் பேசுகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று, அதற்கான காரணங்கள் பத்திரிகையிலே விளக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் சொன்னார்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று அதைத்தான் விளக்கவேண்டும், எந்தக் கடையிலே, யார் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று பொறுப்போடு சொல்ல வேண்டுமென்று கேட்டேன். அப்படி கேட்பது தவறா? குற்றம் சாட்டக்கூடிய நேரத்தில், பொறுப்போடு இந்தக் கடையில், இவர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். நாங்கள் பொறுப்போடுதான பேசுகிறோம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பொறுப்போடு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடிய பொறுப்பு எங்களிடத்திலே இருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சர்களிடத்திலே இருக்கிறது. எனவே, இந்த முறைகளினால் தப்பமுடியாது. பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள், பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள் என்று எங்களைப் பார்த்துச் சொன்னால், யார் பொறுப்பிலே இருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்தப் பேரவை நல்ல முறையிலே நடைபெற ஒத்துழைப்பது மிகமிகத் தேவை. பேசுகின்ற நேரத்திலே உறுப்பினர்கள் சர்க்கார்மீது குற்றம் சாட்ட நிறைய உரிமை இருக்கிறது, அதை யாரும் மறுக்கவில்லை. குற்றம் சாட்டும் நேரத்தில் குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தோடு பேச வேண்டும். இல்லாத குற்றத்தைச் சொல்வது முறையாகாது அதற்கான ஆதாரத்திற்குப் பேசுகின்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதைத்தான் அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்படி என்றால் எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் தாருங்கள் என்று கேட்டார்கள். இதற்கு இப்பொழுது விளக்கம் தர முடியவில்லை, நாளை தருகிறேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் குறைகூறத்தான் செய்வோம், அதை மறுப்பது உங்களுடைய பொறுப்பு என்று சொல்வது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக ஆகும். ஓர் உறுப்பினர் குற்றம் சாட்டக்கூடிய நேரத்தில் அதற்கான ஆதாரத்தைக் கூறவேண்டுமென்று அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். அதற்கு திரு. இராமமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : பொதுவாக, நெல் கொள்முதல் விஷயத்தில்கூட, 1,008 எம்.எல் ஏக்கள் பேசுகிறார்கள், பதுக்கல் இருக்கிறது என்று. அதற்காக அவர்களைக் கொண்டுவந்து காட்டு என்று கேட்பதா ? பதுக்கல் இருக்கிறது, விலை ஏறிக்கொண்டிருக்கிறது என்பது பொதுவான நிலை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் இராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சட்டமன்றத்தில் இல்லை, அவர் என்ன பேசினார் என்பதும் அவருக்குத் தெரியாது. (குறுக்கீடு) ரூமிலே இருந்தாரா அல்லது இடைவெளியில் இருந்தாரா என்பதற்கு மனச்சாட்சிதான் பதில் சொல்லும். இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைக் கேட்டுவிட்டுச் சொல்லவேண்டும். அவர்கள்கூடச் சொன்னார்கள், குடும்பம் வைத்திருக்கிறேன், ஒரு லிட்டர் ஒரு ரூபாய்க்குக்கூட கிடைக்கவில்லை என்று. எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு இப்படிப்பட்ட சங்கடம் வந்திருக்கிறது என்றால், அதைப் போக்க வேண்டியது சர்க்காரின் கடமையாக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கே கிடைக்கவில்லை என்றால் சாதாரண மக்களுக்கு எப்படிக் கிடைக்கும் ? அவர்கள் உண்மையாகச் சொல்லவேண்டும், எந்தக் கடையிலே என்று (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு திரு. விநாயகம் அவர்கள் வாங்கி கொண்டு வருவதாக நினைத்து வண்டியிலே என்று சொல்லுகிறார்கள். இப்படித்தான் இருக்கும் உங்களுடைய குற்றச்சாட்டுகள். அவர்கள் கடையிலே என்று சொல்லுகிறார்கள், இவர்கள் வண்டியிலே என்று சொல்லுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கடையோ, வண்டியோ, சமையல்காரருக்குத்தான் கிடைக்கவில்லை. அதற்குக்கூட ஆதாரம் கொடுக்க வேண்டும் போலிருக்கிறது.

MR. SPEAKER : Members should not make vague allegations. இது நம்முடைய சட்டமன்றத்திலே கொடுக்கப் பட்ட தீர்ப்பு. நீங்கள் ஆளுங்கட்சியின்மீது குற்றம் சாட்டுவது பற்றி எனக்கு எந்தவிதப் பொறுப்பும் இல்லை. அதேபோல் குற்றச்சாட்டை மறுப்பதும் எனக்குப் பொறுப்பு இல்லை. மன்றம் நல்ல முறையில் நடக்கவேண்டும். அதற்கான முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று இரு தரப்பினரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

They should take full responsibility for any statements that they make on the floor of the House. இப்படிப்பட்ட தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கெரஸின் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அது வேறு. அதை அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால், பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது, அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளும் பொறுப்பு நம்முடைய இராமமூர்த்தி அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அதைத்தான் அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். அந்த வகையில் தாங்கள் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பு ஏற்று, உறுதி செய்யக்கூடிய சான்றுகள் இருந்தால், அதை இந்த அமைச்சரவைக்குக் கொடுக்கலாம்.

திரு. ந. வீராசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசுகின்ற நேரத்தில், எங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாரங்கள், பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள், அதை இங்கே சொல்லிக்கொள்கிறோம் என்ற கருத்தில் சொல்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள்கூடச் சொல்லமுடியும். மண்ணெண்ணெய் விலை ஏறியிருப்பதற்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக, பொதுமக்கள் பேசிக் கொண்டார்கள். பத்திரிகையிலே வந்தது என்பவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த மன்றத்திலே பேசக்கூடாது என்று முன்னால் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக நாங்களும் சொல்லுகிறோம் என்று பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது முறையாகாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, விஷயம் என்னவென்றால், நான் நேரடியாகவே பாதிக்கப்பட்டவன். நான்சொல்வதில் நம்பிக்கை வைப்பார்கள் என்பதால் அந்தக் கஷ்டத்தைச் சொல்ல

எனக்கு உரிமை இருக்கிறது. நேரடியாக நான் அனுபவித்த கஷ்டத்தைச் சொல்லுகிறேன். அதற்குக்கூட உரிமை கிடையாதா?

***திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பொதுப்படையாகப் பேசுவதற்கு உரிமை உண்டு என்று சொல்கிறார்கள். கனம் உறுப்பினர் இராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது எனக்கு அவகாசம் கொடுங்கள், ஆளைக்கொண்டு வர இறேன் என்று சொன்னார்கள். அவர்கள் ஆளைக் கொண்டு வர வேண்டாம், விலாசமாவது சொல்லட்டும் அல்லது பேசாமல் இருக்கட்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக நான் இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். மீண்டும் இப்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவர் பேசுகிற பேச்சை புரட்டுகிறார். நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாதத்தை மறுக்கவே இல்லை. நெருக்கடி இருக்கிறது. ரொம்ப நெருக்கடி இருக்கிறது. இந்த நெருக்கடியை அரசாங்கம் கண்டிக்கிறது. நாங்கள் எப்படி அதற்கு பொறுப்பாக முடியும்? சட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும். உங்களுடைய சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார், டெல்லியிலே இருக்கிற சர்க்கார், எவ்வளவு கொடுக்கிறார்களோ அதை நாங்கள் விநியோகிக்கிறோம். (ஆரவாரம்). அங்கேதான் இருக்கிறதே தவிர, இந்த மாநில அரசுக்கு, தமிழக அரசுக்கு என்ன இருக்கிறது? எங்களோடு சேர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் அங்கிருக்கிற காங்கிரஸ் சர்க்காரை இன்னும் கொடுங்கள், கொடுங்கள் என்று கேட்டால் அவர் பொறுப்பேற்றிருப்பதை நிறைவேற்றியதாகும். ஆனால் கேட்கவில்லை; பரவாயில்லை. ஆனால் பொறுப்பை நாங்கள் தட்டிக் கழிக்க மாட்டோம். நாங்கள்தான் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு முழு அதிகாரம் பெற்றவர்கள் என்பதைக்கூட ஒத்துக்கொள்ளுகிறோம். பதுக்கல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைக்கூட நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். பொதுவாகப் பேசுகிறார்கள், பதுக்கலை என் கண்டுபிடிக்கவில்லை. இந்த அரசாங்கம் தன்னுடைய கடமையிலிருந்து தவறியது என்றுகூட சொல்லட்டும், அதைக்கூட வரவேற்கிறோம். அதற்கு இந்த அரசாங்கம் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் பேசுகிற பாணி வேறாக இருக்கிறது. பதுக்கல் இருக்கிறது, அந்த பதுக்கலைக் கண்டுபிடிக்க இந்த அரசாங்கம் பயப்படுகிறது, அதற்கு ஆதரவாக இருக்கிறது என்று சொல்வார்களானால் அது இந்த அரசாங்கத்தின்மீது சுமத்தப்படுகிற பயங்கரமான குற்றச்சாட்டு. ஒன்று வேண்டுமென்றே இந்த அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக அந்தக் காரியத்தை செய்திருக்கவேண்டும், அல்லது ஆதாரம் இருந்தும் அவர்களுக்கு உடந்தையாக, அந்த பதுக்கல்காரர்களுக்கு உடைந்தையாக (ஆரவாரம்) இருக்கவேண்டும். ஆதாரம் இருந்தும் அவர்கள் கண்டுபிடிக்கட்டும் என்பதற்காக மறைக்கவேண்டியதில்லை. ஒரு விவகாரத்தைப்பற்றி மன்றத்திலே சொல்லவேண்டிய கடமை இருக்கின்ற நேரத்திலே சொல்லத் தவறுகிறார்கள் என்பதுதான் பொருளாகும். ஒன்று இதை அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். இல்லாவிட்டால், இதை நம்முடைய உரிமைக் குழுவுக்கு அனுப்ப-வேண்டிய அவசியம் ஏற்படும். ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. இந்த மன்றத்தினுடைய உரிமைகளை அதனுடைய நியாயமான உரிமைகளை காப்பதற்காக இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை மீண்டும் தொடர வேண்டாமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த விவகாரத்தினால் நம்முடைய மன்ற உரிமைகள், மரபுகள் ரொம்ப கவலை அளிக்கக்கூடிய நிலையில் போய்விடுமோ என்று அஞ்ச வேண்டி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதிலே ஒத்துழைக்க வேண்டுமென்று நான் மிகுந்த அக்கறையோடு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், இந்தக் கட்டுப்பாடு விநியோகம் இவைகள்தான் பதுக்கலுக்கெல்லாம் காரணம். அதைத்தான் சுதந்திராக் கட்சி சொல்லிக்கொண்டிருக்கிறது. அந்த முறையை காங்கிரஸ்காரர்கள் ஆண்டபொழுது நடைமுறையிலே வைத்துக்கொண்டிருந்தார்கள்.

அதனால்தான் இந்த விவகாரம் வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் மேலே பழி சுமத்துவது நல்லதல்ல. இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு சபையோர் எல்லோரும் சேர்ந்து ஏகமனதாக முடிவுக்கு வருவதிலே கஷ்டம் இருக்காது. இது என்ன பெரிய பிரிவிலெஜ் இஷ்யூ? இப்படியெல்லாம் போனால் பிரிவிலேஜ் கமிட்டிக்கே மதிப்பில்லாமல் போகும். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் : கெரோசின் விஷயத்தைப் பற்றி விவாதிக்கும்போது உண்மையிலே பற்றாக்குறை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதற்காக எழுந்திருக்கிறீர்கள்? பாயிண்ட் ஆப் ஆர்டரா? பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனா?

திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால், இந்த சட்டமன்றத்தினுடைய விதிமுறைகளுக்கு முறை கேடாக சட்டமன்றம் நடைபெறுகிறது என்றால், அதை சுட்டிக் காட்டுங்கள், இந்த வகையில் நடைபெறுகிறது என்று. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை சொல்வதை நான் அனுமதிக்கமுடியாது. தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல உறுப்பினர்கள் அதை வாய்ப்பாக்கிக்கொள்ளுகிறார்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால், பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்துவிடுகிறார், ஆகவே எதை வேண்டுமானாலும் கூறிவிடலாம் என்ற கருத்திலே இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பேசுவதாகத் தெரிகிறது. அதைப் பற்றி ஒருமுறை நான் சொன்னதற்குக்கூட உறுப்பினர்கள் என்மீது கோபித்துக்கொண்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று தெரிந்து கொண்டும் எழுந்து தங்கள் கருத்துக்களை தெரிவிப்பது என்ற முறையை உறுப்பினர்கள் மேற்கொண்டால், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைப் பற்றி பேரவைத் தலைவர் யோசிக்க வேண்டிய நிலைகூட உருவாகும் என்று சொன்னேன். எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு எதுவேண்டுமானாலும் பேசப்படுவதை அனுமதிக்க முடியாது. இம்மன்ற விதிமுறைகளிலிருந்து பேரவை மாறி நடந்தால் அதைக் கூறலாம், தங்கள் கருத்துக்களை சொல்ல பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருப்பதை அனுமதிக்க முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயைப் பொறுத்த வரையில், கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள், விலை அதிகம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விலை அதிகம் என்று நான் சொல்லவில்லை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னதாக நீங்கள் சொல்லவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமமூர்த்தியிடமிருந்து தெளிவான ஒரு விடை தேவைப்படுகிறது. பதுக்கப்பட்டிருக்கிறது, அதன்மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை, அதற்குச் சர்க்கார் துணை போகின்றார்கள் என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டை திரும்பப் பெறப்போகிறீர்களா அல்லது அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறது என்றால், அதை நிரூபிக்கப் போகிறீர்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அதற்கு உண்டான பதில் சொல்வேன், அதை நான் சொல்லமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இரண்டு பொருள் பற்றித் தான் விடை தேவை. அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பதல்ல விலை ஏறி இருக்கிறது, கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைப் பற்றி அல்ல.

"பதுக்கப்பட்டிருக்கிறது, அதன் மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை, அதற்குத் துணையாக இருக்கிறது" என்ற இந்தக் குற்றச்சாட்டை மீண்டும் வலியுறுத்தப் போகிறீர்களா, திரும்பப் பெறப் "போகிறீர்களா ? வலியுறுத்துகிறேன் என்றால், ஆதாரம் இன்று இல்லை என்றாலும் நாளைக்காவது கூறுகிறேன் என்றாவது கூறுங்கள். அதைக் கூறாமல் பேசுவதாக இருந்தால் தொடர்ந்து பேசுவதற்கு இடம் அளிக்க முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : நான் அதற்கு விளக்கத்தைச் சொல்லித் தான் பதில் சொல்லமுடியும். குறிப்பிட்டு, ஒரே வார்த்தையில் பதில் சொல்ல வேண்டும் என்றால், அது என்னால் முடியாது, அது சரியும் அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்படி ஆரம்பத்திலேயே சொல்லி விட்டார்கள். விளக்கத்தைச் சொன்னபிறகுதான் குற்றச்சாட்டை சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லும்போது அதை ஆதாரத்தோடு நிரூபிக்கப்போகிறீர்களா, அல்லது திரும்பப் பெறப்போகிறீர்களா என்று தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். விளக்கம் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர் பேசிவிட்டபிறகு இவர்களுக்கெல்லாம் பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இடையிலே குறுக்கிட்டுச் சொல்லுகிறார்கள். இவர்கள் ஏதாவது சொல்லவேண்டுமென்று விரும்பினால், அவர் பேசி முடிக்கட்டும், முடிந்தபிறகு பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம் இந்தப் பேரவையினுடைய அமைதியை காப்பது பேரவைத் தலைவர் ஒருவரால் மட்டும் ஆகிவிடாது. மாண்பையும் பெருமையையும் காப்பதிலே பேரவைத் தலைவர் அவர்களைக் காட்டிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உண்டு. அதுதான் எனக்குத் தேவை. இந்த அவையிலே இராமமூர்த்தி அவர்கள் பேசிவிட்டார்கள். அவர்களுக்கு இவ்வளவு நேரம் விளக்கமெல்லாம் அளித்தாகிவிட்டது. அவர் கடைசியாக கூறிய குற்றச்சாட்டை வலியுறுத்தப் போகிறார்களா, அல்லது திரும்பப்பெறப் போகிறீர்களா ? இன்றைக்கு இல்லாவிட்டால் நாளை நான் ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன் என்று சொல்லப் போகிறார்களா ? இதற்குப் பதில் சொல்லி விட்டால் போதும். மறுபடியும் விளக்கம் தேவை இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்பொழுது நான் அமைச்சர் என்று சொன்னவுடனே உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வருகின்றார்கள். அமைச்சர் என்று.........................

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் : தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு முடிவைக் கொண்டு வந்து அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது உறுப்பினருடைய கடமை. அப்படி பதில் சொல்லத் தவறுவாரானால் அது பேரவைத் தலைவருடைய உத்திரவுக்குக் கீழ்ப்படியாத தன்மையாகும். சட்டப்பேரவை நடைமுறை விதிகள் 85-ன்படி தம்முடைய வாதங்களையோ, பிறருடைய வாதங்களையோ, அலுப்புத் தட்டுமாறு திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருந்தால் அதை தலைவர் அவர்கள................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதை எனக்கு நினைவுறுத்தத் தேவையில்லை.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : நீங்கள் கேட்டதற்குப் பதில் தேவை அதைத் தெரிவிப்பதுதான் இந்த மன்றத்தினுடைய பெருமையைக்காப்பாற்றுவதாகும். அந்த பெருமையை அவர் மீறுகின்ற வகையில் நடந்துகொள்ளும் போது அதன் மீது தங்களது தீர்ப்பை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் சொல்லியபோழுது நம்முடைய வருவாய்த்துறை, நிதித்துறை அமைச்சரவர்கள் பதுக்கல் இருக்கிறது என்பதைக் கூட நாங்கள் ஒப்புகொள்ளுகிறோம் என்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த முறையிலே பேசுவாரானால், அவருடைய குற்றச்சாட்டை நிரூபித்துக்காட்டுவதற்கான ஆதாரம் அவரிடத்திலே இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு அவர் மேலும் பேசுவதற்கு வாய்ப்பளிக்காத நிலையைத் தான் நான் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும். ஆகவே திரு. இராமமூர்த்தி அவர்களைக் கேட்பது, கடைசியாக நீங்கள் சாட்டிய குற்றச்சாட்டை நிரூபிக்கிறீர்களா, அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறீர்களா ? இந்த இரண்டு தவிர வேறு வார்த்தையை அவரிடத்திலே எதிர்பார்க்கவில்லை. வேறு ஏதாவது சொல்வாரானால் இந்தப் பேரவையினுடைய நிகழ்ச்சிகளைத் தடை செய்வதாக அவருடைய போக்கு, அவருடைய பேச்சு இருப்பதாகக் கருதி, அவர் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதி மறுக்கவேண்டிய நிலைதான் இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய குற்றச்சாட்டு, இந்த விவாதத்திலே நான் சொன்னதெல்லாம் பேரவைக்குறிப்பிலே பார்த்தாலே தெரியும். It is an inference.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (மணி அடித்து) இப்பொழுது திரு. முனு ஆதி பேசுவார்.

(திரு. க. இராமமூர்த்தி நின்று கொண்டிருந்தார்.)

திரு. முனு ஆதி : தலைவர் அவர்கள் உத்திரவு கொடுத்தாகிவிட்டது. 1969–70-ம் ஆண்டுக்கான..................

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் ....

மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அவர்கள் திருப்பித் திருப்பி ரிப்பீட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்ஸ்ட்ரக்ட் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்குத் தாங்கள் வந்துவிட்டீர்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன் குறுக்கீடு) நான் பாயிண்ட் ஆப் ஆர்டரிலே பேசிக் கொண்டிருக்கிறேன். நான் ஒன்றும் மரபுகளின் அடிப்படையிலே பேசவில்லை. தலைவர் அவர்கள் ஒன்று நிரூபியுங்கள், அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று தான் சொன்னார்கள். அவர் இரண்டையும் சொல்லவில்லை. சொல்லாமலும் இருக்கவில்லை. சட்டசபைக்கு வெளியிலும் மாமன்றத்து நிகழ்ச்சிகள் போகும். (குறுக்கீடு) என்னுடைய கருத்தை சொல்லி விடுகிறேன். அருள் கூர்ந்து நீங்கள் இரண்டில் ஒன்று செய்யுங்கள், ஒன்று இதை பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்புங்கள், அல்லது இன்னும் தாராளமாக இருக்கவேண்டுமென்றால் அந்த பேச்சை "எக்ஸ்பஞ்ச்" பண்ண உடனே உத்திரவிட்டு, நிகழ்ச்சிகளை மேலும் தொடரலாம் என்று மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். இல்லாவிட்டால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி இந்த மன்றத்தினுடைய உரிமைகளை, சலுகைகளை துஷ்பிரயோகம் பண்ணுவதற்கு நாம் இடம் கொடுத்து விடுவோமோ என்ற ஐயம் ஏற்பட்டுவிடும். அந்த காரணத்தினாலே எக்ஸ்பஞ்ச் பண்ணுங்கள். இல்லாவிட்டால் இதை பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் அங்கத்தினர் அவர்களை குற்றச்சாட்டை நிரூபிக்க முடியுமா என்று நான் கேட்டபொழுது, நாளைக்குக் கொண்டு வந்து ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன்" என்ற வார்த்தைகளை சட்ட மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். அவர்கள் முதலில் சொன்ன கருத்தை வலியுறுத்தி நாளைக்கு ஆதாரத்தைத் தெரிவிக்கப் போகிறார்களா, அல்லது எந்தக் காரணத்தினாலோ பயந்துகொண்டு சுற்றிவளைத்துப் பேசுகிறார்களோ என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொல்லிய குற்றச்சாட்டை நாளைய தினம் ஆதாரத்தோடு நிரூபிக்கவேண்டும். அதை அங்கத்தினர் அவர்கள் நிலைநிறுத்தப் போகிறார்களா ? இல்லையென்றால் தலைவர் அவர்கள் அதை அவர் வாபஸ் வாங்கிக்கொள்ளச் சொல்வதோ அல்லது எக்ஸ்பஞ்ச் செய்வதோ, எப்படி வேண்டுமானாலும் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கடைசியாகக் கேட்ட நேரத்தில், எந்தவிதமான முறையிலும் பதில் அளிக்காத நிலை ஏற்பட்டு, தன்னுடைய போக்கிலேயே அங்கத்தினர் போய்க்கொண்டிருந்தால், அவர் கூறிய குற்றச்சாட்டிற்கு ஆதாரம் அவரிடம் இல்லை என்பதை அவரே ஒப்புக்கொண்டுவிட்ட நிலை ஏற்பட்டுவிட்டது என்று நான் அறிவிக்க வேண்டியிருக்கும் என்று கூறியிருக்கிறேன். அதை அவர் மறுக்கவில்லை. ஆகவே, அவர் கூறிய குற்றச்சாட்டிற்கு அவரிடம் ஆதாரம் இல்லை என்று நான் கூறுகிறேன். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் அப்படியே நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்தால்தான், இந்த மன்றத்திலே உறுப்பினர் அவர்கள் எப்படி நடந்துகொண்டார் என்பதெல்லாம் அதில் இடம் பெற்றிருக்கும். ஆகவே, இதை எக்ஸ்பஞ்ச் பண்ண விரும்பவில்லை. நான் சொன்னதற்கு உறுப்பினர் அவர்கள் திட்டவட்டமாக, ஒரு முடிவுக்கு வந்து பதில் கூறாத நிலையில், அவர் கூறிய குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இல்லை என்ற முடிவை அவர் ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தான் அர்த்தம் என்பதை நான்கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, தயவு செய்து ஒரு விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்குப் பேசுவதற்கு கொடுக்கப்பட்ட நேரத்தை இப்படி வீணாக்குகிறார்களே என்பதைக் கருதி, எங்களுக்குப் பேசுவதற்கு கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1969–70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்...............

சில உறுப்பினர்கள் : பாயிண்டு ஆப் ஆர்டர்.

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மறுபடியும் சொல்கிறேன். பாயிண்டு ஆப் ஆர்டர் என்று எழுந்து, வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால், நான் வேறுவிதமாக நடந்துகொள்ளவேண்டிய நிலைமை உண்டாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பல முறை சொல்லியிருக்கிறேன். திரு. மார்ட்டின் அவர்கள் சட்டம் படித்தவர். பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொன்னால், சட்டமன்றம் நடைபெறுவதற்கு சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளை நமக்கு நாமே வகுத்துக்கொண்டிருக்கிறோம். சட்டமன்றத்தில் நடக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி எந்த விதத்தில் எந்த விதிமுறைக்கு மாறாக நடக்கிறது என்பதை மட்டும் சுட்டிக்காட்டுவதாயிருந்தால், திரு. மார்ட்டின் அவர்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பலாம். கடைசியில், அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லாமல் வேறு ஏதாவது பற்றிப் பேசினால், நான் வேறுவிதமாக நடந்துகொள்ள வேண்டிய நிலைமை உண்டாகும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் ஸார், தங்களுடைய பெர்மிஷனோடு கேட்க விரும்புகிறேன். கனம் உறுப்பினர் திரு. முனு ஆதி அவர்கள் பேசும்பொழுது நேரத்தை வீணாக அடித்தார்கள் என்ற அளவில் சொன்னார்கள். தாங்களும் அவையில் இருக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நேரத்தை வீணடித்தார்கள் என்று சொன்னது இந்த அவையை அவமதிப்பதாகாதா என்பது பற்றி தங்கள் ரூலிங்கைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முனு ஆதி மட்டும் அப்படிக் கூறவில்லை. நானே கூட கூறியிருக்கிறேன். பேரவையின் காலம் அருமையான காலம். அதை வீணாக அடிக்கக்கூடாது என்பது தான் கருத்து. இதில் நான் கூறினேன், அவர் கூறினார் என்று குற்றம் சாட்டுவதற்கு ஒன்றுமில்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நாமெல்லாம் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்து ஓரளவுக்கு இன்புற்றாலும், எங்களுடைய வழிகாட்டி அறிஞர் அண்ணா மறைந்துவிட்ட இந்த நேரத்தில், அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, எங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு முன்னே செல்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டில் நடமாடும் பல்கலைக்கழகமாக இருந்து, இரண்டு ஆண்டு காலம் இந்த நாட்டின் ஆட்சித் தலைவராக இருந்து, ஏழை எளிய மக்களுக்கு நல்லதைச் செய்து, திடீரென்று மறைந்துவிட்டார். அந்த உத்தமருக்கு நாம் செய்யவேண்டிய தலையாய கடமை அறிஞர் அண்ணாவின் நினைவு மண்டபத்தை உருவாக்கவேண்டும், அதில் தமிழ் ரிஸர்ச் சென்டர் என்று தமிழ் ஆராய்ச்சி கூடத்தை உருவாக்கவேண்டும் என்று நான் தங்கள் மூலம் நம்முடைய முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன். வெளிநாடுகளிலிருந்து வருகிற மாணவர்களும், மற்றும் நம் நாட்டில் இருக்கிற தமிழ் அறிஞர்களும் வெளி உலகத்து அறிஞர்களும் நம்முடைய அண்ணா வளர்த்த சமூக, கலை, அரசியல், இலக்கிய பண்பாட்டினை படித்துப் பயன்படுத்திக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்பொருட்டு உடனே அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு மண்டபத்தை உருவாக்கி, அதிலே தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை அமைக்க வேண்டும் என்று நான் நம்முடைய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். எதிர்க் கட்சித் தோழர்கள் நம்முடைய நிதிநிலை அறிக்கையை பற்றாக்குறை பட்ஜெட் என்று சொல்லிக்கொண்டார்கள். உண்மையிலேயே பற்றாக்குறை பட்ஜெட் என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் உங்களுடைய மத்திய அரசு போட்டிருக்கக்கூடிய பட்ஜெட் பட்டினி பட்ஜெட். நாங்கள் போட்டிருப்பது பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும்.......

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மத்திய சர்க்கார் போட்டிருக்கிற பட்ஜெட் பட்டினி பட்ஜெட் என்று இந்த அவையிலே மெம்பர் அவர்கள் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதா என்று தாங்கள் அருள் கூர்ந்து தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பட்டினி பட்ஜெட் என்று சொல்ல வேண்டாம். வேண்டுமானால் வரி போடப்பட்டிருக்கிற பட்ஜெட் என்பதாகக் கூறலாம்.

திரு முனு ஆதி : தலைவர் அவர்களே, தங்கள் உத்தரவுக்கு நான் கட்டுப்படுகிறேன். எனக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்ற எண்ணத்தோடு தான் பேசினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் மற்ற அவைகளின் நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு பேசலாம். ஆனால், அதைத் தாக்கியோ, குற்றம் சாட்டியோ பேசக்கூடாது. வரி போடப்பட்டிருக்கிற பட்ஜெட் என்று அந்தக் கருத்தையே வேறு வகையில் பேசலாம்.

திரு. முனு ஆதி : மத்திய சர்க்கார் தங்கள் பட்ஜெட்டில் போட்டிருக்கிற வரிகள் மூலம் தமிழகத்திலுள்ளவர்களையும், இந்திய துணைக்கண்டத்திலுள்ளவர்களையும் பட்டினியில் ஆழ்த்திவிட்டது. மத்திய சர்க்கார் ஏழை எளியவர்கள் உபயோகிக்கும் பண்டங்களின் மீது வரி போட்டிருக்கிறது. ஆனால், எங்கள் பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும், ஏழை எளியவர்களுக்கு நல்லது செய்யும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

(திரு. சு. துரைசாமி தலைமை)

உறுப்பினர் ராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று கூறினார். அந்தப் புண்ணியவான்கள் ஆட்சியில்தான் மண்ணெண்ணெய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்களை வழிகாட்டியாகக் கொண்ட இந்த அரசு புகுமுக வகுப்பு வரையிலும் இலவசக் கல்வி அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. ஏழைகளுக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே அறிவு விளக்கை ஏற்றிவைத்திருக்கிறது. மத்திய சர்க்கார் மாதிரி மண்ணெண்ணெய்க்கு வரிப்போட்டு ஏழைக் குடும்பங்களின் விளக்கை அணைக்கவில்லை. உறுப்பினர் அவர்கள் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. பதுக்கல் செய்யப்படுகிறது என்றெல்லாம் சொல்வதில், என்ன நியாயம் இருக்கிறது என்பது தெரியவில்லை.

புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி என்ற காரணத்தினால் 7,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதே போன்று இங்கே தமிழக அரசு விவசாய பம்பு செட்டுகளுக்கு நல்ல முறையில் மின் இணைப்புத் தந்திருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கம் என்ன செய்கிறது ? ரூ. 290 கோடிக்கு நோட்டு அடிக்கப் போகிறார்கள். படி அரிசித் திட்டத்தின் மூலம் விலை வாசியைக் குறைக்க நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அவர்கள் நோட்டு அச்சடித்து இன்பிளேஷன் உண்டாக்கிவருகிறார்கள். அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருப்பவர்கள், எதிர்கட்சியிலுள்ளவர்கள், இதற்காக கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்களா ? அல்லது இதைப்பற்றி விமர்சனம் செய்தாவது வெளியில் பேசியிருக்கிறார்களா ? அல்லது இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்களா ? என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். "உண்மையாக மக்கள் எழுப்புகிற குரலைத்தான் இங்கே பேசுகிறோம், அரசாங்கத்திலுள்ள குறைப்பாடுகளை, ஊழல்களை எடுத்துச் சொல்கிறோம், அதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. ஆட்சியில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி பேசுகிறோம் என்றால், குறைகளை திருத்திக் கொள்ளவேண்டும் என்கின்ற மனப்பான்மையில் தான் பேசுகிறோம்" என்றெல்லாம் பெருந்தன்மையாகப் பேசிக்கொள்கிறார்கள். மத்திய சர்க்கார் இப்பொழுது வரி போட்டிருக்கிறார்கள். ரூ. 290 கோடிக்கு நோட்டு அச்சடிக்கப்போகிறார்கள். நாங்கள் இங்கே விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் அங்கே விலைவாசிகள் ஏறத்தக்க முறையில் வரிகளைப் போட்டு, நோட்டுக்களை அச்சடித்து பணப்புழக்கத்தை அதிகப்படுத்துகிறார்கள். அதைப்பற்றி "கண்டிக்கிறோம்" என்று கூறுவதற்கு அவர்களுக்கு தைரியம் இல்லாவிட்டாலும், வருத்தப்படுகிறோம் என்று கூட சொல்லவில்லை.

அடுத்தபடியாக, லாட்டரி சீட்டுகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். ராஜஸ்தானத்தில் இருப்பதை விட்டுவிட்டு, மகாராஷ்டிரத்தில் இருப்பதை விட்டு விட்டுப் பேசுகிறார்கள். எனக்கு ஒரு கற்பனை ஆசை தோன்றுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ராஜஸ்தான் மாகாணத்தில் கூப்பிட்டு, "அங்கே லாட்டரிச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகவில்லை, நீங்கள் கொஞ்சம் வந்து விளம்பரப்படுத்தவேண்டும்" என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டால் அவர்களுக்கு எவ்வளவு தர்மசங்கடமான நிலை ஏற்படும் ? அவர்கள் முன்பிருந்த நிலையை மாற்றிக்கொள்ளவேண்டியிருக்கும் என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படிக் கூப்பிட்டால், நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

திரு. முனு ஆதி : அவர் அப்படிச் சொன்னால், காங்கிரஸ் கட்சியில் வேறுபாடு இருக்கிறது. இரண்டு முனைகள் இருக்கின்றன என்று கருத வேண்டிய நிலைமை ஏற்படும். மேலிடத்தில் ஒரு முடிவு செய்யப்பட்டால், அது கீழ் மட்டம் வரையில் வந்து, அந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்படும் என்று நாங்கள் கருதுகிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஜனநாயக முறைப்படி வேறுபட்ட கருத்தைக் கூறுவதற்கு உரிமை இருக்கிறது. பாராளுமன்றத்தில் 25 பேர்கள் இருக்கிறார்கள். வேண்டுமானால் ஆட்சேபணை செய்து பேசிக் கொள்ளலாம். அதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது.

திரு. முனு ஆதி : அந்தந்த மாநிலத்திலுள்ள பிரச்சினையைப் பொறுத்துச் சொல்வதற்கு, கண்டிப்பதற்கு உரிமை உண்டு என்ற பரந்த நண்பகல் ஜனநாயகத்தை நான் பாராட்டுகிறேன். அப்படியென்றால், சுதந்தராக் கட்சி மொழிப் பிரச்சினையில், மாநிலங்களுக்கு சுதந்தரம் 12-00 கொடுத்தபோது, அதைப் பற்றி காங்கிரஸ் கட்சித் தோழர்கள் கிண்டலும், கேலியுமாகப் பேசி இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு நிரந்தரமான கொள்கை கிடையாது. இவர்களுக்கு ராஜஸ்தானில் டிக்கட்டு விற்கவேண்டும் என்றால், அதைப்பற்றி ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இவர்கள் தமிழ்நாடு லாட்டரி சீட்டு நடத்துகிறது என்று கண்டிக்கிறார்கள். அங்கே ஆதரிக்கவும், இங்கே கண்டிக்கவும் வேண்டும். இப்படிப்பட்ட இரண்டுங்கெட்டான் நிலை எங்கள் ஆட்சிக்கும் இல்லை. எங்கள் கட்சிக்கும் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆமாம், அகில இந்தியாவிலும், இராஜஸ்தானிலும், எங்கிலும் இவர்கள் இருக்கிறார்கள்!

திரு. முனு ஆதி : தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த ஆண்டுகளில் கண்ட பலன்கள் என்ன ? ஜனநாயகத்தைப் பெருந்தன்மையோடு பாதுகாத்து வந்திருக்கிறது. அவர்கள் ஆட்சியில் ஒரு பிரச்சினை என்றால், அதைத் தீர்க்க, இன்னொரு காங்கிரஸ் உறுப்பினரோ அல்லது வேறொருவருடைய பின்னால் போனால்தான் அதைத் தீர்க்க முடியும். அந்தக்காலத்தில், போலீசார் தொப்பிக்குள் வைத்துக்கொண்டு தான் "நம் நாடு", "முரசொலி" போன்ற பத்திரிகைகளைப் படிக்க முடியும். அவ்வளவு ஜனநாயகச் சுதந்தரம். அவ்வளவு உரிமை கொடுத்த அரசு அவர்களுடையது. எங்கள் ஆட்சியில், யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். "நவசக்தி" யையும் அவர்கள் பகிரங்கமாக படிக்கலாம். சர்க்கார் ஊழியர்களும், வேலையில் இருந்துகொண்டே காங்கிரஸ் உறுப்பினர் என்கலாம். அவ்வளவு ஜனநாயக விரிவு மனப்பான்மையை உண்டாக்கியவர்கள் எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள். சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநாட்டப் பொறுப்பேற்று இருக்கிறவர்கள். ஆனாலும், மதுரையில் நடந்தது என்ன ? கொடுத்த சம்மனை வாங்கமாட்டேன் என்று சொல்கிறார் ஒருவர். அந்த ஒரு குற்றத்திற்காகவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். சம்மனை வாங்கமாட்டேன் என்கிறார். பிறகு கோர்ட்டில் ஆஜராக மாட்டேன் என்கிறார். நீதி மன்றத்தை அவமதிப்போம் என்கிறார். அதற்கெல்லாம் ஒரு வருத்தம் தெரிவித்தார்களா இவர்கள்? அதைப்பற்றி ஒருவார்த்தை சொன்னார்களா? கிடையாது போலீஸ்வானை குண்டர்கள் வழிமறித்து இருக்கிறார்கள். இவ்வளவு பெருந்தன்மையோடு முதல் அமைச்சர் இருந்தார்களே ! குண்டர்கள், ஆட்சிக்கு குந்தம் விளைவிக்க, கேடு விளைவிக்க வேண்டும் என்று நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள். இதை நாம் உணர்வோம். சம்மன் வாங்கமாட்டேன் என்று சொன்ன அப்போதே, சம்மனை நிராகரித்தவுடனேயே அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

[1969 மார்ச் 5

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதிலே, இந்த கேஸ் கோர்ட்டிலே இருக்கக்கூடிய விஷயம். உங்கள் ஈ. வே. ரா. செய்தபோது நடவடிக்கை எடுத்தீர்களா ? இது ஒன்றும் புதிது கிடையாது. உங்கள் தந்தை, குரு நாதர், பேசியதெல்லாம் கண்டித்தீர்களா ?

திரு. முனு ஆதி : அவர் தங்களோடு பக்கபலமாக இருந்து ஓட்டு சேர்க்கும் போது ஒன்றும் தெரியவில்லை. இங்கே இருக்கும் போது சுட்டிக் காட்டுகிறீர்களாக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பக்க பலம் என்கிறார்கள். அதை நிரூபிக்க வேண்டும்.

திரு. முனு ஆதி : குண்டர்கள் போலீஸ் வானை இடைமறித்து........

திரு. பி. ஜி. கருத்திருமன் : குண்டர்கள் தாக்கியிருக்கிறார்கள் என்கிறார்கள். கேஸ் இருக்கும் நிலையில், ஒத்திவைப்புத் தீர்மானம் கைவிடப் பட்ட நேரத்தில், இதைப்பற்றிச் சொல்லுகிறார்கள்.

திரு. முனு ஆதி : நான் எதையோ சொல்லுகிறேன். எதிர்க் கட்சி தலைவர் எதையோ எண்ணிக் கொண்டு சொல்லுகிறார்கள். நான் சொல்வது நடுத்தெருவிலே போலீஸ் வண்டியை குண்டர்கள் மறித்திருக்கிறார்களே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறேன். இவர்கள் எடுக்க மாட்டார்களா ? எங்கள் திரு. எ.வி.பி. ஆசைத்தம்பி ஒரு சின்ன புத்தகத்தை எழுதினார் என்று அவருடைய தலை முடியை, உள்ளே என்ன இருக்கிறது என்று முடியை ஆராய்ந்து பார்த்தார்கள் இவர்கள். எங்கள் கலைஞர் அவர்களை எங்கோ, இடம் தெரியாமல் வைத்து, பாளையங்கோட்டைச் சிறையில் இருட்டறையில் வைத்தார்கள். இவர்கள் சட்டம், ஒழுங்கு இவற்றை நேர்மையாகச் செய்தார்கள். நாங்கள் தான் செய்யவில்லை ?

திரு, பி. ஜி. கருத்திருமன் : இப்பொழுது புரிகிறது. எங்களுக்கெல்லாம் செய்யப்பட்டது. ஆகவேதான் நாங்கள் இப்பொழுது திட்டமிட்டு ஆட்சிக்கு வந்தவுடன் இப்படிச் செய்கிறோம் என்று ஒத்துக் கொள்கிறார்கள்.

திரு. முனு ஆதி : எங்கள் வழி அதுவல்ல. எங்கள் அண்ணன் அடித்தாலும் உதைத்தாலும் வாங்கிக்கொள்ளுங்கள். அடிவாங்கியவன்தான் என் தம்பி" என்று சொன்னவர் எங்கள் அண்ணா. "கம்பையும், கத்தியையும் எடுங்கள்" என்று சொல்பவர்கள் நீங்கள். அடிபட்டுக் கொண்டு வந்தவனே என் தம்பி என்று பழக்கப்பட்டு, அடிவாங்கும் பாசறையில் வாழ்ந்தவர்கள் நாங்கள். ஆகவே, கோர்ட்டை அவமதிப்போம் என்று சொல்லி, குண்டர்கள் போலீஸ் வண்டியை வழி மறிக்கும் நிலையில், முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லுவேன், இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

THIRU T. MARTIN : On a point of order, Speaker Sir, the hon. Member is now referring to an incident which happened yesterday in Madurai. It is the subject matter of court proceedings. Rules 67 (i) and 68 (viii) of the Assembly Rules clearly say that it shall not relate to any matter which is under adjudication by a court of law having jurisdiction in any part of India. The rule specifically says that, when a matter is pending before a court, there should be no discussion on or reference to it. What he speaks is directly hit by the rule. Therefore I want a ruling from the Chair whether the Member should again refer to it.

1969 மார்ச் 5]

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சு. துரைசாமி) மாண்புமிகு உறுப்பினர் கோர்ட்டில் இருக்கும் கேசைப்பற்றிச் சொல்லவில்லை. போலீஸ் ஜிப்பில் போகும்போது, குண்டர்கள் வழிமறித்து இருக்கிறாகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா என்கிறார். ஆகவே அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் வராது என்று தெரிவிக்கிறே.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த இன்ஸிடெண்ட் பற்றி ஒத்தி வைப்பு தீர்மானத்தைத் தள்ளி வைத்த பிறகு அதைப்பற்றிப் பேசலாமா என்பதுதான் பிரச்சினை.

திரு. முனு ஆதி : ஆகவே, இறுதியாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, சட்டம், ஒழுங்கு, நேர்மை, அமைதி என்று சொல்லிக்கொண்டே, தவறுகளுக்குப் பக்க பலமா இருப்பவர்களுக்கு, அது யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். கோர்ட் சம்மனை, அவமதிப்பது என்றால், இதற்கெல்லாம் நேரிடையாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சபாநாயகர் அவர்களே, 1969-70-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கிட்டத்தட்ட 19·5 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. இதைச் சரிக்கட்ட நாம் நிதி ஆணைக் குழுவின் இறுதி முடிவை எதிர்பார்த்திருக்கிறோம். அது போக, திட்டக் குழுவின் மூலமாக நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் அளவு 201 கோடிதான். ஆனால் அதில் நாம் கொடுக்க வேண்டிய கடனுக்காகக் கொடுப்பதைக் கழித்தால் 148 கோடியே கிடைக்கக் கூடிய நிலைதான் இருக்கிறது. நாம் கொடுக்க வேண்டிய கடன் தொகையை ஒத்திவைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்த நிலையில் மத்திய சர்க்கார் இதற்கு இடம் கொடுப்பார்களா என்பதில் ஐயப்பாடு இருக்கிறது. இந்த நிலையில், முழுமையாக துண்டு விழும் தொகையை எப்படிச் சரிசெய்ய முடியும் என்று கவனிக்க வேண்டும்.

சீன ஆக்ரமிப்பு, பாகிஸ்தான் ஆக்ரமிப்பு போன்ற நேரங்களில், நம்முடைய வரவு-செலவு திட்டம் சிக்கனமாக நடக்கவேண்டும் என்று செயல்பட்டோம். அதன் மூலம், முக்கியமாக நிர்வாகச் செலவை குறைக்க வேண்டிய காரியங்களைச் செய்தோம். நாம் இன்றைக்கு காரசாரமாக பேசுவதை விட நம்முடைய வருங்காலம் ரொம்பவும் கஷ்டமாக இருக்கும் என்ற நிலையை உணர்ந்து எப்படிச் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டுமோ, குறைக்க வேண்டுமோ அந்தவகையில் செய்து, செயல்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். உடனடியாக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியைப் போட்டு, இன்ன கொள்கை அடிப்படை என்று வைத்து, இத்தனை சதவிகிதம் செலவைக் குறைக்க வேண்டும், நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டும் என்று ஒரு திட்டம் வகுத்து, அந்த வகையில் எக்ஸ்பர்ட் கமிட்டி செயல்பட்டால், இரண்டு மாதத்தில் நாம் சிக்கனத்தைக் காட்டி எந்த வகைகளில் அளவுக்கு மிஞ்சி செலவு செய்கிறோம் என்பதைக் கண்டு குறைத்துக் கொண்டு, அதன் மூலம் எவ்வளவு துண்டு விழுந்திருப்பதைச் சரிக்கட்டலாம் என்றும் கவனிக்கலாம்.

இன்றையதினம் பிளாக்குகளில் பணம் விரயமாகிக் கொண்டிருக்கிறது. பிளாக்குகளில் உள்ள எல்லா ஜீப்புகளையும் எடுத்துவிட்டால் நலமாக இருக்கும். வருவாயைப் பெருக்குவதற்கு முன், தேவையில்லாத செலவுகளை ஒழித்து சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இப்பொழுது பஸ் போக்குவரத்து நாட்டுடமையாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம் தான். ஆனால் இதில் நமக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம்

ஏற்பட்டது, ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு கொள்கைக்காக நாம் பட்டினி இருக்கின்ற நேரத்தில், இந்தத் திட்டத்தை மேற்கொண்டும் நடந்த வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. பல பேர் இதை நடத்தியிருக்கிறார்கள், பலர் லாபத்தை அடைந்திருக்கிறார்கள். அதை இப்பொழுது ஒருவருடைய தலைமையின்கீழ் நடத்த முற்படும்போது மாதந்தோறும் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் நம்முடைய மூலதனமே கரைந்துகொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் அவர்கள் போக்கு வரத்துத் துறையிலே ஏற்படுகின்ற நஷ்டத்தைப் பற்றிக் கூறினார்கள். முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சியின் கையில் இது இருந்தபொழுது வருடம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்படுவதைக் குறித்து, அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதுபற்றி விளக்கிச் சொன்னார்கள். " தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற போக்குவரத்தை எடுத்து நடத்த வேண்டுமென்பது நோக்கம் அல்ல. என்ன காரணம் என்றால், பஸ்களை அரசாங்கமே நடத்துவதன் மூலம் வரி போடாமல் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கக்கூடிய நல்ல திட்டமாக இருக்கும் என்பதற்காகத்தான் இதை அரசு நடத்துகிறது" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி நல்ல பாதையை வகுத்துத் தந்தார்கள். அந்தப் பாதையில்தான் இதை அரசு நடத்துகிறது. முன்பு நஷ்டம் 60 லட்சம் என்றிருந்ததை 40 லட்சம், 20 லட்சம் ஆகக் குறைத்துக்கொண்டே வந்து, இந்த ஆண்டு நஷ்டமே இல்லையென்ற முறையில் இருந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனாலும், நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டுதான் வருகிறது. 19½ கோடி ரூபாய் துண்டுவிழும் நேரத்தில் நாம் இவற்றையெல்லாம் பற்றி யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, வருவாயைப் பெருக்க பல வழிகள் இருக்கின்றன. சாதாரணமாக கமிஷன் கடைகள் ஆங்காங்கே இருக்கின்றன. அங்கெல்லாம் சேல்ஸ்டாக்ஸ் வசூல் செய்ய முடியாமல் இருக்கிறது. ரெகுலேட்டட் மார்க்கெட் வைத்து சட்ட விதிகளை அனுசரித்து அமல் நடத்தினால் அதன் மூலமாக சேல்ஸ்டாக்ஸ் வசூல் அதிகரிக்கும்.

தவிர, வேளாண்மையைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூறலாம் என்று விரும்புகிறேன். வேளாண்மை வளர்ச்சியடைவதற்கு இறைவைப் பாசனம் அடிப்படை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் அழுத்தந்திருத்தமாக ஏற்றுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 1 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். இந்த இரண்டு ஆண்டுகளில் 1 லட்சம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின் இணைப்பு கிடைத்திருக்கிறது. மின்சார போர்டில் போய் கணக்கெடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒரு லட்சம் மனுக்கள் தான் பைசலாகியிருக்கின்றன. ஆகவே, இன்னும் ஒரு லட்சம் மனுக்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். போட்ட மனுக்கள் பூராவுக்கும் மின் இணைப்புக் கொடுக்காததால் தான் நாம் எதிர்பார்க்கக்கூடிய முன்னேற்றம் அடைய முடியவில்லை. நாம் பேப்பர் மூலமாகத்தான் வெற்றியடைந்திருக்கிறோமே தவிர, செயல்முறையில் இன்னும் வெற்றியடையவில்லை. விவசாயிகள் ஐந்து வருஷங்களாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டு வருஷங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, எத்தனை மனுக்கள் கொடுக்கப்பட்டன? எத்தனை மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. எத்தனை மனுக்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

அடுத்தபடியாக, பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை மேலே கொண்டு வருவதற்கான திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் "ரிக்ஸ்" மூலமாக பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை மேலே எடுத்து உபயோகப் படுத்திக்கொள்ளலாம். ஆந்திரா போன்ற செழிப்பான பகுதிகளிலும் " ரிக்ஸ் " கருவிகளை வாங்கி உபயோகிக்கிறார்கள். நம்முடைய அரசும் அதற்காக ஒரு குழுவை நியமித்து, எங்கெங்கே தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, ரிக்ஸ் மூலம் தண்ணீரை எடுத்தால் விவசாயத்திற்கு அதிக நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தவிர, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து அச்சன்கோவில் ஆறு என்ற ஆறு உற்பத்தியாகி கேரள மாநிலத்தில் பாய்ந்து கடலில் கலக்கிறது. இந்த ஆற்றினால் கேரளாவிற்கு யாதொரு பலனும் இல்லை. இந்த ஆறு கேரள மாநிலத்திற்குச் சொந்தமானது. கேரள மாநிலம் இந்த நதியின் தண்ணீரை நமக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. நாம் ராயல்டி மட்டும்தான் கொடுக்கவேண்டும். ஆகவே நமது அரசாங்கம் கேரள மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்த ஆரம்பித்தால் கேரள மாநிலம் நமக்குத் தண்ணீர் தர தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நாம் வெறுமனே மத்திய சர்க்காரைக் குறை சொல்லிப் பயன் இல்லை. மத்திய சர்க்காரும் அதிகமான வரிகளைப் போட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் நிதியமைச்சராக உள்ள திரு. மொரார்ஜி தேசாய் அவர்களே, வரி போடும்போது, தன் சக அமைச்சர்களைக் கூட கலந்து செய்யவில்லை என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. ஆகவே, மத்திய சர்க்காரிலும் சிக்கல் இருக்கிறது. நாம் அவர்களைக் குறை சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. நாம் செய்ய வேண்டிய திட்டங்கள் எல்லாம் நம்மிடமே இருக்கின்றன. முதலில் நாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் அதிகமாக தண்ணீரை உற்பத்தி செய்ய வேண்டும். அச்சன்கோவில் ஆறு போன்றவற்றிற்கு ராயல்டி கொடுப்பதன் மூலம் நமக்கு நிறைய தண்ணீர் கிடைக்கும். நாம் இப்பொழுது பெரியாறு திட்டத்திற்கு ராயல்டி கொடுக்கிறோம்.

தற்போது விவசாயிகளுக்கு நில அடைமான பாங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்கப்படுகிறது. மற்றும் அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாகவும் கடன் கொடுக்கப்படுகிறது. அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது ? யார் எல்லாம் அதற்கு யோசனை சொல்கிறார்கள் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்றால், சட்டசபையில் அதைப்பற்றிய அறிக்கையே இல்லை. அதனுடைய ரிப்போர்ட் என்ன என்றுகூட நமக்குத் தெரியவில்லை. அதனுடைய ரிப்போர்ட் என்ன ? அதில் நான்-அபிஷியல்ஸ் இருக்கிறார்களா என்பதுபற்றிய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷனில் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நான்-அபிஷியல் மெம்பர்களும் இருக்கிறார்கள். விவசாயிகளின் சார்பில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திரு. எ. கே. தங்கவேல் முதலியார் அவர்களும், மாயவரத்தைச் சேர்ந்த திரு. ஜி. ராமச்சந்திரன் அவர்களும் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். தொழில் துறை சார்பில் திருச்சியைச் சேர்ந்த திரு. சின்னப்பா அவர்களும், மற்றும் விவசாய டைரக்டர், விவசாய இலாகா காரியதரிசி எல்லாம் அதில் இருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அறிக்கை சட்டசபையில் வரவில்லை என்பதுதான் குறை.

அடுத்தபடியாக ஷெட்யூல்ட் பாங்க் அல்லது கமர்ஷியல் பாங்க் மூலமாகவும் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாகவும் கடன் வாங்கலாம் என்று சொல்லப்படுகிறது. இன்று அரசாங்கம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 14 திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். எங்கள் பகுதி கரும்பாலைத் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதினான்கு திட்டங்

களுக்கும் சோஷல் கண்ட்ரோல் என்ற பேரால் கமர்ஷியல் பாங்க் மூலமாக கடன் வாங்கிக் கொள்ளலாம். அதனால் உடனடியாகக் கிடைக்கக் கூடிய நன்மை உணவு உற்பத்தி பெருவதுதான்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : நில அடைமான வங்கிகளின் மூலமாக, அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாக, தனிப்பட்ட பாங்குகளின் மூலமாகக் கடன் கொடுக்க வசதி செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திற்கு பரோடா பாங்க் மூலமாகக் கடன் கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. (மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனரா பாங்க்) என்னுடைய கவனம் பரோடா பாங்க் என்பது. கனரா பாங்க்காக இருந்தால் திருத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கூடுதலாக ஒரு விவரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நெல்லை மாவட்டத்திற்கு கமர்ஷியல் பாங்க் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்றபோது இந்த அரசாங்கம் 25 லட்சம் ரூபாய் அளவுக்கு உத்தரவாதம் அளித்து-காரண்டி கொடுத்து கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : விளக்கங்களுக்கு நன்றி. நான் ப்ராஜெக்டுகளுக்கு இந்த பாங்குகளின் மூலம் கடன் உதவிபெற வேண்டும் என்றுதான் சொன்னேன். தனிப்பட்டவர்களுக்கு, கம்பெனிகளுக்கு இப்போதே கொடுக்கப்படுவதை வரவேற்கிறேன். ப்ராஜெக்டுகளுக்கு கடன் வாங்கவேண்டும். இந்தியன் பாங்க் கொடுக்கத் தயாராய் இருக்கிறது. 3 கோடி வரை எதிர் பார்க்கலாம், அரசாங்கம் கேட்டால் கொடுக்கத் தயார் என்கிறார்கள். இது பற்றி முதலமைச்சர் அவர்களிடம் கூட கொடுத்திருக்கிறேன். இது பற்றியும் கவனிக்கவேண்டுமென்று என் வேண்டுகோள்.

அடுத்தபடியாக பூச்சி மருந்துக்கு இதுவரை கொடுக்கப்பட்டு வந்த மானியம் 38 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போதுதான் விவசாயிகள் பூச்சி மருந்தை உபயோகப்படுத்த முன்வந்திருக்கிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மானியத்தைக் குறைத்திருப்பதற்கு வருந்துகிறேன். மேலும், பூச்சி மருந்து தெளிப்பதில் ஏரியல் ஸ்ப்ரேயர் உபயோகப்படுத்துவதை நான் விரும்பவில்லை. அதனால் நம்முடைய பணம் பூராவும் வடநாட்டு வியாபாரிகளுக்கே போகிறது. கிட்டதட்ட தமிழ்நாட்டுப் பணம் 50 லட்சம் ரூபாய் ஏரியல் ஸ்ப்ரேயர் மூலமாக விரயம் ஆகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். தனிப்பட்ட நான்கைந்து பேர்கள் தான் லாபம் அடைகிறார்கள். இதற்குப் பதிலாக பவர் ஸ்ப்ரேயர்கள் மூலமாக ஆங்காங்கு பூச்சி மருந்து தெளிக்கலாம். ஏரியல் ஸ்ப்ரேயர் நல்லது அல்ல என்று விவசாய இலாக்காவே எழுதியிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆகாய விமானம் மூலம் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பூச்சி மருந்து தெளிப்பதை விவசாயிகள் பரவலாக வரவேற்கிறார்கள். திரு சுப்பையா முதலியார் அவர்களுடைய மாவட்டத்தில் சென்ற ஆண்டே மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இப்போதுதான் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். இதற்கு மத்திய அரசாங்க சகாயத் தொகை கிடைக்கிறது. அடுத்து பூச்சி மருந்துக்கு கொடுத்து வந்த மானியத்தை 30 சதவீதமாக என் குறைத்தார்கள் என்றார்கள். ஆரம்பத்தில் பூச்சி மருந்து தெளிக்க ஒரு தூண்டுகோலாக இருக்கட்டும் என்று மத்திய அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்தது. இப்போது அதிகமான பேர்கள் தாங்களே பூச்சி மருந்து தெளிக்க முன்வருவதால் இதையே எடுத்துவிடலாம் என்றார்கள். நாங்கள் 35 சதவீதத்தை இவ்வாண்டு 30 சதவீதம் ஆக்குவது; அடுத்த ஆண்டு 25 சதவீதம் ஆக்குவது என்பதாகப் படிப்படியாக 10 சதவீதம் வரை குறைத்து 10 சதவீதமாவது கிடைத்துக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டும் என முடிவு எடுத்தோம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : ஏரியல் ஸ்ப்ரேயர் வேண்டாம் என்று சொல்லவில்லை. அது சில பகுதிகளுக்குத் தான் பயன்படும். மத்திய சர்க்கார் திட்டம் வகுத்து—ஏரியல் ஸ்ப்ரேயருக்குத் தான் பணம் கொடுப்போம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இந்த இந்தக் கம்பெனிகளுக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தாக்கீது கிடையாது. கம்பெனிகள் மனுச் செய்துகொள்கிறார்கள். யாருடைய தொகை குறைவாக இருக்கிறதோ, யார் ஒழுங்காக வேலை செய்கிறாரோ அவருக்கு நாம் ஆர்டர் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஏரியல் ஸ்ப்ரேயர் அதிகரித்து வருகிறதே தவிர குறையவில்லை. என்னுடைய பகுதியில் சில பஞ்சாயத்து யூனியன்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். விஷயத்தை விளக்கியவுடன் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். இதற்கு விவசாய இலாக்கா எதிர்ப்புத் தெரிவித்ததாகச் சொல்லுவதும் சரியல்ல.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மரங்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளுக்கு இவை பயன்படவில்லை.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : எங்கே குளம் குட்டை இருக்கிறது, எங்கே மரங்கள் அடர்த்தியாக இருக்கிறது என்று பார்த்து பச்சை, வெள்ளை, சிவப்புக் கொடிகள் கட்டிக்கொண்டு, ப்ச்சை கொடி பகுதியில் இருந்து வெள்ளைக் கொடி பகுதி வரை தெளிக்கிறார்கள். மரங்கள், குட்டைகள் உள்ள பகுதி சிவப்புக்கொடி காட்டுவதனால் அங்கே தெளிப்பதில்லை. விவசாய இலாக்கா தான் இதைச் செய்கிறது. ஆகவே, அவர்கள் எந்த இடத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : அதுபற்றிய விவரத்தை நான் நேரம் இல்லாத காரணத்தினால் தனியாகச் சொல்கிறேன். பவர் ஸ்ப்ரேயர்களும் வேண்டும்.

கல்வி சம்பந்தமாக ஒரே ஒருவார்த்தை. பீ.யூ.சி. வரை இலவசக் கல்வி அளித்திருப்பது போல "ப்ரீ-டெக்" கோர்சுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும். இல்லை என்றால் பி.யூ.சி. படித்துவிட்டு ப்ரீ-டெக் படிக்கும் படியான நிலைமை வரும். இப்போது இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டு, இரண்டு கோர்ஸ் படித்தவர்களும் மேல்படிப்புக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே ப்ரீ-டெக் கோர்சுக்கும் இலவசக் கல்வி என்ற முறையை அறிவித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சு. துரைசாமி) இன்னும் அதிகமான பேர்கள் பேசவேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் 10 நிமிடத்தில் அவரவர்களுடைய பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

***திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பில் மேலும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறேன். இது பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை என்று பலர் பேசுகிறார்கள். பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும், உபரி பட்ஜெட்டாக இருந்தாலும் இந்த பட்ஜெட் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ? வருமானம் எந்த எந்த வகையில் வருகிறது, செலவினங்கள் எந்த எந்த வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். அதைப் பார்க்காமல் உபரி பட்ஜெட்டாக இருந்தால் மகிழ்ந்துகொள்வது, பற்றாக்குறை பட்ஜெட் என்றால் குறைப்பட்டுக் கொள்வது என்பதில் பிரயோசனம் இல்லை. இந்த பட்ஜெட்டில் உள்ள முன்னேற்றங்கள் என்ன என்று பார்க்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் இன்னொரு பிரச்சினையையும் எழுப்பினார். மத்திய சர்க்காருடன் மோதுதலை உண்டுபண்ணக்கூடிய வகையில் இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்த நிதி அமைச்சர் சில விஷயங்களைச்

சொல்லியிருக்கிறார் என்றார். நான் கூறுகிறேன். பொதுவாக இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் அமைப்பின் கீழ் மாநில அரசுகள் அனைத்தும் கிட்டத்தட்ட வசூல் செய்கிற பில் கலெக்டர் மாதிரிதான் இருக்கின்றன. பெரும்பாலான வரியினங்கள் மத்திய அரசிடமே இருக்கிறது. வருமான வரியில் இதுவரை நமக்குக் கொடுத்துவந்த 75 சதவிகிதம் போதாது, 87½ சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று கேட்க நமக்கு உரிமையில்லையா ? எக்சைஸ் வரியில் இதுவரை கொடுத்து வந்த 20 சதவிகிதம் போதாது, அதை 40 சதவிகிதம் ஆக உயர்த்தவேண்டுமென்று கேட்க நமக்கு உரிமையில்லையா ? மத்திய அரசு மாநில அரசுகளுக்கு இன்னும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கிடு செய்ய வேண்டும் என்று கோருவதோ, அப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவந்து நிறைவேற்றுவதோ எப்படி மோதுதலை உண்டாக்கக் கூடியதாக ஆகும் ?

பி.ப. 12-30] நம்முடைய கோரிக்கைகளையெல்லாம் மத்திய அரசு நிறைவேற்றிவிட்டுமே, நிறைவேற்றிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிட்டது. பிரச்சினை எங்கே வருகிறது ? மாநிலங்களுக்குப் போதுமான அளவில் சமமாக நிதி ஒதுக்கீடு செய்கிறார்களா என்பதுதான் பிரச்சினை. இல்லை. அதன் காரணமாகத்தான் அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை என்று கேட்கிற நேரத்தில் காங்கிரஸ் கட்சியினர் அதை ஏதோ மோதலை உண்டுபண்ணுகிறீர்களே என்று சொல்கிறார்கள். பட்ஜெட் என்று சொன்னால் எந்த எந்த வகையிலே வரி போடுவது, யார் யாருக்கு வரிகள் போடுவது, என்று பார்த்து சமுதாயத்தின் அடிப்படை நிலையை மறந்துவிட்டு அவர்கள் வரி போடுகிறார்கள். சாதாரண மக்களைப் பாதிக்கும் ஏராளமான வரிகளை மத்திய அரசே ஆண்டுதோறும் போட்டு விடுகிறது. இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் 250 கோடி ரூபாய்க்கு பற்றுக்குறை காட்டியிருக்கிறது. ஏற்கனவே விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. இந்த நிலையிலே 250 கோடி ரூபாய் பற்றுக்குறையை எப்படிச் சரிக்கட்டப் போகிறார்கள்?

நிச்சயமாக நோட்டு அடிப்பதன்மூலம்தான் அவர்கள் சரிக்கட்டப் போகிறார்கள். அந்த நிலைமை மாநிலங்களையும் தமிழ்நாட்டு பொருளாதார நிலையையும் பாதிக்கத்தான் போகிறது. பட்ஜெட் பற்றுக்குறை மட்டுமல்ல, சாதாரணப் பொருள்களுக்கு வரியை போட்டுவிட்டு நோட்டு அடிக்கக் கூடியதிட்டத்தையும் மத்திய அரசினர் வைத்திருக்கிறார்கள். மாநில அரசினுடைய கடமை, இந்தத் தமிழ்நாட்டு மக்களாகிய நாம் நல்ல முறையிலே வாழ வேண்டுமானால், நமக்கு சலுகைகள் வழங்கப்படவேண்டுமானால் நம்முடைய அதிகாரத்தையும் உரிமைகளையும் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய முறையில் சர்வ கட்சியினரின் ஒத்துழைப்புடன் மத்திய அரசிடமிருந்து அதிக நிதி கேட்டு பெறவேண்டும். இதை மத்திய அரசோடு மோதுதல் என்று கருதக் கூடாது. பேசும்பொழுது இன்னொரு உறுப்பினர் சொன்னார்கள் பச்சைப் புரட்சி வந்திருக்கிறது என்று. தேக்க நிலை இன்னும் நீடிக்கக்கூடிய நிலைமையில் தான் இருந்துகொண்டிருக்கிறது.

இந்தியா முழுவதும் பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் 80 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே 30 ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. எஞ்சினியரிங் தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடையாது கிராமப் புறத்திலே விவசாயிகளுக்கு வேலை கிடையாது. மக்களுக்கு வாங்கும் சக்தி மேலும்மேலும் குறையக்கூடிய நிலைமைதான் மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின்மூலம் அதனுடைய கொள்கையின் மூலம் ஏற்பட்டிருக்கிறது. பச்சைப் புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று நாம் நிம்மதியாக இருந்துவிடமுடியாது. மத்திய அரசிடம் பல கோரிக்கைகளை நாம் அனைவரும் நாட்டு மக்களுக்கு நாங்கள் தான் நன்மை செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிற காங்கிரஸ் கட்சியின் ஆதரவையும் முடியுமானால் பெற்று போராடிப் பெறக்கூடிய பல விஷயங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 30 பஞ்சாலைகள் தென்னகத்திலே மூடப்பட்டிருக்கின்றன. பஞ்சாலைக் கழகம் என்று அமைக்கப்பட இருப்பதும் அதிலிருந்து 15 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து சமாளித்துவிடலாம் என்றும் நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிறது. நிச்சயமாக நம்முடைய அமைச்சர்

களுக்கும் ஆளுங்கட்சியினருக்கும் தெரியும் மத்திய அரசை நம்பி அவர்கள் இதில் இறங்கமாட்டார்கள், மத்திய அரசை நம்பினால் ஆபத்தில் முடியும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசு பஞ்சாலைக் கார்ப்பரேஷன் ஒன்றைப் போட்டிருக்கிறது. சில மில்களை எடுப்பதற்காக ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இது எப்படி எப்பொழுது நடைபெறப்போகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் அந்த மில்களை லிக்குவிடேட் பண்ண ஹைக்கோர்டிலே மனுபோட்டு அவ்வழக்கிலே தீர்ப்பு சொல்வதற்குப் பல ஆண்டுகள் ஆகிவிடும். அதற்குப் பிறகு எடுத்து நடத்தக்கூடிய தகுதியுள்ள மில் தானா என்பதையும் பார்ப்பார்கள். தமிழகத்திலே ஏற்கனவே தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே மத்திய அரசின் திட்டத்தை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ரெகுலேஷன்ஸ் ஆக்டின்கீழ் அவற்றின் நிர்வாகப் பொறுப்புக்களை நாமே ஏற்றுக்கொள்ள முடியும். அப்படிச் செய்யக் கூடிய முறையில் இந்த மாநிலத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசிடம் நம்முடைய கோரிக்கையை வைக்க வேண்டும், எல்லாக் கட்சியினரும் அதற்கு ஆதரவாக இருப்பார்கள்.

அடுத்தபடியாக, பொதுத் துறையைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம். சென்ற காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அவர்கள் பொதுத் துறையை வளர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, சம்பிரதாயத்திற்காக எடுத்துக்கொண்ட சில நடவடிக்கைகளைத் தவிர, தனியார் துறையிலுள்ள சேஷசாயி பேப்பர் மில், மேட்டூரில் அலுமினியம் பேக்டரி போன்றவைகளுக்குத் தான் அவர்கள் நிதி உதவிச் செய்தார்கள். அவர்கள் போன பாதையிலேயே நாமும் போகமுடியாது. நாமே அவற்றை எடுத்து நடத்தக் கூடிய நிலைமை வரவேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் அந்த முறையில் வருத்தமான சில விஷயங்கள் இருக்கின்றன. எண்ணூரில் உறைபதனத் தொழிற்சாலைக்காக மாநில அரசு பணம் செலவழித்து அதை தனியாருக்குக் குத்தகைக்கு விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் கட்டடம் கட்டிப் பணம் செலவழித்து எல்லா வசதிகளையும் செய்ததற்குப் பிறகு தனியாருக்கு அதை விட்டால் லாபம் அவர்களுக்குத் தான் போகும். எண்ணூரில் அனல் மின்சார நிலையத்திலிருந்து கிடைக்கும் உபபொருள்களை உற்பத்தி செய்கிற பெட்ரோ கெமிகல்ஸ் இண்டஸ்ட்ரியல் உரத் தொழிற்சாலை இவற்றையெல்லாம் தனியார் நடத்தினால் நலம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தேவையில்லை, மாநில அரசே அவற்றை ஏற்று நடத்த வேண்டும். மத்திய அரசை நாம் கண்டிக்கின்ற அதே நேரத்திலே மாநில அரசும் தன்னுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக இப்படிப்பட்ட திட்டங்களை அரசே நடத்த வேண்டும்.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கு நாம் பத்துக் கோடியும் தனியார் பத்துகோடி ரூபாயும் கொடுத்தால் அமைக்கலாம் என்று சொல்கிறார்கள். அது தேவையில்லை. முழுப்பணத்தையும் நாமே போட்டு அதை ஏற்று நல்ல முறையிலே நடத்த வேண்டும். அதே மாதிரித்தான் உப்பளமும். இன்னொரு முக்கியமான விஷயம். கைத்தறித் தொழிலின் அவல நிலையைப் பற்றி ஆளுநர் உரையிலும்சரி, இந்த நிதிநிலை அறிக்கையிலும்சரி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆறு லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் இந்த அரசு வந்தவுடன் குறைகள் தீரும் என்று எண்ணினார்கள். ஆனால் அதற்குப் பதிலாக எந்தவிதமான திட்டமும், அவர்களைப் பற்றிய எந்தவிதமான கொள்கையும் இந்த அரசுக்குக் கைத்தறி சம்பந்தமாக இல்லை. விசைத்தறி புகுத்தப்படுகிறது, பல நெருக்கடிகள் இருக்கின்றன, உள்நாட்டு மார்க்கெட்டு கிடையாது. இந்த நிலையில் இதில் மத்திய அரசை நாம் எதிர்பார்க்கக் கூடாது. விசைத்தறியைப் புகுத்துவதால் பஞ்சாலை நெருக்கடி தீரும் என்ற கருத்து இருக்கிறது. விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடிய துணியும் தேங்கக் கூடிய நிலைமை ஏற்படும். எனவே மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகப்படுத்தினால் ஒழிய இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. (மணியடிக்கப்பட்டது).

*திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1969–70ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள், அதை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே எந்த அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியைப் பினபற்றி புதியவரிகள் போடாத நிலையிலே நல்ல சிறப்பான அம்சங்களை அவர்கள் அளித்திருக்கிறார்கள், என்பதை நினைக்கிற நேரத்திலே அவர்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக காங்கிரஸ் சர்க்கார் பொறுப்பிலே இருந்த நேரத்திலே புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்று பேச்சளவிலே சொல்லிவந்தார்களே தவிர, அந்தச் சிறப்பான காரியத்தை நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டு கொண்டு வந்திருப்பது சிறப்பான அம்சமாகும்.

மேலும், பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்குப் புதிய வரிகளைப் போட்டுவிட்டு மத்திய சர்க்கார் காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருக்கக் கூடிய கட்டத்திலே, அங்கே வரி போட்டதை மறந்து விட்டு அதை மறைக்கக்கூடிய முறையிலே இங்கே, வரி போடாத திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கக் கூடிய தமிழ்நாட்டு அரசாங்கத்தைக் காங்கிரஸ்காரர்கள் தாக்கிப் பேசுவது வியப்புக்குரிய, வேதனைக்குரிய காரியமாக இருக்கிறது. மத்திய சர்க்காரில் போடப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி அங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே கூட வேதனைப்பட்டுக் கூறியிருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான உரத்திற்குக் கூட வரி கூட்டியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று பேசியிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடிய நேரத்திலே வரி போடாத பட்ஜெட்டை ஆதரிக்க வேண்டியதுதான் காங்கிரஸ் கட்சியைச்சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டிய கடமை என்று கூடச் சொல்லுவேன். வரி போடாத பட்ஜெட்டைச் சமர்ப்பித்ததன் மூலமாக ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பொதுமக்கள் மத்தியில் ஆதரவு பெருகிவிடுமோ என்ற காரணத்திற்காக காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே கண்டித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பேசுகின்ற நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமும் அமைதியும் குலைந்து விட்டதாகக் கூறி நேற்றைய சம்பவத்தைப் பற்றிப் பேசினார்கள். அது வழக்குமன்றத்தில் இருக்கக் கூடிய காரணத்தால் அதனுள்ளே சென்று விவாதிக்க விரும்பவில்லை. மதிப்பிற்குரிய திரு. சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கக் கூடிய மிகச் சாதாரண உறுப்பினர் மீது வழக்குப் போட்டிருப்பதாக இந்த மன்றத்திலே குறிப்பிட்டார். அதுமாத்திரமல்ல காங்கிரஸ் கட்சியின் சார்ப்பில் ஜாமீன் கேசில் சேர்க்கப்பட்டவர் மிகப் பிரபலமானவர் என்றும் தெரிவித்தார். அனுபவ ரீதியில் நான் அதை உணர்ந்திருக்கிற காரணத்தால் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஜாமீன் கேசில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சேர்க்கப்பட்டுள்ளவர் மதுரை நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டுள்ள திரு. நெடுமாறன் என்பவருக்கு இத்தகைய அந்தஸ்து அந்த நகரத்தில் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. மிகச் சாதாரணமானவர் என்று ஒரு கட்சியின் நகர துணைச் செயலாளரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். இன்னும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் 1960-ம் ஆண்டில் இருந்து மதுரை நகரத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்து வருகிறார். இன்றைக்கு முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஜாமீன் கேசில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் திரு. ராமச்சந்திரன் 1960-ல் மதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகப் பொறுப்பேற்று இருந்த காலத்தில் அவருடைய வார்டில் ஒரு சாதாரண உறுப்பினராக

அவரால் பதிவு செய்யப்பட்டவரே தற்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர்தான் திரு. நெடுமாறன் என்று குறிப்பிட விரும்புகிறேன். மிகச் சாதாரணமானவர் யார் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் இதை எடுத்துக் கூறினேன்.

பொதுவாக, இன்றைக்கு இருக்கக் கூடிய நம்முடைய அரசாங்கம் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிச்சுவட்டினைப் பின்பற்றி இந்த ஆண்டும் வரி போடாத நிலைமையில், விவசாய அபிவிருத்திக்குச் சிறப்பான திட்டங்களுடன் வரவு செலவுத் திட்டம் தரப்பட்டிருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி விவசாய அபிவிருத்தித் துறையிலே பல சீர்கேடான காரியங்களைச் செய்திருப்பதன் காரணமாகத் தான் இன்றைக்கு முன்னேற்றக் கழக சர்க்கார் போடுகின்ற திட்டங்கள் நல்ல திட்டங்களாக இருந்தாலும் கூட, அமல் நடத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாய அபிவிருத்திக்கான திட்டங்களைப் பார்க்கின்ற நேரத்தில் இரண்டு அம்சங்களைச் சர்க்கார் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று என்னுடைய பணிவான ஆலோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு விளைச்சல் நிலங்களாக இருக்கக் கூடிய நிலங்களிலே சாகுபடியை அதிகப்படுத்தக் கூடிய அளவுக்கு சிறுபாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஒருபோக நிலமாக இருப்பதையெல்லாம் இருபோகமாக்கும் முயற்சியில் நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது. சாதனைகளைச் செய்து வந்திருக்கிறது. 1967–68-ம் ஆண்டில் 22 லட்சத்திற்கும் மேலான நிலத்தை இரு போகமாக ஆக்கியிருக்கிறது. சிறுபாசனத் திட்டங்களை அதிகமான அளவுக்கு அமல்படுத்துவதிலும் அக்கறை செலுத்தி வந்திருக்கிறது. இருந்தாலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இந்தச் சிறுபாசனத் திட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதைப் பொருத்து ஒரு வரைமுறை செய்யப்பட்டிருக்கிறது. அந்த வரம்பின்படி ஒரு டன் உணவு உற்பத்தி பெறுவதாக இருந்தால் அதற்கு 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு செலவு செய்யக் கூடிய திட்டம் வந்தால் அதைத் தள்ளுபடி செய்யக் கூடிய முறையிலே சட்டம் இருந்தது. நம்முடைய அரசாங்கம் இந்தத் திட்டத்தை மாற்றியமைத்து 3,000 ரூபாய் என்றிருப்பதை ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோளைப் பணிவோடு சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கடன் வழங்கும் முறையில் நில அடமான வங்கியின் மூலமாக நம்முடைய சர்க்கார் வந்த பிறகு நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. நில அடமான வங்கிகள் பல மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கிற காரணத்தால், விவசாயிகள் சுலபமான முறையில் கடன் பெற வசதி இல்லாத நிலை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்கும் முறையில் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு நில அடமான வங்கியைத் திறக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடன் விண்ணப்பம் செய்யக்கூடிய நேரத்தில் நில அடமான வங்கியிலே சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. அந்த நேரத்திலே அவர்கள் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் அணுகிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறையைப் போக்கும் முறையில் நில அடமான வங்கிகளில் டைரக்டர்களாக அரசாங்கச் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தந்தத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் போட வேண்டுமென்ற வேண்டுகோளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுகிறதே என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே அந்தத் துண்டு விழக்கூடிய நிலையைமாற்றியமைப்பதற்கான சரியான ஆதாரம் இருக்கிறது. அந்த ஆதாரந்தான் லாட்டரிச் சீட்டு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேற்றைய தினம் இங்கே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் மார்ட்டின் அவர்கள், லாட்டரித் திட்டத்திற்குத் தமிழகத்தில் ஆதரவு குறைந்து விட்டது என்று பேசினார்கள். அவரைத்

தொடர்ந்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர்களும் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு பக்கத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் லாட்டரிச் சீட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே லாட்டரி தமிழகத்திலே நல்ல முறையிலே செயல்படவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். சிதம்பரத்தில் ஒரு காங்கிரஸ்காரருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது. அந்தப் பரிசைப் பெற்றுக்கொண்ட அவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திட்டத்தை மனதார வரவேற்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு மாத்திரமல்ல பல பேருக்குப் பத்தாயிரம் ரூபாய் விழுந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய் விழுந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு விழுந்ததைக் காட்டிலும் காங்கிரஸ்காரர்களுக்கு அதிகமாக விழுந்திருக்கிறது என்பது கண்கூடு. இருந்தும் இந்தத்திட்டத்தை வரவேற்கவில்லை என்று கூறுகிறார்கள். இது அரசியல் நிலையே தவிர வேறு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களும், தற்போதைய முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும் தமிழகத்திலே கட்சி வேறுபாடற்ற ஆட்சியை நடத்தி வருகிறார்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஓரளவுக்கு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் இந்தத் திட்டங்களுக்கு மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில் சிறிது கவனமாக இருக்க வேண்டும். உதாரணமாக, பரிசுச் சீட்டு ஏஜண்டுகளாக இருக்கக் கூடியவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்கள்தான். அவர்கள் மாதம் 500 ரூபாய், 600 ரூபாய் என்று லாபத்தைப் பெறுகிறார்கள். ஆனால் வெளியே வந்து தவறாகப் பிரசாரம் செய்கிறார்கள். அதை மாற்றுகிற முறையில் திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் நல்ல திட்டத்தினால் ஆதாயம் வரக்கூடிய ஒன்றை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் . . . . (மணி அடிக்கப்பட்டது.).

* **திரு என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது நான் என் கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையாகவே இந்த துண்டு விழும் அறிக்கைக்குள் ஒவ்வொன்றாக நுழைந்து பார்த்தால் மறைந்து போன முதல் அமைச்சர் மாண்புமிகு அண்ணா அவர்கள் எங்கள் ஆட்சியில் விஞ்ஞான சோஷலிஸம் பரவும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த நிலையில் ஏதாவது ஒரு அம்சமாவது இத் திட்டத்தில் இருக்கிறதா என்று பார்த்தால் அதைக் காணமுடியவில்லை.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் புகுமுக வகுப்பிற்கு இலவசக் கல்வி அளிக்கப்படுவது பற்றி பெருமையாகப் பேசினார்கள். நானும் அதை வரவேற்கிறேன். ஆனால் மேல் சபையில் புகுமுக வகுப்பிற்கு இலவசக் கல்வி அளிக்கவேண்டும் என்று காங்கிரஸ் மூலம் கொண்டுவந்த தீர்மானத்தை மாண்புமிகு அண்ணா அவர்கள் ஆதரித்தார்களா இல்லையா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்தோம், இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் மந்திரிசபை வாயளவில் அதுபற்றி பேசிவந்தார்களே தவிர, ஒன்றுமே செய்யவில்லை என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பத்தாவது வகுப்பு வரையில் ஜாதிமத பேதமில்லாமல் இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை கர்மவீரர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதை காங்கிரஸ்காரர்கள் அமல்படுத்தினார்கள். 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் எங்களுக்கு வாக்களித்து இந்த மன்றத்திற்கு அனுப்புவார்களேயானால், நாங்கள் வந்ததும் கொண்டுவரக்கூடிய திட்டம் புகுமுக வகுப்பிற்கு இலவசக் கல்வி அளிக்கும் திட்டமாகும் என்று நாங்கள் மேடைகளில் பறைசாற்றினோம். ஆனால் மக்கள் எங்களை தோற்கடித்து நாங்கள் எதிர் வரிசையில் இன்று இருக்கிறோம். ஆகவே எங்களைப் பார்த்து இவர்கள் கொண்டு வந்தார்கள் என்றால் அதன் பொருள் என்ன? நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன், இன்று சந்தோஷமாக ஆரவாரம் செய்யும் இந்தத் திட்டத்தை நீங்கள் வந்தவுடன் ஏன் கொண்டு வரவில்லை என்று. உண்மையாகவே அண்ணா அவர்கள் அதை ஆதரித்தாரா அல்லது அவர் மறைந்து போன பின்புதான் இதைக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தீர்களா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, நீங்கள் முன்னால் பேசி வந்ததெல்லாம், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதாகும். ஆனால், இன்று தமிழகத்தில் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லவேண்டிய நிலைதான் இருக்கிறது. இன்று நம் தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் திருநெல்வேலி ஜில்லா, அதிலும் நாங்குநேரி தாலூகா, கன்னியாகுமரி ஜில்லா இவற்றை எடுத்துக்கொண்டால் அதுதான் தென் கோடி. தென் கோடி தேய்கிறது, வடக்கேயுள்ள சென்னையும், இந்த மாவட்டத்திலுள்ள எல்லாப் பகுதிகளும் வாழ்கின்றன. ஏழைகளுக்காக இந்த அரசாங்கம் பாடுபடுகிறது என்று சொல்கிறார்கள். இன்று காலை கேள்வி நேரத்தின் போது அரிசி போடாத ஊர்களில், அரிசி போடாத கிராமங்களில் மக்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டதற்கு முன்னாள் உணவு அமைச்சர் அவர்களிடமிருந்து நேரடியான பதில் கிடைக்கவில்லை. எனது தொகுதியை எடுத்துக் கொண்டால், எனது தாலூகாவை எடுத்துக் கொண்டால் அங்குள்ள சின்னக் கிராமங்களில் ஒரு இடத்திலும் அரிசி கிடைக்கவில்லை. அங்கு ஒரு பகுதியை பஞ்சப் பிரதேசம் என்று இம்மன்றத்தில் பிரகடனம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் அங்கு குடிக்க தண்ணீர் இல்லை, குளத்தில் நீர் இல்லை, என்று அரசாங்கம் அறிந்த பின்பும் அங்குள்ள மக்களுக்கு அரிசி கொடுக்கவில்லை. அப்படி அங்கு கொடுக்காமல் இங்கு இருப்பவர்களுக்கு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து நடத்துகிறார்கள். டெல்லி எங்களுக்கு உதவி கொடுக்கவேண்டும், அப்போது நாங்கள் மேலும் அளப்போம் படி அரிசி என்று சொல்கிறார்கள். இங்கு கூட படி அரிசி $2\frac{1}{2}$ ரூபாய் என்று விற்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. நாங்குநேரி தொகுதியில் மக்கள், கிராம மக்கள் சைக்கிளில் அரிசி கொண்டு போனால் அதையும் பிடிக்கிறார்கள். அதில் போலீஸார் குறுக்கிடுகிறார்கள். அங்குள்ள கலெக்டர் அறிவித்திருக்கிறார், ஐந்து கிலோ அரிசிக்கு மேலாக யாரும் கொண்டு போகக் கூடாது என்று. இங்கு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். திருச்செந்தூர் தாலுகாவில் தென் பகுதியிலுள்ள எந்தயிடத்திலும் நெல் விளையாது அங்கு உடை மரமும், பனை மரமும் தவிர வேறு எதையும் அங்கு காணமுடியாது. குலசேகரப் பட்டணம் என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து அரிசி விளையக்கூடிய இடத்திற்கு வரவேண்டுமென்றால் 30, 40 மைல்கள் கடந்து வரவேண்டியிருக்கிறது. இவ்வளவு தூரம் சென்றும் ஐந்து கிலோவிற்கு மேல் கொண்டு வரக்கூடாது என்று சொன்னால், அப்படி ஒரு சட்டம் இருக்குமானால் இந்த சர்க்காரை ஜனநாயக சர்க்கார் என்று சொல்வதா அல்லது ஏழைகளின் சர்க்கார் என்று சொல்வதா அல்லது பட்டணத்தில் இருப்பவர்களை வாழ்விக்க வகை செய்கிற சர்க்கார் என்று சொல்வதா என்று வேதனையோடு கேட்டுக்கொள்கிறேன். இதே நிலைமையில் போகுமானால் கிராமத்திலுள்ள மக்கள் அந்த மண்ணில் வாழ்கிறவர்கள் மண்ணைத் தவிர புல்லைக் கூட காண முடியாத நிலையில் இருப்பவர்கள் மண்ணைத் தான் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன். நாற்பது மைல் தூரத்திலிருந்து கொண்டு வரமுடியவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலை இந்த அரசு வந்து ஏற்படுத்தியதா? இதற்கு முந்திய அரசாங்கமே இந்த சட்ட திட்டங்களையெல்லாம் வைத்திருந்ததா?

திரு. என். துரைபாண்டியன் : உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அரைப்படி அரிசி போட வக்கற்ற சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார் என்று சொன்னார்கள். எந்தெந்த மூலை முடுக்கு

களில் மனித வர்க்கம் இருந்ததோ அங்கெல்லாம் அரை படி அரிசியாவது அளந்தார்கள். காங்கிரஸ் சர்க்கார். இப்போதுள்ள சர்க்கார் பட்டணத்துக்கு மட்டும் படி அளக்கிறது. வேறு எந்த இடத்தையும் இந்த சர்க்கார் கண் திறந்து பார்க்கவில்லை. குறிப்பாக உடை மரமும், பனை மரமும் மட்டும் வளரக்கூடிய இடங்களிலுள்ள மக்களை ஏறெடுத்துப் பார்க்காமல் இருக்கிறது இந்த சர்க்கார் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

நமது விவசாய அமைச்சர் அவர்கள் திருநெல்வேலிக்கு வந்திருந்தபோது, அங்கு கருத்தரங்கு நடத்தியபோது நான் அந்தக் கூட்டத்தில் சொன்னேன். நாங்குநேரி தாலுகாவிலுள்ள குடமாடி அணை, பச்சையாறு அணை இவற்றை செப்பனிட்டு அந்த அணைகளைக் கட்டினால் நாங்குனேரி தாலுகாவில் நல்ல விளைச்சல் ஏற்பட்டு திருநெல்வேலி ஜில்லாவே ஒரு உபரி ஜில்லாவாக ஆகும் என்று சொன்னேன். இன்று முதல் அமைச்சராக இருக்கிற அன்புக்குரிய மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் அதை ஒத்துக் கொண்டார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது அதுபற்றி ஒன்றும் காணோம். அதுகுறித்து எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வளம் எங்கிருக்கிறது என்றால் அதுவும் பட்டணத்தைச் சுற்றித்தான் இருக்கிறது. கிராமப்புறங்களில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவோ செய்வதாகச் சொன்னார்கள். எனது மாவட்டத்தைச் சார்ந்தவர் நல்லமுறையில் பேசினார்கள். உண்மையாகவே ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதக் கடன்களும் கிடைப்பதில்லை. நிலமில்லாத ஏழைகளுக்கு ஐந்து ஏக்கர் நீங்கள் பட்டா வழங்குகிறீர்கள். அந்த நிலத்தைப் பயன்படுத்தி, ஒரு கிணறு அடிக்க, பம்ப் செட் வைக்க அவர்கள் கடன் கேட்பார்களேயானால், அந்த நிலத்தின் மதிப்பு என்ன என்று கேட்கிறார்கள். நீங்கள் தர்காசு பூமி, புறம்போக்கு நிலத்தைத்தான் கொடுக்கிறீர்கள். இந்த நிலையில் அவர்கள் என்ன செய்வார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) அடுத்தபடியாக அராஜகம் பற்றிப் பேசினார்கள்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : ஒரு விளக்கம். உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது நாங்குனேரி தாலுக்கா புறக்கணிக்கப்பட்டதாக சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவர்களை நான் கேட்க விரும்புகிறேன், இப்போது பட்டணங்கால் என்ற கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டு ஜூன் மாதம் தண்ணீர் விட ஏற்பாடாகியிருக்கிறது. அது நாங்குனேரி தாலுகாவிலா அல்லது வேறு இடத்திலா ?

திரு. என். துரைபாண்டியன் : அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் குறிப்பிட்டது நாங்குனேரி தாலுகா என்றல்ல, என் தொகுதி கண்டிப்பாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அது ராதாபுரம் தொகுதியில் வருகிறது. அடுத்தபடியாக, அராஜகம் பற்றி ஒரு வார்த்தை. சப்-இன்ஸ்பெக்டர் . . . . (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சு. துரைசாமி) உறுப்பினர்கள், மணியடித்தவுடன் தங்கள் பேச்சை முடித்துக்கொண்டால் முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் இன்னும் நிறையப் பேர் பேசவிருக்கிறார்கள். ஏற்கெனவே அறிவித்திருக்கிறபடி 10 நிமிடங்களுக்குள் முடித்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, கனம் உறுப்பினர்கள் பேசும்பொழுது, பட்டணத்திற்குத்தான் படி அரிசி அளிக்கிறார்கள், கிராமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். பேரூர் பஞ்சாயத்து யூனியனிலே உள்ள அத்தனை கிராமங்களுக்கும் படியரிசி போடப்படுகிறது என்பதை உணர்ந்து சொல்கிறார்களா ? அல்லது உணராமல் சொல்கிறார்களா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி) : இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எதுவும் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள்.

***திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது, மத்திய அரசும், மாநில அரசும் வகுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கைகளை ஒத்துப் பார்க்கும்பொழுது, உண்மையிலேயே மத்திய சர்க்கார் மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற கஷ்டத்தோடு ஒத்துப் பார்க்கும்பொழுது இது 100 மடங்கு நன்றாக இருக்கிறது என்றே மனதாரச் சொல்லுகிறேன். ஆனாலும், நாங்கள் தோழமைக் கட்சியாக இருக்கின்ற முறையிலும், இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்க வேண்டுமென்ற முறையிலும் எங்கள் மனத்திற்குப்பட்ட சில அவசியமான கருத்துக்களையும், குறைகளையும் சொல்வதிலே ஒன்றும் தவறு இல்லை என்று கருதி சொல்லத் துவங்குகின்றேன்.

எப்பொழுதானாலும், எந்த நிதிநிலை அறிக்கையிலே வரவு-செலவுத் திட்டத்தை வகுப்பதானாலும், வருவாய்க்கு ஏற்ற முறையிலேதான் இருக்க வேண்டும். வருவாய்க்கு மிஞ்சிப்போனால் "ஆன முதலில் அதிகம் செலவானால்" என்னும் செய்யுளில் இருக்கும் அத்தனையையும் அனுபவிக்க வேண்டும். இதை யாரும் மறுக்க முடியாது. இதுவும் "ஆன முதலில் அதிகம்தான்". ஆனால், மத்திய சர்க்காரோடு பார்க்கும்பொழுது இது கொஞ்சம் குறைவுதான் எனினும், இந்தக் குறைவும்கூட இல்லாமல் தான் இருக்க வேண்டுமென்று நான் மிகமிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் இந்தப் பாட்டை முழுமையும் சொல்வது நல்லது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : அந்தப் பாட்டை முழுமையாகவே சொல்லிவிடுகிறேன்.

"ஆனமுதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்போனதிசை
எல்லோர்க்கும் கள்ளனாய் எழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்பது. அந்த முறையிலே மத்திய அரசு பட்ஜெட் இருந்தாலும், அதில் ஒரு சிறிதளவு பங்கு மாநில அரசுக்கு இருந்தாலும், அந்தச் சிறிதளவு கூட மாநில அரசு பட்ஜெட்டில் இருக்கக்கூடாது. அந்தத் துறையிலே போகக்கூடாது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கூற விரும்புகிறேன்.

இங்கே சுமார் $16\frac{3}{4}$ கோடிக்கு பற்றாக் குறையாக இருக்கிறது. இதை எப்படி பின்னாலே சரிக்கட்டுவது என்று பார்த்தால், சென்ற முறைகளைப் போல இடையிடையே வரிகளைப் புகுத்த வேண்டிய நிலை வரும். அதுவும் தவறாகத்தான் இருக்கும். இந்த நிதிநிலை அறிக்கையிலே நமது நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "தொழில் துறையில் காணும் மந்த நிலை காரணமாக விற்பனை வரி போன்ற தலைப்புக்களின்கீழ் வரவினம் தற்காலிகமாகக்" குறைந்திருக்கிறது என்று. நாட்டினுடைய செலாவணி குறையக் குறைய வருவாயும் குறைந்துகொண்டுதான் வரும். எதிர்பார்க்கும் வருவாய் குறையும். பற்றாக்குறை வளர்ந்து மக்களைப் பாதிக்காமல் இருக்க முடியாது. பட்ஜெட்டில் வரி போடவில்லை என்று சொன்னால், மேற்கொண்டும் வரியைப் போடாமல் இருக்கக் கூடிய வழியில் இருக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசும் குடியானவர்களுக்கு உதவி செய்வதிலே போட்டி போட்டுக்கொண்டு கஷ்டங்களையும், தொல்லைகளையும் கொடுக்கின்றனர். அதிலும் மத்திய சர்க்காரின் தொல்லை அதிகம்தான். மாநில அரசாங்கத்தினுடைய தொல்லையாவது கொஞ்சம் குறைக்கவேண்டு

மென்றுதான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரியில் உரத்திற்கு ஏராளமான வரி போடப்பட்டிருக்கிறது. பம்புசெட்டுக்கும் அதிக வரி போடப்பட்டிருக்கிறது. ஆனல் இந்த வரியோடு மேலும் அவர்கள் புகுத்திய கலால் வரி மேல் விற்பனை வரியை மாநில அரசு புகுத்தியிருக்கிறது. அவர்களெல்லாம் ஏழை எளிய மக்கள், அவர்களுக்குச் சிறிய அளவிலே போடுவதைக்கூடக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, படி அரிசி போடுவதற்காக கிட்டத்தட்ட எட்டே முக்கால் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்பவர்கள், அதிலும் நகரத்திலேயிருந்து கொண்டு அதிக வருவாய் பெறக்கூடியவர்கள், அவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. குடியானவர்கள் இதுவரையிலே எத்தனையோ தொல்லைகளை அனுபவித்திருக்கிருர்கள். சுருக்கமாகச் சொன்னுல் இந்தக் கட்டுப்பாடு புகுத்தப்படுவதற்கு முன்னலே என்று நினைக்கிறேன். இந்த நெல்லுக்கு நிர்ணயம் செய்யப்படும் விலை அன்றிருக்கும் விலையைக் காட்டிலும் உரத்திற்கு 50 சதம், 70 சதவிகிதம் கூடியிருக்கிறது. அவ்வளவு கூடியிருந்தும்கூட உரிய விலை தானியத்துக்கு கொடுக்கப்படுவதில்லை. தானியத்தின் விலை உயர்ந்ததற்கும் பதில் இல்லை. எனவே, அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில், அவர்களும் மக்களாகவே வாழ்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்க ஆவலைக் கொடுக்கின்ற முறையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையென்ருல் அது ஆபத்தில் கொண்டுபோய் விட்டு விடும் என்று எச்சரித்துச் சொல்ல விரும்புகிறேன்.

கோர்ட்டிலேயெல்லாம் கூட தானியத்தின் விலை போதாது என்று தீர்ப்பு அளித்திருக்கும்பொழுது , இருக்கும் நிலையை அறிந்து அவர்களுக்குத் தானியத்திறகான விலை கொடுப்பதற்கு முன்வரவேண்டும். உண்பவர்களுக்குக் கொடுத்தால் மட்டும் போதாது, உற்பத்தி செய்பவர்களுக்கும் ஊக்கம் கொடுப்பதுதான் சிறந்தது.

பஞ்சாலைத் தொழில்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஓரளவுக்குச் சகாயம் செய்ததாகக் காட்டியிருக்கிருர்கள். உண்மைதான். ஆனல், அதைப்பற்றி விமர்சனம் செய்தால் நேரம் போய்விடும். கலால் வரியிலே சாதகம் செய்திருக்கும்பொழுது மாநில அரசும் அதற்குத் துணையாக, ஏற்கெனவே சொன்ன மாதிரி விற்பனை வரியில், மின்சார வரியிலே வரக்கூடிய வருவாயைக் குறைத்து அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுககொள்ளுகின்றேன். இந்தத் துறையிலே, தமிழகத்திலே பல மில்களை நடத்த முடியாமல் நஷ்டத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் கூட சொல்லுகிறேன், மாதிரிக்காக ஒரு சிறு மில்லை நடத்தும் பொறுப்பை என்னிடத்தில் ஒப்படையுங்கள், நஷ்டம் இல்லாமல், நடத்த முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நடத்துவதற்கு ஒப்புவிக்க வேண்டுமென்று கேட்டேன். ஆனல் அது அவர்கள் காதில் படவில்லை, காரணம் விளங்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உறுப்பினரவர்கள் மூடப்பட்டுக் கிடக்கும் மில் எதையாவது எடுத்து நடத்த முன்வருகிருர்களா ? அதுபற்றி அவர்கள் கருத்து என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : மூடப்பட்ட ஒரு சிறிய மில்லை நான் நடத்திக் காட்டுகிறேன் என்று கலெக்டர் அவர்களிடத்தில் 4 மாதங்களுக்கு முன் எழுதிக்கொடுத்திருந்தேன். அதற்கு, அவர்கள் தொழிலாளர் தலைவர்களிடத்திலும், அரசாங்கத்திடமும் கலந்துகொண்டு பதில் சொல்வதாகச் சொன்னர்கள். ஆனல் அதற்குப் பதிலில்லை. கடைசியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமல் அந்த மில்லை நடத்திக் காட்டுகிறேன், அதில் நஷ்டம் ஏதாவது வந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன், லாபம் வந்தால் அது

தொழிலாளர்களுக்கும் முதல் போட்டவர்களுக்கும் எனக்கும் இருக்கட்டும் என்று எழுதிக் கொடுத்து இருக்கிறேன். அப்படி நடத்தத் தயார் என்றும், இது வெறும் வார்த்தைகள் அல்ல என்றும் தெரிவித்துக் காள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பஸ் சர்வீசைப் பொறுத்தவரையில், இது வேண்டாம் என்று, உண்மையிலேயே ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்தத் துறையிலே மக்களுடைய பணத்தைப் போட வேண்டாம். அப்படிப் போடுவது "விழலுக்கு இறைத்த நீராகத்" தான் போகும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அந்தக் கொள்கைகளைப் புகுத்தி, நாங்கள் வரிபோடாமல், தொழில் நடத்தி அதைக்கொண்டு ஆட்சியை நடத்திவிடுவோம் என்பது அனுபவத்திற்குப் பொருந்தாத சொல்,. பஸ் சர்வீஸிலே நஷ்டம் இருக்கின்றதைக் குறைத்துக்கொண்டு வரப்படுகிறது என்று சற்று முன் கூட அமைச்சரவர்கள் சொன்னர்கள். நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன், நீங்கள் அதை நஷ்டமில்லாமல் நடத்த முடியாது. ஏதோ கணக்குகளைக் காட்டலாமே தவிர, உண்மையாக அந்த சர்வீஸை நஷ்டமில்லாமல் நடத்த முடியாது என்று உறுதியாகச் சொல்கிறேன். தனியார் நடத்துகின்ற முறையோடு ஒத்துப்பார்த்தால் இன்றிருக்கும். கஷ்டம் சகிக்க முடியாது. கோவையிலிருந்து சென்னைக்கோ, மற்ற இடங்களுக்கோ அரசு பஸ்ஸில் போகவேண்டுமென்ருல், பஸ்ஸைக் கண்டால்தான் டிக்கெட் கொடுக்கிருர்கள். பஸ் வரும் என்பது நிச்சயமில்லை. அந்த அளவுக்கு இருப்பதை இந்தப் பஸ் போக்குவரத்தில் ஏறிப்போகிறவர்களை விசாரித்தால் தெரியும். இந்தத் துறையை லாபகரமாக நடத்தவே முடியாது. கணக்கிலே வேண்டுமானுல் எப்படி வேண்டுமானுலும் காட்டலாம். ஆனல் "அரசு-தொழில் நடத்தினுல் ஆண்டியாகும்" என்ற பழமொழியை மாற்ற முடியாது. எனவே, கட்சி, கொள்கை என்ற வாதத்தை வைத்துக்கொண்டால் நாடு நாசமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). இடையிலே சில குறுக்கீடுகள் இருந்ததால் இன்னும் இரண்டு, மூன்று நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியைப் பொறுத்தவரையில், அவினுசி தொகுதியைப் பொறுத்தவரையிலும் இதில் ஒன்றும் சேர்க்கவில்லை. எங்கள் பகுதி இன்றியமையாத பகுதி 7 எக்கருக்கும் 10 எக்கருக்கும் இடையிலுள்ள பகுதிகளில் ஒரு லட்சம் ரூபாய் வரை கொடுத்து, கிணறு வெட்டி, பல நூற்றுக்கணக்கான அடி குழிபோட்டும் காய்ந்துபோய் கிடக்கிறது. அங்குள்ளவர்கள் நல்ல ஊழியர்கள். அவர்கள் உழைத்து, பருத்தி உற்பத்தியைப் பெருக்கி நல்ல அன்னியச் செலாவணி கிடைக்கக்கூடிய இடத்தில் அதையும் நஷ்டப்படுத்தாமல், மின்சாரத் துறையும் நல்ல லாபகரமாக இயங்க வாய்ப்புக்கொடுத்து அந்தப் பகுதி மக்கள் பிழைக்கக் கூடிய திட்டத்தையும் சேர்க்க வேண்டுமென்று அமைச்சரவர்களை மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறிப்பாக, நான் ஏற்கனவே பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். இந்த லாட்டரி சீட்டைப் பொறுத்தமட்டிலும் நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறேன், தயவுசெய்து நீங்கள் இதை விட்டுவிடுவது நல்லது என்று. ஏற்கனவே, அரசாங்கத்திற்கு அதில் வருவாய் குறைந்திருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். இன்னும் கொஞ்சம் போனுல் அதிகாரிகளை வைத்து, வற்புறுத்தி என்னைப்போன்ற சாதாரண விவசாயக் குடியானவர்களை, தொழிலாளர்களை, அத்தனை பேரையும் பிடித்து, வற்புறுத்தி கசக்கிப்பிழிய வேண்டி வரும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக அது இருப்பது ஆபத்து, நாட்டை நாசக்கரத்திலே கொண்டுபோய்விடும். அந்தத் துறையிலே சம்பாதிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தால் பெரும்பாலான தொழில்கள் எல்லாம் நசித்து, அரசாங்கத்திற்கு வருகிற வருவாம் குறையும் என்று மிகவும் பணிவோடு தெரிவித்து, எனக்குக் கொடுத்த நேரத்தில் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1969 மார்ச் 5

***திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையின் மீது எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியை தெரிவித்து, மறைந்த மாமேதை, எங்களுடைய ஒப்பற்ற தலைவர், இந்த நாட்டின் முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இறங்கலையும் என்னுடைய தொகுதி மக்களின் வருத்தத்தையும் தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த மாமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தின் மீது உரையைத் துவங்கிய காங்கிரஸ் உறுப்பினர் காசிராமன் அவர்களும், அவரைத் தொடர்ந்து பேசிய உறுப்பினர் மார்டின், இராமமூர்த்தி போன்ற வழக்கறிஞர்களும் நல்ல பல கருத்துக்களையும் நல்ல பல மறுப்புக்களையும் எடுத்துரைப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். வழக்கறிஞர்கள் திறம்பட வாதாடுவார்கள் என்று தான் எண்ணினேன். ஆனால் அவர்கள் பேசினார்களே தவிர, வாதம் புரியவில்லை. அவர்களுக்கும் அவர்கள் கூறிய கருத்துக்கும் இந்த மாமன்றத்தின் முன் மறுப்பு கூறுவது என்னுடைய கடமையாகும். முதலாவதாக, இன்று பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் இராமமூர்த்தி அவர்களுக்கு நான் கூறிக்கொள்வது, அவர் தமிழக அரசின் மூன்று பட்ஜெட்களைப் பற்றி குறிப்பிட்டபோது டாக்டர் ஜான்சன் இலண்டனிலே பேசியபொழுது எழுந்து "ஐ கன்சீவ், ஐ கன்சீவ், ஐ கன்சீவ்", என்று மூன்று முறை சொன்னதாகவும் தலைமை வகித்த அம்மையார் எழுந்து, "ஜான்சன் மூன்று முறை கன்சீவ் என்றார், ஆனால் எதுவும் பிறக்கவில்லை," என்று குறிப்பிட்டதாகவும் சொன்னார். நான் இந்த மன்றத்திற்கும் அந்த உறுப்பினருக்கும் சொல்ல விரும்புகிறேன், அந்த அம்மையாரும் மாண்புமிகு உறுப்பினர் இராமமூர்த்தியும் தவறாகச் சொன்னார் என்று நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஜான்சன் உண்மையிலே அதைத் தவறாகச் சொன்னார் என்று நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

ஜான்சன் "ஐ கன்சீவ்" என்று சொன்னதற்குப் பதிலாக, அந்த அம்மையாரையும் சேர்த்து, "வி கன்சீவ்" என்று சொல்லியிருந்தால் அந்த இடத்திலே குழந்தை பிறக்காவிட்டாலும் இன்னும் பல மாதங்களுக்குப் பிறகாவது குழந்தை பிறந்திருக்கும். அதே போல் மாண்புமிகு உறுப்பினர் எங்களுடைய மூன்று ஆண்டுகால வரவு-செலவு திட்டங்களை இந்த மாமன்றத்திலே படிக்காவிட்டாலும் தனியாக உட்கார்ந்து அதை மீண்டும் பலமுறை படித்துப் பார்த்தால், இந்தத் திட்டத்தில், இந்த நாட்டிற்கு, எந்த அளவிற்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் விவாதத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் காசிராமன் அவர்கள், "வரவு-செலவு அறிக்கையில் திட்டக் குழுவுக்கு ஆலோசனை, மத்திய அரசுக்கு ஆலோசனை, மத்திய மாநில உறவுக்கு ஆலோசனை, இவை தான் இருக்கின்றனவே தவிர என்ன சாதனை செய்தோம் என்பது குறிப்பிடப்பட வில்லை" என்று குறிப்பிட்டார். இந்தியா ஒரு கூட்டாட்சி அமைப்பு முறை உள்ள நாடு என்பதையும், பல மாநிலங்களில் பல்வேறுபட்ட கட்சிகள் ஆட்சி புரிகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார் போலும். மத்திய மாநில அரசுகளுக்கிடையில் கருத்து வேற்றுமை எழாமலும், பங்குத் தகராறு ஏற்படாமலும், பாரபட்சம் காட்டப்படாமலும், மூல இடத்தில் அதிகாரம் குவிக்கப்படாமலும் இருக்கும் வகையில் சுட்டிக் காட்டுவதும் தட்டிக் கேட்பதும் உரிமையும் கடமையுமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். வரவு-செலவு திட்ட உரையில் "வருமான வரியில் மாநிலங்களுக்குரிய பங்கு 75 சத விகிதத்திலிருந்து 87½ சத விகிதம் வரை உயர்த்தப்பட வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்பது தவறா ? கேட்கக் கூடாதா ?

1969 மார்ச் 5] [திரு. பெ. சௌந்திரபாண்டியன்]

1952–53-ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலம் சென்னையுடன் இணைந்திருந்த காலத்தில் பஞ்சத் துயர் தணிப்பிற்காக மத்திய அரசு வழங்கிய 13·5 கோடி ரூபாய் கடனை 5 ஆண்டு கால அளவில் திருப்பித் தருகிறோம் என்று மத்திய அரசின் இசைவை மாநில அரசு திட்டக்குழு மூலம் கேட்பது தவறா ? அல்லது சுட்டிக் காட்டக் கூடாதா ? என்பதை அருமை நண்பர்கள் யோசிக்க வேண்டுகிறேன்.

மத்திய, அரசும் மாநில அரசும் ஒருங்கிணைந்து பாடுபட்டால்தான் நம்முடைய நாட்டின் வளம் பெருகவும் மக்களின் வாட்டம் போகவும் உதவும் என்பதையும் வரிப் பணத்தில் உரிய பங்கைக் கொடுங்கள் என்று கேட்பது, தட்டிக் கேட்பது நியாயம் இல்லையா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் காசிராமன் அவர்கள் இதுவரை என்ன செய்தீர்கள் என்று கேட்டார் ? நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன், கடந்த மூன்றாண்டுகளில் வரவு-செலவுத் திட்டத்தை தனியாக அமர்ந்து படித்து, ஒரு முறை சிந்தித்துப் பார்த்து, உங்களுடைய 20 ஆண்டு கால வரவு-செலவுத் திட்டத்தையும் ஒரு முறை திருப்பிப் பார்த்து, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனை அதிகமா, அல்லது காங்கிரஸ் ஆட்சியின் சாதனை அதிகமா என்று பட்டியல் போட்டுப் பார்த்தால், தெளிவாகத் தெரியும் யாருடைய சாதனை அதிகம் என்று. காங்கிரஸ் ஆட்சியில் 1965–66-லும் 1966–67-லும் ஆக இரண்டு ஆண்டுகளில் மின்சாரம் வழங்கிய மின்விசை ஏற்றங்களின் எண்ணிக்கை 63,000. 1967–68-லும், 1968–69-லும் முன்னேற்றக்கழக ஆட்சியில் மின்சாரம் வழங்கிய மின்விசை ஏற்றங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவையாகும் என்பதை நம்முடைய வரவு-செலவு திட்டம் தெளிவாக்குகிறது. இது சாதனை இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

மத்திய அரசு வழங்கியது போல மாநில அரசும் அகவிலைப்படி, நகர ஈட்டுப்படி வழங்கியது, பேருந்துவழித் தடங்களை நாட்டுடைமையாக்கியிருப்பது, சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க வழிவகை செய்திருப்பது, விவசாயத்தைப் பெருக்குவதற்கு திட்டம் பல செயல்படுத்தியிருப்பது, நில அடைமான வங்கி மூலம் உழவர்களுக்குத் துரிதமாக கடன் கிடைக்க வழி செய்திருப்பது, நடப்பு ஆண்டில் 12 கோடி கடன் வழங்க திட்டமிட்டிருப்பது தமிழக அரசின் சாதனை இல்லையா ?

மேலும், தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி 20 ஆண்டு காலம் காங்கிரஸ்காரர்கள் எந்த விதமான கேள்வியும் எழுப்பாமல், எந்தவிதமான ஊக்கமும் கொடுக்காமல் மத்திய அரசிடம் கேட்கவே அஞ்சினர். ஆனால் முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன் எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசை தட்டிக் கேட்டு, சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சுட்டிக்காட்டி தூத்துக்குடி துறைமுகத்தை நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டதால், நம்முடைய புதிய தமிழக அரசு அதற்கு ஒரு திட்டம் தீட்டி மத்திய அரசை ஒப்புக் கொள்ளச் செய்து நடப்பு நிதி ஆண்டிலே ஏறத்தாழ 6·2 கோடி ரூபாய் ஒதுக்கி தூத்துக்குடி துறைமுகத்தை மட்டுமல்லாமல் சென்னை துறைமுகத்தையும் விரிவுபடுத்துவதற்காக ஒரு சிறந்த திட்டத்தை தீட்டவில்லையா ? இது சாதனை இல்லையா என்பதை நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து சேலம் உருக்காலை. நெஞ்சு உருக உருக, கடந்த 20 ஆண்டு காலமா பொதுமக்களும் நாங்களும் எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்தில் கேட்டுக் கேட்டுப் பார்த்தோம். கேட்டு அலுத்துப் போனோம். அதைப் பற்றி காங்கிரஸ் அமைச்சர்கள் மத்திய அரசிற்கு ஏற்கனவே எந்தவிதமான தகவலும் தரவில்லை. சேலம் உருக்காலை பற்றி கேட்கக் கூட அஞ்சினர். இந்த நிலையை மாற்றிக் கழக அரசு பொறுப்பேற்றவுடன்

பேரறிஞர் **அண்ணா** அவர்கள் நம்முடைய இந்திய நாட்டின் **பிரதம** அமைச்சரைப் பார்த்து சேலம் உருக்காலைத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டுக் கொண்ட பிறகும், **இன்னும்** வெளி நாட்டினர் வற்புறுத்தி சொன்ன பிறகும் அவர்கள் கவனிக்காத நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நீங்கள் செய்கிறீர்களா, அல்லது எங்களைச் செய்ய விடுகிறீர்களா என்று கேட்டும் அவர்கள் கேளாக் காதினராக இருந்த காரணத்தினால் சேலம் உருக்காலையை நம்முடைய மாநில அரசு எடுத்து, இந்த நடப்பு நான்காவது திட்ட காலத்தில் அதற்காக 10 கோடி ஒதுக்கி, நடப்பு ஆண்டில் **51** இலட்சம் ஒதுக்கி இருக்கிறதே இது சாதனை இல்லையா, உங்கள் கண்ணுக்குப் படவில்லையா என்பதை நான் பணிவன்போடு கேட்க விரும்புகிறேன்.

அடுத்து வெள்ள காலத்தில் தஞ்சையில் பயிர்கள் நஞ்சாகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, வடிகால் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று பல ஆண்டு காலமாக சட்ட மன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் கேட்டுக்கொண்டிருந்த போதிலும், அதை நிறைவேற்றாமல் விட்டதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். ஆனால், கழக அரசு பொறுப்பேற்றவுடன் தஞ்சை வடிகால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கி, நடப்பு ஆண்டு காலத்தில் அது முடிவுறும் நிலையில் இருக்கிறது என்பதை காங்கிரஸ்காரர்கள் மறந்துவிடக் கூடாது என்பதை நினைவு படுத்துகிறேன். மேலும் உறுப்பினர்கள் சொன்னார்கள். சென்னையிலே குடிக்க தண்ணீர் இல்லை, எங்கு பார்த்தாலும் விலை கொடுத்து வாங்குகிறார்கள், தண்ணீரை காசுக்கு வாங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது இன்று, நேற்று ஏற்பட்ட நிலைமை அல்ல. கடந்த பல ஆண்டு காலமாகவே சென்னைக்கு காவேரி நதியிலிருந்து நீர் கொண்டு வரவேண்டும் என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும், கழகத் தலைவர்களும் எடுத்துக் காட்டியிருக்கும் கருத்தை காது கொடுத்து கேட்காமல் இருந்ததை மறந்துவிட்டீர்கள். அதை நினைவு படுத்தும் முறையில் தான், கழக அரசு பொறுப்பேற்றவுடன் சென்னைக்கு காவேரி நீர் வழங்குவதற்கான ஒரு திட்டத்தை தீட்டி நிறைவேற்றும் தருவாயில், நடப்பு நிதி ஆண்டில் ஏறத்தாழ ரூ. 50 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. அந்த வேலைத் திட்டம் விரைவுபடுமானால், மேலும் அதிக நிதி ஒதுக்க உறுதியளித்திருக்கிறது. இது சாதனையில்லையா என்பதை தயவு செய்து உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, சென்னை மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்ற நாங்கள் கேட்ட நேரத்தில், தமிழ் நாடா, எங்கே இருக்கிறது, இலக்கியத்தில் இருக்கிறதா என்று கேட்டார்கள். இந்த நேரத்தில் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் நேற்று முன்தினம் சொன்ன கருத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். "காங்கிரஸ் ஆட்சி நடக்கும் பொழுதே தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டு விட்டது, ஆங்கிலத்தில் மட்டும் தான் மெட்ராஸ் என்று இருந்தது" என்று நமது மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் நேற்று முன்தினம் காரைக்காலில் குறிப்பிட்டார்கள். நான் நினைத்தேன், திரு. காமராஜ் அவர்கள் ஒரு வேளை பாண்டிச்சேரியிலிருந்து காரைக்கால் போய் இருப்பாரோ, அதனால் தான் இப்படிப் பேசுகிறாரோ" என்று மீண்டும் சுதேசமித்திரனைப் படித்துப் பார்த்தேன். ஆனால், மாயவரத்திலிருந்து தான் சென்றிருக்கிறார் என்று அறிந்தேன். ஏற்கனவே தமிழ் நாடு என்று பெயரிட்டிருந்தால், நாம் சட்ட மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருவானேன், மத்திய அரசுக்கு **அனுப்பு**வானேன், பாராளு மன்றத்திலே தீர்மான வடிவிலே அது கொண்டுவரப்படுவானேன், மேலவைக்கு அனுப்பப்படுவானேன், இந்தியக் குடியரசுத் தலைவர் சட்ட நகலில் கையெழுத்திடுவானேன், பிறகு நாம் அதற்கு விழா கொண்டாடுவானேன்? இதையெல்லாம் எண்ணிப் பார்த்தால், யாருக்கு தடுமாற்றம், யார் கையில் திட்டமில்லை, யார் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு குலைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியவரும் என்பதை கூறிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த **தலைவர் அவர்களுக்கும்**, மன்ற **உறுப்பினர்களுக்கும்** நன்றி கூறி, **விடை** பெறுகிறேன். **வணக்கம்.**

***திரு. கே. என். குமாரசாமி :** 1969–70-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை **தமிழக** நிதி அமைச்சர் திரு மதியழகன் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். ரூ. 268·66 கோடி வருவாய், ரூ. 285·37 கோடி செலவு, ஆக துண்டு விழும் தொகை ரூ. 16·71 கோடி என்பதாக ஒரு கணக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட் பற்றாக்குறை அளவிலே இருக்கிறது என்று சொன்னாலும், மத்திய அரசிடமிருந்து எதிர்காலத்தில் மாநில அரசின் திட்டங்களுக்கு நிதி கிடைக்கும் என்ற அடிப்படையில், அந்த நம்பிக்கையோடு இந்த பட்ஜெட்டை தயாரித்திருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு இந்த நம்பிக்கைக்கு பாத்திரமாக மாநிலங்கள் எதிர்பார்க்கிறபடி அப்படிப்பட்ட திட்டங்களுக்கு வழிவகை செய்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட முடியுமா என்பது சந்தேகம்தான், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. வரி போடுகிற அதிகாரம், வரி வசூலிக்கின்ற அதிகாரம், மாநிலங்களுக்கு மானியம் அளிக்கின்ற அதிகாரம், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற மானியங்களை நிர்வகிக்கும் அதிகாரம் ஆகியவைகள் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது.

ஆகவே, அவர்கள் இஷ்டத்திற்கு ஏழை எளியவர்கள் மீது வரிபோட்டு, தயவு தாட்சண்யம் இல்லாமல் வரிபோட்டு வசூலிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நாம் இந்த மாநிலத்தில் ஏழை எளியவர்கள் மீது வரி போடக் கூடாது, ஏழை எளியவர்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் பண்டங்களின் மீது வரி போடக் கூடாது என்ற கருத்தில் இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் ஏழைகளின் மீது வரி போட்டிருக்கிறார்கள். விவசாயிகள் உபயோகப்படுத்தும் உரத்தின் மீது வரி போட்டிருக்கிறார்கள். அதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படப் போகிறது. இந்த மாகாணத்தின் அபிவிருத்தியைப் பொறுத்த அளவிலே அக்கறை மக்களுக்கும், மாநில அரசுக்கும் இருக்கிறதே ஒழிய, மத்திய அரசின் நிலைமையிலிருந்து பார்த்தால், அவர்களுக்கு அந்த அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அந்த நிலையில் இன்றைக்கு மத்திய அரசின் போக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்தந்த மாநிலங்களிலுள்ள மக்களுடைய வாய்ப்புகளை பயன்படுத்தி, அந்தந்த மாநிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். மத்திய அரசு அதிக அதிகாரங்களை வைத்துக் கொண்டு மாநில அரசுகளை ஆட்டிப் படைக்கும் சூழ்நிலை மாற வேண்டும். அதிக அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும். அதன் மூலம் தான் மாநிலத்தில் இருக்கிற மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும், பல பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிட்டும். இந்த வாய்ப்பு இப்பொழுது இல்லாமல் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக பிற்போக்கான நிலைமைகள் மாநிலங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாநில அரசு மத்திய அரசை எதிர்பார்ப்பதைக் காட்டிலும், மாநிலத்தில் இருக்கிற நிலைமைகளை சரியாகப் புரிந்துகொண்டு, திட்டங்களை வகுக்கும் அதிகாரம் வரி வசூலிக்கிற அதிகாரம் எல்லாம் மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, பெரிய பாசனத் திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் கொண்டு வரப்படவில்லை. காரணம் பணமில்லை என்று சொன்னாலும், பூமியில் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு தமிழகத்தில் உள்ள பாசனம் கிட்டாத பகுதிகளுக்கு பாசனம் கிட்டுவதற்கு பெரிய நீர்ப்பாசன திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கோவை ஜில்லா போன்ற பகுதிகளிலே பாசனத் திட்டம் இருப்பதாக 1965-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசாங்கம் — அப்பொழுதிருந்து போன அரசாங்கம் — நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான முதற் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறது. அந்தக் குறிப்பில் 67-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு கே. என். குமாரசாமி] [1969 மார்ச 5

"நான்காவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்களில் அவனாசி பகுதிக்கும், கோவை மாவட்ட மேட்டு நிலங்களுக்கும் பாசன வசதிகள் அளிப்பதற்கான திட்டம் மிக முக்கியமானதாகும். பில்லூர் நீர்த்தேக்கத்திலிருந்து பம்பு மூலம் இறைத்து பவானியின் வலது கரையில் உள்ள ஒரு புதிய கால்வாயில் அத் தண்ணீரைச் சேர்ப்பது மூலம் இத் திட்டம் நிறைவேற்றப்படும். குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட தண்ணீர் உள்பட 12,600 மிலியன் கன அடி தண்ணீரைப் பயன்படுத்தி கோயம்பத்தூர் மாவட்டத்தில், புன்செய் பாசனம் பெறும் 108,000 ஏக்கர் நிலத்திற்கு இரண்டு முறைகளில் பாசன வசதி அளிப்பதே அதன் நோக்கமாகும். இத் திட்டத்திற்காக, ரூ. 600 லட்சம் செலவு ஆகுமென மதிப்பிடப்படுகிறது. அதன் மூலம் 27,300 டன் அதிக உணவு உற்பத்தி கிடைக்கும்." என்ற ஒரு திட்டத்தை அப்பொழுது தீட்டி யிருக்கிறார்கள். இப்பொழுது அந்தத் திட்ட மெல்லாமீ இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு இப்படிப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தேவை. நதி நீர்ப் பிடிப்பில் எங்கெங்கு தண்ணீர் இருக்கிறதோ அங்கிருந்தெல்லாம் தண்ணீரை விவசாயிகளுக்குக் கொண்டு கொடுப்பதன் மூலம் நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு மாநில அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வதைப்பற்றி சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து, இந்த அரசாங்கம் அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளிப்பதற்கு முன் வரும் என்று நம்புகிறேன்.

இரண்டாவதாக, பஞ்சாலைகள் சம்பந்தப்பட்ட மட்டில், இந்த பட்ஜெட்டில் ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேசியக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்து, அதில் முதலீடு செய்வதாக அரசாங்கம் சொல்லி யிருக்கிறது. மூடப்பட்ட ஆலைகள் மட்டும்மல்ல, மற்ற ஆலைகளிலும் சிக்கன சீரமைப்பு செய்து, மெஷினரியை நவீனப்படுத்துவதற்கும் அந்தப் பணத்தை செலவு செய்யப் போவதாகச் சொல்லப்பட் டிருக்கிறது. மூடப் பட்ட மில்கள் பூரணமாக திறக்கப்படுவதற்கு வழிவகைகள் செய்யப்பட வில்லை. ஏதோ அரசு சொல்வதை நம்பிக்கொண்டிருக்கிற தொழி லாளர்கள், அரசாங்கம் கார்ப்பரேஷன் அமைத்து, அதன்மூலம் மில்களைத் திறக்கப் போகிறார்கள் என்று நினைத்தார்கள். ஆனால், இந்த பட்ஜெட்டில் அவர்களுக்கு ஏமாற்றம் தான் ஏற்பட் டிருக்கிறது. மத்திய அரசு 51 சத விகிதம் பணம் கார்ப்பரேஷனுக்கு ஒதுக்குவதாக அவர்கள் சொல்கிறார்கள். மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கொடுக்கிற தொகை ரூ. 35 லட்சம் என்று வைத்துக் கொண்டாலும், ஒரு மில்லைக் கூட எடுத்து நடத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படாது என்றே கருதப்படுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் இந்த பட்ஜெட்டில் இல்லாவிட்டாலும், அதற் கான உண்மையான வழி முறைகளை கண்டுபிடித்தாகவேண்டும். அதற் காக அரசு பிரத்தியேகமான முறையில் அதிகப் பணம் அளிப்பதற்கு முன்வரவேண்டும். அரசாங்கம் கேரண்டி கொடுத்து, அந்த "கேரண்டி" மூலம் மில்கள் பொருளுதவி பெற்று திறக்கப்படுவதற்கான நிலைமையை
பி. ப. ஏற்படுத்த வேண்டும். அப்படியும் நடத்த முடியாமல் இருக்கும் நிலைமை
1-30 யிலுள்ள மில்களை, அந்தப் பணத்தை உபயோகப்படுத்தி, அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கான வழிவகைகளைக், காணவேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. வேலை யில்லாத் திண்டாட்டப் பிரச்சினை பற்றி அநேகமாக கவலைப் பட்டதாகக் காணோம். வருஷத் திற்கு கிட்டத்தட்ட ஆயிரக் கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு வேண்டு கிறார்கள். போதிய வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை இல்லை. மூலதனம் போட்டு தொழில் நடத்தும் தனியார் துறையை மட்டும் நம்பி நம்முடைய சர்க்கார் செயல்படும் என்றால், அது நிச்சயமாக வருகின்ற மக்களுக்கு வேலை கிடைக்க உத்தரவாதம் கிடைக்காது. ஆகவே, அரசாங்கமே பொறுப் பேற்று மத்திய அரசு, மற்ற நாட்டவர் கூட்டுறவோடு சேர்ந்து தொழில்கள் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் துறையில், லாபம்

1969 மார்ச் 5] [திரு கே. என். குமாரசாமி]

வந்தால் தான் அவர்கள் தொடர்ந்து தொழிலை நடத்துவார்கள். லாபம் வரவில்லை என்றால், அந்தத் தொழிலை மூடிவிட்டுப் போய்விடுவார்கள். சமூகத்தில் அரசே இவற்றை நடத்தும் அளவில் பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில், குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினை பல வருஷங்களாக இருந்துக் கொண்டே இருக்கிறது. நகரப் புறங்களை எடுத்துக் கொண்டால்,பத்து மைல் தூரமாக இருந்தாலும், அந்த அளவிலும் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்திற்கு பணம் உடனடியாக அரசைக் கேட்டு வாங்கி பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு விடுகிறார்கள். ஆனால், கிராமங்களில், குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலைதான் இருக்கிறது. கடந்த 15 வருஷங்களாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. இந்த அரசு சரியான முடிவு எடுக்கும் என்று சொல்லப்படுகின்றது. என்ன முடிவு என்று புரியவில்லை. கிராம மக்கள் அல்லல் படும் துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். இந்த அரசு இனிமேலாவது இந்தப் பிரச்சி னைக்கு தீர்வு காணுவதில் பெரு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே நேரத்திலே, குறைந்த விலையில் அரிசி கொடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கேட்கிறார்கள். குறைந்த கூலியில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளிகள், ஒரு நாளைக்கு 3 ரூபாய் கூலி பெறுகிறார்கள். குறைந்த விலையில் அரிசி கேட்கிறார்கள் என்றால், அதில் தவறு எதுவும் இல்லை. அந்தக் குறைந்த விலையில் அவர்களுக்கு அரிசி கிட்டும் வகையில், சர்க்கார் பட்ஜெட்டில் இடம் இல்லை. அப்படி அவர்கள் கேட்பதிலும், அரசு கொடுக்க வேண்டும் என்பதிலும் நியாயம் இருக்கிறது. அதற்கேற்ப நிலைமைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறது அரசு என்று கேட்கிறேன். பட்டணத்தில் இருப் பவர்கள் என்றால், 200, 300 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள். அவர் களுக்குக் குறைந்த விலையில் அரிசி இங்கே கிடைக்கிறது. ஆனால், அங்கே தொழிலாளர்களுக்கு அதிகபட்சம் ரூ. 120 தான் இருக்கும். அந்த வரும் படியை வைத்துக் கொண்டு குடும்பத்திற்கு வேண்டிய அரிசியைக் குறைந்த விலையில் கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. அந்த நிலைகளைச் சுட்டிக் காட்டும் போது, அமைச்சர் முயற்சி எடுக்கிறோம், படிப்படியாக கொண்டு வரப் போகிறோம் என்கிறார்கள். அந்தக் காலம் எப்பொழுது வரும் என்று எதிர் பார்க்கலாம் என்பது தெரியவில்லை.

இந்தக் கோவை மாவட்டத்தில் பஞ்சப் பிரதேசம் என்று சொல்லி, ரூ. 18 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இது கோவைக்குப் போதுமானது இல்லை. ரூ. 18 லட்சம் என்றால், குடி நீர்ப் பிரச்சினை ஒன்றுக்கே இது போதாது. ஆகவே பஞ்சப் பிரதேசத்துக்கு உதவி செய்ய குளம் குட்டைகளை அபிவிருத்தி செய்ய, அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் அப்பொழுது தான் நிவாரண வேலைகளை நடத்த முடியும். அந்த முறையில் அரசு முயற்சிகள் எடுக்க வேண்டும். குடி தண்ணீருக்கே இரண்டு மைல் போக வேண்டியதாக இருக்கிறது. இந் நிலையில் வேலைக்கு எங்கு போவார்கள்? பட்டினி கிடக்கும் அவர்களுக்கு கஞ்சித் தொட்டி வைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். 1953-ல் பஞ்சம் வந்த போது, கஞ்சித் தொட்டி வைக்கப் பட்டது. அன்று கலெக்டராக இருந்த திரு. ராயப்பா அவர்கள் செய்தது போல இப்பொழுதும் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். இப் பொழுது அந்த மாதிரியே கடுமையான நிலை வந்திருக்கிறது. ஏழை அரிசனங்களுக்கும், எளியவர்களுக்கும், வேலை யற்றவர்களுக்கும், பாது காப்புக் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, நாளை காலை 900 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம். பி. ப.
1-35

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other Papers

71. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 40.

APPENDIX I.

[*Vide* Answer to Unstarred Question No. 3 on page 22]

Press Release No. 433. Dated : 2nd December 1967.

GOVERNMENT SERVANTS' CONDUCT RULES

Rule 4 of the Supplementary Rules to the Madras Government Servants' Conduct Rules, 1960, clearly states that " no Government servant shall make representations to Ministers direct or send direct to Ministers advance copies of such representations made by him to the Government through the proper official channel ". Rule 18 of the Madras Government Servants' Conduct Rules prohibits Government servants from bringing " Any political or other outside influence to bear upon any superior authority to further his interests in respect of matters pertaining to his service under the Government ". But there have been some instances where pressure has been brought to bear on Ministers by Government servants for securing personal benefits such as a transfer or avoidance of a transfer. Such a practice is not only against the rules but also undermines the morale of Government servants. Government, are, therefore, keen to put an end to this practice. In all cases, where Government servants have grievances, written representations could be made to the appropriate authorities through the immediate official superiors.

Government reiterates that bringing pressure to bear on Ministers and superior authorities will constitute a violation of the Conduct Rules. Government also informs all Heads of Departments and their subordinates that disciplinary action is proposed to be initiated in future in such cases of violation.

செய்தி வெளியிடு: 433 டிசம்பர் 2, 1967.

அரசு ஊழியர் ஒழுங்கு நடத்தை

அமைச்சர்களை நேரடியாக அணுகக் கூடாது.

அரசு ஊழியர் யாரும் அமைச்சர்களிடம் நேரடியாக முறையிடவோ' அல்லது அரசுக்கு முறைப்படி அனுப்பும் கோரிக்கைகளின் நகல்களை அமைச்சர்களுக்கு முன்னதாக அனுப்பவோ கூடாது, என்று, 1960-ம் ஆண்டு, தமிழக அரசு ஊழியர்களின் ஒழுங்கு நடத்தை விதிமுறைகளுக்கான துணை விதிகளின் 4-வது விதி தெளிவாகக் கூறுகிறது. அரசு ஊழியர்கள் தங்களது வேலை சம்பந்தமாகத் தங்களது கோரிக்கைகளை விரைவுபடுத்து வதற்காக, எந்த மேல் அதிகாரிகளின் மீதும் அரசியல் அல்லது வெளியார் செல்வாக்கைக் கொண்டு வருவதை, தமிழக அரசு ஊழியர்களின் ஒழுங்கு நடத்தை விதிமுறைகளின் 18-வது விதி தடை செய்கிறது. இருந்தபோதி லும், அரசு ஊழியர்கள் வேலை மாற்றம் பெறுவது அல்லது வேலை மாற்றத்தைத் தவிர்ப்பது போன்ற நன்மைகளைச் சாதித்துக் கொள்வதற்காக, அமைச்சர்களிடம் சிபாரிசு கொண்டுவரும் சில நிகழ்ச்சிகள் நடந்திருக் கின்றன. இம்மாதிரி செயல் விதிமுறைகளுக்கு முரணானது மட்டுமின்றி, அரசு ஊழியர்களின் ஒழுக்கத்தையே சீர் குலைப்பதாகும். எனவே, இந்தப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்று அரசு கருது கிறது. அரசு ஊழியர்களுக்குக் குறைகள் இருக்கக்கூடிய எல்லா விஷயங் களிலும், அடுத்துள்ள மேல் அதிகாரிகள் மூலம் உரிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக முறையீடு செய்து கொள்ளலாம்.

அமைச்சர்களுக்கோ, அல்லது மேல் அதிகாரிகளுக்கோ சிபாரிசுகள் கொண்டு வருவது, ஒழுங்கு விதிமுறைகளை மீறுவதாகும் என்பதை அரசு வலியுறுத்த விரும்புகிறது. எதிர்காலத்தில் இப்படி மீறப்படும் சந்தர்ப்பங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எல்லாத் துறைகளின் தலைவர்களுக்கும், அவர்களது சார்நிலைத் துறையினருக்கும் அரசு தெரிவிக்கிறது.

APPENDIX II.

[*Vide* Answer to Unstarred Question No. 9 on page 25]

[*Subject.*—Elections—Payments from discretionary grant on the eve of elections—Instructions of Election Commission]

ELECTION COMMISSION OF INDIA

Talkatora Road,
New Delhi-1.
Dated the 25th June 1968
[Ashadha 4, 1890 (Saka).]

No. 82/HN/24/67.

To

All the Ministries of the Government of India.

The Chief Secretaries to the Governments of all the States/All Union Territories Administration.

Subject—Payments from discretionary funds on the eve of elections.

Sir,

I am directed to enclose a copy of the relevant extracts from the Judgment of the Supreme Court in Civil Appeal No. 1632 (NCE) of 1967 against the order of the High Court for the States of Punjab and Haryana in Election Petition No. 24 of 1967 and to state that in the interest of purity of elections the Commission is in respectful agreement with the views expressed by the Supreme Court that the distribution of money from the discretionary grants on the eve of an election should be avoided. Although such disbursement may be for the general public good, it is an evil practice even if it may not be a corrupt practice. The Court has observed that " the dividing line between an evil practice and corrupt practice is a very thin one". It should be understood that the energy to do public good should be used not on the eve of elections but much earlier and that even slight evidence might change this evil practice into corrupt practice ".

2. Similar pronouncements have been made by the Courts in certain other cases also. The relevant extracts from the judgments are reproduced below :

(*a*) *Shri Khader Sheriff* v. *Munuswami Gounder* (1955) *Supreme Court.*—" T " has been frequently pointed out that while it is meritorious to make a donation for charitable purposes, if that is made at the time or on the eve of an election, it is open to the charge that its real object was to induce the electors to vote in favour of the particular candidate ".

(*b*) In the *Wigan Case* (2 O'M & H) Justice Bowen J., one of the most noted Judges of England in the second half of the nineteenth century had observed : " In the second place, I wish to answer the suggestion that this was merely charity. Charity at election times ought to be kept by politicians in the background. No doubt the distress was great in Wigan at this time, and there was probably many a fireless and breadless house throughout the town; but the persons who ought to have relieved the distress were not politicians of Wigan; they ought to have stood aloof; they had another duty to discharge on that day and they could not properly discharge both duties at the same time, in truth, I think, it will generally be found that the feeling which distributes relief to the poor at the election time, though those who were the distributors may not be of aware of it, is really not charity, but party feeling following in the steps of charity, wearing the dress of charity, and mimicking her gait ".

3. While in the interest of the general good of the public it may be necessary to place discretionary grants at the disposal of the Ministers. Certain restrictions should be imposed, either by providing in the rules governing the disbursement of the grants or otherwise, that payments out of the discretionary grants should not be made when a countrywide general election, or a mid-term general election or even a bye-election is in prospect; and in any case it should not be made after the notification calling any such election is issued. The rules may also require that the benefits are, as far as possible, uniformally distributed within the State and not utilised in a particular district or constituency alone.

4. The Commission desires that in the interest of fair and free elections certain healthy conventions should be introduced and if necessary changes should also be made in the rules regulating the distribution of discretionary grants by Ministers so that no disbursement or promise of disbursement from the grant is made on the eve of an election. I am, therefore, to request that the observations made by the Supreme Court and the High Court of Punjab and Haryana may be brought to the notice of the authorities concerned for such action as may be considered necessary.

The receipt of this letter may kindly be acknowledged.

Yours faithfully,
(Signed) K. S. RAJAGOPALAN,
Secretary to the Election Commission,

Extracts

IN THE SUPREME COURT OF INDIA

(Civil Appellate Jurisdiction)

Civil Appeal No. 1632 *of* 1967.

Ghasi Ram ... ... Appellant

versus

Dal Singh and Others ... ... Respondents

Judgment

* * * * * *

* * * * * *

Under the first head of charges it is stated that he promised a payment of Rs. 20,000 to the Gram Panchayat, Igra; Rs. 5,000 on February 15, 1967 for a sacred tank in village Ram Rai; Rs. 1,000 on January 9, 1967 to the Gram Panchayat, Bahmanwas; Rs. 2,500 in December 1966 to the Gram Panchayat, Bibipur and Rs. 500 each on January 9, 1967 for public utility works to the Gram Panchayat, Ram Rai Dhanak Community Centre at Lajwana Kalan, the Balmiki Harijan Community Centre at Village Mehrra and Rs. 500 for the repair of a Harijan Well and Lajwana Khurd. It is said that before these grants were made the Minister visited these several villages and the voters told him that they were not going to vote for him as he had done nothing for their uplift and on his promising the said sums the voters were won over with the result that the answering respondent secured the bulk of the vote from these villages. The High Court carefully considered the evidence led to prove these allegations and came to the conclusion that it fell short of the requirements of S. 123 of the Act. It is contended before us that the High Court was in error in reaching this conclusion both in point of fact and in point of law. We shall first dispose of the facts before proceeding to examine what we consider to be the corrupt practice in this context.

The donation to the Gram Panchayat, Igra is attempted to be proved through the evidence of one Mehtab Singh (P.W. 10). He stated that the answering respondent, as Chairman of Block Samiti had promised Rs. 5,000, but had not paid it. When he came for canvassing, the voters were unwilling to vote for him because he had not kept his promise. He then persuaded them and promised to pay some money if they gave him their support. The High Court pointed out that this witness was a discharged Sub-Inspector and the Polling Agent of the election petitioner. He was found to be telling lies when he said that the amount was received seven days after the promise, because the record clearly showed that this money was paid only in March 1967 more than a month after the poll. Lakhi Ram (P.W. 5) admitted that there was a village school which was lying incomplete and money was needed for its completion. It will be noticed that this money was not paid directly to any voter or voters. It was handed over to the

Gram Panchayat for utilization. This meant that it would have gone to the benefit of those who were going to support the answering respondent and also those who were opposed to him. The High Court did not believe the evidence that there was any bargain for votes as required by the definition of corrupt practice. On a reading of the evidence we are satisfied that the village community asked him for help and the answering respondent promised to help them to complete works of public utility. The amount was paid after the election was over.

Similarly, the sum of Rs. 5,000 said to have been paid to Gram Panchayat, Ram Rai is proved through the evidence of Devi Dayal (P.W. 11) and Mangal Singh (P.W. 12). This money was sanctioned on December 8, 1966 even before the Congress had given ticket to the answering respondent. The evidence here also does not show that there was any bargain for votes. The two witnesses were proved to be hostile to the answering respondent. Devi Dayal was his rival candidate in 1952 and had made several applications against the answering respondent. The application for the Congress ticket was made by the answering respondent on December 6, 1966 and the grant being made on December 8, 1966, the evidence of Devi Dayal that the grant was after the nomination was definitely false. Mangal Singh is the editor of weekly journal, which published several complaints against the answering respondent. The answering respondent stated that he had collected Rs. 25,000 for the sacred tank even before he became Minister, that through his efforts a pucca road, a dispensary, a veterinary hospital a post office and water works were established. He had also got a primary school upgraded. Ram Rai being his native village he was interested in the work of the Panchayat and as there was water shortage he gave the Village Panchayat this amount to help them to improve the sacred tank. The High Court did not find any evidence which would bring the matter within S. 123. It declined to believe these hostile witnesses and on a consideration of the evidence were not satisfied that the conclusion was erroneous.

The sum of Rs. 1,000 was paid to the Gram Panchayat, Bahmanwas for a primary school. This was a month or a month and quarter before the election. This was sought to be proved through Ram Dutt (P.W. 20). It is in evidence that Ram Dutt was very friendly with the election petitioner and even gave his truck for the use of the petitioner. Evidence further shows that the school building was without a roof for some time and the children used to sit under trees. We are satisfied that this amount cannot be described as a bribe.

There was no evidence to prove the payment of Rs. 2,500 to Bibipur and as none was brought to our notice this point was rightly decided against the election petitioner.

The four sums of Rs. 500 each were paid for improvement of Community Centres. The attempt to prove that they were a part of the bargain was discountenanced by the High Court.

In respect of the amount paid to Lajwana Kalan the evidence was that of Ram Singh (P.W. 13), the polling agent of the election petitioner, Shri Pula (P.W. 14), whose demeanour was commented upon by the learned Judge, and one of the candidates Mangeram (P.W. 19) and Jailal (P.W. 21), a helper of one other candidate. Their evidence was found to be unsatisfactory either because of the interest in themselves or in other candidates or because of internal discrepancies and defects. We have read the evidence and we see no reason to differ. In support of the other two payments of Rs. 500 each, the only objection raised before us was that the payments were made to the Dhanak and the Balmiki Communities with a view to obtaining their votes because, it was contended that there was no Community Centre at these villages. Eveidence, however, shows that there are Paras at these villages where the Harijan Community meets. In fact, in the petition and the evidence these are referred to as Community Centres. This action of the answering respondent was not found to amount to a corrupt practice and on a consideration of the evidence we are in agreement with the High Court.

* * * *

* * * *

In our opinion the law requires that a corrupt practice involving bribery must be fully established. The evidence must show clearly that promise of gift directly or indirectly was made to an elector vote or refrain from voting at an election. The position of a Minister is difficult. It is obvious that he cannot cease to function when his election is due. He must of necessity attend to the grievences. Otherwise he must fall. He must improve the image of his administration before the public. If everyone of his official acts done bonafide is to be construed against him and an ulterior motive is spelled out of them, the administration must necessarily come to a stand-still. The State of Haryana came into existence on November 1, 1966. With an election in the near future, the political party had to do acts of a public nature. The grant of discretionary grants were part of the general scheme to better community development projects and to remove the immediate grievances of the public. The money was required to be spent in about three months' time. The sanction of the Minister had often the concurrence and recommendation of his subordinate staff. It is for this reason that the orders about the improvement of the supply of water were not pressed. They were incapable of being construed against the first respondent. Therefore, emphasis was placed upon the distribution of money. The money was not distributed among the voters directly but was given to Panchayats and the public at large. It was to be used for the good of those for and those against the candidate. No doubt they had the effect of pushing forward his claims but that was inevitable even if no money was spent but good administration changed the People's condition. We cannot, therefore, hold that there was any corrupt practice. If there was good evidence that the Minister bargained directly or indirectly for votes, the result might have been different but there was no such evidence.

Although we have held in this case that the action of the first respondent cannot be characterised as not innocent, we are constrained to say that the attitude of Government is far from laudable. Elecion is something which must be conducted fairly. To arrange to spend money on the eve of elections in different constituencies, although for general public good, is when all is said and done an evil practice, even if it may not be corrupt practice. The dividing line between an evil practice and a corrupt practice is a very thin one. It should be understood that energy to do public good should be used not on the eve of elections but much earlier and that even slight evidence might change this evil practice into corrupt practice. Payments from discretionary grants on the eve of elections should be avoided.

* * * * * *

* * * * * *

(Signed) M. Hidayatullah, J.

(Signed) H. S. Hedge, J.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1969 மார்ச் 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

புயலால் சேதம்.

*186 வினா.— **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1967 நவம்பர், டிசம்பர் மாதங்களில் புயல் மழையின் காரணமாக ஏற்பட்ட சேதாரத்தின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: மொத்த விரயம் ரூ.1,77,29,810 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், எந்தெந்த மாவட்டத்திலே எந்தெந்த பகுதியிலே அந்தச் சேதாரம் ஏற்பட்டது என்ற விவரத்தைக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: விவரமான அறிக்கையாக இருக்கிறது. சபைமுன் வைக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அதை இப்போதே சொல்லவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அதையும் சொல்லத் தயாராய் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விவரமான அறிக்கை வைக்கிறேன் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இங்கு ஒரு விவரமான அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இதை இப்பொழுது சொல்வதென்றால், கொஞ்சம் நேரம் ஆகும். பரவாயில்லையென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்தால் சொல்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : 1967 நவம்பரிலே, விவசாயத்திற்குப் பெரிதும் பயன்பட்டுவந்த வீடூர் அணைக்கட்டு பெரிதும் சேதப்பட்டுவிட்டது. அது இன்னும் சீர்படுத்தப்படவில்லை. அது எப்போது சீர்ப்படுத்தப்படும், அது விவசாயத்திற்கு எப்பொழுது பயன்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, consequent on the bad effects of cyclone and heavy rains in Madurantakam and other parts of the Chingleput district, what are the relief works that have been undertaken to rectify the damages caused by these floods and heavy rain?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புயலின் விளைவாக ஏற்பாடுகள் செய்ததையொட்டி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தென்னங்கன்றுகள் பயிரிடுவதற்காக இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன

சேதாரம் அடைந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது. உடைப்பு எடுத்த ஏரிகள் செப்பம் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி இந்த மன்றத்திலே விவரமான அறிக்கை ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராமநாதபுரம் ஜில்லாவிலே புயலால் பாதிக்கப்பட்ட பஞ்சாயத்து ரோட்டுகளுக்கு பணம் கொடுத்திருக்கிருர்கள். ஆனால் எஸ்டிமேட்டைக் குறைத்துவிட்டதால் சரியாகப் பழுதுபார்க்கப்படவில்லை. கிராமங்களில் உள்ள சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அவைகளைச் சீர்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இராமநாதபுரத்திற்கு பெரும் அளவு பணம் செலவு செய்திருக்கிருர்கள். எந்த ரோட்டு அப்படி இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்யத் தயாராய் இருக்கிறது.

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: புயலினுல் ஏற்பட்ட சேதாரத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். உயிர் சேதாரம் ஏற்பட்டதா ? அப்படியென்றல் எவ்வளவு உயிர்களுக்குச் சேதாரம் ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 11 பேர்கள் இநதப் புயலின் காரணமாக உயிர் இழந்தார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 பேர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 பேர்கள், தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒருவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவர் இந்தப் புயல் பெருமழை காரணமாக மரணம் அடைந்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு வருஷங்களுக்கு முன்னுல் இதைப்பற்றிய விவரம் வந்துள்ளது.

திரு. கே. பி. எஸ். மணி : புயல் ஆண்டுதோறும் ஒவ்வொரு இடத்திலே அடித்துக்கொண்டிருக்கிறது. அதனுல் மீனவர் சமூகத்தினர் கடற்கரை ஓரத்திலே இருப்பவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். அவர்களுக்குப் பாதுகாப்புகொடுப்பதற்குப்பழைய அரசாங்கத்திலிருந்து இன்றையவரையும் எந்தவிதமான முறையும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றல் இனிமேலாவது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உரிய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. திரு. மணி அவர்கள் சொன்னபடி ஆண்டுதோறும் புயல் அடித்தது. ஆனுல் இந்த ஆண்டு புயல் அடிக்கவில்லை. புயலாக இல்லாமல் பல மாவட்டங்களில் இயற்கையின் கொடூரம் வறட்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபற்றிய அறிக்கை ஏற்கனவே இந்த அவையிலே படிக்கப்பட்டிருப்பதால், அதற்கு இப்போது போதுமான அவகாசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படியென்றல் ஒவ்வொரு மாவட்டத்திலும் சேதாரம் அடைந்தவர்களுக்கு எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது சம்பந்தமாகப் பழைய புஸ்தகங்களைத் திருப்பிப் பார்த்துக் கொள்ளலாம். இது மிகவும் பழைய கேள்வி ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. வீடுகள் நாசம் அடைந்திருக்கின்றன. எவ்வளவு ஏரிகள் சேதாரம் அடைந்துள்ளன, எவ்வளவு சொத்து சேதாரம் என்பவற்றை எல்லாம் அதிலே பார்த்துக்கொள்ளலாம். மத்திய அரசிடம் கடன் வாங்கி அவையெல்லாம் முடிந்துவிட்ட விவகாரம். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் நாம் என்ன செய்திருக்கிறேம், நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் ஒத்துழைப்பார்கள் என்பது தான் இப்போது இருக்கிற கேள்வி. அந்தக் கேள்வி மிகவும் காலம் கடந்த கேள்வி.

விவசாய வருமான வரி.

*187 **வினு—திரு. ஏ. எம். இ. ராஜா :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67, 1967–68-ல் தமிழ் நாட்டில் விவசாய வருமான வரி மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு மாவட்ட வாரியாக ?

(இ) இந்த வரிகளைச் சரிவர கட்டாமல் இருப்பவர்கள் மேல் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) அண்டு (இ) பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இ. ராஜா : கோவை மாவட்டத்தில், முன்னுள் அமைச்சராக இருந்த பழையகோட்டை பட்டையக்காரர் திரு. மன்றுடியார் அவர்களுக்குச் சொந்தமான கால்நடைப் பண்ணை ஒன்று இருக்கிறது. அந்தக் கால்நடைப் பண்ணைக்கு நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து சுமார் இரண்டாயிரம் ஏக்கர்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கின்றுர்கள். அது கால்நடைத் தீவனத்திற்காக மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலம். அந்த நிலத்திலே விவசாயம் செய்திருக்கின்றுர்கள். அந்த நிலத்திற்கு விவசாய வருமானவரி விதிக்கப்பட்டதா ? விதிக்கப்பட்டதெனில், எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. கால்நடைக்காக ஒதுக்கப்பட்டதிலே விவசாயம் நடைபெற்று, அதற்கான விவசாய வருமான வரி நிர்ணயிக்கப்பட்டதா, நிர்ணயிக்கப்படவில்லையா என்பதைப் பற்றிய விவரம் இல்லை. உறுப்பினரவர்கள் தனியாக ஒரு கேள்வி கேட்டால் அதனுடைய உண்மையான நிலவரத்தை மன்றத்திற்கு அறிவிக்கலாம்.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : மாவட்டவாரியாக விவசாய வருமான வரி வசூலிக்கப்படாமல் விடப்பட்ட தொகை எவ்வளவு ? அப்படி வசூலிக்கப்படாமல் விடப்பட்ட தொகையைத் துரிதமாக வசூலிப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் இந்த விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 1966–67-ம் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ. 1,53,32,607·14 ஆகும். இந்த அரசுபொறுப்பேற்றுக்கொள்ளுவதற்கு முன்பு பெறப்பட்ட தொகை இது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதாவது 1967–68-ம் ஆண்டில் இந்த வரியின் மூலம் ரூ. 1,65,95,016·06 வசூல் செய்திருக்கிறேம். இது உண்மையிலேயே ஒரு முன்னேற்றமான அபிவிருத்தியான நிலை. இது ரொம்ப அதிகமும் இல்லை. 1968-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி அன்றைய தினம் உள்ள புள்ளிவிவரப்படி, நமக்கு இந்த விவசாய வருமான வரி என்கிற வகையில் பாக்கி வரவேண்டிய தொகையே ரூ. 13,06,185 தான். சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வசூலிக்கப்பட வேண்டிய ஓரினத்தில், இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட தீவிரமான நடவடிக்கைகளின் பயனுக, குறைந்த தொகைதான், அதாவது சுமார் 13 லட்ச ரூபாய்தான் பாக்கியாக நின்றிருக்கிறது. அந்தப் பாக்கியும் இன்றைக்குப் பெருமளவுக்கு வசூலிக்கப்பட்டு, நிலுவை கணிசமாகக் குறைந்திருக்கக் கூடும். ரெவின்யூ ரிக்கவரி ஆக்டின்கீழ் இந்த வரி பாக்கியை வசூலிக்கக் கூடிய அதிகாரம் அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸ் அதிகாரிகளுக்கு இல்லை. அவர்கள் கலெக்டர் மூலமாகவும், தாசில்தார் மூலமாகவும் தான் வசூலிக்க வேண்டும். தொகை எவ்வளவு பாக்கி இருக்கிறது என்று இந்த விவசாய வருமான அதிகாரிகள் தாசில்தாருக்கு எழுதி, அவர்கள் மூலமாகத்தான் ரெவின்யூ ரிகவரி ஆக்டின் கீழ் வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த நடவடிக்கைகள் தான் மேற்கொள்ளப்படுகின்றன.

501–502ம் பக்கங்கள் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 6

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, திண்டிவனம், செஞ்சி உள்ளிட்ட தமிழகத்தின் எல்லா வறண்ட பகுதிகளிலும் விவசாய வருமான வரியை இந்த ஆண்டு வசூல் செய்வதில்லை என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா ? இந்த ஆண்டு வறண்டுவிட்ட காரணத்தால், எந்தப் பகுதிகளில் விளைச்சல் இல்லை என்ற நிலையைப் பரிசீலித்து, விவசாய வருமான வரியை இந்த ஆண்டு, வறண்ட பகுதிகளைப் பொறுத்த வரையில், ரத்து செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிற கேள்வி நல்ல சாரமுள்ள ஒரு கேள்விதான். அந்தக் கேள்வியை நாம் மறுப்பதற்கில்லை. வரியை ரத்து செய்வது, வரியை ஒத்திப் போடுவது என்பது வறட்சியின் அடிப்படையிலே வந்தது. சாதாரணமாக வறட்சி இருக்கிறது, அதனால் குடியானவர்கள் வரி கொடுக்கவேண்டியதில்லை என்று சொல்லும்போது, அது பெரிய மிராசுதார்களுக்கும் கண்டிப்பாகப் பொருந்தத்தான் செய்யும். ஆனால்எந்த ஊரில், எந்த இடத்தில் எந்த அடிப்படையில் செய்வது என்பதைப்பற்றிய அதிகாரம் கலெக்டர் அவர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. அந்தக் கலெக்டருடைய பரிந்துரையின் மீது வருவாய்த் துறை வாரியம் நன்றாக ஆலோசித்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும். அதற்கு மேற்கொண்டுதான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இதனால் வரியையே ரத்துசெய்யமாட்டோம் என்றும் சொல்லிவிட முடியாது. வரியை வசூலிக்காமல் விட்டுவிடுகிறோம் என்று சொல்லுவதும் சரியானதல்ல. ஒவ்வொன்றையும் அதனதன் தன்மைகளைப் பொறுத்துப் பரிசீலனை செய்து தக்க முறைகள் கடைப்பிடிக்கப்படும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவர் அவர்களே, விவசாய வருமான வரியைக் கணக்கிடுகையில், நஞ்சை நிலத்திலே பயிர்கள் விளைந்திருந்தும் அவற்றைப் புஞ்சையாகவும் தரிசாகவும் கணக்குக் காட்டுகிறார்கள், கிராம அதிகாரிகள். இது அரசுக்குத் தெரியுமா ? தெரிந்தால் இரகசியப் போலீஸ் மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்கெங்கே எப்படி எப்படி நடைபெறுகிறது என்பதை நன்றாகத் தெளிவுபடுத்தி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவாரானால், கண்டிப்பாக அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: இம்மாதிரி வரி கட்டாமல் இருக்கக் கூடிய சாதாரண மக்களிடத்திலே ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், வசதியுள்ளவர்களிடம், அவர்கள் இந்த அளவுக்கு வரி கட்டாமல் இருந்தும், பாக்கியை வசூலிக்க இத்தகைய தீவிர முயற்சி எடுக்கப்படுவதில்லை. இனிமேலாவது, அப்படிப்பட்டவர்களிடமிருந்து கட்டாயமாக வரி பாக்கியை வசூலிக்க இந்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முன்பே நான் விவரம் கொடுத்தேன். ஏறக்குறைய ஒன்றேமுக்கால் கோடி ரூபாய் விவசாய வருமான வரி வரவேண்டியதில், சுமார் 13 லட்ச ரூபாய்தான் அந்த ஆண்டு முடிவில் பாக்கியிருந்தது என்னும்போது, சரியாக வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது இந்த இலாக்காவால் என்பதுதான் பொருள். பழைய காலத்தில் நடந்ததை வைத்துக்கொண்டு அம்மையார் பேசுவது சரியானதல்ல.

திரு. கே. என். குமாரசாமி : விவசாய வருமான வரி, கோவை மாவட்டத்தில் 12 எக்கரா நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்குக் கூட விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த ஆண்டு கட்ட முடியவில்லை என்று கலெக்டரிடம் அணுகிக் கேட்டபோது, "அரசாங்கம்தான் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும், எங்களால் முடியாது" என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

1969 மார்ச் 6]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு திண்டிவனம் உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குச் சொன்ன பதிலேதான் இந்தக் கேள்விக்கும் பதிலாக அமையும். வரி கட்ட முடியாத தன்மை இருக்கிறதா, அது என்ன காரணத்தினால் என்பது குறித்துப் பரிந்துரை செய்கிற அதிகாரம் கலெக்டருக்கு இருக்கிறது. அவர் அனுப்பும் குறிப்பை வருவாய்த் துறை வாரியம் பரிசீலித்து அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யும். அவற்றின்பேரில் என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்யவேண்டிய இறுதி அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. எது செய்யப்பட வேண்டுமோ அதைக் கண்டிப்பாக அரசு செய்யும்.

திரு. சரு. இராம. கரியமாணிக்க அம்பலம் : வறட்சி காரணமாக நில வரி தள்ளுபடி செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் இந்த விவசாய வருமான வரியும் தள்ளுபடி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் முன்பே சொன்ன பதில் தான் இதற்கும். ஒன்றோடொன்று தொடர்புடைய ஒரு கேள்வி இது. விவசாயத்தில் வருமானம் வருகிறது என்ற அடிப்படையில்தான் விவசாய வருமான வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, பயிராகாமலிருந்தால் அதற்கு ஒருசில விதிகள், வரம்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எந்த நேரத்தில் வரிகள் ரத்து செய்யப்படலாம், எந்த நேரத்தில் அது ஒத்திப் போடப்படலாம் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு, எந்த எந்த விதிமுறையிலே இது வருகிறதோ, அந்த அடிப்படையில்தான் அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரியை வசூலிக்கும்போது, மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட கோவில்பட்டி போன்ற இடங்களில் உள்ள புஞ்சை நிலத்தைப் பொறுத்த வரையில், ஒரு ஸ்டாண்டர்டு எக்கருக்கு நான்கு எக்கரா என்று இருப்பதை ஒரு ஸ்டாண்டர்டு எக்கருக்கு எட்டு எக்கரா என்று முறைப்படுத்தி வசூலிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. கே. சகாதேவ கவுண்டர் : தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ் நாடு முழுவதிலும் வறட்சி இருக்கிறது. எங்கெங்கு வரி வஜா செய்ய வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிக் குறிப்புகள் எத்தனை வந்திருக்கின்றன ? எந்த எந்த இடங்களில் வரி வஜா செய்ய வேண்டும் என்ற உத்தரவை சர்க்கார் பிறப்பித்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முழுக்க முழுக்க ஒரு துணைக் கேள்வியில் முடிந்துவிடுகிற விவகாரம் அல்ல இது. இடத்திற்குத் தகுந்தாற்போல், அந்தந்த நிலைமைக்குத் தகுந்த மாதிரி கிராமக் கணக்கப் பிள்ளையிலிருந்து தொடங்கி கடைசி வரையில் சென்று முடிய வேண்டிய விவகாரம் இது.

Chingleput Collectorate

* 188 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the special administrative arrangements made by the District Collector to meet the essential needs of the people belonging to Saidapet and Ponneri taluks, consequent on the change of headquarters of Chingleput district from Saidapet to Kancheepuram?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சைதாப்பேட்டையிலும் அதன் அண்மைப் பகுதிகளிலும் உள்ள மக்களின் முறையீடுகளைக் கேட்டுக்கொள்ளுவதற்காக, சைதாப்பேட்டையில் உள்ள "பனகல் கட்டிடத்தில்" வெள்ளிக்

இழமைதோறும் காலை பத்து மணியிலிருந்து 1 மணி வரை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கியிருப்பார். அவர் ஒவ்வொரு திங்களிலும் வரும் முதல் புதன்கிழமையன்று கும்மிடிபூண்டியிலும் முதல் வியாழக் கிழமைதோறும் பொன்னேரியிலும் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களைப் பார்த்துப் பேசுவதற்காகவும், அவர்களுடைய மனுக்களைப் பெற்றுக்கொள் வதற்காகவும் வந்து தங்குவார். தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அவர் வர முடியாமற்போகுமானால், அப்பொழுது அவருக்குப் பதிலாக மக்களின் முறையீடுகளுக்குச் செவி சாய்ப்பதற்காக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் அங்கு வந்திருப்பார்.

THIRU K. VINAYAKAM: Sir, people who wish to represent their grievances to the Collectorate decide to come to these offices on the prescribed days. But more often it happens that the officers are not available on these days. If both the Collector and the Revenue Divisional Officer who deputises for him are not available, what alternative arrangement is made by the Collector for hearing the grievances of the people?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலெக்டரின் பி.ஏ. வருவார் என்று சொல்லியிருக்கிறாரே, நேர்முக உதவியாளர் என்றால் பி.ஏ. என்றுதானே அர்த்தம்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அல்லது கலெக்டரின் நேர்முக உதவியாளர் வருவார் என்றுதான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள புகாரை முதன்முறையாக இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். மாவட்டக் கலெக்டர் அவர்கள் இங்கு வந்துவிட்டுப் போகிறேன் என்று சொல்கிறார். பெரும்பாலும் வராமல் இருப்பதற்கு நியாயம் இல்லை எந்த வெள்ளிக்கிழமையில், எந்த புதன்கிழமையில் எந்த அதிகாரி வரவில்லையென்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மேல் நடவடிக்கை எடுக்க சௌகரியமாக இருக்கும். அப்படிப்பட்ட புகார் அரசுக்கு வந்தால், உடனே கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் மக்களின் குறைகளைத் தெரிந்து கொள்வதற்கும், மனுக்களைப் பெறுவதற்கும் கும்மிடிப் பூண்டி, பொன்னேரி, சைதாப்பேட்டை போன்ற இடங்களுக்கு வருவதாகச் சொன்னார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சீபுரத்திற்கு மாற்றப்பட்டதற்குப் பின்பு, மதுராந்தகம் தாலுகாவில் கீழ்க்கோடியிலுள்ள வர்கள் சுமார் 60 மைல், 70 மைல் தூரத்திலிருந்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, பொது மக்களின் குறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, மதுராந்தகத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வாரத் திற்கு ஒரு நாளாவது வருவாரா? அதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையைக் கவனிக்கலாம். தவறு ஒன்றும் இல்லை. ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் காஞ்சீபுரம் தலைநகராக இருக்கவேண்டு மென்று முடிவு செய்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்ட இடங் களில் பொது மக்களின் மனுக்களைப் பெறுக்கொள்வது என்பதெல்லாம் தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்தான். மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டம் முழுவதற்கும் சொந்தமானவர். அவர் மாவட்டம் முழுவதிலும் இருப்பதாகத்தான் பொருள். மதுராந்தகத்திற்குத் தேவையுள்ள நேரத் தில் கலெக்டர் பத்து தடவை கூட வந்து போகலாம். பொது மக்களோடு தொடர்பு கொள்வதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் கலெக்டருடைய பணி எந்த இடத்தில், எந்த நேரத்தில்

தேவைப்படுகிறதோ, அந்த இடத்தில் அந்த நேரத்தில் அவர் இருந்து பணி யாற்றுவார் என்றுதான் பொருள். என்னுடைய சொந்தக கருத்துப்படி, இந்த ஏற்பாடு மதுராந்தகத்திற்குத் தேவையில்லை என்பதுதான்.

திரு. கா. வேழவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப் பூண்டி, பொன்னேரி போன்ற இடங்களுககு கலெக்டர் அவர்கள் முறை யாக வந்து கொண்டிருக்கிறார்கள். கோட்டாட்சித் தலைவர் அவர்களும் உடன் வருகிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத் தலைநகராக ஆவதற்கு முன் னால் கோட்டாட்சித் தலைமை அலுவலகத்தைப பொன்னேரியில் வைக்க வேண்டுமென்ற யோசனை அறிஞர் அண்ணா அவர்களால் தெரிவிக்கப் பட்டது. அந்த யோசனை இப்பொழுது செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றி யோசனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி செங்கல்பட்டு மாவட் டத்தைப் பொறுத்தது. திரு கே. விநயகம் அவர்கள் இதையொட்டி ஒரு துணைக் கேள்வி கேட்பார்.

THIRU K. VINAYAKAM: Whereas the object of locating the headquarters of any district is to facilitate and cater to the needs of the people, whereas it has got to be located centrally in a district and whereas Kancheepuram is in the westernmost part of the district and almost on the border of the North Arcot District, will the Government think of the possibility of taking in Cheyyar and other adjoining taluks in the Chingleput District so as to make it a viable unit?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: From the interpellation of my hon. Friend Mr. Vinayakam I am unable to understand whether he supports the location of the headquarters at Kancheepuram. I am apprehensive whether he supports it or not. His statement that Kancheepuram is in the westernmost part of the district gives the impression that he is opposed to it. The latter part of his question supports the move and justifies the location of the district headquarters at Kancheepuram. Anyway these are taken into consideration as and when the necessity arises.

கலப்பு உரம்

* 173 விஞ—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா?

கலப்பு உரம் தயாரிக்க அனுமதி கோரி வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிப்பிலிருந்து ஏதேனும் விண்ணப்பம் வந்ததா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இல்லை.

Supply of rice

* 189 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether rice for the family card holders was not supplied at Tiruppur for want of stock in the middle of August 1968;

(b) whether rice is being supplied at Tiruppur under Rupee-a-Measure Rice Scheme; and

(c) the steps taken to maintain sufficient stocks of rice at the areas wherein rice is being supplied against family cards?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) திருப்பூர் நகராட்சிக்கும் திருப்பூரிலுள்ள துணியாலைத் தொழிலாளர்களுக்கும் பரம்பிக்குளம்-அழியாறு திட்டப் பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் திருப்பூர் வட்டத்திலுள்ள பேரூராட்சி மன்றங்களுக்கும் தங்கு தடையின்றி அரிசி வழங்கப்பட்டது. வெளிச் சந்தையிலேயே அரிசி தாராளமாகக் கிடைத்ததால், திருப்பூர் நகரின் சுற்றுப் பகுதிகளிலும் திருப்பூர் வட்டத்திலும் வேறு சில ஊர்களிலும் அரிசி கொடுப்பது 11-8-68 தேதியிலிருந்து நிறுத்தப்பட்டது.

(இ) இல்லை.

(உ) சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளிலும் முறைப்படி அமையாத பங்கீட்டுப் பகுதிகளிலும் மேற்கொண்ட பொறுப்பினை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு அரிசி இருப்பு இருப்பதற்காக, இம்மாநிலத்தில் கொள்முதல் நடவடிக்கை முனைந்து செயல்படுத்தப்படுகிறது.

திரு. டி. மார்டின் : பேரவைத்தலைவர் அவர்களே, பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் தற்சமயம் அரசு துயர் தணிப்பு வேலைகளை மேற்கொண்டு, அப்படிப்பட்ட இடங்களில் "ரூ பாய்க்கு ஒருபடி அரிசி" திட்டத்தை விஸ்தரித்து பஞ்சத்தைப் போக்கும் நிலையில், இந்தத் திட்டத்தை அரசு கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. கனம் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்க இடம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னுல் தமிழ்நாடு முழுவதிலும் "குடும்பக் கார்டு" மூலம் எவ்வளவு மக்களுக்கு அரிசி வழங்கப்பட்டது ? 1967-க்குப் பின்னுல் எவ்வளவு அதிகமான மக்களுக்குக் குடும்பக் கார்டு மூலமாக அரிசி வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு: ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, 1967 ம் ஆண்டைவிட தற்போது ஒரு லட்சம் டன் அரிசி கூடுதலாக வழங்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சப் பகுதிகளில், வறட்சிப் பகுதிகளில் மக்களுக்கு அரிசியைக் கொடுக்க முடியாவிட்டாலும், சோளத்தையாவது கொடுக்க அரசு முன்வருமா? இதை வினியோகிக்கும் உரிமையுயச் சில கடைக்காரர்களிடத்தில் விடாமல், வாரந்தோறும் நடைபெறும் சந்தைகளில் பொது மக்களுக்கு விற்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, சில பகுதிகளில் கோதுமையும், சோளமும் பொது மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதுபோல், சந்தையில் கொண்டுபோய் விற்பது என்றுல் பொது மக்களுக்கும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். குறிப்பிட்ட சில கடைகளில் கொடுக்கும்போதே மக்களுக்குக் கிடைக்காத நிலை இருக்கும்போது, சந்தையில் கொண்டுபோய்க் கொடுத்தால், யார் யாருக்குக் கொடுத்தார்கள், யார் யாருக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே, சந்தைகளில் கொண்டுபோய் விற்பது சரியான ஏற்பாடாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் விளைச்சல் இருந்த போதிலும் உணவுப் பற்றுக் குறை இருக்கிறது. க_யம் பஞ்சாயத்து யூனியனிலும் நெல் பயிர் இல்லை. ஆகவே, அப்பகுதிகளில் ஏற்கெனவே நியாய விலைக் கடைகளின் மூலமாகக் கொடுத்துவந்த அரிசியை நிறுத்திவிட்டார்கள். ஆகவே மீண்டும் அரிசி கொடுப்பதற்கு அரசு கவனித்து, தக்க ஏற்பாடுகள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால், என் நிறுத்திஞர்கள் என்ற விவரத்தைச் சேகரித்துக் கொடுக்க முடியும்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான, அவசியமான இடங்களில் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ, மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கோ அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கலெக்டர்களுக்குத்தான் அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எங்கே பற்றுக்குறை இருக்கிறதோ அங்கே தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. 9-30 பி.ப.

திரு: சி. கே. சின்னராஜ் கவுண்டர் : பஞ்ச நிவாரண வேலைக்காக 30 லட்சம் ரூபாய் அந்த மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தில் சிறு அணைகளைக் கட்ட அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி . இது ரேஷன் பற்றியது. அணைக்கட்டுகள் பற்றியது அல்ல. மக்களது வாங்கும் சக்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இது செய்யப்படுகிறது.

திரு. என். துரைபாண்டியன் : சில ஊர்களில் நாம் ரேஷன் போடவில்லை. கார்டு கொடுக்கவில்லை. அரிசியே கொடுப்பது இல்லை. அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அரிசி கொடுக்கவேண்டும் என்று வியாபாரிகள் வாங்கிக்கொண்டு வந்தால் அதையாவது அரசாங்கம் தடைசெய்யாமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரிசி கடத்திச் செல்வதை அரசாங்கம் அனுமதிக்காது.

* 190. வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1968 அக்டோபர் மாதத்தில் தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1968 அக்டோபர் திங்களில் 2,377 டன் அரிசி கிடைக்கும் வகையில் குறுவை நெல் பெறப்பட்டது. இதில் பாதியளவு சென்னை மாநகரின் தேவைகளை ஈடு செய்வதற்கெனக் கருதப்பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : செங்கல்பட்டு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நெல்லில் அந்தப் பகுதிக்காக ஒதுக்கப்படுவது எவ்வளவு ? மற்ற ஏரியாக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பாதி அளவு சென்னைக்கு ஒதுக்கப்படுகிறது. மீதியுள்ளது தான் அங்கங்கே கொடுக்கப்படுகிறது.

2. நடைமுறைக் கேள்விகள்.

அ. துணை வினுக்கள் கேட்க சந்தர்ப்பம் கிடைக்காமை குறித்து.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கடைக் கோடியில் இருக்கிற எங்கள் மீதும் தங்கள் பார்வை விழவேண்டும். மணிக் கணக்கில் கையை உயர்த்திக் கொண்டிருந்தாலும் கேள்வி கேட்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கோடியில் இருக்கிற திரு. கோமதிசங்கர தீட்சிதர் என் கண்ணில்படுகிறபோது திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கன்ண்ணில்படவில்லை என்று சொல்ல முடியாது.

எல்லோருமே கையைத் தூக்குகிறார்கள். நானும் கேள்விகள் போடாத வர்கள் வாரியாக, கட்சிவாரியாக—முறையாகத்தான் கேள்விபோட அனுமதித்து வருகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : ஒரு மணி நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டிருந்தும் ஒரு கேள்வி கூட அனுமதிப்பதில்லை. நேற்று முழுவதும் நான் கையைத் தூக்கிப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கருப்பையா அவர்கள் இப்படிச் சொல்வதை நான் ஏற்க முடியாது. வேண்டுமென்றால் அவர்களுக்கு எவ்வளவு துணைக் கேள்வி போட அனுமதித்திருக்கிறேன் என்பதற்கான விவரங்களைத் தருகிறேன். இந்தக் கேள்வி செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தது. ஆகவே, கேள்வியின் பொருளையும் வைத்துக்கொண்டு இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பாரபட்சமாகப் பார்க்காமல்—கேள்வியின் பொருளையும் சபையின் காலத்தையும் கருத்தில் கொண்டு முறையாகக் கேள்வி கேட்க அனுமதிக்கிறேன். 234 மெம்பர்களையும் கேள்வி கேட்க அனுமதிப்பது என்பது முடியாத காரியம்.

திரு. திர்த்தகிரி கவுண்டர் : என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒரு கேள்வி கேட்க என்னை அனுமதிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர்களுடைய தொகுதிபற்றிக் கேட்க அனுமதிப்பது என்றால் நேரம் இல்லை. அதைப்பற்றி நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் சொல்லிக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்பது முறை. இப்போது எழுப்பியிருக்கிறார்களே, அதற்குத் தங்கள் பதில் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி.

திரு. முனு ஆதி : செங்கல்பட்டு மாவட்டத்திலேயே பற்றாக்குறை இருக்கும்போது இதற்காக ஒதுக்கப்பட்டதில் 2,377 டன் சென்னைக்கு அனுப்பி விடுகிறார்களே, இப்படி இல்லாது எங்கள் மாவட்டத்துக் கொள்முதலை எங்கள் மாவட்டத்திற்கே ஒதுக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரைவைக்காக செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிற நெல்லை அவர்களுடைய மாவட்டத்திற்கே ஒதுக்கப்பட்டதாகக் கொள்ளக்கூடாது.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தஞ்சை மாவட்டத்தில் இருந்து கொள்முதல் செய்து பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆயினும் நாகப்பட்டினம் போன்ற இடங்களில் அரிசி கிடைக்காதபோது அதிகாரிகளைக் கேட்டால் மற்ற இடங்களுக்கு அனுப்பத்தான் இங்கே அரிசி வைக்கப் பட்டிருக்கிறது, உள்ளூருக்கு அல்ல என்கிறார்கள். இதுபோல அரிசி கிடைக்காத சமயங்களிலாவது இந்தப் பகுதிக்கு கொடுத்ததுபோக பாக்கியை மற்ற இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தஞ்சை மாவட்டத்திலேயே பற்றாக்குறை என்று திரு. ஞானசம்பந்தம் இப்போதுதான் சொல்கிறார்கள். நாம் அங்குள்ள நெல் முழுவதையும் கொள்முதல் செய்வதில்லை. அந்த மாவட்டத்தின் தேவைக்கானது போக உபரியாக உள்ளவற்றைத் தான் கொள்முதல் செய்கிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சையைப் பொறுத்த வரையில் நாகப்பட்டினம், மன்னார்குடி போன்ற பகுதிகளில் அரைவைக்காக நெல் வைக்கப்படுகிறது. பொதுவாக எங்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்

கிறது என்பது உண்மை. ஐயாயிரம் டன் செங்கல்பட்டுக்கு ஒதுக்கிவிட்டு, பாதியை எடுத்துப்போய் விட்டார்களே என்பது சரியானது அல்ல. மதுராந்தகம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் ரைஸ் மில் இருப்பதால் தான் அங்கே அரைத்து எடுத்துவர ஒதுக்குகிறோம். அங்கே ஒதுக்கியது அவ்வளவும் அந்தப் பகுதிக்கு என்பது பொருள் அல்ல.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தஞ்சை மாவட்டத்தில் இருந்து நெல்லைக் கொள்முதல் செய்து பிற மாவட்டங்களுக்கு அனுப்பி அரைவை செய்வதைவிட அந்த மாவட்டத்திலேயே அரைவை செய்து அரிசியாக பிற இடங்களுக்கு அனுப்புவது என்றால் கொண்டு செல்லும் செலவும் குறையும். அரசினர் அப்படிச் செய்வார்களா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி . தஞ்சாவூரிலும் செய்யப்படுகிறது. திருவாரூரில் அந்த நிலை இருக்கிறது.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : தஞ்சை மாவட்டத்தின் தேவைக்கே கூட இல்லாத அளவுக்கு வெளியே அதிகமாக எடுத்துப் போவதான பேச்சு உலவுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பேச்சு உலவுவதை நம்ப வேண்டாம். அதிகமான அளவு எடுத்துப் போகவில்லை. உபரியாக இருப்பதைத் தான் எடுத்துக்கொள்கிறோம். இன்னும் கொள்முதல் செய்ய முடியுமா என்பதற்கு வழிவகை சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. கா. வேழவேந்தன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் நெல் விளைச்சல் சுமாராக இருந்தபோது தஞ்சை மாவட்டக் கொள்முதல் நெல்லை பற்றாக்குறை அளவுக்குக் கொண்டுவந்தபோது விலைவாசி குறைந்தது. இப்பொழுது வறட்சி மீதூர்ந்து இருக்கிற காரணத்தினால் செங்கல்பட்டு கொள்முதலை நிறுத்தி தஞ்சை மாவட்டத்தில் இருந்து—அங்குள்ளவர்களே கொள்முதல் செய்துவர அனுமதிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செங்கல்பட்டுக்கு உரிய நெல் கண்டிப்பாக வந்துசேரும். 83 பைசா கோதுமையைக் கூட 75 பைசாவுக்குக் கொடுக்கிறோம். அதற்குமேல் சோளம், சிவப்பு கோதுமை கொடுக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள்

* 191 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் மருத்துவமனையை விரிவாக்குவதற்காக அதன் கிழக்குப் பக்கத்தில் உள்ள பள்ளி இடத்தை அரசு கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவ்விஷயம் சுகாதாரக் குடும்பக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருவதாலும், அங்கே தொழுநோய் பிரிவு ஒன்று இயங்கி வருவதாலும் தற்போதுள்ள இடம் போதாத காரணத்தினாலும், இந்தப் பள்ளி இடத்தையும் எடுத்துக்கொள்ள அரசு முடிவு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதனைச் செய்வதற்குத்தான் சர்க்கார் குறிப்பில் டி.எம்.ஓ. நடவடிக்கை எடுத்து வருவதாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக கடலூர் மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் கண் சிகிச்சைப் பிரிவு கிடையாது. சென்னைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அங்கே க்ளுகோஸ் டாலரன்ஸ் டெஸ்டுக்கும், பதாலஜிகல் லாப்ரடரி ஏற்படுத்துவதற்கும்—கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்துவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி மேலூர் மருத்துவ மனையைப் பற்றியது. அதைவிட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் தொகுதி கேள்வியைக் கேட்பது முறை அல்ல.

திரு. எஸ். ஜே: ராமசாமி : அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மேலூர் மருத்துவ மனையை விரிவுபடுத்த அதன் பக்கத்தில் உள்ள பள்ளிக் கட்டிடத்தை எடுத்துக்கொண்டால் பள்ளிக்கு என்ன செய்வது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும். பள்ளிக்கூடத்திற்கான இடம் போக பாக்கி இருக்கிற இடம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அது அந்தப் பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டு கிரவுண்டாக இருக்கிறது. இதை நல்ல முறையிலே பரிசீலனை செய்யவேண்டும். ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதில் ஆட்சேபணையில்லை. அதற்கு வேண்டுமானால் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே இதை மறுபடியும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதை விரிவாக்கவேண்டுமென்றால் அந்த மருத்துவ மனைக்கு அருகிலேதான் செய்ய வேண்டும். புறம்போக்கு நிலம் இருப்பதாலே வெகு தூரத்திலே செய்ய முடியாது. ஆகவே அந்தப் பள்ளியை ஒட்டிய இடத்திலேதான் செய்ய முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி : நாளைக்கு அந்தப் பள்ளிக்கூடம் விஸ்தரிக்கப் படக்கூடிய சூழ்நிலையையும் உத்தேசித்து மறுபடியும் பரிசீலனை செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தச் சூழ்நிலைகளைக் கருதித்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. இல. பலராமன் : பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் மருத்துவ மனை வைக்கப்படுவதால் தொத்து வியாதியஸ்தர்கள் மூலமாக வியாதி பரவிவிடும். எனவே பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் அருகாமையில் இருப்பது நல்லதா ? அந்த நிலையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது வேறுபட்ட கேள்வி. மருத்துவ மனையும் பள்ளிக்கூடமும் ஒன்றாக வைக்கலாமா வேண்டாமா என்பதை நல்ல முறையிலே பரிசீலனை செய்துதான் ஏற்பாடு செய்கிறோம். இதையெல்லாம் சுகாதார இலாகா ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்படுகிறது.

* 192 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : கோவையிலிருக்கிற இந்த குழந்தைகள் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாத காரணத்தாலே வசதிக் குறைவாக இருக்கிறது. எனவே அதிகமாகப் படுக்கை வசதிகளை ஏற்படுத்த விரைவிலே அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது 90 குழந்தைகளுக்காகப் படுக்கை வசதி அங்கே செய்துதரப்பட்டு இருக்கிறது. தினமும் 120 குழந்தைகள் அங்கே சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக நாளுக்கு நாள் தங்கிச் சிகிச்சை பெறுகிறவர்களும், அவுட் பேஷண்ட் ஆக சிகிச்சை பெறுகிறவர்களும் அதிகமான அளவில் வருவதால் அந்த அளவுக்குச் சிகிச்சையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் லைன்ஸ் கிளப்பினர் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்து தருவதாக விண்ணப்பம் செய்து இருக்கிறார்களே, அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்பொழுது அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. இரா. மாணிக்க வாசகம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் குழந்தைகளைக் கவனிப்பதற்குத் தனிப் பயிற்சிபெற்ற சில்ரன் ஸ்பெஷலிஸ்டுகளைப் போடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி அந்த மருத்துவ மனையிலே இருக்கிற குழந்தைகளின் படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவது குறித்து உள்ளது. அவர்களுடைய சிசிச்சைக்காக மேலும் மருத்துவ நிபுணர்களைப் போடுவது பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டறவு நூற்பாலை

* 193 வினா—**திரு. வெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலுள்ள திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் அரசு நியமித்துள்ள நெறியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) சட்டப்பேரவை உறுப்பினர் யாராவது நெறியாளராக நியமிக்கப் பட்டுள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெறியாளர்தான் நெறியாளர் குழுவில் அங்கத்தினர்களை நியமிக்கின்றார். தற்போது திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் கைத்தறி நெறியாளரால் நியமிக்கப்பட்ட 14 உறுப்பினர்கள் உள்ளனர்.

(இ) மேற்படி ஆலையின் நெறியாளர் குழுவில் திரு. ஆர். நாகசுந்தரம், எம்.எல்.ஏ. ஒரு நெறியாளராக இருக்கிறார்.

Deputy Inspectors of Schools

* 194 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government is conducting a one-month "induction course" for Deputy Inspectors of Schools at the State Institution of Education, Madras; and

(*b*) if so, the object and aim of this "induction course"?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

[1969 மார்ச் 6

(இ) முன்னறிதல் படிப்பின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :—

(1) புதுமுறையில் பள்ளிகளை மேற்பார்வையிடுதல், கண்காணித்தல், நுட்பங்களையும் நெளிவு சுளுவுகளையும் ஆய்வாளர்கள் அறிந்து கொள்ளுதல்.

(2) அவர்களின் பணி குறித்து முழுமையாக ஆய்வாளர்கள் அறிந்து கொள்வதற்கு எதுவாக இருத்தல்.

(3) பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதற்கு ஆய்வாளர்களுக்குத் துணையாக இருத்தல் ;

(4) அவர்களின் தொழிலில் மேற்கொண்டும் முன்னேற்றம் காண அவர்கள் பணியுடன் தொடர்புள்ள பகுதிகளை அறிந்து கொள்வதில் ஆய்வாளர்கள் திறமை எய்த உதவுதல்.

THIRU K. VINAYAKAM : How many Deputy Inspectors of Schools are being given this kind of induction course per year?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எத்தனை ஆண்டுகளுக்கு என்று தெரியவில்லை. 49 டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்கு அப்படிப்பட்ட டிரெயினிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ சீனிவாசன் : இந்த நிறுவனம் எத்தனை ஆண்டுகளாகச் செயல்பட்டுவருகிறது? டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்குப் பயிற்சி தருவதைத் தவிர வேறு முறையிலும் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல பணிகள் இருக்கின்றன. என்ன என்ன பணிகள் என்ற விவரம் தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

THIRU T. MARTIN : May I know whether these is any proposal pending before the Government to bring in legislation to give statutory force to the Madras Educational Rules and the rules relating to elementary education?

THE HON. THIRU S. MADHAVAN : I have no information.

THIRU K. VINAYAKAM : Is the Government aware of the fact that the entire expenditure incurred on this institution is met by the Central Government and not by the State Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்தச் செலவுகளை மத்திய சர்க்கார் ஏற்கிறது, நம்முடைய சர்க்கார் எதை ஏற்கிறது என்ற விவரம் எல்லாம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

பழனி தேவஸ்தானத்தில் பெண்கள் கல்லூரி

* 195 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

1969 மார்ச் 6]

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்திற்கு ஏராளமான வருவாய் வருகிறது. அதைக்கொண்டு ஆண்கள் கல்லூரி, இசைக் கல்லூரி எல்லாம் நடத்தப்படுகின்றன, அதைப் போல பெண்களுக்கும் கல்லூரி ஏற்படுத்த இனியாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெண் கல்வியின்மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுள்ள அக்கறை மகிழ்ச்சிக்குரியதாகும். இதை நம்முடைய அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் அவர்களிடம் கோரினால் நிதி நிலைமையை எதிர்பார்த்து அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும்.

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதியில் சிமிட்டித் தொழிற்சாலை.

* 196 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை தலுக்காவில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அம்மாதிரி செயற்குறிப்துவும் பெஅரசாங்கத்திடம் இல்லை.

உய்யக் கொண்டான் ஆற்று நீர்.

* 197 வினா—**வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

திருச்சி உய்யக்கொண்டான் ஆற்றில் இரு போக சாகுபடி செய்ய சௌகரியமாக தண்ணீரை ஜூன் முதல் வாரத்தில் திறந்துவிட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்போது உய்யக் கொண்டான் ஆற்றிலிருந்து தண்ணீர் முன்பாக வந்தால் தான் சௌகரியமாக இருக்கும். ஏற்கனவே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்கின்றன. எனவே, சீக்கிரமாகத் தண்ணீர் திறந்துவிட்டால் குறுவை பயிர் விளையச் செய்ய லாயக்காக இருக்கும். எனவே, இந்த ஆண்டாவது முன்பாகவே தண்ணீர் திறந்துவிட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இவ்வாய்க்காலை இயல்பாக மூடும் தருவாயிலும் ஜூன் முதல் வாரத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது இயலாது. எனவே ஜூன் மாதத்திற்கு முன்பு விடுவது சாத்தியமல்ல.

திரு. ஆர். கருப்ப பயா : தலைவர் அவர்களே, உய்யக்கொண்டான் ஆற்றில் அங்கே உள்ள ஒரு சாராயத் தொழிற்சாலையிலிருந்து கழிவு நீர் விடப்படுவதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டு கால்நடைகளுக்கு வியாதிகள் வருவதால் அதை நிறுத்த வேண்டுமென்று அந்தப் பகுதி திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் போராட்டம் நடத்தி எப்படியாவது அதை நிறுத்த வேண்டுமென்று மனு அனுப்பியுள்ளார்கள். அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் போராட்டம் நடத்திய அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்கிறாரா அல்லது அந்த ஆலை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறாரா ?

திரு. ஆர். கருப்பையா : கழிவு நீர் ஆலையிலிருந்து ஆற்றில் விடப்படுவதால் ஆலை நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு சுகாதாரத் துறையின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருப்பூர்-பழனி இருப்புப்பாதை

* 198 வினா—திருமதி வி.ப. பழனியம்மாள் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரலிருந்து தாராபுரம் வழியாக பழனி செல்லுவதற்கு இருப்புப் பாதை அமைக்க, மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சிபாரிசு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்விதத் திட்டம் எதுவும் மாநில அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே , அநேக ஆண்டு களாக தாராபுரம் வட்டத்து மக்கள் எங்களுடைய பகுதிக்கு ரயில் பாதை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனியாவது அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற கோரிக்கை வந்தால் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

சாத்தியாறு அணைக்கட்டு.

* 199 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவிலுள்ள சாத்தி யாறு அணைக்கட்டு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்கிற வேண்டு கோள் ஏதனும் அரசாங்கத்துக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) ஆம்.

(இ) இந்த வேண்டுகோள் ஆய்ந்ததில் சாத்தியாறு ஓடை நீர்த் தேக்கத்தின் ஆயக்கட்டை விரிவுபடுத்துவது இயலாதென்று கண்டறியப் பட்டது.

கதர் கிராமத் தொழில் வாரியம்

* 200 வினா—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசாங்கத்தின்கீழ் இயங்கும் கதர் போர்டில் எல்லா அரசியல் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க சர்க்கார் உத்தேசித் துள்ளதா ?

(இ) தற்போதைய கதர் போர்டில் எந்தெந்த அரசியல் கட்சியினர் அங்கம் வகிக்கின்றனர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) தமிழக அரசின் கீழ் இயங்கும் கதர்-கிராமத் தொழில் வாரியத் தில், அரசியல்கட்சி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, கதர் உற்பத்தியிலும், வளர்ச்சியிலும், அல்லது கிராமத் தொழில் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அரசாங்கச் சார்பறறவர்களும் அரசாங்க அதிகாரிகளும் மேற்படி வாரியத்தில் பணியாற்றும் வண்ணம் உறுப்பினர்களாக அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கொ. இரா. ஞானசம்மந்தன் : அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் வர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா அல்லது அதிலே அனுபவமும் அக்கறையும் கொண்ட வர்கள் என்ற அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதற்கான விளக்கந்தான் தரப் பட்டது. அரசியல் கட்சி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. கதர்த் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள், கதர்த் துறையை வளர்க்க வேண்டு

மென்று ஆர்வம் கொண்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கடந்த காலத் தில் அரசியல் கண்ணோட்டத்தோடு பிரநிதித்துவம் கொடுக்கப்பட்ட காரணத்தால் அது நல்ல முறையில் வளர்ச்சியடைய முடியவில்லை. ஆகவே, அதிலே ஈடுபாடு கொண்டவர்கள்தான் தற்போது நியமிக்கப் படுகிறார்கள்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பழைய சர்க்கார் எந்த முறையில் அந்த போர்டை அமைத்தது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பழைய சர்க்கார் இந்த முறையில்தான் அமைக்க வேண்டுமென்ற விதிமுறைகளை வைத்திருந் தார்கள். ஆனால் முழுக்க முழுக்க ஒரு கட்சியைச் சார்நதவர்களே இடம் பெற்றிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. அப்படியானால் அவர்களு டைய நோக்கம் என்ன என்பதைப் பற்றி அவர்களே ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : காதி இலாகாவில் கடந்த காலத்தில் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டார்கள் என்ற காரணத்தால், கதர்த் துறையில் அபிவிருத்தி ஏற்படாத நிலைமை ஏற் பட்டது என்பதையும், அதைப் போக்கும் முகத்தான் அந்தத் துறையிலே அக்கறையுடைய பல கட்சிச் சார்புடையவர்களையும், அதனுடைய வளர்ச்சியை "ஊக்குவிக்கின்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் செய்ய வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு மவாமுத்துசாமி : ஏற்கனவே இதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அரசுறுல் கட்சிகளின் அடிப்படையில் அங்கம் வகிப்பது என்று பட்டால் பின்னர்? கருத்து முரண்பாடு ஏற்படும்போது அது ஒரு போராட்டக் குழுவாக ஆகிவிடும். அதிலே அக்கறை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களே அந்தக் குழுவிலே நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பரமசிவம் அவர்களும், திரு. து. ப. அழகமுத்து அவர்களும் காலியான இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தற்போது இதிலே அங்கம் வகிப்பவாகள் யார், யார் ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கே. அருணாசலம், காந்தி அரும்பொருள் காட்சி, மதுரை; திரு. பி. என். பரமசிவம், சட்டமன்ற உறுப்பினர்; திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், சேலம் மாவட்டம்; திரு. எம். அழகிரிசாமி, மதுரை மாவட்டம்; திரு. ஏ. பி. சி. வீரபாகு, தூத்துக்குடி; திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை, தஞ்சாவூர் மாவட்டம்; திரு. து. ப. அழகமுத்து, சட்டமன்ற உறுபபினர்; திரு. கோ. வெங்கடா சலபதி, தலைவர், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம், திரு. கே. பி. வி. கிரி, கோவை மாவட்டம், திரு. கே. ராமலிங்கம், இயக்குநர், குன்னத்தூர் கூட்டுறவு வெல்ல விற்பனைச் சங்கம், கோவை மாவட்டம், திரு. வி. எம். சுந்தரராமானுஜ ரெட்டியார், கடலூர், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்; திரு குருசாமி நாடார், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம்.

* 201 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் போர்டு ஊழியர்கள் சங்கம் அமைத்துக் கொள்வதற்கு அங்கீகாரம் கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மேல் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Teachers in panchayat union elementary schools

* 202 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to change the present procedure of appointing teachers in panchayat union elementary schoosl, and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : அப்பாயின்டிங் கமிட்டியில் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருக்கு இடம் இல்லை. ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரியர்களை மாற்றம் செய்யும் கமிட்டியில் மாத்திரம் சட்ட மன்ற உறுப்பினருக்கு இடம் இருக்கிறது. அப்பாயின்ட்மெண்ட் கமிட்டியிலும் சட்ட மன்ற உறுப்பினரை அனுமதிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அத்தகைய உத்தேசம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, an ad hoc committee now appointed under the Chairmanship of Sub-Collectors to deal with the transfer of teachers, is really doing good and satisfactory work. But with regard to the appointment of teachers, we find a lot of corruption which has almost become a business in the Panchayat Union.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டிப் பேசக்கூடாது. கேள்வியை நேராகப் போடுங்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, just as we have an ad hoc committee to deal with the transfer of teachers, will the Government appoint another ad hoc committee and permit M.L.A.s to be members of that committee so that they can make appointments more satisfactorily and useful?

THE HON. THIRU M. MUTHUSWAMY : Sir, we have no such proposals.

திரு. கே. பி. எஸ். மணி : தற்போது பஞ்சாயத்து யூனியன்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர் அவர்களும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆர்.டி.ஓ. அவர்களும் சேர்ந்து தான் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை நியமிப்பதும், அவர்களை மாற்றம் செய்வதும் நடைபெற்று வருகிறது. அந்த முறையிலே ஏதாவது தவறு நடந்திருக்கிறது என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இப்போது இருக்கிற திட்டத்தை மாற்றுவதாக எண்ணம் இல்லை. கடந்த காலத்தில் புகார்கள் வந்த முறையில் சிலபல முறைகளை மாறுபாடு செய்து அந்த முறை பின்பற்றப் பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சிதம்பரம் தாலூகாவில் உள்ள ஐந்து யூனியன்களிலே ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்திலே ஒரு சில பாதகங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சட்ட விதிப்படி அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகூட அங்கு அளிக்கப்படவில்லை. நூற்றுக்கு 16

எண் விகிதத்தில் அரிசனங்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று இருக்கும்போது இந்த யூனியன்கள் விஷயத்திலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஆசிரியர்களை நியமிக்க சில விதி முறைகள் இருக்கின்றன. அப்படி நியமிக்கிறபோது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெயர்களைப் பெற்று நியமிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆசிரியர்கள் நியமனத்தில் வகுப்புவாரி முறைகள் கையாளப் பட வேண்டுமென்ற சட்ட முறைகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை. இது நீண்ட காலமாக அமலில் இருந்து வருகின்ற ஒன்று.

கோவை தாலூகாவில் பூதான இயக்க மூலம் கிடைத்த நிலம்

* 203 வினா—**திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை தாலூகா, பெரிய நாயக்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவைகளில் கிடைத்த பூதான பூமி எவ்வளவு ஏக்கர் ?

(இ) அது எந்த அளவுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) 511 ஏக்கர், 37½ சென்ட்.

(இ) 162 ஏக்கர், 57 சென்ட்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : இந்த மாதிரி விநியோகிக்கப்பட்ட நிலத்தை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அவைகளையெல்லாம் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு அந்த வாரியத்தின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது. உள்ளூர் குழுவின் தலைவர் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுவரை முடிந்தது போக மீதம் இருப்பவைகளை விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வாரியத் தலைவர், நில நன்கொடையாளர்களில் சிலர் நிலங்களை நிலக் கொடை வேள்வி வாரியத்திடம் ஒப்படைக்கவில்லை எனவும், அந்த நிலங் களை ஒப்படைக்காதிருக்கப் பல்வேறு முறைகளை அவர்கள் மேற்கொள்வ தாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலங்களை விரைவில் பகிர்ந் தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு நன்கொடைப் பொறுப்பு வகிக்கும் சிறப்புத் துணை தாசில்தாருக்கு ஆணையிட்டுள்ளதாகவும் அவர் அறிவித் துள்ளார்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த பூதான நிலங்களை, நிலம் கொடுத்தவர்களே வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த நிலங் களில் எத்தனை ஏக்கர்கள் ஏழை எளிய நிலமில்லாத உழவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : யார் யாருக்கு எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் இல்லை.

திரு. என். வரதராஜன் : பூதான இயக்கத்திற்கு அரசு நிதிப் பொறுப்பில் எவ்வளவு உதவி செய்கிறது? அரசு அலுவலர்கள் தரப்பில் எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது? பூதான இயக்கம் வரவர வலிவிழந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கோவை மாவட்டத்தில், பெரிய நாய்க்கன் பாளையம் பிர்க்கா, தொண்டாமுத்தூர் பிர்க்கா ஆகியவற்றில் பூதானத்தின் மூலம் கிடைத்த பூமி எவ்வளவு என்பது கேள்வி. எவ்வளவு அலுவலர்கள், எவ்வளவு நிதி மாநில அரசு உதவி செய்திருக் கிறது போன்ற பல்வேறு கேள்விகளுக்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

பழனி தேவஸ்தானத்திலுள்ள "விஞ்ச்"

204 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பழனி தேவஸ்தானத்தில் அமைத்துள்ள "விஞ்ச்" பிரயாணிகளுக்குப் போதவில்லையாதலால் இன்னொரு விஞ்ச் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

Tamil Nadu Electricity Board

* 205 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether Tamil Nadu Electricity Board has entered into contracts with some black-listed firms in Mysore State?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சென்னையிலுள்ள நிறுவனம் ஒன்றுடன் 1966-ம் ஆண்டு, ஜூலை, அக்டோபர் திங்களிலே "மின் கடத்திகள்" வழங்குவதற்கென தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த நிறுவனம் மைசூர் மின்சார வாரியத்தால் 1966-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் 29-ம் நாள் வரை "கரும்பட்டியலில்" சேர்க்கப்பட்ட ஆணை 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதியன்று தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைத்தது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 29-ம் தேதி அன்று "கரும் பட்டியல்" ஆணை நீக்கப்பட்ட வரையில் பொருள்கள் வழங்கும்படி அந்த நிறுவனத்திற்கு ஆணையெதுவும் அனுப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தன்னிலை விளக்கம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் கேட்ட துணை வினாவிற்கு விடையளிக்கையில் உறுப்பினரைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தன்னிலை விளக்கம் ஒன்று அளிக்க விரும்புகிறேன். நாகப்பட்டணத்தில் அரிசி சம்பந்தமாக நான் கேள்வி கேட்கும்போது அமைச்சர் அவர்கள், நான் தவறாகப் புரிந்து கொண்டதாகச் சொன்னார்கள். வாஸ்தவத்தில் தஞ்சை மாவட்டம்
பகல் 10-00 ஒரு உபரி மாவட்டம் என்றாலும் அங்கு உபரியில்லாத பல இடங்களும் இருக்கின்றன. அங்குள்ள நிர்வாகக் கோளாறு காரணமாக உண்மையாக நாகப்பட்டணம் போன்ற இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் பல சந்தர்ப்பங்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலை ஏற்படாத நிலையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று சொன்னேனே தவிர தஞ்சை மாவட்டம் ஒட்டுமொத்தமாக உபரி மாவட்டம் அல்ல என்று கருதிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நாகப்பட்டணம் கோடவுன், நாகப்பட்டணம் மக்களுக்கு அரிசி வழங்கவேண்டுமென்பதற்காக அது தேக்கி வைக்கப்படுகிற இடமல்ல. அங்கு சேகரித்து வைத்து மற்றப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க கட்டப்பட்ட இடம் என்று சொன்னார்கள். அங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கட்டப்பட்ட கட்டடம் அல்ல என்று சொன்னார்கள். நீங்கள் விவரம் தெரியாமல் கேட்பதாகச் சொல்லவில்லை. ஆகவே நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நமது சட்டமன்ற விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

2. நடைமுறைக் கேள்விகள்.

(ஆ) அவையுரிமைக் கேள்வியைப் பிற அலுவல்களுக்கு முன் எடுத்துக் கொள்ளல்.

THIRU K. VINAYAKAM : On a point of order Sir, the hon. Member Mr. Ramamoorthy has given notice of a privilege motion. Our rules are very clear on the issue. Rule 186 says that a matter of privilege gets precedence over all other business and should be raised immediately after question time. So please allow the privilege motion to be moved before any other business is taken up.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமமூர்த்தி அவர்கள் ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருப்பது பேரவைத் தலைவரிடத்தில் இருக்கும். அதைக் கொடுத்தவர் கேட்பது என்றால், ஒரு முறை இருக்கிறது. என்னிடத்தில் அப்படி ஏதாவது கொடுத்திருந்தால் அதை நான் அறிவிக்கிற வரையில் அந்தச் செய்தி மற்ற உறுப்பினர்களுக்குப் போவது என்பது முறையல்ல. அதை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது முறையல்ல. அமைச்சர்கள் எந்த நேரத்திலும் அறிக்கை கொடுக்க நம் விதிமுறைகள் இடம் அளிக்கின்றன. அதாவது '
A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker.

There shall be no debate on such statement at the time it is made.

இந்த ஸ்டேட்மெண்ட் வருவது இந்த ப்ரிவிலேஜ் மோஷனை ஆய்வு செய்வதற்குத் துணையாக இருக்கும். அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்த பிறகு நான் அதை எடுத்துக்கொள்கிறேன். ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்தவுடன் அதை அன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதல்ல, நாளைக்குக் கூட எடுத்துக்கொள்ளலாம். கொடுத்த அன்றே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று விதிமுறைகளில் இடம் இல்லை. பேரவைத் தலைவர் விரும்பினால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுப்பது என்பது முறைதானா என்பது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : நான் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். நான் அதைத் தங்களிடம் கொடுத்தபோது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தங்களிடம் தொடர்பு கொள்ளவில்லை என்பதும் இது போன்ற ஒரு அறிக்கையை இந்த அவையில் வெளியிட இருக்கிறார்கள் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களிடம் தாங்கள் தெரிவிக்கவில்லை என்பதை தங்களிடம் பேசியதிலிருந்து அறிய வந்தேன். உரிமைப் பிரச்சினையைக் கொடுத்த பிறகு அதை அறிந்துகொண்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான செய்தியை உறுப்பினர் அவர்கள் மீண்டும் அவைக்குக் கொடுக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை பற்றி பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்து அதனால் இப்படி ஒரு அறிக்கை கொடுக்கிறார்கள் என்றால் அப்படி நோக்கம் கற்பிப்பது முறையாகாது. அது பேரவைத் தலைவரையே குற்றஞ் சாட்டுவதாகும். அப்படிச் சொல்வது என்னிடம் கொடுக்கப்பட்டதை நானே அவர்களுக்குக் கொடுத்ததாக ஒரு குற்றச்சாட்டு

ஏற்படும். உரிமைப் பிரச்சினையை எழுப்புவதில் பல முறைகள் இருக்கின்றன. அவை நடந்துகொண்டிருக்கும்போது ஏதாவது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுந்தால் அந்த நேரத்திலேயே எழுப்பவேண்டும்.—அப்போதே தீர்ப்பளிக்கவேண்டும். என்றோ நடந்த ஒன்றைப் பற்றி ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பும்போது பேரவைத் தலைவர் எப்போது விரும்புகிறாரோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, அதற்கு முன்னதாகவே அமைச்சர் அவர்கள் பேசுவது முறையா என்று கேட்பதற்கு இடம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தங்களிடமிருந்து தெரிந்து கொண்டார் என்று குற்றஞ்சாட்டவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கூறியதிலிருந்து பெறக் கூடியது அது. நான் கொடுத்ததைத் தெரிந்து கொண்டுதான் அவர்கள் ஒரு அறிக்கை கொடுக்க முன்வந்தார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கமுடியும் ? நீங்கள் கொடுத்தது என்னிடத்தில். அதை நான் கூறினால் தவிர, அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயம் இல்லை. தெரிந்துதான் கொடுக்கிறார்கள் என்று உறுதி செய்வதாக இருந்தால், பேரவைத் தலைவர்தான் கொடுத்திருக்க வேண்டும், பேரவைத் தலைவர் தவறான காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை இராமமூர்த்தி அவர்கள் மறைமுகமாகச் சொல்கிறார்கள் என்பது அந்தச் சொற்றொடர்களிலிருந்து பெறக்கூடிய நிலை இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: அப்படிப்பட்டதொரு நிலையை நான் ஏற்படுத்தியிருந்தால், வருந்துகிறேன். அப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்த நான் நினைக்கக்கூட இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் என்ற வார்த்தை அதில் இடம் பெறவில்லை என்று சொன்னதை மறுத்து இப்படி ஒரு அறிக்கை............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிக்கை கொடுப்பதற்கு இருக்கிறார்கள். எதற்காகக் கொடுக்கிறார்கள் என்பது தெரியாதே, கொடுக்க விரும்புகிறார்கள் என்று சொன்னேன். எனக்குக் கூடத் தெரியாது எதையொட்டிக் கொடுக்கிறார்கள் என்பது. என்ன அறிக்கை என்று பார்ப்போம்.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation. I raised a point of order regarding the privilege issue generally. I have not anticipated what our Minister is going to say in his statement. I am concerned only with Mr. Ramamoorthy. He has given a privilege motion to the Chair and it is the duty of the Chair under the rules to take it up first, giving precedence to it over all other business. I am only reminding you of the duties cast on the Speaker, that the Speaker will have to call the privilege motion and dispose it of and then call upon the Minister to make the statement. I am only reminding you of the procedure.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது விதிமுறைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் படிக்கவேண்டும்.

A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon, provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.

அவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுது எழும் உரிமைப் பிரச்சினைக்குத் தான் முன்னறிவிக்கை தேவையில்லை என்றிருக்கிறது. பிறவற்றிற்குப் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத் தான் அவர் உரிமைப் பிரச்சினையை எழுப்பவேண்டும். அனுமதி கொடுக்கிறேனா இல்லையா, அதை இன்றே எடுத்துக்கொள்கிறேனா அல்லது இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேனா என்பது பேரவைத் தலைவரின் உரிமைக்கு விடப்பட்டிருக்கிறது. விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. இப்போது கூட்டுறவு அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிப்பார்கள்.

4. விளக்க உரை.

கூட்டுறவுத் துறை அமைச்சர் "எதிர்க்கட்சித் தலைவர்" பற்றி அளித்த கருத்திற்குத் திருத்தம்

THE HON. THIRU S. B. ADITANAR : I make this statement under rule 82 of the Assembly Rules. On a discussion which arose yesterday in this House about the right of the Leader of the Opposition to speak on the admissibility of an adjournment motion, I said that the words ' Leader of the Opposition ' did not occur anywhere in our rules. Since then I had checked up the matter and found that the words did occur in rule 183 which relates to the appointment of the Privileges Committee. Therefore I desire that my statement of yesterday shall stand corrected by the addition of the words ' except in rule 183 '.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) கூட்டுறவுத்துறை அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் பற்றி அளித்த விளக்க உரை குறித்து

DR. H. V. HANDE : On a point of order, how does this come under rule 82 which says that a statement may be made by a minister on a matter of public importance with the consent of the Speaker? This is definitely not a matter of public importance; this is definitely a personal explanation, I want a specific ruling, because it is a branch of the rules. The rule speaks of a matter of public importance. He should have brought it up as a matter of personal explanation. Yesterday itself he could have offered the personal explanation or he can do it today. I want a clear-cut ruling whether this comes under rule 22.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் சில நேரங்களில் பேசுகின்ற நேரத்தில் அவர்களுக்குத் தெரியாத நிலையில் புள்ளி விவரங்கள் கொடுக்கின்ற நேரத்தில் தவறான புள்ளி விவரங்கள் கொடுத்துவிட முடியும். மறுநாள் அதைத் திருத்தி அமைச்சர்கள் அறிக்கை அளிக்க உரிமை இருக்கிறது. அது போல் தான் இது. ஆகவே இதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : In other words is the Chair going to give the ruling that whenever a Minister gives a personal explanation it shall come under rule 82? This is a matter of personal explanation, but it has been brought under rule 82.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. இப்படி அமைச்சர்கள் விளக்கம் கொடுக்கும்பொழுது இந்த விதியின்கீழ் கொடுக்கலாமா என்று விளக்கம் கேட்கிறீர்கள். அந்தந்த நிலைக்கு ஏற்றாற்போல் பேரவைத் தலைவர் முடிவு செய்வார்கள்.

5. அவைபுரிமைக் கேள்வி.

கூட்டுறவுத்துறை அமைச்சர், "எதிர்கட்சித் தலைவர்" பற்றித் தெரிவித்த கருத்து குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள்.

'The Hon'ble Thiru Si. Pa. Adithanar, Minister for Co-operation, has by his assertive information to the Chair and the House that the words "Leader of the Opposition" does not find a place anywhere in the book of the Legislative Assembly Rules comprising of 250 rules laid the ground for the impression of the House that there is no such word in the Legislative Assembly Rules.

But rule 183 of the Legislative Assembly Rules gives out in specific words that the "leader of the opposition" shall be a member ex-officio in the Committee of Privileges. As such, Hon'ble Thiru Si. Pa. Adithanar, Minister for Co-operation has committed a breach of privilege of this House and hence I move that this matter be referred to the Committee of Privileges'

என்று ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கைக்குப் பிறகு இந்த உரிமைப் பிரச்சினைக்கு இடமில்லை என்று கருதி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) சட்டமன்ற மேலவையிலிருந்து வந்துள்ள செய்திகள்.

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following message from the Hon. Chairman, Tamil Nadu Legislative Council :—

"In accordance with Rule 133 of the Tamil Nadu Legislative Council Rules, I transmit a copy of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968) as passed by the Council on the 3rd March 1969 with the amendments set out in the Annexure and signed by me for the concurrence of the Assembly.

ANNEXURE.

Clause 3.

In Sub-clause (2) of clause 3 delete the word 'and' after item (d), renumber item (e) as item (f) and before item (f) so renumbered, add the following as item (e);

"(e) the survey number or sub-division number, the extent and local name, if any, of the land cultivated by the owner; and ".

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட மசோதாக்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் நாளன்று பரிந்துரை ஏதுமின்றி மேலவையில் நிறைவேற்றப்பட்டதென்று செய்தி வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

1. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 1/69).

2. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 2/69).

3. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/69).

4. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 7/69).

மேலும், தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த)— மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 5/69), திருத்தம் ஏதுமின்றி 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் நாளன்று மேலவையில் நிறைவேற்றப்பட்டதென்றும் செய்தி வந்துள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, Sir, I move—

'That, with reference to Rule 183 of the Tamil Nadu Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker to elect twelve members to be members of the Committee of Privileges for the financial year 1969-70.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (Committee of Privileges) 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக் குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பன்னிரெண்டு மேற்படுமாயின் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, Sir, I move—

'That, with reference to Rule 221(1) of the Tamil Nadu Legislative Assembly Rules, this Assembly do proceed on date to be fixed by the Hon. the Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1969–70.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையினர் குழுவிற்கு House Committee) 11 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து—பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினொன்றுக்கு மேற்படுமாயின் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

8. 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. என் எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே இந்த 1969–70-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். "காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது" என்று கூறிய திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கின்ற மூன்றாவது வரவு-செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையினைத் துருவித் துருவிப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவந்த விஞ்ஞான சோஷலிசமோ அல்லது விளக்கமோ, அல்லது வாக்குறுதியோ இந்த நிதி நிலை அறிக்கையில் எந்தப் பக்கத்திலும் காணப்படவில்லை என்பதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறைந்தபட்ச பொருளாதாரக் கொள்கை என்ன என்பதற்கான விளக்கமும் எந்தப் பக்கத்திலும் காணப்படவில்லை. கடந்த மூன்றாண்டுகளாகக் காங்கிரஸ் வலியுறுத்திவந்த இல

வசப் புகுமுகக் கல்வியைத் தவிர இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வேறு எந்தப் புதுமையோ, புரட்சியோ இல்லை, வறட்சியாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பட்ஜெட் என்று குறைந்த அளவாவது சொல்லக்கூடிய அளவுக்கு இதிலே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்போல இதில் முத்திரை பதித்தச் எந்த சிறந்த அம்சத்தையும் என்னால் காண முடியவில்லை.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்பொழுது புதிய வரி விதிக்கப்படவில்லை என்று பாராட்டிப் பேசினார்கள். பொருளாதார அறிஞர் கூறியதைப்போல வரி விதிக்கப்படவில்லை என்று சொன்னால் அங்கு மக்கள் நலன் வளரவில்லை என்றுதான் அர்த்தம். அப்படியென்றால் அது அரசாங்கமாக இருக்கமுடியாது, வெறும் நிர்வாகமாகத்தான் இருக்க முடியும். காங்கிரஸ்காரர்கள் இருபதாண்டுக்காலமாக இந்த நாட்டிலே பதவியிலே இருந்திருக்கிறார்கள். அந்த இருபதாண்டு காலத்தில் யார் வரி செலுத்த முடியுமோ அவர்கள் மீது வரி போட்டு அந்த வரிகளின் மூலமாக நல்ல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது எனவே, இங்கே புதிய வளர்ச்சித் திட்டங்களுக்காக புதிய நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதற்காக வரி விதிக்கப்பட்டால் நியாயமான வரியாக இருந்தால், அதை நாங்கள் ஆதரிக்கத் தயாராய் இருக்கிறோம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் மக்களின் பணம் சேர்க்க வேண்டுமென்ற பலஹீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குறைந்த உழைப்பிலே பணம் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை வளர்த்து மக்களின் உழைப்பையே கெடுக்கும் அளவுக்கு லாட்டரி சீட்டினால் குறுகிய எண்ணம் மக்களிடையே வளர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு எத்தனை நன்மைகள் செய்தாலும் லாட்டரிச் சீட்டு ஒன்று மட்டும், செய்யும் நன்மைகள் அத்தனையையும் அழித்துவிடும் என்று இந்த அரசுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

நான்காவது திட்ட முதலீட்டில் 1969–70-ஆம் ஆண்டுக்கு 87 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திட்டக்குழு, 72 கோடி ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. நிதியமைச்சரவர்கள், மத்திய சர்க்காரின் உதவி 40 கோடியாக இருக்கும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி மத்திய சர்க்காரின் உதவி 40 கோடியாக இருந்தாலும், தமிழக அரசு மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன் தவணையை ஒத்திப்போட வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை விட்டிருக்கிறது. அது ஒப்புக்கொள்ளப்பட்டால் தமிழக அரசுக்குக் கிடைக்கும் இந்த 40 கோடி ரூபாயோடு இன்னும் ஒரு 10 கோடி ரூபாய் அதிகமாக கிடைக்கும் வசதி ஏற்படலாம் இப்பொழுது 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது அப்படியானால் மீதி 37 கோடி ரூபாய்க்கு என்ன வழி இருக்கிறது? புதிய வரிகள் விதிக்கப்படுமா அல்லது வேறு விதமாக எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதற்கு நிதியமைச்சரவர்கள் விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற நூற்பாலைகளிலே, அதிகப்படியாகத் தமிழகத்தில் இருக்கின்றன. தமிழகத்திலேயுள்ள நூற்பாலைகள் நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றன. எத்தனை நாளைக்குத்தான் மத்திய சர்க்காரின் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக்கொண்டிருக்க முடியும், பத்திரிக்கைகளிலே பார்த்தோம், கடந்த இரண்டு, மூன்று வாரங்களிலே மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களில் மத்திய சர்க்காரின் உதவியில்லாமல் மாநில அரசு 10,15 மில்களைத் துவக்கியிருப்பதைப் பார்க்கிறோம். மத்திய சர்க்கார் ஆயத்தீர்வைக்கு சலுகை செய்திருக்கிறார்கள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 மார்ச் 6

தமிழக அரசு, மூடப்பட்ட மில்களைத் திறக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பஞ்சு கொள்முதலுக்கு, விற்பனை வரிக்கு சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நூல் விற்பனை, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றிற்கு சலுகைகள் செய்து ஆலைகளைத் திறப்பதற்கான வழிகளைச் செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு, நீண்டநாட்களாகத் தமிழகத்தை வாட்டிக் கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினையில் முனைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மறைந்த மாநில முதலமைச்சரவர்கள் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையினைக் கொடுத்தபொழுது, இது நகரங்களுக்கான பட்ஜெட்டாகவே இருக்கிறது என்றும்,கிராம மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் இங்கும் மேலவையிலும் எடுத்துக் கூறினோம்.

கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பண : வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சென்ற ஆண்டு நாங்கள் குற்றம் சாட்டினோம். இந்த ஆண்டு சென்ற ஆண்டை விட கிராமங்களுக்கு மிக அதிக அளவிலே குறைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற போது நாங்கள் வேதனைப்படுகிறோம். " பட்ஜெட் மெமோரண்டத்திலே" ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி என்ற தலைப்பிலே விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே விவசாய வளர்ச்சிக்கு ஊராட்சி ஒன்றி ங்களுக்கு சென்ற ஆண்டு ரூ. 84 இலட்சம் என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அது ரூ. 75 லட்சமாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. அத்துடன் அகவிலைப் படி அளிப்பதற்காக மானியமாக லோக்கல் பாடீஸ க்கு செ ற ஆ டு ஒதுக்கப்பட்டுள்ள பணம் ரூ. 29·07 இலட்சம். இந்த ஆண்டு வெறும் ரூ. 2 இலட்சம் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவரவர்களே, "பாசனம் என்ற தலைப்பிலே குடிமாரமத்துக்களுக்கு மானியம் " என்ற இனத்திலே சென்ற ஆண்டு ரூ. 4.83 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ. 2·95 இலட்சமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல ; ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக சென்ற ஆண்டு ரூ. 56 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அது ரூ. 50 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் குடிதண்ணீர் வசதிக்காக சென்ற ஆண்டு பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு ரூ. 57 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 23 68 இலட்சமாக அது குறைக்கப் பட்டிருக்கிறது. இது போதாது என்று, தலைவா் அவர்களே, "சாலைப் பொக்குவரத்து " என்ற தலைப்பிலே சென்ற ஆண்டு ரூ. 1,26·86 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 1,22·86 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக, விவசாயத்திற்கும் பாசனத்திற்கும் சாலைகளுக்கும் குடி தண்ணீர் வசதிக்கும் ஒதக்கப்பட்ட மானியம் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கனிசமாகக் குறைக்கப்டட்டிருக்கிறது. அதே நேரத்திலே நகர மக்களுக்கு நன்மை செய்கிற பட்ஜெட் என்று நான் முன்னாலே சொன்னேன். அதற்கேற்றாற்போல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'**Loans to Madras State Housing Board**' என்ற தலைப்பிலே, **Rental housing scheme** என்ற இனத்திற்கு சென்ற ஆண்டு ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு ரூ. 70 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

Middle Income Group Housing என்ற தலைப்பிலே சென்ற ஆண்டு ரூ. 30 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 60 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. **Bulk acquisition and land development**

1969 மார்ச் 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

என்ற தலைப்பிலே சென்ற ஆண்டு ரூ. 65 இலட்சமாக கொடுக்கப்பட்டது இந்த ஆண்டு ஒரு கோடியே 60 இலட்சமாக, மிகக் கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. cellular concrete plant என்ற தலைப்பின்கீழ் சென்ற ஆண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, Loans to Municipalities, water-supply and drainage schemes என்ற தலைப்பின்கீழ் சென்ற ஆண்டு ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நகர மக்களுக்கு நன்மை செய்வதை நாங்கள் கண்டிக்கவில்லை. அதே நேரத்திலே கிராம விவசாயிகளின் வயிற்றிலே அடித்துத்தான், வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்களே, அவர்களுடைய நன்மையைக் குறைத்துத்தான் நகரங்களுக்கு நன்மை செய்யவேண்டுமா? கிராமங்கள் வளம் பெறவில்லையென்றால் நகரங்கள் எப்படி நலமாக விளங்கமுடியும் ? கிராம மக்கள் நலமாக வாழவில்லையென்றால், நகர மக்கள் எப்படி நலமாக வாழமுடியும் ? கிராம மக்களிடம் வாக்குகளைப் பெறுகின்ற நேரத்திலே " நன்மை செய்கிறோம் " என்று வாக்குகளைப் பெற்றுவிட்டு, அவர்களுக்கு நன்மை செய்யாவிட்டால், அது விவசாயிகளுக்குத் துரோகம் செய்ததாகும். எனவே, தலைவர் அவர்களே, உங்கள், மூலமாக நான் வேண்டிக்கொள்கிறேன், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அதிக மானியம் தமிழக அரசு ஒதுக்க வேண்டுமென்று.

மத்திய அரசாங்கம் தூத்துக்குடி, சென்னை ஆகிய துறைமுகங்களின் வளர்ச்சிக்கு 6·2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. பொதுவாக, திருச்சிக்குத் தெற்கே இருக்கிற மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் பொருளாதாரத் துறையிலே பின்தங்கி இருக்கின்றன. தூத்துக்குடியிலேயிருந்து திருச்சிவரையிலான அகல ரயில் பாதை வேலை எந்த அளவிலே இருக்கிறது என்பதற்கான விளக்கம் இல்லை. அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாரதத் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த காலத்திலே தமிழகத்தின் பின்தங்கிய பகுதியான தெற்குப் பகுதியில் ஒரு சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தினார். இன்றையதினம் அந்த மாவட்டங்களிலே வாழ்கிற மக்கள் பொருளாதாரத் துறையிலே பின்தங்கி இருக்கிறார்கள். தூத்துக்குடி—திருச்சி அகல ரெயில் பாதையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கின்ற அந்தப் பகுதிகளில், ஆங்கிலத்தில் 'ஸ்லீப்பிங் எக்கானமி' என்று சொல்வோமே, அதைத் தட்டி எழுப்புகின்ற வகையில் பல புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு இந்த ரயில்பாதை வசதியாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்திலே திருமங்கலமும் அதற்கு அருகிலுள்ள வட்டங்களும் இந்த ஆண்டு பருவ மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 50 ஆண்டுகளாக இல்லாத அளவுக்குத் தண்ணீர் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த வட்டங்களில் நிவாரண நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டும். இதுவரை எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. சில நாட்களுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பஞ்ச நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையின் பட்டியலைப் படித்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ மதுரைக்கான விவரத்தை அவர் வெளியிடவில்லை.

இப்பொழுது பெரியாறு வைகைக் கால்வாய்கள் நவீனமாக்கப்படுகின்றன. தண்ணீர் வீணாவதைத் தடுப்பதற்காக காண்கிரீட் கால்வாய்களுக்காக $4\frac{1}{2}$ கோடி ரூபாயை இன்றைக்கு அரசாங்கம் செலவிட்டு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 மார்ச் 6

வருகிறது. 1954-ம் ஆண்டு வைகை அணை கட்டப்பட்டபோது திருமங்கலம் தாலுகாவில் 20,000 எக்கருக்குப் பாசன வசதி செய்யவேண்டுமென்று திட்டம் இருந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ 10,000 எக்கருக்குத்தான் அங்கு பாசன வசதி செய்யப்படுகிறது. மீதி 10,000 எக்கர் பாசன வசதி கிழக்கு இராமநாதபுரத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. ஆகவே, இந்த கான்கிரீட் கால்வாய் அமைப்பு வேலையைத் துரிதப்படுத்தி திருமங்கலம் வட்ட மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வகையில், 10,000 எக்கர் நிலம் வசதி அடைகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருமங்கலம் பகுதியிலே வெள்ளையர் ஆட்சியின் காரணமாக வளர்க்கப்பட்ட குற்றப்பரம்பரையைச் சேர்ந்த கள்ளர் சமுதாயத்தினர் பொருளாதாரத் துறையிலே பின்தங்கி இருக்கிறார்கள். அவர்கள் வளம் பெறவேண்டுமானால், வைகைக் கால்வாய்த் தண்ணீரை அந்தப் பகுதிக்கு ஒதுக்கவேண்டியது அவசியம் என்று கூறிக்கொள்கிறேன். திருமங்கலத்திற்கு அப்பாலேயே வைகைத் தண்ணீர் நின்று விடுகிறது. ஆகவே. திருமங்கலம் வரையிலாவது வைகைத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் குடிதண்ணீர்த் திட்டம் சென்ற 5 ஆண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப் படுவதாக இருந்தது. என்ன காரணத்தினாலோ எடுத்துக்கொள்ளப்படவில்லை. சில நாட்களுக்கு முன்னாலே நமது அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது திருமங்கலம் பாதாள சாக்கடைத் திட்டம் விரைவில் முடிவடையும் என்று கூறினார்கள். அந்தத் திட்டம் 1967–68-ம் ஆண்டிலே தொடங்கப் பட்டது. அது இன்னும் முடியாமல் இருப்பதற்குக் காரணம் தண்ணீர் சரியாக சப்ளை செய்யப்படவில்லை என்பதுதான். வைகைக் குடிதண்ணீரை திருமங்கலத்திற்குக் கொண்டுவருகின்ற திட்டத்தை இந்த அரசாங்கம் விரைவாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம், நேற்றைக்கு முன் தினம் மதுரையிலே நடந்த சம்பவத்தைப்பற்றி எங்கள் கட்சி சார்பிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அதற்கு வழக்கம்போல் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி மறுத்தார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுகின்ற நேரத்திலே காங்கிரஸ் கட்சியின் மிக முக்கியமானவர்கள்மீது 13 பேர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது, அதே நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிகச் சாதாரணமானவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அப்படிச் சொன்னதற்கு ஆளும் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் சிறிப்பாய்ந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் கேலியாகப் பேசினார்கள். 'குறிஞ்சி' ஆசிரியர் தோழர் நெடுமாறன்மீது வழக்கு போடப்பட்டது. தோழர் நெடுமாறன் ஒரு எம்.ஏ. பட்டதாரி. அது மட்டுமல்ல, மதுரை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளராக இருந்தவர். திராவிட முன்னேற்றக் கழகத்திலே அவர் இருந்த காலத்திலே, மறைந்த முதலமைச்சர் அவர்கள் "ஹோம்லாண்ட்" என்ற பத்திரிகையை நடத்தி வந்தார்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே படித்துவந்த காலத்திலே அவர் ரூ. 10,000 நிதி சேர்த்துக் கொடுத்தார். அவர்மீதுதான் வழக்கு போடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், சாதாரணமானவர்கள் மீது வழக்கு போடப்பட்டது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : குற்றவாளிகள் யாராக இருந்தாலும் பெரியவர், சிறியவர் என்று பிரிப்பது கிடையாது. குற்றவாளி குற்றவாளிதான்.

1969 மார்ச் 6]

திரு. என். எஸ். வி. சித்தன் : குற்றவாளியைப் பற்றிச் சொல்ல சட்டம் இருக்கிறது, கோர்ட் இருக்கிறது. அதற்குப் பின்னாலே யார் குற்றவாளி என்று நிரூபிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : குற்றவாளியா, இல்லையா என்பதை அவராக நினைத்துப் பேசுவது எந்த வகையிலே பொருத்தம் என்பதைத் தலைவர் அவர்கள் விளக்கவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசாங்கம் வழக்கு என் போட்டிருக்கிறது, யார்மீது போட்டார்கள் என்று சொல்வதற்குக்கூட உரிமை இல்லையா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொறுப்புள்ள ஒருவர்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். தவறு செய்தவர் மீது வழக்கு போடக்கூடாது என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் குற்றம் செய்தாரா இல்லையா என்பதை முடிவு காணவேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தைச் சேர்ந்ததாகும். தவறாக நடக்கிறார்கள் என்று கருதுகிறபோது, காவல்துறையினர் அந்த நபர்கள் மீது வழக்குப் போடுகிற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வழக்கு போடுகிறநேரத்தில் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டுமே தவிர, நாமே சட்டத்தையும் நீதியையும் கையிலே எடுத்துக் கொண்டு, அதற்காக வாதாடுவது என்பது கௌரவமான உறுப்பினர்களுடைய நிலை ஆகாது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியிலே முக்கியமான பொறுப்பிலே இருக்கின்றவர்கள்மீது இதுமாதிரியான வழக்குகள் அதிகமாகப் போடப்படுகின்றன.

திரு. பெ. மலைச்சாமி : ஒரு விளக்கம் சார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : விளக்கம் இப்பொழுது இல்லை சார். நான் இடம் கொடுக்கவில்லை. மதுரை மாவட்ட மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு காங்கிரஸ் கட்சித் தோழர்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள், அழைத்து வரப்பட்டார்கள். அந்த வழக்கைப் பார்ப்பதற்காக ஏராளமான காங்கிரஸ் ஊழியர்கள் வந்திருந்தார்கள். அவர்களைக் கட்டபொம்மன் சிலைக்கு அருகிலே, பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலே அமைதியாக போலீஸார் உட்கார வைத்தார்கள். அவர்கள் அடக்கமாக இருந்தார்கள், கட்டுப்பாட்டோடு இருந்தார்கள். அவர்கள் "காமராஜ் வாழ்க", "நெடுமாறன் வாழ்க', "வழக்கைத் திரும்பப் பெறு" என்றுதான் கோஷம் போட்டார்கள். கோர்ட்டில், கைது செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் 6-ம் தேதி வாய்தா போட்டார்கள். எந்தவிதமான வன்முறையும் நடக்கவில்லை. கோர்ட்டிலே இருந்தவர்களை அழைத்து வருகிற நேரத்திலே அந்த லாரிக்கு எதிராக ஒரு லாரி நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்திலே இரண்டு லாரிகளும் நெருக்கி நிறுத்தப்பட்டிருந்தன. என்ன காரணத்திற்காக நெருக்கி நிறுத்தி வைத்தார்கள் என்பது தெரியவில்லை. லாரிகள் நிறுத்தப்பட்டவுடன் எங்கள் தோழர்கள் உற்சாகமாகக் கோஷம் போட்டார்கள். அதுதான் அவர்கள் செய்த தவறு. பின்னாலே வந்த டி.எஸ்.பி. அவர்கள் எந்தவிதமான காரணமும் இல்லாமல் தடியடிப் பிரயோகம் செய்தார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தடியடிப் பிரயோகம் நடக்கவில்லை, பிரம்படிப் பிரயோகம்தான் நடந்தது என்றார். ஆனால், பிரம்படிப் பிரயோகத்தினாலா 35 பேர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதை இப்பொழுது பார்க்கிறோம்? நேற்றையதினம் பேசிய முதல் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் அந்த லாரி ஏற்றிச் சென்ற தோழர்களை விடுவிக்கவேண்டும் என்று வழிமறிப்பதற்கு முயற்சி செய்தார்கள் என்று சொன்னார்கள். அது இன்றைய பத்திரிகையில் வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். நேற்றையதினம் பேசிய முதல்

மு.ப. 10-30

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 மார்ச் 6

அமைச்சர் அவர்கள் எங்கள்மீது ஒரு அபாண்டத்தைச் சுமத்தியிருக்கிறார்கள். மத்திய சிறைக்கு அழைத்துப்போகும் வழியில் 500 பேர் கொண்ட கூட்டம் வழிமறித்து போலீஸார்மீது கற்களை வீசித் தாக்கி விடுவிக்க முயன்றிருக்கிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுகிறபொழுது சபாநாயகருடைய அனுமதியில்லாமல் பத்திரிகையிலிருந்து படிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு. சித்தன் அவர்கள் என்னிடம் வந்து ஒரு இரண்டு வரிகள் மட்டும் படிக்கப்போவதாகச் சொன்னார்கள். நான் "படிக்கவேண்டியதில்லை, படிக்கவேண்டியதைக் கூறிவிடுங்கள்" என்றுதான் சொன்னேன். படிக்கச் சொல்லவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் முதல் அமைச்சர் அவர்கள் "போலீஸ் வண்டியை வழிமறித்துத் தாக்கி விடுவிக்க முயற்சி இதுவரையில் தமிழகத்தில் நடந்ததாகச் செய்தி கிடையாது. சட்டம், ஒழுங்கு, அமைதி காக்கப்பட வேண்டும் என்பதால்தான் போலீஸ்காரர்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்" என்று எங்கள்மீது மாசு கற்பித்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் அன்றையதினம் நடந்த நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இருக்கின்றன. அந்தப் புகைப்படங்களிலிருந்து அங்கு நடந்தது என்ன என்பதை மிகத் தெளிவாகப் பார்த்துக்கொள்ளலாம். காங்கிரஸ்காரர்கள் வழிமறித்து, கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க முயற்சி செய்தார்களா அல்லது ஓரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்களா என்பதைப் பற்றி அறிந்துகொள்ளலாம். மூன்று புகைப்படங்கள் இருக்கின்றன. ஆதாரத்துடன் பேசிக்கொண்டிருக்கிறேன். அவைகளைப் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன். (மூன்று புகைப்படங்கள் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்கப்பட்டன.) அன்றைய தினம் காங்கிரஸ் தோழர்கள் அமைதியாகத்தான் இருந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அதற்கென்றே ஆட்கள் இருக்கிறார்கள், அவர்கள் எடுத்துவிடுவார்கள் போலீஸ் லாரியைக் காங்கிரஸ்காரர்கள் வழிமறைத்து கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டு அபாண்டமானது. அம்மாதிரி ஒரு அபாண்டத்தை எங்கள்மீது கற்பிக்கவேண்டாம். நாங்கள் ஒரு பாரம்பரிய கட்சியைச் சேர்ந்தவர்கள். சட்டம், ஒழுங்கு, காப்பதில் நாங்கள் எப்பொழுதும் கருத்துடன் இருப்போம். வேண்டுமென்றே திட்டமிட்டு இப்படி ஒரு சதி நடந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் தோழர்கள்மீது வழக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். அநேக காங்கிரஸ்காரர்களைக் கைது செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த முறை தொடர்ந்து நடக்குமேயானால், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறலாம். முதலமைச்சர் அவர்கள் நடந்த நிகழ்ச்சிகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்று சொன்னார். ஆகவே, இனியும் இந்த முறையில் தொடர்ந்து நடக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறலாம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய விவரத்தை அவர் விளக்கினால், மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சின் சாரத்தை இந்த அவை தெரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் சௌகரியமாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தடியடிப்பிரயோகம் நடந்திருக்கிறது. ஏராளமான காங்கிரஸ் தோழர்கள் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள் மதுரையிலே......

THE HON. THIRU A. GOVINDASWAMI : The hon. Members is threatening the House, Sir,

1969 மார்ச் 6]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த அளவு நிலைமை நீடித்தால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இப்படி வழி மறிப்பதைப் போல சம்பவம் தானா, அல்லது இன்னும் வேறு மாதிரியான சம்பவம் நடக்குமா என்பதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் விளக்கினால், மக்கள் அதைப் பற்றி உணர்வார்கள். நலமாக இருக்கும். அந்த பாரம்பரியத்தைப்பற்றி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெருக்களில் எங்கள் தோழர்கள் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். 30 பேர்களுக்கும் அதிகமான பேர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். (சிரிப்பு) அங்கத்தினர்கள் சிரிக்க வேண்டாம். காங்கிரஸ் தோழர்கள் அடிபட்டிருக்கிறார்கள், ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். தடியடிப்பிரயோகம் நடந்திருக்கிறது. காங்கிரஸ் தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்த மட்டில், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று 19 உறுப்பினர்கள் பேச வேண்டும். நேற்று பெயர் கொடுத்த 6 பேர்கள் பேசுவதற்கு இடம் பெற முடியவில்லை. ஆகவே, 19 பேர்கள் பேச வேண்டும். ஒவ்வொருவரும் 10 நிமிஷம் எடுத்துக் கொண்டால், எல்லோருக்கும் இடம் கிடைக்கும். உறுப்பினர்கள் குறிப்பிட்ட 10 நிமிஷத்திற்கு மேல் போகாமல் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். முதலில் "இனிஷியேட்" பண்ணி பேசுபவருக்கு 15 நிமிஷம் கொடுக்கலாம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சட்டமன்ற தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு தி.மு.க. கையில் இந்த அரசு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கின்றன. காங்கிரஸ் அரசாங்கம் 1937-ம் ஆண்டிலிருந்து பதவியில் உட்கார்ந்து, இடையிலே ஓரிரண்டு ஆண்டு பதவியில் இல்லாமல், தொடர்ந்து 1967 வரை பதவியிலிருந்து அவர்கள் செய்த காரியங்களை விட எவ்வளவோ பெரிய காரியங்களை இந்த இரண்டு ஆண்டு காலத்தில் கழக அரசு செய்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் பல முறை நாங்கள் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லியிருக்கிறோம் ; நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். இதற்கு மூல காரணமாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், உலகத்தார் அனைவரும் போற்றிப் புகழத்தக்க அளவிலே மிகச் சிறந்த முறையில் ஆட்சியை நடத்திக் கொண்டுவந்தார்கள். ஆனால், அவர்கள் கடந்த ஆண்டிலிருந்து திடீரென்று நோய்வாய்பட்டு, அவர்களைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுக்கப்பட்டும்கூட, காலம் சதி செய்து, அவர்களை இழந்து நாம் இன்றைய தினம் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்திலுள்ள பல இடங்களிலிருந்து மருந்துகள் தருவிக்கப்பட்டன. வைத்திய நிபுணர்கள் வந்தார்கள். டாக்டர் மில்லர் அவர்கள் டாக்டர் என்சக்கி அவர்கள், இங்கே டாக்டர் சதாசிவம் அவர்கள் தலைமையில் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் சாந்தா, டாக்டர் நடராஜன், டாக்டர் மோஸஸ் போன்ற உலகப் புகழ் பெற்ற டாக்டர்கள் கூட அண்ணா அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்டும், காலம் சதி செய்து விட்டது.

அண்ணா அவர்கள் மறைந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஆனால், அந்த சந்தர்ப்பத்தில் அண்ணா அவர்களுக்கு சிகிச்சை சரியாக செய்யப்படவில்லை, அண்ணா அவர்களுக்கு டாக்டர்கள் சரிவர சிகிச்சை

நடத்தவில்லை என்கின்ற சர்ச்சையை வெளியே சிலர் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த சர்ச்சைகளின் மூலமாக இந்த அரசுக்கு மாசு கற்பிப்பதற்கும், சுகாதார இலாகாவிற்கே மாசு கற்பிப்பதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தான் முதல் முதலாக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்ந்தார்கள். அப்பொழுது டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியம் அவர்கள் அவரைக் கவனித்து வந்தார்கள். அப்புறம் கடந்த செப்டம்பர் மாதம் அவர்களுக்குப் புற்று நோய் என்று கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார்கள். இடைக்காலத்தில் டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியம் அவர்கள் சரிவர சிகிச்சை நடத்த வில்லை என்பதை அந்த சமயத்தில் ஒரு ஆங்கில வார ஏடு குறிப்பிட்டிருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அண்ணா அவர்கள் மறைவுக்குப்பின் இரண்டொரு தமிழ்ப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் வந்திருக்கின்றன.

நான் ஒரே ஒரு பத்திரிகையிலே வந்ததை மாத்திரம்—சபாநாயகர் அவர்களிடம் நான் ஏற்கனவே அனுமதி வாங்கியிருக்கிறேன்—அவர்கள் அனுமதியோடு, அந்த ஒரு பகுதியை மாத்திரம் நான் வாசித்துக்காட்ட விரும்புகிறேன். அது ஒரு பிரபல பத்திரிகை, அதாவது "தினமணிக் கதிர்"ல் இந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது. "இவ்வளவு பெரிய கூட்டமா?" என்கிற தலைப்பிலே ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையை எழுதியவர் முன்னாள் காங்கிரஸ்-காரரோ, இந்நாள் காங்கிரஸ்காரரோ, எனக்குத் தெரியாது. ஆனால், இந்த சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த திரு. நா. மகாலிங்கம், பி.எஸ்.ஸி., எம்.ஐ.இ. அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் அண்ணா அவர்களுக்கு சரிவர சிகிச்சை செய்யப்படவில்லை என்பது மாத்திரமல்ல, ஜெனரல் ஆஸ்பத்திரியில் நிர்வாகமே சரிவர இல்லை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு பகுதியை மாத்திரம் நான் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன் :

"வேலூர் ஆஸ்பத்திரியில் சாதாரணமாக ஒவ்வொரு நோயாளிக்கும் செய்யப்படும் "குழு ஆராய்ச்சி" அமெரிக்கா செல்வதற்கு முன்னர் ராஜ்ய முதல் அமைச்சருக்குச் செய்யப்படவில்லை என்றால் அது என் என்று ஆராய வேண்டியது அவசியம். நூல்கள் மூலம் அறிஞர்கள் நீண்ட காலமாக மக்கள் பெற்ற அனுபவத்திலிருந்து அறிவைப் பெறுகின்றார்கள். அறுவைச் சிகிச்சையைக் கூட, குழுவினராகச் செய்யும் இக்காலத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி டாக்டர்கள் சுதந்தரமாகவே செயல்பட்டுக் கொண்டு உள்ளார்கள். கூட்டாகச் சேர்ந்து நோயாளியின் நிலை குறித்து ஆராயும் வழக்கம் இல்லை. பல முக்கிய நோய்கள் பற்றி, நோயாளிகளின் காலம் முடிந்த பின்னர் தான் உரிய காலத்தில் சரியான சிகிச்சை கொடுக்க வில்லை என்ற பேச்சு வெளியாகிறது. பல மாதங்கள் அண்ணாதுரை அவர்கள் உணவு சாப்பிடும்போது வலியுள்ளது என்று கூறியும், எக்ஸ்ரே நான்கு படங்கள் எடுக்கப்படாமல் இரண்டு படங்கள் எடுத்துத்தான் முடிவு செய்யப்பட்டுள்ளது. இ.என்.டி. நிபுணர்கள் நான்கு படம் எடுத்துப் பார்த்திருந்தால் உணவுக் குழாயில் அடைப்பு இருப்பது மிக முன்னர் தெரிந்திருக்கும் எனக் கருதுகிறார்கள். இனிமேலாவது சுகாதார அமைச்சர் இது விஷயத்தில் கவனம் செலுத்தி நமது தலைமை ஆஸ்பத்திரி நல்ல முறையில் செயல்பட வழிமுறை வகுக்க வேண்டும்." இதுதான் கட்டுரையிலே இருப்பது.

அண்ணாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றியும், மற்றவை பற்றியும் குறை கூறியிருக்கிறது. இந்த விஷயத்தை நாம் இலேசில் விடக்கூடாது. காரணம், இந்த அரசு நேர்மையான முறையில் நடந்திருக்கிறது. பெரிய ஆஸ்பத்திரி நேர்மையான முறையில் நடக்கிறது என்பதையெல்லாம் நாம் நிரூபித்தாக வேண்டும். இந்தக் குற்றச்சாட்டு முக்கியமான

பத்திரிக்கைகளில் வந்திருப்பதால், இதைப்பற்றி விசாரிக்க, ஒரு விசாரணைக் குழுவை நியமித்து, அண்ணா அவர்கள் பிப்ரவரி மாதம் அனுமதிக்கப்பட்டபிறகு, சரிவர கவனிக்கப்பட்டிருக்கிறார்களா, ஏதாவது தவறுகள் இருக்கின்றனவா என்பதையும் கண்டறிந்து உலகத்திற்கு நாம் அறிவிக்க வேண்டும். தமிழகத்திலுள்ள டாக்டர்களைப் பற்றி இன்றைக்கு எங்கும் நல்ல பெயர் இருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு மாசு கற்பிக்கும் முறையில் இருப்பதால். பழைய சுகாதார அமைச்சரும், இப்பொழுது இருக்கும் சுகாதர அமைச்சரும், இரண்டு பேர்களும் சேர்ந்தே இப்படிப்பட்ட விசாரணைக் குழுவை நியமித்து, விசாரித்து, இது பற்றித் தெளிவு படுத்த வேண்டும்.

பேரறிஞர் அண்ணா மறைந்தவுடனேயே காங்கிரஸ்காரர்கள், இவர்கள் என்னதான் கண்ணீர் விட்டாலும், உள்ளுக்குள்ளே என்ன நினைக்கிறார்கள் என்றால், அண்ணாவிற்குப் பிறகு இவர்கள் கழகம் பிழைக்காது, இந்த ஆட்சி நிலைக்காது என்று கனவு கண்டுகொண்டு இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய கனவுகள் தவிடு பொடியாகி, கலைஞர் அவர்கள் தலைமையில் புதிய அரசாங்கம் ஏற்பட்டு, இன்றைக்கு நலலபடியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கட்சிக்குள்ளேயும், வெளியிலேயும், கலகம் ஏற்படுத்தலாமா, குழப்பம் ஏற்படுத்தலாமா என்று இந்தக் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ விஷமத்தனமான காரியங்களில் ஈடுபட்டு . . .

THIRU K. VINAYAKAM : I rise on a point of order. I object to this kind of insinuation that the Congress people are trying to foment trouble inside your party. We have nothing to do with your party. This is your grave. You dig it yourself and fall into it. Please don't attribute motives.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : நண்பர் விநாயகம் அவர்கள் பேசுகின்றதைப் பார்த்தால், அவருக்கும் இன்றைக்குக் காங்கிரஸ் இருப்பதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால்தான், இப்படிப் பேசுகிறார் என்று தெரிகிறது. இன்றைக்கு 'நவ சக்தி' பத்திரிக்கையாகட்டும், மற்ற எந்த காங்கிரஸ் நாள் ஏடாக இருந்தாலும் சரி, என்ன சொல்கிறது என்ன எழுதுகிறார்கள்? கருணாநிதியை எப்பொழுது கவிழ்க்கலாம், மாதவனை எப்பொழுது விரட்டலாம் என்று பார்க்கிறார்கள் என்றும், ஆசைத்தம்பி அமைச்சரவையில் நுழையப் பார்க்கிறார் என்றும், ஆக, இம்மாதிரியெல்லாம், பத்திரிகைகளில் எல்லாம் செய்திகளைப் போட்டு, குழப்பம் ஏற்படாதா என்று இப்படி காங்கிரஸார் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், பேரறிஞர் அண்ணா தலைமையிலே, வளர்ந்த இந்த திராவிட முன்னேற்றக் கழகத்திலே, இந்தக் கழக ஆட்சியிலே இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் எதிர்க் கட்சியாகச் செயல்படுவதற்கு ஒரு பிரச்சினையும் சிக்கவில்லை. பிரச்சினைகள் இருந்தால்தானே ஒரு கட்சி இயங்கமுடியும்? பிரச்சினைகளே இல்லாமல் எந்தக் கட்சிதான் வேலை செய்ய முடியும்? வளரமுடியும்? இந்த நிலை காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, என்ன செய்யத் தலைப்படுகிறார்கள்? வாரியார் காலிலே விழுந்து பல்லக்கு தூக்கும் பணியில்தான் ஈடுபடுகிறார்கள் (சிரிப்பு) வேறு என்ன பிரச்சினை இருக்கிறது? என்ன நடந்துவிட்டது வாரியாருக்கு? ஏதோ வாரியாருக்கு நடந்துவிட்டது போலவும், அவரைக் காப்பாற்ற இந்த அரசாங்கத்தால் முடியாது போலவும், இந்த சர்க்காரை எச்சரிக்கை செய்யப் புகுகிறார்களே? என்ன நடந்து விட்டது? என்ன தவறு நடந்து விட்டது? இது ஒரு சாதாரண சம்பவம். காந்தியடிகளைச் சுட்டுக்கொன்றானே. அவரைக் காப்பாற்ற கையால் ஆகவில்லை இந்த காங்கிரஸ்காரருக்கு (சிரிப்பு). அது போல பல சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. வாரியார் பேசுவது வரட்டு வேதாந்தம், வாழ்க்கைக்கு உதவாது என்று நான் சொல்ல வரவில்லை. டாக்டர்களே வந்தாலும்

அண்ணாவின் உயிரைக் காப்பாற்ற முடியாது என்றவர்கள், ஏதோ மறு நாள் தனக்கு ஏற்பட்ட காய்ச்சலுக்கு அவரும் முருகனிடம் போகவில்லை, டாக்டரிடம் தான் போனார்கள். ஊருக்குப் பேசுபவர்கள். அது ஊருக்குப் பேசும் பேச்சு. ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டது போல இடம் அறிந்து காலம் அறிநது பேசவேண்டும். கசாப் கடையில் போய் கத்திரிக்காய் கேட்கக் கூடாது. அந்த அளவில் வாரியார் பேசியிருக்கிறார்கள். அவர் பேசிய காரணத்திலே அவர் அனுபவித்தது சரி என்று நாங்கள் சொல்லவில்லை. முருகன் வேண்டுமானால் அப்படி நினைக்கலாம். ஆனால் நாங்கள் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தோம். "எப்படி ஊரை விட்டு மதுரைக்கு போகச்சொன்னீர்கள் ?" என்று கேள்விகள் கேட்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கருப்புச் சட்டைக்காரர்கள் மதுரையில் மாநாடு நடத்த வந்தபோது, காங்கிரஸ் காலிகள் அவர்களுடைய பந்தலுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். அப்பொழுது காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்தது ? அத்தனை பேர்களையும் ரெயில் ஏற்றி கொடைக் கானலுக்கு அனுப்பினார்கள்., நாங்கள் வாரியாருக்குச் செய்தது போல் செய்தார்களே தவிர, வேறு ஒன்றும் செய்துவிடவில்லை. 'மாநாடு நடத்துங்கள், எந்தக் காலிகள் வருகிறார்கள் பார்க்கிறோம்' என்று யாருமே சொல்லவில்லை. அது மாத்திரமல்லாமல், 1965-ம் ஆண்டு குடியரசு தினத்தன்று இந்தி ஆட்சிபீடம் ஏறுகிறது என்று துக்க தினம் கொண்டாட வேண்டும் என்று தனிப்பட்டவர்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகளைக் கட்டினார்கள்: அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கத்தில் அந்தக் கொடிகளைக் காப்பாற்றிக் கொடுக்க முடிந்ததா ? ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசினால், அது வாரியாராக இருந்தாலும் சரி. வேறு யாராக இருந்தாலும் சரி, சட்டம் ஒழுங்கு இவற்றை நேர்மையாகக் காப்பாற்றி, நிர்வாகம் நடத்திக் கொண்டு இருக்கிறது. அவர்களுக்கும் காபந்து செய்கிறது. வேறு பிரச்சினை இல்லாத காரணத்தால், காங்கிரஸ்காரர்கள். வாரியாருக்கு—சங்கராச் சாரியார் ஊர் ஊராக பல்லக்கில் போவது போலும்—பல்லக்கு தூக்குகிறார்கள்.

காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள், முருகனுடைய வேல் கழகத்தை சும்மாவிடாது என்று. இதை யாருக்குச் சொல்ல வேண்டும் ? எங்களுக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லை. பாதுகாப்புச் செலவிற்காக மொரார்ஜி தேசாய் அவர்கள் 1057 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களே பயித்தியக்காரத்தனமாக, அவரிடம் முருகன் கை வேலை அனுப்புகிறோம், பாகிஸ்தான் எல்லையில், சைனா எல்லையில் வையுங்கள் என்று மொரார்ஜி தேசாய்க்கு சொல்ல வேண்டும். எங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்குச் சரித்திரம் தெரியும். கஜினிமாமூது 18 தரம் படை யெடுத்து, கடவுள்களை 'புட்—பால்' ஆடினான். என்ன செய்தார்கள் ? தஞ்சாவூரில் ஒரு மன்னன் சத்துருக்களை எதிர்க்க துளசிச் செடியை போட்டு, எனன நடந்தது ? சரித்திரம் இருக்கிறது. வரலாறு தெரியாதவர்களுக்கு சொல்லுங்கள், முருகன் கைவேல் கழகத்தைச் சும்மா விடாது என்று மதி அமைச்சர், நிதி அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் இந்தமாதிரி பயித்தியக்காரர்களுக்குத்தானோ என்னவோ, ஒரு கீழ்ப்பாக்கம் போதாது என்று இன்னொரு கீழ்ப்பாக்கத்தையும் ஏற்படுத்த பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் போலும்.

நண்பர் திரு. சித்தன் பேசினார்கள், தாங்கள் பெரிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என்று. திரு. சித்தனுக்குத் தெரியாது; விநாயகத்திற்குத் தெரியாது காங்கிரஸைப்பற்றி. நேற்று வந்தவர்கள். என்ன பாரம்பரியம் ? தண்டவாளத்தைப் பிடுங்குவது; தபால் ஆபிஸைக் கொளுத்துவது, இதுதான் பாரம்பரியம். பலாத்காரப் பாரம்பரியம், காங்கிரஸினுடைய பாரம்பரியம். அங்கத்தினர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது, சுருக்கமாகச் சொல்லுகிறேன், போலீசின் கேடிப்பட்டியலில் மந்திரிகள், கவர்னர்கள்

இவர்களெல்லாம், கேடிப்பட்டியலில் இருந்திருக்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது. ஆஸப் அலி, ஒரிசா கவர்னராக இருந்தவர் பெயர் போலீஸ் கேடிப் பட்டியலில் இருந்திருக்கிறது . . .

திரு. கே. விநாயகம் அவர் இறந்து போனவர். அவரைப்பற்றிச் சொல்வதென்றால் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் ஏற்கெனவே நேரத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எங்கள் கட்சிக்கு அனுமதித்த நேரத்தில் பத்து நிமிடங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுத்து, மாண்புமிகு உறுப்பினருக்குப் பேச அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : நண்பர் திரு. கே. விநாயகம் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இறந்தவரைப்பற்றி குறிப்பிடும்போது, புண்படுத்தவேண்டும் என்பதற்காக நான் அதைக் குறிப்பிடவில்லை. காங்கிரஸ்காரர்கள் யார் யார் என்பதற்காகக் குறிப்பிட்டேன். அவர் கேடி என்பது போலீஸ் ரெகார்டில் இன்றைக்கும் இருக்கிறது. காங்கிரஸ்காரர்களுக்குப் பாரம்பரியம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே போகிறீர்களே, கடைசியில் பார்த்தால் ஒன்றுமே இல்லை என்றுதான் தெரிகிறது.

மதுரையில் நடந்த சம்பவத்தைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் இன்றைக்குப் பேசும் பேச்சு என்ன ? அது பேச்சா ? "போலீஸா, பார்த்துக் கொள்ளலாம்" என்று சவால் விடுகிறார்கள். ஒரு ஆள்மீது வழக்குப் போட்டால் கோர்ட்டுக்குப் போகவேண்டும். கோர்ட்டில் என்ன தீர்ப்பு வழங்குகிறார்களோ, அதை ஏற்க வேண்டும். அதை விட்டுவிட்டு, "போலீஸா, பார்த்துக் கொள்ளலாம்" என்று பேசுவதெல்லாம் ஒரு பேச்சா ?

காங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பாரம்பரியம் இருக்கிறதே அது சிறப்பு வாய்ந்தது. தந்தை பெரியார் அவர்களுடைய தலைமையிலே வளர்ந்தவர்கள் நாங்கள். போலீசார்கள் வழக்குப் போட்டால் எதிர்த்து வழக்காடாதே என்று பெரியார் அவர்கள் சொல்வார்கள். அப்படியே 1950-ம் ஆண்டு காங்கிரஸ் அரசாங்கத்தினால் என்மீது போடப்பட்ட வழக்கிலே நான் வக்கீல் வைத்து வழக்காடவில்லை. நானே வாதாடினேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் நாங்கள்தான் சட்டத்திற்கு—அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி—அடங்கி நடந்து வந்திருக்கிறோம். நாங்கள்தான் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து, நல்லபடியாக செயல்பட்டு வருகிறோமே தவிர காங்கிரஸ் கட்சி அல்ல. காங்கிரஸ் கட்சி மிகக் கேவலமான நிலையில் போய்க்கொண்டிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் கையிலே பிரச்சினை ஒன்றும் இல்லை. திட்டம் எதுவும் இல்லை. ஏதாவது பிரச்சினை இருந்தால்தானே அவர்களுக்கு வேலை இருக்க முடியும் ?

புதிய அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு விஷயத்தைப்பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். "முதல்முதலில் தீர்க்க வேண்டிய பிரச்சினை குடிதண்ணீர். நான் அதைத் தீர்ப்பதற்குவேண்டிய காரியங்களை எடுத்திருக்கிறேன்" என்று முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்து காட்டினார்கள். உள்ளபடியே காலம் இன்று எல்லோரையும் வஞ்சித்துக்கொண்டிருக்கிறது. பருவமழை பெய்யவில்லை, விளைச்சல் இல்லை, தண்ணீர் இல்லை, குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. இந்த நேரத்தில்தான் காங்கிரஸ்காரர்கள் மற்ற சம்பவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முதல் வேலையாக நான் குடிதண்ணீர் திட்டத்தை, கஷ்டமில்லாதபடி, எல்லோருக்கும் குடிதண்ணீர் கிடைக்கக்

கூடிய விதத்தில் செய்யப்போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியதைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. குடிதண்ணீர்த் திட்டத்தைப்பற்றி நான் ஒரு யோசனை சொல்லலாம் என்று கருதுகிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல திட்டம் போட வேண்டும். இன்றைக்குப் பஞ்சாயத்து போர்டு போன்ற இடங்களில், முனிசிபாலிட்டி போன்ற இடங்களிலும் தண்ணீர்ப் பிரச்சினையென்றால் அதைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும். பரவலாக எல்லா இடங்களிலும் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கும்பொழுது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? பஞ்சாயத்து போர்டு போன்ற இடங்களில் தண்ணீர்ப் பிரச்சினையென்றால் அரசாங்கம் கடன் கொடுக்கலாம். அதுவும் எந்த அடிப்படையில் கடன் கொடுக்கலாம் என்றால், அந்தப் பஞ்சாயத்து போர்டுக்கு "ரீ பேயிங் கெப்பாசிடி" இருக்கிறதா என்று பார்த்துத்தான் கடன் கொடுப்பார்கள். பணத்தை யாரால் திருப்பிக் கொடுக்க முடியுமோ, அங்கேதான் கடன் கொடுப்பார்கள். பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியுள்ள பஞ்சாயத்து போர்டு பிரதேசங்களில்தான் தண்ணீர்த் தட்டுப்பாடு தீரும். இன்று பரவலாக எல்லா கிராமங்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. அதற்கு அரசாங்கமே வழிவகை செய்ய வேண்டும். இதற்காக "வாட்டர் போர்டு" ஒன்றை ஏற்படுத்த வேண்டும். "எலெக்ட்ரிசிடி போர்டு" இருப்பதுபோல், தண்ணீருக்காக ஒரு கார்ப்பொரேஷனை ஏற்படுத்தவேண்டும். பணத்தைப்பற்றிக் கவலைப்படாமல், தண்ணீர் கார்ப்பரேஷனை ஏற்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

நேற்றையதினம் சுதந்திரா கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது, "எக்ஸ்பிரஸ் பஸ்கள் எல்லாம் வந்தால்தான் உறுதி" என்ற நிலையில் குற்றம் சாட்டினார்கள். காங்கிரஸ் சர்க்காரிலே 60 பஸ்கள் இருந்தன; இன்றைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, ஒரு தனி கார்ப்பொரேஷனை "இண்டியன் ஏர்லைன்ஸ் கார்ப்பொரேஷன்" இருப்பதுபோல் பஸ் போக்குவரத்துக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிச் செய்தால், எதிர்காலத்தில் தேசியமயமாக்கும் காரியத்திற்கு மிகுந்த பயனுள்ளதாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாத அளவுக்கு நாம் காரியம் ஆற்ற வேண்டும். விவசாய அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இந்த மன்றத்திலே, "பஞ்சம் வந்துவிட்டது, உணவுப் பற்றாக்குறை வந்துவிட்டது" என்று மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இந்த நேரத்தில் விவசாயத்தை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்தியிலே இருக்கும் காங்கிரஸ் அரசாங்கம் அப்படி நினைக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. நேற்றைய தினம் இந்த மன்றத்திலே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. துரைபாண்டியன் அவர்கள் பேசும்போது, "காங்கிரஸ் அரசாங்கத்திலே எங்களுக்கு அரைப்படியாவது போட்டார்கள், இப்போது அதுகூட இல்லையே" என்று சொன்னார்கள். அது தவறு. காங்கிரஸ் அரசாங்கத்திலே இருந்த நிலைமைக்கும் இன்றைக்கு இருக்கும் நிலைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இன்றைய நிலைமையைப் பார்க்க வேண்டும். இப்பொழுது பருவமழை பெய்யவில்லை. .1967 பிப்ரவரி வரைக்கும் நல்ல விளைச்சல். இருந்தது. இருந்தும்கூட அரசாங்கம் ப்ரொக்யூர் பண்ணவில்லை. எல்லா இடங்களிலும் அரசாங்கம் ப்ரொக்யூர் செய்யாமல் விட்டுவிட்டார்கள். பழைய காங்கிரஸ் அரசாங்கம் அப்படி விட்டுவிட்டது. நாங்கள் அப்படி விட்டுவிடவில்லை. எங்கெங்கே விவசாயம் இல்லையோ, அங்கெல்லாம், விவசாயம் இல்லாத பகுதிகளில் எல்லாம் ரூபாய்க்கு ஒருபடி அரிசியையும், இந்த அரசாங்கம் சப்ளையை சரியான முறையில் செய்திருக்கிறது.

இப்பொழுது பருவமழை தவறி விட்டது. இந்தச் சமயத்தில் "படி அரிசி எங்கே?" என்று அருமை காங்கிரஸ் நண்பர்கள் கேட்கிறார்கள். உணவு அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இந்த மன்றத்

திலே தைரியமாக, "மத்திய சர்க்காரை ஒரு லட்சம் டன் அரிசி கொடுங்கள் என்று கேட்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் காங்கிரஸ்காரர்களின் பொறுப்பு என்ன? காங்கிரஸ்காரர்கள் எங்களோடு இந்த விஷயத்தில் ஒத்துப் போவார்களா? இதையெல்லாம் செய்யாமல் "திராவிட நாடு வாடை வீசுகிறது" என்று சொன்னால் என்ன பொருள்? குழந்தை பசிக்கிறபொழுது அழும். அதன் பொருள் என்ன? குழந்தை அழுவது தவறா? அழுகின்ற குழந்தைக்கு உணவு கொடுக்க வேண்டுமே தவிர, திராவிடநாடு வாடை வீசுகிறது என்று சொன்னால் அதனுடைய பசி நீங்கிவிடுமா?

இன்றைக்கு ஒரு லட்சம் டன் அரிசி வேண்டும். காங்கிரஸ்காரர்கள் அத்தனைபேரும் சேர்ந்து இந்த அரசாங்கத்தோடு கைகொடுப்பார்களானால், மத்திய அரசு நிச்சயமாகக் கொடுக்காமல் போகாது. மத்தியிலே இருக்கும் காங்கிரஸ் அரசாங்கம் இந்த அரசாங்கத்தோடு ஒத்துழைக்கக் கூடிய தன்மையிலே, இந்த அரசாங்கத்தை நடத்திக்கொண்டு போவதுதான் இங்குள்ள காங்கிரஸ்காரருக்கு வேலையில்லாத நிலைமையை உண்டாக்கிவிட்டது. எதிர்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட, "முன்பெல்லாம் பட்ஜெட்டில் போராடப் போகிறோம், போராடப் போகிறோம் என்ற சொல் இருந்தது, ஆனால் இப்போது மன்றாடுகிறோம் என்று இருக்கிறது" என்று சொன்னார்கள். நாங்கள் மத்திய சர்க்காரோடு ஒத்திருப்பது எதிர்கட்சித் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. மத்திய சர்க்காரோடு போராட்டம் இருந்தால்தான் இவருக்கு வேலை என்று சொல்கிறார்கள்; இல்லாவிட்டால் எந்த வேலையும் இவருக்கு இல்லாமல் போய்விடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிக சாமர்த்தியமாக பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஒத்துழைக்காவிட்டால் திராவிட நாடு கேட்பார்கள் என்று எண்ணிக்கொண்டு, எங்களை ஏதோ குற்றவாளிகளைப்போல் நினைத்துப் பேசுகிறார்கள். அப்படி காங்கிரஸ்காரர்கள் நினைத்துக்கொண்டால், அது நடக்காது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் நாட்டுப் பிரிவினையை விரும்புகிறவர்கள் அல்ல, தேசிய ஒற்றுமையை விரும்புகிறவர்கள். இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள். திராவிட நாடு வேண்டுமா வேண்டாமா என்பதை மத்திய சர்க்கார்தான் தீர்மானிக்க வேண்டும். "எங்களை ஆளுவது தமிழ், உங்களோடு உறவுகொள்ள ஆங்கிலம்" என்று மத்திய சர்க்காரிடம் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டோம். இதைப்பற்றி மத்திய சர்க்கார் என்ன நினைக்கிறார்கள் என்று பார்த்தால், இந்தியா ஒன்றாக, ஒரே நாடாக இருக்க வேண்டு மென்பது அவர்களுடைய ஆசை. இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமானால், தேசிய ஒருமைப்பாட்டில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டுமானால், ஆங்கிலத்தை மட்டும் ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும், இந்தியை அகற்ற வேண்டும். இல்லாவிட்டால் தமிழர்களோடு, தமிழ் நாட்டோடு இனி சேர்ந்து வாழ முடியாது என்று மத்திய சர்க்காரே தீர்மானம் செய்து விட வேண்டும், (சிரிப்பு) நாங்கள் திராவிட நாடு கேட்கவில்லை. திராவிட நாட்டைப் பற்றி மத்திய சர்க்கார்தான் முடிவு கட்ட வேண்டும்.

திரு. காமராஜ் அவர்கள் பாண்டிச்சேரியில் பேசும்போது, "இவர்களுக்குத் தெளிவான திட்டம் இல்லை" என்று பேசியிருக்கிறார்கள். முற்
இந்தி வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். ஆனால் இந்தி இருந்தால் பகல்
தான் இனி உத்தியோகம் என்று மத்திய அரசாங்கத்தார் தீர்மானித் 11-00
திருக்கிறார்கள். தனியான திட்டம் எதுவும் இல்லை என்று சொல்வதன் நோக்கம் என்ன இருக்கிறது? மத்திய சர்க்கார் தான் இனி தெளிவுபடுத்தவேண்டுமே தவிர நாங்கள் தெளிவுபடுத்திவிட்டோம். எங்களுடைய கருத்துக்கு மாறாக எது நடந்தாலும் நிச்சயமாக நாங்கள் இந்த ஆட்சியில்

உட்கார்ந்திருக்க மாட்டோம் என்பதை மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.—சிவப்பு விளக்கும் போடப்பட்டுவிட்ட காரணத்தினால்.—வணக்கம்.

***திரு. பி. எஸ். எல்லப்பன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது பட்ஜெட் விவாதம் நடக்கிறது. இந்த விவாதத்தில் நான் கலந்துக் கொள்ளவே யோக்கியதை இல்லை. (சிரிப்பு) ஏன் ? வருஷா வருஷம் இந்த பட்ஜெட் புத்தகத்தை வைத்துக்கொண்டு நான் தூங்குவேன். இந்த ஆண்டு தூங்கவே இல்லை. அதில் என்ன சமாசாரம் என்று யார் படித்து யார் பேசுகிறார்கள் ? (சிரிப்பு). ''சூதாடுவார் போல மனம் துவண்டு துவண்டு வாதாடி என் பயன் வாய்க்கும் பராபரமே "என்பார். நான் சாமியைப் பத்தி சொல்லவில்லை. சொனனால் சண்டைக்கு வந்து விடுவார்கள். இந்த பட்ஜெட்டிலே என்ன இருக்கிறது, இன்று நாடு எப்படி இருக்கிறது, மக்களுடைய நிலை என்ன, இதையெல்லாம் யார் பேசுகிறார்கள்—இந்தக் கட்சி அந்த கட்சியைத் தாக்குவது, அந்தக் கட்சி இந்தக் கட்சியைத் தாக்குவது—இப்படி வாதிட்டு வாதிட்டு என்ன பயன் ? இதே பேச்சுத்தானா?

ஆகவே இப்போது இருக்கிற நிலைமையில் எத்தனையோ திட்டங்களைப் போடுகிறார்கள். அவ்வளவுதான். எது செயலுக்கு வருகிறது ? நாட்டில் உள்ள நிலங்களை மூன்று அம்சத் திட்டத்தின் கீழ் ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுப்பது என்று சொன்னார்கள். இரண்டு மூன்று மாதம் எங்கள் ஊரில் வெகு பரபரப்பாக இருந்தது. கடைசியில் நடந்தது என்ன ? ஒருத்தருக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை. இதுதான் நிலை.

எங்கள் மதுராந்தகம் தாலுக்கா—எங்கள் தொகுதி அங்கத்தினர் பல வகையில் எடுத்துச்சொன்னார். மிகுந்த மோசமான நிலையில் அந்தப் பகுதி இருக்கிறது. தண்ணீர்ப் பஞ்சம், சோத்துப் பஞ்சம்—பஞ்சம் பஞ்சம் என்று மக்கள் எல்லோரும் பேசுகின்றார்கள். நானும் ஒரு குரல் அழத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அங்கே இருக்கிறவன் சொல்லுவான்—"இந்தப் பாவி ஒன்றையும் சொல்லாமலேயே இருந்துவிட்டு வந்துட்டாண்டா" என்பான். ஆகவே நானும் ஒரு குரல் அழுகிறேன். உடனடியாக எதுவும் செய்யாவிட்டால் முதலிலே கால்நடைகளைக் காப்பாற்ற முடியாது. மூன்று போகம் சாகுபடி செய்யக்கூடிய இடத்திலே தண்ணீரே இடையாது. மதுராந்தகம் ஏரி வறண்டு கிடக்கிறது. கால்நடையைக் காப்பாத்தினால்தான் அடுத்த வருஷமாவது சமாளிக்க முடியும்.

அடுத்து, அச்சரப்பாக்கம் பகுதியில் தொழுப்பேடு வெங்கடேசுவர ரெட்டியார் மில்லில் 14 டன் அரிசி இருந்தது. ஆகஸ்டில் அப்படியே தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த அரிசி அங்கேயே இருந்திருக்குமானால் இன்றைக்கு அங்குள்ள மக்களுக்குப் பிரயோசனப்படும். அதே போல சூணம்பேடு பெரிய நிலச்சுவான்தாரிடம் இருந்து ஆயிரம் கலம் நெல்லையும் அளந்து வந்துவிட்டார்கள். அவரும் கொள்முதலுக்குக் கொடுத்துவிட்டார் அது இருந்தாலாவது இந்தச் சமயத்தில் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்பட்டிருக்கும். உடனடியாக அங்கிருக்கிறவர்களுக்கு எப்படியாவது உணவு. தானியம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

28-ஆம் தேதி சபையில் பேசுகின்றபோது அண்ணன் என்பதைப்பற்றிச் சொன்னேன். அதை யாரும் நம்பிக்கை இல்லாமல் கவனித்தார்கள். அண்ணா என்றால் முருகா என்று அர்த்தம். முருகா என்றால் அண்ணன் என்று அர்த்தம். இதை சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் சன்னதி முறையில் சொல்கிறார். ஒரு தெய்வீக சக்தி மனிதனிடத்தில் இருந்தால் தான் இந்த உலகத்தை வசியப்படுத்த முடியும். ஆத்ம சக்தி—சரீர சக்தி என இருவகையுண்டு. ஆத்ம சக்தி, மகாத்மா காந்தியிடத்தில் இருந்தது. அதனால் தான் இந்த உலகத்தை ஒரே நோக்கோடு

அவர் பார்த்தார். 3 வயது குழந்தையைக் கேட்டால் கூட காந்தி தாத்தா ஜெயிலில் இருக்கிறார் என்று சொல்லும். அதே ஆத்ம சக்தி அண்ணாவிடம் இருந்தது.

ஏதாவது தவறாகச் சொன்னால் தலைவர் இருக்கிறார், திருத்துவதற்கு. எல்லோருமேவா கையில் கம்பைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவது. நானும் 1957-இல் இருநதுஇந்த சட்டசபையில் இருக்கிறேன். பட்ஜெட் விவாதத்தின் போது அண்ணாவுக்கும் சுப்பிரமணியத்திற்கும் இடையே நெருப்பு பறக்கும். சபாநாயகர் டாக்டர் கிருஷ்ணராவ் சொல்வார்கள்—"இரண்டு பேரும் என் முகத்தைப் பார்த்துப் பேசுங்கள், இரண்டு பேருமே பேசிக் கொண்டால் எபபடி ?" என்பார்கள். அப்படியே சபை பாம்பு அடங்கினமாதிரி ஆகிவிடும்.

இங்கே என்னடா என்றால் ஆளுக்கு ஒன்று எழுந்து நின்று சொல்கிறார்கள். இது சட்டசபை இல்லையா? பட்ஜெட் பற்றிப் பேச வந்திருக்கிறோமா ராமாயணம் சொல்ல வந்திருக்கிறோமா ? வீண் பேச்சிலேயே காலம் கடந்து போகிறது.

1958-ம் வருடத்திலேயே காங்கிரஸ் கட்சி உதவித் தலைவர் விநாயகம் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கூவம் கால்வாயைச் சீர்திருத்தம் பண்ணுங்கள், இதைப் பண்ணினாலேயே ஏற்றுமதி, இறக்குமதி நன்றாக நடக்கும் என்றார்கள். அப்போது இருந்த காங்கிரஸ் சர்ககாரும் கேட்கவில்லை, இவங்களும் 2 வருஷத்தைத தள்ளி விட்டார்கள். பாக்கி வருஷமும் ஓடிவிடும். அதை உடனடியாக ரிப்பேர் செய்யவேண்டும். ஏன் தெரியுமா ? அண்ணா அவர்கள் கூவத்தின் முனையில்தான் சமாதி இருக்கிறார். இன்னும் 6 மாதம் யாரும் திருப்போரூர் போக மாட்டார்கள், பழனி போகமாட்டார்கள். திருத்தணி போக மாட்டார்கள். அண்ணா சமாதியைத் தரிசனம் செய்யவே ஜனங்கள் வந்துக் கொண்டு இருப்பார்கள். அநத தெய்வ சக்தி அவரிடம்தான் இருக்கிறது. தெய்வம் உண்டோ இல்லையோ, இதுதான் நடக்கும். வருகிற யாத்திரீகர்களுக்கு வசதியாக உடனடியாக இந்த கால்வாயைச் சீர்திருத்த வேண்டும். அங்கங்கே ஆற்றோரம் சத்திரங்களை அந்தக்காலத்தில் கட்டி வைத்தார்கள். இப்போது என்னடா வென்றால் கதவு ஜன்னலைப் பிடுங்கிப்போய் விடுகிறார்கள். (சிவப்பு விளக்குப் போடப்பட்டது) எனக்கு கொஞ்சம் ஜாஸ்த்தி நேரம் கொடுக்ககூடாதா ? இந்த கூவத்தைக் சீர்திருத்தினால்தான் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும்.

என் தாலூக்காவிலே ரொம்பப் பஞ்சம். குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. நான இதைப்பற்றிச் சும்மா பேசினால் பாகவதர் பேசியிருக்கிறார் என்றாவது சொலவார்கள் அங்கே. ஆகவே இந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் சரியான திட்டத்தைப் போட்டு, வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். நான் சொன்னதையெல்லாம் தயவுசெய்து மறந்து விடாதீர்கள்.

***திரு. பெ. மலைச்சாமி :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்புக்கிட்டியமைக்காக நான் நன்றி கூறுகிறேன். நன்றி கூறுவதற்கு முன்னால் செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை, குவிக்கும் கதைக் குயில், இந்நாட்டின் பகையைக் கவிழ்த்த கதை முரசு, நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ அறம் பாடவந்த அறிஞன், புதிய மறப்பாட வந்த மறவன், காஞ்சி தந்த கோமான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அஞ்சலி செய்கிறேன். ருஷ்ய நாட்டில் புரட்சியாளனாக விளங்கிய லெனினுக்கு லெனின்கிராட் நகரம் உருவாக்கியது பொதுவுடைமை அரசு, அதைப் போலவே சென்னை நகரத்திற்கு அண்ணாகிராட் என்ற பெயரை வைக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சி நண்பர்கள் பேசும்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையில் உப்பும் இல்லை சப்பும் இல்லை என்று கூறினார்கள். அவர்களுக்கு உப்பாகஇருப்பதுவரிதான். அதிகமாக வரிப்போட்டிருந்தால்உப்பைநாவிலே வைத்துச் சுவைத்திருப்பார்கள். வரியில்லாத காரணத்தினால்தான்அவர்கள் உப்பு இல்லை என்று கூறுகிறார்கள். உண்மையிலேயே நான் கூறுவது சரியாக இருக்குமானால், இந்திய நாட்டின் சார்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக உள்ள திரு. நரசிம்மன் அவர்கள இந்தியாவைப் பற்றிச் சொல்லும்பொழுது 'India is a laboratory for the taxes'. என்று சொல்லியிருக்கிறார்கள். உலகத்தில் விண்ணுலகத்தைப்பற்றி ஆராய்கிறான் விஞ்ஞானி. சந்திர மண்டலத்திற்குச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் அங்கே செல்லப்போவதையும் அறிவியல் உலகம் வியப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய நாட்டிலே என்ன ஆராய்ந்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் வரிகளை எப்படிப்போடலாம் என்ற ஆராய்ச்சிகள்தான் நடந்துக்கொண்டிருக்கின்றன, மொரார்ஜி தேசாய் வரி போடும் நிலைமையை அரசியல் வாதிகளுக்குத் தெரிந்ததைவிட அதிகமாக பெட்டிக்கடை வைத்திருக்கிறவர்களும், மண்ணெண்ணெய் விற்கிறவர்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அன்றாடம் வாழ்கையில் ஒளி உமிழ்ந்துகொண்டிருக்கின்ற மண்ணெண்ணெய், அன்றாடம் வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் பயன்படுத்தும் உரம் இவற்றை நினைத்துப்பார்த்த மொரார்ஜி தேசாய் தமிழக அரசு தற்பொழுது புதுமையான திட்டங்களைத் தீட்டி நல்ல முறையில் முன்னேறிக் கொண்டு வருகிறது. அதன்மூலம் மக்களுக்கு அந்தக் கட்சியின்பால் பாசம் ஏற்பட்டுவிட்டால், காங்கிரஸ் கட்சி மறுபடியும் போய்விடும் என்ற பயத்தால்தான் தமிழக அரசின் நல்ல முயற்சிகளுக்கு ஊறு விளைக்கும் முறையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

காந்தியைக் கோட்சே கொன்றான். காந்தியத் தத்துவத்தை காங்கிரஸ்காரர்கள் கொன்றிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் தமிழக அரசு எவ்வளவு உறுதியாக இருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையிலே இந்த அரசு உறுதியாக இருக்கின்ற காரணத்தாலே 80 கோடி ரூபாயை இழந்து வருகிறது. மகாராஷ்டிரம், மைசூர், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் நீங்கள் காந்தீயத்தை இடுகாட்டுக்கு அனுப்பிவிட்டு மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமலாக்குவதற்குப் பதிலாக மதுவிலக்கை ரத்துசெய்து வருமானத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறீர்கள். தேசியம் பேசுகிற காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் டெல்லிக்குச் செல்கின்றபொழுது, காந்தீயத் தத்துவத்தைக் கையாண்டு கொண்டு வருகின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, காந்தியக் கொள்கையின்படி நடந்துவருகிற திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மதுவிலக்கை அமல் நடத்துவதால் 80 கோடி ரூபாய் வருமானம் குன்றி வருகிறது, எனவே மொரார்ஜி தேசாய் அவர்களே, அந்த 80 கோடி ரூபாயைக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டிருக்கலாம். அதற்குப் பதிலாக எதிர்கட்சித் தலைவர் அவர்கள், கெஞ்சுகிறார்கள் என்று சொல்கிறார்கள். உலகத்திலே கொலை செய்வதைவிட கொலைசெய்யத் தூண்டுவதற்குத்தான் தண்டனை அதிகம். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே தூண்டி விடக்கூடியவருக்கு என்ன தண்டனையோ தெரியவில்லை. ஒரு நாட்டிலே ஒரு பகுதி மட்டும் சீர்பெற்றிருந்தால், அந்த நாட்டில் முழுமையான ஜனநாயகம் இருந்துவிடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

'We cannot be content with mere political democracy or with a State where the few are civilized and many merely fed and employed'.

என்ற சொல்லியிருக்கிறார் லிவிங்ஸ்டன் என்பவர். இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதிமட்டும் உணவுத் துறையிலே நிறைவேற்றம் பெற்றிருந்தாலும், பொருளாதாரத் துறையிலே தன்னிறைவு பெற்றிருந்தாலும், நாகரீகத்திலே நிறைவேற்றம் பெற்றிருந்தாலும் அது முழுமையான

ஜனநாயகமாகிவிடாது என்று சொல்லியிருக்கிறார். எனவே முழுமையான ஜனநாயகம் வேண்டுமென்றால், இந்திய அரசு மாநில அரசுகளுக்குரிய அதிகமான உரிமைகளை வழங்க வேண்டும். அதற்காக இந்திய அரசியல் சட்டத்தைச் திருத்தியாக வேண்டும். இதை நான் சொல்லவில்லை. 1952-ஆம் ஆண்டிலே

Sir Ivor Jennings என்பவர் 'The Indian Constitution vests control in the hands of the Hindus of the North'

என்று சொல்லியிருக்கிறார். இந்திய அரசியல் சட்டம் வடவர் ஆதிக்கத்திற்குத்தான் பயன்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். இல்லாவிட்டால் மாநில அரசுக்குத் தேவைப்படுகின்ற உரிமைகளை வழங்காததற்குக் காரணம் என்ன? அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டு, அதிலே உள்ள பிணைப்பை வைத்துக்கொண்டு, அரசியல் சட்டம் என்ற மாயையிலே தமிழக அரசையும், ஏனைய மாநில அரசுகளையும் இந்திய அரசு பிடித்துக்கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சி நண்பர்கள் சட்டம், ஒழுங்கு பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படவில்லைதான். ஏனென்றால் 1965-வது ஆண்டிலே தமிழகமெங்கும் புரட்சி பூத்த நேரம், தமிழகத்திலே இருக்கிற அரசியல் தலைவர்கள் சிறைச்சாலையிலே வதைக்கப்பட்ட நேரம். அது பற்றிய முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஃபைல்களை எல்லாம் கொளுத்தியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு இருந்திருந்தால், பக்தவத்சலம் அவர்களைக் கைதுசெய்து இருக்கவேண்டும், இந்த அரசு. அரசியல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களையெல்லாம் பக்தவத்சலம் மறைத்து இருக்கிறார்கள். இன்னும் காலம் கடக்கவில்லை. நான் இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து பக்தவத்சலம் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று. ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால் சாதாரணத் தவறு செய்தால் நீதிபதி தண்டிக்கிறார். முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் என்ற காரணத்தாலே நாட்டிலே செய்யக்கூடாத தவறை அவர் செய்திருக்கிறார். நிச்சயமாக இந்த அரசு பக்தவத்சலம்மீது உடனடியாக வழக்குத் தொடரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவை மாவட்டத்திலே இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருப்பவர் கூட்டுறவுக் கழகத்திலே அதிகமாகப்பண மோசடி செய்து இருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். மக்களுடைய வரிப்பணத்தை அவருக்காக, அவருடைய சொந்தத்திற்காக ஏன் பயன்படுத்திக்கொண்டார், கூட்டுறவுக் கழகத்திலே அவர் ஏன் கொள்ளையடித்தார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ் கட்சியினர் சட்டம் ஒழுங்கு இல்லை என்று சொல்லி வருகிறார்கள். இந்த அரசு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டு வருகிறது. இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன், அந்தக் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்மீது விரைவிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்மீது வழக்குத் தொடர்ந்தால்தான் இந்த அரசை மக்கள் நம்புவார்கள், இந்த மந்திரி சபையை மக்கள் நம்புவார்கள் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்

* **திரு எ. பூலசுப்பிரமணியம்:** சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசும்போது ஒன்றிரண்டு கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படக் கூடிய நேரம் தமிழ்நாடு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நேரம். எங்கு பார்த்தாலும் வறட்சி. வறட்சி நிலை நாம் நினைப்பதைக் காட்டிலும் காட்டமாக இருக்கிறது என்பதை உணர வேண்டும். காவேரிக்கரை ஓரம் நீங்கலாக, தமிழகம் முழுவதும் மிகவும் மோசமாக இருக்கிறது. சென்னை, கோவை, மதுரை ஆகிய பெரிய நகரங்களிலேயே குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாகிவிட்டது. நேற்று

மதுரை முனிசிபல் சேர்மன் அவர்கள் 50 லட்சம் ரூபாய் அவசரக் கடன் தேவை என்று தந்தி அனுப்பி இருக்கிறார். நகரப்புறங்களிலேயே நிலைமை இப்படி என்றால் வானம் பார்த்த புஞ்சை இருக்கக்கூடிய கிராமப் புறங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினை எவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். கூலிக்கார மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் குடிதண்ணீர் கூட இல்லாமல் பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய அபாயம் உருவாகியிருக்கிறது. மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் விட முக்கியமான பிரச்சினையாக, தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினையாக வரட்சி நிலை கடுமையாகி இருக்கிறது. குடிதண்ணீருக்கு உத்தரவாதம் செய்வதற்கு வேண்டிய அவசர நடவடிக்கைகளை "க்ராஷ் புரோகிராம்" என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே அந்த முறையில் திட்டத்தைத் தீட்டி பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எவ்வளவு தூரம் வெளியே கொண்டு வருவது சாத்தியம் என்று பார்த்து அவ்வளவையும் செய்வதை அவசரக் கடமையாக எடுத்துச் செய்தால்தான் இன்றுள்ள நிலைமையை ஓரளவு சமாளித்து கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு உதவமுடியும் என்பதை உணர்ந்து நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

உணவு நிலைமையும் மோசமாகிக் கொண்டே வருகிறது. இந்த வறட்சி நிலை, பருவ மழை தவறியிருக்கும் நிலை, உணவுப் பற்றாக்குறை நிலை, எவ்வளவுதான் விளைந்தபோதிலும் நம் கைக்கு வந்து சேருவது இல்லை. சமீபத்தில் மத்திய சர்க்கார் போட்டிருக்கும் பட்ஜெட் விலைவாசிகளை மேல்நோக்கி நெருக்குகிறது. இப்போது, மக்களுடைய இந்தக் கஷ்டத்தைப் பயன்படுத்திச் கொள்ளையடிக்கும் கூட்டம் கட்டாயமாகக் கொள்ளையடிப்பார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னால் 1942–43-ம் ஆண்டில் மகாயுத்தத்தின் போது பற்றாக்குறை தோன்றியதைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடிப்பதைப் பிழைப்பாகக் கொண்டு ஆதாயத்தையும் செல்வாக்கையும் வளர்த்துக் கொண்ட கொள்ளைக் கூட்டம் நாட்டில் இருக்கிறது. மக்களுடைய வறுமையைப் பற்றிக் கவலைப்படாமல் கொள்ளையடிக்கும் கூட்டம் இருக்கின்ற நிலையில் கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டியது மிகவும் அவசியம்.

தற்போது 20 சதவிகிதம் கொள்முதல் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. எங்களைப் பொறுத்தவரை அது போதுமானதாக இருக்காது என்று சொல்லி வருகிறோம். அது சாதாரண காலத்திலேயே போதுமானதல்ல, இன்றுள்ள நிலைமையில் நிச்சயம் போதுமானதல்ல. மீதியுள்ள 80 சதவிகிதம் வெளியே நின்று விடுகிறது. மார்க்கட்டின் சர்ப்ளஸ் என்ற உபரி பெரும்பாலும் அதிக நிலம் வைத்திருப்பவர்கள் கையிலிருந்து நேரடியாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய கைக்குப் போய் சேருகிறது. இப்போதுள்ள பற்றாக்குறை நிலையில் அவர்கள் எந்த அளவுக்கு வெளிச் சந்தையில் விலையை உயர்த்திக் கொள்ளை லாபம் அடிப்பார்கள் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது கொள்முதலைக் கட்டாயமாக அதிகமாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மார்க்கட்டின் சர்ப்ளஸ் முழுவதும் சர்க்கார் கைக்கு வரவேண்டும். அந்த வகையில் பெரிய நிலச்சுவாந்தார்கள் கையிலிருந்தும் நெல் சர்க்கார் கைக்கு வருவதற்கு நடவடிக்கை எடுத்தால்தான் ஓரளவு இந்தக் காலத்தில் அதிகக் கூப்பாடு இல்லாமல் சமாளித்துக் கொண்டு போக முடியும் என்பதை வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன்.

இதே சமயத்தில் கிராமப் புறங்களிலே வறட்சியினால் பாதிக்கப்பட்டு தானியமே இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகளுக்கெல்லாம் கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். கால்நடைகளுக்காகத் தனித் திட்டமே தயாரிக்க வேண்டும். புஞ்சைப் பிரதேசமாக இருக்கும் கிராமங்களில் கஞ்சித் தொட்டிகள் அமைக்கும் அளவுக்கு மோசமான நிலைமைகள்

வளர்ந்து வருகின்றன என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொள்முதல், விநியோகம் விஷயத்தில் தயவு செய்து அதிகாரிகளை மட்டும் நம்பி காரியங்களைச் செய்வது என்ற போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆங்காங்கு பிரஜைகளின் கமிட்டிகளை எல்லாத் தரப்பினரையும் கொண்டு அமைத்து முறையாக கொள்முதல், விநியோகம் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தால் ஜனங்களுக்கு நியாயம் கிடைக்க உத்தரவாதம் உண்டாகி ஓரளவுக்கு அமைதியைக் காப்பாற்ற உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு. மொரார்ஜி பட்ஜட் வருவதற்கு முன்னாலேயே அதற்குத் தலைவலி ஏற்பட்டுவிட்டது. பட்ஜட் வந்த பிறகு கடுமையாகியிருக்கிறது. புதிய வரிகள் விதிக்கப்பட்டு. நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தகர டின்களோடு உட்கார்ந்திருக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு யோசனை— மண்ணெண்ணெய்க்கும் கார்டு கொடுத்து விநியோகம் செய்யும் முறையை ஏன் ஏற்படுத்தக்கூடாது? 1942–43-ம் ஆண்டில் விறகு, கரி, மண்ணெண்ணெய் போன்றவற்றுக்குக் கார்டு கொடுத்து எல்லோருக்கும் கிடைக்கும் அளவுக்கு உத்தரவாதம் இருந்தது. கட்டாயமாக, நீண்ட கியூ வரிசை இல்லாமல் சமாளிக்கக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சீனி—அதுவும் நெருக்கடியாக இருக்கிறது. வெளி மார்க்கட்டுகளில் கிலோ 4 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கண்ட்ரோல் மார்க்கட்டில் கிடைப்பது அற்பமாக இருக்கிறது. இதிலேயும் கவனம் செலுத்த வேண்டும். குடிதண்ணீர், உணவு, மண்ணெண்ணெய், சீனி ஆகிய நான்கு விஷயங்களிலே சீரான விநியோகம் ஏற்பட்டு மக்களுக்குக் குறைந்தபட்ச அளவாவது கிடைக்க வேண்டுமென்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இதற்காகத் தனியாகக் கிராண்ட், விசேஷ நிலைமையைச் சுட்டிக் காட்டிக் கேட்பது முற்றிலும் நியாயமானதாக இருக்கும்.

நிதி நிலை அறிக்கையிலே மத்திய அரசு, மாநில அரசு உறவு முறைகள் சம்பந்தமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி எங்கள் கட்சியின் கருத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறேன். மத்திய அரசிடம் இருக்கும் அதிகாரங்கள், நிதி வசதிகள் எல்லாம் மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். மத்திய அரசு முக்கியமான இரண்டொரு அதிகாரங்களைத் தவிர, பாதுகாப்பு, போக்கு வரத்து, அந்நிய நாட்டுப் பிரச்சினை ஆகியவற்றைத் தவிர, மற்றவற்றை எல்லாம் மாநில அரசுகளிடம் பகிர்ந்து கொடுத்துவிட வேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு என்ற நிலையில் நாம் மத்திய அரசிடம் நிதி கேட்பது சரி, கேட்கத்தான் வேண்டும். வாங்கத்தான் வேண்டும், அதற்கு உரிமை இருக்கிறது. அதிலே எந்த விதமான சந்தேகமும் கிடையாது. அதே சமயத்தில் மத்திய அரசு எப்படிப் பணம் பெறுகிறது என்பதையும் ஆலோசிக்க வேண்டும். மத்திய அரசு பணம் பெறுவதற்காக வைத்திருக்கும் வழிகள் கடந்த 20 ஆண்டு காலமாக ஒரே விதமாக இருக்கிறது. புதிய வரிகளை சாமானிய மக்கள் மீது விதிப்பது—நோட்டு அடிப்பது, அந்நிய நாட்டிலிருந்து கடன் பெறுவது ஆகிய மூன்று வழிகளைத்தான் கடந்த 20 ஆண்டுகளாகக் கையாண்டு வருகிறார்கள். இந்த வழிகள் நாட்டில் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதன் விளைவாகத்தான் கஷ்டங்கள் தோன்றியிருக்கின்றன. இந்த வழிகளின் காரணமாக ஏகபோகமாக இருப்பவர்கள் வளர்ந்து கொண்டிருக்க, நாட்டிலே வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டே வரும் நிலையில் அதைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் மத்திய அரசிடம் பணம் கேட்கும்போது ஓட்டைப் பெட்டியைக் காட்டுகிறார்கள். எங்களாலேயே சமாளிக்க முடியவில்லை என்று பலவிதமான பதில்களைத் தருகிறார்கள்.

இதை மாற்ற தேசிய வளர்ச்சிக் கூட்டங்களில் பங்கு கொள்ளுகிறபோது ஒத்த கருத்துடையவர்கள் ஒன்று சேர்ந்து மாற்று வழிகளில் பணம் பெற மத்திய அரசு நிதிக் கொள்கையை மாற்ற போராட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி ஒரு மாற்றுத் திட்டம் உருவானால்தான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காண முடியும்.

கைத்தறி பற்றி இந்த மூன்றாவது பட்ஜெட்டில் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஆறு லட்சம் பேருடைய வாழ்க்கைப் பிரச்சினை இதிலே அடங்கியிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், விசைத் தறி இல்லையென்று பிரகடனத்தைச் தெளிவாகச் சொல்ல வேண்டும்—தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில்.

இருக்கும் வேலையையாவது பாதுகாக்க வேண்டும். மில் வாசல் விலைக்கு நூல் கிடைக்க வேண்டும். வருடம் பூராவும் இந்த பத்துப் பைசா ரிபேட் நீடித்துக் கிடைக்க வேண்டும், சொஸைட்டியில் உற்பத்தியானாலும் சரி, அல்லது வெளியே உற்பத்தியானாலும் சரி. இதற்கு உத்தரவாதம் இருந்தால் பஞ்ச காலத்தில், இருக்கிற தொழிலையாவது நீடித்துக்கொண்டு போக உதவியாக இருக்கும்.

மு.ப. 11-3 ஆலைகள் பற்றி பலவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. எந்த முடிவில் இருக்கிறோம் என்பது தெளிவாகத் தெரியவில்லை. கார்ப்பரேஷன் பற்றிச் சொல்லப்படுகிறது. அது தினேஷ் சிங் வழி. போகாத ஊருக்குள்ள வழியாகும் அது. மாநிலப் பஞ்சாலைக் கழகத்திற்கு உதவி அளிப்பதற்காக 15 லட்சம் ரூபாய் டோக்கனாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளைப் பார்க்கும்போது, மறு புறத்தில், மெர்ஜர் பற்றிப் பேசப்படுகிறது. ஓடாத ஆலைகளை ஓடும் ஆலைகள் எடுத்துக்கொள்வது என்றால் உள்ள கடன்களோடு எடுத்துக்கொள்ள சம்மதிக்க வேண்டும் என்ற நிலை வரும். இரு தரப்புப் பங்குதாரர்களின் சட்ட உரிமைகள் பாதிப்பு என்ற சிக்கல் வரும். இதில் சட்ட சம்பந்தமான பல சிக்கல்கள் ஏற்படும். இதையும் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை. மில்களை எடுத்து அரசே நடத்த வேண்டும், அப்படி எடுத்து நடத்தும்போது பழைய கடன்களை எல்லாம் உறைய வைத்துவிட்டு, ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவை தரப்படும் என்று கூறி, அவற்றை ஏற்று நடத்த வேண்டும். அது தவிர வேறு மார்க்கமில்லை. அண்ணா அவர்களின் வாக்குறுதிப்படி நடக்க வேண்டிய காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டு வந்துகொண்டிருக்கிறது. தெளிவானதொரு முடிவிற்கு வந்து ஆலைகளை எடுத்து நடத்த வேண்டும். அதற்கு மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெற, அதற்காக வேண்டிய போதிய நிதி வசதியைப் பெற இந்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எங்கள் ஒத்துழைப்பு இருக்கும்.

ஒரு வார்த்தை. சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பளக் கமிஷன் நியமிப்பது. பல மாநிலங்களிலும் சம்பளக் கமிஷன்களை அமைத்துவிட்டார்கள். இதில் நாம் தயங்கக் கூடாது. கட்டாயம் ஒரு சம்பளக் கமிஷனை ஏற்படுத்த வேண்டும். இரகசியக் குறிப்பேடு முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பது பற்றி கவர்னர் அவர்கள் உரையில் சூசகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் தீவிர நடவடிக்கைகள் தேவை.

மாணவர்கள் பல சங்கங்களை அமைத்துச் செயல்படுகிறார்கள். தேசிய மாணவர் சங்கம் என்று காங்கிரஸ் சார்பாக மாணவர்கள் சங்கம் வைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கின்ற மாணவர்கள் சங்கம் உள்ளது. ஆனால் மார்க்ஸிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்புள்ள சங்கங்களை தனியாகக் கண்காணிப்பதற்காக சுற்றறிக்கைகள் விட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஜனநாயகத்தை நம்பும் இந்த அரசு அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது, அது discrimination ஆகும் என்று கூறி அமர்கிறேன்.

***திரு. மு. இரத்தினசபாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவரும், எங்களது வழிகாட்டியும், அரசியல் ஆசானும், தமிழகத்தை நல்ல முறையில் நிர்வகித்து வந்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்கு எனது அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த 1969–70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது ஒரு சில வார்த்தைகள் கூற முன்வந்துள்ளேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது இந்திய அரசுக்குட்பட்ட பல மாநிலங்களும் எவ்வளவு இக்கட்டான நிலைமையில் தங்களது நிதி நிலை அறிக்கைகளையும், திட்டங்களையும் தயார் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு மாநிலமும் சுயேச்சையாகத் தன் நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க முடியாத நிலையில் நிதிக் குழுவின் அறிக்கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. திட்டக் கமிஷனின் அறிக்கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இதற்கும் மேலாக மத்திய அரசின் தயவை எதிர்பார்த்துத் தான் நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டிய பரிதாபகரமான நிலையில் பல மாநிலங்கள் உள்ளன. அந்த முறையில் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, பல இடங்களில் மத்திய அரசை வேண்டியும், நிதிக் கமிஷனின் தீர்ப்பை எதிர்பார்த்தும் இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவ்வளவு இக்கட்டான நிலைமையில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருந்தாலும் கூட, விவசாயத் துறையிலும் மற்ற பல துறைகளிலும் எவ்வளவு நலன்களைச் செய்ய முடியுமோ, அவ்வளவு நலன்களையும் செய்வதற்காகப் பல திட்டங்களை நம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும் கூறவேண்டுமென்றால், கல்விக்காக இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட ஏறக்குறைய ஒன்பது கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, புகுமுக வகுப்பிற்கு வருகிற ஏப்ரல் திங்களிலிருந்து இலவசக் கல்வி என்ற முறையில் நல்லதொரு திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அதே போல் அரசாங்க ஊழியர்களுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு கூறிய யோசனைப்படி, திருமணக் கடன் கொடுக்கக்கூடிய நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதே போல் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல முறையில் ட்ராக்டர்கள் கிடைக்கவும், அவற்றிற்கு வேண்டிய மற்ற உறுப்புகளான டயர், டியூப் போன்ற சாமான்களை எளிதாகப் பெறும் வகையில் அரசாங்கமே அதற்கு வேண்டிய முறையில் விநியோகம் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து வழிவகை வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசும்போது என் தொகுதி சார்பாக இந்த நிதி நிலை அறிக்கைக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிற்பாடு அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த இன்றைய முதல் அமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பல முறைகேட்டுக்கொண்டதற்கிணங்க, என் தொகுதியில் இருக்கக்கூடிய வைப்பாறு நதிக்குக் குறுக்கே ஒரு அணை கட்டினால் நீர்ப்பாசன வசதிக்குப் பெருமளவு உதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அத்திட்டத்தை இந்த அறிக்கையில் சேர்த்திருப்பதற்காக என் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் இந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் உறுப்பினர் மதுரையில் நடந்த சம்பவத்திற்கு இந்த அரசே முழுப் பொறுப்பாளி என்று குற்றஞ் சாட்டிப் பேசினார்கள். ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 28-ம் தேதி அன்று இங்கு கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்திற்கு மறுமொழி அளிக்கும் வகையில் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த நபர் பற்றித் தெளிவாகத் தெளி

வாகப் பேசினார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றிற்குப் புறம்பான வழியில்போலீஸுக்குக் கீழ்ப்படியாது இரண்டு முறை சம்மன அனுப்பியும் அதைப் பெற மறுத்தும், இந்த அரசுககு இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். காங்கிரஸ் பிரசாரகர்கள் பொது மேடைகளில் பேசும்போது அவரது செய்கையை ஊக்குவித்து ஐ.ஜி. என்னை விடக் குறைவாகச் சம்பளம் வாங்குகிறார், என்னைவிட குறைந்த வருமான வரி கட்டுகிறார், ஆகவே போலீஸுக்குப் பணிந்து விடுவோமா என்று பேசி இருக்கிறார்கள். இப்படிப்பட்டதொரு நிலையை காங்கிரஸ்காரர்கள் உருவாக்கி வருகிறார்கள். ஆகவே, சட்டம், அமைதி இவற்றைப் பாதுகாக்க யாா ஒத்துழைக்கிறார்கள், யார் எதிர்க்கிறார்கள் என்பதை நாடு அறியும் என்று விளக்கிக் கூறினார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றைப் பாதுகாக்க காங்கிரஸ்காரர்கள் விரும்புவார்களானால், முதல அமைச்சா அவாகள் பேசியதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அந்த நபர்களை அணுகி, சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்று கூறியிருக்க வேண்டும். அவர்கள் ஒத்துழைக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும். அமைதியைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, மக்கள் வரிசையாகத்தான் நின்றார்கள், அவர்கள் எந்தவிதக் குற்றமும் செய்யவில்லை, ஆனால், போலீஸார்தான் இம்சைப்படுத்தினாகள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானதாகும். மதுரையில் உள்ள காங்கிரஸ்காரர்கள் எந்தநேரத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை—அவர்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி அவர்களை—எதிர்த்தே வந்திருக்கிறார்கள் என்பதைச் சாித்திரம் கூறும். எனக்கு முன்பு பேசிய திரு. ஆசைததம்பி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 1946–ல் கருப்புச் சட்டை மாநாட்டில் செய்யப்பட்ட அட்டூழியங்களை இந்த நாடு மறந்திருக்காது. அதே போல் 1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் இதே காங்கிரஸகாரர்கள் மாணவாகள் துக்க தினமாகக் கருதி ஊர்வலம் வநதபோது வழி மறித்து அவர்களை வெட்டிப் படுகாயப் படுத்தி ஒரு பெரிய பரபரப்பான சூழ்நிலையை தமிழ்நாட்டில் ஏற்படுத்தியதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஆக, இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் ஒரு மோசமான, பதட்டமான சூழ்நிலை உருவாக ஏற்பாடு செய்துகொண்டு, இன்றையதினம் தமிழ்நாட்டிலே சட்டம், அமைதி கெட்டுவிட்டது, ஆகவே, இதைக் காப்பாற்ற இந்த அரசு தவறிவிட்டது என்றெல்லாம் குற்றஞ் சாட்டுவது உண்மைக்குப் புறம்பானது என்று இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழகத்திலே 1966–ஆம் ஆண்டு ஒரு குழுவினை ஏற்படுத்தி, தமிழகத்திலே உள்ள வறட்சிப் பகுதிகள் எவையெவை என்று கண்டுபிடித்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படி, தமிழகத்திலே 31 வட்டங்கள், அதாவது தாலுக்காக்கள், வறட்சியான பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட நிலைமை இருந்துவருகிறது. அப்படிப்பட்ட நிலையில் கோவில்பட்டியும் வறட்சியான பகுதியாக நெல்லை மாவட்டததில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மிக மிக வறட்சியான பகுதியாகும். தமிழகத்திலேயுள்ள எந்தப் பகுதியிலும் அதைப் போன்ற வறட்சியைக் காண முடியாது. மிகப் பரந்த கோவில்பட்டியில், நல்ல முறையில் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்யாமல் போனால் நிச்சயமாக அங்குள்ள மக்களுக்கு எதிர்காலம் இருக்க முடியாது. இன்று இந்தத் திட்டத்தில் வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவது சேர்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிகரமான காரியமாக இருந்தாலும், நிச்சயமாக அந்த மக்களுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென்றால்—அது கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருப்பதால், மழைகாலங்களில் பல ஓடைகளில் தண்ணீர் நிறைய இருக்கின்றது.—அப்படிப்பட்ட ஓடைகளை மறித்து புதிய புதிய குளங்களை உருவாக்கினால்தான் விவசாயததைச் செழிப்பாக எதிர்காலத்தில் செய்து தர முடியும். அப்படிப்பட்ட நிலைமை உருவாக, அங்குள்ளவர்

கள் சிறப்பு சிறுபாசனத் திட்டத்திலிருந்து பல திட்டங்களைத் தயாரித்து இந்த அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏறக்குறைய 20, 25 குளங்களை அமைக்க முடியும். ஜமீன்தார் காலங்களிலே அவர்கள் மக்களை வாட்டி வதைத்து, பல குளங்களை அழித்ததன் காரணமாக, குளங்கள் உடைப்பெடுத்தும், தூராகவும் ஆன காரணத்தினால், குளங்களின் நீர்ப் பிடிப்பு நிலங்களை எல்லாம் பட்டாவாக மாற்றி அமைக்கக் கூடிய நிலை உருவானது. எனவே, உடைந்த குளங்களை, மராமத்து இல்லாத குளங்களைப் புதுப்பித்து, புதிய குளங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று அந்தப் பகுதி மக்களிடமிருந்து கோரிக்கைகள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட குளங்களைப் புதுப்பிப்பது, அவைகளை மராமத்து செய்வது போன்ற காரியங்களுக்கு அங்குள்ள மக்களுக்கு நல்ல முறையில் திட்டங்களை ஏற்படுத்தித் தர வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த ஆண்டு பருவ மழை மோசம் செய்துவிட்ட காரணத்தினால், குளங்களில் தண்ணீர் இல்லாமல், விவசாயம் செய்யக்கூடிய நஞ்சைப் பயிர்கள் வாடிப் போய், அங்குள்ள மக்கள் சங்கடத்தில் இருக்கிறார்கள். அந்த நிலையில் அந்தத் தாலுக்காவில் உள்ள மக்களுக்குக் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் பல கிராமங்களில் சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். ஆற்றுக் கரைகளிலே உள்ள ஒரு சில ஊர்களிலேதான் குடிக்கத் தண்ணீர் இருக்கிறது. மற்றப்படி, ஐந்தாறு மைல் உட்புறமாக உள்ள கிராமங்களில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அவசர வேலைத் திட்டங்களைத் துவக்கி, குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய கிணறுகளைத் தோண்டுவது அல்லது ஆற்றிலே போரிங் வைத்து அங்கிருந்து தண்ணீர் கிடைக்கச் செய்வது ஆகியவைகளைச் செய்து தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அண்ணாவின் கொள்கைப்படி நடப்போம், அவர் வகுத்த வழியில்தான் செல்கிறோம் என்று சொல்லும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அண்ணா அவர்கள் வகுத்த வழி என்ன என்பதை எங்களைப் போன்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அவரது கொள்கை பற்றி வெள்ளை அறிக்கை, கொள்கை அறிக்கை ஒன்றை இந்த அவையில் வைத்தால் மிகவும் நலமாக இருக்கும். காரணம் என்னவென்றால், தங்களது கொள்கை பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்கிறார்கள். உதாரணமாக, திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்றபின், இந்த அமைச்சரவை விஸ்தரிப்புப் பிரச்சினை இருந்துகொண்டுதான் இருந்தது. மறைந்த முதலமைச்சரவர்கள் உயிருடன் இருந்த நேரத்தில் பணக்காரர்களுக்கு இந்த அவையிலே பதவி கிடையாது, அமைச்சர் பதவி கிடையாது என்று கூறினார்கள். இது பற்றி . எல்லோரும் பேசிக்கொண்டும் இருந்தார்கள். ஆனால், மறைந்த முதலமைச்சர் அவர்களுடைய கல்லறையின் ஈரம் காய்வதற்குள்ளாக இந்த அமைச்சரவையில் பணக்காரருக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது குறித்துப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். கட்சியிலே, பல ஆண்டுகளாக இருந்து, கட்சிக்காகத் தியாகம் செய்தவர்கள், குறிப்பாக எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்கள், திரு. ஆலடி அருணா அவர்கள், திரு. சிவசாமி அவர்கள் இன்னும் திரு. எஸ். ஜே. ராமசாமி போன்றவர்களெல்லாம் இருக்கின்ற நேரத்தில், புதிதாகக் கட்சிக்கு வந்தவர், அதுவும் பல கட்சிகளிலே இருந்தவர், கட்சிவிட்டுக் கட்சி மாறியவருக்குப் பதவி கொடுத்திருப்பதாகப் பொது மக்களிடத்திலே பேச்சு இருக்கிறது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 6

மாண்புமிகு உறுப்பினர் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னது முக்கிய மான விவகாரம். மறைந்த முதல்வர் அவர்களைப் பற்றிய விவகாரம். மறைந்த இந்தியப் பிரதமரைப் பற்றிய விவகாரம். உயிரோடு இருக்கிற ஒருவரைப் பற்றிய விவகாரம். இத்தனை பேரையும் இழுப்ப தோடல்லாமல், அவருடைய கருத்துக்களை வேறு உருவம் கொடுத்து பேசுகிறார்கள். எந்த இடத்திலும் அவர் பேசவும் இல்லை, எழுதவும் இல்லை, அதற்கு ஆதாரமும் கிடையாது. இப்படி இந்த மன்றத்தினுடைய உரிமைகளை அங்கத்தினர் துஷ்பிரயோகம் செய்கிறார். ஒன்று அவர்கள் நிரூபிக்கவேண்டும், அல்லது வாபஸ் வாங்க வேண்டும் என்பதுதான் முறையானது. அதற்குப் பிறகு அவர்கள் தொடரலாம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர், இங்கே இல்லாமல் வெளியிலே இருக்கிற ஒருவரைப் பற்றி *** அந்த வார்த்தையை அவர் உபயோகித்திருப்பது தவறான காரியம் என்பதுதான். அதை அவர் உடனே வாபஸ் வாங்கவேண்டும். அப்பொழுதுதான் அவருடைய மரியாதை காப்பாற்றப்படும், சபையினுடைய மரியாதை காப்பாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : பத்திரிகையிலே வந்த செய்தியைத் தான் சொன்னேனே தவிர....(மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையிலே வந்ததாகத் தான் நீங்கள் சொன்னீர்கள், இல்லையென்று சொல்லவில்லை. அது எந்தப் பத்திரிகையிலே வந்தது என்பதை நீங்கள் இப்பொழுது நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்க முடியாது என்றால் உங்களுடைய வார்த்தையை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்வதுதான முறை.

திரு. ரா. ராமச்சந்திர துரை : பத்திரிகையில் வந்த நினைவில்தான் சொன்னேன். அது பிறருடைய மனத்தை புண்படுத்தும்படியாக இருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

திரு. எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இது பத்திரிகையிலே வந்தது என்று கூறுகிறார். எந்தப் பத்திரிகையிலே வந்தது என்று தெரியாது. அப்படி வந்திருந்தாலும் கூட......

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

Dr. H. V. HANDE : Sir, when I have already raised a point of order, the hon. Member Thiru Vinayakam must sit down.

Thiru K. VINAYAKAM : Sir, it is a closed matter.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்றத்திலே உள்ள ஒரு உறுப்பினருக்கு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு எந்த நேரத்திலும் உரிமையுண்டு.

திரு. எச். வி. ஹாண்டே : நம்முடைய விதிகள் பிரகாரம், ஒரு வேளை ஏதாவது ஒரு பொறுப்பற்ற பத்திரிகையிலே எந்தச் செய்தி வந்திருந்தா லும் கூட அத்தகைய செய்திகளை இங்கே சொல்வது முறையல்ல. அவர் சொல்லியதைப்போல, ஒரு வேளை தவறாக அப்படி ஒரு பத்திரிகையிலே வந்திருந்தாலும் அந்த பத்திரிகையை இங்கு படிக்கலாமா? அது பொறுப்பற்ற பத்திரிகையாக இருக்கக்கூடிய நேரத்தில் சபாநாயகருடைய உத்தரவை வாங்கிக்கொண்டு பேச வேண்டுமே தவிர, எந்தப் பத்திரிகை யிலே வந்தாலும் அதை இங்கே பேசக் கூடாது. அப்படி இருக்கும்போது

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1969 மார்ச் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

பத்திரிகையிலே வராததைப் பேசும்போது அதை "எக்ஸ்பஞ்ச்" பண்ணு வதுதான் முறையாகும் ரூல்ஸ்படி, என்று நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, அதற்கு அடுத்த படியாக 3-9-1967-ம் தேதி அன்று "முரசொலி" பத்திரிகை யிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. தங்களுடைய அனுமதியின் பேரில் அந்தக் குறிப்பை மாத்திரம்................

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஆன் எ பாயிண்ட ஆப் ஆர்டர். சபா நாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசிய பேச்சானது பத்திரிகையில் கூட வரக்கூடாது என்று தாங்கள் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மற்றவர்கள் பார்த்தால் நம்மை என்ன சொல் வார்கள் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் குறிப்பிட்ட பகுதி பத்திரிகையில் கூட வர வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குறிப்பிட்ட பகுதி என்று சொன்னால் அவர் குற்றம் சாட்டின பகுதியை மட்டும் தான் "எக்ஸ் பஞ்ச்" பண்ண வேண்டும். அதுதான் நியாயம். வாபஸ் பெற்றுக் கொண்டார்கள் என்பதும் இந்த மன்றத்தினுடைய பதிவேட்டிலே இடம் பெற வேண்டும். அதையும் சேர்த்து "எக்ஸ்பஞ்ச்" பண்ணக் கூடாது.

திரு. ரா ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, 3-9-1967-ம் தேதி யன்று "முரசொலி" பத்திரிகையிலே மொரார்ஜி தேசாய் அவர்களைப் பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. பத்திரிகை முழுவதையும் கொண்டு வரவில்லை. அதனுடைய குறிப்பை மட்டும் கொண்டு வந்தேன். தங்க ளுடைய அனுமதியின்பேரில் அதைப் படிக்கின்றேன். "தான் ஒரு சாமி யார் என்றும் துறவி என்றும்............"

திரு. முனு. ஆதி : அவர் படிக்கின்ற அந்த வார்த்தைகளைத் தலைவர் அவர்கள் படித்து முறையானது என்று அனுமதித்த பிறகுதான் அவர் கள் படிக்க வேண்டும். அனுமதி கொடுங்கள் என்று சொல்லிப் படிப்பது முறையானதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் முழுப் பத்திரிகை யையும் கொண்டு வந்தால் என் அறையில் என்னிடம் கொடுக்க வேண்டும். ஏதோ ஒரு துண்டைக் கொண்டு வந்து இது "முரசொலி" பத்திரிகை யில் வந்தது என்றால் அது "முரசொலி"ப் பத்திரிகை தானா அல்லது வேறு பத்திரிகையா என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியாது.

(திரு. ரா. ராமச்சந்திர துரை முழு முரசொலிப் பத்திரிகையைப் பேரவைத் துணைத் தலைவரிடம் இருக்கையிலிருந்தவாறே காண்பித்தார்).

திரு. முனு. ஆதி : என்னுடைய கருத்து, அவர் அந்தப் பகுதியை தங்களிடம் காண்பித்து, அது அனுமதிக்கக்கூடியதுதான் என்று தாங்கள் தெரிந்து, அனுமதித்த பிறகுதான் படிக்க வேண்டும். அதற்கு முன்னாலே படிப்பது நியாயம் தானா என்பதற்கு தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

(திரு. ரா. ராமச்சந்திர துரை அந்த குறிப்பிட்ட குறிப்பை பேரவைத் துணைத் தலைவரிடம் கொடுத்தார்).

திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர் களே, இப்பொழுது நடக்கிற இந்த விவாதத்திலே கேள்வி கேட்கும் முறை, எப்படிப்பட்ட முறையில் நடக்கிறது, விதியில் எப்படி இருக்கிறது? இப் படி ஒருவருக்கொருவர் மாமியார், மருமகள் சண்டை மாதிரி நடக்கிறதே அது எந்த முறையில் நடக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நம்முடைய மன்றத்திலே ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அங்கத்தினர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையிலே குறிப்பிடக்கூடாது என்று. அது சுவையாக இருக்கலாம். ஆனால், நம்முடைய மன்றத்திலேயிருக்கின்ற ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும். எனவே, குறிப்பிட ஒரு அங்கத்தினரைப் பற்றிப் பேசுவது நல்லது அல்ல.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், எனக்கு மந்திரி பதவி உண்டா, இல்லையா என்பதைப் பற்றி நான் எங்கள் கட்சிக் கூட்டத்திலே பேசிக்கொள்ளலாம். எனவே அங்கத்தினருடைய தயவு தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : எதற்காக நான் அதைக் குறிப்பிட்டுச் சொன்னேன் என்றால், ஜனநாயகம் அழிகிறது, தியாகம் அழிகிறது, பணம் சிரிக்கிறது என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன். இன்னும் பொது மக்களிடத்திலே பேசப்படுவது என்னவென்றால், தென்காசித் தேர்தலுக்காக, அண்மையிலே நடைபெற்ற நாகர்கோவில் தேர்தலுக்காக பல லட்சங்கள் செலவு செய்ததனால் இந்தப் பதவி கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர்கள், இந்த மன்றத்திலே இருக்கின்றவரைப் பற்றிக் குறைவாகப் பேசுவது சபையின் மரபைக் கெடுக்கிறது என்று சொன்ன பிறகும் தொடர்ந்து அதேபோல உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : காரணம். நான் சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையிலே, தமிழக சட்டமன்றத்தின் பெயர், அமைச்சரின் பெயர் இப்படி அடிபடுகிறதே என்பதால்தானே தவிர, தனியாகக் குறிப்பிட்டு அமைச்சரவர்களைப் பற்றிப் பேசவேண்டுமென்பதற்காகப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை வேண்டுமென்றால் சட்டமன்றத்திற்கு வெளியே பேசிக்கொள்ளுங்கள், சட்டமன்றத்திற்குள்ளேயே உறுப்பினரைப் பற்றிக் குறை கூறுவது சட்டமன்றத்தின் மரபைக் கெடுக்கிறது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : அதற்கடுத்தபடியாக, என் அருமை நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் இங்கு பேசுகின்ற நேரத்திலே காலஞ்சென்ற கனம் முதலமைச்சரவர்களுடைய மரணத்திற்குக் காரணம் டாக்டர்கள்தான், அதற்காக விசாரணைக் குழு அமைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்கள். அத்துடன், அண்மையிலே கோயம்புத்தூர் கட்சிக் கூட்டத்தின்போது கூட........

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : காலஞ்சென்ற முதலமைச்சரவர்களுடைய மரணத்திற்குக் காரணம் டாக்டர்கள்தான் என்று நான் சொல்லவில்லை. காலஞ் சென்ற முதலமைச்சரவர்களின் சிகிச்சை பற்றிப் பல்வேறாக வெளியே பேசப்படுகிறது என்று குறிப்பிட்டேனே தவிர, இன்னார்தான் காரணம் என்று நான் கூறவில்லை. நம்முடைய டாக்டர்கள் மீது அவதூறாகப் பத்திரிகைகளிலே விஷயங்கள் வெளிவந்துகொண்டிருந்தன. அதற்காக விசாரணைக் குழு ஏற்படுத்தி ஒரு முடிவு காணவேண்டுமென்றுதான் கூறினேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவரவர்களே, நானும் அவர்கள் குறிப்பிட்ட பேச்சைக் குறித்து ஆதரவாகத்தான் பேசுகின்றேனே தவிர அவர்களுடைய பேச்சை எதிர்த்து நான் இப்பொழுது பேசவில்லை. இந்த விசாரணைக் குழு மிகுந்த அவசியம் என்பதை இந்த மன்றத்திலே வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது. காங்கிரஸ் கட்சியினால் வாங்கப்பட்ட சுதந்திரம், அந்த சுதந்திரத்தின் அடிப்படையிலே அளிக்கப்பட்ட ஜனநாயகம், அந்த ஜனநாயகத்தின் அடிப்படையிலே அன்று எதிர்க் கட்சியிலிருந்து இன்று ஆளும் கட்சியிலே அமர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் ஆட்சிபுரிகின்ற நேரத்தில் ஜனநாயகம் போய்விட்டது என்று கூறினால் மிகையாகாது.

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் வாரியார் அடி பட்டது குறித்து காங்கிரஸ்காரர்கள் பரிந்துகொண்டு பேசுகிறார்கள் என்று பேசினார்கள் அவர்கள் பரிந்து பேசுகிறார்கள் என்பது பிரச்னை அல்ல. ஜனநாயகத்திலே ஒருவர் அடிபட்ட நேரத்தில் இங்குள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் அண்ணாவைப் பற்றிபேசினார்கள், அதற்காக அடிபட்டது நியாயம் என்று பொருள்பட பதிலளிக்கிறார்கள் என்று எண்ணுகின்ற நேரத்தில் உள்ளபடியே ஜனநாயகம் செத்துவிட்டது என்று தான் குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறோம் அந்த அடி ஜனநாயகத்திற்குக் கொடுத்த அடி என்று குறிப்பிட்டால் மிகையாகாது. காரணம், ஜனநாயகத்தில் அண்ணாவைப் பற்றி பேசக்கூடாது என்று இருக்கின்றதா? நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். கட்சியிலே உள்ள பல தலைவர்களைப்பற்றி பல கட்சிக்காரர்கள் பலவிதமாகத்தான் பேசுகின்றார்கள்.* * *

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாக ஒரு தவறான கருத்தை சொல்கிறார்கள். எந்தப் பத்திரிகையிலே அவர்கள் பேசியதாக வந்தது, ஆதாரங்கள் வைத்துக்கொண்டு ராமச்சந்திர துரை அவர்கள் பேசவேண்டும். என்றைக்குமே ஆதாரம் இல்லாமல் ஒன்றைச் சொல்வதும் பின்னாலே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதும், சபையில் நடந்து வருகின்ற நிகழ்ச்சியாக இருப்பதைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மறைந்த முதலமைச்சரைப் பற்றி அவர் சொல்லவேண்டாமென்று கூறுகின்ற நேரத்தில் அவர் கூறியதை நீக்குவதற்கான தீர்ப்பை அளிக்கவேண்டுமென்று கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்றத்திலே ஒரு உறுப்பினர் ஏதாவது ஒன்றைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் தக்க ஆதாரங்களுடன் பேசவேண்டும். ஆதாரங்களை மன்றத்தின்முன் வைக்கவேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. இப்பொழுது நீங்கள் பேசியது எந்தப் பத்திரிகையிலே இருக்கிறது என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அப்படி இல்லையென்றால் அந்தப் பகுதி நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப்படுமென்று நான் கூறுகிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அங்கத்தினரவர்கள் மறைந்த முதலமைச்சரைப் பற்றி மட்டுமல்ல, இப்பொழுது இருக்கிற ஒருவரைப் பற்றியும் மிக இழிவான முறையிலே பழைய முதல்வர் பேசியதாக இப்பேரவையிலே பேசுகிறார். அது அவர்களுக்கு அவமானம் தரக்கூடிய வாசகமாகும். சபையிலே, உரிமையிருக்கிறது என்பதால் யாரைப் பற்றியும் பேசலாம் என்கின்ற குறிக்கோளிலே பேசக்கூடாது. முறையற்ற வாசகத்தைச் சொல்லி உள்ளார்.

* * * * *

திரு. ரா ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, அண்மையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே .....

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[1969 மார்ச் 6

ந. ப. 12-00 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது தொடர்ந்து பேசலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : நான் அந்தப் பத்திரிகைக் குறிப்பை இந்த சந்தர்ப்பத்தில் படித்துக் காட்டிப் பேச விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த சந்தர்ப்பத்தில் அந்த பத்திரிகைக் குறிப்பை படித்துவிட்டுப் பேசவேண்டுமென்றால், இப்பொழுது அதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : ** ** மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்த தேசத்தினுடைய உதவிப் பிரதமர். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு கட்சியினுடைய பெரிய தலைவராக இருந்த மதிப்பிற்குரிய அண்ணா அவர்களைப் பற்றி இழிவாகக்கூட அல்ல, விதிசெய்த செய்கை என்று பேசியதற்காக அவர் தாக்கப்பட்டார் என்று தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். அவர் பேசியது அண்ணாவைப்பற்றிப் பேசியதால்தான் தாக்கப்பட்டார் என்றால், ஜனநாயகம் பறிபோய்விட்டது என்று கூறினால், அது மிகையாகாது என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு சேமிப்பு வசூல் கெடுபிடி, சிறு சேமிப்பு வசூலுக்கு ரசீது கொடுப்பதிலே ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ரசீது கொடுப்பதற்கு, இன்னின்னார் கொடுக்க வேண்டும், இந்த பாங்குகள் தான் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த பாங்குகளை விட்டுவிட்டு,

State Bank of Bikaner, State Bank of Hyderabad, State Bank of Indore, State Bank of Mysore, State Bank of Patiala, State Bank of Saurashtra and State Bank of Travancore

என்ற . பாங்குகள் மூலமாக வசூல் செய்வதை விட்டுவிட்டு முனிசிபல் வார்டு இன்ஸ்பெக்டரிடமிருந்து ஒரு ரசீது கொடுக்கப் பட்டிருக்கிறது. கர்ணம் கொடுத்த ரசீது ஒன்று இருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கொடுத்த ரசீது ஒன்று இருக்கிறது. அதோடு கூட, செல்வம் கம்பெனி என்ற ஒரு தனியார் கம்பெனி இது சம்பந்தமாக வசூல் செய்வதற்கு ஆதாரபூர்வமாக அரசிடமிருந்து ஏதாவது உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் விளக்கிக் கூற வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பணம் திருப்பி வராத பணம்.

அரசாங்கம் செய்த சில நிகழ்ச்சிகள் தவறு என்று உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் பதிவாகியிருக்கின்றன. தமிழக அரசு சாய ஒதுக்கீடு செல்லாது என்று நேற்றையதினம் ஹைகோர்ட்டு ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. ஹைகோர்ட்டில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, இம்மாதிரியான பல விஷயங்கள் செல்லாது என்று ஹைகோர்ட்டு தீர்ப்பு அளிக்கிற நேரத்தில், உள்ளபடியே தமிழக அரசு எப்படி நிர்வாகத்தில் தலையீடு செய்கிறார்கள். பகிரங்கமாக நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்பது புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்கிறது. எனவே, இம்மாதிரியான நிகழ்ச்சிகளில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

** ** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1969 மார்ச் 6]

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : கனம் உறுப்பினர் அவர்கள் பேச்சில் மொரார்ஜி தேசாய் அவர்களைப் பற்றி குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார். அந்தப் பத்திரிகைக்கும், இந்த சபைக்கும் சம்பந்தமே இல்லை. மேலும் மத்திய சர்க்கார் மந்திரி அவர்களைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கைக்கு சம்பந்தம் இல்லாத ஒரு விஷயத்தை அவர்கள் பேசியது சபைக் குறிப்பிலே இருப்பது அவ்வளவு நன்றாக இருக்குமா என்பதைத் தலைவர் அவர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் பேசிய பேச்சு நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்படும் என்றும், அது பத்திரிகையிலே வரவேண்டாம் என்றும் நான் அறிவிக்கிறேன்.

திரு. ஆர். என். அரங்கநாதன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற 1969-70-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் பேரில் நடக்கின்ற விவாதத்தில் காங்கிரஸ் நண்பர்கள் திரு. காசிராமன் அவர்கள் முதற்கொண்டு, கடைசியில் பேசிய திரு ராமச்சந்திர துரை வரையில் நாட்டிற்கு பயனுள்ள வகையில் பங்கு கொள்வார்கள் என்று நாமெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்கு மாறாக, மதிப்பிற்குரிய ஆசைத்தம்பி அவர்களின் அடிக்குப் பின்பும் கூட வாரியாரை விடாமலே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாரியார் பிரச்னையைப்பற்றி, திரு. வாரியார் அவர்களே, இவர்கள் காலை வாரி விட்டிருக்கிறார்கள். அவர்கள் அளித்த அறிக்கையிலே, " நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன், தயவுசெய்து காங்கிரஸ் நண்பர்கள் என்னை அரசியலில் இழுத்துக்கொண்டு என்னைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் " என்று சொல்லிவிட்ட பின்பும், மான உணர்ச்சி இல்லாமல் அதைப்பற்றி மீண்டும் பேசிக் கொண்டே இருப்பதில் பயனில்லை.

கீழ்வெண்மணி சம்பவத்தை ஒரு சட்டையாகப் போட்டுக்கொள்ள நினைத்தார்கள். ஆனால் அந்த சட்டை கிழிக்கப்பட்டுவிட்டது. சர்க்காருக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தனிப்பட்ட நபர்கள் அந்த நிகழ்ச்சிக்குக் காரணம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். திரு காசிராமன் அவர்கள் வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்லிக்கொள்கிறார்களே, வரி இல்லாமலே போய்விடுமா, அல்லது கூடுதல் வரி போடப்படுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டார். கூடுதலான வரியை இந்த மாநில சர்க்கார் யாருக்காகப் போடுகிறார்கள் ? வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்பதற்காக டெல்லி சர்க்கார் கொடுக்கிற டைரக்டிவ் பிரின்ஸிபிள்ஸ் படி கூடுதலாக வரி போட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பதை மறந்துவிட்டு, அவர்கள் அம்மாதிரி பேசுகிறார்கள். அதைப்போல நண்பர் ராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார். பணக்காரர்களுக்கு ஏன் வரி போட மாட்டேன் என்கிறீர்கள் ? என்று திரு. ராமமூர்த்தி கேட்டார்கள். அவர் நண்பர் திரு. விநாயகம் சொன்னதை மறந்து விடக்கூடாது. நண்பர் விநாயகம் அவர்கள் சென்ற பட்ஜெட் விவாதத்தின்போது, சர்க்கார் போட்ட மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸேஷனை எவ்வளவு தூரம் தாக்கிப் பேசினார். அவர்களால் தாங்கமுடியாது என்றெல்லாம் அவர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினார். பணக்காரர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு அவர் அந்த வரியை எதிர்த்துப் பேசினார். அதை மறந்து நாங்கள் பணக்காரர்களுக்கு வரி போடுவதற்கு ஏதோ தயக்கம் காட்டுகிறோம் என்ற முறையில் திரு. ராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள்.

நேற்றையதினம் நண்பர் ராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். நேற்றையதினம் ஏதோ பதுக்கல்காரர்கள் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற முறையில் அவர்கள் பேசியபொழுது, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் " இன்று போய் நாளை வா " என்கின்ற முறையில் " நாளைக்கு ஆதாரத்தோடு வாருங்கள் " என்று

சொன்னார். ஆனால், அன்று ராமமூர்த்தி அவர்கள் ஆதாரம் எதுவுமின்றி நிராயுதபாணியாய் வந்தார். அதற்காகத்தானோ என்னவோ உடனே போய்விட்டார். நேற்றைய தினம் சென்னையிலே மண்ணெண்ணெயை அதிக விலைக்கு விற்றதாக 5 பேர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

வளர்ச்சி திட்டங்களுக்காக பணம் ஒதுக்கீட்டை ஆண்டுக்கு ஆண்டு குறைத்துக்கொண்டு வருகிறார்கள் என்று நண்பர் என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் சில புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினார்கள். ஆனால், பட்ஜெட் உரையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடன் நிறுவனங்கள் மூலம் கூடுதலான விண்ணப்பங்களுக்கு கடன் அளிப்பதற்காக மற்ற துறைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அந்த நிதி ஒதுக்கீடுகள் ஆங்காங்கே கொஞ்சம் குறைந்திருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். கடன் நிறுவனங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று டெல்லி சர்க்கார் டைரக்டிவ் பிரின்ஸிபிள்ஸ்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த மாநில அரசு இந்தக் கொள்கையை உருவாக்கவில்லை. தனிப்பட்ட பாங்குகள், நில அடமான பாங்குகள் லட்சக் கணக்கான விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் இதை "அன் ஸென்ஸேஷனல் பட்ஜெட்" என்பதாகச் சொன்னார்கள் என்று நான் பத்திரிகையிலே பார்த்தேன். நண்பர் திரு. விநாயகம் அவர்கள் பட்ஜெட் விவாதத்தில் பேசும்பொழுது அடிக்கடி குறிப்பிடுவார்கள். 'Ferguson's Public Finance, Dalton's Public Finance'. என்று. அந்தக் கருத்துக்களை வைத்துக்கொண்டு பார்த்தால் 'unsensational budgets are always good budgets' என்று அவர்களே உணர்ந்து இருப்பார்கள். காங்கிரஸ் நண்பர்கள் பட்ஜெட் விவாதத்திலும் சரி, இதுவரைக்கும் மாமன்றத்தில் நடந்த விவாதத்தில் பங்கு கொள்ளும் பொழுதெல்லாம், மதிப்பிற்குரிய ஆசைத்தம்பி அவர்கள் சொல்வது போல, சந்திக்க வேண்டிய பிரச்னைகள் எத்தனையோ முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் இருக்கும்பொழுது பூந்தோட்டத்தில் புகுந்து ஊமத்தம்பூவைப் பறிப்பதுபோல, சந்தனக் கட்டையை அடுப்புக்கு எறிப்பது போல, எதிர்க்கட்சி என்ற சாதனத்தை தவறான முறையில் பயன்படுத்திக்கொண்டு வருவது நன்றாகத் தெரியும். சர்ச்சில் ஒரு சந்தர்ப்பத்தில், 'The past may fight with the present, but do not forget the future' என்ற முறையில் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் நண்பர்கள் எதிர் காலத்தை எண்ணிப் பார்த்து, ஆக்கம் தரும் யோசனைகளைத் தந்து, இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பொருத்த வரையில், 1972 தேர்தல் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ எங்களுக்குக் கவலையில்லை. நீங்கள் மத்தியில் மொரார்ஜி தேசாயை நிதி அமைச்சராக வைத்திருக்கும் வரையில், எங்கள் நிலை உத்தரவாதமுள்ளதாக இருக்கிறது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் நண்பர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் நிதி அமைச்சராக இருந்த வரையில் குற்றச் சாட்டுக்களையும், மோதல்களையும் பார்த்தோம். இப்பொழுது மனுக்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த. பட்ஜெட்டைப் பற்றி, not complaining but now petitioning என்று, அந்த முறையில் அவர் பேட்டி அளித்திருக்கிறார்கள். பெடிஷனிங் ஆர் கம்ப்ளெயினிங், மனுவாக இருந்தாலும், குற்றச்சாட்டாக இருந்தாலும் சரியே. எங்கள் அமைச்சர்கள் பயந்தவர்கள் அல்ல. குகைக்குள்ளேயே சிங்கத்தைச் சந்திப்பதுபோல, பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும், மதியழகன் அவர்களும், மாதவன் அவர்களும், டெல்லியிலேயே போய், காங்கிரஸ் அமைச்சர்களெல்லாம் தட்டிக் கேட்க முடியாது இருந்தவர்களை, சிந்தித்து சிந்தித்து நிலைகளை அறிய, மொழி

பிரச்சினையாகட்டும், பொருளாதாரப் பிரச்சினையாகட்டும், எந்த வகைகளிலும், இந்திய அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதையும், நிதிநிலை சம்பந்தமாகவும், மாநில-மத்திய சர்க்கார்கள் உறவு சம்பந்தமாகவும் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டது. அதற்கு 263-வது பிரிவின்படி அப்படி நியமிப்பதற்கு இல்லை என்று பிரதமர் அறிவித்து விட்டார்கள். இனியும் காங்கிரஸ் என்ன செய்யப் போகிறது ? வட்டியில்லாமல் கடன் அளிக்காவிட்டாலும், 14 கோடி ஆண்டுக்கு வட்டி ஆகிறது. அதை ரைட் ஆஃப் செய்யவேண்டாம், மாரடோரியம் போல தள்ளிவைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாதது மட்டுமல்லாமல், பதிலே கூட அனுப்பவில்லை என்றும் தெரிகிறது. "டிஸ்ட்ரஸ் லோன்ஸ்" என்று எடுத்துக் கொண்டால், நிவாரண நிதிக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றோம். 13 கோடி ரூபாய் அளவில் இருப்பதைச் சமாளிக்க மாநில அரசு வாதங்களோடு, வலிமையான முறையில் எடுத்துச் சொல்லியும் அதுவும் ஒத்துக் கொள்ளப்பட வில்லை. அதேபோல, ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிதிக் குழு என்பதைவிட, நிரந்தரமான நிதிக் குழு வைத்தால், ஆண்டுக்காண்டு மாறிவரும் நிலைமைகளை ஆராய, மற்றதற்கு அதிகாரம் இல்லாததால், அதன் வரம்பிற்கு மீறியதாக இருப்பதால், நிரந்தரமான நிதிக் குழுவை அமைக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா 1967–68 பட்ஜெட் விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் குறிப்பிட்டார்கள். நிரந்தரமாக அப்படி குழு அமைக்கிறோம் என்று மத்திய சர்க்கார் உத்தரவாதம் அளிக்கவில்லை.

வருமான வரியில், இந்த மாநிலத்தில் வசூலாகும் தொகையில 75 சதவிகிதம் மாநில சர்க்காருக்கு பங்காகக் கொடுக்கப்படுகிறது. அதை $87\frac{1}{2}$ சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை கொடுத்தோம். அது ஏற்கப்படவில்லை. எக்ஸைஸ் ட்யூடி, ஆயத் தீர்வை, 20 சதவிகிதம் என்று இருப்பதை 40 சதவிகிதம் என்று உயர்த்த வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் வளர வேண்டும் என்றால், மத்திய சர்க்கார் வசூல் செய்யும் எக்ஸைஸ் ட்யூடி தொகையில் 40 சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1958-ம் ஆண்டில் மத்திய சர்க்கார் முக்கியமான டெக்ஸ்டைல்ஸ், புகையிலை, ஷுகர், இவற்றின்பேரில் கூடுதல் ஆயவரி, அடிஷனல் எக்ஸைஸ் ட்யூடி என்ற முறையில் வசூல் செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் நமக்கு விற்பனை வரியில் கிடைத்த வருமானம் பாதிக்கப்பட்டது. அதைச் சுட்டிக்காட்டிய பிறகும் அடிப்படை ஆயத் தீர்வை 20 சதவிகிதம் என்பதை உயர்த்த ஒத்துக்கொள்ளவில்லை. பேஸிக் எக்ஸைஸ் ட்யூடியில் பங்கு இருக்கிறதேயன்றி, அடிஷனல் ட்யூடி பூரா அவர்களே அடைகிறார்கள். அப்படி வஞ்சகமாக, பாரபட்சமாக நடக்கிறார்கள்.

சசீந்திர சௌத்ரி நிதி அமைச்சராக இருந்தபோது, வட மாநிலங்கள் நான்கு ரூ. 88 கோடி அளவில் ஓவர்-டிராப்ட் வாங்கியிருந்ததை ரைட் ஆஃப் செய்து விட்டார்கள். அப்படிச் செய்ய மத்திய சர்க்காருக்கு உரிமை இருக்கலாம். ஆனால், அந்த 88 கோடிக்கு, 100 கோடி புதிய வரிகளைப் போட்டு, தமிழ் நாடு கூட ஒரு பங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று செய்தது நியாயமா ? இது பற்றி காங்கிரஸ் நண்பர்கள் ஒரு வார்த்தை சொன்னார்களா ? இதை எதிர்த்து ஒரு கண்டனம் தெரிவித்தார்களா ?

பக்ரா-நங்கல் அணைக்கட்டு ரூ. 500 கோடியில் கட்டி, அதற்கு பஞ்சாப் மாநிலத்திலும், ராஜஸ்தான் மாநிலத்திலும் பெட்டர்மெண்ட் வசூல் செய்ய வேண்டும் என்று விதிகளை ஏற்படுத்தினார்கள். ஆனால் அந்த இரண்டு மாநிலங்களும் அதைச் செலுத்தவே யில்லை. ரூ. 500 கோடி முதலீடு செய்து, இந்த இரண்டு மாநிலங்களும் பக்ரா-நங்கல் அணைக் கட்டினால் பலன் அடைகிறது. ஆனால் அதன் காரணமாக தென் மாநிலங்களில் எந்த விதமான பயனும் இல்லை. அதேபோல,

பிலாய் தொழிற்சாலை 1,000 கோடி ரூபாயில் நிறுவப்பட்டிருக்கிறது. அதைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால், திரு. சஞ்சீவ ரெட்டி, பாராளுமன்ற சபாநாயகர் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார்கள். இந்த 1,000 கோடி ரூபாயையும் நல்லமுறையில் வேளாண்மைக்குப் பயன்படுத்தியிருக்கலாம். வேறு ஆக்க வேலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று. அப்படிக் கொடுக்கப்பட்ட குரலும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆகவே, அந்த முறையில் பரிகாரம் காணவேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டும். இனி அவர்களுடைய வாக்குறுதிகளை நம்பிக் கொண்டு இருக்க முடியாது. நம்முடைய அமைச்சரவை சரியான முறையில் சிந்தித்து, மத்திய சர்க்காரோடு பேசி, மாறுதல்களை எந்த எந்த முறைகளில் அடைய முடியும் என்பதை நிச்சயமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது எனது கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நமக்கு வாழ்ந்து வழிகாட்டிய, தமிழுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த நம்முடைய அண்ணா அவர்களின் மறைவினாலும், சாவினாலும், தமிழ் நாட்டிற்கும், நமக்கும் ஒரு பேருண்மையை எடுத்துச் சொல்லிப் போயிருக்கிறார்கள். அது என்னவென்றால், தமிழகத்தில், தமிழ் நாட்டில் இருக்கும் மருத்துவர்கள் திறமையானவர்கள், அவர்களுடைய திறமையில் யாருக்காவது சந்தேகம் இருந்தால் அந்த சந்தேகத்தைப் போக்கும் வகையில், தமிழகத்திலுள்ள மருத்துவர்கள் உலகத்திலுள்ள மருத்துவர்களுக்கு ஈடாகக் கூடியவர்கள் என்று தன்னுடைய சாவின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய அண்ணா அவர்கள் ஜீவ மரணப் போராட்டம் நடத்திய காலத்தில், அவர்களுடைய ஆவி பிரிவதற்கு முன் அவர்களை வாழ வைக்க நம் தமிழக டாக்டர்கள் பெரு முயற்சிகள் செய்தது அவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. அவர்களுக்கு வைத்தியம் செய்த போது பலவிடங்களிலிருந்தும் மருந்துகள் வரவழைக்கப்படவேண்டிய அவசியம் இருந்தது. அண்ணா அவர்களுடைய நினைவாக அந்தப் புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வருகின்ற யாவருக்கும், உலகத்திலே எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும், அவர்களுக்கெல்லாம், சரியான முறையில் இந்த புற்றுநோய் ஆஸ்பத்திரியில் வைத்தியம் கிடைக்கும் என்று செய்தால் அது அண்ணா அவர்களுக்குச் செய்த அஞ்சலியாக இருக்கும். எந்த ஏழையானாலும், அந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு வந்தால் எந்த அரிய மருந்தாக இருந்தாலும் அதுவும் அந்த ஏழைக்கும் அந்த ஆஸ்பத்திரியில் கிடைக்கும் என்று அந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டும், அந்த புற்றுநோய் ஆஸ்பத்திரியை அண்ணாவின் பெயரில் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் சொல்லி அது அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாக இருக்கும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே ஒரு மருத்துவமனை அன்னை கஸ்தூரிபாய் நினைவாக அவர் பெயரில் இருப்பது தெரியும். ஆகவே, இதையும், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையையும் அண்ணாவின் பெயரில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த அமைச்சரவையைப் பற்றிச் சொல்லும்போது, "அறிஞர் அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றியா மிகப் பெரிய முதலாளியை மந்திரியாக்கி யிருக்கிறீர்கள் ? " என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். இந்தக் கேள்வியை எழுப்பிய காங்கிரஸ்காரர்களே தங்களுடைய பாதையை சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் முழங்காலுக்கு மேல் துண்டு கட்டிய மகாத்மா காந்தியின் வழியிலா ஆட்சியை நடத்தினார்கள் ? காந்தி வழி நடப்பதாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள்தான் உங்களுடைய மந்திரிசபையில் ராஜாக்களையும், பெரிய பெரிய

முதலாளிகளையும் வைத்துக்கொண்டிருந்ததை இப்பொழுது மறந்துவிட்டீர்களா ? இந்த மந்திரிசபை அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றிச் செல்லவில்லை என்பதைச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது ? காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் தங்களுடைய சரித்திரத்தைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிருபானந்தவாரியார் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி நீங்கள் கண்டித்தீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்தச் சம்பவம் எல்லோருடைய மனத்தையும் புண்படுத்தக்கூடிய சம்பவமாகும். அந்தச் சம்பவத்தை எல்லோருமே கண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதேசமயத்தில், காந்தீய வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடியவர்கள், உங்கள் கட்சியைச் சார்ந்த 'குறிஞ்சி' ஆசிரியர் நெடுமாறன் " சிறைச்சாலைகளைத் தாக்கிக் கைதிகளை விடுவிப்போம், என்னையா கைது செய்யப் போகிறீர்கள் ? எனக்கு சம்மன் கொடுக்கிறீர்கள் " என்று முழக்கமிட்டு கலவரத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். காந்தீய வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது ? காந்திஜி அவர்கள் நீதிஸ்தலத்திற்கு அளித்த மரியாதை என்ன ? அவர் நடந்துகொண்ட முறை என்ன என்பதைச் சிந்திக்க மறந்துவிட்டீர்கள். உண்மையில் காந்திய வழியைப் பின்பற்றுகிறீர்கள் என்று சொன்னால், சம்பவம் நடந்ததற்குப் பின்னால், " எங்களுடைய கட்சிக்காரர்கள் தவறு செய்துவிட்டார்கள். இந்த முறையில் எங்கள் கட்சிக்காரர்கள் நடந்திருக்கக் கூடாது " என்று கூறியிருந்தால், உங்களைப்பற்றி மேலாக எண்ணிக்கொள்ள வழியிருக்கிறது. நீங்கள் செய்யக்கூடிய அராஜகத்தை—சட்ட விரோத முறையை—நீங்களே ஊக்குவிக்கின்ற வகையில் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இங்கே இந்த மன்றத்தில் கொண்டு வருகிறீர்கள். இதுவா கட்சியை வளர்க்கக் கூடிய பணி என்று நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள் ? " விஞ்ஞான சோஷலிசம் என்று சொல்லுகிறீர்களே, இந்த பட்ஜெட்டிலே அந்த சோஷலிசம் எங்கே இருக்கிறது ?" என்று கேட்டார்கள். நீங்கள் முன்பு ஜனநாயக சோஷலிசம் என்று சொன்னீர்கள். மகாத்மா காந்திஜி அவர்கள் " சோஷலிசம் என்பது தெளிந்த நீரோடையைப் போன்றது " என்று குறிப்பிட்டார்கள். நீங்கள் கொண்டுவந்த சோஷலிஸம் கானல் ஓடையாக மக்கள் மத்தியிலே தோற்றமளித்தது, இப்பொழுது நீங்கள் விஞ்ஞான சோஷலிஸம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். காந்திஜி விட்டுச்சென்ற சோஷலிஸத்தை, இருபதாண்டுக்காலம் நீங்கள் ஆட்சியில் இருந்தபொழுது செய்தீர்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் இருபதாண்டுக்காலம் ஆட்சியில் இருந்தபொழுது காங்கிரசின் கொள்கைகளை காந்திஜி வழியிலா பின்பற்றினீர்கள்?

அடுத்தபடியாக மதுவிலக்குக் கொள்கையை சில மாநிலங்களில் அமல் படுத்துகிறீர்கள், சில இடங்களில் விட்டுவிடுகிறீர்கள். இது முறையா? இதுதான் காந்தீய வழியில் நடக்கிறோம் என்று சொல்வதன் பொருளா? இதை காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(The yellow light was switched on.) I think I have got five more minutes. I have taken only five minutes.

MR. DEPUTY SPEAKER : The hon. Member commenced his speech at 12-15. It is already nearing 12.25.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, நான் இந்த நிதிநிலை சம்பந்தமாக ஒருசில விஷயங்களை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கைத்தறி நெசவுக்கு நிரந்தரமான பாதுகாப்பை அரசாங்கம் கொடுக்க வேண்டும். இதற்கான ஒரு நல்ல திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில தினங்களுக்கு முன்பாக பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருந்தது. டாக்டர் கோஷ் என்பவர் ''மலிவான மழை''யைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இதற்கு அதிகம் செலவாகும் என்பதுகூட அல்ல. இருபது ரூபாய் செலவிலேகூட மழையைப் பெய்யவைக்கலாம் என்று கூறியிருக்கிறார். கடல் உப்பைத் தூளாக்கி உடையக்கூடிய பலூனிலே வைத்து மேலே அனுப்பி, மழை பெய்யாத நேரங்களில் மழையைப் பெய்ய வைக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நாம் பரிசீலித்துப்பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே அந்த முறையை அனுஷ்டிக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, மழைத் தண்ணீரை வற்றாத் தண்ணீராக ஆக்கக் கூடிய திட்டத்தை தமிழ்நாட்டிலே அமல் செய்தால், பஞ்சம் ஏற்பட்டாலும்கூட, தண்ணீரை அதிக அளவில் பாதுகாப்பில் வைக்க முடியும் என்று கூறிக்கொண்டு, அரசாங்கம் தக்க கவனத்தை இந்த விஷயத்தில் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. ந. சிவபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1969–70-ம் ஆண்டுநிதிநிலை அறிக்கையினை வரவேற்று, ஆதரித்து என்னுடைய கருத்துக்களையும் மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, நம்மையெல்லாம் ஆளாக்கிவிட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவர் எடுத்துச்சொன்ன "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற நிலையை அமல்நடத்திப் பார்ப்பதற்குத்தான் இந்தக் கொடுமையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதோ என்று வருத்தப்படாதவர்கள் யாருமே இல்லை. நாட்டுக்கு உழைத்த அந்த உத்தமருக்கு என் தொகுதி மக்களின் சார்பில் முதற்கண் அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையை எந்தவிதமான வரியும் போடாமல் அறிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் மத்திய அமைச்சரவையிலே அளிக்கப்பட்ட நிதிநிலையையும் கவனத்தில் கொண்டு பார்த்தால், ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கக்கூடிய வகையில் மத்தியிலே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிலே போடப்பட்ட வரிகளால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஓர் ஆறுதல் கூறத்தக்க வகையிலே இங்கே நாம் நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறோம். நடுநிலைமையிலே இருக்கக்கூடியவர்கள் இந்த உண்மையை உணரத் தவறமாட்டார்கள் என்று கருதுகிறேன். ரிசர்வ் வங்கியிலிருந்து எந்தவிதமான ஓவர் டிராப்ட் கடனும் வாங்குவதில்லை என்பது நம்முடைய பொருளாதாரத்தின் அடிப்படை ஸ்திரத் தன்மையைக் (Economic stability) காட்டுவதாகும். காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான குற்றங்குறைகளைக் காணமுடியாத நிலைமையை நாம் பார்க்கிறோம்.

மத்திய சர்க்காரிலே விவசாயத்திற்கு அத்தியாவசியமான உரம் போன்றவற்றிற்கெல்லாம் வரி விதித்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியின் செயலாளர்களாக இருக்கும் திரு. வெங்கடசுப்பையா அவர்களும், திரு. சின்ஹா அவர்களும் இதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். மத்திய அமைச்சராக இருக்கும் திரு. தினேஷ் சிங் அவர்களும் எதிர்ப்பு தெரிவித்திருப்பதை நாம் பார்த்தோம். அதே சமயத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் நாம் புகுமுக வகுப்பு (பி. யூ. சி.) வரையில் இலவசக் கல்வி அளிக்க வழிவகைகளை இன்றையதினம் செய்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மேலும் மேலும் கல்லூரிப் படிப்பு முழுவதையுமே இலவசக் கல்வியாக அளிக்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்பதை

தெரிவித்துக்கொள்கிறேன். எட்டாத உயரத்தில் கிட்டாத நிலவாய் இருந்து வந்த கல்வி, இன்றையதினம் கூடத்து விளக்காய் தெரியும் வண்ணம் கொண்டு வந்த இந்த அமைச்சரவையை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

நடப்பு ஆண்டில் அரசாங்கத்தினுடைய உதவி பெற்று தனியார் துறையில் நான்கு கல்லூரிகளும் அரசாங்கக் கல்லூரிகள் நான்கும் ஆக மொத்தம் எட்டு கல்லூரிகளை அரசினர் துவக்கவிருக்கிறார்கள். ரூபாய் 65·39 கோடியை இந்த அரசு கல்விக்காகச் செலவழிக்க திட்டமிட்டிருக்கிறது. இது மாநில வருமானத்தின் 24 சதவீதமாகும். கல்வியின் இன்றியமையாமையையும், இதனுடைய மேம்பாட்டையும் எந்த அளவுக்கு அரசு உணர்ந்திருக்கிறது என்பது இதிலிருந்து நன்கு தெரியவருகிறது. அரசு எந்த அளவுக்கு பொருளாதாரத் துறையில் தன்னை ஆட்படுத்தியிருக்கிறது என்பதைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த மன்றத்தில் காங்கிரஸ் ஆளும் தரப்பில் இருந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தரப்பில் இருந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் என்ன கூறினார்கள் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு பி.ப. 12-30 வருமேயானால், கல்லூரிகளைக்கூட அல்ல, பள்ளிக்கூடங்களையே மூடிவிடுவார்கள் என்று அன்றையதினம் எடுத்துச்சொன்னார்கள். அந்தத் தலைவர்களுக்கு எல்லாம் இன்று ஒரு பாடமாக மட்டும் அல்ல, ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்திருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இப்படி எடுத்துச் சொல்வதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்றிருக்கிற வேறு எந்த மாநிலத்திலும் உயர் கல்வியை, எந்த நிலையிலும் இலவசமாக கல்லூரிப் படிப்பை ஆக்கும் நிலை இல்லை. இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள் இதை காங்கிரஸ் பொறுப்பேற்றிருக்கும் மாநிலங்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துச்சொல்லி இதுபோன்ற நிலை மற்ற இடங்களிலும் வருவதற்குத் தொண்டாற்றலாம்.

கல்வித்துறை மாநில அரசின் முழுப்பொறுப்பில் இருக்கிறது. இதில் குறுக்கிட மத்திய அரசுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அந்தக் காரணத்தினால்தான் இந்தத்துறையில் நாம் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். அவர்கள் இதுபோலவே ஒவ்வொரு துறையிலும் குறுக்கிடாமல் இருப்பார்களேயானால் நிச்சயமாக நாம் ஒவ்வொரு துறையையும் மேம்பாடு அடையச்செய்ய முடியும், முன்னேற்றகரமான திட்டத்தை வகுக்க முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் எடுத்து வலியுறுத்தி வந்தார். அவர்களிடம் குவிக்கப்பட்டிருக்கிற அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்படவேண்டும், அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்றெல்லாம் கூறி வந்தாரே தவிர வேறு மத்திய சர்க்காருக்கு எதிராகச் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை.

அடுத்து, வேளாண்மைத் துறைக்கு நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரித்திரத்தைப் புரட்டிப்பார்ப்போமேயானால் திறம்பட நாட்டை அரசாண்ட அரசர்கள் எல்லாம் குளங்களை வெட்டினார்கள், மரங்களை வைத்தார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம் வற்றாத ஜீவநதிகள் இல்லாத நம்முடைய பகுதி, மழையை நம்பியே வாழ்ந்தாகவேண்டிய பகுதி நிறைய மழை பெறவும், மழை நீர் குளம் குட்டைகளில் தேங்கி நிற்கவும் வகை செய்தார்கள். அந்தப் போக்கினையே இந்த அரசாங்கமும் கடைப்பிடித்து வருகிறது. கடந்த 20 ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி சிறு பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பெரிய நீர்த் திட்டங்களில் கவனம் செலுத்துவதாகச் சொல்லி அதுவும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. அதன் காரணமாகத்தான் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிற பஞ்சநிலை—அதையும் இந்த அரசாங்கத்தின்மீது சுமத்தக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் சிறுபாசனத் திட்டத்தில் அதிக கவனம் செலுத்துவதை நான் வரவேற்கிறேன். மேலும் அதை விரிவுபடுத்தவேண்டும். நாடு என்றால்

என்ன என்கிற வினாவுக்கு வள்ளுவப் பெருந்தகையார் விடையளிக்கிறபோது "நாடென்ப நாடா வளத்தை யுடையதே" என்பார். பயிர் தழைக்காத நாட்டில் உயிர் தழைப்பதில்லை. காங்கிரஸ் கட்சி 20 ஆண்டு அரசாண்டும்—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும் எந்தவிதமான முன்னேற்றமும் காணவில்லை. இதை காங்கிரஸ் தலைவர்களே எடுத்துச்சொல்கிறார்கள். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களானார்கள், ஏழைகள் மேலும் ஏழைகளானார்கள் என்று சொல்கிறார்கள். இதை நன்கு உணர்ந்தேதான் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதை ஒட்டியே நமது அரசாங்கமும் பிரதானமாக வேளாண்மைத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. நடுத்தர பாசனத் திட்டத்திற்காக ரூ. 4·5 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதையும், சிறு பாசனத் திட்டத்திற்காக ரூ. 7·70 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதையும், 2,500 தனியார் குழாய்க்கிணறுகள் தோண்டவும், 3,000 வடிமுனை குழாய் கிணறுகளும், 14,000 கிணறுகள் தோண்டவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

என்.ஜி.ஓ.க்களுக்கு திருமணக்கடன் உதவி அளிக்க 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து படி அரிசித் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இறுதியாக சேலம் உருக்காலைத் திட்டத்தை தோற்றுவிக்க ரூ. 51 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இது சிலருக்கு சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் இந்த ஒரு திட்டத்திற்காக எத்தனை மாநாடுகள், எத்தனை தீர்மானங்கள், எத்தனை பிரசாரங்கள் அண்ணாவின் கட்டளைப்படி "எழுச்சி நாள்" ஆக இதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடி வந்திருக்கிற சரித்திரத்தைப் பார்க்கிறபோது—இதற்காக பத்து கோடி ஒதுக்கி முதல் கட்டமாக ரூ. 51 லட்சம் சேலம் உருக்காலைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

* திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள நிதிநிலை அறிக்கையை ஒட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். துரதிருஷ்டவசமாக நம்முடைய தேசம், நம்முடைய நாடு ஒரு சிக்கலான பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கிறது. வறண்ட பிரதேசமாக மக்கள் பசியோடு போரிடுகின்ற ஒரு நிலையில் இன்று கிட்டத்தட்ட தஞ்சை ஜில்லாவைத் தவிர மற்ற ஜில்லாக்களில் எல்லாம் இந்த நிலைதான் இருக்கிறது. செங்கற்பட்டு, வடாற்காடு, கோயம்பத்தூர், திருச்சியிலே ஒரு பாகம் வறட்சி நிலையில் குடிக்கத் தண்ணீர் இன்றிக்கூட திண்டாடுகிற நிலை இருக்கிறது. இந்த நிலையைச் சமாளிக்க அரசு முக்கியமாக பல நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதிலும்—இவை சுலபமாகச் சமாளிக்கக்கூடிய நிலை அல்ல. ஏதோ யாகமோ, யக்ஞமோ நடத்துவதனால் மட்டும் சமாளித்துவிடலாம் என்று யாரும் நினைக்க முடியாது.

குறிப்பாக, நாம் எந்தப் பிரச்சினையையும் அடிப்படையாகக் கவனித்து தீர்க்க முயற்சி செய்வதில்லை. மத்திய அரசாங்கத்திடம் பஞ்சம், கஷ்டம் ஏதாவது கொடுங்கள் என்று வாயளவில் கேட்டுக்கொண்டு, மனுக்கள் போடுவதனால் மட்டும் அவர்கள் செவி சாய்க்கமாட்டார்கள். அப்படிக் கேட்பது புலியிடத்தில் கருணை காட்டு என்று கேட்பதைப் போலத்தான். புலி தன்னுடைய குட்டியிடத்தில்தான் கருணை காட்டும். மற்ற மிருகங்களைப் பற்றி அதற்குக் கவலையில்லை. அதைப்போலத்தான் கடந்த 2 ஆண்டுகளாக நாம் கோரி வருகின்றவை அவர்கள் காதில் விழுந்தும் செவிடர்களாக, நம் நிலையைக் கண்ணால் பார்த்தும் குருடர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

இந்த பட்ஜெட்டிலே விவசாயத்தைப் பொறுத்தவரையில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. என். ஜி. ஓ.-க்களுக்கு திருமணக் கடன் கொடுக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தக்கவைதான். வடிமுனைக் குழாய்கள், சேலம் உருக்காலை என்பனபோன்ற பல புதுத்திட்டங்களும் இருக்கின்றன. இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம் அடிப்படைப் பிரச்சினைகளைக் கவனித்து உடனே தீருங்கள் என்று. வீட்டு மனைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுங்கள். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும்

மனைகளை அவர்களுக்கே உடனடியாகப் பட்டா செய்து கொடுப்பதில் என்ன கஷ்டம் வரப்போகிறது ? இதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. அதேபோல பல்லாயிரக் கணக்கான ஏரி, குளங்களை ஆழப்படுத்தவேண்டுமென்றால் 375 பஞ்சாயத்து யூனியன்களுக்கு உத்தரவு கொடுத்துவிட்டால் போதும். இப்படி அடிப்படையாக உள்ள பிரச்சினைகளை உடனே கவனிக்கவேண்டும். மேலும் பஞ்ச நிலையைச் சமாளிக்க கிணறு வெட்டுவது, குளம் வெட்டுவது போன்ற காரியங்களில் பங்களூரில் இருக்கும் பட்டாளத்தை உபயோகப் படுத்திக்கொள்ளலாம். அவர்களுக்கு அது ஒரு பயிற்சியாக அமையும். 1958-இல் அதுபோல பெரிய அதிகாரிகளைக் கலந்துகொண்டு பட்டாளத்தை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் சுபீட்சமாக இருந்தால்தான் சேனை பயன்படும். சேனை பலப்பட்டு மக்கள் வாழ்வு பலவீனமாகப்போவதினால் என்ன பயன் ? ஆகவே இந்த நெருக்கடியான நேரத்திலே அவர்களையும் நாம் உபயோகப்படுத்திக்கொண்டு கிணறுகள் வெட்டுவது பெரிய கண்மாய்களைத் தோண்டுவது போன்ற காரியங்களைச் செய்யவேண்டும். பஞ்சப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு கூடுமான வரையில் என்ன என்ன வரி வஜா செய்யமுடியுமோ அதைச் செய்யவேண்டும். எல்லா வரிகளையும் ரத்து செய்துவிட்டாலும் அரசாங்கம் நடத்தமுடியாது என்பது திண்ணம். வசதியில்லாதவர்களிடத்திலே வரியைக கேட்காமல் இருக்கவேண்டும். ஒன்றும் விளையவில்லை என்று மனுச்செய்தால் மாவட்ட ஆட்சியாளர் நேரடியாகவோ அல்லது சிப்பந்திகள் மூலமோ பார்வையிட்டு அது உண்மையாக இருந்தால் வரிவஜா செய்யலாம் என்ற முறை இருக்கிறது. அதையே பரவலாக ஏற்பாடு செய்தால் வரிவஜாவைப் பூரணமாகச் செய்யவேண்டிய நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்காருக்கு அதிகமாகச் செலவாகிறது. புகுமுக வகுப்புகளில் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்கலாம் என்றாலும் நல்ல வசதியும் வாய்ப்பும் உள்ளவர்களுக்கு அப்படி இலவசக் கல்வி கொடுப்பது அனாவசியமாகும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதாவது 5,000 அல்லது 10,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு பணம் கட்டவேண்டும் என்று வைக்கலாம். அப்படிச் செய்தால் சர்க்காருக்கு வரவேண்டிய வருமானமும் வரும். ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டிலே இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் இருந்தால் ஹாஸ்டல் பணம் கட்டவேண்டுமென்று இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு அளவு வைத்து பணம் கட்டிப் படிக்கவேண்டுமென்று சொன்னால் அதன்மூலம் வருகிற வருவாயை வைத்து பஞ்சப் பிரதேசத்திற்கு கொடுத்து உதவலாம். எல்லோரும் சொல்கிறார்கள் என்பதற்காக அப்படிச் செய்யாமல் இருக்கவேண்டும். தொடர்ந்து இந்த முறையையே மேற்கொண்டால் நெருக்கடிதான் வந்துசேரும்.

ரிசர்வேஷன் சம்பந்தமாக உத்தியோக முறையில் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையிலும்கூட ரிசர்வேஷன் வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிறது. அந்த முறை கையாளப்படவில்லை. அது வலியுறுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் கீழ்த்தட்டிலே உள்ளவர்கள் மேலும் நல்ல நிலைக்கு வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கமுடியும்.

தஞ்சை ஜில்லாவிலே நெல் அதிகமாக உற்பத்தியாகிறது. அதை அரைப்பதற்கு மில்கள் இருக்கின்றன. தஞ்சையிலே அரிசி விலை உயர்வதற்குக் காரணம் கொள்முதல் செய்த நெல்லை சேலம், கோவை போன்ற இடங்களுக்கு மாற்று அரவை செய்து பிறகு அங்கு இருந்து கோடவுனுக்கு மாற்றி இப்படியெல்லாம் செய்வதால்தான்

டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் அதிகமாகி அதனால் அரிசிவிலையும் அதிகமாகிறது. காலையிலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தஞ்சை ஜில்லாவிலே அரைக்கப்படுகிறது என்று. ஆனால் அந்த மில்களுக்கு அரவைக்காக வருஷம் பூராவும் கொடுக்கப்படுவதில்லை. கொள்ளிடத்திலே ஒரு ராட்சஸ மில் 75 சத விகிதத்திலே அரைக்கக்கூடிய மில் இருக்கிறது. இந்த மாதத்தோடு அது மூடப்பட்டுவிடும். காரணம் தேவையான அளவுக்கு ஹல்லிங்குக்கு நெல் கொடுப்பதில்லை. சீர்காழியிலே 13 மில்கள் இருக்கின்றன. மாயவரம் போன்ற இன்னும் சில இடங்களையும் சேர்த்தால் 45 மில்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஹல்லிங்குக்கு நெல் கொடுக்கப்படவில்லை. நெல்லை மற்ற ஜில்லாக்களுக்கு அனுப்பி அரைத்து அதற்குப் பிறகு கோடவுனுக்குக் கொண்டுவரப்படுகிறது. அந்த நிலையிலேதான் அரிசியின் விலை அதிகமாகிறது. எனவே, தஞ்சாவூர் ஜில்லாவிலே இருக்கக்கூடிய நெல்லை அங்கே அரைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் அங்கேயுள்ள கூலியாட்களுக்கு வேலை கிடைக்கும். நிலத்திற்குத் தேவையான உமி, கரி போன்ற உரத்திற்கு தேவையான பொருள்களும் கிடைக்கும், கூலியாட்களுக்கு வேலையும் கிடைக்கும், மில்களும் மூடப்படாமல் இருக்கும். ஆகவே, அந்தத் துறையில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி தஞ்சாவூரில் தேவைக்கு தகுந்த நெல்லை அரவைக்குக் கொடுக்கவேண்டும். அதுபோக இருப்பதை மற்ற மில்காரர்களுக்குக் கொடுப்பதிலே ஆட்சேபனை இல்லை.

ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்டு சீரழிந்துவிட்டது என்று காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சொன்னார்கள். வாரியார் பற்றி நான் தவறான எண்ணம் கொண்டவனல்ல. அவர்கள் நல்ல பிரசங்கிதான். ஏதோ நடந்தது வேண்டுமென்று அல்ல தவறுதலாக நடந்திருக்கலாம். இதற்காக எங்கே பார்த்தாலும் கண்டனக்கூட்டம் போட்டு இல்லாததை எல்லாம் பேசுகிறார்கள். பேசட்டும், ஜனநாயகத்தில் உரிமை இருக்கிறது. ஆனால், கீழ்வெண்மணியிலே 44 உயிர்கள் தீயினால் கொளுத்தப்பட்டனவே அதைப் பற்றி ஒரு கூட்டம்போட்டு இருப்பதாகத் தெரியவில்லை. 44 உயிர்களைப் பற்றிப் பேசாத பெருந்தகை மக்கள், வாரியாரை திட்டினார்கள், அடிக்கப் போனார்கள், பிடித்துத் தள்ளினார்கள், சாமியை உடைத்தார்கள் என்பதற்காக கண்டனக் கூட்டம் போடுவது, நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. மு. ச. சிவசாமி** : பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப் பரிசீலனை செய்கின்ற நேரத்திலே, ஏக காலத்தில் மத்திய அரசினுடைய, மாநில அரசினுடைய நிதி நிலை அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கிறது, மாநில அரசினுடைய நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கிறது, மாநில அரசினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது பிரதான எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் அன்பர்கள் என்ன விமர்சனம் செய்கிறார்கள் என்ற மூன்று கருத்துக்களையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்தால்தான் எந்த அரசினுடைய நிதி நிலை அறிக்கை மக்களுக்கு நல்லது, நன்மை பயக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை ஓரளவு புரிய முடியும். தமிழக அரசிலே கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு மூன்று வரவு-செலவுக் கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். மூன்றிலேயும் புதிய வரிகள் இது வரையில் போடவில்லையென்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையிலே மத்திய அரசு 157 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போட்டிருக்கிறது. ஆனால், மாநில அரசினுடைய வரவு-செலவுக் கணக்கில் 19 கோடி ரூபாய் பற்றுக்குறையாக இருந்தும் கூட எந்தவிதமான புதிய வரிகளும் போடவில்லை. எந்தவிதமான புதிய வரிகளும் போடாமலேயே 17 அயிட்டங்களுக்குக் கூடுதலாகப்

பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க முடியும். இந்த மன்றத்திலே பிரதான எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய தோழர்கள் அடிக்கடி எடுத்துக் கூறுவது எல்லாம் விவசாயிகளுக்கு இந்த அரசு எந்த விதமான நன்மையும் செய்யவில்லை, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தொழில் துறையில் கவனம் செலுத்தவில்லை. என்பதாகும் இந்த இரண்டு கருத்துக்களோடு சட்டமும், ஒழுங்கும், அமைதியும் பாதுகாக்கப்படவில்லை என்று இந்த மூன்று கருத்துக்களை அடிக்கடி கூறிவருகிறார்கள். ஒரு பக்கம் 157 கோடி ரூபாய்க்கு வரி போட்டு, புதிய வரியையும் போட்டுவிட்டு, பெட்ரோல், மண்ணெண்ணெய், சிகரெட், சோப்பு இப்படிப்பட்ட ஏழை மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்களுக்கு வரியைக் கூட்டி விலையை அதிகப்படுத்துகின்ற நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படிச் செய்துவிட்டு, இங்கே மண்ணெண்ணெய் காணுமே என்றால் என்ன பொருள் ஒரு பக்கம் வரிகளைக் கூட்டிக்கொண்டே போகிறார்கள், விவசாயிகளுக்கு வேண்டியிருக்கிற பம்பு செட்டுகளுக்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்ற உரத்திற்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுகிற தண்ணீர் இறைக்கிற பம்பு செட்டுக்கும், உரத்திற்கும் வரியைக் கூட்டியிருக்கிறார்கள். அவர்கள்தான் விவசாயிகள்மீது, அதிக கவனம் செலுத்தவில்லை என்று இங்கே சொல்கிறார்கள் என்றால், என்ன பொருள், நடுநிலைமையோடு, மனச்சாட்சியோடு பிரதான எதிர்க் கட்சியிலுள்ள காங்கிரஸ்காரர்கள் பேச வேண்டுமானால், மத்திய அரசு விதித்து இருக்கிற பம்பு செட்டுகளுக்கும், உரத்திற்கும் விதித்து இருக்கிற வரிகளைக் கண்டித்து இருப்பார்களானால், அவர்கள் நடுநிலைமையோடு இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகிறார்கள் என்று சொல்லலாம். விவசாயத்தை நசுக்குகின்ற முறையில் மத்திய அரசு ரசாயன உரத்திற்கும், பம்பு செட்டுகளுக்கும் வரி விதித்திருப்பதை மூடி மறைத்துவிட்டு, தமிழக அரசு விவசாயத்திற்காகப் பொறுப்புடன் எந்தக் காரியத்தையும்செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள் என்றால் அவர்கள் உண்மையை மூடி மறைக்கிறார்கள் என்றுதான் இந்த நேரத்தில் அவர்கள் மீது குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

ஆரம்பத்திலேயே கூறினேன். எந்தவிதமான வரியும் இல்லாமல் இருந்தும் கூட, 19 கோடி 52 இலட்சம் பற்றுக்குறையாக இருந்தும்கூட, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே வேளாண்மைத் துறைக்கு 14 லட்சமும், ஆயக்கட்டு மேம்பாட்டுக்கு 26 லட்சமும், காட்டு வளத்திற்கு 8 லட்சமும், மீனளத்திற்கு 30 லட்சமும், கூட்டுறவுத் துறைக்கு 44 லட்சமும் ரோடு போக்கு வரத்திற்கு 89 லட்சமும், சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கு 38 லட்சமும், வெள்ளத் தடுப்புக்கு 61 லட்சமும், தொழில் வளர்ச்சிக்கு 188 லட்சமும், சிறு தொழில்களுக்கு 10 லட்சமும், சாலை மராமத்துக்கு 14 லட்சமும், நீர்வழிப் போக்கு வரத்துக்கு 4 லட்சமும், கல்வித் துறைக்கு பத்து கோடி ரூபாயும், குடிதண்ணீர்த் திட்டத்திற்கு 1.35 கோடியும், வீட்டு வசதி அபிவிருத்திக்கு 3.83 கோடியும், நகரமைப்புக்கு 3 லட்ச ரூபாயும், சமுதாய நலத்துறைக்கு 6 லட்சமும், ஆக ஏறக்குறைய 21 கோடி ரூபாய்க்கு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அரசு விரும்பியிருந்தால், பற்றுக்குறை இல்லாத, தன்னிறைவுள்ள வரவு-செலவுக் கணக்கை இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்க முடியும். நான் சொன்ன துறைகளிலே அதிகமாக ஒதுக்காமல் இருந்தால் ஒரு கோடி ரூபாய் உபரி பட்ஜெட்டாகக் காட்டியிருக்க முடியும். அது மட்டுமல்ல. மத்திய அரசின் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயைப் பின்பற்றியிருந்தால் உபரி பட்ஜெட்டைக் காட்டியிருக்க முடியும். இந்த நாட்டிலே பணத்தை அதிகமாகக் கையிலே வைத்திருக்கக் கூடியவர்கள் தான் சொத்துக்களை அதிகமாக வாங்குகிறார்கள். பிராபர்டி பர்சேசிங் டாகஸ் என்று போட்டால் ஒரு கோடி ரூபாயை அதிகமாக வரவு-செலவுக் கணக்கில் காட்டியிருக்க முடியும். பத்தடிக்கு ஆறடி ரூமுக்கு சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் நாள் ஒன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை லாட்ஜிங்கில் வாங்குகிறார்கள். சதுர அடிக்கு 5 ரூபாய், 10 ரூபாய் என்று லாட்ஜிங் டாக்ஸ் போட்டால் உபரி பட்ஜெட்டைக் காட்டி

[திரு. மு. ச. சிவசாமி] [1969 மார்ச் 6

இருக்க முடியும். இந்த நாட்டில் பல பஸ் ரூட்டுகள் தனியார் உடமையில் இருக்கின்றன. புதிதாகப் பஸ் ரூட்டுகளை கொடுக்கும போதெல்லாம் வரி போட்டால் பல கோடி ரூபாய்களை உபரி பட்ஜெட்டில் காட்ட முடியும். விவசாயிகள் விளைவிக்கின்ற விளைபொருள்களுக்கு எந்தவிதமான வரியும் இன்று இல்லை. மத்திய சர்க்காரில் மொரார்ஜி தேசாய் பம்ப் செட்டு களுக்கும், ரசாயன உரத்திற்கும் வரியைப் போட்டு விவசாயிகளை நசுக்கி யதைப் போல் நாங்களும் அதே எண்ணம் கொண்டவர்களாக இருந்தால் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு வரி போட்டிருந்தால் எத்தனையோ கோடி ரூபாயை உபரி பட்ஜெட்டாகக் காட்டியிருக்க முடியும்.. செய் தோமா ? இந்த மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகின்ற பொருள்களுக்கு விற்பனை வரி இல்லையென்று இருக்கிறது. சென்னை, தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டிணம் போன்ற துறைமுகங்களில் இருந்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகிற பொருள்களுக்கு 5 பர்சன்ட் விற்பனை வரி என்று போட்டால் எத்தனை கோடி ரூபாயை உபரியாகக் காட்டியிருக்க முடியும் ? இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த நிதி நிலை அறிக்கை யைக் கூர்ந்து பார்க்க வேண்டும். மொரார்ஜி தேசாயைப் பின்பற்றி நாங் களும் பல வரிகளைப் போட்டிருக்கலாம். பணக்காரர்களைப் பாதிக்கக் கூடிய வரிகளைக் கூட்டியிருக்கலாம். போடவில்லையே ! பதினேழு ஐடங் களுக்குக் கூடுதலான தொகையை ஒதுக்கி இப்படிப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால் நிதியமைச்சர் அவர் களுடைய கையில் அலாவுதீனுடைய அற்புத விளக்கா இருக்கிறது. இல்லை. கூர்ந்த மதியுடன் வரி போடாமல் பல ஐடங்களுக்கு அதிகமான தொகையை ஒதுக்கி நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் தூத்துக்குடி தொகுதியைப் பொறுத்தவரை நிதியமைச்சர் அவர்களுக்கு மிகுந்த கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே பெர்டிலைசர் பாக்டரிக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிக்கும் தொழிற்சாலைக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொட்டாசியம் குளோரைடு தயாரிக்கும் தொழிற்சாலைக்குப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஃபிஷிங் ஹார்பர் அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுக ரோடு பக்கம் பாலம் கட்ட 10 லட் சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே வளரும் நகரமாகிய தூத்துக் குடியைச் சிறந்த கண்ணோட்டத்தில் வைத்துப் பல அம்சங்களைச் சேர்த்த நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையின் மொத்த வரவு-செலவுக் கணக்கு களைப் பார்க்கும்போது மொத்த வருமானத்தில் சரி பாதி நிர்வாகச் செல வாக ஆகிக்கொண்டிருக்கிறது. இதில் நாம் கவனம் செலுத்தியாக வேண் டும். இதற்காக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி வைத்து, எது எதிலே சிக்கனப் படுத்தலாம் என்று முடிவு செய்து செலவழித்தால் இன்னும் பத்தாண்டு களுக்கு எந்தவிதமான புதிய வரியும் போடாமலே மக்களுக்கு நன்மை செய்ய முடியும். அந்த முறையிலே நிர்வாகச் செலவைச் சிக்கனப்படுத்த தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1969–70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்பேரில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நிதியமைச்சர் அவர்கள் பற்றுக்குறை பட்ஜெட்டாக, புதிய வரிகள் எதுவும் விதிக்காமல் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக் கிறார்கள். வரி விதிக்காமல் அரசாங்கம் நடக்காது என்பது எல்லோரும் உணர்ந்த விஷயம். பல அங்கத்தினர்கள் பேசும்போது மத்திய சர்க்கார் வரி விதிப்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏழைகளைப் பாதிக்காமல், வரி செலுத்துவோரைப் பாதிக்காமல் வரி விதிப்பு அமைப்பு இருக்க வேண்டும நம்முடைய சர்க்கார் யாருக்குமே வரி விதிக்காமல் நிதி அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால், சென்ற ஆண்டு நிதி அறிக்கையைச் சமர்ப்பித்த நிதியமைச்சர் மறைந்த அண்ணா அவர்கள் சில வரிகளைப் போட்டார்கள். மோட்டார் வாகனங்களுக்கு விற்பனை வரி, விவசாய வரு

1969 மார்ச் 6] [திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்]

மான வரி போன்ற வரிகளைப் போட்டு வருவாயை உயர்த்தி நிறைவான பட்ஜெட்டாகச் சமர்ப்பித்தார்கள். அவருடைய வழியைப் பின்பற்றக்கூடிய இந்த அமைச்சரவை இந்த வரியும் இல்லாமலே பற்றுக்குறை பட்ஜெட்டாக கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் அதை ஈடு செய்யலாம் என்று கருதுகிறார்கள்.

அறிக்கையில் பி.யு.சி. வரை இலவசக் கல்வி பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார்கள். எங்களுடைய மதிப்பிற்குரிய மாபெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய திட்டத்தை அவர்கள் ஏற்று அமலாக்கியதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம், வரவேற்கிறோம். ஆளும் கட்சித் தரப்பில் பேசிய நண்பர்கள் எல்லாம் காங்கிரஸ் அரசாங்கந்தான் விவசாயிகளுக்கு நன்மை செய்யாமல் நாட்டில் ஏற்பட்ட வறுமைகளுக்கும், அநீதிகளுக்கும் கார ணம் என்று பேசினார்கள். சுதந்திரம் பெற்று கடந்த 20 ஆண்டுக் காலத் தில் விவசாயத் துறையில் நாடு பிரம்மாண்டமான முறையில் முன்னேறி யதற்கும், குறிப்பாகத் தமிழகத்தில் காங்கிரஸ் சர்க்கார் அந்த வகையிலே பெரிய சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

விவசாயம் இந்தத் தேசத்தின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய நிலையில் விவசாய அபிவிருத்திக்காக 30-க்கு மேற்பட்ட அணைக்கட்டுகளைக் கட்டி, மின் நிலையங்களை ஏற்படுத்தி, அதிலே உற்பத்தி செய்யப்பட்ட மின் சக்தியை விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்குக் கொடுத்து, இயந் திரக் கருவிகளை உற்பத்தி செய்து கொடுத்து, விவசாயிகளுக்குக் கடன் வசதிகளைச் செய்து கொடுத்து, உரத்திற்கான வசதிகளைச் செய்து கொடுத்து, விதைக்கான வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயருவதற்கான அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்து தமிழகத் தில் விவசாய உற்பத்தி செய்த பொருளுக்கு நல்ல விலையும் கிடைக்கக் கூடிய வாய்ப்பையும் செய்து கொடுத்து, பிரம்மாண்டமான அளவில் பெருகுவதற்கு வழி செய்து கொடுத்தது, காங்கிரஸ் அரசு என்பதை நான் மட்டும் சொல்லவில்லை, வெளி தேசங்களில் இருந்துவந்த பொருளாதார நிபுணர்கள் எல்லாம் கூடப் பாராட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் விவசாயம் பிற்
நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று அவர்கள் பாராட்டி பகல்
இருக்கிறார்கள். இன்று வறட்சி, பட்டினி இவற்றை நாடு எதிர்நோக்கிக் 1-00
கொண்டிருக்கிறது என்று சொல்கிறோம். வறட்சி, பஞ்சம் என்ற மாபெரும் பூதம் தமிழ்நாட்டில் உரு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பூதம் யாரை இறை கொள்ளப் போகிறதோ, தெரியவில்லை. உருவாகும் அந்தப் பூதம் எப்படி இறைகொள்ளப் போகிறது என்பதை நாம் எல்லோ ரும் உன்னிப்பாக கவனித்து அதைப் போக்குவதற்கு எல்லோரும் ஒத் துழைக்க வேண்டும். இதில் கட்சி பாகுபாடு கூடாது. பஞ்சம், வறுமை ஏற்படுகிறது என்றால், அதைப் போக்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் சொல்லுகிற பாணியிலே சொல்லுகிறேன், இன்று எல்லா அமைச்சர்களும், முதல் அமைச்சர் அவர்கள் உட்பட டெல்லிக்குக் காவடி தூக்கிடும் நிலை இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு நூறு லட்சம் டன் தானியம் உதவ வேண்டுமென்று முதல் அமைச்சா அவர்கள் சொல்லு கிறார்கள். உணவு அமைச்சர் அவர்களும் அப்படி கோரிக்கை விடுக்கிறார் கள். எங்கள் மதிப்பிற்குரிய தலைவர் திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட இருக்கிறது என்று பேசிய போது அமைச்சர்கள் எல்லோரும் குறிப்பிட்டார்கள், "நீங்கள் என்ன எங்களது ஆலோசகரா ?" என்று. எதிர்காலத்தில் நமக்கு நெருக் கடி ஏற்பட இருக்கிறது என்று சொன்னதை மறுத்துப் பேசினார்கள். இன்று அந்த நிலையை அமைச்சர்களே ஒப்புக்கொள்ளக்கூடிய விதத்தில், ஆளும் கட்சித் தரப்பிலுள்ளவர்கள் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்நிலையைப் போக்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

[திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்] [1969 மார்ச் 6

அடுத்தபடியாக, திரு. ஆசைத்தம்பி அவர்கள், காங்கிரஸ்காரர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றவில்லை என்றெல்லாம் பேசினார்கள். ரயில் தண்டவாளங்களைப் பிடுங்கியதாகவும், போஸ்ட் ஆபீஸ்களைக் கொளுத்தியதாகவும், அவர்கள் சொன்னார்கள். 1942 ஆகஸ்ட் புரட்சியில் தேசம் பூராவிலும் கனல் பொங்கியது. அன்று காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்தார்கள். நாட்டில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, புரட்சிக் கனல் வீசியது. அன்று ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்கு காங்கிரஸ் கட்சியோ அல்லது காங்கிரஸ் கொள்கைகளோ பொறுப்பல்ல. கட்டுமீறிய செயலாகும். இருந்தபோதிலும், அன்று ஏற்பட்ட அநீதிகளுக்கான முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறினர் காங்கிரஸ் தலைவர்கள். ஆனால், 1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது, சென்னையில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டு, தேசீயச் சொத்துக்கள் எல்லாம் அழிக்கப்பட்டு, சர்க்கார் பஸ்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு, ரெயில்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு, மின்சார விளக்குகள் எல்லாம் உடைத்தெறியப்பட்டு பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தேசீயச் சொத்துக்கள் எல்லாம் அழித்து நாசம் செய்யப்பட்டபோது அன்றுள்ள எல்லா தி.மு.க. தலைவர்களும் இது எங்கள் பொறுப்பல்ல, இது நாங்கள் செய்ததல்ல என்று தட்டிக் கழித்து ஓடிவிட்டார்கள். ஆனால், காங்கிரஸ் பாரம்பரியத்தில் வந்தவர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றக்கூடியவர்கள். காங்கிரஸ் ஜனநாயகத்தைக் காப்பாற்றவில்லை என்று இவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். காங்கிரஸ்தான் ஜனநாயகத்தை இந்த நாட்டில் உற்பத்தி செய்தது, ஜனநாயகத்திற்கு உரு கொடுத்தது, ஜனநாயகத்தை நல்ல முறையில் கட்டி வளர்த்தது. அப்படி ஜனநாயகத்தை நல்ல முறையில் வளர்த்து நாட்டின் சுதந்திரத்திற்கு விரோதமாக இருந்த சக்திகள் கூட ஆட்சிக்கு வர சலுகை கொடுத்தது காங்கிரஸ். நீங்கள் எல்லாம் ஆட்சிக்கு வர உரிமை கொடுத்தது ஜனநாயக காங்கிரஸ்தான். இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே குறை கூறுவதை விட நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எங்களது மாவட்டமாகிய தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். 1965–ல் அது பிரித்துக் கொடுக்கப்பட்டது. 1967–ல் ஜில்லா கலெக்டர் அலுவலகத்தைத் திறக்க இன்றைய நிதி அமைச்சர் அவர்களும், காலஞ்சென்ற அண்ணா அவர்களும் வந்திருந்தார்கள். தர்மபுரி மாவட்டம் கல்வியில், பொருளாதாரத்தில், விவசாயத்தில், சமூகநலத் துறையில் எல்லாவற்றிலும் பின்தங்கிய மாவட்டமாகும். அந்த மாவட்டம் முன்னேற்றம் அடைவதற்காக பிரத்தியேக நிதி வசதி செய்து கொடுப்பதாக அண்ணா அவர்கள் அன்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகவே, நிதி இலாகா பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் பின்தங்கிய மாவட்டமாகிய தர்மபுரி மாவட்டத்திற்கு தக்க வசதிகள் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். பருவ மழை தவறிவிட்டதால் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடுகிறார்கள். அவர்களுக்கு அரிசி உணவுகூடத் தேவையில்லை. கலப்புணவு கொடுத்தால்கூட போதும், புன்செய் தானியம் கொடுத்தால் கூட போதும். புன்செய் தானியங்கள் சந்தைகளில் விற்பதால் தவறுகள் ஏற்படுகின்றன என்று உணவு அமைச்சர் குறிப்பிட்டார்கள். சென்ற காங்கிரஸ் ஆட்சியில் புன்செய் தானியங்களை ஓப்பன் மார்க்கெட்டில் விற்பதற்கு ஏற்பாடு செய்து, அதைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகளை ஏற்படுத்தி, எல்லோருக்கும் சமமாக அது கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்படிப்பட்டதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் தர்மபுரி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு நீங்கள் வசதி செய்து கொடுத்தவர்களாவீர்கள். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக, ஊத்தங்கரை ஒரு சப்-தாலுகா. மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் அதைத் துவக்கி வைத்தார்கள். அங்கு தாசில்தார் அலுவலகம் ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இது விஷயமாக அரசாங்கத்தின் கவனத்திற்கும் மாவட்ட அதிகாரிகள் அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

1969 மார்ச் 6]

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை மீது நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நகரப்புறங்கள் விரிவுபடுத்தப்படுகின்றனவே தவிர, கிராமப்புறங்கள் மிகவும் க்ஷீணித்துப் போய்க்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் நன்கு வாழ்க்கை நடத்த முடியும். கிராமப்புறங்களில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படியான பணம் ஒதுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராமங்களில் உள்ள மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி, ரோடு வசதி, மின்சார வசதி இவற்றைச் செய்து கொடுக்க முடியும். பஞ்சாயத்துக்கள் எல்லாம் இப்போது வாடகைக் கட்டடங்களில்தான் இருக்கின்றன. சொந்தக் கட்டடங்கள் அவைகளுக்கு இல்லை. சில இடங்களில் யூனியன் கட்டடங்கள் கூட வாடகைக் கட்டடங்களில் தான் இருக்கின்றன. காரணம், பொருளாதார வசதி இல்லை என்பதுதான். ஆகவே, பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கும் சேரிகளை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டும். ஆகவே, இதற்கு வேண்டியதொரு திட்டத்தைக்கொண்டுவர வேண்டும். பணம் ஒதுக்கினாலும் கூட ஜாதி இந்துக்கள் இருக்கக் கூடிய இடங்களில் தான் சுகாதார வசதிகள் செய்யப்பட்டு, அவர்கள் சௌகரியமாக வாழ வழிவகை செய்துவிடுகிறார்கள். ஜாதியைச் சொல்லும்போது கேவலமாக நினைக்கக் கூடாது. சக்கிலியர் என்பவர்கள் அந்தப் பகுதிகளில் தீண்டப்படாதவர்கள். அவர்கள் கிணற்றில் தண்ணீர் மொண்டு குடிக்கக் கூட முடியவில்லை. ஜாதி இந்துக்கள் அவர்களை அவ்வளவு மோசமாக நினைக்கிறார்கள்.

கீழ் வெண்மணியில் நடந்தது மாதிரி கோவையில் ஒரு சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. கல்லிப்பாளையம் கிராமத்தில் அப்பன் மகன் பாகத் தகராறில் கவுண்டர்கள் சிலர் அப்பனையும், மகனையும், கையைக் கட்டி அவர்களைப் பந்தல் காலில் கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். நையப்புடைத்திருக்கிறார்கள். அப்படி அடித்துவிட்டு, போலிசிலே ரிபோர்ட் செய்தால் கொன்றுவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனாலே அவர், போலீசிலே ரிப்போர்ட் செய்யாமல் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரிடம் அடிபட்ட காயத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார். அந்த டாக்டர் ஒரு ரிப்போர்ட்டை எடுத்து போலீசுக்கு அனுப்பியிருக்கிறார். போலீசுக்கு அனுப்பியவுடன், பேரூர் போலீஸ் ஸ்டேஷனில் அந்த ஹரிஜன் ரிப்போர்ட் கொடுத்தபொழுது, நானும் நின்றுகொண்டிருந்தேன். அவர் சொன்னார், கையைப் பின்னால் கட்டிஅடித்து, எட்டி உதைத்தார்களாம், உதைத்தவுடன் போய் விழுந்தாராம், விழுந்ததும் அந்தக் கையோடு எழுந்துவர வேண்டுமாம், அவர் நேரிலேயே விழுந்து காட்டினார். அந்த அளவுக்கு இருக்கிறது. கிராமப் பகுதிகளிலே அரிசனங்களை மனிதர்களாக நினைப்பதே இல்லை. காங்கிரஸ் கட்சியின் பரம்பரையில் வந்த காங்கிரஸ் குஞ்சுகள்தான் இம்மாதிரி பல இடங்களில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறேன்.

அது மாத்திரம் அல்ல. வேளாண்குறிச்சி என்ற இடத்தில் உள்ள ஹரிஜனங்கள் கோயிலில் கும்பிடக் கூடாது. இது பற்றி என்னிடத்தில் சொன்னவுடன், போலீஸ் ஸ்டேஷனில் சொன்னேன். போலீசார் ரிசர்வ் படையோடு போய் அதைத் தடுத்து நிறுத்தினார்கள். ஆனாலும் கூட ரிசர்வ் படை போலீசார் சொல்லிவிட்டார்கள், கோயில் பக்கம்வர வேண்டாம், வீட்டுப் பக்கமே பொங்கல் வைத்துக் கொண்டாடுங்கள் என்று இம்மாதிரியாக அரிசனங்கள் மிகவும் மோசமான நிலையில் நடத்தப்படுகிறார்கள். எனவே ஒதுக்கக்கூடிய பணத்தில், அதிகப்படியான பணத்தை அரிசன முன்னேற்றத்திற்குத்தான் ஒதுக்க வேண்டும், அதற்காக மற்றவர்களுக்கு ஒதுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. அரிசனங்களின் முன்னேற்றத்திற்கு எவ்வளவுக்கெவ்வளவு ஒதுக்கவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு ஒதுக்கிச் செய்ய வேண்டும்.

[திரு. என். மருதாசலம்] [1969 மார்ச் 6

அடுத்தபடியாக, இன்று கிராமப்பகுதிகளிலே எங்கு பார்த்தாலும் தண்ணீர் இல்லை, விளைச்சல் இல்லை, தானியம் இல்லை என்று ஒவ்வொரு அங்கத்தினரும் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றிருக்கும் நெருக்கடி மழையில்லாத காரணத்தினால் வந்திருக்கிறது. இதை அரசாங்கம் உணர்ந்து மாநிலம் பூராவையும் பஞ்சப்பிரதேசமாகப் பிரகடனம் பண்ண வேண்டும். அப்படிச் செய்து, கடன் தொகைகளை ஒற்றி வைக்க வேண்டும், குத்தகை வாரத்தைத் தள்ளிவைக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் விவசாயிகளிடமிருந்து நல்லெண்ணத்தையும், மதிப்பையும் பெறமுடியும். குத்தகைதாரர்களுக்கு நன்மை புரியும் வகையில் 'குத்தகை வாரச் சட்டங்களை'க் கொண்டுவந்திருக்கிறார்கள். அதேமாதிரி சாதாரண கூலி விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சம் கூலி நிர்ணயச் சட்டத்தையும் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால் கூலி விவசாயிகளின் தகராறு இல்லாமல் இருக்க முடியும். விவசாயிகள் சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாய சங்கத் தலைவரையும் கூட்டி அவர்களுடைய யோசனையோடு, அரசாங்கத்தினுடைய யோசனையையும் சேர்த்து ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் தகராறுகள் தீர்வதோடு, கூலி விவசாயிகளிடம் நல்லெண்ணத்தையும் உண்டுபண்ண முடியும். அதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்று கோவையிலே பஞ்சாலை நெருக்கடியிருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி சட்டசபையில் பேசினாலும்கூட பஞ்சாலை நெருக்கடி தீர்ந்தபாடில்லை. ஒவ்வொரு மில் முதலாளியும் ஆரம்பத்திலே மில் கட்டும்பொழுது அந்த மில்லுக்கு எவ்வளவு மூலதனம் போட்டார்கள் என்று கணக்கெடுக்க வேண்டும். 1967-ஆம் ஆண்டு வரையில், மில்லில் போட்ட மூலதனம் எவ்வளவு, லாபம் எவ்வளவு கிடைத்திருக்கிறது, அதை எந்தெந்தப் பகுதிகளிலே உபயோகப்படுத்தி இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்க வேண்டும். அதிலிருந்து பல மில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒர்க் ஷாப்புகள் கட்டபட்டிருக்கின்றன. நூற்பாலைகள், பங்களாக்கள் கட்டியிருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த லாபத்திலிருந்து எடுத்துக்கொண்டு இப்பொழுது லாபம் இல்லை என்று மில்லை மூடியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் கணக்கெடுத்து, லாபத்திலிருந்து பல உப தொழில்களுக்குப் போட்டிருக்கிறார்களே, அதைப் பறிமுதல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்து, இந்த மில்கள் ஓடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால்தான் மில்லை ஓட்ட முடியும். அப்பொழுதுதான் தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்த முடியும். தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற முடியும். எனவே, அரசாங்கம் அந்த வேலைகளைச் செய்ய உடனடியாக முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு நல்லமுறையிலே இன்றைக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட அந்தப் பணம் போதாது. இன்னும் அதிகப்படியான பணம் ஒதுக்கி, அவர்களுக்குக் கல்வி வசதி, தொழில் வசதி, வியாபார வசதி ஆகியவற்றைச் செய்தால்தான் அவர்கள் மற்ற ஜனங்களோடு வாழும்படியான நிலை ஏற்பட்டு ஜாதி வித்தியாசமின்றி சமமாக இருக்க முடியும். அவர்களுக்கு அவ்வாறு பணம் ஒதுக்கி வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*திரு. க. ந. இராமச்சந்திரன்: பேரவை துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையினையொட்டி இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவதற்கு முன்பு, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தவுடனே ஒரு கவிஞர் சொன்னார்,

1969 மார்ச் 6] [திரு. க. ந. இராமச்சந்திரன்]

" Years do not age him, months nor days wear out our leader ".

என்று. நாட்களோ, மாதங்களோ அல்லது ஆண்டுகளோ அவர்களுடைய வயதையோ, வாழ்வையோ பற்றிக் குறிப்பிடுவன அல்ல. அவர்களுடைய செயலைப் பொறுத்துத்தான் அவர்களுடைய சிறப்புகள் அமையும் என்று சொன்னார். அதுபோன்று அண்ணா அவர்கள் பெற்ற சிறப்பு, அவர்களுடைய செயலால்தான் என்பதை நாட்டுமக்கள் வருந்துகின்ற காட்சியே காட்டும். நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் எழுந்து, வளைந்து நின்று, அண்ணா அவர்கள் பதில் சொல்லிவிடுவார்கள் என்று கேட்கத் தொடங்குவார்கள். அண்ணா அவர்கள் அன்போடு, அனைவரும் சிரிக்கும் வகையில் பதில் அளிப்பார்கள். அத்தகைய காட்சிகளை இனி பார்க்க முடியாத துரப்பாக்கியமான நிலைமையில் நாம் இன்றிருக்கிறோம். ஏழை, எளியவர்களோடு அவர்கள் எப்பொழுதும் ஈடுபட்டு இருந்து வந்திருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகளைப் பார்த்து ஒருவர், யார் மிக்க உயர்ந்தவர் என்று கேட்டார். அதற்கு, 'The Viceroy of India is no greater to me than the suppressed people of my Motherland.' என்று காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டினுடைய வைஸ்ராய்கூட உயர்ந்தவரல்ல. என்னுடைய நாட்டின் தாழ்த்தப்பட்ட மக்களைக் காட்டிலும் என்ற பொருளில் சொன்னார்கள். அதுபோன்று அறிஞர் அண்ணா அவர்கள் ஏழை, எளிய மக்களோடு மிகுதியான ஈடுபாடும், அன்பும் கொண்டிருந்தார்கள். டாக்டர் மில்லர் அவர்கள்கூட, இரண்டு நாட்களுக்கு முன்பு வெளியிட்ட கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னிமாரா ஹோட்டலிலிருந்து அடையாறு மருத்துவ மனைக்குச் செல்லப்போகும் நேரத்தில் இருபது ரிக்ஷாக்காரர்கள் வந்து ஒரு மாலையைக் கொண்டு வந்து டாக்டர் மில்லர் அவர்களுடைய கழுத்திலே அணிவித்தார்களாம். உடனே மில்லர் அவர்கள் சொன்னாராம்: பல அரசியல் அறிஞர்களுக்கும், பெருந்தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் ஆப்பரேஷன் செய்திருக்கிறேன். ஆனால் இவ்வளவு சாதாரணக் குடிமக்களும் வந்து பாராட்டி மாலை அணிவித்திருப்பது அண்ணாதுரை அவர்களுக்கு ஆப்பரேஷன் செய்தபோதுதான் என்று பெருமையோடு கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு, ஏழை, எளிய மக்களோடு ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பாராட்டக்கூடிய அளவிற்கு இருந்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஏழை, எளிய மக்களின் பிரதிநிதியாக இருந்து, ஏழை, எளியவர்களோடு வாழ்ந்த காரணத்தால் இந்த நாட்டில் மற்றவர்கள் பெறமுடியாத பெருமையையும், புகழையும் பெற்று இப்பொழுது மறைந்துவிட்டார்கள்.

அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்லக்கூடிய அளவுக்கு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைச் சிலர் பாராட்டிப் பேசினார்கள். அதை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம். சிலர் குற்றங் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அதையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், அவர்களது கூரிய வாதங்கள் அறிவுக்கு உகந்த வாதங்களாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அப்படியில்லாததால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. பட்ஜெட்டைப் படிக்கத் துவங்குவதற்கு முன்னால் அதன் பகுதிகளைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, 'ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சர்' அதாவது அன்றாடச் செலவு, 'கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர்' அதாவது மூலதனச் செலவுகள், இவற்றின் வேறுபாடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். 'டெஃபிசிட் பட்ஜெட்', அதாவது பற்றுக்குறை பட்ஜெட் என்பது மற்றொன்று. இந்த வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு உறுப்பினர்கள் பேசினால், எதிர்க்கட்சியினர் பேசினால், நமக்குள் சொல்லிக் கொள்ளக்கூடிய குற்றங்களும், குறைகளும் குறைவாகத்தான இருக்கும். குற்றச்சாட்டுகள் சொல்லும் நேரத்தில் புள்ளிவிவரங்களோடு எடுத்துக் கூறினால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளலாம். திட்டங்கள் போட்டு

[திரு. க. ந. இராமச்சந்திரன்] [1969 மார்ச் 6

குறைகள் அனைத்தையும் தீர்த்துவிடமுடியாது. இரண்டு மாதங்களுக்கு முன்னாலே "போஸ்ட்" பத்திரிகையிலே வந்திருந்தது, நியூயார்க் மாகாணத்திலே, உபரி பட்ஜெட் போட்டிருந்தார்களாம். ஆனாலும், அங்கு பேசிய உறுப்பினர்கள் அந்த மாகாணத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமையவில்லை என்று சொல்லியிருக்கிறார்களாம். அமெரிக்க நாட்டிலே, வளம் கொழிக்கும் நாட்டிலே இப்படி உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். உலகத்திலேயே அதிக வரி செலுத்தக்கூடிய நாடு இந்திய நாடு. 100-க்கு 21 விழுக்காடு வரி செலுத்துகிறார்கள். அமெரிக்க நாட்டிலே 100-க்கு 9 விழுக்காடு வீதமும், இங்கிலாந்து நாட்டிலே 100-க்கு 8½ விழுக்காடுமாகச் செலுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு அமெரிக்காவில் ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் 100 டாலர் என்று சொன்னால் இந்தியாவில் ஒருவருடைய சராசரி வருமானம் ஒரு ரூபாய்கூட இல்லையென்று சொல்லத்தக்க விதத்தில் நம்முடைய வாழ்வு உயரவில்லை ஆகவே மிகக் கேவலமான முறையிலே நம்முடைய அன்றாட வாழ்க்கையை நடத்துகிற இந்நாட்டின் ஒரு அங்கமாகிய சென்னை மாநிலத்தில் 16 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்திருக்கிற ஒரு அமைச்சரைப் பார்த்து இது என்ன பட்ஜெட் என்று அவர்கள் அரசியல் புரியாமல் பேசுகிறார்கள். அதைப் பாராட்டுகின்ற மனம் காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களுக்கு இல்லை என்பதை அவர்களுடைய பேச்சிலே பார்த்தோம். தமிழ்நாடு என்ற பெயரைக் கொண்டு வந்து சென்னை மாநிலத்துக்குச் சூட்டிய உடனே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் இந்தப் பெயரை முன்பே சூட்டியிருக்கிறோம் என்று குறிப்பிடுகிறார்கள். யாரோ ஒருவன் சிங்கம் பிடிக்கப்போனானாம். அவன் சிங்கத்தைப் பிடித்து அரியணையில் அமர்த்திய பிறகு, ஆட்டைப் பிடிக்கப் போன ஒருவன் ஆட்டையும் பிடிக்காமல், அறுந்து போன சங்கிலியையும் கையிலே வைத்துக்கொண்டு, "நானும் சிங்கத்தைப் பிடிப்பதற்குத்தான் கையிலே சங்கிலி வைத்திருக்கிறேன்" என்றானாம். அதைப்போல் அப்பொழுதே சென்னை காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைக்காமல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார் இவர். ஆடு பிடிக்கப் போனவன் அறுந்து போன சங்கிலியை வைத்துக்கொண்டு நானும் சிங்கம் பிடிக்கப்போனேன் என்றதைப் போல் இருக்கிறது இவர் கூற்று.

மதிப்பையும் பெருமையையும் எதிர்பார்த்து எந்த திட்டத்தையும் போடவில்லை. உலகிலேயே மிக அதிகமான வரியை செலுத்தக்கூடிய நாடு நமது நாடு. மிக அதிகமான அளவுக்கு வளம் இல்லாமல் இருக்கிறது நமது தமிழகம். அருகிலே இருக்கிற கேரள மாநிலத்திலேகூட கமர்ஷியல் புராடக்ட்ஸ் அதிகமாக இருக்கிற காரணத்தினால் விற்பனைப் பொருள்கள் அங்கு அதிகமாக இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய வருமானம் அதிகமாக இருக்கிறது. ரப்பர், மிளகு, தேங்காய், தேயிலை, காபி போன்றவைகள் அங்கு விளைகின்ற காரணத்தினால் வருமானம் அதிகமாகக் கிடைக்கிறது. நமக்கு நிலவளம் இருந்தும் நீர் வளம் இல்லை. அந்தக் காரணத்தினால் நமது நாடு முன்னேற்றம் பெறமுடியாமல் இருக்கிறது. விவசாயத்துறை தொழில் துறை இந்த இரண்டும் அபிவிருத்தி அடைந்தால்தான் நம்முடைய நாட்டில் முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்க முடியும். 1967-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் செலவிட ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் அப்பொழுது 30·45 இலட்சத்திற்கு மேல் செலவிடாமல் இருந்ததால் மீதிப் பணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. ஆனால் இப்பொழுது எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் அதை செலவு செய்வதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். காரணம் மக்கள் பெருக்கம். ஆண்டுக்காண்டு மக்கள் அதிகமாகிக்கொண்டிருக்கிறார்கள். எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அதை நிறைவேற்றமுடியவில்லை, இந்த மக்கள் பெருக்கத்தின் காரணமாக, அங்கத்தினர்களிடமேகூட குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அதற்குகூடப் பரிசு வைத்தால்

1969 மார்ச் 6] [திரு. க. ந. இராமச்சந்திரன்]

நன்றாக இருக்கும். எந்த அங்கத்தினர் குறைவாக குழந்தைகள் வைத்திருக்கிறாரோ அவருக்குப் பரிசு என்றால் அமைச்சர்களுக்குக்கூட அப்படி ஒரு பரிசு வைக்கலாம், அப்படி வைத்தால் முன்னாள் சுகாதார அமைச்சர் அந்தப் பரிசைப் பெற்றுக்கொண்டு போய் விடுவார். நம்முடைய நாட்டில் பல திட்டங்கள் வெற்றி பெற முடியும். ஆண்டுக்காண்டு மக்கள் பெருக்கம் இருக்கிற காரணத்தினால் நம்முடைய திட்டங்களை எவ்வளவு நன்றாக, உபரியாகப் போட்டாலும்கூட, மக்கள் அதன் பலன்களைப் பெறமுடியாமல் போகிறது. (மணி அடிக்கப்பட்டது).

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 250 கோடி கொடுப்பதாகச் சொல்லியது. இப்பொழுது ரூ. 201 கோடி தான் கொடுக்கப்படும் என்று கூறுகிறது. மார்வாரி நகையை வைத்துக் கொண்டு கடன் கொடுப்பான் மத்திய அரசு நாட்டை வைத்துக் கொண்டு கடன் கொடுக்கிறது. மார்வாரி முன்னாலேயே வட்டியை எடுத்துக்கொள்ளுவான். மத்திய அரசு பிறகு வட்டியைப் பெற்றுக் கொள்ளுகிறது. மார்வாரி நிலையிலே தான் மத்திய அரசு இன்றைக்கு இருக்கிறதே தவிர, நல்ல மனப்பான்மையோடு—ஒற்றுமை மனப்பான்மையோடு—இருந்தால் இன்னும் பல நன்மைகளைச் செய்ய முடியும். அந்த 201 கோடியிலும் 150 கோடி கடன். மீதி இருக்கிற ரூபாயை வைத்துக்கொண்டு நிதி அமைச்சரவர்கள் என்ன திட்டத்தைப் போட்டு நாட்டு மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற முடியும்?

விவசாயத்திற்குத் தேவையான பம்ப் செட்டுகள் வழங்குவதற்கும், அதற்கு மின்சாரம் அளிப்பதற்கும், கல்விக்கும் முதன்மை அளித்திருக்கிறது. கல்விக்காக 100-ல் 24 பங்கு ஒதுக்கியிருக்கிறது. 65 கோடி ரூபாய் கல்விக்காக செலவிடப்போகிறார்கள். இவ்வளவு திட்டங்களையும் நிறைவேற்ற மத்திய அரசு, குறிப்பாக நிதிக்குழு கொஞ்சம் உதவி செய்யவேண்டும். அப்படி அவர்கள் உதவி செய்தால் தமிழக மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் அண்ணா அவர்கள் பாதையிலே சென்று பல சிறப்புகளை நாம் பெற முடியும். அந்த வகையில்தான் இந்த நிதி அமைச்சரவர்கள் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லி, அவர் உயிரோடிருந்த காலத்தில் அவருடைய பெருமை தெரியவில்லை. இயேசுநாதர் உயிரோடிருந்த காலத்தில் அவருடைய பெருமையை அறிவிக்க அவருடைய சீடர்களுக்கு இறைவன் அருள் கொடுக்கவில்லை என்று சொல்லுவார்கள்.
God gave them strength to propagate Christ's teachings only after he was gone. Peter was not a true Christian when Jesus was alive, but through his own martyrdom he became a wer after the crucifixion. பீட்டர் கூட அவருடைய பெருமையை அவர்கள் மறைந்த பிறகுதான் சொன்னான். அண்ணாவினுடைய தம்பிகளும் அண்ணாவின் பெருமையைக் காப்போம் அவர்கள் மறைந்த பிறகு அவர்களுடைய பணிகளை அவருடைய வழியிலே, சிறந்த வழியிலே சென்று நிறைவேற்றுவோம், செயல்படுவோம். அவரைக் காட்டிலும் அவர் காட்டிய வழியிலே அவருடைய பெருமைக்குப் பங்கம் விளைவிக்காத முறையில் செல்வோம் என்பதை காங்கிரஸ் நண்பர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Mr. Speaker, Sir, within the very little time that is allotted to me, I will briefly analyse two important questions that are facing us today. With regard to the Centre-State relationship, much has been mentioned on both sides of this House. We have the Opposition on this side saying that the Centre is doing very well, and we have the ruling party on the other side saying

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 6

that more powers must be given to the State. What we see is the very unfortunate spectacle of the panchayats, municipalities and the Corporation going to the State Government with a begging bowl, the State Government repeatedly going to the Centre in different forms and different ways and asking for more aid, and the Centre sending various persons to different parts of the globe for seeking aid depending upon the ideological outlook of the countries like America, Russia, etc. The result is that one goes to the other, the other goes to another and so on. I say very categorically on behalf of the Swatantra Party that we must evolve a clearcut programme. We are now in the same situation in which the country was ten or fifteen years ago with one political party ruling at the Centre and the same political party ruling in all the States. In that situation it was possible for the officers of the State Governments and the Central Government to discuss and come to agreed conclusions. The brawls and political rivalries between the States themselves were ironed out in the Congress Working Committee. But today the political complexion has completely changed. So I demand on the floor of this House that the Government should give a clearcut white paper indicating these are things we want, out of the income from the Central Excise, we want so much, out of the income from Income-tax we want so much by way of devolution to the States, these are the taxes from the proceeds of which we want a larger share. If such a clearcut policy is evolved and adopted, there will be no necessity for the Dravida Munnetra Kazhagam Government to go to the Congress Government with a begging bowl. We have elected the Dravida Munnetra Kazhagam to run the Government in this State. We find a different political situation in Kerala. We find a different political situation in Orissa where the Party to which I belong is ruling the State. What we see in West Bengal is quite a different situation. Our Chief Minister can give a lead to the non-Congress Governments by following a new policy. The Chief Ministers of the non-Congress Governments must sit together and decide : these are the responsibilities which the State Governments have to bear, these are the taxes from which more resources should be given to the States. We must be very clear and there is no point in being vague. These must be settled once for all and we need not take up the time of the House by talking about them.

I come to the next point. The most important problem that is facing our Government is the food problem. I know that the Food Demand is coming up before the House. However, I will mention briefly as the most important problem which the State has to face is the food problem. In solving the problem we are going off at a tangent and not tackling it in the proper way. We have one district which feeds nearly half the State and that is the Thanjavur District. If the agrarian unrest in the Thanjavur District is not properly, independently and compassionately tackled, the situation will become explosive.

1969 மார்ச் 6] [Dr. H. V. Hande]

Now, what is staring us in our face is the extraordinary famine conditions prevailing in almost all the districts. How we are going to meet this situation is the real point to be considered now. The Government have also accepted the fact that there is famine. But what is the solution that they suggest. We have to feed 3½ crores of people. How can we do it? We can do it by properly solving the agrarian unrest. Recently we have had the ghastly tragedy which took place in Kilvenmani. Why should it have happened? It should have been prevented in a proper way. My entire analysis of the situation is different. Let us forget our party interests. There has been a break-down of law and order in the State. First there was the police firing at Poonthazhankudi. We have given premium to the disorderly behaviour of the people and we have also created an impression among the people that possession is nine points of law and whatever they do they can get away with it. Then we witnessed the ghastly tragedy of one gentleman, Thiru Pakkiriswami, being beaten and murdered. Of course, it may be argued that compared to other States our State is far better. But now are we going to solve this problem especially after the recent ghastly tragedy which took place in Kilvenmani. That incident has completely ruined the relationship between the tiller of the soil, the farm labour and the landowner. Now I want the D.M.K. Government to carefully watch the situation. They will be sadly mistaken if they think that a large body of landowners are preventing (1) food production and (2) standing in the way of the proper distribution of foodgrains. As pointed out yesterday by the Hon. Minister for Finance, we have in our State 60 to 65 lakhs of pattaholders who have less than 5 acres of land. I ask, what is the succour or the help that the Government have given to these landholders. We do not even exempt them from Procurement. The octopus of procurement has spread its multi-heads and multi-hands over those landowners owing less than five acres. Their procurement policy has affected them. Let the Government point out one single help or succour that they have given to these 65 lakhs of landholders. Whenever some people say that there should be procurement and rationing and all those things, they only point out these landholders, and I do not hold brief for them. As clearly stated by the Hon. Minister for Finance, they are the main producers but we have completely harmed them. We have completely destroyed their incentive by bringing forward tenancy laws and there is no freedom of action for them. In this connection, I want to ask, are we going to derive satisfaction from the fact that by having rationing, we are going to help the people in the cities? No. I have got a number of pictures showing the muddle in the distribution of ration cards. This Government cannot do anything to prevent such a situation. Unless the present set-up or the method is changed, we cannot retrieve the situation. The same bureacracy which ruined the Congress Government is going to guide and advise you and also ruin this Government. But I would suggest that they should forget this bureaucracy and take the advice of M.L.As. belonging to the

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 6

D.M.K. Party, Swatantra Party and the Congress Party? Now-about Rs. 8½ crores are given towards food subsidy. Are the majority of the people really depending upon the one-rupee-a-measure rice? No, they are not depending on it. They are supplementing the quantity of rice distributed in the ration shops by buying it at a costly price. The quantum of rice supplied in the ration shops is not sufficient for the poor man or the worker of the person who works for eight hours a day and who lives three or four miles away from the work-spot. He has to pay a higher price for the extra white rice in the black market. That is the anomalous position in which he is placed now. It might be stated that check-posts in the districts would be strengthened to prevent malpractices. But it will not be possible to prevent those malpractices and we have to wink at them, as otherwise the people in the Madras City, Coimbatore and other places would have to remain half-starved. So, what is the solution? Unless the Government give more incentives to the agriculturists and freedom to dispose of their produce, the present state of affairs would continue. In this connection, I want to recall to this House what I had stated in 1965 when I was an Independent Member in the other House. I told the then distinguished ex-Chief Minister, Thiru Bhaktavatsalam, that he was putting the cart before the horse and unless he solved the food problem, the results would be different in 1967. The expected results had happened in 1967. The ex-Chief Minister, Thiru Bhaktavatsalam, for whom, I have great respect, has now come out with a statement that the rationing must be abolished. Now that he got himself extricated from the clutches of the bureaucracy, he has realised the mistake committed by his Government when he was the Chief Minister. I do not want this Ministry also to commit the same mistake committed by the previous Congress Ministry. So, I warn this Ministry that if they do not solve this problem to the satisfaction of the people, they would also share the same fate. Now what are we witnessing? The hungry people are languishing and standing in the queue for hours together before the ration shops. So, I suggest that this Ministry should review their entire procurement policy and give succour and help to those people. Also, they should see that full incentives are given to the producers. The agrarian unrest also must be completely settled by fixing fair wages for farm labourers. Let a bipartite conference be arranged between the landowners and the farm labour and an agreement arrived at with regard to the guantum of farm wages. Unless the Government of Tamil Nadu give clear-cut instructions in this regard and effect smooth relationship between the landowners and the farm labour, the agrarian unrest in the Thanjavur district alone would topple this Government. So, I request the Government to consider all the aspects of the matter.

1969 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும். பிற பகல் 1–37

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

ஏதும் இல்லை.

இணைப்பு

[427-ம் பக்கத்தில் 187-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) மாவட்ட வாரியாகத் தமிழ்நாட்டில் விவசாய வருமான வரி மூலம் 1966–67, 1967–68 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு.—

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	1966–67-ம் ஆண்டு. (3)		1967–68-ம் ஆண்டு. (4)	
		ரூ.	காசு.	ரூ.	காசு.
1	திருநெல்வேலி	1,89,601	36	1,20,694	60
2	இராமநாதபுரம்	1,33,460	00	83,764	24
3	கன்னியாகுமரி	13,11,952	86	30,02,234	66
4	மதுரை	5,10,198	42	6,87,325	71
5	சேலம்	6,78,224	42	6,01,242	32
6	தர்மபுரி	87,423	04	64,649	92
7	திருச்சிராப்பள்ளி ..	2,91 312	97	2,77,216	69
8	செங்கற்பட்டு	1,22,302	38	1,73,890	78
9	வட ஆற்காடு	1,23,727	33	85,130	85
10	தென் ஆற்காடு	2,17,013	86	2,29,126	15
11	சென்னை	88,162	17	64,554	57
12	தஞ்சாவூர் .. .	9,61,405	48	12,10,171	04
13	கோயம்புத்தூர்	46,25,072	56	40,61,319	45
14	நீலகிரி	59,92,750	29	59,33,605	08
	மொத்தம் ..	1,53,32,607	14	1,65,95,016	06

(இ) நிலவரி வசூல் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பாக்கிதாரர்கள் அனைவரின் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(a) Districtwise income of Agricultural income-tax for the years 1966-67 and 1967-68:—

Serial Number and Name of the District. (1)		For the year 1966-67. (2) Rs.	P.	For the year 1967-68. (3) Rs.	P.
1	Tirunelveli	1,89,601	36	1,20,694	60
2	Ramanathapuram ..	1,33,460	00	83,764	24
3	Kanyakumari	13,11,952	86	30,02,234	66
4	Madurai	5,10,198	42	6,87,325	71
5	Salem	6,78,224	42	6,01,242	32
6	Dharmapuri	87,423	04	64,649	92
7	Tiruchirappalli	2,91,312	97	2,77,216	47
8	Chingleput ..	1,22,302	38	1,73,980	78
9	North Arcot ..	1,23,727	33	85,130	85
10	South Arcot	2,17,013	86	2,29,126	15
11	Madras	88,162	17	64,554	57
12	Thanjavur..	9,61,405	48	12,10,171	04
13	Coimbatore	46,25,072	56	40,61,319	45
14	The Nilgiris	5,92,750	29	59,33,605	08
	Total ..	1,53,32,607	14	1,65,95,016	06

(b) Action has been taken by the Revenue Department under Revenue Recovery Act to collect the arrears is respect of all cases of arrears.

தமிழ்நாடு சட்டப்பேரவை

வெள்ளிக்கிழமை 1969 மார்ச் 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

1. வினாக்கள்—விடைகள்

* வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206 முதல் 215 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Raja Sarfoji College, Thanjavur.

* 216 *Q.*—DR. H. V. HANDE : and THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the date on which the Raja Sarfoji College, Thanjavur, was taken over by this Government;

(b) whether any representation has been made by the teaching and non-teaching staff of the college to absorb them in Government service; and

(c) if so, the action taken by this Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1—7—1965.

(இ) ஆம்.

(உ) பணியாளர்களை அரசுப் பணியில் இணைத்துக்கொள்வதுபற்றிய கோட்பாடுகளை வகுத்து அரசு இப்போது ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ் நாடகக் கலை வளர்ச்சி

* 217 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கென மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஒரு தனித் துறை ஏற்படுத்துவதற்குரிய செயற்குறிப்பு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கு மதுரை நகரம் சிறப்புப் பெற்றது. தற்போது அங்கே பல்கலைக்கழகம் இருக்கிற காரணத்தால் பல்வேறு நாடகத் துறை வல்லுநர்கள் இந்தப் பல்கலை கழகத்தில் இத்தகைய துறை இருந்தால் மேலும் நாடகத் துறை வளரும் என்ற நம்பிக்கையோடிருக்கிறார்கள். எனவே, அரசு இந்தத் துறையை இங்கு வைப்பதற்குப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடகத் துறையின் வளர்ச்சிக்குத் தனியாக அமைப்புகள் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தைப் பொறுப்பு ஏற்று நடத்துகிற சிண்டிகேட் இதைப்பற்றி முயற்சி எடுக்கவேண்டும். அப்படி அவர்கள் முயற்சி எடுத்தால் அரசு அதற்கு உதவி செய்யும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : மதுரையைச் சங்கம் வளர்த்த மதுரை என்று சொல்லுவார்கள். இப்பொழுது நாடகக் கலை முறையாகப் பயிற்றுவிக்கப்படுவதில்லை. முத்தமிழில் ஒன்றாக இருக்கிற நாடகத்தமிழை மதுரையம்பதியிலுள்ள பல்கலைககழகத்தில் ஒரு பிரிவாக ஏற்படுத்தி, முறையாகக் கற்றுக்கொடுத்து நாடகக் கலையை வளர்க்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முத்தமிழை வளர்க்கவேண்டுமென்று சங்கம் வளர்த்த மதுரையிலே பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அவர்கள் இந்த நாடகத்துறையைப்பற்றி என்ன முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. நாடகம் போன்ற கலைகளை வளர்ப்பதற்கு அந்தத் துறையிலே ஈடுபட்டவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் பல்கலைக்கழகத்தில் அப்படிப்பட்ட ஒரு பிரிவை வைக்கவேண்டுமானால் அதற்கு அந்தப் பல்கலைக்கழகம்தான் முயற்சி எடுக்கவேண்டும். பல்கலைக் கழகம் அப்படிப்பட்ட முயற்சி எடுக்குமானால் அரசு நிச்சயமாக உதவி செய்யும். மதுரைப் பல்கலைக் கழகம் அப்படிப்பட்ட முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, விஞ்ஞானத் துறையிலே வளர்ந்துவிட்ட படத்துறையோடு போட்டியிட முடியாமல் நாடகத் துறை நசிந்துவருகிறது. அதனால் ஆயிரக்கணக்கான நாடக நடிகர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நாடகத் தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடகத் தொழிலை வளர்ப்பதற்கு நாடகத்தந்தை அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். திரைப்படத் தொழிலோடு நாடகத் துறையும் வளரக்கூடிய முறையில் ஒரு திரைப்படத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை நாடகத் துறைக்குத் தந்தால் அது வளர்ச்சி பெறும் என்று தெரிவித்தார்கள். அந்த விழாவிலே பங்குகொண்டு கடைசியாகப் பேசிய திரைப்படத் துறையிலே உள்ள ஒருவர் பொருள் உதவி செய்ய முன்வருவதாகத் தெரிவித்தார்கள். திரைப்பட தொழிலிலே உள்ளவர்கள் அப்படிப்பட்ட உதவியை செய்தால் அரசு உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்யும் என்று ஏற்கனவே இருந்த முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாடகத் துறை தனித் துறையாக வேறு பல்கலைக் கழகங்களில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய பல்கலைக்கழகங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. வேறு பல்கலைக்கழகங்களிலே இந்தத் துறை இருப்பதுபற்றி எனக்குத் தெரியாது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Madurai was the capital of the Telugu Naik Kings and they ruled that area for about 200 years. They encouraged both Telugu and Tamil languages and also Arts.. Keeping this in view, may I know whether the Hon. Minister for Education will be pleased to provide facilities for teaching of Telugu in the Madurai University?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தெலுங்கு மொழியைத் தமிழ்நாடு எப்போதுமே போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறது. பல்கலைக்கழகத்தில் அதற்காக சிறுபான்மையினர் முன்வந்தால் அரசாங்கம் அவர்களுக்கு முன் உதவி செய்யக் காத்திருக்கிறது. ஏற்கனவே அவர்களுக்கு உதவியளித்திருக்கிறது. ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்தில் அதற்காக மாணவர்கள் முன்வருவார்களானால், அதைப் பல்கலைக்கழகம் பரிசீலிக்கும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : நாடகத்துறையிலே பழம்பெரும் அனுபவம் பெற்ற நாடகத் துறை வல்லுநர்களை அழைத்து கலந்து பேசி எல்லாக் கல்லூரிகளிலும் அதற்காக ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்பு கூறியபடி நாடகத் துறையை ஊக்குவிக்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்கிறது. ஆனால் பல்கலைக் கழகத்திலே அப்படிப்பட்ட துறை ஏற்படுத்தவேண்டுமானால் அதை அவர்கள் தான் செய்யவேண்டும். அவர்கள் செய்வதற்கு முயற்சி எடுப்பார்களானால் அரசு உதவி செய்யும்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : சிறந்த திரைப்படங்களுக்கு ஆண்டு தோறும் பரிசு அளிப்பது போன்று சிறந்த நாடகங்களுக்கும் அரசாங்கம் பரிசு அளிக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரைப்பட அமைச்சருக்கு இந்தக் கேள்வியைப் போட்டால் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பழம் பெரும் கலையான பொம்மலாட்டம் நசிந்துபோய் இருப்பதால் அதை முன்னுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டிலுள்ள புராதனக் கலைகளைப் போற்றி வளர்க்கவேண்டுமென்ற கருத்தை நான் ஆதரிக்கிறேன். வெளிநாட்டுக் கலைஞர்கள்கூட நம்முடைய கலைகளை நடித்துக் காட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். கரக விளையாட்டை வெளிநாட்டுக் கலைஞர்கள் கண்டுகளித்திருக்கிறார்கள், போற்றியிருக்கிறார்கள் செக்கோஸ்லொவேக்கியா நாட்டுக் கலைஞர் கரகத்தை வாங்கித் தன் தலையிலே வைத்து ஆடியதை நான் பார்த்தேன். புராதனக் கலைகளை வளர்ப்பதிலே அரசாங்கம் எந்த அளவிற்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு உதவி செய்யும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சி தடைப்படும் அளவிற்கு ஒரு சில நடைமுறைகள் ஏற்பட்டிருப்பதைப்பற்றி அரசுக்கு செய்தி வந்திருக்கிறதா ? அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு பல்கலைக்கழகம் தமிழைப் புறக்கணிக்கக்கூடிய ஒரு துர்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடாது என்று நம்புகிறேன்.

Physical Education

* 218 *Q*.—THIRU K.. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether adequate facilities are available for imparting physical education in schools and colleges;

(*b*) whether attendance at physical exercise classes has been made compulsory in high schools; and

(*c*) whether physical exercise classes are held regularly in colleges?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல குக்கிராமங்களில் உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அந்தப் பள்ளிகளில் விளையாடுவதற்குப் போதுமான இடம் கிடையாது. அப்படிப்பட்ட பள்ளிகளின் பட்டியலைத் தயார் செய்து அந்தப் பள்ளிகளுக் கெல்லாம் விளையாட்டு இடம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கு ஐந்து ஏக்கர் நிலம் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி நிலம் இல்லாவிட்டால் புறம்போக்கு நிலங்களைத் தர முன்வந்தால் எடுத்துக்கொள்கிறோம். அல்லது லாண்ட் அக்விசிஷன் சட்டத்தின் கீழ் நிலம் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எந்தப் பள்ளிக்கு இடம் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் தகவல் அனுப்பினால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. வ. ஜார்ஜ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு சுமார் ஒரு ஏக்கர் நிலத்திற்குக் குறைவாகத்தான் இருக்கிறது. விளையாட்டுக்கு இடம் கிடையாது. பிஸிகல் டிரெயினிங் டீச்சர்கள் கிடையாது, ஆசிரியர்கள் இல்லாமல் சில இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே விளையாட்டிற்குத் தேவையான இடங்களை ஆர்ஜிதம் செய்வதற்கும், பிஸிகல் டிரெயினிங் ஆசிரியர்கள் இல்லாமல் காலியாக இருக்கும் இடங்களுக்கு பிஸிகல் டிரெயினிங் ஆசிரியர்களை நியமிப்பதற்கும் அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்னியாகுமரி மாவட்டத்திலே பள்ளிகளுக்கு நிலப்பஞ்சம் இருப்பதைக் குறித்து எழுதினால் அதைப் பரிசீலித்து தேவையான இடம் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்,

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போதே ஐந்து ஏக்கரா நிலம் விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஆரம்பிக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான பள்ளிகளில் போதுமான விளையாட்டு மைதானம் இருப்பதில்லை. மாலை நேரத்தில் 'அவுட்–ஆஃப்–பீரியட்' என்று வரும்போது பள்ளிகளிலுள்ள எல்லா மாணவர்களும் விளையாடப் போகும்போது, விளையாட்டு மைதானம் போதுமான பரப்பளவு இல்லாததால் மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இம்மாதிரி பள்ளிகளில் உடனடியாக ஐந்து ஏக்கரா நிலம் விளையாட்டு மைதானத்திற்கென பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில ஊர்களில் நிலம் கிடைப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம், மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் இதிலே உற்சாகம் காட்டுவதால் இதற்குரிய நிலங்களைப் பெற்று பள்ளிக்கூடத்திற்குக் கொடுக்க முயற்சி எடுக்கவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்ற இருபதாண்டுக் காலமாகவே, உடற்பயிற்சி கற்பிப்பதில் நிலைமை மிகவும் சீர்கெட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதுவும் தனியார்த் துறை உயர்தரப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில், 75 சதவிகிதம் பாடசாலைகளிலும் விளையாட்டு மைதானங்களே கிடையாது, ரொம்பவும் சீர்கெட்டிருக்கிறது, மேலும், பெண்களுக்கு உடற்பயிற்சி என்பதே கிடையாது, அதன் காரணமாகத்தான் பிறக்கின்ற குழந்தைகள் பலஹீனப்பட்டு இருக்கின்றன என்பது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் விளக்கமாகப் பேசவேண்டாம். கேள்வியாகக் கேட்கவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியா மிகவும் பின்தங்கிய முறையில் இருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. இவ்வளவையும் உத்தேசித்து, உடற்பயிற்சிக்கான வசதிகளை மேலும் நல்ல முறையில் அமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தக் காரணத்தினால் குழந்தைகள் கனம் உறுப்பினர் சொல்வதைப் போன்று பிறக்கின்றன என்பதை குறித்து எனக்கு அதிகம் தெரியாது. நம்முடைய தமிழ் நாட்டை பொறுத்தவரையில். விளையாட்டுப் போட்டிகளில் நம்முடைய மாணவர்களுக்கு உற்சாகம் அதிகமாகவே இருந்து வருகிறது என்றுதான் நான் நினைக்கிறேன். நேற்று முன்தினம்கூட ஒரு கல்லூரிக்கு நான் சென்றிருந்தேன். அங்கே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு திறந்த வெளி விளையாட்டு அரங்கை மிகச் சிறப்பாக அமைத்து ஏராளமான மாணவர்கள் உற்சாகமாக விளையாடியதையும், பரிசுகளைப் பெற்றதையும் நான் பார்த்தேன். தமிழ்நாட்டு மாணவச் சமுதாயம் கனம் உறுப்பினர் அவர்கள் கருதுவதைப் போல், பின்வாங்கிவிடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்தில் பல உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் அதிகமாக இருந்தும். பெண்களுக்காகத் தனியாக உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படாததால் பெண்கள் உடற்பயிற்சி பெற முடிவதில்லை. ஆகவே, நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் உள்ள பள்ளிகளில் தனியாக ஒரு உடற்பயிற்சி ஆசிரியையை நியமிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படுகின்றனர். இருவருஞ்சேர்ந்து படிக்கின்ற பள்ளிகளில், எங்கெங்கு அதிகமாகப் பெண்கள் இருந்து, அவர்களுக்கு உடற்பயிற்சி ஆசிரியைகள் தேவைப்படுகிறார்களோ அப்போதைக்கப்போது அது பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் ஏதுவாக உடல் பயிற்சி அளிப்பதோடு யோகாசனப் பயிற்சி அளிப்பது பற்றியும் அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யோகாசனப் பயிற்சியில் நம்பிக்கை உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அதைக் கொஞ்சம் அதிகமாகச் செய்துவிட்டால் வேறு ஆபத்து வந்துவிடும் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அங்கேயுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள், எது எதிலே தங்களுக்குப் பயிற்சி கொடுக்க வாய்ப்பு இருக்கிறதோ அதையெல்லாம் கொடுத்து வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that when myself and the Minister were students in the college, regular classes for physical drill were conducted, that now-a-days they have been given up and the students are allowed to take part only in games like cricket, football, etc., and that there are no regular drill classes for the students? Will the Government think of the possibility of introducing drill classes again?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் படிக்கும்போதும் சரி, இப்போதும் சரி, மாணவர்களுக்கு டிரில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஏராளமான விளையாட்டுக்கள் பெருகி, மாணவர்கள் விளையாட்டிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். விளையாட்டு வசதிகளும் அதிகமாகப் பெருகி வருகின்றன.

நிலகிரி மாவட்டத்தில் சிறு தொழிற்சாலை.

* 219 வினா. **திரு. கே. போஜன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனின் கீழ் ஒரு சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், என்ன தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் கார்ப்பரேஷன், ஏனைய மாவட்டங்களில் தொழிற்சாலைகளை அமைத்து அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. அதுபோல, நீலகிரி மாவட்டத்திலும், அங்குள்ள இயற்கை அமைப்புக்கிணங்க, ஒரு சிறு கைத்தொழிற்சாலையை ஏற்படுத்தினால், அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டம் தீரும்; ஆகவே, அங்கு சிறுதொழில் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தின் முன்னேற்றத்தில் கனம் உறுப்பினர் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். அரசாங்கம் அந்த மாவட்டத்தின் நலனில் எந்த அக்கறை கொள்ளவேண்டுமோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டு, செய்து வரும். தொழில் கார்ப்பரேஷன் மூலமாக அவர்கள் தொழில் ஆரம்பிப்பதாக இருந்தாலும் சரி, சிறு தொழில் நடத்துவதற்கு அங்குள்ள மக்கள் முன்வந்தாலும் சரி, அரசாங்கம் பரிசீலிக்கத் தயாராய் இருக்கிறது. ஏதோ குறிப்பிட்ட சில தொழில்களை அங்கே நடத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கனம் உறுப்பினர் கருதினால், அதைப் பரிசீலித்துச் சொன்னால், அதைச் செய்வதற்கு அரசு முன்வரும். கனம் உறுப்பினர் அத்தகைய யோசனையைத் தெரிவித்தால், அதையும் இந்தக் கார்பரேஷனுக்கு அனுப்பிப் பரிசீலிக்கச் செய்கிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் தொழில் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு ஆதரவு தருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையில், வலிவற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற வேண்டுமென்பதற்காகப் பல திட்டங்கள் இருக்கின்றன. அதற்கும் கனம் உறுப்பினர் அவர்களும் அங்குள்ள மக்களும் முன்வந்தால், எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கப்படலாம் என்பதைப் பரிசீலித்துச் சொன்னால் அதற்குப் பண உதவியோ, வேறு எந்த உதவியோ, கச்சாப் பொருளோ (ரா மெட்டீரியல்ஸ்) தேவைப்பட்டால், அவற்றைத் தர அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. சி. நஞ்சன் : நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் பகுதியில் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், தேயிலைத் தோட்டத்தில் குறிப்பிட்ட நபர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. குடும்பத்தில் நான்கைந்து பேர்களுக்கு வேலையில்லாமல், அதிக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்ற காரணத்தையொட்டி, கூடலூர் பகுதியில் ஏதாவதொரு தொழிலை ஆரம்பிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூடலூர் பகுதியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மதுராந்தகம் வட்டத்திலுள்ள ஓங்கூர் அணைக்கட்டு.

*220 வினா. **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் ஓங்கூர் அணைக்கட்டுக் கட்ட ஒதுக்கப்பட்ட ரூபாய் எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை (1968) எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அணைக்கட்டு வேலையும் அதன் மூலமாக ஏரிகளுக்கு செல்லும் Supply Channel வேலையும் முடிந்து விட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஓங்கூர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றை ரூபாய் 1,80,300 செலவில் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

(இ) இத்திட்டத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ. 2,50,463 ஆகும்.

(உ) இப்பணி முடிவடைந்துவிட்டது.

THIRU K. VINAYAKAM : Sir, how many acres of land will be cultivated from the water stored by this dam?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I do not have particulars about the extent of the acres to be cultivated.

கற்பகா நதித் திட்டம்.

*221 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் "கற்பகா நதித் திட்டம்" எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தில் கற்பகா நதி என்ற பெயருள்ள ஆறு எதுவுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் கறுப்பாநதி திட்டத்தையே குறிப்பிடுகிறார் என்று கொள்ளப்படுகிறது.

கறுப்பா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்பா நதித் திட்டத்தின் மொத்த மதிப்பு என்ன ? இது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ? இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கரா பயன்படும் ? அது எந்த எந்த இடங்களுக்குப் பயன்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 140 லட்சம். தற்போதுள்ள பகுதியில் 796 ஏக்கருக்குப் பாசன வசதி நிலைப்படும். பாசன வசதி ஏற்கனவே அளிக்கப்படாத பகுதியில், சேர்க்கப்படக்கூடிய ஆயக்கட்டு 1 647 ஏக்கர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ள திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இத்திட்டம்பற்றிய செயற்குறிப்புகள் மத்திய நீர் மின்சாரக் கழகத்திற்கும் திட்டக் குழுவிற்கும் ஒப்புதல் அளிக்க அனுப்பப்பட்டுள்ளது.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் வேறு எந்த அணைக்கட்டுகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக அரசு நிச்சயித்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது ஒரு மிக விரிந்த கேள்வி. தனியாகக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

துடியலூர்-சர்க்கார் சாமக்குளம் சாலை.

*222 வினா. **திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி துடியலூரிலிருந்து சர்க்கார் ,சாமக்குளம் வருகிற வழியில் இதுவரை, வையம்பாளையம் கோட்டை ஆகிய இந்த மூன்று ஊர்களுக்குப் போகும் வழியில் உள்ள பள்ளங்களில் குறுக்கே பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால் எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இதுகுறித்துச் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : சார், அந்த வழித்தடங்கள் பஸ் போக்குவரத்துக்கு உட்பட்டிருப்பதால், மழை காலங்களில் பள்ளங்களில் தண்ணீர் வந்தால், இரண்டு, மூன்று மணிநேரம் வரையில் போக்கு வரத்துக்கள் நிறுத்தப்படுகின்றன. ஆகவே, இந்தப் பாலங்களைக் கட்ட முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கஷ்டங்களை நானும் உணர்கிறேன். அதையெல்லாம் மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, கழிந்த செப்டம்பர் மாதம் 3-ம் தேதி முதல் அமைச்சர் அவர்களால் அஸ்திவாரக் கல் போடப்பட்ட அம்பாசமுத்திரம் திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதால், விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த வேலையை தொடர்ந்து செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி கோவை மாவட்டம் பற்றியது. திருநெல்வேலி வெகு தூரததில் இருப்பதால் அது பற்றிய விவரம் இல்லை.

பஞ்சாயத்து ஒன்றிப்புகளிலுள்ள நியமனக்குழுக்கள்.

*223 வினா. **திருமதி வி. ப. பழனியம்மாள் :**
திரு. பி. வெங்கடசாமி : } மாண்புமிகுஉள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியனில் உள்ள Appointment Committee-ல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திருமதி வி. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பெரும்பாலான தொகுதிகளில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் இடையே உறவு முறை சரியாக இல்லை. ஆசிரியர்கள் நியமனத்தின்போது உள்ளூர் அரசியல் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்ற சிலர் பாதிக்கப் படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இனியாகிலும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் நியமிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958-ம் ஆண்டு ஊராட்சி சட்டத்தின் 53-வது பிரிவின்படி இதிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெற வழி இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் சட்ட மன்ற உறுப்பினருக்கும் உறவு முறையை அவர்களே தான் சரிசெய்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இந்தக் கேள்வி வந்து விரிவாகப் பதில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

Municipal Chairman, Kancheepuram

* 221. *Q.*—THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the attention of the Government has been drawn to the no-trust move against the Chairman of the Kancheepuram Municipality, in May 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பதவியில் இருக்கிறாரா அல்லது இல்லையா ? இல்லை என்றால், என்ன காரணம் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது பதவியில் இல்லை. வேண்டாம் என்று துறந்து விட்டார்.

திரு. கே. விநாயகம் : அந்த நகர மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது தெரியுமா ? தீர்மானம் கொண்டு வந்து போதிய அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வாராததால், கையெழுத்துப் போட்டிருந்தும் வாராததால், தீர்மானம் விவாதத்திற்கு வரவில்லையா ? இந்த இரண்டு தகவல்களும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தக் கேள்வியின் கருத்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா என்பது. நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படும்போது, உறுப்பினர்கள் நகராட்சிக் கூட்டத்திற்குச் செல்லவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

தஞ்சாவூர் மாவட்ட கிராம சேவக்குகள்.

*225 வினா. **திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட முதல் நிலை கிராம சேவக்குகளுக்கு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் பதவி உயர்வுக்கான Panel list தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1966-ம் ஆண்டு மாநில கிராம நலத்துறை இயக்குநருக்கு அனுப்பியும் இது நாள் வரை அதை அனுமதிக்காமலும், பதவி உயர்வு கொடுக்காமலும், இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மாதிரிப் பிரமோஷனில், "பிறர் பெயர் முன்னால் போயிருக்கிறது. என் பெயர் பின்னால் போய்விட்டது" என்கிற புகார்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? புகார் இல்லாமல், இன்ன வரிசைக்கிரமத்தில் பிரமோஷன் கொடுக்க வேண்டும் என்கிற விதிமுறைகள் ஏதாவது வகுக்கப் பட்டிருக்கிறதா ? அது பின்பற்றப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபோன்ற பதவி உயர்வுகளுக்கு பரிந்துரைகள் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப் படுகிறார். தகுதியை ஆராய்ந்து, பெயர்களை ஆய்வு செய்யும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் மேற்கொண்டிருக்கிறார். தேவையான சரியான குறிப்புகள் இல்லையென்றோ, வேலைத் திறமை குறைவாக இருப்பதாலோ, ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் ஏற்றிருக்கிறார். இறுதியாகத் தயார் செய்யப்பட்ட அந்த பட்டியலிலிருந்து பதவி உயர்வுகள் கொடுக்கப் படுகின்றன.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, எத்தனை பேர்களை பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருப்பது : 67 பேர்கள்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் கிராம நல ஊழியர்களுக்கு பழைய 1964–65 ஆண்டுகளில் உரிய காலத்தில் அவர்களுடைய "பேனல் லிஸ்டு" அனுப்பாமல், 66-ம் ஆண்டு ஏப்ரலில் அனுப்பியும், அப்போதைய அரசாங்கம் ஏறத்தாழ ஒன்பது மாதம் தாமதப்படுத்தி, 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதியில் அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளித்தும், அதன் பிறகு 1967-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் அப்படிப் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு போதிய இலாகா தேர்வுகளில் தகுதி இல்லாவிடின் பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தின் பிந்திய தீர்மானமாகிவிட்டதால், இடையில் இருக்கும் 12 நாட்களுக்கு விதிவிலக்கு அளித்து அவர்களுக்கு பதவி உயர்வை ஊர்ஜிதம் செய்ய சர்க்கார் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : விதிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கிராம நல ஊழியர்கள் எவ்வளவு பேர்களை சிபாரிசு செய்தார்கள். டி.ஆர்.டி. அவர்களின் பரிந்துரையின் பேரில் உயர்வு கொடுக்க அங்கீகாரம் எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தஞ்சை மாவட்டத்தில் 67 பேர்கள் அனுப்பப் பட்டனர். இறுதியாக பரிசீலனை செய்து, குற்றங்குறைகளைக் களைந்து அங்கீகாரம் கொடுக்கப்பட்டது 32 பேர்களுக்கு, அந்த வகையில் இறுதியான பட்டியல் தயார் செய்யப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பதவிகளை முருகேச முதலியார் ரிப்போர்ட்டின்படி, அதைப் பின்பற்றித் தான் செய்யப் படுகிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958 ஊராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள், விதிகள் படி பதவிகள் கொடுக்கப் படுகின்றன.

காபி, தேயிலை பயிரிடுவோருக்கு அரசு நிலம் குத்தகை.

*206. வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் காபி, டீ எஸ்டேட்கள் நடத்துபவர்கள் எத்தனை பேர்களுக்குச் சர்க்கார் நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

(இ) அதற்கான வாடகை என்ன ?

(உ) எந்த ஆண்டு முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (உ) வரை: சட்டப் பேரவை முன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையில் கண்டுள்ளபடி, காபி, டீ எஸ்டேட்டுகள் நடத்தக் கூடியவர்களுக்கு, குத்தகை ஏக்கருக்கு ரூ. 20 ஆண்டுக்கு என்றிருக்கிறது. அப்படியென்றால் மாதம் ரூ. 1·66 என்று ஆகிறது. அந்த அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படுகிறதே, அதே அடிப்படையில், சிறு விவசாயிகள், நிலம் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு, நிலம் வாடகைக்குக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்படிப்பட்ட வாடகை அடிப்படையே 1800-ம் வருஷத்திலிருந்து 1961 முடிய, பழைய சர்க்கார்கள், முன்னால் இருந்த சர்க்கார் என்று கூடச் சொல்ல முடியாது, அவர்கள்

* 578–581-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.

செய்த ஏற்பாடுகள். இதுவே இந்த அரசாங்கத்திற்கு உடன்பாடில்லை. எந்த எந்த அளவிற்கு ஒப்பந்தங்கள் இருக்கின்றனவோ, அதையெல்லாம் விரிவாக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வரும் மக்களுக்கு புனர் வாழ்வு அளிக்கவும், வேலைவாய்ப்புகள் கொடுக்கவும் உதவிசெய்ய முன்வந்துள்ள தோட்ட அதிபர்களுக்கு அரசாங்க பூமி குத்தகைக்கு கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் தோட்டங்களில் அகதிகளுக்கு புனர் நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதை உறுப்பினரே அறிவார்கள்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சபைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், ஏழாவதாக இருக்கும், பம்பாய்-பர்மா வர்த்தக கார்ப்பரேஷன் என்பதின் நிர்வாகிகள் யார் யார் என்பதை அறியலாமா ? எவ்வளவு ஆண்டுகளுக்கு இந்தக் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது ? புதிதாக எத்தனை ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது ?

மாண்மிபுகு திரு கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போட்டால்' தகவல்கள் கொடுக்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் புதிதாக கொள்கை என்ன என்பதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மு ப. 9–30

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், 'டேட் ஆஃப் கமென்ஸ்மென்ட் ஆஃ லீஸ் பிப்ரவரி 4, 1961' என்று போட்டிருக்கிறது. அதற்குப் பின்பு, 1961-லிருந்து 1968 வரை இதுவரைக்கும் வேறு எந்தவிதமான லீஸும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் அதைத் தெரிவிக்கவில்லை என்றால் புதிதாகக் கொடுக்கப்படவில்லை என்றுதான் பொருள்.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலில் ஒரு ஏகருக்கு ஆண்டு ஒன்றுக்குக் குத்தகையாக 20 ரூபாய் வசூலிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் பணப் பயிர் செய்கிறார்கள். இப்படிப்பட்ட நிலத்தை இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வரும் அகதிகளாகிய தமிழர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ? தனிப்பட்ட ஒரு கம்பெனிக்கு 8,373 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரே கம்பெனிக்கு இவ்வளவு அதிகமான ஏக்கர் நிலத்தை கொடுப்பதைவிட, இலங்கை, பர்மா தமிழர்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் நல்லதல்லவா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இவ்வளவு அதிகமான நிலத்தை தனிப்பட்ட இந்தக் கம்பெனிக்குக் கொடுப்பது புதிய அரசுக்கு உடன்பாடான கருத்து அல்ல. இந்த ஒப்பந்தம் எப்படி கையெழுத்தானது, எத்தனை ஆண்டுகளுக்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதெல்லாம் ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயம். புதிய அரசைப் பொறுத்தவரையில், நீலகிரிப் பகுதியில் இலங்கையிலிருந்து வருகிற தமிழர்களுக்குக் காபி, தேயிலைத் தோட்டங்கள் அமைப்பதற்கான முன்னோடி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் நீண்ட காலத்திற்கு குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினார். காலம் மாறுகிறது, அத்துடன் நம்முடைய கருத்துக்களும் மாறுகின்றன. விடுதலை பெற்ற பின்னர் நாம் பல புதிய சட்டங்களை இயற்றியிருக்கிறோம். அதேபோல ஒப்பந்தங்களை மாற்றியமைக்க புதிய சட்டத்தைக் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நோக்கத்திற்கும், அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. இது சட்ட சம்மதத்தைப் பொறுத்த விஷயமா என்பதுபற்றி ஆலோசிக்க வேண்டும்.

Re-organisation of taluks

*207 *Q.*—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any reorganisation of independent taluks and sub-taluks has been undertaken; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) அண்டு (இ):—1967–68-ம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் 4 புதிய வட்டங்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 புதிய வட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை துணை வட்டம் தனித்துச் செயல்படும் துணை வட்டமாகத் தரம் உயர்த்தப்பட்டது. தருமபுரி மாவட்டத்திலிருந்து தனித்துச் செயல்படும் துணை வட்டமாகப் பாலக்கோடு அமைக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், துறையூரில் தனிப் பொறுப்பில்லாத் துணைத் தாசில்தார் அலுவலகம் தனித்துச் செயல்படும் துணை வட்டமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை இலாகாவில் வட்டம், துணைவட்டம் என்று இருப்பதால் காரியங்கள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது, அதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை துணைவட்டங்களை மாற்றி புதிய வட்டங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, வட்டங்கள், துணைவட்டங்கள் என்பது வருவாய்த் துறை நிர்வாக அமைப்பிலே செயல்படும் அமைப்புகளாகும். எங்கெங்கு வருவாய் அதிகமாக இருக்கிறதோ அதையெல்லாம் பிரிப்பதற்கும், சுதந்திரமாக தாசில்தார் செயல்படுவதற்கும் வழிவகை செய்யப்படுகின்றன. பல மாதிரியான ரெவின்யூக்களையும், ·இனும் எஸ்டேட்டுகளையும் கொண்டு பார்க்கின்ற முறையில் எந்தெந்த வேலைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் 8 தாலூக்காக்கள்தான் முன்பு இருந்தன. இப்பொழுது நிர்வாக வசதியின்பொருட்டு உத்தமபாளையம், உசிலம்பட்டி, வேடசந்தூர் போன்ற மூன்று தாலூக்காக்களும், மதுரை தாலூக்கா என்று இருந்ததை மதுரை வடக்கு, மதுரை தெற்கு என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரி ஜமீன் இருந்தது. இன்றைக்கு மணப்பாறை என்ற வட்டமும், அரியலூர் வட்டமும் ஏற்பட்டிருக்கின்றன. முன்னாலே உடையார்பாளையம் தாலூகாவாகயிருந்த ஜெயங்கொண்டான் வட்டமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலே ஊத்தங்கரை தனித்துச் செயல்படுகிற துணைவட்டமாக செயல்படுகிறது. பாலக்கோடு தனி துணைவட்டமாக உயர்த்தப்பட்டு, சுதந்திரமான தாசில்தாரின் கீழ் செயல்படுகிற வட்டமாக இருக்கிறது. ஆகவே, அவ்வப்பொழுது தேவைகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்றவாறு இவை பிரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டம் என்னுடைய தொகுதி. இங்கு துணை வட்ட அலுவலகத்தை நமது நிதியமைச்சர் அவர்கள்தான் வந்து துவக்கி வைத்தார்கள். இதை வட்ட ஆட்சி அலுவலகமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். ஊத்தங்கரை ஒரு பெரிய தாலூகா. ஆகவே, அதை வட்ட ஆட்சி அலுவலகமாக மாற்றியமைக்க அரசாங்கம் தக்க உத்தரவுகளை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் கோரிக்கையில் நியாயம் இருக்குமானால் அரசாங்கம் அதைச் செய்வதற்குக் கொஞ்சமும் தயங்காது.

திரு. கா. வேழவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால், "பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, போதிய அளவிற்கு நிர்வாகத்தைச் சீரான முறையில் நடத்த வழிவகை செய்ய வேண்டும், பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான முயற்சி எடுக்கலாம்" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கான வடிவம் எப்பொழுது அமைக்கப்படும் ? மிகப் பெரிய துணைவட்டங்களாக இருப்பவை விரைவில் வட்டங்களாக அறிவிக்கப்பட்டு, நிர்வாகம் சீரான முறையில் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னது மாதிரி, இது எத்தனையோ மாதிரியான அடிப்படைகளைக் கொண்டது. நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்பதற்கு முழுக்க முழுக்க பல காரணங்கள் இருந்தாலும் கூட, அதை நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் செயல்படுத்த வேண்டும். புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஒரு மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அதனுடைய பூகோள அமைப்பு சரித்திரப் பூர்வமான காரணங்கள், அதனுடைய பிற்போக்குத் தன்மை, ஜனத்தொகை, போன்ற இத்தனை காரியங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மாவட்டங்களைப் பிரிப்பதற்கு இவ்வளவு காரியங்களையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொன்றும் முக்கியமானது. ஒரு மாவட்டம் புதிதாக வருகிறது என்றால், அதற்கு ஒரு கோடி ரூபாய் ஒன்றரை கோடி ரூபாய் வரையிலும் செலவாகிறது. நான் வருவாய்த் துறைக்கு மட்டும் பொறுப்பு அல்ல. நிதித் துறைப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கும்போது நிதியையும் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு நிலைகளையும் சமப்படுத்துகிற சூழ்நிலையில் முன்னேற்றத்தை அனுசரித்து, அவ்வப்பொழுது தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கோயில்பட்டி தாலூகாவில் உள்ள விளாத்திகுளம் பகுதியை சப்-தாலூகாவாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஒட்டப்பிடாரம் தாலூகா அமைக்கப்பட்டிருக்கிறது. ஒட்டப்பிடாரத்தைவிட அதிகமான பிர்க்காக்களை விளாத்திக்குளம் பெற்றிருக்கிறது. அதில் ஒரு ஆறு இருக்கிறது. பல பஞ்சாயத்து வட்டங்கள் இருக்கின்றன. டிரஷரி ஆபீஸ் இருக்கிறது. அதிகமான கிராமங்களைக் கொண்டது. ஆகவே, இதை ஒரு தனித் தாலுக்காவாக மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது நியாயமான கோரிக்கையாக இருக்குமானால் அதை ஆலோசிக்க அரசு தயங்காது.

நிலச் சட்டங்கள்

*208 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நில உச்ச வரம்பு சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகிய சட்டங்களைத் திருத்தம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம். அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டம் இப்பொழுது இருக்கக்கூடிய அளவில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றிருப்பதை குறைக்க வேண்டிய நிலை ஏற்படுமா ? சிறு நிலச்சுவான்தார்களுக்கு நியாயவாரச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இதையெல்லாம்பற்றி அரசாங்கம் காம்ப்ரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர இருக்கிறது. அப்போதுதான் இதைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும். நான் இதற்குச் சரியான பதிலை அளிக்க வேண்டுமென்றால், முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இது சம்பந்தமாக ஒரு பதிலை இந்த மன்றத்தில் சொன்னார்கள். அதையே சொல்வது உறுப்பினர் அவர்களுக்குப் பதிலாக அமையும் என்று கருதுகிறேன். இதை அதிகமாக்கப் போவதும், குறைக்கப் போவதும்பற்றி இப்பொழுது எதுவும் சொல்வதற்கில்லை.

'It would not be in the public interest to indicate before hand what the Government propose to do to revise the Land Ceiling law to be more effective.'

அதிகமாகப் போகிறதா அல்லது குறையப் போகிறதா என்பது குறித்து, பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து கூறுவது நல்லதல்ல.

திரு. கே. பி. எஸ். மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இருக்கின்ற சீலிங் ஆக்டில் பல ஏமாற்றுதல்களைச் செய்து அரசாங்கத்தை ஏமாற்றி வந்திருக்கிறார்கள். நடைமுறையில் இதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து ஆலோசனை சொல்ல சர்வ கட்சித் தலைவர்களையும் சேர்ந்த ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் கண்டிப்பாகச் செய்யும்.

THIRU K. VINAYAKAM : Whereas I entirely agree that the Hon. Minister should not divulge beforehand as to what he is going to do for amending this Act, may I know what are the defects which the Government have noticed in the actual working of these Acts and will the Government give an opportunity for members of the public as well as members of the legislature including leaders of parties in this House, to give out their view-points before the Act is amended? Will the Government elicit information from these people before amending the Act?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் என்ன குறைபாடுகளைக் கண்டார்கள் என்று கேட்டார். மொத்தமாகப் பல குறைபாடுகள் இருக்கின்றன. கடந்த பல வருஷங்களில் அந்தச் சட்டம் சரியாகச் செயல்படவில்லை. உதாரணமாக உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் மூலம் 65 ஆயிரம் ஏக்கரா கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்த அளவுகூட வரவில்லை. 24,572 ஏக்கராதான் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பிரகடனப்படுத்தப்பட்டது. அதிலேயும் 5,891 ஏக்கரா கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கப்பட்டு அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறது. 12,575 ஏக்கராக்களைத்தான் சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதிலேயும் நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்கப்படுகிறபோது 2,117 ஏக்கரா பல தாவாக்களினால் வழக்கு மன்றத்தில் இருக்கிறது. ஆக, இதுவரை 8,129 ஏக்கராதான் இந்தப் பதினைந்து வருஷங்களில் ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறோம். இதுவே பெரிய பலவீனம் என்பதுதான் பொருள்.

அதுமட்டும் அல்ல, தென்னந்தோப்புகள், மேய்ச்சல் தரை, காப்பித் தோட்டங்கள் என்று ஏராளமாக லாபம் வருகிற வர்த்தகப் பயிர் நிலங்களுக்கு விலக்கு அளித்துவிட்டோம். அதேமாதிரி நியாயவாரச் சட்டத்தின் கீழும் பல பலவீனங்கள், எல்லாவற்றையும் சேர்த்து ஒரு காம்ப்ரிஹென்சிவ்வில் 'கொண்டுவருவதற்கு முன்னோடியாகத்தான் ரெக்கார்டு ஆஃப் டெனன்ஸி ஆக்ட் கொண்டுவந்துள்ளோம்.

திரு. பெ. மலைச்சாமி : உச்சவரம்புச் சட்டத்தால் கிடைத்த இடங்களை அரசு குத்தகைக்கு விடுகிறதா ? ஆம் எனில் எந்த அடிப்படையில் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உச்ச வரம்புச் சட்டத்தால் கிடைத்த நிலங்களை அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள ஆதரைஸ்டு உத்தியோகஸ்தர்கள் அவை பிரித்துக்கொடுக்கப்படுகிற வரையில் தரிசாகக் கிடக்கக் கூடாது என்பதற்காக குத்தகைக்கு விடுகிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : நில உச்சவரம்புச் சட்டம் என்பது ஒருதலைப் பட்சமானது. என் இதைப்போலவே நகர்ப்புறங்களில் மற்றச் சொத்துக்களை வைத்திருப்பவர்களுக்கும் உச்சவரம்பு கொண்டுவரக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினர் சொல்கிற கருத்து மிகவும் புரட்சிகரமானது—சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ராஜாஜி இதை ஏற்றுக்கொள்ளுகிறாரா ? இதுதான் அவர்கள் மேற்கொண்டுள்ள கொள்கை என்றால் எல்லோருமே சுதந்திராக் கட்சியில் சேர்ந்துவிடலாம். ஆனால் அவர் கருத்து என்ன, நிலத்திற்கும் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரக்கூடாது என்பதா ? அது புரிந்தால்தான் அவரது கேள்விக்குப் பதில் சொல்லமுடியும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நில உச்சவரம்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் எல்லாம் கொண்டுவருவதைப் பாராட்டுகிறேன். இவர்களும் எந்த அடிப்படையில் கொண்டுவருவார்கள் என்பது தெரிந்த விஷயம். காங்கிரஸ்காரர்கள் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்போகிறோம், கொண்டுவரப்போகிறோம் என்று மிகுந்த விளம்பரப்படுத்தினார்கள், அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த அளவுக்கு விளம்பரம் செய்துகொண்டு போகாமல், உடனடியாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் சொல்வது ரொம்பத் தவறானது. அவர் இந்த மன்றத்தில் முன்பிருந்து இருந்து வருகிறார்கள். நல்ல அனுபவம் உடையவர். கட்சிப் பிரச்சாரத்திற்காக எங்களுக்கு இப்படிச் சொல்லவேண்டும் என்பது இல்லை. அவர்களுடைய கட்சிக்கு இருக்கிற அக்கறை எங்களுக்கும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சமீபத்தில் நடந்த சம்பவம் உச்ச வரம்புச் சட்டத்தை விரைவில் கொண்டுவந்தாகவேண்டும் என்பதையே நிரூபிக்கிறது. உச்ச வரம்பு எவ்வளவு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைக்கப் போகிறார்கள், எவ்வளவு நாளைக்குள் கொண்டுவரப்போகிறார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவை எல்லாம் பரிசீலனையில் இருக்கக்கூடிய விஷயம். ஏற்கனவே உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தபோது 50 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைக்கவேண்டுமென்று ஒருசிலரும், 15 ஏக்கருக்குமேல் வைக்கக்கூடாது என்று ஒருசிலரும் சொல்ல 30 ஏக்கர் என்று வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவைத்தான் நான் ஒரு சித்திரமாக இங்கே படம் பிடித்துக்காட்டினேன். இவை எல்லாம் மிக ஆழ்ந்து பரிசீலனை செய்யவேண்டியவையாகும்.

திரு. க. இராமமூர்த்தி : அரசாங்கம் புரட்சிகரமான காம்ப்ரஹென்சிவ்வில் கொண்டு வருகிற நேரத்தில் விவசாயிகளின் கூலி நிர்ணய விஷயமாகவும் கொண்டுவர உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதுள்ள ஃபேர் ரெண்ட் ஆக்ட் படி வேஜ் பற்றி நிர்ணயிக்கவும் தக்க வகை செய்யப்படும்.

Madhavaram Milk Project

* 209 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether more buffalo milk is being sold by the Madhavaram Milk Project to Madras City consumers from May 1968?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த மாதவரம் பாலில் போதுமான கொழுப்புச் சத்து இல்லை என்று கொழுப்புச் சத்து சேர்க்கப்படுகிறதா ? அது கலப்படச் சட்டத்தின்கீழ் சோதனை செய்யப்பட்டதா ? ஆம் எனில் கலப்படப் பரிசோதனை நிபுணரிடமிருந்து என்ன ரிப்போர்ட் வந்தது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தப் பாலில் எந்தவிதமான கொழுப்புச் சத்தும் சேர்க்கப்படவில்லை. இயற்கையாகப் பாலில் இருக்க வேண்டிய கொழுப்புதான் இருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையின்மூலம் சென்னை நகரத்திற்கு எவ்வளவு பால் விநியோகம் செய்யப்படுகிறது ? ஆறு மாத காலத்திற்குச் சென்னை நகரத்தில் பால் தாராளமாகக் கிடைக்கிறது. மற்ற ஆறு மாதங்களுக்குப் பால் கிடைப்பதில்லை. எனவே, எப்பொழுதும் தட்டுப்பாடு இல்லாமல் ஒரே சீராகக் கிடைக்கக்கூடிய முறையிலே அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால் தட்டுப்பாடு என்பது இல்லை. சென்னையிலிருந்தும் சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்தும் பால் வரவழைக்கப்படுகின்றது. எருமைப்பால் நிறைய இங்கு கிடைக்கிறது என்பது திரு. சித்தன் அவர்களுடைய கேள்வியில் அமைந்திருந்தது.

DR. H. V. HANDE: Sir, with regard to the Madhavaram Milk Colony, are we getting enough milk, has the large amount of loss which the Project was incurring during 1965-66 come down, has the administration been toned up, and what is the position about the Madhavarm Milk Colony now?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒரு சந்தோஷமான செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய வரவு செலவுத் திட்டத்தை அவர்கள் பார்ப்பார்களானல் ஒரு சிறிய லாபம், எப்படிப்பட்ட நிலையிலிருந்து லாபம் என்றல், வருஷம் 25 லட்சம் ரூபாய் நஷ்டம், அதற்குப் பிறகு 37 லட்சம் ரூபாய் நஷ்டம் என்றெல்லாம் இருந்துகொண்டு, கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் மூலதனத்திலே ஆரம்பிக்கப்பட்டு அதிலே பாதியைச் சாப்பிட்டு விட்ட பிறகு இருந்த நிலையிலிருந்து இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு........

DR. H.V. HANDE: I congratulate the Government.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் கன்கிராஜுலேட் பண்ணுவிட்டாலும் பரவாயில்லை, அதை ஒத்துக்கொண்டாலே போதும். பொதுத் துறை வேண்டாம் என்று சொல்கிருர்கள், அது தவருனது. இந்த ஆண்டு சிறிய லாபம் வந்திருக்கிறது (பாராட்டொலி) இன்னும் சில மாறுதல்கள் இதிலே செய்யப்படவேண்டும். முழுமையாகச் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது. இந்த நகரத்திற்கு 75 லட்சம் லிட்டர் பால் விநியோகம் இருந்தது இன்றைக்கு $1\frac{1}{2}$ கோடி லிட்டர் விநியோகம் ஆகின்ற அளவுக்கு, அதுவும் மலிவான விலையிலே—வெளியிலே 2 ரூபாய் $2\frac{1}{4}$ ரூபாய் என்று விற்கின்ற நேரத்திலே—1·04-க்குப் பசும்பாலும், 1·24—க்கு எருமைப் பாலும் $1\frac{1}{2}$ கோடி லிட்டர் மொத்தம் விநியோகிக்கக்கூடிய

நிலைமை இந்த நகரிலே இருக்கிறது என்பதை கடந்த ஆண்டிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இப்போது உள்ள நிலைமையெல்லாம் பால் கெட்டுவிடுகிறது, அதிகமாக இருப்பதை என்ன செய்வது என்பது தான். விலையும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. விலையைச் சமப்படுத்திய பெருமையும் இந்த அரசுக்கு இதிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : லாபமாக இருக்கிறது என்ற விஷயத்தை மந்திரி அவர்கள் சொன்னர்கள். என்ன என்ன நடவடிக்கைகள் மூலமாக லாபகரமாக இருந்தது என்று தெரிவிப்பார்களா ? $1\frac{1}{2}$ கோடி லிட்டர் என்று நான்கு தடவைகள் சொன்னர்கள், அந்த $1\frac{1}{2}$ கோடி லிட்டரை எப்படி விநியோகிக்க முடிந்தது என்பதை அறிக்கையின்மூலம் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது ரொம்பச் சாதாரணமானது. ஒரு நாளைக்கு 30 அல்லது 35 ஆயிரம் லிட்டர் என்று வைத்துக் கொண்டால் அதை 30-ஆல் பெருக்கினல் ஒரு மாதத்திற்கு கிடைக்கும் அதை 30×12 என்று பெருக்கினல் எவ்வளவு என்று கணக்கு வரும்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் மாதவரம் பால் பண்ணை தொடர்ந்து நஷ்டத்தில் இருந்துகொண்டு இருந்தது. இப்பொழுது கொஞ்சம் லாபம் கிடைக்கிறது என்ற சுவையான செய்தியை மகிழ்ச்சியான செய்தியை நிதியமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அந்த சுவையான செய்தியைத் தந்த நிதியமைச்சர் அவர்கள் சட்ட மன்ற அங்கத்தினர்கள் பெறக்கூடிய வகையில் உறுப்பினர்களுக்கும் பால் இலவசமாகக் கொடுப்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது உணவுத் துறை அமைச்சர் அவர்கள் முடிவு செய்யவேண்டிய விஷயம்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பால் மக்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் பண்ணை இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் இலவசமாகச் சாப்பிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, சென்னைக்கு 75 லட்சம் லிட்டர் பால்தான் விநியோகிக்கப்பட்டது என்று சொன்னர்கள். இப்பொழுது $1\frac{1}{2}$ கோடி லிட்டர் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னர்கள். நல்ல முன்னேற்றம்தான் என்றலும்கூட மற்ற இடங்களிலிருந்து எவ்வளவு பால் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிரம்ப வந்துகொண்டு இருக்கிறது. அதிலே தவறு ஒன்றும் இல்லை. பால்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மதுரையிலேயிருந்து புகார் வந்தது, மதுரைக்குக் கிடைக்காமல் எடுத்துக் கொண்டு போய்விடுகிருர்களே என்று சொல்கிருர்கள். பால் அதிக நேரம் வைத்திருக்கப்படமுடியாது. கனம் உறுப்பினர் அவர்களுக்கே கூடத் தெரியும் கும்பகோணத்திலே மாமாங்க சமயத்திலே 10, 15 லட்சம் மக்கள் வந்த நேரத்திலே பால் விநியோகம் எவ்வளவு சௌகரியமாக இருந்தது என்பதை அவர்கள் அறிவார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே இப்பொழுது மாதவரம் பால்பண்ணை லாபகரமாக இருக்கிறது என்று சொன்னர்கள். இந்த அரசாங்கம் ஏழைகளுக்காக மலிவான விலையில் பால் கொடுத்தும் லாபம் வருகிறது. இந்தத் திட்டத்தை மக்கள் பாராட்டுகிருர்கள். இன்னும் இது முன்னேற்றம் அடைகின்ற நிலைமையிலே இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்

காலத்தில் சிந்திப்போன பால் என்று கணக்கு எழுதி வைத்திருந்தார்கள். அப்படி இப்பொழுதும் பால் சிந்திப் போகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பால் சிந்தத்தான் சிந்தும். சிந்தாமல் பால் கறக்கமுடியாது, விநியோகம் செய்யமுடியாது. அப்பொழுது இருந்த சீர்கேடான நிலைமையை அரசாங்கம் கவனித்து சீர்படுத்துகிறது. நல்ல பலனும் அடைந்துவருகிறது. பப்ளிக் செக்டாரே வேண்டாமென்று சொல்லமுடியாது, அவர்களும் நல்ல முறையில் நடத்தலாம் என்பதற்கு ஒரு நல்ல சான்று இது.

முதுமலை வனவிலங்கு சரணாலயம்.

*** 210 வினா—திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

முதுமலை வனவிலங்கு சரணாலயப் பகுதியில் உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்காகப் புதிதாக தங்கும் விடுதிகளும் விலங்குகளைப் பார்ப்பதற்காக வாகனங்களும் அமர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967 ஆகஸ்டுத் திங்களில் ரூபாய் 50,000 செலவில் முதுமலை வனவிலங்குகள் உய்விடத்திற்கு வரும் பார்வையாளர்களுக்கு இரவில் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டுவதற்காக அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இவ்வேலை நடைபெற்று வருகிறது. இந்தக் கட்டடத்தில் மொத்தம் 8 பேர் தங்கும் வசதியுடன் 4 அறைகள் இருக்கும். இந்த உய்விடத்திற்கு வரும் பார்வையாளர்களுக்காக ஜீப் வண்டி ஒன்றும், மோட்டார் வண்டி ஒன்றும், லாரி ஒன்றும் எற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு வண்டிகள் வாங்குவதற்கான செயற்குறிப்கள் எதுவுமில்லை.

கோவையில் கேந்திரக் கிராம விஸ்தரிப்பு நிலையங்கள்.

*** 211 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் எத்தனை கேந்திரக் கிராம விஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளன

(இ) அவை எந்தெந்த ஊர்களில் உள்ளன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) கோயம்புத்தூரில் மையக் கிராம வளர்ச்சி நிலையம் எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாகிலும் அப்படி விஸ்தரிப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கால்நடைத் திட்டத்தை ஊக்குவிக்கின்ற முறையே ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு நிதி உதவி அதற்காகச் செய்தது. ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்ட காரணத்தாலே அதை மேற்கொண்டு நடத்தமுடியாது. மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியும் கிடையாது.

Institute of Agricultural Economics

*** 212 Q.—Thiru B. VENKATASWAMY :** Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any institute like " Institute of Agriculral Economics " in our State; and

(*b*) if not whether the Government will come forward to open such institution?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : :

(அ) இல்லை. இருப்பினும் வேளாண்மைப் பொருளாதாரம் இம்மாநிலத்தில் வேளாண்மைக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக இருக்கிறது.

(இ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : If it is not possible to start a separate institution to teach the subject, will the Hon. Minister be pleased to state whether he will include this subject in the existing colleges?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது இருக்கும் வேளாண்மைக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. பைனல் இயரில் இந்தப் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. எம். எஸ்ஸி. பைனல் இயரிலும் இந்தப் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

செவிலியர்களுக்கு வழங்கப்படும் உணவு.

*** 213 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் நர்சுகளுக்குப் போடப்படும் உணவின் தரத்தை உயர்த்த சர்க்கார் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் யாவை

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அங்கு காண்ட்ராக்ட் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு உள்ளே உணவாக மாற்றப்படுகிறது. அங்கே உணவாக மாற்றப்படும்போது நீண்ட காலமாகப் பணிபுரிகிறவர்கள் இருக்கிற காரணத்தால் அந்த உணவுப் பொருள்கள் திருடு போகிறது என்ற புகார்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே, உணவாகவே சப்ளை செய்வதற்கு காண்ட்ராக்ட் பெற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காண்ட்ராக்ட் மூலம் உணவுப் பொருள்கள்தான் தரப்படுகிறது. அது அங்கே சமையல் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அது ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை மேற்பார்வையிட வார்டன், ஹவுஸ்கீப்பர் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்கள் மேற்பார்வையில் அது ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்போது நர்சுகளின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் உணருகிறதா ? அண்மையில் சில நர்சுகளுக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து நான்கு பேர்கள் இறந்து விட்டார்கள். அந்த வகையில் நர்சுகளுக்குச் சரியாக

உணவு போடப்படவில்லை என்று நர்சுகளிடமிருந்தே புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? இதைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நர்சுகளுக்கு போடப்படுகிற உணவின் தரத்தைப்பற்றிய கேள்வி இது. உணவின் தரத்தில் குறைபாடுகள் இருப்பதாக நர்சுகளிடமிருந்து தகவல் ஒன்றும் வரவில்லை. தரப்படுகின்ற உணவு சில நேரத்தில் அவர்களுக்குச் சரியானதாக இல்லை. நீண்ட காலத்திற்கு முன்பு நிர்ணயித்த உணவுத் திட்டத்தின்படி அளிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் இன்றைய நிலைக்கு ஏற்ற வகையில் காண்ட்ராக்ட்காரர்களிடமிருந்து தரமான உணவுப் பொருள்களைப் பெற முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த விலையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நோய்களுக்குக் காரணமான உணவு கொடுக்கப்படுகிறது என்ற புகார் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக நர்சுகளிடம் இருந்து வந்ததாகத் தகவல் இல்லை.

திரு. நா. காசிராமன் : நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவுக்காக உணவுப் பொருள்களை காண்ட்ராக்ட்மூலம் பெறுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு காண்ட்ராக்ட்மூலமாகப் பெறுவதைத் தவிர்த்து அரசாங்கக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், சூப்பர் மார்க்கட்மூலம் நேரடியாகப் பெறுவதற்கு வழி செய்தால் லாபகரமாக இருப்பதோடு நல்ல பண்டங்களாகவும் இருக்குமல்லவா? இதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காண்ட்ராக்ட்காரர்களால் தரப்படுகின்ற உணவுப் பொருள்கள்கூட தரக்குறைவாக இருக்கிறதா என்பது அவ்வப்போது பரிசீலிக்கப்படுகிறது. கிண்டி இன்ஸ்டிட்யூட்டுக்கு இந்தப் பொருள்கள் அனுப்பப்பட்டுக் கலப்படம் இருக்கிறதா என்பது பரிசீலனை செய்யப்படுகிறது. அப்படி கலப்படமோ, குறைபாடோ இருக்குமானால் காண்ட்ராக்ட்காரர்களிடமிருந்து அதற்குரிய தொகை கூடத் திரும்பப் பெறப்படுகிறது. அவர்கள் இப்போது இருக்கின்ற விலையைச் சற்றுக் கூட்டித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU. K. VINAYAKAM : Sir, whereas we entirely agree with the Government that the standard of food should be raised as far as nurses are concerned, do the Government feel that the House Surgeons who are working in these hospitals from morning till night and especially during the days of admission when they have to do responsible work, are also given food?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எங்கேயோ போகிறதே?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கொடுக்கப்பட்டிருக்கின்ற கேள்வி நர்சுகளைப் பற்றியது. ஹவுஸ் சர்ஜன்களைப்பற்றி அவர்களே வந்து கேட்டால் பரிசீலிக்கலாம். அவர்கள் சார்பிலே கனம் உறுப்பினர் அவர்கள் கோரிக்கை கொடுத்தாலும் பரிசீலிக்கலாம்.

திரு. என். வரதராஜன் : இந்தச் செவிலியர்களுக்காகக் கொடுக்கப்படும்படியான உணவுப் பொருள்கள் திருடுபோய் விடுவதால் கஷ்டம் ஏற்படுகிறது என்ற புகார் பலமாக எழுப்பப்பட்டு வருகிற இந்த நேரத்தில் செவிலியர்கள் குழு ஒன்றை அமைத்துக் கண்காணிப்பதற்கு அரசாட்சி அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதே இவற்றை மேற்பார்வை செய்கிறவர்களில் வார்டன், ஹவுஸ்கீப்பர், ஒரு நர்ஸ் ஆகிய மூன்று பேர்கள் இருக்கிறார்கள். செவிலியர்களின் சார்பாக ஒரு செவிலியர் அந்தக் குழுவில் இருக்கிறார். ஆகவே, தனியான ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவைப் பற்றி எல்லோரும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. ஃபிமேல் நர்சா, மேல் நர்சா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நர்ஸ் என்று சொல்லுவது மகளிர் ஆடவர் இருவரையும் சேர்த்துத்தான்.

இடைக்கழி நாட்டில் பயணிகள் விடுதி.

*214 வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

இடைக்கழி நாடு பகுதிக்கு உல்லாசப் பயணிகள் அதிகம் வருவதால் இங்கு ஓர் பயணிகள் விடுதி கட்டுகின்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அந்தப் பகுதியிலே மொகலாய சாம்ராஜ்ய காலத்தில் கட்டப்பட்ட பல கோட்டைகள் இருக்கின்ற காரணத்தாலும், பக்கிங்காம் கனல் ஒரு பக்கம் செல்லுகின்ற காரணத்தாலும் அது தமிழகத்தின் கேரளம் என்று சொல்லப்பட்டிருப்பதால் இனிமேலாவது அதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது குறித்துச் செயற்குறிப்பு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்வளவு தூரம் சொல்லுவதால் அது குறித்த தகவல்கள் அரசாங்கத்திற்கு வருமானல் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை.

*215 வினு—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசினர் மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : திருத்துறைப்பூண்டி பேரூர் ஆட்சி பதினைந்தாயிரத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்டது என்பது மட்டுமல்ல, அந்த நகரத்தை ஒட்டி 20 மைல் சுற்றளவில் சிறந்த மருத்துவ மனை இல்லாத காரணத்தால் இருக்கிற திருத்துறைப்பூண்டி மருத்துவமனையைச் செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த அவசியத்தை உணர்ந்துதான் இப்போது 24 படுக்கைகள்கொண்ட ஒரு புதிய வார்டைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு விரைவில் பொதுப்பணித் துறைமூலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய மருத்துவ மனை கட்டும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. இருக்கின்ற மக்கள் தொகையை அனுசரித்துத்தான் புதிய வார்டைக் கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*)இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

(அ) சில மாவட்டங்களில் பருவ மழையின்மையும், பஞ்ச நிவாரண வேலைகளும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மற்றும் தென்னுற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறியதால் மேற்படி பகுதிகளை பஞ்சப் பிரதேசமாக

அறிவித்து, நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : திருநெல்வேலி மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறியதால் மேற்படி பகுதிகளை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலைமைகளையும் அதனைத் தொடர்ந்து உடனடியாக மேற்கொள்ளப்பட்ட துயர் தணிப்புப் பணிகளையும்குறித்த விவர அறிக்கைகள் இதைப்போன்ற நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளையொட்டி, 3—3—1969, 5—3—1969-ம் நாளன்று இம் மன்றப் பேரவைமுன் நான் அளித்துள்ளேன்.

தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவரின் தொடக்க அறிக்கையின் அடிப்படையில் குடிநீர்க் கிணறுகளையும், பாசனக் கிணறுகளையும் ஆழப்படுத்துதல், சிறு பாசன வாயில்களைச் செப்பனிடுதல், சாலை வேலைகள் போன்ற உடனடித் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு சிறப்பு நேர்வாக ரூ. 10 லட்சம் ஒதுக்கியுள்ளது. இம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அதிலும் குறிப்பாக, நிலைமை மிகவும் சீர்கேடுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ள திண்டிவனம், செஞ்சி, திருக்கோவிலூரில் சில பிர்க்காக்கள், கடலூர், விழுப்புரம் விருத்தாசலம் வட்டங்களில் உள்ள வறட்சி நிலைமைகள், மேற்கொள்ள வேண்டிய துயர்தணிப்புப் பணிகள் ஆகியவற்றைக் குறித்து மேலும் ஓர் அறிக்கையை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். இவருடைய சிறப்பு அறிக்கை வரப்பெற்று ஆய்வு செய்யப்பட்ட பின் இப் பகுதிகளுக்கு மேலும் துயர் தணிப்பு அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, திண்டிவனம் வட்ட செஞ்சி வட்டம் ஆகிய பகுதிகள் முழுமையாக வறண்ட பகுதிகளாயிருக்கின்றன. ஆகவே, தென்னார்க்காடு மாவட்டத்தில், மற்ற வட்டங்களில் ஆங்காங்கு வறண்டுவிட்ட சில கிராமங்களுக்கு பஞ்ச நிவாரணத்திற்குச் செய்யப்படும் வேலைகளோடு, திண்டிவனத்தையும், செஞ்சியையும் இணைப்பதால் திண்டிவனம், செஞ்சி வட்டங்களுக்குரிய முக்கியத்துவம் குறைந்து விடும். ஆகவே, இந்தப் பகுதிகளைத் தனியாகப் பிரித்து, இன்னமும் அதிக நிதி ஒதுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். இதிலே, பஞ்சத்தைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் என்று சொல்லத் தேவையில்லை. திண்டிவனம் பகுதியோடு திருக்கோயிலூர் பகுதி குறித்தும் அவர்கள் அனுதாபம் காட்டிய முறையை வரவேற்கிறேன். அதே மாதிரி விருத்தாசலம், கடலூர் சிதம்பரத்திற்கும் தேவை. விருத்தாசலம் சிதம்பரம் என்று அமைப்பைப் பார்க்காமல் எங்கெங்கு கஷ்டங்கள் இருக்கின்றனவோ அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதைச் செய்து வருகிறது. இன்னமும், மேலும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தென்னார்க்காடு மாவட்டத்தில் வறண்டு விட்ட பகுதிகளில் நிலத் தீர்வை, அரசுக் கடன் வசூலிப்பு ஆகியவற்றை உடனடியாக நிறுத்தி வைத்து, விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் தண்ணீர் செஸ், சர்சார்ஜ் ஆகியவற்றைத் தள்ளி வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் வரிவஜா செய்தல், ஒற்றி வைத்தல் இவற்றை மாவட்ட அதிகாரிகள் அனுப்புகிற பரிந்துரைகள், வருவாய்த்துறை வாரியத்தின் பரிசீலனை ஆகிய இரண்டின் அடிப்படையில், எங்கெங்கு வறண்ட பகுதிகள், அங்கு என்னென்ன மாதிரியான அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றி முந்தாநாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விளக்கம் கேட்கப் போகிறீர்கள். சரி கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கோயில்பட்டி தாலுக்கா மிகவும் வறண்ட பிரதேசம். தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பருவ மழை தவறியதைப்போல் இந்த ஆண்டும் பருவ மழை தவறியதால் அந்த கிராமங்களில் குடிதண்ணீர்கூட இல்லாமல், ஆடுமாடுகளைக் கூடப் பாதுகாக்க முடியாமல், அங்கே அவர்கள் தங்க முடியுமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மேலரசம்பட்டி போன்ற ஊர்களில் குடி தண்ணீர் கிடையாது. விவசாயம் செய்வதற்கான பாசன வசதியும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கின்ற நேரத்தில் கொடுத்திருக்கின்ற ஸ்டேட்மெண்ட் சம்பந்தமாகத்தான் விளக்கம் கேட்கலாம். புதிய கருத்துக்களுக்குக் கேட்கக் கூடாது.

திரு. சோ. அழகர்சாமி : குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், வாங்கிய கடன் வசூலை நிறுத்தி வைத்துத் தீர்வைகளை வஜா செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதற்கு 8½ இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை மற்றவை எல்லாம் அடங்குகின்றன. இன்னும் மேற்கொண்டும் வரிகளைத் தள்ளி வைப்பதா என்பதெல்லாம் அந்தந்த நேரத்தில் அந்தந்த ஊரின் நிலைமைகளைக் கவனித்து, அவர்கள் அனுப்பும் பரிந்துரைகளின்மேல் செய்யப்பட்டு வருகின்றன. தேவையில்லாத இடத்திலே எல்லோரும் சொல்கிறார்கள் என்பதால் செய்துவிட்டு, நாளைக்கு உறுப்பினர்களேகூட ஏன் வரி வசூல் செய்யவில்லை என்று கேட்கக் கூடும். 8½ இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் என்ன செய்யலாம் என்பதும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

(ஆ) பரிசுச் சீட்டுகள் நடத்துவதற்குக் காவல்துறை ஆணையர் விதித்துள்ள தடையும் அதன் விளைவுகளும்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின்கீழ் ஒரு விஷயத்தைக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, viz.,

"the sudden order by the Commissioner of Police banning all gift schemes run by a number of shops in the City of Madras which has suddenly put an end to the trading activities of a number of shops and also the need to lift the ban forthwith and allow the shops to carry on the gift schemes at least till they complete the existing contract between them and the customers."

*** மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய அரசு நடத்தி வரும் பரிசுச் சீட்டோ அல்லது மாநில அரசின் அனுமதி பெற்ற பரிசுச் சீட்டோ அல்லாத பிற பரிசுச் சீட்டு ஒன்றை நடத்துவதற்காக ஓர் அலுவலகம் அல்லது இடத்தைப் பேணி வருபவர் யாராயிருப்பினும் அவருக்கு ஆறு திங்கள் கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ, அபராதத் தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைகளுமோ விதிக்கப்படுமென இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 294-எ பிரிவு வகை செய்கின்றது. அத்தகைய பரிசுச்சீட்டுத் திட்டத்தில் ஒரு சீட்டு, சீட்டுத் தொகுதி, எண் அல்லது இலக்கத்தைக் குலுக்கியெடுப்பதற்குத் தொடர்பான அல்லது அதற்குப் பொருந்தும் ஒரு நிகழ்ச்சியில் அல்லது நேர்வில் ஒருவர் பயன் பெறுவதற்காக ஒரு தொகையைச் செலுத்துவதாய் அல்லது பொருள்களை ஒப்படைப்பதாய் அல்லது ஒரு செயலைச் செய்யப் போவதாய் அல்லது செய்யாமலிருக்கப் போவதாய் குறிப்பிடுகிற ஒரு செயற் குறிப்பினை யார் வெளியிட்டாலும் அவருக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படுமென்றும் அப் பிரிவில் விதித் துறை உள்ளது. சட்டப்படிக்கான இந்த நிலைமை வணிகர்களில் சிலருக்குத் தெரியாமலிருக்கலாமென்பதால், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் 1968 டிசம்பர் 20-ம் தேதியன்று நடந்த தமது வாராந்திரப் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் சட்டத்தில் கண்டுள்ள இந்த நிலையை விளக்கிக் கூறினார்.

பரிசுத் திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 294-எ பிரிவின் விதித் துறைகளுக்கு முரணானதாகும்; அது முறையானதுமல்ல. வணிகர்கள் தங்களுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தங்களை முடிவு செய்யும் வரை இப் பரிசுத் திட்டங்களைத் தொடாந்து நடத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்குவதுகுறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

DR. H. V. HANDE : From the statement of the Hon. Minister it is not clear whether these firms can run these lottery schemes now and whether if they run them now, it is against the rules and whether the Government is going to take any action against them for running these schemes after the issue of the order by the Commissioner of Police. I understand that this order was issued without the knowledge of Government. I talked with the Home Secretary and I think this order has been issued without the knowledge of Government. I want to know whether it was issued when the Home Minister, Thiru Anna was not doing well. I request the Hon. Minister to give the necessary clarification.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, முன்னரே கூறியபடி வாராந்திரக் கூட்டத்திலே கமிஷனர் அவர்கள் அறிக்கை அளித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஐ. பி. சி. பிரிவின்படி குற்றம் என்ற கருத்துச் சொல்லப்பட்டது, லீகல் ஒபினியனில் இதை "ஆதரைஸ்" செய்யலாம், அதிகாரம் இருக்கிறது என்ற கருத்துச் சொல்லப்பட்டது. வாடிக்கைக்காரர்களுக்கும் வணிகர்களுக்கும் உள்ள ஒப்பந்தம் முடியும்வரை அவர்கள் தொடர்ந்து நடத்தச் சட்டத்திலே அதிகாரம் இருக்கிறதா, அனுமதி கொடுக்கலாமா என்பது பற்றி இப்போழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.

3. தன்னிலை விளக்கம்

எதிர்க்கட்சித் தலைவர்பற்றிக் கூட்டுறவுத் துறை அமைச்சரின் திருத்த விளக்க உரை குறித்து திரு. பி. ஜி. கருத்திருமன் அளித்த விளக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார், அதற்குப் பர்மிஷன் கொடுக்க வேண்டும். கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று நான் சட்ட சபைக்கு வர இயலாத காரணத்தினால்,

நேற்றுச் சட்ட சபையிலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் என் சம்பந்தமாக ஒரு அறிக்கை விட்ட காரணத்தினால் நான் விளக்கம் கூற உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

Leader of the opposition என்னும்படியான சொல் 250 விதிகளிலும் எந்த இடத்திலும் இல்லையென்று முன்னால் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னால் நேற்று 81-வது விதியின் கீழ், அது இருக்கின்றது, ஆனால் அந்தப் பகுதி ஒன்றைத்தவிர பாக்கி எந்த இடத்திலும் இல்லை என்று சொல்லியிருப்பது மீண்டும், எற்கனவே சொன்னதையே வலியுறுத்திச் சொல்வதாக இருக்கிறது, பாதகம் இல்லை, கொடுத்து விட்டார்கள். ஆனால் தவறுகச் சொன்னதற்காக அவர்கள் வருத்தம் தெரிவித்திருப்பார்களானால் பொருந்துமேதவிர, தவறைச் சொல்லிவிட்டு, எதிர்க் கட்சித் தலைவர் என்ற வார்த்தை இல்லை என்று சொல்லிவிட்டு, முதலமைச்சரவர்களும் சொன்னதற்குப்பின்னால், ஸ்டேட்மெண்ட் 81-வது விதியின்படித் தவற்றைத் திருத்த முயலலாம், ஆனால் அமைச்சரவர்கள் அதற்கு வருத்தம் தெரிவித்துக்கொள்ளவும் வேண்டும். மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் கூடச் சட்ட சபையில் நடந்த நிகழ்ச்சியிலே, தேனி வெங்கடாசலபுரத்திலே விலங்கிட்டு அழைத்துச் செல்லப்படவில்லை என்று சொல்லிவிட்டு, பிறகு 81-வது விதியின்கீழ், அவ்வளவு பெரிய முதலமைச்சர், எல்லா மக்களின் மனதைக் கவர்ந்தவர், என்னுடைய பெயரையும் சொல்லி I express regret for having given a wrong information என்று அவர்கள் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய பண்பைவிட இவர்கள் குறைந்தவர்கள் அல்ல என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். எனவே, அவர்கள் சொன்ன தவறுக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வார்களா என்று உங்கள் மூலமாக ஒரு கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏதோ மன்னிப்புக் கேட்க வேண்டும், வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று இதை ஒரு பிரச்னையாக எழுப்பி இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்று விதிகளில் இருக்கிறதா இல்லையா என்பது பிரச்னை. அது இல்லை என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இருக்கிறது என்று எவ்வளவு விரைவாக அவர்கள் கவனத்திற்கு வந்ததோ, அவ்வளவு விரைவாக இந்த மன்றத்தில் அதற்கான விளக்கத்தைக் கொடுத்தார்கள், "கரெக்ட்" செய்து கொண்டார்கள். "கரெக்ட்" செய்வது ஒரு மரபு. அதற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் அதற்குப் பொருள் அல்ல, மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பொருள் அல்ல, இதிலே பெரிய கௌரவம் இருக்கிறது என்பதும் பொருள் ஆகாது. பல நேரங்களிலே சொல்லிவிடுகிறோம், இன்று $1\frac{1}{2}$ லிட்டர் என்று சொல்லுகிறோம்; நாளைக் காலையிலே பார்த்தால் $1\frac{1}{4}$ லிட்டராக இருக்கும், "கரெக்ட்" பண்ணி ஆன்சர் கொடுக்கிறோம். அது மாதிரியாக நடந்ததே தவிர, இந்தப் பிரச்னை இப்பொழுது இந்த மன்றத்தினுடைய முன்னாலே இல்லை. அவர்கள் ஒரு "பாக்ட்" டைப்பற்றிச் சொன்னார்கள். இதிலே எதிர்க் கட்சித் தலைவர் என்பது எந்த இடத்திலும் இல்லை என்று சொன்னார். அது மாதிரியான நூற்றுக் கணக்கான விஷயங்களை நாம் பேசுகிறோம். அதையும் அவர்கள் உடனடியாக, எவ்வளவு விரைவாக, தெரிந்த உடனே— அதை நாங்கள் கூடக்கொண்டு வரவில்லை — இந்த மன்றத்திலே கொண்டு வந்தார்கள். தவறு இருந்தாலும் (குறுக்கீடு) 2 நாள் கழித்துக் கொண்டு வந்தார்கள், ஆனால் இவர் அடுத்த நாள் கொண்டுவந்தார்கள். ஆகவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தினுடைய விவாதத்திற்குப் பயன்பட வேண்டுமென்று ஒரு விவகாரத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சபையை மிஸ்லீட் பண்ணுவதற்கோ, அவமானப்படுத்துவதற்கோ அந்த விதமான—(குறுக்கீடு) நான் பேசி விடுகிறேன், பிறகு நீங்கள் பேசுங்கள்—கருத்திலே அல்ல.

உரிமை இருக்கிறது. எதிாக்கட்சித் தலைவர் என்று விதிகளிலே இல்லையென்று சொன்னார் கூட்டுறவுத் துறை அமைச்சர். அதை அவரே தான் கொண்டுவந்து திருத்திக்கொண்டார்கள். அப்பொழுதே கூட இந்த மன்றத்திலே யாரும் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கலாம். யாரும் கொண்டு வரவில்லை, நாங்கள் கூடக் கொண்டு வரவில்லை. அந்த நேரத்திலே நீங்கள் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பீர்களானால் உங்களுக்கு நிரம்பப் பெருமை கிடைத்திருக்கலாம். ஆனால் கொண்டுவரவில்லை. அவர்களே இந்த மன்றத்திலே கொண்டுவந்து இப்படி இருக்கிறது என்று 82-வது விதியின்கீழ் திருத்திக்கொண்டிருக்கிறார்கள், மன்றத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார். இது முடிந்த விவகாரம். இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் நம்முடைய உறுப்பினர்கள், எதிர்கட்சிக்காரர்கள், இந்த மன்றத்திற்கு இருக்கிற உரிமைகளை, மரபுகளை, சம்பிரதாயங்களை மீறி ஏதாவது ஒரு போர்க் குணத்தோடு காரியங்களைச் செய்வார்களானால் எனக்கு அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. இந்தப் பிரச்னையிலே ஒழுங்குப் பிரச்னைக்கோ, மன்னிப்புக் கேட்பதற்கோ, வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கூறுவதற்கோ எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொண்டு தங்கள் தீர்ப்பைக் கோருகிறேன்.

(திரு. டி. எஸ். ஆதிமூலம் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்? பாயின்ட் ஆப் ஆர்டரா, பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா? பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷனா?

திரு. டி. எஸ். ஆதிமூலம் : நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லப்போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உங்கள் அபிப்பிராயத்தை நீங்கள் சொல்ல முடியாது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : பாயின்ட் ஆப் ஆர்டர். எதிர்க்கட்சித் தலைவர் என்றால் "ஷேடோ காபினட்" என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான ஸ்தானத்தை வகிப்பவரை சட்டத்தில் நிபுணரும், அசெம்பிளிச் சட்டங்களைக் கரைத்துக் குடித்தவருமான இவர் இப்படி சொல்லிவிட்டாரே, அதற்குப் பிறகு வருத்தம் தெரிவிக்க வேண்டாமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் நேற்று 81-வது விதியின்கீழ் அறிக்கை கொடுத்ததாகச் சொன்னார். ஆனால் நேற்று எந்தவிதமான அறிக்கையையும் 81-வது விதியின்கீழ் அவர் வைக்கவில்லை, 82-வது விதியின்கீழ்தான் வைத்தார். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட இப்பொழுது பிநடந்ததற்கு மாறாகத்தான் சொல்லுகிறார். எனவே, அதற்கு அவர் வருத்தம் தெரிவிப்பாரா என்று கேட்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சர் அவர்கள் பேசினதற்கு. ம்றகு நான் கொஞ்சம் பேச வேண்டாமா? அல்லது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள், அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த மன்றத்தில் தவறான தகவலைக் கொடுத்துவிட்டு, அது தவறு என்று தெரிந்த உடனே அதைத் திருத்திக்கொள்ளுவதற்கு யாருக்கும் உரிமை உண்டு. அந்த வகையில் அவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். அதைத் திருத்த வேண்டுமென்று வற்புறுத்துகின்ற அளவுக்குத்தான் பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு. அதற்கான மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்வதற்கோ, வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று சொல்வதற்கோ பேரவைத் தலைவருக்கு உரிமை இல்லை. வருத்தம்

தெரிவிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது உரிமை அல்ல. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும், இதெல்லாம் வேண்டிப் பெறுவதல்ல, வருத்திப் பெறுவதல்ல, என்பது. நேற்று முடிந்துபோன விவகாரம் இது. அதை மேலே தொடர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசிய சந்தர்ப்பத்திலே ஒரு போர்குணத்திற்காகத்தான் வருகிறார்கள் என்ற தவறான கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். போர் குணத்திற்கு நாங்கள் தயாராகிக்கொண்டிருக்கிறோம்—எதற்குத் தேவையோ அதற்கு. ஆனால் இந்த வருத்தம் தெரிவிப்பதிலே மறைந்த அண்ணாதுரை அவர்கள் கூறியதைப் போல குறை ஒன்றும் ஏற்படாது. அது கண்ணியத்தைத்தான் அதிகப்படுத்தும். இது மாதிரி ஒரு அமைச்சர் இருக்கிறார்களே....... (மணி அடிக்கப்பட்டது)....நான் பேசி முடிக்கிறவரைக்கும் நீங்கள் கொஞ்சம் வாய்ப்பு கொடுங்களேன், நான் இன்னும் முடிக்கவில்லை. ஒருவர் சொன்னார் 81-வது விதியின்கீழ் எந்தவிதமான அறிக்கையும் வைக்கவில்லை 82-வது விதியின்கீழ் வைத்தார் என்று. நான் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் 81-வது விதியின்கீழ் எழுந்து சொல்கிறேன் என்றுதான் சொன்னேன். அவர் நேற்று கொடுத்த ஸ்டேட்மெண்ட் 82-வது விதியின்படி. ஆனால் சில விஷயங்களைக் கரெக்ட் பண்ணுவது புள்ளி விவரங்களைக் கரெக்ட் பண்ணுவது இவையெல்லாம் சாதாரண விஷயம் இது சாதாரண விஷயமா? "லீடர் அப் தி அப்போசிஷன்" என்ற பெயர் 250 விதிகளிலே எங்காவது ஒரு இடத்திலாவது வருகிறதா என்று "சாலஞ்ச்" பண்ணியிருக்கிறார். நானே பயந்து போனேன். பார்-அட்-லா லண்டனெல்லாம் போய் படித்துவிட்டு வந்தவர். சபாநாயகராக இருந்தவர், திறம்பட நடத்தியவர் அதைக்கூட வேண்டாமென்று வேறு வேலைக்குப் போனவர் மறுபடியும் சம்பந்தம் இல்லாமல் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவா : நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே எவ்வளவு வேண்டுமானாலும் ஒருவரை போற்றிப் புகழ்ந்து பேசலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : போற்றித்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் போற்றிப் புகழ்கின்ற முறையிலே இகழ்ச்சியும் உண்டு. நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் தமிழ் கற்றவர். புகழ்கின்ற முறையிலே இகழ்ச்சி உண்டு. இகழ்கின்ற முறையிலே புகழ்ச்சியுண்டு. அப்படிப்பட்ட அணிகள் எல்லாம் தமிழில் இருக்கின்றன. அப்படிப்பட்ட அணிகள் இருக்கின்றன என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். தமிழிலே புகழ்வதைப் போல் தெரியும், ஆனால் இகழ்ச்சியைக் குறிக்கும் இகழ்வதைப்போல் தெரியும். ஆனால் புகழ்ச்சியைக் குறிக்கும். அது மற்றவர்களுக்குத் தெரியாது என்று சொன்னாலும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுமானால் உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். உங்களுக்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு இடம் தருகிறேன் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒரு திர்ப்புக் கொடுப்பதற்கு முன்பு சொல்லிவிடுகிறேன். அதற்காக அருள்கூர்ந்து அனுமதிகொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்னை சம்பந்தமாக முதலிலே நான் போர்க்குணம் என்று சொன்னதாக அவர்கள் சொன்னார்கள். அதைக் கேட்பதற்கு அவர்களுக்கு சிரமமாய் இருக்கிறது,

அதனாலே அதை நான் மாற்றிக்கொள்ளப் போவதில்லை. அதைச் சொல்வதற்கு ஒரு அடிப்படையான காரணம் உண்டு. இந்தப் பிரச்னை சம்பந்தமாக விவாதம் நடந்து, அமைச்சர் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்து, தாங்கள் தீர்ப்பு அளித்து, முடிந்துபோன விவகாரமாகிவிட்டது. முடிந்து போன விவகாரத்தைப்பற்றி இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியிருப்பதே உரிமைப் பிரச்னையாகும். இந்தச் சபையிலே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த இடத்திலே உட்கார்ந்தாலும், நிதி அமைச்சர் அவர்கள் இந்த இடத்திலே உட்கார்ந்தாலும், ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. இன்னொரு உறுப்பினரை மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்தவோ, சபா நாயகரவர்கள் தீர்ப்பு கொடுத்து, "டிஸ்போஸ்" செய்த விவகாரத்தை மீண்டும் இந்த மன்றத்திலே கொண்டுவருவதோ இந்த மன்றத்தை அவமரியாதைப் படுத்துவதாகும். அவர் அவ்வாறு கட்டாயப்படுத்துவது ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்கும் உரிமைகள் இருக்கின்றன—அந்த உரிமைகள் மீது "என்க்ரோச்மெண்ட்" செய்வது போலாகும், என்பதையும் இது ஒரு ஒழுங்குப் பிரச்னைக்குரிய விவகாரம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் என்று விதிகளில் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அந்த மாதிரி விதிகளில் இருக்கிறது என்று தெரிந்தவுடன் அவர்களே அதைத் திருத்திவிட்டார்கள். அதையும் மற்றவர்கள் சொல்ல வில்லை. அவர்களே, மனம் உவந்து இந்த மன்றத்திலே சொன்னார். அதைத் திரும்ப எழுப்புவதுதான் போர்க்குணம். எல்லோருக்கும் போர்க் குணம் இருக்கிறது. இந்த மன்றத்தினுடைய மரபுகளை இந்த மன்றத்தினுடைய உரிமைகளை, ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிற உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இந்தப் பிரச்னை ஒழுங்குப் பிரச்னை என்று சபாநாயகர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே 4 பேர் இருக்கலாம், 10 பேர் இருக்கலாம், 100 பேர் இருக்கலாம். ஆனால், நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று கூறுவது முறையல்ல, ஜனநாயகம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், ஆளும் கட்சித் தலைவர்களுக்கும், சபாநாயகருக்கே கூட அந்த மாதிரியான காரியத்தைச் செய்வதற்கு ஒரு வரம்பு உண்டு என்பது தான் நிலைமையே தவிர, அவர்கள் கொண்டு வந்தது ஒழுங்குப் பிரச்னைக்குரியது என்பது மட்டுமல்ல, இந்த மன்றத்தை அவமரியாதைப் படுத்துவதாக இருக்கிறது. அதனாலே, இது உரிமைக் குழுவினாலே பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம் என்று கூறி உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: அடிக்கடி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் "இன்டென்ஷன்" நோக்கம் கற்பிக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட அமைச்சர் மீது வேண்டுமென்றே புகார் சொல்லிக் கொண்டிருப்பது நியாயம்தானா? அதுவும் சொன்னதைத் திருத்திக் கொண்டபிறகு மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்வது எந்த வகையிலே நியாயம்? அப்படி மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று இருந்தால் ஒரு நாளைக்கு 10 முறை யாவது எதிர்க்கட்சித் தலைவர் மன்னிப்போ வருத்தமோ தெரிவிக்க வேண்டி இருக்குமே.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எதற்காக மன்னிப்பு கேட்கவேண்டும் ?

திரு. கோ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, பாயிண்ட்
மு.ப. 11-30 ஆப் ஆர்டர், ஸார். சபையின் பொன்னான நேரம் இம்மாதிரி விரயம் ஆகிறதே ? சட்டப் பேரவையின் எந்த விதியின் கீழ் இந்த விவாதத்தை தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னென்னவோ சொன்னார்கள். மெம்பர்களுக்குத் கூடத் தெரியும். யானைக்கும் அடி சறுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

எல்லாம் தெரிந்தவர்களும் சில நிலையில் தவறுவது உண்டு. தவறு செய்தவர் தவறு என்று சொல்லும் முறையைப் பாராட்டவேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ரொம்பப் பொறுமையை இழந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, தவறு ஒன்று செய்துவிட்டு, "அந்தத் தவறு நடந்துவிட்டது, நான் திருத்திக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்ட பிறகு, அந்தப் பிரச்னையை அதோடு முடிவு செய்யவேண்டும். மேலும் இதை வளர்த்துவது முறையாகாது என்பதை நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : தவறைத் திருத்திக்கொள்வது என்பது வேறு, தவறுக்கு வருத்தம் தெரிவிப்பது என்பது வேறு. ஏற்கெனவே அவர் வருத்தம் தெரிவித்திருந்தால் பாதகம் இல்லை. எங்களைப் பற்றி "இன்ஸினுவேஷன், போர்க் குணம்" என்றெல்லாம் சொல்லப்பட்டது. போர்க்குணம் சர்க்கார் கட்சியில் இருக்கிறதே தவிர, எங்கள் கட்சியில் இல்லை. நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு அங்கத்தினர் எதிர்க்கட்சித் தலைவர் 10 தரம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொன்னார். எனக்குத் தெரிந்த அனுபவத்தில், நான் தவறு செய்திருந்தால், மன்னிப்புக் கேட்டுக்கொள்வேன். அதிகார பூர்வமாகக் கேட்கவில்லை. மனிதப் பண்பு என்ற அடிப்படையில் கேட்கிறேன். தவறு இருந்தால் மன்னிப்புக் கேட்பதில் பண்பு உயரும் என்று மறைந்த முதல் அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நேரத்தை வீணாக்க வேண்டாம். மனிதாபிமானத்தோடு மன்னிப்புக் கேட்பது வேறு, சட்ட மன்ற விதிமுறைப்படி மன்னிப்புக் கேட்பது வேறு. அந்த வகையில், ஒரு தவறு நடந்துவிட்டது, "தவறை திருத்திக் கொள்கிறேன்" என்ற அளவுக்குத் தான் அவர் கூறிக்கொள்ள சட்டமன்ற விதிமுறைகள் இடம் தருகின்றனவே தவிர, அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று சொல்ல சட்டமன்ற விதிமுறைகளில் இடமில்லை. அந்த அளவுக்குத் தான் நான் சட்டமன்ற நிகழ்ச்சிகளை நடத்திச் செல்ல முடியும். இதற்கு மேலும் தொடர்ந்து எதுவும் பேசாமல், இந்த விஷயத்தை இத்தோடு முடிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஏற்கெனவே நான் பேசுவதற்கு முன்னாலேயே அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவர் சொன்னதை வாபஸ் பெறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவர் அப்படிச் செய்ய வில்லை. தான் சொல்லியதை அவர் தவறு என்று கூட ஏற்றுக் கொள்ளாத காரணத்தினாலே, வருத்தம் தெரிவிக்கத் தவறிய காரணத்தினாலே, நாங்கள் இந்தச் சபையை விட்டு வெளியேறுகிறோம்.

(எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளி நடப்புச் செய்தனர்)

4. 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் இப்பொழுது தொடரும்.

***திரு. ஏ. எம். இராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை, தமிழகத்தின் தனிப் பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு முதற்கண் எனது அஞ்சலியைச் செலுத்திக்கொள்கிறேன். நிர்வாகத் திறமையும், சுறுசுறுப்பும் ஆர்வமும் மிக்க கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இவ்வமைச்சரவைக்கு என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் முழுதும் படித்துப் பார்த்தேன். வரிச்சுமையை ஏற்றாமல், மக்களுடைய நலனை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை இந்த அறிக்கை என்பதற்காக நிதி அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். தமிழகத்தில் பல கோடி மக்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்கள். அவர்களின் நன்றியை நிதி அமைச்சர் அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையில் உணவு உற்பத்தியைப் பெருக்க, பாசன வசதிக்காக ரூ. 4½ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே போல் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 65 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், கல்விக் கூடங்கள் மூடப்படும் என்று காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள். ஆனால் இன்றிருக்கிற நிலை என்ன ? அவர்கள் ஒதுக்கியதைவிட ரூ. 20 கோடி அதிகமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இன்றைய அரசு கல்வியிலே எந்த அளவுக்கு அக்கறை காட்டிவருகிறது என்பது நன்கு புலனாகும். அதைப் போல, புகுமுக வகுப்பில் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது அனைவருக்கும். சமுதாயத்தில் கல்வி எல்லோருக்கும் கிட்டவேண்டும் என்ற நல்ல நோக்கத்தை, லட்சியத்தை எட்டிப் பிடிக்கும் முதற்படியாக இதை நான் கருதுகிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிதிநிலை அறிக்கையிலே ரூ. 1½ கோடி ஒதுக்கியிருக்கிறார்கள் நிதி அமைச்சர் அவர்கள். தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய அதன் நிலப்பரப்பில் 40 சதவிகிதம் எந்த வளமுமின்றி, மழை வளமோ, பாசன வளமோ இல்லாத வறட்சிப் பிரதேசங்கள். இந்த வறட்சிப் பிரதேசங்களில் இருக்கிற மக்களுக்காக, அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு இயற்கை பொய்த்த காரணத்தினால், இந்த அரசு ரூ. 1½ கோடி ஒதுக்கியிருக்கிறது. அதை நாடு பாராட்டுகிறது, நல்லவர் போற்றுகின்றனர். இருந்தும், எதிர்க் கட்சியினர் இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமில்லை என்று பல குற்றச்சாட்டுகளைச் சாட்டுகின்றனர். பட்டினியால் மக்கள் வாடுகின்றனர். பட்டணத்திற்குப் போடும்படி அரிசி பட்டிக்காட்டிற்கும் போட வேண்டாமா ? பஞ்சமும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதே, பட்டினியைப் போக்கத் திட்டம் இல்லையே ? வாட்டிடும் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கிடவழி காணவில்லையே ? மூடப்பட்ட பஞ்சாலைகள் திறக்கப்படவில்லையே? புதிய தொழில்கள் உருவாகவில்லையே ? என்று பல குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூற விரும்புவதெல்லாம் இது தான். குறைப்பட்டுக்கொள்ளும் எதிர்க் கட்சியினரின் குறைகளை நாம் தீர்க்கமாட்டோம் என்று கூறினோமா ? குறைகள் இருக்கின்றன, அவைகளைத் தீர்க்கக்கூடாது என்பதாலா, அல்லது தீர்க்க வேண்டிய வசதிகள் உரிமைகள் இல்லை என்ற காரணத்தினாலா என்பதை அவர்கள் கொஞ்சம் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திட்டங்கள் பல தீட்டப்பட்டு, அதற்கான பணத்திற்காக தமிழக அரசு வடக்கே செல்லும் போதெல்லாம் வெறுங் கையோடு திரும்பிக் கொண்டு வந்தது கடந்த காலக் கதை என்பதை யாரும் மறைக்க முடியாது, யாரும் மறுக்க முடியாது. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில், உணவு நிலையில் தன்னிறைவு பெற்றோம். இந்த ஆண்டு இயற்கை பொய்த்த காரணத்தினால் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சியைப் போக்க தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டுகின்றது. அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கியுள்ளது.

இன்றுள்ள வறட்சி நிலையை காங்கிரஸ்காரர்கள் நன்றாக அறிவார்கள். தமிழகக் காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சில மாதங்களாக தமிழகத்தில் வரப்போகின்ற பஞ்சத்தை எண்ணி தமிழகத்தில் பல இடங்களில் பேசி வருகிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்ககின்ற நிலையிலே இந்தியப் பேரரசு ஒரு கோடி ரூபாய்க்கு அரிசியை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடிவு செய்துள்ளதாகச் செய்தி வருகிறது. காங்கிரஸ்காரர்களுக்கு உண்மையிலேயே தமிழக மக்களின்பால் அக்கறை இருக்குமானால், அன்பு இருக்குமானால், அவர்களுடைய வாழ்க்கையிலே

வசதிகளைத் தேட அவர்கள் முன்வருவார்களானால், இந்தியப் பேரரசைத் தடுத்து நிறுத்தி தமிழக அரசு தமிழகத்திற்காகக் கேட்கின்ற ஒரு லட்சம் டன் அரிசியை வாங்கித் தந்திருக்கக் கூடாதா ? வடக்கே இருக்கிற இந்திய ஏகாதிபத்திய அரசுக்கு தமிழகத்தின் மேல், தமிழக மக்களின் மேல் அன்போ, ஆதரவோ, அரவணைப்போ இருக்குமானால், தமிழக அரசு கேட்காமலே அரிசியை அனுப்பியிருக்கக்கூடாதா ? தமிழக வறட்சி நிலை அவர்களுக்குத் தெரியாதா ? தெரியாது என்றால் இந்தியப் பேரரசுக்கு எதற்காக ஒரு ரகசியப் போலீஸ் துறை ? இதை எடுத்து விடலாமே ? இந்தியப் பேரரசு தமிழக மக்களிடத்தில் வரி வாங்கவில்லையா ? வரி வாங்கி, வாங்கிக் கொட்டிக்கொள்ளும் டெல்லி அரசுக்கு தமிழக மக்களின் வாட்டத்தைப் போக்க அக்கறை ஏற்படாதது ஏன் என்று நான் கேட்கிறேன். ஆண்டுக்கு ஆண்டு இந்தியப் பேரரசு மக்கள்மேல் வரியை ஏற்றிக் கொண்டிருக்கிறது. மக்கள் "என்றாவது ஒரு நாள் நம்முடைய வாழ்வில் வளம் காணுவோம், வாழ்க்கையில் முன்னேறுவோம்" என்ற எண்ணத்திலே கேட்ட வரியை எல்லாம் கொட்டிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். வரி கொடுக்கமாட்டோம் என்று எப்பொழுதும் தமிழக மக்கள் கூறியதில்லை. இந்தியப் பேரரசின் போக்கைப் பார்த்தால், தமிழக மககள் "நாங்கள் இனி வரி கொடுக்கமாட்டோம்" என்று கூறக்கூடிய ஒரு நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நிலைக்குத்தான் இந்தியப் பேரரசு . தமிழக மக்களை துரத்திக் கொண்டு இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியப் பேரரசு தமிழக மக்களிடம் எவ்வளவு வரியை வாங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1,973 கோடி ரூபாய்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 2,993 கோடி, மூன்றாவது திட்ட காலத்தில் ரூ. 6,652 கோடி என்றும், 1966–67-ல் 1,931 கோடி ரூபாயும், 1967–68-ல் 1,943 கோடியும், 1968-69-ல் 2,084 கோடியும் ஆக முதல் ஐந்தாண்டுத் திட்ட காலம் ஆரம்பித்து, 1952-லிருந்து இன்று வரையில் ஏறக்குறைய 17,576 கோடி ரூபாய்கள் வரியாக வாங்கியிருக்கிறது, இந்தியப் பேரரசு. இதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கின்ற வறட்சி நிலையை ஒட்டி தமிழக அரசு கடந்த பத்து ஆண்டுகளாக தமிழகத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்க பாசன வசதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு பணம் கேட்டிருக்கிறது மத்திய சர்க்காரை. இந்தியப் பேரரசு தமிழக அரசு கேட்ட பணத்தைக் கொடுத்ததா? கடந்த பத்தாண்டு வரலாற்றில் நாம் கேட்ட தொகையைக் கொடுப்பதாகவே இல்லை. நாம் கேட்ட தொகை ஒன்றையுமே கொடுக்கவில்லை. அதற்கு மாறாக குறைத்துக் கொடுத்திருக்கிறது. அதில் அது மாறப் போவதேயில்லை. வரலாறு காட்டுகிறது. இரண்டாவது திட்ட காலத்தில் பாசனத்திற்காகக் கேட்டது ரூ. 27 கோடி, ஆனால் கொடுத்தது ரூ. 17 கோடிதான் ; மூன்றாவது திட்டத்தில் பாசனத்திற்காக கேட்டது ரூ. 33 கோடி. கொடுத்ததோ ரூ. 31 கோடி தான். இந்த நிலையில் நான்காவது திட்டம் வருகிறது. அந்தத் திட்டத்திலே, நாம் கேட்டுள்ளது ரூ. 39 கோடி. கிடைக்குமா ? இந்தியப் பேரரசு கொடுக்கப் போகிறதா ? இந்தியப் பேரரசு தமிழக மக்களிடம் வரி வாங்குகிறது. • கொடுக்கின்ற மக்கள் பேரில் உண்மையிலேயே அவர்களுக்கு அக்கறை இருந்தால், ஒற்றுமை, ஒருமைப்பாடு என்று பேசுகிறவர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமேயானால், இந்த ரூ. 39 கோடியையும் பாசன வசதிக்காகக் கொடுத்தே தீர வேண்டும். ஆனால், எனக்கென்னமோ ஐயப்பாடாகத்தான் இருக்கிறது. நான் கிடைக்கும் என்று நம்பவில்லை. ஆனால் நிதி அமைச்சர் நம்புகிறார். நான்காவது திட்டத்திலே திட்டத்திற்காக ரூ. 624 கோடி ரூபாய் தேவை என்று நாம் கேட்டோம். ஆனால் இந்தியப் பேரரசு ரூ. 501 கோடியளவில் திட்டத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறது. கேரள முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாடு, "டெல்லி சர்க்காரின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெரிதும் நம்பியிருந்தோம். ஆனால் அதற்கு மாறாக டெல்லி சர்க்காரிடமிருந்து புதிரான கண்டிப்பையே காண்கிறோம். இப்படியே

[திரு. எ. எம். இராஜா] [1969 மார்ச் 7

ஓர வஞ்சனையாக நடக்கிறது" என்று நேற்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கேரளத்திலே, மேற்கு வங்காளத்திலே, தமிழகத்திலே இந்த நிலையே நீடித்துக் கொண்டு போனால், எங்கே நிலைமைகள் போகும் என்று சொல்லத் தேவையில்லை. நான்காவது திட்டத்திற்கு மத்திய சர்க்காரிடம் ரூ. 300 கோடி என்று கேட்டோம். முதலிலே 250 கோடி கொடுப்பதாக ஒத்துக் கொண்டாலும், இப்பொழுது 250 கோடி கொடுக்க முடியாது, ரூ. 201 கோடி-தான் கொடுப்போம், அந்த ரூ. 201 கோடியையும் மானியமாக ரூ. 51 கோடியும், பாக்கி 150 கோடியை கடனாகவும் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், அந்த 150 கோடியிலும் தமிழகம் கொடுக்கவேண்டிய ரூ. 148 கோடி போக, அதையும் எடுத்துக் கொண்டு, மீதம் இருக்கும் இரண்டு கோடியைத்தான் கொடுக்கப் போகிறது. இது மார்வாடியிடம் கடன் வாங்கியிருப்பவர்களுக்குத் தெரியும். அவர்கள் முதலிலேயே வட்டியைக் கழித்துக் கொண்டு கொடுப்பார்கள் என்பது. அது போல, இதுவும் மார்வாடித்தனமாகத்தான் தெரிகிறது. மத்திய சர்க்காரின் நோக்கம், தமிழக அரசு தன்னுடைய நான்காவது திட்டத்திற்கு நிதிப் பொறுப்பை தானே ஏற்க வேண்டும், மக்களே நிதியைக் கொடுக்க வேண்டும் என்கிற வகையில் செயல்பட்டிருக்கிறது. ஆகவே, நமக்குத் திட்டம் இருக்கிறதே தவிர, மத்திய சர்க்காரிடமிருந்து எந்த விதமான உதவியும் இல்லை என்பதை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நிதி அமைச்சர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள், இன்றைய நிலையில் நிறுவன வரியை பங்குத் தொகுப்பிற்குள் சேர்க்க வேண்டும் என்று நம்முடைய சர்க்கார் வற்புறுத்தி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அது ஒரு நியாயமான கோரிக்கை. கார்ப்பொரேஷன் டாக்ஸ் மூலம், இந்தியப் பேரரசுக்கு ரூ.320 கோடி கிடைக்கிறது. நம்முடைய பங்கு, நமக்குச் சேரவேண்டிய பங்கு ஏறக்குறைய ரூ. 20 கோடி என்று நம்புகிறேன். இந்தியப் பேரரசு இதை ஒத்துக் கொள்ளப் போகிறதோ என்னவோ: நிச்சயமாக ஒத்துக் கொள்ளாது என்றே தோன்றுகிறது. சாதாரண நாளிலேயே ஒத்துக்கொள்ளாதவர்கள், அரசியல் சட்டத்தை மாற்றியமைத்து இந்த ரூ. 20 கோடியைக் கொடுக்கும் என்று நான் நம்பவில்லை. அமைச்சர் நம்புகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை நன்மை பயக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இதேபோல், ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை இந்தியப் பேரரசு புறக்கணித்து வருகிறது என்பது எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. இந்தப் போக்கு நீடித்தால், அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பிரஜா சோஷலிஸ்ட் தலைவரான ஹேம் பருவா, சமீபத்திலே பாராளுமன்றத்திலேகுறிப்பிட்டதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சமீபத்திலே பாராளுமன்றத்திலே ஹேம் பருவா அவர்கள்—

Mr. Hem Barua grimly warned if the Centre continued to neglect Assam, his State might go out of the Indian Union.

என்று கூறியிருக்கிறார். நான் இந்தியப் பேரரசை, விழிப்புற்ற தமிழர்களின் சார்பாக எச்சரிக்க விரும்புகிறேன். தமிழக அரசை இனியும் புறக்கணித்தால், தமிழகம் இந்தியப் பேரரசிலிருந்து விடுபட்டு, வெளியேறும் நாள் அதிக விரைவில் வரும் என்று எச்சரிக்கின்றேன்.

இறுதியாக எமது ஒப்பற்ற தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழக பட்டதாரிகளுக்குக் கூறிய கருத்தைக் கூறி முடிக்கிறேன். "நம்மவர் வாழ்ந்த விதம் காண்போம், அவ்விதம் நாமும் வாழ்வோம். அதற்குத் தடையாக உள்ளவற்றைத் தகர்த்தெறிவோம். நம்மை உணர்வோம். உண்மை உருவினைத் தெரிந்து கொள்வோம். திட நோக்குடன் பாடுபடுவோம் என்று உங்களை அழைக்கின்றேன். தூரதூர தேசங்களிலெல்லாம் பல்வேறு நட்ப வெட்பங்கள் படைத்திட்ட பெரும் நிலப் பரப்புகளாங்கிலும் புகழ்க் கொடி நாட்டிப் பரப்பிய புகழ் பூத்த பொற்காலம் கண்ணெதிரே தெரிகின்றது. நமது மரபு வழிப் பொற்காலம் காண்போம் வாரீர், வாரீர்."

1969 மார்ச் 7]

***திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். தமிழக நிதி நிலை அறிக்கையிலே, கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்பட்டிருந்தாலும், எந்த வரியும் போடாமல் அதை ஈடு கட்ட முடியும் என்பதைப் பார்க்கும்போது, நிதி அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களையும் வெகுவாகப் பாராட்டுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து அவர்கள் பேரில் வரி போடாமல் சமாளிக்க முடியும் என்று நம் அரசாங்கம் செய்திருப்பதை மத்திய அரசு உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். டெல்லிப் பாராளு மன்றத்திலே, பட்ஜட்டை சமர்ப்பித்த நிதி அமைச்சர், மண்ணெண்ணெய்க்கும், உரத்திற்கும் வரி போட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இது விவசாயத்தை வெகுவாகப் பாதிக்கும் என்பதை யாரும் ஒப்புக் கொள்வார்கள்.

உணவுப் பிரச்னையைத் தேசிய பிரச்னையாகக் கருதி, கட்டாய நெல் கொள்முதலுக்குக் குறைந்த விலையில் நெல் கொடுக்கும் விவசாயிகளுக்குப் பாதி விலையில் உரம் கொடுப்பதற்குப் பதிலாக உரத்துக்கு வரி போட்டிருப்பது, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துக்கு வேட்டு வைப்பது போலாகும். விவசாயிகளின் தலையில் வரியைச் சுமத்தினால், பெரும் அளவிற்கு உற்பத்தி பாதிக்கப்படும். இது விவசாயத்திற்கே ஊறு விளைவிக்கும். ஆகவே, மத்திய சர்க்கார் மண்ணெண்ணெய்க்கு வரி போட்டிருப்பது, சாதாரண ஏழை எளிய மக்களைத்தான் பாதிக்கும். மிட்டா மிராசுதாரர்களைப் பாதிக்கவில்லை என்பதையும் உணரவேண்டும். ஆகவே, மத்திய சர்க்கார் இந்த வரிகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிலையைப்பற்றி அமைச்சர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு தமிழகத்தில் பெருமளவிற்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ராமநாதபுரத்தில், அங்கே ஆண்டுதோறும் பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவே, வரி வசூல் செய்வதை நிறுத்தியும், கடன்களை வசூல் செய்வதைத் தள்ளிவைத்தும், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மானாமதுரைப் பகுதியில் வசூல்களெல்லாம் மிகக் கெடுபிடியாக இருப்பதால், விவசாயிகளுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுகின்றன. என்னுடைய விஷயத்தில் கூட, அங்கே உள்ள டெபுடி தாசில்தார் வரி போட்டு, ரெவின்யூ ரெகவரி ஆக்டின்கீழ் வசூல் செய்ய நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்களும், நமது முதல் அமைச்சரும் இது சம்பந்தமாக சில நடவடிக்கைகளை எடுத்து உடனடியாக அந்தப் பிரதேசங்களில் வரி வசூல் செய்வதை நிறுத்திவைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் மழையின்றி, வானம் பொய்த்த காரணத்தால், வரி வசூலைத் தள்ளி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் முதல் அமைச்சராக வந்தவுடனேயே டெல்லியிலே, சில பரபரப்பான செய்திகள் பேசப்பட்டன. திரு. கருணாநிதி முதல் அமைச்சராக வந்திருக்கிறார் என்றவுடன் பாராளுமன்றத்திலே உள்ள அமைச்சர்களும், மற்றவர்களும் சற்று மாறுபட்ட நோக்கோடு பார்க்க ஆரம்பித்தார்கள். கருணாநிதி முதல் அமைச்சர் என்றவுடனேயே அங்கே ஒரு அச்சம் ஏற்பட்டது. ஆனால், மாண்புமிகு கருணாநிதி முதல் அமைச்சரான வுடனேயே, அவர்கள், தாங்கள் அண்ணாவின் வழியிலேயே நடப்போம், மத்திய-மாநிலசர்க்கார் உறவை அவர்கள் வழியிலேயே வளர்ப்போம் என்று சொன்னவுடனேயே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் செய்தியைக் கேட்டவுடனே அங்கிருந்தவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டதாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர்—எங்கள் சுதந்திர கட்சி பொதுச் செயலாளர் திரு. மாரிசாமி அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு கருணாநிதி அவர்களும், மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் டெல்லி செல்கிறபோது தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற பஞ்சநிலையை நன்கு எடுத்துக் கூறி—மத்திய சர்க்காரிடம் பெறவேண்டியதைப் பெற்று வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஐந்தாவது நிதிக் கமிஷனைச் சந்தித்து தமிழகத்திற்கு திட்டமில்லாத செலவினங்களுக்காக மத்திய அரசினிடம் பெறவேண்டிய இருபதுகோடி ஏழு லட்சம் ரூபாயைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்து நாட்களுக்கு முன்பாக மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மாநில நிலைமைகளைப் பற்றி பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதில் தமிழ்நாட்டு வறட்சி நிலைமைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் தெரிவிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் வறட்சி நிலைமைப்பற்றி அங்குள்ளவர்களுக்கு நமது அரசாங்கத்தார் எடுத்துச் சொல்லவில்லையா, ஏன் குறிப்பிட்ட காலத்திற்கும் முன்பாக இந்த விஷயத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுபோகவில்லை. எப்படியும் அதி பயங்கரமான வறட்சி நிலைமையைப் பற்றி உடனடியாக வற்புறுத்தி எடுத்துச் சொல்லி, இந்த நிலையைச் சமாளிப்பதற்குத் தேவையான கோதுமை, அரிசியைப் பெற்று வெற்றியுடன் டெல்லியில் இருந்து திரும்பவேண்டும்.

மதிப்பிற்குரிய மாமேதை அண்ணா அவர்கள் சட்டமன்ற முதல் அமைச்சராக இருந்தபோது, நமது உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் அண்ணாவுடன் டெல்லி சென்றார்கள். திரு. ஜெகஜீவன்ராமைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்தில் கேரளத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் தமிழக சர்க்கார் உடனடியாக 10 ஆயிரம் டன் அரிசி கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். உணவு அமைச்சர் அண்ணாவைப்பார்க்க அண்ணா அவர்கள் நிச்சயமாகத் தருகிறோம் என்று சொன்னார்கள். அதையும் இந்தச் சமயத்தில் மத்திய அரசுக்கு நினைவுபடுத்தி, தமிழகத்தின் வறட்சி நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொல்லி இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தி சம்பந்தமாக நான் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பதாக டெல்லியில் உள்ளவர்கள் இந்தப் பிரச்னையை அலட்சியமாகவிட்டு, வானொலி மூலமாகவும், மற்ற நிர்வாக முறையிலும் இந்தியைப் புகுத்துவார்களேயானால் மறுபடியும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, மத்திய மாநில உறவுக்கு எடுத்துக்காட்டாய் விளங்க நம்முடைய மறைந்த மாமேதை—அறிவுச் சுடர், தியாகச் சுடர்—எக்குலமும் இன்புற்று வாழவேண்டுமென்று நினைத்த மேதாவிலாசம் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படம் பொதிந்த ஸ்டாம்ப் வெளியிடப்பட வேண்டுமென்பதை மத்திய அரசுக்கு நமது மாநில அரசு வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல மதுரை சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை சம்பவத்தைப்பற்றிப் பேசுகின்றபோது சக காங்கிரஸ் நண்பர்கள் வெளிநடப்புச் செய்திருப்பது வருந்தத்தக்கதாகும். மதுரையில் கைது செய்யப்பட்டிருக்கிற மாறன் அவர்கள் எம். ஏ. படித்தவர்கள், அப்பேர்ப்பட்ட பெரிய மனிதரை கைது செய்திருக்கிறார்களே என்று திரு. சித்தன் அவர்கள் வருத்தப்பட்டார்கள். நான் மதுரையைச் சேர்ந்தவன் தான். எனக்கு நெடுமாறனை நன்கு தெரியும். வேலாயுதத்தையும் நன்கு தெரியும். அங்கே நெடுமாறனுக்கு எந்த அளவுக்கு அந்தஸ்து இருக்கிறது, மரியாதை இருக்கிறது என்பது எல்லாம் தெரியும். சட்டமன்ற உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், நெடுமாறன் எம். ஏ. படித்தவர், மிக்க மதிப்பு உடையவர் என்றார். எம். ஏ. படிப்புக்காகத்தான் மரியாதை வரும் என்றால் திரு. காமராஜர் எங்கே எம். ஏ. படித்தார், அவர் மதிப்பு இல்லாதவர்களா என்று கேட்கிறேன்.

வேண்டுமானால் திரு. சித்தன் அவர்களுக்கு—பெரிய தியாகி வீர பத்திரத் தேவர் அவர்களுடைய மகன் என்ற முறையில் மிக்க மரியாதை உண்டு. ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரையாம் என்பது போல காங்கிரஸ் காரர்களுக்கு இன்றையதினம் தியாகிகள் கிடைக்கவில்லையா தேசீயவாதிகள் கிடைக் வில்லையா தேசீயவாதியும் இல்லாது—தியாகியும் இல்லாது—திராவிடமுன்னேற்றக் கழகத்தில் இருந்து சறுக்கி விழுந்த நெடுமாறனையா தூக்கிவைத்துக்கொண்டு ஆடவேண்டிய நிலை அவர்களுக்கு வந்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு அவர் ஒரு சாதாரண காங்கிரஸ்காரர். சட்டத்தை மீறுகிறவருக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் திரு. சித்தன் அவர்கள் எந்த பாரம்பரியத்தில் வந்தவர்கள் ?

நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், 1957-ஆம் வருஷத்தில் முதுகுளத்தூரில் பெரிய ரகளை நடந்தபோது, அதில் எங்களது மாபெரும் தலைவர்—நாங்கள் வணங்கும் தெய்வம்—மாமேதை—திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மேல் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு முதல் வந்தியாகக் கைது செய்து மதுரையில் இருந்து சென்னைக்கு லாரியில் கொண்டுவரப் பட்டார்களே, அப்போது நாங்கள் எதுவும் சொன்னோமா ? தேவருக்கு இருந்த சொத்து எழுபது லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும். அவர் வாய் அசைந்தால் நாடே அசையும். அப்பேர்ப்பட்ட எங்கள் தலைவரை லாரியில் அழைத்து வந்ததைப்பற்றியும், கொலைக்குற்றம் சாட்டியது பற்றியும் காங்கிரஸ்காரர்கள் நினைத்துப் பார்த்தார்களா ? இவர்களைப்போல நாங்கள் சொன்னோமா ?

இந்தச் சட்ட மன்ற உறுப்பினராகிய—சீனியர் மெம்பர் திரு. மூக்கையா தேவர் அவர்களை—பயங்கரமானவர், கண்டால் சுடுங்கள் என்று உத்தரவிட்டார்களே, இவர்களைப் போல நாங்கள் சொன்னோமா ? மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் கருணாநிதி அவர்களைக் கைது செய்து லாரியில் பாளையங் கோட்டைச் சிறைக்கு அனுப்பினார்களே, நெஞ்சுவலி என்ற போதும் கூட இரக்கம் காட்டினார்களா ? நாங்கள் என்ன சொன்னோம் ?

மதுரையில் 1969-ம் வருடம் மார்ச் மாதம் 3-ம் தேதியிலே காங்கிரஸ் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அங்குள்ள போலீஸ் அதிகாரிகளைப் பற்றியும், டி.ஐ.ஜி. அவர்களைப் பற்றியும் பேசினார்கள். என்ன சொன்னார்கள், மதுரையில் போலீஸ் தலைவராக நடுத்தெரு நாராயணன் இருக்கிறான். நான் அவனை மடப்பயல் என்று சொன்னேன் என்று வருத்தப்பட்டாலும். இப்போதும் சொல்கிறேன். அவன் அடிமடப் பயல். எந்தவிதமான வேலைக்கும் லாயக்கு இல்லாதவன். என்று பேசுகின்றார்கள். இது முறையா ? இப்படிப் பேசலாமா மதுரைக் கலவரம் சம்பந்தமாக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 1969-ம் வருடம் மார்ச் மாதம் 3-ம் தேதியில் ஒரு அறிக்கை கொடுத்தார்கள். மதுரையில் நடந்த சம்பவத்திற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்று சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்தாற்போல், மதுரை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சின்னக் கருப்பத் தேவர் அவர்களும், நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. டி. ராமகிருஷ்ணன் அவர்களும் ஓர் அறிக்கையை விட்டிருக்கிறார்கள். (முற். பகல 11-00) (மணியடிக்கப்பட்டது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பத்து நிமிடங்கள் அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 10-47க்கே உங்களுடைய பேச்சை ஆரம்பித்துவிட்டீர்கள். மற்றவர்கள் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, திரு சின்னக் கருப்பத் தேவரும், திரு டி. ராமகிருஷ்ணன் அவர்களும், "இன்றையதினம் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பதில் காங்கிரஸ்காரர்களுக்கு முக்கியமான கடமை உண்டு. மதுரையின் நற்பெயரை நாம்

காப்பாற்ற வேண்டும். சகிப்புத் தன்மையோடு நாம் நடந்துகொள்ள வேண்டும். அடுத்துவரும் வாய்தா நாட்களில் கோர்ட்டில் கும்பலாகக்கூடக் கூடாது" என்ற முறையில் அறிக்கையை விட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் 3–3–1969ல் மதுரை விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, "மதுரைச் சம்பவத்திற்கும் காங்கிரஸுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது" என்று கூறியிருக்கிறார். ஆனால் இங்குள்ள காங்கிரஸ்காரர்களோ மதுரைச் சம்பவத்தைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். காங்கிரஸை சம்பந்தப்படுத்திப் பேசுகிறார்கள். ஆகவே, இவர்களுக்குள்ளே காங்கிரசில் பிளவு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நேரத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அடுத்தபடியாக, சமீபத்தில் ஒரு பரபரப்பான சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரில் ஒரு கோடி ரூபாய் பெறுமான கள்ள நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருககின்றன. ஒரு கோடியல்ல, ஒன்றரை கோடி ரூபாய் பெறுமான கள்ள நோட்டுகள். தமிழ்நாட்டிலே இன்றையதினம் புதுப் புதுப் பணக்காரர்கள் தோன்றுகிறார்கள். எப்படி பங்களா கட்டினார்கள்? எப்படி கார் வாங்கினார்கள் என்பது எல்லாம் விசித்திரமாகவே இருக்கிறது. கள்ள நோட்டிலே சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் தமிழக அரசாங்கம் தகுந்த முறையிலே நடவடிக்கை எடுத்து, தண்டிக்க வேண்டும். கள்ள நோட்டில் சம்பந்தப்பட்டவர்களை பகிரங்கமாக ஒரு மரத்திலே கட்டி வைத்து, பொது மக்கள் பார்வையில் போலீஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அது மற்றவர்களுக்கும் பாடமாக அமையும். இரண்டாவது உலக யுத்தத்தில் பர்மாவை சில காலம் ஜப்பானியர்கள் ஆண்டார்கள். அங்கு கொலைகளும், கொள்ளைகளும் நடந்தன. யார் எந்தக் குற்றத்தைச் செய்தாலும் நடு ரோடிலே நிறுத்தி வைக்கப்பட்டு, துப்பாக்கியால் சுட்டார்கள். பிற்பாடு, ஆயிரம் ரூபாய் கொண்ட மணிபர்ஸை ரோடிலே போட்டாலும் எடுப்பதற்கு ஆள் இல்லை. ஆகவே, கள்ள நோட்டு அடிப்பவர்களுக்கு, அதில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தீவிரமான முறையில் விசாரித்து கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மக்களுடைய நிலையை நன்றாக உணர்ந்து, இந்த நேரத்தில் எநதவிதமான வரியும் போடக்கூடாது, மக்களுக்கு என்ன என்ன நன்மைகளைச் செய்யய வேண்டும் என்று நன்கு சிந்தித்து நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை எதைக் குறிக்கிறது என்றால், மக்களை வாழவைக்க, நல்ல வழியில் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இங்கு பிரதான எதிர்க்கட்சியாகிய இருக்கக்கூடிய காங்கிரஸ்காரர்கள் கடந்த இருபதாண்டுக் காலமாக நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மாநில வருவாய் 13 கோடியிலிருந்து இன்றைக்கு 200 கோடிக்கு உயர்ந்திருக்கக்கூடிய அளவுக்கு மக்களிடத்திலே வரி போட்டு, மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தார்கள். நிதிநிலை அறிக்கை என்று சொல்லும்போது மக்களின் மத்தியிலே என்ன என்ன புதிய வரிகள் வருகின்றனவோ என்று பாமரர்கள் அஞ்சிக் கொண்டிருந்தார்கள். அப்படிச் செய்து கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள்தான் இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து, "இந்த ஆட்சி வரி எதுவும் போடவில்லையே? இந்த நிதிநிலை அறிக்கையில் குறை காண்பதற்கு இடமில்லையே, இந்த ஆட்சிமீது குறை சொல்வதற்கு வழி இல்லையே" என்று வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையைக் குறைகூறிப் பேசுவதற்கு எந்தவிதக் காரணமும் கிடைக்கவில்லையே என்று வேதனைப்படுகிறார்கள் அவர்களுடைய கோரிக்கைக்காகவாவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு சிறு வரியையாவது போட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியில் இருக்கின்றவர்கள் ஒவ்வொருவரும் "வரி இல்லையே" என்று கேட்கிறார்கள். காரணம் என்னவெனில், இருபதாண்டுக் காலமாக வரி போட்டுப் பழக்கப்பட்டவர்கள் அவர்கள். வரி போடாத நிதிநிலை அறிக்கை போடப்படுவதைக் கண்டு அவர்களால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் யாருக்கு வரி போட வேண்டுமோ அவர்களுக்குப் போடவில்லை. ஏழை மக்கள்மீதுதான் வரி போட்டார்கள். வரி கொடுக்கக்கூடிய வசதி படைத்தவர்கள் மீது வரி போடாமல், ஓட்டை உடைசல்களாக இருக்கக்கூடிய ஏழை மக்கள்மீது வரியைத் திணித்தார்கள். நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் புதிய வரி எதுவும் அவசியமில்லையென்று கருதினார்கள். ஏழைகளுக்கு இந்த அரசாங்கம் எப்போதுமே வரி போடாது, இனிமேல் வரி போடப்பட வேண்டுமென்றால் அது பணக்காரர்களுக்குத்தான் போடப்படும் என்பதை பிரதான எதிர்க்கட்சிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இன்றையதினம் காங்கிரஸ்காரர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

1957-ல் பொதுத் தேர்தல் நடந்தது. காங்கிரஸ்காரர்கள் 152 பேர் சட்டமன்றத்தில் இருந்துகொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 15 பேராக அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் செயலாற்றிக் கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் தரப்பில் 152 பேராக இருந்தவர்கள் 1962-ம் பொதுத் தேர்தலில் 138 பேராகக் குறைந்தார்கள். இது எதைக் காட்டுகிறது? காங்கிரஸ்காரர்கள் உண்மையிலே மக்களுக்கு நன்மைகளைச் செய்திருந்தால் அவர்களுடைய விகிதாசாரம் உயர்ந்துதானே இருக்க வேண்டும். அதற்குப் பின்னர் 1967 பொதுத் தேர்தல் வந்தது. காங்கிரஸின் எண்ணிக்கை 138-லிருந்து 50 ஆகக் குறைந்தது. இந்த ஐம்பதைக்கூட 1972-ல் காப்பாற்ற முடியுமோ, என்னவோ? அடுத்த தேர்தலில் இந்த மாநிலத்தில் காங்கிரஸ் இருக்குமா? அல்லது இல்லாமல் போய்விடுமா என்பதற்குச் சான்றுதான் இன்றைய நிலைமை. இந்தச் சட்ட மன்றத்திலிருந்து எப்பொழுது வெளியேறுவோம், வெளியேறுவோம் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். "ஒரு நாள் வெளியேறுவோம்" என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இப்போது, சற்று நேரத்திற்கு முன்பாக ஒரு காங்கிரஸ் உறுப்பினர், "அவர்கள் செய்தது தவறு, இந்தச் சட்ட மன்றத்திலேயிருந்து வெளியேறக்கூடாது" என்பதற்காகவோ, என்னவோ உள்ளே வந்து விட்டார்கள். இப்போது மற்றொரு உறுப்பினர் சட்ட மன்றத்திற்குள்ளே இருக்கிறார். இருக்கிற 50 பேர்களும் ஒருமித்த கருத்தோடு இல்லையே என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பத்து பேர்களாவது இந்தச் சட்ட மன்றத்திற்கு வர வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். ஏனெனில் அவர்களுடைய பெரிய பாரம்பரியத்தை மக்கள் அவ்வளவு சீக்கிரத்தில் நிராகரித்துவிடக் கூடாது என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, எந்தப் பிரச்சினையின்மீதும் அவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லை. வரி போட்டிருந்தாலாவது அதை வைத்துக் கொண்டு பேசலாம். அதற்கும் நிதியமைச்சர் அவர்கள் இடம் கொடுக்கவில்லை. ஆகவேதான் வாரியார் பிரச்சினையை பெரிய பிரச்சினையாக ஆக்கிக் கொண்டு வந்தார்கள். ஆனால் வாரியார் அவர்களோ இவர்களுடைய காலை "வாரி" விட்டுச் சென்று விட்டார்கள். எந்தப் பிரச்சினை கிடைக்கும் என்று தாவித் தாவிப் பார்க்கிறார்கள். ஆனால் எல்லாப் பிரச்சினைகளும் அவர்களை ஒதுக்கிவிடுகின்றன. (மணியடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, மைசூரிலும், பம்பாயிலும் சிவசேனை செய்யும் அட்டூழியங்களைக் கண்டித்தார்களா? அதற்காக என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்? சிவசேனையைக் கண்டித்து ஓர் அறிக்கையாவது விட்டார்களா? இந்தச் சட்ட மன்றத்தில் சிவசேனையின் அட்டூழியங்களை எதிர்த்துப் பேசினார்களா? அல்லது டெல்லி அமைச்சர் அவர்களைச் சந்தித்து பேச வேண்டுமென்ற கருத்தையாவது சொன்னார்களா? இந்தச் சட்ட மன்றத்

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1969 மார்ச் 7

இரோஷின் கப்பல் வருகிறது என்று பத்திரிகையிலே பார்த்தோம். ஏழைகளினுடைய நிலைமை என்ன? மேற்கு வங்காளத்தில் தேர்தல் நடந்தது, மத்திய சர்க்கார் இரண்டு கப்பல்கள் அங்கே திருப்பிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி மந்திரிகூட சரியாகப் பதில் சொல்லவில்லை.

லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது, அதில் கவனம் செலுத்த வேண்டும்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள்பற்றி ஒரு வார்த்தை இல்லை. தலைமேல் வைத்து விற்பனை செய்து நாங்கள் பக்கபலமாக அவர்களுக்கு இருக்கிறோம் என்று சொன்னவர்கள் இன்றைக்கு அதைச் செய்வதற்கு எத்தனையோ வழிவகைகள் இருந்தும் அதைப்பற்றிக் கவலையில்லாமல் இப்படி இருப்பது ரொம்ப வருத்தப்படக்கூடிய விஷயம்.

வருமானத்திற்கு வழிகள் எவ்வளவோ இருக்கின்றன. பட்ஜெட்டிலே 16, 17 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அது மாத்திரமல்ல மேலும் துண்டு விழக்கூடிய நிலைமை ஏற்படலாம். காரணம் மத்திய சர்க்கார் பெரிய அளவுக்கு வரி விதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறபடியால் மாநிலத்தைப் பாதிக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்காரிடம் ஒரு திட்டத்தின் அடிப்படையிலே தீவிரமாக எல்லோரும் போராடக்கூடிய நிலைமை வரவேண்டும். நாங்கள் போராடத் தயாராக இருக்கிறோம். நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம், காங்கிரஸ் கட்சியைத் தவிர மற்ற எல்லோரும் ஒத்துழைப்பார்கள், யார் ஒத்துழைக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆளுங்கட்சி கொஞ்சம் தயக்கம் காட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன். மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு போதுமான அளவுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும், எந்த அளவுக்கு நிதியைக்கேட்டுப் பெறுகவேண்டும் என்பதிலே எல்லாம் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கார்களை இன்ஷூர் பண்ணுவது தற்போது தனிப்பட்ட கம்பெனிகளிடம் இருக்கிறது. இந்தப் பொறுப்பை நம்முடைய மாநில சர்க்கார் எடுத்துக் கொண்டால் வருஷத்தில் 5 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கும். கேரளத்தில் அந்த மாதிரி இருக்கிறது. அதனால் அங்கு 2 கோடி ரூபாய் கிடைக்கிறது. அதை இப்போது வந்துள்ள சர்க்கார் கொண்டு வரவில்லை. காலஞ்சென்ற சர். சி. பி. ராமசாமி அய்யர் காலத்திலிருந்தே அங்கு செயல்பட்டு வருகிறது. ஆகவே, இதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

சிறு தொழில்களைப் பொருத்தவரை காங்கிரஸ் சர்க்கார் காலத்திலிருந்து இதுவரை பெரிய அளவுக்கு ஊக்குவிக்கப்படுவதாகச் சொல்லப்படு வருகிறதே தவிர ஒரு லைசென்ஸ் பெறுவதற்கு அண்டர் கிரவுண்ட், அப்பர் கிரவுண்டில் எல்லாம் வேலை செய்யவேண்டியிருக்கிறது. உடனடியாக லைசென்ஸ் கிடைப்பதற்கு வழி செய்து உற்பத்தி பண்ணக்கூடிய பொருள்களை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் [illegible] கொள்கிறேன்.

பல தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்கு மிஸ்-மானேஜ்மெண்ட் தான் காரணம். தொழிலாளி பணத்தை [illegible] விடும் அளவுக்கு நிலை ஏற்பட்டிருக்கிறது. பிராவிடெண்ட் பண்ட் பணத்தை பாங்கில் போடவில்லை. சாதாரண தொழிலாளி, 5 ரூபாய் 10 பாய் எடுத்துவிட்டால் லாக்கப்பில் போட்டு அடித்து நொறுக்கிவிட்டு காக்காய் வலிப்பு அந்த வலிப்பு என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். தொழிலாளி பணத்தை எடுத்து மோசடி செய்தவர்கள் மீது வழக்குப் போட்டு அவர்களைக் கம்பி எண்ண வைக்கும் அளவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும். தவிர பிராவிடெண்ட் பணமே கட்ட முடியவில்லை, அதனால் தொழில் நடத்த முடியவில்லை என்று [illegible] அமைச்சர் [illegible] அவர்கள் கூறுவதைக் கூறுவது முதலாளிகளுக்கு ஆதரவான போக்கில்தான்

1969 மார்ச் 7] [திரு. வி. கே. கோதண்டராமன்]

இருக்க முடியும். கடுமையான அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் நமுடைய பார்வை செலுத்தப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டால் யாபுரத்தில் சிமெண்ட் ஆராய்ச்சி பண்ண 1964-ல் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. மிலிடரி எஞ்சினியர் ஒருவரை போட்டு 2 லட்சம் ரூபாய் செலவு செய்தோம். இதுவரை ஒரு பலனும் காண முடியவில்லை அப்பேர்ப்பட்டவர்களை எதற்காக உத்தியோகத்தில் வைத்திருக்கிறார்கள் பணத்தை பங்குபோடும் [illegible] ஊதாரித்தனமாக நடந்துகொண்டிருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒரே நபர் அண்ணா, தம்பி, [illegible] பத்து, இருபது, முப்பது என் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் லைசென்ஸ்களைப் பெற்று கொள்ளை லாபம் அடிக்கும் நிலை இருக்கிறது. காட்பாடியில் ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருப்பதாக சொல்லப்பட்டு வந்தது என்ன வாயிற்று? உடனடியாக அதை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்

விற்பனை வரிச்கு லிமிட் 15,000 என்று இருக்கிறது, அதை 30,000 என்று ஆக்கவேண்டும். எந்தெந்த ராஜ்யத்தில எப்படி எப்படி என்ற புள்ளி விவரம் இல்லை. ஆனால் ராஜஸ்தானில் 30 ஆயிரம் என்று தெரிகிறது. அதைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும்.

நாட்டுச் செக்கு குடிசைத்தொழிலாகும். அது கூலிக்காரன் தொழில். அதற்கு வருஷம் ஒன்றுக்கு பத்து ரூபாய் கட்டி லைசென்ஸ் பெறவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் இதற்கு போட்ட லைசென்ஸ் தொகையை ரத்து செய்தார்கள். அவர்கள் போன பிறகு நீங்கள் போடுகிறீர்கள். இது அவருக்கு வேட்டு வைத்த மாதிரி இருக்கிறது. ஆகவே, இதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு இலாகா ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறது. இதைப் பற்றி மசோதா கொண்டு வருவதுபற்றி கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அந்தத் துறை இப்போது இன்னொருவர் கைக்கு வந்திருக்கிறது. இரண்டு வருஷமாக ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் ஊழல் செய்த ஆட்கள் சந்தோஷமாக இருக்கிற அளவுக்கு நிலைமை போய்விடுமோ என்று வருத்தமாக இருக்கிறது. இதிலே பெரிய அளவுக்குக் கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக அயனாவரம் பால் பண்ணையைப் பொறுத்தவரையில் "பை-லா" போட்டிருப்பதன்படி ஐந்து வருஷத்திற்குப் பிறகு சட்டப்படி ஜெனரல் பாடியைக் கூட்டி வேறு போர்டு அமைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதற்கான நிலைமைகள் ஏற்படவில்லை. அதை மாதவரம் பால் பண்ணையோடு சேர்த்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்யாமல் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப்பற்றி திட்டவட்டமான கொள்கை இல்லை. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே தகராறு வருகிறது என்று சொல்லும்போது போலீஸ்காரர்களால் எந்த அளவுக்கு மோசமான நிலைமைகள் ஏற்படுகின்றன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் இடையே தகராறு வருகின்ற நேரத்தில் விவசாயிகளைச் சுட்டுத் தள்ளுகிறார்கள், அடக்கி ஒடுக்குகிறார்கள். எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தை குட்டிகளை அடித்திருக்கிறார்கள், மிராசுதாரர் அடியாட்கள் சாப்பாடு செய்வதற்கு வைத்திருந்த பாத்திரங்களை உடைத்துப் போட்டிருக்கிறார்கள். கிருஷ்ணசாமி என்பவரின் மனைவி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். கணவனை அடித்து எங்கோ கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள். நன்னிலம் தாலுகாவில் இருந்து எழுதியிருக்கிறார்கள். கணவனை உடனடியாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று மந்திரிக்கும் எழுதியிருக்கிறார்கள், போலீஸ் அதிகாரிக்கும் எழுதியிருக்கிறார்கள்.

திலிருந்து ஒரு குழுவையாவது அனுப்பி டெல்லி மந்திரிகளைச் சந்திக்க வேண்டுமென்றாவது சொன்னார்களா? அவர்களுக்கு இருக்கிற எண்ணமெல்லாம் ஆட்சிக்கு எப்படி வர வேண்டும் என்பதுதான்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையிலே பி.யு.சி. வகுப்பு வரையில் இலவசக் கல்விக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிச் சொல்லும்போது காங்கிரஸ்காரர்கள், "நாங்கள் கொண்டு வந்ததுதானே இது, இப்போது நீங்கள் அதை அமல்படுத்துகிறீர்கள்" என்று சொல்லி தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்கிறார்கள்.

இருபது ஆண்டுக் காலமாக ஆட்சி செய்தவர்கள் இதைச் செய்யாதவர்கள் செய்யக்கூடிய ஆட்சியைப் பார்த்துப் பாராட்ட வேண்டியவர்கள் சொல்கிறார்கள், "நாங்கள் சொன்னோம், நீங்கள் செய்கிறீர்கள்" என்று. இது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சேலம் இரும்பாலைக்காக பத்துக் கோடி ரூபாயை இந்த அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இது எவ்வளவு நீண்டகாலப் பிரச்னையாக இருந்து வருகிறது, மக்களுக்கு என்ன என்ன தேவை, தமிழகத்திலே தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமே என்றெல்லாம் இந்த அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. அவர்கள் அதையாவது பாராட்டுகிறார்களா என்றால் இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களைப் பாராட்டியோ புகழ்ந்தோ பேசியதில்லை அப்படிப்பட்ட பழக்கம் அவர்களுக்குக்கிடையாது அந்த எண்ணமும் கிடையாது.

அதுமட்டுமல்ல, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இருப்பது வட ஆற்காடு மாவட்டம்தான். அங்கே இன்றைக்குக்கடும் பஞ்சம் இருக்கிறது. பஞ்சம் என்றால் ஆடு மாடு குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத நிலைமையில் ஆடுமாடுகளை ஓட்டிச் செல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அங்கே பஞ்சநிவாரணத்திற்காக 36 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அது போதவே போதாது. ஏறக்குறைய இரண்டுகோடி ரூபாயாவது கொடுத்தால்தான் அங்கேயுள்ள பஞ்ச நிலைமையைச் சமாளிக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நாம் அங்கே செலவழிக்கக்கூடிய இரண்டு கோடி ரூபாய் நல்ல ஆக்கப் பூர்வமான வேலைகளுக்காக இனிமேல் எதிர்காலத்திலே இது போன்ற பஞ்சம் வந்ததால் தடுத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இது போதாது. இன்னும் அதிகமாக அதாவது 2 கோடி ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வரி இல்லை, வரி இல்லை என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு உதவியாகக் வரிப் போடுவதற்கு நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு மணிலா போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப் போவதற்கு குவிண்டால் ஒன்றுக்கு 5 ரூபாய் என்ற அளவில் வரி விதித்தால் ஏறக்குறைய $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வரும். அது நம்முடைய மாநிலத்தைப் பாதிக்காது. வெளி மாநிலங்களில் அப்படிச் செய்கிறார்கள். எனவே $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவில் மேன்மேலும் இன்னும் அதிகமான நன்மைகளை நம்முடைய மாநிலத்திற்கு செய்து கொள்ளலாம். அது மட்டுமல்ல............(மணியடிக்கப்பட்டது).

*** திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, நமக்கு முன்னால் நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய பட்ஜெட் உரையை நான் வரவேற்கிறேன். அதை வரவேற்கக்கூடிய அதே நேரத்திலே அதிலே இருக்கிற ஒரு சில குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். இது காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோதும் சரி இப்பொழுதும் சரி, வரவேற்கிறேன் என்று சொல்லித்தான் எதிர்ப்பார்கள். எதிர்க்கிறேன் என்று சொன்னாலும் குறைபாடு

களைப் பேசிக் கொண்டிருப்பார்கள், அதேபோன்று ஆதரிக்கிறேன் என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னாலும் குறைபாடுகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பி.யு.சி.யைப் பொறுத்த வரையிலும் இலவசக் கல்வி கொடுத்தது அதேபோன்று விவசாய அபிவிருத்திக்காக மின்சார அபிவிருத்தி செய்வதற்கு அதிகமான பணம் ஒதுக்குவது, பிரதானமாக இன்னும் பார்த்தால் தமிழ்நாடு என்று பெயர் வைத்திருப்பது இதுபோன்ற பல பிரசனைகளை வரவேற்கக்கூடிய அளவுக்கு இருப்பதை மூடிமறைப்பது சரியல்ல. பி.யு.சி.யில் இலவசக் கல்வியை எங்கள் காலத்திலேதான் ஏற்பாடு செய்தோம், அந்தத் திட்டம்தான் இப்போது வந்திருக்கிறது என்ற அளவுக்குக் காங்கிரஸ்காரர்கள் சொல்லலாம். ஆனால் நான் கேட்பேன். இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்னாலேயே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வீடு இல்லாதவனுக்கு வீடு, நிலம் இல்லாதவனுக்கு நிலம், கொடுப்போம், லஞ்ச ஊழல்களைப் போக்குவோம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம் என்று சொன்னார்கள், இருபது ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட ஏதாவது செய்திருக்கிறார்களா? உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்று சொன்னார் மாபெரும் தலைவர் மகாத்மா காந்தி, ஆனால் பெருந்தலைவர் என்று சொல்லக்கூடிய காமராசர் என்ன சொல்லுகிறார்? உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றால், மாடுதான் உழுகிறது மாட்டுக்கு நிலம் சொந்தமா? அப்படியானால் சிறைக்கிறவனுக்கு தலை சொந்தமா? வெளுப்பவனுக்கு துணி சொந்தமா? என்று சொன்னார். அதுதான் அவருடைய சோஷலிஸம். அப்படிப்பட்ட சோஷலிஸம் பேசி சர்க்காருக்கு வந்துவிடலாம் என்று பார்த்தார்கள், ஆகவே நாங்கள்தான் சொன்னோம் என்று சொல்வது கூடாது, என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது அதைப் போக்குவதற்கு இந்த சர்க்கார் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

வேலை ஓரளவுக்குத்தான் கொடுக்கமுடியும், எல்லோருக்கும் பரிபூரணமாக வேலை கொடுக்கமுடியும் இந்த சர்க்காரிலே என்று நான் சொல்லவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால் 55 வயது ஆனவர்களை ரிடையர் ஆக்கி உடனே வீட்டுக்கு அனுப்ப வேண்டும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து சிபார்சுகள் செய்து அதற்குமேலே எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது. அதைப் போக்கவேண்டும். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. மதுவிலக்கை ரத்து செய்து விடலாம். அதன்மூலம் பல பேர்களுக்கு வேலை கிடைக்கும். அடுத்ததாக பான்புரோக்கர் ஷாப்புகளை கூட்டுறவு முறையில் 10 ஆயிரம் கடைகள் வரை வைக்கலாம். அப்படிச் செய்தால் அதிலே பலருக்கு வேலை கிடைக்கும். இப்படியெல்லாம் வழிகள் சொல்லமுடியும். ஏதோ 10 நிமிஷம் 15 நிமிஷம் கொடுத்து பேசச்சொன்னால் எப்படிச் சொல்லமுடியும்? ஆகையினாலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக ஆஸ்பத்திரிகளிலே மருந்து கிடையாது. சீட்டு எழுதிக் கொடுத்துவிடுகிறார்கள். வாங்கிக் கொள் என்று சொல்கிறார்கள். ஏழைப்பட்டவன் மருந்து வாங்க பணத்திற்கு எங்கு போவது? பிரதானமாக இருப்பது உணவும், நோய்வாய்ப்பட்டால் மருந்தும்தான். மருந்து மத்திய சர்க்கார் அதிகாரத்தில் இருக்கிற மெடிகல் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் அவர்களிடத்திலே இருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் இவ்வளவு வேண்டுமென்று எழுதி அனுப்பினால் 5 மாதம் 6 மாதங்கள் ஆகிறது. அதிலும் 40 அயிட்டங்கள் கேட்டால் பத்து அயிட்டங்கள் தான் வரும். எனவே இதைக் கவனித்து 10, 15 வருஷத்திற்கு முன்னாலே ஒதுக்கப்பட்ட தொகையை இப்பொழுதும் ஒதுக்காமல் கூடுதலாக்க வேண்டும். முன்பு 1 பைசாவாக இருந்த மருந்து இன்றைக்குப் பத்து பைசாவாக இருக்கிறது. எனவே அதற்கேற்றவாறு தொகையை அதிகமாக ஒதுக்கவேண்டும்.

பீடித் தொழிலாளர் சட்டம் 1958–ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வந்தது. பத்து வருஷத்திற்குப் பிறகும் ஒன்றும் பண்ணவில்லை. (மணி அடிக்கப்பட்டது) எங்கள் கட்சித் தலைவர் அவர்களுடைய நேரத்தையும் எனக்குத் தர அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 15 நிமிஷம் ஆகப் போகிறது. 11–15 மணிக்கே பேச ஆரம்பித்தீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் அது பற்றி ஒரு சட்டம் கொண்டுவந்தது. முதலாளிகள் ரிட் போட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு கவுன்டர் ஸ்டேட்மெண்ட் கொடுக்கவே ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது.

மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றை வாபஸ் வாங்க வேண்டும். அதிலே நம்முடைய சர்க்காருடைய அபிப்பிராயம் என்ன என்று தெரிய வேண்டும்.

தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வதில் திட்டவட்டமான கொள்கை இருக்க வேண்டும். தொழிலாளர் மத்தியில் தேர்தல் வைத்து எது மெஜாரிடியாக வருகிறதோ அதை அங்கீகாரம் செய்ய வேண்டும். காங்கிரஸ்காரர்கள் எந்த முறையைப் பின்பற்றினார்களோ அந்த முறையில் இந்தச் சர்க்காரும் செய்வது சரியல்ல. தொழிற்சங்கங்களைப் பிளவுபடுத்தக்கூடிய தன்மையில், பம்பாயில் சிவசேனை என்று வைத்து எப்படி மற்றவர்களை அடிக்கக்கூடிய நிலை இருக்கிறதோ அதே போன்று எண்ணூரில் நாம் தமிழர் படை என்று வைத்துக்கொண்டு, அங்கிருக்கக்கூடிய மலையாளித் தொழிலாளர்களை அடித்து சித்திரவதைப்படுத்தி வருகிறார்கள். போலீஸ்காரர்களிடம் புகார் கொடுத்தும் சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. இது போன்ற நிலைமைகள் தமிழகத்திற்கு இழிவான பெயரை உண்டாக்கிவிடும். காங்கிரஸ்காரர்கள்தான் அந்த மாதிரிப் போக்கில் ஈடுபடக்கூடியவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் நம்முடைய சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினை பிரதானமான பிரச்சினை. மழை இல்லாததால் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தற்போது போதுமான அளவுக்குப் பணத்தை ஒதுக்கி அதிகப்படியாகக் கொள்முதல் செய்து வைக்கவில்லையென்று சொன்னால் இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு என்ன நிலைமை ஏற்படும் என்றே சொல்ல முடியாது. அந்த அளவுக்குப் பயங்கரமான நிலைமை இருக்கிறது. இப்போது எங்கெல்லாம் மழை பெய்யவில்லையோ அங்கு பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதாது. போதுமான அளவுக்கு மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடியாவது பணம், அரிசி வாங்கியாக வேண்டும். மிகப் பெரிய தண்ணீர் வசதி செய்ய வேண்டும். இயற்கையாகவே நீர்த் தேக்கங்களுக்கு எங்கெங்கு வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கிறதோ அங்கெல்லாம் மிகப் பெரிய அளவுக்கு வசதி செய்யப்பட வேண்டும். நீர்த் தேக்கங்கள் கட்டப்பட வேண்டும். வடார்க்காடு மாவட்டத்திலே செய்யப்பட்ட மோர்தானா டாம், பத்தலப்பள்ளி, மேல் அரசம்பட்டி டாம், புல்லூர் டாம் ஆகியவைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். உணவு தானியங்களின் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு சர்வ கட்சியினரும் கொண்ட கமிட்டிகளை அமைக்காத வரையில், ஊழலைத் தடுக்க முடியாது, கள்ளக் கடத்தலைத் தடுக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனம்பற்றி இன்றைக்கு உள்ள சட்டதிட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டும். தேர்தல் வரப்போகிறது, பஞ்சாயத்துத் தலைவர்களோ, அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களோ, நேரடியாக அந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே சர்க்கார் சார்பில் சொல்லப்பட்டது. இதை உடனடியாகச் சட்டமாக மாற்றித் திருத்திக்கொண்டுவர வேண்டும். அதே போல் முனிசிபல் ஆக்ட் பற்றியும், கனம் அமைச்சரவர்களுக்கும் தெரியும், 1961–ம் வருஷத்தில் ஆய்வு செய்ய ஒரு கமிட்டி போடப்பட்டு, அந்தக் கமிட்டி போடப்பட்டு 10 வருஷங்கள் ஆகப்போகிறது, அது ஊறுகாய்ப் பானைக்குள் போட்ட மாதிரியாக இருக்கிறது. எனவே, அவைகளை மாற்றித் திருத்தி அமைத்தாக வேண்டும்.

இவைகளையெல்லாம் இன்றைக்குச் சரியாக அமல்படுத்த வேண்டுமானால் மத்திய சர்க்காரோடு நாம் எதிர்த்துப் போராடாத வரையில் ஒன்றுமே செய்ய முடியாது. இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இங்கே இல்லையே என்பதுதான் வருத்தம். மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு வரி போட்டிருக்கிறார்கள் என்பது பற்றி பேச்சு மூச்சே விடவில்லை. இந்த சர்க்காருக்கு எந்த அளவுக்கு உதவ வேண்டும் என்று எடுத்துச் சொல்லும் அளவுக்கு நிலைமை கிடையாது. அதற்குப் பதிலாக, கூட்டணியை உடைக்க வேண்டும், கம்யூனிஸ்ட் கட்சி பச்சோந்திக் கட்சி, அவர்கள் உங்களை ஜீரணம் செய்துவிடுவார்கள், அவர்கள் துரோகிகள் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் சுட்டீர்கள் என்றால், அவர்கள் சந்தோஷப்படுவார்கள், உங்களை நல்லவர்கள் என்று சொல்லுவார்கள். எங்களைச் சிறையில் வைத்தால் தங்கமான சர்க்கார் என்று உங்களைச் சொல்வார்கள். விவசாயிகளைத் தினந்தோறும் அடித்து சித்திரவதை செய்தால் உங்களை ரொம்பவும் வாழ்த்துவார்கள். அதுதான் அவர்களுடைய பாரம்பரியம், வேறு ஒன்றும் கிடையாது. சுட்டுக்கொண்டே வந்த பாரம்பரியம், ஜெயிலில் அடைத்துக்கொண்டே வந்தவர்கள் அவர்கள். அவ்வாறு நீங்கள் செய்யாததனால்தான் அவர்கள் குறை கூறுகின்ற அளவுக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. எங்களுக்குத் தெரியும் பச்சோந்திகள் என்றால் யார் என்று. ஏழை மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாமல், பெரு முதலாளிகளுக்குச் சாதகமாகச் செயல்படுபவர்கள்தான் பச்சோந்திகள். ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி மிராசுதார்களைப் பாதுகாக்கச் செயல்படுவது பச்சோந்தித்தனம். இன்றைக்கு நாம் இவற்றைப் பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பதென்றால், மணிக்கணக்காகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். அதிலும் குறிப்பாக இன்றைக்கு தமிழகத்திலேயுள்ள தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யக்கூடிய அளவுக்கு பலதும் அவர்கள் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பலதும் சொல்ல முடியும். குறிப்பாக, பம்பாய்க்காரர், தமிழர்களைக் குருடன் என்றும், மாவறைக்கிறவன் என்றும், நாய் தின்னுகிறது என்றும் சொல்லக்கூடிய நிலையிருக்கிறது. மகாராஷ்டிரக்காரன் தமிழர்களை நாய் என்றும், கண்டபடி அடித்தும், உதைத்தும் செய்யக்கூடிய அளவுக்கு இதற்குக் காவல் கொடுத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தேச பக்தி நிறைந்தவர்களைப் போலப் பேசுகிறார்கள் என்றால் இதிலேயுள்ள அர்த்தம் புரியவில்லை. கடைசியாக வாரியாரைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக்கொண்டு.......
(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 20 நிமிடங்கள் ஆகின்றன; இன்னும் நிறையப் பேர் பேசவிருக்கிறார்கள். நேரம் கிடையாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதோ முடித்துவிடுகிறேன். வாரியாரைத் தலைக்கு மேல் தூக்கிவைத்துக்கொண்டு ஆடுகிறவர்கள், காந்தியாரைக் கொலை செய்தது பற்றிப் பேச்சு மூச்சு விடுவது கிடையாது. காந்தியாரைக் கொலை செய்தவர்கள் இவர்கள்தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அபுல்கலாம் ஆஜாத் எழுதிய இந்திய விடுதலை வெற்றி என்ற புத்தகத்தைப் பார்த்தால் திட்டவட்டமாகப் புரிந்துகொள்ளலாம். எவ்வளவோ இருக்கிறது. கட்சியின் தலைவரை, ஒப்பற்ற தலைவரைக் கொலை செய்துவிட்டு, மற்றவர்களைப் பார்த்துக் கொலைகாரர்கள், இவரை அடித்துவிட்டார்கள், அவரை அடித்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். வாரியார் அவர்கள் சொல்கிறார்கள், எல்லாமே அவன் செயல், அவனன்றி ஓரணுவும் அசையாது என்று. அப்படியென்றால், எல்லாமே அவனுடைய செயல்தான் என்றால், எல்லாமே அவனுடைய உத்திரவுப்படிதான் நடக்கிறது என்றால், அவன் உத்திரவுப்படிதானே அங்கே அடித்திருக்க வேண்டும். அவனுடைய உத்திரவினால்தானே அடியும் விழுந்திருக்க வேண்டும். அதை ஒத்துக்கொள்ள வேண்டுமல்லவா ? இதிலே நம்பிக்கையில்லை

யென்றால், எதிலுமே நம்பிக்கை இல்லை என்று சொல்ல வேண்டும். இதெல்லாம் பாமர மக்களை ஏமாற்றக்கூடிய போக்கு. இதை நீடிக்க விடக் கூடாது. நாஸ்திகப் பிரச்சாரமாக இல்லை என்றாலும் கூட, இப்படி மக்களை ஏமாற்றிச் செல்லக்கூடிய போக்கு இருக்கக் கூடாது. சர்க்காரும் இதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். ரேடியோவை இன்று வைத்தால் ஆஸ்திகப் பிரச்சாரம் மணிக்கணக்காக இடம் பெறுகிறது. ஆஸ்திகப் பேச்சுக்கு இரண்டு மணி நேரம் என்றால், நாஸ்திகப் பேச்சுப் பேசுவதற்கு கால் மணி, அரை மணியாவது கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையிலே முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கொளத்தூர் கோதண்டம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பாராட்டி என்னுடைய வார்த்தைகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் அரசாங்க ஊழியர்கள் நீண்ட நாட்களாகக் கோரிவந்த மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குப் பொருந்தும் அகவிலைப்படி வீதங்களையும், நகர ஈட்டுப் படியினையும், விடுப்பு உரிமைகளை ரொக்கமாக மாற்றிக் கொள்வதற்கும், இன்னும் அரசு ஊழியர்களின் திருமணச் செலவுகளுக்குக் கடன் போன்றவைகளும் இந்தத் திட்டத்திலே வந்திருக்கின்றன. விவசாயிகளைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே விவசாயம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்திலே விவசாயிகளுக்குச் செய்யப்பட்டிருக்கிற காரியங்கள் உண்மையிலேயே பாராட்டவும், போற்றவும் கூடியதாகும். அதே நேரத்திலே மத்திய அரசிலே இருக்கின்ற காங்கிரஸ் ஆட்சியினர் விவசாயிகளுக்கு எந்த அளவுக்குத் தொல்லைகள் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு, எந்த அளவுக்கு வரி விதிக்க முடியுமோ அந்த அளவுக்கு வரி விதித்து இருக்கிறார்கள். இங்கு மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் இல்லாவிட்டாலும், பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே வந்த நேரத்திலே, கிராமம் கிராமமாக, வட்டம் வட்டமாகக் கூட்டங்கள் போட்டு இந்த அரசு விவசாயிகளுக்கு மிகக் கொடுமையான நிலைமைகளை உருவாக்கிச் செய்து கொண்டிருக்கிறார்கள், விவசாயிகள் இந்த நாட்டிலே வாழ முடியவில்லை என்று கூக்குரல் எழுப்பி வந்தார்கள். ஆனால் இன்று மத்திய சர்க்கார் விதித்திருக்கின்ற வரி விகிதங்களைப் பார்க்கும்பொழுது, விவசாயிகளுக்குத் தேவையான மின்சார பம்பு செட்டுகளுக்கும், விவசாயிகள் உபயோகப்படுத்தும் உரத்திற்கும் இப்படிப் பலப் பல வரிகளை அவர்கள் விதித்திருக்கின்ற பொழுது காங்கிரஸ் நண்பர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன், நெஞ்சிலே கை வைத்துக்கொண்டு சொல்லுங்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கு நல்ல பல காரியங்களை ஆற்றி வருகிறதா அல்லது உங்கள் தலைமையில் உள்ள மத்திய சர்க்கார் விவசாயிகளுக்கு நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறதா என்பதைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள், விவசாயத்தில் போதுமான லாபம் கிடைக்கவில்லை, நஷ்டமாகத் தான் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், மின்சார வசதியைக் கொண்டு பம்பு செட்டுகளின் மூலமாக அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நேரத்தில் இன்று மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரி சாதாரண, ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, அன்றாடம் காய்ச்சிகளுக்கு போடப்பட்டிருக்கின்ற வரியாக இருக்கிறது. ஆனால் இந்த மாமன்றத்திலே பேசுகின்ற அருமை காங்கிரஸ் நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக நிதிநிலை அறிக்கையில் உப்பில்லை, சப்பில்லை என்று கூறிக்கொண்டிருப்பதானது, அவர்கள் அங்கே செய்யும் தவறை எப்படியாவது மறைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடு பேசுகின்ற பேச்சாகும். இன்றைக்குக் குறிப்பாக "அக்ரோ-இண்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன்" மூலமாக பெரிய தொகையினை, டிராக்டர்கள், மற்றும் விவசாயத்திற்குத் தேவையான எண்ணெய்ப் பொறிகள், மின்சார விசையேற்றங்கள், மற்றும் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கும் வழி செய்திருக்கிறோம். இந்த ஏற்பாடுகள்

உண்மையிலேயே பாராட்டுவதற்குரிய ஏற்பாடுகள் ஆகும். அதேபோல 3 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களில் பயன்தரும் வித்துக்களைப் பயிரிட ஏற்பாடு செய்திருப்பதும், ஒரு லட்சம் ஏக்கர்களில் ஒருபோக சாகுபடியை இருபோக சாகுபடியாக்க முயற்சி செய்திருப்பதும், உழவர்களுக்கு 5,000 தெளிப்பான்களை வழங்க வகை செய்யப்பட்டுள்ளதோடு, மற்றும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கென 500 விசைத் தெளிப்பான்களை வாங்க இருப்பதும் விவசாயத்திற்கு இந்த அரசு எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறது என்பதைக் காட்டும். இதற்காக இந்த அரசைப் பாராட்ட நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் தொழில் வளர்ச்சிக்கு 2·80 கோடி ரூபாய் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீண்ட நெடுநாட்களாகத் தமிழக மக்களின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சேலம் இரும்பாலையைப் பொறுத்த வரையில் நிச்சயமாக ஏற்பட்டுவிட வேண்டுமென்று முன்னாலே இதே மன்றத்தில் அமைச்சராகப் பதவியேற்றிருந்த திரு சுப்பிரமணியம் அவர்களும், அதற்குப் பின்னாலே திரு வெங்கட்டராமன் அவர்களும் நாங்கள் இதை நிச்சயமாக விடமாட்டோம், விடமாட்டோம் என்றும், காங்கிரஸ் ஆட்சியிலே சேலம் இரும்பாலை நிச்சயமாக ஏற்பட்டுவிடும் என்று உறுதி தந்தார்கள்.

நான் காங்கிரஸ் நண்பர்களை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் செய்யாத காரியத்தை, உங்கள் உள்ளத்திலே எழும்பாத ஒரு காரியத்தை திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது தவறா? இன்றைய தினம் ஆட்சிப் பொறுப் பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் முன்னோடி திட்டமாக அந்த திட்டத்தை எடுத்துக்கொண்டு அதற்காக 50 இலட்சம் ஒதுக்கி அதை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறது. நாங்கள் செய்திருக்கிறோம். தமிழகத்து மக்களுக்கும், தமிழகத்தில் கட்சி சார்பற்ற முறையில் இருக்கிற அத்தனை மக்களுக்கும் இருக்கிற அபிலாஷைகளைப் பார்த்துச் செய்கின்ற அளவுக்கு நாங்கள் இதைச் செய்திருக்கிறோம், என்பதை பார்க்கின்ற நேரத்தில் மத்திய அரசு, மாநில அரசுக்கு எவ்வளவு இன்னல் கொடுக்கிறது என்பதற்கு இதைப் போன்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டாகும். இன்னும் விவரம் கூற வேண்டுமானால், ஏற்கனவே இந்த மாமன்றத்திலே இருந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் இந்த மன்றத்திலே கூறி இருக்கிறார்; மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு வழங்கிய கடனை ஏறக்குறைய ஒருமுகப்படுத்தி, மத்திய அரசு வசூல் செய்கின்ற அளவுக்கு இங்கே நிலைமை இருக்க வேண்டும் என்பதை அவர்கள் வற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் மத்திய அரசு இங்கே கிடைக்கின்ற பணத்தைப் பெறுகின்ற நேரத்தில், நம் அரசு மானியமாகப் பெறுகின்ற பணம் நாம் மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டிக்கு 45 சத விகிதம் ஈடாகும். நமது மாநிலம் கடன் பெறுகின்ற தொகை 75 சத விகிதம் அசலுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய அளவாகும். ஆகவே, எப்படி நல்ல திட்டங்களைத் தமிழகத்தில் நிறைவேற்ற முடியும்? இந்த நிலையில் மத்திய அரசு போதுமான நிதி அளிக்கவில்லை என குற்றம் சாட்டுகிறேன்.

கோவாப்பரேடிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் ரிசர்வ் பாங்க் பணத்தை எல்.ஐ.சி. மூலமாக வாங்கிக் கொள்ளலாம் என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இதற்கு அவர்கள் அனுமதி அளித்திருக்கிற வட்டித் தொகை ஏறக்குறைய 5 3/4 சத விகிதம். ஆனால், இன்றைய தினம் இங்கே எல்.ஐ.சி. மூலமாக கோவாப்பரேட்டிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் கட்டுகின்ற வட்டித் தொகை 6 3/4 சத விகிதமாகும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு மத்திய அரசு உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்காக ஏறக்குறைய 3,600 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு ஓர் அறிக்கையை தயார் செய்திருந்தாலும் நமக்கு கிடைக்கும் என்ற அளவிலே

இருப்பது 100 கோடி ரூபாய் தான். ஏற்கனவே மூன்று ஐந்தாண்டு திட்டங்களிலே நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்திலே இருந்து இன்று வரையிலே நாம் எடுத்துக் கொண்டால் நமக்கு விகிதாசாரப்படி சேரவேண்டிய பணம் 11 சத விகிதத்திலிருந்து 6 சத விகிதமாக இன்றைய தினம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மத்திய அரசு மாநில அரசுக்கு எந்த அளவிற்குத் தொல்லைகள் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத் தொல்லைகள் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் நமக்குத் தேவையானவைகளை அவர்கள் இன்றைய தினம் கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் முடிப்பதற்கு முன்னாலே என்னுடைய தொகுதியைப் பற்றி சில விவரங்களை இந்த நேரத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய வட்டமான மதுராந்தகத்திலே கடந்த ஆண்டு ஏறக்குறைய 25,242 டன்களை கொள் முதலுக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இதுவரை 2 டன்கள் கூட கொள்முதல் செய்யவில்லையென்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் 25,000 டன்கள், 2 டன்களாக குறைந்திருப்பதைப் பார்த்தால், அங்கே பஞ்ச நிலை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது தெரியவரும். அமைச்சர் அவர்கள் பஞ்ச நிலையைப் போக்க அதிகமான அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும், குடிநீர்ப் பிரச்னை அங்கு அதிக அளவில் இருக்கிறது. ஆகவே, வரி வஜா செய்தும், கூட்டுறவு கடன்களின் வசூல் கால கெடுவை மாற்றியும், ஏற்கனவே இருக்கிற கூட்டுறவு கடன்களை மாற்றி அமைத்தும், அரசாங்கக் கடன்களுக்கு வரி வஜா செய்தும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, குடிநீர்ப் பிரச்னையைப் போக்குவதற்குத் துரிதமான ஒரு செயல் முறையைக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய போக்கு இதே நிலையில் இருக்குமானால், மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய, சேர வேண்டிய பணத்தை, உரிய பங்கை கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுமானால், எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள், இராமச்சந்திரன், ராஜா, வீராசாமி ஆகியோர் கூறியபடி இந்த நாடு பிரிந்தால் தான், துண்டிக்கப்பட்டால் தான் இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்படுமானால் அதற்கும் நமது அரசு தயாராக இருக்க வேண்டும், அந்த முறையில் செயல் பட வேண்டு மென்று என்னுடைய வேண்டுகோளை விடுத்து நான அமர்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நம்முடைய மத்திய அரசு புதிதாக 150 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டு, சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்திலே ஒரு பெரிய அடியைக் கொடுத்து, அவர்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற எல்லாப் பொருள்களின் விலையையும் ஏற்றி, அவர்கள் ரூபாய்க்கு 2 பைசா வரி போட்டால், இங்கே இருக்கிறவர்கள் ரூபாய்க்கு 10 பைசா விலை ஏற்றக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்து மக்களுக்குத் துன்பம் அளித்திருக்கிற இந்த நேரத்தில் நம்முடைய மாநில அரசு எந்தப் புது வரியும் போடாமல் பட்ஜெட் தயாரித்திருக்கிறது. அதோடு, புதிதான அம்சங்களையும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி, 7,900 ஆசிரியர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கொடுக்கின்ற அளவிலே திட்டம் தீட்டி, அதோடு பல நல்ல ஏற்பாடுகளை இந்த பட்ஜெட்டிலே செய்திருப்பதை நாம் வரவேற்கவேண்டும்.

என்றுமே காணாத ஒரு பெரிய வறட்சி நிலை இன்று இருப்பது இதிலே மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு நாம் நம்முடைய மாநிலத்திலிருந்து சகல ஏற்பாடுகளையும் செய்வதோடு இந்த எதிர்பாராத நிலையைப் போக்குவதற்கு மத்திய சர்க்கார் அதிகமான நிதியைக் கொடுத்து இந்தப் பஞ்ச நிலையைப் போக்குவதற்கு உதவி செய்யவேண்டுமென்று நம்முடைய மாநில

அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்துவதோடு மட்டுமல்லாமல் இதற்கு வெளியிலே சகலக் கட்சியைச் சார்ந்த மக்களையும் திரட்டி மத்திய சர்க்காரை வற்புறுத்தச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பஞ்ச நிலைமையினால் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது கிராமப் பகுதிகள் தான். மழை இல்லையென்றவுடன் குடி தண்ணீர் இல்லாத நிலையில் பல கிராமங்கள் இன்றையதினம் தவிக்கின்றன. அதுமட்டுமல்லாமல், அவர்கள் தங்களுடைய கால்நடைகளை வளர்க்க முடியாமலும், விவசாயம் செய்ய முடியாமலும், வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமலும் கஷ்டப்படுகிறார்கள். இது தவிர மற்ற தொந்தரவுகளும் அவர்களுக்கு இருக்கின்றன. அரசாங்கக் கடன் ஒரு பக்கத்திலே இருந்தாலும் தனியார், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன படுத்திக்கொண்டு சிறு சிறு விவசாயிகளிடமிருந்து—லேவாதேவிக்காரர்கள்—நிலத்தை ஜப்தி செய்து அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்யக்கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடி தண்ணீர் மட்டுமல்ல, விவசாயத்திற்கான தேவையான தண்ணீரும் கிடைக்கவில்லை. மழையில்லாததாலே கிணற்றிலேயும் தண்ணீர் வறண்டு போயிருக்கிறது. வறண்ட இடங்களில் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டும். 300 அடி ஆழம் வரை வறட்சியான பகுதிகளில் எல்லாம் ஆழமாக குழாய்க் கிணறுகள் அமைத்துத் தண்ணீர் இறைப்பதற்கு, குழாய்களின் மூலமாக தண்ணீரை எடுத்து மேலே கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு பகுதியிலும் செய்யவேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே துண்டு விழும் என்று எதிர்பார்க்கிற 19 கோடி ரூபாயை கிராமப் பகுதிகளிலே கடன் எழுப்பி சரிக்கட்டலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கிராமப் பகுதிகளிலே பலவிதமான தொந்தரவுகள் இருக்கின்றன. இதையும் கிராமப் பகுதிகளிலே கடன் வசூல் மூலம் நிறைவு செய்யலாம் என்றால், சாதாரணமாக சின்ன சின்ன விவசாயிகள் தான் அதனால் பாதிக்கப்படுவார்கள். அதிகாரிகள் விவசாயிகளை நிர்ப்பந்தித்து வசூல் செய்யக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, அந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலை சம்பந்தமாக, இன்று கோவையிலே பல மில்கள் வருஷக் கணக்காக மூடப்பட்டிருக்கின்றன. 20,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்காக அந்த பஞ்சாலைகளைத் திறக்க வேண்டுமென்று நாம் எவ்வளவு சொன்னாலும் முதலாளிகள் அந்த கோரிக்கைக்கு இசைவதாகத் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக தொழிலாளிகளுக்கு நஷ்ட ஈடாவது அந்த மில் முதலாளிகளிடமிருந்து வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைத்தறி சம்பந்தமாக சில சொல்ல ஆசைப்படுகிறேன். கைத்தறி தொழிலிலே ஈடுபட்டுள்ள 6 இலட்சத்திற்கு அதிகமான தொழிலாளர் குடும்பங்கள் நமது மாநிலத்திலே இருக்கிறார்கள். பெரும்பகுதி கைத்தறி நெசவாளர்களைப் பார்த்தால், ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் கூட வேலை கிடைக்காத நிலைமையும், அதே நேரத்திலே அவர்கள் கால் வயிறு கூடச் சாப்பிட முடியாத நிலைமையும் இருக்கிறது. அதற்குக் காரணம், இன்றைக்கு நூல் மலிவான விலைக்குக் கிடைக்காமல் அவர்கள் நெய்கின்ற துணிகள் விற்பனையாகாத நிலையும், கூட்டுறவு சங்கங்களின் கடன் போதுமான அளவு அவர்களுக்குக் கிடைக்காத நிலையும் தான். அவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், ரிசர்வ் பாங்கி மூலமும் தாராளமாக உதவிஅளிப்பதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள தொழில் இந்த கைத்தறி தொழில். ஒன்றை உறுதியாகச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். விசைத்தறிகளை எந்தக்காரணத்திற்காகவும் நம்முடைய மாநிலத்திலே புகுத்த அனுமதி கொடுக்கக்

கூடாது. விசைத்தறியைப் புகுத்திஞல் கைநெசவுத் தொழிலாளர்களுக்கு இப்பொழுதிருக்கிற அறைகுறை வேலை வாய்ப்பும் போய்விடும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாயக் கிணறுகள் என்று சொல்லப்பட்ட கிணறுகள் வெட்டும் திட்டத்தை நாம் இதற்கு முன்ஞல் அமுல்படுத்திக்கொண்டு வந்தோம். அதைப்பற்றி இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமே கூறப்படவில்லை. கடன் வாங்கமுடியாத சிறு சிறு விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் சிறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து பயன்படுத்திக்கொள்ள அரசு சமுதாயக் கிணறுகளை வெட்டிக்கொடுத்து, அவர்களுக்கு விவசாயம் செய்ய நல்ல வாய்ப்பு இருந்தது சென்ற காலத்தில். ஆகவே, இத்தகைய சமுதாய கிணறுகள் வெட்டிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முதியோர் பென்ஷனைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதியோர் பென்ஷனுக்காகக் கொடுக்கப்பட்ட மனுக்கள் பல ஆண்டு காலமாகியும் இன்னும் முடிவு செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. சகலவிதமான தகுதியும் இருந்தால் கூட, அவர்களுக்கு முதியோர் பென்ஷன் கிடைப்பதே கிடையாது. அதற்கென்று தனியாக தாசில்தாரோ அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ கிடையாது. அதுமட்டுமல்ல. முதியோர் பென்ஷனுக்கு மனுச் செய்தவர்களுக்கு, அவர்கள் இறந்துபோகும் காலம் வரையில் கூட, பல ஆண்டுகளாக பென்ஷன் கிடைக்காத நிலை இருக்கிறது. வயதானவர்கள், தகுதியுள்ளோர்களுக்கு கட்டாயம், தாமதமின்றி பென்ஷன் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்றைக்கு முதியோர் பென்ஷனுக்காக நாம் போட்ட சட்டங்கள் பலன் இல்லாமல் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும் நிலையில் இருக்கிறதே தவிர, தகுதியுள்ளவர்கள் அத்தனை பேர்களுக்கும் முதியோர் பென்ஷன் கிடைப்பதில்லை. ஆகவே, எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கும் வயதானவர்களுக்கு, தகுதியுள்ளோருக்கு அனைவருக்கும் தாமதம் இல்லாமல் முதியோர் பென்ஷன் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதி கோவில்பட்டி தொகுதி, மிகவும் பின் தங்கிய தொகுதி. 1956-ல் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு கூட இந்த மாநிலத்திலே மிகவும் பின் தங்கிய பகுதிகளிலே கோவில்பட்டி முதலாவதாக இருக்கிறது என்று கூறியிருக்கிறது. அந்தப் பகுதிக்கு எந்தவிதமான பாசன வசதியும் கிடையாது. அது மட்டுமல்ல. அங்கு குடி தண்ணீர் வசதி கிடையாது, நல்ல தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. அந்த வட்டத்தில் கிராமப் பகுதிகளில் பூமிக்கு அடியில் கீழே 300 அடி ஆழத்தில் போர் போட்டு, வெளியே தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வைப்பாறு என்ற ஒரு ஆறு அங்கே ஓடுகிறது. அந்த ஆற்றில் ஓடுகின்ற தண்ணீர் வீணுகாமல் பல இடங்களில் அணைக்கட்டுகள் கட்டி, கண்மாய்களுக்கு தண்ணீர் வந்து சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்பொழுது கூட அங்கே ஒரு அணை கட்டுவதற்கு இந்த பட்ஜெட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். மேலும், பல இடங்களில் அணைக்கட்டுகளை கட்டி, தண்ணீரை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும். பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மக்கள், கிராம மக்கள், விலைவாசியெல்லாம் ஏறக்கூடிய இந்த நேரத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலெல்லாம் நியாய விலையில் கொஞ்சம் அரிசி கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி நகரம் பெரிய நகரம். அந்தப் பெரிய நகரத்தில் குடி தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு திட்டம் ஒன்று ஏற்கனவே

சர்க்கார் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. தாமரபரணியாற்றுக்குப்பக்கத்திலிருந்து அந்த நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான ஒரு திட்டம் அது. அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்தால், பெரிய ஒரு நகரத்தில் குடி தண்ணீர் பிரச்னை தீரும். மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் நமக்கு இதற்கு முன்ஞல் கொடுத்த கடன்களையெல்லாம் நாம் இப்பொழுது திருப்பித் தர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்று ரூ. 13½ கோடி அளவுக்கு திருப்பிச் செலுத்தக் கூடிய சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ரூ. 13½ கோடியும் 1952-53-ம் ஆண்டில் ராயலசீமாப் பகுதியில் பஞ்சத் தணிப்புக் காரியங்களுக்காக பெறப்பட்ட கடன் தொகை. அந்தத் தொகையை இன்று நாம் திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. திருப்பிச் செலுத்தும் தவணையைக் கொஞ்சம் நீடித்துக்கொடுக்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படி முன்ஞல் கொடுத்த கடன்களை ரத்து செய்யவேண்டும் என்று நாம் கேட்கவேண்டும். இப்பொழுது இந்த மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பஞ்ச நிலையைப் போக்குவதற்கு அரசு அதிகமாக நிதியை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு ஆதரவாக பொது ஜனங்களின் ஆதரவையும் திரட்ட வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி தலைவர் அவர்களே, தென்ஞட்டு காந்தி பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, 1969-70-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை வரி இல்லாத பட்ஜெட் என்று எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ஞர்கள். வரியில்லாத பட்ஜெட் மாத்திரம் அல்லாமல், அதிலே இருக்கும் ஒரு முக்கியமான அம்சம், மத்திய அரசு வங்கியில் ஓவர்டிராப்ட் வாங்குவதில்லை என்ற ஒரு திட்டத்தையும் நிதி அமைச்சர் மாண்புமிகு திரு மதியழகன் அவர்கள் தெளிவாக நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிருர்கள். அதே நேரத்தில் இன்றைய தினம் மத்திய சர்க்கார் ரூ. 150 கோடிக்கு அதிகமாக வரி விதித்து, அந்த ரூ. 150 கோடியில் ரூ. 50 கோடி ராணுவத்திற்காக செலவு செய்யக்கூடிய இந்த நேரத்தில், தமிழ் நாடு சர்க்கார் வரியில்லாத ஒரு பட்ஜெட்டை, ஓவர்டிராப்ட் இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்திருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஓவர்டிராப்ட் இல்லாமல் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது, அண்ணு அவர்களுடைய வழியில் தமிழக அரசு செல்கின்றது என்பதற்கு ஒரு நல்ல சான்ருகும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெரிய புதிய நல்ல அம்சங்களெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பி.யு.ஸி. வகுப்பு வரையில், இலவசக் கல்வி, ஜாதி, சமயம், வருவாய் முதலிய வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லா மாணவர்களுக்கும் சலுகை அளிக்கக் கூடிய ஒரு நல்ல திட்டத்தை அதிலே சேர்த்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டு ரூ. 7 கோடி உயர்வாக அதாவது ரூ. 65·37 கோடி கல்விக்காக ஒதுக்கியிருக்கிருர்கள். 7,900 புதிய ஆசிரியர்களின் வாழ்க்கைக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான்கு புதிய கல்லூரிகளை திறப்பதற்கான நல்ல திட்டங்கள் இதிலே இருக்கின்றன. 8 கல்லூரிகளில் பட்டப்படிப்புகளை துவக்குவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ. 46·25 லட்சம் செலவு செய்வதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியிருக்கிருர்கள். பள்ளிக்கூட கட்டடங்களுக்காக ரூ. 75 லட்சமும், ஆய்வுக் கருவிகளுக்காக ரூ. 35 லட்சமும், சேலத்தில் உருக்காலையின் பூர்வாங்க வேலைகளுக்காக ரூ. 5 லட்சமும், மின்துறை பணிகளுக்காக ரூ. 40·63 கோடி, மூடப்பட்ட பஞ்சாலைகளை திறப்பதற்காக ரூ. 15 லட்சம், சென்னை, கோவை நகரங்களுக்கு படி அரிசி திட்டத்திற்காக ரூ. 8·79 கோடி, சென்னை நகரத்தில் குடிநீர்

சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்ற ஒரு கோடி ரூபாய், அரசு ஊழியர்களின் கலியாணக் கடன் வசதிக்காக ரூ. 10 லட்சம், வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு ரூ. 50 லட்சம், இப்படி பல நல்ல காரியங்களையெல்லாம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் பார்க்காத எனது அருமை எதிர்க்கட்சித் தோழர்கள் எந்தெந்த கோரிக்கைகளிலே ரூ. ஒரு லட்சம், அல்லது ரூ. 50 ஆயிரம், ரூபாய் இரண்டு லட்சம் குறைவாக இருக்கிறதோ, அவைகளையெல்லாம் எடுத்து இங்கே காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மிக முக்கியமான அம்சம் விவசாயப் பிரச்சினை. விவசாயத்திற்காக இந்த பட்ஜெட்டில் நல்ல பல புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டு கால தி.மு.க. ஆட்சிக்கு முன்பாக, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிய காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் இருபோக சாகுபடி நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 2·26 லட்சம் ஏக்கர் நிலத்தில் இருபோக சாகுபடி நடந்திருக்கிறது. தி.மு.க. அரசு வந்தபொழுது அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, தஞ்சை மாவட்டத்தில் இருபோக சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்டது 4·28 லட்சம் ஏக்கர் நிலங்களாகும். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் சற்றேறக்குறைய 2 லட்சம் ஏக்கரா நிலங்கள் ஒரு போக சாகுபடியிலிருந்து இருபோக சாகுபடிக்கு மாற்றப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இன்னும் ஒரு லட்சம் ஏக்கரா நிலங்களை இரு போக சாகுபடிக்கு மாற்றுவதற்கான திட்டங்களை காண்கிறோம். காங்கிரஸ்காரர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ரூ. 10,000 கோடி விவசாயத்திற்கா.. செலவு செய்தார்கள். அந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் இரு போக சாகுபடியான நிலங்கள் 2·26 லட்சம் ஏக்கரா நிலங்கள். ஆனால் மேலும் இருபோக சாகுபடிக்கு திட்டங்கள் இல்லை. அண்ணா அவர்கள் அறிக்கை விட்டார்கள். அமைச்சர்கள் நீர்ப்பாசன மகாநாடு நடத்தினார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதன் விளைவாக இரண்டு ஆண்டு காலத்தில் 2 லட்சம் ஏக்கரா நிலங்கள் இருபோக சாகுபடி நிலங்களாக மாற்றப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் ஒரு லட்சம் ஏக்கரா நிலங்களை இருபோக சாகுபடிக்கு மாற்றவேண்டும் என்பதற்கான திட்டம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் மொத்த ஏக்கர் நிலம், விவசாயத்திற்கு உகந்த நிலம் 14 லட்சம் ஏக்கர். 14 லட்சம் ஏக்கராவில் சற்றேறக்குறைய 5 லட்சம் ஏக்கரா ஒருபோக சாகுபடிக்குத் தான் லாயக்குள்ள நிலங்கள், இரு போக சாகுபடிக்கு லாயக்கு இல்லாத நிலங்கள், வடிகால் வசதி இல்லாத நிலங்கள், நல்ல கால்வாய் வசதி இல்லாத நிலங்கள். அது போக 9 லட்சம் ஏக்கரா நிலங்கள் இருபோக சாகுபடிக்கு மாற்றப் படக்கூடிய நிலங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக, ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ஏக்கராவாக மாற்றினால், 9 லட்சம் ஏக்கராவிலும் இருபோக சாகுபடியை ஏற்படுத்திவிட முடியும் என்ற ஒரு நல்ல திட்டத்தை, விவசாயத்துறையிலே ஒரு பெரிய மாறுதலை, ஒரு மு..னேற்றத்தைப் பார்க்கிறோம்.

நண்பகல் 12-00 அது மாத்திரமல்லாமல், 20 ஆண்டுகளாக விவசாயிகளாகிய நாங்கள் தஞ்சை மாவட்டத்தில் மா ஒன்றுக்கு பத்து மேனிக்கு கண்டு முதல் செய்தாலேயே அதைப் பெரிய விளைச்சல் என்று சொல்வோம். ஆனால், இன்றைக்கு ஏடிடி. 27 என்கிற நெல் விதையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நல்ல முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் பலனாக மாவிற்கு இருபது கண்டால் அது சாதாரணம் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. ஏடிடி. 27 என்கிற நெல்லை திராவிட முன்னேற்றக் கழகம் முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்தது என்றதும், எதிர்க் கட்சிக்காரர்கள் ஏடிடி. 27 முன்னரே, எங்கள் ஆட்சியிலேயே யோசித்தோம், நினைத்தோம், ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தோம் என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் இன்றைய தினம்

இரண்டு புதிய ரக நெல்வித்துக்களையும், தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியைப் பெருக்க, விவசாய அமைச்சரும், விவசாயத் துறையினரும், தீவிரமாக முயற்சிகள் செய்து, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 என்கிற விதைகளை பாசனவசதிக்குத் தக்க அளவில் கொண்டு வந்திருக்கிறார்கள். மாவுக்கு 30-க்கு மேல் விளைச்சல் கண்டிருக்கிறது. அந்த வகையில் விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கும் போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இரண்டாண்டு காலமாக ஒரே ராகத்தையே பாடிக் கொண்டு இருக்கிறார்கள், இன்னும் பல்லவிக்கு வரவில்லை. ராகத்தையே பாடிக்கொண்டு இருந்தால், கீர்த்தனம் எப்பொழுது என்று கேட்க நான் விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சட்டம், அமைதி, ஒழுங்கு கெட்டுவிட்டது என்றால், யாரால் கெட்டது? விவசாயத்தை எடுத்துக் கொண்டால், தஞ்சை மாவட்டத்தில், ஜனவரி மாதம் 16–ம் தேதி என்று கருதுகிறேன், ஒரு முத்தரப்பு மாநாட்டை கலெக்டர் அவர்கள் கூட்டினார்கள். அதில் கூலியை நிர்ணயிக்க வேண்டும் என்று, அறுவடைக்கு முன்னதாகவே, விவசாயத் தொழிலாளர்கள், மிராசுதார்கள் இவர்களைக் கூட்டி வைத்து, ஒரு முடிவுக்கு வந்தார்கள். விவசாயத் தொழிலாளர்கள் ஆறு படி வேண்டும் என்று கேட்டார்கள். மிராசுதார்கள் தரப்பில் ஐந்து படி கொடுப்பதாக அதற்குத் தயாராக இருந்தார்கள். கலெக்டர் இடையிலே ஐந்தேகால் படி என்று முடிவு செய்தார்கள். கால் படி என்றதும், அங்கத்தினர்கள் பட்டணத்துப்படி என்று கருதிவிடுவார்கள். அது அல்ல, சின்னப்படி கால்படி, அதாவது அரைக்கால் பட்டணம் படி, ஒரு கை நெல் வரும். அவ்வளவுதான். அதைக் கொடுக்கக்கூடாதா ? கலெக்டர் அவார்ட் பாஸ் பண்ணிய பிறகும் ஆங்காங்கே உள்ள, அரசியலில் வக்கில்லாதவர்கள் அரசியலை வைத்துப் பிழைத்தவர்கள், இன்றைக்கு அப்படி பிழைக்க முடியாமல், விவசாயிகளைத் தூண்டிவிட்டு போராட்டம் நடத்த ஆரம்பித்தார்கள். கலெக்டர் நிர்ணயித்த கூலியைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, நிலைமைகள் முற்றி, கொரடாச்சேரியில் சில சம்பவங்களும், விளாகம் என்ற இடத்தில் சில சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இப்படியெல்லாம், அங்கே தூபம் போட்டு, கிளப்பிவிட்டு விட்டு, இங்கே வந்து சட்டமன்றத்திலே அவர்களே சொல்லுகிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு கெட்டுவிட்டது என்று. இந்த வகையில் நடப்பதைத் தடுக்க நம்முடைய அரசும், குறிப்பாக விவசாய அமைச்சரும், விவசாயத் துறையில் இருக்கும் இன்னல்களுக்குத் தீர்வு காணத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

சட்டம் அமைதி இல்லை என்கிறார்கள். மதுரையிலே போலீஸ்காரர்கள், குற்றவாளியை போலீஸ் லாரியில் ஏற்றிக்கொண்டு போகும்போது தடுத்திருக்கிறார்கள். குற்றவாளியைக் கூண்டிலே ஏற்றுவது, சிறையிலே வைப்பது, இதெல்லாம் போலீஸ்காரர்களுடைய வேலை. அந்த வேலையைத் தடுப்பதற்கு, 300, 400 பேர்கள் கூடிக்கொண்டு போலீஸ் லாரியை மறைப்பதும், போலீசாரை எதிர்ப்பதுமான முறைகளைக் கையாண்டால் போலீஸ்காரர்கள் என்ன முத்தமா கொடுப்பார்கள். பிரம்பால் தான் அடிப்பார்கள். அது தான் அடித்தார்கள். இங்கே வந்து கூக்குரல் போடுகிறார்கள், சட்டம், அமைதி, ஒழுங்கு கெட்டிருக்கிறது என்று. யார் சொல்லுகிறார்கள், இரண்டாண்டு காலமாக சட்டசபையிலே சொல்லிக் கொண்டே இருக்கிறார்களே அவர்களேதான். இதிலெல்லாம் சர்க்கார் நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக விவசாயப் பிரச்சினையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் கொரடாச்சேரியில் நடந்த போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் அந்தப் பகுதி மிராசுதாரர்களும், காங்கிரஸ்காரர்களும் தான், அவர்கள் தான் தூண்டிவிட்டார்கள் என்று உறுப்பினர் சொல்லுகிறார்களா ?

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அந்தச் சம்பவம் நீதி மன்றம் செல்லப் போகிறது. ஏற்கனவே, எதிர்க்கட்சித் தலைவர் காங்கிரஸ்காரர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும் என்று கேட்டிருக்கிறார்கள். சட்டப்படி நீதி மன்றம் தீர்ப்புக் கொடுக்கும். அதற்காகவேதான் நான் சொல்லும்போது எந்தக் கட்சிக்காரர் என்று குறிப்பிடவில்லை. இருக்கும் நிலையை மட்டும் சொன்னேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது, இந்த சபையிலே மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை பல்வேறு வகையில் கூறியிருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இது ஒரு பெரிய பாராட்டுக்குரிய, முற்போக்கான நிதி நிலை அறிக்கை என்று சொல்ல இயலவில்லை. பாராட்டுக்குரியதாகவும், முற்போக்காகவும் இருக்க வேண்டும் என்றால், கடந்த காலத்தை விட எந்த அளவிற்கு சாதாரண மனிதனுக்கு உயர்வதற்கு வழி வகை செய்திருக்கிறோம் என்பதைக் கொண்டுதான் பார்க்க வேண்டும். பல்லாண்டுகளாக நிதி நிலை அறிக்கைகள் கொடுத்து, தொகைகள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆண்டு தோறும், தொகைகள் அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. இந்த ஆண்டும், எட்டு கோடி ரூபாய் அதிகமாக உள்ள நிதி நிலை அறிக்கை என்ற அளவில் இருக்கிறது. ஒரு பெரும் மாற்றம் நாட்டில் ஏற்படுவதற்கான வழிவகை காணாத நிலையில் இந்த அறிக்கை இருக்கிறது. அதைப் பார்க்கிறோம்.

அடுத்து, இதிலே வரி போடவில்லை என்ற கருத்து கூறப்பட்டது. வரி போடப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி, அறுபது லட்சம் ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன வரி போடப்படும் என்பது பின்னால் தெரிவிக்கப்படும் என்று உணரும் வகையில் ரெவின்யூ கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரவு வைத்த பிறகு, 16 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்றும் காட்டப் பட்டிருக்கிறது. ஆகவே, வரி போட்டாய் விட்டது. போடுகின்றவரி எப்படிப் போடப் போகிறோம், யாருக்குப் போடப்போகிறோம் என்பதைத் தெரிவிக்கவில்லை. அதை அரசாங்கம் யோசித்துக்கொண்டு இருக்கிறது. இந்தச்சமயத்திலே ஒன்றை கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து வரி போடும்போது, யார் தாங்குவார்களோ அவர்கள் தலையில் வரியைப் போடுங்கள். மத்திய சர்க்கார் வரிவேறு போட்டிருக்கிறார்கள். அது சாதாரண விவசாயிகளின் தலையில் விழுந்திருக்கிறது. மத்திய அரசின் வரி, உரத்திற்கு வரி, பம்பு செட்டுக்கு வரி, இன்னும் ஏதேதோ வரிகள். ஆக இவையெல்லாம் சாதாரண மனிதன் தலையில் விழும் அளவில் இருக்கின்றன. ஆகையினால் நம்முடைய சர்க்கார் நன்றாக யோசித்து, விவசாய நிலங்களின் பேரிலேயோ, அல்லது விற்பனை வரியின் பேரிலேயோ, எக்ஸைஸ் ட்யூடி, அதாவது டீசல் ஆயில் பேரிலேயோ வரியைப் போடாதீர்கள். அப்படிப் போட்டால் விவசாயம் பாதிக்கப்படும். உற்பத்தி பெருகாது. அது மட்டுமல்லாமல், இரண்டு விதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியோடு, மாநில சர்க்காரும் வரி போட்டால் இப்பொழுது இருக்கும் விலைவாசிகளில் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலை ஏற்படும். விவசாயச் செலவு அதிகரிக்கும் அளவில் மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கும்போது, ஆலோசனை செய்து எந்த வகையில் நம்முடைய சர்க்கார் நிவாரணம் கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறிவிக்கவேண்டும்.

உர விலை அதிகரிக்கும்போது, அதை எதிலே ஈடுகட்டுவது? விவசாயப் பொருள்களுக்கு அதிக விலை கொடுக்கப் போகிறார்களா? அல்லது விவசாயிகளுக்குக் கொடுக்கும் உரத்தின் விலையைக் குறைத்து, மானியம் கொடுக்கப் போகிறார்களா? மத்திய சர்க்கார் வரியை யார் ஏற்றுக் கொள்வது என்பதை யோசிக்க வேண்டும். இருக்கும் சிரமத்தை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஐந்து கோடியே அறுபது லட்சத்தோடு நின்றுவிடுமா என்று பார்த்தால் இன்னும் மேலே போகுமோ என்று அச்சப்படுகிறேன். வரிகளைப் போடாமல் எந்த அரசாங்கமும் அபிவிருத்தித் திட்டங்களைப் போட முடியாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். 16 கோடி ரூபாய் துண்டு விழும் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது சரியான முறையில் சரியான கணக்கை எதிர்பார்த்தார்களா என்று பார்க்கும்போது இல்லையென்றே தோன்றுகிறது. விற்பனை வரியிலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டிலே அதிகமாக வருவாய் வரும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் எங்கே பார்த்தாலும் பஞ்சம். விவசாயியின் வாங்கும் சக்தி குறைந்துபோய் இருக்கிறது. தண்ணீர் இல்லை, விவசாயம் இல்லை, அதனால் வியாபாரம் பெருக முடியாது. வியாபாரம் பெருகவில்லையென்றால் விற்பனை வரி எங்கிருந்து கிடைக்கப்போகிறது? ஆகவே, தீர யோசித்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய் அளவிலே துண்டு விழும் என்பதில் சந்தேகம் இல்லை.

ரொக்க வசதியில் நமக்கு 19 கோடி ரூபாய்க்கு மேல் துண்டு விழுகிறது. இதை எப்படிச் சரிக்கட்டப்போகிறோம்? மத்திய அரசு எவ்வளவு நமக்குக் கொடுக்கப் போகிறது என்பதைப்பற்றிச் சொல்லவில்லை. எத்தனையோ பெரியவர்கள் சேர்ந்து தயாரித்த நிதி நிலை அறிக்கைதான் இது. இருந்தாலும் பின்னாலே ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அம்மாதிரியான சங்கடமான நிலைமை எதுவும் வராமல் இருப்பதற்காக அரசாங்கம் முன்கூட்டியே தயாராக இருக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஐந்தாவது நிதிக் கமிஷன் வந்து நம்முடைய பாரத்தையெல்லாம் போக்கிவிடும் என்று எதிர்பார்க்கக்கூடாது. கொடுக்க வேண்டியதெல்லாம் ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது என்று அவர்கள் இறந்தகாலத்தில் சொல்லிவிடக்கூடும். ஆகவே, அதிகமாக எதிர்பார்ப்பது என்பது சங்கடத்தைதான் தரும்.

இப்போது வரியில்லை என்று பேசியாகிவிட்டது. ஜனங்கள் எல்லோரும் வரியில்லை, வரியில்லை என்கிறார்கள். ஆனால் பட்ஜெட்டில் வரி உண்டு என்பதை மறைமுகமாக சொல்லியிருக்கிறார்கள். வரி போடும்போது சாதாரண மனிதன் தலையில் வரி விழக்கூடாது என்பதை அரசாங்கம் கருத்தில் கொள்ளவேண்டும். அபிவிருத்திக்காக போடப்பட்ட தொகை அபிவிருத்திக்குப் போய்ச் சேர்ந்ததா என்றால், இல்லையென்ற பதில்தான் கிடைக்கும். அரசாங்க ஊழியர்களுக்கு பஞ்சப்படி என்று கொடுத்திருக்கிறார்கள். பெரும் பகுதி அதில் கரைந்து போய்விட்டது. மேலும் கல்விக்காக சென்ற வருடத்தை விட 6 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் 7,900 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் வழி செய்திருக்கிறார்கள். மேலும் புதிய நான்கு கல்லூரிகள், கட்டிடங்கள் போன்றவற்றிற்கெல்லாம் வழி செய்திருக்கிறோம். புதிது புதிதாக எல்லோரையும் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அதேசமயத்தில் தொழில் வாய்ப்புக்களுக்கு நாம் அதிக முக்கியத்துவத்தைத் தரவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் வாய்ப்புகள் மிகக் குறைவு. ஒரு பக்கத்தில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றிற்கு அதிகமாகச் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, தொழில் உற்பத்தி வேலைகளில் அதிகமாகச் செலவிட வேண்டும். தொழிலில் மூலதனம் செய்யப்பட்டிருப்பது சென்ற ஆண்டைவிட கொஞ்சம் கூடுதலாக, அதாவது 2 கோடியே 80 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுவும் புதிதாக உள்ள தொழிலுக்குத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அநேகமாக கோவாப்பரேட்டிவ் ஷுகர் பேக்டரிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் நூற்பாலைகளுக்கென்று 10 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நூற்பாலைகளையே நாம் மூடியிருக்கிறோம். உற்பத்தியான நூலை விற்பனை செய்ய முடியவில்லை. இந்த நிலையில் நூற்பாலைகளுக்கு 10 லட்சம் ஒதுக்கியிருப்பது சரியல்ல.

தொழில்களுக்காக 2 கோடியே 80 லட்சம் ஒதுக்கியிருப்பது எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடித் தரும்? சேலம் இரும்பாலை செயல்படுத்தப்பட வேண்டுமென்று போராடியிருக்கிறார்கள். திட்ட முன்னோடி வேலைகளுக்கு தமிழக அரசு 52 லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலைக்கு ஒரு கோடி ரூபாயும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு 2 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற சிமெண்ட் எல்லாம் விற்பனையாகாமல் இருக்கின்றன. "என்னுடைய சிமெண்ட் உயர்ந்தது" என்று ஒவ்வொருவரும் விளம்பரம் போட்டும் விற்பனையாகாமல் சிமெண்ட் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்காக 2 கோடி ரூபாயை ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. பஞ்சாலைக் கார்ப்பரேஷன் நிறுவுவதற்காக 15 லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. இதில் வேலை வாய்ப்பு கிடைக்க வழி இருக்கிறது. ஆகவே, இந்த பட்ஜெட்டை மிகப் பெரிய அளவில் பாராட்டக் கூடியதாக இல்லை.

(திரு. சு. துரைசாமி தலைமை)

அடுத்தபடியாக, நாம் முதலில் செய்ய வேண்டிய காரியங்களை முதலில் செய்யவேண்டும். எல்லா வேலைகளும் அத்தியாவசியமானதாக இருக்கலாம். மேலும், விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர்களை வாங்கி வாடகைக்கு விடும் திட்டத்திற்காக ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக டிராக்டர்களுக்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் ஏன் செய்கிறோம்? பழைய முறைகளை விட்டு நவீன இயந்திரங்களைக் கொண்டு விவசாயம் நடத்தலாம் என்ற எண்ணத்தினால் தான் செய்கிறோம். வேலையில்லை, வேலையில்லை என்று தஞ்சை மாவட்டத்திலே எல்லோரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இதை இரண்டாவதாகத்தான் கருத வேண்டும். வேலை இல்லை என்று மனிதர்கள் கோஷம் எழுப்புகிற நேரத்தில் இயந்திரங்களுக்காக செலவு செய்வது நல்லதல்ல. முதலில் நீர்வளத்தைப் பெருக்கி, ஒரு போக நிலத்தை, இரண்டு போகமாகவும், மூன்று போகமாகவும் பெருக்க வகை செய்யவேண்டும். நிலத்தை அதிகமான அளவில் சாகுபடிக்குக் கொண்டுவருகிறபோதுதான் இயந்திரங்களின் உதவியை நாம் நாட வேண்டும். ஆகவே, இயந்திரத்தையே நாம் முழுவதும் விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மேலும் விவசாயிகளுக்கு நில அடமான வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்க 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்சமயம் எங்கே பார்த்தாலும் பஞ்சம், தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. பூமிக்கடியில் இருக்கக்கூடிய தண்ணீரை மேலுக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பஞ்ச நிலைமையை யுத்தகால நடவடிக்கைகளாகக் எடுத்து, பெரும் கிணறுகளைத் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு போக நிலத்தை இரு போக நிலமாக மாற்ற வேண்டும். மூன்று போக நிலமாக மாற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கு அடுத்தபடியாகத் தான் இயந்திரம் வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் பருவ மழை தவறிவிட்டது. எங்கு பார்த்தாலும் விளைச்சல் இல்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏக்கர் ஒன்றுக்கு மூன்று அல்லது ஐந்து மூட்டை நெல் அதிகமாக விளைந்துள்ளது. இதர மாவட்டங்களான வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களிலும் பஞ்சம் இருக்கிறது. கட்சி பாகுபாடு இல்லாமல் இதைத் தீர்ப்பதற்கு, பஞ்சத்தைப் போக்குவதற்கு நாம் எல்லோரும் ஆலோசனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போதுதான் கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் ரொம்ப சுறுசுறுப்பாக இருப்பார்கள். பஞ்சம் வந்துவிட்டது என்று நாம் சபையிலேயே சொல்லிவிட்டோம். ஆகவே, எங்கெங்கே அரிசி கிடைக்கும் என்பதாகத் தேடிச் சென்று மூட்டை மூட்டையாகப் பதுக்க ஆரம்பித்து

விடுவார்கள். ஆகவே, பதுக்கல்காரர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். யார் பதுக்கி வைக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று பொது மக்களுக்கும் அறிவிக்கவேண்டும். தயவுசெய்து எனக்குப் பத்து நிமிஷம் மேலும் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சு. துரைசாமி) எல்லோருக்கும் பத்து நிமிஷம். தங்களுக்கு பதினைந்து நிமிஷம் கொடுத்தாகிவிட்டது. ஆகவே சீக்கிரம் தங்கள் உரையை முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இன்னும் ஐந்து நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுவது அதிகாரிகள் தான். மக்களோடு தொடர்பு உடையவர்களிடம் ஆலோசனையைக் கலந்துகொண்டு எதுவும் செய்வதில்லை. நாங்கள் இங்கே யோசனை சொல்கிறோம் அவ்வளவு தான். என்னுடைய யோசனை என்னவென்றால் திட்டம் போடுகிறபோதே சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு, ஆரம்ப காலத்திலேயே திட்டம் அமைக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்யூனிட்டி டெவலப்மெண்டைப் பற்றி அந்த டிமாண்டு வருகிறபோது நிறையப் பேசலாம். நிலப் பிரச்சினையைப் பற்றி நிறைய பேசப்படுகிறது. அதை எப்படித் தீர்ப்பது? நிச்சயமாக நான் ஒன்று சொல்வேன். அரசாங்கம் முதற்படியாக ஒரு இரண்டு' ப்ளாக்குகளை எடுத்துக்கொண்டு சிறு நிலக்காரர்கள், குத்தகை தாரர்கள், விவசாய தொழிலாளர்கள் ஆகியவர்களைக் கொண்டு பரீட்சார்த்தமாக சாகுபடி செய்து, கூலி விகிதம் எப்படி இருந்தால் கட்டும், குத்தகை எப்படி இருந்தால் கட்டும், என்பது போன்ற எல்லா விவரங்களையும் சேகரித்து ஒரு திட்டத்தை முன்னோடியாக உருவாவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தால் அதையே மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வழியேற்படும்.

சர்க்கார் வரி போட்டே பணம் சேகரிக்கவேண்டும் என்பது சரியல்ல. சர்க்கார் துறையில் லாபகரமாகத் தொழில்களை நடத்தியும் பணம் சம்பாதிக்க வழியேற்படுத்த வேண்டும். நமது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் போக்குவரத்து இலாகா அமைச்சராக வந்திருக்கிறார். தொழில் துறையில் பணத்தை எப்படிச் சம்பாதிக்க முடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்தவர்கள், 8 கோடி மூலதனம் போட்டு, இன்றைக்கு 15 கோடி சொத்து வைத்திருக்கிற டிரான்ஸ்போர்டில் 2 கோடி கூட லாபம் இல்லை என்பது வருந்தத்தக்கது. ஆகவே அவர்கள் இத்துறையில் கவனம் செலுத்தி இதை லாபகரமானதாக ஆக்கவேண்டும். அதற்காகவே அவர் இத்துறைக்கு அமைச்சராக வந்திருப்பதை பாராட்டுகிறேன்.

செயற்கை மழையைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்த முறையில் நாமும் முயற்சி செய்யவேண்டும். பூமியில் இருந்து தண்ணீர் கொண்டுவர பம்பு செட்டுப் போட்டால் தண்ணீர், கீழே போய்க்கொண்டே இருக்கிறது. ஆகவே செயற்கை முறையில் மழையை உண்டாக்க ஏதாவது முயற்சி செய்தாக வேண்டும்.

அடுத்து கிராமப்புறங்களில் போய்ப் பார்த்தால்—ஹரிஜன மக்களுக்கு சாதாரண மக்களுக்கு பாதை வசதி கிடையாது. சுடுகாடு கிடையாது, குடியிருக்க மனை கிடையாது. இருபதாண்டுக்குப் பிறகு—நாம் வந்த இரண்டு ஆண்டுக்குப் பிறகு இந்த நிலை—மனைக்கட்டுக்காக 25 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இது போதுமா? யோசிக்கவேண்டும். எத்தனை நாட்களுக்குத் தான் இந்த மக்களுடைய அடிப்படை வசதிகளைக் கூட நாம் புறக்கணித்து வர முடியும்? பட்டினி கிடப்பவனை 3 நாள் பொறு என்று சொல்ல முடியுமா? ஆகவே குறைந்தபட்சம் வசதிகளையாவது உடனடியாகச் செய்து கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டும். ஆளும் கட்சியைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு வேண்டுகோள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கொஞ்சம் ஆத்திரப்படக்கூடாது. எதிர்க்கட்சிக்காரர்கள் குறைகளைத்தான் சொல்வார்கள். கொஞ்சம் மிகைப்படுத்தியும் சொல்வார்கள்.

பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆத்திரப்படுவது நல்லது என்று எதிலாவது சொல்லப்படுகிறதா ஆத்திரம் கூடாது.

எல்லாருக்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

என்று வள்ளுவர் சொல்லுகிறார். ஆளும் கட்சியில் இருப்பவர்கள்—மிக்க பலம் கொண்டவர்கள்—ஆத்திரம் காரணமாக சபை நடவடிக்கைக்கு குந்தகம் அடையாதிருக்க—ஆத்திரத்தை அடக்கி—முன்காட்டியாக நடக்கக் வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற முதல்வர், முஸ்லிம் மக்கள்மீது நல்லெண்ணமும், உறுதியான நம்பிக்கையும் கொண்டவர் நமது அறிஞர் அண்ணா அவர்கள் மறைவு குறித்து முதலில் நான் என் கட்சியின் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் அஞ்சலி செலுத்திக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கைமீது நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கைமீது எனக்குமுன் பேசியவர்கள் சிலர் தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். சிலர் எதிர்த்தும் பேசினார்கள். இதே மன்றத்தில் சென்ற வருஷமும் நிதிநிலை அறிக்கைமீது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது காகிதத்தில் புள்ளி போட்டுக் காட்டிவிட்டால் போதுமா, பொதுமக்களுக்கு நடத்திக்காட்டட்டும் பார்ப்போம் என்று பேசினார்கள். அந்த ஆண்டும் முடிந்து விட்டது. அடுத்து வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையிலும் புதுவரிகள் இல்லாமல் பொது மக்களுக்கு பல நன்மைகள் செய்கின்ற அளவுக்கு நிதி நிலை அறிக்கையை அமைத்துத் தந்திருப்பதற்கு நான் பாராட்டுகிறேன். நிதிநிலை அறிக்கை ஓரளவுக்கு மக்களுக்கு நிம்மதி கொடுக்கின்ற அளவு இருந்தபோதிலும் பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, என்னுடைய மாவட்டம் வடாற்காட்டில் இருக்கக்கூடிய நிலையை இங்கே எடுத்துக் கூற வேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன். அங்கு இருக்கக்கூடிய நகரசபைகளில் பல நகரசபைகளுக்கு கட்டாய ரேஷன் இல்லை. இப்போதும் அந்த வட்டாரத்தில் கட்டாயக் கொள்முதல் இருப்பது மக்களுக்கு வியப்பாக இருக்கிறது. பொதுவாக இன்றைக்கும் விவசாயப் பெருமக்கள் தன்னுடைய சொந்த உணவுக்காக ½ மூட்டை, 1 மூட்டை நெல்லை மில்லுக்கு எடுத்துப் பொகவும், மில்லில் இருந்து அரிசியை வீட்டுக்கு எடுத்து வரவும், கடையில் அரிசி வாங்கி எடுத்து வரவும் மக்கள் அஞ்ச வேண்டிய நிலைமை இருப்பதை நான் நேரில் கண்டு பேசுகின்றேன். கட்டாயக் கொள்முதலை உடனடியாக அந்த மாவட்டத்தில் நிப்பாட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை நகரசபை இருக்கிறது. அந்த நகரத்தில் வாழும் பொதுமக்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு நியாய விலைக் கடைகள் ரேஷன் வழங்கப்படுகிறது. குறிப்பாக, அங்கே பாரி கம்பெனி இருக்கிறது. பாரி கம்பெனி மூலமாக அதில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு நியாய விலைக் கடைகளில் ரேஷன் வழங்கப்படுகிறது. என்.ஜி.ஓ க்களுக்கு நியாய விலைக் கடைகளில் ரேஷன் வழங்கப்படுகிறது. மற்றும் அங்கே இவர்களைத்தவிர, பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ரேஷன் கொடுக்கப்படவில்லையே என்ற குறைபாடு இருந்து வருகிறது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவிக்கக்
பி.ப. 12-30 கடமைப்பட்டிருக்கிறேன்.

வாலாஜாபேட்டை ஒரு நகர சபை. அங்கே வாழும் அத்தனை மக்களும் ஏழை மக்கள் என்று சொல்வதற்கு நிச்சயமாக நான் தயங்கமாட்டேன். அந்த நகரத்திலே நிச்சயமாக நியாய விலைக் கடைகள், கட்டாய ரேஷன்

கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தொடர்ந்து ஆற்காடு நகரசபை, விஷாரம் பேரூராட்சி இருக்கிறது. அதையும் விட்டு விடக்கூடாது.

நமது நிதிநிலை அறிக்கையைக் கூர்ந்து கவனிக்கும்பொழுதும், இதற்கு முன் வைக்கப்பட்ட ஆளுநர் உரையைப் பார்க்கும்பொழுதும் நான் சென்ற தடவை சொன்ன சில கருத்துக்கள் நிச்சயமாக இடம் பெற்று இருக்கும் என்று நம்பியிருந்தேன். ஆனால் அவை இடம் பெறவில்லை என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழர்களாகிய நாங்கள் தமிழ் மொழியை எங்கள் சொந்த மொழியாக ஒப்புக்கொண்டாலும் தமிழகத்திலே உள்ள முஸ்லீம்கள் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள முஸ்லீம் மக்கள் அனைவருடைய தாய்மொழியாக இருக்கக்கூடியது உருது மொழியாகும். தற்போதும் உருதுமொழிக்கு எந்த விதமான நியாயமும் கிடைக்கவில்லை. உருது பள்ளிகளில் தேவைப்படும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. முஸ்லீம்கள் தங்களுடைய பிரதிநிதித்துவத்தை வகிப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கிறது. சென்ற கூட்டத்திலேயே நான் இதை எடுத்துச் சொன்னேன். சட்ட மன்றத் தொகுதியையும் பாராளுமன்றத் தொகுதியையும் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி இருந்தபொழுது முஸ்லீம் தன்னுடைய பிரதிநிதித்துவத்தைப் பெற முடியும் என்று இருந்த தொகுதிகளை ரிசர்வ் தொகுதியாக மாற்றியமைத்து இருப்பதுபற்றி விவரமாகக் கூறியிருந்தேன். அதைச் செய்வதற்கு தற்போதைய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இன்னும் அதிக காலம் இருந்தாலும் இப்பொழுதே முயற்சி செய்து உடனடியாக அதில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் அதை புனராலோசனை செய்து மாற்றியமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் வேலூர் பாராளுமன்றத் தொகுதி, சட்டமன்றத் தொகுதி ஆம்பூர் தொகுதி போன்ற தொகுதிகளை உடனடியாகக் கவனித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் அரசாங்கத்திலே முஸ்லீம்களாகிய எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே இருந்தோம். ஆனால் புதிய அரசு பதவிக்குப் வந்த பிறகு இரண்டு ஆண்டு காலம் ஆகிறது, இப்போதும் அந்த நியாயம் கிடைக்கவில்லை என்று சொல்வதால் உடனடியாகக் கவனம் செலுத்தி முஸ்லீம் பதவிகளில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்த ஊர் மேல்விஷாரம். அங்கே குடிநீர்ப்பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது 15 வருஷமாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். காலம் சென்ற முதலமைச்சர் அவர்கள் ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக நான் அவரைச் சந்தித்து இது பற்றிச் சொன்ன நேரத்தில் அவர்கள் இதைப்பற்றி ஏற்கெனவே சொன்னதை நினைவில் வைத்திருந்ததால், உடனடியாக தன்னுடைய உதவியாளரைக் கூப்பிட்டு அந்த பைலை ஆர்.டி.எல்.எ. செக்ரட்டரிக்குக் கொடுத்து நாளையே புட் அப் செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டு மறு வாரத்திலேயே ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டபடியால் அது இந்த பட்ஜெட்டில் இடம் பெறவில்லை. ஆகவே உடனடியாக அதைச் சேர்த்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்விஷாரத்திலே இருக்கிற பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக ஆக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்றேன். (மணியடிக்கப்பட்டது)

*திரு. சு. ம. துரைராஜ் : மாண்புமிகு பேரவைமாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 1969–70-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பாராட்டிப் பேசும் வாய்ப்பினை நல்கியமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களையும், நோக்கங்களையும், சிந்தனைகளையும் ஒன்று திரட்டி இன்று இந்த வரவு-செலவுத் திட்டத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வரியில்லாமல் தந்திருக்கிறார்கள், என்றால்

உள்ளபடியே மக்கள் எல்லாம் அதைப் பாராட்டுகிறார்கள். அதே நேரத்திலே எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும் பொழுது இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வறட்சி இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழக மக்கள் அதைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதே நேரத்திலே மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் தந்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்தையும் நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தையும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயமாக, எந்த சர்க்கார் நல்ல சர்க்கார் என்பதை மக்கள் தெரிந்துகொள்வார்கள். மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்களுக்கு உங்கள் மூலமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே 16.5 சத வீதமாக விலைவாசி ஏற்றம் இருந்தது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன். அந்த நேரத்திலே புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. புதிய அரசாங்கம் வந்தவுடன் கொள்முதலைத் தீவிரமாக்கி இன்றைக்குச் சென்னை, கோவை நகரங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 45 லட்சம் மக்களுக்கு படியரிசித் திட்டத்தின் மூலம் உணவு வழங்கிக் கொண்டிருக்கிறது. 1.30 லட்ச மக்கள் மாவட்டங்களிலே உள்ள மக்கள் குடும்ப அட்டைகள் மூலம் பயன் அடைகிறார்கள் என்றால் இந்த ஆட்சியை யார்தான் பாராட்டாமல் இருக்க முடியும் ?

இந்த அரசு தன்னுடைய நோக்கங்களாலும், அதனுடைய எண்ணங்களாலும், தன்னுடைய சிந்தனைகளாலும் வேளாண்மைத் துறை வளர வேண்டுமென்ற காரணத்திற்காக முயற்சிகள் பல எடுத்துக் கொண்டு வருகிறது. ஏழை விவசாய மக்கள் வாழவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே மின்சார இணைப்பு 1 லட்சத்திற்கு மேலே சென்ற இரண்டு ஆண்டு காலத்தில் தந்திருக்கிறார்கள் என்றால், இந்த அரசை யார்தான் பாராட்டாமல் இருக்க முடியும் என்பதை காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த ஆட்சி இருபோக விளைச்சலைக் கொண்டு வந்து சென்னைவாழ் மக்களுக்கும், கோவை வாழ் மக்களுக்கும் உணவு நல்லமுறையில் வழங்கியிருக்கிறார்கள். இதைத்தவிர, வேளாண்மை சார்ந்த தொழில் கழகம், அதாவது அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலமாக விவசாயிகளுக்கு டிராக்டர்கள் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுவதால், அந்தக் கழகத்தின் மூலமாக டிராக்டர்கள் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதைப் பார்த்தால் யார்தான் இந்த அரசை பாராட்டாமல் இருக்கமுடியும்?

அதுமட்டுமல்ல, டிராக்டர்கள் வைத்திருந்தும் கூட அதற்குத் தேவைப்படும் ஸ்பேர் பார்ட்கள், டையர், டியூப்கள் இந்த நாட்டிலே கிடைக்கவில்லை. இதை மனதிலே கொண்டு இந்த அரசாங்கம் வெளியிலேயிருந்து வாங்கி மலிவான விலைக்கு எளிய விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். வரவு செலவுத் திட்டத்திலே வெளிநாட்டிலிருந்து 650 டிராக்டர்களை வேளாண்மை சார்ந்த தொழில் கழகம் மூலமாக வரவழைத்து விவசாயிகளுக்குத் தர இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்றால், யார்தான் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியும்?

காங்கிரஸ் நண்பர்கள் இரண்டு ஆண்டுகளாக இந்த அரசு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால், மக்கள்தான் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று நான் அதை மக்கள் மத்தியிலே விட்டுவிடுகிறேன். குறிப்பாக மழையில்லாத காரணத்தால், வறட்சி செங்கற்பட்டு மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் இருக்கிறது என்று சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலே அமைச்சர்கள் வறட்சியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். நல்ல விதத்திலே மலிவான விலையில் அரிசியைத் தந்திருக்கிறார்கள், கோதுமையைத் தந்திருக்கிறார்கள், சோளம் தந்திருக்கிறார்கள், கேழ்வரகு தந்திருக்கிறார்கள், அதற்காக அந்த மக்களின் சார்பிலே நான் நன்றியைச்

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏழை விவசாயிகள் வங்கிகளிடமிருந்து கடன் வாங்கி இப்பொழுது பயிர்கள் தீய்ந்துவிட்ட காரணத்தால், அதைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலைமை இருப்பதால் அதைக் காலதாமதமாக வாங்கிக்கொள்ள வழிவகை செய்ய வேண்டுமென்று நம்முடைய அரசை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் முன்பு கூறினார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், பள்ளிகளையெல்லாம் மூடிவிடுவார்கள் என்று கூறினார்கள். ஆனால், வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது எத்தனையோ புதிய பள்ளிகள் திறக்கப்படுகின்ற நிலையைப் பார்க்கிறோம். புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்காக 75 லட்சம் ரூபாயும், ஆய்வுக் கூடங்களுக்காக 31 லட்சமும், வரவு-செலவுத் திட்டத்திலேயே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான்கு புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் திறக்கவும் அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இன்றைக்கு ஏழை ஆசிரியர்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் 7,900 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நல்ல உள்ளம் படைத்த இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி போர்டு மூலமாக நல்ல வீடுகளை வழங்க வேண்டுமென்றும் இந்தப் பேரவையிலே கூற விரும்புகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வசதிகள் பெறும்பொருட்டு நல்ல விதத்தில் வீட்டு வசதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே தொழில் வளர்ச்சியே இல்லை என்று அருமை காங்கிரஸ் நண்பர்கள் பேசினார்கள். அதே சமயத்தில் மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தியம்மையார் அவர்களும், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களும் மறைந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கையில் நல்ல விதத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மக்களாட்சி அண்ணா தலைமையிலே நல்ல முறையிலே நடைபெற்று வந்தது. அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், தமிழகம் மேலும், மேலும் முன்னேற்றத்தை அடைந்திருக்கும், என்று குறிப்பிட்டார்கள். மறைந்த அண்ணா அவர்கள் கடைசியாக இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்த நேரத்தில் ஏழை மக்களுக்காக வாதாடினார் என்று குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்ற ஆண்டிலே தொழில் வளர்ச்சிக்காக, மக்கள் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுகிற நிலையில் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்காரிடத்திலே இரண்டு கோரிக்கைகள் கேட்டார்கள். ஒன்று, இன்ஸ்டுருமெண்ட்ஸ் இண்டஸ்ட்ரீஸ், இரண்டாவது மின் அணுக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை. இந்த இரண்டையும் ஏற்படுத்தினால், மொத்தம் 5,500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும், 20 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். அதை மத்திய அரசு கொடுக்கவில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய அரசையே கேட்கிறார்கள் என்று காங்கிரஸ் நண்பர்கள் பேசுகிறார்கள். மத்திய அரசைக் கேட்காமல் அமெரிக்க நாட்டையா கேட்போம்? சைனா நாட்டையா கேட்போம்? மத்திய அரசைக் கேட்கிறோம் என்றால், அவர்கள் மாநிலத்திலே இருந்து பெறக்கூடிய வரியினைத்தான் திருப்பித் தருகிறார்களே தவிர, சும்மா ஒன்றும் கொடுக்கவில்லை. இதனைக் காங்கிரஸ் நண்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய அரசாங்கம் அந்த மக்களுக்காக 695 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. மத்திய அரசிலே உணவுத்துறை அமைச்சராக இருக்கும் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தைரியமாக வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நினைத்தால் மத்திய அரசாங்கத்தை மாற்றக்கூடிய அளவுக்கு அவர் திறமை படைத்தவர். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொல்லக்கூடிய அளவுக்கு நெஞ்சுரம் பெற்ற அவர்கள் சென்னைக்கு வந்தபோது இந்த ஆட்சியைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டார்கள். இந்த ஆட்சி குறிப்பாக ஆதித் திராவிட மக்களுக்காகப் பாடுபடுகிறார்கள், அவர்களுக்கு

நல்ல குறிக்கோளை வைத்திருக்கிறார்கள் என்று உணர்ந்து கொண்ட காரணத்தால், நல்ல முறையிலே பாராட்டிப் பேசினார்கள். இங்கே இருக்கின்ற சாதாரண காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் அந்த மாமேதையைப் பார்த்து மந்திரி வேலைக்கே லாயக்கில்லாதவர் என்று ஒரு அறிக்கையிலே குறிப்பிட்டார். இதைப் பார்த்தால் என்ன தெரிகிறது சாதி தலைவிரித்தாடுகிறது என்பதைத் தவிர, வேறு ஒன்றும் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந் தலைவராக டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இருந்தார்கள். அவர் மறைந்த பிறகு உங்களுடைய தலைவராக நான் இருக்கிறேன் என்ற முறையில் அண்ணா அவர்கள் அவர்களுடைய நலன்களிலே அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்கள் மறைந்தது தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இப்போது வந்துள்ள புதிய முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்கள். என் உயிரைப் பணயம் வைத்தாவது இந்தச் சமுதாயத்தை முன்னேற்றுவேன் என்று கூறினார்கள். அந்தச் சமுதாய மக்கள் அவருடைய கரத்தை வலுப்படுத்தக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பத்திரிகையில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு நீரும் நெருப்பும் என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தார்கள். நெருப்பு பற்றி எரியும்போதும் தாழ்த்தப்பட்டவர்களின் குடிசைகள்தான் எரிகின்றன, வெள்ளம் புயல் வருகின்றபோதும் தாழ்த்தப்பட்டவர்களுடைய குடிசைகள்தான் பாதிக்கப்படுகின்றன என்று அதிலே அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த சமுதாயம் பாதிக்கப்படுவதற்காகவே பிறந்திருக்கிறதோ என்று வேதனையோடு குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் அன்று எழுதினார்கள். இன்று ஆட்சி பீடத்திலே முதல்வராக இருக்கின்ற அவர் அந்தச் சமுதாயத்தை வாழ வைக்க வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு அவருடைய கரத்தை வலுப்படுத்த, தாழ்த்தப்பட்ட மக்கள் பின்னால் இருக்கிறார்கள் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, நம் எல்லோருடைய அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாய் இருந்து நம்மை விட்டுப் போய்விட்ட மாபெரும் தலைவர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1969–70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். மத்திய சர்க்கார் 150 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளைப் போட்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தீட்டியிருக்கின்ற அதேநேரத்தில், நம்முடைய மாநில அரசு வரி இல்லாமல் ஒரு வரவு–செலவுத் திட்டத்தை அளித்ததை நான் வரவேற்கிறேன். இருப்பினும், நம்முடைய சர்க்கார் சில புதிய வரிகளை விதிப்பதற்காக வழி முறைகளை வைத்திருக்கின்றனர். அவ்வாறு வரிகளைப் போடும்போது அது விவசாய மக்களையும் ஏழை மக்களையும், பாதிக்காத அளவுக்குப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருமான வரியும், சொத்து வரியும் தவிர வேறு எந்த வரியைப் போட்டாலும் உபயோகிப்பவர்களைத்தான் பாதிக்கும். உதாரணமாக, சிகரெட்டின் மீது விதிக்கப்பட்ட வரி, சிகரெட் தொழிற்சாலையைப் பாதிப்பதில்லை. சிகரெட்டை உபயோகிப்பவர்களைத்தான் பாதிக்கிறது. சர்க்கரைக்கு அதிக வரி போட்டால் அது சர்க்கரைத் தொழிற்சாலையைப் பாதிப்பதில்லை, உபயோகிப்பவர்களைத்தான் பாதிக்கிறது. மத்திய சர்க்கார் உரத்தின்மீது விதித்திருக்கின்ற வரியும், பம்ப் செட்டுகளின் மீது விதித்திருக்கின்ற வரியும் ஏழை விவசாயிகளைத்தான் பாதிக்குமே தவிர, அந்தத் தொழிற்சாலைகளைப் பாதிக்காது. ஆகவே, புதிய வரிகளை நம்முடைய அரசு விதிக்கும்போது, ஏழை மக்கள் விவசாய மக்களைப்பாதிக்காத அளவிலே விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு அரசாங்கத்தை நடத்த வரி விதிப்பு அவசியம். ஆனால், வரியை விதிக்கும்போது மக்கள் அதைச் சுமக்கும் நிலைமையில் இருக்கிறார்களா என்பதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய வரிகளே உச்ச நிலையில் இருப்பதாகக் கருதுகிறேன். ஆகவே, கூடியமட்டும் அரசாங்கம் புதிய வரிகளை விதிப்பதைத் தவிர்த்தால் நல்லது. 1969–70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கும் விவசாய மக்களுக்கும் அதிகச் சலுகைகளும், வசதிகளும் செய்ய வகை

செய்யப்பட்டுள்ளது. விவசாயத்திற்காக 12 கோடி ரூபாயை நடப்பு ஆண்டிலே நில அடைமான வங்கிகள் மூலமாகக் கடன்கிடைக்க வசதி செய்துகொடுத்திருக்கிறது. மேலும், அடுத்த ஆண்டில் விரிவாக்கப்படும் என்ற கருத்தும் இதில் இருக்கிறது. இதை நான் மிகவும் மனதார வரவேற்கிறேன். ஆயினும், இந்தக் கடன் தொகையானது உடனடியாக, அவ்வப்பொழுது விவசாயிகளுக்குக் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நடப்பு ஆண்டிலே, கடந்த ஆண்டைவிட வேளாண்மை உற்பத்தி மிகவும் சுருங்கியிருப்பதாகக் குறிப்பாக உணவு உற்பத்தி சுருங்கியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா விதமான சலுகைகளையும், வசதிகளையும் செய்து கொடுத்து, நம் மாநிலத்திலுள்ள நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கச் செய்து, அதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்க, முக்கியமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சமயத்திலே மத்திய சர்க்கார் விவசாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமான உரத்திற்கும், பம்பு செட்டுகளுக்கும் வரி விதித்திருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதையும் நம் மாநில அரசு மத்திய சர்க்காரிடம் எடுத்துக் கூறி விவசாயத்திற்கு வேண்டிய இவைகளின் மீது வரி விதித்திருப்பதைத் தவிர்க்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு இதுவரை கொடுக்கப்பட்டு வந்த நோய் பூச்சிக்கொல்லி மருந்துக்கு அளிக்கப்பட்டுவந்த உதவித் தொகையை 35 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அளவுக்கு எல்லாவிதமான உதவிகளையும் அதிகரிக்கச் செய்ய வேண்டிய இந்த நேரத்தில், கொடுக்கப்பட்டுவரும் அந்த உதவியையும் குறைப்பது நன்றாகயிருக்காது என்று கருதுகிறேன். தற்சமயம் உணவு உற்பத்திக் குறைவாக இருக்கும் நிலையிலே இவைகளைக் குறைப்பது நன்றாக இருக்காது. ஆகவே, அரசாங்கம் மீண்டும் இந்தத் தொகையை முன்போலவே 35 சத விகிதமாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டிலே நம்முடைய இந்தப் பேரவையிலே புஞ்சைப் பூமிகளுக்கான அடிப்படை நில வரியை நாம் ரத்து செய்து சட்டம் இயற்றினோம். ஆனால், இந்த வரி விலக்கானது, நீலகிரியிலேயுள்ள காபி, தேயிலை விவசாயத்திற்குப் பயன்படும் புஞ்சைப் பூமிகளுக்கு அளிக்கப்படவில்லை. இதன் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தற்சமயம் உதகை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தேயிலை, காபி விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 6 ரூபாய் 90 பைசா வீதம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் 90 பைசா வீதமும், நிலவரி செலுத்துகிறார்கள். மேலும் நீலகிரியிலிருக்கின்ற தேயிலை, காபி விவசாயிகள், மத்திய சர்க்காருக்கு ஆயத் தீர்வையும், மாநில சர்க்காருக்கு விற்பனை வரியும் செலுத்தி வருகிறார்கள். ஆகவே, இத்தகைய அதிக வரிகளின் காரணமாக நீலகிரியைச் சேர்ந்த தேயிலை, காபி விவசாயிகள் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலே, நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களிலேயுள்ள புஞ்சைப் பூமிகளை நஞ்சைப் பூமிகளாக ஆக்கலாம், பண வசதியிருந்தால். ஆனால், நீலகிரி மாவட்டத்திலே, பண வசதியிருந்தாலும், நீர்ப்பாசன வசதி ஏற்படச் செய்ய முடியாது. காரணம் அங்கு இயற்கை அமைப்பு அப்படிப்பட்டது. அங்குள்ள விவசாயிகள் கையைக் கட்டிக்கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து, மழை வருமா மழைவருமா என்று பார்க்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்ட இந்த நில வரி விலக்கு நீலகிரி மாவட்டத்தில் அந்த சலுகையை அளிக்காததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அமைச்சரவர்கள் பதில் சொல்லும்படியான நேரத்தில் இதற்கான விளக்கத்தைத் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த புஞ்சை நில வரி ரத்தை நீலகிரி மாவட்டத்திற்கும் அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கடந்த நான்கைந்து ஆண்டுகளாகப் போதிய மழை இல்லாத காரணத்தினாலும், போதிய விலை கிடைக்காத காரணத்தினாலும், நோய்

[திரு. கே. போஜன்] [1969 மார்ச் 7

காரணத்தினாலும், நீலகிரியிலுள்ள கிழங்கு விவசாயிகள், தேயிலை, காபி பயிர் செய்யும் சிறிய விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் சர்க்காரிடமும், மற்றும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், பெற்றுவந்த கடன்களைத் திருப்பித் தர முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் இன்று விவசாயிகளிடம் அதிகக் கெடுபிடியுடன் அவைகளை வசூல் செய்து வருகிறார்கள். இந்த நிலையிலே சிறிய நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்குச் சொந்தமான சிறிய நிலங்களைக்கூட விற்று அந்தக் கடனை அடைக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, நம் மாநில அரசு அருள்கூர்ந்து அந்தச் சிறிய விவசாயிகள், நீலகிரி மாவட்ட விவசாயிகள் சர்க்காருக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் திருப்பித் தரவேண்டிய கடன்களுக்கு இன்னும் இரண்டாண்டு காலம் அவகாசம் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேயிலை உற்பத்தியை அதிகரிக்க நம் மாநில சர்க்கார் நீலகிரியைச் சேர்ந்த விவசாயிகள் எக்கர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் நில அடைமான வங்கிகள் மூலமாக நீண்டகாலக் கடன் பெற ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. இதை நான் நன்றியுடன் வரவேற்கிறேன். ஆனால், இந்தக் கடன்கள் விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது, உடனடியாகக் காலதாமதமின்றி கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது உணவு வினியோகத்திலே, கோயம்புத்தூர் நகரத்திலும், சென்னை நகரத்திலும், அவைகளின் சுற்றுப்புறங்களிலும் உள்ள 45 இலட்சம் மக்கள் படியரிசித் திட்டத்தின் மூலமும், மற்ற மாவட்டங்களில் 130 இலட்சம் மக்கள் குடும்பக் கார்டு திட்டத்தின் மூலமும் பலனடைந்து வருகிறார்கள். இதற்காக அரசு 8·79 கோடி ரூபாய் நிதியளித்து இருக்கிறது. இது வரவேற்கத் தக்கது. ஆனால், இந்தப் படியரிசித் திட்டம் நீலகிரி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று நான் இரண்டாண்டு காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால், ஒருவிதமான பலனும் கிடைக்கவில்லை. நீலகிரி மாவட்டம் நெல் உற்பத்தி செய்யாத மாவட்டம். அங்குள்ள மக்களில் பெரும்பாலோர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். குடும்பக் கார்டு மூலம் மற்ற மாவட்டங்களில் விற்பதைக் காட்டிலும், நீலகிரி மாவட்டத்திலே அரிசி அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக வேண்டி அங்கு படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். (மணியடிக்கப்பட்டது.) இப்பொழுதுதான் ஆரம்பித்தேன். இன்னும் இரண்டு, மூன்று நிமிஷங்கள் கொடுங்கள். இப்பொழுது மழையில்லாத காரணத்தினால், மாநிலத்திலே குடிதண்ணீர்ப் பிரச்சினை, உணவுப் பிரச்சினையையும் மீறி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராம குடிநீர்த் திட்டத்திற்கு அரசு நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டு 6 லட்சம் ரூபாய் அதிகம் வகை செய்திருக்கிறது. இருப்பினும் அது போதாது. இன்னும் அதை அதிகரித்து, குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும். மலை வாசஸ்தலமான உதகையில் இரண்டாண்டு காலமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. உதகையிலுள்ள, 50,000 ஜனங்கள் மாத்திரம் அல்லாது, மற்ற மாவட்டங்களிலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும், மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் உல்லாசப் பிரயாணிகள் இதனால் அவதிப்படுகிறார்கள். எனவே, இதைத் தீர்ப்பதற்கு உதகை நகராட்சி மன்றம் 5 லட்சம் ரூபாய் செலவிலே தலைகுந்தா மின்விசை மூலம் கொண்டுவர, அனுமதி கோரி, சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்காக உதகைவாழ் மக்கள் நம்முடைய மாநில சர்க்காருக்கும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களுக்கும், முன்னாள் பொதுச் சுகாதார அமைச்சரும், இப்பொழுதைய பொதுப்பணித்துறை அமைச்சருமான திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இருப்பினும் இதனால் மட்டும் இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியாது. உதகையில் குடி தண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத்

1969 மார்ச் 7] [திரு. கே. போஜன்]

தீர்க்க வேண்டுமென்றால், **Parson Valley** திட்டத்தை செயல்படுத்த உடனடியாக 36 லட்சம் ரூபாயை மாநில அரசு உதகை நகராட்சிக்கு நீண்டகாலக் கடனாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்வருகிறேன். நமது நிதியமைச்சரவர்கள் வெகு வேகமாகப் பல்வேறு காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தோடு நிதி அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில், முதலிலே கல்விச் சலுகையளிக்கப்பட்டு இருக்கிறது. பல ஆண்டுகளாக தமிழக மக்கள் எதிர்பார்த்து வந்த அந்தக் கல்விச் சலுகை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்றபொழுது பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அடுத்து, அரசுப் பணியாளர்களுக்குத் திருமணக் கடன் வழங்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் பாராட்டுகிறோம். அதே சமயத்தில் அரசு ஊழியர்களுக்கு நீண்டநாட்களாக இருந்துவருகின்ற குறையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இன்றைய தினம் விலைவாசி நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் 1-0) பி.ப.
செய்து அதை செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 7,900 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நல்ல ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஏற்படுகின்ற பொழுது, கல்வி இலாகாவில் இருக்கிற சீர்கேடான நிலைமைகளை மாற்றுவதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். கல்வியிலே புதிய முன்னேற்றங்களை செய்வதற்குரிய முறையிலே கல்வி இலாகா நடவடிக்கைகளிலே மாற்றங்கள் ஏற்படுகின்ற வகையிலே அரசு செயல்பட வேண்டும். தனியார் கல்விக் கூடங்களில் கல்வியை தனி ஆதிக்கமாக வைத்து நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தனியார் பள்ளிகளிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள் இன்றையதினம் மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தவிதமான உரிமையும் இல்லாத நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த தனியார் துறையிலே இருக்கிற பள்ளிகளை எல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்தி அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

துண்டு விழக்கூடிய தொகையை கிராம மக்களிடமிருந்து திரட்டக்கூடிய முறையில் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் பெரிய அளவுக்கு வாழ்க்கையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் கிராமப்புற மக்களிடமிருந்து நிச்சயமாக வருவாயை எதிர்பார்க்கக் கூடாது என்று அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு 180 கோடி ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். குறிப்பாக, விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறவர்கள் தலையிலே வரிச் சுமையை அழுத்தியிருக்கிறது மத்திய அரசு. அவர்கள் விவசாயத்திற்காக வைத்திருக்கக்கூடிய பம்ப் செட்டுகளுக்கும், மண்ணெண்ணெய் போன்றவைகளுக்கும், உரம் போன்றவைகளுக்கும் அதிக வரி விதிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு மேலே நாமும் அதே நிலையை ஏற்படுத்துவோமானால், அரசாங்கத்திற்கு மிகப் பெரிய எதிர்ப்பு கிராமங்களிலிருந்து உருவாகும். இதைக் கைவிட்டு, மத்திய அரசிடமிருந்து தேவையான தொகையைப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாநில அரசு செய்ய வேண்டும்.

பரிசுச் சீட்டு மூலமாக 2 கோடி 40 இலட்சம் ரூபாய் கிடைத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சாதாரண, நடுத்தர மக்களிடமிருந்து வந்திருக்கக்கூடிய பணமாகும் அது. அந்தத் தொகையை அரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்குவது நலமாக இருக்குமென்று நான் யோசனை சொல்ல விரும்புகிறேன். அரிஜன மக்கள் வாழ்க்கையிலே

மிகப் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான முன்னேற்ற நடவடிக்கையும் இதுகாறும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தனியாக ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு இந்த அரசாங்கம் ஒரு ஆலோசனைக் கமிட்டி நியமனம் செய்ய வேண்டும். கல்வித் துறையிலே எவ்வாறு முன்னேறுவது, பொருளாதாரத் துறையிலே எவ்வாறு முன்னேறுவது வேலைகளில் அவர்களுக்கு எவ்வாறு வாய்ப்புக்கள் அளிப்பது போன்றவற்றை ஆலோசிக்க ஒரு கமிட்டி அமைத்து, அதன் மூலம், அவர்கள் சொல்லக்கூடிய யோசனைகளைப் பெற்று இந்த 2 கோடியே 40 இலட்சம் ரூபாயை அவர்களுடைய நல்வாழ்விற்காக நான் கூறியபடி, பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றுவதற்கும், கல்வித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் உபயோகப்படுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மின்சாரமும், உணவு உற்பத்தியும் என்ற தலைப்பில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் மின்சார இலாகாவிலே எந்த வேலையும், நடைபெறுவது மிகப் பெரிய காரியமாயிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே கம்பங்கள் நட்டுப் பல ஆண்டுகளாகின்றன. அந்தக் கம்பங்களெல்லாம் மொட்டையாக நிற்கின்றன. அப்படி இருக்கும்பொழுது, எதற்காக நிறுவ வேண்டும். தயவுசெய்து மொட்டையாக இருக்கிற கம்பங்களை எடுத்துவிட்டால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், மின்சார இலாகாவிலே அதற்குரிய சாதனங்களை எல்லாம் கொடுத்து, மின்சார இணைப்பு கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். பல கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க பம்ப் செட் வைத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை இம்மாதிரியான ஒரு நிலை இன்றையதினம் இருந்து வருகிறது. அரசு மின்சார இலாகாவை துரிதப்படுத்தி அந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு நல்லகாலமாக வெள்ளம் வரவில்லை. அதிக மழை இல்லாததன் காரணமாக வெள்ளம் இல்லையென்று சொல்லலாம். வருஷா வருஷம் வெள்ளம் வந்து பயிர்கள் எல்லாம் நாசமாகிவிடும். ஒரு வருஷத்திற்கு 3 இலட்சம் ஏக்கர் வீணாகப் போய்விடும். இந்த நஷ்டத்தை தவிர்ப்பதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் அரசு முன்னாள் கலெக்டர் வேதநாராயணன் அவர்களைக் கொண்டு ஆராயச் செய்தது. அவர் ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் உள்ளபிரகாரம் அந்த மாவட்டத்திற்கு வடிகால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்ற வில்லையென்று சொன்னால் நாம் செலவழித்திருக்கிற அத்தனை தொகையும் வீணாகப்போய்விடும் என்பது என் அபிப்பிராயமாகும். அந்த வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியாக வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றுவதற்கு, பல்வேறு வேலைகளைச் செய்ய வேண்டுமென்பதற்காக மாநில அரசு 624 கோடி ரூபாய்க்கு அறிக்கை ஒன்று தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு 501 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்ட வேண்டுமென்று கூறியிருக்கிறது. போட்ட திட்டத்தை மிகக் குறைவான அளவிலிருக்கும்படி மாற்றச் சொல்லி அதற்குரிய தொகையை குறைத்திருக்கிறார்கள். நாம் கோரியிருக்கிற தொகையைப் பெறுவதற்கு இன்றையதினம் தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்களைத் திரட்டி அந்தத் தொகையை எவ்வாறு பெற வேண்டுமென்ற நிலையில், இதற்கு முன்னால் தூத்துக்குடி, சேலம் திட்டங்களை நிறைவேற்ற எழுச்சி நாள் நடத்தியதைப்போல் இந்தத் தொகையையும் பெறுவதற்கு ஒரு எழுச்சி தினத்தை நடத்துவதற்கு அரசும், மக்களும் முன் வரவேண்டும். இருபது ஆண்டுகளாக சொல்லிக் கொண்டுவந்த சேது சமுத்திர திட்டத்தை ஏன் இப்பொழுது விட்டிருக்கிறார்கள்? அந்தத் திட்டத்தை விட்டு விட்டார்களா? அந்த திட்டத்தைப் பற்றி நம்து அரசு மத்திய அரசிடம் சொன்னார்களா? அல்லது மத்திய

அரசு அந்த திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று சொன்னார்களா என்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆகவே, சேது சமுத்திர திட்டத்தைச் சேர்ப்பதன் மூலமாக பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்புகள், வசதிகள் ஏற்படும்.

இன்றையதினம் நம்முடைய அரசை எதிர்நோக்கியிருப்பது பஞ்சம். பஞ்சத்தின் காரணமாக ஒரு நெருக்கடியான சூழ்நிலையை நம்முடைய அரசு எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. பஞ்சப் பிரதேசங்களிலே வாழக்கூடிய மக்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு நாம் சீரான திட்டங்களை அமுல் நடத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவ்வாறு நல்ல திட்டங்களை அளிக்கின்ற நேரத்தில் இன்றையதினம் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் உணவுக்காக ஒரு இலட்சம் டன் கேட்டிருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்று தெரியவில்லை. மத்திய அரசாங்க உணவு அமைச்சர் வருகின்ற பொழுது அவரிடம் கோரப்போவதாகக்கூட செய்திகள் வந்துள்ளன. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் கொடுக்கிறார்கள். அவ்வாறு பஞ்சம் ஏற்படுகின்ற நேரத்தில் மத்திய அரசினாலே மற்ற மாநிலங்களுக்கு உதவி செய்யப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற இந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நாம் கோரக்கூடிய அந்த ஒரு இலட்சம் டன்னையும் மத்திய அரசு தந்துதான் ஆகவேண்டுமென்று மிக வலிவாக வற்புறுத்தவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த பஞ்சம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களைப் பஞ்சப் பிரதேசம் என்று அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டும். அதிலே எந்தவிதமான தயவு தாட்சண்யத்தையும் காட்ட வேண்டியதில்லை. பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தினால்தான் அந்தப் பிரதேசத்திற்கு வேண்டிய செலவினங்களுக்காக மத்திய அரசிடமிருந்து போராடிப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அப்படி பஞ்சம் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரதேசங்களிலே பஞ்ச நிவாரண கமிட்டிகள் அமைக்கவேண்டும். அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு .. .. (மணி அடிக்கப்பட்டது) வேண்டிய வழி வகைகளைச் செய்யவேண்டும். பஞ்சத் தடுப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டும். நியாய விலைக் கடைகளிலே உணவுதானியங்கள் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நில வரியினை ரத்து செய்ய வேண்டும். கடன் ஒத்தி வைப்பு செய்யவேண்டும். இதற்கு முன்னாலே அரசாங்கத்திற்கு ஆங்காங்கு இருக்கிற மாவட்ட கலெக்டர்கள் அறிக்கைகள் அனுப்பியதாகச் சொல்கிறார்கள். அந்த அறிக்கைகளை மாத்திரம் நம்பக்கூடாது. எல்லா கட்சிகளையும் சேர்த்து கூட்டங்கள் நடத்தி அந்தக் கட்சிகளுடைய ஆலோசனை அடிப்படையிலே அந்த பிரதேசங்களில் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்வது என்ற ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசு ஊழியர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை நம்முடைய அரசு வாபஸ் வாங்க வேண்டும். வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்பது மாத்திரம் போதாது, இன்றையதினம் உண்ணாவிரதம் இருந்த குற்றத்திற்காக கூட வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக ஜனநாயகம் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக, ஏற்பட்டிருக்கக்கூடிய உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு கொள்முதல் விஷயத்திலே கொஞ்சம் கறாராக இருக்கவேண்டுமென்று இந்த சமயத்திலே அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். கொள்முதல் என்று சொல்கின்ற நேரத்திலே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உணவு தானியங்களைப் பதுக்குவார்கள்.

பதுக்கல்காரர்கள் இந்த நெருக்கடியை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, கொள்ளை லாபம் அடிப்பார்கள். ஆகவே, கொள்முதலை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும். மக்களுக்கு விநியோகம்

செய்யும் துறையையும் அரசாங்கமே ஏற்று விநியோகம் செய்யவேண்டும். இடையிலே எந்தவிதமான தரகர்களும் இருக்கக்கூடாது. இடையிலே உள்ள தரகர்கள் கிடைத்தது ஆதாயம் என்று கொள்ளையடிக்கப் பார்ப்பார்கள். ஆகவே, கொள்முதல், விநியோகம் இந்த இரண்டு துறைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் குடிதண்ணீர் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டம் ஒன்றை தயாரித்தார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகருக்கு தண்ணீர் கொண்டு வருவதுமட்டுமல்ல, அப்படி தண்ணீர் கொண்டுவருகிற வழியிலே இரண்டு பிரதேசங்களில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு பாசனவசதி கிட்டும், நல்ல விவசாயம் ஏற்படுவதற்கு வழியாக இருக்கும். அதே சமயத்தில் சென்னையில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர் பற்றுக்குறையைப் போக்குவதற்கு உதவியாக இருக்கமுடியும், அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு ஐயப்பாடு, காவேரி நதியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவரும்பொழுது, தஞ்சை மாவட்டத்தில் பாசனத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பது. இம்மாதிரி ஒரு அச்சம் மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், மைசூர் அரசாங்கம் ஹேமாவதி அணைக்கட்டி, இங்கு வரக்கூடிய உபரி தண்ணீரை தடுப்பதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி செய்வதன் மூலம் காவேரிப் பாசனம் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்படும் என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

மேலும், நிதிக் கமிஷனுக்கு சமர்ப்பித்திருக்கக்கூடிய நான்காவது திட்டத்திற்கான நகல் திட்டத்தை இந்தச் சபையில் வைத்து விவாதித்து, அங்கத்தினர்களின் கருத்துக்களைப் பெற்று, அதன் மூலம் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* **ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நான் பேசுவதற்கு அனுமதித்ததற்காக முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை எளியவர்களைப் பாதிக்கின்ற புதிய வரிகளையும், அதே நேரத்தில் பெரிய அளவிற்கு பட்ஜெட் பற்றுக்குறையையும், புதிய நோட்டுக்களை அடிக்கின்ற முறையில் வழிவகைகளையும் கொண்ட நம்முடைய மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது, புதிய வரிகள் எதுவுமின்றி, ஏழை எளியவர்களுடைய ஏற்றத்திற்கு வழி செய்யக்கூடிய வகையில், அதே நேரத்தில் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி தருவதன் மூலம் ஏழைகளெல்லாம் கல்வித் துறையில் ஏற்றம் பெறும் முறையில் புதிய நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை நான் மனமாற பாராட்டுகிறேன்.

அரசுத்துறை ஊழியர்களுக்கு, உரிய வயது வந்தும், உணர்வு இருந்தும், அதே நேரத்தில் திருமணத்திற்குரிய பணம் இல்லாத காரணத்தினால், இளமை உணர்ச்சியே அழிந்துக்கொண்டிருந்த ஒரு நிலையை மாற்றுவதற்கு வழிவகை செய்யத்தக்க வகையில் திருமணச் செலவுகளுக்கு கடன் கொடுத்து உதவுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் அரசு ஏற்பாடு செய்திருப்பதை நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன்.

தனியார் பள்ளிகளில் பணிபுரிகிற ஆசிரியர்களுக்கும் இதுபோன்ற பலனை பெறுவதற்கும், மருத்துவ வசதி ஆசிரியர்களும், ஆசிரியர்களுடைய குடும்பத்தினரும் பெறுவதற்கும் நம்முடைய அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வங்கக் கடற்கரை ஓரத்தில், உழைப்பாளர் சிலைக்கு அருகே இளைப்பாறிக்கொண்டிருக்கும், எதையும் தாங்கும் இதயம் கொண்ட நம்முடைய அண்ணா அவர்கள், தமிழின் காதலர், தமிழ் மக்களின் காதலர், யமுனை நதிக்கரை ஓரத்தில் எப்படி ஒரு காலத்தில் எழில்மயமான தாஜ் மஹாலை காதலின் சின்னமாக எம்முடைய சமய மன்னர்களின் ஆட்சி காலத்தில் கட்டினார்களோ, அதேபோன்று, தமிழ் நாட்டில் குமரி முனையில் மூன்று கடல்கள் சங்கமமாகின்ற இடத்தில் நம்முடைய தேசிய தந்தை காந்தியடிகளின் நினைவு மண்டபத்தை எழுப்பி, கடற்கரை ஓரத்தில் அழகுக்கு அழகு சேர்த்துள்ளோமோ, அதே போன்றும் அறிஞர் அண்ணா அவர்களின் கல்லறையைச் சுற்றி எழில்மாடம் அமைப்பதன் மூலம், தமிழின் காதலருக்கு, தமிழரின் காதலருக்கு ஒரு அழகு மணி மண்டபத்தை உருவாக்க இந்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள், தங்களுடைய காணிக்கையையும் பொது மக்கள் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கேரள, வங்க மாநில அரசுகள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரவேண்டும் என்று மத்திய அரசைப் பார்த்து குரல் கொடுக்கின்ற காட்சியை நாம் வெளி மாநிலங்களில் பார்க்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருவதன் மூலம் இந்திய ஒருமைப்பாடு எதிர் காலத்தில் இந்த நாட்டில் நிலைபெற முடியும் என்கிற கொள்கையையே நம்முடைய அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை. இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நினைத்தார்கள். ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்கிற ஜனநாயகக் கட்சியினுடைய கொள்கையும் ஆகும். அந்தக் கொள்கைக்கு ஆதரவு பெருகி வருகின்ற சூழ்நிலை நம்முடைய மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் உருவாகிக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை இந்திய அரசு புறக்கணித்த நேரத்தில் சேலம் இரும்பு ஆலையைத் தூங்க வைத்த நேரத்தில், எழுச்சி நாள் கொண்டாடி, மத்திய அரசின் கவனத்தை ஈர்த்ததுபோல, இப்பொழுது இருக்கிற மாநில அதிகாரங்கள் அதிகப்படுத்தப்படவேண்டும் என்று கருதக்கூடிய சூழ்நிலையில், ஒரு எழுச்சி நாளைக் கொண்டாடுவதன் மூலம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரக்கூடிய சூழலை உருவாக்க மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்க அனைத்துக் கட்சிகளையும் கலந்து இந்தப் புதிய அமைச்சரவை ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டு காலமாகியும் கலைக்கப்பட்ட முஸ்லீம் வஃபு போர்டு இன்னும் அமைக்கப்படவில்லை என்கிற குறைபாடு முஸ்லிம் சமூக மக்கள் மத்தியில் பரவலாக இருந்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்: இரண்டு ஆண்டு காலத்தில் அதற்காக நியமிக்கப்பட்ட தனி அதிகாரி அவர்கள் போதிய அளவுக்கு வழக்குகளை போட்டிருக்கிறாரா, என்ன நன்மைகள் செய்திருக்கிறார் என்பதை இந்தச் சமூக மக்கள் அறிவதற்கு துடிதுடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய விளக்க அறிக்கையை முஸ்லிம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பொது மக்களுக்குத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் முஸ்லிம் அற நிலையத்துறையில் சார்பாக, சமய உண்மைகளைப் போதிக்கின்ற வகையில் பயிற்சியாளர்கள பள்ளிக்கூடம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்துதரவேணடும். முஸ்லிம், ஏழை எளிய விதவைப் பெண்களுக்கு உதவி செய்யும் வகையில் கூட்டுறவுத் துறையில் குடிசைத் தொழில்கள் நிறுவுவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நாடு விடுதலை அடைந்த காலத்திலிருந்து இன்றைய காலம் வரையிலும் முஸ்லிம் சமூக மக்கள் மத்தியிலிருந்துகொண்டிருக்கிற ஒரு பெரிய குறைபாடு என்னவென்றால், அரசினர் முஸ்லிம் சமூகத்திலுள்ளவர்களை காவல்துறை அதிகாரிகளாக நியமிப்பது அருகியிருக்கிறது. அப்படிப்பட்ட நியமனம் நிறுத்தப்பட்டிருக்கிறதா என்று ஐயங்

கொள்ளும் சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. 1966-ம் ஆண்டு காவல் துறையில் டெப்யூடி போலீஸ் சூப்பரிண்டெண்டாக ஒரே ஒருவர் தான் முஸ்லிம் சமூகத்திலிருந்து நியமிக்கப்பட்டார். காவல்துறையில் 1964-ம் ஆண்டில் சப்-இன்ஸ்பெக்டராக 6 பேர்களும், 1965-ல் மூவரும், 1966-ம் ஆண்டில் 13 பேர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதற்கு முன்னரும் சரி, அதற்குப் பின்னரும் சரி, இதுவரையிலும் காவல்துறை அதிகாரிகளாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். 1964-65–67–68-ம் ஆண்டுகளில் புதிய நியமனங்கள் சூப்பரிண்டெண்டு பதவிக்கு எதுவுமில்லை. 1967–68-ம் ஆண்டு சப்-இன்ஸ்பெக்டர் நியமனம் எதுமில்லை. இந்த ஆண்டுகளைப் பொறுத்தவரையில் புதிய நியமனங்கள் இல்லாத காரணத்தினால், முஸ்லிம்கள் நியமிக்கப்படவில்லை என்பதை நான் உணர்கிறேன். என்றாலும், இந்தத் துறையிலே நம்முடைய காவல்துறை அமைச்சர் அவர்கள் விசேஷ அக்கரையுடன் முஸ்லிம்களின் குறையைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற ஆண்டில் 2,500 தனியார் குழாய் கிணறுகள், 3,000 வடிமுனைக்குழாய் கிணறுகள், 14,000 பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையில் வகை செய்யப்பட்டிருப்பதை நான் அறிகிறேன். அதே நேரத்தில் மான்யமாகவோ அல்லது நேரடி பணமாகவோ கொடுக்காமல், இந்தக் கிணறுகளை அரசே தோண்டிக் கொடுக்கமுடியுமானால், தரப்படுகிற பணம் வாங்குவோரால் வேறு துறைகளுக்குப் பயன்படுத்தப்படுவதன் மூலம், பணம் வீண் விரயமாகாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கூட, நெல்லை-குமரி மாவட்டங்களில் வாழைப்பழம் அதிகமாக உற்பத்தியாகிறது. நல்ல வருவாய் தருவதாக இருக்கிறது. அங்கே ஒரு வாழை ஆராய்ச்சி நிலையம் வைத்தால் நலமாக இருக்கும். தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் ஒரு நிலையம் இயங்கிவருவதை நாம் அறிவோம். நெல்லை-குமரி மாவட்டங்களில் செவ்வாழை, ரஸ்தாளி, மட்டி, தேன் மட்டி, எத்தங்காய்போன்ற பல ரகங்கள் உள்ளன, அவைகள் அருகிக் கொண்டு வரும் நிலை உள்ளது. அந்த சூழ்நிலையை மாற்றி, அதைப் பெருக்குவதன் மூலம், உள்நாட்டு உணவுப் பொருள்தேவையும் பூர்த்தி செய்ய முடியும், வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணி வசதியும் கிடைக்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டத்தில் வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதால், மக்கள் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அதே போல, திருச்செந்தூர் வட்டத்தின் தென் பகுதியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நாங்குனேரியை ஒட்டிய பகுதியாக இருப்பதாலும், துயர் துடைக்கும் பணிக்கு ஒதுக்கியுள்ள பணத்தை திருச்செந்தூர் வட்ட தென்பகுதியிலும் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, காலஞ்சென்ற முதல் அமைச்சர் அவர்கள் ஜீவியத்தோடு இருந்தபோது, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆரம்பிக்க இருக்கின்ற நூற்பாலையை ஏழைகளும், நெசவாளிகளும் நிறைந்த, இலங்கை பர்மா போன்ற நாடுகளிலிருந்து வந்த அகதிகள் அதிகமாக இருக்கிறதுமான மேலப்பாளையம் நகரத்தில் ஆரம்பிக்கப்படும் என்கிற வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது துறைமுகத்திட்டங்களும், வளர்ச்சிப்பணிகளும் நடைபெறும் தூத்துக்குடிப் பகுதிக்குக் கொண்டு போக முயற்சி நடக்கிறது என்று அறிகின்றேன். அறிஞர் அண்ணா ஆன்மாவின் வாக்குறுதியை நிறைவேற்றி, ஏழை எளிய மக்களும், பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வந்த அகதிகள் நிறைந்திருக்கும் மேலப்பாளையத்தில் அந்த நூற்பாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

புதிதாக ரேஷன் கடைகள் கொடுக்கும் போது, கூட்டுறவு பண்டக சாலைகள் இல்லாத இடங்களில், பர்மா, இலங்கை அகதிகள், பல சரக்குக் கடைகள் வைத்து ரேஷன் வினியோகம் செய்யும் உரிமை கேட்டால் தரவேண்டுகின்றேன்.

சாஸ்திரி-பண்டார நாயகா உடன்பாட்டின் படி இலங்கையிலிருந்து வருபவர்கள் அகதிகளாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கும் முன்னரே இலங்கையிலிருந்து அகதிகள் வந்திருக்கிறார்கள். அவர்களையும் இந்த இலங்கை அகதிகள் பட்டியலில் சேர்த்து அரசு உதவிகள் கிடைக்கும் வகையில் வழி செய்ய வேண்டும் என்றும், அதற்காக மத்திய சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் "நான்காம் திட்டத்தை செயல்படுத்த அவர்கள் நிர்வாக அமைப்பு முற்றிலும் ஆயத்தமாக உள்ளது, மக்களின் நலன்களைப் பெருக்கும் மாபெரும் பொறுப்பில் தோள் கொடுத்து நம்முடன் இணைந்து துணை நிற்க வேண்டிய மத்திய அரசு, நமது முயற்சிகளுக்கு ஆதரவு நல்கி போதிய நிதி உதவி அளிக்க வேண்டியது அதன் கடமையாகும், இந்த வேண்டுகோளை இம்மன்றத்தின் எல்லாப் பிரிவினரும் ஆதரித்து, அரசுக்கும் அதன் பல்வேறு துறைகளுக்கும் மாநிலப் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதில் தங்குதடையற்ற ஒத்துழைப்பை நல்குவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை" என்று கூறியிருப்பதை மனப்பூர்வமாக ஆதரித்து அமைகிறேன்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய எண்ணங்களையும் சொல்ல விழைகிறேன். மறைந்த மாமேதை அறிஞர் அண்ணாவின் கல்வி அறிவாற்றல் மிக்க தன்மை அவரை உலக உத்தமர்களில் ஒருவராக்கியது. அவர் பெருந்தன்மை படைத்தவர். உலகத்தோரால் போற்றப்பட்ட அத்தகைய சிறப்புக்குரியவர் நம்மை விட்டு சென்றுவிட்டார்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு என் இதயம் நிறைந்த அஞ்சலியையும் என் தொகுதி மக்கள் சார்பான அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட உத்தமருக்கு இந்திய சர்க்கார், அவரைக் கவனித்து சவ அடக்கத்திற்கு வேண்டிய சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ததற்காக இந்திய சர்க்காரையும், குறிப்பாக பிரதமரையும் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். அத்துடன் நமது ஆளுநர் அவர்களும், இங்கே ஆளுநர் முதல் அமைச்சர் என்று இல்லாமல் அண்ணன் தம்பி போல ஒன்றாக இணைந்து இருந்து இந்த நாட்டில் வேறு மொழி இனத்தவர் என்பதே தெரியாத அளவிற்கும் அப்படிப்பட்ட எண்ணத்தை யாருக்குமே ஏற்படுத்தாத வகையிலும், காலம் நேரம் பாராது முதலமைச்சர் உடல் நலம் பெற பெரும் பாடுபட்ட அவருக்கும், அவருடைய துணைவியாருக்கும் என்னுடைய மனப்பூர்வமான நல்லெண்ணங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டு ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அதிலே இதுவரைக்கும் கொள்கை அளவில், மக்களுக்கும் ஆட்சிக்கும் இடையே ஏதாவது கிளர்ச்சி நடந்திருக்கிறதா என்றால், எந்தப் பிரச்சினையும் மக்களுக்கு விரோதமாக ஏற்படவில்லை. இருந்தும், காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள். இங்கு சட்டம் அமைதி கெட்டுவிட்டது என்றும், தங்களுடைய பாரம்பரியம் உயர்ந்தது என்பது பற்றியும் பேசுவது என்ன பாரம்பரியம்? நாகர்கோவில் எலெக்ஷன் நடந்தது. அங்கே ஜாதி வென்றது. ஜனநாயகம் செத்தது. எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதுதான் பாரம்பரியம் போலும். அங்கேயுள்ள நாடார் பெருமக்கள், காமராஜை ஆதரித்தார்கள். அதில் தவறு கிடையாது. காமராஜர் இங்கே பதவியில் இருந்தபோது தமிழருக்குச் செய்தார்கள் என்றாலும் குறிப்பாக நாடார் பெருமக்களுக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே நாடார் இனத்தவர் அவரை ஆதரித்தார்கள். அந்த விதத்தில் காமராஜர் வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றால் தங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று எண்ணியே மனப்பூர்வமாக அவரை நாடார் பெருமக்கள் ஆதரித்திருக்கிறார்கள். ஆகவே ஜாதிவென்றது. ஜனநாயகம் செத்தது. ஜாதி இருக்கும் வரை, ஜனநாயகம் பிழைக்காது. ஜனநாயகத்துக்கும், ஜாதிக்கும் நேர் விரோதம். ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் கல்வி, ஒழுக்கம், நேர்மை உள்ள

வர்கள் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். பணம் இருப்பவர்கள்' ஜாதி மக்கள் பெருவாரியாக இருப்பவர்கள் வெற்றி பெறுகிறுர்கள். அது தான் உண்மை. மறுத்துப் பேசுவதற்கு பயன் இல்லே. ஜாதி இருக்கும் வரை, ஜனநாயகம் தழைக்கவே செய்யாது. நம் நாட்டில், அதுவும் குறிப்பாக, கல்வியறிவு குறைவாகவும் உயர் கல்வியில் 10 சதவிகிதம் கூட படித்தவர்கள் இருக்க மாட்டார்கள் என்று நிலே இருக்கும் போது நாட்டில் ஜனநாயகம் என்பது வெறும் கேலிக் கூத்தே. ஜாதிகள் இருக்கின்றன. ஜாதி அடிப்படையில் சில சலுகைகள் பெற முடிகிறது. அதற்கெல்லாம் வழி வகுத்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். மக்களிடம் ஜாதி வெறியை ஊட்டிஞர்கள். ஆனல் இப்பொழுது பாரம்பரியம் பேசுகிறுர்கள். இந்திய சுதந்திரம் கிடைக்கப் போராடிய போது ஏதோ நாட்டு மக்களில் சிலர் ஏகோபித்து சுதந்திரம் வேண்டாமென்று முடிவு எடுத்தது போலவும் காங்கிரஸ்காரர்கள் மட்டும் பல தியாகங்கள் செய்ததால் தான் சுதந்திரம் கிடைத்தது போலவும் கீழான ஒரு கொள்கையைப் பேசி வருகிறுர்கள். அந்தக் கொள்கையை அவர்கள் பேசக் கூடாது. அன்றைக்கு இருந்த அரசியல் கட்சிகளிலே அது முன்னணியில் இருந்தது என்று வேண்டுமானுலும் பெருமைப்படலாம். இன்றைக்கு 20 ஆண்டு காலமாக ஆட்சி நடத்திஞர்கள். எந்த அளவில் முன்னேற்றம் கண்டிருக்கிறுர்கள் ? நிச்சயமாக ஒன்றுமில்லே. அடிப்படை அட்மினிஸ்ட்ரேஷனே கூட மாறவில்லே. நாங்களெல்லாம் மக்கள் பிரதிநிதிகள். ஒரு எம்.எல்.ஏ. என்றுல் கிட்டத்தட்ட 3 லட்சம் மக்களுடைய பிரதிநிதி. எங்கள் எண்ணத்தையெல்லாம் தெரிவிக்க இந்த சபையிலே பத்து நிமிஷம் தான் கொடுக்கிறுர்கள். உண்மையிலேயே வாய்ப்புக் கிடைப்பதில்லே. அமைச்சர் பெருமக்கள் சொல்லுகிறுர்கள், என்ன குறைகள் என்றுலும் அதிகாரிகளிடம் சொல்லுங்கள், உடனுக்குடனே தீர்ப்பார்கள் என்று. ஆனல் அதிகாரிகள் அந்த அளவில் பெருவாரியானவர்கள் செயல்படவில்லே. நாங்கள் எழுதும் கடிதங்களுக்கு பதிலே அனுப்புவதில்லே. போய் நேரில் சொல்வது என்றுலும் ஒரு எம்.எல்.ஏ.க்கு ஒரு நாளுக்கு ரூ. 10, 15 வாடகை வண்டிக்கு செலவாகும். கிடைக்கும் இந்த 250 ரூபாயில், லெட்டர் பாட் முதற்கொண்டு நாங்களே வாங்க வேண்டும். அதற்குப் பிறகு ஸ்டாம்ப் சார்ஜ் இருக்கிறது. டெலிபோன் சிலவு உள்ளது. இப்படியெல்லாம் இருக்கும்போது நிலேமைகளேச் சீர் செய்ய அமைச்சர்கள் ஏதாகிலும் அருள் கூர்ந்து வழிவகைசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசியல் புனிதமானது. ஆனல் அரசியல் அயோக்கியர்களுக்குத் தான் புகல் இடம் என்று சிலர் பரப்பிவிட்டார்கள். அதில் ஓரளவு உண்மை இருக்கலாம். ஆட்சிப் பொறுப்பு வந்த பிறகு அரசியல் கட்சிக்கு அந்தப் புனித தன்மை இரட்டிப்பாக வேண்டும். நல்ல தூய எண்ணத்தை நடைமுறைப்படுத்த நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்கு நல்ல முறையிலே அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும். நாங்கள் ஏதோ 130 எம்.எல்.ஏ.க்களோ அல்லது ஒன்பது, பத்து அமைச்சர்களோ இருந்து நல்ல கொள்கைகளே வகுத்துவிட்டால் மட்டும் போதாது. வெற்றி பெற இலட்சோப இலட்சம் சர்க்கார் சிப்பந்திகளும் நல்ல முறையில் மனிதாபிமானத்தோடு செயல்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

மேலும் ஒரு வேலேயில் சேரும்போதே மற்ற இலாகாக்கவிலோ கம்யூனிடி சர்டிபிகேட், காண்டக்ட் சர்டிபிகேட் வேண்டும் என்று பலர் கேட்கிறுர்கள். ஒவ்வொரு வேலேக்கும் சில அடிப்படை தகுதிகள் இருக்கின்றன. அந்தத் தகுதி அடிப்படையில்தான் வேலே தரப்படுகிறது. முன்பின் தெரியாதவர்களுக்கு எல்லாம் காண்டக்ட் சர்டிபிகேட் கம்யூனிடி சர்டிபிகேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. கம்யூனிடியை தவருக சொல்லி சலுகைபெறும் தவறு செய்பவர்களேக் கண்டுபிடித்து கடுமையாக தண்டித்தால்போதும். அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலே இது. காண்டக்ட் சர்டிபிகேட், கம்யூனிடி சர்டிபிகேட் கொடுப்பது எம்.எல்.ஏ.-க்களுக்கும், எம்.பி.-க்களுக்கும் தொந்தரவாகத்தான் இருக்கிறது. சர்டிபிகேட் கொடுப்பவருக்கும், பெறுபவருக்கும் பல சமயங்களில் சம்பந்தமே இராது. இதுவரை யாரும் கெட்டவர் என்றே சர்டிபிகேட் கொடுத்ததும் இல்லே.

அடுத்தபடியாக சட்டப் பேரவைக்கு பார்வையாளர்கள் வருகிறுர்கள். இந்தப் பேரவையில் கபாசிடி எவ்வளவு இருக்கிறதோ அதைப் பார்த்து ஒரு ஒளார்க்கை வைத்து அனுமதிச் சீட்டை வழங்கிவிடலாம். இங்கு வருபவர்களேயெல்லாம் எம்.எல்.ஏ-களிடம் தான் அனுப்புகிறுர்கள். இதனுல் எம்.எல்.ஏ.-க்களுக்கும் மக்களுக்கும் தொந்தரவு ஏற்படுகிறது. சுமார் 100, 200 பேரை வரிசையாக நிற்க வைத்து இடம் இருக்கும் வரையில் அனுமதித்தால் போதும். இதற்கு எம்.எல்.ஏ.-யை பார்க்கவேண்டும். அனுமதிச் சீட்டு வாங்க வேண்டும் என்று முறைகள் எல்லாம் தேவை தானு என்பதைப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலேவர் : சீக்கிரம் உங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு எம். ஆர். கண்ணன் : பொதுப் பிரச்சினேகளே முடியவில்லே. பி.ப. 1–30
என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசுவதற்குக் கூட நேரம் இல்லே. மேலும் தொழில்கள் தேசீய மயமாக வேண்டுமென்று சிலர் பேசிஞர்கள். நேற்றைய தினமணி தலேயங்கம் இது குறித்து மத்திய சர்க்காரிலே 3,500 கோடி ரூபாய் செலவழித்து திட்டமிட்டு பொதுத் துறையில் 80 நிறுவனங்களே அமைத்துள்ளது. அவைகளில் மட்டும் சுமார் ரூ. 200 கோடி நஷ்டம் 1967–68-ல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. பொது மக்களின் பணத்தை வரியாக வாங்கி இப்படி விரயமாக்குகிறுர்கள் மத்திய அரசினர். இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் இந்த அரசை குறை கூறுகின்றனர். இது குறித்து இந்த சட்ட மன்றத்தில் பேசிய திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்களும் திரு. சின்னராஜ் கவுண்டர் அவர்களும் நல்ல பல கருத்துகளேக் கூறிஞர்கள். அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டும். உண்மையில் தேசியமயம் என்பது சிறப்புக்குரியது தான். ஆனல் நாட்டு மக்கள் அதனே பின்பற்றக் கூடிய அளவுக்கு அவர்களுடைய எண்ணம் இல்லே. சென்னேயிலே நடக்கிற பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், அதனுல் சர்க்காருக்கும் கெட்ட பெயர்தான் ஏற்படுகிறது. (மணியடிக்கப்பட்டது.)
மேலும் தொடர்ந்து பேச வாய்ப்பு இல்லாததால், இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இன்னும் சிலர் பேச வேண்டியிருப்பதால், இம்மன்றத்தின் நிகழ்ச்சி அரை மணி நேரம் நீடிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : பேரவைத் தலேவர் அவர்களே, 1969–70ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்மேல் பேசுவதற்கு முன்னுல், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் விரும்பக்கூடிய அம்சங்களே, ஏழை எளிய மக்களுடைய துன்பங்களேயும் துயரங்களேயும் தீர்க்கக்கூடிய வகையில் வரியே இல்லாத பட்ஜெட்டைத் தயாரித்ததற்காக நான் மனமாரப் பாராட்டுகிறேன். வரவுசெலவு அறிக்கைகள் ஆண்டுதோறும் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுறது. தமிழகம் முழுவதும் உள்ள எல்லாக் கிராமங்களுக்குமே மின்சாரவசதி எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு வசதி, எல்லாக் கிராமங்களிலும் குடி தண்ணீர் வசதி, எல்லா கிராமங்களிலும் நீர்ப்பாசன வசதிகளே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தால் நலமாக இருக்கும் என்பதைத் சொல்லி கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி நிலேயில் இருக்கிறதென்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல. இன்றையதினம் தமிழகத்தில் பெரும்பகுதியான மாவட்டங்கள் வறட்சியால் வாடுகின்றன. இராமநாத

புரம் மாவட்டம் எப்பொழுதுமே வறட்சியான மாவட்டம். என்னுடைய மாவட்டத்தில் கரியாப்பட்டி, முதுகுளத்தூர் பகுதிகள் மிகமிக வறட்சியான பகுதிகளாகும். காங்கிரஸ் கட்சி ஒரு கொள்கையைக் கடைபிடித்து வந்தது. அந்தப் பிராந்தியத்தில் இருந்த திரு. முத்துராமலிங்க தேவரின் செல்வாக்கின் காரணமாக எந்தவிதமான நன்மையும் செய்யக் கூடாது என்ற திட்டத்தைக் காங்கிரஸ் கடைப்பிடித்து வந்தது. பஞ்ச நிவாரண வேலைகள் இருக்கும் சமயத்தில் நீர்ப்பாசன வேலைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் கிருதுமால் கால்வாய்த் திட்டம், சீமைக்கால்வாய்த் திட்டம், மல்லாங்கிணவு திட்டம் போன்ற பாசனத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். மேலும் கண்மாய்களை மராமத்து செய்ய வேண்டும். என்னுடைய மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளில் பஞ்ச நிவாரண வேலையாக ரோடு போடும் வேலையை மேற்கொள்ள வேண்டும். மற்றும் விவசாயிகள் தர வேண்டிய கடனை ஒற்றிவைக்க வேண்டும். பஞ்சப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும். நான் கலெக்டர் அவர்களிடம் சென்று "நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துங்கள்" என்று சொன்னேன். அதற்கு கலெக்டர் அவர்கள், "போதுமான அரிசி கிடைக்கவில்லையே" என்று சொல்கிறார்கள். "மக்கள் பட்டினியாக இருக்கிறார்கள். குடும்பம் குடும்பமாக ஊரைவிட்டு வெளியேறுகிறார்கள், கோதுமையாவது கொடுத்தால் போதும்" என்றேன். இதுபோன்ற காரியங்களைக் கவனித்து உடனுக்குடன் செய்தால் வறட்சிப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஓரளவு நன்மையாக இருக்கும். சட்டமன்றத்தில் பேசுகிறபோது, எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தை தமிழக அரசின்மீது கொண்டு வந்து பேசினார்கள். "இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரின் வாயில் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தியவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு விடுதலை செய்துவிட்டது" என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். "அந்தப் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களையெல்லாம் சர்க்கார் விடுதலை செய்து விட்டது" என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்கள். அவர் அப்படிக் கூறியபோது, சட்டமன்ற விதியின்படி எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பிருந்திருந்தால், நான் அன்றையதினமே அவருக்குப் பதில் சொல்லியிருப்பேன். பட்ஜெட் விவாதத்திலாவது பதில் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்கிறேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இங்கே இல்லாதது கண்டு வருத்தப் படுகிறேன்.

1942-ம் ஆண்டு நடந்த ஆகஸ்ட் போராட்டத்தை காங்கிரஸ் கட்சி அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஆகஸ்ட் போராட்டத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்று தீர்மானம் ரூபமாக வெளியிடப்பட்டது. குலசேகரப் பட்டிணத்தைச் சேர்ந்த திரு. காசிராஜன், திரு. ராஜகோபாலன் என்பவர்கள் இருவரும் தூக்குமேடைக்குப் போகும்படியான நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், தூக்குமேடைக்குச் சென்றவர்களை விடுதலை செய்தது. ஆகஸ்ட் போராட்டத்தில் பலாத்காரமான வேலைகளில் ஈடுபட்டவர்களையெல்லாம் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியானவுடன் விடுதலை செய்தது. இதையெல்லாம் மறந்துவிட்டு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் "இந்த அரசு செய்தது தவறு" என்று இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள்.

கீழ்வெண்மணி சம்பவம், வாரியார் நிகழ்ச்சி, மதுரை நிகழ்ச்சி போன்றவை தொடர்ந்து வருகிறபோது, தமிழகத்திலே ஒரு சட்டவிரோதமான நிலைமையை உருவாக்க காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டுச் செயல்

படுத்துகிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. மதுரை சம்பவம் ஏற்பட்டது ஒரு சாதாரண நிகழ்ச்சி. குற்றவாளியை போலீஸ் வேனில் அழைத்துச் சென்றார்கள். ஐநூறு பேர், ஆயிரம் பேர் ஒன்றுகூடி போலீஸ் வேனைத் தாக்கி, கற்களால் அடித்தார்கள். இப்படிச் செய்யும் போது இது சாதாரண செயல் அல்ல. அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னால் ஒரு பொதுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர் "நான் சம்மனைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை, நீதிமன்றத்திற்குப் போகப் போவதில்லை" என்று பகிரங்கமாகப் பேசியிருக்கிறார். அவர்கள் எல்லாம் யார் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகியவர்கள், காங்கிரஸின் பெயரை வைத்துக்கொண்டு இதுபோன்ற கலவரங்களை, சட்ட விரோதமான காரியங்களையெல்லாம் செய்து வருகிறார்கள். (மணியடிக்கப் பட்டது).

பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டு நிமிடங்கள் அனுமதிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேரிலுள்ள வெறுப்பைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் இப்படிப்பட்ட கலவரங்களில் காங்கிரஸ் பெயரை வைத்துக்கொண்டு ஈடுபடுகிறார்கள். பழைய காங்கிரஸ்காரர்கள் இருக்கிற இடத்தில் புதிதாக நுழைந்த நாம் நல்ல பெயர் எடுக்க முடியாது என்ற காரணத்தினால், தவறான காரியங்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். உத்தமர்கள், தியாகிகள் தோன்றிய பாரம்பரியத்தில் வந்தவர்களையெல்லாம் செல்லாக் காசாக்கிவிட்டு, ஒரு புதிய ஸ்டாராக தாங்கள் பிரகாசிக்க வேண்டுமென்று புதிய காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் பழைய காங்கிரஸ்காரர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அப்படி பழைய காங்கிரஸ்காரர்கள் விழிப்போடு இருப்பதுதான் தேசத்திற்கும் நல்லது, அவர்களுக்கும் நல்லது என்று கூறிக்கொண்டு, இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. கே. மூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துகளைச் சொல்லும் முன்னால் "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று நாமக்கல் கவிஞர் வாய்மொழியை நிறைவேற்றிச் சென்ற பேரறிஞர் அண்ணன்—எங்களுக்கு எல்லாம் தலைவராக விளங்கிய அண்ணன்—லட்சோப லட்சம் மக்களின் இதயங்களில் குடிகொண்டிருக்கும் அண்ணன் மறைவுக்கு எனது அஞ்சலியைச் செலுத்திக்கொண்டு எனது சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் என்ன இருக்கிறது என்று எதிர்தரப்பில் உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் என்ன இருக்கிறது, எங்கே இருக்கிறது என்று தேடியவர்கள் இன்றைக்கும் இந்த நிதி அறிக்கையில் என்ன இருக்கிறது, எங்கே இருக்கிறது என்று தேடுகிறார்கள். அதோடு மட்டும் அல்ல, இன்று இருக்கிற அரசாங்கம் செய்கின்ற நல்லவைகள் அத்தனையும், செய்கின்ற திட்டங்கள் அத்தனையும் அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை. அவை மாலைக் கண்ணாக இருப்பவை—மஞ்சள் கண்ணாக இருப்பவை. அறிக்கையில் கூறியிருக்கக்கூடிய எழில் மிக்க திட்டங்கள் அவர்கள் கண்ணில் படவில்லை என்றால் அவை சரியான கண்களாக இருக்க முடியாது. பழுதடைந்த கண்களாகத்தான் இருக்க வேண்டும். குருடனிடம் தங்கத்தையும், வைரத்தையும், கோமேதகத்தையும் கொண்டுபோய்க் காட்டினால் இது என்ன, ஏதோ கல்போலத்தான் இருக்கிறது என்று தடவிப் பார்த்துச் சொல்வான். அதுபோல வரியே இல்லாத பட்ஜெட்டை, குறையே இல்லாத பட்ஜெட்டை, ஏழைகளின் வாழ்வை வளப்படுத்துகின்ற பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறபோது, இவர்கள் எங்கே இருக்கிறது, என்ன இருக்கிறது என்கிறார்கள் என்றால்-தேடித் தேடி அலைகிறார்கள் என்றால் அவர்களுக்குக் கண் இருந்தும் குருடர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.

[திரு.எ. கே. மூர்த்தி] [1969 மார்ச் 7

நான் சொல்கிறேன். அவர்கள் டெல்லி பட்ஜெட்டை அவர்களுடைய கட்சி சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டை பார்த்துவிட்டு அதில் 150 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்களே, இதில் ஏன் வரி போடப்படவில்லை என்பது போலப் பேசுகிறார்கள். அவர்கள் போடுகின்ற கேள்விகள்,—மத்தியில் 150 கோடிக்கு வரிபோட்டார்களே, நீங்கள் 75 கோடிக்காவது வரி போட்டிருக்கவேண்டாமா என்று சொல்வதுபோல இருக்கிறது. அப்படிச் சொல்வதற்குக் காரணம் கடந்த 19 ஆண்டுகளாக அவர்கள் ஆண்டுக்கு ஆண்டு வரிபோட்டே வந்திருக்கிற பழக்கம் உடையவர்கள், அதனாலே வரிபோடவில்லையே என்று ஆயாசப்படுகிறார்கள், வருத்தப்படுகிறார்கள். இவர்கள் தான் மக்களுக்கு நன்மை செய்யப்போகிறவர்களா என்பதை பொதுமக்களின்—ஏழைமக்களின் மன்றம் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

இங்கே எனது அருமை நண்பர் என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் “காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிசம் இனிக்காது” என்று சொன்னவர்கள் அல்லவா இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள், இதில் என்ன இருக்கிறது என்றார்கள். காகிதப் பூ மணக்காது என்பது உண்மைதான். காங்கிரஸ் சோஷலிசம் இனிக்காது என்பதும் உண்மைதான். மணக்காத காகிதப் பூவை, இனிக்காத காங்கிரஸ் சோஷலிசத்தையே வைத்துப் பழகியவர்களுக்கு—மாநில சர்க்கார் ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயர, நல்ல பல திட்டங்களை போட்டுக்கொண்டு வந்திருக்கும் நிதிநிலை அறிக்கை ஏற்காது, எப்படி ஏற்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்கிற பழமொழி உண்டு. அதைப் போல பேரறிஞர் அண்ணா அவர்களது அடிச் சுவட்டில் வந்திருக்கிற தம்பிகளுடைய ஆட்சி சோடை போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஏழைகள் போற்றுகிறார்கள். மக்கள் வாழ்த்துகிறார்கள்.

அதற்கடுத்தாற்போல சட்டம் கெட்டுவிட்டது, அமைதி கெட்டுவிட்டது, நீதி கெட்டுவிட்டது என்றெல்லாம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சொல்கிறார்களே, அவர்களுக்கு ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். மதுரையில் நடந்த நிகழ்ச்சி என்ன ? வன்முறை நடந்தது. சட்டத்தை நிலைநாட்ட, அமைதியை நிலைநாட்ட, நீதியை நிலைநாட்ட நீதி மன்றம் கோர்ட்டுக்குச் சிலரை வரவேண்டுமென்று பணித்தது. நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அதை மதித்து நடந்தார்களா ? அமைதியைக் காப்பதற்காக, நீதியைக்காப்பதற்காக சட்டத்தைக் காப்பதற்காக—நீதி மன்ற உத்தரவுப்படி கோர்ட்டுக்கு வெளியே அழைத்து வருகிறபொழுது, இருநூறு முந்நூறு பேர்களாக போலீஸ் வானைத் தாக்கினார்கள் என்றால் சட்டத்திற்குப் புறம்பாக, நீதிக்குப் புறம்பாக, அமைதிக்குப் புறம்பாக யார் நடந்துகொண்டார்கள் ? இங்கே காங்கிரஸ்காரர்கள் சட்டத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், அமைதியைப் பற்றிப் பேசுகிறார்கள், நீதியைப் பற்றிப் பேசுகிறார்கள். சட்டமன்றத்திற்கு வெளியே சட்டத்தை மதிக்காது, நீதியை மதிக்காது, அமைதியைக் குலைக்கவேண்டும், அராஜகத்தை ஏற்படுத்தவேண்டும் என்றே செயல்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரியாரைப் பற்றிப் பேசினார்கள். நாடே அழுகிறது, நாட்டு மக்களே அழுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களைப் படைத்தவன் ஆண்டவன் தான் என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும்—வாரியார் என்ன, அண்ணாவைப் படைத்த ஆண்டவனே—லட்சோப லட்சம் மக்களின் இதயத் தெய்வமாக விளங்கி வருகிற

1969 மார்ச் 7] [திரு. கே. மூர்த்தி]

அண்ணாவை இழித்துப் பேச முன்வந்தார் என்றால் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை நிகழ்ச்சி இன்று இந்த அளவோடு முடிவுறுகிறது. பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். பி. ப. 1-47

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

ஏதும் இல்லை.

APPENDIX

[*Vide* Answer to starred question No. 206 at page 10].

Statement showing Government lands leased out to persons running Tea and Coffee Estates.

Serial number and name of lessee. (1)	Location of Government land leased out. (2)	Extent. (3) Acre	Cent.	Lease rent. (4)	Date of commencement of lease. (5)
	Madurai district.				
1 Thiru N. S. Sundaram Chettiar ..	Kannivadi Sivatkad R. F.	0	71		1st January 1944.
2 Coffee Board	Pambukallar and Kodavanar R. F.	27	50		3rd February 1960.
3 Thiru S. P. P. Subban Chettiar ..	Unchalanchi R. F.	14	90	Rs. 20 per acre per annum (i.e.) Rs. 2,031·40.	1st January 1942.
4 (1) Thiru Valasubramanian	Kallar R. F.	1	80		1st January 1943.
(2) Thiruvalargal Valayananda Manian and Pandia Manian.	Do.	1	56		Do.
5 Thiruvalargal Valayananda Manian and Pandia Manian,	Do.	1	10		1st January 1922.
6 Thiru K. S. Mohammed Kasim ..	Perumalmalai	54	00		4th February 1961.
	Tirunelveli distrct.				
7 The Bombay Burmah Trading Corporation, Manjolai.	Ambasamudram taluk	8,373	57	Rs. 14,235·07.	9th February 1952.
8 (1) The Dunsandle Estate, Sholur ..	Ootacamund taluk.	222	69		1865.
(2) Do. ..	Do.	163	71		1873.
9 Thiru P. Govindan Kutty Menon, Nelliyalam.	Gudalur taluk.	32	08		1954.
10 Ponmudi Tea and Rubber Company ..	Coonoor taluk.	0	15		1937.
11 Ceylon Land Produce Company ..	Do.	7	62	Rs. 1,162·61. per annum.	1937.
12 Muthiri Estate	Do.	2	83		1956.
13 Adderly Estate	Do.	2	50		1902.
14 Thiru Meanji Sait	Do.	0	18		1902.
15 Thiru Erma Sait	Do.	1	38		1902.
16 Thiru Rathnasabapathi Pillai	Do.	0	25		1941.
	Total ..	8,908	53	Rs. 17,429·08	

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக் கிழமை, 1969 மார்ச் 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவ லைவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

*வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 226 முதல் 232 வரையில் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

கால்நடை மருத்துவ மனை

* 233 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைதுறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம், சூணாம்பேடு ஆகிய இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவ மனைக்காகக் கட்டப்பட்டு முடிவுற்ற கட்டடங்களில் ஆறுமாதமாகியும் குடியேறுமல் வாடகை கட்டடங்களில் இன்னும் மருத்துவ மனை இயங்கி வருவதன் காரணம் என்ன ?

(இ) புதிய கட்டடங்கள் முடிக்கப்பட்ட பிறகும் மதுராந்தகம், சூணாம்பேடு ஆகிய ஊர்களில் இயங்கி வரும் வாடகைக் கட்டடங்களுக்கு எவ்வளவு வாடகை தரப்பட்டிருக்கிறது ”

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) மதுராந்தகத்திலும் சூணாம்பேட்டையிலும் கால்நடை மருந்தகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் அந்த மருந்தகம் உடனடியாக செயல்பட இயலவில்லை. ஏனென்றால், மின்சார வழங்கல், நீர் வழங்கல் போன்ற முக்கிய வசதிகள் அங்கு செய்து கொடுக்கப்படவில்லை. மேலும், மாட்டடைப்பு (trevis) கட்டுதல், வேலி போடுதல் முதலிய வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, மதுராந்தகத்தில் உள்ள கட்டிடத்தில் 21—12—1967 அன்றும், சூணாம்பேட்டையில் உள்ள கட்டிடத்தில் 5—4—1968 அன்றும் கால்நடை மருந்தகம் செயல்படத் தொடங்கியது.

(இ) மதுராந்தகத்திலுள்ள கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 120 வாடகை செலுத்தப்பட்டது. முக்கிய கட்டிடம் கட்டி முடிந்த தேதி முதல் மொத்தம் ரூ. 1,040 வாடகை செலுத்தப்பட்டது. சூணாம்பேட்டையில் உள்ள கால்நடை மருந்தகத்தைப் பொறுத்த வரையில், சூணாம்பேட்டையில் வாடகைக் கட்டிடத்தில் மையக் கிராம வளர்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக் கட்டிடத்துக்கெனத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 வாடகை செலுத்தப்படுகிறது. சூணாம்பேட்டையிலுள்ள கால்நடை மருந்தகம் அதே கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, கால்நடை மருந்தகத்திற்காக வாடகை எதுவும் தனியே கொடுக்கப்படவில்லை.

Fixation of Procurement prices.

* 234 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the attention of the Government has been drawn to the views of the Deputy Chairman of the Planning Commission on the subject of fixation of procurement prices?

இணைப்பு

தொடர் எண்ணும், குத்தகைதாரரின் பெயரும். (1)	குத்தகைக்கு விடப்பட்ட அரசாங்க நிலம் அமைந்துள்ள இடம். (2)	பரப்பளவு. (3) ஏ.	செ.	குத்தகைத் தொகை. (4)	குத்தகைத் தொடங்கிய வருடம். (5)
மதுரை மாவட்டம்					
1 திரு. என். எஸ். சுந்தரம் செட்டியார் ..	கன்னிவாடி சிவத்த காடு (ஒதுக்கக்காடு).	0	71	ஆண்டொன்றுக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 20 (i.e.) ரூ. 2,031·40.	1944-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ந் தேதி.
2 காப்பி போர்டு	பாம்புகல்லாறு கொடவ ஹறு (ஒதுக்கக்காடு).	27	50		1960-ம் வருடம் பிப்ரவரி மாதம் 3-ந் தேதி.
3 திரு. எஸ். பி. பி. சுப்பன் செட்டியார் ..	ஊஞ்சல்நாச்சி (ஒதுக்கக் காடு).	14	90		1942-ம் வருடம் ஜனவரி மாதம் 1 ந் தேதி.
4 (1) திரு. வாலசுப்பிரமணியன்	கல்லாறு (ஒதுக்கக்காடு).	1	80		1943-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ந் தேதி.
(2) திரு. வலையானந்த மணியன், பாண்டிய மணியன்.	,,	1	56		1943-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ந் தேதி.
5 திரு. வலையானந்த மணியன், பாண்டிய மணியன்,	,,	1	10		1922-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ந் தேதி.
6 திரு. கே. எஸ், முகமது காஸிம் ..	பெருமாள்மலை ..	54	00		1961-ம் வருடம் பிப்ரவரி மாதம் 4-ந் தேதி.
திருநெல்வேலி மாவட்டம்					
7 பம்பாய்-பர்மா வர்த்தக கார்ப்பொரேஷன், மாஞ்சோலை.	அம்பாசமுத்திரம் வட்டம்.	8,373	57	ரூ. 14,235·07.	1952-ம் வருடம் பிப்ரவரி மாதம் 9-ந் தேதி.
8 (1) டுன்சேண்டல் எஸ்டேட், சோலூர் ..	உதகை வட்டம் ..	222	69	ஆண்டொன்றுக்கு ரூ. 1,62·61.	1865
(2) ,,	உதகை வட்டம் ..	163	71		
9 திரு. பி. கோவிந்தன்குட்டி மேனோன், நெல்லியாளம்.	கூடலூர் வட்டம் ..	32	08		1873 1954
10 பொன்முடி டீ, ரப்பர் கம்பெனி ..	குன்னூர் வட்டம் ..	0	15		1937
11 சிலோன் லேண்ட் புராட்யூஸ் கம்பெனி ..	,,	7	62		1937
12 முத்திரி எஸ்டேட்	,,	2	83		1956
13 அட்டர்லி எஸ்டேட்	,,	2	50		1902
14 திரு. மீஞ்சி சேத்	,,	0	18		1902
15 திரு. வர்மா சேத்	,,	1	38		1902
16 திரு. சி. ரத்தினசபாபதி பிள்ளை ..	,,	0	25		1941
		8,908	53	ரூ. 17,429.08	

[1969 மார்ச் 8

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : ஆம். திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவரான டாக்டர் பி. ஆர். காட்கில் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்களுக்கு அதிக விலைகள் கொடுப்பதைத் திட்ட ஆணைக்குழு எதிர்க்கிறது என்றும், கொள்முதல் விலையை உயர்த்தினால் உணவு தானியங்களைப் பயன்படுத்துவோருக்கு அவை விற்கப்படும் விலை அதற்கேற்ப உயருமென்பதே இதற்குக் காரணம் என்றும் 1967-ம் ஆண்டு அக்டோபரில் கூறினர். இவ்வரசாங்கம் இக் கூற்றினைத் தன் கருத்தில் கொண்டுள்ளது.

* 235 வினு—**திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர், திரு. கே. விநயகம் :** மாண்புமிகு உணவு வேளாண்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :—

உணவு தானியங்களுக்கு குறிப்பாக நெல்லுக்கு இப்பொழுது ... மிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை எப்பொழுது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : விவரமான ஓர் அறிக்கை [a] அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலேச்சாமி : தமிழக அரசு மேற்கொண்டிருக்கிற கொள்முதல் விலையையும், உற்பத்தித் திறனையும் பார்த்து மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் பாராட்டியதைச் சில காங்கிரஸ்காரர்கள் கண்டிக்கிறுர்களே அதைப்பற்றி அரசுக்கு ஏதாவது தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நன்ருகத் தெரியும். தமிழகத்திலே நிர்ணயித்திருக்கிற விலை நியாயமான விலை என்று அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே உற்பத்தியாளர்களுடைய நிலையையும், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலையையும் கவனிக்க வேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை உற்பத்தியாளர்களினுடைய எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த விலை சரிதான் என்று அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது சொன்னுர்கள்.

திரு கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையிலே சிறந்த ரக நெல் குவிண்டால் ரூ. 48 என்றும், நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45 என்றும், மட்ட ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 என்றும் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அது விவசாயிகளுக்கு கட்டுபடி ஆகாது. ஆகையால் மத்திய அரசாங்கத்திடம் சொல்லி அதிகமான விலையை நிர்ணயித்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன்றைய நிலையில் கொடுக்கப்பட்டிருக்கிற விலை நியாயமான விலை என்று மத்திய அரசானது மாநில அரசுக்குச் சொல்லியிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று தஞ்சை உற்பத்தியாளர் சங்கத்திலிருந்து அரசாங்கத்திடம் தூது வந்தார்களா ? அப்படியென்ருல் அவர்களுக்கு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சையிலிருந்து உற்பத்தியாளர் சங்கத்தின் தூதுக்குழு வந்தது. அவர்கள் மாத்திரம் அல்ல, சட்டமன்றத்திலே இருந்து அனைத்துக் கட்சி நண்பர்களும் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிருர்கள். தஞ்சையிலே மாத்திரம் என்று சொல்ல முடியாது மற்றவர்களும் கேட்கிருர்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையை யொட்டித் தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

திரு. எஸ். இராம ச்சந்திரன் : சாதாரணமாக கொள்முதல் நெல்லுக்கு அதிக விலை கொடுப்பது நிலப்பிரபுக்களுக்கு கொடுப்பதாகத்தான் முடியும். அப்படிக் கொடுப்பதும் நிலப்பிரபுக்களுக்காக வாதிடுவது ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

---

a 638-670-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பெரிய நிலச்சுவான்தார்கள் பலமாக சத்தம் போட்டு கேட்கிருர்கள்.

திரு. எஸ். முருகையன் : மத்திய அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏராளமான வரியைப் போட்டிருக்கிருர்கள். 5 ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கக் கூடிய விவசாயிகளுக்கு, கொள்முதலுக்கு அதிகவிலை கொடுக்க மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி வாங்கிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு விலையை உயர்த்துகிருர்கள் என்ருலே இருக்கிற நிலை 5 ஏக்கராகக் குறைத்து அதிகமான விலையைப் பெறக்கூடிய நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : விவசாயக் கூலி எல்லாம் உயர்ந்துவிட்டது. இன்னும் கூலியை உயர்த்த வேண்டுமென்று போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. விவசாயிகளுக்குகட்டுப்படியாகவில்லை. விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். கொள்முதல் விலையை உயர்த்தவில்லை என்ருல் அவர்களினுடைய நிலைமை மிகவும் மோசமாகப் போய்விடும். எனவே அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது கூலி உயர்வு அதிகமாக இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நெல் விலையை உயர்த்திவிட்டால் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் அதிகமான விலையைக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த விலை நியாயமான விலை என்று மத்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிருர்கள். விவசாயிகளுக்கு வேறு பல நன்மைகள் செய்துகொண்டிருக்கிறேம். ஒரு போகத்தை இரண்டு போகமாகச் செய்வதற்கும், கடன் வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கும் வழிவகைகள் செய்கிறேம். விவசாயிகள் கொஞ்சம் தியாக உணர்ச்சியோடு இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹாஜி. ம. மு. பீர். முஹமது : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் விலையை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்ருலும், உணவுப் பொருள் உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கின்ற இரசாயன உரத்திற்கும் அதிகமான வரியை மத்திய அரசு போட்டிருக்கும் காரணத்தால், அதையாவது, உணவுப் பொருள் உற்பத்தியை அடிப்படையாக வைத்து, மத்திய அரசு ரத்து செய்துவிட வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு கோரிக்கை அனுப்புமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இரசாயன உரத்தின்மீது வரி போட்டிருப்பதற்கு மத்தியப் பார்ாளு மன்றத்திலேயே எதிர்ப்பு இருக்கிறது. குறிப்பாக, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களே கூட அந்த வரியை எதிர்த்து வருகிருர்கள். மத்திய உணவு அமைச்சர் அவர்கள் நாளைய தினம் 9-ந் தேதி—சென்னைக்கு வர இருக்கிருர்கள். அப்பொழுது முதலமைச்சர் அவர்களும் நானும் அவரைச் சந்தித்து, நம்முடைய நாட்டின் நிலைகுறித்து, விவசாயிகளுக்கு அந்த வரியினுல் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலையை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல இருக்கிறேம். அதன் மூலம் ஒரு வேளை அந்த வரியை அவர்கள் தளர்த்தக் கூடிய நிலை ஏற்படலாம். இரசாயன உரத்திற்கு வரி விதிப்பதன் காரணமாக, தமிழகத்தில் தேங்கியிருக்கும் உரத்திற்குக் கூட விலையை உயர்த்த வேண்டும். "பூல் ப்ரைஸ்"ஐ உயர்த்த வேண்டும் என்று கோரிக்கைக் அனுப்பியிருக்கிருர்கள். அந்த அடிப்படையில் நமக்கு இரண்டரைக் கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் மத்திய அரசு அமைச்சரிடம் எடுத்துக் கூறப்படும்.

திரு. கே. விநாயகம் : திட்டக் கமிஷன் துணைத் தலைவர் எந்த அடிப்படையில் இந்த விலையை ஏற்ற வேண்டும் என்று சொன்னார்? இப்பொழுது கூடுதல் விலை பக்கத்து மாநிலங்களில் கொடுக்கப்படுகிறது. அது மாதிரி நம் மாநிலத்திலும் கொடுக்க நமக்கு என்ன கஷ்டம்? மாநில சர்க்கார் அதிகமாகப் பணத்தைக் கொடுத்தால், அதை ஈடு செய்கிறோம் என்று மத்திய சர்க்கார் சொல்லி, ஒரு மூட்டைக்கு மூன்று ரூபாய் அதிகமாகக் கொடுக்கலாம் என்று அவர்கள் சிபார்சு செய்தார்களே, அதை வாங்கி எங்களுக்குக் கொடுப்பதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? அதைக் கொடுத்து விட்டு, நீங்கள் கொடுத்ததாகப் பாவனை செய்வது மக்களை ஏமாற்றுவதாகாதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சர்க்கார் மீது ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்கிற எண்ணத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு விநாயகம் அவர்கள், நாங்கள் ஏமாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் கட்சியைச் சார்ந்த விவசாயிகள் தான் விவசாயிகள் என்பதல்ல; மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்களும் விவசாயிகளாக இருக்கிறார்கள். விவசாயிகளை ஏமாற்ற வேண்டும் என்பது இந்த சர்க்காருடைய நோக்கம் அல்ல. அதிலே கனம் உறுப்பினருக்கு மாறுபட்ட கருத்து இருக்கலாம். உற்பத்திச் செலவு அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயம் செய்திருப்பது நியாயமான விலை என்பதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்கார் வற்புறுத்தியும் கூட மத்திய சர்க்கார் ஏற்காத நிலையை நான் கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சி. ஒ. 29 ரக நெல், குறிப்பாக மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நல்ல ரகமாக இருக்கிறது. அது "கோர்ஸ் வெரைடி"யாக இன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை "மீடியம் வெரைடி"யாக உயர்த்த வேண்டும் என்று நம்முடைய ராஜ்ய சர்க்கார் மத்திய அரசுக்குச் சொல்லி யிருக்கிறது. சித்தடையான் என்பது இராமனாதபுரம் மாவட்டத்தில் விளையக்கூடிய ஒரு ரக நெல். அதை "கோர்ஸ் வெரைடி"யில் சேர்த்திருக்கிறார்கள். அதையும் "மீடியம் ரக"மாகச் சேர்த்து கூடுதலாக இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்த நேரத்தில், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஆனால், ராஜ்ய அரசு அந்த இரண்டு ரூபாயை போனஸாகப் போட்டு விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கொள்முதல் விலை, கன்னியாகுமரி ஜில்லாவில் இரண்டு ரூபாய் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி விசாரித்ததில், "நடுத்தர ரக நெல்" என்று இருந்ததை "கோர்ஸ் வெரைடி" என்று மாற்றி இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இதற்கு விசேஷ காரணம் ஏதாவது உண்டா? அந்த விலையை உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எந்த ரகத்திற்கு அப்படி விலையைக் குறைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் ....(திரு பொன்னப்ப நாடார் : கட்டைச் சம்பா) கட்டைச் சம்பாவிற்குக் குறைத்து இருந்தால், அதுபற்றிய நிலைமை என்ன என்பதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் விலை நமது தமிழ் நாட்டில் தான் குறைவாக இருக்கிறது. தமிழ் நாட்டு சர்க்கார் நிர்ணயித்த விலையை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வேறு மாநிலங்களில், குறிப்பாக திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் வரும்படியான மாநிலத்திலே மூட்டை விலை 56 ரூபாயாக இருக்கிறது. அதுவும் ஒரே ஒரு விலைதான் இருக்கிறது. பாக்கி ரக நெல்களுக்கு வேறு விலை என்பதே கிடையாது. மேற்கு வங்காளத்தில் குறைந்த பட்ச விலை 60 ரூபாயாக இருக்கிறது. கேரளாவில் குறைந்தபட்ச விலை 60 ரூபாயாக இருக்கிறது. பாக்கி மாநிலங்கள் விவசாயிகளுக்காகப் போராடி அதிகமான விலை வாங்கிக் கொண்டிருக்கும்போது,

இந்த சர்க்கார் மட்டும் 43 ரூபாய் தான் குறைந்தபட்ச விலையாக வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரோடு இது சம்பந்தமாகப் போராட வருவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த ராஜ்ய சர்க்கார் சிபார்சை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது நியாயமானது என்பதைக் கூட ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குக் கூட போக வேண்டியதில்லை. ஏனென்றால், நாளைய தினம் மத்திய அமைச்சர் கனம் திரு ஜெகஜீவன் ராம் அவர்கள் சென்னைக்கு வருகிறார்கள். அவர்களைச் சந்தித்து, அவர்களிடத்தில் வாதிக்கலாம். "போராட எங்களோடு தயாரா?" என்று அவர்கள் கேட்டார்கள். மற்ற விஷயங்களுக்கு நாங்கள் அவர்களை அழைத்த போது அன்று சேராவிட்டாலும், இன்றைக்காவது தங்களுடைய சொந்தக் காரியத்திற்கு...........(சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன் : "சொந்தக் காரியத்திற்கு" என்று அவர்கள் சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும். வாபஸ் வாங்க வேண்டும். சொந்தக் காரியத்திற்காக நான் சொல்வதில்லை. விவசாயிகளுக்காகத்தான் நான் கேட்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி : கனம் எதிர்க்கட்சித் தலைவர் திரு கருத்திருமன் அவர்களை ஒரு நல்ல விவசாயி என்று எடுத்துக் கொண்டு தான் சொன்னேனே தவிர, அவரைத் தனிப்பட்ட முறையில் குறிப்பிடவில்லை. அவருடைய மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காகவும் சொல்லவில்லை. எந்தப் பிரச்னையைப் பேசினாலும் அதிலே கொள் முதலையும் கொண்டு வந்து இணைத்துப் பேசுவார்கள். அதிலே தனக்கு அக்கறை இருப்பதால் தான் அவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்ற கருத்தில்தான் நான் குறிப்பிட்டேன். இதைப் பற்றி மத்திய விவசாயி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லலாம் என்று நாங்கள் சொன்ன போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "மத்திய விவசாய அமைச்சருக்கு விவசாயத்தைப்பற்றித் தெரியாது" என்று சொன்னார்கள். அதற்குக் கூட அவர் நல்ல பதில் அளித்தார். "எனக்கு விவசாயம் பற்றித் தெரியாது என்று சொன்னார்கள். ஆனால், நான் 29 ஏக்கர் பரப்பில் சொந்தப் பண்ணை வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார்கள், என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மத்திய சர்க்கார் விவசாய அமைச்சர் அவர்களுடைய ஊரில் 56 ரூபாய் விலை என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் 43 ரூபாய் அளவுக்கு குறைவாக விலை இருக்கிறது. ஆகவே, என்னுடைய கருத்திற்கு ஆட்சேபணை சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அது தான் பிரச்சினை, அவர்களுடைய மாநிலத்தில், அவர்களுடைய பண்ணை இருக்கின்ற மாநிலத்தில், அவர்கள் 56 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து கொண்டார்கள். ஆனால், இங்கே குறைந்த விலையாக இருக்கிறது. அவரே தவறாகச் செய்திருப்பதால், அவர் நல்ல விவசாயி அல்ல என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மத்திய சர்க்கார் விவசாய அமைச்சர் சரியான விவசாயி அல்ல என்றால், அவர் நாளைக்குச் சென்னை வரும்போது அவரும் சரியான பதில் அளிப்பார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். இந்த சர்க்கார், உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையையும் கவனிக்க வேண்டி யிருக்கிறது. "அங்கே ஒரு விலை", இங்கே ஒரு விலை" என்றால், இங்கே விவசாயிகளுக்குப் பல நன்மைகளை நாம் செய்கின்றோம். அந்த நன்மைகள் மற்ற மாநிலங்களில் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், நம்முடைய மாநிலத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை நியாயமானது என்பதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் சற்று முன் குறிப்பிட்டது போல், மதுரையில் விளையக்

கூடிய சி. ஓ. 29 என்கிற ரகத்திற்கும், சித்தடையான் என்கிற நெல்லுக்கும் இரண்டு ரூபாய் விலையை உயர்த்த வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் சிபார்சு செய்தும் கூட, மத்திய சர்க்கார் அதை ஒப்புக்கொள்ள மறுத்திருக்கிறார்கள் என்பதையும் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1967-ம் ஆண்டுக்கு முன்னால், இந்தக் கொள்முதல் விலையை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு இருந்தும் அன்றைக்கு மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக இன்றைக்கு "போராட்டம் நடத்தத் தயாரா ?" என்று கேட்பது சரியா ? பயிரிடுவதற்கான செலவு அதிகரித்து விட்டது என்ற காரணத்தினாலே மூன்று ரூபாய் உயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். சராசரியாக எல்லா இடங்களுக்கும் ஒரே விலை என்ற நிலைமை இருக்கலாமா என்பதையும் யோசிக்க வேண்டும். ஆற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்கிறவர்களுக்கும் ஒரே விலை, ஆழமாகக் கிணறுகள் தோண்டி, பம்ப் செட் வைத்து ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்து............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கமாகப் பேச வேண்டாம். வினாவாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பத்தாயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்து, கிணறு வெட்டி, பாறையை உடைத்து, பம்ப் செட் வைத்து, மின்சாரக் கனெக்ஷன் கொடுத்து பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்குகிறவர்களுக்கும் ஒரே விலை, ஆற்றுத் தண்ணீரை எடுத்துப் பயிர்செய்கிறவர்களுக்கும் ஒரே விலை என்றால் அது நியாயமா என்று கேட்கிறேன். ஆகவே, கிணற்றுப் பாய்ச்சல் மூலம் உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தில் ரிபேட் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான கஷ்டம் இருக்கிறது. ஆற்றுப் பாசனம் இருக்கக்கூடிய இடத்தில் கூட வாய்ப்புகளும் வசதிகளும் இல்லை, அதனால் பயிர் பாழாகிறது என்று கூறப்படுகிறது. அதேபோல் கிணற்றின் மூலம் பயிர் செய்கிறவர்கள், மின்சாரக் கட்டணம் கொடுக்க வேண்டி யிருக்கிறது, கிணற்றை ஆழப்படுத்த வேண்டி யிருக்கிறது, அதனால் நிறைய செலவு ஏற்படுகிறது என்று இப்படி யெல்லாம் குறைகள் வந்துகொண்டு தான் இருக்கும். இங்கு ஒரு விலை அங்கு ஒரு விலை என்று செய்தால் அதிலும் சில சங்கடம் ஏற்படும்.

திரு ஆ. கு. சுப்பையா : ஐயா, மூன்று ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கும் சிறு நிலச் சொந்தக் காரர்களுக்கு விதிவிலக்கு அளித்து, பத்து ஏக்கருக்கு அதிகமாக நிலம் உள்ளவர்களிட மிருந்து கட்டாயக் கொள்முதல் செய்வது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தக் கோரிக்கையை வலது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்களும், இடது சாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்களும் இங்கே வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது செய்கிற அளவிலே, அதாவது விளைச்சலில் ஐந்திலொரு பங்கு கொள்முதல் செய்கிறபோதே, "கெடுபிடி செய்கிறார்கள்" என்று பெரிய எதிர்ப்பைப் பூதாகாரமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே அதிக கெடுபிடி என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, பத்து ஏக்கருக்கு மேற்பட்டவர்களிட மிருந்து அவர்கள் விளைவிக்கும் அத்தனையையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற நிலைமை வரும் போது, "இந்த சர்க்கார் விவசாயிகளை வாட்டி வதைக்கிறார்கள்" என்று மேலும் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லுவதற்குத் தான் அது துணையாக இருக்கும் என்றாலும், கனம் அங்கத்தினர் தெரிவிக்கும் கோரிக்கையைப் பற்றி, உணவு நெருக்கடியை அனுசரித்து, சந்தர்ப்பம் வரும்போது, அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 236, 237 ஆகியவை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Education to blind students.

*238 Q.—DR. H. V. HANDE: Will the Hon. Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether it is proposed to impart instructions to blind students along with others in certain select schools in each district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Sir, is it a fact that a year ago from the Government side a statement was issued that these blind students would be given extra facilities to get education in ordinary schools so that the inferiority complex which the blind students have by studying only in blind schools would be got over by clubbing them with other students?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அமெரிக்கன் ஃபவுண்டேஷன் ஃபார் தி ஓவர்ஸீஸ் ப்ளைண்ட் என்ற ஒரு நிறுவனம் இதுபோன்ற ஒரு ப்ரபோசலை நம்முடைய அரசுக்குக் கொடுத்தார்கள். நம்முடைய அரசு அதைப் பரிசீலனை செய்தது. குருடர்கள் மற்றவர்களோடு சேர்ந்து படிக்கலாம் என்றாலும், அதுவே அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மையை (இன்பீரியாரிடி பீலிங்) ஏற்படுத்தும் என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிப் பரிசீலிப்பதை அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், கண்பார்வையற்ற குழந்தைகள் படித்துவரும் பள்ளிகளில் சாதாரணக் கல்வியைப் படித்துக்கொடுப்பதைப் போல் தொழிற் கல்வியையும் படித்துக்கொடுப்பதற்கான வாய்ப்பை இப்பொழுது இருக்கிற பள்ளிகளிலே விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கண்பார்வையற்றவர்களுக்கு எந்த விதமான கல்வி வேண்டுமென்பதைப் பரிசீலித்து அவ்வப்பொழுது முடிவு எடுத்து அந்தவிதமாக கல்வியை அவர்களுக்குத் தருகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு தொழில் கல்வி கற்றிருக்கும் கண்பார்வையிழந்த மாணவர்கள் எந்த வேலையும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது உள்ள விதிமுறைகளின் படி தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு ஓரளவு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லிவருகிறோம். அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை.

திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் கண்பார்வையிழந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற பள்ளிக்கூடங்கள் எத்தனை இருக்கின்றன ? எவ்வளவு மாணவர்கள் படித்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வில் வசதியேற்படுத்துவதற்கு ஏற்ற முறையில் என்ன என்ன கல்விகள் கற்பித்துக் கொடுக்கப்படுகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

தொழிற்சாலைகளுக்கு அரசு கடன்.

*239 வினா திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சாலைகள் எவற்றிற்கேனும் கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாடு 1922-ம் ஆண்டு தொழிற்சாலைகளுக்கு அரசாங்க உதவிச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் கடன் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், வட்டி வீதம் எவ்வளவு ? அத் தொழிற்சாலைகளிடமிருந்து திரும்ப வசூலிக்க வேண்டிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) வட்டி வீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு அவ்வப்போது மாறுபடுகின்றன :—

கடன் அளவு.		ஆண்டு.	வட்டி வீதம்.
ரூ. 50,000 வரை	..	29-10-1956 முதல் 13-9-1965 வரை.	3
ரூ. 50,000-க்கு மேல்	..	1952 முதல் 1963 வரை ..	$5\frac{1}{2}$
ரூ. 50,000-க்கு மேல்	..	1963 முதல் 13-9-1965 வரை.	6

கடன் அளவு.		ஆண்டு.	வட்டி வீதம்.
ரூ. 50,000 வரை	..	1966-67	$6\frac{1}{4}$
		1967-68	$6\frac{1}{2}$
		1968-69	$6\frac{3}{4}$
ரூ. 50,000-க்கு மேல்	..	1966-67	$7\frac{1}{4}$
		1967-68	$7\frac{1}{2}$
		1968-69	$7\frac{3}{4}$

1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி வரை வசூலாக வேண்டிய தொகை—

ரூ. 27,05,327·70 (அசல்).
(ரூ. 1,80,978·43 (வட்டி).
(மேலே காட்டியுள்ள தொகையில் நாட்பட்ட நிலுவையும் அடங்கும்.)

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த பத்து ஆண்டுகளில் எவ்வளவு கடன் வழங்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே இந்தக் கடன் தொகை வழங்கப்படுகிறது. வசூலாக வேண்டிய கால தவணை எவ்வளவு என்பதைத் தெரிவிப்பார்களா ?

THE HON. THIRU S. MADHAVAN : The amount of loan given is as follows :—

			RS.	P.
		1948-49 to 1950-51	1,06,17,000	00
First plan period	..	1951-56	16,04,990	00
Second plan period	..	1956-57 to 1960-61	1,09,32,048	10
Third plan period	..	1961-62 to 1965-66	1,47,68,953	00
Fourth plan period	..	1966-67	34,91,939	25

இதைக் கொடுப்பதற்கு ஸ்டேட் எய்ட்டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்ட் விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கென்று ஒரு போர்டு இருக்கிறது. அதிலும் இது பரிசீலிக்கப்படுகிறது. அதற்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கும் ஒரு லிமிட்டுக்கு மேலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Are there any instances in our State where the industries that obtained State Aid loan under this scheme have paid the entire dues by way of loans as well as interest accuring upon it? If so, will the Government be pleased to waive the penal interest that has been levied upon them for delayed payment?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடன் பல தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அவ்வப்பொழுது அது பரிசீலிக்கப்படுகிறது. காலதாமதம் செய்துகொடுத்தால் பீனல் இன்டரஸ்ட் போடப்படுகிறது. பீனல் இன்டரஸ்ட் இல்லையென்றால் பாக்கி அதிகமாகி அதனால் அரசாங்கத்திற்கு அது நஷ்டத்தை ஏற்படுத்தும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்தக் கடன்கள் மிகப் பெரிய தொழில்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. சாதாரணத்தொழில்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. எனவே வருங் காலத்திலாவது அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கருத்து தவறான கருத்து. 5,000 ரூபாய் வரையில்கூட கொடுக்கிறார்கள். 50,000 ரூபாய் வரை போர்டிலே கொடுக்கிறார்கள். அதற்கு மேலே அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. சர்க்கார் சிறு தொழில்களுக்கும் கொடுத்துவருகிறது. அங்கங்கே இருக்கின்ற காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் ஆபீஸர்கள் 2 ஆயிரம் ரூபாய் அளவில் கொடுக்கிறார்கள். அஸிஸ்டென்ட் டைரக்டர் 5,000 ரூபாயும் டெபுடி டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் 7,500 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஜாயின்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் 10,000 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். எனவே கீழே உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு அந்தந்த மொஃபஸ்ஸல் சென்டர்களிலே குடிசைத்தொழில்கள் போன்ற தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இப்பொழுதே கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

Scales of pay recommended by U.G.C.

* 240 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) whether the Director of Collegiate Education has recommended the extension of the U.G.C. scales of pay to the non-technical teaching staff in the Government professional colleges and to persons on other duty in the State Institute of Education;

(b) whether this Government has applied to the Central Government regarding grant for the same; and

(c) if so, the stage in which the matter stands now?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மத்திய அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்து மாநில அரசு பல்கலைக் கழக மான்யக் குழுவின் அடிப்படை சம்பளம் இந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்கலாமென்று உத்திரவிட்டுள்ளது.

*241 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(a) whether the Government have passed orders fixing the scales and emoluments payable to the staff of the Government Arts and Training Colleges in accordance with the scale recommended by the University Grants Commission;

(b) whether this scale of pay will be applicable even to the teaching staff of the educational department who are for the present working in the professional colleges on deputation; and

(c) the total number of teaching staff of the Arts Colleges and Teachers' Training Colleges working in the professional colleges?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) 211.

DR. H. V. HANDE: The State Government is expecting reply from the Centre. In the meantime, will the Government be prepared, so far as these lecturers are concerned, to issue orders so that these arts and science people working in professional colleges will be given the same facilities as regular professional college lecturers?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *என்னுடைய பதிலிலேயே கடைசி பதிலாக அதைத்தான் சொன்னேன். அவர்கள் உத்தரவை நாம் அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.*

திரு. டி. மார்டின் : *ஸ்பீக்கர் சார், மானியம் பெற்றுவரும் தனியார் துறை கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒய்வு கால ஊதியம் வழங்கும்பொழுது அவர்கள் ஹைஸ்கூல்களிலே பணியாற்றி இருந்தாலும், அந்தக் காலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் காலேஜியட் எஜுகேஷன் கேட்டுள்ளார்கள். அப்படி உத்தரவு பிறப்பிக்காததன் காரணமாக ஏராளமான ஆசிரியர்களின் ஓய்வு கால ஊதியம் நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. எனவே, அரசாங்கம் உடனடியாக அந்த உத்தரவு பிறப்பிக்குமா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. எய்டெட் ஸ்கூல்ஸ், கவர்ன்மெண்ட் ஸ்கூல்ஸ் என்று வெவ்வேறு இடத்திலே பணியாற்றினாலும் எடுத்துக் கொள்ளப்படுமா ? கல்லூரிகளிலே பணியாற்றினாலும் எடுத்துக்கொள்ளப்படுமா என்பது போன்ற பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அரசாங்கம் அதையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : *தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழகம் நிர்ணயித்துள்ள சம்பளம் கிடைக்கவில்லை என்பது உண்மையா ? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *குறிப்பிட்டு எந்தக் கல்லூரியில் என்று எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.*

திரு. க. ந. இராமச்சந்திரன் : *மாவட்ட மன்றங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற பி. டி. ஆசிரியர்களுக்கு பேஃபிக்ஸேஷன் செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். எப்பொழுது அது நிறைவேற்றப்படுமென்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *அந்தத் தகவல் இல்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு ஸ்கூல்களையும் கவர்ன்மெண்ட் ஸ்கூல்களையும் இண்டக்ரேட் செய்வதிலே கொஞ்சம் பிரச்னைகள் இருக்கின்றன. இருதரப்பாரையும் கலந்தாலோசித்து கல்வி டைரக்டர் அவர்கள் இதுபற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அவர்களுடைய அறிக்கை வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.*

திரு. கே. விநயகம் : *யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் என்ன சிபாரிசு செய்ததோ அதை அரசாங்கம் பல இடங்களிலே அமலுக்குக் கொண்டுவரவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. டிபார்ட்மெண்ட் ஹெட்டுக்குக் கீழே நான்கு அஸிஸ்டெண்ட்கள் இருந்தால் கிரேடு 1 சேலரி கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி தமிழுக்கு ஊக்கம் தரவேண்டுமென்று சொல்லுகின்றபொழுது ஹெட் ஆப் தி டிபார்டுமெண்ட் தமிழாசிரியராக இருந்தால் அவருக்குக் கீழே நான்கு பேர்கள் இருந்தால்தான் கிரேடு 1 சேலரி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் மற்றப் பாடங்களிலே பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜியாக்ரபி இந்த டிபார்ட்மெண்ட் ஹெட்டுக்குக் கீழே இரண்டு பேர்கள் இருந்தால்கூட, அல்லது ஒருவர் இருந்தாலேகூட அம்மாதிரி தரப்படுகிறது. எனவே தமிழுக்கு ஊக்கம் கொடுக்கிற சர்க்கார் என் அதை அமல்படுத்தவில்லை. இனிமேலாவது அதைச் செய்வார்களா ? குறிப்பாக அப்படிப்பட்ட இன்ஸ்டன்ஸ் பிரசிடென்சி காலேஜிலே இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுதாவது தமிழில் அக்கறை காட்டுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சொன்னதை நாம் அப்படியே ஒப்புக் கொண்டோம். ஆனால் இண்டர்ப்ரடேஷன் ஆப் ரூல்ஸில் ஏதாவது கஷ்டம் இருக்கலாம். அதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.*

பெண்கள் தொழிற்பயிற்சி.

*242 *வின*—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** *மாண்புமிகு கல்வி* முற்
தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப் பகல்
பாரா— 9–30

பெண்கள் தொழிற் கல்வியைப்பற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *இம் மாநிலத்தில் தற்போது பெண்களுக்கான பல தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (பாலிடெக்னிக்குகள்) மூன்று உள்ளன. மின் இயல், கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், வாணிபம் குறித்த பயிற்சி, ஆடை வடிவமைப்பு துறை, ஆடைகள் தயாரித்தல், ஆகியவற்றில் "டிப்ளொமா" அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தற்போதுள்ள பெண்கள் பாலிடெக்னிக்குகள் மூன்றில் புதிய பயிற்சிகளைச் சேர்த்துப் பயிற்சிகளைப் பல தரப்பட்டவையாக்கக் கருதியுள்ளது.*

திருமதி வி.ப. பழனியம்மாள் : *அப்படி புதிய பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும்போது கோவை மாவட்டத்தில் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படுமா ?*

மாண்புமிகு திரு செ. மாதவன் : *கோவை மாவட்டம் மிகுந்த அளவு முன்னேறியுள்ள மாவட்டம். தொழிற் கல்லூரியிலே அவர்கள்தான் தலைசிறந்து விளங்குகிறார்கள்.*

திரு கே. போஜன் : *அமைச்சர் அவர்களுடைய பதிலில் பெண்கள் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்கனவே சென்னை மாநிலத்தில் மூன்று இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *சென்னை, மதுரை, கோயம்புத்தூர்*

திரு. இல. பலராமன் : இதுபோன்ற பெண்கள் தொழிற் கல்லூரிகளில் "ஆஃப்டர் கேர் ஹோம்"-ல் இருக்கின்ற பெண்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "ஆஃப்டர் கேர் ஹோமில்" சில சந்தர்ப்ப சூழ்நிலையினால் அப்பேர்ப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : இந்த நிறுவனங்களிலே எத்தனை பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 250.

திரு கே. என். குமாரசாமி : கோவை மாவட்டத்தைப் பற்றி எதையெடுத்தாலும் முன்னேறிய ஜில்லா என்று சொல்லி அங்கு ஏற்படக்கூடிய அபிவிருத்திகளைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அவ்வளவு பெரிய சந்தேகம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே உள்ள மூன்று பயிற்சிப் பள்ளிகளில் ஒன்று கோவையில் இருக்கிறது. மேலும் தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில் சீரான கல்வி, சிறப்பான கல்வி அங்கேதான் தரப்படுகிறது. பொறியியல் கல்லூரியில் தமிழிலேகூட அங்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. கோவை மாவட்டம் எந்தக் காலத்திலும் பின்தங்காது.

திரு வ. ஜார்ஜ் : பெண்கள் பாலிடெக்னிக்குகளில் பயிற்சிபெற்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசாங்கத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐந்தாண்டுத் திட்டம் ஒத்திப் போடப்பட்டதின் காரணமாக பாலிடெக்னிக்கில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்க முடியாத நிலைமை இருந்தது. அதற்காக இடங்களைத் குறைத்துவிட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் கூறியது. தற்போது ஐந்தாண்டுத் திட்டத்தை தொடங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகியிருப்பதால் நல்ல சூழ்நிலை உருவாக முடியும்.

Children's theatre for Tirunelveli Town.

* 243 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the attention of the Government has been drawn to the resolution passed by the Tirunelveli Municipal Council to have a children's theatre within its local limits; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) (இ) தற்போது கட்டப்பட்டு வரும் ராஜாஜி நூற்றாண்டு விழா மண்டபத்தில் பாலர் அரங்கம் ஒன்று அமைப்பதெனத் திருநெல்வேலி நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது. பாலர் அரங்கத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு, திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரை, நகராட்சி ஆணையாளர் வேண்டியுள்ளார்.

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம்

* 244 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் கடந்த 6—5—1967 முதல் 15—2—1968-ஆம் தேதி வரை எத்தனை தீர்மானங்கள் போட்டது ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டவை எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) 298 தீர்மானங்கள் போடப்பட்டன.

(இ) 265 தீர்மானங்கள் முடிவாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி ஒன்றியங்களில் போடப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்பதை அறியவும், நாட்டின் முன்னேற்றம் கருதியும், சமுதாய மேம்பாட்டுப் பணிகள் குறித்து அரசுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஊராட்சி ஒன்றியம் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த வகையில் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பீரியாடிகல் ரிப்போர்ட் என்ற முறையில் அவ்வப்போது அனுப்பப்படுகிறது. அரசாங்கத்திற்கும் முறையாக வந்து கொண்டுதான் இருக்கிறது.

பொய்யூர்-சுண்டக்குடி சாலை

* 245 வினா—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம் பொய்யூரிலிருந்து ஓட்டக்கோயில், ஆண்டிப்பட்டாக்காடு, சுண்டக்குடி வரை செல்லும் சாலையை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பன்னிரண்டு மைல் நீளமுள்ள பொய்யூர்-சுண்டக்குடி சாலையை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம் : (1) திருச்சி-சிதம்பரம் சாலை, (2) மேலக்கருப்பூர்-ஏலக்குறிச்சி சாலை (சின்னப்பட்டாக்காடு வரை) (3) சின்னப்பட்டாக்காடு-உறையூர் சாலை (4) அம்பலவர் கட்டளை-காமரச வல்லிசாலை (சுண்டக்குடி வரை).

இதில் சின்னப்பட்டாக்காடு—உறையூர் சாலையைப் பொறுத்தவரையில் ஒரு திட்டமும் இல்லை.

Fire accident at Gandhi Market, Tiruchirappalli.

* 226 *Q.*—DR. H. V. HANDE:
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:
Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether it is a fact that a fire accident took place at Gandhi Market, Tiruchirappalli, destroying nearly 300 thatched huts on 3rd June 1968;

(*b*) if so, the details thereof;

(*c*) the total extent of damage that took place and

(*d*) the relief measures undertaken by the Government?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள, காந்தி அங்காடியில் 3—6—1968 அன்று தீ விபத்து ஏற்பட்டது. இதனால், காய்கறிகள், பழவகைகள், தேங்காய்கள் போன்ற தரகு மண்டிகள் அடங்கிய 153 கடைகள் எரிந்து போயின.

(இ) தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் நாசமடையவில்லை. காந்தி அங்காடியில் இடிபாடுகளை அகற்றும்போது சவம் ஒன்று தக்காளிப்பழக் கடையில் கண்டெடுக்கப்பட்டது.

(உ) ஷெ விபத்தினால் ஏற்பட்ட விரயம் ரூ. 6,38,000 என்று மதிப்பிடப்படுகிறது.

(எ) தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், நகராட்சி மன்றத்திற்கு, 10 ரூபாய்க்கு மேல் வரி செலுத்துகின்றனர். இந்தக் கடைகள், நகராட்சி மன்றத்தால் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. எனவே தீக்கிரையான வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு மானியம் வழங்கும் கேள்விக்கே இடமில்லை. எனவே இலவச உடை பெறுவதற்கும் அவர்கள் தகுதியற்றவர்களாகின்றனர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நம்முடைய தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் தீ விபத்துக்கள் ஏற்பட்டு பல குடிசைகள் எரிந்து போகும் காட்சியைப் பார்க்கிறோம். எரிந்துபோன வீடுகளுக்குப் பதிலாக தீ பிடிக்காத வீடுகளைக் கட்டுவதில் அரசாங்கம் இதுவரை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னையைப் பொருத்தவரை அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு எரியாத வீடுகளைக் கட்டும் பொறுப்பை அரசு ஏற்றிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் பரவலாக அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டுவது என்பது இயலாத காரியம் ஆகும். வீடு கட்டுகின்றவர்கள் அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டவேண்டுமென்று ஊக்குவிக்க வேண்டும்.

திரு. எம். எஸ். மணி : திருச்சி காந்தி மார்க்கெட்டில் நடைபெற்ற தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடாது என்று சட்டத்தில் இருந்தாலும் மாவட்ட நல நிதியில் இருந்து 20,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டுள்ளது என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தும் கூட அங்கே இறந்துவிட்ட ரத்தினம் என்பவருடைய மனைவிக்கு டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் பண்டில் இருந்து ஆயிரம் ரூபாய் நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைக்காரர்கள் 103 பேருக்கு நஷ்டம் அடைந்த மதிப்பில் $12\frac{1}{2}$ சதவிகிதம் கணக்கிட்டு 42,072 ரூபாய் முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த சாதிக் பாட்சா அவர்களால் காந்தி மார்க்கெட்டில் நடைபெற்ற கூட்டத்தில் வழங்கப்பட்டது.

திரு கே. விநாயகம் : திருச்சியிலே காந்தி மார்க்கெட்டிலே நடைபெற்ற தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உபகாரம் செய்திருந்தாலும், அந்த தீ விபத்து எப்படி வந்தது, யாரால் தீ வைக்கப்பட்டது என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையாகவே கண்டு பிடிக்க முடியவில்லையா ? இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற போலீசார், ஒற்றர்கள் திறமையற்றவர்கள் என்று பொருளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது குற்றம் சாட்டக்கூடாது. திறமையற்றவர்கள் என்ற முறையில் குற்றம் சாட்டும் முறையில் கேள்வி கேட்கக்கூடாது.

திரு கே. விநாயகம் : அதுதானே எங்கள் வேலை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு விநாயகம் அவர்கள் திறமையான கேள்வி ஒன்றைக் கேட்டார்கள். எவ்வளவு திறமையுடையவர்களாக இருந்தாலும் தீ விபத்துக்கள் எப்படி ஏற்பட்டன என்பதைக் கண்டு பிடிப்பது கஷ்டமான காரியம். அதிலே, தடயங்கள் அனைத்தும் எரிந்து போய்விடுகின்றன. யாராவது தீ வைத்த காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டதா அல்லது எதாவது ஒரு கடையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினால் ஏற்பட்டதா என்று கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

திரு க. கோமதிசங்கர தீட்சிதர் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் உதவித்தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அது தவிர சென்னையைத் தவிர மற்ற இடங்களில்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த உதவித்தொகை கொடுக்கப்படுவதில்லை. மற்ற இடங்களில் தீ விபத்தினால் பாதகம் ஏற்பட்டால் அங்கும் உதவித் தொகை கொடுப்பதோடு அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவும் அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பழைய அரசாங்கம் கொடுத்து வந்த தொகை 40 ரூபாய்தான். புதிய அரசாங்கம் 80 ரூபாய் அளவுக்கு நிதி வழங்குகிறது.

திரு .கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : கிராமங்களில் தீ விபத்து ஏற்படுகின்ற நேரங்களில் ஏழைகள் வீடுகளைக் கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். அதை மனதில் கொண்டு அரசாங்கம் இனிமேல் கிராமங்களிலும் தீ விபத்தால் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு வீடு கட்டும் அளவுக்கு உடனடியாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இப்போது அப்படிப்பட்ட யோசனை எதுவும் இன்றுள்ள நிதிநிலைமையில் இல்லை.

திரு வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த காந்தி மார்க்கெட்டிலே ஏற்பட்ட தீ விபத்து காரணமாக கடை கட்டுவதற்கு நகராட்சி எவ்வளவு செலவு செய்திருக்கிறது.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : எவ்வளவு செலவு செய்தது என்ற விவரம் நகராட்சியிடமிருந்து கிடைக்கவில்லை.

ஆக்ராவுக்கு அருகில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் தாக்குதல்.

* 227 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1968-ல் டெல்லியிலிருந்து ஆக்ரா செல்லும் வழியில் தமிழகத்தைச்சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சில வட நாட்டவர் தாக்கினர் என்பதுபற்றி அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி :

(அ) அரசிடம் இதுபற்றிய தகவல்கள் எதுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, அகில இந்திய ரீதியில் டெல்லியில் கூட்டுறவு மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டில் தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கொளத்தூர் கோதண்டம் அவர்களும், திரு செஞ்சி முனுசாமி அவர்களும், திரு மா. பா. சாரதி அவர்களும் கலந்து கொண்டார்கள். மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தபிறகு டெல்லியிலிருந்து ஆக்ரா செல்லும் வழியில் இந்திவெறி பிடித்த மாணவர்கள் அவர்கள் சென்ற காரைத் தாக்க முயன்று இருக்கிறார்கள். இதுபற்றி பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதி பதில் கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வேறு இரண்டு பேர்களும் ஆக்ராவிற்குச் செல்வதற்காக வாடகைக்காரில் செல்லும்பொழுது சில மாணவர்கள் வழிமறித்து, எழுதப்பட்டிருந்த ஆங்கில எழுத்துக்களை அழிக்க வேண்டுமென்று அங்கேயிருந்தவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு அந்த அந்த வாடைக்காரின் டிரைவரும் உடன்பட்டு ஆங்கில எழுத்துக்களை அழித்துவிட்டார். அப்பொழுது அந்தக் கார் தாக்கப்பட்டபொழுது மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் லேசாகத் தாக்கப்பட்டார்கள் என்ற அளவில் பாராளுமன்றத்தில் அதுபற்றி "கால் அட்டென்ஷன்" நோட்டீஸ் கொடுக்கப்

பட்டது. அதற்குப் பதிலளித்த பிரதமர் அவர்கள், தாக்கப்பட்டதற்கான எந்தவிதமான ஆதாரமும் தன்னிடம் இல்லை, தாக்குதல் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டு, ஆனால் இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்கள் ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது என்று பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறினார்கள். ஜனசங்கத் தலைவர் வாஜ்பாய் அவர்கள், எனக்கு அப்படிப்பட்ட தகவல் இல்லை என்றும், அப்படியிருந்தால் விசாரிக்கிறேன் என்றும் குறிப்பிட்டார். அதோடு அந்தப் பிரச்சினை பாராளுமன்றத்தில் முடிவுற்றது.

திரு என். வரதராசன் : தலைவரவர்களே, இந்திய நாட்டில் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு மாநிலத்துக்காரர்களால் தாக்கப்படுவது என்பது இன்று அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கும்படியான பேராபத்தான காலமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட காலத்தில், தமிழகத்திலே எண்ணூர், சென்னை எழுகிணறு பகுதிகளிலே உள்ள மலையாளிகள் மீது துவேஷப்பிரச்சாரம் நடைபெறுவதாகத் தகவல் வந்திருக்கிறதே, அது சம்பந்தமாக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்குமா ? சிவசேனைத் தாக்குதலினால் தமிழக மக்களுக்கும், அவர்களுடைய பொருள்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டதற்காக நஷ்டஈட்டை வாங்குவதற்கு உரிய வழிகளில் அரசாங்கம் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மலையாளிகளுக்கு எதிராக ஒருசிலர் சென்னை வட்டாரங்களிலே துண்டு அறிக்கைகளை வெளியிட்டும், சுவரொட்டிகளை வெளியிட்டும், மலையாளிகள் வெளியேற வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி என்றும், தமிழர் கட்சி என்றும் பெயராலே பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுபற்றிய தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. இதற்காக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உறுதியாகத் திட்டமிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகின்றேன். சிவசேனையைப் பற்றி முன்பே இந்த மன்றத்தில் பேசி முடிந்த விவாதமாக ஆகியிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவரவர்களே, கார்களில் ஆங்கில எழுத்துக்கள் இருந்த ஒரேயொரு காரணத்திற்காக அங்கே நாங்கள் தாக்கப்பட்டோம். அங்கே இந்தியிலே கார் நம்பர் பிளேட்டுகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் தமிழகத்திலேயுள்ள கார்களில் சொந்தக்காரர்கள் விரும்பினால் தமிழ் எழுத்துக்களில் நம்பர் பிளேட்டுகளை வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியில் புதிய கேள்விக்கான விடை இடம் பெறவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கடந்த ஆண்டு நான் கூட காஷ்மீர்வரை சென்று வந்தேன். அப்பொழுதெல்லாம் இந்தி தெரியவில்லை என்றாலே அவர்கள் வெறுப்பாக நடத்துகிறார்கள். ஆகையால் இந்திய அரசுக்கு இதுபற்றித் தெரிவித்து நம்முடைய எதிர்ப்பை அவர்களுக்குத் தெரிவிக்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதை இந்திய அரசும் அறிந்திருக்கின்றது. அதன்காரணமாக நம்முடைய எதிர்ப்பையும் அவர்களுக்கு அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். இந்திய அரசு அறியாமல் இல்லை. அறியாமல் இருந்தால்தான் தெரிவிக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாகவேண்டும்.

நெய்வேலியில் காவல் நிலையங்கள்.

*** 228 வினா.—திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி கார்ப்பரேஷன் பிரதேசத்திற்குள் போலீஸ் நிலையங்கள் எத்தனை உள்ளன ?

(இ) எத்தனை கான்ஸ்டேபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் இதர மேல் அதிகாரிகள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இரண்டு.

(இ) ஆய்வாளர் 1 ; உதவி ஆய்வாளர் 3 ; தலைமைக்காவலர் 8; காவலர் 71.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது மாநில அரசைச் சேர்ந்த போலீஸ் நிலையங்களா ? அல்லது தொழிலைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட மத்திய சர்க்காரைச் சேர்ந்த போலீஸ் நிலையங்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாநில அரசினுடைய போலீஸ் நிலையங்கள்.

Demonstration before United States Consulate

* 229 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether a demonstration of Right Communists was held before the Office of the United States Consulate at Madras about the 6th April 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் வலதுசாரியைச் சேர்ந்த சென்னை மாவட்டக் கழகத்தினர் 6—4—1968 அன்று ஊர்வலம் ஒன்றை நடத்தி, சென்னை, மலைச்சாலை (மவுண்ட்ரோடு) அமெரிக்கத் தகவல் நிலையத்தின் முன்பு சுமார் இரண்டு நிமிடங்கள் ஆர்பாட்டம் செய்தனர்.

திரு. இல. பலராமன் : இதனால் அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்திற்குச் சேதம் உண்டா ? இதுபோன்ற மற்ற அந்நிய நாட்டுத் தூதுவர் இல்லங்கள் முன்னால் நடத்தப்படும் ஆர்பாட்டங்களைக் கண்டிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி. ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அவர்கள் உரிமை. அமைதியைப் பாதுகாக்க வேண்டியது அரசின் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், 230, 231, 232 ஆகிய மூன்று வினாக்களும் அமைச்சரவர்கள் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன. அடுத்த வினா எண் 236.

மகளிர் மன்றம்

***236 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மகளிர் மன்றங்களால் அரசு என்னென்ன நன்மைகளை எதிர்பார்க்கின்றது ?

(இ) இதுவரை எதிர்பார்த்த நன்மைகளை அரசு பெற்றுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) மகளிர் மன்றங்களை கிராமங்களில் ஏற்படுத்துவதால் கீழ்க்கண்ட நன்மைகளை அரசு எதிர்பார்க்கிறது.

(1) ஜாதிமத வேற்றுமையின்றி கிராமப்பெண்கள் ஒன்றுகூடி பழகுதல்.

(2) சுற்றுப்புற சுகாதாரம், வீட்டு அளவில் செய்யக்கூடிய மருந்துகளை தயாரித்தல். முதலுதவி செய்து பிறகு ஏற்படக்கூடிய பெரும் பிணிகளை தவிர்த்தல்.

(3) குழந்தைகளை ஆரோக்யமாக வளர்த்தல். குழந்தைகளுக்கு பாதுகாப்பு ஊசிகள் போடுதல். குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி சிந்தித்தல். அம்முறைகளை கையாளுதல்.

(4) கிராம அளவில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு போஷாக்கு உணவுகளை பக்குவமாக தயாரித்தல். அதற்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்தல்.

(5) பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புதல்.

(6) சிறு சேமிப்பு செய்தல்.

(7) சிறிய தொழில்களைப் பழகுதல். அதன் மூலம் ஓரளவு வருவாயை பெருக்குதலும், செலவினங்களை தவிர்த்தலும் முதலிய பல நன்மைகளை அரசு எதிர்பார்க்கின்றது.

(இ) ஆம்.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பல்வேறுபட்ட துறையில் கிடைக்கக்கூடிய பலன்களைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் இந்த மகளிர் மன்றங்கள் செம்மையாக இயங்காத காரணத்தினால் இதற்காக ஒதுக்கப்படும் தொகைகளை வேறுதுறையில் பயன்படுத்துவது நலம் என்ற கருத்திருக்கிறது என்பதுபற்றி அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சிறுசிறு தொழிற் சாலைகளை வைத்து அவர்களுக்குத் தொழில் தருகிறது. அந்தத் தொழில்கள் இப்பொழுது சற்றுக்குறைவான முறையில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதற்குக் காரணம், அதிலே உற்பத்தியாகக்கூடிய பொருள்களுக்கு மார்க்கெட் கிடையாது. எனவே, அரசாங்கமே ஆண்டுக்காண்டு நிதி உதவி செய்துகொண்டு பொருள்களை உற்பத்தி செய்கிறது, அந்தப் பொருள்கள் விலைபோகாத காரணத்தினால் தடங்கல்கள் ஏற்பட்டு வருகிறது. அதுகுறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, these Mahalir Manrams are very good but in many places they are not functioning properly. So will the Hon. Minister appoint a Committee to go into this matter and make a report?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சில நல்லமுறையில் செயல்படுகின்றன. குழுவைப் போட்டு ,அதைபற்றிப் பரிசீலனை செய்வதற்கு முன்பே, அரசாங்கம் அவர்கள் வரவு-செலவுக் கணக்கைப் பார்த்து பரிசீலனை செய்ததில் அவைகளில் இழுத்து மூட வேண்டுமென்ற நிலையில் பல இருக்கின்றன. வேறு புதிய முறைகளைக் கையாள்வதா என்பதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, பெரும்பாலும் அந்தந்த கிராமங்களிலேயுள்ள மகளிர் மன்றத்திற்குக் கொடுக்கப்படும் பொருள்கள் மகளிர் மன்றங்களில் தலைவர் இல்லங்களில் பயன்படுத்தப்படுவதாக அதிகமான புகார்கள் கிராமங்களிலிருந்து வருவதால் அதுகுறித்துப் பரிசீலனை செய்து தனியான ஒரு இடத்திலே அந்தப் பொருள்களை வைத்துப் பயன்படுத்த அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட புகார்கள் வரும்போதெல்லாம், அரசாங்கம் தலையிட்டு அந்தப் பொருள்கள் பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டில் இருந்தால் மீண்டும் அவைகளை மகளிர் மன்றத்திற்குக் கொண்டுபோய் வைக்கும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மகளிர் மன்றங்களில் இந்த தையல் வேலை செய்வது ஒப்புக்கொள்ளத்தக்கது, வரவேற்கத் தக்கது. பூ வேலை செய்வதெல்லாம் கூட வரவேற்கத்தக்கது. ஆனால் ஓமப்பொடி, பகோடா, முறுக்கு சுடுவது நிறுத்தப்படுமா ? அது அவசியம் அல்லவே. வீட்டிலுள்ள தாய்மார்களே இவற்றை எப்படி செய்வது என்பதை கற்றுக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை ஏன் இந்தப் பணிகளை எல்லாம் செய்யச் சொல்ல வேண்டும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது மிக முக்கியமான கேள்விதான். பகோடா, ஓமப்பொடி செய்வதில் கூட அதிகப்படியான பணம் செலவழித்து சாப்பிடமுடியாத அளவிற்கு தயாரிக்கிற தாய்மார்களும் இருக்கிறார்கள். சிக்கனமான முறையில் இவைகளைத் தயாரிக்கின்ற வகைகளிலே தான் நல்ல செயல்குறிப்புகளை அந்த இல்லங்களில் அளிக்கிறார்கள். காய்கறிகளைக் கொண்டு தயாரிப்பவற்றைக் கூடச்சொல்லித் தருகிறார்கள். காய்கறிகளில் கூட சிலவற்றை தேவையற்றது என்று ஒதுக்கிவிடுகிறார்கள் சாதாரணமாக. சத்துள்ளவைகளாகவும் நோய் நீக்கக் கூடியவைகளாகவும் சில காய் கறிகள் இருக்கின்றன. காய்கறிகளில், குறிப்பாகத் தோல்களில் நல்ல சத்துக்கள் இருப்பதாகத்தான் கூறுகிறார்கள். அவைகளையெல்லாம் கற்றுத் தந்து, சிக்கன முறையிலே, அதிகப்படியாக செலவு செய்யாமல் பலகாரங்களையும் சமையலையும் செய்வதுதான் மன்றங்களிலே கற்றுத் தரப்படுகின்றன.

திரு. சொ. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது. அது பூராவும் செலவழிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரூ. 5 இலட்சம் எல்லாவித திட்டங்களுக்கும் சேர்த்து செலவழிக்கப்படுகிறது.

***237 வினா—திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக என்னென்ன விதமான உதவி செய்ய சர்க்கார் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கனம் அங்கத்தினரின் கவனம் இதர வரவு-செலவு திட்ட மதிப்பீட்டுப் பத்திரங்களுடன் சபை முன் வைக்கப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவின் 144–145-ஆம் பக்கங்களிலுள்ள சமூக நலம் பற்றிய அத்தியாயத்திற்கு ஈர்க்கப்படுகிறது.

திரு வி. கே. கோதண்டராமன் : படித்துவிட்டு அதற்குப் பிறகு சொல்லுகிறேன். தாழ்த்தப்பட்ட சமூகத்தைவிட மிகவும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு இருக்கக்கூடிய ஒரு சமூகம் பெண்களுடைய சமூகம். பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம், பெண்களுடைய சமூகம் எந்த அளவுக்கு முன்னேறுகிறதோ அந்த அளவுக்குத் தான் நாடு முன்னேற முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றனவோ அந்தச் சலுகைகளையெல்லாம்பெண்களுக்கும் அளிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது நல்ல யோசனைதான். கனம் உறுப்பினரைப் போல எல்லா ஆடவர்களும் பெண்களுக்குத் தகுந்த அந்தஸ்தைத் தர முன் வருவார்களானால், இதற்காக அரசாங்கம் எந்தவித உதவியும் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் பெண்களுடைய முன்னேற்றத்திற்காக தையல் முதலிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதன் மூலமாக பெண்கள் பயன்பெற முடியாத நிலையிலே இருக்கிறார்கள். நிச்சயமாக தையல் வேலை ஏழைப் பெண்களுக்கு மிகவும் உதவி அளிக்கக் கூடிய தொழிலாக இருக்கும். ஆதலால் இதை வற்புறுத்தி புள்ளி விவரம் எடுத்து அதிக

மான பெண்கள் தையல் வேலையில் ஈடுபடக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்குமா ? அதிகமான பெண்கள் தையல் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : தையல் தொழி லில் அவர்களுக்கு மேலும் ஊக்கம் வரவேண்டுமென்பதற்காகத் தான் பயிற்சி நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பயிற்சி நிலையங் களில் பயிற்சி பெற்ற அரிசன பெண்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே தையல் இயந்திரங்கள் கூட கொடுக்கப்படுகின்றன. இன்னும், தையற் கலையிலே, பூ வேலைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் கொடுக்கப்படு கின்றன. பெண்கள் இந்த நிலைமையிலே வருவதன் மூலம் அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெறவும், சிக்கனமாக இருக்கவும், குடும்பக்கட்டுப் பாடின் அவசியத்தை உணரவும், சிறு சேமிப்பின் அவசியத்தை உணரவும் வழி ஏற்படுகிறது. அவற்றை இந்த நிலையங்களிலே இருந்து தெரிந்துகொள்ளு கிறார்கள். பல நிலையங்களில் பயிற்சி பெற்ற பெண்கள் இதில் முன்னேறி இருக்கிறார்கள். நல்ல அழகிய உருப்படிகளை எல்லாம் தயார் செய்திருக் கிறார்கள். அக்கறை காட்டியும் இருக்கிறார்கள். எனவே தான் அர சாங்கம் அந்த தொழிலை அவர்களுக்கு அதிகம் கற்றுக் கொடுத்து வரு கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கள் சிறப்பாகப் பொருளாதார அடிப்படையில் செயல் படுவதற்குக் கூட்டு றவுத் துறையில் பால் பண்ணை அமைத்துக் கொடுப்பதற்கும் அரசு அக்கறை கொள்ளுமா ? தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு இலவசமாகவே மாடு வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இந்த கூட்டுறவு மூலமாக பால் விநியோகிக்கும் சொஸைட்டியை இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தந்து கொண்டு வருகிறது அரசாங்கத்தின் சார்பில். தாழ்த் தப்பட்ட பெண்களும் அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பெண்களுக்காக தனியாக இப்படிப்பட்ட சங்கம் எதனையும் அரசாங்கம் ஏற்படுத்தவில்லை. பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து இதுபோன்ற சங்கங்களை நிறுவி இப்பொழுது நாம் செய்து கொண்டு வருகிற செயல் திட்டத்தின் மூலமாக வெற்றி காண்பார்களானால் அவர்களாகவே தனியாக இந்த சங்கங்களை அமைக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு ஒரு நல்ல உணர்ச்சி ஏற்படும். எனவே இந்த திட்டங்களில் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறார்களோ அதை யொட்டி அடுத்த ஆண்டு திட்டங்களிலே கூட அரசாங்கம் அவர்கள் முன் னேற்றத்திற்கு மேலும் ஏற்பாடு செய்யலாம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, பெண்கள் இன்று சமூகத்தில் நல்ல அளவில் முன்னேறி வருகிறார்கள். அலுவலகங்களில் நிறைய பெண்கள் இருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடியது. ஆனால் சில பத்திரிகைகளில் அவர்களை மிகைப்படுத்தி, பெண்கள் அலுவலகம் செல்லுகின்ற அதே சமயத்தில் ஆண்கள் வீடுகளில் சமையல் செய்வ தாகக் கேலி சித்திரம் போடுவது அதிகமாகி வருகிறதே, இதனால் அவர்கள் உறவு பாதிக்கப்படாதா ? இதைப் போக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இதற்கு ஆண் களே ஒரு தனிப்போராட்டத்தை நடத்தினால் கூட நலமாக இருக்கும். அப்பொழுதுதான் இந்த வேண்டுகோள் அவர்களால் கவனிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, தொழில், வியாபாரம், காரியாலயம், பத்திரிகைகள் போன்ற எல்லா துறைகளிலும் எந்தெந்த துறைகளில் அவர்கள் சிறப்பாக செயல்பட முடியும், எந்தெந்த துறை களில் அவர்களுடைய திறமையை வெளிப்படுத்த முடியும் என்பதை

அறிவதற்கும் அம்மாதிரி துறைகளிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கும் இந்த அரசு ஏதாவது வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : வாய்ப்புகள் தந்தால் பெண்கள் எல்லா துறைகளிலும் இன்றைக்கு சிறப்பாக செயல்பட முடியும். இந்திய நாட்டின் பிரதமரே ஒரு பெண்ணாக இருக்கிற காரணத் தினால் வாய்ப்புகள் தரவேண்டும். அந்த வாய்ப்புகளை இன்றைக்கு நாம் அதிகமாக தருவதில்லை. இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக, மிக மிகப் பிற்போக்காக இருக்கிற பின் தங்கிய கிராம மக்களுக்குத் தான் இந்த திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கிறோம். படித்த பெண்கள் இன் றைக்கு எல்லாவிதமான வேலைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். அலுவலகங்களிலே, ஆலைகளிலே கூடப் பணி ஆற்றுகிறார்கள். எனவே, மிகத் பின் தங்கிய குக்கிராமங்களில் இருக்கிற பெண்களுக்கெல்லாம் துணிவு ஏற்படுத்தி, அவர்களுக்கு இருக்கிற அடிமைத்தனத்தை உடைத் தெறிந்து, அவர்களும் சமமாக வரவேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடு வீட்டிலே அடைக்கப்பட்டிருந்த பெண்களை எல்லாம் இதுபோன்ற மகளிர் மன்றங்கள் மூலயாக ஒரு நிலையிலே கொண்டு வந்து தங்களாலே பல காரியங்களைச் செய்ய முடியும. தங்களுக்கும் சில உரிமைகள் இருக் கின்றன என்பதை உணர்ந்து பணியாற்றவேண்டுமென்ற நிலையில் அரசு திட்டங்கள் தீட்டி வருகின்றது. பெண்கள் நல்ல முறையில் இந்த இல்லங் களை நடத்துகிறார்கள், இந்த நிலையங்களை நடத்துகிறார்கள், இந்த தொழில் களை நடத்துகிறார்கள், எனவே, அவர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்றுதான் பல நல்ல திட்டங்களை எல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு உருவாக்கிக் கொண்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வெளிநடப்பு செய்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேரவைக்கு திரும்பி வந்தது குறித்து.

திரு. க்ரு. சீமைச்சாமி : ஆன் எ. பாய்ன்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கவேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் இந்த பட்ஜெட் கூட்டத் திலே கலந்துகொள்ளப் போவதில்லை என்று வெளியே சென்றார்கள். இன்றும் இந்த பட்ஜெட் தொடர் கூட்டம் தான் நடைபெறுகிறது. சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் வந்திருக்கிறார்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் வருவதும் போவ தும் அவர்களுடைய உரிமை. ஒரு உறுப்பினருடைய உரிமைப்பற்றி கேள்வி கேட்பதற்கு இன்னொரு உறுப்பினருக்கு உரிமை கிடையாது. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும், எழவில்லை என்று தெரி வித்துகொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்

(அ) தூத்துக்குடி நகராட்சி மன்ற மதிய உணவுக் கமிட்டியில் நிதி பற்றாக்குறையும் மதிய உணவு சரிவர வழங்கப்படாமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒற்றி மு.ப.
வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், அதாவது— 10-00

"நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி நகராட்சி மன்றத்தில் மதிய உணவுக் கமிட்டியில் சுமார் ரூ. 5,000 (ஐயாயிரம்) குறைவு ஏற்பட்டு,

தூத்துக்குடி நகராட்சி உறுப்பினர்கள் எல்லோரும் நகராட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமையினால் நகராட்சிமன்றக் கூட்ட நடவடிக்கைகள் நடக்காது தடைப்பட்டு போய், மதிய உணவும் சரியாக வழங்கப்படாமல் தூத்துக்குடி நகர் மன்ற மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிலையை சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துவிட்டு விவாதிக்கக் கோருகிறேன்" என்று.

இது சம்பந்தமாக விவாதிக்க மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதியின் (3) வது உட்பிரிவின்படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(அ) சென்னையில் மண்ணெண்ணெய் பற்றுக்குறையும், மக்கள் அல்லலும்.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Agriculture to to a matter of urgent public importance, namely, the continued scarcity of kerosene oil in the City of Madras throwing several families belonging to lower and middle class people into great hardship.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மண்ணெண்ணெய் விநியோகத்தில் இப்பொழுது ரேஷன் முறை கிடையாது. நம் மாநிலத்தில் மண்ணெண்ணெய் வழங்கும் நிறுவனங்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், கால்டெக்ஸ், பர்மாஷெல், எஸ்ஸோ ஆகியவை. சென்ற ஓராண்டாக எடுத்த புள்ளி விவரங்களின்படி சென்னை நகரத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் மாதத்திற்கு 4,200 கிலோ லிட்டர் (1 கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர் அடங்கியது) இந்த தேவைக்கு எதிராக 4,685 கிலோ லிட்டர் சென்னை நகரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 3,300 கிலோ லிட்டரை இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷனும் எஞ்சியதை மற்ற மூன்று நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் மண்ணெண்ணெயை கொச்சின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரவழைக்கின்றது. சாதாரணமாக இது கப்பல் மூலமாக வருகின்றது. இந்த நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளை நியமித்துள்ளார்கள். இந்த மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரப் பொறுப்பை கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கும், சில்லரைக்கடைகளுக்கும், கைவண்டிக்காரர்களுக்கும் ஒப்படைத்துள்ளனர். மார்ச் மாத முதல் தேதி வரை மண்ணெண்ணெய் லிட்டர் 51 பைசா நியாயவிலையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மார்ச் முதல் தேதிக்குப் பிறகு கலால் வரி ஏற்றப்பட்டுள்ளதையொட்டி லிட்டருக்கு 55 பைசாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1969 ஜனவரி மாதம் வரை மண்ணெண்ணெய் விற்பனை தட்டுப்பாடு எதுவுமின்றி நடந்து வந்தது. ஜனவரி மாதக் கடைசி வாரத்தில் வர வேண்டிய ஒரு கப்பல் சென்னைக்கு வந்து சேர்ந்ததும் பம்பாய்க்குத் திருப்பி அனுப்பப்பட்டது. அந்த நேரத்தில் சென்னையின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான மண்ணெண்ணெய் இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் வசம் இருந்தது. இருந்தபோதிலும் சென்னைக் குவந்து சேர்ந்த கப்பல் பம்பாய்க்குத் திருப்பி அனுப்பப்பட்ட தகவலை வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு சென்னை நகரிலே மண்ணெண்ணெயைப் பொறுத்வரையில், தேவையற்ற ஒரு தட்டுப்பாடு நிலையை வேண்டுமென்றே உண்டு பண்ணி விட்டார்கள், என்று தோன்றுகிறது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இன்னும் அதிக அளவு மண்ணெண்ணெய் கொச்சினிலிருந்து ரயில் மூலம் தருவித்து சென்னை நகருக்கு வழங்குவதற்கு, தமிழக அரசின் உணவுத்துறை கேட்டுக் கொண்டதன் பேரில், இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் ஏற்பாடு செய்தது. அதே சமயத்தில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் அளவும் கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்த பின்பும், சில்லரை வியாபாரிகள் சிலரும், கைவண்டிக்காரர்கள் சிலரும் கூடுதலான விலைக்குத் தொடர்ந்து விற்று வந்ததைக் கண்டு அரசாங்கம் கடுமையாக சோதனை நடவடிக்கைகளையும், கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எடுப்பதில் முனைந்துள்ளது.

சென்னை நகரத்திற்கு ஒரு நாளைக்கு சுமார் 100 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. இப்பொழுது ஏறக்குறைய 150 கிலோ லிட்டர் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. டி.யூ.சி.எஸ். நிறுவனம் தன்னுடைய அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லாமல் பொது மக்களுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறது. தங்கள் கிளை நிறுவனங்கள் மூலம் மண்ணெண்ணெய் விற்பதோடு, மண்ணெண்ணெய் விற்பதற்காக தனியாக 5 விற்பனை நிலையங்களைத் தாற்காலிகமாக அவர்கள் திறந்துள்ளனர். இதைப் போலவே மற்ற மொத்த வியாபாரிகளும், சில்லரை விற்பனைக்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். இதற்கும் மேலாக ரேஷன் கடைக்காரர்கள் மூலமாகவும் அதிக மண்ணெண்ணெய் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளின் பலனாக நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் சமயத்தில் கலால் வரி உயர்த்தப்பட்டது. அது எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வருமென்று விளக்கம் பெற்று அதன்பின் விநியோகம் செய்ய வேண்டுமென்று நிறுவனங்கள் காத்திருந்ததால், விநியோகத்தில் ஓரிரு நாள் தடை ஏற்பட்டது. இப்போது லிட்டர் 55 பைசாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு விநியோகம் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது.

தட்டுப்பாடு ஏற்பட்டதைக். கண்டு அஞ்சி பொது மக்களும் தங்கள் தேவைக்கு அதிகமான அளவு மண்ணெண்ணெய் வாங்கி வைத்துக் கொள்ளும் போக்கும் காணப்படுகிறது, நிலைமை ஒரு சில நாட்களில் சீராகி விடுமென்று அரசு நம்புகிறது. அன்றாட நிலவரத்தை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. அதிக விலைக்கு விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அரசு எச்சரித்துள்ளது. இதையொட்டித் தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகளும், சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வியாபாரிகளின் ஒத்துழைப்புடனும், பொது மக்கள் ஒத்துழைப்புடனும் நிலைமை சீராகி விடுமென்று அரசு நம்புகின்றது. ஆயினும் நிலைமையில் கணிசமான மாறுதல் ஏற்படாவிட்டால் அரசாங்கமே விநியோகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ரேஷன் முறையின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமா என்பது பற்றியும், ஆலோசித்து வருகின்றோம். இந்த நடவடிக்கைக்கான அவசியம் இருக்காது என்று நான் நம்புகிறேன். ஆனால் அவ்வாறு அவசியம் ஏற்பட்டால் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தயங்காது.

மேலும் இப்பொழுது, மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைத் தவிர்க்க எண்ணெய்க் கப்பல் சென்னைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. பொது மக்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

டாக்டர் எச. வி. ஹாண்டே : எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நேற்றைய தினம் அதாவது 1969-ம் வருடம் மார்ச் மாதம் 6-ம் தேதி 240 கிலோ லிட்டர், அதாவது 1,000 லிட்டர் ஒரு கிலோ என்ற அளவில், வழங்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் 1969-ம் வருடம் மார்ச் மாதம் 7-ம் தேதியில் 250 கிலோ லிட்டர் வழங்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : While I am very happy about the serioussness with which the Government is paying attention to this problem, arising out of the answer given by the Minister that the ship that was to have come to Madras was sent to Bombay, will the Civil Supplies Authorities or the other authorities concerned get in touch with the Port authorities, cut red tape and allow the ship to come to Madras immediately? Probably because of the extraordinary rush in the port, the ship had to be diverted from Madras. If there had been proper liasion between the Civil Supplies authorities and the port authorities both of whom are under the State Government, all this trouble could have been prevented. Was it due to any lapse in any particular department or want of co-ordination between departments that the ship which had come all the way to Madras had to go to Bombay?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : போர்ட் ஆபீசர் இராச்சிய சர்க்காருடைய நிர்வாகத்தில் இல்லை. மத்திய சர்க்காருடைய நிர்வாகத்தில் இருக்கிறார். நம்முடைய அரசு தீவிர, துரித நடவடிக்கை எடுத்ததன் பேரில்தான், பம்பாய்க்கு அனுப்பப்பட்ட கப்பல் திரும்பவும் சென்னைக்கு வந்து, பொது மக்களுக்கு எண்ணெய் வினியோகிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

(ஆ) ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில், நெற்பயிர்களுக்கு நுண்ணுயிர்களால் ஏற்படுகிற கருகல் நோய் கண்டதும், அதைப் பரவாமல் தடுப்பதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளும்.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Agriculture to a matter of urgent public importance, namely, the presence in an endemic form of a deadly disease of bacterial blight in the Agricultural Research Station at Aduthurai which is the source of multiplication of seeds to other State farms and the need to take steps to prevent this bacterial blight before it spreads to the entire paddy crop in the Thanjavur delta area.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, 1965-ம் ஆண்டில் ஆடுதுறை பண்ணையில் சுமார் 40 செண்ட் நிலத்தில் டேய்ச்சங் நேடிவ் 1, (Taichungnative 1) என்கிற நெற்பயிரில் நுண்ணுயிர்களால் ஏற்படுகிற கருகல் நோய் (bacterial blight) கண்டது. விதை காற்று அல்லது நீர் மூலமாக இந்தத் தொத்து நோய் ஏற்பட்டிருக்கிறது. அதே ஆண்டில் பண்ணையில் C. O 29. C.O. 25 ரகப் பயிர்களுக்கு இந்த நோய் கண்டதாக தெரிந்தது. ஆனால், அந்த நோய் பெருமளவிற்குப் பரவாமல் சிற்சில இடங்களில் தான் காணப்பட்டது. 1966-ம் ஆண்டில் ஆராய்ச்சி

நிலையத்தில் இந்த நோய் அவ்வளவாகக் காணப்படவில்லை. 1967-ம் ஆண்டில் 25 செண்ட் நிலத்தில் ஏ.டி.டி. 27 ரகப் பயிர் இந்த நோயால் பாதிக்கப்பட்டது. இந்த நோயின் தொற்று மற்றொரு 7 எக்கராவிற்கும் ஓரளவிற்கு பரவியது. அதே ஆண்டில் கோடைக் காலத்தில் அப்பண்ணையில் சுமார் 2 எக்கர் நிலத்தில் விளைந்துவந்த டெய்ச்சுங் நெடிவ் 1 பயிருக்கும் இந்த நோய் பரவியது.

1967 அக்டோபரில், தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர் அழிவு நோயால் பாதிக்கப்பட்டது குறித்து வேளாண்மைத் துறை இயக்குநரின்நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் உடனடியாக கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தின் செடிப்பிணியியல் பேராசிரியரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்குச் சென்று பார்வையிட்டு சிறப்பு அறிக்கை ஒன்றை அனுப்புமாறு கட்டளையிட்டார். தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்நோய் மிகச் சொற்ப அளவிலேயே பரவியிருந்ததாகவும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏ.டி.டி. 27 நெல் ரகம் ஓரளவிற்கு இந் நோயால் பாதிக்கப்பட்டதென்றும், டி.என். 1 அல்லது ஐ.ஆர். 8 நெல் ரகங்கள் விளைந்த பகுதிகளிலிருந்து எந்தப் பயிர்களுக்காக விதைகளை பெறப்பட்டுள்ளனவோ அவை இந்நோயால் இன்னும் சிறிது அதிகமாக பாதிக்கப்பட்டன என்றும் அவரது அறிக்கையிலிருந்து தெரியவந்தது. அதே நேரத்தில் தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் நெற்பயிர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும் வேளாண்மைத் துறை இயக்குநரின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த மூன்று மாவட்டங்களிலும் மொத்தத்தில் சுமார் 200 எக்கர் பரப்பளவு பாதிக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டது. மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் அனைவருக்கும் வேளாண்மைத் துறை இயக்குநர் 1967 நவம்பரில் கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார் :—

(1) நோயால் பாதிக்கப்பட்ட பயிர்கள் மீது ஸ்டிரெப்டோ சைக்ளின் மருந்தைத் தெளித்தல்.

(2) இந்நோயால் பாதிக்கப்பட்ட பயிர்களிலிருந்து கிடைக்கும் விதைகளை விதைப்புக் காரியங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது.

(3) இந்நோயால் பாதிக்கப்பட்ட நெல்லில் இருக்கக்கூடிய நுண்ணுயிர்களைக் கொல்லும்பொருட்டு, அவற்றைப் பயன்படுத்துவதற்குமுன் கொதி நீரில் போட்டுப் புழுங்கவைத்துப் பயன்படுத்தும்படி ஆலோசனை கூறவேண்டும்.

(4) இந்நோயால் பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படுகிற நிலங்களில் மற்றொரு நெற்பயிர் குறைந்தது இரண்டு திங்களுக்காவது விளைவிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்ற ஆலோசனை கூறவேண்டும். ஆடுதுறையிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையில், நோயற்ற விதைகள் உற்பத்தியை உறுதிப்படுத்தும்பொருட்டு ஏ.டி.டி. 27 மூலவிதை உற்பத்தியைத் தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டையிலுள்ள அரசாங்க விதைப் பண்ணைக்கு மாற்றுவதென்ற முடிவு செய்யப்பட்டது. மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆடுதுறையிலும் கோயம்புத்தூரிலும் உள்ள ஏ.டி.டி. 27 ரக விதைகள் அனைத்தையும் கோயம்புத்தூரிலுள்ள பூஞ்சக்காளான் ஆய்வு வல்லுநருக்கு (Mycologist) அனுப்பவேண்டுமென்று கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டன. விதைப்புக் காரியங்களுக்காக நோய்கண்ட விதைகள் வழங்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவை நோயால் பாதிக்கப்படாமல் உள்ளனவா என்பதை அவர் சோதித்துப் பார்ப்பார்.

டி.என். 1,ஐ.ஆர். 8, .ஏடி.டி. 27 போன்ற ரக நெற்பயிர்கள் இந்நோயால் பெருமளவிற்கு பாதிக்கப்படுகின்றன. மழை, புயல், நீர்த் தேக்கமடைதல் ஆகியவை இந்நோய் பரவுவதற்கு ஏற்ற நிலைமைகளை உண்டாக்குகின்றன. எனவே, இந்த வகை நெற்பயிர்களை வடகிழக்குப் பருவமழைக் காலத்தினை போது பயிரிட வேண்டாமென்று வேளாண்மைத் துறை ஆலோசனை கூறி வருகின்றது. சிறப்பாக, தஞ்சாவூர் மாவட்டம்

கழிமுகப் பகுதியிலுள்ள கடற்கரைப் பகுதிகளில் இந்நோய் பீடிப்பதற்கான கால நிலைமைகள் சாதகமாய் இருக்கின்றன. தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் இந்நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1—12—1967 அன்று நான் சென்று பார்த்தேன். மேலும் வேளாண்மைத் துறை இயக்குநர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சி தலைவர்கள், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியின் முதல்வர் , அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைக் கல்லூரி முதல்வர், சம்பந்தப்பட்ட ஏனைய தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர்களுடனும் தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்ட உயர்மட்ட விவாதங்களின்போது நானும் இது குறித்து விசாரித்தேன். நிலைமை மிக மோசமடைந்துவிடவில்லை என்றும், இந்நோயால் பாதிக்கப்பட்ட பரப்பளவு 3,000 எக்கருக்குக் குறைவாக இருப்பதாக எதிர்பார்க்கப்பட்டது என்றும், இந்நோயை ஒழிக்க வேளாண்மைத் துறை போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டது என்றும் அறிவிக்கப்பட்டது. டி.என். 1 ரக நெற்பயிரை இந்நோய் எளிதில் பாதிக்கும் என்ற காரணத்தால் இம் மாநிலத்தில் அந்த ரக நெற்பயிர் விளைச்சலை அறவே நிறுத்த வேண்டுமென்று அப்போது முடிவு செய்யப்பட்டது. டி.என். 1 ரகத்தைக் காட்டிலும் ஓரளவே இந்நோயால் பாதிக்கப்படக்கூடிய ஐ.ஆர் 8 ரக நெற்பயிர் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கழிமுகப் பகுதிகளில் விளைவிக்கப்படுவதை ஊக்குவிக்காமல் இருப்பது எனவும், வடிகால் வசதிகள் சிறப்பான முறையில் அமைந்துள்ள பிற பகுதிகளில் மட்டும் அது பயிரிடப்படுவதை வரையறுக்க வேண்டுமெனவும் அதுவும் நவரைப் பருவத்திலும், முன் சொர்ணவாரிப் பருவத்திலும் மட்டுமே அதைப் பயிரிட அனுமதிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. சரியான வடிகால் வசதிகள் இல்லாத நிலங்களில் பயிரிடுவதை ஊக்குவிக்காமல் இருக்குமாறும், நோயற்ற விதைகளை வழங்குவது மூலம் இந் நோயைக் கட்டுப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாவட்டப் பணியாளர்கள் வேண்டப்பட்டனர். மேலும் விதைகளை வெந்நீரில் போட்டு எடுத்தல், பயிர்கள் மீது ஸ்டிரப்போ சைக்ளின் முதலிய மருந்துகளைத் தெளித்தல் போன்ற முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்யும்படி உழவர்களுக்கு மாவட்டப் பணியாளர்கள் அறிவுறுத்த வேண்டும். இவற்றைத் தவிர, அழிவு நோயும் கருகல் நோயும் எளிதில் பாதிக்காத வகைகளை வளர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேளாண்மைத் துறையாளரும் வேண்டப்படுகின்றனர்.

ஆடுதுறையிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1968 குறுவைப் பருவத்தில் எல்லா ரக நெற்பயிர்களுக்கும் சில பகுதிகளில் இந்நோய் பரவி இருப்பதாகத் தெரியவந்தது. மொத்தம் 1·40 எக்கர் பரப்பளவு பாதிக்கப்பட்டது. சம்பாப் பருவத்தில் நிழலின் கீழ் உள்ள இடங்களில் மட்டுமே இந்த நோய் காணப்பட்டது. இந்த நோயின் கடுமை மிகச் சொற்பமாகவே இருந்தது. தாளடிப் பயிரைப் பொறுத்த வரையில் இக்கருகல் நோய் ஏற்படவேயில்லை.

இந்தநோய் பரவாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஏனைய அரசு விதைப் பண்ணைகளுக்குத் தக்கவாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது. இந்த நோய் மேற்கொண்டு பரவுவதை தவிர்க்கும் பொருட்டு, அரசாங்க விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் முதல் நிலை விதைகளில் இந்த நோயின் அறிகுறிகள் ஓரளவு காணப்பட்டாலும் கூட, விதைப்புக் காரியங்களுக்காக அவை உழவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் துறையினர் வழங்கும் விதைகள் குறித்துச் சிறிது ஐயம் கூட ஏற்படாமலிருக்க வகை செய்யப்பட்டது.

புதிய நச்சுமுறிவு மருந்துகளுடனும், மண் சேர்க்கைகளுடனும் விதைகளையும் பயிர்களையும் பக்குவப்படுத்தும் முறைகளுடனும் பயிர் அழிவு நோயைக் கட்டுப்படுத்த ஆடுதுறையிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலை

யத்தில் பரிசோதனைகள் நடந்தேறி வருகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே வழி இந்நோய் எளிதில் பாதிக்காத பயிர் வகைகளை விளைவிப்பதேயாகும் என்று பசிசோதனைகள் மூலம் தெரிய வருகின்றது. எனவே, பயிர்களின் நோய் எளிதில் பாதிக்காத அரிசி ரகங்களை மேம்படுத்துவதற்கென ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகம் ஆலோசித்து வருகிறது.

தஞ்சாவூர் கழிமுகப் பகுதிகளில், இக்கருகல் நோயின் கடுமை குறித்து ஆய்வு செய்ய அந்நோயைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் குறித்து ஆலோசனைகள் கூற ஃபோர்டு நிறுவன உதவியுடன் பெரிய அறிவியல் வல்லுநர்களின் உயர் நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த வல்லுநர்கள் இதுவரை தஞ்சாவூர்க் கழிமுகப் பகுதிக்கு மூன்று முறைச் சென்று பார்த்தனர். எல்லா ரகங்களிலும் இந்த நோய் கண்டிருந்ததாகவும், ஆனால் அந்த நோய் அவற்றை ஓரளவிற்கே பாதித்ததாயும் அக்குழு கூறியது. மிக பயன்தரும் தானிய ரகங்களைப் பொறுத்த வரையில், பரிவுரை செய்த அளவிற்கு மேற்பட்டு நைட்ரஜன் பயன்படுத்தல், ஒரே ரகத்தை இருமுறை பயிரிடுதல், அதாவது ஐ.ஆர். 8 ரகத்தைப் பயிரிட்டபின் மீண்டும் ஐ.ஆர். 8 ரகத்தையே பயிரிடுதல் மிகக் குறைவான மழை ஆகியவை இந் நோய்க்கான காரணங்களில் சில ஆகும்.

இக் குழுவின் விவரமான அறிக்கையும் அதன் பரிவுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

DR. H. V. HANDE : Sir, how are the seeds which are already affected by this Blight disposed of?

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி : பரிசோதனைக்குப் பிறகு, அது நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில் அதைக் கொடுக்காமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். விளைந்த பகுதியில் கூட, இந்த நோய் கண்டிருப்பதை நேரடியாகப் பார்த்த நேரத்தில், அந்த நோய் துரிதமாகப் பரவக்கூடியது, மற்ற இடங்களுக்கும் பரவக்கூடியது என்பதை உணர்ந்து பாதிக்கப்பட்ட பயிரையே கொளுத்தும்படியாகக் கூட செய்யப்பட்டது.

(இ) பல்லடம் தொகுதியில் பருவ மழையின்மையும் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தலும்

திரு. கே. எஸ். குமாரசாமி : தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதியில் பருவ மழை தவறியதின் காரணமாக கிணறுகளில் தண்ணீர் வரண்டு, குடிநீர் இல்லாமல், சொந்தக் கிணறுகள் உள்ளவர்களிடம் பணம் கொடுத்து வாங்க வேண்டியுள்ளதால், பஞ்சாயத்துக் கிணறுகளையும் ஹரிஜனக் கிணறுகளையும் ஆழப்படுத்த வேண்டிய அவசிய அவசர பொது முக்கியமான காரியத்தைக் மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர்அவர்களே, கடந்த மூன்றாண்டுகளாக, கோவை மாவட்டத்தில் பருவ மழை தவறியது குறித்து அவ்வப்போது அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக, மாவட்டம் முழுவதிலும் நிலத்திற்கடியில் உள்ள நீர் மட்டம் கணிசமான அளவிற்குக் கீழே சென்றுவிட்டது. குடிநீர்க் கிணறுகள் பல வற்றிவிட்டன. என்றும் அறிவிக்கப்பட்டது. எனவே இக்கிணறுகள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருந்தது. 1967-68-ம் ஆண்டில் இப்பணிகளுக்காக இம்மாவட்டத்திற்கு அரசு ரூ. 22,12,500 ஒதுக்கியது. அரிசனக் குடியிருப்புகளில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும், ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1968 ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சீர்கேடான பருவ நிலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக மேலும் ரூ. 6 லட்சம் அனுமதிக்கப்பட்டது.

பெரும்பாலான குடிநீர்க் கிணறுகள் வற்றிவிட்ட காரணத்தால் குடிநீர் வசதி அளிக்கும் அவசரத் தேவையை வலியுறுத்தி 1969, பிப்ரவரியில் பொது மக்களிடம் இருந்து முறையீடுகள் வந்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிற்குத் தெரிவித்தார். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியைப் பெருமளவில் மேற்கொண்டுள்ளன என்றும் 31-12-1968 வரையில் அவை ரூ. 21,23,208-ஐ செலவிட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். சீர்கேடான பருவ நிலையினால், பல்லடம், சூலூர் ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய பல்லடம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 1,57,688 செலவிடப்பட்டுள்ளது. இந்த நெருக்கடி நிலையைத் தீர்க்க மேலும் ரூ. 8,00,000 ஒதுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரும், நில வருவாய்த் துறை ஆணையாளரும் பரிந்துரைத்துள்ளமையால், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, கோவை மாவட்டத்திற்கு ரூ. 8,00,000 மானியம் வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதை கொடுத்தாலே அப்பகுதிக்கு நிதியும் கிடைக்கும், நிலைமையும் விரைவில் சீரடையும்.

திரு கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் கிணறுகள் வெட்டியும் தண்ணீர் கிடைக்கவில்லை. போர்வெல் வைத்து 200 அடி, 250 அடி ஆழம் எடுத்தால்தான் தண்ணீர் கிடைக்கும். இதனால் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் போர்வெல் போட அதிக நிதி பொறுப்பாகிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களின் நிதிப் பொறுப்பைச் சரிக்கட்ட, அரசாங்கம் அதிகமான அளவில் பணம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் மேல்தான் இது செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தக்க விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்தால், உடனடியாக அரசாங்கம் ஆவன செய்யும்.

6. 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (கடைசி நாள்) நடைபெறும். முதலில் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுவார்கள்.

***திரு ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ள 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது இரண்டொரு கருத்துக்களைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (இந்த மன்றத்தின் முன்பு வைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரி இல்லையென்பது நாடு முழுவதும் மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு முக்கியமான அம்சமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மூன்றாவது பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறது. இந்த மூன்றாவது வரவு-செலவுத் திட்டத்திலும் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து புதிய வரிகள் எதுவும் இல்லாமலேயே நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது சென்னை ராஜ்ய அரசின் வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கி வைத்திருக்கிறது. புதிய வரிகள் இல்லாத நிலைமையிலும், சமுதாயத்தின் அடித்தளத்திலே உழலுகின்ற சாமானிய, தாழ்த்தப்பட்ட, அமுத்தப்பட்ட பிற்பட்ட மக்கள் நலன் அடையக்

கூடிய சலுகைகளை, வசதிகளை அடையக்கூடிய நிலைமையிலும் இந்த பட்ஜெட்டை வழங்கியிருப்பதைப் பார்க்கிறேன். இந்தச் சிறந்த அம்சங்களுக்காக இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.)

மேலே செல்லுவதற்கு முன்னால், புதிய அமைச்சரவைக்கு என்னுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, என்னுடைய வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். புதிய அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பை கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்—ஒரு பெரிய சோதனை மிக்க நேரத்திலே தேசம் எங்கும் ஒரு வினாக்குறியை எழுப்பிய நேரத்திலே ஏற்றிருக்கிறார்கள். அவருடைய தலைமை வெற்றி பெற வேண்டும்—அவருடைய தலைமை நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டு செல்வதாக அமைய வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், " நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் ; பிற்பட்ட வகுப்பினர் நன்மைகள் அடையச் செய்வேன் " என்று குறிப்பிட்டுப் பேசினார். நான் இன்னும் கொஞ்சம் மேலே சென்று, " பிற்பட்ட வகுப்பு என்பதை பிறப்பையொட்டி எடுத்துக்கொள்ளாமல், வாழ்க்கை நிலையையொட்டி எடுத்துக்கொள்ள வேண்டும் " என்று கூற விரும்புகிறேன். தமிழ் மொழியிலே புலமை பெற்றவர்கள் மிக மிகப் பிற்பட்டவர்களாவர். பல்கலைக் கழகத்திலே படித்துப் பட்டம் பெறாத நிலையில் கலைஞர் கருணாநிதி அவர்கள் இன்றைய தினம் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய வெற்றி தமிழுக்குக் கிடைத்த வெற்றி, பல்கலைக் கழகப் பட்டம் இல்லாமலே, தமிழ் மொழியை மட்டுமே அறிந்தவருக்குக் கிடைத்த வெற்றி என்று கருதுகிறேன். பிற மொழி அறியாமல் தமிழ் மொழி மட்டுமே அறிந்த "மிக மிகப் பிற்பட்டவர்களில்" நானும் ஒருவன். ஆகவே, என் 'சாதியின'ரான கலைஞர் கருணாநிதி அவர்கள் வெற்றி அடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். புலவர் பீர் முஹம்மது அவர்கள் தன்னையும் சேர்த்துக்கொள்ளும்படிக் கூறுகிறார். அவருக்கும் சொல்லிக்கொள்ளுகிறேன், " நம்மைப் போன்றவர்கள் நிறைய இருக்கிறார்கள் " என்று.

மற்றொன்று. வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரி இல்லையென்பது மகிழ்ச்சிக்குரியது அன்று. வருவாயைப் பெருக்குவதற்கு வழியில்லை என்றால், மேலும் பல வசதிகளை மக்களுக்குச் கொடுப்பதற்கும் வழிவகை இல்லாது போகிறது. 'மக்களுக்கு வசதி ஒன்றும் மேலும்தேவையில்லை; அதனால்தான் வரி போடவில்லை' என்று சொல்லக்கூடிய தன்மையில் இந்த நிதி நிலை அறிக்கை அமையவில்லை. என்னென்ன அம்சங்களுக்கு, என்னென்ன இனங்களுக்கு எவ்வளவு அதிகமாக வரி போட வேண்டுமோ, அவ்வளவும் போட்டு முடித்துவிட்டார்கள், 20 ஆண்டு காலம் இந்த மாநிலத்தை ஆண்டு வந்தவர்கள். ராஜ்ய அதிகாரத்தின் எல்லைக்குள் போடவேண்டிய அளவுக்கு எல்லா வரிகளையும் போட்டுவிட்டார்கள். புதியதாகப் போடக்கூடிய அம்சம் ஒன்றும் இல்லை. இருக்கிற வரிகளை உயர்த்தினாலும் மக்கள் அதைத் தாங்க முடியாது. ராஜ்ய அரசு வரி போடாததால், இந்த ராஜ்யத்திலுள்ள மக்கள் வரிக் கஷ்டத்திலிருந்து தப்பிவிடவில்லை. மத்திய அரசு புதிய வரிகள் போட்டிருப்பதால், மக்கள் வரிப் பளுவிலிருந்து ஒன்றும் தப்பிவிட முடியவில்லை. மொத்தத்தில் நோக்குகிறபோது, தன்னுடைய நிதி நிலைக்கு, தமிழக அரசு, மத்திய அரசையே நம்பியிருக்கிறது என்றுதான் பொருள் ஏற்படுகிறது.

இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் 42 பக்கங்களையும் பார்த்தேன். பக்கத்திற்குப் பக்கம், பாராவிற்குப் பாரா, வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை—பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது ஒரு அசல் பட்ஜெட் அல்ல, டெல்லியில் சமர்ப்பித்த அசல் பட்ஜெட்டுக்கு இது ஒரு " உப பட்ஜெட் " போலத்தான் அமைந்திருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எல்லா மாநிலங்களும் அப்படித்தான் அமைந்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டுமல்ல ; காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களிலும் இந்த நிலைதான். முன்பு இந்த மாநிலத்தின் ஆட்சியில் இருந்தவர்களுக்கும் இதே நிலைதான். அவர்கள் ஏதோ சகித்துக்கொண்டார்கள்—பொறுத்துக்கொண்டார்கள், கட்சிக் கட்டுப்பாடு காரணமாக! மத்திய சர்க்காருடைய செயல்களை எல்லாம் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை, பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை; எதிர்த்துப் புரட்சி செய்யும் கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

இந்தப் பட்ஜெட்டிலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக்காட்டுகின்ற தன்மையில் ஒன்றை மட்டும் அமைச்சரவைக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மூன்று ஆண்டுகளாக நாம் என்ன செய்து வருகிறோம் ? இங்கொரு வசதி, அங்கொரு வசதி; இங்கொரு சலுகை, அங்கொரு சலுகை என்ற அளவில்தான் மக்களுக்கு நன்மை செய்துவருகிறோம். இதற்கு மேல் காங்கிரஸ் ஆட்சியைவிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்து விட்டது. சாமானிய மக்களின்—சமுதாய அடித்தளத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றிவிடக்கூடிய புரட்சி வேகத்தில் நாம் என்ன செய்திருக்கிறோம் ? முன்பு ஆட்சி செய்தவர்கள் அரைக்கால்வாசி கொடுத்தார்கள் என்றால், நாம் அந்த இடத்தில் கால்வாசி கொடுத்திருக்கிறோம். நாம் இன்னமும் முழுவாசி கொடுக்கவில்லை. நம்மிடம் மக்களுக்கு நல்லன செய்ய வேண்டுமென்ற மனம் இருக்கிறது—திட்டம் இருக்கிறது—தேர்தல் பிரகடனம் இருக்கிறது. ஆனால், கையிலேதான் காசு இல்லை. இந்த நிலைமையே இன்னும் இரண்டு பட்ஜெட்டுகளில் நீடிக்குமானால், அடுத்து வரும் **1972**-லே நாம் மக்கள் முன்பு தலைநிமிர்ந்து நிற்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஆளும் கட்சியிலுள்ளவர்களும் உணருகிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் மத்திய அரசிடமிருந்து எப்படி நிதி உதவிகளைப் பெற வேண்டும் என்பதைப் பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஏதாவது வழிவகை எடுத்துக் காட்டினார்களா—என்று பார்த்தால், ஒன்றும் இல்லையென்றே தோன்றுகிறது. கொடுத்திருக்கிற **42** பக்கங்களுடைய நிதி நிலை அறிக்கையில், **21** பக்கங்களில் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நிதி நிலை உறவிலுள்ள சிக்கல்களை, சீர்கேடுகளை நிதியமைச்சர் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், அவற்றை நீக்க லட்சிய ரீதியில் எதுவும் அவரிடம் இல்லைபோல் தோற்றமளிக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட்டிலாவது " மாநிலம் சுயாட்சி அடைய வேண்டும் " என்ற தத்துவத்தையாவது எடுத்துச் சொன்னார்கள். தி.மு.க. தேர்தல் பிரகடனத்திலும் அதைத் தெளிவுபடுத்தியிருந்தார்கள். என்னுடைய வருத்தமெல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையில் அத்தகைய வாசகம் எதுவுமே இடம் பெறாமல் இருக்கிறதே என்பதுதான். முதல் பட்ஜெட்டில் அண்ணா குறிப்பிட்டதும் மன்ற உறுப்பினர்களின் நினைவிலிருக்கும். ஆகவே, மீண்டும் அப்படிப்பட்ட ஒரு வாசகத்தைப் போட்டு இடத்தை வீணாக்க வேண்டாமென்று நினைத்துவிட்டார்களோ என்னவோ ! அதற்கு நிதியமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

(ஏழைகளின் தேவைகளை நினைக்கிறபோது — அவர்களுக்கு முதல் தரமான மருத்துவ வசதி கிடையாது ; குடியிருப்பு வசதி கிடையாது ;
மு.ப. 10-30 சென்னை நகரை எடுத்துக் கொண்டால், **25** ஆயிரம் குடும்பங்கள் சென்னை நகர ப்ளாட்பாரத்திலேயே வாழ்க்கை நடத்துகின்றன. நகரைச் சுற்றிப் பார்த்தால் தெரியும்—அவர்கள் குடியிருக்க வீட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறோமா ? அவர்கள், மறைந்து வாழ என்றைக்கு குடிசையேதும் கொடுக்கிறோமோ, அன்றைக்குத் தான் சமுதாய வாழ்வில் நாம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைச் செய்தவர்களாக ஆவோம். வீதிச் சுவர்களிலே சினிமா போஸ்டர்களை ஒன்றின் மேலே ஒன்றாக ஒட்ட—அதை ப்ளேட் போட்டு நறுக்கி எடுத்து, அதனைக் கூரையாகக் கொண்டு, குடும்பம் நடத்துகிற அவல நிலையைத் தான் நாம் பார்க்கிறோம். அவர்களது

வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதலைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் கோடிக் கணக்கான ரூபாய்கள் குவிய வேண்டும். பண வசதி கிடைத்தாலொழிய ஒன்றும் செய்ய முடியாது.)

நாம் புது வரி எதுவும் போடவில்லை. ஆயினும், பரிசுச் சீட்டு ஒரு மறைமுகமான வரி என்ற கருத்து நாட்டில் இருக்கத்தான் செய்கிறது. சில கோடி ரூபாய் அதன் மூலம் கிடைத்திருக்கிறது. சில கோடி அதன் மூலம் கிடைத்ததால்தான் மக்களுக்கு வரி போடவில்லை. நம்முடைய பற்றாக்குறையை சரிக்கட்ட நாம் மத்திய அரசிடம் இருந்து நிதி உதவி பெறவேண்டும். அப்படிப் பெறவில்லை. பரிசுச் சீட்டு மூலம் நம் மாநில மக்களிடம் இருந்தே சில கோடி பெறுகிறோம். வெல்லப் பிள்ளையாரின் பின்பக்கம் பிட்டு முன்பக்கம் வைத்து நிவேதனம் செய்வதைப் போலத்தான் இது இருக்கிறது. இதைத் தெளிவாக எடுத்து மத்திய அமைச்சரவைக்குச் சொல்ல வேண்டும். பிரதமர் இங்கே வந்தபோது, சொன்னார்கள், "மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நல்ல உறவு இருக்கிறது" என்று. இதையே பாராளு மன்றத்திலும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை அவர் நம்மைக் கேலி செய்கிறாரோ என்கிற ஐயம் எனக்கு இருக்கிறது. அவர்கள் சொல்வதற்கு எல்லாம் ஒத்துக்கொண்டு போகிறோம் ; அதனால் தமிழ்நாட்டுக்கும் மத்திய அரசுக்கும் நல்ல உறவு இருக்கிறது என்கிறார்களா ? அல்லது நம் தேவை எல்லாவற்றையும் மத்திய அரசினர் பூர்த்தி செய்து வருகிறார்கள், அதனால் உறவு நன்றாக இருக்கிறது என்று சொல்கிறார்களா ?—என்பது புரியவில்லை. நம்முடைய தேவைகளை மத்திய அரசு பூர்த்தி செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த நிலையில் நல்லுறவு இருப்பதாகச் சொல்ல முடியாது. 'அடித்தாலும் பிடித்தாலும் நீ தான்' என்கிற நிலையில் தமிழக அரசு காலந் தள்ளிக்கொண்டு போகிறது, அதனால் உறவு நன்றாக இருக்கிறது என்று நினைக்கிறார்களோ என்று நினைக்கிறேன்.

நமது முதல் அமைச்சர் அவர்கள், தமக்கே உள்ள புலமையினால், "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று சொன்னார்கள். உறவுக்குக் கை கொடுக்க பிரதமர் அவர்களும் காத்து இருக்கிறார்கள். ஆனால், உரிமைக் குரலுக்குக் காது கொடுக்கத் தயாராய் இல்லை என்று பிரதமரே பாராளு மன்றத்தில் சொல்லி விட்டார்கள். அரசியல் சட்டம் **263**-வது விதி இருக்கிறதே, அதன்கீழ் மாநில அரசுகளின் நிதி வசதி பெருக வழிவகை காண ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று நாடாளு மன்றத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் கேட்டார்கள். அந்த **263**-வது விதியைப் பயன்படுத்தி கமிட்டி அமைக்கத் தயாராய் இல்லை என்று பிரதமர் கூறிவிட்டார்கள். முதலமைச்சராக இருந்த நமது அண்ணா அவர்களும் தமது முதல் பட்ஜெட்டில், **2**-வது பட்ஜெட்டில், அரசமைப்பு **263** விதிப்படி கமிட்டி அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதற்கு பதில் அளிப்பது போல, கமிட்டி அமைக்கத் தேவையில்லையென்று பிரதமர் சொல்லிவிட்டார்கள் என்றால், உரிமைக்குக் காது கொடுக்கத் தயாராக இல்லை என்று சொல்லியாகிவிட்டது என்றுதான் பொருள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து தமிழக அரசின் நிலைமை என்ன என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆலோசிக்க வேண்டும். இனி, **263**-வது விதியைத் திருத்துவது போதாது ; சில சலுகைகளை — சில வசதிகளைக் கொடுப்பதாக இருந்தாலும் போதாது. மாநில சுயாட்சியே கொடுத்துத் தீர வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தாக வேண்டும். பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உறவு ஆகிய மூன்று துறை நீங்கலாக எஞ்சியுள்ள எல்லாத் துறைகளும் மாநிலங்களின் முழு உரிமையாக்கப்படவேண்டும்—என்கிற அளவில் அரசியல் சட்டத்திற்கு திருத்தம் காண மத்திய அரசுக்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுத்துகிற முறையில் நாம் செயல்பட்டாகவேண்டும். அல்லாத நிலையில் மத்திய ஆட்சியை அசைக்க முடியாது. வெள்ளையர் சாம்ராஜ்யம் இருந்த இடத்தில்

1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்

நம்மவர் சாம்ராஜ்யம் இருக்கிறது. சுயாட்சி கோரும் ஒரு உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தை நானே கொடுக்க முடியும். வேறு தோழமைக் கட்சியும் கொடுக்கலாம். நல்லவர்களாக இருந்தால், எதிர்க்கட்சியான காங்கிரஸில் இருந்தே கொண்டுவரலாம். ஆயினும், அதிகாரபூர்வமாக முதல் அமைச்சரே பிரேரேபித்தால்தான் மத்திய அரசின் கவனத்தைக்கவரும். மிக விரைவில் அப்படியொரு தீர்மானம் கொண்டுவர முதல்வர் முயலவேண்டும்.)

மத்திய அரசு தானுகவே 263-வது விதிப்படி ஒரு கமிட்டியை அமைத்து மாநில அரசுகளுக்குப் போதுமான நிதிவசதியைச் செய்து கொடுக்கும் என்கிற நம்பிக்கை இல்லை. அதிக நிதி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது, " நாங்களும் கொடுக்கத் தான் நினைக்கிறோம், ஆனால் எங்களிடமும் நிதி வசதி இல்லை " என்கிறார்கள். என் அவர்களிடத்தில் நிதி வசதி இல்லாமல் போய் விட்டது ? இங்கு ஒரு கல்வி இலாக்கா, அங்கு ஒரு கல்வி இலாக்கா ; இங்கு ஒரு மராமத்து இலாக்கா, அங்கு ஒரு மராமத்து இலாக்கா " இங்கு ஒரு சுகாதார இலாக்கா, அங்கு ஒரு சுகாதார இலாக்கா—இப்படி, ஒரு இரட்டை ஆட்சி முறை எதற்காக ? வேலையைப் பகிர்ந்துகொள்கிறார்கள் என்றால், சரி ; கடமையில் பங்கு கொள்கிறார்கள் என்றால் சரி ; செலவில் பங்கு கொள்கிறார்கள் என்றால், சரி ; ஆனால், எஜமானத்துவத்தைக் காட்டிக்கொள்வதற்காக, இங்கிருந்து அனுப்பப் படும் பைல்களில் அங்கிகார முத்திரை போட்டு அனுப்ப இத்தகைய இலாக்காக்கள் டில்லியிலும் தேவையா ? இதற்காக, 1,500 மைல்கள் பைல்கள் போய்வரவேண்டியிருக்கிறது. இதன் விளைவு என்ன ? இங்கே ரெட் டேபிஸம் என்ற முறையில் காலதாமதமாகிறது. உடனடியாகச் செய்யப் படவேண்டிய காரியங்களை அப்படிச் செய்ய முடிவதில்லை. உடனடியாக விரைவில் செய்கிற காரியங்களில் செலவு குறையும் என்றால், அந்த வசதியும் அடிபடுகிறது. இங்கிருந்து பைல்கள் டில்லிக்குப் போய்வருவதில் என்ன பலனைக் கண்டுவிட்டோம் ? அரசியல் சட்டத்தை உடனடியாகத் திருத்தக்கூட வேண்டாம்—' ஜெண்டில்மென்ஸ் அக்ரிமெண்டு" என்கிற முறையில் கூட்டுப் பட்டியலிலுள்ள அதிகாரங்களுக்கான பைல்களை அங்கீகாரத்திற்காக டில்லிக்கு அனுப்பவேண்டாம் என்கிற உடன்பாட்டிற்காவது அவர்கள் வந்தால், நமக்குச் செலவு குறையும். நேரம் மிச்சமாகும். நான் அரசியல் நிபுணர்களைக் கலந்துகொண்டு தான் இதனைச் சொல்கிறேன். அரசியல் சட்டத்தைத் திருத்தாமலே கூட இந்த உடன்பாட்டுக்காவது வந்தாக வேண்டும் என்று மத்திய அரசை நமது முதல்வர் வற்புறுத்தியாகவேண்டும்.

ஜனநாயகத்திற்கே கூட இது நல்லது. இதில் கட்சிச் சண்டை இல்லை. இது, கட்சிப் பிரச்சினையும் அல்ல. மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என்றால், காங்கிரஸ் கட்சியிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. காரணம், மத்திய ஆட்சியைப் பிடித்துக் கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சி தானே ! மாநிலத்தில் காங்கிரஸ் அல்லாத கட்சி ஆட்சிக்கு வருகிறபோது, அதற்குக் கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து அந்த அரசு நல்ல பெயர் வாங்கிக்கொண்டுபோக, மத்திய காங்கிரசினர் விரும்ப மாட்டார்கள். அவர்கள் ஏமாந்தவர்கள் அல்ல.

இன்றைக்கு என்ன நிலை ? பீகாரில், பஞ்சாபில், உத்தரப்பிர தேசத்தில் காங்கிரசுக்குத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்றால், உடனே காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி கவலைப்பட்டால் பொருள் உண்டு. அதனைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், மத்திய அமைச்சரவை கூடி கவலைப் பட்டார்கள் என்று செய்தி வருகிறது. எந்தக் கட்சி மாநிலங்களில் அதிகாரத்தில் இருந்தால் என்ன? மத்திய அமைச்சரவைக்கு அது பற்றி என்ன கவலை ? இவர்கள், காங்கிரஸ் அல்லாத கட்சி மாநிலத் தில் ஏற்படுகிறபோது, எல்லாவகையிலும் உதவி செய்து அவர்கள் நல்ல பெயர் எடுக்க உதவியாக இருப்பார்கள் என்று எண்ண வேண்டாம். இன்னொன்றும் இருக்கிறது. இன்றைக்கு மத்திய ஆட்சி

காலையே நான் போராட்டம் செய்ய முற்...
கொள்கையில் நல்ல உடன்பாடு இருந்தாலு...
நாங்கள் எதிர்க்கும்போது நீங்கள் அடக்குமு...
வேண்டிய நிலைமையிலே இருப்பதால், நாடு ...த மாதிரி இனி விவசாயிகள்
நினைக்கும் ? நீங்கள் கொள்கை மாறிவிட்டீர்களே...இருப்பதே போதும், இனி
உங்களைச் சந்தேகிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட... பின்னால் ... பில்
கான்ஸ்டிட்யூஷனிலே உள்ளபடி மத்திய ஆட்சி ஒரு கட்சியான ஆட்...
காரங்களை நாம் பெற வேண்டும். கவலை...பாது, மத்தியில் அதிகாரங்
"அண்ணா அவர்கள் வில் எழுதி ... விளையாது. இன்றைக்கு காங்கிரஸ்
விஷயத்திற்காக என்றாலும்கூட...ளைக்கு வேறு ஒரு கட்சியும் செய்யக்கூடும்.
பத்திரிகையான ஹோம்... கழகம் அகில இந்தியக் கட்சி அல்ல. ஆகவே,
சுயாட்சியைப் பற்றிப்...களுக்கு இடையில் எப்படியும் சிக்குண்டே தான் தீரும்.
வேலை தம்பி "...விட முன்னேற்றக் கழக ஆட்சி சுயாட்சிக்காக இன்றைக்கே
வில்லை நாம்...வான கொள்கையை வகுத்தாக வேண்டும். சேலம் இரும்பாலைக்
கூடாது., தூத்துக்குடி திட்டத்திற்காக எழுச்சி நாள் கொண்டாடியதைப்
அவ்வாலே, மாநில சுயாட்சி பெறவும் ஒரு எழுச்சி நாளைக் கொண்டாட
வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன். (ஓரிரு உறுப்பினர்களின் பாராட்டொலி.))

நான் சொல்வதனாலே இந்த நிலை போலும் ! நான் என்ன இருந்தாலும் அந்நியன் தானே. அதிகக் கைதட்டு விழாதிருக்க நியாயம் இருக்கிறது. என் கட்சிக்கு நான் ஒருவனாக இங்கு இருந்தாலும், $3\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களின் பிரச்சினையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு மாநில அரசும் இன்றைக்கு அனுபவிக்கிற நிலையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். வங்காளத்தில் என்ன நடக்கிறது ? கேரளாவில் நாளை என்ன நடக்கப்போகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தான் அந்நியன் என்று குறிப்பிட்டுக்கொண்டார்கள். திருத்திக்கொள்ளவேண்டும். அவர் எங்களுக்கு அந்நியோன்யர்.

திரு. ம. பொ. சிவஞானம் : அதை அவரே சொல்லட்டும் என்று விட்டுவிட்டேன். இது பதிவாகும் என்று நினைக்கிறேன்.

இந்த நிலையில் ஓர் உண்மையை நாம் பார்க்கவேண்டும். மத்திய ஆட்சியில் குவிந்துள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று திரு. இராமச்சந்திரன் பேசினார்கள். திரு. ஹாண்டே அவர்களும் பேசியதாக பத்திரிகையில் பார்த்தேன். கூடுமான வரையில் மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். இது விஷயத்தில் நமது முதல்வர் அவர்கள் கொஞ்சம் தீவிர வாதி. ஆனால் அவர் தம்மைவிட அண்ணாவே தீவிரவாதி என்று சொல்வார்கள். அண்ணாவைவிட இவர் அதி தீவிரவாதியாக விளங்குவதில் தவறு இல்லை.

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது "

என்பதைப் போல, முன்னவரைவிடப் பின்னவர் கொஞ்சம் தீவிரமாக இருப்பதிலே தவறொன்றுமில்லை. அதைப்பற்றிச் கூட மகிழ்ச்சியடைவார்கள். அவர்களுடைய ஆவியும்கூட அதை வாழ்த்தும். எனவே, முதலமைச்சர் அவர்கள் இதில் கொஞ்சம் தீவிரமாக இருக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இரட்டை ஆட்சி முறையைப் போக்குவதிலே நாம் இப்பொழுதே கவனம் செலுத்தவேண்டும். அதற்காக நாம் எடுத்துக்கொள்ளுகின்ற நடவடிக்கைகளைத் தோழமைக் கட்சிகள் வரவேற்கும். அதிலே அவர்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. காங்கிரஸ் கட்சியின், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் ... பாப்பாண்ணா அவர்களும் இதிலே கை கொடுப்பார்கள் என்பதிலே
...ல்லை . . . .

நம்மவர் சாம்ராஜ்யம் இருக்கிறது. சுயாட்சி கோரும் ஒரு உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தை நானே கொடுக்க முடியும். வேறு தோழமைக் கட்சியும் கொடுக்கலாம். நல்லவர்களாக இருந்தால், எதிர்க்கட்சியான காங்கிரஸில் இருந்தே கொண்டுவரலாம். ஆயினும், அதிகாரபூர்வமாக முதல் அமைச்சரே பிரேரேபித்தால்தான் மத்திய அரசின் ..க்கிருஷ்ணகர்ன்னவோ, மிக விரைவில் அப்படியொரு தீர்மானம் ..டைய தலையிலே வைத்தவிடும்.

..திட்டப்படி ஒரு கமிட்டியை

திரு. பி. ஜீ. கருத்திருமன் : ஆனும், நிதிவசதியைச் செய்து வழியாகப் போய்க்கொண்டிருக்கிறது. ..ண்டும் என்று ..ம், ஆனல் ..டத்தில்

திரு. ம. பொ. சிவஞானம் : பல வருடங்களுக்கு முன்பு .. பிரோஸ்பூர், ஹரியானு, திரிபுரா காங்கிரஸ் மகாசபைகளில் மே.. தீர்மானங்களை எடுத்துப்பார்க்கவேண்டும். அயல்நாட்டுறவு, பாதுகாப்பு, போக்குவரத்து இவை மூன்றையும்தான் மத்தியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 1935-ம் ஆண்டு சமஷ்டி அரசியல் சட்டத்தை காங்கிரஸ் நிராகரித்ததற்குக் காரணம் அதிலே அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டதுதான். அப்பொழுது, "அஸ்ஸாம் ஃபார் அஸ்ஸாமீஸ்" என்று அஸாமியர் குரல் கொடுத்தார்கள். அப்பொழுது, காந்தியடிகள் அதை ஒப்புக்கொண்டார்கள். ஆனல், இந்திய யூனியனுடன் சேர்ந்து இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் அதை ஒப்புக்கொண்டார்கள். இந்தியாவுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ, அவ்வளவு சுதந்திரம் அஸ்ஸாமிலேயும் இருக்கவேண்டுமென்ற கருத்தை அப்பொழுது காந்தியடிகள் தெரிவித்தார்கள். இப்படி நீண்ட நெடுங்காலமாகச் சொல்லி வந்த திட்டத்தை, காங்கிரசிலிருந்து நான் வந்துவிட்டாலுங்கூட, அல்லது துரத்தப்பட்டாலுங்கூட, மறக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் அதே கொள்கையைத்தான் சொல்லி வருகின்றார்கள். காங்கிரஸ் கட்சி அதற்குக் கைகொடுப்பதற்கு மாருக, அதைப் பெறுவதற்கு ஒத்துழைப்பதற்கு மாருக, எதிர்த்து சண்டைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது.

இந்த நேரத்திலே மதுரைச் சம்பவத்தைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இதுவரையில் எத்தனையோ போராட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியிருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சி நடத்தியிருக்கிறது. தமிழரசுக் கழகம் நடத்தியிருக்கிறது, சோஷலிஸ்டு பிரஜா சோஷலிஸ்டு கட்சிகள் நடத்தியிருக்கின்றன. ஆனல், நீதி மன்றத்தை அவமதிக்கின்ற குற்றத்தை நாங்கள் செய்ததில்லை. நீதிமன்றத்தை அவமதித்தது இல்லை. காங்கிரசார் நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல், அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டோம் என்று மேடையிலே ஆண்மையோடு சொல்லுகிருர்கள். 10 ஆயிரம் பேர்கள் நீதிமன்றத்திற்குப் போவோம் என்று அவர்கள் பேசிய பேச்சுக்களையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் இங்கே அன்று படித்துக் காட்டினர்கள். எந்தக் கட்சியும் செய்யாத ஒன்றை அகில இந்தியக் கட்சியாக இருந்துகொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி செய்திருக்கிறது. அதை அந்தக் கட்சியிலிருக்கிற பெருந்தலைவர்கள் பொறுத்துக்கொண்டு, கண்டித்துச் சொல்லாமல் இருக்கிருர்கள். அப்படி இருப்பதைப் பார்க்கும்பொழுது நான் மெத்தவும் வருத்தப்படுகிறேன். இப்படிப்பட்ட போராட்டம் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இங்கே இருந்து வருவதால்தான், பெரிய பிரச்சினைகளை நாம் ஒன்று சேர்ந்து தீர்க்க முடியவில்லை. நமக்குள்ளே இருக்கிற இப்படிப்பட்ட சின்னஞ்சிறிய பிரச்சினைகள் நாம் ஒன்றுபடுவதைத் தடுக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னும் கொஞ்சம் நம்முடன் நெருங்கி வரவேண்டும். எனவே சுயாட்சி கொள்கையை தமிழகத் அரசு தீவிரமாக மேற்கொண்டால், எல்லாக் கட்சிகளுக்கும் இடையே நல்ல உடன்பாடு இருக்கிறது. இந்த ஆட்சிக்கு ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் கடந்த ..ன்னே.. ஆட்சி ..போராட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறேன். ..போராட்டம் நடத்தினல், எங்களை.. ..டுக்கவேண்டியது, தண்டிக்க..

காலையே நான் போராட்டம் செய்ய முற்.. கொள்கையில் நல்ல உடன்பாடு இருந்தாலு.. நாங்கள் எதிர்க்கும்போது நீங்கள் அடக்குமு.. ..ந மாதிரி இனி விவசாயிகள் வேண்டிய நிலைமையிலே இருப்பதால், நாடு .. இருப்பதே போதும், இனி நினைக்கும் ? நீங்கள் கொள்கை மாறிவிட்டீர்களே.. பின்னல் ஒரு பில் உங்களைச் சந்தேகிக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடு.. ..ங்கர் உபரி நிலங்கள் கான்ஸ்டிட்யூஷனிலே உள்ளபடி மத்திய ஆட்சியிலே ..ான் கிடைக்கும். காரங்களை நாம் பெற வேண்டும். கலைஞர் அவர்கள் "அண்ணு அவர்கள் வில் எழுதி வைக்கவில்லை" என்று. ..பரை எடுத்துவிட விஷயத்திற்காக என்றுலும்கூட, அண்ணு வில் போல் த..த்தால் புறம் பத்திரிகையான ஹோம் ரூலில் எழுதியிருக்கிருர்கள். '..செய்து சுயாட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்யவேண்டியது இனி நம்முடைய வேலை தம்பி"—என்று அதிலே சொல்லியிருக்கிருர்கள். அந்த வில்லை நாம் மனதில் கொண்டு இனியும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கக் கூடாது, உடனடியாகச் செயலில் இறங்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் என்னைவிடவும் இளைஞர் ; அது அவருக்குள்ள அதிர்ஷ்டம். அதிகாரத்திலே முதலிடத்திலே குந்தியிருக்கிருர்கள் ; அதுவும் அவருக்குள்ள அதிர்ஷ்டம். ஆனல், அதிகாரங்கள் எல்லாம் மத்திய ஆட்சியில் குவிந்திருப்பது தான் அவருக்குள்ள துரதிருஷ்டமான நிலை. அதை மாற்றுவதற்கு நாங்கள் பக்கத் துணையாக அவர்களுக்கு இருப்போம். இதிலே நமக்கு ஒரு தெளிவு இருக்கவேண்டும்.

1967-லே அடைந்த வெற்றியை நாம் 1972-லே தோல்வியாக மாற்றிக் கொள்ளக் கூடாது. பி.யு.சி.-யிலே இலவசக் கல்வி தந்தது, புஞ்சை நிலத்திற்கு வரியை ரத்துச் செய்தது, நீர்ப்பாசன வசதிகளைச் செய்தது, கிணறுகள் 6,000 காங்கிரஸ்காரர்கள் தோண்டினர்கள், நாம் 8,000 கிணறுகள் தோண்டியிருக்கிறோம், பள்ளிக்கூடங்கள் அவர்கள் எத்தனை கட்டினர்களோ, அதைவிட அதிகமாக நாம் கட்டியிருக்கிறோம் என்று சொன்னல், மக்களிடையே நமக்குச் சாதகமாக நிலைமையை ஏற்படுத்தாது. 'அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்' என்றுதான் ஆகும். நாம் திறமையுடன் எடுத்துச் சொல்வோம். ஆனல், பலந..ாது. அதிகாரம் நம் கையில் இல்லை. இதை 1969-லேயே நாம் சொல்லியாக வேண்டும். 1969-லேயிருந்து 1972 வரை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். 1937-ஆம் ஆண்டிலே, மாகாண சுயாட்சி ..கோரி இதே மன்றத்திலே காங்கிரஸ் மந்திரிகள் வந்த பொழுது, "ராஜி..மாக்களைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு தான் உள்ளே வந்..ருக்கிறோம்" என்று பேசினர்கள். மத்திய ஆதிக்கத்தை எதிர்த்து ..ஜினமா செய்யத் தயாராக இருந்தார்கள். நுழைந்தது சட்டத்தைத் ..பார் செய்ய அல்ல ; சட்டத்தை உடைப்பதற்காக— என்றும் சொன்..ர்கள். உடைப்பது என்று சொன்னல், அதை அழிக்க வேண்டும் ..ன்று நான் சொல்லவில்லை. ஏனென்ருல், நான் விசுவாசப் பிரமாணம் ..த்துக் கொண்டு—ஆண்டவன் மீது விசுவாசப் பிரமாணம் எடுத்துக் ..ாண்டு உள்ளவன். சட்டத்திற்கு உட்பட்டவன் என்ற முறையிலேயே ..ன் இதைச் சொல்லிக் கொள்கிறேன். அதிகாரக் குவியல் பற்றிய ..திகளை உடைக்கத்தான் நான் வந்தேன். உடைக்கிறவர்களுடன் ஒத்..ழைக்க வேண்டுமென்ற நம்பிக்கையிலேதான் நான் உள்ளே வந்தேன். ..திகளைத் திருத்த விரும்பும் சக்திகளிலே நானும் ஒருவன். நம்முடைய ..ாட்சிப் போராட்டம் 1947-ஆம் வருடம் ஆகஸ்டு 15-ஆம் தேதியோடு ..டிந்துவிடவில்லை. அந்த சுதந்திரப் போர் இன்னும் முடியவில்லை. ..ஸ்டு 15-ஆம் தேதியிலிருந்து போர் முனை மாறி யிருக்கிறது, போர் ..ற மாறியிருக்கிறது, ஆனல், போர் தொடர்கிறது இதுதான் என் பா..ப பிரகடனம்.

..ஜ

இப்.. **பி. ஜீ. கருத்திருமன் :** கான்ஸ்டிட்யூஷன் மேல் பிரமாணம் என.. கொண்டதாகச் சொன்னர்கள், ஆண்டவன் மேல் பிரமாணம் சொ..க் கொண்டிருப்பதாகச் சொன்னர்கள். இப்படிப் பேசுவதுதான் ..ள் பிரமாணம் எடுத்துக் கொண்டதா ?

களு

நம்மவர் சாம்ராஜ்யம் இருக்கிறது. ம்: தலைவராகிய தாங்களே அதற்குப் பதில்
யோகப் ...ற்றற தீர்மானத்தை கட்சித் தலைவர் என்னைவிடத் திறமைசாலி.
...க்கிறு... ன்னவேடுக்கா என்றுதான் நான் முன்னமேயே விளக்க
...டைய தலையிலே வைத்தவின்ஸ்டிட்யூஷன் 263-வது விதியையும் இன்னொரு
...வதாகத்தான் நான் சொல்கிறேன். "உடைப்பது"

திரு. பி. ஜி. கருத்...காரம் என்று பொருள் அல்ல. சட்ட மன்றத்திலே
வழியாகப் போய்க்...வரை நான் அந்தச் சட்டத்திற்கு உட்பட்டே நடப்பேன்,
...ம் வந்தவன் அல்ல காந்தியத்திற்கு. நான் இன்னொன்
...லிவிட வேண்டும். சட்டத்தை உடைத்துத்தான் ஆகவேண்டு

திரு. ம. பொ...ளவுக்கு மத்திய ஆட்சி வந்தால், அதை வெளியே இருந்து
பிரோஸ்பூர், ...சியவேன், உள்ளே இருந்து செய்ய மாட்டேன் என்பதையும்
... தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்று இந்த விவாதத்தில் நான் ரொம்பவும் ஹாஸ்யமாகப் பேசுவேன் என்று எதிர்பார்க்கிறார்கள் அவர்கள் ஏமாந்துவிடப் போகிறார்கள். ஏனென்றால் இந்த பட்ஜெட்டை நான் படித்துவிட்டு வரவில்லை. ஆகவே ஜாஸ்தி விஷயங்களை ஹாஸ்யம் கலந்து பேச முடியாது என்று நினைக்கிறேன். பொதுவாக பட்ஜெட்டைப் பார்க்கும்பொழுது இந்த தேசம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்றே தெரியவில்லை. இந்திய சர்க்கார் 3,300 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டு அதிலே நூற்றிச் சொச்சம் ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள்.

இருபது வருஷத்திற்கு முன்பு இந்திய சர்க்காரின் பட்ஜட் 115 கோடியாக இருந்தது. இப்போது 3,500 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் வர ஆரம்பித்திருக்கிறது. பழைய சென்னை ராஜ்யத்தில், ஆந்திரப் பிரதேசம் அடங்கிய சென்னை ராஜ்யத்தில் 1938–39ல் 16 கோடி ரூபாய் வருமானம். இப்போது அதிலே பாதியாக உள்ள தமிழ்நாட்டில் 263 கோடி ரூபாய்க்கு வருமானம் வருகிறது. இதிலே பற்றுக்குறை 17 கோடி ரூபாய். இந்தப் பற்றுக்குறையைத் தவிர்த்திருக்க முடியாதா என்றால் நிச்சயமாகத் தவிர்த்திருக்க முடியும். இதை ஏதோ நிதிக் கமிஷன் கொடுக்கும் தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். இந்த நிதி அறிக்கையிலே கல்விக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நிதியமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன். கல்லூரியில் பி.யு.சி. படிப்புக்கு ஒரு சலுகையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சலுகையை யாரும் கொடுத்து விடலாம். நான் நி... யமைச்சராக இருந்தாலும், இதைப்பற்றி ஒரு வரி எழுதி விட முடியு... நான் கூட நிதியமைச்சராக இருந்திருக்கிறேன்.—ஜில்லா போர்டு பி... டென்ட் என்றால் அரைக்கால் நிதியமைச்சர் மாதிரி. இந்த 263 கோ... ரூபாய் பட்ஜெட்டில் 2 கோடி ரூபாயைப் பள்ளிச் சம்பளச் சலுகைக்கா... கொடுப்பது என்பது அவ்வளவு கஷ்டமான காரியமில்லை. ஏற்கன... தோட்டத்தில் பாதி கிணறாக இருந்தது, இப்போது முக்கால் கிணறாக... யிருக்கிறது. ஃபீ கன்செஷன் என்னென்ன ரூபங்களில் இருக்கிற... பிற்பட்ட வகுப்பு, அரிசன வகுப்பு, மெரிட் ஸ்காலர்ஷிப் என்ற முறை... பள்ளிக் கூடத்தில் வசூலாவதில் முக்கால் வாசிப் பணம் உதவித் தொ... யாகவே கொடுக்கப்படுகிற நிலை இருக்கிறது. இதைப்பற்றி அரிச... நலத் துறை அமைச்சர் அம்மையார் அவர்கள் நன்றாக அறிவார்க... ஆனால் இப்போது இந்தக் கல்விச் சலுகையை பி.யு.சி.க்குக் கொடுத்த... ஒரு நல்ல தத்துவம் அடங்கியிருக்கிறது. உயர்ந்த சாதி, தாழ்த்தப்ட... சாதி என்றெல்லாம் பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் சலுகை கி... கிறது. அதற்காக நான் தி.மு.க. சர்க்காரை வாழ்த்தக் கடமை... டிருக்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் அபிவிருத்தி வேலைகளுக்கு அதிகமான... ஒதுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் விலைவாசி என்பது "... (gallap) பில் ஓடிக் கொண்டிருப்பதுதான். அதைப் பிடிக்க... வில்லை. அதனால்தான் மாநில சர்க்காராக இருந்தாலும், மத்திய...

...ாக இருந்தாலும் புதிய வரி போடுவதிலே... கொண்டிருக்கிறது. அதோடு ஜனநாயகமும்ந்த மாதிரி இனி விவசாயிகள் ...வில்லை. விலைவாசியைக் குறைப்பதற்கு மத்திய இருப்பதே போதும், இனி...லும் சரி இருக்கிறவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் பின்னால் ஒரு பில்... பின், தங்கியிருக்கிறார்கள். இப்போது இதுதான் ஏக்கர் உபரி நிலங்கள் ...வேண்டிய காரியம். பஞ்சாயத்து யூனியன் ஒன்றுக்குதான் கிடைக்கும். ...வந்தது. அடிப்படைச் சம்பளம் 8 ரூபாய், பஞ்சப்படி பெயரை எடுத்துவிட... இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாலேனத்தால் புறம்... கப்பட்டது. திட்டக் கமிஷன் என்று வைத்து அதிலுள்ள ... பட்டா செய்து ... நடப்புகளைக் கணித்தார்கள். அவர்கள் எல்லாம் படித்த ...ட்ட விஷயத்... தான், 4,000 ரூபாய் சம்பளம், நல்ல வசதியான பங்களா ... ஆனால் ... நன்றாக அனுபவிக்கிறார்கள் ஐயா. நாட்டு நடப்புகளைச் சரிவர கவனி... ஒழுங்காக நடத்தாத காரணத்தால் சீரழிவு ஏற்பட்டு விட்டது. நிதிக் ... கமிஷன் தொகை ராஜ்ய சர்க்காருக்கு வராவிட்டாலும், பற்றுக்குறை ... இல்லாத பட்ஜெட்டைத் தயாரித்திருக்கமுடியும். அதற்கு நிதியமைச்சர் ... அவர்கள் நேரம் ஒதுக்கிக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன்.

எல்லாக் காரியத்திலும் சிக்கனம் வேண்டும். படியரிசித் திட்டத்தில் ஏழெட்டு கோடி ரூபாயை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இதைச் சொல்லிச் சொல்லி உங்களுக்கும் கேட்டுக் கேட்டுக் காது புளித்து விட்டது. பஞ்சாயத்து யூனியன்கள் சீராகவும் வேலை செய்யவும், அதிலே சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் நீங்கள் ஒரு கமிட்டியைப் போட்டீர்கள். முருகேச முதலியார் ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டது. அதிலே பல சிறப்பான அம்சங்கள் இருப்பதாக யூகம். அந்த ரிப்போர்ட்டை வெளியிடவே இல்லை. அதன்படி நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் முன்வரவில்லை.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: முருகேச முதலியார் அறிக்கை எல்லோருக்கும் அனுப்பப்பட்டது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: விளக்கத்திற்கு நன்றி. அதிலுள்ள சிபாரிசுகளை அமல் நடத்தவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அமல் நடத்தியிருந்தால் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் சிக்கனப்படுத்தியிருக்க முடியும்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முருகேச முதலியார் அறிக்கை அவர்களுடைய கவனத்திற்கே கொண்டு வரப்படவில்லை என்று சொன்னார்கள். முதலிலே அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவைகளை ஏன் அமல்படுத்தப்படவில்லை என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னால் பயனுடையதாக இருக்கும். யூகத்தின் அடிப்படையில் அதைப் பற்றி அதிகமாகச் சொல்லுவது சரியல்ல.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: பஞ்சாயத்து யூனியன்கள் மானியத்தின் மீது பேசும்போது அதைப் பற்றி விளக்கமாகப் பேசுகிறேன்.

இந்த ராஜ்யத்திலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியமான தொழில் கைத்தறித் தொழிலாகும். அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் நன்மைக்காக ஒரு காலத்திலே மூட்டை எல்லாம் சுமந்தீர்கள். அவ்வளவெல்லாம் சிரமப்பட்டு பிரசாரம் செய்து இன்று அதிகாரத்திற்கு வந்த நிலைமையில் நெசவாளர்கள் விஷயமாக இவ்வளவு பெரிய வரவு-செலவு திட்டத்தில் எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை: இரண்டு மூன்று நாளைக்கு முன்பு கவுன்சிலுக்குப் போயிருந்தேன். கைத்தறித் துணியை அந்நிய நாட்டு மார்க்கட்டில் விற்பனை பற்றி ஒரு கேள்விக்கு கனம் அமைச்சர் மாதவன் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்நிய நாட்டில் நம்முடைய சரக்கு எடுபடவில்லை என்று சொன்னார்களே தவிர, அந்தச் சரக்கு அங்கே எடுபடாததற்குக் காரணம் என்ன என்று விளக்கமாகச் சொல்லவில்லை. அதற்குக் காரணம் ஜப்பான் போன்ற மற்ற நாட்டுத் துணிகளோடு நம்முடைய நாட்டுத் துணிகளின் விலையை ஒப்பிடும்போது இது கூடுதலாக இருக்கிறது. ஆகவே,

[திரு. ம. பெ ஆவதற்கு அதிக மார்க்கெட் கிடைக்கவில்லை நம்மவர் சாம்ராஜ்யம் இருக்கிச் சொன்னூர்கள், அதை நான் புரிந்து யோகப் ற்ற நீர்மானத்த கஷ்டமான நிலையில், கைத்தறித் துணிக்கு க்கிரும் ன்னவேஇருப்பதனுல், அந்தக் கைத்தறித் துணிநெச டைய தலையிலே கு உதவி கிடைக்கும்படியான சில காரியங்களை ாரிக்கும்பொழுது கவனித்துச் செய்திருக்கலாம். அப்

திரு. பி. ஜி. ால், இங்கு அந்தக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப் வழியாகப் பேபடுவதற்கு இல்லாமல் ஓரளவாவது ஜீவிக்க முடியும். பட்ஜெட்டில் இடமில்லை என்பதை வருத்தத்தோடு தெரி ாகிறேன்.

திரு. ம.

பிரோ மேற்கொண்டு எப்பொழுது பார்த்தாலும் இந்த விவசாயிகளைப் பற்றி யே பேசப்படுகின்றது. இந்திய சர்க்காரிலே புதிதாக பம்பு செட்டுக்கும், உரத்திற்கும் இன்னும் பலப்பல வரிகள் போடப்பட்டிருக்கின்றன. இனி சொத்து வரி என்று கணக்கெடுக்கும்பொழுது விவசாய நிலங்களின் மதிப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இங்கு ராஜ்ய சர்க்கார் அளவிலும் பார்த்தால், எப்பொழுது பார்த்தாலும் விவசாயிகளைப் பற்றியே நீங்கள் சிரத்தையில்லாமல் காரியங்களைச் செய்கிறீர்கள். இந்தச் சர்க்கார் ஆரம்பித்த பொழுதில், விவசாயிகளுக்கு வருமான வரி என்று முன்னுலிருந்த சர்க்காரிலே $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருந்ததை நீங்கள் $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்து, நடுத்தர விவசாயிகளும் அதற்குள்ளே வரும்படியாகச் சட்டத்தைப் போட்டு அதன்மூலம் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டது. மேற்கொண்டு எப்பொழுது பார்த்தாலும் விவசாயிகள் விஷயமாக அவர்களுக்குப் பாதுகாப்பும் கிடையாது. தஞ்சை ஜில்லா இதற்கு ரொம்ப முக்கியமான உதாரணம். மேலும் உச்ச வரம்புச் சட்டத்தை இனி 15 ஏக்கரா என்று நாங்கள் கொண்டு வருவோம் என்று சொல்கிறீர்கள். 15 ஏக்கரா என்று கொண்டு வருவதற்குக்கூட நாங்கள் காரணம் அல்ல, திட்டக் கமிஷன்தான் என்று சொல்லுகிறீர்கள். இப்படி திட்டக்கமிஷன் என்று சொல்லும்பொழுது, அவர்களுக்கு அந்தந்த ராஜ்யங்களினுடைய நாட்டு நடப்பை எடுத்துச்சொல்ல வேண்டியது ராஜ்ய சர்க்காரின் கடமை. முக்கியமாக இது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கும்பொழுதே நேற்று பதில் சொல்லும்பொழுது 20,000 ஏக்கர்கள்தான் உபரி நிலம் கிடைக்கும், கிடைத்திருக்கிறது என்று சொன்னுர்கள். இனி 15 ஏக்கர் என்று . . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : என்னுடைய பதில் சரியாகத் தான் இருக்கிறது. மாண்புமிகு சுதந்திராக் கட்சி தலைவரவர்கள் வண்டியை ஓட்டுவது வழக்கம், அவர்களுக்குச் சாதகமாக. உச்ச வரம்பு என்பது என்ன என்று இந்த அரசாங்கம் முடிவெடுக்கவில்லை. ஏ கனவே கொண்டுவரப்பட்டபொழுது சிலபேர் 50 ஏக்கர் வைக்க வேண் மென்றும், சிலபேர் 15 ஏக்கருக்கு மேல் வைக்கக்கூடாது என்று சொல்ல, 30 ஏக்கர் என்று வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது என்றுதான் சொன்னேனே தவிர, 15 ஏக்கர் என்று கொண்டு வரப்போகிருேம் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : "காம்ப்ரஹென்ஸிவ் பில்" (Comprehensive Bill) கொண்டு வரப்போகிருேம், கொண்டு வரப்போகிருேம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதனுல் நாங்கள் 15 ஏக் என்று கொண்டு வர மாட்டோம் என்று பொருள் அல்ல, அல்லது ஏக்கரா என்று சொல்லுகிருேம் என்றும் பொருள் அல்ல. எதை செய்யப் போகிறது என்பதை இந்த அரசாங்கம் சொல்லவில்லை என தான் இந்த அரசாங்கத்தினுடைய நிலை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஆகவே, இந்த மாதிரி இனி விவசாயிகள் சம்பந்தமாக நில உச்சவரம்பு என்று இப்போது இருப்பதே போதும், இனி அதில் நீங்கள் தலையிட வேண்டாம். ஏனென்ருல் பின்னுல் ஒரு பில் கொண்டுவந்து அதன்மூலம் இன்னும்கூட 20,000 ஏக்கர் உபரி நிலங்கள் கிடைக்கலாம். அது காடும், மேடும், புஞ்சையுமாகத்தான் கிடைக்கும். இவைகளை விநியோகம் செய்வதால் சர்க்கார் பெரிய பெயரை எடுத்துவிட முடியாது. ஏனென்ருல், சர்க்காரிலே இப்பொழுது நினைத்தால் புறம்போக்கு நிலங்கள் லட்சக்கணக்கான ஏக்கர் ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க லாயக்கானவை இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட விஷயத்தில் கவனம் செலுத்தி ஏழை மக்களுக்கு நன்மை செய்யலாம். ஆனுல் குறைந்த நிலங்கள் வைத்து, ரொம்ப "ஹார்ட் ஏர்னிங்" (Hard earnings) என்று சொல்லி தன்னுடைய சிறு முயற்சியினுல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ, வியாபாரத் துறையிலும், பல உத்தியோகத் துறையிலும், ஈடுபட்டு, அவரவர்கள் இந்த நாட்டில் முக்கியமான ஒரு மூலதனமாக நிலத்தை வாங்கி வாழ்க்கை நடத்தி வருகிருர்கள். ஏதோ பெரிய புள்ளிகள் வசம் உள்ள நிலம் பற்றி ஒரு மசோதா கொண்டு வந்தாகி விட்டது. இனி அந்தமாதிரி விவசாயிகளின்பேரிலே மசோதாவைக் கொண்டு வந்து அவர்களை சர்க்கார் ஆபீஸ்களுக்கு அலைக்கழித்துத் துன்பப்படுத்த வேண்டாம். அதன் மூலம் பெரிய நன்மை ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. அதன்மூலம் என்ன நன்மை கிடைக்கும் என்று சொன்னுல், கம்யூனிஸ்ட் பிரச்சாரம் பண்ணுவதைப் போல நீங்களும் பெரிய கம்யூனிஸ்ட் என்று உங்களைப் பிரகடனப் படுத்திக் கொள்ளலாம். ஆனுல் இது பெரிய டேஞ்சரில் (danger) முடியும். அடுத்தபடியாக கம்யூனிஸ்ட்டை கூட்டுச் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான். திரு. கோதண்டராமன் அவர்களை எதிர்ப் பெஞ்சிலே உட்கார வைத்து, நிதியிலாக்காவுக்கோ அல்லது ஏதாவது ஒரு இலாக்காவுக்கோ மந்திரி என்ற அந்த நிலைமையை உருவாக்க வேண்டாம். ஏற்கனவே உங்களுக்கு இருந்த அந்தச் சிந்தனை ஓட்டம் அப்படியேதான் இருக்கிறது. "வெஸ்டு பங்காலி (West Bengal)"லே அப்படியே சாதித்து விட்டோம் என்று சொல்கிருர்கள். என்ன சாதித்து விட்டது ? 10, 17 கூட்டணி—இது ஒரு சர்க்காரா ? அடுத்த சர்க்காரைக் குறை கூறுவதாக எடுத்துக் கொண்டு உரிமைப் பிரச்சினை வேறு வந்துவிடப்போகிறது. இந்த உரிமைப் பிரச்சினை இருக்கிறதே அதை நீக்கி விடுவதற்கு கனம் சபாநாயகரவர்கள் யோசனை பண்ண வேண்டும். ஆகவே, அங்கே ஒரு சர்க்கார், நம்பூதிரிப்பாடு சர்க்கார், நீங்கள் மூன்ருவது நம்பூதிரிப்பாடு சர்க்காராக வந்துவிட வேண்டாம். இது நல்ல ராஜ்யம், இந்த ராஜ்யத்தை நல்லவிதமாக நடத்த வேண்டுமென்று சொன்னுல், நீங்கள் அந்தக் கம்யூனிச சிந்தனையிலிருந்து கொஞ்சம் விடுபடவேண்டும். நான் டி. ஏ. செக்ஷனுக்குச் சென்றிருந்தேன். அங்கு காங்கிரஸ் எம். எல். ஏ., டி. எம். கே. எம்.எல்.ஏ., கம்யூனிஸ்ட் எம். எல். ஏ., ஒன்றுபோல வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள், நான் பார்த்தேன். இப்பொழுதிருக்கும் நீங்கள் மூன்று பேரும் ஒன்ருக உட்கார்ந்திருப்பது நியாயமாகத் தான் இருக்கிறது. நீங்கள் மூன்று பேரும் ஒருவருக்கொருவர், குதிரைப்பந்தயத்திலே ஒரு குதிரை முன்னுலேபோகும், இன்னொன்று சற்றுப் பின்னுலே போகும், அதைப்போல சோஷலிசம், கம்யூனிசம் என்று வேண்டாத சித்தாந்தங்களைச் சொல்லி ஓடிக்கொண்டிருக்கின்றீர்கள் என்று வேடிக்கையாகச் சொன்னேன். அதற்காக சண்டைக்கு வந்தாலும் வருவார்கள் என்று ஓடிவிட்டேன், மூன்று பேர்களும் சேர்ந்து எங்கே தாக்கிவிடுவார்களோ என்று. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்ருல் இம்மாதிரி எப்பொழுது பார்த்தாலும் நில உச்சவரம்புச் சட்டம் இருக்கிறது காணுது என்று இன்னொரு மசோதா, விவசாயிகள் பேரிலே இன்னும் புது வரிகள் என்று இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டாம். இந்த நாட்டிலேயுள்ள ஏழைகளுக்கு முக்கியமான மூலதனம் நிலச் சொத்துதான். அந்த நிலச் சொத்திலேயுள்ள விவசாயிகளுக்கு, முக்கியமான நெல் உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்பு எல்லாம் கொடுக்க வேண்டும். 200 தென்னை மரங்கள் வைத்திருப்பவர் ஒரு அம்பாசிடர் கார் வைத்திருக்கிருர்.

வளவு வருமானம் வருகிறது. தேங்காய் விலை ஏறிப் போயிற்று. அப்படிப்பட்ட ஒரு தோப்பு, துரவுகளுக்கெல்லாம் இந்த நாட்டிலே விதிவிலக்கு, பணப்பயிர் செய்பவர்களுக்கெல்லாம் வசதி. அதே நேரத்திலே நெல் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கிடையாது. தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள நிலையைப் பற்றி ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் பேசியாகி விட்டது. லா அண்ட் ஆர்டர் (Law and order) இன்னும் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சர்க்காரும் நல்ல நிலையில் இருக்கிறது என்பதற்கு முதற்படி (லா அண்டு ஆர்டர்) சட்டம் ஒழுங்கு தான் என்பது உங்களைப் போன்ற அறிவாளிகளுக்குத் தெரியாமல் இல்லை. ஆகவே, அதிலே மெத்தனமாக போகக் கூடாது. அப்படிப் போய்தான் இந்த இரண்டு வருடத்தில் இந்த விதமான கஷ்டங்கள் இங்கே தோன்றியுள்ளன. அதை நிவர்த்தி செய்வதற்கு நீங்கள் யோசனை பண்ண வேண்டும்.

நெல் விலை மற்ற ராஜ்யங்களிலெல்லாம் கூடுதலாக இருக்கும்போது இங்கு மட்டும் குறைவாக இருக்கிறது. காங்கிரஸிலே நெல் விலையைக் கூட்ட வேண்டுமென்று சொல்கிறார்களே அதிலே கொஞ்சம் நான் ஒத்துக் கொள்கிறேன் என்றாலும் அவர்கள் முதலிலே வோட் காச்சிங்-குக்காகத் தான் சொன்னார்கள். பிறகு, அதிலே நியாயமும் அடங்கியிருக்கிறது என்பது தெரிந்துவிட்டது. சிறந்த ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ. 48 என்று இருக்கிறது. மற்ற ராஜ்யங்களிலெல்லாம் இந்த விலைகளைப் பார்க்கும் போது குவிண்டாலுக்கு ரூ. 6 முதல் ரூ. 10 வரை வித்தியாசம் இருக்கிறது. ஏற்கனவே மொரார்ஜி தேசாய்—எப்படித்தான் அவர்களுக்கு மனது வந்ததோ—பம்ப் செட்களின் பேரிலேயும், உரத்தின் பேரிலேயும் வரி போட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயச் செலவுகள் கூடுதலாகப் போய்க் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நெல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதனால் உங்கள் "படி அரிசித் திட்டம்" கூட பாதிக்காது. ஏனென்றால் நாம் பெரிய வரவு-செலவு உள்ள திட்டத்தை வைத்திருக்கிறோம். நிதி அமைச்சருக்குத் தெரியும். ஆனால் அவருக்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. நிதிக் கமிஷனிடமிருந்து 17 கோடி ரூபாய்க்குச் சரிக்கட்ட பணம் வராவிட்டாலும் இந்த வரவு-செலவுவில் வருமானங்களெல்லாம் அண்டர்-எஸ்டிமேட்டாகத் தான் போடப்பட்டிருக்கிறது. எல்லாம் சேர்ந்து பின்னால் ஈடுபடுத்திக்கொள்ளும் நிலையில் வரும். விற்பனை வரியின் மூலம் 10 வருஷத்திற்கு முன்னாலே 8 கோடி ரூபாய் தான் வந்தது. இன்றைக்கு 70 கோடி ரூபாய்க்கு வருகிறது. ஆகவே, நாட்டிலே ஓரளவுக்குப பொருளாதார வளர்ச்சி இருக்கிறது என்றுதான் அர்த்தம். காங்கிரஸ் சொல்வதிலே கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்கிறது டு சம் எக்ஸ்டென்ட் (to some extent) ஆகையினாலே இந்தப் படி அரிசித் திட்டம் பாதிக்கப்படப் போவதில்லை. (குறுக்கீடு) ஏற்கனவே இன்றைக்கு பேச்சு சரியாக இல்லை—ட்யூ டு சம் ரீஸன் (due to some reason) ஆகையினால் நீங்கள் இந்த நெல் விலையை எப்படியாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கவில்லையென்று எனக்கும் சில லெட்டர்கள் வந்திருக்கின்றன. அதன் பேரிலே கவன ஈர்ப்புத் தீர்மானம் சக உறுப்பினர்கள்—நண்பர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் பேரிலே மந்திரிகள் அறிக்கைகள் எல்லாம் இந்த சபையிலே வைத்திருக்கிறார்கள். நீங்கள், 1960–61-ம் வருஷத்திலே பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்த கல்வி மானியத்தையே இப்பொழுதும் கொடுத்துக் கொண்டிருப்பதால் அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் ஒழுங்காக கொடுக்கவில்லை. சம்பளம் கொடுப்பதற்கு இரண்டு மாதம், மூன்று மாதம் தாமதமாகின்றது. அதன் காரணமாக சர்க்காருக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. பின்னால் கொடுக்க வேண்டிய கிராண்டை இப்பொழுது கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கொண்டோம் என்று சொல்கிறீர்களே தவிர, இப்பொழுது கூடுதலாகக் கொடுப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவில்லை. அந்த முயற்சியை எடுத்தால்தான் பஞ்சாயத்து யூனியன்கள், சாலைப் ...ாக்குவரத்து, மற்ற வேலைகளை செவ்வனே செய்ய முடியும் என்பதைப்

...த்துக் கொள்கிறேன். ஆகவே, ஆசிரியர்கள் விஷயமாக நீங்கள் ...யாவது காரியம் செய்ய வேண்டும். சம்பளம் அவர்களுக்குத் தடங் ...லாமல் கிடைக்க வேண்டிய ஏற்பாட்டை செய்ய வேண்டும். அதற்கு ...ரடிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரியை ரத்து செய்கிறோம் என்று சொன்னார்கள். மத்திய சர்க்கா... ராஜ்ய சர்க்கார்களும் விவசாயிகள் பேரிலேயே கண் வைத்திருக்கிறார் ...ர. டி.எம்.கே. தேர்தல் பிரகடனத்தை ஒழுங்காகப் படிக்கவில்லை—...னால் அதிலே இருக்குமென்று நினைக்கிறேன். நிலவரியை ரத்துசெய் ...வாம் என்று சொல்லி இருக்கிறீர்கள். நிலவரியை ரத்து செய்ய வேண்டு ...மென்று சொன்னதற்கு ஒரு அடையாளமாக, புஞ்சை வரியை ரத்து ...செய்து விட்டார்கள். சாதாரணமாக ஒரு ரூபாய் அடிப்படை தீர்வை என்று இருந்தால் அதற்கு இப்பொழுது $2\frac{1}{2}$, 2–3/4 ரூபாய் என்று பல வகையில் தீர்வை விழுகிறது. சர்ச்சார்ஜ் என்றும், அந்தத் தீர்வையின் பேரில் எஜுகேஷன் செஸ் என்றும், ரோடு ஸெஸ் என்றும் பல செஸ்கள் சேர்ந்து ரூ. $2\frac{1}{2}$ ஆகிறது. ஆகவே! ரூ. 3, ரூ. $3\frac{1}{2}$ இருப்பதை, அந்த அடிப்படைத் தீர்வையில் 8 அணா, ரூ. 1 மாத்திரம் ரத்து செய்திருக்கிறீர்கள். இது போதிய சலுகை ஆகாது. ஒரிஸ்ஸாவிலே உள்ள சர்க்கார் நம்மைவிட சிறிய சர்க்கார்தான். அங்கே எல்லாம் நிலவரியை ரத்து செய்துவிட்டார்கள். ஒரிஸ்ஸாவில் செய்திருக்கிற மாதிரி நீங்களும் இந்த நஞ்சை நிலங்களுக்கு உண்டான அடிப்படை தீர்வையை ரத்து செய்து அதன்மூலம் எல்லோருக்கும் ஒரு நிவாரணம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த பட்ஜெட்டின்மூலம் சரியான நடவடிக்கை எடுத்து நல்ல காரியங்களைச் செய்யாவிட்டாலும் நடைமுறையில் அதைச் செய்து இந்த சர்க்காருக்கு நல்ல பெயர் தேடித் தரவேண்டும். எங்கள் கட்சிக்கும் நல்ல பெயர் தேடித்தரவேண்டும்.

நமது ம. பொ. சிவஞானம் அவர்கள் ஏதோ மாநில சுய ஆட்சி என்று சொன்னார்கள். மாநில சுய ஆட்சி ஒன்றும் இந்த நாட்டில் பிரயோஜனம் இல்லை. அதெல்லாம் ஓட்டு பிடிக்கிற நிலைக்கு வந்தாகிவிட்டது. ஆகையினால், மாநில சுய ஆட்சி என்பதனால் டெமாக்ரஸி ரொம்பவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இந்தநாட்டிலே ஒரு நல்ல சுபீட்சம் ஏற்படவில்லை. சோஷலிஸம் என்ற பெயரிலே கஷ்டங்கள் வந்தமாதிரி இந்த ஜனநாயகத்திலே ஓட்டுகள் வாங்குவது பற்றி கவனம் அதிகமாகிவிட்டது. இந்த நாட்டை 5 கண்டங்களாக, 5 பிரிவுகளாக பிரிக்க வேண்டுமென்று அக்காலத்தில் ராஜாஜி அவர்கள் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். தட்சிணப் பிரதேசம் மாதிரி மற்றப் பகுதிகளைப் பெரிய யூனிட்டுகளாகப் பிரித்து பிரயோஜனமாக நடந்தால்தான் நமது நாட்டிலே ஓரளவு முறையான அமைதி கிடைக்குமென்ற நிலைமை ஏற்படுமென்று இந்த ராஜ்ய சர்க்கார்களுடைய நிலைமைகளைப் பார்க்கும் போது தெரிகிறது. ஒரு ராஜ்யத்திலே கலவரங்கள் நடை பெறுகின்றன. அங்கே அதை அடக்குவதற்கு அந்த சர்க்கார் பயப்படுகிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) இப்படி ஒவ்வொரு ராஜ்யத்திலும் இலகுவான, சீப் சுலபமான பிரசாரங்களைப் பெறுவதற்காக வேண்டிய காரியங்களை ராஜ்ய சர்க்கார்கள் செய்கின்றன. ஆகவே, இந்த நாட்டில் ஜனநாயகம் என்பது ஒரு கேலிக் கூத்தாகிவிட்டது. மாநில சுய ஆட்சிகள் எல்லாம் பயன்படவில்லை. ஆகவே, இப்பொழுது இந்திய உபகண்டத்தை 5 பிரிவுகளாக 5 பார்லிமெண்டுகளாக பிரித்து நடத்தினால்தான் நாடு உருப்படும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். வணக்கத்தோடு முடித்து கொள்கிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன்: கனம் உப சபாநாயகர் அவர்களே இங்கே இருக்கும், 1969–70-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை பற்றி விவாதம், கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து, இன்றுடன் முடிய ... கிறது. சர்க்கார் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் சொல்வார்கள். இதற்கு முன்னால். எல்லாக் கட்சி அங்கத்தினர்... ...விட்டார்கள். இறுதியாக நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 8

1969–70-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் படித்து, இதைச் சமர்ப்பித்ததற்குப் பின்னால், நம்முடைய சபையில் நடைபெற்றிருக்கிற விவாதங்களைப் பார்த்தால், என்னவோ இவர்கள் எந்த விதமான சாதனைகளையும் சாதித்ததாகத் தெரியவில்லை. பேச்சுக்களையும், விமரிசனங்களையும் பார்க்கும்போது மிக்க வேதனையாகத்தான் இருக்கிறது. ஒரு குறிப்பான சாதனை இருந்தது என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று வருந்துகிறேன். பழைய நிலையிலேயேதான் இன்னமும் இவர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சி என்ற பொறுப்போடு பேசுகிறார்களா என்றால், இல்லை. பழைய ஞாபகத்துலேயே, எதிர்க்கட்சியிலிருக்கிறோம் என்று அந்த நிலையிலேயே பேசுகிறார்கள். அதே மாதிரித்தான் கூட்டணிக்காரர்களும் எந்தக் கொள்கை அவர்களுடையதோ அதன் அடிப்படையில், அதை அனுசரித்துப் பேசுகிறார்களா என்றால், இல்லை. அவர்களைக் கேட்டால், எங்களுடையது, தேர்தல் " அட்ஜஸ்ட்மெண்ட் " என்கிறார்கள். அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசுவார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியில் நாங்கள் படும் கஷ்டம், துன்பம், மிக மிக அதிகம். நாங்கள் 20 வருஷம் ஆட்சியை நடத்தி, விஷயங்களை எடுத்துச் சொல்லி, அப்படிச் சொல்லுவதற்கு பொறுப்பாகவிருந்து, தொடர்ந்து வருவதுதான் இன்றைய நிலை. ஆளும் கட்சியாக இருந்தும், எதிர்க் கட்சியாக இருந்த நிலையை மறந்து பேசுகிறார்கள் என்பதுதான் வேதனைக்குரியது. ஜனநாயகத்தில், ஒரு கட்சி வரும், போகும். ஆளும் கட்சி எதிர்க் கட்சியாக மாறும், எதிர்க் கட்சியாக இருப்பது ஆளும் கட்சியாக ஆகலாம். திருப்பித் திருப்பி வரலாம். அதே முறையில் நம் நாட்டில், 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னால், ஒரு புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது வரைக்கும், 20 வருஷமாக மத்திய சர்க்காரில், காங்கிரஸ், மாநில சர்க்கார்களில் காங்கிரஸ் என்று இருந்தது. ஆனால் 1967 தேர்தல் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. அது நல்லதுதான். ஜனநாயகத்தில் மாற்றுக் கட்சிகள் ஆட்சிக்கு வரவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

மக்கள் பார்த்து செய்கிறார்கள் என்பதை அறிவதற்கு, ஒரு நிதர்சனமான நிலை ஏற்பட்டதற்கு சந்தோஷம். இப்பொழுது இருக்கும் ஆளும் கட்சி எதிர்க் கட்சி நிலையில் இருந்தபோது அவர்களே கூட இந்த நிலையை எதிர்பார்த்ததாகச் சொல்ல முடியாது. தமிழகத்தைக் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்லலாம். ஆகவே அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடுவோம் என்றார்கள். பொறுப்பு மக்களால் கொடுக்கப்பட்டது. இப்பொழுது வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் மனத்தில் கஷ்டப்படுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. வெளியிலே பேசுவதில் மட்டும், போலிக் கவுரவத்திற்காக, சாதித்து விட்டோம் என்று சொல்லும் குழப்பமான நிலையில்தான் இருக்கிறார்கள். தீர்மானமாக இன்னதைச் சாதித்தார்கள், அவர்கள் கொள்கை அடிப்படையில் சாதித்தார்கள் என்று சொல்ல முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது மந்திரி சபையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மறைந்த மாண்புமிகு அண்ணாதுரை அவர்களுடைய வழியைத்தான் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறார்கள். கட்சிக் கொள்கையில் வேண்டுமானால் பின்பற்றிக் கொள்ளுங்கள். ஆனால், கடந்த இரண்டு வருஷகலாமாக ஆட்சியில் பின்பற்றப்பட்ட வழிகளைப் பின் பற்ற வேண்டாம். இரண்டு வருஷத்தில் நடந்தது என்ன ? நாட்டில் இருக்கும் நிலை என்ன ? மாண்புமிகு மறைந்த முதல் அமைச்சர் பதவி ஏற்றதற்குப் பின்னால், நடந்து வந்த நிகழ்ச்சிகள் என்ன ? பொருளாதார மந்தம், நெருக்கடி, இந்த மாதிரி நிலைமைகள் தான். இந்த நிலையைப் பார்த்தால், அரசியல் ரீதியாக நாம் பிற்போக்கில், இருண்ட காலத்திற்குத்தான் போகிறோம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சுபிட்சப் பாதையை நோக்கிப் போகிறோமா என்றால் இல்லை, என்பதைப் புள்ளி விவரங்களோடு சொல்ல முடியும். எத்தனையோ விஷயங்களில் சுபிட்சத்தை,

1969 மார்ச் 8] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

மக்கள் நலனைப் பாதிக்கும் காரியங்கள் நடந்திருக்கின்றன. சுபிட்சத்தை நோக்கிப் போக வேண்டுமென்றால், ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் ஒத்துழைத்து செயல் பட வேண்டும். ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும், அந்த திட்டத்தில் நல்ல அம்சங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், எல்லாக் கட்சிகளும் அபிவிருத்திக்காகப் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயக அமைப்பில் நிலைமைகள் சீர்படும். இப்பொழுது கட்சிப் பிரசாரத்திற்காக ஏற்கனவே இருந்த கட்சியை இழிவு கூறி, குற்றம் சாட்டிப் சொல்வதும், மத்திய சர்க்கார் வரியைப் போட்டு விட்டார்கள் என்பதும், பழைய பல்லவிதான். அந்தப் பல்லவி போகவே இல்லையே. ஏற்கனவே செய்யமுடியாத காரியங்களுக்கு மத்திய சர்க்கார் மீது பழியைப் போடுவது, என்னென்ன காரியங்கள் என்பதைப் பின்னால் பேசும்போது சொல்லுகிறேன்.

இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள் ? எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, "மத்திய சர்க்கார் அவர்கள் எங்களுக்கு உதவிகள் கொடுக்கவில்லை. சரியாக உதவிகள் கொடுத்திருந்தால், காரியங்களைச் செய்திருப்போம் " என்கிறார்கள். கனம் உறுப்பினர் ஒருவர், மத்திய சர்க்காரைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். வாஸ்தவம். மத்திய சர்க்கார் என்றால், எத்தனை கோடி இருக்கிறது, எத்தனை ராஜ்யங்கள் இருக்கின்றன, அவர்களுக்கெல்லாம் கொடுக்கிறார்கள். தமிழ்நாடு ஒன்றைதான் இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்களுடைய பிரதிநிதிகள் பாராளுமன்ற அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ராஜ்ய சபை அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட 33 கனம் உறுப்பினர் இங்கே பேசுகிறார்கள். முதல் ஐந்தாண்டு திட்டம் 1,000 கோடியில், 100 கோடிதான் நமக்கு, இரண்டாவது திட்டத்தில் 2,500 கோடியில், 200 கோடிதான் நமக்கு, மூன்றாவது திட்டத்தில் 5,000 கோடியில் 300 கோடிதான் நமக்குக் கிடைத்தது. பார்த்தீர்களா. என்ன அக்கிரமம் செய்து இருக்கிறார்கள் " என்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிறார்கள். எத்தனை ராஜ்யங்களுக்குக் கொடுக்கிறார்கள் ? என்ன சதவீதம் நமக்கு கிடைக்க வேண்டும் ? இப்படிப்பட்ட புள்ளிவிவரத்தை, மத்திய சர்க்காரில் கேள்வி போட்டு, பெற்றுக் கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் என்ன செய்கிறது, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் இவ்வளவு இவ்வளவு கோடி என்று பிரித்துக் கொடுக்கிறது. எப்படி ? ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கிறது. அதை பாரபட்சமாக நடக்கிறார்கள், முன்னே இருந்த சர்க்கார் மோசம் என்கிறார்கள். சரி, மோசம் என்று ஏற்றுக் கொள்ளலாம். நாங்கள் மாநிலத்திற்கு வேண்டிய தொகையை வாங்கத் தவறிவிட்டோம் என்றே வைத்துக் கொள்ளலாம். 1,500 கோடியில் 100 கோடிதான் என்றால், நாம் 53 கோடியில் 3 கோடிதானே ? அதை மறந்து விடுகிறார்கள். ஜனத்தொகை அடிப்படையில்தானே கொடுக்கப்படுகிறது. அது எல்லாவற்றையும் மறந்து விடுகிறார்கள்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், ஏதோ காங்கிரஸ் சர்க்கார் 400 கோடி ரூபாய் கடனை வைத்து விட்டுச் சென்று விட்டார்கள் என்கிறார்கள். முதலீடு எத்தனை? 575 கோடி ரூபாய் என்பதை, அந்த முதலீட்டை மறந்துவிட்டு, கடனை மட்டும் சொல்லுகிறார்களே, 400 கோடி கடன் வைத்தோம் ஆமாம் வைத்தோம். நாங்கள் 400 கோடி கடன் வாங்கி, இந்தச் சொத்தை வைத்தோம். அப்படிச் சொத்து தேடினதால்தான் நீங்கள் இன்றைக்கு மந்திரிகளாக உட்கார்ந்து இருக்கிறீர்கள். 400 கோடி கடன் வாங்கி, வரிகளைப் போட்டு, திட்டங்களை நிறைவேற்றி வைத்துப் போகவில்லை என்றால், நீங்கள் இப்படி பட்ஜெட்டை கொடுத்திருக்கமுடியாது என்ற நிலைதான். அதை நான் தெளிவாக, விரிவாகச்சொல்ல முடியும். அதிலே 200 கோடி மின்சார வாரியத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் ஆட்சியில் மூன்று லட்சம் பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் இரண்டு வருஷத்தில் ஒரு

பிரச்னை. மக்களுக்கு நல்லது செய்யப் போகிறோமா, மக்களுடைய பிரச்னையைத் தீர்க்கப்போகிறோமா என்பதைத்தான் எல்லோரும் கவனிக்க வேண்டும். பழைய கதையையே பேசிக்கொண்டிருக்கக்கூடாது. பார்த்தீர்களா ! காங்கிரசை வெட்டி வீழ்த்திவிட்டோம் ; நான் இன்னாரை ஜெயித்துவிட்டேன் ; இப்படி இப்படியெல்லாம் ஜெயித்தேன் என்று சொல்லிக்கொள்வதில் பயன் இல்லை. பரீட்சைக் கேள்வியில் குறிப்பிட்டிருந்ததை கூட, கேட்கமாட்டேன் என்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, “இதில் அரசியல் புகுந்திருக்கிறது, அதனைக் கண்டிக்கிறேன்” என்று ஒரு வார்த்தை சொன்னாரா ? அவ்வளவுதூரம் படித்துக் காட்டியதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் ? இன்னும் ரொம்ப தவறு நடக்கிறது என்று சொன்னார். முதுகுளத்தூரில் நடந்ததைப்பற்றி அன்று சொன்னார்கள். விமர்சனம் செய்தார்கள். “வேண்டாம்” என்று சொல்லவில்லை. சொல்லட்டும். முதுகுளத்தூரில் நடந்தது என்ன ? ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் இருக்கும் சண்டை—கைகலப்பு—சர்க்கார் புகுந்து, சட்டம், அமைதியைப் பாதுகாப்பதற்கு ஒரு கடும் நடவடிக்கை எடுத்தது, அது விஷயம் வேறு. ஆனால், கீழ்வெண்மணியில்—தஞ்சையில்—நடந்த விஷயம் வேறு. சர்க்கார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், மனிதாபிமானம் இல்லாமல் ஒருவரை ஒருவர் எரித்த இந்தக்காட்சி வேறு, முதுகுளத்தூரில் நடந்த அந்தக் காட்சி வேறு. ”எதிர்க்கட்சித் தலைவர் வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லையே” என்று எங்களைப்பார்த்துச் சொன்னார்கள். எங்களை விட—காங்கிரஸ்காரர்களைவிட—ஹரிஜன மக்களுக்குச் சேவை செய்தவர்கள் ஒருவருமே கிடையாது. தேச பிதா மகாத்மா காந்தியடிகள் சொன்னார்கள். “எனக்கு அடுத்த பிறவி இருந்தால் நான் ஹரிஜனக் குடும்பத்தில் பிறப்பேன்” என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, அப்பேர்ப்பட்ட வழியில் வந்த நாங்கள், அதற்கு அனுதாபம் தெரிவிக்காமலா இருப்போம் ? ஹரிஜனங்கள்மீது எங்களுக்கு அனுதாபம் உண்டு. ஹரிஜன மக்கள்தான் விவசாயத்திற்கு முதுகெலும்பாக இருக்கிறார்கள். ஹரிஜனங்கள் சரியாகச் செய்யவில்லையென்றால், விவசாயம் நடக்க முடியாது. இந்த நாடே அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தவேண்டும். அவர்களுக்கு எல்லாப் பாதுகாப்பும் கொடுக்கவேண்டும். ஹரிஜனங்களைக் குறித்து நாங்கள் அனுதாபம் தெரிவிக்கவில்லையென்றால், நாங்கள் என் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம்? கண்டிக்கிறோம் இன்றையத் தினம் மற்றவர்கள் என்ன என்னவோ சொல்லலாம். ஆனால், காங்கிரஸ்காரர்களாகிய எங்களுக்குத்தான் ஹரிஜனங்களுடைய அருமை தெரியும். முன்னால் நடந்ததைச் சொல்லவேண்டாம் என்று சொல்லவில்லை. அதிலேயிருந்து நாம் எடுத்த பாடங்கள் என்ன, அதிலேயிருந்து நாம் நடக்க வேண்டிய நிலைமைகள் என்ன, இந்த நிலைமையில் சட்டம் அமைதி பாதுகாக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய வாதம்.

“எங்களுடைய அரசாட்சி வந்தால் மக்களுக்கு சுபீட்சம் ஏற்படும்” என்றார்கள். அவர்களுடைய திட்டங்கள்தான் என்ன ? என்று கேட்கிறேன். இரண்டு வருட ஆட்சியில் என்ன நடந்தன ? ஏற்கெனவே காங்கிரஸ் செய்த காங்கிரஸ் திட்டங்களைத் தவிர, புதுத் திட்டங்கள் உண்டா ? இல்லவே இல்லை. இந்த இரண்டாண்டுக் கால ஆட்சியில் ஏற்கெனவே காங்கிரஸ் செய்துவைத்த திட்டங்களின் விஸ்தரிப்புதான் நடந்து கொண்டிருக்கிறதே தவிர, புதுத் திட்டம் ஒன்றுமே கிடையாது. “காங்கிரஸ் போட்ட திட்டத்தைத்தான் நாங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம் அதைத்தான் நாங்கள் விஸ்தரித்துத் தீவிரமாக நடத்திக்கொண்டிருக்கிறோம்” என்று இவர்கள் சொன்னால், நாங்கள், “ரொம்ப நன்றி அப்பா ; ஒத்துழைப்புக் கொடுக்கிறோம்” என்று சொல்லத் தயார். ஒத்துழைப்பு கொடுக்கவும் தயாராக இருக்கிறோம். இவர்கள் அப்படிச் சொல்வது கிடையாது. அப்படியெல்லாம் சொல்லாமல், பார்த்தீர்களா! விவசாயத்திலே உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்கிறார்கள். அதுவும் நாங்கள் போட்ட திட்டம் தானே ? ஏடிடி. 27 ரகத்தை நாங்கள்தான் கண்டு பிடித்தோம்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நீங்கள் ஆட்சியில் இருந்தபோது ஏடிடி. 27 ரகத்தை எந்த அளவுக்கு உற்பத்திக்குக் கொண்டுவந்தீர்கள், நாங்கள் எந்த அளவுக்கு உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம் என்பதை ஒப்பிட்டு, உண்மையான புள்ளிவிவரத்தை எடுத்துச்சொல்லி விளக்கினால் நன்மையாக இருக்கும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதைத்தான் சொல்வதற்கு வந்தேன் நாங்கள் இருக்கும்போதுதான் வித்து உற்பத்தி செய்யப்பட்டது. வித்து உற்பத்தி செய்தவுடனேயே அதை பெரிய அளவுக்குப் பயன்படுத்திவிட முடியாது. திட்டத்தைப் போட்டு ஆரம்பித்தவர்கள் நாங்கள். அப்பொழுது வித்து உற்பத்திதான் இருந்தது. 1960 முதல் 1965 வரையில் உள்ள வித்து உற்பத்தி விவரத்தை டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சர் ஆபீசில் பார்க்கட்டும். நீங்கள் இப்பொழுது வந்திருக்கிறீர்கள். நாங்கள் போட்ட திட்டத்தை நீங்கள் அமல் நடத்துகிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாங்கள் போட்ட திட்டத்தை விட, நாங்கள் துவக்கிவைத்ததைவிட, நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு என்ன புதிதாகச் செய்துவிட்டீர்கள் ? ஏதோ ஏராளமான பம்ப் செட் வைத்துவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். 1951-ம் வருஷத்தில் 14,000 பம்ப் செட்கள் இருந்தன. (திரு. என். ராஜாங்கம் : பாயின்ட் ஆப் க்ளாரிஃபிகேஷன்.) நான் கூறவேண்டியதைக் கூறிவிடுகிறேன். ஏடிடி. 27 ரகத்தை இவர்கள் விஸ்தரிப்புச் செய்திருக்கலாம். இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால், திட்டத்தைப் போட்டவர்கள் நாங்கள், ஒரு புது ரக விதையைக் கண்டுபிடித்தோம் என்றால், அதை உடனடியாக 100 ஏக்கரில் போட முடியாது. முதலில் 50 சென்டில் போட்டுப் பார்த்து, பிறகு பத்து ஏக்கரில் போட்டு, அதற்குப்பிறகுதான் 100 ஏக்கரில் போட முடியும். விதையைக் கண்டுபிடித்துக்கொடுத்து, ஓரளவு குறைந்த பரப்பில் அதை விஸ்தரித்துக்கொண்டிருக்கும் நிலையில், இவ்வளவுதானா, என்று கேட்பது எப்படியிருக்கிறதென்றால், தகப்பனை விட மகன் புத்திசாலி என்று கருதிக்கொள்வதைப்போல் இருக்கிறது. நாங்கள் போட்ட திட்டங்களில் குறை இருக்கலாம் ; சரியாக நிறைவேறாமல் இருக்கலாம். காங்கிரஸ் போட்ட திட்டங்களில் இன்ன இன்ன குறைபாடுகள் எல்லாம் இருந்தன, அவற்றை இந்த வகையில் களைந்து நிறைவேற்றியிருக்கிறோம் என்று இவர்கள் சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளவேண்டியதுதான். ஆனால், காங்கிரஸ் 17 வருஷங்களில் ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் இரண்டு வருஷங்களில் ஏதேதோ செய்துவிட்டோம் என்று சொல்லிக்கொள்கிறார்களே அதை மறுப்பதற்காகத்தான் எடுத்துச்சொல்லவேண்டியிருக்கிறது. அதை எடுத்துச் சொல்வதற்காகத்தானே நாங்கள் இருக்கிறோம் ? நாங்கள் ஆட்சியை விட்டுச் சென்றபோது, 400 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் 575 கோடி ரூபாய்க்கு மேற்பட்டு முதலீடு செய்துவிட்டுச் சென்றோமே, அதைச் சொல்ல என் தயங்குகிறீர்கள் ? நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, இவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் 1957–62-லும், 1962–67-லும் இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமலேயா நாங்கள் கடன் வாங்கினோம் ? அவர்களுக்குத் தெரியாமலா திட்டங்கள் போட்டோம் ? உங்களுடைய கொள்கை என்ன ? “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளைக் குறைப்போம் வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னீர்கள். யார் யாருக்கு வசதிகளைப் பெருக்கினார்கள் என்பதைப் பின்னர் வைத்துக் கொள்ளுகிறேன்.

1966–67-இல் இந்தச் சர்க்கார் சமர்ப்பித்த பட்ஜெட்டில் பட்ஜெட் எஸ்டிமேட் 201 கோடி ரூபாய். 1969–70–இல் 255 கோடி ரூபாய். இதுதான் வரியைக் குறைத்த தன்மையா ? வரியே இல்லாத தன்மையா ? இந்த அதிக வருவாய் தானாகவே வந்ததா ? முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இரண்டு வருஷமாக வரியே போடவில்லை என்று. அப்படியானால், இந்த அதிக வருவாய் எப்படி வந்தது ? கள்ள நோட் அடித்தா ? இது வந்தது ? வரியே போடவில்லை என்றால், இது எப்படி வந்தது ? அவர்கள்சொல்கிறார்கள், இரண்டு வருஷமாக வரியே போடாமல் இருந்

லட்சம் கொடுத்திருக்கிறோம் என்கிறீர்கள். எப்படி? 400 கோடி கடன் வாங்கி, 200 கோடி மின்சார வாரியத்திற்கு நாங்கள் கொடுத்திருந்தோம், 14,000 பம்பு செட்டுகளாக 1951-ல் இருந்ததை, 1967-ல் மூன்று லட்சமாக ஆக்கினோம் அந்த அளவிற்குப் பெருக்கினோம். இது சாதனையில்லையா ? நாங்கள் சமையல் எல்லாம் செய்த பிறகு, "பரிமாறிவிட்டோம்", எத்தனை பேர்களுக்குப் பரிமாறியிருக்கிறோம் பார்த்தீர்களா ! என்கிறீர்கள். சமையல் செய்தவனுக்கு, சாமான்களைச் சேகரித்தவனுக்கு ஒன்றும் பெருமையில்லை. அவ்வளவும் செய்த பிறகு, பெரிய விருந்து வைத்து விட்டோம் என்றால் அது சரியாகுமா ? அந்த நிலையில் போகிறீர்கள். 200 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்குக் கடன் கொடுத்து, நீங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, வரி வரி என்று பேசிய பேச்சுக்களையும் மீறி, கெட்ட பெயரையும் வாங்கிக் கொண்டு, காரியங்களை செய்ததனால் தான், இன்றைக்கு நீங்கள் வருஷத்திற்கு 50,000 பம்பு செட்டு கொடுக்க இருக்கிறீர்கள். நாங்களும் தான் எதிர்பார்த்தோம். மூன்றாவது திட்டம் முடிந்தவுடன், ஒவ்வொரு வருஷமும் 50,000 பம்பு செட்டுக்கள் வருஷந்தோறும் கொடுக்கலாம் என்று. அது போகட்டும் " நீங்கள் போட்ட திட்டந்தானே " என்று ஒரு வார்த்தை கிடையாது. சொல்லா விட்டாலும் பரவாயில்லை, ஆனால், "நாங்கள் செய்தோம்" என்று எங்களிடமே சொல்லுகிறார்கள்.

இவர்கள் இந்த இரண்டு வருஷத்தில் எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள். எங்களுக்குத்தான் சக்தி கிடையாது. வாங்கவில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அதிகமாக வாங்கிவிட்டீர்கள்—என்று சொல்ல முடியுமா ? முடியாது.

மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி வேண்டும் என்று கேட்கிறோம். என்றால், அதை அங்கிருக்கும் அதிகாரிகள் கொடுப்பதோ கொடுக்காமலிருப்பதோ இல்லை. இந்தியப் பிரதமர், முதலமைச்சர்களின் மகாநாட்டைக் கூட்டுகிறார்கள். எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்களும் அங்கே போய்க் கூடிப் பேசுகிறார்கள். அடுத்து, தேசீய அபிவிருத்திக் கவுன்சில் (நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில்) என்ற ஒன்று இருக்கிறது. அங்கே நம் நாட்டிலுள்ள எல்லா மாநில முதலமைச்சர்கள் போய்க் கூடுகிறார்கள். அதற்குப் பிறகு பிராந்திய கவுன்சில் (ஸோனல் கவுன்சில்) என்று இருக்கிறது. அதில் அந்தந்தப் பிராந்தியங்களில் உள்ள முதலமைச்சர்கள் கூடுகிறார்கள். மத்திய உள்துறை அமைச்சரும் அதில் கலந்து கொள்ளுகிறார்கள். ஆகவே, இதிலே எதையும் மூடுமந்திரமாக வைத்துக் கொண்டு, வேண்டியவர்களுக்குப் பணம் கொடுப்பது, வேண்டாதவர்களுக்குப் பணம் கொடுக்காமலிருப்பது என்ற பிரச்சினையே கிடையாது. தேசீய அபிவிருத்திக் கவுன்சில் முதலமைச்சர்கள் மாநாடு, பிராந்திய கவுன்சில் ஆகிய இவற்றிலெல்லாம் கூடிப் பேசித் திட்டங்களை வகுத்து, எல்லாவற்றிற்கும் தொகை ஒதுக்கப் படுகிறதே தவிர, யாரோ செய்துவிடுவதில்லை.

மறைந்த முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? "மத்திய அரசுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான வேறுபாடுகளும் கிடையாது ; மத்திய அரசில் உள்ளவர்கள் நன்றாகத்தான் நடந்துகொண்டு வருகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் முதலமைச்சர் அவர்கள் கூட, அன்று அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, பாண்டிச்சேரி முனிசிபல் தேர்தலின்போது சொன்னதை பத்திரிகைகளில் படித்த செய்தியைச் சொல்கிறேன்—அங்கே நாங்களும் —காங்கிரஸ்காரர்களும்—போயிருந்தோம். அப்பொழுது அவர் அங்கே என்ன சொன்னார்கள் ? "இங்கே காங்கிரஸ் இருந்தால் தான் உரிமைகளை பெறமுடியும் என்று ஒருவர் பேசினதாக சொன்னார்கள். அதெல்லாம் கிடையாது ; மத்திய அரசுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள உறவு நிலைமையில் எந்தவிதமான கெடுதலும் கிடையாது ; நாங்கள் வேண்டுவதைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றோம்; ஆகவே, நீங்கள் எங்கள் கட்சியை ஆதரிக்கவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,

இவர்களுக்கு மத்திய சர்க்கார் பாரபட்சம் காட்டாமல், உறவு நல்ல நிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறது என்றால், அவர்கள் தாங்கள் வேண்டியதைப் பெற்றுக் கொண்டுதான் இருப்பதாகச் சொல்லுகிறார்கள் என்றால்............

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் சொன்னதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காங்கிரஸ் காரர்கள் பேசியதும் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும். "காங்கிரஸ் அரசாங்கம் இருந்தால்தான் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறமுடியும்" என்று கூறிய அந்தக் காங்கிரஸ்காரருடைய கூற்றை எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துக் கொள்ளுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி.ஜி. கருத்திருமன் : அதிலே என்ன தப்பு என்று நான் கேட்கிறேன்? இரண்டு இடங்களிலும் வெவ்வேறு கட்சிகள் இருந்தாலும் உங்களுக்கு வேண்டியதை நீங்கள் பெற முடியும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளுகிறீர்கள். அப்படியிருக்க, இரண்டு இடங்களிலும் ஒரே கட்சி இருந்தால், வேண்டியதை நாங்களும் பெறத்தானே முடியும் ? இதிலே என்ன தப்பு இருக்கிறது ? நீங்கள் பகைமையோடு இருக்கக்கூடியவர்கள்....

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் அரசு இருந்தால்தான் மத்திய அரசு ஏதாகிலும் செய்யுமா ? அல்லது, மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி அல்லாத வேறு அரசு இருந்தாலும் மத்திய அரசு அதற்கும் ஏதாவது செய்யுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதுதான் எங்களுடைய பாரபட்சமற்ற தன்மையைக் காட்டுகிறது. எந்த அரசு இருந்தாலும் செய்ய முடியும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதற்காக நன்றி கூட நீங்கள் சொல்லமாட்டீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியானால், புதுவை மாநிலத் தேர்தலில் "காங்கிரஸ் ஜெயித்தால்தான் மத்திய அரசினுடைய உதவி கிடைக்கும்" என்று காங்கிரஸ்காரர் பேசியிருந்தால், அது தவறுதானே ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : இது என்ன கேள்வி ? (சிரிப்பு) யாரை ஜெயிக்க வைப்பது என்பது அங்குள்ள மக்களுடைய பிரச்சினை. எந்தக் கட்சி வருமோ, எந்தக் கட்சியுமே வராதோ, அது எனக்குத் தெரியாது. அவர்கள் செய்தார்கள், இவர்கள் செய்தார்கள் என்று....(குறுக்கீடு) பாரம்பரியத்தைப்பற்றி பின்னர் வருகிறேன். அதற்குள் அவசரப்படுகிறார்கள். இதிலே எந்தக் கட்சி என்பதில் பிரச்னை கிடையாது. மேற்கு வங்காளத்தில் வேறு கட்சி ஆளுகிறது. கேரளாவில் வேறு கட்சி ஆளுகிறது. அது எப்படியிருந்தாலும், இவர்கள் கூறும்படியானகுற்றச் சாட்டை நான் மறுக்கிறேன். மத்திய சர்க்கார் மாநில சர்க்காரிடம் பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கிறது என்று சில அங்கத்தினர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சர் அவர்களே இப்பொழுது பதிலளித்து விட்டார் என்றுதான் கொள்ளவேண்டும். நான் சொல்வது இருக்கட்டும். ஆனால், அவர்கள் அங்கத்தினர்கள் பேசியதெல்லாம் தவறு என்பதை அவர்களே ஏற்றுக்கொள்ளுகிறார்களா என்பதுதான் பிரச்சினை. "மத்திய சர்க்கார் சரியாக நடக்கவில்லை" என்று சொல்லுகிறார்கள். அங்கத்தினர்கள். முதலமைச்சர், "கிடையாது, நாங்கள் உரியவற்றைப் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். ஆகையால், இதுவரைக்கும் அந்த அங்கத்தினர்கள் மத்திய அரசைக்குறித்துப் பேசியதை வாபஸ் பெற்றுக் கொண்டுவிட்டதாகவே நான் கருதுகிறேன். அந்த வகையில் முதலமைச்சர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. அப்படித் தானே இருக்கவேண்டும் ? நல்ல முறையில்தான் நாம் பழகவேண்டும். பதவியில் யார் வருகிறார்களோ, யார் வரவில்லையோ அது அல்ல

திருக்கிறோம், இது சாதனை அல்லவா ? என்று. திரு ம.பொ.சி. அவர்கள் எந்த சின்னத்தில் நின்ருரோ அதற்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் பேசியதற்காக நன்றி. ஆனால், பத்து வருஷங்களுக்கு முன்னுலே திராவிட முனனேற்றக் கழகத்தை அவர் என்ன என்னவெல்லாம் பேசினார்கள் ? அவரை விட யாராவது பேசியிருக்க முடியுமா ?

திரு ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, நான் ஒரு சின்னத்தைத் தேர்ந்தெடுத்தது என்னுடைய கட்சியின் சொந்த விஷயம். நான், என் கட்சிக்கென்று சின்னம் இல்லாததால், கிடைத்த சின்னத்தை எடுத்துக்கொண்டேன் ; இருந்த சின்னத்தை விட்டு அல்ல. அதற்கும் இந்த பட்ஜெட் சொற்பொழிவிற்கும் என்ன சம்பந்தம் ? இருக்கிறது என்பதைக் கனம் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கம்பனிலிருந்து சான்றுகள் இருந்தாலும் சொல்லலாம்.

திரு பி. ஜி. கருத்திருமன் : கம்பனை இதற்கு இழுக்க வேண்டாம். மனச்சாட்சிதான் இதற்கெல்லாம் சான்ருக இருக்க முடியும்.

அரசியலுடைய யோக்கியதைகளை யெல்லாம் விமரிசிப்பதற்குத்தான் இந்த பட்ஜெட் இருக்கிறது. அரசியிலுள்ளவர்களுடைய அந்தஸ்தைச் சொல்லுவதற்குத்தான் இந்த பட்ஜெட்இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி நிலை அறிக்கையிலே பேசும் போது, ஒவ்வொரு கட்சியினுடைய வரலாறுகளையும் பேசுவதற்கு இடம் இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை அறிந்துகொள்ள வேண்டும். பட்ஜெட்டில் உள்ள குறைகளை, குற்றங்களைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

திரு பி. ஜி. கருத்திருமன் : அதே கட்சியில் காங்கிரஸ் பாரம்பரியத்தைப் பற்றி அரை மணி நேரம் பேசியிருக்கிருர்களே (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதி நிலை அறிக்கையிலே ஒவ்வொரு கட்சியினுடைய வரலாறுகளையும் பேசுவதற்கு இடம் இருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். நிதி நிலை அறிக்கை மீது பேசும்போது நீங்கள் சொன்னபடி, பேசுவதற்கு இடம் இல்லை, அது முறையல்ல என்று சொல்லுகிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : இதுதான் சங்கடமான நிலைமை. அந்தப் பக்கம் முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளைப் படித்தால் அனுமதிக்கப்படுகிறது. நாங்கள் படித்தால் அனுமதிக்கப்படுவதில்லை. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை நன்ருகப் புரிந்துகொள்ளவில்லை. அந்தக் கட்சியில் உள்ளவர்கள் அதைச் சொன்னார்கள், இந்தக் கட்சியில் உள்ளவர்கள் இதைச் சொன்னார்கள் என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் பேசுகிறபோது குறுக்கீடு கூடாது என்பதற்காகத் தான் நான் குறுக்கிடவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் " நிதி நிலை அறிக்கையிலே பேசும்போது, கட்சிகளினுடைய விமரிசனங்களை, பாரம்பரியங்களைச் சொல்லுவதற்குத்தான் நிதி நிலை அறிக்கை இருக்கிறது " என்று சொன்னார்கள். அப்படி இல்லை என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : சரி. சாப்பிடும்பொழுது பொரியலில் ஒன்று, வறுவலில் ஒன்று, அப்படி ஒன்று, இப்படி ஒன்று எடுத்துக் கொள்வார்கள். அந்த வாடை அவருக்கு வீசுகிறது. அது சகவாச தோஷத்தினால் அவருக்கு ஏற்பட்டது. அவர் ரொம்ப நல்லவர், தேசிய வாதி. சகவாச தோஷத்தினால்தான் அப்படிப் பேசினார்கள். ஆகவே, இந்த விஷயத்தை கொஞ்சங் கொஞ்சமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்தி பெருக வேண்டும், மனிதனுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும். உற்பத்தி பெருகி, வேலை வாய்ப்புகள் பெருகி, மக்களின் வாங்கும்படியான சக்தியும் பெருகி, உற்பத்தியிலே உழைத்த தொழிலாளர்களுக்கும் தகுந்த ஊதியம் கிடைக்கும்படியான நிலை இருந்தால்தான் தேசத்தில் சுபிட்சம் ஏற்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தி பெருக வழியிருக்கிறதா ? உற்பத்தி பெருக நாம் விலைவாசிகளை ஏற்றிக் கொடுக்க வேண்டும். அதிகமாக விளைகிறபோது, விலைவாசியை ஏற்றிக் கொடுக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தைத் தர வேண்டிய நிலைமை இருக்க வேண்டும். விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இருக்கும் தகராறுகளைத் தீர்க்க வேண்டும். எந்தவிதமான குறுக்கீடும் இல்லாமல் விவசாயம் செய்ய முடிந்ததா என்று பார்த்தால் இல்லை யென்ற நிலைமையே தோன்றுகிறது.

தஞ்சாவூரில் மன்னார்குடி ஒபபந்தம் என்று முதலில் பேசப்பட்டதைக் குறித்து எல்லோரும் சொன்னார்கள். இந்த ஒப்பந்தத்தை அமல் நடத்தினார்களா என்ருல், இல்லை. கலெக்டரைக் கேட்டால் என்ன சொல்கிருர் ? இன்னும் அரைப் படி சேர்த்துக் கொடு என்கிருர். ஆகவே, நிலச் சொந்தக்காரர்கள், விவசாயத தொழிலாளர்கள் ஆகிய இரண்டு சாராரையும் கட்டுப்பாடு செய்வதுதான் சர்க்காருடைய கடமை. அது நடைபெறவில்லை. விவசாய உற்பத்தி பெருகிவிடலாம், அப்படிப் பெருகிய உற்பததி மக்களிடத்திலே வந்து சேராமல் இருப்பதற்குக் குறுக்கே ஏதோ இருக்கிறது. இப்போது ஆட்சியில் அமர்ந்திருககும் புதிய அமைச்சரவை தகக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறிப்பாக, இந்தச் சர்க்கார் எந்தப் பிரச்சினையையும் தொடாமல் இருப்பதற்கு முயற்சி செய்கிறது. மாணவர்கள் பிரச்சினையா ? இது சாதாரணமாகிவிடும். போலீஸ்காரர்கள் அடித்தார்களா ? அது தானகவே சரியாகிவிடும் என்றுதான் நினைக்கிருர்கள். தானகவே போய்விடும் என்ற போக்குதான் இன்றைக்கு நாட்டிலே அமைதியில்லாத நிலைமையை தோற்றுவித்திருக்கிறது.

கோயம்புத்தூரை எடுத்துக் கொள்ளலாம். அங்கே பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சி செய்தபொழுது நான்கு மில்களை மூடிய சமயத்தில் இந்தக் கூட்டணிக் கட்சியினர் போட்டக் கூச்சல் கொஞ்சமா ? இப்போது 33 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் கூட்டணியினர் என்ன செய்கின்றனர் ? அவர்களுக்குள்ளே ஒரு கூட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் மில்கள் இந்தியாவிலுள்ள ஆலைகளில் பாதி அளவைக் கொண்டிருக்கிறது. பிற மாநிலங்களில் எல்லாம் மூடிய ஆலைகளை இப்போது திறக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள். மகாராஷ்டிரத்திலே 12 மில்கள் போன வாரத்தில் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 6 ஆலைகள் திறக்கப்பட இருக்கின்றன. மத்திய சர்க்கார் கொடுத்த உதவி, இந்தச் சர்க்காருக்கு எவ்வளவு கொடுத்ததோ அதே அளவுதான் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறது. மத்திய சர்க்கார் கொடுத்த உதவியுடன் தாங்களும் கொஞ்சம் போட்டு, அங்கே இருக்கிற சர்க்கார், பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தினால் மூடிய ஆலைகளைத் திறந்திருக்கின்றது. இந்தச் சர்க்கார் 15 லட்சம் ரூபாய்களைத்தான் ஒதுக்கியிருக்கிருர்கள். பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் 15 லட்சம், மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும் 15 லட்சம் என்ற அளவில்தான் இருக்கிறது. பதினாயிரக் கணக்கான மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை யொட்டிய விஷயத்தில் சர்க்கார் மெதததனமாக இருக்கிருர்கள். நான் இந்த அவையில் உறுப்பினராக இருந்தபொழுது, பட்ஜெட் விவாதத்திலோ, மானியத்திலோ, பேசியதாக நினைவு. சர்க்கார் முத்தரப்பு மகாநாடு கூட்ட வேண்டும். சர்க்கார் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் எல்லோரும் கூடிப் பேசி சரியான வழிவகை காணவேண்டு மென்று நான் கூறினேன். இப்போது பொறுப்புக்கு வந்திருக்கும் முதலமைச்சர் அவர்கள் நான் இதை ஆரம்பிக்கப் போகிறேன் என்று சொல்லுகிருர்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதை எடுத்துக்கொள்ளும்போது, " மாற்ருன் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் " என்று சொல்கிருர்கள். நாங்கள் அப்பொழுதே முத்தரப்பு

[திரு பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 8

மகாநாடு கூட்டவேண்டும் என்று சொன்னோம். இப்பொழுது சட்டசபையில் என்ன நடக்கிறது ? எதைப் பேசுகிறார்கள் ? முத்தரப்பு மகாநாட்டு ஒப்பந்தத்தை அமல்படுத்த வழிவகை உண்டா ? ஏதோ பேசி வைக்க வேண்டும் என்பதற்காகப் பேசிவிட்டுப் போகிறார்கள்.

கோவையில் பஞ்சாலைகளைத் திறக்க வேண்டுமென்றால், சர்க்கார் அந்தப் பக்கம் போகத் தயாராக இருக்க வேண்டும். முன்பு 44 மில்கள் தயாராக நடந்து வந்திருக்கின்றன. உற்பத்தி செய்யப்பட்ட நூல்கள் விற்கப்பட்டன, லாபம அதிலிருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றைய தினம் அந்த மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், "tip the rich and pat the poor" என்று சொன்னார்கள். இப்பொழுது அப்படி இல்லை. இப்பொழுது "fat the rich and eat the poor" என்று இருக்கிறது. இப்பொழுது கதை மாறிவிட்டது. மூன்று ஷிப்டுகள் வேலை செய்து, பல லட்சக்கணக்கான ரூபாய்களை கொடுத்து வந்த மில்கள் மூடப் பட்டிருக்கின்றன. இவைகள் ஏன் மூடப்பட்டிருக்கின்றன என்பதை யெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூடிய மில்களைத் திறக்க 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது போதுமா ? எந்தெந்த மில்கள் வேலைக்கு உதவாதோ, அவைகளை யெல்லாம் நீக்கிவிட்டு, மற்றவற்றைத் திறப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். இதற்கு குறைந்தது இரண்டு கோடி ரூபாயாவது தேவைப்படும். மத்திய சர்க்கார் இடத்திலிருந்து 2 கோடி ரூபாயை வாங்கி மில்களைத் திறக்க வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து பணத்தைப் போராடி வாங்கியாக வேண்டும். அப்படிப் போராடுகின்றபோது நானும் உங்களோடு போராடத் தயார்.

"கிங் சாலமன் அண்ட் தி பீஸ்" என்ற ஒரு கதை உண்டு. அதைப் போல நாம் வெளியிலே, ஒரு கற்பனை உலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். நாம் மத்திய சர்க்காரிடத்தில் ஒரு திட்டத்தை யாவது உருப்படியாகப் போட்டுக் கொடுத்தது உண்டா இல்லையே. எதையும் பேசத்தானே பேசுகிறார்கள். மேடை மீதுதான் பின்னால் பேசுகிறார்கள். நேரில் ஒன்றும் சரியாகச் சொல்வதில்லை. நேரடியான நடவடிக்கை என்ன ? அதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்திருக் கிறார்களா என்று பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு மாற்றான் தோட்டத்து மல்லிகை போன்ற தங்களிடம் இருந்து மணம் கிடைக்குமா ?

திரு. பி. ஜி. கருமதிருமன் : இதுவரைதான் நான் சொல்லிக் கொண்டிருந்தேனே, சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா, இல் லையா என்பதே தெரியவில்லை. 15 லட்சம் போதாது. 2 கோடி வேண்டும். முத்தரப்பு மகாநாடு கூட்டப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பல முத்தரப்பு மாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றன. அண்ணா அவர்கள் நடத்திய மாநாடுகள் பல. அவற்றில் ஒன்றில் தான் இடைக்கால நிவாரணமாக தொழிலாளர் களுக்கு உதவி செய்வது என்று முடிவு செய்யப்பட்டு, பலவகையில் செயல்பட்டு வருகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மில்கள் திறக்கப்படும் வரை உதவி அளிக்கப்படும் என்று அண்ணா அவர்கள் கையெழுத்துப் போட்டார்களே, போட்டபடி நடந்ததா ? மத்திய சர்க்காரைக் காட்டிவிட்டு ஏன் நழுவி விட்டீர்கள். நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். உங்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. பயப்படுகிறீர்கள். எதையும் தீர்க்காமல் காலத்தைத்தான் தள்ளிப்போட்டுக்கொண்டு வருகிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மூடப்பட்ட மில்களை மத்திய சர்க்காரின் உதவி இல்லாமல் திறக்க முடியும் என்று எதிர்க் கட்சித் தலைவர் மனப்பூர்வமாக நினைக்கிறார்களா என்று கேட்கிறேன்.

1969 மார்ச் 8]

திரு. பி. ஜி. கருத்திருமன் : மகாராஷ்டிர சர்க்காரால் முடிந்தது. ஏன் உங்களால் முடியாது ? வேண்டுமென்றால் உங்களது ஹேண்ட்லூம்ஸ் பைனான்ஸ் செக்ரடரியை குஜராத்திற்கு அனுப்பி அவர்களால் எப்படி முடிந்தது என்று பார்த்துவரச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க் கட்சித் தலைவர் திரும்பத் திரும்ப அந்த கருத்தையே வலியுறுத்துவதன் காரணமாக நான் குறுக் கிட வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் என்ன யோசனை சொல்கிறார்கள் என்று பார்த்தேன். அவர்களாலும் சொல்ல முடியாது. அண்ணா அவர்கள் குஜராத்தில் எப்படி சமாளிக்கப் படுகிறது என்பதைப் பார்த்து வர இங்கே இருந்து ஒரு அதிகாரியை அனுப்பினார்கள். அவரும் பல மில்களைப் பார்த்தார். அதிகாரிகளுடன் பேசினார். ஒரு அறிக்கையும் சமர்ப்பித்திருக்கிறார். அந்த அறிக்கையை நானும் பார்த்தேன். அங்குள்ள அரசு சில மில்களை ஏற்றுக் கொண்டதில் பெரு நஷ்டம் அடைந்திருக்கிறது என்று அதில் தெரிவித் திருக்கிறார்கள்.

முத்தரப்பு மகாநாடு எதுவுமே நடக்காததுபோல எதிர்க் கட்சித் தலைவர் பேசுவது வேதனையாக இருக்கிறது. பலமுறை—இரவு 2 மணி வரையில் கூட முத்தரப்பு மகாநாடுகள் நடந்திருக்கின்றன. இனிமேல் நடக்கும் போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் வேண்டுமானால் அழைக் கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பிரச்சினை இதுதான். நஷ்டம் வருகிறது என்றவுடன் ஒத்திவைத்துவிட்டீர்களா ? மத்திய அரசாங்கத்தின் உதவி எந்த அளவுக்குப் பெற்று குஜராத்தில் மில்களைத் திறந்தார்களோ, அதே உதவியுடன் நீங்களும் திறவுங்கள். நஷ்டம் வந்தால் வரட்டுமே. ஒரு கமிஷனைப்போட்டு விசாரித்து என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வது ? அந்த அறிக்கையை ஏன் சபையில் வைக்கவில்லை ?

இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட அந்த மாநிலத்து பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அங்கத்தினர்கள் இங்கே வந்திருந்தார்கள். அவர் களிடம் உணவுப் பிரச்சினை உற்பத்திப் பிரச்சினைப்பற்றிக் கேட்டோம். அரிசி உற்பத்தியாகின்றது, க்விண்டாலுக்கு 60 ரூபாயில் இருந்து 72 ரூபாய் வரையிலும் கொடுக்கிறோம் என்றார்கள். இங்கே 43, 45, 48 தான். மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் நீங்கள் 35 தான் கொடுப்போம் என்று சொல்லுங்கள். அதையும்தான் ஏற்றுக்கொள்வார் கள். நாளைக்கு ஜகஜீவன்ராம் வரட்டுமே, நான் பேசுகிறேன். வங்காளத்தில் 60-இல் இருந்து 70 வரை கொடுக்கிறார்கள். கேரளத் தில் 60, 70 கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும், உண்மையில் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய ஊக்கம் அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்றால் நீங்களும் கொடுக்கத்தான் வேண்டும். விவசாயிகள் நன்மை அடையவேண்டும் என்ற அக்கறை உங்களுக்கு இல்லை. பட்டிக்காட்டான் பட்ஜெட் அல்ல. பட்டணக்காரன் பட்ஜெட். இன்றைக்கு நூற்றுக்கு 75 சதவிகிதம் விவசாய மக்கள் கிராமத்தில்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. அவர்கள் எப்படிக் கஷ்டப்பட்டால் இவர்களுக்கு என்ன ? கேட்டால் சொல்வார்கள்.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

என்பதுபோல நீங்கள் சுழன்று கொண்டே இருங்கள், நாங்கள் சுபீட்சமாக இருந்துகொண்டே இருக்கிறோம் என்று சொல்வார்கள்.

விவசாயிகள் எங்கள் கட்சியில் இல்லையா என்பார்கள். அந்தக் கட்சி யிலும் விவசாயிகள் இருக்கிறார்கள். உங்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு பயந்துகொண்டு வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள். என்னிடம் வந்து

எத்தனைபேர் சொல்கிறார்கள் தெரியுமா ? நீங்கள் ஒருவர்தான் தைரியமாக இதை எடுத்துச் சொல்லக்கூடியவர், கண்டிப்பாகச் சொல்லவேண்டும் என்கிறார்கள். நான் ஆளும் கட்சியில் இருந்தபோதும் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். உற்பத்தி பெருக வேண்டுமென்றால் கட்டுபடியாகக் கூடிய விலை கொடுத்தாகவேண்டும். அவர்கள் வயிற்றைக் காயப்போட்டால் சுபீட்சம் ஏற்படாது என்பது மட்டும் அல்ல, எந்த ஆட்சியும் காய்ந்துபோய்விடும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன.

மத்திய சர்க்காரிடம் இருந்து உரிய பங்கைப் பெறவேண்டும், வருமான வரியில் பங்கைப் பெறவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இன்றையதினம் தமிழ்நாட்டில் யார் யார் லட்சக்கணக்காக 80 லட்சம், 90 லட்சம் என்று வருமான வரி கட்டாது, டிரஸ்ட் என்ற பெயரால் வைத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா ? ஒரு பத்து ரூபாய்க்கு, ஒரு விவசாயி என்றால் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறான். ஏன் இவர்களைக் கண்டுபிடித்து நீங்கள் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கக்கூடாது ? அதில் வேண்டுமானாலும் பங்குபெறுங்கள். லட்சக் கணக்கில் ஏமாற்றி வருகிற தேசத் துரோகிகளை—அவர் எந்தக் கட்சியைத் சேர்ந்தவராக இருந்தாலும் ஏன் விட்டுவைக்கிறீர்கள் ?

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர், 80 லட்சம், 90 லட்சம் என்று ஏய்க்கிறவர்கள் இருக்கிறார்கள், என்று சொன்னார், அவர்கள் பெயர்களை தயவுசெய்து சொல்ல முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : க்ளாரிபிகேஷன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் கௌரவமாகச் சொன்னேன். சிலவற்றை வெளிப்படையாகச் சொல்லலாம். சிலவற்றைச் சொல்ல முடியாது. பெயர்கள் வேண்டுமானால் நான் அமைச்சரிடத்தில் கொடுக்கிறேன். யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, எங்கள் கட்சியைவிட்டு வந்து சேர்ந்துகொண்டவர்களாக இருந்தாலும் சரி இந்தத் தேசத் துரோகிகளை கண்டிப்பாகப் பிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுபீட்சமான திட்டத்தை—காஷ் ப்ரொக்கிராம்—நடத்துகிறோம், உணவுப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்கிறார்கள். எங்கள் கட்சித் தலைவர் இங்கே தண்ணீர் இல்லையே, இங்கே அரிசி கிடைக்கவில்லையே என்றால் இவர் என்ன சொல்ல, இவர் பொருளாதார ஆலோசகரா எங்களுக்கு என்று மேடையிலே பேசுகிறார்கள். சட்டமன்றத்திற்கு வந்து, ஆமாம் ஆமாம் உணவுப் பஞ்சம், தண்ணீர் பஞ்சம் என்கிறார்கள். சொல்லும் போது ஏன் கேட்கவில்லை ? அதுவும் யார் சொல்கிறார்கள் ? இந்த
ந. ப. மன்றத்தில் பத்து வருடம் நிதி அமைச்சராக இருந்து, இவர்களுக்கு
12.00 இடம் கொடுத்துப் போய் இருக்கிறாரே, அந்த எங்கள் தலைவர் ஸி. எஸ். சொல்லும்போது ஆலோசகரா என்கிறார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்களே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள் பத்து வருஷம் பொறுங்கள், நீங்கள் வந்து உட்கார்ந்துகொள்ளலாம் என்றார்கள். அவர் சொல்லியது பலித்துவிட்டது. அவர்கள் சொன்னார்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்தவர்கள். 1965-ஆம் வருடம் எவ்வளவு கடும் பஞ்சம் வந்தது. அப்பொழுது அவர்கள் அமெரிக்காவுக்குப் போய் உணவுதானியம் 1 கோடி ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு வந்திருக்காவிட்டால் எத்தனை பேர்கள் இறந்திருப்பார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள்மீது என்ன என்ன குற்றங்கள் சாட்டியிருக்கிறார்கள்......

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்பொழுது உணவு அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று உணவு

தானியம் கொண்டுவந்தார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிக் கொண்டுவந்ததை வன்மையாக காமராஜர் அவர்கள் கண்டித்திருக்கிறார்கள் என்பது எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியுமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் வன்மையாகக் கண்டிக்கவில்லை. வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்யக்கூடாது என்று சொன்னார்கள். காந்திகூட ஒழுக்கத்துடன் இருக்கவேண்டும், கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். எல்லோரும் ஒழுக்கத்தோடும், கட்டுப்பாட்டோடும் இருந்துவிட முடியுமா ? காமராஜ் அவர்களை வேண்டுமென்றபொழுது கோட் பண்ணுகிறார்கள். வேண்டாமென்றால் விட்டுவிடுகிறார்கள். அவர்கள் சொல்லட்டும் காமராஜ் வழிதான் எங்கள் வழி என்று சொன்னால் நான் இப்படியே உட்கார்ந்துவிடுகிறேன். காமராஜ் வழிதான் அவர்கள் வழி என்றால் நான் ஒன்றும் சொல்லவில்லை......

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : காமராஜ் வழி எங்கள் வழி அல்ல வேறு. ஆனால் உங்கள் வழி அது அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்கள் வழி என்னவோ தெரியாது. அண்ணா வழி உங்கள் வழியல்ல. புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி வேண்டுமென்று நாங்கள் எங்கள் அறிக்கையிலே கொடுத்தோம். மேலவையிலே காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானம் புகுமுக வகுப்பிலே எல்லோருக்கும் இலவசக் கல்வி வேண்டுமென்று கொண்டுவந்தோம். அப்போது முதலமைச்சர் ஆக இருந்தவர் அதை எதிர்த்து ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். அப்படி வந்தால் கவனிக்கிறேன் என்று சொன்னால் கூட பரவாயில்லை. அதை எதிர்த்து ஓட்டுப்போட்டுவிட்டு இன்றைக்கு கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் சொன்னோம், நீங்கள் நடத்துகிறீர்கள் என்று சொன்னோம். நாங்கள் ஆட்சியிலிருந்தால் பி.ஏ.-க்குக்கூட கொண்டு வந்திருப்போம். நாங்கள் சுதந்திரப் போராட்ட காலத்திலே சொன்னோம். சுதந்திரத்தைப் பெற்றால் எல்லா மக்களுக்கும் ஓட்டுரிமை கொடுப்போம் என்று சொன்னோம். கொடுத்தோம். அதைப் போல பணக்காரர்களை ஒழிப்போம் ஜமீன்தார்களை ஒழிப்போம் என்றெல்லாம் சொன்னோம், செய்தோம். நீங்கள் சொன்னதை ஒன்றையாவது செய்திருக்கிறீர்களா ? 1 படி இரண்டு படி 3 படி என்று சொன்னீர்கள். இப்பொழுது அந்த ஒரு படிக்குக்கூட விதி கிடையாது. அதற்கே 8 கோடி ரூபாய் நஷ்டம் என்றும் அதை மற்ற இடங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் பார்ப்போம் என்றும் சொல்கிறீர்கள்.

பாரம்பரியம் பற்றியெல்லாம் சொன்னார்கள். எழும்பூர் தொகுதி அங்கத்தினர் நல்லபடியாகப் பேசினார்கள். இன்னும் நன்றாகப் பேசுவார்கள் என்று நினைத்தேன். பாராம்பரியம் என்று வந்தால் எங்கள் பக்கத்திலே கூட நீங்கள் வரமுடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய பாரம்பரியம் என்ன ? எங்களுடைய பாரம்பரியம் என்ன ? உங்களுடைய பராம்பரியம் 72 வயதுக் கிழவன் 22 வயது பெண்ணை கல்யாணம் செய்ததை வைத்துத்தான் நீங்கள் பிரிந்து வந்தீர்கள். உங்கள் தந்தையைப்பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு வேண்டியவர்தானே அவர்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பாரம்பரியத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால்.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் பேசிமுடியும் வரை வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் இன்னும் வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இன்னும் பேசவேண்டும். ஏனென்றால் அப்பேர்ப்பட்ட பட்ஜெட் இது. அருமையான பட்ஜெட். எத்தனை புள்ளி விவரங்கள், 287 கோடி ரூபாய் உள்ள பட்ஜெட். முடித்துவிடவேண்டுமென்றால் நிறுத்திவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை நிறுத்தச் சொல்லவில்லை. நேரத்தை வரையறுத்துப் பேசவேண்டும். வரையறை இல்லாமல் பேசிக்கொண்டிருக்கமுடியாது. இன்னும் எவ்வளவு நேரம் உங்களுக்கு வேண்டும் ?

திரு. பி.ஜி. கருத்திருமன் : இன்னொரு அரை மணி நேரம் கொடுக்க வேண்டும். பாரம்பரியத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். நீங்கள் 1947-க்குப் பின்னாலேதான் வந்தீர்கள். உங்களுடைய தத்துவம் என்ன ? சமூகச் சீர்திருத்தம்தான் அரசியல் அல்ல. சமூக சீர்திருத்தம் என்று சொன்னீர்கள். தனிப்பட்டவர் கல்யாணம் செய்துகொண்டார்கள். அன்று பிரிந்துவந்து தி.மு.க. அரசியலுக்குப் பிறகு வந்தார்கள். அவர்கள் பாரம்பரியம் கொண்டாடுவது என்றால் ஒருவர்தான் அதற்குத் தகுதியுடையவராக இருந்தார். அவர்தான் மறைந்த முதலமைச்சர். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரசியல் தகுதியை உண்டாக்கிய அவர்கள் மறைந்துவிட்டார்கள். அவர் விட்டுச்சென்ற கொள்கையை வைத்திருக்கிறார்களா ? முதலில் தனித் திராவிட நாடு வேண்டுமென்று சொன்னார்கள், பிறகு அது ஒவ்வாதது என்று விட்டுவிட்டார்கள். ஆனால் இங்கே பேசியவர்கள் இரண்டு மூன்று பேர்கள் பேசினார்கள், தனித் திராவிட நாடு ஏற்படுவதற்கான காரணங்கள் இன்னும் போய்விடவில்லை என்று சொல்கிறார்கள். அந்த வாசனை அடிக்கிறது. ம.பொ.சி. அவர்கள் போராடவே சர்க்காரும் வரவேண்டுமென்று சர்க்காரையும் இழுக்கிறார்கள். நீங்கள் அந்த வலையில் விழுந்துவிடாதீர்கள். அவருடைய கட்சி தனிப்பட்ட முறையிலேயே இருந்துவிடட்டும். தேர்தலுக்கு முன்னாலே அந்த வாக்குறுதியை எடுத்துக்கொண்டார்கள், தேர்தலுக்குப் பிறகும் விசுவாசமாக இருப்போம் என்று எடுத்துக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுது அந்த வாசனை வீசினால்..........

திரு. ம. பொ. சிவஞானம் : அரசியல் சட்டத்தின் மேல் விசுவாசப் பிரமாணம் எடுத்த ஒருவர், அரசியல் சட்டத்திற்குச் சட்டபூர்வமாக திருத்தம்கோரி கூடுதலாக அதிகாரங்கள் கேட்பது அதைத் திருத்த முயல்வது துரோகமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்களை நான் முற்றிலும் புரிந்து கொண்டேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : எனக்கு எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து விளக்கம் தேவை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : (குறுக்கீடு) நான் ஓடுவேனா ? நீங்கள் தான் ஓடவேண்டும், நான் ஓடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் சாசனத்தை வைத்துக் பிரமாணம் எடுத்ததற்கு மாறாக ம.பொ.சி. பேசினார்கள் என்று சொன்னீர்களே அதற்கு அவர்கள் விளக்கம் கேட்கிறார்கள். முறைப்படி திருத்தவேண்டுமென்று சொல்வது அதற்கு முரணானதா என்று கேட்கிறார்கள்..

திரு. பி. ஜி. கருத்திருமன் : திருத்தவேண்டுமென்று கேட்பதற்கு உரிமை உண்டு. ஆனால் சுயாட்சி என்று கேட்பதற்கு உரிமை இல்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : எதிர்க்கட்சித் தலைவர் மன்னிக்கவேண்டும். இது முக்கிய பிரச்னை. இதுபற்றி என்மேல் தவறான கருத்துகள் வந்துவிடும். சுயாட்சி என்பது ஆங்கிலத்திலே அட்டானமி என்ற மாதிரி. கூடுதலான அதிகாரங்கள் என்பதுதான் அட்டானமி என்பது. 1937-லே காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்தபோது புரவின்ஷியல் அட்டானமி என்று தான் சொன்னார்கள். சுயாட்சி என்ற தமிழ் வார்த்தை கம்பரிடம் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சுயாட்சி என்பதை அட்டானமி என்று ஆங்கிலத்திற்கு அவர்கள் தாவினார்கள். மிக மிக நன்றி. இனிமேல் தமிழ்தான் வேண்டுமென்று சொல்வதை விட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். தேவையான பொழுது ஆங்கிலத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள். ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் வார்த்தைக்கு ஆங்கிலத்திலே சொல்லி விளக்கம் அளித்தார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : திருத்தவேண்டுமென்பது வேறு. சுயாட்சி என்பது வேறு. அவரைப் போன்று எனக்குப் புலமை இல்லாமல் இருக்கலாம். நான் ஒரு சாதாரண விவசாயி. அதை விட்டுவிட்டேன், ஒருமைப்பாடு தான் இருக்கவேண்டுமென்று சொன்னால் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்...........

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : திரு. ம. பொ.சி. அவர்கள் கூறிய கருத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபோது அந்த வலையிலே நீங்கள் விழுந்துவிடவேண்டாம் என்று எங்களை எச்சரித்திருக்கிறார்கள். திரு. ம.பொ.சி. அவர்கள் மாநிலத்திற்கு மத்திய சர்க்காரிடமிருந்து குவிந்துள்ள அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்ற கருத்துப்பட அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை, மாநிலங்கள் சுயாட்சி அதிகாரங்கள் பெறவேண்டுமென்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படியே முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நன்றாக ஆதரியுங்கள், அதனுடைய விளைவுகளை மக்களிடத்தில் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள். பாரம்பரியத்தைப் பற்றிப பேசினார்கள். நாங்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போகவில்லையா என்று கேட்டார்கள். நாலடியாரில் ஒரு பாட்டு உண்டு—

“கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து—தானுந் தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

என்பதைப் போல், சுதந்திரப் போராட்டத்திற்காக பட்ட அடி, சிந்திய ரத்தம், செய்த தியாகத்தோடு நீங்கள் ஒப்புவமை சொல்லாதீர்கள். உங்களுடைய போராட்டங்களை, லட்சியங்களைத் தவறு என்று சொல்லவில்லை. அன்று நாங்கள் சிந்திய ரத்தம் வெள்ளையனை வெளியேற்றுவதற்காகச் சிந்திய ரத்தம். நீங்கள் இன்று ஆட்சியில் இருக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் செய்த தியாகந்தான்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்போது சிந்திய ரத்தம் மயில், இப்போது சிந்துகின்ற ரத்தம் வான்கோழி என்றால், நண்பர் சித்தன் அவர்கள் சொன்ன, மதுரையில் சிந்திய ரத்தம் வான்கோழியின் ரத்தந்தானா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : இது வான்கோழியா அது மயிலா என்று மாற்றி மாற்றிப் பேசவேண்டாம். வான்கோழி மீது உங்களுக்குப் பிரியம் அதிகம் என்று தெரியும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 8

நம்முடைய நாட்டினுடைய சுபிட்சத்தைப் பெருக்குவதற்கான வழி வகைகளைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, பழைய சர்க்காரைத் திட்டிக் கொண்டிருப்பதாலேயே காரியம் நடந்து விட முடியாது. காங்கிரஸ் காரர்கள் சொத்து சேர்த்துவிட்டார்கள் என்று அவர்கள் அன்று பேசினார்கள். பணக்காரர்கள் ஆகிவிட்டார்கள், லஞ்ச ஊழல்கள் பெருகி வருகிறது என்றெல்லாம் அன்று சொன்னார்கள். சொத்துக் கணக்கை மந்திரிகள் கொடுக்க வேண்டுமென்று அன்று சொன்னார்கள்.

* * * * *

* * * * *

மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையிலிருந்து படிக்கும் போது "சாக்கடைப் பத்திரிகை" என்று அவர்கள் சொன்ன அந்தப் பத்திரிகையைத்தான் கொண்டு வந்து படித்தார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாக்கடைப் பத்திரிகை என்று நான் சொல்லவில்லை. முன்பு தொழிலமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் சொன்னார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படியானால் நீங்கள் அதை நல்ல பத்திரிகை என்று ஏற்றுக் கொள்ளுகிறீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "சாக்கடை"யைப் சாக்கடை என்று அவர்கள் சொல்லும்போது அதை எப்படி "பூக்கடை" என்று நான் ஏற்றுக்கொள்ளுவேன் ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த அடுக்குமொழிகளை எல்லாம் பொதுக்கூட்டத்தில் வைத்துக் கொண்டால் நல்லது. சினிமா வசனத்தில் இதெல்லாம் வந்தால் நல்லது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று பத்திரிகையில் இருந்து எடுத்துச் சொன்ன அந்த சாமர்த்தியம் எனக்கு இல்லை. எந்த இடத்தில் எதை உபயோகப்படுத்த வேண்டுமோ அதை உபயோகப்படுத்த வேண்டும். கோடீஸ்வரர்களாக ஆகிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, உங்களுடைய சொத்து விவரத்தைச் சொல்லிவிட்டால் நல்லது. பதவிக்கு வந்திருப்பதால்தான் இதைக் கூறு கிறேன். மறைந்த முதலமைச்சர் அவர்களுடன் ஜனவரி 16, 17-ம் தேதிகளில் பேசிக் கொண்டிருந்தேன். அவரே என்னிடத்தில் தனி யாகச் சொன்னதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படியெல்லாம் தவறாகப் பத்திரிகைகளில் எல்லாம் எழுதுகிறார்கள், இப்படியெல்லாம் பத்திரிகை களில் வரு என்று சொன்னார்கள். அந்தப் பத்திரிகைகளில் புள்ளிவிவர டு யார் யார் இப்படிச் சொத்துச் சேர்த்திருக்கிறார்கள் என்று கூறிபாருக்கிறதா ? அப்படி அவர்கள் ஒழுங்காக எழுதுவார் களானால், விபரம் காட்டுவது தேவையாகும். அப்படி எழுதினால் அவர்களை வழக்குமன்றத்தில் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ரொம்ப நன்றி. அன்றைய முதலமைச்சர் அவர்கள் என்னிடம் பேசும்போது, இப்படியெல்லாம் சொல்லக்கூடிய அளவுக்கு திடுக்கிடும் செய்திகளைக் கேட்டேன், என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களிடம் சொத்து விவரங்களை எல்லாம் கொடுத்து வைத்திருக்கிறார்களா இல்லையென்றால் கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன். 50 லட்சம் ரூபாய், 60 லட்சம் ரூபாய் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒருவர் 50 லட்சம் ரூபாய் வரை சம்பாதித்ததாகச் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1969 மார்ச் 8]

திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்திலே பேசுகிறபோது யாராவது பணம் சேர்த்தார்கள், வைத்தார்கள் என்றுசொன்னால் குறிப்பிட்டு ஆதாரத்தோடு பேசவேண்டுமே தவிர, பொதுப்படையாக ஒரு பத்திரிகையிலே வந்திருப்பதை வைத்துப் பேசுவது சரியல்ல. இதே மாதிரி பழைய சர்க்காரிலே "பத்து லட்சம்" என்றெல்லாம் பெயர் வந்திருக்கிறது. அமைச்சர்களைப் பற்றிப் பேசும் போது ஆதாரத்தோடு இன்ன அமைச்சர் இந்த வகையில் பணம் சம்பாதித்திருக்கிறார் என்று பேச வேண்டும். மற்றபடி பேசுவது ஒழுங்காக இருக்காது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்குப் புத்தி சொல்ல வேண்டியதில்லை. எதையெதை எப்படிப் பேசவேண்டுமென்று எனக்குத் தெரியும். வெளியே பேசும்படியான பேச்சுக்களை உங்களுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். இதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பொறுப்பு இருக்கவேண்டும். சொத்துக் கணக்குகளைக் காட்டுவதற்காக மசோதா கொண்டுவருவதற்காக எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டிப் பேசினோம். எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்கள், சபைத் தலைவர்கள் அனைவரையும் சேர்த்து ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில் ஒரு அமைச்சர் 50 லட்சம் ரூபாய் சம்பாதித்து விட்டதாக அவர் சொல்லுவதானால் அதை அவர் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும், இல்லாவிட்டால் வாபஸ் வாங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல முறை சொல்லியிருக்கிறேன். எரிந்த கட்சி எது, எரியாத கட்சி எது என்று நிலைமை ஏற்படக் கூடாது. குற்றம் சாட்டினால் ஆதாரத்தோடு பேச வேண்டும். குற்றம் சொல்லுகிறவர் கள் குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சாதாரண உறுப்பினருக்கே அது பொருந்தும் என்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதை உணர்ந்து அந்த மரபைக் கட்டிக் காப்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வெளியிலே சொல்லுகின்ற தகவல்களை வைத்து இங்கே பேசுவது தவறு என்று நான் நினைக்கவில்லை. இவர் தான் என்று குறிப்பிட்டுச் சொல்லி நிரூபிக்க வேண்டுமென்று கூறு கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிலே பேசுகின்ற பேச்சுக்களை எல்லாம் இந்த மன்றத்திலே பேசுவது முறையாக இருக்காது என்று பலமுறை தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையில் வந்ததை எடுத்துக் கூறுகிறேன். வேண்டுமானால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்ததை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவார்களானால் பத்திரிகையில் வந்த செய்தியை இங்கே கூறுகிறபோது அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண் டும். இந்த மன்றத்திலே எதை ஆதாரமாக வைத்து பேசுகிறார்களோ, அந்த கூற்றுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அதற்கு மாறாக பத்திரி கையிலே வந்தது, எனக்குத் தெரியாது என்று தட்டிக் கழித்து விடும் போக்கிலே மன்றத்திலே பேசக் கூடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சட்டசபையிலே கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது. எடுத்துச் சொல்லக்கூடிய நேரத்தில் குறிப்பிட்டு ஒருவர் பெயரைச் சொன்னால்தான் தவறு என்று எடுத்துக்கொள்ள வேண்டும். முன்னாலெல்லாம் சொன்னார்களே, அதையெல்லாம் நிரூபியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கூறுவது எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு மட்டும் அல்ல. அமைச்சர்களாகயிருந்தாலும், அங்கத்தினர்களாகயிருந்தாலும், யாராகவிருந்தாலும் இந்த மன்றத்தில் கூறுகின்ற ஒரு குற்றச்சாட்டுக்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தக்க ஆதாரத்தோடு பேச வேண்டும். பத்திரிகையிலே வந்தது, எனக்குத் தெரியாது, யாரோ கூறினார்கள், எனக்குத் தெரியாது என்று பின்னாலே தட்டிக் கழிக்கும் முறை கூடாது. நீங்கள் பேசுவதற்கு உரிமையில்லை என்றோ, பேசக் கூடாது என்றோ கூறவில்லை. பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை கட்டுப்பட்ட நிலையிலே பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது அப்பொழுதிருந்த சபாநாயகர் திரு. செல்லப் பாண்டியன் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். எந்த அமைச்சர் மீது எந்தக் குற்றத்தைச் சாட்டினாலும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும், அதன் விளைவுகளையும் அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று இதே மன்றத்திலே தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஒரேயொரு முடிவு, சொத்துப் பிரச்சினைக்குச் செய்துவிட்டால், பில் இருக்கிறது என்று சொன்னார்கள், பேசியிருக்கிறேன், அதனால் தவறான எண்ணம் போகக்கூடும் என்று ஆலோசனை சொல்லுகிறேன். என்னைப்பற்றிக்கூட ஆயிரம் ஏக்கர் ......

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அன்று அந்த மசோதாவிலே திரு. பக்தவத்சலம் அவர்கள் எந்தெந்தக் காரணங்களைக் கூறி எதிர்த்தார்களோ அதே காரணங்களுக்காக அன்று எதிர்த்தார்கள். கடைசியிலே இன்றும் அப்படியே பேசினார்கள். இன்றைக்காவது சொல்லட்டும், அந்த மசோதா வேண்டுமா, வேண்டாமா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : முன்னாலே எதிர்க் கட்சியிலே இருந்த பொழுது திரு.மாதவன் அவர்கள் கொண்டு வந்தார்கள். இப்பொழுது அதை நிறைவேற்றுவது என்றால் எப்படி எதிர்க்க முடியும் ? மசோதாவைக் கொண்டுவாருங்கள். கொண்டு வந்து நிறைவேற்றுங்கள். திரு. பக்தவத்சலம் அவர்களைச் சந்தித்து இந்த மசோதாவைப் பற்றி பேசவில்லை. குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடிய நேரத்தில் அது தவறு என்று சொன்னால் எடுத்துக்கொள்ளலாம். பல பத்திரிகைகளிலே வரலாம். தவறு என்றால் இம்மாதிரியான பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லவில்லை என்று மறைந்த முதலமைச்சரவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசியபோது சொன்னேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நடவடிக்கை எடுக்க முடியாமல் அல்ல. பத்திரிகையிலே, "கருணாநிதி 50 இலட்சம் வருமான வரி செலுத்துகிறார் என்பதாக வதந்தி" என்று போட்டுவிடுகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட சமயத்தில் பத்திரிகைகளில் வழக்குத் தொடருகின்ற நேரத்தில், வீராதிவீரர்களாய், சூராதிசூரர்களாய் எழுதுகின்றவர்கள் நீதிமன்றங்களில் "நாங்கள் பத்திரிகையை அச்சிடவில்லை", அவர்களே பத்திரிகையை அச்சடித்துக் கொண்டு எங்கள் மீது சொல்லுகிறார்கள் என்று கூறுகிறார்கள். இப்படி வீரமாக இருக்கின்றவர்கள், உறுதியான உள்ளத்தோடு இருக்கின்றார்கள் என்றால் திட்டவட்டமாக எழுதட்டும். வதந்தி என்றில்லாமல், புனைபெயர் என்று போட்டுக்கொள்ளாமல் எழுதட்டும், இன்னினாருக்கு இவ்வளவு என்று எழுதினால் அவர்களை வழக்கு மன்றத்தில் மட்டுமல்ல, எந்த மன்றத்திலும் சந்திக்கத் தயாராகயிருக்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதேமாதிரி சில பத்திரிகைகள் இருக்கின்றன. அந்தப் பத்திரிகைகள், மஞ்சள் பத்திரிகைகள், செய்திப் பத்திரிகைகள் என்ற அளவிலே தவறான முறையில் போட்டுக்கொண்டிருக்

கின்றன. அந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு அவரைப்பற்றியும், நாளைக்கு வேறொருவரைப்பற்றியும் எழுதலாம். பொறுப்பற்ற முறையில் எழுதலாம். இம்மாதிரி தவறான செய்திகளைப் போடுபவர்கள் யாராகயிருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

திரு. முனு. ஆதி : தலைவரவர்களே, இத்தனையித்தனை லட்சம் என்று சொல்லட்டுமா என்று சொன்னார்கள். அதைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அதை வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால் அதை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து தாங்கள் அகற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கைக் குறிப்பிலே அவர்கள் பேசியதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதும் இருந்தால் தான் நல்லது.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பத்திரிக்கையிலிருந்து படித்தல்.

Dr. H. V. HANDE : On a point of Order, Sir. The Chair must give a clear ruling whether it is possible for any Member to bring such sweeping charges in the House by reading from such papers. Suppose we bring all sorts of papers attacking all sorts of people and read those things in the House, it will create a bad impression outside. The Chair should give a clear-cut ruling on this important point since it will serve as a precedent for the rest of our term, viz., two or three years. We must be told clearly whether we should or should not be allowed to bring all sorts of papers and try to read from them in the House. Suppose I bring some paper tomorrow and try to read allegations in it against the hon. Member Thiru Karuthiruman, it will give a wrong impression. Day after tomorrow, some other papers might write a lot of things. So, I request the Chair to give a clear-cut ruling, whether the proceedings that had happened so far, from the time of Thiru Karuthiruman reading from the paper are in order and if they are not in order, whether the concerned portions could be expunged from the records. I request the Chair to give a clear-cut ruling.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் யாரும் அவையில் தாங்கள் பேசும்போது பத்திரிகையைப் படிக்கக் கூடாது. பத்திரிகை படிப்பதற்கு முன்பு பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றே படிக்க வேண்டும். அப்படிப் படிக்கின்ற நேரத்திலே என்னென்ன விளைவுகள் அதனால் ஏற்படுமோ அதை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். பத்திரிகையிலே உள்ளதைத்தான் படித்தேன். பத்திரிகையிலே இருந்தது என்று சொல்லி தட்டிக்கழித்துவிடக்கூடாது என்று நிறையத் தீர்ப்புகள்இருக்கின்றன "**Members should not make** vague allegations. They should take full responsibility for the statements they make on the floor of the House" என்றிருக்கிறது. பத்திரிகையிலே உள்ளதைக் கூறிவிட்டோம் என்று தட்டிக் கழித்துவிட்டுப் போக முடியாது. பத்திரிகையிலே வந்தாலும், எந்த உறுப்பினர் இந்த மன்றத்திலே அதைக் கூறுகிறாரோ அவர் அதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும், அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது.

> While making allegations against Officers, Members should make sure that there was substance in them and they should take full responsibility for the allegations என்றிருக்கிறது.

DR. H. V. HANDE : What is the ruling you are giving, Sir? Suppose I read from some papers, ten charges against a member. Is it going to be allowed or will it be expunged? We want a clear-cut ruling.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் சொன்னேன். 10 லட்சம் சம்பாதித்திருக்கிறார்கள். 50 இலட்சம் சம்பாதித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் பத்திரிகையிலே வந்தது என்று மட்டும் சொல்லிவிட முடியாது. அதற்கு அவர் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். வழக்கு மன்றத்திலும், மற்ற இடத்திலும் நான் கூறவில்லை என்று கூறிவிட முடியாது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, இப்பொழுது பத்திரிகையிலே வந்த செய்தியை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் படித்தார்கள். பத்திரிகையிலே வந்திருப்பதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவர்கள். அப்படிப் பத்திரிகையிலே வந்ததற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா, அல்லது அதைத் திரும்பப் பெறுகிறார்களா என்பதற்கு ஒரு தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி தலைவர் தீர்ப்பு கொடுப்பது என்பது அல்ல. பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிய பிறகு, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு இருக்கிறது. நான் கூறவில்லை, பத்திரிகையிலே வந்ததை நான் கூறிவிட்டேன் என்று சொன்னால் தான் கூறியதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வதாகத்தான் பொருள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, கடைசியாக நான் சொல்லும்படியான விஷயம் என்னவென்றால், சர்க்காரிலேயுள்ள அவர்கள் எதிர்க்கட்சியாகயிருந்தபொழுது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களிடம் ஒரு விளக்கம் பெற வேண்டிய நிலையில் இருக்கிறேன். நான் தீர்ப்புக் கொடுத்துவிட்டேன். பொறுப்பை ஏற்றிக்கொள்ளுகிறீர்களா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையிலே வந்ததை நான் சொல்லுகிறேன். அவர்களெல்லாம் படித்தபோது நான் மட்டும் படித்தது தப்பா ? அதில் இருப்பதைச் சொன்னேன். இல்லை என்றால் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு விளக்கம் வேண்டும். படிப்பதை வேண்டாமென்று சொல்லவில்லை. மன்ற விதிகள் என்ன சொல்லுகிறது என்றால், பத்திரிகையிலே வருவதையோ, வெளியிலே சொல்வதையோ கூறுவது என்றால் அப்படி கூறுகின்ற உறுப்பினர், அந்தக் கூற்றுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் சட்ட மன்ற விதிமுறை. அதையொட்டி, இப்பொழுது " அந்தப் பத்திரிகையிலே படித்ததை நானும் ஏற்றுக்கொள்கிறேன், அதை நான் உறுதி செய்கிறேன், பொறுப்பேற்றுக்கொள்கிறேன்" என்று சொல்கிறீர்களா, அல்லது " பத்திரிகையிலே வந்ததற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது " என்று சொல்கிறீர்களா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : வெளியிலே வந்த தகவல்களைச் சொல்லும்படியான நிலையில், அதை அரசாங்கம் மறுக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பலமுறை சொன்னேன். காமன் பண்டிகையில் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்பது போல ஆகிவிடக் கூடாது. பேசுகின்ற உறுப்பினர்கள் அதற்குப் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். நான் கூறுவதைக் கூறுகிறேன், அவர்கள்

கூறுவதைக் கூறட்டும் என்ற நிலையிலே கூறுவது முறையாகாது. இந்த மன்றத்திற்குள்ள பெருமையை, மரபைக் காப்பாற்றுவதில் என்னைக் காட்டிலும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குப் பொறுப்பிருக்கிறது. அதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் குற்றம் சாட்டுகிறேன். அதை மறுப்பதற்கு சர்க்காருக்குக் கடமை இருக்கிறது. இப்படி யில்லையென்றால் மறுத்துச் சொல்லட்டும். இல்லையென்று சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லியதை நான் சொல்லுகிறேன், நான் குற்றம் சாட்டுகிறேன், அதை அவர்கள் மறுக்கட்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பத்திரிகையிலே வந்த குற்றச்சாட்டுகளைப் படித்துக் காட்டினார்கள். அந்தப் பத்திரிகையிலே வந்ததை அவர்கள் நம்புகிறார்களா இல்லையா, நம்புவதாகயிருந்தால் அந்தக் குற்றங்களைச் சாட்டுகிறார்களா இல்லையா, அப்படி நம்பி குற்றஞ் சாட்டுகிறார்கள் என்றால் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையிலே வந்த விஷயங்களைச் சொல்லுகிறேன். வெளியிலே சொல்லும்படியானவற்றைச் சொல்வதற்கு, சட்டசபையில் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. எத்தனையோ குற்றச் சாட்டுகள் சொல்லப்படுகின்றன வெளியிலே, அவைகள் வதந்திகளாகவும் இருக்கலாம், உண்மையாகவும் இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், கேளுங்கள். இந்த தீர்ப்பு நீண்டகாலத்திற்கு முன்புகூட கொடுக்கப்பட்ட தீர்ப்பு அல்ல. 1966-லே திரு. செல்லபாண்டியன் சபாநாயகராக இருந்த காலத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்பு. அந்த தீர்ப்பு, " இந்த மன்றத்திலே எந்த உறுப்பினரும் பத்திரிகையிலே கூறுகிறார்கள், வெளியிலே கூறுகிறார்கள் என்று கூறிவிட முடியாது. அப்படி கூறினால், கூறுகின்ற அந்த உறுப்பினர் கூறிய அந்த சொற்களுக்குப் பொறுப்பாளியாக வேண்டும், பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்," என்பது. நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலே கேட்பது, " அந்தப் பத்திரிகையிலே வந்ததைக், கூறினேன், நான் அதை நம்பவில்லை, அதை ஏற்றுக்கொண்டு கூறவில்லை, வந்ததைக் கூறினேனே தவிர, நான் குற்றஞ் சாட்டவில்லை," என்று சொல்கிறாரா என்பதுதான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதைத்தான் நான் சொல்கிறேன், பத்திரிகையிலே இப்படி வரும்படியான நிலை இருக்கிறது. அதனால் அமைச்சர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படும்படியான நிலை இருக்கிறது. அதை நான் எப்படி நம்பமுடியும் ? அதன்மேல் நடவடிக்கை எடுக்கட்டும். இதுமாதிரியான தவறான செய்திகளை . . . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த உண்மையான ஒன்றைச் சொல்கிறார்கள். இந்தப் பத்திரிகையிலே தவறான கருத்துக்கள் வந்திருக்கின்றன, நடவடிக்கை எடுங்கள் என்று எங்களை அவர் கேட்டுக்கொண்டதாக ஒத்துக் கொண்டார்கள். ஆகவே, இந்த விவகாரத்தை விட்டுவிடலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தவறான கருத்துக்களை, மக்கள் நம்பக் கூடிய நிலையிலே கொடுத்தால், அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கும் நிலையிலே இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆக, இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள், பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது, அந்த செய்தி தந்திருக்கிற பத்திரிகைமீது நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள்,

ஆனால், அந்தச் செய்தியை நான் உறுதி செய்வதாக இல்லை," என்று சொல்லுகிறார். என்னுடைய கடமையை நான் ஆற்றவேண்டியிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களுடைய பொறுப்பு, அப்படிப்பட்ட பேச்சுகளுக்கு சட்டமன்றத்தில் இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ளுவது. பத்திரிகையிலே வந்த செய்திகள், யாரோ கூறுகிற செய்திகள், இவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே கூறுவதற்கு இடம் இல்லை. அப்படி பார்த்துக்கொள்ள வேண்டியது என்னுடைய பொறுப்பு. நீங்கள் ஏதாவது கூறுங்கள், அவர்கள் ஏதாவது கூறட்டும், அது உங்களுக்குள்ளே இருக்கிற விவகாரம். ஆனால், சட்டமன்றத்திலே அப்படிப்பட்ட பேச்சுகளுக்கு இடம் கிடையாது. அதுதான் தீர்ப்பு. நான் பத்திரிகையிலே வந்த செய்தியைக் கூறுகிறேன், அமைச்சர்கள் மறுத்தால் மறுக்கட்டும் என்ற முறையிலே பேசுவது முறையாகாது. இதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ந்து அந்த மரபைக் காக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்கு மரபும் தெரியும், அதை காத்துக்கொள்ளவும் தெரியும். அப்படி பத்திரிகையிலே....

DR. H. V. HANDE : On a point of Order, Sir. The ruling given by the Chair is like this. If the hon. Leader of the Opposition comes to the House and says "these are allegations that are found in the papers, but I do not believe them", even then, it sets a dangerous precedent. Tomorrow I can say "These are allegations against Thiru Karuthiruman but I do not believe them". I can go on reading a "பட்டியல்"..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறேன். திரு. கருத்திருமன் அவர்கள் அப்படி கூறியதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி கூறக்கூடாது என்றுதான் நான் தீர்ப்பளித்திருக்கிறேன். ஆகவே, "கூறிய சொற்களை, பத்திரிகையிலே வந்த செய்திகளைக் கூறியதை நான் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்," என்றாவது கூறுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதை எப்படி திரும்பப் பெற்றுக் கொள்ளுவது ? திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று எப்படிச் சொல்வது ? பத்திரிகையிலே வந்த செய்திகளைக் கூறுகிறேன். அமைச்சரவர்கள் மறுக்கட்டுமே. அவர்கள் மட்டும் பக்கம் பக்கமாக படிக்கலாம், நான் மட்டும் சொல்லக் கூடாதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் பத்திரிகைகளிலே வந்த துணுக்குகளைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் அவைகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு பேசினேன். அதைப் போல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டு பேசுகிறாரா என்றுதான் எதிர்க்கட்சித் தலைவரவர்களிடம் பேரவைத் தலைவர் கேட்கிறார். "நான் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை," என்று அவர் சொன்னால் பிரச்னை முடிந்துவிடும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆனால் செய்திகளைச் சொல்லுவதற்கு உரிமையில்லையா சபை அங்கத்தினருக்கு பொது மக்கள் என்ன கேட்கிறார்கள்? "ஐயா, இதுமாதிரி பத்திரிகையிலே வந்திருக்கிறது, சட்டசபையிலே கேட்டு, சொல்லுங்கள், மந்திரிகளிடம் கேளுங்கள்" என்றுதான் என்னிடத்திலே சொல்கிறார்கள். நான் அவைகளை இங்கு சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். உங்களுக்கு உரிமையில்லையென்று நான் சொல்லவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தியை, உங்களிடத்திலே மற்றவர்கள் சொல்லுகின்ற செய்தியை நீங்கள் கூறக்கூடாது என்று நான் தீர்ப்பு கூறவில்லை.

ஆனால் கூறுகின்ற நேரத்தில் அந்த கூற்றுக்கு, நீங்கள் சொல்லிய சொற்களுக்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். "நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்," என்று சொன்னால் விவகாரம் முடிந்துவிடும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையிலே வந்த செய்தியைச் சொல்வதற்குத் தான் பொறுப்பேற்க முடியும். அதனுடைய பூரணத்துவத்திற்கு நான் எப்படி பொறுப்பேற்றுக் கொள்ளமுடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய சட்டமன்ற விதிகள் அப்படி இருக்கின்றன. நாமே தயாரித்த சட்டமன்ற விதிகள்தான். (குறுக்கீடு) தீர்ப்பை இப்பொழுதுதான் படித்தேன். (குறுக்கீடு) ரூல் நம்பர் தேவையில்லை. இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் இருக்கின்றன. திரு. செல்லபாண்டியன் அவர்கள் கொடுத்த தீர்ப்பு, அது. நீங்கள் கூறக்கூடாது என்று சொல்லவில்லை. கூறுவதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். பொறுப்பேற்றுக்கொள்ளாத சொற்களை இந்த மன்றத்திலே கூறக்கூடாது, அதுதான் விதி, அதுதான் முறை, அதுதான் மரபு. இந்த மரபை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காக்கவேண்டுமென்று விரும்புகிறாரா, இல்லையா. (குறுக்கீடு) இதுதான் எனக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இருக்கிற பிரச்னை. இந்த மன்றத்தினுடைய மரபைக் காக்கவேண்டும். அதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விருப்பம் உண்டா இல்லையா ? அப்படி விருப்பம் இருக்கிறது என்றால் பொறுப்பேற்றுக்கொள்ளாத சொற்களைக் கூறக்கூடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான்தான் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. வந்த செய்திகளை நான் சொல்லியிருக்கிறேன். அதை மறுப்பதற்குச் சர்க்காருக்கு உரிமையிருக்கிறது. அவர்கள் மறுப்பார்களானால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுதானே மரபு ? எனக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறேன், சர்க்காரிடத்திலே இன்ன குறை இருக்கிறது என்று சொல்கிறேன். சர்க்கார் மறுப்பார்களானால் அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தானே சட்டசபை விதிகளிலே இருக்கிறது ? ஏதோ ஒன்று, சர்க்கார் மறுக்கிறார்கள், மறுப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்லுங்கள், ஆளும் கட்சி மீது குற்றம் சாட்டுங்கள். ஆளும் கட்சியினர் குற்றத்தை மறுக்கட்டும். அது உங்களுக்குள்ளே இருக்கின்ற விவகாரம். ஆனால் கூறுகின்ற முறை எப்படி இருக்கவேண்டுமென்பதுதான் நான் கூறுவது. கூறுகின்ற கூற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டும். பொறுப்பேற்றுக் கொள்ளாத சொற்களைக் கூறக் கூடாது. இது மரபு. இதை நான் காக்கவேண்டும். அதைக் காக்க கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் அதிலே பொறுப்பு உண்டு. "நான் கூறுகின்ற சொற்களுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னால், அந்த சொற்களை இந்த மன்றத்திலே கூறுவது முறையாகாது.

*** திரு. டி. மார்டின் :** பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த அவையில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது, ப்ரீடம் ஆப் ஸ்பீச் இருக்கிறது. அந்த ரைட்டை, அந்த ஸ்பீச்சை என்றுமே மன்றம் மறுத்ததில்லை. ஆனால் என்னுடைய தலைவரவர்கள் பேசுகின்ற பொழுது பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைத் தங்களுடைய அனுமதியின்பேரில் படித்து, தங்களுடைய கவனத்திற்கும் அந்தப் பத்திரிகையைக் கொண்டுவந்து உங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இதே மன்றத்தில் காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள், நடந்த தீ வைப்பு சம்பவத்தைப்பற்றி பேசுகின்றபோது, அந்த இடத்திற்குப் போனபோது அங்கு ஒரு மூதாட்டி அவரிடம் கூறியதை இந்த அவையில் கூறி இருக்கிறார்கள். அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியே செல்லு

கின்றபொழுது மக்கள் அவர்களிடம் சொல்லுகின்ற ஒவ்வொரு காரியத்தையும், மக்கள் அவர்களிடம் சொல்லுகின்ற குறைகளையும் இந்த மன்றத்தில சொல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முழு உரிமையும், ரைட்டும் இருக்கிறது. வெளியே பேசுகின்ற பேச்சை, ஒரு மூதாட்டி சொன்னதை இந்த மாமன்றத்தில் காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) கொஞ்சம் பொறுங்கள், நான் பிரச்னைக்கு வருகிறேன். ஆனால் இந்த மாமன்றத்தில் யாரையாவது ஒரு தனிப்பட்ட உறுப்பினரையோ அல்லது ஒரு அமைச்சரையோ, டெபமேஷன் வரக்கூடிய அளவில் அல்லது அதனாலே டார்ஷஸ் லயபிலிடி வரக்கூடிய அளவில் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டினால் அதற்கான ஆதாரத்தை அந்த உறுப்பினரிடம் கேட்பதற்கு உரிமையிருக்கிறது. ஆனால் பொதுப்படையாக மக்களிடத்தில் இருக்கிற குறையை, அல்லது குற்றச்சாட்டு என்று வைத்துக்கொள்வோம், பொதுப்படையாக இருக்கிறபொழுது எதிர்க்கட்சித் தலைவர் இந்த மன்றத்தில் சொல்லி (குறுக்கீடு) இது முக்கியமான பிரச்னை. அப்படி சொல்லுகின்ற பொழுது ஆளும் கட்சியினருக்கு முழு உரிமையிருக்கிறது அதை எதிர்ப்பதற்கு. ஆனால், அதே நேரத்தில் தாங்கள் ஆதாரம் வேண்டுமென்று சொன்னால், சிற்சில பிரச்னைகளுக்கு சில சாட்சியங்களையே அழைத்து வரவேண்டியதாக இருக்கும். சிற்சில பிரச்னைகளுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகின்ற நேரத்திலே ஒரு பிரசங்கமே பண்ணக் கூடாது. நீங்கள் உட்காருங்கள். இப்பொழுது நீங்கள் பேசுவதற்கு இடம் கொடுக்கவில்லை என்று பொருள் அல்ல.

'If a question contains a statement . . . ,
நம்முடைய மார்டின் அவர்கள் உணரவேண்டும்.

'If a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement'.

THIRU J. JAMES : That is with regard to questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேள்வி கேட்பதே ஒரு வகையான பேச்சுதான். அதுதான் இந்த மன்றத்திலே பேசுகின்ற முறையாக வகுக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் கூறுகின்ற கூற்றுக்கு உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் வெளியே பொதுமக்கள் கூறுகின்றார்கள் என்றால், நாமெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள். பொது மக்கள் கூறிய உடனே, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த கூற்றிலே உண்மை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து தான் பேசவேண்டும். பொது மக்கள் கூறி விடுகிறார்கள் என்று நாம் கூறிவிடுவோமானால் நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கமுடியாது. நான் தெளிவாகச் சொல்கிறேன். இந்த சட்டமன்றத்திலே, எந்த உறுப்பினர், எந்தவிதமான கருத்தைக் கூறுவதாக இருந்தாலும், கூறினாலும், அந்த கருத்துக்கு அதைக் கூறிய உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் பொறுப்பேற்றுக்கொள்ளாதவைகளை இந்த மன்றத்திலே பேசக்கூடாது. அது தான் இந்த மன்றத்திலே இருக்கிற மரபு. அந்த மரபைக் காப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் நியதி. "இப்பொழுது பத்திரிகையிலே வந்ததை சொன்னேன், மறுபடியும் அதையே சொல்கிறேன், நான் கூறினேன், அமைச்சர் மறுக்கட்டும்" என்று சொல்கிறார்கள். நான் கூறியதற்குப் பதில் இல்லை. சாட்சியங்களை இன்றைக்கேவா அழைத்து வரப்போகிறார்கள். சாட்சியங்களை அழைத்து வரட்டும். சாட்சியங்களைக் கூப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டால் சாட்சியங்களையோ மற்றவர்களையோ கூப்பிட வேண்டும். அந்த அளவுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளவில்லையென்றால்

"நான் ஏதோ கூறினேனே அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது," என்று சொன்னால், அப்படிப்பட்ட கூற்றுக்களை இந்த மன்றத்திலே கூறக்கூடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இருக்கும் பிரச்சினையை, எனக்கு வந்த தகவல்படி சொன்னேன். அமைச்சர் மறுக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் அதைத் தான் செய்தார்கள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனாலும், பரவலாகப் பேச்சுக்கள் இருக்கின்றன. அமைச்சர்கள் அவற்றை மறுத்து, நிரூபித்தால், அவர்களுடைய பெருமை உயரும். அவ்வளவுதான். வேறொன்றும் இல்லை.

(திரு. பெ. சீனிவாசன் தன் இடத்தில் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அடுத்தபடியாக, குதிரைப் பந்தயத்தைப் பற்றி . . . .

திரு. பெ. சீனிவாசன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்துக்கு அவர்களே பொறுப்பு ஏற்கவேண்டும் என்று தாங்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஒன்று அவர்கள் வாபஸ் பெற வேண்டும், அல்லது நிரூபிக்க வேண்டும். இரண்டும் இல்லாமல், மழுப்பிவிட்டு, மேலே பேசுவது முறையாக இருக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கும் நிலை சட்ட மன்ற நிகழ்ச்சிகளில் இருக்கிறது, பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்ப்புக்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய நிலையை அதைப் படிக்கிறவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

(6) 1969–70-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அடுத்தபடியாக, குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கும் குதிரைகள் ஓடிக் கொண்டு தான் இருக்கின்றன. அதைப் பற்றி ஆட்சேபணையில்லை. ஆனால் அங்கே நடக்கும் நிகழ்ச்சிகள், எங்களுக்குத் தெரிந்த அளவில், தவறாக நிர்வாகிகள், ஒழுங்காக நடப்பது இல்லாமல், அரசியல் பிரச்சினையாக்கி, வேறு வேறு விதமாக நடக்கிறது. அதற்கு ஒரு உயர் நீதிபதி ஒருவரை நியமித்து, ரேஸ் கிளப்பில், என்னென்ன நடக்கிறதோ, அதை ஒரு கமிட்டி போட்டு விசாரித்து சீர்திருத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆலோசனை கூற விரும்புகிறேன். பல விதமான சூழ்நிலைகள் இருக்கின்றன. அரசியல் சூழ்நிலை காரணமாக, தவறான முறையில் போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்று புகார்கள் இருக்கின்றன. நினைத்துப் பார்க்கும் போது கஷ்டமாக இருக்கிறது. இந்த ஜாக் பாட் இருக்கிறதே, இதை நினைத்து வாயைப் பிளந்து கொண்டு இருக்கிறார்கள். சொத்துக்களை எல்லாம் தொலைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதை நிச்சயமாக ஒழித்தாக வேண்டும். பொருளாதாரத்தை வளர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, லாட்டரியை நடத்துகிறார்கள். அதை மக்கள் ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மக்கள் ஒழிக்க மாட்டார்கள். வீட்டிலே இருக்கும் சாமான்களை விற்று, லட்ச ரூபாய் என்று 20-ம் தேதி வந்தால் வாயைப் பிளர்ந்து கொண்டு நிற்கிறார்கள். அபினியைப் போட்டுக் கொண்டு பழகியவன், அதை விட்டு விடுவானா ? ஒன்றும் முடியாது. சொல்லலாம், இதெல்லாம் மக்களுடைய திட்டத்திற்காக என்று. அழகாகத் தான் இருக்கிறது. ஆனால், ஏழைகள், எளியவர்கள் பாழ் ஆகிறார்கள். திரு. மா. பொ. சி. அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். எத்தனை அபிப்பிராய பேதம் இருந்தாலும், இது ஏழைகளுக்குப் போடும் வரி என்று சொன்னதை வரவேற்கிறேன். 2·5 கோடி வருமானம் என்றால், அது ஏழைகள் மேல் போட்ட வரி, குடிசை வாழ் மக்கள் மறைமுகமாகக் கொடுக்கும் வரி

இது எந்த விதமான தொழில் முன்னேற்றத்திற்காகவும் இல்லை. பெரிய பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்துகிறது. அதற்காகவே லாட்டரி திட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு அங்கத்தினர் கேட்கிறார், ராஜஸ்தானுக்கு எதிர்க் கட்சித் தலைவர் போவாரா என்று. நிச்சயமாகப் போகமாட்டேன். டெல்லிக்கே வா என்று கவுரவத்தைக் கொடுத்தாலும், வேண்டாம் என்று தான் சொல்லுவேன். ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு என்று இருப்பேன். எங்கள் கட்சிக்காரர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பதற்காகப் போகமாட்டேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, ஜாக் பாட்டையும், லாட்டரியையும் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். லாட்டரி பொது மக்களிடத்தில் தவறான, பெரிய ஒழுக்கக் கேடான கட்டத்திற்கு வழி கோலுகிறது. அது நடப்பதிலேயே தவறுகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. பிரைஸ் வாங்குவதற்கு முடியவில்லை என்று எழுதுகிறார் ஒருவர். ஸ்டாம்பிலே கையெழுத்துப்போட்டு ட்ரெஷரியிலே கொடுத்தால், ரூ. 25 அதிகாரிகள் கேட்கிறார்கள் என்று சொல்லுகிறார். இதற்கெல்லாம் சாட்சி கொண்டுவா என்றால் முடியாது. நூற்றுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடு என்று சொல்லும் முறையில் காரியங்கள் நடக்கின்றன. இப்பொழுது கெடுதல்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. லாட்டரி நம்பரைத் திருத்துவது, மாற்றுவது, சீட்டுகளை எடுத்துக் கொண்டு ஓடுவது இப்படிப் பட்ட கேடுகள், ஆகவே, இதையெல்லாம் நல்ல வகையில் செயல் படுத்த வேண்டும் . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர் என்று கருதுகிறேன். ஆகவே, அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில், எல்லா காங்கிரஸ் மாநிலங்களிலும் லாட்டரியைக் கைவிட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கொண்டு வரத் தயார். மது விலக்கு சம்பந்தமாகக் கூட, மது அருந்தக் கூடாது, என்பதை ஆதரித்து ஓட்டுப் போட்டவன் நான். ஆகவே, லாட்டரியை நீக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய நிலை எதற்கும் பின் வாங்கியது கிடையாது. லாட்டரியிலே உணர்ச்சி வசப்படுகிறார்கள் மக்கள். படி அரிசித் திட்டத்திலிருந்து மக்களிடத்தில் திசை திருப்பும் காரியம் இது. ஏழை எளிய மக்கள் பட்டினியாக இருந்தாலும் பரவாயில்லை என்று லட்ச ரூபாய் என்பது ஒன்றையே நினைத்துக் கொண்டு கெட்டுவிடுகிறார்கள். அந்தத் திட்டத்தை ஓரளவிற்காவது கட்டுப்படுத்த வேண்டும். அதாவது, கைவிட வேண்டும் என்று தான் கேட்கிறேன். அப்படிக் கைவிடாவிட்டாலும் கூட, எப்படி எப்படித் திருத்த வேண்டுமோ அந்த வகையில் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே இருக்கும் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஏற்கனவே இருந்த திட்டங்களைத்தான் சிறப்பாகச் செய்கிறோம் என்றாவது சொல்லியிருந்தால், வள்ளுவர் வழியில் வருபவர்கள் என்று சொல்வதற்கு ஏற்றதாக இருந்திருக்கும். குறளையே திருப்பிவிட்டார்கள்—

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

என்பது குறள். ஆனால், இவர்கள் அதை **எப்படி** வைக்கிறார்கள் என்றால்,

நன்றல்லது மறப்பது நன்றன்று நன்றி
மறப்பதே நன்று

என்ற வகையில்தான் பட்ஜெட் இருக்கிறது. மக்கள் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களுடைய வாங்கும் சக்தி வளர, திட்டங்களை உடனடியாக அதிகமாகப் போட்டு . . . .

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : எதிர்க் கட்சித் தலைவர் "நன்றல்லது மறப்பது நன்றன்று" என்று சொன்னார்களே, அதற்கு என்ன பொருள் என்று சொல்லுவார்களா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஏற்கனவே, காங்கிரஸ்காரர் செய்த காரியங்களை எடுத்துக் கொண்டு, அவர்கள் செய்த தவறுகளை எடுத்துச் சொல்லிக்கொண்டு, "நன்றல்லது மறப்பது நன்றன்று, நன்றி மறப்பதே நன்று" என்ற வகையில் நீங்கள் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். இருக்கிற கதையையெல்லாம், ஏதாவது தவறு என்று இருந்தால், "பார்த்தீர்களா, இந்த நிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள்" என்று சொல்வது (குறுக்கீடு). நான் தமிழிலே செய்த கவிதை, அவர்கள் செய்த கவிதை போல் இருக்கும். எனக்கும் தெரியும். நண்பர் அவர்களோடு சேர்ந்திருப்பதால் அந்த வாடை காரணமாக எனக்கும் கொஞ்சம் கவிதை செய்யும் சக்தி இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு பெரிய திட்டம் தேவை. வரியில்லை என்று சொல்லுகிறார்கள். நிதி அமைச்சர். சரி, இப்பொழுது வரி கிடையாது. ஆனால், எப்ரல் 26-ம் தேதிவரை கிடையாது. முனிசிபல் எலெக்ஷன் வரைக்கும். எல்லோரிடமும், மக்களுடைய மத்தியில் மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கிறது, நாங்கள் போடவில்லை என்று சொல்லலாம் .ஆனால், திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். நிச்சயமாக 1970 வரைக்கும் வரியில்லை என்று சொல்ல வேண்டும். 201 கோடி ரூபாயாக இருந்தது 1957-ல். இப்பொழுது 285 கோடியாகி, 16 கோடி டெபிசிட் பட்ஜெட்டில் இருக்கிறோம். ஒத்துக்கொள்கிறேன். வரியில்லாமல் எதையும் செய்ய முடியாது. ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் போடும் வரி மக்களுக்குப் பயன் அளிக்கும் வரியாக இருக்க வேண்டும். பஞ்சத்தைப் போக்கும் வரியாக இருக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வரியாக இருக்க வேண்டும். இந்த சர்க்கார் எந்தப் பிரச்னையையும் அணுகி தீர்த்த பாடே கிடையாது. பஸ் தொழிலாளர் பிரச்னை, மாணவர்கள் பிரச்னை எதையும் தீர்த்த பாடில்லை. வேட்டைக்காரன்புதூரில் தங்கவேலு தாக்கப் பட்டது பற்றி கெய்வார் ஒரு அறிக்கை கொடுத்தார். அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை, சபைக்கு. நீதிபதி திரு. சோமசுந்தரம் அவர்களை நியமித்தார்கள். அறிக்கை வந்ததா ? அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதா ? ஒன்றும் கிடையாது. தீ விபத்தைப் பற்றிச் சொன்னார்கள். தீ விபத்துக்குக் காங்கிரஸ்காரர்கள் காரணம் என்றெல்லாம் அன்று சொன்னார்கள். "அங்காடிப் பேச்சு" என்றும் "யாரோ சொல்கிறார்கள்" என்றும் சொன்னார்கள். அந்த அறிக்கை வந்ததா ? இதுவரைக்கும் கிடையாது. எந்த விஷயத்தை நீங்கள் திட்டவட்டமாக அணுகி, திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்து, நீங்கள் தீர்த்திருக்கிறீர்கள் ? மாணவர்கள் விஷயமா ? அதிலும் ஒன்றும் கிடையாது. மாணவர்களைக் கட்டுப்பாடு செய்து, ஏதாவது செய்யப் போகிறீர்களா ? அதுவும் கிடையாது. மாணவர்களிடையே பிரிவு மனப்பான்மையை உண்டாக்காமல். அவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டும். இப்பொழுது போகும்படியான நிலையைப் பார்த்தால், நம் இளம் சமுதாயத்தினர்—மாணவர்கள்—எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், இருண்டதாகத் தான் இருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. மாணவர்கள் படித்து வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது. தொழிற்சாலைகள் மூடப்பட்டு, எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது. அதல்லாமல், இரு மொழித் திட்டம் வேறு. இந்தி வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். என். சி. சி. இல் ஆங்கில சொற்களை மாற்றக் கூடாது என்று சொல்லுகிறார்கள். கல்விக்காக ஏழு கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்கிறார்கள். ஆனால், திருநெல்வேலியில் ஆசிரியர்களுக்கு மூன்று மாதங்களாக சம்பளம் கிடையாது. நிர்வாக இலட்சணம் அப்படி இருக்கிறது. 58 கோடி ரூபாயிலிருந்து 65 கோடி ரூபாயாக கல்வி மான்யத்திற்கு உயர்த்தியிருந்தாலும், உபாத்தியாயர்களுக்கு மூன்று மாதங்களாகச் சம்பளம் இல்லை. கேட்டால், சாக்குபோக்கு சொல்லுகிறார்கள் பஞ்சாயத்து யூனியன் தவறு செய்து விட்டார்கள் என்கிறார்கள். அதையெல்லாம் கண்காணிப்பதற்காகதானே சர்க்கார் ? அதற்காகத் தானே அமைச்சரவையில் நீங்களெல்லாம் இருக்கிறீர்கள் ? ஏன் அது சரியாகச் செய்யப்பட வில்லை ? சாக்குப்போக்கு சொல்லிப் பிரயோசனமில்லை. மறைந்த **பண்டித** ஜவஹர்லால் நேருஜி அவர்கள்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 8

"I am not interested in the excuse for the delay; I am interested in the work being done"

என்று சொன்னார்கள். எந்த வேலை செய்யப்பட்டாலும், வேலை செய்வதிலே தான் எனக்கு முக்கியமே தவிர, சால்ஜாப்பு சொல்வதிலே எனக்கு அக்கறை இல்லை என்று சொன்னார்கள். சால்ஜாப்பு சொல்வது நல்லதல்ல என்று சொன்னார்கள். அதைத்தான் ஞாபகப்படுத்திக் கொண்டு, செய்யும்படியான காரியங்களைத் திறமையாக, நல்ல முறையிலே செய்யவேண்டும் என்பதற்காகத் தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கு சால்ஜாப்பு சொல்வதையோ, சாக்குகளைச் சொல்வதையோ, பழி போடுவதையோ குறை கூறுவதையோ நிறுத்தி, தெளிவாக, இருக்கும்படியான திட்டங்களைக் காரியார்த்தமாக நிறைவேற்றி, மக்களுக்கு சுபீட்சத்தைக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கும் போது, இந்த பட்ஜெட் "கேரி-ஓவர் பட்ஜெட்"டாகத் தான் இருக்கிறதே தவிர, வேறல்ல. "காங்கிரஸ் கட்சி செய்ததைத் தான் நாங்கள் திரும்பிச் செய்கிறோம்" என்று சொல்லுவார்களானால், நாங்களும் ஒத்துழைக்கத் தயார். "காங்கிரஸ் கட்சி செய்தது என்று சொல்ல முடியாது, எங்களுடைய பட்ஜெட்தான்" என்றால், இது உங்களுடைய பட்ஜெட் அல்ல என்பதைத் தான் நாங்கள் கூறி அதை வன்மையாகக் கண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று சொல்லி அமருகின்றேன். வணக்கம்.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், பத்திரிகையை எடுத்துக் குறிப்பிட்டு, அமைச்சருடைய சொத்து விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அமைச்சர்கள் பற்றியது என்றாலும் கூட, அங்கத்தினர்களுக்கும் எந்த நிலை என்று தெளிவு தேவைப்படுவதால், அவர்கள் பொறுப்பு ஏற்க மறுத்துவிட்ட பிறகு, அது இந்தப் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருக்கலாமா என்று நான் அறிய விரும்புகிறேன். அதுபற்றிய குறிப்பை அவைநடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்குத் தலைவர் அவர்கள் உத்தரவிட இருக்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாபுண்மிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் ஒரு விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். May's Parliamentary Practice-இல்

"A member is not allowed to use unparliamentary words by the device of putting them in somebody else's mouth"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1966-ம் ஆண்டில், இந்த மன்றத்திலேயே ஒருறுப்பினர், தன்னிடத்தில் தன்னுடைய தொகுதியைச் சார்ந்த ஒருவர், ஒரு அதிகாரியைப் பற்றிக் குற்றஞ்சாட்டிக் குறிப்பிட்டிருந்த மனுவை முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து, அதிலே கூறிய குற்றச்சாட்டு தவறானது என்ற காரணத்திற்காக அந்த உறுப்பினர்மீதே நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகியது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகிய நேரத்தில், "அது இந்த மன்றத்தினுடைய நிகழ்ச்சியாக இருந்திருக்கும்போது, அந்த நிகழ்ச்சிக்காக அவர்மீது போலீஸ் இலாகா நடவடிக்கை எடுத்தது நியாயம் தானா? என்று உரிமைப் பிரச்சினை எழுப்பிய நேரத்தில், "அது உரிமைப் பிரச்சினை ஆகாது; கொடுத்திருக்கும் விண்ணப்பத்தில் கூறிய குற்றச்சாட்டை அந்த உறுப்பினரே கூறியதாகத் தான் பொருளாகும்" என்று இந்த மன்றத்தில் தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையிலிருந்து படித்தார்கள். ஆனால், அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஆகவே, அவர் பத்திரிகையிலிருந்து படித்த பகுதியை நம்முடைய பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நான் நீக்கிவிடுகிறேன்.

1969 மார்ச் 8]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது நடந்த நிகழ்ச்சியைப் பற்றித் தாங்கள் குறிப்பிடுகையில், அது பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்பதாகக் கூறியிருக்கிறீர்கள். இதுமாதிரி சம்பவம் 1959-ம் ஆண்டில் நடந்தது என்று நினைக்கிறேன். அப்பொழுது மதிப்பிற்குரிய திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு பத்திரிகையைக் கொண்டுவந்து, "பக்தவத்சலம் பத்து லட்சம்" என்கிற மாதிரி குறிப்பிட்டுள்ள வாசகத்தை இந்தச் சபையில் படித்தார்கள். அப்பொழுது, "இம்மாதிரி கூறப்படுகிறதே" என்ற பிரச்னை சபையில் எழுப்பப்பட்ட போது, அதற்கு அமைச்சர் பதில் சொல்லும்போது, "ஏதோ பத்திரிகையில் வந்திருக்கிறது, அதை மெம்பர் படித்துவிட்டார், அம்மாதிரி இல்லை" என்ற வகையில் பதில் சொல்லிவிட்டுப் போனார். அது நிகழ்ச்சிக் குறிப்பில் இருக்கிறது. பொதுவாகச் சொல்லாமல், ஒருவரைக் குறிப்பிட்டு குற்றம் சாட்டி இந்தச் சபையில் சொல்லுகிறபோது, அது உரிமைப் பிரச்சினைக்கு வரலாம். ஆனால், பொதுவாகக் குற்றஞ்சாட்டும்போது அது அவ்வாறு வர முடியுமா? தீ வைத்த சம்பவம் நடந்தது, "காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டார்கள்" என்றெல்லாம் அப்பொழுது பேசப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டது என்று பொதுவாகச் சொல்லப்பட்டது. அம்மாதிரி பொதுவான குற்றச்சாட்டு சொல்லும்போது, அதற்கு உறுப்பினர் எப்படிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியும்? இதைப்பற்றித் தங்களுடைய தீர்ப்பைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுப்பேற்றுக் கொள்ளத் தான் வேண்டும். அப்படித்தான் விதிகள் இருக்கின்றன. அப்படித்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நம்முடைய சட்டப் பேரவை விதிமுறைகள் இருக்கின்றன.

THIRU J. JAMES: On a point of order, Sir,. On the point whether a member who makes a statement should own that statement or whether he is competent to refer to any document, I am referring to the rule. Rule 31 of the Assembly relates to questions Sub-rule (3) of that rule reads as follows: 'If a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement'. So in the case of questions, if a member makes a statement, he must make himself responsible for the accuracy of the statement. No similar provision is there in the rule relating to speeches, namely, rule 67.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்கக் கூடாது.

THIRU J. JAMES: I will not take much of the time of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் தயவு செய்து உட்கார வேண்டும்.

THIRU J. JAMES: Rule 67 says . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், பிறகு சொல்லிக் கொள்ளலாம்.

கேள்வி நேரத்தில்தான் ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. விவாத நேரத்தில் அத்தகைய கட்டுப்பாடு இல்லை என்பது கனம் உறுப்பினருடைய வாதமானால், அது சரியல்ல. அப்படியானால், விவாத நேரத்தில் இப்படிப் பேசலாம் என்று ஏதாவது விதிமுறை இருக்கின்றதா? இல்லை. விவாத நேரத்தில் இப்படிப் பேசலாம் என்று விதிகள் வகுக்கப் பட்டிருந்தால்

கூறலாம். கேள்வி நேரத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு விவாத நேரத்தைப் பொறுத்து விதிக்கப்படவில்லையே, ஆகவே பேசலாம் என்று கூறுவது வாதமாகாது. ஆகவே, இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேச வாய்ப்பு அளித்துவிட்டு தாங்கள் ரூலிங் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் சொல்வதற்கு வாய்ப்பு கொடுங்கள். ஒரே ஒரு வாய்ப்பு மாத்திரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

THIRU J. JAMES : With regard to questions the rule is clear. With regard to speeches, what kind of speech a member should make is regulated by rule 67. In that rule no provision is made to the effect that a member who makes a statement must make himself responsible for the accuracy of the statement. So long as such a provision is not there, a member is free to make any statement.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் சட்டம் படித்தவர் அவருடைய வாதம் நியாயம்தானா என்பதை யோசிக்க வேண்டும். இந்த இடத்தில் இப்படித்தான் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறது, ஆனால், மற்ற இடத்தில் இப்படிப் பேசவேண்டும் என்று சொல்லவில்லை, ஆகவே, எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்று வாதிப்பது வழக்கறிஞர்கள் செய்யத்தக்க வாதம் தானா என்பதை யோசிக்கவேண்டும். மற்ற இடத்தில் இப்படிப் பேசலாம் என்பதற்கு எங்கே விதி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். (திரு. கே. விநாயகம் : இன்டர்ப்ரடேஷன்) அது "இன்டர்ப்ரடேஷன்" ஆகாது. இன்டர்ப்ரடேஷன் என்றால், அதில் இது வராது. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத்
பி.ப. தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது
1-00 கடந்த ஆறு நாட்களாக நடைபெற்ற விவாதத்தினுடைய உச்ச கட்டமாக, இதற்குப் பதிலிறுக்கும் முகத்தான் நான் பெற்றிருக்கிற வாய்ப்புக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆறு நாட்களிலும் எழுபத்தைந்து உறுப்பினர்கள் நல்ல வகையில் இந்த விவாதத்தில் பங்குகொண்டு ஆக்கபூர்வமான நல்ல யோசனைகளைக் கூறிய ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எல்லோருக்குமாக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படியான ஒரு வாய்ப்பை நான் மகிழ்ச்சியான சூழ்நிலையில் பெறவில்லை. மகிழ்ச்சியான சூழ்நிலையில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. என்னுடைய அண்ணனும், வழிகாட்டியுமான முன்னாள் முதலமைச்சர் பேறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்தில் பல நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பித்து, இன்னும் ஆக்கப்பூர்வமான, முழுமைபெற்ற நிதிநிலை அறிக்கையைக் கொடுத்து, எங்களுக்கெல்லாம் வழிகாட்டுவார் என்று எண்ணிக்கொண்டிருந்த எங்களுக்கு, எங்களுடைய வாழ்நாளில் இதுவரை ஏற்படாத பேரதிர்ச்சியையும் துர்ப்பாக்கியமான நிலைமையையும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு அவர் மறைந்துவிட்டார். அறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, அவர் விட்டுச் சென்ற பொறுப்பினை, அவர் விட்டுச் சென்ற பாரத்தைத் தாங்கும்படியான சிரமமான ஒரு பெரிய

சூழ்நிலை எங்களுக்கு ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையிலிருந்து நாங்கள் வெகு வேகமாக விடுபட்டு அந்த துக்கத்தையும் துயரத்தையும் ஆற்றிக் கொண்டு, மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களை எங்களுடைய கட்சித் தலைவராக இந்த மாமன்றத்தில் ஏற்றுக்கொண்டு, எங்களுடைய கடமைகளை வேகமாகவும் துரிதமாகவும் செய்யும்படியான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், அவருடைய தலைமையில், அமைச்சரவை அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில் பணியாற்ற நல்ல ஒத்துழைப்பை உணர்வுபூர்வமான முறையில் நீங்கள் எல்லாம் அளித்தற்காக முதன்முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தருகிற ஒத்துழைப்பின் மூலம் தான் இன்றைக்கு நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற மூன்றே முக்கால் கோடி மக்களின் நல்வாழ்வு ஏற்பட வேண்டும். நம்மிடத்தில் ஒப்படைத் திருக்கக்கூடிய பெரிய பாரத்தைச் சுமப்பதில் எல்லோருக்கும் பங்கு உண்டு.

கடந்த ஆறு நாட்களாக பல அரிய கருத்துக்களை உறுப்பினர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில் கொஞ்சம் கடுமையாகச் சொன்னார்கள். அவருடைய வார்த்தைகள் தான் கடுமை நிறைந்தவையாக இருந்தனவே தவிர அவருடைய உள்ளம் நல்ல உள்ளமாகவே இருக்கிறது. அவருக்கும் நம்மைப் போலவே தமிழக மக்களின் மேல் அக்கறை இருக்கிறது, தமிழ் நாடு பொருளாதாரத்திலும், மற்ற பல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற அக்கறை இருக்கிறது. முன்னாலே இந்தச் சட்டமன்றத்தில் நாங்கள் செய்த காரியத்தை அவர்கள் இன்றைய தினம் செய்து வருகிறார்கள். அவருக்கும் இந்த மாநிலத்தின் நலத்தில், மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வார்த்தைகளிலே சற்று கடுமை இருந்ததே தவிர அவர் இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்த்ததாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த மன்றத்தில் உள்ள எல்லோரும் இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறார்கள். வெளியிலே இருக்கின்ற பிரபல பத்திரிகைகளும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கின்றன. நாட்டு மக்களும் இதைப் பாராட்டி எழுதி யிருக்கிறார்கள். அதற்காகவும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் பேசிய 75 உறுப்பினர்கள் கூறிய பல்வேறு பிரச்சினைகளிலும் உள்ளே புகுந்து நான் பதிலளிக்கவில்லை யென்றால், நான் உறுப்பினர்களின் பிரச்சினையை கவனத்திலே கொள்ளவில்லை, சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை யென்று யாரும் கருதிக்கொள்ள வேண்டாம். இந்த அரசாங்கம் நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின் மீதான மேலான பிரச்சினைகளுக்கு மட்டும் இங்கே பதில் சொன்னால், அதுவே எல்லோருக்கும் பதிலாக அமையும் என்று கருதுகிறேன். நீங்கள் எழுப்பிய கேள்விகள், அதற்கான சமாதானங்கள் எல்லாவற்றையும் அரசு தன் கவனத்தில் கொண்டு செயல்படும். பிரச்சினைகளை எழுப்பிய உறுப்பினர்களுக்கு முதலிலே என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே பேசிய 75 உறுப்பினர்களும் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டினார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமல்ல, என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பேசினார்கள். மிகப் பெரிய இந்த சட்ட மாமன்றம் இரண்டாண்டுகளில் செயல்பட்ட விதம், இதனுடைய திறமைகள், உறுப்பினர்களின் நல்லார்வம், உறுப்பினர்களுக்குப் பொதுநலனிலே உள்ள அக்கறை இவைகளை யெல்லாம் நாம் பார்த்தோம். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் நல்ல பல உரைகளை ஆற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, எழுமபூர் தொகுதியைச் சேர்ந்த திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பன்ருட்டி தொகுதி உறுப்பினர் திரு எஸ். இராமச்சந்திரன், தூத்துக்குடி தொகுதி

உறுப்பினர் திரு. எம். எஸ். சிவசாமி, சேலம் உறுப்பினர் திரு ஈ. ஆர். கிருஷ்ணன், சோளிங்கபுரம் உறுப்பினர் வழக்கறிஞர் திரு. ஆர். என். அரங்கநாதன், ஆர்க்காடு உறுப்பினர் திரு. ந. வீராசாமி, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏ. எம். ராஜா போன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களிலே பல பிரச்சினைகளை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். இந்த மாநிலத்தின் பொருளாதார நிலை எந்த வகையிலும் சீர்குலையக் கூடாது என்பதை ஒவ்வொரு உறுப்பினரும் எடுத்துக் காட்டினார்கள். எல்லோருடைய உரைக்கும் சிகரம் வைத்தது போல் என் அருமை நண்பரும், மதிப்பு வாய்ந்த தமிழரசுக் கழகத் தலைவருமான திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடைய உரை இருந்தது. மக்களுடைய இதய ஒலியை, நாட்டு மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை இதயத்திலே யிருந்து பேசுவது போன்ற அற்புதமான உரையை அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றி.

இந்த விவாதத்தில் ஏழு எட்டுப் பிரச்சினைகள் ஐயத்தை எழுப்பக் கூடிய பிரச்சினைகள். நான் அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய நேரத்தையும் கூட மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். நானே கூட சொன்னேன். நான் உங்களுக்கு உதவுகிறேன். என்னுடைய நேரத்தைக் குறைத்துக்கொண்டு, உங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறினேன். பழமொழி ஒன்று உண்டு 'Hundred arguments cannot alter a fact.' என்று, சாதாரணமாகச் சொல்வது வழக்கம். ஆயிரம் "ஆர்குமெண்ட்கள்" செய்தாலும் ஓர் உண்மையை மாற்றவே முடியாது. ஆகவே, இப்போது நான் ஆர்குமெண்ட் செய்யப்போவதில்லை. ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் ஏற்றிருக்கிற பொறுப்பை நிறைவேற்றுவதில் தவறி நடக்கிறோம் என்று கருதினால், நாங்கள் வெற்றி பெறவில்லையென்று கருதினால் மற்றவர்கள் சொல்கிற வரை நாங்கள் காத்திருக்க மாட்டோம். காரியங்கள் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளை எடுத்துக் கொள்வோம். நான் சொல்கிற உண்மையை இந்த மாமன்றம் தெரிந்துகொண்டு, வெளியில் இருப்பவர்களிடத்திலும் இதற்கு ஆதரவுகளைத் தேட வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக இங்கு சொல்லப்பட்ட பெரிய குற்றச்சாட்டு, நிதிநிலை அறிக்கையைப் பற்றி — இது பற்றாக்குறை பட்ஜெட், 19 கோடி 52 லட்சத்திற்கு பற்றாக்குறை விட்டுவிட்டார்களே, அதற்கு என்ன செய்வது என்பதாகும். அதுவும் கும்பகோணம் உறுப்பினர் திரு. காசிராமன் நிரம்பக் கவலை தெரிவித்தார்கள். இதற்கான பதிலை நிதிநிலை அறிக்கையிலேயே கொடுத்திருக்கிறேன். இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் எல்லா மாநிலங்களிலும் பற்றாக்குறை பட்ஜெட் தான். இப்படி ஏன் சமர்ப்பிக்கப் படுகிறது என்பது வேறு விஷயம். இங்கே ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறை நான்காவது பைனான்ஸ் கமிஷன் ரிப்போர்ட் வந்தவுடன் சரியாகிவிடும். குறிப்பாக, இன்றைக்கு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் துண்டு விழுந்திருப்பது 19·52 கோடி என்றால் காங்கிரசே ஆளுகின்ற குஜராத் மாநிலத்தில் 29·66 கோடி பற்றாக்குறையாகும். ஹரியானா மாநிலத்தில் 6·34 கோடியாகும். கேரள மாநிலத்தில் 20·6 கோடியாகும். மத்தியப் பிரதேசத்தில் 30·59 கோடியாகும். அஸ்ஸாம் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 50 கோடி என்கிறார்கள். ஆக மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது நம்முடைய மாநில பட்ஜெட் பற்றாக்குறை 19·52 கோடி தான். இதுவும் பணம் இல்லை, அதனால் விழுந்த துண்டு என்பது கூட அல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நமது முதல் அமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தினால், பைனான்ஸ் கமிஷன் இன்ன இன்ன முறையில் உதவியாக வேண்டுமென்ற அவரது குரலுக்கு ஆதரவு அளித்தால் இந்த பற்றாக்குறை தூள்தூளாகிவிடும். இது பிரதான எதிர்க் கட்சியின் கடமையுமாகும். அவர்கள் செய்யாவிட்டாலும் சகோதரக் கட்சிகள் குறிப்பாக குடியாத்தம் உறுப்பினர் குறிப்பிட்டது போல் "நீங்கள் இன்னும் போராட வேண்டும், உங்களது போராட்ட சக்தியிலேயே சந்தேகம் இருக்கிறது" என்றார்களே அதுபோலக் குறிப்பிட்டிருந்தால் கூட மகிழ்ந்திருப்போம். அந்த நிலையில் நிச்சயம் பனிபோல இந்தப் பற்றாக்குறை மறைந்துவிடும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மகிழலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக ஒரு சந்தேகம் — வரி பற்றி, அடிஷனல் ரிசோர்ஸஸ் என்கிறீர்களே, மார்ச் 31-ஆம் தேதி போய், ஜூலை மத்தியில் புதிய வரித் திட்டம் எதையாவது கொண்டு வந்து விடுவீர்களா — விற்பனை வரி விகிதத்தை மாற்றி — எதையாவது செய்துவிடுவீர்களா என்று கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லித் தான் ஆகவேண்டும். வரி போடக் கூடாது என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லட்டும், அல்லது கூட்டணி தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லட்டும். ஆனால் வரி போடக் கூடாது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வதற்கு தார்மீகமாகப் பார்த்தாலும் என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 45 கோடி ரூபாய் வரி போடுங்கள் என்று மத்திய சர்க்கார் சொல்லிற்று, 54 கோடிக்கு வரி போட்ட கட்சி காங்கிரஸ் கட்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படி வரி போட்டதனாலேதான் இன்றைக்கு நீங்கள் வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எதிர்க்கட்சித் தலைவர் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. மன்னிக்க வேண்டும். அவர்களுக்கு ஆதாரமாகத் தான் பேசுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 45 கோடி வரி போடுங்கள் என்றால் 54 கோடிக்கு வரி போட்டார்கள். நான்காவது திட்டத்திற்காவது ஹாலிடே கொடுங்கள் என்று சுதந்திராக் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். "ஹாலிடே" என்று கொடுக்காமல் இரண்டு மூன்று வருடமாக ஹாலிடேதான் இருந்து வருகிறது. நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த போது சொன்னோம். அப்போது ஒரு எட்டு கோடி ரூபாய்க்கு வருமான வரியைப் போட்டார்கள். அந்த வருமானம் எல்லாம் வருகிறது, சந்தோஷமான சமாசாரம் தான். ஆனால் அடிஷனல் ரிசோர்ஸ் என்கிற நேரத்தில் நிதி அமைச்சர் வரி போடக் கூடாது என்கிறார்கள். வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள அவர்களுக்குத் தெரிந்திருப்பது எல்லாம் வரி ஒன்றுதான். நாங்கள் மத்திய அரசிடம் இருந்து எந்த அளவுக்கு நிதி உதவி பெற வேண்டுமோ அந்த அளவுக்குப் பெற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூரல் டிபென்சர் என்றால் என்ன என்றார்கள். மின்சார போர்டு கடன் வாங்குவது போல விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்குக் கடன் எழுப்பலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

அதற்குமேலே தூத்துக்குடி உறுப்பினர் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த நிர்வாக இயந்திரத்தில் விரயமாகிற செலவைக் குறைத்துச் சிக்கனப்படுத்தவேண்டும் என்றார்கள். எந்த எந்த— இலாக்காக்களில் என்ன என்ன வகையில் சிக்கனத்தை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் கவனம் செலுத்துகிறோம்.

அதற்கடுத்தபடியாக பப்ளிக் செக்டார் தொழில்களில், குறிப்பாக டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொண்டால் முன்பு 50 லட்சம் நஷ்டம் என்று வந்ததை இப்போது 30 லட்சமாகக் குறைத்திருக்கிறோம். இன்னும் நான் பொறுப்பேற்றிருந்த மாதவரம் பால் பண்ணையை எடுத்துக் கொண்டால் 60 லட்சம், 70 லட்சம் நஷ்டம் என்று இருந்த நிலைமையை மாற்றி இப்போது தான் 33 ஆயிரம் லாபம் என்கிற நிலைக்குக் கொண்டு வந்துவிட்டு வந்திருக்கிறேன். உணவு அமைச்சர் தலைமையில் அது இன்னும் லாபம் பெறவேண்டும். இப்படி பப்ளிக் செக்டார் தொழில்களின் மூலம் லாபம் பெறுவதும், நமக்குக் கிடைக்கிற அடிஷனல் ரிசோர்ஸ்தான். அதே மாதிரி ஸ்மால் ஸ்கேல்

[திரு. கே. ஏ, மதியழகன்] [1969 மார்ச் 8

இண்டஸ்ட்ரி என்றால் விருத்தாசலம் செராமிக் தொழிற்சாலை, அப்புறம் தோல் பதனிடும் தொழிற்சாலை ஆகிய எல்லாவற்றிலுமே -லாபம் காண முயற்சிப்பதும் அடங்கும். வரி மட்டும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமாக கவனிககவேண்டியது மத்திய அரசாங்கம் இன்று போட்டிருக்கிற வரிகளைப் பற்றியதாகும். நான் அதில் கலந்துகொள்ள வேண்டியதில்லை. ஒரு மாநில நிதி அமைச்சர் என்ற முறையில் எனக்கு ஒரு வரம்பு இருக்கிறது: ஆனாலும் சில விமர்சனங்களை நான் அளிக்கவேண்டியது கடமையாக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவருடைய உரை எனக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சியாக இருந்தது, ஆனால், நான் பெறவேண்டிய முழு மகிழ்ச்சியை அவருடைய உரையிலிருந்து பெறமுடியாமல் போய் விட்டது. குடியானவர் குடும்பத்தில் பிறந்தவன், விவசாயத்திற்காக நான் வாழ்நாள் பூராவும் அர்ப்பணித்து இருக்கிறேன் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் இன்னும் அதைப் பூரணமாகச் சொல்லவில்லை. டெல்லி பாராளு மன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிற வரிகள் பற்றி நான் சொல்ல வேண்டுமானால் எனக்கு வரம்புகள் இருக்கின்றன. கடிவாளத்தை அவர்கள் தான் வைத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை எடுத்துச் சொல்லாததுதான் எனக்கு பெரிய மனக்குறை. என்றாலும், விவசாயத் துறை மானியத்திலாவது நிதி ஒதுக்கீட்டு மசோதாவிலாவது அவர்கள் சொல்வார்கள் என்ற நம்பிக்கையிலே இருக்கிறேன்.

இரசாயன உரத்தின் மீது 10 சத வீதம் வரியை ஏற்றியிருக்கிறார்கள் அவர்கள். அது ரொம்பவும் உணவு உற்பத்தியைப் பாதிக்கும். இதிலே ஒன்றும் சந்தேகமே இல்லை. எந்த அளவுக்குப் பாதிக்கும் என்றால் நம்முடைய ஸ்டாக் இப்பொழுது 23 கோடி ரூபாய்க்கு ரசாயன உரம் இருக்கிறது. அதிலே $2\frac{1}{2}$ கோடி ரூபாய் கூடுதலாகக் கட்டவேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம். மார்ச் ஒன்றும் தேதியிலே கெமிக்கல் பெர்டிலைசர்ஸுக்காகத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை ஒன்றிரண்டு வார்த்தைகளில் சொல்ல விரும்புகிறேன். ஒன்றிரண்டு உதாரணங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். அமோனியம் சல்பேட்டைப் பொறுத்தவரையில் 100 கே. ஜி.க்கு பிப்ரவரி 28-ம் தேதி 447 ரூபாய் ஆக இருந்தது. 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி 484 ஆக ஆகியிருக்கிறது. இதிலே 37 ரூபாய் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. அமோனியம் சல்பேட் 50 கே.ஜி.க்கு பிப்ரவரி 28-ம் தேதி 458 ரூபாய் ஆக இருந்தது. மார்ச் ஒன்றும் தேதி 495 ரூபாயாக ஆகி, அதிலே வரி 37 ரூபாய் அதிகமாக்கியிருக்கிறார்கள். அதே மாதிரியாக, அமோனியம் பாஸ்பேட்டை எடுத்துக்கொண்டால் பிப்ரவரி 28-ம் தேதியன்று 750 ரூபாயாக இருந்தது. மார்ச் மாதம் முதல் தேதியில் 816 ஆக்கப்பட்டு அதிலேயும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. டை அமோனியம் பாஸ்பேட்டை எடுத்துக்கொண்டால் பிப்ரவரி 28-ம் தேதியன்று 1,000 ரூபாயாக இருந்தது, 1,122 ரூபாயாக மார்ச் ஒன்றும் நாளிலிருந்து அதிலேயும் 122 ரூபாய் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருக்கிறது அதைப் படிக்கவில்லை அதை வைத்து விடுகிறேன். இப்படி ரசாயன உரத்திலே போன வருஷம் இருந்த நிலைமையை விட மோசமாக இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அண்ணா அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நானும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் டெல்லிக்குப் போனபோது இது பற்றிப் பேசினோம். வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவருக்கு இது எல்லாம் தெரியும். ரசாயனப் பொருள்களுக்குக் சப்சிடி கொடுத்தார்கள். 100-க்கு 25 என்ற அளவிலே கொடுத்தார்கள். டீவேல்யூவேஷன் செய்தார்கள். அதனாலே ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டதாலே அதிகமாக வெளிநாட்டுக்குக் கொடுக்க

1969 மார்ச் 8] [திரு. கே. ஏ. மதியழகன்]

வேண்டியிருந்ததன் காரணமாக தேர்தலுக்குப் பிறகு அவர்கள் அந்த சப்ஸிடியை எடுத்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது வரியையும் உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய அரசினிடத்திலே திரு மொரார்ஜி தேசாய் இடத்திலும் “restore the pre-devaluation price” என்று சுலோகத்தை நாங்கள் அப்பொழுது எழுப்பினோம். 100-க்குப் பதிலாக 75 என்ற அளவில் கொடுங்கள் என்ற வியாஜ்ஜியமே இன்னும் முடியாமல் அப்படியிருக்கும்பொழுது இப்பொழுது 10 சத வீதம் வரி போட்டு இந்தக் கதையை செய்திருக்கிறார்கள். மத்திய நிதி அமைச்சர் இதை மீண்டும் கவனிக்க வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கின்ற நேரத்திலே, பஞ்சத்தைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்கின்ற இந்த நேரத்திலே நான் மொரார்ஜி தேசாய் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதை மறுபடியும் ஆலோசனை செய்யவேண்டும். அதோடு மட்டுமல்ல. 20 சதவீதம் பம்பு செட்டுகளுக்கு வரிப் போட்டு இருக்கிறார்கள். நம்முடைய பண்ருட்டி உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள், ஒரு லட்சம் கிணறுகள்—அவர்கள் செய்ததையும் சேர்க்க வேண்டுமென்று சொல்வார்கள், இல்லாவிட்டால் கோபித்துக்கொள்வார்கள்—குஜராத் அல்ல ராஜஸ்தான் அல்ல அவற்றைவிட அதிகமாக இந்த அரசு வெட்டுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. இதிலே வெல்த் டாக்ஸ் என்று நிலத்திற்குப் போட்டிருக்கிறார்கள்.

அதைப்பற்றியாவது எதிர்க் கட்சித் தலைவர் சொல்வார்கள் என்று எதிர்ப் பார்த்தேன். அக்ரிகல்சுரல் வெல்த் டாக்ஸ் என்பது ரொம்ப வருத்தப்படக் கூடிய விஷயம். அதைப் போடுவதற்கு உரிமை அங்கே இருக்கிறது என்று சட்ட நிபுணர்கள் சொன்னாலும்கூட எந்தவிதமான அபிப்ராயத்தையும் நான் சொல்லக்கூடாது என்றாலும் மத்திய நிதித் துறையும், மத்திய அமைச்சரவையும் நம்மை கலக்காததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு, மாநில அரசு இவற்றினிடையே உள்ள நிதி உறவு முறைகளைப் பற்றி நான் பதட்டப்பட விரும்பவில்லை, நாம் நிதானமாகப் பேசுவோம். நம்மிடத்தில் நான்கு கோடி மக்களுடைய சூத்திரக் கயிறு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகள் என்பது அல்ல, எந்தக்கட்சி வந்திருக்கிறார்கள் என்பது அல்ல. ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு உண்டு. ஒவ்வொருவருக்கும் திறமை உண்டு. மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் இடத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். நான் இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிறேன், என்னுடைய சகோதரர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால் அது தமிழக மக்களுடைய கட்டளை. எங்களை விட வேறு யாரும் இல்லையா ? மிட்டாமிராசுகள் இல்லையா ? படித்தவர்கள் இல்லையா ? உயர்ந்த ஜாதிக்காரர்கள் இல்லையா ? சீமான் வீட்டுக்காரர்கள் இல்லையா ? எங்களைப் போன்ற சாமானியர்கள் இங்கே உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய அபிலாஷைகள், அவர்களுடைய எண்ணங்கள், அவர்களுடைய ஆர்வங்கள், அவர்களுடைய கோபாவேசங்கள் விளைவாக இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். ஆறு நாட்களாக இங்கே பேசப்பட்ட வாசகங்கள் கோடிட்டுக் காட்டிய மாபெரும் அபாய அறிவிப்புகளுக்குக் காரணம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. புள்ளிவிவரங்களிலே இல்லை, கஜானாக்களிலே இல்லை, இருபது ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றப்பட்ட அரசியல் சாஸனம்தான். அது மக்களுடைய சந்நிதானத்திலே அங்கீகாரம் பெற்றதல்ல, புனிதமானதல்ல. நிதி உறவு முறைகள் மறுபரிசீலனை செய்யப்படக்கூடிய விதத்தில் அதிலே மாற்றம் தேவை என்று கோடிட்டுக் காட்டினார்கள். அதையே வெகு அழகாக முதிர்ச்சியும் திறமையும் பெற்ற திரு. மா. பொ.சி. அவர்கள் சொன்னார்கள். என்னுடைய உரிமையைக் கோருவது பாவம் அல்ல. என் நாட்டு மக்கள் என்னிடத்திலே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு அவன் பட்டினி கிடந்து சாகலாம், மில்கள் மூடப்படலாம், வாய்க்கால்கள் வறண்டு விடலாம், நிலங்கள் வெடித்துக் கிடக்கலாம், எங்கேயோ அதிகாரங்கள்

குவிந்து இருக்கின்றன என்றால் அதை நான் கேட்கவில்லையென்றால் என்னைவிட துரோகி எவனும் இல்லை வஞ்சகன் எவனும் இல்லை. இதையே தான் மூன்றாவது பைனான்ஸ் கமிஷன் கூறியது. நான்காவது பைனான்ஸ் கமிஷன் கூறியது. திரு. ராஜமன்னார் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் எல்லாம் திராவிட நாடு கேட்கிறார்கள் என்பது பொருளா? நீதிபதி சுப்பா ராவ் அவர்கள் சொன்னார்கள். இன்னும் பல பேர்கள் சொல்கிறார்கள். அண்மை மாநிலமான ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களும் நம்முடைய அண்ணா அவர்களும் ஒரு மாநாட்டிலே பேசும்பொழுது, நானும் அதிலே அண்ணா அவர்களுடன் பங்குபெறுகிற வாய்ப்பு பெற்றிருக்கிறேன். திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் பேசியிருக்கிறார்கள். நிஜலிங்கப்பா அவர்கள் "இதையெல்லாம் சொல்லு தம்பி" என்று அழுத்தமான கருத்துக்களை எல்லாம் சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன பொருள் ? இன்றைக்கு அரசியல் சாசனத்திலே என்ன
பி. ப. 1-30. நிலைமை இருக்கிறது ? இதிலே மறு பரிசீலனை தேவை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இது இன்றோடு முடிந்து விடுகின்ற காரியம் அல்ல. ஜோதி பாசுவின் நாற்காலி தெரியக்கூடாது, நம்பூதிரிபாதின் நாற்காலி தெரியக்கூடாது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உருவம் இங்கே தெரியக்கூடாது. பஞ்சாபில் தாடி வைத்துக்கொண்டு புதிதாக குர்னாம்சிங் என்று ஒருவர் வருகிறார் என்றால் அவர் தெரியக் கூடாது. இதையெல்லாம் கவனிக்காமல் இருக்கக்கூடிய நிலைமைக்கு என்ன பரிகாரம் என்பதுதான் தேவை. இந்த மாமன்றத்திலே காட்டப்பட்ட அத்தகைய உணர்வை நான் மதிக்கிறேன். இந்த அரசு மதிக்கிறது. இந்தியப் பிரதமர் அவர்களும், துணைப் பிரதமர் அவர்களும், மற்றவர்களும் இதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் பற்றிச் சொன்னால் "திராவிட நாடு" கேட்கிறீர்களா, என்று யாரும் பூச்சாண்டி காட்டத் தேவையில்லை. திராவிட நாடு தேவையில்லை, இந்தியாவின் பூபாகத்திற்குள் இருந்து கொண்டு நம்முடைய தேசபக்தியை, நம்முடைய நாட்டுப் பற்றைக் காட்டுவதில் உ.பி.காரனுக்கோ, காஷ்மீரிக்கோ, பீகார்காரனுக்கோ, மராத்திக்காரனுக்கோ கொஞ்சம் கூடக் குறைவானவர்கள் அல்ல நாங்கள். முடிந்த கதையை மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை. நண்பர்கள் திரு. ராமச்சந்திரன் திரு. ராஜா, திரு. ஆசைத்தம்பி ஆகியோர் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவே இந்த மன்றத்தில் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் அதற்காகச் சொன்ன காரணங்கள் நியாயமான காரணங்கள். அதிலே நியாயம் இருக்கிறது என்று நாங்கள் சொல்லுகிற காரணத்தால் ஏதோ எங்களுக்கு ஆபத்து என்று அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் பொது வாழ்விற்கு வந்தது, இந்தக் காரியங்களிலே ஈடுபட்டதெல்லாம் இங்கே வந்து உட்காருவதற்காக அல்ல. ஏதோ ஜாக்பாட் அடித்தது என்று சொன்னார்கள். நாங்கள் அதிருஷ்ட தேவதையை நம்புபவர்களும் அல்ல. இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக எங்களுடைய வீடு வாசல்களைத் துறந்தவர்கள். சிறைச்சாலைக்கும் வீட்டுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். நான் 11 முறை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன் என்று சொன்னால் முதலமைச்சர் அவர்கள் 12 முறை சிறை சென்றிருப்பார்கள். எங்களை இளைஞர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் நாங்கள் இளம் வயது முதற்கொண்டே கடந்த 20, 25 ஆண்டுகளாகப் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள், அதற்காக எங்களுடைய வாழ்க்கையையே ஒப்படைத்தவர்கள். தமிழ் நாட்டில் இருக்கிற மூலை முடுக்குகளில் எல்லாம் சுற்றி அங்கிருக்கின்ற லட்சக்கணக்கான மக்களை எல்லாம் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளையெல்லாம் எங்களுடைய பிரச்சினையாக எடுத்துக் கொண்டவர்கள். நாங்கள் ஒரு இடத்திலே பிறந்து விட்டோம் என்பதற்காக அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறோமே தவிர, மக்கள் அனைவரும் எங்களைத் தங்கள் வீட்டுப் பிள்ளைகளாகக் கருது

கிறார்கள். அந்த மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்ற நிலை ஏற்படுமானால் அடுத்த நிமிஷமே இந்த இடத்தைக் காலி செய்து விட்டுப் போய்விடுவோம்.

இன்றைக்கு இருக்கின்ற முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினை. இதை மத்திய அரசும் சரி, பிரதானமாக இருக்கிற காங்கிரஸ் கட்சியும் கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். இது பத்தாண்டுகளுக்குக் கேள்விக் குறியாக இருக்கிற பெரிய பிரச்சினை. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். சில நிதி ஆதாரங்கள் இல்லையென்று சொல்லுகிறோம். கேட்டால் ஆத்திரப்படுகிறார்கள். இருபது வருஷ காலமாக ஒன்றும் நடக்கவில்லை. அபிவிருத்தி ஏற்படவில்லை, தொழில் வளம் ஏற்படவில்லை, உணவுத் துறை முன்னேறவில்லை என்று சொன்னால் எங்களுக்குத் திறமை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் சுப்பிரமணியத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் என்றில்லை. கோளாறு இயந்திரத்திலே இருக்கிறது. இயந்திரத்திலே பழுது ஏற்பட்டிருக்கிறது. இயந்திரத்தைப் பழுது பார்க்காவிட்டால் சுப்பிரமணியமே வந்து உட்கார்ந்தாலும் காமராஜ நாடாரே வந்து உட்கார்ந்தாலும் ஒருகாலும் இதற்குப் பரிகாரம் தேட முடியாது. இதுதான் உண்மை நிலை.

நிதி ஆதாரங்களில் மாறுதல் தேவை என்று சொல்லும்போது பெரிய பெரிய விஷயங்களைச் சொல்ல முடியும். வருமான வரியை யாரோ கட்டவில்லையென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஊரே கொள்ளை போகிறது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எதையோ பேசிக் கொண்டிருக்கிறார். வருமான வரி எந்த இடத்திலிருந்து வரவில்லை என்று சி. ஐ. டி. ரிப்போர்ட் வைத்துக் கண்டுபிடித்து நாளைக்கே அனைத்தையும் வசூல் செய்யட்டும். வருமான வரியிலே நமக்குப் பங்கு கொடுப்பது 75 சதவிகிதம். அதை 87 சதவீதமாக கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். ரொம்ப அற்பமான கோரிக்கை. சுங்க வரியில் (ஆயத் தீர்வை) 20 சதவிகிதம் கொடுக்கிறார்கள். அதை 40 சதவிகிதமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். வருமான வரியிலே ஒரு பெரிய தந்திரம் நடந்து விட்டது. கார்ப்பரேஷன், கம்பெனிகளை எல்லாம் வருமான வரியிலிருந்து எடுத்து விட்டார்கள். பதினைந்து வருஷத்திற்கு முன்பு கம்பெனி வரி 50 கோடி ரூபாய் இருந்தது. இப்போது 320 கோடி ரூபாய் அதன் மூலம் வந்திருக்கிறது. அந்த 320 கோடி ரூபாயிலே காலணா நமக்கு உண்டா? தமிழ்நாட்டிற்கு உண்டா ? ஒரு சல்லிக் காசு உண்டா ஆந்திரப் பிரதேசத்திற்கு ? இங்குள்ள எல்லாத் தொழில் அதிபர்களும் மந்திரிகளுக்கு மாலை போடுகிறார்கள். மாநாடு கூட்டுகிறார்கள், மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கல்நாட்டு விழாவுக்குக் கூப்பிடுகிறார்கள். ஆனால் அந்த 320 கோடி ரூபாயில் நமக்குப் பங்கு உண்டா என்றால் இல்லை. அதிலே நமக்குப் பங்கு வேண்டாமா ? இதற்கல்லவா போராட்ட குணம் படைத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போராட வேண்டும். அதை விட்டு விட்டு யாரோ இன்கம் டாக்ஸ் கட்டவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அது சேல்ஸ்டாக்சாக இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க நமக்கே பொறுப்பு இருக்கிறது. அதுபோன்று ரயில்வே டாக்ஸ் என்று போட்டால் நமக்குப் பங்கு வரும். ஆனால் அவர்கள் ரயில்வே ஃப்ரைட் என்று போட்டுவிடுகிறார்கள். என்ன பயங்கரமான காரியங்கள் எல்லாம் இருக்கின்றன ? இதிலே சாதாரணமாக யாருக்கும் கோபம் வரவில்லை. 20 வருஷ கால நிலைமையில் இன்று பீரிட்டுக்கொண்டு வருகிறது.

இன்றைக்கு நிதிக் கமிஷன் என்று பெரிதாகச் சொல்லுகிறோம். ஸ்டாச்சுடரி டெவல்யூஷன் படி நமக்குக் கிடைக்க வேண்டியது 25 சதவிகிதந்தான். 100 ரூபாய் கிடைத்தால் அதிலே 25 ரூபாய் அளவுக்குள்ள நிலைமையைத்தான் நாம் நிதிக் கமிஷன் மூலமாகப் பெற முடியும். மற்றதெல்லாம் டிஸ்க்ரீஷனரி கிராண்ட். அவர்கள் ஏதேச்சாதிகாரமாகப் வைத்துக் கொண்டிருக்கிற டிஸ்க்ரீஷனரி கிராண்ட் 71 சதவிகிதமும், மிச்சம் 29 சத விகிதம்தான் சட்ட பூர்வமாக அவர்கள் கொடுக்கக்கூடியது.

[திரு. கே. எ. மதியழகன்] [1969 மார்ச் 8

71 சதவிகிதம் அவர்களுடைய எதேச்சாதிகாரத்திலே அடங்கியிருக்கிறது. அதனுடைய விளைவை இந்த நாட்டு மக்கள் சகிப்பார்கள் என்று கருதுகிறீர்களா ?

இன்றையதினம் சுகாதாரத் துறையை எடுத்துக்கொண்டால், நர்சுகளுக்கு இருக்கும் அந்த உடைகள் மத்திய சர்க்கார் சொல்லுகின்ற உடைகள் மாதிரியிருக்க வேண்டும். இதற்கான ஒரு யோசனையும்கூட அங்கிருந்து வருகிறது. முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்து போர்டுகள் அளவுக்குக் குறைந்துவிட்டிருக்கிற பேராபத்து நிதிப் பிரச்சினையிலே இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இன்னும் ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. கடன்கள் கொடுக்கிறார்கள். 100 ரூபாய் கடன் கொடுத்தால் இந்தக் கையிலே கொடுக்கிறார்கள். 100 ரூபாய் இடது கையிலே கொடுத்தால் 50 ரூபாயைத் திரும்ப வலது கையால் பெற்றுக்கொள்கிறார்கள். இப்படி ஒரு நிலை. இதிலே இருக்கிற ஆபத்து சாதாரண ஆபத்து அல்ல. இதில் நியாயம் இருக்கிறதா? 50 ரூபாய்கூட அல்ல, இன்னும் கணக்குப் போட்டால் 55 ரூபாய்கூட வரும். இவர்களாவது கடன் வாங்காமல் இருக்கிறார்களா? உலகத்திலே எங்கெங்கு வாங்க முடியுமோ அங்கங்கெல்லாம் வாங்கியிருக்கிறார்கள். 30 வருஷத்திலிருந்து 45 வருஷங்கள் என்று திருப்பிக் கொடுப்பதற்குப் போதிய காலம் இருக்கிறது. அங்கெல்லாம் 30 வருஷங்கள், 40 வருஷங்களிலே கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு நாம் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் 7, 8 வருஷத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் 7 வருஷத்திலே வருமா? வாய்க்காலில் தண்ணீரே வரவில்லை. 7, 8 வருஷத்திலே திருப்பிக் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. எப்படி இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பது ? கடன் நிலைக்கு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இப்படி நிலைமைகள் இருக்கின்றன. இந்த வருஷத்திலே 37 கோடி 53 லட்சம் ரூபாய் கடன் வரும். அவர்களிடமிருந்து வாங்கப் போவது. இதிலே திருப்பிக் கொடுக்க வேண்டியது, பழைய கடன் பாக்கிக்காக 27 கோடி 83 லட்சம் ரூபாய். ஒன்றைமட்டும் கவனிக்க வேண்டும். 37 கோடி 53 லட்சம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு, 27 கோடி 83 லட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இது இங்கிருந்து அங்கு போகிறதா? அல்லது அங்கிருந்து இங்கு வருகிறதா? அதுமட்டுமல்ல. 1951-வது ஆண்டில் நாம் கொடுக்கவேண்டிய வட்டி, வட்டி என்று பேசுகிறோமே, அது 41 லட்சம் ரூபாய். இம்மாதிரியாக வட்டி கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த வருஷத்திலே கொடுக்க வேண்டுமென்று சொல்வது 15 கோடி 82 லட்சம் ரூபாய். 41 லட்சம் எங்கே? இது எங்கே ? ஏறிக்கொண்டே போகிறது. மார்வாடிக்காரரிடம் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியமாதிரி இருக்கிறது. அது இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல. இந்த நிலைமை எல்லா மாநிலங்களிலும் இருந்துகொண்டிருக்கிறது.

இதற்குமேல் இன்னும்கூட ஒரு வேடிக்கை. நிதியறிக்கையிலே நான் சொல்லி இருக்கிறேன். ஆந்திராவும் நம்முடன் சேர்ந்திருந்தபொழுது 10 கோடி ரூபாய் பஞ்ச நிவாரண வேலை செய்ததற்கு நம் கணக்கிலே எழுதியிருக்கிறார்கள். நாம் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் கொஞ்சம் மாற்றிப் போடுங்கள், ஈசி இன்ஸ்டால்மெண்டில் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இவைகளையெல்லாம் கவனிக்கவில்லை என்றால் என்ன செய்வது ? இன்னும் பல நிலைமைகள் இது போன்று இருக்கின்றன. இதை "ரீ-பேஸ்" செய்ய வற்புறுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு அண்ணா அவர்கள் பைனான்ஸ் கமிஷனுக்குக் கொடுத்த மெமோரண்டத்திலே முக்கியமான யோசனைகளைச் சொன்னார்கள். எல்லோரும் சேர்ந்துதான் செய்ய வேண்டும். இதில் கட்சி கிடையாது. நிறம் கிடையாது, கொடி கிடையாது

1969 மார்ச் 8] [திரு. கே. எ. மதியழகன்]

'Loans which have been utilised for various schemes that do not bring in direct financial return to the State Exchequer such as buildings for educational purposes, and rural man-power programme should be converted into grants.' என்று ஒன்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்த வேண்டும். கடனைக் கொடுப்பதை மருத்துவ வசதிக்கும், பள்ளிக்கூடத்திற்கும் போட்டு வருகிறோம். ஆனால் வருஷா வருஷம் ஆகும் செலவுக்கு எங்கே கொடுக்கிறார்கள்? இப்படிப் பாரம் ஏறுகிறது. இதை மானியமாகக் கொடுக்க வேண்டும். மேலும் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது

'Repayment of loans which have been utilised for re-lending purposes, viz., on relief to goldsmiths, rehabilitation of repatriates from Burma and Ceylon, relief to people affected by natural calamities, should be insisted upon only to the extent the State Government are in their turn able to effect recovery'.

இது நியாயம்தானே.

இரண்டு கோடியை பஞ்சப் பிரதேசத்திற்குக் கொடுக்கிறோம். மத்திய சர்க்கார், ராஜஸ்தானம், பீகார், அஸ்ஸாம் மாநிலங்களிலே கொடுக்கவில்லையா? அதை நாம் எல்லோரும் சேர்ந்து செய்யவில்லை என்றால் மாறுதலைச் செய்துவிடும். அதை மாமன்றம் ஏற்றுக் கொள்வதற்கு இப்படி ஒரு நிலை இருக்கிறது என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நிதி ஆதாரங்கள் கமிஷன் சொல்வதன்மூலமாகச் செய்ய வேண்டும். இதைச் சொல்லும் நேரத்தில் திட்டத்தில் தவறு இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் திட்டமே நிறைவேறவில்லை, திட்டமே நிறைவேறவில்லை என்று சொன்னார்கள். "ஏன் வாங்கி வரவில்லை, ஏன் சண்டை போடவில்லை?" என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். எனக்கு அதைப் பார்த்தாலே ரொம்ப பயமாக இருக்கிறது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தையும்விட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொஞ்சம் குறைந்து கொண்டிருக்கிறது. 250 கோடியாக இருக்கலாம் என்றதற்கு 201 கோடி என்றார்கள். இவ்வளவு விகிதாச்சாரம் குறைத்திருக்கிறார்கள். சமாதானம் சொல்லவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலங்களுக்கு ஒதுக்கியது 332 கோடி ரூபாய், இதிலே தமிழகம் பெற்றது 36 கோடி ரூபாய். ஏறக்குறைய 10·8 சத விகிதம் மொத்தத்திலே. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,058 கோடி ரூபாய் எல்லா மாநிலங்களுக்கும், தமிழகத்திற்குக் கிடைத்தது 95 கோடி ரூபாய். இது 9 சதவிகிதம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 10 சத விகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 9 சதவிகிதம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்கு ஒதுக்கியது 2,515 கோடியே 30 லட்சம் ரூபாய். இதில் தமிழகத்திற்குக் கிடைத்தது 186 கோடி 80 லட்சம் ரூபாய். இது 7·4 சதவிகிதம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 சதவிகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவிகிதம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7 சதவிகிதமாக ஆகியிருக்கிறது. ஒரிஜினல் 4-வது பிளான், அது வரப் போவதில்லை. ஆனால் எழுதி வைத்துக்கொண்டோம், அந்தக் கணக்குப்படி பார்த்தாலும்கூட 7 சதவிகிதம்தான் ஆகிறது. இதிலும் போராட வேண்டிய பெரிய கட்டத்திலேதான் இருக்கிறோம். இவை சிறு விஷயங்கள் அல்ல. இவைகளைப் பெறுவதன்மூலம்தான், இந்தியாவின் ஒற்றுமை என்று பேசுகிறோமே, அதை ஏற்படுத்த முடியும். பணத்திலே இல்லாமல் எங்கே ஒற்றுமை வரப் போகிறது? இந்த மாநிலத்திற்காக மட்டுமல்ல, உத்தரப் பிரதேசம், வங்காளம் ஆகிய அந்த மாநிலங்களும் சுபிட்சம் அடையப் போராட வேண்டிய நிலைதான்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும், வெளியிலே இருக்கின்ற பிரதானத் தலைவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன்., இரண்டாவது சுதந்திரப் போராட்டம்பற்றி ம.பொ.சி. அவர்கள் சொன்னார்கள். பார்ப்ப

தற்கு வேண்டுமானால் பயங்கரமாக இருக்கலாம். 20 ஆண்டுக் காலமாக காந்தியாரும், நேருவும் பாடுபட்டு காரியத்தைச் செயல்படுத்த முடியவில்லையென்றால், சுதந்திராக் கட்சி ஆட்சிக்கு வருவதால் மட்டுமல்ல, அல்லது பக்கத்திலே இருக்கிற சங்கரய்யா அவர்களிடம் ஒப்படைத்தால்தான் இந்தக் காரியம் நிறைவேறும் என்பது அல்ல. மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வருவதற்குமட்டும் கொஞ்சம் ஒத்துழையுங்கள். நமக்குள் நிலைமைகள் சரியாகும். இந்த மாநிலத்திற்குப் பணி செய்யும்படியான பெரிய வாய்ப்பிருக்கிறது. ஒருவரையொருவர் நாம் ஏமாற்றிக் கொள்ளத் தேவையில்லை. இன்றைக்குப் பார்க்கிறோம், வடக்கே பார்க்கிறோம், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் சரியாக நிலைமைகள் இருக்கிறதா ? அங்கே யாரோ 10 பேரிடத்திலே அதிகாரம் இருக்க வேண்டுமென்பதிலே என்ன இருக்கிறது ? இரட்டை ஆட்சிகள் என்றெல்லாம் பேசினார்கள் என்றால் பணமில்லையே. அதிகாரம் கிடைக்காத வரைக்கும், வரவேண்டிய பணம் வராத வரையிலும் பெரும் காரியங்களையெல்லாம் செய்வதற்குரிய வாய்ப்புகள், வழிகள் குறைவாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, பஞ்சாலைத் தொழிலைப்பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி ரொம்ப அதிகமாக, விரிவாகச் சொல்லவேண்டிய அவசியமில்லையென்றாலும், சிலவற்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முக்கியமாகச் சொன்னார்கள். அதைப்பற்றிய விவரங்களை சொல்லியிருக்கிறோம். இது பெரிய பிரச்னை. நான் வேறு சமாதானங்களைச் சொல்லவில்லை. இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை மட்டும் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். இந்தக் காரியத்திலே அரசாங்கம் நல்ல வகையில் ஆர்வம் எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பது இந்த மாமன்றத்திற்குத் தெரியும்.

முதலாவதாக, இந்த அரசு வந்ததற்குப் பிறகு மூடி இருக்கிற பஞ்சாலைகளைத் திறப்பதற்காக இரண்டு கோடி ரூபாய் உத்திரவாதம் தந்தது. இரண்டாவதாக, சேல்ஸ் டாக்ஸ், எலெக்ட்ரிசிடி சர்சார்ஜ் எல்லாம் கலெக்ட் பண்ணுவதில்லை. மூன்றாவதாக, ஏற்றுமதி செய்கிறநூலுக்கு எக்ஸம்ஷன் கொடுத்தது. 'எக்ஸம்ஷன் ஆப் சேல்ஸ் டாக்ஸ் ஆன் காட்டன் யார்ன்.' நான்காவதாக, 50 இலட்சம் ரூபாய் கைத்தறி சொஸைட்டிகளுக்குக் கடனாகக் கொடுத்து தேங்கியிருக்கும் நூல்களை வாங்கச் செய்தது. தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னபடி கார்ப்பரேஷன் ஒன்றை நிறுவுவது, இவையெல்லாம் நாம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள்.

எக்ஸைஸ் டியூட்டி எடுத்துவிட்டார்கள் என்று இந்த மன்றத்திலே கூட எடுத்துப் பேசினார்கள். இது எந்த அளவுக்கு நன்மை செய்யும் என்பதை நாங்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். இட் ஈஸ் ரிப்போர்ட்டட், எனக்குக் கிடைத்த தகவலின்படி, சொல்லுகிறேன், சென்னை நகரத்திலே பக்கிங்ஹாம் அண்ட் கர்நாடிக் மில் என்று ஓர் ஆலை இருக்கிறது. எக்ஸைஸ் டியூட்டியை எடுத்துவிட்டார்களே, அதனால் என்ன ஆதாயம் கிடைத்திருக்கிறது என்று அவர்களைக் கேட்டதற்கு "மொத்தமுள்ள நூலிலே கொஞ்சம் சலுகை போனால், அந்த மில் சில நூல்களுக்கு விலை குறைத்திருக்கிறார்கள். சில துணிகளுக்கு ஏற்றியிருக்கிறார்கள், நூல்களிலே சில ஏற்றி வைத்திருக்கிறார்கள், ஆக இருக்கிற நிலைமை என்னவென்றால், 50 இலட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டி இருக்கும்" என்று அந்த பக்கிங்ஹாம் அண்ட் கர்நாடிக் மில் காரர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே இருக்கிற பஞ்சாலை முதலாளிகள் சங்கம், 'இதிலே ஒட்டுமொத்தமாகப் பார்த்தாலே கூட, நமது மாநிலத்திற்கு என்ன இலாபம் கிடைக்கும் என்றால், ரூ. 40 இலட்சம்தான் கிடைக்கும்' என்று கூறுகிறது. நாம் 2 கோடி ரூபாய், 4 கோடி ரூபாய் கொடுத்து மில்களைத் திறங்கள் என்று சொன்னாலும், திறக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். பதினைந்து கோடி ரூபாய்க்கு இந்தியா பூராவிலும் விதி விலக்கு என்று சொல்கிறார்கள். பதினைந்துகோடி ரூபாயிலே கோயம்புத்தூருக்கும் மற்ற நம் ராஜ்யத்தில் உள்ள ஊர்களுக்கும் 40 இலட்சம் ரூபாய்தான் ஆதாயம் என்று

சௌத் இண்டியன் மில் ஓனர்ஸ் அசோசியேஷன் கணக்கிடுகிறார்கள் என்று கூறப்படுகிறது. அந்த மில்களிலே கேட்டால், இன்னும் 15 இலட்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ரெட்ஹில்ஸ் பக்கத்திலே வெங்கடேசன் மில்ஸ் என்று ஒன்று இருக்கிறது. நமது அமைச்சருடைய தொகுதியைச் சேர்ந்தது. (குறுக்கீடு) வெங்கடசாமி மில் என்ற உப மில் ஒன்று ரெட்ஹில்ஸிலே இருக்கிறது. எக்ஸைஸ் டியூட்டி எடுத்தாலே ரூ. 6 ஆயிரம் ஆதாயம் வரும், ஆனால், வேறு கணக்குகளில் அதிகம் போட்டிருப்பதாலே, துணிக்கு அதிகமான வரி போட்டிருப்பதாலே, ரூ. 40,000 அதிகமாக செலவிட வேண்டுமென்று கணக்குச் சொல்கிறார்கள். மதுரை யார்ன் மில்லிலே அவர்களுக்கு இன்னும் ரூ. 72,000 அதிகமாகும் என்று சொல்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். இதனாலே மட்டும் பரிகாரம் தேடவில்லை. மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை. சைஸ்ட் யார்ன் என்பதற்கு இருக்கிற வரியை எடுத்துவிட்டதாகக் காண்பித்திருக்கிறார்கள். இது ஏற்கனவே பிடிக்காத வரி. எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கும் விலக்குக்கு மீறிச் செய்திருக்கிறார்கள். அது நியாயம் அல்ல. அந்த நிலை வடக்குப் பக்கத்திலேதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே, எக்ஸைஸ் டியூட்டி மூலமாக ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடவில்லை. அதை இன்னும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நான் கூறிய அளவில் நமது அரசு பஞ்சாலை மில்களுக்கு அனுகூலம் செய்திருக்கிறது. பஞ்சாலைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முதலமைச்சரவர்கள் எடுத்திருக்கிற முயற்சிகளில் முழு மனதுடன் எல்லாத் தரப்பினரும் ஒத்துழைத்து, சீக்கிரமாக அவைகளைத் திறப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மார்டின் அவர்களும், இன்னும் மற்றவர்களெல்லாம் சர்க்கார் ஊழியர்களுக்கு பே கமிஷன் நியமிக்க வேண்டுமென்பதைப்பற்றிச் சொன்னார்கள். அது ரொம்ப முக்கியமான பிரச்னை. அதைப்பற்றி நான் தெளிவாகக் கூறி இருக்கிறேன். முதலிலே அண்ணா அவர்களைப் பற்றி பட்ஜெட் உரையிலே கூறுகிற நேரத்திலே, இதைப்பற்றிச் சொல்லி இருப்பதாக எனக்குக் கவனம். இந்த மாநில அரசாங்க ஊழியர்கள் மீது இந்த அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய வீட்டையே ஒழுங்குபடுத்தவில்லையென்றால், நாட்டை எப்படி ஆளப்போகிறோம், நாட்டு மக்கள் எப்படி நன்மை பெறப் போகிறார்கள் என்பதை இந்த அரசு நன்கு உணர்கிறது. அவர்களுடைய பெண்டு, பிள்ளைகள், குழந்தைகள் நன்றாக இருக்கவேண்டும், குடும்பத்திலே புயல் இல்லாவிட்டால்தான் நாட்டிலே நன்மை இருக்கும் என்ற முறையில், டியர்னஸ் அலவன்ஸை, அகவிலைப் படியை, மூன்று முறை உயர்த்தியிருக்கிறது. நகர ஈட்டுப் படியை, இந்த நகரம் 'ஏ' நகரமாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, மத்திய அரசாங்கம் அவர்கள் ஊழியர்களுக்கு எவ்வளவு கொடுக்கிறதோ, அந்த அளவுக்குக் கொடுக்கிறது. இன்னும் என்காஷ்மெண்ட் ஆஃப் லீவ் ப்ரிவிலேஜஸ் கொடுத்தல் போன்ற காரியங்களைச் செய்திருக்கிறோம். இப்பொழுது இந்த நிதி நிலை அறிக்கையிலே சப்ஸ்டான்டிவ் பேக்கும் அபிஷியேடிங் பேக்கும், இடையிலுள்ள வேறுபாட்டை நீக்கிப் பென்ஷன் கணக்கிடப்படும் என்ற நன்மையைச் செய்திருக்கிறோம். இதையெல்லாம் செய்து முடித்துவிட்டோம் என்று சொல்லவில்லை. அதிலே இருக்கிற சிரத்தையைக் கவனிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் இந்த அரசுக்கும் சர்க்கார் ஊழியர்களுடைய நலன்களை உயர்த்த வேண்டுமென்பதிலே மிகுந்த அக்கறை உண்டு. செய்யக் கூடியவற்றை என்றென்றும் செய்யும். அதிலே கொஞ்சங்கூடச் சந்தேகம் கிடையாது. ஆனால், பிப்த் பினான்ஸ் கமிஷன் என்ன சொல்லப் போகிறது என்று பார்க்கவேண்டும். அதைப்பற்றி யோசிப்பதாலே கொஞ்சம் காலதாமதம் ஆகுமென்று நான் என்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அதையே நான் இப்பொழுது சொல்கிறேன். பிப்த் பினான்ஸ் கமிஷன் அறிக்கையைப் பார்த்து, அதற்குப் பிறகு ஏதாவது நிதி வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று பார்த்துத்தான் செய்ய வேண்டும். 'இப்படிச்

சொல்வதால் இதைப் புறக்கணித்துவிடுவதாகப் பொருள் அல்ல. மத்திய அரசாங்கமேகூட 1959-ம் வருஷத்திலேதான் பே கமிஷன் நியமித்தது. பிறகு நியமிக்கவில்லை. அதற்குப் பிறகுதான் நாம் பே கமிஷனை அதனுடைய அடிப்படையிலே நியமித்தோம். பத்து ஆண்டுகளாக நியமிக்கவில்லை. அதனாலே நாம் நியமிக்கக் கூடாது என்பது அல்ல என்னுடைய வாதம். ஆனால் அவர்களேகூட நியமிக்கும்படியான வாய்ப்பு ஏற்படவில்லை. இந்த அரசு அதனுடைய ஊழியர்களிடத்திலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. இதைப் பின்னாலே பரிசீலனை செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பரிசுச் சீட்டு திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே நான் ஒன்றும் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. கேரள மாநிலம்தான் முதன் முதலிலே இதைத் துவங்கியது என்றாலும், இன்றையதினம் பஞ்சாப் மாநிலம், அரியானா மாநிலம், ராஜஸ்தான் மாநிலம், மராட்டிய மாநிலம் ஆகிய மாநிலங்கள் நடத்துகின்றன. நமக்குப் பக்கத்திலே இருக்கிற மைசூர் மாநிலம்கூட யோசனை கேட்டுக்கொண்டிருக்கிறது, இதை எப்படி ஆரம்பிக்கலாம் என்று. எல்லா இடங்களிலும் நடத்துகிறார்கள். அது கொஞ்சம் ஆதாயமாகத்தான் இருக்கிறது. அதனாலே அதிகம் கிடைக்கிறது என்று சொல்லவில்லை. அந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கிற பணம் சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்குத்தான் பயன்படுகிறது. அதிலே சந்தேகம் வேண்டியதில்லை. இந்த ஆண்டிலே 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் கிடைத்தது. அடுத்த ஆண்டு 2.4 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இப்பொழுது பார்க்கிறோம். (குறுக்கீடு) அவர்களை வாழ்த்துகிறேன். அதிகமாக வரவேண்டுமென்பதுதான் நமக்கு ஆசை. ஆனால் வருவதாகத் தெரியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகக் குறைகிறது. இந்த 3 கோடியே 40 இலட்சம்கூட தண்ணீருக்கோ, மருத்துவ மனைகளுக்கோ, சிறு சேமிப்பிற்கோதான் பயன்படுகிறது. மொத்தமாக இந்தக் கணக்கிலே வரலாம். இந்த 3 கோடி, 2 கோடி இல்லையென்றால், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் குறைபடப்போவதில்லை. எண்ணூரிலே இருக்கிற தெர்மல் ஸ்டேஷன் குறைபடப்போவதில்லை. அது இல்லையென்றாலும், வழக்கமாக இருக்கிற திட்ட வேலைகள் குறையாது, சமுதாயத் திட்டங்கள்தான் குறையும். ஆகவே, சமுதாயத் திட்டங்களுக்குத்தான் பயன்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுகூட தண்ணீர் அளித்தல் போன்ற காரியங்களுக்குத்தான் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படும் என்றும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரையில், இந்த மாதிரி நிலை என்று சொன்னால், எக்ஸைஸ் டியூட்டியில் மாறுதல் என்கிறார்கள், ரொம்ப சந்தோஷம். ஆனால், **it is reported** என்றுதான் சொல்லுகிறேன். ஆனாலும், 15 கோடியில், 40 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்வது ? தொழில் இலாகாக்காரர்களைக் கணக்குப் போடச் சொல்லியிருக்கிறேன். ஏதோ வந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டு ஸேல்ஸ் டாக்ஸை எடுங்கள் என்றுசொல்லுகிறார்கள். ஸேல்ஸ் டாக்ஸ் இரண்டு கோடி, மூன்று கோடி வருகிறது. இன்னும் மத்திய சர்க்கார் அந்தக் காரியத்திற்கு உதவ முன்வர வேண்டும்.

அடுத்து, பஞ்ச நிலை, வறட்சி நிலை, அதைப்பற்றித் தினம் தினம் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நீங்களும் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு முதல் அமைச்சர், முதல் மந்திரி பதவி ஏற்றதும் முதல் கையெழுத்துப் போட்டதே அது சம்பந்தமான உத்திரவுதான். அதுதான் பிரத்தியட்ச நிலை. அதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இந்த அரசு உதவி செய்ய முன்வருகிறது. ஆனாலும், மத்திய சர்க்காருக்குப் பொறுப்பில்லையா ? ஏதானாலும் கடனாகத்தான் கொடுக்கிறார்கள். கணக்கு எழுதி வைத்துக்கொள்கிறார்கள். மானியமாக கொடுக்கவேண்டும் என்று கேட்கிறோம். அப்படி வேறு மாநிலங்களில் உதவி செய்திருக்கிறார்கள். அஸ்ஸாம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு உதவியிருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒன்று சொல்வேன். அவர்கள் டெல்லியில் தொடர்பு உள்ளவர், தொடர்பு இருந்திருக்கிறது. ஆகவே, அவர்களைக் கேட்டுக்கொள்ளுவேன். உபசாரமான வார்த்தையல்ல. பிரதம மந்திரி இந்திரா காந்தியவர்களும், நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களும், இங்கே வந்து நம்முடைய மாநிலத்தை, நம் முதல் அமைச்சரோடு சுற்றிப் பார்க்கவேண்டும். நம்முடைய விருந்தினர்களாக ஒரு வாரம் தங்க வேண்டும். நாம் எவ்வளவு கோரமான, பயங்கரமான காரியத்தை சமாளித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைக் காணவேண்டும். மத்திய சர்க்கார் நமக்கு நல்ல வகையில் உதவி கொடுக்கவேண்டும். அவர்கள் நம்முடைய அழைப்பைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இவர்கள் சொல்ல வேண்டும்.

உணவு உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய உணவு அமைச்சர் நாளை தினம் இங்கே வருகிறார்கள். நாம் இரங்கிய மனதுள்ளவர்கள். அதனாலேயே ஏமாந்து போனவர்கள். வரம்பு வைத்திருக்கிறார்கள் என்றாலும், அதைப்பற்றியும் பேசலாம். கேரளாவிற்கு அவசியம் என்றவுடன் 1.5 லட்சம் டன் கொடுத்தோம் ஒரு வருஷத்தில், பிற்பாடு 40 ஆயிரம் டன் கொடுத்தோம். நமக்குக் குறுகிய மனப்பான்மை கிடையாது. கேட்டபோதெல்லாம் கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு நாம் பெரிய நெருக்கடியில் இருக்கிறோம். ஒரு லட்சம் டன் முதல் அமைச்சர் கேட்டிருக்கிறார்கள். கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய நல்ல காலம் வெளி மாநிலங்களில் நிலைமை நன்றாக இருக்கிறது. அங்கெல்லாம் நல்ல விளைச்சல் இருக்கிறது என்கிற செய்திகள் வருகின்றன. மத்திய சர்க்காரில் இன்றைக்கு உணவு அமைச்சராக இருக்கும் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் நம்மிடம் பரிவு உடையவர்கள். பிற்படுத்தப்பட்ட மாநிலம், பிற்படுத்தப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள் என்றால், அவர்கள் விஷயத்தில் தனிப் பரிவு உணர்ச்சி உள்ளவர்கள். தனிப்பரிவு உணர்ச்சிமட்டுமல்ல, அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. மக்கள் நிலை சீர்பட வேண்டும் என்பதில் அவர்களுக்கும் அடிப்படை கடமை இருக்கிறது. ஆகவே, அவர்களும் உதவி செய்யமுன்வர வேண்டும். உணவுப் பொருளோடு, கோதுமையும் கொடுக்க வேண்டும்.

எட்டு கோடி ரூபாய் கொடுக்கிறார்கள் என்கிறார்கள். ஆம், எட்டு கோடி ரூபாய், சென்னைப்பட்டினத்திலும், நம் ஊரிலும் (குறுக்கீடு), கோவையிலும்—நம்மூர் என்று சொல்ல வேண்டாம்—கோயம்புத்தூர் என்றே வைத்துக்கொள்ளுங்கள், படி அரிசித் திட்டம் இருப்பதால், இந்தச் செலவு. இதிலே செங்கல்பட்டு மாவட்டத்தின் கால் பகுதிகூட இருக்கிறது. அதை யாரும் சொல்வதில்லை. ஆக மொத்தத்தில், 40 லட்சம் மக்கள், பத்தில் ஒரு பங்கிற்கு படி அரிசி போடப்படுகிறது. எட்டு கோடி ரூபாய் என்றால் அதில் ஏற்கனவே திரு பக்தவத்சலம் காலத்தில் இருந்த 4 கோடியும் சேர்ந்திருக்கிறது. ஆனால், ஒட்டு மொத்தமாக எட்டு கோடி என்று எழுதி வைத்துக்கொண்டோம். ப்ரொக்யூர்மெண்டில் மூன்று ரூபாய் போனஸ், ரூ. 42 லிருந்து ரூ. 45 என்று செய்தபோது கொடுக்கப்பட்டதே, அந்த வகையில் ஏற்பட்ட செலவும் சேர்ந்தது. அது வாங்குகிறவர்களுக்குக் கொடுக்காததால், **it was not passed on to the consumer** மூன்று ரூபாய் என்று கணக்குப் போட்டு, அந்த வகையில் ஒரு 4 கோடி ரூபாய் பங்கீட்டு வகையில் கொள்முதலில் இருந்தது. **Already some food subsidy was in existence.** விலைவாசியைக் கட்டுப்படுத்த, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு விலை ஏறக்கூடாது என்று செய்த வகையில் ஏற்கனவே 4 கோடி ரூபாய் செலவு ஆகியிருக்கிறது. இப்பொழுது கோவைக்கும், சென்னைக்கும் கொடுக்கும் படி அரிசித் திட்டத்தினால், 4 கோடி. ஆக, 8 கோடியே அல்லாது இதற்கே 8 கோடி என்பது தவறானது. ஏற்கனவே 4 கோடி செலவாகிவிட்டது. இப்பொழுது அதையும் சேர்த்து, இவ்வளவு பேர்களுக்கு மலிவு விலையில் அரிசி கொடுத்ததில் இவ்வளவு என்று பிரித்து எழுதாமல், படியரிசித் திட்டத்திற்கு 8 கோடி என்று அர்சாங்க தஸ்தாவேஜுகளில் அதிகாரிகள் எழுதியிருக்கிறார்கள். ஃபுட் சப்ஸிடி திரு. பக்தவத்சலம் கணக்கில் 4 கோடி எழுத வேண்டியது, திரு. கருணாநிதி கணக்கில் 4 கோடியையும் எழுத

வேண்டியது, இரண்டையும் சேர்த்துக் கணக்குப் போட்டு, 8 கோடி என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, படியரிசித் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் தான் செலவு.

விலைவாசிகள் குறைந்திருக்கிறது. நேரம் இல்லை விவரங்களைக் கொடுக்க. கல்கத்தாவில், பங்களூரில் இருப்பதை விட விலைவாசி இங்கே குறைந்திருக்கிறது. புள்ளி விவரத்தோடு இன்னொரு சந்தர்ப்பத்தில் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

உணவுப் பிரச்னை உயிரோடு விளையாடும் சமாசாரம். மாண்புமிகு முதல் அமைச்சர் கவலை தெரிவித்தார்கள். பஞ்சம் இருக்கிறது. இருக்கிறதை நிரவ வேண்டும் என்கிற நிலை. உதவி வேண்டும் (குறுக்கீடு : வருண ஜபம் வைக்கலாமே) வருண ஜபம், நம்பிக்கையுள்ளவர்கள் செய்து கொள்ளட்டும். வேளாண்மைத் துறையில் விவசாய அமைச்சர் அத்துறைக்காக உழைத்து, உழைத்து, இவ்வளவு உடல் மெலிந்து போயிருக்கிறார்கள். அத்தனை காரியங்களைச் செய்த பிறகும், எவ்வளவோ எருவுக்கு செலவு. எத்தனை பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறோம். அப்படியும் இந்த நிலை என்றால், நல்ல காலம் ஜூன் மாதத்தில் வரும். ஆரூடக்காரன்போல் குறி சொல்லவில்லை.

இந்த நிலையில், வர்த்தக சூதாடிகள், கள்ள மார்க்கெட்டில் விளையாடுபவர்கள், பதுக்கல்காரர்கள், இவர்களெல்லாம் சமுதாயத்தின் உயிரோடு விளையாடுகிறார்கள். பதுக்கல்களை வெளியே கொண்டுவரவும், கண்டுபிடிக்கவும், இன்னும் பெரிய பெரிய நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி யோசிக்கப்படும். யாருடையவோ லாபத்திற்காகச் செய்யப்படும் எந்தக் காரியத்தையும் ஒரு நாளும் இந்த அரசு அனுமதிக்காது. அதைப்பற்றியும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசித்துக்கொண்டு இருக்கிறது. முதல் அமைச்சரே புத்திசாலித்தனமாக பந்தோபஸ்தாக இருக்க வேண்டும். சமூக துரோகிகள் விஷயத்தில். இந்த அரசு நான்கு கோடி மக்களுக்கு அவர்களுடைய உயிர் பிரச்னையில், வாழ்க்கைக்கான தேவைகளை எந்த அளவில் ஒழுங்காகச் செய்ய முடியுமோ, அப்படிச் செய்ய ஒருநாளும் அதன் பொறுப்பைத் தட்டிக் கழிக்காது. சமூக விரோதிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்தக் கட்சியானாலும், இன்னொரு கட்சியானாலும், கள்ள மார்க்கெட்டுக்காரன், சூதாடியாக விளையாடுகிறான் என்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இது சம்பந்தமாகப் புதிய அதிகாரங்கள், சட்டங்கள் அரசாங்கத்திற்கு வேண்டுமென்றால், அதை இந்த அரசுக்குக் கொடுக்க இந்த மாமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் சட்டங்கள் போதவில்லை என்றால், புதிய சட்டங்கள் தேவையென்றால், அரசாங்கம் அப்படிப்பட்ட அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் என்று கூறிக்கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் மேலான யோசனைகளுக்கு நன்றி தெரிவித்து, விட்டுப் போயிருக்கிற விவரங்களை இப்பொழுது இல்லாவிட்டாலும், அந்த அந்த மானியக் கோரிக்கைகள் வரும்போது, அந்தந்த துறையை சேர்ந்த அமைச்சர்கள் சொல்வதனால் பயன் உள்ளதாக இருக்கும், பரிகாரமும் தேட முடியும் என்ற வகையில் அவை கூறப்படும் என்று சொல்லி, நாங்கள் ஏற்றிருக்கும் புதிய கடமைகளைச் செய்வதில் வரும் ஆண்டுகளில் நீங்களெல்லாம் ஒத்துழைத்து, இந்த மாநிலத்தின் முன்னேற்றத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் பெருக்க வழி செய்வீர்கள் என்று நம்பி, உங்களுடைய மேலான யோசனைகளுக்கு நன்றியைத் தெரிவித்து, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் இன்றைக்குக் கடுமையாகப் பேசுவதுபோல பெரிய தொனியில் பேசினார்கள். ஆனாலும், நான் எதிர்பார்த்த அளவு அவர்கள் பேசவில்லை. பேசவில்லை என்றால் அவர்கள் திட்டுவதைச் சொல்லவில்லை. ஆக்க பூர்வமான நல்ல யோசனைகளைப்பற்றிச் சொல்லுகிறேன். இன்றைக்குச் சொல்லுகிறார்கள், காலம் மாறுகிறது. காலக் குறியைத் தெரிந்துகொள்ளாதவர்கள் வருந்துவார்கள் என்று.

இன்றைக்கு எங்களைப் பார்த்து மிரட்டுகிறார்கள். ஏதோ தேசத் துரோகம் என்று சொல்லிவிட்டால் இந்த அரசே இல்லாமல் கலைந்துவிடுமோ என்று கருதுகிறார்கள். நான் ஒன்றே ஒன்றைத்தான் சொல்லுகிறேன். ஆரம்பத்திலேயும் சொன்னேன். இந்த மந்திரிமார்கள் வேலை சாசுவதம் மல்ல ; அதை எங்களுடைய பரம்பரைச் சொத்து என்று நாங்கள் கருதிக் கொண்டிருப்பவர்கள் அல்ல. எங்களுடைய பொதுப் பணியில் நான்கு கோடி மக்களுக்கும் இன்னும் பரந்த மக்களுக்கும் நாங்கள் உதவி செய்ய வேண்டும். எங்களுடைய பொதுப் பணியில் மக்களுக்காகப் பாடுபடவேண்டும், அதற்கு இதை ஒரு வாய்ப்பாகக் கருதித்தான் நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதைத் தெளிவுபடுத்துவது மட்டுமல்லாமல், இன்னொன்றும் சொல்லிக் கொள்வேன். தவறாக, கெட்ட எண்ணங்களோடு, ஏதேதோ காரணங்களையொட்டி, எங்கெங்கோ தேடிக்கொண்டிருக்க வேண்டாம். மக்களுடைய நியாயமான உரிமைகளுக்குப் போராடுவதற்காக, இந்த மந்திரி பதவி அல்ல, எங்கள் ஊண்,உயிர், எங்கள் ரத்தம், எங்களுடைய சகலத்தையும் நாங்கள் அர்ப்பணித்தவர்கள். எங்களுடைய மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியைப் பின்பற்றி, அவர் வகுத்த நெறிகளைப் பின்பற்றி, மக்களுடைய நலனுக்காகப் பாடுபடுவதற்காக, எங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறோமே தவிர, இந்தப் பதவிகளுக்காக அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுவதோடு, இன்றைக்கு மக்களுடைய உணர்வுகள்தான் இந்த மன்றத்திலே பிரதிபலிக்க வேண்டும். மத்திய அரசும் முன்வர வேண்டும். மத்திய அரசில் செல்வாக்கு உள்ள அவர்களுக்கு அந்த ஞானோதயம் வரவேண்டும்.

இன்னும் இரண்டு மூன்று பெரிய காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. அவை நடைபெற்றால் இந்தியாவுக்கேகூட நல்லது என்று சொல்லும்போது, ஒன்றை நான் சொல்கிறேன். எங்களுக்கு மக்களிடத்திலே செல்வாக்கு இல்லை, மக்கள்மீது இருந்த பிடிப்புத் தளர்ந்துவிட்டது, என்று சொல்வார்களானால்—அந்த நிலைமை வராது—வருமானால்—நான் சொல்கிறேன்—உண்மையாகவே ஒரு மறு தேர்தல் வருமானால், மறு தேர்தல் நிர்ப்பந்தப்படுத்தப்படுமானால், இன்னும் அதிக அளவிலே இன்னும் அதிக எண்ணிக்கையிலேயே இந்த மாநிலத்தினுடைய பொறுப்பை வகிக்கும்படியான பெருமையை இந்த இரண்டு ஆண்டுச் சாதனைமூலம் நாங்கள் பெறுவோம் (ஆரவாரம்). இன்றைக்கு மக்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்திருக்கிறது. மக்களுடைய கருத்தை என்றென்றும் நாங்கள் பிரதிபலிப்போம் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. அதிலே எங்களுக்கு எந்தவித பயமும் இல்லை. எந்தவிதக் குழப்பமும் இல்லை. இன்றைக்கேகூட ஒரு ஒரு மறு தேர்தல் வருமானால், அத்தகைய நிலைமை வருமானால், இன்னும் அதிகமான எண்ணிக்கையில், இன்னும் அதிகமான வலுவோடு நாங்கள் இந்த மன்றத்தில் இருப்போம் என்று சொல்லிக்கொண்டு, எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்து நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை நிகழ்ச்சி இன்று இந்த அளவோடு முடிவுற்று, பேரவை 10-3-1969 அன்று காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்

ஏதும் இல்லை.

இணைப்பு

[584-ம் பக்கத்திலுள்ள 235-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க].

விடை —1964-ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து நெல், அரிசி இவற்றைப் பொறுத்தவரையில், சந்தைக்குத் தாராளமாக அரிசி வரவில்லை. இம் மாநிலத்தில் வணிகர்களாலும், வர்த்தகர்களாலும், செயற்கையான பற்றாக்குறை நிலைமை ஒன்று உருவாக்கப்பட்டது. 1964 ஆகஸ்டில் இம்மாநிலத்தில், நடுத்தர, சிறந்த அரிசி வகைகளுக்கான விலைகள் முடிவு செய்யப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டன. முந்திய சில திங்கள்களில் நிலவிய வெளிச் சந்தை விலைகளின் அடிப்படையில் இவ்விலைகள் முடிவு செய்யப்பட்டன. நெல் வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும்கூட விலை ஒழுங்கு முடிவுக் கட்டுப்பாட்டை பின்பற்றும்படிச் செய்வதற்காக, தென் மாநிலங்கள் நான்கிலும் நெல்லுக்கு மேல் வரம்பு விலைகள் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் பின்னர் கருதப்பட்டது. அச்சமயத்தில் நிலவிய நெல் விலையையும், அரிசிக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மேல் வரம்பு விலைகளையும் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு 1964-ம் ஆண்டு நெல் (விலைக் கட்டுப்பாட்டு) ஆணை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற மட்ட ரக, நடுத்தர ரக, சிறந்த ரக நெல்லை ஒரு வணிகர் விற்கக் கூடிய மேல் வரம்பு விலைகளை மேற்சொன்ன ஆணை முடிவு செய்தது. முந்திய சில திங்கள்களில் நிலவிய வெளிச் சந்தை விலைகளைக் கருத்தில் கொண்டும் இவ் விலைகள் முடிவு செய்யப்பட்டன.

2. 1964 செப்டம்பர் முடிவில், தென் மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் உணவு, அமைச்சர்கள் கூட்டம் ஒன்றை மத்திய உணவு அமைச்சர் கூட்டினார். 1964-65 பருவத்திற்காக தெற்கு அரிசி மண்டல மாநிலங்களில் நெல், அரிசி விலைகள் முடிவுசெய்வது குறித்து ஜா குழு செய்த பரிவுரைகள் விவாதிக்கப்பட்டன. அக்கூட்டத்தில் எடுத்த முடிவுகளையும், 1964 அக்டோபரில் புது டில்லியில் மேற்கொண்டும் நடத்திய விவாதத்தையும் ஒட்டி, ஒவ்வொரு மாநிலத்திலும் தரமான நெல் ரகங்களின் மேல் வரம்பு விலைகளை இந்திய அரசு அறிவித்தது.மேலும், வெவ்வேறு நெல் ரகங்களின் மேல் வரம்பு விலைகள் அறிவிப்பதற்காக, 1955-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அதிகாரம் பிரித்துக் கொடுத்தது. தமிழ்நாட்டின் தர நெல் ரகமாகிய " கட்டைச் சம்பா " நெல்லுக்காக இந்திய அரசு முடிவு செய்த மேல் வரம்பு விலை 1964-65-ல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 39.50 ஆகும். கும்பகோணம் போன்ற சந்தைகளில் நிலவிய வெளிச் சந்தை விலைகளையும், முந்திய சில ஆண்டுகளில் வணிகர்கள், அரிசி ஆலை அதிபர்கள் ஈட்டிய ஆதாயங்களையும் கருதிப்பார்த்து, இந்த விலை தனிப்பட்ட அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது. பயிர் விளைவிக்க பிடித்த செலவு குறித்து விஞ்ஞான முறையில் பகுப்பாய்வு செய்யும் வேலை மேற்கொள்ளப் படவில்லை. சந்தை ரகங்கள் இவற்றின் வழக்கமான வேறுபாடுகளைக் கருதிப்பார்த்து, பிற நெல் வகைகளில் விலைகளை முடிவு செய்யுமாறும் மாநில அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்த அடிப்படையில் நெல்லின் வெவ்வேறு ரகங்களுக்கான மேல் வரம்பு விலைகள் உணவு-வேளாண்மைத் துறையின் 17-10-1964 தேதியுள்ள 2858 எண் அரசாங்க ஆணையில் அறிவிக்கப்பட்டன. 1965 டிசம்பர் வரையில் இந்த விலைகள் நிலவி வந்தன.

3. பயிரிடுவதற்கான செலவு அதிகரித்துவிட்டதன் காரணமாக, 1966-க்கென கொள்முதல் விலைகளை உயர்த்துமாறு இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு உழவர் சங்கங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் முறையீடுகள் வரப்பெற்றன. இவற்றைப்பற்றிக் கவனமாக ஆலோசனை செய்த பிறகு, வகைப்பாட்டின் அடிப்படையில், நெல்லின் கொள்முதல் விலைகளைக் கீழ்க்கண்டவாறு அரசாங்கம் மாற்றி அமைத்தது:—

மட்ட ரக நெல்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 40.

நடுத்தர ரக நெல்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 42.

சிறந்த ரக நெல்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45.

14-8-1967 வரை மேற்சொன்ன விலைகள் நிலவி வந்தன.

4. 1967 மே திங்களில், மட்ட ரக நெல்லுக்கான ஆதரவு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 என முடிவு செய்யலாம் என்று இந்த அரசாங்கத்துக்கு இந்திய அரசு பரிவுரை வழங்கியது. மேலும், ரக வேறுபாடுகளைக் கருத்தில்கொண்டு, பிற ரகங்களுக்கும் ஆதரவு விலைகளை மீண்டும் முடிவு செய்யலாம் என்றும் இந்திய அரசு கூறியுள்ளது. இம் மாநிலத்தில் நெல் பயிரிடுவோருக்கு மட்ட ரக நெல்லுக்காக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, குவிண்டால் ஒன்றுக்கு கொள்முதல் விலையாக ரூ. 40-ம், ஊக்கத் தொகையாக ரூ. 3-ம் வழங்கப்பட்டது. ஆயினும், இந்திய அரசின் கருத்து பரிசீலனை செய்யப்பட்டு, உற்பத்தியாளர்களுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3 என்ற வீதத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊக்கத் தொகை கொள்முதல் விலையுடன் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கேற்ப ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நெல்லின் தற்போதைய கொள்முதல் விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

சிறந்த ரகம்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 48.

நடுத்தர ரகம்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45.

மட்ட ரகம்—குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43.

புதிய விலைகள் 15-8-1967 முதல் செயலுக்கு வந்தன. இந்த விலைகள் இன்னமும் செயலில் இருந்து வருகின்றன. தற்போதுள்ள விலைகள் உற்பத்தியாளரின் நன்மையையும், பயன்கொள்வோரின் நன்மையையும் கருதிப்பார்த்து முடிவு செய்யப்பட்ட மிக நியாயமான விலைகளாகும்.

1.—As regards paddy and rice from the beginning of the year 1964, there was no free flow of rice in the market and an artificial scarcity was created by traders and merchants in this State. In August 1964, orders were issued fixing prices for medium and fine varieties of rice in this State. The prices were fixed on the basis of open market prices in the preceding few months. It was subsequently considered that maximum prices of paddy should also be fixed for all the four Southern States in order that paddy merchants and even producers are brought within the price discipline. Taking into consideration the ruling price of paddy at that time and the maximum prices already announced for rice, an order called the Madras Paddy (Price Control) Order, 1964 was issued. The above order fixed the maximum prices at which paddy of coarse, medium and fine varieties of Madras origin should be sold by any person in any transaction. The prices were also fixed taking into account open market prices in the preceding few months.

2. Towards the end of September 1964, a meeting of the Chief Ministers and Food Ministers of Southern States was convened by the Union Food Minister at which the recommendations of the Jha Committee for the fixation of prices for paddy and rice in the Southern Rice Zone States for the 1964-65 season, were discussed. In pursuance of the decisions taken at that meeting and the further discussion held at New Delhi in October 1964, the Government of India announced the maximum prices of standard varieties of paddy in each State and delegated powers to the

State Governments under the Essential Commodities Act, 1955, to notify the maximum prices of different varieties of paddy. The maximum price fixed by the Government of India for 'Kattai Samba' paddy, which is the standard variety of paddy for the Madras State was Rs. 39.50 per quintal for 1964–65 season. This price was fixed on an *ad hoc* basis, taking into account the open market prices at representative markets like Kumbakonam and the margins earned traders and millers in the preceding few years. No scientific analysis of cost of cultivation was undertaken. The State Governments were requested to fix prices of other varieties of paddy taking into account the usual market and varietal differentials. Based on this, the maximum prices for different varieties of paddy were notified by this Government in G.O. Ms. No. 2858, Food and Agriculture, dated 17th October 1964. These prices were prevalent up to December 1965.

3. Representations were received from the various Agriculturists Associations and individuals in this State requesting fixation of higher procurement prices for the year 1966 in view of increased cost of cultivation. The Government after careful consideration, revised the procurement prices of paddy leased on the classification, as follows :—

Coarse variety of paddy Rs. 40 per quintal.

Medium variety of paddy Rs. 42 per quintal.

Fine variety of paddy Rs. 45 per quintal.

The above prices were in existence up to 14th August 1967.

4. In May 1967, the Government of India recommended to this Government that the support price for coarse variety of paddy may be fixed at Rs. 43 per quintal and requested that the support prices of other varieties also may be refixed taking into account the usual variety differentials. The producer in this State was already paid Rs. 43 per quintal of paddy of coarse variety, that is Rs. 40 as procurement price and a bonus of Rs. 3 per quintal. However, the suggestion of the Government of India was examined and it was decided that the bonus of Rs. 3 per quintal already given to the producers should be merged with the procurement prices and orders were issued accordingly. The present procurement prices of paddy are as follows :—

Fine variety	Rs. 48 per quintal.
Medium variety	Rs. 45 per quintal.
Coarse variety	Rs. 43 per quintal.

The revised prices came into force with effect from 15th August 1967. These prices are still in force. The existing prices are the most reasonable approximation of the ideal of reconciling the producers' interest and the consumers' interest.

Tamil Nadu Legislative Assembly Debates

FIFTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

1st and 3rd to 8th March 1969.

Volume XVII (Nos. 1 to 7)

PAGES

A

ABDUL GHAFFOOR SAHIB, THIRU M.—
Budget, 1969–70, G.D. . 558–559

ACCIDENTS—
Fire at Gandhi Market, Tiruchirappalli 595–597
Fire at New Kalpakkam village 20–21

ACTS—
Land Acts, amendments 515–517

ADITANAR, THIRU Si. Pa.—
Adjournment Motion, propriety of the Leader of the Opposition to speak on the motion moved by another Member (Point of Order) 369–370
Budget, 1969–70, G.D. 396, 406–408
Correction to statement about the Leader of the Opposition (St.) 447

AGRICULTURE—
Agricultural Farm at Kudumiamalai, expenditure incurred 21–22
Crop failure in Tiruchirappalli district 136–138
Implements, manufacture by Government ... 8–10
Paddy fields affected in West Kumbakonam ... 10–11
Research Station, Aduthurai, bacterial blight in 606–609

AIR SERVICE—
Madras–New Delhi Air Mail Service 325

PAGES

ALAGARSAMY, Thiru S.—
Budget, 1969-70, G.D. 548-551
Monsoon failure in some districts, famine relief measures (C.A.) 524-525
Teachers, non-payment of salaries in certain Panchayat Union Schools in Tirunelveli District (C.A.) 30-32

ALANGARAM, Thiru M.—
Monsoon failure in some districts, famine relief measures (C.A.) 372-373

ANICUT(S)—
Across Pungar, condition 356
Grand Anicut Canal, breach in 11-13
Sathiyaru Anicut Scheme, expansion 440

ANIMAL HUSBANDRY—
Key Village Extension Centres, Coimbatore district 520
Veterinary Hospitals at Madurantakam and Chunambedu, housing of 583

ARANGANNAL, Thiru RAMA—
Budget, 1969-70, G.D. 170-176

ARTS—
Development of Tamil Drama, separate department in Madurai University 503-505

ASAITHAMBI, Thiru A. V. P.—
Budget, 1969-70, G.D. 457-464, 474, 475, 476, 479

AUTHIMOOLAM, Thiru D. S.—
Budget, 1969-70, G.D. 386-387 618-623

B

BACKWARD CLASSES—
Backward communities list 1-6

BALASUBRAMANIAN, Thiru A.—
Budget, 1969-70, G.D. 467-470

PAGES

BHARATHI MOHAN, Thiru G.—
Budget, 1969-70, G.D. 275-278

BHUPATHY, Thiru M.—
Waste Lands in Gobi taluk, assignment 255-258

BILL(S)—
Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969—
Message from Legislative Council agreeing with amendment 448
Appropriation Bill, 1969—
Message from Legislative Council agreeing without amendment 449
Appropriation Bill (No. 2)—1969—
Message from Legislative Council agreeing without amendment 449
Cultivating Tenants Protection and Payments of Fair Rent (Amendment) Bill, 1969, Int ... 377-378
General Sales-Tax (Amendment) Bill, 1969—
Message from Legislative Council agreeing without amendment 449
General Sales-tax (Second Amendment) Bill, 1969—
Message from Legislative Council agreeing without amendment 449
Panchayats (Amendment) Bill, 1969—
Message from Legislative Council agreeing without amendment 449

BLIND STUDENTS—
Education in select schools 582

BOJAN, Thiru K.—
Budget, 1969-70, G.D. 562-565
Small scale industry, Nilgiris district 507-508

BRIDGE(S)—
Across trenches in Thudiyalur—Sarkar Samakkulam road 509-510
Near Pettaivaithalai, widening 11

BRONZE ICONS—
Manufactured at Swamimalai, income 322

BUSINESS OF THE HOUSE 156-157

C

PAGES

CALLING ATTENTION—

- Agricultural Research Station, Aduthurai, bacterial blight in 606–609
- Colleges and High Schools, frequent closure ... 262–263
- Drinking water scarcity in Palladam, deepening of wells 609–610
- Gift Schemes, banning 525–526
- Kerosene scarcity in city 604–606
- Fire Works Factory, explosion in Kumbakonam. 161–162
- Monsoon failure in some districts, famine relief measures 157–161, 372–374, 523–525
- Mosquitoes and flies menace in Madras City, eradication 28–29
- Police, strentghening of stations to meet Naxalite attacks 262
- Teachers, non-payment of salaries in certain Panchayat Union Schools in Tirunelveli District. 29–32
- Two language formula, plight of Sanskrit teachers 374–376

CHAIR—

Announcements—

- Annamalai University Senate election 377
- Committee of Privileges, election 449
- Cut motions, last dates of receipt 377
- Demands for Grants, discussion and voting ... 377
- House Committee, election 450

Message from Governor—

- *Re* Motion of thanks on his Address 377
- Privileges Committee, nomination of Chairman 33

Rulings and Observations—

Adjournment Motions

Kalathur village agriculturists' plight—

Consent as withheld in the light of the statement made by the Chief Minister and also in view of the fact that normally Adjournment motions were not allowed during the Budget discussion 155–156

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Adjournment Motions—*cont.*

Lack of finance and defective distribution of midday meal by the Midday Meal Committee of Tuticorin Municipality.

Consent was withheld since the matter could be raised during discussion on Demands for Grants 603–604

Mettur Township Committee's action against hut-dwellers inside the Township.

Consent was withheld as the matter did not involve more than the ordinary administration of the law and as it could be raised by the member in his speech during the discussion on the Budget ... 159

Police action against Congress workers at Madurai and attempt to release two prisoners in Madurai and police action.

After hearing the remarks of the two members who had given notices of the motion, and the views of the Leader of the Opposition and the Chief Minister, the Speaker held that it was not necessary to adjourn the business of the House to discuss the matters, as they came under the day-to-day administration of Government ... 360–372

BUDGET—

Criticism of Parties.

While speaking on the Budget, it was not in order to criticise or comment on the history, or tradition of every party as the discussion was meant only to point out the omissions and commissions in the Budget 630

CALLING ATTENTION—

Clarification.

After the Statement by a Minister in response to a Call-Attention Notice, the member who had called attention of the Minister could ask one or two questions for further elucidation, but other members should not utilise the occasion to furnish fresh information 32

Questions for clarification should be confined to the subject-matter of the call-attention statement and should not refer to new ideas 525

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

CALLING ATTENTION—*cont.*

Clarification.—cont.

On 5th March, 1969, after the Minister made a statement in response to a call attention notice given by 19 Members, the Speaker held that it was not possible to allow each one to ask for clarification as much time would be taken and as the members could express their views during the discussion on the Budget 373–374

DEBATE—

Allegations.

Allegations cannot be based on newspaper reports or hearsay. While a Member referred to a newspaper report in the House, Members should take full responsibility for the same. It is not in order for a Member to shirk responsibility in this regard and say that it is a report that appeared in newspapers and that he did not know anything about it 639, 640

Members should not make vague allegations; they should be in a position to substantiate their allegations which should not be based on hearsay and newspaper reports. They should take full responsibility to prove their allegations

In regard to an allegation of Thiru K. Ramamurti that kerosene had been cornered and the Government had not taken action against the offenders, when specifically asked by the Speaker whether he could prove the same, the Member did not reply to the question directly. The Speaker therefore held that the member had no material to prove the allegation made by him and did not allow him to continue his speech and called upon another Member to speak 383–389

Whenever members made allegations and referred to newspaper reports they should do so with proper basis and should be able to disclose the name of the newspapers as otherwise, the Members should withdraw the allegations or else they would be expunged from the proceedings 475–476

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

DEBATE—cont.

Time-limit.

Members have to speak within a time-limit and they cannot speak without any limit on time ... 636

DECORUM—

Personal references.

It does not do credit to the tradition of the House to talk ill of members in the House ... 474

Reference to proceedings of other Legislatures.

While it was in order for Members to refer to the proceedings of other Legislatures, it was not in order to attack or accuse their proceedings ... 391

EXPUNCTION—

A supplementary question put after Question Hour was disallowed and expunged 28

On 8th March 1969, the Chair declined to expunge certain remarks made by the Leader of the Opposition and those made by the Hon. Chief Minister on the ground that it was better if those remarks remained in the Official Report of the Proceedings of the House 641

The matter read from a newspaper by the Leader of the Opposition was ordered to be expunged, since he was not prepared to say that he took responsibility for the allegations contained in the newspaper read by him 650

With reference to a suggestion made by a Minister that certain allegations made by a Member about the failure of the Government to take action against hoarders of Kerosene stocks be exunged, and the Member's refusal to take responsibility to prove the allegation in spite of repeated suggestions by the Speaker either to prove the allegations or withdraw them, the Chair held that it was not necessary to expunge the relevant proceedings as the proceedings would serve to know how the Member conducted himself under the circumstances 384–396

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

EXPRESSIONS USED IN THE HOUSE

" Starvation budget " (பட்டினி பட்ஜெட்) in the sentence " Your Central Government Budget is a Starvation Budget "—Member was advised not to use the expression 391

" *Wasting the time* " used by a Member with reference to the interruptions made by some Members during his speech, in the sentence, " Taking into account that the time allotted to us has been wasted by other Members by such interruptions, I request that more time should be given to us " was taken exception to by another Member. The Chair overruled the objection on the ground that the intention was that the previous time of the House should not be wasted and added that as a matter of fact, he himself had stated that the time of the House should not be wasted. So, there was nothing to find fault with the Member 390–391

LEADER OF THE OPPOSITION—

Right to intervene in a debate.

On 5th March 1969, after one of the Members who had given notice of an adjournment motion had spoken, the Leader of the Opposition began to speak.

Points of order were then raised questioning the propriety of his speaking on the occasion on the ground (1) in such cases, after the Minister concerned and explained the Government's point of view the Chair had to give its ruling and no one else should be asked to speak, (2) the Assembly Rules did not provide for any special privileges for the Leader of the Opposition to intervene in a debate at any time, (3) it might be cited as an unhealthy presedent by the leaders of other parties as well, who would claim the same privileges.

The Finance Minister pointed out that the Leader of the Opposition was allowed to intervene in a debate as a matter of ' concession ' by the Chair.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Leader of the Opposition—*cont.*

Right to intervene in a debate—*cont.*

The Co-operation Minister stated that there was no mention about the words ' Leader of the Opposition ' in the Assembly Rules, though as a matter of convention, his views were heard.

The Chief Minister stated that there was no objection to the convention of hearing the views of the Leader of the Opposition ... ...

The Chair observed that though the Rules did not confer any special privilege on the Leader of the Opposition, the Speaker could, in his discretion, call upon any member at any time, to give him the benefit of his views in order to enable him to arrive at a decision on any matter before the House. Moreover, by convention, the Leader of the Opposition had been given some privileged treatment and it would continue to be given ... 363–371

MEMBERS—

Attendance.

With reference to a point of order raised by a Member about the attendance of members in the House who had walked out of it the previous day, the Speaker held that it was the right of members to attend or not to attend the House and other members had no right to question that 603

To put questions from seats allotted to them.

Rising on a point of order a member pointed out that another Member put a supplementary question from a seat allotted to Leaders of Parties and not the one allotted to him and thus had contravened earlier rulings to the effect that supplementary questions put by members from seats other than the ones allotted to them would be disallowed

The Chair conceding that the point raised was a valid one, observed that there was nothing irregular, for, the member concerned had been elected Leader of his Party and therefore, he had been allotted a seat along with leaders of parties. But, there had been some delay in intimating the position to the Members 24–25

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

MINISTER'S STATEMENT—

Demand for expression of regret for wrong statements.

With reference to an observation of the Minister for Co-operation that there was no reference to the expression 'Leader of the Opposition' in the Assembly Rules and his subsequent statement under Rule 82 correcting the same, the Leader of the Opposition rising on a point of personal explanation wanted that the Minister should express regret for his incorrect statement.

The Speaker held that the Rules provided only for correcting errors in the statements, and there was no provision for demanding expression of regret 526-531

POINTS OF ORDER—

With reference to a point of order raised by a Member about treating one of his questions as unstarred, the Chair observed that it was not in order for Members to rise under the pretext of point of order on anything and everything and give vent to their views 359

When a Member rose on a point of order and was explaining his point, another Member remarked that the point referred to by that Member was a closed matter. Thereupon, the Chair observed that every Member in the House had the right to raise a point of order at any time 476

When Members rose on points of order and expressed their views, the Speaker reiterated that a point of order could be raised only if anything happened in the House in violation of the Rules of the Assembly; he recalled his earlier warning that if they rose on 'points of order' to get the floor of the House to express their views, a situation might arise when he would have to think of the action to be taken against such members 387-390

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

PRIVILEGE MATTERS—

Observation of Minister for Co-operation about non-reference to 'Leader of the Opposition' in the Assembly Rules.

On a matter of privilege raised by a Member that the Minister for Co-operation had committed a breach of privilege by his assertive statement that the words 'Leader of the Opposition' did not find a place anywhere in the Assembly Rules whereas that expression occurred in rule 183, the Speaker withheld consent to raise the matter in view of the statement by the Minister correcting his earlier statement in regard 418

Precedence:

On 6th March 1970, after the question hour the Chair called upon the Minister for Co-operation to make a statement under. rule 82, a Member rising on a point of order stated that a member of his party had given notice of a privilege matter and requested the Chair to take that matter first as a matter of privilege got precedence over other matters.

The Chair observed that he could understand the Member who gave notice of a privilege matter raising the point. Moreover, it was not proper that the information about the privilege matter should pass on to other Members before the Chair announced it to the House.

Further, as per the Rules, a Minister could make a statement at any time. The statement that the Minister proposed to make might even help the consideration of the privilege matter.

It was not necessary that a matter of privilege should be taken the same day on which notice of the same had been given. It could be takes on a subsequent day. The Chair in its discretion may take it at any time.

As for precedence for a privilege matter the Chair drew the attention of the Members to the relevant rule which stated that only a "matter of privilege

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Procedenee—cont.

which arose during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business 445-447

PROCEDURE—

Recognition of Leader of a Party :

With reference to recognition and allotment of of a seat to Haji M. M. Peer Mohammed as Leader of the Indian Union Musilm League Legislature Party, a member rose on a point of order and asked whether such election of of leader of a party should be done by the unit of that party in the Legislature or by an outsider who was not a member of the Assembly.

The Chair clarified that recognition of the leader of that Legislature Party had been done as per information furnished by the President of that party. Recognition of leaders of Parties was governed by the Rules in that regard. He held that there was no point of order 162-163

Statement by Ministers :

The Minister for Co-operation made a statement under Rule 82 correcting his earlier statement that the expression 'Leader of the Opposition' did not occur anywhere in the Assembly Rules, since there was reference to 'Leader of the Opposition' in rule 183.

Thereupon a Member rose on a point of order and stated that the statement was only personal explanation and asked whether 'personal explanations' of Ministers would come under Rule 82.

The Speaker held that just as the Ministers had the right to correct statistical inaccuracies in their statements the Minister had in the instant case, corrected his earlier statement. It was for the Chair to decide whether such statements could be made under one or the the other rule according to the prevailing circumstances. So, there was no point of order 447

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

QUESTIONS AND ANSWERS :

Absence of Minister to answer questions included in the Order Paper :

Rising on a point of order a Member pointed out that as three questions put down in the order paper to be answered by the Finance Minister that day, had been postponed since he did not attend the House and was said to have gone to receive a V.I.P., members were denied the opportunity of knowing the answers to those questions that day. He pleaded that such postponed questions should be included in the list of questions for the following day. He also suggested that the Ministers might arrange their programmes after their work in the House was over.

